Koviloor Academy

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—82

இந்தியாவின் சிறப்பு வரலாறு-II

(An Advanced History of India-II)

2374

R. C. மஜூம்தார், M.A., Ph.D.
துணை வேந்தர், டாக்கா பல்கலைக் கழகம்

H. C. ராய்சௌதுரி, M.A., Ph.D.
கார்மைக்கேல் பேராசிரியர், இந்திய வரலாற்றுத் துறை,
கல்கத்தா பல்கலைக் கழகம்

K. தத்தா, M.A., Ph.D.
வரலாற்றுப் பேராசிரியர்,
பாட்னா கல்லூரி, பாட்னா.

தமிழாக்கம் :
A. உஸ்மான் ஷெரிப்
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி, கோவை.

KMM0825

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

Koviloor Acadamy

First Edition—October, 1965.

B.T.P. No. 82

AN ADVANCED HISTORY OF INDIA—II

R. C. Majumdar,
H. C. Raychaudhuri &
K. Datta

Translation

A. Oosmann Sheriff

© Bureau of Tamil Publications

Price Rs. 9-00

This translation of 'An Advanced History of India' by R. C. Majumdar, H. C. Raychaudhuri & K. Datta, 1961 edition is published by arrangement with Messrs. Macmillan and Company Limited of St. Martin's Street, London, W.C. 2.

Printed by
The Premier Art Press,
Purasawalkam, Madras-7.

Koviloor Acadamy

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர் களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக் கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதி யியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகை யிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியாவின் சிறப்பு வரலாறு-II' என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 82ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 117 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

Koviloor Academy

Koviloor Acadamy

முன்னுரை

முதன் முறையாக இந்நூல் வெளிவந்தபின் அதிசயிக்கத்தக்க அரசியல் மாறுதல்கள் பல இந்நாட்டில் தோன்றியுள்ளன. ஆங்கிலேயர் அரசியலாதிக்கத்தைத் துறந்து வெளியேறியதும், இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு புதிய 'டொமினியன்களை' ஏற்படுத்தியதும், நிகழ்ந்த அரசியல் மாறுதல்களில் குறிப்பிடத்தக்கவையாய் விளங்குகின்றன. 1947ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியருக்குச் சுதந்திரம் வழங்கப் பெற்றது. அன்றுவரையுள்ள வரலாற்றுச் செய்திகள் நூலில் இடம் பெறுகின்றன. பொதுவில், ஆகஸ்டு 15ஆம் தேதிக்குப் பின்னுள்ள வரலாறு நூலில் இடம் பெறவில்லை. மகாத்மா காந்தியடிகளின் படுகொலை போன்ற முக்கிய நிகழ்ச்சிகள் நூலில் இடம் பெறவில்லையெனினும், யாவராலும் ஏற்றுப் போற்றப்படுகின்ற சில பிற்காலச் செய்திகளும் உரிய இடங்களில் பரவலாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் தேதிக்குப் பின் நடைபெற்ற சுதேச இராச்சிய இணைப்புத்திட்டத்தால் மாநில எல்லைகள் மாறுபட்டன. இந்திய வரலாற்று நூலொன்றை உருவாக்கும்போது கவனத்திற்குரிய இச்செய்தியைப் புறக்கணிப்பது முறையாகாதென்பதால், பிற்பகுதியில் இதற்கெனத் தனியிடம் ஒதுக்கியுள்ளோம். 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதியன்று அமுலாக்கப் பெற்ற இந்திய அரசியலமைப்புத் திட்டத்தின் சுருக்க மொன்றும் உடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தைப் புது அதிகார மொன்றில் விரிவாகக் கூறியுள்ளோம். 1935ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திட்டம், சென்ற பதிப்பிலுள்ளது போலன்றிச் சற்றுச் சுருக்கமாக எடுத்

Koviloor Acadamy

துரைக்கப்பட்டுள்ளது. நூலை, மீண்டும் பரிசீலித்துப் பல குறைகளை நீக்கியுள்ளோம். நிகழ்கால ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்துள்ள செய்திகளையும் இப்புதிய பதிப்பில் இணைத்துள்ளோம்.

பொதுமக்கள் ஆதரவும் விமர்சகரின் பாராட்டுதல்களும் நாங்கள் எதிர்நோக்கியதினும் பன்மடங்கு அதிகமாகக் கிடைத்துள்ளன. பல புதிய அம்சங்களுடன் மறுமுறை வெளியிடப்படும் இந்நூல், அதிக பயனுள்ளதாக விளங்கவேண்டுவதற்கான முயற்சிகள் யாவையும் மேற்கொண்டுள்ளோம்.

ஆர். சி. எம்.
எச். சி. ஆர். சி.
கே. கே. த.

Koviloor Acadamy

பொருளடக்கம்

அதிகாரம் பக்கம்

மடல் 1

முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பும் டெல்லி சுல்தான்களும்

மடல் 2

முகலாயப் பேரரசு

Koviloor Acadamy

Koviloor Acadamy

இந்தியச் சிறப்பு வரலாறு

இரண்டாம் பகுதி

இடைக்கால இந்தியா

மடல் 1

முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பும் டெல்லி சுல்தான்களும்

Koviloor Acadamy

Koviloor Academy

1. முஸ்லீம்களின் வருகை

சிந்துவில் அரேபியர்கள்

அரேபியர்கள் புதியதொரு மதத்தை ஏற்றபின், வீறுபெற்று ஊக்கமெய்தினர். அதன் விளைவாக, எவ்வாறு சிந்துவைக் கைப் பற்றி அண்டை அயல் பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்பதை முன் ஓர் அத்தியாயத்தில் படித்தோம்.

இஸ்லாமிய உலகத்தின் பெருந்தலைவர்களும் ஆட்சியாளர்களு மான பாக்தாத்து காலிப்புகள் அல்லது காலிபாக்கள் வலிவிழந்ததும் சிந்துநாட்டு முஸ்லிம் கவர்னர்கள் அநேகமாகச் சுய ஆதிக்கம்பெற்று விளங்கினர். கி. பி. 871-ல் காலிப்பு சிந்து மாகாணத்தை சப்ரெய்ட் தலைவர் யாகூப்பின் ஸெய் லெய்ஸ்வசம் அநேகமாக ஒப்படைத்து விட்டார். இவருடைய மரணத்திற்குப் பின் சிந்துவில் இருந்த முஸ் லிம் பிரதேசங்கள் சுய ஆட்சிபெற்ற இரு தலைவர்களிடையே பிரிக்கப் பட்டன. அவர்களில் ஒருவர் பகமன்பாத் அருகிலுள்ள மான்சுராவுக் கும் மற்றவர் மூல்தானுக்கும் தலைவராவர். அவர்களில் ஒருவராவது அதிக வலிமை பெற்றவராக இல்லை. இருவருமே தங்கள் அண்டை இந்து மன்னர்களுக்கு அடிக்கடி அஞ்சி வந்தனர். குறிப்பாகக் கன்னோசியின் பிரதிகரர்களுக்கு இவர்கள் அஞ்சி வந்தனர்.

சிந்துநாட்டை அரேபியர்கள் வெற்றிகொண்டது ஆழ்ந்த அரசி யல் விளைவுகளை உடனே ஏற்படுத்தவில்லை. ஸ்டேன்லி லேன்பூல் இதை 'இந்திய வரலாற்றிலும் இஸ்லாமிய வரலாற்றிலும் ஏற்பட்ட ஒரு சிறு சம்பவம்' என்றும் 'விளைவுகள் ஏற்படுத்தாத வெற்றி' என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் கலைக்கண்கொண்டு நோக்கின் இதன் முக்கியம் புலப்படும். கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள உதவியதுடன் இந்தியப் பண்பாட்டின் வித்துகளை வெளிநாட்டில் சிதறும்படி செய்யவும் இது உதவியது. இந்தியர்களிடமிருந்து அரேபியர்கள் இந் நாட்டின் மதம், தத்துவம், மருத்துவம், கணிதம், வானசாத்திரம்

Koviloor Acadamy

நாடோடிக் கதைகள் இவற்றை அறிந்து அக் கருத்துகளைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றதுமன்றி, ஐரோப்பாவிற்கும் கொண்டு சென்றனர். மசூதி (Masudi), ஐபன் ஹாகல் (Ibn-Hauqal) ஆகியோரின் குறிப்புகளிலிருந்து அரேபியக் குடியேற்றத்தினர் தங்கள் அண்டைவாசிகளான இந்துக்களுடன் பல ஆண்டுகளாக நேசப் மனப்பான்மையுடனும் சண்டையின்றியும் வாழ்ந்தனர் என்று நிச்சயமாகத் தெரிந்துகொள்கிறோம். அரேபிய வானசாத்திரி மசார் (Ma'sar) காசிக்கு வந்து, பத்தாண்டுக்காலம் வானசாத்திரம் கற்றார் என்று அமீர் குஸ்ராவ் குறிப்பிடுகிறார்.

கஸ்னிவிகள் : சுல்தான் மாமூது

நாம் முன்னரே கூறிய கஸ்னி சுல்தான்களின் பஞ்சாப் ஆக்கிரமிப்பை அரசியல் நோக்கோடு காணுங்கால், அரேபியர்கள் சிந்து நதியின் கீழ்ப்பகுதிகளில், சில சிறிய இராச்சியங்களை ஏற்படுத்தியதை விட இச்சம்பவம் முக்கியமானது என்று தெரியவருகிறது.

தன் தகப்பன் சபக்டிஜனின் எண்ணங்களைச் செயல்படுத்திய சுல்தான் மாமூது இவ்வுலகம் கண்டுள்ள சிறந்த இராணுவத் தலைவர்களில் ஒருவன் என்பதில் ஐயமில்லை. பதற்றமற்ற இவனுடைய வீரம், சமயோசித அறிவு, விவேகம், இன்னும் பிற பண்புகள் இவனை ஆசியப் பெரு மக்களில் மனத்தைக் கவரும் ஒருவனாகச் செய்கின்றன. இந்தியாவில் இவன் நிகழ்த்திய வெற்றிப் படையெடுப்புகளோடு பகைமை கொண்ட துருக்கர்களுடன் இவன் நடத்திய இரு போர்கள் என்றும் நினைவிலிருந்து நீங்காதவை. இப் போர்களில் இவன் லக்கான் (Ilak Khan) படைகளையும் செல்ஜுக் படைகளையும் முறியடித்தான். பெரிய போர் வீரனாகிய இந்த சுல்தான் கலைகளையும் கல்வியையும் ஆதரிப்பதில் சற்றும் பின் வாங்கவில்லை.

இவை இவ்வாறாயினும் இந்திய சரித்திர ஆசிரியர்களுக்கு இவன் ஒரு பேராசைபிடித்த படையெடுப்பாளனாகவே தோன்றுகிறான். இவன் மதத்தைப் பரப்பும் மதபோதகனுமில்லை; ஒரு பெரிய சாம்ராச்சியத்தை உருவாக்கும் நோக்கங்கொண்ட சிற்பியுமில்லை. இவனுடைய கிழக்கத்தியப் படையெடுப்புகளின் நோக்கமெல்லாம் இந்தியாவின் செல்வத்தைப் பெறுவதற்கும் அந்நாட்டைப் பாதுகாக்கும் மன்னர்களின் மன உறுதியைக் குலைக்கவும் என்றே தோன்றுகின்றது. பஞ்சாபை இவன் சேர்த்துக்கொண்டது தன் விருப்பம் நிறைவேறவே என்பதை விட அது மிக அவசியமான நடவடிக்கையாயிற்று. ஆயினும் இவனுடைய படையெடுப்புகள் இந்திய அரசியலில் நிலையான விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்று கொள்வது தவறாகும்.

Koviloor Academy

இந்தியநாட்டின் செல்வத்தை வற்றச்செய்து மிகப் பயங்கரமான அளவில் அந் நாட்டின் இராணுவ வலிமையை அழித்தான். கஸ்னிவிகள் பஞ்சாபைக் கைப்பற்றியது இந்திய நாட்டின் உட்பகுதிகளுக்குச் செல்லும் கோட்டை வாயிலின் பூட்டைத் திறக்கும் சாவியாயிற்று. இந்திய அரசியலில் பெரும் பிளவுகள் ஏற்பட்டன. அந்தப் பெரிய பழங்கால அமைப்பு வீழ்ச்சியுறுமா என்பது கேள்வியன்று; எப்பொழுது என்பதே கேள்வியாயிற்று. அரேபியர்கள் அல்லது கஸ்னிவிகள் வளரும் இஸ்லாமிய அரசுடன் இந்தியாவை இணைப்பதில் வெற்றி காணவில்லை. ஆனால் அவர்கள் கங்கைக்கரை இராச்சியங்களில் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட இறுதிப் போராட்டத்திற்கான வழியைச் சமைத்தனர்.

கோரி முகமது

சுல்தான் முகமதுவிற்குப்பின் ஆட்சியெய்தியவர்கள் காலத்தில் கஸ்னி சாம்ராச்சியம் துண்டுதுண்டாகச் சிதற ஆரம்பித்தது. வளர்ந்துவரும் கோரி மன்னர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து கஸ்னியிலும் வடமேற்கு இந்தியாவிலும் தங்கள் ஆட்சியை நிலைத்திருக்கச் செய்ய முடியாதபடி வலுவற்றிருந்தனர். ஹிரட்டிற்குத் தென்கிழக்கில் ஆப்கானிஸ்தானத்தில் உள்ள ஒரு சிறிய பகுதியே கோரி எனப்படும். கிழக்குப் பாரசீகப் பிரிவினரான கோரித் தலைவர்கள் முதலில் கஸ்னியின் ஆதிக்கத்திலிருந்த சிற்றரசர்கள். ஆனால் கஸ்னி மன்னர்கள் திறமையின்மையைப் பயன்படுத்திக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக வலுப்பெற்றுக் கஸ்னிகளுடன் ஆதிக்கப் போட்டியிலும் ஈடுபடலாயினர். இப் போட்டியின்போது குத்புதீன் முகமது கோரியும் அவனுடைய உடன்பிறந்தவனான சைபுதீனும் கஸ்னி பஹ்ராம்ஷாவினால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவ்வாறு இரையானவர்களின் உடன்பிறப்பாளனான அல்லாவுதீன் ஹுசேன் கஸ்னியின்மீது பயங்கரமாகப் பழிவாங்கி, ஏழு நாட்கள் இரவு பகலாகக் அவர்கள் நகரைத் தீக்கு இரையாக்கினான். இச் செயலால் அல்லாவுதீன் ஜகன்ஸுஸ் (Jahansuz) அல்லது 'உலகை எரித்தவன்' என்ற பட்டப்பெயர் பெற்றான். பஹ்ராம் மகன் குஸ்ராவ் ஷா மிகவும் திறமையற்றவன். அவனை தர்க்மானிய கஸ் (Ghuzz) கூட்டத்தினர் கஸ்னியிலிருந்து விரட்டிவிட்டனர். அவன் அங்கிருந்து தன் முன்னோர்களுக்கு ஒரு காலத்தில் சொந்தமாயிருந்த பஞ்சாபிற்கு ஓடினான். தர்க்மானிய கஸ்வசம் கஸ்னி பத்தாண்டுக் காலம் இருந்தது. இதன் பின்னர் கோர் வமிசத்து மன்னர்கள் கைக்கு அது மாறியது. 'உலகத்தை எரித்தவ'னுடைய மகன் சைபுதீன் முகமது பின்னர்ப்பட்டமெய்தினான். ஆனால் தர்க்மானிய கஸ்களுடன் நேரிட்ட போரில் கொல்லப்பட்டான். அவனுடைய உறவினன் யாஸுடீன் பட்டத்திற்கு வந்து கி.பி. 1173-ல்

Koviloor Acadamy

தர்க்மானிய கஸ்கனை கஸ்னியிலிருந்து விரட்டியடித்துத் தன்னுடைய இளைய சகோதரன் முஸ்ஸுதீன் என்ற ஷாகிப்புதீனைப் பட்டத்திலமர்த்தினன். ஷாகிப்புதீனின் நன்கு தெரிந்த பெயர் முகமது கோரி. அவர் கோரியின் கவர்னர். இந்த இரண்டு சகோதரர்களுக்கிடையில் நல்லுறவு நீடித்தது. தன் சகோதரன் கீழ் ஆட்சி செய்த காலத்திலேயே முகமது கோரி தன் இந்தியப் படையெடுப்புகளைத் தொடங்கினன்.

முகமது கோரியின் முதல் இந்தியப் படையெடுப்பு (கி.பி. 1175) தனது மதத்தைச் சேர்ந்த மூல்தானின் இஸ்ஸாமிலான் மரபினர் மீதாகும். இதில் இவன் வெற்றிபெற்று மிக்க தந்திரமாக அவர்களுடைய வலிமை மிக்க கோட்டையான உக் (Uch) கைக் கைப்பற்றினன். ஆனால், கி.பி. 1178-ல் இவன் கூச்சரம்மீது நடத்திய படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. கூர்ச்சர மன்னன் இவனை நன்ருக முறியடித்தான். ஆயினும் மறு ஆண்டில் இவன் பெஷாவாரைப் பிடித்துக்கொண்டு கி.பி. 1181-ல் சியால்கோட்டையில் ஒரு படைத் தளம் அமைத்தான். ஜம்மு மன்னர் விஜயதேவனுடன் கூட்டுறவு சேர்ந்துகொண்டு லாகூரைமட்டும் உரிமையாகக் கொண்டிருந்தவனும் சபக்டிஜன் சுல்தான் முகமது இவர்களின் கடைசிப் பிரதிநிதியும் குஸ்ராவ் ஷாவின் மகனும் அவன் பின் அரசுரிமை பெற்றவனுமான குஸ்ராவ் மாலிக் என்பவனை எதிர்த்துக் கஸ்னவி மன்னரைச் சிறைப்பிடித்து, கஸ்னிக்குக் கொண்டு சென்ருன். இவ்வாறு பஞ்சாபில் கஸ்னவிகளின் ஆதிக்கம் முடிவுற்றது. முகமது கோரி இவ்வாறு பஞ்சாபை வசப்படுத்தியது அவனது இந்திய வெற்றிக்கான வாயிலைத் திறந்தது. பஞ்சாபைக் கைப்பற்றியதால் இராஜபுத்திரர்களுடன் போரிடவேண்டியது தவிர்க்கமுடியாததாயிற்று. அதிலும் குறிப்பாக அவனது அயலானன வலிமை வாய்ந்த சௌகன் மன்னனும் ஆஜ்மீர் டில்லி அதிபனுமான பிருதிவிராஜனுடன் கைகலக்கவேண்டியதாயிற்று.

சுல்தான் முகமது காலத்திற்குப் பின்னர் வட இந்தியாவின் அரசியல் அமைப்பில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. பீஹாரின் ஒரு பகுதி புத்தமதப் பாலர்கள் வசமிருந்தபோதிலும் வங்காளம் இந்து மத மன்னர்களான சேனர்களின் ஆதிக்கத்துள் வந்தது. சாந்தலர்களின் ஆட்சியின்கீழ்ப் பண்டல்கண்டு இருந்தது. ஆனால் கன்னேசிப் பிரதிகரர்களைக் ககதவலர்கள் ஆட்சியினின்று அப்புறப்படுத்தியிருந்தனர். டில்லியும் ஆஜ்மீரும் சௌகன்களின் ஆதிக்கத்துள் இருந்தன. ஜெயசந்த அல்லது ஜெயச்சந்திரன் என வழங்கப்பட்ட கன்னேசி மன்னர் அநேகமாகக் காசியில் தங்கி வந்தார். இவரை முஸ்லிம் எழுத்தாளர்கள் அக்காலத்து இந்திய மன்னர்களில்

Koviloor Acadamy

தலைசிறந்தவராக மதித்தனர். தாத் என்பவர் கூற்றை நம்புவோமாகில் ஜெயச்சந்திரன் பிருதிவி மன்னனின் மேம்பாட்டைக்கண்டு பொருமை கொண்டிருந்தார் என்பது உண்மை எனக் கொள்ள வேண்டும். அவருடைய அழகிய மகளைச் சௌகன் வீரன் தூக்கிச் சென்றான். இச் சம்பவம் அக்கால நாடோடிப் பாடல்களின் கருத்தாக அமைந்தது. இச் சம்பவம் இம் மன்னர் இருவரிடை மனக் கசப்பை மேலும் அதிகரித்தது. முகமதுகோரி படையெடுத்தபோது இதன் காரணமாக ஜெயச்சந்திரன் பிருதிவி மன்னன் பக்கம் சேரவில்லை. ஆனால் முகமது கோரியை இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி ஜெயச்சந்திரன் அழைத்தான் என்று நம்புவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. முகமதுகோரி பஞ்சாபில் கஸ்னவிகளின்மீது பெற்ற வெற்றியின் தவிர்க்கமுடியாத பின் தொடர்ச்சியே அவரது இந்தியப் படையெடுப்பின் காரணமாகும்.

கி.பி. 1190-1191 குளிர்காலத்தில் முகமது கோரி பஞ்சாபைக் கடந்து படை நடத்தியபோது இராசபுத்திரர்கள் அஞ்சாத தீர மிக்க வீரனாகிய பிருதிவி ராஜன் படையெடுப்பாளர் வீரத்திற்குச் சற்றும் சளைக்காத வீரத்துடன் ஒரு பெரிய படையுடன் எதிர்க்க முற்பட்டான். பெரிஷ்ட்டாவின் கூற்றுப்படி அப் படையில் 200,000 குதிரைகளும் 3,000 யானைகளும் இருந்தன. பிருதிவி ராஜனுக்குப் பக்கபலமாக அவனுடைய இராசபுத்திர அரச நண்பர்கள் பலர் இருந்தனர். ஆனால் ஜெயச்சந்திரன் மட்டும் விலகி நின்றான். கோரி முகமது இரண்டு பக்கமும் படையின் இரு பிரிவுகள் அணிவகுத்துவரத் தான் படையின் மத்தியில் நின்று இராசபுத்திரப்படையினரைத் தானேஸ்வரத்திற்கு அருகிலுள்ள தரேயின் என்னும் போர்க்களத்தில் 1191-ல் சந்தித்தான். தங்களுக்கே உரிய வீரத்துடன் இராசபுத்திரர்கள் முஸ்லிம் படையினரை அழிக்கத் தொடங்கினர். விரைவிலேயே அப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அதன் தலைவர் காயமுற்று கஸ்னிக்குத் திரும்பினர். முதற்கண் ஏற்பட்ட இத் தோல்வியினால் முகமது கோரி மனந்தளர்ந்து போய்விடவில்லை. தான் பெற்ற தோல்விக்குப் பழி வாங்க வேண்டு மென்று மற்றுமொரு பெரிய படையை நன்கு ஆயத்தம் செய்துகொண்டும் வலுப்படுத்திக்கொண்டும் மறுபடியும் கி.பி. 1192-ல் இந்தியாவின்மீது படையெடுத்து இராசபுத்திர எதிரிகளை அதே போர்க்களத்தில் சந்தித்தான். மேலான யுத்த தந்திரத்தாலும் படைத்தலைமையாலும் ஆக்கிரமிப்புப் படையினர் இராச புத்திரர்களை அடியோடு முறியடித்தனர். பிருதிவி மன்னன் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அவனுடைய சகோதரனும் கொலையுண்டான். முகமதுவின் வெற்றி நிச்சயமானதாக இருந்தது. வட இந்தியாவில் முஸ்லிம் ஆதிக்கத்திற்கு அது அடிகோலியது. பிருதிவி மன்னனின் உறவினர் இழந்த ஆதிக்கத்தைத் திரும்பப் பெறச் செய்த முயற்சிகள்

Koviloor Academy

யாவும் பயனற்றுப்போயின. வட இந்தியாவின் பல வேறு பகுதிகளை யும் சில ஆண்டுகளில் முகமது கோரியின் நம்பிக்கைக்குப் பாத்திர மான துருக்க அதிகாரி குத்புதீன் ஐபெக்கும், இக்தியாருதீன் மகமதும் கைப்பற்றினர்.

குத்புதீன் ஐபெக் துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்த அடிமையாக இருந்தவர். அவர் குழந்தையாக இருக்கும்போது நிஷாப்பூருக்கு ஒரு வணிகனால் கொண்டு வரப்பட்டான். அங்கு அந் நகர காஜி பக்ருதீன் அப்துல் அஸிஸ் குபி என்பவர் இவனை விலைக்கு வாங்கித் தன் மகனுடன் மதக் கல்வியும் போர்ப் பயிற்சியும் பெற ஏற்பாடு செய் தார். காஜி இறந்தபின் காஜியின் பிள்ளைகள் அவனை ஒரு வணி கனுக்கு விற்றுவிட்டனர். அவ்வணிகன் அவனைக் கஜினிக்குக் கொண்டுவந்தான். அங்கே கோரி முகமதுவால் அவன் விலைக்கு வாங்கப்பட்டான். இவ்வாறு குத்புதீன் அடிமையாகத் தன் வாழ்க்கை யைத் தொடங்கினான். இந்தியாவில் அவன் ஏற்படுத்திய வமிசத் திற்கு 'அடிமை வமிசம்'[1] எனப் பெயர் ஏற்பட்டது. புறத்தோற்றத் தில் ஏதும் ஏற்ற மின்றிக் காணப்பட்டபோதிலும் குத்புதீனிடம் புகழ்ச் சிக்குரிய பல நற்குணங்களும் நல்ல சிறப்புகளும் நிரம்பியிருந்தன அவனுடைய நற்பண்புகளே முகமது கோரியைக் கவர்ந்தன. விரைவி லேயே இவனை அமிர்-இ-அக்கர் (Amir-i-Akhur) (குதிரை லாயத்தலை வன்) பதவிக்கு உயர்த்தினர். இந்தியப்படையெடுப்பின்போது தன் எஜமானருக்கு மிக்க உயர்ந்த சேவைகள் செய்தான். அவற்றிற்கு ஈடாக இரண்டாம் தரேயின் சண்டைக்குப் பின்னர் (கி.பி. 1192) இந்தியாவில் கிடைத்த பகுதிகளுக்குப் பொறுப்பாக இவன் நியமிக்கப் பட்டான். பிறகு எவ்விதக் கட்டுப்பாடுமின்றி புதிய பிராந்தியங்களில் ஆட்சி புரியவும் அவைகளை விஸ்தரிக்கும் விஷயத்திலும் அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தன்னுடைய நிலைமையை வலுப்படுத் தும் பொருட்டு குத்புதீன் தனது வலிய எதிராளித் தலைவர்களுடன் திரு மண உடன்பாடுகள் செய்து கொண்டான். டாஜ் உடின் இல்டிஸ் மகளைத் தான் மணந்து கொண்டான். இவன் சகோதரி நாசருதீன் குவபாக்காவிற்கு மண முடிக்கப்பட்டாள். இவன் மகள் இல்டுட்மிஷ்க்கு

[1] குத்புதீனின் வமிசம் பற்றிய இவ் விவரம் சரியானதன்று. இந்த வமிசத்து அரசர்களில் மூவர் தவிர (குத்புதீன், இல்டுட்மிஷ், பால்பன்) வேறு எவரும் அடிமை யில்லை. இந்த மூவரும் கூடத் தங்கள் எசமானர்களால் விடுதலை அளிக் கப்பட்டார்கள். குத்புதீன் தன் விடுதலைக்கான கடிதத்தையும் அரசாங்க விதா னத்தையும் தன் எசமானர் மருமகனும் முகமது கோரியின்பின் பட்ட மெய்திய வனும் மருமகனுமான கியாஸ் உத்தீன் துக்ளக்கிடமிருந்து பெற்றான். இது அவன் டில்லி அரியணை பெறுமுன் அளிக்கப்பட்டது. (ரேவர்டி, தபாகுவாட், இ-நசிரி, பக்கம் 524-5). இல்டுட்மிஷ் தன் எசமானரிடமிருந்து விடுதலை பெற்றார். (இபிட் பக்கம் 605-6) இல்டுட்மிஷின் நாற்பது துருக்க அடிமைகளைச் சார்ந்த பால்பன் இவர்களுடன் தன் விடுதலையைப் பெற்றான் (சியாபார்னி தா-ரிக்-இ பிரஸ்ஷாதி பதான் அல்லது ஆப்கன் என்றும் இவ்வமிசத்தைக் கூறுவதும் தவறாகும். ஏனெனில் இந்த வமிச மன்னர்கள் யாவரும் துருக்கியர்களே அன்றி பதான அல்லது ஆப்கானியர் அல்லர்.

Koviloor Acadamy

மணமுடிக்கப்பட்டாள். தன் எஜமானர் தன்மேல் வைத்திருந்த நம்பிக்கைக்கு மெய்யாகக் குத்புதீன் நடந்து கொண்டான். கி.பி. 1192-ல் அவன் ஹான்ஸி, மீரட், டில்லி, ரான்தாம்பூர், கோயில் இவைகளைக் கைப்பற்றினான். கி.பி. 1194-ல் தன் எஜமானருக்குக் கன்னோசி, காசி இவற்றின் அரசனான ஜெயச்சந்திரனை யமுனைக் கரையிலுள்ள இட்டாவ மாவட்டத்தில் தோற்கடிக்கவும், கொலை செய்யவும் உதவினான். கி.பி. 1197-ல் கூர்ச்சர மன்னன் இரண்டாம் பீமதேவன் ஏதோ தொல்லை விளைவித்ததற்காகத் தண்டித்து, அவனது தலைநகரைக் கொள்ளையிட்டு ஹான்ஸி வழியாக டில்லி திரும்பினான். கி.பி. 1202-ல் பண்டல்கண்டிலுள்ள கலின்சார் கோட்டையை முற்றுகையிட்டு, அதைப் பாதுகாத்தவர்களை வென்று, அவர்களிடமிருந்து ஏராளமான கொள்ளைப் பொருளைக் கைப்பற்றினான். ஆண் பெண் அடங்கலாக ஐம்பதாயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். அடுத்தபடியாக மஹோபா நகர்மீது அவன் படை யெடுத்து அதைக் கைப்பற்றியபின் இந்துஸ்தானத்தில் அதிகச் செல்வம் படைத்தவைகளில் ஒன்றான பதான் (Badaun) வழியாக டில்லிக்கு மீண்டான். பதானையும் அவன் கைப்பற்றினான். இதற்கிடையில் பக்தியார் கில்ஜியின் மகனான இக்தியாருடீன் மகமது என்பவனால் பீகாரும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளும் கோரி இராச்சியத்துடன் சேர்க்கப்பட்டன. இக்தியாருடீன் நாடியாவிலிருந்து லக்ஷ்மண சேனனை டாக்காவுக்கு அருகில் கிழக்கு வங்காளத்[1] திற்கு விரட்டியிருக்கலாம். அங்குத் தற்கால மால்டா மாவட்டத்தில் கெலிர் அல்லது லக்னௌட்டியில் தங்கள் ஆட்சி பீடத்தை அமைத்துக்கொண்டு சேனர்கள் அரை நூற்றாண்டுக்கு மேலாக நிலைத்திருந்தனர். இவ்வாறு பதின்மூன்றாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் சிந்து நதியிலிருந்து கிழக்கில் கங்கைவரையில் இந்துஸ்தானத்தின் கணிசமான பகுதி முஸ்லிம் படையினரால் ஆதீனப்படுத்தப்பட்டது. ஆனால் முஸ்லிம் ஆட்சியை ஒழுங்கு படுத்தியமைக்க மேலும் பல ஆண்டுக் காலம் தேவைப்பட்டது.

கி.பி. 1203 பிப்ரவரியில் தன் மூத்த சகோதரனான கியாஸ் உடீன் மகமது இறந்ததும் மு-இஸ் உதீன் மகமது கஸ்னி, கோர், டில்லி

[1]நாடியாவை முஸ்லீம்கள் கைப்பற்றிய தேதியைக் குறித்துச் சரித்திர வல்லுநர்களுக்குள் கருத்து மாறுபாடுகள் உண்டு. ரேவர்டியின் கருத்துப்படி அது ஏ. எச். 590 ஆகவும் கி. பி. 1193 (op. cit., vol. I. P. 588 f. n.) அடிக்குறிப்பு. ஆனால் இது தவறென பலாக்மான் தக்கபடி விவாதித்துள்ளார். (ஜே.ஏ. எஸ். பி. பிரிவு, 1 பக்கம் 275-7). நாடியா ஏ. எச். 599-ல் அதாவது கி.பி. 1202 1203-ல் வீழ்ந்தது என்பது எட்வர்ட் தாமஸ் (டில்லி பதானியர் சரித்திரம், பக்கம் 110) கருத்தாகும். சார்லஸ் ஸ்டீவத் (வங்காள சரித்திரம், பக்கம் 47) கருத்துப்படி இது ஏ. எச். 600 அதாவது கி. பி. (1203-1204). இக் கருத்து அக்காலத்துச் சரித்திர ஆசிரியர்கள் கருத்துகளுக்கு முரணாக உள்ளது. தற்கால எழுத்தாளர் ஒருவர் பலாக்மான் கருத்துப்படி நாடியா ஏ. எச். 594-595-ல் கி.பி. 1197-1198-ல் கைப்பற்றப்பட்டது பொருத்தமுடையது என்கிறார். (இண்டியன் ஹிஸ்டாரிகல் குவார்ட்டர்லி மார்ச். 1936 பக்கம் 148-51).

Koviloor Acadamy

இவைகளுக்கு மன்னரானன். ஆயினும் முன்பே இவைகளின் அரசனாக உண்மையில் இவன்தான் விளங்கியவன். ஆனல் விரைவில் பல பெரும் இன்னல்களால் இவன் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டது. கி.பி. 1205-ல் மத்திய ஆசியாவல் ஆங்வி (Andkhui) என்னுமிடத்திற்கருகில் குவாராஸ்ம் ஷாவான அல்லாவுதீன் மகமது என்பவரிடம் தோல்வியுற்ருர். இந்தத் தோல்வியின் காரணமாக இந்தியாவில் இம் மன்னனுடைய இராணுவப்புகழுக்குப் பலத்த அதிர்ச்சி ஏற்பட்டு அங்கங்கே பல கலகங்களும் சதிகளும் தோன்றின. இவனைக் கஸ்னியில் நுழைய வொட்டாமலும் தடுத்தனர். கஸ்னி அதிகாரி ஒருவரால் மூல்தான் கைப்பற்றப்பட்டது. இவனுடைய பழைய விரோதிகளான கோகர்கள் பஞ்சாபில் இன்னல் விளைத்தனர். ஆனல் தளரா ஊக்கத்துடனும் எவ்வித தயக்கமு மின்றி முயுஸ் உதீன் மகமது இந்தியாவில் நுழைந்து எல்லா இடங்களிலும் கலகங்களை ஒடுக்கி, கி.பி. 1205 நவம்பரில் கோகர்களைப் படுதோல்வி அடையச் செய்தான். ஆயினும் அவன் வாழ்நாள் குறுகி விட்டது. லாகூரிலிருந்து கஸ்னிக்குத் திரும்பும் வழியில் இன்னர் என்று நிச்சயமாக இனம் கண்டுபிடிக்க முடியாத சில கொலைகாரக் கூட்டத்தினரால் டாம்யாக் என்னுமிடத்தில், 1206 மார்ச்சு 15-ல், குத்திக் கொல்லப்பட்டான். இச் செயலை, சமீபத்தில் நாடிழந்த கோகர் செய்திருக்கக் கூடுமெனச் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் கருத்துக்கிணங்க இவன் இஸ்மாலிப் பிரிவைச் சேர்ந்த சில முஸ்லிம் அபிமானிகளால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. இராசபுத்திரப் பழங்காலக்கதை யொன்றின்படி இவன் கொலை செய்யப்பட்டது பிருதிவியின் செயலால் என்று கூறுகிறது. அக் கதை பிருதிவி இரண்டாவது தரேயின் சண்டையில் கொல்லப்படவில்லை என்றும் ஆனல் குருடாக்கப்பட்டுச் சிறையிலிருந்தான் என்றும் கூறுகிறது. இக் கதையை முஸ்லிம் சரித்திர ஆசிரியர் ஒருவரும் குறிப்பிட்டுள்ளார். கொலை செய்யப்பட்ட சுல்தானின் சடலம் கஸ்னிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

Koviloor Academy

2. அடிமை வமிசம் என வழங்கப்பட்ட வமிசமும் வட இந்தியாவில் முஸ்லீம் ஆட்சி வலுவடைதலும்

1. குத்புதீன் ஐபெக்கும் ஆராம் ஷாவும்

முகமதுகோரி தனக்குப்பின் வாரிசாக ஆண் மக்களைப் பெற்றிருக்கவில்லை. அங்கங்கே இருந்த வைசிராய்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் சுய ஆட்சி பெற்றனர். கிர்மான் கவர்னராயிருந்த டாஜ்உடீன் இல்டிஸ் கஸ்னியின் அரியணை ஏறினன். குத்புதீன்ஐபெக் சுல்தான் என்ற பட்டம் சூடிக்கொண்டு இந்தியப் பிரதேசங்களுக்கு மன்னரானன். வங்காள இக்தியாருதீன் மூல்தான், உக் இவற்றின் கவர்னரான நாசருதீன் குபாக்கா போன்ற முஸ்லீம் உத்தியோகஸ்தர்கள் இச்செயலை ஆதரித்தனர். குத்புதீன் ஐபெக்கின் எழுச்சி டாஜ்உடீன் இல்டிஸ் மனத்தில் பொருமையைத் தூண்டியது. பஞ்சாபின் ஆதிக்கத்திற்காக அவன் ஐபெக்குடன் போரில் ஈடுபட்டான். குத்புதீன் இல்டிஸைத் தோற்கடித்து, அவனைக் கஸ்னியினின்றும் விரட்டிவிட்டு, நாற்பது நாள் வரை அதைத் தன்கீழ் வைத்திருந்தான். கஸ்னி மக்கள் அவனது மிதமிஞ்சிய செயலால் வெறுப்புற்றுத் தங்கள் உதவிக்கு வருமாறு இல்டிஸை இரகசியமாக வேண்டினர். இந்தச் சந்தர்ப்பத்தை இல்டிஸ் தவருமல் பயன்படுத்திக் கொண்டான். இவன் கஸ்னியில் சற்றும் எதிர்பாராதவகையில் திடீரென்று நுழைந்ததைக்கண்ட குத்புதீன் கலவரம் கொண்டு ஓடிவிட்டான். இதனல் ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட இருந்த அரசியல் ஒற்றுமையின் வாய்ப்பு குலைந்தது. இது பின்னர் பாபர் டில்லியைக் கைப்பற்றும் வரையில் ஏற்படவில்லை. குத்புதீன் முற்றிலும் இந்திய சுல்தானுகவே விளங்கினன். நான்கு ஆண்டுகளுக்குச் சிறிது கூடுதலான குறுகிய ஆட்சிக்குப்பிறகு கி.பி. 1210 நவம்பரில் போலோ விளையாட்டின் போது குதிரையினின்றும் கீழே விழுந்ததின் விளைவாக லாகூரில் இவன் இறந்தான்.

Koviloor Acadamy

மின்ஹாஜ் உஸ் சிராஜ் என்பவர் குத்புதீனைப்பற்றிக் கூறுகையில் அவன் தளரா ஊக்கமுடைய திறந்த உள்ளம் படைத்த மன்னன் என்று வர்ணிக்கிருர். இராணுவ வலிமையும் சுறுசுறுப்பும் அமையப் பெற்ற இவன் எந்தப் போரிலும் தோல்வி கண்டதில்லை. தன்னுடைய விரிந்த படையெடுப்பால் இந்துஸ்தானத்தின் பெரும் பகுதியை இஸ்லாம் கொடியின்கீழ்க் கொண்டு வந்தான். இவன் பெருங் கொடை வள்ளலாகத் திகழ்ந்தான். இவன் கொடையளிப்பது நூறு ஆயிரக் கணக்குப் பெரும் தொகைகளாக இருக்கும். இவனைச் சரித்திர ஆசிரியர் அனைவரும் 'லக்பக்ஷ' அல்லது லக்ஷம் கொடையாளி என்று பெயரிட்டுள்ளனர். டாஜ்உல்மா அசிர் (Taj-ul-Ma'aser) ஆசிரியரான ஹாஸன்-உன்-நிஸாமி குத்புதீனை வானளாவப் புகழ்ந்துள்ளார். 'தானே மக்களுக்கு நியாயம் வழங்கியும், தீர்ப்புகள் கூறியும் தன் இராச்சியத்தில் சமாதானமும் சுபிட்சமும் ஓங்கி வளர அரும்பாடுபட்டான்' என்று கூறுகிருர். ஆனால் ஆக்கிரமிப்பு விஷயத்திலும் ஆட்சி செலுத்தும் வகையிலும் தேவையானபோது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த சுல்தான் சற்றும் தயங்கியது இல்லை. இஸ்லாம் மதத்தில் இவன் கொண்டிருந்த நம்பிக்கை போற்றுதற்குரியது. ஹசான்-உன்-நிஜாமி பின் வருமாறு கூறுகிருன்: 'இவனுடைய ஆணைபெற்ற இஸ்லாம் போதகர்கள் மேலும் மன எழுச்சி பெற்றனர். நேர்மைக்கதிரவன் தன் நிழலைச் சொர்க்கத்திலுள்ள ஆண்டவனின் துணையுடன் இந்திய நாடுகளின்மீது விழச் செய்தான்.' மதத்தில் தனக்கிருந்த ஊக்கத்திற்குச் சான்ருக டில்லியில் ஒரு மசூதியையும் ஆஜ்மீரில் ஒரு மசூதியையும் கட்டினுன்.

லாகூரில் குத்புதீன் திடீர் மரணமடைந்தவுடன் லாகூரிலுள்ள அமீர்களும் மாலிக்குகளும் ஆராம் பாக்ஷாவை குத்புதீனின் வாரிசாக அரியணையிலமர்த்தி அவனுக்கு சுல்தான் ஆராம் ஷா என்னும் பட்டமும் வழங்கினர். 'கலகங்களைக் கட்டுப்படுத்தவும் பொதுமக்களின் அமைதியை முன்னிட்டும், வீரர்களின் மனத்தில் திருப்தியை நிலை நாட்டவும்' அவர்கள் அவ்வாறு செய்தனர். ஆராமுக்கும் குத்புதீனுக்கும் உள்ள உறவு விவாதத்திற்குரியது. சிலருடைய கருத்துப்படி இவன் குத்புதீனின் மகன் எனப்படுகிருன். ஆனுல் மின் ஹாஜ்-உஸ்-சிராஜ் குத்புதீனுக்கு மூன்று பெண்கள் மட்டுமே இருந்தனர் என்று மிகத் தெளிவாக எழுதியுள்ளார். அபுல்பாசல் இவனை சுல்தானின் உடன் பிறந்தவன் என்ற வியத்தற்குரியதொரு கூற்றை வெளியிட்டுள்ளார். தற்கால எழுத்தாளர் ஒருவர் இவன் குத்புதீனுக்கு உறவினனே அல்லன் என்ற துணிச்சலான அபிப்பிராயத்தை வெளியிட்டுக் குத்புதீன் இவனைத் தனக்குப்பின் உரிமை ஏற்கும்படி கூறினுர் என்றும் வேறு ஒருவரும் கிடைக்காதபடியால்[1] அவ்வாறு செய்

[1] இண்டியன் ஹிஸ்டாரிகல் குவாட்டர்லி, மார்ச்சு 1937, பக்கம் 120.

Koviloor Acadamy

தான் என்றும் கூறுகிருர். உண்மையில் துருக்கி சமஸ்தானத்தில் பட்டத்திற்கு வருவது குறித்துத் திட்டவட்டமான சட்டங்கள் ஏதும் இல்லை. பெரும்பாலும் எழும் சந்தர்ப்பத்தை ஒட்டியும், தலைவர்களும் பிரபுக்களும் காட்டும் செல்வாக்கைப் பொறுத்தும் தீர்மானிக்கப்படும். நாட்டை ஆளுவதற்கு ஏற்ற தகுதி ஒன்றும் ஆராம் பெற்றிருக்க வில்லை. விரைவிலேயே டில்லிப் பிரமுகர்கள் இவனுக்கு எதிராகச் சதி செய்து பதான் கவர்னராயிருந்த மாலிக் ஷம்சுடீன் இல்டுட்மிஷ் என்பவரை அவனைப்பட்டத்திலிருந்து நீக்குமாறு அழைத்தனர். இல்டுட்மிஷ் அவர்களது அழைப்பிற்கு இணங்கித் தன்படை முழு வதுடன் முன்னேறி ஆராமை டில்லிக்கு அருகிலுள்ள சுட் (Jud) சமவெளியில் தோற்கடித்தான். ஆராமுக்கு என்ன நேர்ந்தது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

2. இல்டுட்மிஷ்

துருக்கிஸ்தானத்திலுள்ள இல்பாரி கூட்டத்தினரைச் சேர்ந்தவன் இல்டுட்மிஷ். வசிகரமான புறத்தோற்றமுடைய அவன் இளமையி லிருந்தே புத்தி கூர்மையும் செயல் திறனும் கொண்டு விளங்கினுன். இதனுல் அவன் சகோதரர்கள் பொருமை கொண்டு அவனை வீட்டி னின்றும் வெளியேற்றி விட்டனர். இடுக்கண்களால் அவன் நற் குணங்கள் குன்றவில்லை. தானே ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தான். அவனுடைய குணநலங்கள் குத்புதீனின் கவனத்தைக் கவர்ந்தன. பெரியதொரு விலை கொடுத்து அவனை விலைக்கு வாங்கினுன். தன் சுய திறமையால் படிப்படியாக உயர் பதவி அடைந்து பதானுக்குக் கவர்னராக நியமனம் பெற்றுப் பின்னர் குத்புதீன் மகள் ஒருத்தியை மணந்தான். சோதரர்களை எதிர்த்து மகமது கோரி நடத்திய படை யெடுப்பின் போது அவன் செய்த அருஞ்சேவைகளைப் பாராட்டும் வகையில் சுல்தான் அவனை அமீர்-உல்-உமாரா என்னும் பதவிக்கு உயர்த்தினுன். இவ்வாறு டில்லி சுல்தான்கள் தகுந்த ஒருவனையே தேர்ந்தெடுத்தனர். ஆனுல் அவன் அரியணை ஏறியதும் கி.பி. 1210 அல்லது 1211-ல் தன் நிலைமைக்கு அல்லல் தரும் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தான். நாசருதீன் கபாக்கா சிந்து வில் தன் சுய ஆட்சியை நிலைநாட்டிப் பஞ்சாபில் தன் ஆதிக்கத்தைப் பரப்ப ஆவல் கொண்டிருந்தான். தாஜ்உடீன் இல்டிஸ் கஸ்னியைப் பெற்றதுடன் மகமது இந்தியாவில் வெற்றி கொண்ட பகுதிகளுக்குத் தானே உரிமையுடயவன் என்ற பழைய போலி உரிமையைப் பாராட்ட முற்பட்டான். அலிமர்தான் என்றதொரு கில்ஜி பிரபு குத்புதீனுல் கி.பி. 1206-ல் இக்தியாருதீன் இறந்தபின் வங்காளக் கவர்னராக நியமனம் பெற்றிருந்தான். குத்புதீன் இறந்த பிறகு டில்லி அதிகாரத் தைப்புறக்கணித்துத் தன்னை சுல்தான் அலாவுதீன் என்று கூறிக்

Koviloor Academy
2374

கொண்டான். மேலும் தங்களுடைய சுதந்திரம் பறிபோனதற்காக இந்து சிற்றரசர்கள் பலர் அதிருப்தி நிரம்பப் பெற்றிருந்தனர். ஆராம் ஷாவின் வலிமை அற்ற ஆட்சியின்போதே குவாலியர், ரான்தாம்பூர் இவைகள் இவைகளுடைய மன்னர்களால் மீட்கப்பட்டுவிட்டன. இல்டுட்மிஷின் துன்பங்களை மேலும் அதிகரிக்கும் வகையில் டில்லி அமீர்கள் அவனுடைய ஆட்சியில் வெறுப்பு கொண்டனர்.

இந்த நிலைமைகளைப் புதிய சுல்தான் மிகத்துணிவுடன் எதிர்த்தான். முதலில் அமீர்களின் கிளர்ச்சியை வெற்றிகரமாக அடக்கி, டில்லிக்கருகிலுள்ள சுட் (Jud) சமவெளியில் இவர்களை வெற்றி கொண்டான். இதன் பின்னர் பதான், அயோத்தி, காசி, சிவாலிக் ஆகிய டில்லியைச் சார்ந்த அரசுகளைத் தன் அடிப்படுத்தினான். இவனுடைய பகைவர்களின் பெரிய திட்டங்களையும் இவன் தவிடுபொடியாக்கினான். கி.பி. 1214-ல் தாஜ்உடீன் இல்டிஸ் கஸ்னியிலிருந்து காவாரம்ஸ் (Khawarazm) ஷாவான சுல்தான் மகமதினால் விரட்டப்பட்டு லாகூருக்கு ஓடினான். பிறகு தானேசுரம் வரையில் பஞ்சாபை வென்று, சுய ஆட்சி பெறவும் இல்டுட்மிஷ் ஆட்சியை மீறித் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் முயன்றான். இச்செயலை இல்டுட்மிஷ் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தன் பகைவன்மீது அவன் உடனேயே படைகொண்டு சென்று கி.பி. 1216 ஜனவரியில் தரேயினுக்கருகில் நடந்த போரில் புறம் கண்டு அவனைச் சிறைபிடித்துப் பதானுக்கு அனுப்பினான். லாகூர் வரையில் இதற்குள்ளாக நாசருதீன் காபாக்கா முன்னேறினான். ஆனால் கி.பி. 1217-ல் இல்டுட்மிஷ்ஷினால் அந்நகரினின்றும் வெளியேற்றப் பட்டான். கி.பி. 1228 பிப்ரவரிக்குள்ளாக அவன் முற்றிலும் ஒடுக்கப்பட்டான். முடிவில் சிந்து நதியில் ஒரு விபத்தில் மூழ்கி மாண்டான். சிந்து டில்லியுடன் இணைக்கப்பட்டது. இதற்கு ஓராண்டிற்குப் பிறகு பாக்தாதில் ஆட்சி புரிந்த காலிப் அல்லது காலிபா அல் முஸ்டான்சிர் பில்லாவிடமிருந்து இல்டுட்மிஷ் ஒருவகை கௌரவ ஆடையையும் இல்டுட்மிஷ் வெற்றி கொண்ட 'கடல் நிலப்பரப்பு யாவற்றிற்கும்' அவனை அதிபனாக்கி சுல்தான்-இ-அசாம் என்ற பட்டம் வழங்கப் பெற்ற ஓர் உத்தரவையும் பெற்றான். இது இல்டுட்மிஷ் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்திய ஒரு புதிய சக்தியாயிற்று. இதனால் முஸ்லிம்களிடை இம் மன்னன் ஒரு கௌரவம் வகித்தான். டில்லி சுல்தான்களின்மேல் காலிப்புகளுக்கு ஆதிக்கம் உண்டு என்ற கொள்கையை இது வலுப்படுத்தியது. இந்தியாவின் பூகோள எல்லைக்கு அப்பாலிருந்தும் காலிப்புகளுக்கே முடிவான அதிகாரம் இந்தியப் பகுதிகளில் உண்டென்பதைச் சட்ட பூர்வமாக்கியது. முஸ்லிம் சகோதரத்துவம் காலிபாவின் ஆதிக்கத்தில் உட்பட்டதென்பதை உணரமுடிகிறது. தான் வெளியிட்ட காசுகளில் தான் காலிபாவின் பிரதிநிதி என்பதை வெளிப்படுத்தியுள்ளான்.

Koviloor Academy

தோமஸ் என்றவர் கூறுகிறார்: 'இவருடைய காசுகள் டெல்லியில் பதானியர்களின் வெள்ளிக் காசுகள் வழங்கப்படுவதற்கு ஆரம்பமாக இருந்தன.'

கி.பி. 1226-ல் ரான்தம்பூர் இல்டுட்மிஷ்ஷினால் மீட்கப்பட்டது. அதன் பின்னர், ஓராண்டுக் காலத்தில் சிவாலிக் குன்றுகளில் அமைந்த மாந்தவார் கைப்பற்றப்பட்டது. கி.பி. 1230-1231 மாரிக்காலத்தில் வங்காள கில்ஜி மாலிக்குகள் முற்றிலும் கீழ்ப்படுத்தப்பட்டனர். லக்நௌடியின் கவர்னராக அலாவுதீன் ஜானி நியமிக்கப்பட்டார். குத்புதீன் மரணத்திற்குப் பிறகு சுய ஆட்சி பெற்றிருந்த குவாலியர் கி.பி. 1232-ஆம் ஆண்டின் முடிவில் சுல்தானால் அதன் இந்து மன்னன் மங்களதேவனிடமிருந்து திரும்பப் பிடிக்கப்பட்டது. கி.பி. 1234-ல் மாளவ நாட்டின்மீது சுல்தான் படையெடுத்து பில்சாக் கோட்டையைக் கைப்பற்றினான். இதன்பின்னர்ப் புகழ்பெற்ற உச்சயினி நகரத்தை நோக்கி, சுல்தான் படையெடுத்து அதைக்கைப்பற்றி அழித்தான். கீர்த்திவாய்ந்த விக்ரமாதித்தனின் சிலை ஒன்று டில்லிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இல்டுட்மிஷ்ஷின் கடைசிப் படையெடுப்பு பானியனை[1] நோக்கி மேற்கொள்ளப் பட்டது. ஆனால் வரும் வழியில் கொடிய நோயினால் மிகவும் பீடிக்கப்பட்டபடியால் ஒரு பல்லக்கில் வைத்து டில்லிக்கு இவனைச் சுமந்து செல்ல வேண்டியதாயிற்று. இந்த வியாதியே யமனாக ஏற்பட்டது. கி.பி. 1236 ஏப்ரல் 29ஆம் நாள் இருபத்தாறு ஆண்டுக்கால ஆட்சிக்குப் பின் உயிர் நீத்தான்.

இல்டுட்மிஷ் ஆட்சிக் காலத்தில்தான் கி.பி. 1221-ல் முதல் தடவையாக மங்கோலியர்கள் சிந்து நதிக்கரையில் அவர்களது புகழ் பெற்ற செங்கிஸ் தலைமையில் தோன்றினர். செங்கிஸ் கி.பி. 1155-ல் பிறந்தான். அவனது முதற் பெயர் டெமுகின் (Temuchin). அவன் ஒரு வெற்றியாளன் மட்டுமல்லன். தன் இளமைப்பருவத்தில் பலதுன்பங்களையும் தாங்கும் பழக்கம் ஏற்பட்டதால் பொறுமை, உறுதி, தன்னம்பிக்கை போன்ற உயரிய குணங்கள் இவனுள் வளர்ந்தன. இத்தகைய குண நலன்களே இவன் மத்திய ஆசியாவின் முரட்டுச் சாதியினரடங்கிய ஒரு பெரிய சாம்ராச்சியத்தை ஏற்படுத்தவும் இவன் மரணத்திற்குப் பின்னும்பலகாலம் நீடித்த சட்டங்கள் ஆட்சிஸ்தாபனங்கள் இவற்றை ஏற்படுத்தவும் உதவின. மின்னல் வேகத்தில் மத்திய ஆசியா, மேற்கு ஆசியா ஆகிய நாடுகளின் மீது பாய்ந்து அவற்றைத் தன்னடிப்படுத்தினான். கவாராஸ்ம் அல்லது கிவாவின் கடைசி ஷா ஜலாலுதீன் மங்கபார்னியைத் தாக்கியதும் அவன் பஞ்சாபிற்கு ஓடி

[1] ரேவர்டியின் கருத்துப்படி (பக்கம் 623 அடிக்குறிப்பு) இது சிந்துசாகர் தோஆப் மலைப்பிரதேசத்தில் உள்ளது. அல்லது உப்பு மலைகளுக்கு மேற்கில் உள்ள நாட்டிலாகும். பதானியும் (ராங்கிங் வால்யூம் 1 பக்கம் 95) பெரிஷ்டாவும் (பிரிக்ஸ் வால்யூம் 1, பக்கம் 211) நிசாமுடீன் கருத்துகளைக் கடன் வாங்கி அதை முல்தான் என்கின்றனர். ஆனால் அவர்கள் கூறுவது தவறு.

Koviloor Academy

வந்து இல்டுட்மிஷ் ஆட்சியில் தஞ்சம் புகுந்தான். வேண்டா விருந்தினனாக வந்த இவனுடையவேண்டுகோளுக்கு இசைய இல்டுட்மிஷ் மறுத்துவிட்டான். மங்கபார்னி கோகர்களுடன் உடன்பாடு செய்து கொண்டு மூல்தான் மன்னர் நாசருதீன் காபாக்காவை வென்ற பின்னர் சிந்துவையும் வட கூர்ச்சரத்தையும் கொள்ளையிட்டுப் பெர்சியாவிற்குச் சென்றான். மங்கோலியர்களும் திரும்பிச் சென்றனர். இவ் விதமாகப் பயங்கரமானதொரு ஆபத்தினின்றும் இந்தியா தப்பியது. ஆனால் மங்கோலியப் படையெடுப்புகளின் தொந்தரவுகளால் டில்லி சுல்தான்கள் பின்னர் வந்தகாலத்தில் பாதிக்கப்பட்டனர்.

டில்லியை ஆண்ட முந்திய துருக்கிய சுல்தான்களில் மிகச் சிறந்தவராக இல்டுட்மிஷ் கருதப்படுதல் நியாயமானதே. இவர்களது ஆட்சி கி.பி. 1290 வரை நீடித்தது. அழிவினின்றும் குழவிப் பருவத்தில் இருந்த முஸ்லிம்களின் இந்தியப் பகுதிகளைக் காப்பாற்றிய பெருமை இவனைச்சாரும்; குத்புதீன் ஐபெக் வென்ற பகுதிகளை ஒன்று சேர்த்து வலிமைமிக்கதோர் ஆட்சியாக அமைத்தவன் இவனே. அந்த ஆட்சி சில வெளிப்புறப்பிரதேசங்கள் நீங்கலாக இந்துஸ்தான் முழுவதும் உள் அடங்கியதாக இருந்தது. தளரா ஊக்கமுடைய வீரனாகவும் பகைவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவனாகவும் விளங்கிய இவன் தன் இறுதிவரை போர்ச் செயல்களில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தான். அதேசமயம் சிறப்பான மனித இயல்புகள் பெற்றிருந்த இவன் கலைகளையும் கல்வியையும் ஆதரித்தான். கி.பி. 1231-1232-ல் டில்லியில் இந்த சுல்தான் பூர்த்திசெய்த புகழ் பெற்ற குதப்மினார் கட்டடம் இவன் பெருமைக்கு அழியாச் சான்றாக நிற்கின்றது. சில சரித்திர ஆசிரியர்கள் தவறாக எண்ணுவதுபோல் இந்தக் கட்டடம் முதல் துருக்க சுல்தானின் ஞாபகார்த்தமாகப் பெயரிடப்படவில்லை. ஆனால் பாக்தாத் அருகிலுள்ள உஷ் ஊரானகிய குவாஜா குத்புதீன் பெயரால் விளங்குகிறது. இவன் இந்துஸ்தானத்தில் வாழ்வதற்காக வந்துசேர்ந்தான். இல்டுட்மிஷ் மற்றும் பலரும் இவனை மிக்க பக்தியோடும் மரியாதையோடும் போற்றினர். நன்றியின் காரணமாகவே இல்டுட்மிஷ் தன் ஆதரவாளர்களான சுல்தான் குத்புதீன், சுல்தான் முஇஸ் உதீன் இவர்கள் பெயர்களை இத்தூணில் பொறிக்கும்படி செய்தான். சுல்தானின் ஆணையின் பேரில் ஓர் உன்னதமான மசூதியும் கட்டப்பட்டது. இவன் மிகவும் மதப் பற்றுடையவன். தவறாது பிரார்த்தனைகள் சொல்வதில் கருத்தாக இருந்தான். இந்த சுல்தானைப் போல் வேறு எந்த அரசரும் இவ்வளவு நற்குணவானாகவும் இரக்கச் சித்தம் உடையவனாகவும் கல்விமான்களிடமும் ஞானிகளிடமும் மரியாதை உள்ளவனாகவும் டில்லி ஆட்சி பீடத்தில் அமர்ந்தது இல்லை என்று மின்ஹாஜ்-உஸ்-சிராஜ் எழுதுகின்றார். அவன் காலத்திய சாசனங்கள் சிலவற்றில் ‘ கடவுளின் நிலப் பாதுகாவலன் ’ கடவுளின்

Koviloor Acadamy

ஊழியர்களைப் பாதுகாப்பவன்' என்று இவ்விதமாகக் காணப்படுகின்றன.

3. ரசியா

வங்காளத்தைத் தன் தகப்பனின் பிரதிநிதியாக ஆட்சிபுரிகையிலேயே இல்டுட்மிஷ் மூத்த மகனாகிய நாசருதீன் மகமது கி.பி. 1229 ஏப்ரலில் மரித்தான். உயிருடன் இருந்த மற்றப் புதல்வர் ஆட்சிப் பொறுப்பை வகிக்கத்திறமையற்றவர்களாக இருந்தனர். ஆகையால் இல்டுட்மிஷ் மரணப்படுக்கையில் இருக்கையிலேயே தன் வாரிசாகத் தன் மகளை ஏற்படுத்தினான். ஆனால் அவன் அவையிலிருந்த பிரபுக்கள் ஒரு பெண்ணிற்குத் தலைவணங்கக்கூடாதென்ற அளவிற்கு ஆணவம் கொண்டிருந்தபடியால் மரித்துப்போன சுல்தானின் விருப்பத்தைப் புறக்கணித்து, சுல்தானின் உயிரோடிருந்த பிள்ளைகளில் மூத்தோனாகிய ருகன்-உத்-உடின் பெருஸ் (Rukn-ud-din-Firuz) என்பவனை அரியணையில் அமர்த்தினர். இவன் பதான் ஆட்சியின் பொறுப்பை வகித்து வருகையில் சில ஆண்டுகளுக்குப் பின் தன் தந்தையின் ஆயுட் காலத்திலேயே லாகூரின் ஆட்சியையும் பெற்றவன். இவனைத் தேர்ந்தெடுத்தது துர் அதிர்ஷ்டமாகும். இவன் ஆட்சிபுரியத் தகுதியற்றவன். கீழ்த்தர உணர்ச்சிகளில் இவன் ஈடுபட்டான்; அரசியல் அலுவல்களைப் புறக்கணித்து அதன் செல்வத்தை வீணாக விரயமாக்கினான். ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவளும்[1] பேராசை மிக்கவளுமான ஷா துர்க்கான் என்னும் இவனது தாயாரின் செயல்களால் நிலைமை மேலும் மோசமாகியது. தன்மகன் சிற்றின்ப வாழ்க்கையில் மூழ்கிக் கிடக்கையில் இவள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டாள். இராச்சியம் குழப்பத்தில் மூழ்கியது. மத்திய அரசாங்கத்தின் ஆணை பதான், முல்தான், ஹான்சி, லாகூர், அயோத்தி, மற்றும் வங்காளம் இங்கெல்லாம் செல்லாதாயிற்று. தாய் இராணியின் செயல்களால் மனம் வெறுப்பு மேலிட்ட டில்லிப் பிரபுக்கள் அவளைச் சிறைலடைத்து ரசியாவை டில்லி அரியணையிலமர்த்தினர். ருகன்-உத்-உடீன் பெருஸ் கிலோகாரியில் தஞ்சம் புகுந்திருந்தான். ஆயினும் அவனும் சிறையிலடைக்கப்பட்டான். அங்கேயே கி.பி. 1236 நவம்பர் 9-ல் அவன் இறந்தான்.

இராணியை எதிர் நோக்கியுள்ள அலுவல் எளிதானதன்று. இராச்சியத்தின் முதலமைச்சரான மகமது ஜுனைதியும் மற்றும் சில பிரபுக்களும் ஒரு பெண்ணின் ஆட்சியுடன் இணைய முடியவில்லை. ஆகவே அவளுக்கு எதிராக ஓர் அமைப்பை உருவாக்கினர். ஆனால் ஆட்சியாளருக்கு வேண்டிய தகுதிகள் ஒன்றும் ரசியாவிடம் குறை

[1] அவள் இதற்குமுன் துருக்கிய தாதிப் பெண்ணாக இருந்தவள்.

Koviloor Academy

வில்லை. மேலான அரசியல் தந்திரத்தாலும் உறுதியான நடவடிக்கையாலும் விரைவிலேயே தன் எதிரிகளை அடக்கினாள். இந்துஸ்தானத்திலும் பஞ்சாபிலும் அவள் ஆட்சி ஏற்பட்டது. வங்காளம், சிந்து ஆகிய தொலைவிலுள்ள மாகாணக் கவர்னர்களும் இவளது ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டனர். மின்ஹாஜ்-உஸ்-சிராஜ் இவ்வாறு கூறுகிறார். 'லக்னுட்டியிலிருந்து தேபால் தமரில்லா வரையிலும் எல்லா மாலிக்குகளும் அமீர்களும் தங்களது பணிவையும், கீழ்ப்படிதலையும் வெளிக்காட்டினர்'. ரசியாவின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் சிராமிட்டா' முலாகிதா மதப்பிரிவைச் சேர்ந்த சில வெறியாளர்கள்துன்பம் விளைவிக்கவென்றே திட்டமிட்ட முயற்சிசெய்தனர். இவர்களுக்குத் தலைவன் நூர் உதீன் என்ற துருக்கன். அவர்களில் ஓர் ஆயிரவர் கத்தி கேடயங்களுடன் ஒரு குறிப்பிட்ட நாளில் பெரிய மசூதியில் நுழைந்தனர். ஆனால் அரசாங்கத்துருப்புகள் அவர்களைக் கலைத்து விரட்டினர். இந்த எழுச்சி ஒரு கேலிக் கூத்தாக முடிந்தது.

ஆயினும் அமைதியான ஆட்சியைக்கொண்டு மகிழ இராணிக்கு விதி இடமளிக்கவில்லை. அபிஸீனிய அடிமை ஜலாலுதீன் யாகுட் என்பவனுக்கு இவள் காட்டிய மிதமிஞ்சிய தயவினால் துருக்கப் பிரபுக்கள்[1] மன வருத்த முற்றனர். மேலும் இராணி அவனைச் சமீபத்தில் லாயங்களுக்குத் தலைவனாக வேறு நியமித்தாள். துருக்கப் பிரபுக்கள் தங்களுக்குள் மிகவும் நெருங்கி ஒன்றுபட்டனர். வெளிப்படையாக முதலில் புரட்சி செய்தவன் சார்ஹிந் கவர்னரான இக்தியாருடீன் அல்டுனியா. இவனைப்புரட்சியில்இறங்கும்படி அரண்மனையைச்சார்ந்த சில பிரபுக்கள் தூண்டி விட்டனர். இக்கலகத்தை அடக்கவேண்டி இராணி ஒரு பெரும் படைகொண்டு சென்றாள். ஆயினும் நேரிட்ட கைகலப்பில் புரட்சிசெய்த பிரபுக்கள் யாகுட்டைக் கொன்று வீழ்த்தி இவளைச் சிறைப்பிடித்தனர். அவளை அல்டுனியாவின் பாதுகாவலில் வைத்து விட்டு, அவளுடைய சகோதரன் முயிசுடீன் பஹ்ராம் டில்லி சுல்தானாகப் பிரகடனம் செய்யப்பட்டான். இந்த இக்கட்டான

[1]இபன் பட்டூடா, இவள் அந்த அபிசீனியன்பால் வைத்திருந்த அன்பு கொடுங் குற்றம் என்று தவறாகக் கூறுகிறார். அக்காலத்திய முஸ்லீம் சரித்திர ஆசிரியர் மின்ஹாச் அவ்வாறான குற்றச்சாட்டைக் கூறவே இல்லை. அவர் அந்த அபிசீனியன் சுல்தானின் தனி அன்பைப் பெற்றான் என்று மட்டுமே கூறுகிறார் (ரேவர்ட்டி வால்யூம் 1. பக்கம் 642) பெரிஷ்டா குற்றம் சாட்டுவதெல்லாம் இராணிக்கும் அபிசீனியனுக்கும் இடையில் மிக நெருங்கிய பழக்கம் இருந்தது என்றும் அவள் சவாரிசெய்ய முற்படுகையில் இவன் அவளைத் தன் கையால் தூக்கிக் குதிரைமீது அமர்த்துவான் என்கிறார் (பிரிக்ஸ் வால்யூம் 1, பக்கம் 220). மேஜர் ரேவர்ட்டி கூறுவது போல் தோமஸ் இந்த ராணியின் நடத்தையில் வேண்டுமென்று குற்றம் கற்பித்துள்ளார். அவர் கூறுவது பின்வருமாறு: 'கன்னியான இராணி காதல் புரியக் கூடாது என்பது அன்று—தனக்குப் பிடித்தமான கீழப்படியக் கூடிய அரசகுமாரனுடன் உறவு கொள்ளலாம்; அன்றி அரண்மனையில் அந்தப்புரத்தில் கட்டுக்கடங்காமல் இன்பத்தில் திளைக்கலாம். ஆனால் நிலையற்ற அன்பு தவறான இடத்தில் செலுத்தப்பட்டது. அதனால் அவள் தன் சபையில் கீழ்த்தர உத்தியோகஸ்தனான அபிசீனியனை விரும்பும்படியாயிற்று. இதைத் துருக்கியப் பிரபுக்கள் ஒரு முகமாக வெறுத்தனர்.' (கிரானிகில் ஆப் பதான்கிங்ஸ், பக்கம் 106).

Koviloor Academy

நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டி அல்டுனியாவை மணம் செய்துகொள்ள ரசியா முயன்றாள். ஆனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. தன் கணவனுடன் டில்லியை நோக்கிப் படையெடுத்தாள். ஆனால் கைத்தாலுக்கு அருகில் வரும்பொழுது அல்டுனியாவுடன் சேர்ந்தவர்கள் இவனை விட்டு நீங்கிவிட்டனர், இதனால் இவள் கி.பி. 1240-ல் அக்டோபர் 13ஆம் நாள் முயிசுடீன் பஹ்ராமினால் தோற்கடிக்கப்பட்டாள். அவளும் அவள் கணவனும் மறுநாள் கொலை செய்யப்பட்டனர். மூன்றாண்டுக்கால ஆட்சிக்குப் பிறகு இராணி ரசியாவின் ஆயுள் பரிதாபகரமாக முடிவுற்றது.

பாராட்டத்தக்க பல திறமைகளை ரசியா பெற்றிருந்தாள், 'குர்-ஆனைத்தக்க உச்சரிப்புடன் இவள் படித்தாள். தன் தகப்பனின் ஆயுட்காலத்திலேயே இவள் அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டாள்' என்று பெரிஷ்டா கூறுகிறார். இராணியாக இருக்கையில் தன் நற்குணங்கள் செவ்வனே துலங்கும் வகையில் முயன்றாள். இவள் காலத்திய வரலாற்று ஆசிரியர் மின்ஹாஜ்-உஸ்-சிராஜ் கருத்துப்படி இவள் 'ஒரு பெரிய அரசியாகவும் அறிவாற்றலும் நேர்மையும் தயாளமும் நிரம்பி, கல்விமான்களை ஆதரித்தும், நீதி வழங்கியும், தன் குடிகளைப் பேணி ஆதரித்தும் வந்தாள். போர்க்குணங்கள் நிரம்பியும் மற்றும் அரசர்க்குத் தேவையான எல்லாத் தகுதிகளும் புகழத்தக்க நற்பண்புகள் அமையப்பெற்றும் விளங்கினாள்.' தன் பகைவர்மீது போருக்குச் செல்கையில் தான் உடன் சென்றாள். பெண் உடைகளையும் முகமூடியையும் நீக்கிப் போர்வீரனின் உடை பூண்டு ஆண் மகனின் தலையுடையுடன் விளங்குவாள். தர்பாரில் அமர்ந்து அரசியல் அலுவல்களைத் தக்க திறமையுடன் கவனித்தாள். எல்லா வகையாலும் தான் ஓர் அரசன் என்று தோன்றும்படி முயன்றாள். ஆனால் செருக்கு மிக்க துருக்கியப் பிரபுக்கள் பெண் ஒருத்தியின் ஆட்சியில் மனமொப்பி அமைய விரும்பாமல் அவமானமான முறையில் அவள் வீழ்ச்சியை முடித்தனர். ரசியாவின் பரிதாபகரமான முடிவு, பொதுமக்களின் தப்பு அபிப்பிராயத்தை வெல்வது எப்போதும் மிகவும் எளிதன்று என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

ரசியாவின் மறைவிற்குப் பிறகு ஒழுங்கீனமும் குழப்பமுமான தொரு காலம் நீடித்தது. அவளுக்குப் பின்னர் டில்லியில் அரசெய்திய முயிசுடீன் பஹ்ராமும் அல்லாவுடீன் மசூதும் தகுதியும் மதிப்பும் அற்றவர்கள். ஆறாண்டுக்கால அவர்களது ஆட்சியில் நாடு சமாதானத்தையும் அமைதியையும் அறியவில்லை. வெளியார்களின் படையெடுப்பு இந்துஸ்தானத்தின் இன்னல்களை மேலும் அதிகமாக்கியது. கி.பி. 1241-ல் மங்கோலியர்கள் பஞ்சாபின் உள் பகுதியில் நுழைந்தனர். அழகிய லாகூர் நகரம் அவர்களின் இரக்கமற்ற பிடியில் சிக்கியது. கி.பி. 1245-ல் அவர்கள் உச் வரையில் முன்னேறினர்.

Koviloor Academy

பெருத்த நஷ்டத்துடன் அவர்களைப் பின் தள்ளவேண்டியதாயிற்று. மசூதுஷாவின் ஆட்சி இறுதியில் வெறுப்பு அளவிலும் தீவிரத்திலும் அதிகமாயிற்று. கி.பி. 1246 ஜூன் 10ஆம் நாளில் அமீர்களும் மாலிக்குகளும் சேர்ந்து இல்டுட்மிஷ் இளைய மகனை நாசருதீன் மகமது என்பவனை அரியணையில் அமர்த்தினர்.

4. நாசருதீன் மகமது

நாசருதீன் நல்லெண்ணமும் பக்தியுமுடையவன். தன்னுடைய ஓய்வு நேரங்களைத் திருக்குரானைப் பிரதி செய்வதில் கழித்து வந்தான். அவனும் கல்வியாளர்களை ஆதரிப்பவனுயிருந்தான். மின்ஹாஜ் உஸ் சிராஜ் சுல்தான்கீழ் ஓர் உயர் பதவி வகித்தான். சுல்தானிடம் பல விலை உயர்ந்த பரிசுகளைப் பெற்றுன். தான் எழுதிய தபாகுவாட்-இ-நசிரி(Tabaqat-i-Nasiri) என்னும் நூலை அரசனுக்கு அர்ப்பணித்தான்.

அவன் பட்ட மெய்திய காலத்திலிருந்த சிக்கலான சூழ்நிலைக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஓர் அரசனுக்குத் தேவைப்பட்டதிறமையை நாசருதீன் பெற்றிருக்கவில்லை. அவனுடைய அமைச்சரும் பின்னர் அவனது உதவியாளனுமான கியாஸ் உதீன் பால்பன் என்பவனே உண்மை அதிகாரம் எல்லாம் மறைவாக வகித்தவன். தன் மீது அரசன் வைத்திருந்த நம்பிக்கைக்குத் தகுந்தபடி பால்பன் நடந்து வந்தான். உள் நாட்டுக் கலகங்கள் வெளி நாட்டுப் படையெடுப்புகள் இவைகளினின்றும் நாட்டைப் பாதுகாக்கத் தன்னுல் ஆன மட்டும் முயன்றுன். மங்கோலியர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தோ ஆப் மற்றும் அரசின் பல பகுதிகளிலும் கலகக்கார ராஜாக்களையும் சமீந்தார்களையும் அச்சுறுத்தித் தண்டிக்கும் பொருட்டுப் பல படையெடுப்புகள் செய்யப்பட்டன. பால்பனுக்குப் பகைவர்களான சில பிரபுக்கள் கி. பி. 1253-ல் பால்பனை நாடுகடத்தும்படி சுல்தானைத் தூண்டி விட்டனர். ஆனுல் அப்பகைவர்கள் இராச்சியத்தின் அலுவல்களைச் சீர் கேடாக நடத்தினர். எனவே பால்பன் கி.பி. 1255-ல் திரும்ப அழைக்கப்பட்டு உன்னத பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டான். நாசருதீன் மகமது கி.பி. 1266 பிப்ரவரி 18-ல் ஆண் வாரிசு ஒன்றுமின்றிக் காலமானுர். இவ்வாறு இல்டுட் வமிசம் முடிவுற்றது. தனக்குப் பின் வாரிசு என்று சுல்தான் நியமித்த தாகக் கருதப்படும் பால்பன் அரியணை ஏறினுன். பால்பனின் திறமை நன்கு தெரிந்திருந்தபடியால் பிரபுக்களும் அதிகாரிகளும் அதற்கு மன மொப்பினர்.

5. கியாஸ் உதீன் பால்பன்

டில்லி அரியணையில் வீற்றிருந்த தன்முன் ஆட்சி செய்தவர்களைப் போன்று பால்பனும் புகழ்மிக்க துருக்கிஸ்தான இல்பாரி வமிச வழி

Koviloor Academy

வந்தவன். சிறு வயதில் இவன் மங்கோலியர்களால் சிறைபிடிக்கப் பட்டு அடிமையாகப் பாக்தாத் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டான். பஸ்ஸரோ நகரைச் சேர்ந்த அறிவும் பக்தியும் நிரம்பப் பெற்ற குவாஜா ஜமால் உதீன் என்பவனல் அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கப் பட்டான். தன் மற்ற அடிமைகளுடன் இவனையும் கி.பி. 1232-ல் டில்லிக்குக் காஜா ஜமால் உதீன் கொண்டு சென்றுன். இவர்கள் எல்லோரையும் சுல்தான் இல்டுட்மிஷ் விலைக்கு வாங்கினுன். இவ்வாறு பால்பன் சுல்தானின் புகழ் மிக்க நாற்பது துருக்கிய அடிமைக் குழுவில் ஒருவனுனன். முதலில் இவன் இல்டுட்மிஷ்ஷினல் காஸ்டார் (Khasdar) பதவிக்கு (அரசனின் சொந்த காவலாளன்) அமர்த்தப் பட்டான். தன் திறமை, தகுதி காரணமாகப் படிப்படியாக உயர் பதவிகளையும் பட்டங்களையும் பெற்று, முடிவில் நாசருதீன் மகமதுவின் உதவியாளனுக நியமனம் பெற்றுன். தன் மகளையும் கி.பி. 1249-ல் சுல்தானுக்கு மணமுடித்தான்.

முடிபுனைந்ததும் கடினமானதும் வெல்வதற்கரியதுமானதொரு செயலால் இவன் எதிர்ப்பட்டான். இல்டுட்மிஷ் மரித்தபின் தொடர்ந்த முப்பது ஆண்டுக்காலத்தில் அவனுக்குப்பின் ஆண்ட திறமையற்றவர் கள் செயலால் அரசியல் அலுவல்கள்யாவும் குழப்பத்தில் ஆழ்ந்தன. டில்லி சுல்தானின் கருவூலம் அநேகமாக வறண்டு போயிற்று. அதன் பெருமை மிகவும் குன்றியது. ஆனல் துருக்கியப் பிரபுக்களின் பேரா சையும் வீண் பெருமையும் மேலோங்கி நின்றன. சுருக்கமாகப் பார்னி எழுதியது போல 'நல்ல அரசாங்கத்தின் ஆதாரமும் எந்த ஆட்சியின் பெருமைக்கும் புகழுக்கும் ஊற்றுன அரசியலிடம் பயம் என்பது மக்களின் மனத்தினின்று அறவே மறைந்து விட்டது. நாடு மிகக் கேவல நிலையை அடைந்து விட்டது.' உள் நாட்டில் ஏற்பட்ட பொக்கிஷவறட்சியுடன் திரும்பத்திரும்ப ஏற்படும் மங்கோலியப் படை யெடுப்பின் இன்னல்களுக்கும் டில்லி அரசு உட்பட்டது. அந்த நேரத்திற்குத் திறமையான சர்வாதிகாரி தேவையாக இருந்தது.

பால்பன் ஒரு திறமை வாய்ந்த நிர்வாகி. நீண்ட காலமாக இராச் சியம் அனுபவித்து வந்த இன்னல்களைக் களைவதில் பால்பன் ஆவலு டன் தன்னை நியமித்துக் கொண்டான். தன் அரசாங்கம் நிலைபெறு வதற்குத் திறமையும் வலுவுமிக்க இராணுவம் முதல் தேவை யென் பதைச் சரியாகப் பால்பன் உணர்ந்து கொண்டான். படையினரைச் சீர்திருத்தி அமைக்கும் வேலையில் ஈடுபட்டான். 'புதிய, பழைய குதிரைப் படையினரும் காலாட் படையினரும் திறமையும் நம்பிக்கை யும் உடைய அதிகாரிகளின் பார்வையில்' (மாலிக்) விடப்பட்டன. டில்லி, அதன் சுற்றுப்புறங்கள், தோவாப் ஆகிய பகுதிகளில் ஒழுங்கை நிலைநாட்டத் தன் கவனத்தை அடுத்தபடியாகத் திருப் பினுன். இப் பகுதிகள் கடந்த முப்பது ஆண்டுகளாகத் திறமையற்ற

Koviloor Academy

ஆட்சியின் விளைவாக, மீவாட் (ஆள்வாரைச் சூழ்ந்துள்ள மாவட்டங்கள்) இராசபுத்திரர்களின் அடாத படையெடுப்புகளுக்கும் பல கொள்ளைக்கூட்டத்தினர்களின் படையெடுப்புகளுக்கும் இலக்காகியிருந்தன. உயிர், உடைமை, வாணிகம் யாவும் பாதுகாப்பற்று இருந்தன. டில்லியின் சுற்றுப் புற வனங்களிலிருந்து மீவாட் இராசபுத்திரர்களை சுல்தான் விரட்டியடித்தான். அவர்களில் பலரை வாளுக்கிரையாக்கினன். பிற்காலத்தில் ஏற்படக்கூடிய தொல்லைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கையாகக் கோபால்கிர் என்னும் இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டி டில்லிக்கு அருகில் ஆப்கானிய உத்தியோகஸ்தர்கள் தலைமையில் பல காவல் நிலையங்களை ஏற்படுத்தினன். மறு ஆண்டில் (1267) தோவாப்பில் கொள்ளைக் கூட்டத்தினரை அடக்கினன். தானே அவர்களுடைய பாதுகாப்பு இடங்களான காம்பி, பாட்டியாலி, போஜ்பூர் இடங்களுக்குக் குதிரையில் ஏறிச் சென்ருன். அவ்விடங்களில் வலுவான அரண்களை அமைத்து ஜலாலிக் கோட்டையையும் பழுது பார்த்தான். இவ்விதமாக ஒழுங்கும் பாதுகாப்பும் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. அறுபது ஆண்டுகளுக்குப் பின் பார்னி இவ்வாறு கூறினர். 'இதன் பிறகு சாலைகள் திருடர் பயமற்று விளங்கின.' அதே ஆண்டில் கேத்சர் (katehr) (இப்பொழுது ரோகில்கண்டில் உள்ள) என்னுமிடத்தில் கலகக் காரர்களைத் தண்டித்தான். சின்னுட்களுக்குப் பிறகு ஜூட்மலைகளுக்குச் சென்று அங்குள்ள மலைவாசிகளை ஒடுக்கினன்.

பிரபுக்களின் அதிகாரத்தை ஒடுக்கும் கொள்கையைப் பின் பற்றிப் பால்பன் தோவாப் பகுதியில் நில உடைமையைச் சீர்திருத்த முயன்ருன். இங்குள்ள நிலங்கள் இல்டுட்மிஷ் காலத்திலிருந்து இராணுவ சேவைக்கு ஈடாக 2000 ஷாம்சி (Shamsi) குதிரை வீரர்களால் அநுபவிக்கப் பட்டு வந்தன. பார்னியின் கூற்றிலிருந்து நாம் அறிவது யாதெனில் முதலில் மானியம் பெற்ற மானியதார்களில் பலர் இறந்து விட்டனர். பலர் மூப்படைந்து விட்டனர். அவர்களுடைய சந்ததியார்கள் இந்த மானியங்களைத் தங்கள் பிதிரார்ச்சித மாகக் கொண்டு தங்களுடைய பெயர்களை அரிஸ் என்னும் அதிகாரியின் பத்திரங்களில் பதிவு செய்யும்படியாகச் செய்தனர். ஆயினும் மானியத்திற்கிடான இராணுவ சேவை புரிவதைத் தவிர்க்கும் மனப்பான்மை மட்டும் இவர்களிடையே காணப்பட்டது. மிதமான சீர்திருத்தங்கள் மூலம் இந்த துஷ் பிரயோகத்தை நீக்கப் பால்பன் முற்பட்டான். பழைய மானியங்களை இவன் புதுப்பித்தான். ஆனல் பழைய மானியதார்களில் வயது அடைந்தவர்களுக்கு அவர்களின் வயதிற்குஏற்றபடி சிறு தொகைகள் வழங்கினன். இது மானியதார்களிடை மனக்கசப்பை ஏற்படுத்தியது. அவர்கள் தங்களுடைய குறைகளை டில்லி கொத்தவால் பக்ருடீன் என்ற மூத்தவரிடம் தெரிவித்தனர். அவர் சுல்தானிடம் மனம் உருகப் பேசி நிலங்களை மீட்டுத்தர இணங்கும் படி

Koviloor Acadamy

செய்தார். இதனால் கருவூலத்தைக் காலிசெய்யப் பழைய தொரு வழக்கம் நீடித்தது. விவேகத்தை உணர்ச்சி வென்றது.

உள்நாட்டில் தன் ஆட்சியை உறுதியாகவும் நிலையுள்ளதாகவும் செய்ய முயன்றுவந்த நேரத்தில் மங்கோலியப் படையெடுப்பாளர்களிடமிருந்து இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளைக் காக்கவேண்டுமென்று பால்பன் எண்ணத் தவறவில்லை. மங்கோலியர்கள் கசினி, டிரான்சோக்சியான ஆகிய இடங்களில் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் காலிப் அல்முட்டாஸிம் என்பவரைக் கொன்று பாக்தாதைக் கைப்பற்றிய பின், பஞ்சாப் சிந்துப் பகுதிகளில் முன்னேறலாயினர். கி.பி. 1271ஆம் ஆண்டில் சுல்தான் லாகூருக்குச் சென்று மங்கோலியப் படையெடுப்புகளால் அழிந்துபோன அதன் கோட்டையைத் திருத்தி அமைக்கப் பணித்தான். நீண்டகாலமாக சுல்தானின் உறவினனான ஷெர்கான் சுன்கார் மங்கோலியர் உள் நுழைவதற்குப் பெருந்தடையாக விளங்கினன். இவன் அரசாங்கத்தின் தலைசிறந்த ஊழியன். பாட்டின்டா, பாட்னயர் சமான, சுனம்பிரதேசங்களில் உரிமை கொண்டிருந்தான். ஆனால் அவன் 'நாற்பதில்' ஒருவனாக இருந்தபடியாலும் தன் பட்டமேற்புக்குப் பின் இதுவரை அவன் டில்லிக்கு வருவதைத் தவிர்த்திருந்தபடியாலும் சுல்தான் அவனிடம் ஐயம் கொண்டான். இது சமயம் அவன் மரித்துப்போனன். 'சுல்தானே இவனுக்கு நஞ்சூட்டும்படி செய்தார்' என்று பார்னி எழுதுகிறார். பார்னியின் கூற்று உண்மையாக இருக்குமாயின், பால்பனின் செயல் நன்றன்று என்பதுடன் அரசியல் விவேகமற்றதுமாகும். எல்லைப்புறங்களை மெச்சும் வகையில் திறமையுடன் இவன் பாதுகாத்துவந்தான். மேலும் பல அடங்காப்பிடாரிகளான ஆதிவாசிகளையும் இவன் கட்டுப்படுத்தியிருந்தான். இவன் மரணம் மங்கோலியர்களுக்கு எல்லைப் புறத்தைத்தாக்கி அழிக்க ஊக்கியது. அவர்களுடைய அட்டுழியங்களைத் தடுத்து நிறுத்தும்படியாக சுல்தான் தன் மூத்தமகன் இளவரசன் மகமதுவை (கானிஷாகிட் என்று நன்குதெரிந்த உயிர் நீத்த தியாகி) மூல்தான் கவர்னராக நியமித்தான். இளவரசான மகமது அடக்கமான குணம் உடையவன்; இவனிடம் திறமையும் வீரமும் நிரம்பி இருந்தன. மேலும் இவன் கல்வியாளர்களை ஆதரிப்பனாகவும் இருந்தான். அதேசமயம் சுல்தான் தன் இரண்டாவது மகனான பக்ராகானைச்சமானா, சுனம்பிரதேசங்களுக்கு அதிபதியாக்கி, மொகலாயர் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தும் வகையில் தன் இராணுவத்தை வலுப்படுத்தவும் இவனிடம் உத்தரவிட்டிருந்தான். கி.பி. 1279 வாக்கில் மங்கோலியக் கொள்ளைக்கூட்டத்தினர் தங்கள் படையெடுப்புகளை உண்மையாகவே தொடங்கி, சட்லெட்ஜ் நதியையும் கடந்துவிட்டனர். ஆனால் மூல்தானிலிருந்துவந்த இளவரசன் மகமது சமானவிலிருந்துவந்த பக்ராகான், டில்லியிலிருந்துவந்த மாலி முபராக் பெக்டார்ஸ் இவர்களுடைய கூட்டுப்படையால் மங்கோலியர் நன்கு

Koviloor Academy

முறியடிக்கப்பட்டனர். இவ்வாறு மங்கோலியப் படையெடுப்பின் இன்னல் தாற்காலிகமாகத் தடுக்கப்பட்டது.

அதே ஆண்டில் வளமிக்க வங்காள மாகாணத்திலிருந்து மற்றெரு அபாயம் பால்பனை அச்சுறுத்திற்று. வங்காளக் கவர்னர்கள் டில்லி அதிகாரத்தை மீறுவதற்குத் தொலைவு ஒரு தூண்டுதலாக இருந்தது. குறிப்பாகத் திறமையற்ற மன்னர்களாட்சியில் இது அதிகம் நடைபெற்றது. சுல்தானின் உதவியாளனாக வங்காளத்தில் ஆட்சிபுரிந்த டக்ரில்கானின் கலகமே இப் புது அபாயம். டக்ரில்கான் திறமையும் ஊக்கமும் தயாளமும் உடைய துருக்கியன். வங்காளத்தில் அவனுடைய ஆட்சி வெற்றியுடன் விளங்கியது. ஆயினும் பேராசை அவனை விரைவில் ஆட்கொண்டது. சுல்தானின் முதுமையும் வட மேற்கு எல்லையில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட மங்கோலியப்படையெடுப்பும் சில போதனையாளர்கள் தூண்டுதலும் சேர்ந்து இவனைக் கலகக் கொடியை உயர்த்தத் தூண்டியது.

டக்ரில்கானின் கலகம் பால்பனைப் பெரிதும் கலக்கியது. விரைவிலேயே ஒரு பெரும் படையை அமீர்கான் என்று பட்டம் பெற்ற அல்ப்டிஜன் முயூ-இ-தராஸ் (நீண்ட மயிருடைய) (Mu-i-daraz) தலைமையில் வங்காளத்திற்குப் பால்பன் அனுப்பினான். ஆனால் கலகக்கார கவர்னரால் அமீர்கான் தோற்கடிக்கப்பட்டான். அவனுடைய வீரர்களுக்குத் திரண்ட பணத்தைக் கொடுத்துப் பலரைத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டான். அமீர்கானுடைய தோல்வியால் கடுஞ்சினமுற்ற சுல்தான் அவனை டில்லிக்கோட்டை வாயிலில் தூக்கிலிடும்படி உத்தரவிட்டான். அடுத்த ஆண்டில் (1280) மாலிக் தக்ரியின்கீழ் வங்காளத்திற்கு மற்றொரு படை அனுப்பப்பட்டது. இந்தப் படையும்கூட டக்ரில்கானால் விரட்டியடிக்கப்பட்டது. நிலைமை இவ்வாறு மாறுவதைக் கண்டு பெருவேதனை கொண்ட பால்பன், 'தன் கவனம் சக்தி முழுவதையும் டக்ரில்கானைத் தோற்கடிக்கும் முயற்சியில் செலுத்தினான்.' தானே மேற்கு வங்காளத் தலைநகரான லக்நாடிக்கு வலிமைமிக்க படையுடனும் தன் மகன் பக்ராகானுடனும் செல்லத் தீர்மானித்தான். இதற்குள்ளாகப் பெருஞ்சினத்துடன் சுல்தான் வருதலை அறிந்த டக்ரில்கான் லக்நாடியை நீங்கி ஜாஜ்நகர் காட்டிற்குள் ஓடிவிட்டான். ஓடிப்போன கலகக்காரனையும் அவன் கூட்டாளிகளையும் துரத்திக்கொண்டு சுல்தான் கிழக்கு வங்காளத்தில் நுழைந்தான். தற்செயலாகக் கலகக்காரர்களைச் சுல்தானின் உடன்வந்த ஷேர் ஆண்டஸ் கண்டுபிடித்தான். கூடவந்தவர்களில் ஒருவனான மாலிக் முகாதீர் ஒரே அம்பினால் டக்ரில்கானை வீழ்த்தினான். அவன் தலை துண்டிக்கப்பட்ட பிறகு உடல் நதியில் வீசி யெறியப்பட்டது. அவனுடைய உறவினர்களும் படையினர் பலரும் கைதாக்கப்பட்டனர். லக்நாடிக்குத் திரும்பியதும் டக்ரில்

Koviloor Acadamy

கானின் உறவினர்களுக்கும் அவனுடன் கூடச்சேர்ந்தவர்களுக்கும் பிறர்க்கு எடுத்துக்காட்டாக விளங்கும்படியான தண்டனைகளை விதித்தான். வங்காளத்தை விட்டு நீங்குமுன் தன்னுடைய இரண்டாவது மகன் பக்ராகானை அந்த இராச்சியத்தின் கவர்னராக நியமித்து இன்பங்களில் ஈடுபடாமல் அரசாட்சி செய்வதில் அதிக கவனமாக இருக்கும்படி அறிவுறுத்தினன்.

விரைவிலேயே சுல்தானுக்குப் பெரிய கேடு விளைந்தது. கி.பி. 1285-ல் மங்கோலியர் தமார் என்ற தங்கள் தலைவர் தலைமையில் பஞ்சாபின்மீது படைகொண்டு சென்றனர். முல்தானின் காவலனாக நியமிக்கப்பட்டிருந்த சுல்தானின் மூத்தமகன் மகமது லாகூர் மற்றும் திபால்பூரை நோக்கி விரைந்தான். மங்கோலியர்களுடன் விளைந்த சண்டையில் கி.பி. 1285 மார்ச்சு 4-ல் ஒரு மறைந்திருந்த தாக்குதலில் கொல்லப்பட்டான். இவ்வாறு தன் உயிரைத் தியாகம் செய்த அவனுக்கு இறந்தபின்னர் ஷாகித் 'உயிர்த்தியாகி' என்ற பட்டம் கிட்டியது. சிறந்த தன் மகனின் மரணம் எண்பது வயதான கிழட்டுச் சுல்தானுக்குப் பெரியதொரு அதிர்ச்சியைக் கொடுத்தது. மீளாத்துக்கத்தில் அது அவனை ஆழ்த்தி அவனது மரணத்தையும் விரைவுபடுத்தியது. முதலில் தனக்குப் பின்னர் ஆட்சியேற்க பக்ராகானை நியமிக்க எண்ணினன். ஆனல் அம்மகன் அரசுரிமையின் பொறுப்புகளை ஏற்கத் தயங்கியதால் தன் பெயரனை கைகுஸ்ராவ் என்பவனை நியமிக்கும்படி ஆயிற்று. கி.பி. 1287 ஆம் ஆண்டு இறுதியில் பால்பன் இருபத்திரண்டாண்டு ஆட்சிக்குப்பின் உயிர்நீத்தான்.

முன்னரே குறிப்பிட்டபடி பால்பன் அரியணை ஏறியகாலத்தில் டில்லி அரசுக்குப் பல இடுக்கண்களும் அபாயங்களும் இருந்துவந்தன. இவைகளைக் கார்லைலின் கூற்றுப்படி மொழிவதாயின் 'பன்னீர், தண்ணீர், ரணசிகிச்சையால்' எளிதாக நீக்கமுடியாது. ஆகவே நாட்டின் விரோதிகள் எனக் கருதப்பட்டவர்களிடத்தில் சுல்தான் மிகக் கடுமையும் உறுதியும் நிறைந்த நடவடிக்கைகளைக் கைக்கொண்டான். பேராசை கொண்ட பிரபுக்கள், கலகக்கார குடிமக்கள், ஒழுங்கற்ற கூட்டத்தினர் இவர்கள்மீது எடுத்த உறுதியான நடவடிக்கைகளாலும், மங்கோலியர்களின்மீது நீங்காத விழிப்புடன் இருந்தமையாலுமே டில்லி அரசை அதை எதிர்நோக்கியிருந்த சிதைவினின்றும் காப்பாற்றி அதற்கு உறுதியும் திறமையும் அளித்துக்காத்த பெருமை பால்பனையே சாரும் என்பதை ஒப்புக்கொண்டே யாகவேண்டும். ஆயினும் இரு செயல்களில்மட்டும், அதாவது ஷெர்கானையும் அமீர்கானையும் ஒழித்துக்கட்டுவதில் விவேகம் தீர்க்கதரிசனம் இவைகளைச் சினமும் ஐயமும் மேற்கொண்டன எனக் கூறவேண்டும். அமீர்கானின் இறப்பைப்பற்றிப் பார்னி பின்வருமாறு கூறுகிறர்: 'கொடிய இத் தண்டனை அக் கால அறிவாளிகளிடையே கடுமையான எதிர்ப்பு

Koviloor Academy

உணர்ச்சியைத் தூண்டியது. இது பால்பனின் ஆட்சி முடிவை நெருங்குகின்றது என்பதற்கான அறிகுறி என்று அவர்கள் கருதினர்.'


டில்லி ஆட்சியின் பெருமையையும் கம்பீரத்தையும் உயர்த்துவதில் பால்பன் தன்னால் முயன்றதை யெல்லாம் செய்தான். அவன் அரியணை ஏறியபின் கண்ணியமான வாழ்க்கை முறையை மேற்கொண்டான். பண்டைப்பாரசீக மன்னர்களின் அவைக்களம்போலவே தன் அரசியல் மண்டபத்தைத் திருத்தியமைத்தான். தன் அவையில் பாரசீக சம்பிரதாயங்களையும் ஆடம்பரங்களையும் ஒழுங்கையும் ஏற்படுத்தினான். அவனது ஆட்சியில் டில்லி அரசியல்மன்றம் பெருமிதம் பெற்று விளங்கியது. மத்திய ஆசியாவினின்றும் நாடு கடத்தப்பட்ட பல (பதினைந்திற்குக் குறைவில்லை) அரசர்களுக்குப் புகலிடமாக விளங்கியது. புகழ் பெற்றவரும் ' இந்தியக் கிளி ' என அழைக்கப்பட்டவருமான கவி அமீர் குஸ்ராவ் பால்பன் காலத்தவர். அரச பதவியைப் பற்றி உன்னதநோக்கம் கொண்டவன் பால்பன். தன்னுடைய அந்தரங்க ஊழியர்கள் முன்னிலையில்கூட அவன் பூர்ணமான அரசியல் உடையுடன் விளங்கினான். உயர்ந்த பதவிகளின்று எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர்த்தான்.

அரசனை ஆண்டவனின் பூவுலகப் பிரதி நிதியாகவே பால்பன் கருதினான். ஆனால் தனக்குரிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றினால்தான் அரச பதவியின் பெருமையை நிலைநாட்ட முடியும் என்று பால்பன் நம்பினான். மதத்தைப் பாதுகாப்பது, ஷாரியத்தில் கூறப்பட்ட விதிகளின்படி பாவமான ஒழுங்கினச் செயல்களைத் தடுப்பது, உத்தியோகங்களில் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களை நியமிப்பது, எல்லோருக்கும் பொதுவாக நீதி வழங்குவது இவையே அவன் குறிக்கோள்களாகும். 'கொடியவர்களின் கொடுமைகளை நசுக்குவதும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதுமே நான் செய்யக்கூடியது. தன் குடிகளை இன்பமாகவும் வளமாகவும் செய்வதிலேயே அரசாட்சியின் பெருமை நிலைத்துள்ளது' என்று ஒரு சமயம் அவன் கூறினான். உறுதியான நியாய உணர்வு உடையவனான இவன் பாரபட்சமின்றி நடு நிலைமையுடன் நீதி வழங்கினான். அடிக்கடி தன் ஆட்சியில் நடைபெறும் சம்பவங்களை உடனுக்குடன் தனக்குத் தெரிவிக்கும்படியாக நாடெங்கிலும் பல ஒற்றர்களை அவன் நியமித்திருந்தான்.

சுல்தான் பால்பனது வாழ்க்கை உள்நாட்டு இன்னல்களையும் வெளியிடத்து ஆபத்துகளையும் எதிர்த்துப் போராடும்படியாக ஏற்பட்டது. எனவே நாட்டின் எல்லைகளைப் பெருக்கவேண்டிய போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படவில்லை. அவனுடைய அவையினர் இதற்காக அவனைத் தூண்டினாலும் அவன் குழப்பங்களைச் சாந்தப் படுத்தல், அரசை நிலைப்படுத்திப் பாதுகாத்தல்

Koviloor Acadamy

இவற்றோடு அமைந்து விட்டான். வாழ்க்கையில் பல துறைகளையும் உள்ளடக்கி விரிவான அரசியல் சீர்திருத்தங்களைச் செய்யவும் அவன்



முற்படவில்லை. உண்மையில் அவன் ஒரு சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டினான். அரசனுடைய வலிமையைப் பொறுத்தே அது நிலைபெற்று விளங்க வேண்டியதாயிற்று.

Koviloor Academy

6. அடிமை வமிசம் எனப்பட்டதின் முடிவு—கைகுபாத்

அரசியல் நிலைபெறுதலைப்பற்றி முன்னர்க் கூறியது எவ்வாறு உண்மையானதென்பது பால்பனின் அரசுரிமை பெற்ற பக்ராகானின் மகன் கைகுபாதின் வலிமையற்ற ஆட்சியில் நன்கு விளங்கியது. பதினேழு அல்லது பதினெட்டாண்டுகள் நிரம்பப்பெற்ற இவனை இறந்த சுல்தானின் நியமனத்திற்கு மாருக அரசாங்கப் பிரமுகர்கள் டில்லி அரியணையில் அமர்த்தினர். அவனது இளமைப்பிராயத்தில் அவன் அவனது பாட்டனின் கண்டிப்பான கட்டுப்பாட்டில் வளர்க்கப் பட்டான். அவனது ஆசிரியர்கள் அவனை எச்சரிக்கையுடன் கண் காணித்தனர். ஆகவே அப்பிராயத்தில் அவன் 'எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்த்ததும் இல்லை. மதுக்கிண்ணத்தையும் சுவைத்தறி யான்'. திடீரென்று ஆட்சியில் அமர்த்தப்பட்டதும் அவனது அறிவும் கட்டுப்பாடும் அகன்றன. இன்பச் சுழலில் அவன் முங்கி மூழ்கித் தன்னுடைய ஆட்சியைப் பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ளாதிருந் தான். டில்லியின் பழைய கொத்தவால் பக்ருதீனின் மாப்பிள்ளையான பேராசைமிக்க நிஜாமுதீன் அதிகாரம் முழுவதையும் தன் கைக்குள் திரட்டினுன். அவனுடைய செல்வாக்கினுல் அரசாங்கத்துப் பழம் அலுவலர்கள் அவமானத்துக்குட்படுத்தப்பட்டனர். இராச்சியமெங்கி லும் ஒழுங்கீனமும் குழப்பமும் ஏற்பட்டன. அதிகாரமேன்மைக் காகப் போட்டியிட்ட துருக்கியக் கூட்டத்தினர், கில்ஜிப்பிரிவினர் இவர்களின் செயல்களால் குழப்பநிலை மேலும் குழம்பியது. மாலிக் ஜாலாலுதீன் பிரோஸ் என்பவர் தலைமையில் கில்ஜிகளின் கைமேலோங் கியது. அவர்கள் துருக்கியப்பிரிவைச் சேர்ந்த அத்திமார் கச்சனையும் (Aitamar Kachhan) அத்திமார் சுர்க்காவையும் கொலை செய்தனர். கைகுபாத் உத்தரவின் பேரில் கொலைத்தண்டனை யடைந்த கில்ஜிப் பிரபு ஒருவனின் மகனுல் கிலோக்ரி அரண்மனைக் கண்ணுடி மாளிகையில் கைகுபாத் கொலையுண்டான். ஏற்கெனவே அவன் கெட்ட நடத்தைகளால் உடல் நலம் அழிவுற்று இருந்தான். கைகு பாத்தின் சடலம் யமுனை நதியில் வீசப்பட்டது. கி.பி. 1290 ஜூன் 13 ஆம் நாள் பிரோஸ் கிலோக்ரி அரண்மனையில் முடிசூடிக் கொண் டான். ஜலாலுதீன் பிரோஸ்ஷா என்ற பட்டமும் சூட்டிக் கொண்டான். கொலையுண்ட சுல்தானின் குழந்தையான கையுமார் என்பவனும் கொல்லப்பட்டான். பால்பனின் அருஞ் செயல்கள் முடிவுற்றன. அவனது வமிசமும் இழிவான நிலையில் முடிவெய்தியது.

7. இல்பாரி துருக்கியரது ஆட்சியின் தன்மை

இல்பாரி துருக்கியர்கள் இந்தியாவில் சுமார் எண்பது ஆண்டுக் காலம் ஆட்சி செய்தனர் (1206-1290). ஆனுல் அவர்களது ஆட்சியில்

Koviloor Acadamy

டில்லியில் சர்வஜன அரசியல் ஒருமைப்பாடு நிலவவில்லை.[1] தற்காலத்திய ஆக்ரா, அயோத்தி, பிகார், குவாலியர், மற்றும் இராஜபுதனம், மத்திய இந்தியாவின் சில பகுதிகள் அடங்கிய பிரதேசங்களில் சுல்தானின் ஆட்சி சாதாரணமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. வங்காளக் கவர்னர்கள் டில்லி ஆட்சிக்குக் கீழ்ப்படியாமல் சுய ஆட்சி செய்யவே நோக்கங் கொண்டிருந்தனர். பஞ்சாபின்மீது டில்லியின் ஆதிக்கம் மங்கோலியப் படையெடுப்புகளால் அடிக்கடி பாதிக்கப்பட்டது. டில்லியைச் சுற்றியிருந்த பகுதிகளை ஆண்ட குறுந்தலைவர்கள் முஸ்லிம் ஆதிக்கத்தின் பகுதியாக விளங்கினர். ஆயினும் சில சுதந்திரத் தலைவர்களும் டில்லி ஆட்சியில் வெறுப்புக்கொண்ட குடிமக்களும் இருக்கத்தான் செய்தனர். இவர்கள் மத்திய ஆட்சியின் ஆதிக்கத்தை மீறுவதில் நாட்டம் கொண்டிருந்தனர். அடிமை வமிசத்து மன்னர்களின் செயல்கள் முன்னர்க் கூறப்பட்டதுபோல் புதிதாக ஆட்சிக்குட்படுத்தப்பட்ட பகுதிகளில் வன்மை வாய்ந்த ஆட்சியை நிலைநாட்டும் பொருட்டுக் கொடுஞ்செயல்கள் செய்வதில் தயங்கவில்லை. ஸ்மித் போன்ற சரித்திர ஆசிரியர்கள் இந்த சுல்தான்களின் குணநலன்களை மதிப்பிட்டதில் நியாயம் குறைவாகக் காணப்படுகிறது. பால்பன் உள்ளிட்ட பல வேந்தர்கள் உறுதியான குணநலன்களுக்குப் பேர்போனவர்கள். கீழ்ப்படிய மறுத்த தலைவர்களை அடக்குவதில் இவர்கள் முனைந்த போதிலும் அவர்களுக்குக் கீழ்படிந்த பல சுதேச வாசிகளுக்கு உயர்ந்த சிவில் இராணுவ உத்தியோகங்களை வழங்கியுள்ளனர். ஸர் உல்ஸிலி ஹெய்க் என்பார் கூறுவதுபோல் 'அடிமை வமிசத்து மன்னர்களின் ஆட்சி இங்கிலாந்து நார்மானிய மன்னர்களது ஆட்சிபோன்று நேர்மையும் தயாளமும் நிரம்பியதாகும். ஸ்பெயின் நெதர்லாந்து மன்னர் இரண்டாம் பிலிப்பின் ஆட்சியைக் காட்டிலும் அதிகச் சகிப்புத்தன்மை கொண்டதாக இருந்தது.

[1] கேம்பிரிட்ஜ் சரித்திரம், வால்யூம் III, பக்கம் 87.

Koviloor Acadamy

3. கில்ஜிகளும் சுல்தானிய ஆட்சி தெற்கில் பரவியதும்

1. ஜலால் உதீன் பிரோஸ்

புதிய கில்ஜி அரசரை டில்லி மக்கள் முதலில் அவன் ஆப்கானிய மரபினன் என்பதற்காக வரவேற்கவில்லை. ஆனால் காலஞ் சென்ற மேஜர் ரர்வர்ட்டி அவர்கள் கில்ஜிகளை ஆப்கானியர் அல்லது பதானியர் என்று பாகுபடுத்தக் கூடாது என்று நிரூபிக்க முயன்று அவர்களைத் துருக்கியத் தொடர்பு உடையவர்கள் என்று பிரிக்கிறார். ஆயினும் அவர் காலத்திய சரித்திர ஆசிரியர் சியாஉடீன் பார்னி ஜலால் உதீன் துருக்கிய வமிசத்தினின்றும் வேறுபட்டதொரு பிரிவினின்றும் வந்ததாகக் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது கைகுபாதின் மரணத்திற்குப்பின் துருக்கியர்கள் சாம்ராச்சியத்தை இழந்து விட்டனர் என்கிறார். வேறு சில நவீன சரித்திர ஆசிரியர்கள் கில்ஜிகள் முதலில் துருக்கிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் நீண்டகாலம் அவர்கள் ஆப்கானிஸ்தானத்தில் தங்கி விட்டபடியால் ஆப்கானியர்களின் குணங்களை மேற்கொண்டுள்ளனர் என்றும் ஆப்கானியர்களுக்கும் அவர்களுக்கும் என்றும் நட்புரிமை நிலவியதில்லை என்றும் கூறுகிறார். எது எவ்வாறு இருப்பினும் அக்காலத்து நிலவிய அரசியல் அமைதியின்மையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

டில்லி மக்களாலும் பிரபுக்களாலும் முதலில் ஜலாலுதீன் அவ்வளவாக விரும்பப்படவில்லை. ஆகையினால் ஆட்சியின் தலைமைப்பீடமாகக் கிலோக்ரியைச் செய்ய வேண்டியதாயிற்று. ஆயினும் பார்னி கூறுகிறபடி 'இவனுடைய மேன்மையான குண நலன்களும் நீதியும் தயாளமும் பக்தியும் படிப்படியாக மக்களின் வெறுப்பை நீக்கியது. நிலமானியம் அளிக்கப்படும் என்ற நம்பிக்கை பிரபுக்களின்

[1]ஜே. ஏ. எஸ். பி. 1875, பிரிவு 1, பக்கம் 35-7.

Koviloor Acadamy

மனத்திலிருந்த வெறுப்பை நீக்கி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற முடிந்தது. எனினும் இது மனச் சம்மதமின்றியும் முணுமுணுப்புட னுமே விளைந்தது.'

புதிய சுல்தான் பட்டத்திற்கு நியமன மானபோது அவன் எழுபது வயது நிரம்பிய முதியவன். 'மறு உலகத்திற்கான எத்தனங்களில் ஏற் கெனவே முற்பட்டிருந்த இவன்' கொந்தளிப்பு மிகுந்த அந்தக் காலத்தின் ஆட்சியை ஏற்கும்படியின்றி மிக்க சாந்தமும் கனிவும் கொண்டவனாக இருந்தான். இரத்தம் சிந்தாமலும் கொடுமையின்றி யும் ஆளவேண்டுமென்ற மனப்பாங்குகொண்ட இவன் கலகக்காரர் கள்மாட்டும் குற்றவாளிகளிடத்தும் மட்டற்ற கருணைகாட்டினான். பால்பனின் உறவினனான மாலிக் கஜ்ஜு என்பவன் காராவின் தலைவ னாக இருந்தான். சுல்தானின் ஆட்சியில் இரண்டாம் ஆண்டில் இவன் சில பிரபுக்களின் துணைகொண்டு கலகம் விளைத்தபோது தகாத முறையில் கழிவிரக்கம் காட்டிக் கலகத்தாரை மன்னித்தான்.

சுல்தானின் இயற்கையான இரக்கம் சமாதான நோக்கம் இவற் றின் விளைவாகப் பிரபுக்கள் அடிக்கடி சதியில் இறங்கினர். டில்லியின் ஆதிக்கம் மதிக்கப்படுவது நின்றுவிட்டது. இதனால் கில்ஜி பிரபுக் களும் இவனிடம் வெறுப்புற்றனர். ஏனெனில் அவர்கள் தங்கள் தலைவன் ஒருவனுடைய தயவால் பதவியும் ஆதிக்கமும் பெற ஆசை கொண்டிருந்தனர். அவர்களில் மதச்சடங்குகளின் தலைவனாக விளங் கிய மாலிக் அகமத் சாப் என்பவன் நேரிடையாகவே அரசனிடம், 'ஓர் அரசன் அரசாங்கச் சட்ட திட்டங்களை அநுசரித்து ஆட்சி புரிய வேண்டும் அல்லது அரியணையை விட்டு விடுவதில் மன நிம்மதி அடையவேண்டும்' என்று வெளிப்படையாகவே கூறினான். அரசன் தன் தயாளப் பாதையினின்று ஒரே தடவைதான் மாறினான். அற்ப சந்தேகத்தின் மீது சித்தி மௌலா என்னும் முஸ்லீம் துறவி யொருவன் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு அரசராணையால் கொலை செய்யப் பட்டான்.

இத்தகைய அரசன் திடமான படை யெடுப்புத்திட்டங்களைக் கைக்கொள்ள முடியவில்லை. ரான்தாம்பூர்மீது இவன் மேற்கொண்ட படை யெடுப்பு இவ்வாறு தோல்வியாயிற்று. அநேக முஸ்லீம்களின் உயிர்களைப் பலியிடாமல் அக்கோட்டையைக் கைப்பற்ற முடியாது என்ற நம்பிக்கைகொண்ட அரசன் அதைக் கைப்பற்றாமலே திரும்பி னான். ஆனால் 1292-ல் ஹூலக்கு (Hulagu) வின் பேரன் தலைமையில் 150,000 பேரடங்கிய வலிமைகொண்ட படையுடன் வந்த மங்கோலி யக் கூட்டத்தினரை எதிர்த்ததில் மட்டும் வெற்றிகண்டான். சுல்தா னுடைய படைகளால் நன்கு முறியடிக்கப்பட்ட மங்கோலியர் சமா தானம் செய்துகொண்டனர். அவர்களுடைய படை இந்தியாவி

Koviloor Academy

னின்றும் வெளியேற அநுமதிக்கப்பட்டது. ஆனல் சிங்கிஸ் மரபில் தோன்றிய உல்கு என்பவனும் மற்றும் பல படைப் பிரமுகர்களும் இஸ்லாம் மதத்தைத்தழுவி டில்லிக்கு அருகில் குடியேறினர். புதிய முஸல்மான்கள் என இவர்கள் வழங்கப்பட்டனர். இது தவருன சலுகையாயிற்று. வருங்காலத்தில் இதனல் பல துன்பங்கள் விளைந்தன. புதிய முஸல்மான்கள் டில்லி ஆட்சிக்குக் கலகக்கார அண்மையினராயினர். இதனல் டில்லிக்கு, ஆட்சிக்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. சமாதானத்தை விரும்பிய இந்த மன்னனும் படுக்கையிலிருந்தபடி இயற்கையான மரணம் அடைய முடியவில்லை. கி.பி. 1296-ல் பேராசை கொண்ட இவனது மருகனல் விதியின் விசித்திர விளையாட்டின் போக்கில் கொல்லப்பட்டான்.

2. அலாவுதீன் கில்ஜி

ஜலால் உதீன் பிரோஸின் மருகனுன அலாவுதீன் தன் மாமனல் மிக்க அன்புடனும் கவனத்துடனும் வளர்க்கப்பட்டான். தகப்பனற்ற இந்த மருகனிடம் கொண்ட மட்டற்ற பாசத்தால் இவனையே தன் மாப்பிள்ளை யாகவும் ஜலால் உதீன் கொண்டான். தான் டில்லி அரியணை ஏறியதும் ஜலால் உதீன் அலாவுதீனை அலகாபாத் மாவட்டத்திலுள்ள காராவின் மானியத்திற்கு அதிபனுக்கினன். இங்குத்தான் அலாவுதீன் மனத்தில் பேராசையின் வித்துக்கள் ஊன்றப்பட்டன. 'காரா கலகக்காரர்களின் சாதுரியமான துர்ப்போதனைகள் இவன் மனத்தில் நன்கு வேரூன்றின' என்று பார்னி கூறுகிருர். அந்தப் பிரதேச ஆட்சியை ஏற்றுக்கொண்ட அந்த ஆண்டிலிருந்தே தன் திட்டத்தைப் பின்பற்றினன். எங்கேனும் தொலை தூரத்திற்குச் சென்று செல்வம் திரட்ட எண்ணினன். தன் மாமியார், மாலிக் ஜஹான், தன் மனைவி இவர்களுடைய தந்திரச் செயல்களால் குடும்ப இன்ப மற்றதால் டில்லி ஆட்சியின் பிடியினின்று நீங்கித் தனியாகப் பதவியும் செல்வாக்கும் பெறும்படியாக இவன் எண்ணியிருக்கக்கூடும். கி.பி. 1292-ல் மாளவ நாட்டின்மீது வெற்றியுடன் படையெடுத்துப் பில்சா நகரைக் கைப்பற்றியதற்குப் பரிசாகக் காராவுடன்கூட அயோத்தி மானியமும் இவனுக்குக் கிடைத்தவுடன் இவன் பேராசை துளிர்விட்டது.

பில்ஸாவிலிருக்கும் பொழுது தேவகிரி இராச்சியத்தின் திரண்ட செல்வத்தைப்பற்றிய சில நிச்சயமற்ற வதந்திகளை அலாவுதீன் கேள்வியுற்ருன். தேவகிரி இராச்சியம் மேற்குத்தக்காணம் வரை வியாபித்திருந்தது. யாதவகுலத்தைச்[1] சேர்ந்த இராமச்சந்திரன் என்பவன்

[1] ஜே. ஆர். ஏ. எஸ். வால். II, பக்கம் 398-ல் இந்த இராச்சியத்தைப்பற்றிய சுவையான குறிப்பு ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. கிழக்குத் தக்காணம் அப்பொழுது ருத்திரம்மா தேவியால் ஆளப்பட்டது. இவள் காகத்திய வமிசத்து இராசா கணபதியின் மகள்.

Koviloor Academy

அதை ஆண்டுவந்தான். அதைத் தன்னடிப்படுத்த அலாவுதீன் தீர்மானம் கொண்டான். தன் மாமனிடமிருந்து தன் நோக்கங்களை மறைத்துக்கொண்டு விந்தியமலைப் பிரதேசங்கள் வழியாகவும் மத்திய இந்தியா மூலமாகவும் தக்காணத்தின்மீது ஓராயிரம் குதிரை வீரர்களடங்கிய ஒரு படையின் தலைமையில் படையெடுத்துத் தேவகிரியின் முன்பு தோன்றினன். இப் பகுதியில் இஸ்லாமியத் தொடர்பு ஆதியிலேயே ஏற்பட்டிருந்தது. குறைந்தது எட்டாம் நூற்றுண்டுக் காலத்திலிருந்து அத் தொடர்பு ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய தொரு தாக்குதலுக்கு இராமச்சந்திரதேவன் எத்தனமாக இல்லை. அவனுடைய மகன் சங்கரதேவன் படையின் பெரும்பகுதியுடன் தெற்கு நோக்கிச் சென்றிருந்தான். இதனுல் இவன் திடீர்த் தாக்குதலால் தடுமாறினன். வீணானதொரு எதிர்ப்பிற்குப் பின் இவன் தோற்கடிக்கப்பட்டான். திரண்ட மீட்புத் தொகை அளிப்பதாக உறுதி கூறி சமாதானம் செய்து கொள்ளவேண்டிக் கட்டாயப்படுத்தப்பட்டான். அலாவுதீன் காராவை நோக்கித் திரும்பும் தருணத்தில் சங்கரதேவன் தேவகிரிக்கு விரைந்து வந்து தன் தகப்பனர் தடுத்தும் கேளாமல் படையெடுப்பாளர்களுடன் போர் தொடுத்தான். அவனுடைய உற்சாகம் முதற்கண் வெற்றியை அளித்த போதிலும் அவன் விரைவில் தோற்கடிக்கப்பட்டான். அவனுடைய படையில் குழப்பம் விளைந்தது. மிகுந்த குழப்பத்துடன் அவனுடைய உதவியாளர்கள் பலதிசைகளிலும் ஓடி விட்டனர். இந்திய தீபகற்பப் பகுதி மற்ற மன்னர்களின் உதவியை இராமச்சந்திரதேவன் கோரினன். ஆனல் அது பயனற்றதாயிற்று. உணவுப் பண்டங்கள் பற்றுக்குறையாலும் அவனுக்குப் பெரிய இடையூறு ஏற்பட்டது. சமாதானத்தைக் கோருவதைத் தவிர அவனுக்கு வேறு வழியே இல்லை. முன்னையிலும் மிகக்கடினமான நிபந்தனைகளோடு சமாதானம் ஏற்பட்டது, அலாவுதீன் ஏராளமான கொள்ளைப் பொருள்களான, பொன், வெள்ளி, பட்டு, முத்து, விலை உயர்ந்தகற்கள் இவைகளுடன் காராவிற்கு மீண்டான். கில்ஜியின் துணிகரமான இப் படையெடுப்பால் தக்காணத்தின் பொருள் வளம் வறண்டதோடு மட்டுமின்றி விந்தியமலைகளுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் முடிவாக முஸ்லிம் ஆதிக்கம் ஏற்படுவதற்கான வழியையும் திறந்தது.

தான் பெற்ற செல்வத்தை டில்லி சுல்தானுடன் பங்குகொள்ள அலாவுதீனுக்கு எண்ணமே இல்லை. இந் நிகழ்ச்சிக்கு டில்லி அரியணையே அவனது முடிவான இலக்கு என்ற ஆசையை மேலும் அதிகரிக்கச் செய்தது. உண்மை மிக்க தன் உத்தியோகஸ்தர்கள் என்ன எடுத்துக் கூறியும் அதிலும் குறிப்பாக மிகவும் வெளிப்படையாகப் பேசும் அகமத்சாப் வேண்டியும் கூட முதிய சுல்தான் ஜலால் உதீன் பிரோஸ் ஒன்றையும் கவனியாமல் தன் மருமகன் அலாவுதீன்பால்

Koviloor Academy

கொண்டிருந்த பாசம் மறைக்கவும் அவன் விரித்த வலையில் விழுந்தான். தன் அவையிலிருந்த ஒரு துரோகி தூண்டவும் தற்காப்பிற்கான முன்னேற்பாடுகள் ஏதுமின்றித் தன் பிரியமுள்ள மருமகனைச் சந்திக்க வேண்டிக் காராவிற்கு ஒரு படகில் விரைந்து சென்றான். இத்தவற்றிற்கு விலையாக அவன் உயிரையே கொடுக்க வேண்டியதாயிற்று. கி.பி. 1296 ஜூலை 19 ஆம் நாளன்று அலாவுதீனின் ஆதரவாளர்கள் அவனுடைய முகாமில் அவனை சுல்தானாகப் பிரகடனம் செய்தனர். பார்னி கூற்றுப்படி 'அலாவுதீன் தன் அருமை ஆதரவாளன் இரத்தத்தைச் சிந்தியதற்கான தண்டனையினின்றும் தப்பவில்லை ... அவனது பாதையில் விதி ஒரு துரோகியை வைத்தது (மாலிக் காபூர்). அவனால் அவனது குடும்பம் அழிவுற்றது ... இவனுக்கு ஏற்பட்ட தெய்விகத் தண்டனைக்கு ஒப்பாக வேறு எந்த இஸ்லாமிய நாடுகளில் எவர்க்குமே ஏற்பட்டதில்லை.'

டில்லி அரியணையில் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டியது அடுத்தபடியாக அலாவுதீனுக்கு அவசியமாயிற்று. டில்லியில் விதவை இராணி மாலிக் ஜகானுடன் சேர்ந்து அவளுடைய இளைய மகனை ருக்ன்-உடீன் இப்ராஹிம் என்ற பட்டத்துடன் அரியணையில் அமர்த்தி விட்டாள். அவளுடைய மூத்த மகன் அர்காலிகான் அவளுடைய சில செயல்களால் மனவேற்றுமைப்பட்டு மூல்தானில் தங்கி விட்டான். இந்த மனவேறுபாட்டைக் கேள்வியுற்றதும் அலாவுதீன் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் விரைவாக டில்லிக்கு வந்தான். வலுவற்றதொரு எதிர்ப்பிற்குப் பிறகு தன் ஆதரவாளர்களால் துரோகமாகக் கைவிடப்பட்டபின் தன் தாயாருடனும் விசுவாசமுள்ள அகமத்சாப்புடனும் மூல்தானுக்கு ஓடிவிட்டான். தக்காணத்திலிருந்து கொண்டுவந்த பொன்னைத் தாராளமாக வாரி வழங்கி, பிரபுக்கள், உத்தியோகஸ்தர்கள் மற்றும் டில்லிப் பிரமுகர்கள் இவர்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டான். டில்லியில் நுழைந்ததும் பால்பனுடைய சிவப்பு அரண்மனையில் கி.பி. 1296 அக்டோபர் 3ஆம் நாள் முடிசூட்டப்பட்டான். மூல்தானில் அடைக்கலம் புகுந்த காலஞ் சென்ற சுல்தானின் உறவினர்களும் நண்பர்களும் அங்குத்தங்கும்படி விடப்படவில்லை. அலாவுதீனின் சகோதரன் உல்க்கான் (Ulugh Khan) அவன் அமைச்சர் ஸபார்கான் இவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டனர். அர்காலிகான், இப்ரஹிம் மற்றும் அவர்களுடைய மைத்துனன் உல்க்கான் என்ற மங்கோலியன், அகமத்சாப் இவர்கள் டில்லிக்கு எடுத்துச் செல்லப்படுகையில் குருடாக்கப்பட்டனர். அர்காலியின் மக்கள் எல்லோரும் கொலை செய்யப்பட்டனர். அர்காலியும் அவன் சகோதரனும் ஹான்சி கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். மாலிக் ஜஹானும் அகமத்சாப்பும் டில்லியில் கடுமையான காவலில் வைக்கப்பட்டனர்.

Koviloor Academy

அலாவுதீன் கில்ஜியின் நிலைமை இன்னும் உறுதியற்றதாகவே இருந்தது. அவன் இன்னமும் பல பகைவர்களை அடக்கவேண்டியதாக் இருந்தது. துருக்கிய எதிர்ப்பாளர்கள், கீழ்ப்படிய மறுக்கும் இராசபுதன, மாளவ, கூர்ச்சர மன்னர்கள், சில பிரபுக்களின் சதிகள், மங்கோலியப் படையெடுப்புகள் இவைகள் அவனை எதிர்நோக்கிய பிரச்சினைகள். ஆனால் தன் மாமனின் குணங்களினின்றும் முற்றிலும் வேறுபட்ட இவன் தன்னை நோக்கிய இடுக்கண்களைக் குன்றா ஊக்கத்துடன் எதிர்த்தான். அவனுடைய முயற்சிகள் வெற்றி பெற்றன.

நீண்ட காலமாக மங்கோலியர்களின் படையெடுப்பு டில்லி ஆட்சிக்கு ஓயாத கவலையையும் அபாயத்தையும் விளைவித்தன. அலாவுதீன் பட்டமெய்திய சிறிது காலத்திற்குள்ளாகவே மங்கோலியப் பெருங் கூட்டத்தினர் படையெடுப்பு ஒன்று இந்தியாவின் மீது ஏற்பட்டது. ஆனால் சபார்கான் பெருமளவில் அவர்களை சலந்தருக்கருகில் சென்று விரட்டியடித்தான். சுல்தானின் ஆட்சி இரண்டாம் ஆண்டில் சால்டி என்ற தலைவரின்கீழ் மங்கோலியர் மீண்டும் படையெடுத்தனர். இத்தடவைகூட சபார்கான் அவர்களைப் புறமுதுகு கண்டான். அவர்களின் தலைவன் உட்பட இரண்டாயிர வரை டில்லிக்குச் சிறைபிடித்து அனுப்பினான். ஆயினும் கி.பி. 1299ஆம் ஆண்டில் குட்லக் குவாஜா அநேக ஆயிரம் மங்கோலியர்களுடன் இந்தியாவிற்குள் புகுந்தான். இந்தத்தடவை அவர்களது நோக்கம் கொள்ளை யடிப்பதற்கன்றி நாடு பிடிக்கவேயாகும். ஆகவே தாங்கள் 'படையெடுத்துவரும் வழியிலுள்ள எல்லைப்பகுதிகளைப் பாழாக்காமலும் கோட்டைகளைத் தாக்காமலும் முன்னேறினர். டில்லியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அதன் அண்மையை அடைந்தனர். இதைக் கண்டு டில்லிநகரில் பெருத்த குழப்பம் ஏற்பட்டது. அக்கால ருஸ்தமாகத் திகழ்ந்த பெருவீரன் சபர்கான் அவர்களை ஆவேசமாகத் தாக்கினான். சண்டையின் மத்தியில் அவன் கொல்லப்பட்டான். பொறாமைகொண்ட அவனுடைய தலைவரான மன்னர் அவன் இவ்வாறு தனக்கு யாதொரு பழியுமின்றித் தொலைந்து போனதில் திருப்தி அடைந்தான். சபார்கான் விளைத்த வீரத்தினால் அச்சமடைந்ததனாலோ என்னவோ மங்கோலியர் பின்வாங்கினர். கி.பி. 1304-ல் மறுபடியும் படையெடுத்துவந்து இந்தியாவில் புகுந்து அவர்கள் அம்ரோகவரையில் முன்னேறினர். அவர்களுக்கு அலி பெக் என்பவரும் குவாஜா டாஷ் என்பவரும் தலைமை பூண்டனர். பெருத்த நஷ்டப்பட்டு அவர்கள் பின்னடையும்படி செய்யப்பட்டனர். அவனுடைய ஆட்சியில் கடைசிமுறையாக மங்கோலியப் படையெடுப்பு கி.பி. 1307-1308-ல் நடைபெற்றது. இக்பால்மாண்ட் என்ற தலைவன் படையுடன் சிந்துநதியைத் தாண்டிவந்தான். ஆனால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அநேக மங்கோலியப் படைத் தளபதிகள் சிறைபிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர், அடுத்

Koviloor Academy

தடுத்து ஏற்பட்ட தோல்விகளால் மனமிழந்த மங்கோலியர் டில்லி சுல்தானின் கடும் நடவடிக்கைகளால் மிரண்டுபோனுர்கள். அவனுடைய ஆட்சிக்காலத்தில் அவர்கள் மீண்டும் படையெடுக்கவே இல்லை. டில்லி மக்களுக்கும் வடமேற்கு எல்லைப்புற வாசிகளுக்கும் இது பெருத்த ஆறுதல் அளித்தது.

மங்கோலியர்களைத் தண்டிப்பதோடுகூட பால்பனைப்போன்று தன் இராச்சியத்தின் வடமேற்கு எல்லையைத் திறமையுடன் பாதுகாக்கும்பொருட்டு, சுல்தான் சில தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டான். மங்கோலியர் வரும் பாதையில் பழைய கோட்டைகளைப் புதுப்பிக்கவும் புதிய கோட்டைகள் சில அமைக்கவும் சுல்தான் பணித்தான். சாமானு, டிபால்பூர் இங்குக் காவற்கூடங்கள் அமைக்கப்பட்டன. இவைகள் போருக்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கும்படி செய்யப்பட்டன. அரசனுடைய படையும் வலுவுள்ளதாகச் செய்யப்பட்டது. கி. பி. 1305 முதல் பஞ்சாப் கவர்னராக இருந்த காஜிமாலிக் (பிற்காலத்தில் கியாஸ் உடீன் துக்ளக் என வழங்கப்பட்டவன்) எல்லைப்புறப் பாதுகாப்பின் தலைமைப்பதவி யேற்றுச் சுமார் கால்நூற்றுண்டுக்காலம் திறமையுடன் மங்கோலியர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தான்.

டில்லிக்கு அருகில் குடியேறியிருந்த ‘புதிய முஸல்மான்களும்’ அலாவுதீன் கில்ஜியால் வன்மையாக நடத்தப்பட்டனர். தாங்கள் குடியேறிய நாட்டில் தாங்கள் எதிர்பார்த்ததுபோல் பட்டமோ, உயர் பதவியோ, நிலமோ கிடைக்காமையால் அவர்கள் அமைதியிழந்து அதிருப்தியுடன் விளங்கினர். அலாவுதீனின் படைகள் கூர்ச்சரத்திலிருந்து திரும்பி வருகையில் இவர்கள் கலகமே செய்ய ஆரம்பித்தனர். புதிய முஸல்மான்கள் யாவரையும் சுல்தான் உத்தியோகத்திலிருந்து நீக்கியிருந்தான். இது மேலும் அவர்களுடைய வெறுப்பை அதிகரித்தது. சுல்தானைக் கொன்றுவிட அவர்கள் இரகசியமான சதி ஒன்றை உருவாக்கினர். விரைவிலேயே இச் சதி அம்பலமாயிற்று. அவர்கள் எல்லோரையும் ஒரே யடியாகக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டுக் கொடியமுறையில் சுல்தான் பழிதீர்த்துக்கொண்டான். ஒரே நாளில் இவ்வுத்தரவிற்கிணங்க இருபதாயிரத்திலிருந்து முப்பதாயிரம்வரை புதிய முஸல்மான்கள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டனர்.

ஆட்சியின் முற்பகுதியில் எல்லாத் துறையிலும் ஒன்றுபோல வெற்றிகண்ட சுல்தானின் தலை கர்வத்தால் நிமிர்ந்தது. செயற்கரிய திட்டங்கள் பலவற்றை வகுக்க முற்பட்டான். இவன் மனத்தில் வினுன பேராசை கொழுந்துவிட்டு எரிந்தது. அவன் ஒரு புதிய மதத்தையும் இனத்தையும் நிறுவ எண்ணினுன். அலெக்சாந்தரைப்

Koviloor Academy

பின்பற்றி உலகையே வெல்லவேண்டுமென விழைந்தான். இந்தத் திட்டங்கள் யாவற்றிலும் குவாஸி-அலா-உல்முல்க் (சியாபார்னி என்ற சரித்திர ஆசிரியரின் மாமன்) என்பவரின் ஆலோசனையை நாடினுன். இவன் ஏற்கெனவே காராவில் இவனுடைய படைத் தலைவனுகவும் பிறகு டில்லியின் கொத்தவாலாகவும் பதவி வகித்த வன். இவன் அரசனுடைய திட்டங்கள் பயனற்றவை என்பதைச் சுட்டிக் காட்டினுன். அரசனுடைய முதல் திட்டத்திற்கு அவன் கூறியதாவது 'தீர்க்கதரிசியின் செயலை அரசன் ஒருபோதும் வகித்த தில்லை. உலகம் உள்ளளவும் இனியும் முடியாது. ஆயினும் தீர்க்க தரிசிகளில் சிலர் அரசபதவிக்குரிய பணிகளைச் செய்துள்ளனர்' என்றுன். இரண்டாம் திட்டத்தைப்பற்றி அவன் கூறுகையில் இந்துஸ்தானத்தின் பெரும்பகுதி இன்னமும் வெல்லப்படாமலிருப் பதையும் மங்கோலியப் படையெடுப்பிற்கு அவன் இராச்சியம் இலக் காக உள்ளதையும் எடுத்துக்காட்டினுன். மேலும் சுல்தான் இல்லாத காலங்களில் அரச அலுவல்களைத் திறம்பட வகிக்க அரிஸ்டாட்டில் போன்ற அமைச்சரையும் அவன் பெற்றிருக்கவில்லையே என்றும் விளக்கினுன். இவைகளால் சுல்தான் தன் சுய உணர்வைப் பெற் ருன். தனது ஆகாசக்கோட்டைத் திட்டங்களைக் கைவிட்டான். ஆயினும் தான் வழங்கிய காசுகளில் தன்னை 'இரண்டாம் அலெக் சாந்தர்' என்று குறித்துவந்தான்.[1]

அலாவுதீனின் ஆட்சியில் முஸ்லீம் பேரரசு இந்தியாவின் பல பகுதிகளிலும் விரைவில் பரவியது. 'இவன் ஆட்சியே' டில்லி சுல்தானியப் பேரரசைத் துவக்கியது' என்று ஸர் உல்சிலி பெயிக் கூறியுள்ளார். இந்தப் பேரரசாட்சி சுமார் அரை நூற்றுண்டுக்காலம் வரை நீடித்தது. கி.பி. 1297-ல் அல்லாவுதீன் கில்ஜி வலிமை மிக்க படையொன்றைத் தன் சகோதரன் உலுக்கான் தலைமையிலும் தன் அமைச்சர் நுஸ்ரத்கான் தலைமையிலும் இந்து இராச்சியமான கூர்ச் சரத்தை வென்றடிப்படுத்த அனுப்பினுன். கூர்ச்சரம் ஏற்கெனவே பல கொள்ளையடிப்புகளுக்கு உட்பட்டிருந்தது. ஆயினும் அது பணிய வைக்கப்படாமல் பகேல வமிசத்து இராசபுத்திர மன்னன் இரண்டாம் இராய் கர்ணதேவனின் ஆட்சியின்கீழ் இருந்துவந்தது, படையெடுப் பாளர்கள் நாட்டில் புகுந்து இரண்டாம் கர்ணதேவனின் அழகிய இராணியான கமலதேவியைச் சிறைப்பிடித்தனர். அரசனும் அவன் மகள் தேவாலதேவியும் தேவகிரிமன்னன் இராமச்சந்திர தேவனிடம் அடைக்கலம் புகுந்தனர். படையினர் கூர்ச்சரத்தின் செல்வமிக்க துறைகளைக் கொள்ளையிட்டு ஏராளமான கொள்ளைப் பொருள்களுடன் காபூர் என்ற இளவயது அலியையும் கைப்பற்றினர். திரண்ட செல்

[1] ரைட்-இந்தியக் கண்காட்சிச் சாலையில் உள்ள நாணயப் பட்டியல், வால். II, பக்கம் 8.

Koviloor Academy

வத்துடனும் கமலாதேவி, காபூர் இவர்களுடனும் படையினர் டில்லி மீண்டனர். கமலாதேவி சிறிது காலத்திற்குப்பின் அலாவுதீனின் பிரிய மனைவியானாள். காபூர் இராச்சியத்திலேயே செல்வாக்கு மிக்க பிரபுவாகவும் பின்னர் அலாவுதீனின் மரணத்திற்குச் சிறிதுகாலம் முன்பும் பின்னரும் நாட்டின் உண்மை அதிகாரியாகவும் விளங்கினான்.

குத்புதீன், இல்டுட்மிஷ் இவர்களால் ரான்தாம்பூர் அடிப்படுத்தப் பட்டபோதிலும் இராச புத்திரர்கள் அதனை மீட்டுவிட்டனர். அப்போது ஹமீர்தேவன் என்ற வீர இராசபுத்திரத் தலைவன் ஆட்சியில் அது இருந்துவந்தது. மனக்கசப்புற்ற சில புதிய முசல்மான்களுக்கு இவன் தஞ்சமளித்திருந்தான். இதனால் அலாவுதீன் சினமுற்றான். கி.பி. 1299-ல் அதன் கோட்டையைப் பணியவைப்பதற்காகத் தன் தம்பி உலுக்கான், நுஸ்ரத்கான் இவர்கள் தலைமையில் ஒரு படையெடுப்பை ஏவினான். அப்பொழுது உலுக்கான் பியான மானியதாராகவும் நுஸ்ரத்கான் காராவின் மானியதாராகவும் இருந்தனர். ஜாயினை (Jhain) அவர்கள் வென்று ரான்தாம்பூருக்கருகில் பாடி அமைத்தனர்; ஆனால் விரைவிலேயே இராசபுத்திரர்கள் அவர்களைத் தோற்கடித்து விரட்டிவிட்டனர். கவணிலிருந்து விசையுடன்வந்த கல் ஒன்று நுஸ்ரத்கானின் உயிரைக் குடித்தது. கோட்டையின்முன் அமைக்கப்பட்ட ஒரு திடலை (Dashile) மேற்பார்வை இடுகையில் இது நேர்ந்தது. தன் படையினர்க்கு நேர்ந்த இந்த இடையூறுகளைக் கேள்வியுற்றதும் அலாவுதீன் தானே ரான்தாம்பூரை நோக்கி விரைந்தான். கோட்டைக்குச் செல்லும் வழியில் தில்பாத் (Tilpat) என்னும் இடத்தில் வேட்டையில் உல்லாசமாக ஈடுபட்டிருக்கும்போது புதிய முஸல்மான்கள் சிலருடன் கூட்டுச் சேர்ந்துகொண்ட அகாத்கான் என்னும் உறவினனால் பாதுகாப்பற்ற நிலையில் அலாவுதீன் திடீரென்று தாக்கப்பட்டுக் காயமுற்றான். விரைவிலேயே அந்தத்துரோகியும் அவன் கூட்டாளிகளும் பிடிக்கப்பட்டுக் கொலையுண்டனர். அலாவுதீனின் அரியணையைக் கைப்பற்ற நடைபெற்ற சில சதிகளும் ஒடுக்கப்பட்டன. கி.பி. 1301 ஜூலையில் ரான்தாம்பூர்க் கோட்டை வலியக் கைப்பற்றப்பட்டது. ஆயினும் ஓராண்டுக்காலக் கடுமையான முற்றுகைக்குப் பின்னரே இது இயன்றது. ஹமீர்தேவனும் அவனுடன் கூடச்சேர்ந்து அடைக்கலம் புகுந்த புதிய முஸல்மான்கள் பலரும் கொல்லப்பட்டனர். இக் கோட்டை முற்றுகையைப்பற்றிச் சுவையாக விவரித்த அமீர் குஸ்ராவ் பின்வருமாறு எழுதுகிறார்: ' ஓர் இரவில் இராய் ஒரு குன்றின்மீது நெருப்பை மூட்டி அதில் தன் பெண்களையும் குடும்பத்தினரையும் தள்ளினான். பின்னர்ப் பற்றுக்கொண்ட சிலருடன் பகை

Koviloor Acadamy

வர்மீது பாய்ந்து ஏமாற்றத்தில்[1] தங்கள் உயிரைப் பலியிட்டனர்.' தனது தலைவனைக் காட்டிக்கொடுத்த துரோகியும் ஹமீரின் அமைச்சருமான ரான்மால் தன் தோழர் பலருடன் பகைவர்பக்கம் சேர்ந்தான். ஆயினும் சுல்தானுடைய உத்தரவின்மீது இவர் கொலை செய்யப்பட்டுத் தங்கள் துரோகத்திற்கு ஏற்ற தண்டனையைப் பெற்றனர். ரான்தாம்பூரைப் பாதுகாக்கத் தன் தம்பி உலுக்கானை நியமித்து விட்டு டில்லி திரும்பினான் சுல்தான் சென்ற ஐந்தாம் மாதத்திலேயே உலுக்கான் மரணமடைந்தான்.

தீரமிக்க குகில குல இராசபுத்திரர்களின் தாயகமான மேவார் நாட்டின்மீது அலாவுதீன் மற்றொரு படையெடுப்பை மேற்கொண்டான். இயற்கை அளித்திருந்த சிறந்த அரண்களோடு விளங்கிய அது நீண்ட காலமாக வெளி நாட்டுப் படையெடுப்புகளைத் தாங்கிவந்தது. ரான் தாம்பூர்ப் படையெடுப்பைப்போலவே இப்படை யெடுப்பும் சுல்தானின் நாடு பிடிக்கும் ஆசையால் விளைந்தது என்று கூறலாகும். ஆனால் பழங்கதைகளை நம்புவதாயின் அப்படையெடுப்பின் உடனடியான காரணம் அலாவுதீன் ராணு ரத்தன் சிங்கின் இராணி பேரழகி பத்மினி யின்மீதுகொண்ட மோகமேயாகும். ஆனால் இது குறித்து அக் காலத்திய வரலாறு அல்லது சாசனங்களில் தெளிவாகக் கூறப்பட வில்லை. இராணுவைச் சிறைபிடித்துச் சுல்தானின் முகாமிற்குக் கொண்டு சென்றனர். ஆனால் மிக்க தீரமான முறையில் இராசபுத்திரர் கள் அவரை விடுதலை செய்தனர். சித்தூர்க்கோட்டை வாயிலின் முன்பாக கோரா, பதால் என்ற இரு இராசபுத்திரத்தலைவர் ஒரு சிறு படையுடன் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நின்றனர். ஆனால் டில்லிப் படையின் முன்பு நீண்ட நேரம் அவர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை. மேலும் அவர்களைத் தடுத்து நிறுத்துவது இயலாது என்று அறிந்த வுடன் அவமானத்தைக் காட்டிலும் வீர மரணத்தையே விரும்பி டாட் விவரித்தப்படி ஜோஹர் என்ற பயங்கரமான சடங்கை நிறைவேற்றினர். இச்சடங்கு குறிப்பாகப் பெண்கள் சிறைபிடிக்கப்பட்டுக் கற்பழிக்கப் படுவதைத் தடை செய்யவே மேற்கொள்ளப்படும். 'பாதாளப் புகலிடத்தில்' ஈமத்தீ மூட்டப்பட்டது. அங்கு பகலவனின் ஒளி உட்புக முடியாது. கோட்டையைப் பாதுகாத்து வந்த வீர்கள் தங்கள் இராணியார்களும் மனைவி மக்களும் ஆயிரக்கணக்கில் ஊர்வலம் போல உள்நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அழகிய பத்மினி அக்கூட்டத்தின் நடு நாயகியாக விளங்கினாள்...மெதுவாக அவர்கள்

[1] தா-ரிக்கி-அலாய், எலியட், வால்யூம் III, பக்கம் 75. ஹம்மீர் மகா காவியத்தின் ஆசிரியர் ஹமீரின் மரணம் பற்றி வேறு விதமாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூற்றுப்படி ஹமீர் தோல்வியுற்றது அவனது இருபடைத் தலைவர்கள் ரதி பாலன், கிருஷ்ணபாலன் இவர்களது குறைபாடுகளின் காரணமாகும். பலத்த காயமுற்றுத் தான் இறந்துவிடுவோமென்று உணர்ந்ததும் எதிரிகளிடம் சிக்காமல் தன் வாளால் தன் தலையைத் தானே வெட்டிக்கொண்டான். ஈஸ்வரி பிரசாத், மத்தியகால இந்தியா, பக்கம் 195, அடிக்குறிப்பு.

Koviloor Acadamy

குகை வாயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் உள்ளே நுழைந்ததும் கதவு மூடியது, விழுங்கும் பெரு நெருப்பில் தங்கள் மானம் காக்கப்படும் பாதுகாப்பு இடத்தை அவர்கள் அடைந்தனர்.'

சித்தூர் முற்றுகையின் போது சுல்தான் படையுடன் கூடச் சென்றிருந்த அமீர் குஸ்ரரவ் சித்தூர்க் கோட்டை கி.பி. 1303 ஆகஸ்டு 26-ல் அலாவுதீனல் கைப்பற்றப் பட்ட தென்றும் பின்னர் அதைத் தன் மூத்த மகன் கிஸ்ர்கான் ஆளுகையின் கீழாக்கி டில்லி திரும்பு முன் சித்தூருக்கு கிஸ்ராபாத் என்று மறு பெயரிட்டான் என்றும் எழுதுகிருர். இராச புத்திரர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக 1311-ல் சித்தூரை விட்டு வரவேண்டியதாயிற்று. அதன்பின்னர் சுல்தான் அதனை ஜாலர் தலைவன் மால்தேவ்வசம் ஒப்படைத்தான். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இராசபுத்திரர்கள் ஹமீர் அவன் மகன் தலைமையில் சித்தூரை மீட்டனர். மறுபடியும் அது மேவாரின் தலை நகராயிற்று.

சித்தூரைப் பணிய வைத்தபின்னர் அலாவுதீன் மாளவ நாட்டிற்கு ஒரு படையை அனுப்பினான். மாளவ நாட்டு ராய் மாலக் தேவனும் அவனுடைய பிரதானி கோக்காவும் ஒருபெரும்படையுடன் அலாவுதீன் படையை எதிர்த்தனர். ஆனல் கி.பி. 1305, நவம்பர் அல்லது டிஸம்பர் மாதத்தில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப் பட்டனர். சுல்தானின் அந்தரங்க அரண்மனைக்காரியாதிகாரியான அயின்-உல்-முல்க் என்பவன் மாளவ நாட்டுக் கவர்னராக நியமனம் பெற்றான். இதன் பின்னர் முஸ்லிம்கள் உச்சயினி, மாண்டு, தார், சந்தேரி இவைகளைக் கைப்பற்றினர். இவ்வாறு கி.பி. 1305ஆம் ஆண்டு இறுதிக்குள் வட இந்தியா முழுவதும் கில்ஜியினர் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. இதன் பின்னர் தக்காணத்தில் தங்கள் ஆட்சியை விஸ்தரிக்கும் செயலில் இறங்கும்படியான துணிவு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது.

ஏற்கெனவே வாணிகத்தின் மூலமாக இந்தியாவின் மேற்குக் கடற்கரையினர்க்கும் மகமதியர்களுக்கும் தொடர்பு இருந்தபோதிலும் கில்ஜிகள் அலாவுதீனின் தலைமையில்தான் தக்காணத்தை முதன் முறையாக வென்றனர். அவன் தென் நாட்டுப் படையெடுப்புகள் அவனது இராச்சியப் பொருளாதாரத் தூண்டுதல்களால் விளைந்தது. வட இந்தியா முழுவதையும் வென்றடக்கிய பின் தென் இந்தியாவில் தன் ஆதிக்கம் பெருகவேண்டுமென முயற்சி செய்வது இவனைப்போன்ற பேராவல் கொண்ட மன்னர்களுக்கு இயற்கையே யாகும். வெற்றியை நாடும் இவனுக்குத் தக்காணத்துச் செல்வம் 'பெருந்தூண்டுதலாகவும் இருந்தது.'

விந்தியமலைக்கு அப்பாற்பட்ட இந்தியப் பிரதேசத்தில் நிலவிய அரசியல் நிலைமை அலாவுதீனுக்கு அங்குப்படையெடுத்துச்செல்ல

Koviloor Acadamy

ஏற்றதொரு வாய்ப்பை அளித்தது- நான்கு பெரும் அரசுகளாக அப் பிரதேசம் பிரிந்திருந்தது. முதல் இராச்சியம் தேவகிரியைப் தலை நகராகக்கொண்ட யாதவ இராச்சியம். அது அறிவும் ஆற்றலும் கொண்ட இராமச்சந்திர தேவனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது (1271-1309). கிழக்கில் தெலிங்கானா என வழங்கப்பட்ட பிரதேசம் வாரங்கலைத் (நைஜாம் இராச்சியத்தில் இருந்தது) தலை நகரமாகக் கொண்டிருந்தது. காகதீய வமிசத்து முதலாம் பிரதாப ருத்திர தேவனின் ஆட்சியில் அது விளங்கியது. ஹோய்சளர்கள் மூன்றும் வீர பல்லாலன் (1292-1342) தலைமையில் தற்போது மைசூர் இராச்சியத்தில் அடங்கியுள்ள ஒருபகுதியைத் துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். துவாரசமுத்திரம் தற்காலத்தில் ஹளபீடு (Halebid) எனவழங்கப்படுகிறது. ஹளபீடு அழகிய கோயில்கள் பல கொண்டு புகழ் பெற்றுள்ளது. தொலை தெற்கில் பாண்டியர்களின் நாடு இருந்தது. முஸ்லிம் எழுத்தாளர்களால் இது ம'பார் என அழைக்கப்பட்டது. இப் பிரதேசம் தற்கால மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கியதாக இருந்தது. பாண்டிய நாடு அதுபோது மாறவர்மன் குலசேகரன் என்னும் மன்னனால் ஆளப்பட்டு வந்தது. அம் மன்னன் வாணிகத்திற்கு ஆதரவு அளித்து நாட்டின் செழிப்பைப் பெருக்க உதவினான். இவர்களைத் தவிர பல குறு நில மன்னர்களும் இருந்தனர். அவர்களில் தெலுங்கு-சோடத் தலைவன் மூன்றும் மான்ம சித்தன் நெல்லூர் மாவட்டத்தை ஆண்டு வந்தான். ஒரிஸ்ஸாவில் கலிங்க கங்கமன்னன் பானுதேவனும், கொல்லத்தில் (Quilon) கேரள மன்னன் இரவிவர்மனும், மங்களூரில் அலுபு தலைவன் பங்கிதேவ அலுபேந்திரனும் ஆண்டுவந்தனர். தென் இந்திய இந்து அரசர்களிடையே ஒற்றுமை என்பது சிறிதும் இல்லை. கி.பி. 1294-ல் அலாவுதீன் தேவகிரிமீது படையெடுத்த போது இராமச்சந்திர தேவன் இம் மன்னர்களிடமிருந்து எந்தவிதமான உதவியும் பெறவில்லை. சில சமயங்களில் ஹோய்சள மன்னர்கள் தேவகிரி இராமச்சந்திரதேவனைத் தாக்கியுள்ளனர். தெற்கு இராச்சியங்களில் நிலவிய உள் நாட்டுப் பூசல் வட இந்தியப் படையெடுப்புகளை அழைத்தன.

கி.பி. 1307 மார்ச்சு மாதம் அலாவுதீன் காபூர் தலைமையில் ஒரு படையைத் தேவகிரி இராமச்சந்திர தேவனுக்கு எதிராக அனுப்பினான். காபூர் இது சமயம் நாட்டின் மாலிக் நாயக் (படைத்தலைவன்) காக விளங்கினான். இராமச்சந்திரதேவன் எலிச்சப்பூர் இராசதானிக்கான திறைப்பணத்தை மூன்றாண்டுக் காலமாகச் செலுத்தாமல் இருந்தான். மேலும் கூர்ச்சரத்திலிருந்து ஓடிவந்த இரண்டாம் இராய் கர்ணதேவன் என்னும் மன்னனுக்குப் புகலிடம் அளித்து இருந்தான். குவாஜா ஹாஜி உதவியாக வர, கபூர் மாளவம் வழியாகப் படையுடன் தேவகிரியை நெருங்கினான். நாட்டைப் படுநாசம் செய்து

Koviloor Academy

மிகுந்த பொருளைக் கொள்ளை கொண்டு இராமச்சந்திர தேவனைச் சமாதானத்திற்கு வேண்டும்படியாகவும் செய்தான். டில்லியிலிருந்த அலாவுதீனிடம் இராமச்சந்திர தேவன் அனுப்பப்பட்டான். சுல்தான் அவனை மரியாதையுடன் ஆறு மாத காலம் டில்லியில் வைத்திருந்து மீண்டும் தேவகிரிக்கு அனுப்பினன். டில்லியின் சிற்றரசனுக இராமச்சந்திரதேவன் ஆட்சி செய்து வந்தான். தவருமல் டில்லிக்குத் திறைப் பணம் அனுப்பி வந்தான். இராய் கர்ணனின் மகள் தேவால தேவி படையெடுப்பாளனல் கைதுசெய்யப்பட்டாள். கூர்ச்சர கவர்னர் அலப்கான் அவளை டில்லிக்குக் கொண்டு போனன். அவள் சுல்தானின் மூத்த மகன் கிஸ்ர்கானுக்கு மணமுடிக்கப்பட்டாள்.

கி.பி. 1303-ல் காகதிய பிரதாபருத்திர தேவன்மீது அலாவுதீன் நடத்தியதொரு படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. ஆனல் யாதவர்களை ஒடுக்கியதால் அடைந்த ஊக்கத்தால் கி.பி. 1309-ல் இரண்டாம் தடவையாகக் காகதிய மன்னனைத் தன் ஆட்சிக்கு உட்பட்டுப் பணியவைக்கவும் அவன் செல்வத்தை அபகரிக்கவும் மற்ருெரு படையெடுப்பை அலாவுதீன் மேற்கொண்டான். வாரங்கல் நாட்டைத் தன் இராச்சியத்துடன் இணைக்கும் எண்ணம் அலாவுதீனுக்கு இல்லை. தொலை தூரத்திலுள்ள அதை நிர்வாகம் செய்வது கடினமானதாகவும் பட்டது. அவன் உண்மையான நோக்கம் பிரதாபருத்திர தேவனைத் தன் ஆட்சியை ஒப்புக்கொள்ளும்படி செய்யவும் திரண்ட அவன் செல்வத்தைப் பெறுவதற்குமே யாகும். படையெடுத்துச் சென்ற கபூருக்கு இட்ட கட்டளையினின்றும் இது நன்கு தெரியவருகிறது. 'அரசன் தன் பொக்கிஷத்தையும் அணிகலன்களையும், யானைகள், குதிரைகள் இவற்றைத் தருவதுடன் மறு ஆண்டிலும் அதே போன்று யானைகளும் பொக்கிஷங்களும் தர ஒப்புக் கொண்டால் மாலிக் நயிப் கபூர் அந்த நிபந்தனை ஏற்றுக் கொண்டு அரசனை மேலும் துன்புறுத்தக்கூடாது'. இதுவே அக்கட்டளை. டில்லிப் படையினர் தேவகிரியை அடைந்தும் ஏற்கெனவே சரண் அடைந்துள்ள இராமச்சந்திர தேவனின் உதவி அவர்களுக்குக் கிட்டியது. தெலிங்கானவை நோக்கிச் செல்கையில் அவர் திறமையான போர் வீரர்களை அளித்தார். வாரங்கல் கோட்டைக்குள் புகுந்து கொண்டு படையெடுப்பாளர்களை எதிர்க்கப் பிரதாபருத்திர தேவன் முயன்ருன். ஆயினும் கோட்டையை அவர்கள் தாக்கிய வேகத்தில் அதைத் தவிடு பொடியாக்கியதோடு காகதீய மன்னன் சமாதானத்தைக் கோரும்படியாகவும் செய்தனர். கி.பி. 1310-ல் சமாதானம் ஏற்பட்டது. அதன்படி அவன் கபூருக்கு நூறு யானைகளையும் ஏழாயிரம் குதிரைகளையும் மற்றும் ஏராளமான அணிகள் நாணயங்கள் இவைகளையும் கொடுத்ததோடு டில்லிக்கு ஆண்டு தோறும் கப்பம் செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டான். இதன் பின்னர்க் கபூர் டில்லிக்குத் தேவகிரி, தார், ஜாயின் வழியாக ஏராளமான கொள்ளைப் பொருள்

Koviloor Academy

களுடன் டில்லி சென்றான். இதைப்பற்றி அமீர் குஸ்ராவ் இவ்வாறு எழுதுகிறார்: 'பொருள் சுமை தாளாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஓராயிரம் ஒட்டகங்கள் சுமந்து வர'.

இந்த வெற்றிகளுக்குப் பின்னர், தொலை தெற்கில் உள்ள நாடுகளைத் தன்னடிப் படுத்த அலாவுதீன் தீர்மானித்தான். இந்த நாடுகளில் செல்வம் நிறைந்த பல கோயில்கள் இருந்தன. கி.பி. 1310 நவம்பர் 18-ஆம் நாளன்று மாலிக் நாயிப், குவாஜா ஹாஜ் இவர் தலைமையில் டில்லியிலிருந்து ஒரு பெரும்படை புறப்பட்டுத் தேவகிரி, துவாரசமுத்திரம் வழியாக ஹோய்சளர் நாட்டை நோக்கிச் சென்றது. முதன் முறையாகத் தனது தலைநகர் தாக்கப்பட்டதைக் கண்டு ஹோய்சள மன்னன் மூன்றும் வீர பல்லாலன் பெரும் அதிர்ச்சியுற்றான். படையெடுத்து வந்தவர்களின் எண்ணிக்கை மிகுதியைக் கண்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து தன் உடமையெல்லாவற்றையும் அவர்களுக்கு அளித்தான். இதைத்தவிர முஸ்லீம்கள் முப்பத்தாறு யானைகளைக் கைக்கொண்டும், ஏராளமான பொன் வெள்ளி, அணிகலன்கள், முத்துக்கள் இவைகளைக் கோவிலிலிருந்து கொள்ளை கொண்டனர். இவ்வாறு கைவசப்படுத்தப்பட்ட பொருள்களையும் ஒரு ஹோய்சள இளவரசனையும் மாலிக் நயிப் டில்லிக்கு அனுப்பி வைத்தான். கி.பி. 1313 மே மாதம் 6ஆம் நாள் ஹோய்சள இளவரசன் தம் மக்கள் பெருமகிழ்ச்சி கொள்ளும் வண்ணம் துவாரசமுத்திரத்திற்குத் திரும்பினான். ஆயினும் ஹோய்சள மன்னர்கள் டில்லிக்கு உட்பட்ட சிற்றரசர்களாயினர்.

துவாரசமுத்திரத்தில் பன்னிரண்டு நாட்கள் தங்கியபின் மாலிக் நயிப் மா'பரை நோக்கித் தன் கவனத்தைத் திருப்பினான். அந்நாடு சோழ மண்டலக்கரை முற்றிலும் வியாபித்திருந்தது. மேற்குக்கரையில் கொல்லம் முதல் கன்னியாகுமரிவரையும் வியாபித்திருந்தது. இப் பிரதேசத்தை அக் காலத்தில் பாண்டியர்கள் ஆண்டு வந்தனர். பாண்டிய மன்னன் குலசேகரனின் சொந்த மகனான சுந்தரபாண்டியனுக்கும் வீரபாண்டியன் என்ற முறையற்ற ஆனால் மன்னனின் அபிமானத்திற்குரிய மற்றொரு மகனுக்கும் பட்டம் குறித்து நேர்ந்த சண்டையில் மத்தியஸ்தம் கூறும்படியான வாய்ப்பு மாலிக் நயிப்புக்கு ஏற்பட்டது. வீரபாண்டியனிடம் ஒருதலைப் பக்கமாகத் தன் தந்தை அன்பு காட்டி தன் வாரிசாக அவனை நியமித்ததற்காகச் சினமுற்ற சுந்தரபாண்டியன் கி.பி. 1310 மே மாதக் கடைசியில் அரசனைக் கொன்று அரச பதவியைத் தான் கைப்பற்றினான். ஆனால் தன் சகோதரனால் அதே ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட சண்டையில் தோற்கடிக்கப் பட்டான். இவ்வாறு இன்னலுக்குட்பட்ட அவன் முஸ்லிம்களின் உதவியை நாடினான். ஒரு பெரும்படையுடன் மாலிக் தக்காணத்தின் மீது படையெடுத்தான். கி.பி. 1311 ஏப்ரல் 14 ஆம்

Koviloor Acadamy

நாள் அவன் மதுரையை அடைந்தான். பாண்டியர்களின் தலை நகரம் காலியாக இருப்பதைக் கண்டான். இவன் படையெடுத்து வருவதைக் கேள்வியுற்ற வீரபாண்டியன் தன் இராணிகளுடன் நகரத்தை விட்டு நீங்கி விட்டான். ஆயினும் மாலிக் அந்நகரத்தைத் தாக்கி ஏராளமான பொருளைக் கொள்ளையிட்டான். அமீர் குஸ்ராவின் கணக்குப்படி அக் கொள்ளையில் ஐந்நூற்றுப் பன்னிரண்டு யானைகளும் ஐயாயிரம் குதிரைகளும், ஐந்நூறு மணங்கு பலவகையான வைரம், முத்து, மரகதம், இரத்தினம் இவைகளால் ஆன அணிகலன்களும் அடங்கியிருந்தன. அமீர் குஸ்ராவை நாம் நம்புவதாயிருந்தால் அவன் கூற்றுப்படி மாலிக் இராமேசுவரம் வரையில் சென்றான் எனலாம். கி.பி. 1311-ல், அக்டோபர் 18-ல், அவன் அறுநூற்றுப் பன்னிரண்டு யானைகள், இருபதாயிரம் புரவிகள், தொண்ணூற்றாறாயிரம் மணங்கு பொன், சில பெட்டிகள் நிறைய நகைகளும் முத்துக்களுமான இவை அடங்கியதொரு பெருங் கொள்ளைப் பொருள்களுடன் டில்லிக் குத் திரும்பினான். இவ்வாறு மா'பார் நாடு டில்லி சுல்தானியர் ஆதிக்கத்தின் கீழ் வந்து மகமது துக்ளக் ஆட்சியின்[1] ஆரம்ப காலம் வரை இருந்து வந்தது.[1] கி.பி. 1312-ல் இராமச்சந்திர தேவனின் மகன் சங்கர தேவன் தன் தகப்பனார் டில்லி சுல்தானுக்கு வாக்களித்திருந்த கப்பப் பணத்தை நிறுத்தி விட்டு சுய ஆட்சிபெற முயன்றான். இதைக் கண்ட மாலிக் நயிப் மறுபடியும் டில்லியிலிருந்து படையுடன் வந்து சங்கர தேவனைத் தோற்கடித்துக் கொன்றான். இவ்வாறு தென் இந்தியா முழுவதும் டில்லி சுல்தானின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ஆனால் நகரங்களைக் கொள்ளையிடுதல், மக்களைக் கொலைபுரிதல், கோயில்களைக் கொள்ளையிடுதல் இவை போன்ற செயல்கள் நிறைந்த மாலிக் நயிப்பின் படையெடுப்புகள் தென் இந்தியப் பழங்குடிகள் மனத்தை வெகுவாகப் பாதித்தன. தாற்காலிகமாகப் பெருவலி படைத்த படையெடுப்பாளர்களுக்குப் பணிவதைத் தவிர அவர் களுக்கு வேறு வழியில்லை[2] ஆயினும் தங்கள் மனத்தில் அவர்கள் ஆழ்ந்த வெறுப்புக் கொண்டிருக்கவேண்டும். இந்த வெறுப்பின் அர சியல் விளைவாக விளைந்த விளைவே விஜய நகரத்தின் எழுச்சியாகும்.

அரச பதவியைப்பற்றிய கொள்கையில் அலாவுதீன் தனக்கு முன் ஆட்சி செய்தவர்களின் கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டு நடந்தான். அரசியல் விவகாரங்களில் மதத்தலைமைப் பீடத்திற்கு இருந்த அதிகாரத்தை முதன் முறையாக

[1]இது சில நாணயங்கள் இபின் படுடாவிலிருந்தும் தெரியவருகிறது. J. R. A S. 1909, பக்கம் 669-70.

[2]ஸிவெல் சரித்திரம், பக்கம் 177.

Koviloor Acadamy

எதிர்த்தான். உலேமாக்களி (Ulemas)ன் துணையின்றி அரசியலின் நலன்களைத் தன்னால் பாதுகாக்க முடியும் என்று வெளிப்படையாகக் கூறினான். மதத்தாபனத்தின் அதிகாரத்தை ஆதரித்தவனும் தன்னுடைய சபைக்கு அடிக்கடி விஜயம் செய்தவனுமான குவாஸி-முகிஸ்-உதீன் என்பவனிடம் அலாவுதீன் இவ்வாறு கூறுவதுண்டு: 'ஆயிரக்கணக்கான மக்கள் அழியக்கூடும் என்று தோன்றும் கலவரங்களை ஒடுக்க வேண்டி என் மனத்திற்கு இது நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்று தோன்றும் ஆணைகளை நான் பிறப்பிக்கிறேன். இதை அலட்சியம் செய்து என்னையும் மதியாமல் என் உத்தரவுகளை மீறுகின்றனர்; ஆகையால் நான் அவர்களைக் கீழ்ப்படியச் செய்யக் கடுமையுடன் நடந்து கொள்ளுவது கட்டாய மாகி விடுகிறது. இது சட்டப்படியுள்ளதா அன்றிச் சட்டத்திற்குப் புறம்பானதா என்று எனக்குத் தெரியாது. எதெது நாட்டின் நலனுக்கு உகந்தது என்று படுகின்றதோ அல்லது நெருக்கடிக்கு ஏற்றது என்று தோன்றுகிறதோ, அதை நான் ஆணையிடுகிறேன்.' அலாவுதீனின் இந்த நோக்கத்தைக்கொண்டு அவன் இஸ்லாமிய மதத்தைப் புறக்கணித்தான் என்ற முடிவிற்கு வருவது தவறாகும். இந்தியாவிற்கு வெளியில் இவன் 'இஸ்லாமைப் பாதுகாக்கும் பெரியார்' என்று அறியப்பட்டான். இந்தியாவில் இது பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. மதத்தாபனத்தை ஆதரிக்கும் பார்னியும் அவனை ஆதரிப்பவர்களும் 'அவன் மதத்திடம் காட்டிய அலட்சியத்தை மிகைப் படுத்தியுள்ளனர். உற்று அறிந்து உணரும் தன்மையும் மேலான பண்பாடும் கொண்ட அமீர் குஸ்ராவ் அவனை இஸ்லாம் மத ஆதரவாளனாகக் கருதுகிறான். அலாவுதீனே குவாஜியிடம் கூறும்போது 'நான் விஞ்ஞானம் அல்லது நூல்களைக் கற்றதில்லை. ஆயினும் முஸல்மான் கூட்டத்தில் நான் ஒரு முஸல்மான்' என்கிறான். அலாவுதீனின் நினைவுச் சின்னங்களின்மீது காணப்படும் சாசனங்களும், 'இவன் இஸ்லாம் மதத்தில் நம்பிக்கை இழக்கவில்லை' என்று கூறுகின்றன.

அலாவுதீன் தன் மனத்திற்கு எது சரி என்று பட்டதோ அதில் உறுதியுடன் நடந்து கொண்டான். மத்தியில் வலிமை வாய்ந்த ஓர் ஆட்சி ஏற்படுத்தும் வகையில் அவன் தீவிரமாக இருந்தான். அகத்கானின் கலகம், சுல்தானின் சகோதரியின் மகனது புரட்சி, உமார், மங்குகான் இவர்கள் பதான், அயோத்தி இங்குச் செய்த துரோகம், 'புதிய முஸன்மான்களின்' சதிகள் இவைகள் எல்லாவற்றையும் திறமையுடன் அடக்கிப் பின் தன் ஆட்சியில் சில குறைபாடுகள் உள்ளன என்று நம்பினான். தனக்கு நெருங்கிய சிலர் புத்திமதிகளைக் கேட்டபின் நான்கு காரணங்களை அவன் இக்குறைபாட்டிற்குரியவை எனக் கண்டான். அவை (1) அரசியல் அலுவல்களைச் சுல்தான் புறக்கணிப்பது (2) மதுவின் உபயோகம் (3) பிரபுக்கள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகுவது அவர்களுக்குச் சதியை உருவாக்க

Koviloor Academy

உதவியது (4) பணப் பெருக்கமும் அதனுல் விளையும் தீமைகளும் பூசல்களும் செருக்கையும் அரசனிடம் துரோகத்தையும் விளைத்தல்.

இந்தத் தீமைகளை அறவே ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடனும் புரட்சிகளால் தான் பாதிக்கப்படாமலிருப்பதற்காகவும் சுல்தான் சில அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கினுன். தனிச் சொத்துத் தாபனங்களை முதலில் அவன் தாக்கினுன். பென்ஷன்களும் உதவி நிதிகளும் அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்டன. இனும் முறை முதலாளித்துவ முறை, உதவிநிதிமுறைப்படியுள்ள எல்லாக் கிராமங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. 'மக்கள் நசுக்கி ஒடுக்கப்பட்டனர். பல வகையான முறையில் மக்களிடமிருந்து பணம் வற்புறுத்தப்படுத்தி வசூலிக்கப்பட்டது. இதனுல் பலரிடம் பணம் என்பது இல்லாது போயிற்று. இவ்வாறு நிலைமை ஏற்பட்டு முடிவில் மாலிக்குகள், அமீர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மூல்தானிகள், வங்கியர்கள் இவர்களைத் தவிர வேறு ஒருவரிடம் அற்பக்காசுகூடக் கிடையாது என்ற நிலைமை ஏற்பட்டது' என்று பார்னி கூறுகிருர். இரண்டாவதாக சுல்தான் திறமையான ஒற்றர்படை ஒன்றை நிறுவினுன். அவர்கள் சுல்தானிடம் எல்லாவற்றையும் பற்றிக் கூறவேண்டும் என்றும் சந்தையிடங்களில் நடைபெறும் மிகச் சாதாரண உரையாடல்களையும் நடவடிக்கைகளையும் பற்றிக்கூடக் கூறவேண்டுமெனப் கணிக்கப்பட்டனர். 'இந்த முறை மிகக் கடுமையாக வேலை செய்ய ஆரம்பித்தது. பிரபுக்கள் பெரிய இடங்களிலும் உரத்துப் பேச அஞ்சும்படியான அளவிற்கு இது அச்சம் விளைத்தது. அவர்கள் தங்களுக்குள் ஏதாவது பேசிக்கொள்ள வேண்டியிருந்தால் சைகைகள் மூலமே அவ்வாறு செய்தனர்.' மூன்ருவதாகப் போதைதரும் பானங்கள், மருந்துகள் இவை அருந்துவதையும் கவருடுவதையும் தடைசெய்தார். குடிக்கும் பழக்கத்தைத் தானும் கைவிட்டு, சுல்தான் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினுன். மது அருந்தும் அவனுடைய கிண்ணங்கள் எல்லாம் பொடிப்பொடியாக்கப்பட்டன. நான்காவதாகப் பிரபுக்களின் சமூகக் கூட்டங்களையும் அவர் தடைசெய்தார். அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தால் அதற்குச் சுல்தானின் உத்தரவு பெற வேண்டியிருந்தது. இந்த உத்தரவு மிகக் கடுமையாக அமலாக்கப்பட்டதால் 'விருந்துகளும் இலவச உணவு அளிப்பதும் அறவே ஒழிந்தன. ஒற்றர்களின் அச்சம் காரணமாகப் பிரபுக்கள் எங்கும் கூடாமல் அமைதியுற்றனர்; அவர்கள் விருந்துகள் நடத்துவதை விட்டுவிட்டனர். ஒருவரோடொருவர் செய்தி அனுப்பிக் கொள்வதையும் நிறுத்தி விட்டனர்.'

சுல்தான் கடைப்பிடித்த மற்ற ஒழுங்கு முறைகளும் மிகக் கடுமையானதாக இருந்தன. மக்களில் பெரும்பாலோர் தங்கள் வருவாயில் பாதியை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டியிருந்தது.

Koviloor Acadamy

மேய்ச்சல் நிலங்களுக்குக் கொடுக்கவேண்டிய வரியும் மிக அதிக மானதாக இருந்தது. மக்கள் எந்த விதமான ஆயுதத்தையும் வாங்கி உபயோகிக்க முடியாதபடி அவர்களின் பொருளாதார நிலையை அவ் வளவு மோசமாக்க விரும்பினர். குதிரை வைத்துக்கொள்ளவும் நேர்த்தியான உடைகள் உடுக்கவும் வாழ்க்கையில் எந்த விதமான சுகபோகங்களையும் அவர்களால் துய்க்கவும் முடியாத வறுமை ஏற் பட்டது. உண்மையில் பொதுமக்களின் நிலை மிகவும் கடுமையான தாயிற்று. ஒருவரும் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை. அவர்கள் வீட்டில் பொன், வெள்ளி டாங்கா அல்லது ஜிட்டால் இருந்த அடை யாளமே இல்லை. வளம் மறைந்தது...வறுமையால் பீடிக்கப்பட்ட குட், மக்காடம் (Khuts and Maqaddams) இவர்களின் மனைவிமார்கள் முஸல்மான்களின் வீட்டில் கூலி வேலை செய்துவந்தனர். நிலவரி வசூலிப்பது ஒரே சட்டத்தின் கீழ்க்கொண்டுவரப்பட்டது. பரம்பரைப் பாத்தியமாக நிலவரி வசூலித்து வந்தவர்களும் உத்தியோகஸ்தர் களும் இந்த உத்தரவுப்படியே நடக்கும்படி சுல்தானது நயிப் வாசிய ரான ஷராப்குவாயினல் மிகக் கண்டிப்பாக வற்புறுத்தப்பட்டனர். இவனையும் இவனது உதவியாளர்களையும் கண்ட மக்கள் கொடிய நோய்க்கு அஞ்சுவதைவிட அதிகமாகப் பயந்தனர். குமஸ்தாவேலை ஒரு பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. ஒரு குமாஸ்தாவிற்குப் பெண் கொடுக்க எந்த மனிதனும் விரும்பவில்லை.

அரசாங்கம் சரிவரி நடைபெற வேண்டுமானல் வலியதொரு படை வேண்டு மென்பதைச் சுல்தான் சரியாக உணர்ந்திருந்தான். ஆகவே பெரும்படை அமைப்பதில் அவன் முயற்சி செய்து வந்தான். அப் படையைத் திறமையாக நிர்வாகம் செய்ய ஏராளமான பொருள் தேவையாக இருந்தது. தென்நாட்டிலிருந்து ஏராளமான செல்வம் டில்லியில் குவிந்தமையாலும் செல்வத்தின் மதிப்பு மிகக் குறைவாக இருந்தபடியாலும் விலைவாசிகள் மிக உயர்ந்து விட்டன. படை வீரன் ஒருவனுக்கு ஆண்டு ஒன்றிற்கு 234 டங்காக்கள் [1] என்று சுல் தான் நிர்ணயம் செய்திருந்தான். இரண்டு குதிரைகளைப் பராமரிக் கும் ஆளுக்கு 78 டங்கா என்று ஏற்படுத்தியிருந்தான். படையினரின் சம்பளத்தை அவன் அதிகரிக்க விரும்பவில்லை. ஏனெனில் அது அரசாங்கவருமானத்தைப் பெரிதும் பாதிக்கும் என்று எண்ணினன். அவன் அவர்களால் கொடுக்கக்கூடிய அதிக பட்ச அளவிற்கு வரி யும் விதித்திருந்தான். படை வீரர்கள் குறைந்த ஊதியத்தில் வாழ்க்கை நடத்த அவர்களுக்கு சாத்தியமாகும் பொருட்டு வாழ்க் கைக்கு மிகவும் தேவையான பண்டங்கள் முதல் அடிமைகள், குதிரைகள், படைக்கலங்கள், பட்டு மற்றும் பல ஆடம்பரப்

[1] ஒரு டங்காவின் மதிப்பு ஒரு ருபாயின் மதிப்பைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாக இருந்தது.

Koviloor Academy

பண்டங்கள்[1] வரை தேவையையும் கிடைப்பதையும் கூடுமான வரையில் கணக்கிட்டு விலைவாசியைக் கட்டுப்படுத்திச் சில கட்டளைகள் பிறப்பித்திருந்தான். தலைநகரைச் சுற்றியுள்ள கால்ஸா கிராமங்களிலிருந்து கிடைக்கும் நிலவரியைத் தானியமாகப் பெற்று டில்லி நகரில் உள்ள அரசாங்கக் களஞ்சியங்களில் சேர்த்து வைக்கப்பட வேண்டுமென்றதனுல் பற்ருக்குறை ஏற்படுங்காலங்களில் சுல்தான் தன் சொந்தக் களஞ்சியங்களிலிருந்து சந்தைகளுக்குத் தானியம் அனுப்பச் சாத்தியமாக இருந்தது. தனியார்கள் தானியங்களைச் சேகரித்து வைப்பது அனுமதிக்கப்படவில்லை. திவானி ரியசாட்ஷாஹானு-இ-மண்டி என்று அதிகாரிகளாலும் ஒற்றர் கூட்டத்தினுலும் சந்தைகள் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தன. அரசாங்க தப்தரில் வியாபாரிகள் தங்களைப் பதிவு செய்து கொண்டு தங்கள் பொருள்களையெல்லாம் விற்பனைக்காக ஸராய் அதல் (Sarai Adl) என்னும் பதான் வாயிலுக்கருகிலுள்ள திறந்த வெளியிடத்திற்குக் கொண்டு வர வேண்டும். தங்கள் நடத்தைக்காக அவர்கள் தகுந்த ஜாமீன் அளிக்க வேண்டியிருந்தது, சுல்தான் விதித்த ஒழுங்கு முறைகளை மீறுகின்றவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டன. வியாபாரிகள் குறைந்த எடைகளை உபயோகிக்காதபடியும் அவ்வாறு குறையும் எடைக்குச் சரியாக அவர்களது சதையை வெட்டியெடுக்கவும் உத்தர்வு இடப்பட்டிருந்தது. சுல்தான் உயிருடன் இருக்கும் வரையில் இந்த சட்ட திட்டங்கள் சரிவர நடத்தப்பட்டன. இதனுல் பெரியதொரு நிரந்தரப்படையைக் குறைந்த செலவில் சுல்தானுல் நிர்வகிக்க முடிந்தது. ‘சந்தைகளில் தானியத்தின் விலை என்றும் மாருமல் நிலவி வந்தது கால அதிசயங்களில் ஒன்று’ என்று பார்னி குறிப்பிடுகின்ருர். ஆனுல் இவைகளால் நாட்டின் பொருளாதார நிலையில் பொதுவான விளைவுகள் எப்படியிருந்தன என்பதைப்பற்றித் தெளிவாக அவர் குறிப்பிடவில்லை,

கி.பி. 1312ஆம் ஆண்டு இறுதியில் அலாவுதீன் தன் வாழ்க்கையின் உச்ச நிலையை அடைந்தான். ஆனுல் வாழ்க்கையின் சோக முடிவு அண்மையிலேயே இருந்தது. இதிலிருந்து அவனது கிரகம் ஒளி மங்கியது. அதன் மங்கிய ஒளியில் அவன் வாழ்க்கை தொடர்ந்தது. பார்னி கூற்றுப்படி ‘வெற்றி இனிமேல் அவனுடன் பொருந்தியிருக்கவில்லை. வழக்கம்போல் அதிர்ஷ்டம் மாறி மாறி நிலையற்றதாக

[1] பண்டங்களின் விலைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தன:

ஆளொன்றுக்கு	ஜிட்டல்கள்		ஒரு சேருக்கு ஜிட்டல்
கோதுமை	,, 7½ ,,	சர்க்கரை	,, 1½ ,,
பார்லி	,,. 4 ,,	பழுப்புச் சர்க்கரை	,, ¼ ,,
உமியுடன் கூடிய அரிசி	,, 5 ,,	வெண்ணெய் 2½ சேர்	,, 1 ,,
Mash	,, 5 ,,	நல்லெண்ணெய் 3 சேர்	,, 1 ,,
பயறு	,, 5 ,,	உப்பு 2½ மணங்கு	,, 5 ,,
Moth	,, 3 ,,		

Koviloor Acadamy

இருந்தது. விதி அவனை அழிக்கத் தன் பாசக்கயிற்றை இறுக்கியது.' அளவுக்கு மீறிய அவன் செயல்கள் அவன் உடல் நலனை அழித்தன. அவன் அறிவு குன்றியது. அவன் தீர்ப்புகளில் குறைபாடுகள் ஏற்பட்டன. தனது பிரிய அடிமை கபூரின் ஆதிக்கத்தில் ஒரு கைப் பொம்மையானுன். அவனைத் தன் முதல் அமைச்சனுகவும் படைத் தலைவனுகவும் நியமித்து, திறமையும் வயதும் மிக்க அதிகாரிகளைப் பதவியிலிருந்து விலக்கியிருந்தான். பல இடங்களில் கலகங்கள் முளைத்தன. கபூரின் சூழ்ச்சியால் அரண்மனைச் சதிகளும் உருவாயின. கபூர் சுல்தானின் மனைவியையும் மகனையும் சுல்தானிடமிருந்து பிரித்து வைத்திருந்தான். கொஞ்சகாலமாகத் துன்புறுத்தி வந்த நோய் முற்றி யமனுக முடிந்தது. கி.பி. 1316 ஜனவரி இரண்டாம் நாள் சுல்தான் மரண மடைந்தான். அவன் மரணமடையும்போது பல தொல்லைகளில் சிக்கியிருந்தான். அவனது சடலம் ஜாமி மசூதிக்கு முன் ஒரு சமாதியில் அடக்கம் செய்யப்பட்டது. கபூர்தான் சுல்தானின் வியாதி முற்றி அவன் மரணம் அடையும்படி செய்தான் என்று சிலர் கருதுகின்றனர்.

அலாவுதீன் தன் போக்குப்படியே நடக்கும் அரசன். அவனுடைய ஆசைக்கு அளவு இல்லை. ஆசைக்கு எவ்விதத் தடையுமில்லை. அவன் தன் ஆசைகள் நிறைவேறுவதற்கு எத்தகைய வழியைப் பின்பற்றவும் தயங்கியது இல்லை. 'அவன் சிந்திய இரத்தத்திற்கு அளவில்லை. எந்த பரோவும் (Pharaoh) இவனைப்போற்ற குற்றவாளி யில்லை [1] ' என்று பார்னி எழுதுகிருர். ஜலால் உதீனின் துன்பம் மிக்க முடிவு, இறந்துபோன சுல்தானின் உறவினர்களை இவன் நடத்திய முறை, 'புதிய முஸல்மான்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள், இதில் அவன் அவர்கள் பெண்களையும் குழந்தைகளையும் கூடத் தண்டனையிலிருந்து விலக்காமலிருந்தது, இவையாவும் சுல்தானின் கடிய மனப்பான்மைக்குத் தக்க ருசுக்களாகும். இவன் அதிக அளவில் பிறர்மேல் சந்தேகமும் பொருமையும் கொண்டிருந்தான். அவை காரணமாக இவன் தனக்கு மிகவும் உபயோகமான தொண்டு செய்தவர்களிடமும் நன்றி உணர்ச்சியின்றி நடந்து கொண்டான். பலருடைய உதவி பெற்றே இவன் டில்லி அரியணையில் அமர்ந்தான். ஆயினும் அரியணை ஏறிய உடனேயே தனக்கு மிக்க உதவியாக இருந்த பல பிரபுக்களின் உடைமைகளையும் உத்தியோகங்களையும் பறிமுதல் செய்து அவர்களைச் சிறையிலடைத்தான்; மேலும் பலரைக்

தோமஸ், பதானிய மன்னர்களின் சரித்திரம் பக்கம் 160; எலியட் வால்யூம் III, பக்கம் 192. ஜிட்டல் (செம்பு நாணயம்) 175 கிரெய்ன் கொண்ட வெள்ளி டாங்காவில் பாதி மதிப்பு. 1¼ பார்த்திங் மதிப்புக்குச் சமமானது. 1 டில்லி மணங்கு 28 8 பவுண்டுக்குச் சமம். அவாயர்டு பாஸ"ம் 40 சேரும் 1 மணங்கு. தோமஸ், கிரானிகல் etc., பக்கம் 160-2.

[1] எலியட், வால்யூம் III, பக்கம் 156.

Koviloor Acadamy

குருடாக்கிக் கொலை செய்யவும் பணித்தான். சுல்தானின் சொந்தத் தளபதியான சபர்கானின் வீரச் செயல்களால் இவன் பொருமையே கொண்டான். அவன் மங்கோலியர்களால் கொல்லப்பட்டவுடன் இவன் மிகவும் மன அமைதி பெற்றான். 'எளியதொரு முறையில் தன் பெயருக்கு எவ்விதமான இழுக்கும் ஏற்படாத வகையில் அவன் தொலைந்தான்' என்று சுல்தான் நிம்மதியுடன் கூறினான். 'அலாவுதீனுக்குக் கல்வி யறிவு இல்லை' என்று பார்னி எழுதுகிறார் [1]. ஆயினும் பெரிஷ்ட்டா கூற்றுப்படி இவன் ஆட்சி பெற்றபின் பாரசீக மொழியை வாசிக்க அறிந்து கொண்டான் என்று தெரிகிறது.

இந்தச் சுல்தானுடைய காலத்தில் தான் அமீர் குஸ்ராவ், ஹாஸன் போன்ற சிறந்த அறிஞர்கள் வாழ்ந்து வந்தனர். கட்டடக் கலையில் சுல்தான் மிகவும் பிரியம் கொண்டிருந்தான். இவனுடைய ஆணையின் பேரில் பல கோட்டைகள் கட்டப்பட்டன. அவைகளில் சிறந்தவை வட்டவடிவான ஆலைக்கோட்டை ('Alai Fort) அல்லது கோஷாக்-இ-சிரி (Koshak-i-Siri) என்ற கல்லாலும் செங்கல் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட சுவர்கள் ஆகும். அச் சுவர்களில் ஏழுவாயில்கள் [2] இருந்தன. 'ஏராளமா வெள்ளியை அள்ளி வீசிப் பாழ்பட்டுக்கிடந்த எல்லா மசூதிகளையும் புதுப்பித்தான்' என்று அமீர் குஸ்ராவ் எழுதுகிறார். கி.பி. 1311-ல் குதப் மசூதியின் முற்றத்தில் புதியதொரு தூபி எழுப்பினான். இத்தூபி பழைய குதப்மினாரைவிட இரு மடங்கு பெரியதாக இருந்தது. அவன் அந்திய காலத்தில் ஏற்பட்ட பலவிதமான இன்னல்களால் அவனது வாழ்நாளிலேயே இந்தத் தூபி கட்டிமுடிக்கப்பட முடியவில்லை. கி.பி. 1311-ல் இந்த மசூதிக்குச் சிவப்பு மணற்பாறையினால் ஆகிய பெரியதொரு வாயிலையும் அவ்வாயிலின் நான்கு பக்கங்களில் சிறிய வாயில்களையும் கட்டும்படி பணித்தான்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சரித்திரத்தில் அலாவுதீன் அவனுடைய அரசியல் நடவடிக்கைகளால் நன்கு அறியப்படுகிறான். அவன் தீரமும் வீரமும் கொண்ட வீரன். அவ்வன் எடுத்த எல்லா இராணுவ நடவடிக்கைகளிலும் அவன் வெற்றியையே கண்டான். பால்பனின் இராணுவ நோக்கங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தினான்; ஓர் ஆட்சியாளனாகவும் தன் வாழ்க்கையின் முற்பகுதியில் மெச்சத்தக்க ஊக்கம் காட்டினான். முதன்முறையாக மதப்பிரபுக்களின் துணையின்றித் தனியான முறையில் அரசியல் அலுவல்களை நிறைவேற்றிய பெருமை இவனையே சாரும். எப்பாடு பட்டாயினும் எவ்வகையிலாயி

[1] பார்னி, எலியட், வால்யூம் III, பக்கம் 183.

[2] இந்தக் கோட்டை கி.பி. 1303-ல் கட்டப்பட்டது. ஷெர்ஷா சிரிக் கோட்டையை இடித்துவிட்டுப் பழைய டில்லியின் அருகில் புதியதொரு நகரைக் கட்டினான். சிரிக்கோட்டையிருந்த இடத்தில் ஷாஹபாத் என்னும் சிற்றூர் இருக்கிறது. சர் சையத் அகமத்கான் இயற்றிய அஸர்-உஸ்-சனடிட் (Asar-us-Sanadid).

Koviloor Acadamy

னும் அரசாங்கத்தை வலுப்படுத்த அவன் உறுதி உடையவனுக இருந்தான்.

இராணுவ அடிப்படையில் அவன் அமைக்க முயன்ற ஆட்சி மணலில் அமைக்கப்பட்டது. அவனுடைய கடும் நடவடிக்கைகள் வெளிப்படையாக அவன் ஆட்சியை வலுப்படுத்த உதவியதாகத் தோன்றுகிறது. ஆனால் ஒடுக்கப்பட்ட பிரபுக்களின் மனத்தில் அதிருப்தியையே அது வளர்த்தது. அவமான முற்ற இத் தலைவர்கள் தாங்கள் இழந்த பதவியைப் பெற தக்கதொரு நேரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். அவனுடைய முறையில் இருந்த பெரிய குற்றம் யாதெனில் ஆளப்பட்டவருடைய மனப்பூர்வமான நல்லெண்ணத்தை அது பெறவில்லை. அந்த நல்லெண்ணமே எந்த அரசாங்கமும் நிலைப்பதற்கு இன்றியமையாதது. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அரசாங்கம் நிலைபெறுவதற்கு அதை ஏற்படுத்தியவரின் நேரான திறனே காரணமாக இருந்தது. உண்மையில் அதன் அழிவிற்கான சின்னங்கள் சுல்தானின் இறுதி நாளிலேயே தோன்றலாயின. அவன் மறைந்த சிறிது காலத்திலேயே பிளவுச் சக்திகள் நிலை பெற்று அவன் பெரு முயற்சி செய்து ஏற்படுத்திய அரசாட்சி குலைந்தது. அவன் தன் மாமனிடம் நன்றியற்ற முறையில் நடந்து கொண்டதற்கான தண்டனை அவனுடைய குடும்பத்தினருக்கு ஏற்பட்டது. சுல்தான் யாரிடம் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டிருந்தானே, அவனலேயே அவனுடைய பேரும் புகழும் அடியோடு நிலைகுலைந்து வீழ்ந்தன. அவன்தான் சுல்தானின் பேரன்பிற்குரிய மாலிக் காபூர்.

3. காபூரின் மிதமிஞ்சிய செல்வாக்கு

தன் எஜமானனைப்போன்று தாட்சணிய மற்ற முறையில் மேலான தன் செல்வாக்கை இராச்சியத்தில் நிலைநாட்ட காபூர் முயன்ருன், அலாவுதீன் இறந்த இரண்டாவது நாளிலேயே இறந்துபோன சுல்தானின் உயில் ஒன்றைக் காபூர் வெளியிட்டான், அந்த 'உயில்' மட்டும் உண்மையெனக் கொள்ளப்படுமாயின் அது சுல்தானை வேண்டாத அளவு நிர்ப்பந்தப்படுத்தி எழுதச் செய்யப்பட்டதாகும். அதன்படி சுல்தானின் மகன் கிஸ்ர்கானை விலக்கிவிட்டு அரியணையைச் சுல்தானின், ஐந்து அல்லது ஆறு வயது நிரம்பிய சிறு குழந்தையான ஷாஹிப் உடின் உமாரா அடையவேண்டுமென்று எழுதப்பட்டது. மைனரான அச்சிறுவன் அரியணை ஏற்றப்பட்டான். அவனது ஸ்தானிகராக காபூர் நியமிக்கப்பட்டான். ஆயினும் அவன்தான் நாட்டின் உண்மையான சர்வாதிகாரியாக விளங்கினுன். அரியணையைத்தானே கைப்பற்றவேண்டும் என்னும் பேராசையின் தூண்டுதலால் காபூர் பயங்கரமான பழிச் செயல்களைச் செய்தான். அலாவுதீனின் மற்ற மூத்த பிள்ளைகளான கிஸ்ர்கான், ஷாதிகான் இவர்களைக் குருடாக்

Koviloor Academy

கும்படி செய்தான். அவர்களின் தாயான இராணியின் பொருள் யாவும் பறிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டாள். அலாவுதீனின் மூன்றும் மகனுகிய முபாரக் என்பவனை ஹஸார் சுடனி (ஆயிரம் தூண்களுடைய அரண்மனை)யில் சிறைவைத்தான். அவன் கண்களையும் பறிக்கவேண்டும் என்ற நோக்கமும் உடையவனுக இருந்தான். ஆயினும் அந்த இளைஞன் எப்படியோ தப்பி ஓடிவிட்டான். கில்ஜிகளுக்கு உறுதுணையாக நின்ற மற்றப் பிரபுக்களையும் அடிமைகளையும் அகற்றவும் காபூர் முனைந்தான். அவனுடைய கொடுஞ் செயல்களுக்குரிய கொடுமையை விரைவிலேயே அவன் பெற்முன். முப்பத்தைந்து நாட்கள் 'கொடிய 'ஆட்சி'க்குப் பின்னர் காலஞ்சென்ற சுல்தான் அலாவுதீனின் வேலையாள் ஒருவனுல் காபூர் கொல்லப்பட்டான். இதன் பின்னர்ப் பிரபுக்கள் முபாரக்கைச் சிறையினின்றும் மீட்டுவந்து அவனுடைய மைனர் தம்பியின் ஸ்தானிகராக நியமித்தனர். இவ்வாறு அறுபத்து நான்கு நாட்கள் ஸ்தானிகர் பதவி வகித்த முபாரக் கி.பி. 1316 ஏப்ரல் மாதத்தில் சிறுவனைக் குருடாக்கிவிட்டு குத்புதீன் முபாரக்ஷா என்று பட்டம் பூண்டு அரியணை ஏறினுன்.

4. குத்புதீன் முபாரக்—கில்ஜிகளின் வீழ்ச்சி

இப் புதிய அரசன் பட்டமெய்திய சில ஆண்டுகள்வரை எடுத்த காரியங்களில் வெற்றி கண்டுவந்தான். தன் தந்தையின் கொடிய கட்டளைகளை இவன் ஒழித்தான். அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். காலஞ்சென்ற சுல்தானுல் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களும் மானியங்களும் பாத்தியப்பட்ட பழைய உரிமையாளர்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன. கட்டாயச் சுங்கம் நீக்கப்பட்டது. இச் செயல்கள் மக்களுக்குச் சந்தேகமின்றித் திருப்தி அளித்தன. ஆனுல் பார்னி கூறியபடி, 'அரசரிடம் மக்களுக்குள்ள அச்சமும் அரச கட்டளைக்கு அஞ்சுவதும் மறைந்தன.' மேலும் சுல்தான் இன்ப வாழ்க்கையில் மூழ்கினுன். இதனுல் அரசாங்க நலன் பாதிக்கும்படியான செயலழிந்த தன்மை கொள்ளும்படியாக ஏற்பட்டது. அவனுடைய உதாரணத்தைப் பின்பற்றிய மக்களும் துன்பமுற்றனர். பார்னி கூறியபடி அவருடைய நான்காண்டு ஆட்சிக்காலத்தில் குடிப்பது, இசை கேட்பது, இன்பம் துய்ப்பது, வெகுமதிகளை வேண்டியபடி அளித்துப் பொருளைக் கரைப்பது இவை தவிர அரசன் வேறொரு செயலும் செய்யவில்லை. கூர்ச்சரத்தினின்று வந்த மதம் மாறிய ஒரு கீழ்பிறப்பாளனின் வசத்தில் முற்றிலும் இந்த சுல்தான் வீழ்ந்துவிட்டான். அவனுக்கு மன்னன் குஸ்ருகான் என்ற பட்டம் வழங்கி நாட்டின் முதலமைச்சனுகவும் நியமித்தான். இந்தப் பிரிய நண்பன் சுல்தானின் கீழ்த்தர இச்சைகளைப் பூர்த்தி செய்வதிலேயே ஈடுபட்டு முடிவில் அரியணையைத் தான் கைப்பற்றவேண்டும் என்ற அந்தரங்க எண்ணமுமுடையவனுக இருந்தான்.

Koviloor Academy

இந்துஸ்தானத்தின் நல் விதிகாரணமாக மங்கோலியர்கள் எந்தப் படையெடுப்பையும் மேற்கொள்ளவில்லை. வேறு எங்கும் அவனது ஆட்சிக்காலத்தில் எவ்விதமான தொந்தரவுகளும் விளையவில்லை. இரண்டே இரண்டு கலகங்கள் மட்டும் தோன்றின: ஒன்று கூர்ச்சரத்திலும் மற்றொன்று தேவகிரியிலும் (தக்காணத்தில்) நடைபெற்றன. கூர்ச்சரத்தில் விளைந்த கலகம் சுல்தானின் மாமனுராகிய அயின்-உல்-முல்க் என்பவரால் திறமையாக ஒடுக்கப்பட்டது. சுல்தான் இவனுக்கு சபார்கான் என்ற பட்டம் வழங்கி அங்குக் கவர்னராகவும் நியமித்திருந்தான். சுல்தானே ஒரு பெரும்படையுடன் தேவகிரிக்குச் சென்றான். சுல்தானின் வருகையைக்கண்டதும் தேவகிரியின் மன்னன் ஹரபாலதேவன் ஓடிவிட்டான். ஆனால் அவன் பின்தொடரப்பட்டு, சிறைபிடிக்கப்பட்டு உயிருடன் தோலுரிக்கப்பட்டான். இவ்வாறு யாதவர்களின் அரசு முஸ்லீம்களின் வசமாயிற்று. சுல்தான் மாலிக் யாக்லாக்கி என்பவனைத் தேவகிரியின் கவர்னராக நியமித்தான். மேலும் குஸ்ருகானைத் தெலிங்கானாவிற்குப் படை கொண்டு செல்லும் படியும் சுல்தான் பணித்தான், அதுவும் வெற்றியாக முடிந்தது. தேவகிரியில் சுல்தான் ஓராண்டுக் காலம் தங்கி அங்கொரு மசூதியைக் கட்டி முடித்தபின் டில்லிக்குத் திரும்பினான்.

இவ்வெற்றிகள் சுல்தானை முன்னைவிட மோசமாக்கின. அரசவமிசத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர். டில்லியில் இவனுக்கு முன் ஆட்சி செய்தவர்களின் வழக்கத்தினின்று மாறுபட்டு இவன் நடந்தான். காலிபாக்களுக்கு ஊழியன் என்ற முறையை உதறிவிட்டுத் தன்னையே 'இஸ்லாம் மதத்தலைவன்' என்றும் மேலுலகத்திற்கும் பூவுலகத்திற்கும் தானே காலிபா என்றும் பிரகடனப்படுத்திக் கொண்டான். அல்-வாஸிக்-பில்லா' (al-wasiq-billah)[1] என்ற உன்னத பட்டத்தைச் சூட்டிக்கொண்டான்.

எனினும் இந்த சுல்தானின் ஆட்சி நீண்டகாலம் நீடிக்கவில்லை. குஸ்ரு அவனை ஆட்சியிலிருந்து தள்ளிவிடத் திட்டமிட்டான். சுல்தானுடைய நண்பர்கள் இது குறித்து எச்சரித்தும்கூட குஸ்ருவினிடம் கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையால் அதைப் பொருட்படுத்தவில்லை. குஸ்ருவினுடைய சதிக்கு விரைவிலேயே இரையானான். குஸ்ருவினுடைய பர்வாரி கூட்டாளியொருவன் கி. பி. 1320 ஏப்ரல் மாதம் ஓர் இரவில் சுல்தானைக் குத்திக்கொன்றான். முப்பதாண்டுக் கால ஆட்சிக்குப் பின்னர், கில்ஜி வமிசத்தினர் இத்தகையதொரு முடிவை எய்தினர்.

[1] அவனுடைய காசுகளில் உள்ள வாசகங்களைப் பார்க்கவும், J. A. S. B. 1875, 1880, 1886. தோமஸ் கிரானிகல் etc. பக்கம் 179-81. ரைட் இந்திய மியூசியக் காசுகளின் அட்டவணை வால்யூம் II, பக்கம் 8-ம், பக்கம் 43-46ம்.

Koviloor Acadamy

5. குஸ்ரு ஆட்சியைக் கவர்தல்

இதன் பின்னர் நாசருதீன் குஸ்ருஷா என்ற பட்டத்துடன் குஸ்ரு டில்லி அரியணை ஏறினன். தன் திட்டம் நிறைவேற உதவிய தன் இனத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் பட்டமும் பதவியும் வழங்கினன். முறையற்ற முறையில் அரசுரிமை பெற்றதற்கு இணங்கிய பிரபுக்களைத் தன் வசமாக்கும் பொருட்டு நாட்டின் செல்வத்தை விரயக்கினன். இதன் பின்னர் அருவருக்கத்தக்க பயங்கர ஆட்சியைத் தொடங்கினன். காலஞ் சென்ற சுல்தானின் நண்பர்களையும் மெய்க்காப்பாளர்களையும் படு கொலை புரிந்து, சுல்தான் குடும்பத்தினரை அவமானத்திற்கு உள்ளாக்கினன். பார்னி, யாஹியாபின், அஹமத் ஷர் ஹிந்தி, இபின் பட்டுடா இவர்கள் கூற்றுப்படி இவன் இந்துக்களை ஆதரித்தான். நான்கு மாதங்களும் சில நாட்களும் கொண்ட குறுகிய இவனது ஆட்சி இந்துக்களின் எழுச்சியைக் கொண்டிருந்தது. எது எவ்வாறு இருப்பினும் குஸ்ருவின் நடத்தை அலய் பிரபுக்களைப் புண்படுத்தப் போதுமானதாயிருந்தது. காஸி மாலிக் என்ற புதிய தலைவனை இவர்கள் தேர்ந்தெடுத்தனர். இவன் திபால்பூரிலிருந்து படையெடுத்து வருகையில் அயின்-உல்-முல்க் தவிர ஏனைய பிரபுக்கள் எல்லோரும் இவனுக்கு உதவினர். அயின்-உல் முல்க் மூல்தான் கவர்னராக இருந்தான். இவனுக்கும் காஸிமாலிக்குக்கும் ஒரு மனத் தாங்கல் இருந்தது. கி. பி. 1320 செப்டம்பர் மாதம் 5ஆம் நாள் காஸி மாலிக் குஸ்ருவை டில்லியில் தோற்கடித்தான். குஸ்ரு சிரம் அறுக்கப்பட்டான். அவனுடைய கூட்டாளிகளில் சிலர் கொல்லப்பட்டனர்; சிலர் முறியடிக்கப்பட்டனர். இவ்வாறு வெற்றி பெற்றபோதும் காஸி மாலிக் அரியணை ஏறவில்லை. மாருக அவன் பதவி ஏற்பதில் தக்கதொரு தயக்கம் காட்டினன். ஆண் வாரிசு ஒருவரும் உயிருடன் இல்லாமையால் பிரபுக்கள் எல்லோருமாக வற்புறுத்தவே, கி. பி. 1320 செப்டம்பர் மாதம் கியாஸ்-உதீன்-துக்ளக் என்ற பட்டம் பூண்டு அரியணையில் அமர்ந்தான். முஸ்லிம் பிரபுக்கள் தங்களை ஒத்த அந்தஸ்து உடைய காஸி மாலிக்கிடம் பொருமை ஏதும் இன்றி அவனை டில்லி அரியணையில் அமரும்படி வருந்தி அழைத்தது குறிப்பாக நோக்கத்தக்கதாகும்.

Koviloor Acadamy

4. துக்ளக் வமிசத்தினர்—சிதைவின் ஆரம்பம்

1. கியாஸ்–உதீன்–துக்ளக்

காஸிமாலிக்கினது வமிசம் சுதேசத்தைச் சார்ந்தது எனக் கருதலாகும். அவனுடைய தந்தை பால்பன் காலத்தில் இந்தியாவிற்கு வந்து பஞ்சாபில் தங்கி ஜாட்குலப் பெண்ணை மணந்தான். தாழ்ந்த பதவியிலிருந்து மாலிக் படிப்படியாக அரசாங்கத்தில் மிக உயர்ந்த பதவிக்குத் தன் சொந்தத் திறமைகொண்டு உயர்ந்தான். இவன் எவ்வாறு திறமையுடன் எல்லைப்புறப் பிரதேசங்களை மங்கோலியப் படையெடுப்புகளின்றும் பாதுகாத்துவந்தான் என்பதுபற்றி நாம் ஏற்கெனவேயே குறித்துள்ளோம். அவ்வாறு இருந்த இவனை ஊழ்வலியானது முதிய வயதில் டில்லி அரியணையில் அமர்த்தியது.

பிரபுக்கள் காசிமாலிக்கை டில்லி அரசராகத் தேர்ந்தெடுத்தது மிகச் சரியானதென்று ஏற்பட்டது. அவன் பட்டமெய்திய காலத்துச் சூழ்நிலை இடுக்கண்கள் நிறைந்ததாக இருந்தது. டில்லியின் ஆட்சிக்கு அக் காலத்தில் யாரும் மதிப்பு அளிக்கவில்லை. அதன் எல்லைப்புறப் பிரதேசங்களில் அதன் ஆட்சி செல்லவில்லை. டில்லியின் அரசாங்க முறையும் அலாவுதீன் இறந்ததற்குப் பின் ஏற்பட்ட குழப்பத்தில் சிறைவுற்றது. ஆயினும் இத்தகைய நிலைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாலிக் விளங்கினன். தனக்கு முன் ஆட்சி செய்தவர் போலன்றி இவனிடம் வலிமையும் மேலான குணங்களும் பொருந்தியிருந்தன. வாழ்க்கையின் இளமைப்பிராயத்தில் ஏற்பட்ட பல துன்பங்கள் இவனுக்கு நல்ல பயிற்சியை அளித்திருந்தன. ஆழ்ந்த கடவுள் பக்தி உடைய இவனிடம் சாந்தமும் தயாளமும் நிரம்பியிருந்தன. தன் அரசவையைப் 'பால்பன் ஆட்சியில் தவிர வேறு எப்போதும் கண்டிராத முறையில் நேர்மை நிறைந்ததாகச் செய்தான்.' அவன் எதிலும் நிதானத்துடனும் அறிவுடனும் நடந்துகொண்டான். அமீர் குஸ்ராவ் இவனைப்பற்றி இவ்வாறு புகழ்கிருர்:

Koviloor Academy

'அறிவும், புத்திசாலித்தனமும் அற்ற எச்செயலேயும் அவன் ஒரு போதும் செய்ததில்லே.

தன்னுடைய முடியின்கீழாக நூறு அறிவாளிகளின் மேலுடை யைத் தரித்து இருந்தான் என்று கூறலாகும்.'

தான் பட்டமெய்திய உடனேயே தனக்குமுன் ஆண்டவர்களின் காலத்தில் ஆட்சி முறையில் ஏற்பட்டிருந்த குறைகளை நீக்கும் பணி யில் கியாஸ்-உதீன்-துக்ளக் ஈடுபடலானுன். முபாரக், குஸ்ரு இவர் களின் கண்மூடித்தனமான செலவுகளால் அரசாங்கத்தின் பொருள் நிலே வருந்தத்தக்க பரிதாப நிலேயை அடைந்திருந்தது. ஆகவே எல்லா உரிமைகள், ஜாகீர்கள்பற்றிக் கடுமையாகப் பரிசீலனே செய் யும்படி கியாஸ்-உதீன் உத்தரவிட்டான்.

சட்டப்படியல்லாத இனும்கள் அரசாங்கத்தால் பறிமுதல் செய் யப்பட்டன. இத்தகைய செயலினுல் அவனுக்கு ஏற்பட்ட அவப் பெயரைத் தன்னுடைய விவேகமானதும் குடிகளுக்கு நன்மை பயக் கக்கூடியதுமான தாராளமான செயல்களால் விரைவிலேயே போக்கிக் கொண்டான். ஒவ்வொரு மாகாணத்திற்கும் நேர்மையுள்ள கவர்னர் களே நியமித்து வரிச்சுமையைக் கணிசமான அளவில் குறைத்தும் நிகர வருமானத்தில் பத்தில் ஒருபங்கு அல்லது பதினென்றில் ஒருபங் காக அரசாங்கத்திற்கு உரிய வரியை நிர்ணயம் செய்தும் வீணுக அரசாங்கத்தினர் அதிக வரி வசூலிப்பதைத் தடை செய்தான். நமது நாட்டின் முக்கிய தொழிலான விவசாயத்திற்குத் தனிப்பட்ட ஊக்கம் காட்டினுன். வயல்களின் நீர்ப்பாசனத்திற்கான வாய்க்கால்கள் வெட் டப்பட்டன. பல தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. விவசாயிகளேக் கொள்ளேக் கூட்டத்தாரிடமிருந்து பாதுகாக்கும் பொருட்டுப் பல கோட் டைகள் கட்டப்பட்டன. இவ்வாருயினும்கூட சுல்தானின் சில ஒழுங்கு முறைகள் மக்களின் நன்மையைக் கருதியனவாக இல்லே. பார்னி கூற்றிலிருந்து, 'மக்களில் ஒருசிலர் செல்வத்தால் கர்வம் ஏற் படாதபடியும் அதனுல் அவர்கள் ஆட்சியிடம் வெறுப்புற்றுக் கலகம் விளேவிக்காதபடியும் வரி விதிக்கப்பட்டனர். வரியினுல் வறுமையுற்று விவசாயத்தைத் துறந்துவிடாத நிலேயில் அவர்கள் இருக்கும்பொருட் டும் வரி விதிக்கப்பட்டனர்' என அறிகிருேம்.

நீதித்துறை, போலிஸ் முதலிய மற்ற அரசாங்கத்துறைகளிலும் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இதனுல் நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலவின. ஏழை மக்கள் நிவாரணம், மதஸ்தாபனங் களுக்கு ஆதரவு, அறிஞர்களேப் பேணல், இவைகளுக்கான திட்ட மொன்றையும் அரசன் கொண்டுவந்தான். அவன் அரசவைப் பெரும் புலவரான அமீர் குஸ்ராவ் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் டாங்கா அரசாங்க

Koviloor Acadamy

உதவித்தொகையாகப் பெற்ருன். செய்திப் போக்கு வரத்திற்கு உபயோகமாகும்படி நாட்டின் அஞ்சல் முறை சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இராணுவத்துறை திறமையாகவும் ஒழுங்காகவும் விளங்கும்படி செய்யப்பட்டது.

நாட்டின் பல்வேறு மாகாணங்களிலும் சுல்தானின் ஆதிக்கம் செல்லப்படவேண்டும் என்பதைக் கவனிக்காமலிருக்க வில்லை. கில்ஜிகளின் இராணுவ ஆதிக்கம், அரசியல் ஆதிக்கம் சம்பந்தமான கொள்கைகளை இவன் பின்பற்றினுன். இவனுக்குப் பின் வந்த மகமது துக்ளக் ஆட்சியில் இவற்றின் தோல்வி அரசனின் பல வீனத்தால் ஏற்பட்டது. வங்காளத்திலும் தக்காணத்திலும் அவனது செயல் இதை நன்கு வெளிப்படுத்தியது.

அலாவுதீன் இறந்த பின் ஏற்பட்ட ஒழுங்கீனமான காலத்தைப் பயன் படுத்திக்கொண்டு வாரங்கல் நாட்டுக் காகதீய மன்னன் இரண்டாம் பிரதாப ருத்திரதேவன் தன் வலிமையை அதிகரிக்கச் செய்து டில்லிக்குக் கொடுக்கும்படி விதிக்கப்பட்டிருந்த கப்பப் பணத்தைக் கொடுக்க மறுத்தான். ஆகையால் தன் ஆட்சி இரண்டாம் ஆண்டில் கியாஸ்-உதீன்-துக்ளக் தனது மூத்த மகன், பட்டத்து இளவரசன் பக்ருடீன் மகமது ஜாஞஷா தலைமையில் வாரங்கல் நாட்டின்மீது ஒரு படை எடுப்பை அனுப்பினுன். அப்படை வாரங்கலின் மட்கோட்டையை முற்றுகையிட்டது. ஆனுல் இந்துக்கள் அதை உறுதியுட்னும் வலிமையுடனும் பாதுகாத்தனர். படையில் ஏற்பட்ட சதித்திட்டங்களாலும்[1], கொள்ளை நோயினுலும் யாதொன்றும் செய்யமுடியாதபடி ஜாஞகான் டில்லி திரும்ப வேண்டியதாயிற்று. ஜாஞ டில்லி திரும்பிய நான்கு மாதங்களுக்குப் பிறகு வாரங்கலின்மீது இரண்டாம் முறை அதே அரசகுமாரன் தலைமையில் வெற்றிகண்டது. மிகத்தீரமாகப் போர்புரிந்த பின் காகதீய மன்னன் தன் குடும்பத்தார்களுடனும் பிரபுக்களுடனும் பகைவனிடம் சரணடைந்தான். ஜாஞ அம்மன்னனை டில்லிக்கு அனுப்பிவிட்டுக் காகதீய நாட்டைத் தன் அடிபடுத்தினுன். வாரங்கலுக்கு சுல்தான்பூர் என்று மறு பெயர் இடப்பட்டது. காகதீய நாடு டில்லியுடன் முறைப்படி இணைக்கப்படாவிட்டாலும் விரைவிலேயே அது தனது பெருமையையும் அதிகாரத்தையும் இழந்தது.

[1]பார்னி, யாஹியாபின் அஹமது, மற்றும் பின்ஞல் தோன்றிய முஸ்லீம் எழுத்தாளர்கள் நைஜாமுடீன் அகமது, பதானி, பெரிஷ்டா, இவர்கள் கருத்துப்படி படையில் இருந்த சில துரோகிகளின் செயலால் இந்தச் சதிகள் ஏற்பட்டன. ஆனுல் அபன் பட்டுடா (வால்யூம் III பக்கம் 208-10) பட்டத்து இளவரசன் அரியணையைக் கைப்பற்ற வேண்டுமென்று எண்ணியதால் அவனே இச்சதிகளுக்குப் பொறுப்பாளி என்று எழுதுகிருர். தோமஸ் (கிரானிகில் முதலியன பக்கம் 108) மற்றும் ஸர் வெல்ஸ்லி ஹெய்க் (ஜெ. ஆர். ஏ எஸ்., 1922 பக்கம் 231-7) அபன் பட்டுடாவின் அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்கிருர். ஆனுல் டாக்டர் ஈஸ்வரி பிரசாத் (குரான துருக்கர்கள் சரித்திரம், பக்கம் 30-2)-ல் இந்தக் கருத்து தவறு என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

Koviloor Acadamy

கி.பி. 1318-ல் வங்காளத்தில் ஷம்சுடீன் பிரூஸ் இறந்தபின் அவனுடைய மக்களுக்குள் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் கியாஸ்-உதீன்-துக்ளக் அந்தப் பிரதேசத்தின் விவகாரத்தில் தலையிட வேண்டியதாயிற்று. ஷம்சுடீனின் ஐந்து பிள்ளைகளில் கி.பி. 1310 முதல் ஸோனர்கானைத் தலைநகராகக் கொண்டு கிழக்கு வங்காளத்தில் தனி அரசு செய்து வந்த கியாஸ் உதீன் பகதூர், தன் தந்தைக்குப் பின் வங்காளத்தின் அரசுரிமை பெற்று லக்நாடியைத் தலைநகராகக் கொண்ட ஷகபுடீன் பக்ராஷா, நாஸருதீன் இவர்கள் வங்காளத்தில் ஆதிக்கம் பெறப் போட்டியிட்டனர். கி.பி. 1319-ல் கியாஸ் உதீன் பகதூர், ஷகபுடீன் பக்ராஷாவைத் தோற்கடித்து வங்காளத்து அரியணையைக் கைப்பற்றினான். நாஸருதீனும் இதைப்பெற விரும்பியதால் உதவி கோரி டில்லி சுல்தானிடம் முறையிட்டான். தொலைவிலுள்ள வங்காளத்தைத் தன் திடமான ஆட்சியின்கீழ் கொண்டுவர இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டான். ஏனெனில் வங்காளத்தின்மீது டில்லியின் ஆதிக்கம் எப்பொழுதும் உறுதியற்றதாக இருந்தது. கி.பி. 1324-ல் லக்நாடியை நோக்கி, சுல்தான் ஒரு படையுடன் சென்று கியாஸ் உதீன் பகதூரைச் சிறைபிடித்து அவனைக் கைதியாக டில்லிக்கு அனுப்பிவிட்டு, நாஸருதீனை டில்லி சுல்தானின் சிற்றரசனாக மேற்கு வங்காளத்தின் அரியணையில் அமர்த்தினான். கிழக்கு வங்காளமும் டில்லி ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாகச் செய்யப்பட்டது.

கியாஸ் உதீனின் நாட்கள் குறுகிவிட்டன. வங்காளத்திலிருந்து திரும்பியதும் கி.பி. 1325 பிப்ரவரி-மார்ச்சு மாதத்தில் சுல்தான் இறந்தான். தன் மகன் ஜானு கட்டிவைத்த ஒரு மரக்கட்டடம் இவன் மீது விழுந்ததால் இவன் இறந்துவிட்டான். இந்த மரக்கட்டடம் டில்லிக்கு அருகில் கியாஸ் உதீன் கட்டிய கோட்டை நகரம் துக்ளகபாத் என்னும் நகரத்துக்கு ஐந்து அல்லது ஆறு மைல் தொலைவில் உள்ள ஆப்கன்பூரில் கட்டப்பட்டது. துக்ளகபாதில் தானே கட்டிவைத்திருந்த சமாதியில் சுல்தான் அடக்கம் செய்யப்பட்டான். சுல்தானின் மரணம்பற்றி இரண்டு விவரங்கள் உள்ளன. அந்த மரக்கட்டடம் மின்னலால் தாக்குண்டதால் விழுந்து விட்டது என்று பார்னி கூறுகிறார். யாஹியாபின் அஹமத் ஷர்ஹிந்தி என்பவர் 'அக்கட்டடம் கடவுள் முன் விதித்த விதியின்படி விழ்ந்தது' என்கிறார். ஆனால் அபன் பட்டூடா கருதுவது யாதெனில் சுல்தானின் மரணம் அவனது மகனின் முன் ஏற்பாடான சதியின் விளைவு என்பதாகும். அயாஸ் என்பவனின் மகனை அஹமத் என்னும் அரசாங்க சிற்பியைக் கொண்டுதான் சுல்தானின் மகன் அந்த மண்டபத்தை அவ்வாறு கட்டச் செய்தான். யானைகள் தொட்டவுடன் அம்மண்டபம் விழும்படியாகக் கட்டப்பட்டது என்று பட்டூடா எழுதுகிறார். அபுல்பாசல் நிஜாமுடீன் அஹமத் பதௌனி போன்ற பிற்கால எழுத்தாளர்கள் அது

Koviloor Acadamy

போன்ற சதியைச் சந்தேகிக்கின்றனர். தற்கால எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் பட்டுடாவின் கூற்று முடிவானதென்று எண்ணுகின்றனர். ஏனெனில் அவருக்குச் செய்தி அளிப்பவரான ஷெயிக்ருக் உதீன் சுல்தானின் துக்ககர முடிவின்போது அந்த மண்டபத்தில் இருந்தவராவர். பார்னியின் கூற்று ஒருசிறிது ஒருதலைப்பட்சமானது. அவருடைய அத்தவறு ஜானுவிடம் பெரு மதிப்புக் கொண்டிருந்த பிரோஸ்துக்ளக்கு எவ்வித மனத்தாங்கலும் ஏற்படக்கூடாது என்ற அவாவினுலாகும். பிரோஸ்துக்ளக் காலத்தில்தான் பார்னி தம் நூலை எழுதினார்.

2. மகமது பின் துக்ளக்

கி.பி. 1325 பிப்ரவரி-மார்ச்சு மாதம் தம் தந்தை இறந்து மூன்று நாட்கள் சென்ற பின் இளவரசர் ஜானு தம்மைச் சுல்தானுகப் பிரகடனப் படுத்திக்கொண்டார். மகமது பின் துக்ளக் என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டார். நாற்பது நாட்களுக்குப்பின் டில்லி சென்று எவ்வித எதிர்ப்புமின்றி மிக்க ஆடம்பரத்துடன் அரியணை ஏறினார். அலாவுதீனைப் போன்று இவரும் டில்லி மக்களுக்குப் பொன், வெள்ளி நாணயங்களை வாரி வழங்கியும், பிரபுக்களுக்குப் பட்டங்களும் வழங்கினார்.

மகமது பின் துக்ளக்கின் ஆட்சியைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள அவர் காலத்திய உத்தியோகஸ்தராகிய ஸியா உதீன் பார்னி எழுதிய சரித்திர நூல் நன்கு உதவுகின்றது. இவர் சுல்தானுக்குப்பின் பட்டமெய்திய பிரோஸ் ஷா காலத்தில் தம்முடைய நூலை எழுதினார். ஏறக்குறைய அவர் காலத்திலே வாழ்ந்த சில பாரசீக எழுத்தாளர்களின் நூல்களும் நமக்குக் கிடைத்துள்ளன. தாரிக்கி-பிரஸ் ஷாகி என்னும் நூல் ஷம்சி சிராஜ் என்பவரால் எழுதப்பட்டது. பட்டு ஹாத்-இ-பிரஸ் ஷாகி என்னும் நூல் பிரோஸ் ஷா சுல்தானின் சுய சரிதைக் குறிப்பு. இதை எழுதியவர் அபிப் (Afif). அயின் உல் முல்தானி என்பவர் எழுதிய நூல் முன்ஷாத்-இ-மாஹ்ரு என்பது. அமீர் குஸ்ராவ் எழுதியது துக்ளக் நாமா என்னும் நூல். யாஹியாபின் அஹமது ஸர்ஹிந்தி என்பார் இயற்றிய நூல் தா-ரிக்-இ-முபாரக் ஷாகி என்பது. இந்நூல் முந்திய நூல்களுக்குச் சற்று பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. இதிலும் நமக்குத் தேவையான பல சரித்திரச் செய்திகள் கிடைக்கின்றன. இந்தக்காலத்துச் சரித்திரத்தை நன்கு அறிந்து கொள்ளப் பயன்படும் மற்றொரு நூல் ஆப்ரிக்கப் பிரயாணி அபன்-பட்டுடா என்பவர் எழுதியதாகும். கி.பி. 1333 செப்டம்பர் மாதம் அவர் இந்தியாவிற்கு வந்தார். சுல்தான் அவரை அன்புடன் வரவேற்றார் ; டில்லியின் பிரதான காஜியாகவும் நியமித்தார். அவர் கி.பி. 1342-ல் சீனுவிற்குத் தூதனுக சுல்தானுல் அனுப்பப்படும்

Koviloor Academy

வரையில் அப்பதவியில் நீடித்திருந்தார். அவருடைய நூல் முழுவதும் ஒருதலைப் பட்சமற்ற செய்திகளே உள்ளன. சம்பவங்கள் தெளிவாகவும் திறமையாகவும் விவரிக்கப்பட்டுள்ளன. மகமது பின் துக்ளக் வெளியிட்ட காசுகளும் நமக்குப் பல செய்திகளை அறிய உதவியாக உள்ளன

மகமது பின் துக்ளக் தனிப்பட்ட சிறந்த குணங்கள் பொருந்தியவர். சரித்திரத்தில் அவர் எத்தகைய சிறப்பு வகித்தார் என்பது பற்றிக் கூறுவது கடினமாகும். அவர் ஒரு மேதையா? அல்லது பைத்தியமா ? உண்மை வாதியா ? அல்லது கனவு காண்பவரா ? இரத்த வெறி கொண்ட கொடியவரா? அல்லது இரக்கச் சித்தம் கொண்ட அரசரா ? மதப்பற்று அற்றவரா ? அல்லது உண்மையான முஸ்லிமா ? அக்காலத்து வாழ்ந்த அறிவாளிகளில் மிகவும் தலை சிறந்தவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவருடைய அறிவின் மேன்மையைப் பார்னியும் மற்றவர்களும் நன்கு பாராட்டியுள்ளனர். சிறந்த புத்திக்கூர்மையும் சிறந்த ஞாபக சக்தியும் கொண்டுள்ளதுடன் அவர் அறிவைப் பல துறைகளிலும் பெருக்கிக் கொள்ளும் ஆற்றலும் உடையவராக இருந்தார். தர்க்கம், வேதாந்தம், கணிதம், வானநூல், பௌதிக விஞ்ஞானம் ஆகிய இத்துறைகளில் மிகச் சிறந்து விளங்கினர். அவர் சிறந்த நடையில் எழுதும் ஆற்றல் பெற்றவர். கவிகள் இயற்றுவதிலும் சித்திர எழுத்துக்கள் எழுதிவதிலும் மிகத் தேர்ந்தவர். பாரசிகக் கவிகள் பல அவர் அறிந்திருந்தார். தம் முடைய கடிதங்களில் பாரசிகச் செய்யுள் பலவற்றை மேற்கோள்களாக அவர் எடுத்தாண்டுள்ளார். மருந்துகள் பற்றிய விஞ்ஞானத் துறையும் அவர் அறியாததன்று. அவர் பல மொழிகளிலும் அறிவு பெற்றிருந்தபடியால் அவரிடம் அவருக்குத் தெரிந்ததைப்பற்றி பேசும்போது அறிஞர்கள் ஆலோசித்தே நன்கு உரையாடுவர். அவர் மிக்க அநுபவம் படைத்த படைத் தலைவர். அவர் வென்ற போர்களோ பல. தோற்றவை மிகச்சில.

சுல்தானின் அந்தரங்க வாழ்க்கையும் நேர்மை நிறைந்ததாக உள்ளது. அக்காலத்து மன்னர்களிடம் காணப்பட்ட கெட்ட பழக்கங்கள் ஏதுமின்றி மிக எளிமையானதாக அவரது நடத்தை இருந்தது. மெச்சத்தக்க எளிமையும் தயாளமும் கொண்ட அவர் சிறந்த கொடையாளியாக விளங்கினர். வெகுமதிகளையும் வரையாது வழங்கினர். 'மக்களில் மிக்க எளியகுணம் உடையவர் என்றும், எது நீதியோ, எது நேர்மையோ அதை நாடியே செயலாற்றுபவராகவும் அவர் விளங்கினர்' என்று அபன் பட்டுடா கூறுகிறர். மேலும், 'அவருடைய குணங்களிலேயே சிறந்தது அவரது தயாளமே' என்று எழுதுகிறர். பார்னி, யாஹியாபின் அஹ்மது, ஸர்ஹிந்தி என்பவர்களும் இவர்களது கூற்றை ஆதாரமாகக்கொண்டு பதானி, நிஸாம்-

Koviloor Acadamy

உதீன் அஹமது, பெரிஷ்டா இவர்களும் சுல்தானைத் தவருக குற்றம் சாட்டியுள்ளனர். அவர் மத விரோதி என்றும், அறிஞர்களையும் நல்லோர்களையும் எழுத்தாளர்களையும், படைவீரர்களையும் கொலை புரிந்தார் என்று கூறுகின்றனர். அபன் பட்டுடா இவ்வாறு எழுதுகிருர்: 'இவர் மதக்கொள்கைகளைப் மெய்யன்புடன் பின்பற்றுகின்ருர், தாமே பிரார்த்தனை செய்கிருர்; இவைகளைச் செய்யத் தவறுகின்றவர்களைத் தண்டிக்கின்ருர்.' ஷாகிபுதீன் அஹ்மது, பத்ரிசா என்று அக்காலத்திய ஆசிரியர் இருவர் இக்கருத்தை ஒட்டிக் கூறியுள்ளனர். பெரிஷ்டாவும் இக்கருத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. மகமது பின் துக்ளக் செய்த முக்கிய தவறு யாதெனில் கிஸ்ஜிகளின் நிலையான கொள்கைகளைப் புறக்கணித்துவிட்டு அரசியல் அலுவல்களைத் தம் மனத்திற்குத் தம் அநுபவத்தால் தோன்றிய வழிகளின் படி செய்ததாகும்.

சுல்தானுக்குச் செயல்முறை அறிவும் உலகியல் அறிவும் இல்லை. நிறைவேற்றமுடியாத கற்பனைக் கொள்கைகளை நிறைவேற்ற முயன்ருர். கொள்கை அளவில் அவரது திட்டங்கள் சரியானவை. அவை அரசியல் தீர்க்கதரிசனம் உடையவை. ஆனல் செயல்முறையில் அவை நிறைவேற்ற முடியாதவை. அவற்றை நிறைவேற்ற முயன்றதில் முடிவாக நாட்டிற்குத் தீமையே ஏற்பட்டது. அரசருடைய குணங்களில் காணப்பட்ட சில குறைகளே இவற்றிற்குக் காரணம். மிக்க அவசரமும் முன்கோபமும் உடைய இவருக்குத் தாம் நினைத்தபடியே மற்றவரும் நடக்கவேண்டும் என்ற வீண் எண்ணம் உண்டு. எதிர்ப்பை இவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தம்முடைய திட்டங்கள் தவறி விடுகின்றன என்பதை உணரும்போது அரசர் அதற்காக மக்களைக் குற்றம்சாட்டி மிகவும் வன்மையாக நடந்தார். தோல்வி மேல் தோல்வி ஏற்படவே சுல்தான் நிதானம் இழந்தார். 'துன்பங்களுக்கு மேல் துன்பங்கள் தொடரவும் குழப்பங்கள் மேலும் குழம்பின'. பார்னியுடன் மன்னர் பேசும்போதும், 'நான் மக்களை எப்பொழுதும் சந்தேகக்கண் கொண்டுதான் பார்க்கிறேன். அவர்கள் துரோகமும் புரட்சியும் கொண்ட சிந்தையர் என்ற எண்ணமே என்னிடம் நிலைக்கின்றது. ஆகவே மிக அற்பமான பிழைக்கும் கூட நான் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கிறேன். நான் சாகும்வரையில் இவ்வாறுதான் செய்வேன் அல்லது மக்கள் நேர்வழியைப் பின்பற்றிப் புரட்சியையும் சதியையும் கைவிடவேண்டும். நான் இரத்தம் சிந்தக் கூடாது என்பதற்காகச் சட்டங்கள் இயற்றித்தர எனக்கு நல் அமைச்சனும் இல்லை. நான் மக்களைத் தண்டிக்கிறேன். ஏனெனில் அவர்கள் எல்லோரும் ஒரு சேர என் எதிரியாகி விட்டனர். நான் அவர்களுக்குப் பெருஞ் செல்வம் வழங்கியிருக்கிறேன். அவர்களோ நேசமும் விசுவாசமும் கொண்டவர்களாக இல்லை.'

Koviloor Acadamy

சுல்தானின் இத்தகைய செயல்களையும் அவருடைய சிறந்த குணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்த சில பிற்கால அறிஞர்கள் இவ்வரைப் பல 'எதிர்க்கொள்கைகளின் கலப்பு' என்கின்றனர். ஆனால் மற்றும் பலர் 'இவர் அத்தகைய வியப்பூட்டும் மாருட்டங்களின் கலவை அல்லர்' என்கின்றனர். அவர்மீது சுமத்தப் பட்ட 'இரத்த வெறியன், 'பைத்தியக்காரன்' என்பன எல்லாம் வீண் பழிகள் என்றும் இவை எப்பொழுதும் இவருடைய செயல்களைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கம் கொண்ட சில கீழ்த்தர அலுவலர்களின் வினை குற்றச்சாட்டுகளே என்றும் கூறுகின்றனர். சுல்தானின் குறைபாடுகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாம். ஆயினும் ஓர் அரசியல் வாதிக்கு வேண்டிய நுண்ணறிவு இவரிடம் இல்லை என்பதையும் மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்றபடி தம் கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் விவேகம் இல்லை என்பதையும் மறுப்பதற்கில்லை. துணிகரமான இவருடைய முற்போக்குத் திட்டங்கள் வரவேற்கப்பட வில்லை. ஏனெனில் இவைகளால் பெருந்துன்பங்கள் விளைந்தன. சுருங்கக் கூறுமிடத்து இவருக்கு மனித மனத் தன்மையை அறியும் ஆற்றல் மிகவும் குறைவு. தம் திட்டங்கள் எவ்வளவு சிறந்தவை யாயினும் மக்கள் சம்மதமின்றி அவற்றை அவர்கள்மேல் திணிக்க முடியாது என்பதையும், மக்களின் நலன்களைப் பாதிக்கும் அடக்கு முறைகள் மக்கள் மனத்தில் அதிருப்தியையே விளைக்கும் என்பதையும் இவர் உணரத் தவறிவிட்டார். இவரைப்பற்றிச் சரித்திர ஆசிரியர் ஸ்டான்லி லேன்பூர் இவ்வாறு கூறுகிறார்: 'எவ்வளவு நல்ல நோக்கங்கள் நிரம்பியவராக இருந்தாலும், எவ்வளவு மேலான கருத்துகள் கொண்டவராக இருந்தபோதிலும் பொறுமை நிதானம், பலன்களை உணரும் ஆற்றல் இவை இல்லாதபடியால் மகமது துக்ளக் ஆட்சி தோல்வியாகவே முடிந்தது.'

ஸ்பெயின் நாட்டு மன்னன் இரண்டாம் பிலிப்பு போன்று மகமது பின்துக்ளக் தம் ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே அரசியல் அலுவல்களைக் கவனமாகப் பரிசீலிக்க ஆரம்பித்தார். நிலவரி சம்பந்தமாகப் புதிய தஸ்தாவேஜு ஒன்றைப் பழைய முறையைப் பின்பற்றிப் பூர்த்தி செய்யும்படி கட்டளையிட்டார். இதனால் ரெவினியூ ஆட்சி சரிவர நடைபெற்றது. ஆனால் கங்கைக்கும் யமுனைக்கும் இடைப்பட்ட தோஆப் என்ற செழிப்பான பகுதியில் துர்ப்போதனையின் பேரில் புதியதொரு பணக்கொள்கையைக் கடைப்பிடித்தார். ஏற்கெனவே இருந்த நிலவரியை அங்கு அவர் அதிகமாக்கியதோடு பல புதிய வரிகளையும் விதித்தார். எவ்வளவு கூடுதலான வரி விதித்தார் என்று தீர்மானிப்பது முடி

Koviloor Acadamy

யாது. இது குறித்துப் பிற்கால முஸ்லீம் எழுத்தாளர்கள்[1] கூறும் விவரங்கள் தெளிவாக இல்லை. பல மாறுபாடுகளும் காணப்படுகின்றன. சில நவீன ஆசிரியர்கள் வரி கூடுதலாக விதிக்கப்படவில்லை என்றும் அலாவுதீன் காலத்தில் 50 சத விதம் உயர்ந்தது போன்று அவ்வளவு அதிகமாக அது உயரவில்லை என்றும் கூறுகின்றனர். சுல்தான் அதிக வரிகளை விதித்தது தோஆப் மக்களின் மீது தண்டனையாக விதிக்கப்பட்டதில்லை (எதிர்ப்பு மனப்பான்மையுடைய தோஆப் மக்களுக்கு எதிராக) என்றும், அல்லது கஜானாவை நிரப்பவேண்டும் என்பதற்காகவும் அன்று என்றும் அந்த எழுத்தாளர்கள் கருதுகின்றனர். பதானியும் தற்காலத்தில் ஸர் உல்ஸிலி ஹெய்க் என்பவரும் இது குறித்துக் கூறுகையில், அவ் வரியைக்கொண்டு அரசர் தன் படை பலத்தைப் பெருக்கவும் அரசாங்க முறையைச் செப்பனிட்டு அமைக்கவும் முற்பட்டார் என்று கூறுகின்றனர். எது எவ்வாறு இருப்பினும் புதிய வரி குறித்த அந்த நடவடிக்கை தோஆப் மக்களுக்குத் தாங்கொணுத் துன்பம் விளைத்தது என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. ஏற்கெனவே அம் மக்கள் கில்ஜிகள் காலத்திலிருந்தே அதிக வரிப் பளுவால் அவதியுற்று வந்துள்ளனர். அதோடு ஒரு கொடிய பஞ்சம் அப் பிரதேசத்தில் ஏற்பட்ட காலத்தில் இப்புதிய வரிகள் போடப்பட்டன. பஞ்சம் காரணமாக அரசாங்கம் வரிக் கொள்கையைத் தளர்த்தவில்லை. அதற்கு மாருகக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் அரசியல் அலுவலர்கள் வரிப்பணத்தை வசூலித்தனர். வருத்தப்பட்டு உழைக்கும் விவசாயிகளின் துன்பங்களை நீக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளையும் அரசினர் மேற்கொண்டனர். விவசாயிகளுக்கு முன் பணம் கடனுகக் கொடுத்தல், கிணறுகள் தோண்டுதல், பயிர் செய்யப்படாத நிலங்களை அரசாங்க மேற்பார்வையில் பயிர் செய்தல் போன்ற நிவாரண நடவடிக்கைகளைச் சுல்தான் மேற்கொண்டார். ஆயினும் அவை காலம் கடந்தவையாயின. பயிர்த்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. வறுமையால் பீடிக்கப்பட்ட தோஆப் விவசாயிகள் தங்கள் உடைமைகளை விட்டுவிட்டு வேறிடங்களுக்குச் சென்றனர். அவ்வாறு சென்ற குடியானவர்களை மீண்டும் தங்கள் நிலங்களுக்கு வரும்படி செய்ய, சுல்தான் கடுமையான தண்டனை முறைகளைக் கடுஞ்சினத்துடன் நிறைவேற்றினுர். இதனுல் துக்ளக் வமிசத்திற்குப் பெருங் கேடான விளைவுகள் ஏற்பட்டன.

[1] பார்னி (தாரிக்-இ-பிரஸ் ஷாகி பிப்லோஸித் இன்டியன் பக்கம் 473) இது பத்து அல்லது இருபது பங்கு அதிகம் என்று கூறுகிருர். இதை எலியட் தவருக மொழி பெயர்த்துள்ளார் (வால்யூம் III பக்கம் 182-3) அவர் இதை 10 அல்லது 5 சத விதம் என்கிருர். தாரிகி-இ-முபராக் ஷாகி (பக்கம் 103) படி இந்த உயர்வு இருபது மடங்காகும். இதோடு காரி (வீட்டு வரி)யும் சாராசி (மேய்ச்சல் வரி) யும் கூடப் போடப்பட்டது. பதானி (ராங்சிங் வால் 1 பக்கம் 305) எழுதுவதாவது : 'வரிகள் இரட்டிக்கப் பட்டன' என்பதாம்

Koviloor Academy

கி.பி. 1327-ல்[1] டில்லியிலிருந்து தேவகிரிக்குத் தலைநகரை மாற்ற வேண்டுமென்று சுல்தான் செய்த தீர்மானம் மற்றுமொரு தவருன செயலாகும். இதனுல் மக்களுக்கு விளைந்த துன்பத்திற்கு அளவே யில்லை. சில தற்கால ஆசிரியர் கருதுவது போன்று டில்லி மக்களைத் தண்டிக்க வேண்டுமென்று சுல்தான் செய்த ஒரு பரிசோதனை இது என்று கூறமுடியாது. ஆனுல் இதன் உள் நோக்கம் மிகவும் சிரிய தாகும். புதிய தலைநகரம் நாட்டின் மத்தியிலுள்ள ஒரு கேந்திர ஸ்தானம். அக்காலத்தில் மகமது பின் துக்ளக் இராச்சியம் தன் பரப்பில் தோவாப், வடக்கில் சிந்து நதிதீரமுதல் கூர்ச்சரக் கரை வரையுள்ள பிரதேசங்கள் அடங்கிய பஞ்சாப், லாகூர் சமவெளிகள், கிழக்கில் வங்காள மாகாணம் முழுவதும், மாளவம், மகோபா, உச்சயினி, தார், புதிதாகச் சேர்க்கப்பட்ட தக்காணம் இவைகளைக் கொண்டிருந்தது. இவ்வளவு பெரிய சாம்ராச்சியத்தை சுல்தான் கவனமாகப் பாதுகாக்க வேண்டியிருந்தது. 'இந்த நகரம் மைய நிலையில் இருந்தது' என்று பார்னி எழுதுகிருர். 'டில்லி, கூர்ச்சரம், லக்நாடி, சாட்கோன் சொனுர்கன், டெலாங், மாபார், துவாரசமுத்திரம், காம்பிலம் இவை ஒவ்வொன்றும் தேவகிரியினின்று சம தூரத்தில் இருந்தன. இவை ஒன்றுக்கொன்றுக்கிடையே உள்ள தூரத்தில் அதிக வித்தியாசமில்லை' என்றும் கூறுகிருர்.

மேலும் புதிய தலைநகரம் மங்கோலியப் படையெடுப்பிலிருந்து தப்பக்கூடியதாகவும் இருந்தது. ஆனுல் பழைய தலைநகரம் மங்கோலியப் படையெடுப்பினுல் அடிக்கடி அச்சுறுத்தப்பட்டு வந்தது. புதிய தலைநகரத்தைத் தம் உத்தியோகஸ்தர்களுக்கும் மக்களுக்கும் வசிப்பதற்கு ஏற்றதாகவும் செய்திருந்தார். வனப்பு மிக்க அழகிய கட்டிடங்கள் நிறைந்ததாக அந்நகரை மன்னர் கட்டியிருந்தார். அபன் பட்டுடா, ஷாஜஹான் அவையில் சரித்திர ஆசிரியராக இருந்த அப்துல் ஹமீது லகோரி இவர்களும் மற்றும் பதினேழாம் நூற்றுண்டில் வந்த ஐரோப்பியப் பிரயாணிகளும் அந்நகரின் வனப்பைப் பாராட்டியுள்ளனர். அங்கு வந்து குடியேறுபவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. அவர்களுடைய வசதிக்காக விசாலமான சாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. அதன் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்கள் பயிராக்கப்பட்டன. டில்லிக்கும் தௌலதபாதுக்கும் இடையில் ஒழுங்கான அஞ்சல் முறையும் ஏற்படுத்தப்பட்டது. 'அங்கு வந்து குடியேற வேண்டியவர்களுக்கு அவர் பிரயாணத்தின்போதும், வந்து சேர்ந்த பின்னரும் வேண்டிய எல்லா வசதிகளையும் மிக்க தாராளமாகச் சுல்தான் ஏற்பாடு செய்திருந்தார்' என்று பார்னிகூட எழுதியுள்ளார். இவைகளில் எல்லாம் சுல்தான் நியாயமாகவே நடந்துள்ளார்.

[1] டாக்டர் ஈஸ்வரி பிரசாத் இந்தத் தேதியை (குரான துருக்கியர் சரித்திரம் பக்கம் 82-3) அக்காலத்துக் கணக்குகளையும் நாணயங்களையும் ஒப்பிட்டு வர்ஜிதம் செய்துள்ளார்.

Koviloor Acadamy

ஆனால் டில்லி மக்கள் பழைய நம்பிக்கை காரணமாகத் தங்கள் சொந்த வீடுகளைவிட்டுப் போக முணுமுணுத்தனர். சென்ற கால நினைவுகளுடன் சம்பந்தப்பட்ட அவர்களுடைய பழைய இருப்பிடத்தை விட்டு நீங்க அவர்களுக்கு மனமில்லை. இதனால் மிக்க சினமடைந்த சுல்தான் தம் நற்குணங்களை யெல்லாம் மறந்தார். உடனே டில்லி மக்கள் யாவரும் ஒரே கூட்டமாகத் தங்கள் உடைமைகளுடன் தௌலதபாதுக்குச் செல்லும்படி கட்டளை யிட்டார். குருடனை ஒருவன் டில்லியிலிருந்து தேவகிரிக்கு இழுத்துச் செல்லப்பட்டான் என்றும் படுக்கையோடு படுக்கையாக இருந்த முடவன் ஒரு பல்லக்கில் வைத்து எடுத்துச்செல்லப்பட்டான் என்றும் அபன் பட்டுடா கூறுவதை நாம் நம்பவேண்டியதில்லை. மற்றும் வஞ்சப் புகழ்ச்சியாகப் பார்னி கூறும் பின்வரும் கூற்றையும் அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டாம். அவர் கூறுகிறார், 'டில்லிக் கட்டடங்கள், அரண்மனைகள் அல்லது நகர்ப்புறங்களில் ஒரு பூனையோ அல்லது நாயோ விட்டு வைக்கப்படவில்லை.' இந்தியாவின் மத்திய கால சரித்திர ஆசிரியர்கள் இம்மாதிரியாகக் கூறுவது மிகவும் சாதாரணமானது. நகரத்தை முற்றிலும் காலி செய்தல் அல்லது அழித்தல் என்பது எண்ணிப்பார்க்கவும் கூடாததாக உள்ளது. ஆனால் டில்லி மக்கள் பட்ட துன்பம் என்னவோ, நினைப்பதற்கும் அரியதாக இருந்தது. அவர்கள் 700 மைல் தொலைவைக் கடந்துசென்றனர். களைப்பினால் பாதிக்கப்பட்டுப் பலர் வழியிலேயே மாண்டனர். தௌலதபாது வந்து சேர்ந்தவர்களோ புதிய நாட்டில் இடம் பெயர்ந்த அகதிகளைப் போன்று ஏமாற்றத்தாலும் உடல்வலியாலும் மாண்டனர். சுல்தானின் தவறான திட்டத்தின் நாச விளைவுகள் இவ்வாறு இருந்தன. ஸ்டான்லி லேன்பூல் கூறுவதாவது 'தவறான பாதையில் செலுத்தப்பட்ட சக்திக்கு ஏற்ற ஞாபகச்சின்னம் தௌலபாத்.'

ஒருவாறு கடைசியில் தம் தவற்றை உணர்ந்துகொண்ட சுல்தான் மறுபடியும் தம் அரசாங்க அலுவலகத்தை டில்லிக்கு மாற்றி மக்களை மீண்டும் டில்லிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார். டில்லிக்குச் செல்வதற்கு உயிருடன் இருந்தவரோ ஒருசிலர். டில்லி தன் பண்டைய செழிப்பையும் பெருமிதத்தையும் இழந்து தவித்தது. இழந்த அதன் செழிப்பை நீண்டகாலமாகப் பெற முடியவில்லை. தம் ஆட்சிக்கு உட்பட்ட வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து அறிவாளிகளையும், பிரபுக்களையும், வியாபாரிகள், நிலக்கிழவர்கள் இவர்களை யெல்லாம் டில்லிக்கு வருமாறு செய்து அவர்களை அங்கு வாழும்படி செய்தார். அபன் பட்டுடா கி.பி. 1334-ல் டில்லி பாழாக இருந்ததையும் மற்றும் சில பகுதிகளில் அழிவுச் சின்னங்கள் விளங்கியதையும் கண்டார்.

Koviloor Academy

பண விஷயமாகவும் மகமது பின் துக்ளக் சில புதிய பரிசோதனைகளை நடத்தினர். எட்வார்ட் தாமஸ் இவரைப் 'பணச் சீர்திருத்த அரசன்' என்று கூறுகிறர். அவர் மேலும் எழுதுகிறர்: அவருடைய ஆட்சியில் அவர் செய்த செயல்களில் முதன்மையானது காசு முறையைத் திருத்தி அமைத்ததாகும். உலோக விலை உயர்விற்கு ஏற்பச் சிறிய காசுகளைத் திருத்தியமைத்தார். சில்லறை நாணயப் புழக்கத்திற்காகத் தக்க மதிப்பு கொண்ட புதிய சில்லறைக் காசுகளை வெளியிட்டார். 'தினர்' என்று அபன் பட்டுடாவினல் அழைக்கப்பட்ட 200 கிரெய்ன் எடையுள்ள புதிய பொற்காசு ஒன்றை சுல்தான் வெளியிட்டார். 175 கிரெய்ன் எடையுள்ள பழைய வெள்ளி, தங்கக் காசுகளுக்குப் பதிலாக 140 கிரெய்ன் எடையுள்ள அடாலி என்ற புதிய வெள்ளிக்காசு ஒன்றையும் அவர் வெளியிட்டார். வெள்ளியின் மதிப்போடு ஒப்பிடுகையில் தங்கத்தின் மதிப்புக் குறைவானது காரணமாக இந்த மாற்றத்தை அரசர் செய்தார். தக்காணப் படையெடுப்புகள் காரணமாக ஏராளமான அளவில் அவருடைய கஜானவில் தங்கம் குவிக்கப்பட்டது.

கி.பி. 1329-க்கும் 1330-க்கும் இடையில் அடையாளச் செம்பு நாணயங்களை வெளியிட்டது துக்ளக்கின் பரிசோதனைகள் யாவற்றிலும் மிக்க துணிச்சலானதாகும். இம்மாதிரி அடையாள நாணயங்களை இவருக்கு முன்னல் சீனவும் பாரசீகமும் வெளியிட்டிருந்தன. பதின்மூன்ரும் நூற்ருண்டின் முடிவில் சீனவின் மங்கோலியச் சக்கரவர்த்தியான குப்ளாய்கான் காகித நாணயங்களைச் சீனவில் வெளியிட்டார். கி.பி. 1294-ல் இதே முறையைப் பாரசீக மன்னர் கெய்காட்டு என்பவரும் கையாண்டார். நாணயப் பரிவர்த்தனை எல்லாவற்றிலும் செம்பு அடையாள நாணயங்கள் பொன் வெள்ளி நாணயங்களின் மதிப்பில் உபயோகிக்கப்பட வேண்டும் என்று ஓர் உத்தரவைத் துக்ளக் வெளியிட்டார். இந்த உத்தரவு இடுவதற்கு சுல்தானின் நோக்கம் யாதெனில் ஏற்கெனவே வறண்டுபோன தமது கஜானவை நிரப்புவதற்கும் தம் படையெடுப்புகள், அரசியல் நிர்வாகம் இவற்றிற்கான பொருள் வருவாயை அதிகரிக்கவுமேயாகும். ஆகவே அவர் மக்களை ஏமாற்ற இத்தகைய திட்டம் அல்லது தந்திரம் கொண்டிருந்தார் என்று அவரைக் குற்றம் சாட்ட முடியாது.

மிக்க கவனமாகத் திட்டமிடப்பட்டுச் செய்த இந்த நடவடிக்கை இருவித காரணங்களால் தோற்றுப் போயிற்று. முதலாவதாக அடையாள நாணயம் என்பது காலத்திற்கு முந்திய ஒரு செயல். அதன் தன்மையை மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டாவதாகச் செப்பு நாணயங்கள் வெளியிடுவதை அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகச் சுல்தான் செய்யவில்லை. கள்ள நாணயம் வெளியிடு

Koviloor Acadamy

வோர்மீது நடவடிக்கை எடுக்கவும் அவர் தவறி விட்டார். தாமஸ் கூறுகின்றபடி 'அரசாங்க நாணயச்சாலையில் உருவாக்கப்படும் நாணயங்களைச் சுமாரானகைத்திறன் உடைய தொழிலாளிகள் தயாரிக்கும் நாணயங்களின்று வேறுபடுத்தி அறிய ஏற்றபடி அரசாங்க நாணயங்களைத் தனித் தன்மையுடன் தயாரிக்கும் யந்திரமும் இல்லை.' காகித நாணயங்களைப் பிறர் அச்சிடமுடியாதபடி சீனுவில் முன் ஏற்பாட்டு முறைகள் செய்யப்பட்டன. ஆனால் இங்கு உண்மைச் செம்பு நாணயங்களுக்கும் போலி நாணயங்களுக்கும் வேறுபாடு கண்டறிய வகையில்லாதபடியால் கள்ள நாணய உற்பத்தி கட்டுக் கடங்கால் போயிற்று. இதனால் போலி நாணயங்களின் புழக்கம் அதிக அளவில் ஏற்பட்டது. 'இந்தப் புதிய நாணயமுறை உத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன் இந்துக்களின் வீடுகள் ஒவ்வொன்றும் நாணய சாலைகளாக மாறின. வெவ்வேறு மாகாணங்களில் உள்ள இந்துக்கள் இலட்சக் கணக்காகவும் கோடிக் கணக்காகவும் செப்பு நாணயங்களை அச்சிட்டனர். இந்த நாணயங்களைக்கொண்டு தங்கள் கப்பப் பணத்தைக் கட்டினர். இவைகளைக் கொண்டே அவர்கள் குதிரைகளும் ஆயுதங்களும் மற்றும் பல நேர்த்தியான பண்டங்களும் வாங்கினர். கிராமத் தலைவர்கள், நிலச் சொந்தக்காரர்கள் ஆகியோர் இந்தச் செப்பு நாணயங்களைப் பயன் படுத்திப் பணக்காரர் ஆயினர். ஆனால் அரசாங்கம் வறுமையுற்றது. இராச்சியத்தின் எப்பகுதியில் சுல்தானின் உத்தரவு பயத்துடன் பின் பற்றப்பட்டதோ, அங்கெல்லாம் தங்க 'டங்கா' நாணயங்களின் மதிப்பு நூறு (செப்பு) டங்கா நாணயங்களாக உயர்ந்தது. ஒவ்வொரு பொற் கொல்லரும் தம் பட்டடையில் செப்பு நாணயங்களை அச்சடித்ததால் அரசாங்க கஜானு விரைவில் இச்செப்பு நாணயங்களால் நிரம்பியது. செப்பு நாணயங்களின் மதிப்பு மிகவும் குறைந்துபோய் அவைகள் கூழாங்கற்களுக்குச் சமமாகக் கருதப்பட்டன. பழைய நாணயம் கிடைப்பது அரிதாயிற்று: ஆகையால் அது நான்கு மடங்கு அல்லது ஐந்து மடங்காக மதிப்பில் உயர்ந்தது' என்று பார்னி கூறுகிறார். இவைகளால் வாணிகமும் கைத்தொழிலும் மிகவும் பாதிக்கப்பட்டன. எங்கும் குழப்பம் மண்டிற்று. புதிய நாணயமுறையைப் புகுத்தி நான்கு ஆண்டுக்காலமாவதற்குள்ளாகச் சுல்தான் தமது தவற்றை உணர்ந்து தமது உத்தரவை ரத்து செய்தார். தம் கஜானுவிற்குக் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு செப்பு நாணயத்திற்கும் அதன் முக மதிப்பிற்குச் சமமான பொன், வெள்ளிக் காசுகளைக் கொடுத்தார். இவ்வாறு நாட்டின் பொதுப்பணம் அரசாங்கத்தின் எந்த நன்மைக்கும் பயன் படாமல் வீணுக அழிந்தது. டில்லிக்குக் கொண்டுவரப்பட்ட செப்பு நாணயங்களுக்கு அளவே இல்லை. துக்ளகபாதில் எங்குப் பார்த்தாலும் இந்த நாணயங்கள் குவியல் குவியல்களாகக் காணப்பட்டன. ஒரு நூற்றுண்டிற்குப் பின் இரண்டாம் முபாரக் ஷா ஆட்சியில் கூட இந்த நாணயக்கும்பல்கள் காணப்பட்டன.

Koviloor Acadamy

துக்ளக் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுப்படை யெடுப்பு அபாயம் முற்றிலும் இல்லாதிருக்கவில்லை. கி.பி. 1328-1329-ல் டிரான் சாக்ஸோனியாவைச் சேர்ந்த சகாட்டைத் தலைவன் தார்மஷ்ரின் கான் இந்தியாவின்மீது படையெடுத்தான். அவன் பஞ்சாப் சமவெளிகளைச் சூறையாடியபின் டில்லிக் கருகில் வந்தான். டில்லியிலிருந்து தலைநகர் மாற்றப்பட்டிருந்ததும், வடமேற்கு எல்லைப்பாதுகாப்பிற்கு டில்லி அரசர்கள் தக்க ஏற்பாடுகள் செய்யாதிருந்ததும் இவனுக்கு இவன் பேராசைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பை அளித்தன. முகமது பின் துக்ளக் இவனைத் தோற்கடித்து நாட்டை விட்டு விரட்டியடித்ததாக யாஹியாபின் அஹ்மது, பதானி இவர்கள் கூறுகின்றனர். ஆனால் பெரிஷ்டா வேறு விதமாகக் கூறுகிறார். 'தம் நாட்டின் விலையாக ஏராளமான பொன்னையும் அணிகலன்களையும் காணிக்கையாகக் கொடுத்துப் படையெடுத்தவனைப் போகச் செய்தார்' என்று கூறுகிறார். எது எப்படியிருப்பினும் அந்தப்படை யெடுப்பு ஒரு கொள்ளையாகத்தான் முடிந்தது. எவ்வளவு விரைவாக வந்தானோ அவ்வளவு விரைவாகவே தார்மஷ்ரின் திரும்பிச் சென்றான்.

அலாவுதீனைப்போன்று உலகத்தை எல்லாம் வெற்றிகொள்ள வேண்டுமென்ற பெரியதொரு எண்ணத்தை மகமது துக்ளக் கொண்டிருந்தார். சுல்தானின் தாராளமான மனப்போக்கில் ஆசைகொண்டும் தங்கள் சுய நல நோக்கத்துடனும் சில குராசனி (Khurasani) பிரமுகர்கள் இவரிடம் பணிபுரியும்படி டில்லி வந்திருந்தனர். இவர்கள் சுல்தான் ஆட்சி ஆரம்பத்திலேயே குராஸன், இராக் இவைகளை வெற்றிகாணவேண்டு மென்று ஒரு பேராசைத் திட்டத்தை வகுத்திருந்தனர். இதற்காக ஒரு பெரிய படை திரட்டப்பட்டது. 370,000 வீரர் இதற்காகத் திவானி-இ-ஆர்ஸ் என்னும் படைக் கணக்குப் பட்டியலில் சேர்க்கப்பட்டு ஓராண்டுக் காலமாக அரசாங்கத்தால் பணமும் கொடுக்கப்பட்டு வந்தனர் என்று பார்னி கூறுகிறார். குராஸன் குழப்பமான நிலையில் அப்பொழுதிருந்தது என்பது உண்மையே. அப்பொழுது அது அபு சேத் என்னும் மன்னரால் ஆளப்பட்டுவந்தது. அத்தகைய நிலையில் அதைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைப்பது எந்த வெளி நாட்டுப் படையினரும் எண்ணக்கூடியதே. ஆனால் டில்லி சுல்தான் அதை வெற்றிகாண்பது என்பது சாத்திய மற்ற வேலையாகும். டில்லியின் ஆட்சி அதன் உள் நாட்டிலேயே ஸ்திரமாக அமைய வில்லை. தக்காணத்தில் அதன் ஆதிக்கம் ஏற்படவில்லை. பூகோள ரீதியில் நோக்கினாலும் போக்கு வரவு வசதிக்குறைவு இருப்பதையும் அதைக்குறைவாக எண்ணவும் முடியாது என்பதும் விளங்கும். ஹிந்துகுஷ், அல்லது இமயமலைக் கணவாய்கள் மூலமாகப் பெரிய படையை நடத்திச் செல்வதும் தொலைதூரத்து நாட்டில் அதற்கான உணவு மற்றும் பிறவசதிகளைத்தேடுவதும் பூதாகாரமான சாதனைகளாகும். டில்லிப் போர்வீரர்கள் இதுகாறும் தங்களுக்குள் பிளவு

Koviloor Acadamy

பட்டு வலுவிழந்திருந்த இந்தியப் படையினரை வெற்றிகண்டனர். அவர்கள் மத்திய ஆசியா முரட்டுச் சாதியினரிடம் தங்கள் வலிமையை எந்த அளவில் காட்டக் கூடும் என்பது பற்றியும் நன்கு சிந்திக்க வேண்டியிருந்தது. சாகாட்டைத் தலைவன் தார்மாஷ்ரின்கானும் எகிப்திய சுல்தானும் பிளவுபட்ட பரரசீகத்தின் கிழக்கு மேற்கு எல்லைப் பிரதேசங்களைக் கவர்வதில் நாட்டமுடைய வராயிருந்தனர். அவர்கள் டில்லி சுல்தானிடம் போலி நட்புக் கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் இந்த நீண்ட படையெடுப்பில் சுல்தானுக்கு உதவுவதை விடத் தங்கள் சுய நலத்திற்கானவற்றைச் செய்யவே விரும்பினர். இக்காரணங்களால் டில்லி சுல்தானின் இப்படை யெடுப்பு மிகவும் அரசியல் விவேகமற்ற செயல் என்பது எப்படிப் பார்த்தாலும் வெட்ட வெளிச்சமாகத் தோன்றியது. பணமுடை காரணமாக அது கைவிடப் பட வேண்டியதாயிற்று. 'ஆசையுடன் அடைய விரும்பிய நாடுகளை அடைய முடியவில்லை... ஆனால் ஆட்சியின் ஆணிவேரான பொருள் மட்டும் வீணாகச் செலவாயிற்று' என்று பார்னி எழுதுகிறார்.

திபேத்தையும் சைனாவையும் வெற்றிகாண வேண்டுமென்றதொரு பேராசை நோக்கத்தைத் துக்ளக் என்றும் தன் மனத்தில் கொண்டதில்லை. ஆனால் அவர் காலத்து உத்தியோகஸ்தர் பார்னி, மற்றும் அபன் பட்டுடா இவர்கள் இருவரும் துக்ளக் 'காரஜால்' மலையைப் பிடிக்கத் திட்டம் போட்டிருந்தார் என்பது பற்றித் தெளிவாகக் குறிப் பிடுகின்றனர். இந்த மலை ஹிந்து (இந்தியா) சீனா நாட்டுப் பிரதேசங் களுக்கு இடையில் அமைந்துள்ளது.' நிச்சயமாக இப்படை யெடுப்பு கௌமன் கார்வால் பிரதேசத்தில் இருந்த சில புரட்சிக்காரக் கூட்டத் தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. அவர்களை வென்றடக்கி அவர்களின் பிரதேசத்தை டில்லி ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டு மென்ற நோக்கம் இருந்தது. கி.பி. 1337-1338-ல் தலை சிறந்த ஒரு தளபதியின் தலைமையில் டில்லியிலிருந்து பெரியதொரு படை அனுப்பப்பட்டது.

முதலில் சில வெற்றிகள் ஏற்பட்டாலும் பூகோள சாதகமற்ற நிலை காரணமாக டில்லிப் படைகள் சொல்லொணாத் துன்பமுற்றன. அது சமயம் மழைக்காலமும் ஆரம்பித்தது. உணவுப் பற்றாக்குறையும் சேர்ந்து கொண்டது. இப்படையினரில் ஒரு சிலரே (பார்னி கணக்குப் படி பத்துப் பேர், அபன் பட்டுடா கணக்குப்படி மூவர்) தப்பி வந்து அந்தப் படையெடுப்பின் துக்க முடிவைப் பற்றிக் கூறினர். ஆனால் படையெடுப்பின் உடனடி நோக்கம் நிறைவேறியது. அந்த மலைச்சாதி யினர் டில்லி அரசுடன் ஓர் உடன்பாட்டிற்கு வந்து கப்பம் கட்ட ஒப்புக் கொண்டனர்.

Koviloor Academy

மகமது பின் துக்ளக்கின் பேராசை பிடித்த திட்டங்களின் கூட்டு விளைவு அவருக்கு மிகக் கெடுதலாக முடிந்தது. அவருடைய நாட்டு மக்களுக்கு அவை மிக்க துன்பத்தை விளைத்தன. அதோடு கூட அம்மக்கள் கொடிய பஞ்சத்தாலும் பிடிக்கப்பட்டனர். இவைகளால் மக்கள் தங்கள் பொறுமையை இழக்கும்படி நேரிட்டது. மக்களிடை தோன்றிய அதிருப்தி சுல்தானின் ஆட்சிக் கெதிரான பல கலகங்க ளாக முளைத்தன. ஆட்சிக் காலம் முழுவதும் எங்குப் பார்த்தாலும் கலகங்கள் தோன்றின. அவை கொடுமையிலும் தீவிரத்திலும் அதி கரித்தன. இக்கலகங்கள் சுல்தானின் கௌரவத்தையும் அதிகாரத் தையும் ஆட்டங்காணுமாறு செய்து அவரது பெரிய சாம்ராச்சியம் சிதறுண்டு போவதைத் துரிதப்படுத்தின.

முதலில் எழுந்த இருகலகங்கள் மிக எளிதாக அடக்கப்பட்டன. கலகக்காரர்களுக்குப் படிப்பினையான தண்டனைகள் வழங்கப்பட்டன. கியாஸ் உதீன் சகோதரியின் மகனை பகா-உதீன் குர்ஷாஸ்ப் என்ப வன் சாகரின் (Sagar) மானியதாராக இருந்தான். அது தக்காணத் தில் ஷோலாப்பூருக்குப் பத்து மைல் வடக்கில் உள்ளது. அவன் சுல் தானின் ஆட்சிக்குக் கிழ்ப்படிய மறுத்து கி.பி. 1326-1327-ல் அவருக்கு எதிராகக் கலகம் செய்தான். அவன் அரசரது படையின ரால் சிறைபிடிக்கப்பெற்று, டெல்லிக்கு அனுப்பப்பட்டான். அவனது தோலுரிக்கப்பட்ட உடல் நகர் முழுவதும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அரசனுக் கெதிராகச் சதிசெய்வோர், இவ்வாறு உயிரிழக்க நேரும் என்னும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இதைவிடப் பெரியதோர் கிளர்ச்சி தோன்றியது. பஹ்ரம் அய்பா அல்லது கிஷ்லுகான் எனப் பெயர் பெற்ற உச், சிந்து, மூல் தான் ஆகிய பகுதிகளின் தலைவன், இக்கிளர்ச்சிக்கு முக்கிய காரண மாக விளங்கினன். அப்போது தேவகிரியிலிருந்த முகமது-பின் துக்ளக், டெல்லி வழியாக மூல்தானை அடைந்து எதிரியை 'அபுஹார்'[1] என்னுமிடத்தில் முறியடித்தார். மூல்தானிய மக்கள் யாவரையும் கொன்று குவிக்க எண்ணிய சுல்தானை, சாது ருக்குன்டின் அவ்வாறு செய்வதினின்றும் தடுத்தான். பஹ்ராம் கைது செய்யப்பட்டுக் கொலை யுண்டான். பிற மக்களுக்குப் படிப்பினையாக, பஹ்ராமின் தலை துண்டிக்கப்பட்டு, மூல்தான்நகர்த் தலைவாயிலில் தொங்கவிடப்பட்டது.

இவ்விரு கலகங்களும் அடக்கப்பட்டன வெனினும், சுல்தானின் நிலையை அவை எவ்வகையிலும் வலுப்படுத்தவில்லை. உண்மையில் கி.பி. 1335ஆம் ஆண்டிலிருந்து, சுல்தானின் மதிப்புக் குறைந்து,

[1] தற்போது தெற்குப் பஞ்சாப் இரயில் பாதையில் பிரோஸ்பூர் மாவட்டத்தி லுள்ள பஹாவ்கா தஞ்சில் என்னுமிடத்திலுள்ளது. இவ்விடத்தைப்பற்றிய முழு விவரங்களுக்கு மேஜர் ராவர்த்தியின் (Raverty) Mihran of Sind and its Tributaries என்னும் நூலைப்பார்க்கவும் (J.A.S.B. 1892 Vol. I)

Koviloor Acadamy

இந்துத்தலைவர்களும், முஸ்லிம் பிரபுக்களும் வெளிப்படையாக அவரை அசட்டை செய்ததோடு, தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டவும் உறுதி கொண்டனர். வட இந்தியப்பகுதியில் சுல்தானின் முழுக் கவனமுமிருந்ததைப் பயன்படுத்தி மாவாரின் கவர்னர் ஜலால் உடீன் ஹசன் ஷா, கி.பி. 1335-ல்[1] தன்னைச் சுதந்திர அரசனுகப் பிரகடனம்செய்து கொண்டு, தன் பெயரால் நாணயங்களை அச்சிட்டு வெளியிடவும் துணிந்தான். இதையறிந்த சுல்தான் அவனுக் கெதிராகப் படை நடத்திச் சென்று வாரங்கலை அடைந்தார். அங்குப் படையினர் சீத பேதியால் வருந்த நேர்ந்தது. எனவே, சுல்தான் தௌலதாபாத்திற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. இவ்வாறு, மதுரையில் முளைத்த சுதந்திர முஸ்லிம் அரசு கி.பி. 1377-1378 வரையிலும் வாழ்ந்து, விஜயநகரப் பேரரசின் வலிமை முன் ஆற்ருது அடிபணிய நேரிட்டது. கர்ணபரம்பரைச் செய்திக் கொப்ப, கி.பி. 1336ஆம் ஆண்டில், விஜயநகரம் உருப்பெற்ற தெனலாம்.

வட திக்கில், வங்காள கவர்னர் பக்கீர்-உதீன் முபாரக்-ஷா, கி.பி. 1338ஆம் ஆண்டில், டெல்லி ஆட்சியை உதறியடித்துத் தம் பெயரால் நாணயங்களையும் வெளியிடத் தலைப்பட்டார். வங்காளம் என்றும் டெல்லி ஆட்சியை விரும்பி ஏற்றதில்லை. பல பிரச்சினைகளால் சூழப்பெற்ற சுல்தானுக்கு, வங்காளக் கவர்னரைத் தண்டிக்கும் வாய்ப்பில்லாது போயிற்று. வங்காளமும் தனியுரிமை பெற்ற நாடாயிற்று. சாம்ராச்சியத்தின் பல பகுதிகளிலும், ஒன்றன் பின் ஒன்ருகப் பல கிளர்ச்சிகள் தோன்றலாயின. இவைகளில் மிகவும் பயங்கரமான கிளர்ச்சியைக் கி.பி. 1340-41-ல் சவ்ராபாத், அயோத்தி மாகாணங்களின் கவர்னர் ஐன்-உல்-முல்க் தொடங்கினுன். உண்மையில், இவையாவும் கி.பி. 1342ஆம் ஆண்டு இறுதியில் நசுக்கப்பட்டன. என்ருலும் நாட்டின் செல்வம் சீர் குலைந்ததோடு, சுல்தானின் மனத்தளர்ச்சியையும் வளர்த்தன.

சிறுகச் சிறுக வலிமை குன்றி வாழ்க்கை நடத்திய சுல்தான் இழந்த பெருமையை மீண்டும் பெறும் ஆசையுடன், எகிப்தின் காலிபு அப்பாசிட்டின் அரவணைப்பில் ஒதுங்க எண்ணங்கொண்டார். அவரது ஆசை நிறைவேறியது. காலிபின் நன் மதிப்பைப் பெற்றதும், நாணயங்களிலும், பிரார்த்தனைச் சுலோகங்களிலும், தனது பெயருக்குப் பதிலாகக் காலிபின் பெயரையே உபயோகிக்கத் தொடங்கினுன். சுல்தானிடம் நம்பிக்கையிழந்து நின்ற மக்களின் உள்ளத்தில் இம் மாற்று வித்தையால் எவ்வித புத்துணர்ச்சியும் ஏற்படாதொழிந்

[1] டாக்டர்E. ஹல்ட்ச் (Hultzsch) என்பவர், நாணயச் சான்றுகளினடிப்படையில் இந்நாளைக் குறிப்பர். 'மதுரைச் சுல்தானின் நாணயங்கள்' என்னும் அவரது கட்டுரையைப் பார்க்க. (J.R.A.S. 1909)

Koviloor Acadamy

தது. சுல்தானின் அரசுரிமையைக் குடிமகன் எவனும் எதிர்த்த தில்லை. அவரது ஆட்சிமுறையையே மக்கள் வெறுத்தனர்.

பகுதி ஒவ்வொன்றிலும் அரசு நிலை ஆட்டங்கண்டு வந்தது. தெலிங்கானாவில் ப்ரோலயநாயகனும், அவனுக்குப்பின் அவன் மருமகன் காபயநாயகனும், இஸ்லாமிய ஆட்சிக்கெதிராக இந்துக் கிளர்ச்சியொன்றை ஊக்குவித்தனர். ஹொய்சள மன்னன் மூன்ரும் வீரபல்லாலனும் இதற்கு உடந்தையாக இருந்தான். கிருஷ்ண நதிக் கரையிலும் இதே போன்றதொரு கலகம் உண்டாயிற்று. விஜயநகரப் பேரரசின் எழுச்சியும், தக்காணத்தில் பல இந்து ராஜ்யங்களின் எழுச்சியும், இதன் இறுதி விளைவுகளாக விளங்கின. 'முதியோரை' (அமிரான். இ. ஸதா) சுல்தான் சிரச் சேதம் செய்ததால், பலர் அவரை வெறுக்கத் தொடங்கிக் 'கிளர்ச்சிமேல் கிளர்ச்சியாகத்' தொடர்ந்து நடை பெறலாயிற்று. அந்நிய அமீர்கள் தேவகிரியில் கலகம் செய்து பாமனி ராச்சியத்தை ஏற்படுத்திக் கொண்டனர். 1347ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் அலாவுதீன்-பாமன்-ஷா என்பவன் பாமினி நாட்டிற்கு வித்திட்டான். ஒரு பகுதியில் தொடங்கும் கலகத்தை அடக்க முற்படும்போது, பிறிதொரு பகுதியில் கலகம் முளைத்து, நாளடைவில் அடக்க வொண்ணு நிலையேற்பட்டது. கலகக்காரரைத் துரத்திச் செல்லும்போது சிந்து மாகாணத்தில் தட்டா என்னுமிடத்தில் கி.பி. 1351ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், இருபதாம் தேதி, சுல்தான் உயிரிழக்க நேரிட்டது. 'இவ்வாறு, மக்களிடமிருந்து மன்னனும், மன்னனிடமிருந்து மக்களும் முறையே விடுதலை பெற்றனர்' எனப் பதௌனி குறிப்பிடுகிருர். நிலையற்ற எண்ணங்களைச் செயல்படுத்தும் வகையறியாத, இச் சுல்தானின் அரசு, பரிதாபமான முடிவெய்தியது. இச்சோக முடிவின் விளைவாகச் சிதறிய பேரரசினின்றும் இருபத்து மூன்று சிறு பகுதிகள் தோன்றின. இச் சோக முடிவின் சிற்பி சுல்தானே யென்பதில் ஐய மெதுவுமில்லை. சிறந்த அறிவும், தளரா உழைப்பும் பெற்றிருந்தபோதும், நிர்வாகத் திறமையற்றிருந்த சுல்தானின், அவிவேக முறைகளும், தேவையற்ற கடுமையும், மக்கள் குரலை மதியாது செயலாற்றும் மனப்பாங்கும், பேராசைப் படுகுழியில் வீழ்த்தின.

3. பிரோஸ்-ஷா (ரஜாபின் மகன்)

தட்டாவிலேற்பட்ட மகமது-பின்-துக்ளக்கின் திடீர் மரணம், படையினருள் பெருங்குழப்பத்தை யுண்டாக்கியது. படையினருடன் பெண்டிரும் குழந்தைகளுமிருந்தது முன்னரே குழப்பத்திற்குக் காரணமாயிருந்தது. மங்கோலியக் கூலிப்படையினரும், சிந்து நாட்டுச்சதிகாரரும், கொள்ளையும், கொலையும் புரிந்தனர். இக்குழப்ப நிலை இரண்டு நாட்களுக்கு நீடித்தது. அந்நிலையால், பிரபுக்கள் கூடி.

Koviloor Acadamy

ஆட்சியை ஏற்று நாட்டைக் காப்பாற்றுமாறு பிரோஸ் என்பவனை வேண்டினர். அவன் உண்மையில் அரசில் விருப்பமுள்ளவனுயினும் சற்றும் பற்றற்றவன் போல் நடித்து, இறுதியில், நாற்பத்து ஆருவது வயதில், 1351ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ஆம் தேதியன்று அரசுகட்டிலேறினுன். படையினரை அடக்கிக் குழப்பத்தை வேரறுத்து, டெல்லியை நோக்கிப் புறப்பட்டான். சிந்துவை விட்டு வெளியேறியதும், இறந்துபட்ட சுல்தானின் திவான் குவாஜா-இ-ஜஹான் என்பவன், சிறுவனெருவனை பின் துக்ளக்கின் வாரிசெனப் பறைசாற்றி, அரசேறச் செய்த விபரமறிந்தான். பிரோஸிற்கு, இது ஒரு பெருஞ்சோதனைக் காலமாயிருந்தது. மூல்தானையடைந்ததும், பிரபுக்களையும், இஸ்லாமிய சாத்திர வல்லுநர்களையும் அவன் கலந்தாலோசித்தான். மகமது பின்-துக்ளக்கிற்கு வாரிசாக, மக்களெவரும் இல்லை எனப் பிரபுக்கள் முடிவு கட்டினர். சிறுவனின் அரசுரிமை செல்லாதென நீதிவல்லுநரும் கூறினர். சட்டரீதியாக இவ்வரசேற்றம் ஆராயப்படவில்லை. இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கேற்ப இறைமை, வாரிசுரிமைக்கு ஏற்றதோர் பொருளல்ல; எனவே அரசேற்றத்திற்குரிய உரிமைப்பிரச்சினை எழுவதற்கு வழியேதுமில்லை. சிறுவனின்கட்சி பலவீனமடைந்தது. குவாஜா-இ-ஜஹான் பிரோஸிற்கு அடிபணிந்தான். அவனை மன்னித்து, சாமானு என்னும் பகுதியையும் அவனுக்களித்து, இறுதி நாட்களை மன அமைதியோடு கழிப்பதற்கு பிரோஸ் வகைசெய்தான். ஆயினும், சமானுவை அடைவதற்குமுன் குவாஜா கொலையுண்டான். சூனும், சமானு ஆகிய பகுதிகளின் தலைவன் ஷேர்கான் என்பவனின் தூண்டுதலின் பேரில், பிரபுக்களும், படைத்தலைவரும் சதிசெய்து, இக்கொலைக்கு ஏற்பாடு செய்தனர். இச்சம்பவம் பிரோஸிற்கு வருத்தமளித்தது. குற்றமற்றதோர் அரசாங்க ஊழியன், பிரபுக்கள் படைத்தலைவர் ஆகியோரின் பொருமைக்குப் பலியான செய்தி, சுல்தானுக்கு, மனக்கிலேசத்தையே உண்டு பண்ணிற்று.

பிரோஸ் அரசேற்ற முறையைக்குறித்து, பலத்த விவாதங்களும், கருத்து வேற்றுமைகளும் உண்டு. கியாஸ் உடீனின் உடன்பிறந்தோன் ரஜாப் என்பவனுக்கும் அவன் மனைவி அபுஹார் அரசன் ராணு மாலின் மகள் ரஜபுத்திர பட்டி இளவரசிக்கும் பிறந்தவன். கியாஸ்-உடீன் துக்ளக், மகமது பின் துக்ளக் ஆகியோரிடம் பிரோஸ் அரசியல் பயிற்சிபெற்ருன். மகமது பின் துக்ளக், பிரோஸைத் தம் வாரிசாக வரித்து, எழுதி வைத்துச் சென்ருர் எனப் பார்னி என்னும் ஆசிரியர் உரைப்பர். சர் உல்சிலி ஹெய்க் என்பார் இக் கருத்தை மறுப்பர். குவாஜா-இ-ஜஹான் அரசேற்றிய இளவல், உண்மையில் முகமது பின் துக்ளக்கின் மகன் என்பது ஹெய்கின் திட்டமான கருத்தென விளங்கும். உல்சிலி ஹெய்கின் இக்கருத்தை அறிஞர் பலர் ஏற்பதில்லை.

Koviloor Academy

இது எவ்வாறாக இருப்பினும், பிரபுக்களும், மௌல்விகளும், தேவையைப் பொறுத்துப் பிரோஸைத் தேர்ந்தனர் எனக் கொள்வது மிகவும் பொருந்தும். பிறப்புரிமைபெற்ற மகனிருந்தும், சின்னாட்களாக வழக்கொழிந்து மறைந்திருந்த, தேர்வுமுறைக்கு ஏற்றம் கிடைத்ததை விளக்குவதாக இச்சம்பவத்தை ஆராய்ச்சியாளர் சிலர் கொள்ளுவர். உறவைக்காட்டிலும், தகுதியே அரச பதவிக்குத் தேவையாக இருந்தது.

சிக்கலான பிரச்சினைகள் பிரோஸை எதிர் நோக்கியிருந்தன. வலிவிழந்தும், கௌரவமற்றுமிருந்த, டில்லி அரசைச் சீர்திருத்துவதும், முன்னோர் ஆட்சியில், சிறுகச் சிறுக இழந்துவிட்ட மதிப்பை மீண்டும் பெறுவதும் தலையாய பிரச்சினைகளாக விளங்கின. இவைகளைச் செய்து முடிக்கும் ஆற்றல் பிரோஸிற்கில்லை. தலைவனுக்குரிய குணாதிசயங்கள் எதையும் பெறாத அவன், வலிமையற்றவனாகவும், முயற்சிகளில் ஊக்கமற்றவனாகவும் விளங்கி வந்தான். பேரரசின் இழந்த பகுதிகளைப் பெறுவதற்கு அவன் முயலவில்லை. அவனது இராணுவப் படையெடுப்புகள் யாவும் வீண் முயற்சிகளாயின. போரில் வெற்றி காணும் வாய்ப்புகள் கிட்டும்போதும், இனத்தாரைக் கொன்று குவிப்பதில் விருப்பமில்லாது, முயற்சியைக் கைவிடும் பழக்கம் அவனிடமுண்டு. தாமஸ் என்பவர் கூறுவது போல:—'வங்காளத்தில் அவன் மேற்கொண்ட இரு முற்றுகைகளிலும், பின் தட்டாவை வெற்றிகண்டதிலும், சுல்தானின் திறமையின்மை வெளிப்பட்டது; கட்ச் பாலைவனத்தில் அவனடைந்த ஏமாற்றமும், ஜாஜ் நகரில் அவனுக்குக் கிடைத்த அனுபவமும் சுல்தானின் மடமையை வெளிப்படுத்தும் தக்க சான்றுகளாக விளங்குகின்றன.'

வங்காள சுதந்திர மன்னன் ஹாஜி இலயஸ், ஷம்ஸ்-உதீன்-இலயாஸ் ஷா என்னும் விருது சூடி, தனது பேரரசு எல்லையை விஸ்தரித்து, டில்லி சாம்ராச்சியத்தின் பகுதிகளையும் படையெடுத்தான். 70,000 குதிரை வீரருடன் கி.பி. 1353 நவம்பர் மாதம், பிரோஸ் டெல்லியிலிருந்து புறப்பட்டான். இதைக் கேள்வியுற்ற இலயஸ், இக்தாலா கோட்டைக்குள் சென்று மறைந்தான். பாண்டுவா[1] என்னுமிடத்திற்கு இக்தாலா, பத்துமைல்களுக் கருகிலுள்ளது. டெல்லிப்படையினர் கோட்டையை முற்றுகையிட்டு ஷம்ஸ்-உதீனை முறியடித்தனர். மிக்க பிரயாசையுடன் கிடைத்த இவ் வெற்றியை பிரோஸ் முழுவதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. டார்டார்கான் என்னும் படைத்தலைவன், வங்காளத்தைப் பேரரசுடன் இணைக்குமாறு பிரோஸிற்கு அறிவுரை வழங்கினான். அதை அசட்டைசெய்து

[1] இக்கோட்டை இருக்குமிடம் உறுதியாகத் தெரியவில்லை. இதைப்பற்றி முழு விவரங்களறிய 1874-ஆம் ஆண்டு 'Calcutta Review' (J. A. S.-B.) வையும் தபகத்-இ-நசிரி-Bib. Ind. 591 பக்கத்திலுள்ள குறிப்பையும் காண்க.

Koviloor Acadamy

1354ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதியன்று சுல்தான் டெல்லி திரும்பினன். சுல்தானின் வெற்றிகரமான பின் வாங்குதலைக்குறித்த கருத்துக்கள் இரண்டு உள்ளன. முற்றுகையிடப்பட்ட கோட்டையி லிருந்து பெண்டிர் எழுப்பிய அபயக்குரலைக் கேட்ட சுல்தான் மன மிளகித் திரும்பினன் எனப் பிரோஸின் அரசாங்க வரலாற்ருசிரியர் ஷாம்ஸ்-இ-சிராஜ் குறித்துள்ளார். மாரிக்காலத் தொடக்கமாயிருந்த தால், தொடர்ந்து முற்றுகையை நடத்துவதிலுண்டான சிரமங்களைக் கண்டு அஞ்சி முற்றுகையை, பிரோஸ் கைவிட்டான் எனப் பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். பின் வாங்குதற் குரிய காரணம் யாதாயினும் 'சுல்தானின் திறனின்மையை முற்றுகையை வெளிப்படுத்தியது' என்னும் கருத்து தாமஸ் என்னும் வரலாற்ருசி ரியனுல் வெளியிடப்படுகிறது. இக் கருத்தை அசட்டை செய்வது இயலாத காரியமாக உள்ளது.

சில ஆண்டுகளுக்குப்பின் வங்காளத்தை அடிபணிய வைக்கும் முயற்சியில் பிரோஸ் மீண்டும் ஈடுபட்டான். கிழக்கு வங்காளத்து பக்கீர்-உடீன்-முபாரக்-ஷாவின் மருமகன் சாபர்கான் (Zafar Khan) சொனர்கானிலிருந்து கடல் மார்க்கமாகச் சுல்தானின் அவையை அடைந்து, வங்காள அரசனின் கொடுமையைக் குறித்துக் குற்ற ஏடு ஒன்றைச் சமர்ப்பித்தான். ஷம்ஸ்-உதீன் இலயசும் இடைக்காலத்தில் மரணமடைந்ததால் துணிவு பெற்ற பிரோஸ், வங்காளத்தைப் படை யெடுத்தான். ஒப்பந்தங்களையும், சிநேகத்தளைகளையும் அறுத் தெறிந்து கி.பி. 1359-ல் ஷம்ஸ்-உதீனின் மகனும் வாரிசுமான சிக்கந் தர் ஷாவின்மீது படையெடுத்துச் சென்ருன். செல்லும் வழியில் கும்டி ஆற்றின் கரையில் சாபர்பாத் (Zafarabad) என்னுமிடத்தில் முகா மிட்டுத் தன் ஒன்று விட்ட சகோதரன் பக்கீர்-உடீன்-ஜாவ்ன (முக மது-பின்-துக்ளக்) வின் நினைவுச் சின்னமாக, ஜான்பூர் என்னும் நகரை நிர்மானித்தான். மாரிக்காலம் முடிந்ததும் வங்காளத்தை நோக்கிப் புறப்பட்டான். சிக்கந்தர் ஷாவின் சமாதான முயற்சிகள் யாவும் பலனற்றுப்போயின. தகப்பனைப் போலவே, இக்தாலாக் கோட்டையில் சென்று மறைந்துகொண்ட சிக்கந்தரை, டில்லிப்படை யினர் முற்றுகையிட்டனர். முற்றுகை, மிகக்கடின முயற்சியாகவே தோன்றியது. வங்காளப் படையினர், அச்சமின்றிப் போரிட்டுக் கோட்டையைக் காத்தனர். மாரிக்காலம் தொடங்கிப் பெரு வெள்ள மும் அவர்களுக்கு உதவியாகச் சேர்ந்து கொண்டது. சிக்கந் தருக்குச் சாதகமான முறையில் உடன்படிக்கை யொன்று கையெழுத் தாயிற்று. டில்லி சுல்தானின் இரண்டாவது வங்காள முற்றுகையும், பயனற்ற முடிவெய்தியது. சுல்தானின் கோழைமனத்தையும், பல வீனத்தையும் முற்றுகை மீண்டும் விளம்பரப்படுத்தியது.

Koviloor Acadamy

டில்லிக்குத் திரும்பும் வழியில் ஜான்பூரில் சின்னுட்கள் தங்கியிருந்து பின் ஜாஜ் நகரின் மீது (தற்கால ஒரிஸா) படையெடுத்தான். சுல்தானின் பெரும்படையைக்கண்டு ஜாஜ் நகர் மன்னன் அஞ்சியோடினுன். தெலிங்கானுவைச் சென்றடைந்த அவன், சுல்தானுக்கு அடிபணிந்து, சில போர் யானைகளை அளித்ததோடு, ஆண்டுதோறும் சில யானைகளை டில்லி அவைக்கு அனுப்பிவைக்கவும் ஒப்புக்கொண்டான். இரண்டரையாண்டுகளுக்குப்பின் பல இன்னல்களையும், மனத்தாங்கல்களையும் அனுபவித்து, மீண்டும் பிரோஸ் டில்லியை வந்தடைந்தான்.

கி.பி. 1337ஆம் ஆண்டிலேயே நாகர்கோட் என்னும் கோட்டை, மகமது பின் துக்ளக்கினுல் முறியடிக்கப் பெற்றதெனினும், அவனது ஆட்சியின் இறுதியில் மீண்டும் வலுப்பெற்றுத் தன்னுரிமை பெற்றது. டில்லியை வந்தடைந்த பிரோஸின் கவனம் நாகர்கோட்டின்மீது திரும்பியது. ஆறு மாதகால முற்றுகைக்குப் பின் நாகர்கோட்டின் தலைவன் அடிபணிந்தான். ஜ்வாலமுகி என்னும் கோயிலில் கிடைத்த முந்நூறு வடமொழி ஏட்டுத்தொகுதிகளைப் பாரசீக மொழியில் எழுதுமாறு பிரோஸ் உத்தரவிட்ட செய்தி, நாகர்கோட் முற்றுகைக்குச் சிறிது முக்கியத்துவம் அளிப்பதாக உள்ளது. 'தலைல்-இ-பிரோஸ்-ஷாஹி' (Dala'il-i-Firuz-shahi) என்னும் பெயர் கொண்ட இப்பாரசீக நூலுக்கு, அவைப்புலவன் 'ஆசுடின்-காலித்-கானி' (A'azz-ud-din Khalid khani) என்பவனே ஆசிரியனுக விளங்குகிருன்.

1361-62ஆம் ஆண்டில் சிந்துவைக் கைப்பற்றும் முயற்சியைப் பிரோஸ் மேற்கொண்டான். பதினேர் ஆண்டுகளுக்கு முன், மகமது-பின்-துக்ளக்கின் மரணத்திற்குப்பின் சிந்துவைப்பற்றிய நினைவெதுவும் டில்லி சுல்தான்களுக்கில்லை. 90,000 காலாட் படையினர், பல குதிரைவீரர், 480 யானைகள், 5000 படகுகள், ஆகியவையடங்கிய பெரும்படையுடன் சிந்துநாட்டு ஜாம்சியரின் தலைநகரான தட்டாவை நோக்கிப் பிரோஸ் புறப்பட்டான். சிந்து மன்னன் ஜாம்பாபேனியன், 20,000 காலாட்படையினருடனும், 400,000 குதிரைப்படையினருடனும் சுல்தானை எதிர்த்துப் போராடுவதற்குச் சித்தமானுன். டில்லிப்படையினருக்கு இன்னல்கள் பல விளைந்தன. பஞ்சக்கொடுமையாலும், தொற்று நோயாலும் பீடிக்கப்பட்டு, டில்லிப் படையில் நான்கில் மூன்றுபகுதி அழிந்தது. மீண்டும் படையை வலுப்படுத்தும் எண்ணங்கொண்ட சுல்தான், குஜராத்தை நோக்கி விரைந்தான். துரோக சிந்தனையுள்ள வழிகாட்டிகளின் கைகளில் சிக்குண்டு, கட்ச்பகுதி எல்லையில் நடத்திச் செல்லப்பட்ட சுல்தானின் படையினர் பல இன்னல்களுக்காளாயினர். எனினும் திறமைமிக்க டெல்லி அமைச்சன் கானி-ஜஹான்-மக்புல் தக்க

Koviloor Acadamy

தருணத்தில் பெரும் படையொன்றை அனுப்பிவைத்தான். வலுப் பெற்ற பிரோஸ் 1363-ல் மீண்டும் சிந்துவைத் தாக்கி, அம்மன்னனை அடிபணியவைத்தான். சுல்தானின் தலைமையை ஏற்றதோடு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான தங்கநாணயங்களை (Tankas)த் திறையாகச் செலுத்தவும் ஒப்புக்கொண்டனன். சிந்துப்படை யெடுப்பும் வங்காளப்படையெடுப்பைப்போல, சுல்தானின் திறமை யின்மையையும், இராணுவநிர்வாகக் குறைவையும் எடுத்துணர்த்து வதாக இருக்கிறது.

பிரோஸின் ஆட்சியில் மங்கோலியரின், படையெடுப்புகளேது வுமில்லை. 'எல்லைப்பகுதிகள் யாவும் படையினரால் நன்கு பாது காக்கப்பட்டும், பேரரசர்களின் நண்பர்களால் கண்காணிக்கப் பட்டும் வந்தன' என யாகியா (Yahiya) என்னும் நூலாசிரியர் குறிப்பிடுவர்.

தக்காணத்தை டில்லி சாம்ராச்சியத்தின் ஆதிக்கத்திற்குக் கொண்டுவருவதற்குப் பிரோஸ் எவ்வித முயற்சியையும் மேற் கொள்ளவில்லை. சுல்தானின் அலுவலர் சிலர், தக்காணத்தின்மீது படையெடுக்குமாறு சுல்தானை வேண்டினர். அவ்வேண்டுகோள் 'சுல்தானை வேதனைக்குள்ளாக்கியது; வேண்டுகோளைச் செவி மடுத்துக் கண்களில் நீர் மல்க, தன் சோதரரின்மீது படையெடுத்துச் செல்வதற்குத் தான் விரும்பவில்லை' என்று சுல்தான் விடையளித்த தாக ஷாம்சி-சிராஜ்-அபீப் குறிப்பிடுகிறார்.

தீவிர சமயவாதியான பிரோஸ் இந்துக்களைக் கொடுமைப்படுத் தினான். எகிப்து காலிபைத் தன் தலைவனாக ஏற்று வணங்கினான். இந்திய இஸ்லாமியரின் வரலாற்றில் முதன் முறையாகத் தன்னைக் காலிபின் கையாள் எனப் பிரகடனப்படுத்திக்கொண்டான். பிரோஸ் ஆட்சி தொடங்கிய ஆறு ஆண்டுகளில், தனது ஆசியோடு ஆடை அணிகளையும் இருமுறைகள் அனுப்பிவைத்து, எகிப்து காலிபு, பிரோஸைக் கௌரவித்தான். பிரோஸ் வெளியிட்ட நாணங்களில், எகிப்து காலிபின் உருவமும் பொறிக்கப்பெற்றது. பிரோஸ் இஸ்லா மியச் சமயக்கொள்கைகளின் அடிப்படையில், தன் ஆட்சியை அமைத் தான். தன் குடிமக்களை இஸ்லாமியச் சமயத்தைத் தழுவுமாறு தூண்டுவதில் அவனுக்கு மிகுந்த ஆத்மதிருப்தி ஏற்பட்டது. முன் னோர்கள் கடைப்பிடித்துவந்த சமயக்கொள்கைகளினின்றும் மாறு பட்ட பல விதிகளையும் அவன் அமைத்தான்.

பிரபுக்களையும், அரசாங்க அலுவலர்களையும் திருப்திப்படுத்து வதின் பொருட்டு, ஜாகிர் முறையை மீண்டும் கடைப்பிடிக்கத் தொடங்கினான். இம்முறை அலாவுதீன் கில்ஜியினால் நீக்கப்பட்டிருந்

Koviloor Acadamy

தது. நிலங்களைப் பகிர்ந்தளித்ததோடு, அலுவலருக்கு அதிக ஊதியத்தையும், பிரபுக்களுக்கு அதிகமானியமும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தான். இத்தகைய முறைகளால் தனது நிலையை மன்னன் தாற்காலிகமாக வலுப்படுத்திக்கொண்டான் எனினும், நாளடைவில் மிக்க வலுப்பெற்ற பிரபுக்களால், இறுதியில் மத்திய அரசின் செல்வாக்குச்சிர்குலைக்கப் பெற்றது.

மேலே நாம் குறித்த குறைகள் பலவற்றையுடையவனாயினும், அவனுடைய ஆட்சியில் பல சிறந்த சீர்திருத்தங்களும் உண்டு. முப்பத்தேழு ஆண்டுகள் நீடித்த அவனது ஆட்சியில் மக்கள் களிப்புடனும், மனநிம்மதியுடனும் வாழ்ந்து வந்தனர். அநீதியான பல வரிகளை அவன் நீக்கினான். குரானின் கொள்கைகளுக்கிணங்க வரித்திட்டம் ஒன்றை வகுத்துக் கடைப்பிடித்தான். குரானின் விதிகளையடைப்படையாகக் கொண்டு அவன் அனுமதித்த வரிகள் பின்வருமாறு,—(1) காராஜ் (Kharaj) அல்லது விளைபொருளில் பத்தில் ஒரு பங்கு (2) 'சாகாட்' (Zakat) அல்லது மானியம் (3) ஜிசியா (Jizya) அல்லது இஸ்லாமியரல்லாதவர் செலுத்தும் வரி (4) 'காம்சு' (khams) அல்லது சூறையாடுவதில் ஐந்தில் ஒரு பங்கும் அரங்கங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களில் ஐந்தில் ஒரு பங்கும். நீதி சாத்திர வல்லுநரைக் கலந்தாலோசித்து, 'ஷார்ப்' (Sharb) என்னும் நீர்ப்பாசன வரியையும் அவன் வசூலித்தான். நிலங்களி லிருந்து கிடைத்த விளைபொருள்களில் பத்திலொரு சதவீதம் பாசன வரியாக வசூலிக்கப்பட்டது. குரானில் கண்டுள்ளபடி போரில் கிடைக்கும் பொருள்களைப் படையினரும் அரசினரும் பங்கிட்டுக் கொண்டனர். அரசினருக்கு ஐந்தில் ஒரு பங்கும், படையினருக்கு ஐந்தில் நான்கு பங்குகளும் வழங்கப்பட்டன. கொடுமையான வையும், நியாயமற்றவையுமான பல சுங்கவரிகளிலிருந்து. வணிகர் களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டது. இவ்வரிகள், பண்டங்களின் தாராளப் பரிவர்த்தனைக்கு இடையூறாக விருந்தன. அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட வரிகளுக்குமேல் வசூலிக்கக்கூடாதென அலுவலர் களுக்குக் கண்டிப்பான உத்தரவிடப்பட்டது. இச்சீர்த்திருத்தங் களால், விவசாயம், தொழில் ஆகியவை விருத்தியடைந்தன. மன்ன னின் அவைக் கவியான ஷம்ஸ்-இ-சிராஜ் அபிப், சுல்தானைக் குறித்த ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதுவதையே பழக்கமாகக்கொண்டிருந்த போதும், சுல்தானின் புதிய முறைகளால் குடியானவர் நிலை உயர்ந்தது என்று குறிப்பிடுவது முற்றிலும் உண்மை: 'அவரது இல்லங்களில், பொன்னும், மணியும், குதிரைகளும், பிற உடைமைகளும் குவிந்தன. ஒவ்வொருவனிடமும், தங்கம் வெள்ளி மிகுந்திருந்தது. மாதர் விலையு யுர்ந்த அணிகளை அணிந்திருந்தனர். பட்டுப்பஞ்சணையும், கட்டிலும் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தன. செல்வச் செழிப்பும், போகவாழ்வும் எங்கும் நிறைந்திருந்தன. அரசினருக்குத் தேவையான நிதி

Koviloor Acadamy

யிருந்தது ; பொருளாதாரச் சீர்குலைவு மருந்திற்கும் இல்லை. கங்கைச் சமவெளியிலிருந்து மட்டிலும் எட்டு லட்சம் தங்கநாணயங்கள் (தங்காஸ்-Tankas) கிடைத்துவந்தன. டில்லி மாவட்டங்களிலிருந்து ஆறு கோடியே எண்பத்தைந்து லட்சம் தங்கநாணயங்கள் கிடைத்தன. அன்றாடத் தேவைக்குரிய பொருள்களும் மக்களுக்கு எளிதில் கிடைத்துவந்தன[1].

திட்டமிட்டுக் கட்டப்பெற்ற, பல நீர்ப்பாசன கால்வாய்களின் உதவியால், விவசாயம் அபிவிருத்தியடைந்தது. பிரோஸின் கட்டளையால் இரு கால்வாய்கள் வெட்டப் பெற்றதாக, ஷம்ஸ்-இ-சிராஜ் அபிப் குறிப்பிடுவர். இவைகளிலொன்று சட்லஜிலிருந்தும் மற்றொன்று யமுனையிலிருந்தும் தொடங்கின. சர்கிந்து வாசியான யாகியாவிற்குக் கால்வாய்களைப் பற்றிய விவரங்கள் நன்கு தெரிந்திருக்கவேண்டும். பிரோஸின் ஆட்சியில் நான்கு கால்வாய்கள் வெட்டப் பெற்றதாக அவர்கூறுவர். அவைகள் முறையே (அ)சட்லஜிலிருந்து, காக்ஹாருக்கும் (ஆ) மண்டவி, சிர்முர் குன்றுகளுக்கருகில் வெட்டப் பட்ட ஏழுகிளைகளுடன் கூடி, 'ஹன்சி, அரசனி' வரையிலும் சென்றன-அங்கு ஹிஸார்-பிரோஸா என்னும் நகருக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. (இ) மற்றொன்று காக்ஹாரிலிருந்து 'சிர்சுதி' கோட்டை வழியாகப் பாய்ந்தோடி ஹிர்நாய்-கேரா என்னும் கிராமத்தை அடைந்தது. (ஈ) நான்காவது, யமுனையிலிருந்து வெட்டப்பெற்று, 'பிரோஸா-பாதை' அடைந்து, அதற்கப்பாலும் பாய்ந்தோடியது. கால்வாய்களை அமைப்பதற்கெனத் தேர்ந்த என்ஜினியர்களை, பிரோஸ் அமர்த்தினான். குறிப்பாக, மாரிக் காலங்களில் கால்வாய்களின் நிலைமைகளைக் கண்காணிப்பதற்குத் தேவையான அலுவலர்கள் அமர்த்தப் பெற்றனர். தரிசு நிலங்களை மீட்டுச் சாகுபடி செய்தது, பிரோஸின் மற்றுமோர் சிறந்த சாதனையாகும். இந்நிலங்களிலிருந்து கிடைத்த வருமானம், சமயத்தின் நலன் பெருக்குவதற்கும், கல்வி நிலையங்களை ஏற்படுத்துவதற்கும் பயன்பட்டது.

பிரோஸின் கட்டடங்களும் தோட்டங்களும், மக்களுக்கு மறைமுகமாகப் பயனளித்தன. புதிய நகரங்களைக் கட்டுவதிலும், பழையவைகளுக்குப் புதிய பெயர்கள் சூட்டுவதிலும் அவனுக்கு ஆசை அதிகமிருந்தது. பிரோஸ் கூறியதாவது: 'ஆண்டவனின், மிகச்சிறு அடிமையான எனக்கு, அவனருளிய கட்டடப்பித்து, பிறவரங்கள் யாவற்றிலும் சிறந்தது. ஆகவே, மசூதிகளையும், கல்லூரிகளையும், மடாலயங்களையும் நான் கட்டியிருக்கிறேன். அறிஞரும்,முதியோரும், பக்திமான்களும்

[1] ஷம்ஸ்-இ-சிராஜ் அபிப், தரும் பட்டியல் வருமாறு :—

கோதுமை....	1 மண....8 ஜிட்டல்கள்		பருப்பு....10 சேர்கள்	1 ஜிட்டல்	
பார்லி....	1 மண......4 ஜிட்டல்கள்		நெய்...... 1 சேர்	$2\frac{1}{2}$,,	
தானியம்......	,, 4	,,	சர்க்கரை..... ,,	$3\frac{1}{2}$,,	

Koviloor Acadamy

பெரியோரும் இவைகளைப்பயன்படுத்தி, வழிபாடுகள் நடத்தி, தங்களுடைய பிரார்த்தனைகளால் ஆக்கியோனை ஊக்குவிக்க வேண்டுகிறேன். ஜான்பூர், வேதாபாத், ஹிஸார், பதௌனுக் கருகில் பிர்ஸ்போர், மற்றும் தலைநகருக்குப் பத்துமைல் தொலைவிலுள்ள பிரோஸாபாத் ஆகிய நகரங்களைப் பிரோஸ் கட்டி முடித்தான். வங்காளப் படையெடுப்பின் போது, இக்தாலாவை ‘ஆசாத் பூர்’ என்றும் பாண்டுவாவைப் ‘பிரோஸாபாத்’ என்றும் பெயரிட்டழைத்தான். மசூதிகள் பலவற்றைப் புதுப்பித்தும், மற்றும் சிலவற்றைப் புதிதாகவும் கட்டி முடித்தான். அரண்மனைகள், பள்ளிவாயில்கள், நீர்த்தேக்கங்கள், மருத்துவ நிலையங்கள், கல்லறைகள், குளிப்பதற்கான துறைகள், கல்தூண்கள், பாலங்கள், ஆகியவற்றைப் பிரோஸ் கட்டி முடித்தான். மாலிக்-காசி-சகானு என்பவன், அரசாங்க என்ஜினியர்களில் முதல்வன். அப்துல் ஹக் என்பவன் அவனுக்குத் துணைவனாக இருந்தான். தோட்ட நிர்மாணவேலையில் மிக்க ஆர்வங்கொண்ட சுல்தான், டில்லியைச் சுற்றிலும் ஆயிரத்து இருநூறு தோட்டங்களை அமைத்தான். அத்துடன் அலாவுதீனால் அமைக்கப் பெற்ற முப்பது தோட்டங்களைப் புதுப்பித்தான். அசோகனது கல்தூண் வெட்டுகளில் இரண்டை டில்லிக்கு எடுத்துச் சென்றான். இவைகளிலொன்று கிச்ராபாதிற் கருகில் உள்ள கிராமத்திலிருந்தும் மற்றொன்று மீரட்டிலிருந்தும் எடுத்துச் செல்லப்பட்டன.

நீதி வழங்குவதிலும், சுல்தானுக்குக் குரான் வழிகாட்டியாக இருந்தது. தண்டனைகளின் கடுமையைப் பிரோஸ் குறைத்து, நீதி நிர்வாகத்தைச் சீர்செய்தான். பிரோஸின் கருத்துகள் வருமாறு: ‘முன்னோரது ஆட்சியில் பலவகையான கொடுமைகள் நிறைந்திருந்தன. கை, கால்கள், மூக்கு, செவி ஆகியவைகளைத் துண்டிப்பது, கண்களைப் பிடுங்குவது, உருக்கிய ஈயத்தைத் தொண்டைக் குழியில் ஊற்றுவது, சகடைகளால் கைகால் எலும்புகளை நொறுக்குவது, உடலைத் தீயில் பொசுக்குவது, கை கால், வயிறு, கண்களில் ஊசியிறக்குவது, தசைகளை அறுத்தெடுப்பது, ரம்பத்தினால் உடலை மெதுவாக அறுக்கச்செய்வது, இன்னும் இதுபோன்ற பல இரக்கமற்ற முறைகள் கையாளப்பட்டுவந்தன. கருணை நிறைந்த ஆண்டவன், கடை ஊழியனாக என்னைப் படைத்துள்ளான். அவனது அருளை அல்லும் பகலும் முயன்று பெறுவதே என் இலட்சியம். இஸ்லாமியரைக் கொல்வதையும், பிறரால் அவர்கள் துன்புறுத்தப் படுவதையும் தடுப்பது, என் குறிக்கோள்களாகும்.’ மக்களின் பொது நலத்திற்கான பல முயற்சிகளைப் பிரோஸ் மேற்கொண்டான். மக்கள் அவனை நேசித்து வந்தமைக்கு அக்கால ஆசிரியர்கள் நற்சான்று பகருகின்றனர். வேலை தேடித் தரும் ஸ்தாபன மொன்றைத் தொடங்கி வைத்தான். ஒவ்வொருவனின் திறமையையும், தேவையையும் கண்டறிந்து, உரிய வேலைகளை அவர்களுக்கு வழங்கி, வேலையில்லாத்

Koviloor Acadamy

திண்டாட்டத்தை ஒழிக்க முற்பட்டான். நன்கொடை வழங்குவதற்கெனத் திவான்-இ-கைரத் என்னுமோர் நிறுவனத்தையும் ஏற்படுத்தினுன். ஏழை இஸ்லாமியப் பெண்களுக்கு மணமுடிக்கவும், கைம் பெண்களுக்கும், அநாதைகளுக்கும் உதவியளிக்கவும், இந் நிறுவனம் மிகவும் உதவியாக இருந்தது. மருத்துவ நிலையம் (தார்-உல்-ஷவா) ஒன்றை ஏற்படுத்தி, மக்களுக்கு உணவும், மருந்துகளும், தலை சிறந்த வைத்தியர்களின் உதவியும் அரசாங்கச் செலவில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தான்.

புதியவகை நாணயங்களைப் பிரோஸ் வெளியிடவில்லை. மகமது பின்-துக்ளக் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள், இவனது ஆட்சியிலும் நிலவின. வெள்ளியும் தாமிரமும் கலந்த, 'ஆதா', 'பிக்' என்னும் அரை, கால் ஜிட்டல் நாணயங்களை வெளியிட்ட பெருமை இவனைச் சாரும். அபீப் குறிப்பிடும் 'ஷாஸ்கனி' துக்ளக்கின் காலத்திலேயே வழக்கிலிருந்ததென அபன்பட்டுடா கூறியுள்ளார். பிரோஸ் வெளியிட்ட சிறு மதிப்புள்ள நாணயங்கள் சாதாரண மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்தன. நாணய பரிவர்த்தனையில், மக்களுக்கு நம்பிக்கை பிறந்தது. நாணயச் சாலையில் காணப்பட்ட சிறு குறைபாடுகளால் நாணயமுறை சிறப்படைய வகையில்லாதுபோயிற்று.

நாட்டின் படை பலம், நிலமானிய முறையில் அமைக்கப்பெற்றிருந்தது. நிரந்தரப் படைவீரர் தேவையான ஊதியம் பெற்றுவந்தனர். அவ்வப்போது சேர்த்துக்கொள்ளப்பட்ட படையினருக்கு (Ghairwagh), மாவட்ட, மத்திய கருவூலங்களின்மூலம் ஊதியம் அளிக்கப்பட்டுவந்தது. இவ்வாறு ஊதியம் பெருதவர்களுக்கு அவர்கள் தேவை யேற்படும்போது பெறுகின்ற வகையில் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பெற்றன: இவைகளைப் பணமாக மாற்றுவது மிக எளிதாக இருந்தது. இம்முறையைப் பலர் துர்விநியோகப்படுத்தியதால், ஊழல்கள் நிறைந்தன. அனுமதிச் சீட்டுகளை, அதன் மதிப்பில் அரைப்பங்கிற்கும், மூன்றில் ஒரு பகுதிக்கும் பலர் வாங்கினர். போர் வீரரின் உழைப்பில், தங்கள் நலனைப் பெருக்கிய, பல ஒட்டுண்ணிகள் முளைத்தனர். எண்ணுயிரம் அல்லது ஒன்பதாயிரம் காலாட்படையினரைக் கொண்ட சேனை, அவ்வப்போது பிரபுக்களின் தனிப்படையினரையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டிருந்தது. ஆள் எண்ணிக்கை அதிக மிருப்பினும், ஆற்றல் மிகுந்திருந்ததெனக் கூற இயலாது. படைவீரரிடம் தேவைக்கதிகமான கருணை, சுல்தானுல் காட்டப்பெற்றதால், படையினரின் திறமை குறைந்து காணப்பட்டது. உதாரணமாகப் படைவீரன் முதுமைப்பருவமடைந்து போரிடச் சக்தியற்றவனுகும்போது, அவனுடைய மகன், மருமகன், அல்லது அடிமைக்கு, அப்பதவி வழங்கப்படவேண்டுமென்ற பிரோஸின் சட்டம், படையின் ஆற்றலைச் சீர்குலைத்தது. வாரிசுமையை மட்டிலும்

Koviloor Acadamy

கொண்டு, படையினரைச் சேர்ப்பது பயனற்றதோர் முறை என்பது வெளியாயிற்று.

பிரோஸின் ஆட்சியில், அடிமைகளின் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று. இவர்களுக்கெனத் தனித்துறை ஒன்றும் அரசினரால் ஏற்படுத்தப்பட்டது. நிலமானியப் பிரபுக்கள் பலர், அரசனுக்கு அடிமைகளைப் பரிசாக வழங்கினர். இப்பரிசுகளை ஏற்ற சுல்தான், அதற்குப் பதிலாகப் பிரபுக்களுக்கு வரி செலுத்துவதினின்றும் விதிவிலக்களித்தான். அடிமைகளைப் பெருக்கியதால் அரசாங்கத்திற்கு மிகுந்த நஷ்டமேற்பட்டது.[1]

பகட்டிலும், படாடோபத்திலும் விருப்பமற்றவனாக இருந்தபோதிலும், முன்னோர்களைப்போலவே அலங்காரமான அவை கூட்டினான். ஷம்ஸ்-இ-சிராஜின் குறிப்பிற்கிணங்க, 'இத், சபராத்' பண்டிகைகளின்போது, மிக விமரிசையாக அவையை அலங்கரிக்கும் வழக்கமிருந்ததெனத் தெரியவரும். அரண்மனைத் தேவைகளைக் கவனிப்பதற்கென முப்பத்தாறு தனித்துறைகள் இருந்தன. துறை ஒவ்வொன்றிற்கும் தனி அலுவலர்கள் பலர் இருந்தனர். பகட்டான அவை நடத்துவதற்கும், அலுவலர் பலரைப் பராமரிப்பதற்கும் ஏராளமான பொருள் செலவிடப்பட்டிருக்கவேண்டும்.

பிரோஸின் அமைச்சர் கானி-ஜஹான் மக்பல் என்பவருக்கு நிர்வாகத்தில் நல்ல மதிப்பிருந்தது. இவர் தெலிங்கானாவைச் சார்ந்த ஓர் இந்து. பிற்காலத்தில் இஸ்லாமிய சமயத்தைத் தழுவினார். பிரோஸின் ஆட்சியில் பதவியொன்றைப் பெற்று, சின்னாட்களில் உயர்வு பெற்றுச் சிறந்து விளங்கினார். கி.பி. 1370-ல் இவர் மரணமடைந்ததும், இவர் மகன் ஜூனாஷா தந்தையின் பதவிக்கு அமர்த்தப்பட்டார். குஜராத்தின் கவர்னர் சாபர்கான் (Zafer khan) இறந்ததும் அடுத்து அவனது மகன் தார்யா கான் பட்டமெய்தினார். 1374ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதி பிரோஸின் மூத்த மகன் பாத்கான் (Fath khan) மரணமடைந்தார். இதனால் சுல்தானுக்கு மிக்க அதிர்ச்சி யேற்பட்டது. சுல்தானின் உடலும், உள்ளமும் பாதிக்கப்பட்டன.

டில்லி சுல்தான்கள் யாவரும் மன அமைதியின்றியே இறுதிக் காலத்தில் வாழ்ந்தனர். பிரோஸ் இதற்கு விலக்கல்லர். முதுமைப் பருவத்தில் உள்ளம் தளர்ந்ததால் சுல்தானின் நிர்வாகம் பலவீனமாயிற்று. உயிரோடிருந்தவர்களில் மூத்த மகனான முகமதுகானுடன்

[1] ஷம்ஸ்-இ-சிராஜின் குறிப்புகளுக்கிணங்க, தலைநகரிலும், மாகாணங்களிலுமுள்ள அடிமைகளின் மொத்த எண்ணிக்கை 180,000 ஆக உயர்ந்தது. எலியட் வால்யூம் III, பக்கம் 341.

Koviloor Acadamy

சுல்தான் தனது அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள முயன்ருன். முகமதுகான் தகுதியும் திறமையுமின்றிப் பொறுப்பற்றவனுகவும் இருந்ததால், சுல்தானுக்குப் பல இன்னல்கள் தோன்றின. முகமது கான் சிற்றின்பங்களில் நேரத்தைச் செலவிட்டு, அரசியலைக் கை விட்டான். உள்நாட்டுக் கலகமொன்று தொடங்கியது. முகமது கான் நாட்டை விட்டு சிர்மூர் குன்றுகளுக்கு ஓடிச்சென்று ஒளிந்து கொண்டான். இவ்விடையூறுகள் யாவையும் பிரோஸ் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. வேறுவகையின்றி, காலஞ்சென்ற பாத்கானின் மகனும், தன் பெயரனுமான துக்ள்க்கானுக்கு அரச பதவியளித்து, 1388ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் தேதி, பிரோஸ் மரணமடைந்தான்.

சமகால வரலாற்ருசிரியர்கள் பிரோஸ்ஷாவின் குணுதிசயங்களை ஒருமனதாகப் புகழ்ந்து பேசுகின்றனர். நாசர்-உடீன்-மகமது காலந் தொட்டு நேர்மையும், அன்பும், பண்பும், தெய்வ-நம்பிக்கையும், கட்டடக்கலையில் ஆர்வமும் உள்ள மற்றுமொரு மன்னனைக் காண்ப தரிது என வரலாற்ருசிரியர்கள் வர்ணிக்கின்றனர். மற்றும் வள் ளன்மையும் அவனிடம் நிறைந்திருந்தன. அவனது ஆட்சியில், அமைதியும், செல்வச் செழிப்பும் மிகுந்திருந்தன. என்ருலும், பிரோஸின் எல்லையற்ற கருணையும், அவனளித்த கணக்கற்ற சலுகை களும், டில்லி சாம்ராச்சியத்தின் சீர்குலைவுக்குக் காரணங்களாயிருந் தன. ஜாகீர் முறையை மீண்டும் அவன் ஏற்படுத்தியதால், ஜாகிர்தார் கள் வலுப்பெற்றுப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயினர்.

ரஜாபின் மகன், பிரோஸின் சந்ததியார்கள்

பிரோஸைத் தொடர்ந்து, அவனது பெயரன் துக்ளக்ஷா பட்ட மெய்தினுன். கியாஸ்-உடீன்-துக்ளக் ஷா II என்னும் விருதைச் சூடி அவன் ஆட்சி தொடங்கினுன். சில அலுவலர்களும், பிரபுக்களும் கூடிச்சதிசெய்து கி.பி. 1389ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி அவனைக் கொன்றனர். அவனது ஒன்றுவிட்ட சோதரன் அபு பெக்கர் என்பவனைச் சதிகாரர் யாவரும் கூடி அரச பதவியிலமர்த் தினர். பிரோஸின் மகன் நாசர்-உடீன்-முகமதைச் சார்ந்தவர்கள், அவனை அரசனுகப் பிரகடனப் படுத்தி 1389ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதியன்று அரியாசனத்தில் அமர்த்தினர். அபுபெக்கர், தனது உரிமையைக் கைவிட்டுக் கி.பி. 1390 டிசம்பர் மாதத்தில் பதவி யிழக்க வேண்டியதாயிற்று. பல சண்டைகளிலும், அரசியல் சிக்கல் களிலும் உழன்றதால் நாசர்-உடீன் கி.பி. 1394ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உயிரிழக்க வேண்டியதாயிற்று. அவனையடுத்து அரசெய்திய அவனது மகன் ஹுமாயூன், மார்ச்சு மாதம் 8ஆம் தேதியன்று உயிரிழந்தான். முகமதின் இளைய மகன் நாசர் உடீன்-

Koviloor Academy

மகமது துக்ளக் குலத்தின் இறுதி மன்னனாக ஆட்சிசெலுத்தினான். பிரோஸின் மூத்த மகன் பாத்கானின் (Fath-Khan) மகன் நச்ரத் ஷா முகமதிற்குப் போட்டியாக இருந்தான். பிரபுக்கள் சிலரின் துணை கொண்டு அரசைக் கைப்பற்ற எண்ணிய இவனது முயற்சி பலனளிக்க வில்லை. நச்ரத் ஷா சிறைபிடிக்கப்பட்டு, வஞ்சகமாகக் கொல்லப் பட்டான்.

பிரோஸின் வழித்தோன்றல்கள் யாவரும் திறமையற்றிருந்ததால், டெல்லிப் பேரரசைக் காப்பாற்றும் வல்லமை அவர்களுக்கில்லை. பேரர சின் வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தோன்றலாயின. நெறியற்ற பல பிரபுக்களின் கைப்பாவைகளாக, இம்மன்னர்கள் விளங்கிவந்தனர். இப்பிரபுக்களின் சுயநலமிக்க நடவடிக்கைகளால், உள் நாட்டுப்போர் தொடங்கிற்று. நாட்டின் கௌரவத்தையும், பொருளாதாரத்தையும் இப் போர்கள் சீர் குலைத்தன. மாகாணக் கவர்னர்களும் இந்துத் தலை வர்களும், அரசரை அசட்டைசெய்தனர் திறமையற்ற அலிபுருடன் 'மாலிக் சார்வார்' என்பவன், நாசர் உடின் முகமதைத் தூண்டி, 'மாலிக்-உஷ்-ஷார்க்' அல்லது கீழைப்பகுதிகளின் தலைவன் என்னும் விருதைப் பெற்றான். அத்துடன் ஜான்பூர் அரசைத் துவக்கித் தன் விச்சைப்படி ஆண்டுவரத் தொடங்கினான். வடதிக்கிலுள்ள 'சோக்கர் கள்' புரட்சி செய்யத் தொடங்கினர். குஜராத், மாளவம், காந்தேஷ் ஆகிய பகுதிகள் சுயேச்சை பெற்றன. 'பியானா,' 'கல்பி' ஆகிய இடங்களில் இஸ்லாமிய அரசுகளும், குவாலியரில் இந்து ஆட்சியும் தோன்றின. மேவாட்டின் அரசன் தன்னிச்சைக்கேற்ற தலைவனைத் தேர்ந்து கொண்டான். கங்கை வெளியிலுள்ள மக்கள் கலகம் செய் வதையே, தொழிலாகக்கொண்டிருந்தனர்.

5. தைமூரின் படையெடுப்பு

குழப்பமிக்க இச் சூழ்நிலையில், 'அமீர் தைமூர்' என்பவன் இந்திய நாட்டின்மீது படையெடுத்தான். வரலாறு குறிக்கும் மாபெரும் இராணுவத் தலைவர்களில் தைமூர் ஒருவன். துருக்கியருள், கூர்க்கப் பகுதியுள் பார்லஸ் இனத்தைச் சார்ந்த, 'அமீர் தர்கே' (Amir Turghay) என்பவனின் மகனாக இவன் பிறந்தான். கி.பி. 1336-ல் 'டிரான்ஸ்-சாக்சியானாவிலுள்ள' கேஷ் என்னுமிடத்தில் இவன் பிறந்தான். பாரசிகம், ஆப்கானிஸ்தானம், மெசபடோமியா ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய, பேரரசிற்குத் தலைவனாக, சாமர்கண்ட் அரியணையில் இவன் அமர்ந்தான். இந்திய நாட்டு வளம், இவனை மிகவும் தூண்டிற்று. தருணத்தை எதிர் நோக்கியிருந்த தைமூருக்கு, டெல்லிப் பேரரசின் குழப்பநிலை நல்ல வாய்ப்பளித்தது. இஸ்லாமிய சமயத்தொண்டைப் பெயரளவில் குறிக்கோளாகக்கொண்டு, தன் பிரபுக்கள், மற்றும் படையினரின் பேராதரவைப் பெற்றுக்கொண்

Koviloor Acadamy

டான். தொலைதூரத்திலுள்ள நாட்டைப் படையெடுப்பதில், அவர்களுக்கு விருப்பமில்லாதிருந்தது.

1398ஆம் ஆண்டின் முற்பகுதியில், தைமூரின் பெயரன் பீர் முமமது என்பவன், மூல்தானை முற்றுகையிட்டு ஆறுமாத காலத்திற்குப் பின் கைப்பற்றினான். 1398 ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பெரும் படையுடன் சாமர்கண்டைவிட்டுப் புறப்பட்டு, செப்டம்பர் மாதத்தில் சிந்து, ஜீலம், ராவி ஆகிய ஆறுகளைக்கடந்து, மூல்தானுக்கு வட கிழக்கில், எழுபது மைல்களிலுள்ள 'தலம்பா' என்னுமிடத்தை அக்டோபர் 13ஆம் தேதியன்று தைமூர் அடைந்தான். தலம்பாவை வெற்றி கண்டு, குடிகளைக் கொன்று குவித்தும், மற்றும் சிலரை அடிமைகளாகவும் சிறைபிடித்தான். பல நகரங்களை வென்று, மக்களைக் கொன்று குவித்து, இறுதியில் டெல்லியின் சுற்றுப்புறங்களை அடைந்தான். டிசம்பர் மாத இறுதியில் அங்குப் பொருது, சுமார் 100,000 ஆண் கைதிகளை ஈவிரக்கமின்றிக் கொலை செய்தான். 10,000 குதிரைப்படையினரையும், 40,000 காலாட் படையினரையும், 120 யானைகளையும், கவசமணிந்த போர் வீரரையும் கொண்ட படையுடன், டிசம்பர் 17ஆம் தேதியன்று சுல்தான் மகமதும், மல்லு இக்பாலும் தைமூரை எதிர்க்கத் துணிந்தனர். சின்னாபின்னமடைந்த இவர்கள் போர்க்களத்தை விட்டு ஓடவேண்டியதாயிற்று. மல்லு, பரானை நோக்கியும், மகமது குஜராத்தை நோக்கியும் ஓட்டமெடுத்தனர்.

மறுநாள், தைமூர், டெல்லிநகருள் புகுந்தான். பல நாட்களாக டில்லி சூறையாடப்பெற்றது. துரதிர்ஷ்ட மிக்க இந்நகர மாந்தர் பலர் துருக்கியரால் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். சிலர் கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்டனர். தேர்ச்சியும், அனுபவமும் மிக்க கலைஞர் சிலர், சாமர்கண்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு, தைமூரின் திட்டப்படி அழகிய மசூதியொன்றை எழுப்பும் வேலையில் அமர்த்தப்பெற்றனர். இவ்வாறு, டெல்லி சுல்தானியரின் தலைநகருக்குத் துக்ககரமான முடிவேற்பட்டது.

இந்திய நாட்டில் நிரந்தரமாகத் தங்கும் எண்ணம் தைமூருக்கு இல்லை. பதினைந்து நாட்கள் டெல்லியில் தங்கி, பிரோஸாபாத் வழியாக (ஜனவரி, 1399) ஊர் திரும்பினான். திரும்பும் வழியில் மீரட்டையும் (ஜனவரி 9) அதற்குச் சற்று வடதிக்கிலுள்ள, இரு இந்துப்படைகளையும் ஹர்த்துவாருக்கு (Hardwar) அருகிலும் வெற்றிகண்டான். சிவாலிக் குன்றுகள் வழியாகச் சென்று, காங்ராவை வென்று (ஜனவரி 16), ஜம்முவைக் கைப்பற்றி, அங்குள்ள மாந்தரை இரக்கமின்றிக் கொன்று குவித்தான். 'கிசர்கான் சையது' என்பவனை, மூல்தான், லாகூர், திபால்பூர் ஆகிய பகுதிகளுக்குக் கவர்னராக நியமித்து, 'ஒரே படையெடுப்பில், இதற்குமுன் இந்நாட்டின்மீது படை

Koviloor Academy

யெடுத்து வந்த, தனிப்படைத் தலைவன் எவனும் இழைத்திராத கொடுமைகள் யாவையும் இழைத்து மக்களுக்குச் சொல்லவொண்ணுத் துன்பங்களை விடுத்து' மார்ச்சு 19ஆம் தேதியன்று மீண்டும் சிந்து நதியைக் கடந்து, தாய்நாட்டிற்கேகினன்.

இரத்த வெறியுடன் கூடிய போர், மற்றும் பல நாசங்களுடன், இயற்கையும் டெல்லி மக்களுக்குப் பெருஞ் சேதத்தை விளைத்தது. இதனுல் மக்களின் துன்பம் அதிகரித்தது. 'இச்சமயத்தில், கடும் பஞ்சமும், அத்துடன் நோயும் டெல்லி மக்களைத்துன்புறுத்தின. நகரம் முழுவதும் பாழடைந்தது. நகரமக்கள் பலர் மாண்டனர். இரண்டு மாத காலத்திற்கு டெல்லி நகரில் காக்கை, குருவிகளைக்கூட காண்ப தரிதாயிற்று' எனப் பதௌனி வர்ணிக்கிருர். உள்நாட்டுக் குழப்பங்களால் சீர்குலைந்திருந்த துக்ளக் வமிசத்தினரின் வீழ்ச்சியைத் தைமூர் நிறைவேற்றி வைத்தான். வங்காளம், நெடுநாட்களாகவே தன்னுட்சி நடத்தி வந்தது. கனேஜ், அயோத்தி, காரா, டால்மௌ, சாண்டிலா, பாஹ்ரெய்ச், பீஹார், ஜான்பூர் ஆகிய பகுதிகளைக் குவாஜா ஜஹான் ஆண்டுவந்தான். குஜராத்தில் முசாபர்ஷா சுயேச்சையாக ஆண்டு வந்தான். மாளவத்தில் டிலாவர்கானும், பஞ்சாப், மேற்கு சிந்து மாகாணங்களில் தைமூர் வைசிராய் கிசர்கானும், சமானுவில் கலீப் கானும், பயானுவில் ஷம்ஸ்கான் அவ்ஹதியும், கல்பி, மகோபா, ஆகிய பகுதிகளில் மகமதுகானும் அரசு செலுத்திவந்தனர். டெல்லியில் நிலவிய அரசியல் குழப்பம் நிலையை மேலும் சீர்குலைத்தது. நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனுமற்ற பல முஸ்லிம் பிரபுக்கள் சதித் திட்டங்கள் பலவற்றை உருவாக்கினர். சிலர், நச்ரத் ஷா என்பவனை அரசனுக்க முயன்றனர். இதுவரையிலும், கங்கை வெளியில் ஒளிந்திருந்த இவன் 1399ஆம் ஆண்டில் டெல்லியைக் கைப்பற்ற முயன்ருன். மல்லு இக்பல், அவனை முறியடித்து விரட்டினுன். 1401ஆம் ஆண்டில், தார் என்னுமிடத்தில் தலைமறைவாக இருந்த சுல்தான் மகமதுக்கு இக்பல் அழைப்பு விடுத்தான். குஜராத்தில் மிகவும் அவமானத்திற்குள்ளாகி, மகமது மிகவும் குன்றியிருந்தான். டெல்லிக்குத் திரும்புமாறு அவனுக்கு வேண்டுகோள் அனுப்பப் பெற்றது. முகமது ஷாவைத் தனது கைப்பாவையாகக்கொண்டு, தன்னுதிக்கத்தைப் பரப்புவதற்கு இக்பல் திட்டமிட்டான். டெல்லிக்குத் திரும்பிய சுல்தான் மகமது, நெடுநாட்களாக இக்பலின் கைக்கருவியாக இருந்தான். மூல்தான், திபால்பூர், மேற்கு சிந்து ஆகியவைகளின் கவர்னர் கிசர்கானுடன், 1405ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் தேதி நடைபெற்ற போரில், முகமது உயிர் துறந்தான். நெஞ்சு உரமற்றவனுகையால், பதவியை மீண்டும் பெற்றும், அவனுல், வாய்ப்பைப் பயன்

Koviloor Acadamy

படுத்திக்கொள்வதற்கு இயலாது போயிற்று. 1413ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் 'கெய்தால்' என்னுமிடத்தில், மகமது மரண மடைந்தான். இருபது ஆண்டுகள், பெயரளவில் டெல்லிக்கு மன்னனாக அவன் இருந்தான். கியாஸ்-உடீன்-துக்ளக்கினால் துவக்கப் பெற்ற அரசகுலம், சுல்தான் மகமதுடன், சீர், சிறப்பு, செல்வம், புகழ் யாவற்றையும் இழந்து, மண்ணோடு மண்ணாக வீழ்ந்தது.

Koviloor Acadamy

5. தில்லி சுல்தானியத்தின் சீர்குலைவு

1. தில்லி : சய்யிதுகளும் லோடிகளும்

அ. சய்யிதுகள் என்று அழைக்கப்படுவோர்

சுல்தான் மகமது (Mahmud) இறந்த பிறகு தில்லி பிரபுக்கள் தங்களுள் மிகவும் சக்திவாய்ந்தவரான தௌலத்கான் லோடியைத் (Daulat khan Lodi) தில்லி அரசராக ஏற்றுக் கொண்டனர். ஆனல் அவருடைய விதி, ஒருசில மாதங்களே அவரை அதிகாரத்தில் இருக்கும்படி செய்தது. கி.பி. 1414 மார்ச்சு மாதத்தில், தைமூரின் பேரில் மூல்தான் நாட்டையும், அதனேடு இணைந்த பிரதேசங்களையும் ஆண்டுவந்த கிசர் கான் (khizr khan) தௌலத்கான் லோடியை எதிர்த்துப் படையெடுத்து வந்து அந்த ஆண்டின் மே மாத இறுதியில் தில்லியைக் கைப்பற்றிக் கொண்டார். தௌலத்கான் கைதியாக்கி ஹிஸ்ஸார் பிரோஸாவிடம் (Hissar Firuza) அனுப்பப்பட்டார். சில வரலாற்ருசிரியர்கள் கிசர்கான் தீர்க்கதரிசி முகமது நபியின் வழித்தோன்றல் என்றும், அதனல் அவரால் நிறுவப்பட்ட அரசமரபு சய்யிது அரசவம்சம் என்று அழைக்கப்பட்டது என்றும் கருதுகின்றனர். கிசரின் மூதாதையர்கள் முதலில் அரேபியாவில் வாழ்ந்திருக்கக்கூடுமாயினும், கிசரின் சார்பாகக் கூறப்படும் இந்த வாதங்கள் ஐயத்திற்குரியனவாகக் காணப்படுகின்றன. கிசர் அரசாட்சிக்கு அடையாளமான மணிமுடியை ஏற்றுக்கொள்ளாமல், தைமூரின் நான்காவது மகனும், தைமூருக்கு அடுத்தபடியாக அரசாட்சிக்கு உரியவருமான ஷா ருக்கின் (Shah Rukh) அரசப் பிரதிநிதியாக ஆள்வதாகக் கூறிக்கொண்டார்; அவருக்குக் கப்பம் அனுப்பியதாகவும் தெரிவித்தார். அவருடைய ஏழாண்டு ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. அந்தச் சமயத்தில் பழைய தில்லி இராச்சியத்தின் பரப்பு ஒரு சிறிய பிரதேசமாகச் சுருங்கியிருந்தது ; அதன் ஆட்சியாளரின் அதிகாரம் தில்லியைச் சுற்றியிருந்த சில மாவட்டங்களின் அளவுவரைதான் பரவியிருந்தது. அந்தப் பகுதிகளிலும், எடாவா,

Koviloor Acadamy

கடேர், காஞேஜ், பாட்டியாலி, கம்பிலா போன்ற பிரதேசங்களின் இந்து ஜமீன்தார்கள் அடிக்கடி அவருடைய அதிகாரத்துக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து கொண்டிருந்தனர். கிசர்கானும் (Khizr khan) அவருடைய பற்றுறுதிமிக்க மந்திரியும் அவரைப் போலவே அஞ்சாநெஞ்சுடன் போரிடுபவருமான தாஜ்-உல் முல்க்கும் (Taj-ul-Mulk) இந்த ஒழியாத அமைதிக் குலைவுகளை எதிர்த்து 1421 ஜனவரி 13-ல் பின்னவரும், 1421 மே 20-ல் முன்னவரும் இறக்கும்வரை போராடிக்கொண்டிருந்தனர். 'நேர்மையான, தாராள குணமுள்ள, மக்களுக்கு நன்மைசெய்ய விரும்புகிற இளவரசர்' என்று பெரிஷ்டா கிசர்கானைப் புகழ்ந்து உரைக்கிறார். ஆனால், அவர் வலிமை மிக்க ஆட்சியாளராயிருக்கவில்லை. கிசர்கான் செய்த முயற்சிகளினால் 'தகுதிக்கேற்ற சில சாதாரண சலுகைகள் இருந்தன...மேலான வலிமையுடைய படையின் முன்பு தாக்கப் பட்டவர்கள் சிறிது நேரம் அடிபணிந்து நின்றனர்; வற்புறுத்தலுக்குப் பணிந்து கப்பங்கட்டினர். அவர்கள் களங்களையும் கோட்டைகளையும் எளிதில் கைவிட்டுச் சென்றனர்; ஆனால் பொதுமக்களின் பாதுகாப்பிலும், மத்திய அரசாங்கத்து மேலாண்மையிலும் உண்மையான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது தெளிவாகிறது.'

கிசர்கான் தமது மரணப்படுக்கையில் தம்முடைய வாரிசாக நியமித்த அவருடைய மகன், முபாரக்ஷா கிசர்கான் இறந்த அன்றைக்கே தில்லிப் பிரபுக்களின் சம்மதத்துடன் தில்லிச் சிம்மாசனத்தில் ஏறினார். அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் யஹியா பின் அஹ்மது சர்ஹிண்டி (Yahiya bin Ahmad sarhindi) அவருடைய நூலான தாரீக்கி-முபாரக் ஷாஹியை (Tarikh-i-Mubarak Shahi) எழுதினார். அந்நூல் அந்தக்காலத்து வரலாற்றை அறிவதற்குச் சிறப்புமிக்க மூலநூலாய் உதவுகிறது. ஆனால், அவருடைய ஆட்சியும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் இல்லாததாய் அவருடைய தந்தையின் ஆட்சியைப்போலவே சப்பென்றிருந்தது. குழப்பங்களை ஒடுக்குவதற்காகச் சில சிறு படையெடுப்புகளைச் செய்ததைத் தவிர இங்குக் குறிப்பிடத்தக்க முக்கியம் வாய்ந்த படையெடுப்புகள் ஒன்றும் நடைபெறவில்லை. அச்சிறு படையெடுப்புக்கள் சுல்தானைத் தம் படைகளுடன் புறப்பட்டுவரும்படி செய்தன. பாடிண்டா, தோஆப் ஆகிய இடங்களில் எழுந்த கிளர்ச்சிகளை முபாரக்ஷா அடக்கமுடிந்தது; மேலும் ஒரு சிறிய பிரதேசத்தில் செலுத்தப்படாமல் தங்கிவிட்ட தொகையை வசூலிக்கவும் அவரால் முடிந்தது. ஆனால், வீரம் மிக்க கோக்கர்கள் மேலும் மேலும் வலிமையுடையவர்களாயினர்; பல முறை அவரைத் தொல்லைப் படுத்தினர். கோக்கர்களின் தலைவரான ஜஸ்ரத் தில்லி இராச்சியம் அழிவுற்றபின் கோக்கர்களுடைய மேலாண்மையை நிறுவிவிடலாம் என்று உறுதியாகப் பேரவாக் கொண்டிருந்தார். இந்து

Koviloor Acadamy

பிரபுக்கள் தில்லி அரசவையிலேயே தங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொண்டனர். 1434 பிப்ரவரி 19ஆம் தேதி சுல்தான் புதிதாகத் திட்டமிட்டு ஜமுனா நதியின்கரைமீது முபாரகாபாத் என்ற நகர் நிர்மாணிக்கப் படுவதைப் பார்வையிட வரும்போது, அதிருப்தியடைந்திருந்த வஸீரான சர்வர்-உல்-முல்க் (Sarvar-ul-mulk) என்பவரின் தலைமையில் சில முஸ்லீம், ஹிந்து பிரபுக்கள் சேர்ந்து செய்த சதிக்கு அவர் பலியானார்.

பிறகு தில்லிப் பிரபுக்கள் கிசர்கானின் பேரரும், கொல்லப்பட்டுக் காலஞ்சென்ற சுல்தானின் வாரிசாக இளவரசாயிருந்த வருமான முகம்மது என்பவரைத் தில்லி சிம்மாசனத்தில் ஏற்றினர். ஆனால் அவரும் 'சிறுபூசல்களுக்கும் சூழ்நிலைகளின் விளையாட்டுக்கும் பலியானார்.' முட்டாள்தனம் நிறைந்த வஸீரான சர்வர்-உல்-முல்க் இறந்த பிறகு தம்முடைய ஆளும் திறமையை வெளிப்படுத்த வாய்ப்புப் பெற்ற போது, அவர் தம்மை எதிரிகளிடமிருந்து காப்பாற்றியவர்களின் நம்பிக்கையையும் இழக்குமளவுக்கு அந்த வாய்ப்பைப் புறக்கணித்தார். மாளவ நாட்டு மகமூத்ஷா கில்ஜி தலைநகர் வரை முன்னேறிச் சென்றபோது சுல்தானின் உதவிக்காக வந்த, லாகூர், சிர்ஹிண்டு இவற்றின் கவர்னரான புகலுல் கான் லோடி விரைவில் தில்லியைக் கைப்பற்றவும் முயற்சி செய்தார். அம் முயற்சி அந்தச் சமயத்தில் தோல்வியுற்ற போதிலும் சய்யிதுகளின் நிலைமை வரவர மிக மோசமாகிக் கொண்டேவந்தது. நிஸாம்-உத்தீன் அகமது எழுதுவதுபோல 'அரசாங்கத்தின் செயல்கள் நாளுக்கு நாள் மிகவும் குழப்பம் நிறைந்ததாக ஆகி வந்தன; தில்லியிருந்து இருபதுக்ரோக்கள் (Krohs) தூரத்திலிருந்த பிரபுக்கள் (சீரழிந்து கொண்டிருந்த பேரரசுக்கு) பற்றுறுதியுடனிருப்பதை உதறிவிட்டு அதை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவும் நேர்ந்தது.'' முகமது ஷா கி.பி. 1445-ல்[1] இறந்த பிறகு, சிதறிய இராச்சியத்தின் ஆட்சியாளராகப் பிரபுக்கள் அவருடைய மகனை நியமித்தனர். அவர் அலாவுதீன் ஆலம் ஷா என்ற சிறப்புப் பெயரைப் பூண்டு அரசரானார். அப்போது அவருடைய இராச்சியம் தில்லி நகரையும் அருகிலுள்ள சில கிராமங்களை மட்டும் கொண்டதாகவே இருந்தது. புதிய ஆட்சியாளர் அவருடைய தந்தையைக் காட்டிலும் கோழையாயும், திறமையில்லாதவராயும் இருந்தார். அவர் 1451-ல் தில்லிச் சிம்மாசனத்தை புகலூல் லோடிக்குக் கொடுத்துவிட்டுத் தமக்குப் விருப்பமான இடமான பதாவூனுக்குக் கேவலமான முறையில் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார். அங்கே, அவர் இன்பங்களில் மூழ்கியவராய், இறக்கும்வரை சிம்மாசனத்தைக் கொடுத்துச் சரண

[1] இந்தத் தேதியைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டு.

Koviloor Acadamy

டைந்ததற்காக எவ்வித வருத்தமும் கொள்ளாமல், தம்முடைய வாழ்க்கையின் மீதிப் பகுதியைக் கழித்தார்.

ஆ. லோடிகள்

புகலூல் கான் ஆப்கானியர்களில் லோடி இனத்தைச்சேர்ந்தவர். அவர் மல்லூ இக்பால் இறந்தபிறகு, இஸ்லாம்கான் என்ற பட்டப் பெயருடன் சிர்இந்தின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த சுல்தான் ஷா லோடியின் மருமகனுவார். மாமன் இறந்த பிறகு, புகலூல் லாகூர், சிர்இந்து இவற்றின் கவர்னரானுர். அலாவுத்தீன் ஆலம் ஷா தாமாகவே தில்லி சிம்மாசனத்தைத் துறந்த போது அவர் 1451 ஏப்ரல் 19ஆம் நாள் ஹமீத் கான் என்ற அமைச்சரின் ஆதரவுடன் அதைக் கைப்பற்றினுர். இவ்வாறு இந்திய வரலாற்றில் முதன் முதலாக ஓர் ஆப்கானிய ஆட்சியாளர் தில்லி சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

தில்லி இராச்சியத்தின் மிகச்சிறு பகுதியை ஆள்வதற்காகவே புகலூல் அழைக்கப்பட்டிருந்தார். அச்சிறு பகுதியும் அப்போது மிகச் சிர்குலைந்த நிலையில் இருந்தது. ஆனுல், அவர் அவருக்கு முந்திய ஆட்சியாளர்களிடத்துக் காணப்பட்ட ஆற்றலைக்காட்டிலும் முற்றிலும் வேறுபட்ட ஆற்றலையும் ஆண்மையையும் பெற்றிருந்தார். போரிடும் இனத்தில் பிறந்திருந்த அவர் சுறுசுறுப்பு மிக்கவராயும், போர்விருப்புடையராயும், ஆசை மிக்கவராயும் இருந்தார். சுல்தானியத்தின் பலத்தை மீண்டும் திரும்பப் பெற வேண்டும் என்று தீர்மானித்தார். அவர் தம்முடைய ஆப்கானிய ஆதரவாளர்களின் உதவியைக் கொண்டு, பழைய மந்திரியான ஹமீத் கானைத் தந்திரமாகச் சிறையிலிட்டு அவருடைய செல்வாக்குக்கு முற்றுப் புள்ளி வைத்தார். ஜான்பூரின் ஆட்சியாளரான மஹ்மூத் ஷா ஷர்க்கி தில்லியின் உரிமையைப் பெற முயன்றபோது அவருடைய முயற்சியைக்கூடத் தவிடு பொடியாக்கினுர். பல ஆண்டுகளாகச் சுதந்திரம் அனுபவித்துவந்த சில சிறு பிரதேசங்களுக்குரிமை பெற்றிருந்தவர்களையும், தலைவர்களையும் அடிபணிய வைத்தார். இவ்வாறு மேவாட்டின் அகமத்கான், சம்பலின் தரியாகான், கோயிலின் இஸாகான், சுகேதின் முபாரக்கான், போங்காவோன், மெய்ன்புரி இவற்றின் ராஜா பிரதாப் சிங்கு, ரேவாரியின் குத்ப் கான், எடாவா, சந்த்வார், தோஆப்பின் மற்ற மாவட்டங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோர் சுல்தானின் அதிகாரத்தை ஒப்புக் கொள்ளும்படி வற்புறுத்தப் பட்டனர். எனினும் சுல்தான் அவர்களைத் தம்முடைய ஆட்சிக்கு இணங்கிப் போகும்படி செய்ய முடியும் என்று கருதி அவர்களைத் தாராள மனப்பான்மையுடன் நடத்தினுர். இன்னும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க அவருடைய சாதனை அண்டை இராச்சியமான ஜான்பூருடன் போர்தொடுத்து

Koviloor Acadamy

வெற்றி பெற்றதேயாகும். ஜான்பூரின் சுதந்திரம் அழிக்கப்பட்டு விட்டது. அவர் உயிரோடிருந்த தம் மூத்த மகனுன பார்பக் ஷாவை 1486-ல் ஜான்பூரின் அரசப் பிரதிநிதியாக அமர்த்தினுர். குவாலியரின் அரசரான கிராத் சிங்கை அடக்கிவிட்டுத் திரும்பியபோது சுல்தான் நோய்வாய்ப்பட்டார். அவருடைய புதல்வர்களான பார்பக் ஷா, நிஜாம் ஷா இவர்களின் ஆதரவாளர்களுக்கும், பேரனுன அஸம்-இ-ஹுமாயினின் ஆதரவாளர்களுக்கும் இடையே சிம்மாசன உரிமை குறித்துச் சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர் ஜலாலி என்ற நகருக்கருகில் 1489 ஜூலையின் நடுப்பகுதியில் தனது இறுதி மூச்சை விட்டார்.

துக்ளக்கு குடும்பத்தைச் சேர்ந்த பிரோஸாவின் காலத்திலிருந்து புகலூலுக்கு முன்புவரை, தில்லிச் சிம்மாசனத்திலிருந்து ஆண்ட மற்ற எல்லாரினும் ஈடில்லாத அளவுக்குப் புகலூல் ஓர் ஆட்சியாளராக மேம்பட்டிருந்தார். துணிவு, சக்தி, தந்திரம் இவற்றைப் பெற்றிருந்த அவர், இந்துஸ்தானத்தில் முஸ்லிம் சக்தியின் மதிப்பை மீண்டும் நிலை நாட்டினுர்; தம் இராச்சியத்தின் அரசாங்கத்தில் சிறிது விறுவிறுப்பை உட்புகுத்தினுர். அரச படாடோபச் சிறப்புக்களைப் பகட்டுடன் வெளிக் காட்டுவதை வெறுத்த அவர் ஏழைகளிடம் அன்பாயிருந்தார். அவர் ஒரு படித்தவராக இல்லாதிருந்தும், கற்றறிந்தோரை ஆதரித்தார். அவர் தம்முடைய நெருங்கிய உறவினர்கள், இனத்தவர்கள் ஆகியவர்கள் தம்முடன், தம்முடைய அதிகாரத்தையும் செல்வச் செழிப்பையும் பகிர்ந்து கொள்ள அனுமதித்து அவர்களுடைய அன்பையும் நம்பிக்கையும் பெற்றிருந்தார்.

புகலூல் இறந்த பிறகு, அவருடைய இரண்டாவது மகனுன நிஸாம் கான், சுல்தான் சிக்கந்தர் ஷா என்ற பட்டப் பெயருடன் 1489 ஜூலை 17 ஆம் நாள் ஜலாலியில் அரசராக அறிவிக்கப் பட்டார். பிரபுக்களில் சிலர் பார்பக் ஷாவின் பெயரைக் குறிப்பிட்டதால், அவருடைய சிம்மாசன உரிமை வாதத்துக்குரியதாயிற்று. ஆனுல், அப்போது பார்பக் தூரமான ஓர் இடத்திலிருந்தமையால், அவர்களுடைய எண்ணம் ஒன்றும் பயனளிக்காமல் போயிற்று. பேரளவிற்குச் சக்தியும், விறுவிறுப்பும் உடையவராயிருந்த சிக்கந்தர் பிரபுக்களில் சிறுபான்மையினர் சேர்ந்து தேர்ந்தெடுத்தமைக்கு ஏற்றவாறு திறமையுள்ளவராய் விளங்கினுர். மாகாண கவர்னர்கள், குறு நிலத்தலைவர்கள், ஜமீந்தார்கள் ஆகியோரின் நெறிதவறிய பான்மையினுல் பெரும்பாலும் சிக்கந்தருக்கு முற்பட்ட ஆட்சிக்காலங்களில் குழப்பமும் அமைதிக்குலைவுகளும் மலிந்திருந்த அந்த இராச்சியத்தை, அவற்றையெல்லாம் அகற்றி விட்டு இராச்சியத்தின் சக்தியைப் பெருக்குவதற்காகச் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டார். முன்னணியில் நின்ற ஆப்கானிய ஜாகீர்தார்களின் விருப்பத்துக்கு முற்றிலும் மாருக அவர்

Koviloor Academy

களுடைய கணக்குகளை எல்லாம் சரிபார்க்க அக்கறை எடுத்துக் கொண்டார். திர்ஹுத், பீஹார் வரை சென்று அவர் வங்காளம் வரை தம்முடைய அதிகாரத்தை வற்புறுத்தி நிலைநாட்டினார்; பீஹார் அரசாங்கத்துக்கு தரியாகானை நியமித்தார்; திர்ஹுத் அரசரைத் தமக்குக் கப்பம் செலுத்தும்படி வற்புறுத்தினார்; வங்காளத்து அலாவுத்தீன் ஹுஸேன் ஷாவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி இருவரும் மற்றவர் இராச்சியத்தின் மீது அனுமதியின்றி நுழையக்கூடாது என்பதை ஒப்புக்கொண்டனர். தோல்பூர், சந்தேரி, இன்னும் மற்ற இடங்களின் தலைவர்களும் இவருக்கு அடிபணிந்தனர். டொவர, பியானு, கோஸில், குவாலியர், போல்பூர் ஆகிய பகுதிகளின் தலைவர்களைச் சிறந்த முறையில் அடக்கி வைத்திருக்கும் நோக்கத்துடன் இப்போது ஆக்ரா நகரம் இருக்குமிடத்தில் 1504-ல் ஒரு புதிய நகரத்தை உண்டாக்கினார். கடைசிக்காலம் வரை பகைமை கொண்ட தலைவர்களைக் வற்புறுத்திக் கீழ்ப்படியவைப் பதற்காகப் பெரும் முயற்சி செய்து வந்த சுல்தான் கி.பி. 1517 நவம்பர் 21ஆம் தேதி ஆக்ராவில் உயிர் நீத்தார்.

சிக்கந்தர் ஐயத்திற்கிடமின்றி அவருடைய அரச மரபினரின் மூன்று ஆட்சியாளர்களில் மிகத்திறமை வாய்ந்தவராவார். அவருடைய மூளை, இதயம் இவற்றின் சிறந்த குணங்களுக்காக அவர் காலத்திலும், பிற்பட்ட காலத்திலும் வாழ்ந்த வரலாற்று ஆசிரியர்கள் அவரை வானளாவப் புகழ்ந்துரைத்தனர். உறுதியான, விழிப்புள்ள, நேர்மையான ஆட்சியாளரான அவர், ஏழைகளுக்காகவும், குறை வேண்டியோர்க்காகவும் அன்புணர்ச்சிகளைத் தம் முள்ளத்தில் வைத்துக்கொண்டிருந்தார். கற்றறிந்தோரை ஆதரித்தார்; தாமே சில பாரசீகச் செய்யுட்களை இயற்றினார். கண்டிப்பான பாரபட்சமின்மையுடன் அவர் நீதி வழங்கினார். தம்முடைய குடிமக்களில் மிகவும் கடைப்பட்ட ஏழைகளின் குறைகளைத் தாமே நேரில் கேட்டார். அவருடைய அரசாங்கத்தின் சிறப்புத்திறமை முக்கியமாக அவருடைய இராச்சியத்தில் அமைதியும் செல்வச் செழிப்பும் நிலவும்படி செய்தது. வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்பட்ட பொருள்களின் விலை மிக மிகக் குறைவாக இருந்தது. எனினும் மதப் பொறுமையின்மையிலிருந்து விடுதலை பெற்றிராதவராய் இருந்தமையால், சில அகௌரவமான செயல்களைச் செய்யவும் நேர்ந்தது.

சிக்கந்தரின் மரணத்திற்குப் பிறகு, அவருடைய மூத்த மகனை இப்ராகீம் 1517 நவம்பர் 21ஆம் நாள் சிம்மாசனத்திற்கு உயர்த்தப்பட்டார். ஆனால் பிரபுக்களின் ஒரு சிறு பிரிவினர் இராச்சியத்தைப் பிரிக்கவேண்டுமென்று வாதாடி, இப்ராகீமின் தம்பியான ஜலால்கானை ஜான்பூர் சிம்மாசனத்தில் ஏற்றினர். ஆனால், இப்ராகீம் அவர்களுடைய முயற்சியைத் தவிடுபொடியாக்கினார். அதனால்

Koviloor Acadamy

ஜலால் ஜான்பூரிலிருந்து ஓட்டம் பிடித்தார். ஆனால் வழியில் பிடிக்கப்பட்டு, சுல்தானின் துணையின்பேரில் கொலைசெய்யப்பட்டார். புதிய சுல்தான் படைத்துறை ஆற்றலைப் பெற்றிருந்தார். ஆனால் நல்லெண்ணமும், மித உணர்ச்சியும் இல்லாதவராயிருந்தார். இது கடைசியில் அவருக்கு அழிவைத் தேடித்தந்தது. பலமும், சிறப்புத் திறமையும் எய்தும் நோக்கத்துடன் அவர் அறிவின்றி, அரசாங்கத்தின் அதிகாரிகளின் மரபைச் சேர்ந்தவர்களும், பலம் வாய்ந்த பிரபுக்களுமான லோஹானி, பார்முலி, லோடி இனமக்களின் பிரபுக்களை ஒடுக்குவதற்கான திட்டத்தில் இறங்கியிருந்தார். கடுமையான நடவடிக்கைகள் மூலம் அவர் ஆப்கானியப் பிரபுக்களின் அனுதாபத்தை இழந்தார். அவர்களுடைய பற்றுறுதியையும் ஈடுபாட்டையும் இழந்தார். இது அவருடைய அதிகாரத்தை முழுமையாக அவர்கள் புறக்கணித்ததிலிருந்து தெளிவாகப் புலனாகின்றது. இது மேலும் மேலும் சுல்தானின் மனக்கசப்பை மிகுதியாக்கியது ; அவர் பிரபுக்களிடம் இன்னும் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முற்பட்டார். ஆனால், பிரபுக்கள் தங்கள் பொறுமையை இழந்தனர். பீஹார்ப் பிரபுக்கள் தரியாகான் லோஹானியின் தலைமையில் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தனர். இப்ராகீம், தௌலத்கான் லோடியின் மகனும், லாகூரின் ஓரளவிற்கு உரிமை பெற்ற கவர்னருமான தில்லாகானை அனுதாபமற்ற முறையில் நடத்தியதால் பிரபுக்களின் அதிருப்தி ஒரு முடிவை அடைந்தது. தௌலத்கான் லோடியும், சுல்தான் இப்ராஹிமின் மாமனும், தில்லிச் சிம்மாசனம் தமக்குரிமையுடையது என்று கூறிக்கொண்டிருந்தவருமான ஆலம்கானும் காபூலின் தைமூரிய ஆட்சியாளரான பாபரை இந்தியாவின்மீது படையெடுக்கும்படி தூண்டினர். இவ்வாறு பழிக்குப் பழிவாங்கும் எண்ணமும், பேராசையும், தொல்லை யுண்டாக்கியமையும், அன்பின்மையும், சீர்குலைந்துகொண்டிருந்த தில்லிச் சுல்தானியம் கடைசியாக அழியுமாறு செய்தது. மேலும், இந்தியாவில் ஒரு புதிய துருக்கிய ஆட்சி ஏற்படும்படி செய்தன.

உண்மையில் முகம்மது பின் துக்ளக்கின் கடைசிக்காலத்தில் தோன்றிய நிலைமைகளில் தில்லிச் சுல்தானியத்தின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாய் இருந்தது. அச் சுல்தானின் அறிவின்மை சீர்குலைவுக்கு ஒரு வழியை ஏற்படுத்திவிட்டது. அச்சீர்குலைவு அவருக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்த பிரோஸ் ஷா, ஜாகீர் முறையைப் புதுப்பித்தல், அடிமைத் தொழிலைப் பரப்புதல், முஸ்லிம் அல்லாதவர்களின்மேல் ஜெசியா வரியைச் சுமத்தல், மதத்தில் அவநம்பிக்கை கொண்ட முஸ்லிம் மதப் பிரிவினரைத் தண்டித்தல் போன்ற அறிவில்லாத நடவடிக்கைகளை மேற்கொண்டதாலும், அவருடைய பலவீனத்தாலும் விரைவாகச் சென்றது. இதைப் பலவீனமான சய்யிதுகளும், நாட்டு நலனில் அக்கறையில்லாத லோடிகளும் தடுக்க முடியவில்லை.

Koviloor Acadamy

சில படைத்துறை வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், லோடிகள் ஆட்சி முறை அமைப்பில் நலம் மிகுந்த, வலிமையான கூறு எதையும் புகுத்தத் தவறினர்; அடக்குமுறைக் கொள்கை ஒன்றினுல் படையைச் சேர்ந்தவர்களும், அதிகாரிகளுமாயிருந்த பிரபுக்களை ஒடுக்க முயற்சி செய்து ஒரு மாபெருந் தவற்றைச் செய்தனர். தில்லி சுல்தானியத்தின் வளர்ந்துவரும் சீர்குலைவின் அடையாளமாகக் கருதப்படக் கூடிய வெளியில் நிகழும் பேராபத்து அச்சீர்குலைவின் முடிவை நோக்கி விரைந்து செலுத்தியது. உள்நாட்டுப் போர்கள் தில்லி சுல்தானியத்தின் வலிமையை அரித்துத் தின்றுகொண்டிருக்கும்போது தைமூரின் படையெடுப்பு அதன் ஒழுங்கு முறையை அழித்துப் பிரபுக்களின் தன்னலச் சிக்கல்களை மிகுதிப்படுத்தியது. அப்பிரபுக்கள் பிற்காலத்து இடைக்கால ஐரோப்பாவின் பிரபுக்களைப்போலவே, இராச்சியம் முழுவதையும் அமைதிக் குலைவிலும், குழப்பத்திலும் ஆழ்த்தினர். அவற்றை அறிவுமிக்க நடவடிக்கைகள் மூலம் அகற்றுவது என்பது தில்லியின் பலவீனமான அரசர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. மேலும், துக்ளக்குகளும் அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்களும், இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குரிய சீர்திருத்தங்களைப் புகுத்தச் சிறிதும் முற்படவில்லை. மத்தியகாலத்தில் இந்தியாவில் சமுதாய ஒழுங்கு நிலை யுணர்ச்சியும், பிரதேச அரசியல் ஒற்றுமையும் தோன்றவில்லை. இவ்வாறு துருக்கியர்கள், ஆப்கானியர்கள் ஆகியவர்களின் படைபல சர்வாதிகாரம், தன்னிடம் சக்தியுள்ளவரைதான், வெவ்வேறு மாகாணங்களில் இருந்த மக்களையும், கவர்னர்களையும் பலாத்காரத்தால் கீழ்ப்படிய வைக்க முடியும். மத்திய அதிகாரம் பலவீனமுற்றவுடனே இந்தியாவில் சாதாரணமாகக் காணப்பட்ட பிரிந்துசெல்லும் மனப்பான்மைகள் ஏற்றம் பெற்றன. தில்லிச் சுல்தானியத்தின் அழிவின்போது பல சுதந்திர இராச்சியங்கள் தோன்றின. அவற்றின் வரலாற்றை இங்கே நாம் சுருக்கமாகக் கவனிப்போம்.

2. வங்காளம்

தில்லிச் சுல்தானியத்திற்கு வங்காளத்தை அடக்கி வைப்பது எப்போதும் தனது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அருஞ்செயலாகவே இருந்து வந்தது. வங்காளம் முதலில் தங்கள் சுதந்திரத்தை நிலை நிறுத்திய மாகாணங்களுள் ஒன்ருயிருந்தது. அது தில்லியிலிருந்து நெடுந் தூரத்தில் இருந்ததாலும், செல்வ வளம் மிகுதியாகப் பெற்றிருந்ததாலும், மத்திய அதிகாரத்தை எதிர்த்துக் கவர்னர்கள் அடிக்கடி கிளர்ச்சி செய்யும்படி தூண்டிவந்தது. நாம் ஏற்கெனவே பார்த்தபடி மத்திய அதிகாரம் இல்டுட்மிஷ், பால்பன் முதலியோருக்கு மிகுந்த தொல்லையைக் கொடுத்தது. பால்பனின் வழித்தோன்றல்களின்கீழ்

Koviloor Academy

வங்காளம் தில்லி அரசாங்கத்தின் பிடிப்பிலிருந்து விடுதலைப் பெற்றது. ஆனால், தில்லி அரசாங்கத்தின் அதிகாரம் கியாஸ்-உத்தீன் துக்ளக் காலத்தில் மீண்டும் நிலைநாட்டப்பட்டது. கியாஸ்-உத்தீன் துக்ளக் கியாஸ்-உத்தீன்-பஹதூர் ஷாவைத் தோற்கடித்துவிட்டு அம் மாகாணத்தை மூன்று தனித்தனி ஆட்சிப் பிரிவுகளாகப் பிரித்து அவற்றிற்கு முறையே லக்னோதி, சாட்காவோன், சோனூர் காவோன் என்ற நகரங்களைத் தலைநகரங்களாக்கினார். முகம்மது பின் துக்ளக்கு பட்டத்துக்கு வந்தவுடனே லக்னோதி அரசாங்கத்துக்கு காதர் கானையும், சாட்காவோனுக்கு இஸ்ஸுத்தீன் அஸம்-உல்-முல்க்கையும் நியமித்து விட்டு, சோனூர்காவோன் அரசாங்கத்திற்குக் கியாஸ்-உத்தீன் பகதூர் ஷாவை நியமித்து அவரை மீண்டும் ஆட்சிக்குரியவராக்கினார். ஆனால் அவருடன் அவருடைய மாற்றுந்தாய் மகனாவரும், பகராம் கான் என்ற பெயரால் நன்கு அறியப்பட்டவருமான தார்த்தார்கானையும் கூட்டாக இருக்கும்படி செய்தார். எனினும் வங்காளத்தின் இப்பிரிவினை, அம் மாகாணத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வந்த தொல்லைகளை அகற்ற முடியவில்லை. கியாஸ்-உத்தீன்-பகதூர் விரைவில் எதிர்த்தெழுந்து, சோனூர்காவோனிலும், கியாஸ்பூரிலும் இருந்த நாணயச்சாலைகளிலிருந்து நாணயங்களை வெளியிட்டார். ஆனால், அவர் விரைவில் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். பகராம் கான் சோனூர்காவோனின் தனிக் கவர்னரானார். அவர் கி.பி. 1336-ல் இறந்தார். அதன்பின் அவருடைய கவசந்தாங்கியாக இருந்த பக்ர் உத்தீன் (Fakhr-ud-din) உடனே பக்ர்-உத்தீன் முபாரக் ஷா என்ற பட்டப் பெயருடன் சோனூர்காவோனின் ஆட்சியாளராக அறிவித்துக் கொண்டார். விரைவில் அலாவுத்தீன் ஆலி ஷாவும் (கி.பி. 1339-1345) வட வங்காளத்தில் தம்மைச் சுதந்திரமாக்கிக் கொண்டு லக்னோதியிலிருந்து பாண்டுவாவுக்குத் தலைநகரை மாற்றிக் கொண்டார். இடைவிடாமல் பத்தாண்டுக் காலம்[1] ஆட்சி செய்த பிறகு பக்ர் உத்தீன் முபராக் ஷா இயற்கை மரணம் எய்தினார் என்றும், சோனூர்காவோன் சிம்மாசனத்தில் அவருக்குப் பிறகு அவருடைய மகனாகக் கருதக்கூடிய இக்தியார்-உத்தீன் காஜி ஷா அமர்ந்தார் என்றும் சில நாணங்கள் தரும் சான்றின் மூலம் உறுதியாகக் கூறப்படுகின்றன.

கடைசியில் ஏறக்குறைய கி.பி. 1345-ல், அலாவுத்தீன் ஆலி ஷாவின் மாற்றுந்தாய் மகனான ஹாஜி இலியாஸ் ஷாம்ஸ் உத்தீன்

[1] பட்டசாலி (Bhattasali), வங்காளத்தின் சுதந்திரச் சுல்தான்கள் (Independent Sultans of Bengal பக். 17.) முஸ்லிம் வரலாற்றுக் கோப்பாளர்கள் பக்ர் உத்தீனின் சாவைப்பற்றி வேறுவகையான தகவல்களைத் தருகின்றனர். ரியாஜ் என்ற நூலின் ஆசிரியர் அவர் அலாவுத்தீன் ஆலி ஷாவினால் கொல்லப்பட்டார் என்கிறார்; முகம்மது பின் துக்ளக் சோனூர்காவோன் சென்று பக்ர் உத்தீனைப் பிடித்துத் தில்லிக்கு இட்டுச் சென்று கொன்றார் என்று பதௌனி கூறுகிறார்; பக்ர் உத்தீன் ஹாஜி இலியாஸினால் கொல்லப்பட்டார் என்று டும்ஸ் - இ - கிராஸ் அபிப் குறிப்பிடுகிறார்.

Koviloor Acadamy

இலியாஸ் ஷா (Shams-ud-din-Iliyas Shah) என்ற பட்டப் பெயருடன் வங்காள மாகாணம் முழுமைக்கும் சுதந்திர ஆட்சியாளராகத் தம்மை ஆக்கிக்கொண்டார். அவர் பட்டத்துக்கு வந்தவுடனே தம்முடைய அதிகாரத்தை வெவ்வேறு திசைகளில் பரப்பினார். கி.பி. 1352-ல் சோனார்காவோனின் கிழக்கு இராச்சியத்தை இணைத்துக் கொண்ட பிறகு அவர் ஒரிஸ்ஸா, திர்ஹுத் இராச்சியங்களில் கப்பம் வசூலித்தார் என்றும், வாரணாசி வரை சென்றார் என்றும் அறியப்படுகிறது. இவ்வாறு அவருடைய செயற்பாடுகளால் தில்லி இராச்சியத்துக்கு அதன் கிழக்கு எல்லை தொல்லை மிக்கதாக ஆகி விட்டது. அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் துக்ளக்கு குடும்பத்தைச் சேர்ந்த பிரோஸ் இழந்து விட்ட வங்காள மாகாணத்தைத் திரும்பப் பெற முயற்சி செய்தார். ஆனால் அவர் தோல்வியே கண்டார். இலியாஸ் கி.பி. 1357-ல் பாண்டுவாவில் இறந்தார். அவருடைய ஆட்சியில் அமைதியும் செல்வச் செழிப்பும் நிலவியிருந்தன. அவ்வுண்மை, 'தேசியத்துக்குரிய நாணயங்கள் புகுத்தப்பட்டதாலும், அமைதிக்காலக் கலைகளில், சிறப்பாகக் கட்டடக்கலையில், சுவையார்வம் வளர்ந்து வந்ததாலும் நன்கு அறியப்படுகிறது.'

இலியாஸுக்குப் பிறகு அவருடைய மகன் சிக்கந்தர் ஷா பட்டத்துக்கு வந்தார். அவருடைய ஆட்சியின் தொடக்கத்தில் தில்லி சுல்தான் வங்காளத்தைத் திரும்பப் பெறுவதற்காக இரண்டாம் முறை முயற்சி செய்தார்; ஆனால் அவர் ஏமாற்றமுற்றுத் திரும்ப நேரிட்டது. ஏறக்குறைய முப்பத்தாறு ஆண்டுகள் சிறப்பு மிக்க ஆட்சியைப் புரிந்த பிறகு சிக்கந்தர் தம்முடைய மகனான கியாஸ்-உத்தீன் ஆஸமுடன் பாண்டுவாவுக்கு அருகில் கோவால்பாராவில் செய்த போரில் பெரிதும் 1393 அக்டோபரில் உயிர் துறந்தார். அவருடைய ஆட்சி செல்வச் செழிப்புடன் இருந்தது என்பது ஆதினாவில் அவரால் கட்டப்பட்ட மிகக் கம்பீரமான மசூதியாலும், எண்ணிக்கையும், வகைப்பாடும், மேல் வரைவுகளில் வளமும் மிகுந்த நாணயங்களாலும் அறியப்படுகின்றன. அடுத்த ஆட்சியாளரான கியாஸ் உத்தீன் ஆஸம் புகழ் பெற்ற கவிஞரான ஹாபிஸின் (Hafiz) செயலாளராவார். சட்டத்தின் மீது ஆழ்ந்த மதிப்புக் கொண்டிருந்த அவர் திறமை வாய்ந்த ஓர் இளவரசராயிருந்தார். கி. பி. 1408-ல் சீனப் பேரரசரான ஹுயி-தீ (Hui-ti) யின் போட்டியாளரான யுங்-லோ (Yung-lo) விடமிருந்து ஒரு தூதுக்குழு தம்மிடம் வரப் பெற்றார். பதிலாகக் கி.பி. 1409-ல் ஒரு தூதுக் குழுவை இங்கிருந்து அனுப்பினார். ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு கியாஸ் உத்தீன் ஆஸம் ஷா கி. பி. 1410-ல் இறந்தார். அவருக்குப்பின் சைப்-உத்தீன் ஹம்ஸா ஷா (Saif-ud-din Hamza Shah) பட்டத்துக்கு வந்தார். ஆனால் ஏறக்குறைய அந்தச் சமயத்தில், பாதூரியா, தினஜ்பூர் இவற்றின் ஜமீந்தாராயிருந்த ராஜா கணேஷ் என்ற பிராமணர்

Koviloor Acadamy

பலம் மிகுந்தவரானர். ஹம்ஸா பெயரளவில் மட்டும் ஓர் ஆண்டு சில மாதங்கள்வரை அரசாண்டார். முஸ்லிம் வரலாற்ருசிரியர்கள் கருத்துப்படி கணேஷ் வங்காளத்தை ஒரு சுதந்திர அரசராக ஆண்டார்; பின்பு தம்முடைய மகனுன ஜாடுவுக்கு ஆட்சியை அளித்தார் ; பிறகு ஜாடு இஸ்லாமைத் தழுவிக்கொண்டு ஜலால்-உத்தீன் முஹம்மது ஷா என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டார். அவருடைய நாணயங்களில் பல கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் ராஜா கணேஷ் என்ற பெயரைத் தாங்கிய ஒரு நாணயம் கூட இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அதனுல் கணேஷ் முழு அதிகாரத்தைப் பெற்றிருக்க மாட்டார் என்றும் அவர் கையில் பொம்மைகளாக இருந்தவர்களும், இலியாஸ் ஷாவின் வழித்தோன்றல்களுமான அரசர்களின் பெயரில் உண்மையான சர்வாதிகாரத்தைச் செய்து வந்திருப்பார் என்றும் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு பெயரளவில் அரசராயிருந்தவர்கள், கி.பி. 1411-க்கும் 1413-க்கும் இடையில் சிம்மாசனத்தைப் பெற்ற ஷிஹாப் உத்தீன் பாயஸித் ஷாவும், அவருடைய மகனும், அவருக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவருமான அலாவுத்தீன் பிரோஸ் ஷாவும் ஆவர். அவர்களுடைய நாணயங்களில் சில இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர் பட்டசாலி, ராஜா கணேஷும் தனுஜமர்தன தேவரும் ஒன்றே என்று கூறுகிருர். தூரப் பிரதேசங்களான பாண்டுவா, சுவர்ண கிராமா, சிட்டகாங் ஆகிய இடங்களில் அச்சிடப்பட்டதும், வங்காள எழுத்துக்களில் வடமொழிக் கதைகளைக் கொண்டிருப்பதுமான தனுஜமர்தன தேவரின் சில நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விருவரும் வெவ்வேருன ஆட்களோ என்று மீண்டும் சிலர் கருதிவருகின்றனர்.

கணேஷின் அரச மரபின் ஆட்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஜலால் உத்தீன் முகமது கி.பி. 1431-ல் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவருடைய மகன் ஷம்ஸ்-உத்தீன் அகமத் கி.பி. 1442 வரை அரசாண்டார். இந்த முடிமன்னரின் கொடுங்கோன்மை அவரைக் குடிமக்கள் எல்லோரும் மிகுதியாக வெறுக்கும்படி செய்தது. அவரும் அவருடைய அரசாங்கத்து இரண்டு அதிகாரிகளான ஷாதீகான், நாஸிர்கான் ஆகிய இருவரும் செய்த சதிக்கு இரையானுர். நாஸிர்கான், ஷாதீகான் இருவரும் வங்காளச் சிம்மாசனத்துக்காகப் பேராசை கொண்டிருந்தமையின் விரைவில் அவ்விருவரும் தங்களுக்குள் ஒருவர்மீது ஒருவர் பொருமை கொண்டனர். நாஸிர் கான் அவருடைய போட்டியாளரான ஷாதீகானைக் கொன்ருர். ஆனல், விதி ஒரு சில நாட்களே அவர் தம்முடைய அதிகாரத்தைச் செலுத்த அனுமதித்தது. ஏனெனில், ஷம்ஸ்-உத்தீன் அகமத்மீது பற்றுக்கொண்டிருந்த பிரபுக்கள் விரைவில் அவருடைய அதிகாரத்தை எதிர்த்தனர் ; அவரைக் கொன்றுபோட்டனர். பின்பு அவர்கள் ஷாஜி இலியாஸின் பேரனுன நாஸிர்-உத்தீனைச் சிம்மாசனத்

Koviloor Acadamy

தில் வைத்தனர். அவர், அவருடைய நாணயங்களில் காணப்படுவது போல, நாஸிர்-உதீன் அப்துல் முஸப்பர் மகமூத்ஷா என்ற பட்டப் பெயரைத் தரித்துக் கொண்டார். இவ்வாறு இலியாஸ் ஷாஹியின் மரபினரின் ஆட்சி மீண்டும் நிலைபெறலாயிற்று.

சில நாணயங்களிலிருந்து அறியப்படுவதுபோல, நாஸிர்-உத்தீன் மகமூத் ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் அமைதியாக நாட்டை ஆண்டார். கௌர் என்ற இடத்தில் சில கட்டடங்களையும், சாட்காவோனில் ஒரு மசூதியையும் கட்டிய பெருமை அவரைச் சாரும். கி.பி. 1460-ல் அவர் இறந்ததும் அவருடைய மகன் ருக்னுத்தீன் பார்பக் ஷா வங்காளச் சிம்மாசனத்தில் ஏறினார். மிகுந்த எண்ணிக்கையுடைய அபிசீனிய அடிமைகளை முதலில் வைத்திருந்த இந்துஸ்தான ஆட்சியாளர் அவரேயாவர், அந்த அடிமைகளில் சிலர் உயர்ந்த பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர். குலாம் ஹுஸேன் சலிமின் கருத்துப்படி, பார்பக் 'புத்திக்கூர்மை வாய்ந்த, சட்டத்தை கடைப்பிடிக்கக்கூடிய ஓர் அரசராவார்.' அவர் கி.பி. 1474-ல் இறந்தார். அவருக்குப்பின்பு அவருடைய மகன் ஷம்ஸ் உத்தீன் யூசுப் ஷா பட்டத்திற்கு வந்தார். அவர் கல்வெட்டுக்களில் ஷம்ஸ்-உத்தீன் அபுல் முஸப்பர் யூசுப் ஷா என்று கூறப்படுகிறார். அவர் நற்குணம் நிறைந்தவராயும், கல்வியறிவுடையவராயும், பக்தியுள்ளவராயும் இருந்தார். 1481 வரை அரசாட்சி செய்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் சில்ஹெட்டை (Sylhet) முஸ்லிம்கள் வென்றனர் என்று கூறப்படுகிறது. அவருடைய மரணத்திற்குப் பின்பு, பிரபுக்கள் அவருடைய மகனை இரண்டாம் சிக்கந்தரைச் சிம்மாசனத்தில் வைத்தனர். ஆனால் அவர் புத்திக் கோளாறு உள்ளவராகக் காணப்பட்டமையால் உடனே அவரை அகற்றிவிட்டு நாஸிர் உத்தீன் மகமூதுவின் மகனை ஜலால்-உத்தீன் பாத்ஷாவைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். பாத்ஷா வளர்ந்து வரும் அபிசீனியர்களினால் உண்டாகக்கூடிய கேடுகளை உணரும் அறிவுடையவராய் இருந்தார். ஆனால் அதைத் தடுப்பதற்காக அவர் செய்த முயற்சி அவருடைய உயிரையே குடித்து விட்டது. அதிருப்தியடைந்த அபிசீனியர்கள் ஒரு பேடியின் தலைமையின்கீழ் அவருக்கு எதிராகச் சதி செய்து கி.பி. 1486-ல் அவரைக் கொலை செய்தனர். அப்பேடி பார்பக் ஷா, சுல்தான் ஷாஜாதா என்ற பட்டப் பெயருடன் வங்காளச் சிம்மாசனத்தை வலிந்து கைப்பற்றிக் கொண்டார். ஆனால், சில மாதங்களுக்குள் பார்பக் இந்தீல் கான் (Indil Khan) என்பவரால் கொலை செய்யப்பட்டார். இந்தீல் கான் ஓர் அபிசீனியராயிருந்தாலும், திறமைமிக்க ஒரு படைத்தளபதியாக இருந்தார். பாத்ஷாவின் மனைவியாலும், கௌர் நாட்டு அரசவையினராலும் வற்புறுத்தப் பட்டதால், இந்தீல் கான், சிறிது காலம் தயக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த பிறகு, சைப் உத்தீன் பிரோஸ் என்ற பட்டப் பெய

Koviloor Acadamy

ருடன் வங்காளச் சிம்மாசனத்தில் ஏறினர். ரியாஜ் என்ற நூலின் ஆசிரியர் கூறுவதை நம்புவோமானல், திறமை வாய்ந்த ஆட்சியாளர் என்றும், தளபதி என்றும் மக்கள், கொண்டிருந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு அவருடைய நடவடிக்கைகள் இருந்தன என்றும் கொள்ள வேண்டும். ஆனல் அவர் வேறுபாடின்றியும் அளவுக்கு மீறியும் கொடையுள்ளம் உடையவராயுமிருந்தார். அவர் கி.பி. 1489-ல் இறந்தார். அப்போது பிரபுக்கள் பாத்ஷாவின் உயிரோடிருக்கும் ஒரு மகனை, இரண்டாம் நாஸிர் உத்தீன் மஹ்மூத்ஷா என்ற பட்டப் பெய ருடன் சிம்மாசனத்தில் ஏற்றினர். ஆனல் அவர் கி.பி. 1490-ல் பேராசை பிடித்த சீதீ பத்ர் என்ற அபிசீனியரால் ஒழிக்கப்பட்டார். சீதீ பத்ர் ஷாம்ஸ்-உத்தீன் அபுநஸர் முஸபர்ஷா என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனத்தைக் கைப்பற்றினர். இந்த அபிசீனியரின் ஆட்சி கொடுமை மிக்கதாயும், அமைதிக்குலைவுடையதாயும் மூன்று ஆண்டுகளுக்குமேல் சில மாதங்கள் வரை நடைபெற்றது. அந்த ஆட்சி படை வீரர்களிடையேயும், அதிகாரிகளிடையேயும் பரந்த அதிருப்தியை உண்டாக்கி விட்டது. பிறப்பால் அராபியரான அவருடைய அறிவுமிக்க அமைச்சரான அலாவுத்தீன் ஹுஸேனும் அதிருப்தி கொள்ளத் தொடங்கினர். அவர்கள் எல்லோரும் கௌரில் நான்கு மாதங்கள் அபிசீனிய அரசரை முற்றுகையிட்டனர். அப் போது அவர் உயிர் நீத்தார். பிறகு வங்காளப் பிரபுக்கள் அலாவுத் தீன் ஹுஸேன் ஷாவை அவருடைய தகுதிக்காகவும் திறமைக்காகவும் (1493-ல்) சிம்மாசனத்தில் ஏற்றினர்.

அலாவுதீன் ஹுஸேன் ஷா பட்டத்துக்கு வந்தது ஒரு புதிய அரச மரபின் ஆட்சித் தொடக்கத்தைக் குறிக்கிறது. அந்த அரச மரபு ஏறக்குறைய அரை நூற்றுண்டு ஆட்சி செலுத்தியது. அந்த அரசமரபைச் சேர்ந்தவர்கள் பெருமைக் குரிய பல்வேறு பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஹுஸேன் ஷாவின் கல்வெட்டுக் கள் மிகப் பல இருக்கின்றன. அவருடைய நாணயங்களும், அவருடைய மகனுன நுஸ்ரத்ஷாவின் நாணயங்களும் பலவகைப் பட்டவையாயும், எண்ணிக்கையில் மிகுதியாயும் கிடைத்துள்ளன. நல்லறிவும் அனுபவமும் மிக்கவராயிருந்த ஹுஸேன்ஷா வங்காளச் சிம்மாசனத்தில் ஏறிய அரசர்களுள் பெரும் புகழ்பெற்ற ஒருவராவர். தம்முடைய இராச்சியத்தின் உள்நாட்டு ஆட்சி முறையில் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காக, அவர் அரண்மனைக் காவலர்களின் அதி காரத்தை ஒடுக்கினர். அவருக்கு முற்பட்ட ஆட்சிக் காலங்களில் அரண்மனைக் காவலர்கள் ரோமில் இருந்த பிரிடோரியன் காவல் காரர்களை (Praetorian Guards)ப் போன்றதொரு நிலையில் இருந்தனர். அபிசீனியர்களின் மிகுதிப்பட்டுவந்த செல்வாக்கு ஆட்சிக்குப் பெருந்தொல்லையாக இருந்து வந்தமையின் அபிசீனியர்களைத் தம் இராச்சியத்தை விட்டே விரட்டினர். கி.பி. 1494-ல் தில்லியின் சிக்கந்தர் லோடியால் இராச்சியத்தைவிட்டுத் விரட்டப்பட்டு

Koviloor Acadamy

வங்காளத்தை நோக்கி ஓடிவந்த ஜான்பூர் நாட்டு ஹுஸேன் ஷா ஷர்க்கியை, மரியாதையுடன் வரவேற்றார். நாடோடியான அந்த அரசர் கி.பி. 1500-ல் இறக்கும் வரை(பீஹாரில் பாகல்பூர்க்கு அருகில்)[1] இருந்த கோல்காங்க் (Colgong) என்ற இடத்தில் தங்கி வாழுமாறு அனுமதிக்கப்பட்டார். தம்முடைய தலைநகருக்கருகே ஒழுங்கை நிலைநாட்டிய பிறகு ஹுசேன் ஷா, வங்காளத்தின் இழந்த பிரதேசங்களை மீட்பதற்காக முயன்றார். அவர் தம்முடைய இராச்சியத்தைத் தெற்கே ஒரிஸ்ஸாவின் எல்லைவரை பரவச்செய்தார்; ஜான்பூரின் ஷர்க்கிகளிடமிருந்து மகதத்தைத் திரும்பப் பெற்றார். அஸ்ஸாம் பகுதியில் அஹோம் இராச்சியத்தின் மீது படையெடுத்தார். 1498-ல் கோச் பீஹாரில் (Koch Bihar) இருந்த காமடாபூரைக் கைப்பற்றினர். அஸ்ஸாம் மீண்டும் அதனுடைய பழைய அரசால் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. பிறகு ஹுசேன் ஷா தம்முடைய இராச்சியத்தின் எல்லைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டார். இராச்சியத்தின் பல்வேறு பாகங்களிலும் மசூதிகளையும், அறக்கூழ்ச் சாலைகளையும் கட்டினர். அவற்றை வைத்திருப்பதற்காகப் போதிய அறக்கட்டளைகளை ஏற்படுத்தினர். அவர் 1518-ல் இறந்தார். அவருக்குப் பின் அவருடைய மூத்த மகன் நாஸிப்கான், நாஸிர் உத்தீன் நுஸரத் ஷா என்ற பட்டப்பெயருடன் பட்டத்திற்கு வந்தார். இந்தியாவின் மற்ற பல முஸ்லீம் அரசர்களைப் போல அன்றி, நுஸ்ரத் ஷா தம்முடைய சகோதரர்களிடம் மிகத் தாராளமாயிருந்தார், அவர்களுடைய மரபுரிமைகளை இரட்டிப்பாக்கினர். அவர் திர்ஹுத்தின் (Tirhut) மீது படையெடுத்துச் சென்று, அதன் அரசரைக் கொன்றார். அங்கே அதன் ஆட்சியைக் கவனித்துக்கொள்வதற்காக அவருடைய சொந்த மைத்துனர்களான அலாவுத்தீன், மக்தூமி-ஆலம் ஆகியோரை நியமித்தார். அவர் கலை, கட்டடக்கலை, இலக்கியம் இவற்றின் புரவலராக இருந்தார். அவர் கௌரில் 'பெரிய பொன் மசூதி' என்னும் பாரா சோனு மஸ்ஜித் (Bara Sona Masjid), கதம் ரசூல் (நபியின் பாதம்) என்ற புகழ்பெற்ற இரு மசூதிகளைக் கட்டுவித்தார். அவருடைய துணையின்கீழ் மகாபாரதத்தின் வங்காள மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது. அவர் கடைசியில் 1533-ல் அரண்மனைப் பேடிகளால் கொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின்பு அவருடைய மகன் அலாவுத்தீன் ஃபிரூஸ் ஷா பட்டத்திற்கு வந்தார். அவரும் மூன்று மாதங்கள் ஆட்சி செலுத்திய பிறகு அவருடைய மாமனை கியாஸ் உத்தீன் மஹ்மூத் ஷாவால் கொல்லப்பட்டார். ஷெர்கான் சூரினல் வங்காளத்திலிருந்து துரத்தப்பட்ட ஹுசேன் ஷாஹி அரசமரபில் கடைசி அரசர் கியாஸ் உத்தீன் மஹ்மூத் ஷாவே யாவர்.

1. கோல்காங்கில் பல முஸ்லிம் கல்லறைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஹுஸேன்ஷா ஷர்க்கியினுடையது என்று கருதப்படுகிறது.

Koviloor Acadamy

3. வடக்கு, மேற்கு இந்திய மாகாணங்களில் சுதந்தரச் சுல்தானியங்கள்

அ. ஜான்பூர்

துக்ளக்கு குடும்பத்தைச் சேர்ந்த பிருஸால், தம்முடைய ஒன்று விட்ட சகோதரரும், புரவலருமான முகமது ஜானுவின் நினைவை அழியாமல் செய்வதற்காகக் கட்டப்பட்டதே ஜான்பூர் நகரமாகும். தைமூரின் படையெடுப்பை அடுத்து ஏற்பட்ட குழப்பக்காலத்தின் போது, எப்படி காஜா ஜஹான் தில்லி சுல்தானியத்துக்கு அடங்கியிருப்பதை விடுத்து, தம்முடைய பட்டப்பெயரான 'மலிக்-உஷ்-ஷர்க்' என்ற பெயரை ஒட்டி ஷர்க்கி அரசமரபு என்று அழைக்கப்படுகிற சுதந்தர ஆட்சியாளரையுடைய அரசமரபை ஜான்பூரில் தோற்றுவித்தார் என்பதை நாம் முன்பு பார்த்திருக்கிறோம். அவர் 1399-ல் தம்முடைய தத்துப்பிள்ளையான மலிக்கரன்புல் என்பவருக்கு ஆட்சியுரிமையை விட்டுவிட்டு இறந்தார். மலிக்கரன்புல் (Malik Qaranful) முபாரக் ஷா ஷர்க்கி என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டார். குறுகிய ஆட்சிக்குப் பிறகு முபாரக் ஷா 1402-ல் இறந்தார். அவருக்குப் பின்பு அவருடைய தம்பி இப்ராகீம் ஷா ஷர்க்கி ஆட்சிக்கு வந்தார். இப்ராகிம் சுமார் முப்பத்து நான்கு ஆண்டுகள் அரசாண்டார். ஷர்க்கி அரசமரபின் மிகச்சிறந்த திறமை படைத்த அரசராக இருந்தார். பண்பாடு படைத்த மனிதரான அவர் கலையையும் இலக்கியத்தையும் ஆதரித்தார். அதன் பயனாக ஜான்பூர் முஸ்லிம் கல்விக்கு ஒரு முக்கியமான இடமாக விளங்கலாயிற்று. அந்நகரம் அழகான கட்டடங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் இந்துபாணி காணப்பட்டது. வழக்கமாகக் காணப்படும் சிறுகூடங்கள் (Minarets) இல்லாத மசூதிகள் உடைய கட்டிடங்கள் அந்நகரில் இருந்தன. இப்போது ஜான்பூர்க் கட்டடக்கலையின் ஒளிமிக்க மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் புகழ்பெற்ற கடாலா மஸ்ஜித் கி.பி. 1408-ல் கட்டி முடிக்கப்பட்டது. இப்ராகிம் 1436-ல் இறந்தார். அவருக்குப்பின் அவருடைய மகன் மஹ்மூத் ஷா ஆட்சிக்கு வந்தார். புதிய அரசர் சுனார் மாவட்டத்தின் பெரும் பகுதியை இணைத்துக் கொண்டார். ஆனால், கால்பி (Kalpi) க்கு எதிராக அவர் செய்த படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. தில்லியைக் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சியில் அவர் புகலூல் லோடியால் தோற்கடிக்கப்பட்டு ஜான்பூருக்குத் திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தப்பட்டார். மஹ்மூத் கி.பி. 1457-ல் இறந்தார். அப்போது அவருடைய மகன் பிக்கன் (Bhikhan) முகமது ஷா என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனம் ஏறினார். ஆனால், அந்த அரசரின் முட்டாள்தனமான நடத்தை

Koviloor Acadamy

பிரபுக்களுக்கும், அவருடைய சொந்த உறவினர்களுக்கும் பெருஞ் சினத்தை உண்டாக்கி விட்டது. அதனால் அவர்கள் அவரைக் கொன்று விட்டு அவருடைய சகோதரரான ஹுஸேன் ஷாவைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். பட்டத்துக்கு வந்தவுடனேயே ஹுஸேன் ஷா 1458-ல் தில்லியின் புகலூல் லோடியுடன் நாலாண்டு உடன் படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். இந்தக் காலத்தை அவர் திர்ஹுத்தின் சுதந்தர ஜமீன்தார்களை ஒடுக்குவதிலும், ஒரிஸ்ஸாவில் கொள்ளையடிக்கும் படையெடுப்பு ஒன்றை நடத்திச் செல்வதிலும் பயன்படுத்தினார். ஒரிஸ்ஸாவின் அரசர் ஒரு பெரும் நிதியத்தைக் கொடுத்துச் சமாதானத்தை விலைக்கு வாங்கினார். ஹுஸேன் ஷா 1466-ல் குவாலியர்க் கோட்டையைப் பிடிப்பதற்காகப் படையுடன் சென்றார். ஆனால் அதைத் தகர்க்க முடியாமல் திரும்பினார். அப் போது அதன் அரசராகிய மான்சிங்கு பெரிய இழப்பீட்டை அவருக்குச் செலுத்தினார், இந்தத் தொடக்க வெற்றிகளுக்குப் பிறகு, அதிர்ஷ்டம் அவருக்கு எதிராகத் திரும்பியது. அவர் புகலூல் லோடியிடம் மீண்டும் செய்த போரின்போது, புகலூல் லோடி அவரைப் பீஹாருக்குத் துரத்தியடித்து விட்டு, ஜான்பூர் இராச்சியத்தைத் தில்லியுடன் சேர்த்துக் கொண்டார். புகலூல் தம்முடைய மகனை பார்பக்கை ஜான்பூரின் கவர்னராக நியமித்து அரசப்பட்டப் பெயரைப் புனைந்து கொள்ளவும், நாணயங்கள் அச்சடித்துக் கொள்ளவும் அனுமதித்தார். இவ்வாறு ஜான்பூரின் சுதந்தரம் முடிவுற்றது. ஜான்பூரில் எண்பத் தைந்து ஆண்டுகள் நீடித்திருந்த ஷர்க்கி ஆட்சியின் காலத்தில் செல்வச் செழிப்பு மிகுந்து இருந்தது. கட்டடக்கலை வளர்ச்சியுற்றது உயர்ந்த வகையான பண்பாடு உருவாயிற்று. அது இப்ராகீமின் ஆட்சிக் காலத்தில் 'இந்தியாவின் ஷிராஜ்' (Shiraz) என்ற பட்டத்தை அந்த நகருக்கு ஈட்டித் தந்தது.

ஆ. மாளவம்

கி.பி. 1305-ல் அலாவுதீன் கில்ஜியினால் இணைத்துக்கொள்ளப் பட்ட மாளவம் சுதந்தரம் அடையும் வரை, மற்ற மாகாணங்களைப் போலவே, தைமூரின் படையெடுப்புக்குப் பின்பு நேர்ந்த குழப்பக் காலத்தில், தில்லியின் ஆணையின்கீழ் முஸ்லிம் தலைவர்களால் ஆளப் பட்டுவந்தது. துக்ளக்கின் குடும்பத்தைச் சேர்ந்த பீருஸால் மாளவத் தின் கவர்னராக நியமிக்கப்பட்ட திலாவர் கான் கூரி (Dilawar Khan Ghuri) 1401-ல் எல்லாச் செயல் முறைகளிலும் தில்லிச் சுல்தானி யத்திலிருந்து விடுதலை பெற்றவராகத் தம்மை ஆக்கிக் கொண்டார். எனினும் அவர் முறையாகச் சுல்தானியத்திற்கு அடங்கியிருப்பதைத் துறக்கவோ, 'அரசரின் நடையைப்' புனைந்துகொள்ளவோ இல்லை. 1406-ல் அவருடைய பேராசை மிக்க மகன் அல்ப்கான், ஹுஷங்குஷா

Koviloor Academy

(Hushang Shah) என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனம் ஏறினர். புதிய அரசர் அமைதியும் ஓய்வும் கொள்ளாத உணர்ச்சியுடைய வராயிருந்தார். துணிகரமான புதிய முயற்சிகளிலும், போர்களிலும் ஆனந்தம் அடைந்தார். தம்முடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் இடைவிடாது அவற்றிலே ஈடுபட்டிருந்தார். 1422-ல் அவர் ஒரு வணிகரைப்போல வேடம் புனைந்துகொண்டு தம் தலைநகரை விட்டு ஒரிஸ்ஸாவுக்குச்சென்று அங்கே ஐயங்கொள்ளாத அந்த இராச்சியத்து அரசரைத் திடீரென்று தாக்கினர். அந்த அரசர் அவரைத் திரும்பிப் போகச் சொல்லுவதற்காக எழுபத்தைந்து யானைகளை இலஞ்சமாகக் கொடுக்க நேரிட்டது. மாளவத்துக்குத் (Malwa) திரும்பும் வழியில் ஹுஷங்கு கேர்லாவைக்கைப்பற்றி, அதன் அரசரைச் சிறைபடுத்திக் கொண்டுவந்தார். அவர் தில்லி, ஜான்பூர், குஜராத்து ஆகியவற்றின் சுல்தான்களுடன் போரிடவேண்டி நேர்ந்தது. பாமனி இராச்சியத்தின் சிற்றரசாக முன்பு இருந்த கேர்லாவைக் கைப்பற்றியதால் சினங் கொண்டிருந்த அகமது ஷா பாமனியுடன் அவர் ஒரு முறை போரிட்டுத் தம் பலத்தை அறிந்து கொள்ளவும் நேரிட்டது. ஆனால் அவர் செய்த போர்களில் பெரும்பாலானவை தோல்விகளிலும், அவருக்குப் பேரிழப்பிலும் முடிந்தன. 1435 ஜுலை ஆறும் நாள் அவர் இறந்தார். அப்போது அவருடைய மூத்த மகனை கஜ்னி கான், முகமது ஷா என்ற பட்டப் பெயருடன் மாளவத்தின் அரசராக அறிவிக்கப்பட்டார். ஆனால், இந்தப் புதிய ஆட்சியாளர் அரசாங்கத்தின் விவகாரங்களில் சிறிதும் லட்சியம் இல்லாதவராய் இருந்தார். அவருடைய மந்திரியான மஹ்மூத் கான் 1436 மே மாதத்தில் சிம்மாசனத்தை வலிந்து பற்றிக்கொண்டார். இவ்வாறு மாளவத்தில் கில்ஜி சுல்தான்களின் அரச மரபு நிறுவப்பட்டது. மாளவத்தின் முகமது ஷாவின் ஒரு மகனை மஸூத்கானுக்காகப் பரிந்து வாதாடிய குஜராத்தின் முதலாம் அகமது ஷாவின் எதிர்ப்பையும், பிரபுக்களின் சிறு எதிர்ப்பையும் மஹ்மூத் தகர்த்தெறிந்தார்.

மஹ்மூத் கல்ஜி ஒரு வீரமிக்க போர்வீரர் ஆவார். அவர் குஜராத்தின் முதலாம் அகமதுஷா, தில்லியின் முகம்மதுஷா, மூன்றும் முகம்மது ஷா பாமனி, மேவாரின் ராணு கும்பா ஆகியோரை எதிர்த்துப் போரிட்டார். அவர் மேவார் ராணுவுடன் போட்டசண்டையின் முடிவு தெளிவாயில்லாமலிருந்தது. இரண்டு தரப்பினரும் தங்களுக்கே வெற்றி என்று கூறிக்கொண்டது வியப்புக்குரியதாயுள்ளது. மேவார் ராணு 'வெற்றிக் கோபுரம்' ஒன்றைச் சித்தூரில் கட்டியபோது, மாளவத்தின் சுல்தான் தம் வெற்றியைக் கொண்டாடுவதற்காக ஏழடுக்கு மாளிகை ஒன்றை மாண்டுவில் எழுப்பினர். மஹ்மூத் கல்ஜி மாளவத்தின் முஸ்லிம் அரசர்களில் மிகத்திறமை வாய்ந்தவர் என்பதில் ஐயமில்லை. அவர் தம்முடைய இராச்சியத்தின் எல்லைகளைத் தெற்கே சாத்புரா மலைத்தொடர் வரையிலும், மேற்கே குஜராத்தின்

Koviloor Academy

எல்லைவரையிலும், கிழக்கே பந்தேல்கண்டு வரையிலும், வடக்கே மேவார், ஹரௌத்தீ வரையிலும் பரப்பினர். அவருடைய புகழ் இந்தியாவுக்கு வெளியிலும் பரவியது. எகிப்தின் காலிபா அவருடைய பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் சுல்தான் அபு-சயீதிட மிருந்து ஒரு தூதுக்குழு வந்ததை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அவர் நேர்மையும் சுறுசுறுப்பும் மிக்க ஆட்சியாளராயிருந்தார். பெரிஷ்டா (Ferishta) "சுல்தான் மஹ்மூது மரியாதை மிக்க வராயும் வீரமிக்க வராயும் விளங்கினர். அவருடைய ஆட்சியில் இந்துக்களும் முகம்மதியர்களும் மகிழ்ச்சியாயிருந்தனர், அவர்கள் ஒருவர்க் கொருவர் நட்புறவுவைத்துக் கொண்டிருந்தனர். போர்க்களத்திற்குப் போகாமல் ஓர் ஆண்டுகூடக் கழிந்ததில்லை. பாசறையே அவருடைய வீடாகவும், போர்க்களமே அவர் ஓய்வெடுத்துக் கொள்ளும் இடமாகவும் இருந்தன. அவருடைய ஓய்வுநேரம் உலகத்தின் வெவ்வேறு அரசர்களின் அரசவைகளில் நிகழ்ந்த நிகழ்ச்சி களையும் வரலாறுகளையும் படிப்பதிலும் கேட்பதிலும் செலவிடப் பட்டன. ஏறக்குறைய முப்பத்துநான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு அவர் 1469 ஜூன் முதல் நாள் தம்முடைய அறுபத்தெட்டாம் வயதில் இறந்தார்.

மஹ்மூதுவின் மூத்த மகனை கியாஸ் உதீன் தந்தையிறந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு மாளவத்தின் சிம்மாசனத்தில் ஏறினர். அவர் அமைதியின் காதலராயிருந்தார்; தெய்வபக்தியுள்ள முஸ்லிமாக, 'குறிப்பாக அவர் நாள்தோறும் செய்துவந்த தொழுகைகளில்' பக்தி மிகுந்தவராக இருந்தார். அவர் எல்லாவகையான மதுவகைகளையும் விலக்கப்பட்ட உணவுப்பொருள்களையும் விரும்பாதவராய் இருந்தார். ஆனல் அவருடைய இறுதிக்காலம் அவருடைய இரண்டு புதல் வர்களான அப்துல் காதிர் நாஸிர் உத்தீன், ஷுஜாஅத்கான் அலாவுத்தீன் என்பவர்களுக்குள் ஏற்பட்ட போர்களினல் மகிழ்ச்சி இல்லாததாய் இருந்தது. இறுதியில், முன்னவர் கி.பி. 1500-ல் சிம்மாசனத்தைக் கைப்பற்றினர். நாஸிர் உத்தீன் கி.பி. 1510-ல் இறக்கும்வரை தம்முடைய அதிகாரத்தை மிகத் தவருனவகையில் பயன்படுத்தலானர்.

பிறகு அவருடைய இரண்டாவது மகன் இரண்டாம் மஹ்மூது என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனம் ஏறினர். முஸ்லீம் பிரபுக்களின் செல்வாக்கை ஒழிப்பதற்காக இரண்டாம் மஹ்மூது சந்தேரியின் வலிமை மிக்க இராசபுத்திரத் தலைவரான மேதினி ராயை மந்திரிப்பதவி யில் அமர்த்திக் கொண்டார். மேதினி ராய் விரைவில் அரசாங்கத்தில் பெருஞ் செல்வாக்கை அடைந்து, நம்பிக்கையும் பொறுப்பும் மிகுந்த பதவிகளில் இந்துக்களை நியமித்தார். இது மாளவத்தின் பிரபுக்களின் பொறுமையைக் கிளப்பிவிட்டது. அதனல் அவர்கள் குஜராத்தின்

Koviloor Academy

சுல்தான் இரண்டாம் முஸப்பர் ஷாவின் உதவியைக் கொண்டு இராசபுத்திர அமைச்சரை அகற்றினர். ஆனால் மேதினீ ராய் சித்தூரின் ராணா சங்காவின் உதவியைக் கொண்டு இரண்டாம் மஹ்மூதுவையே தோற்கடித்தார். வெற்றி யுற்ற இராசபுத்திரர்களால் மாளவத்தின் சுல்தான் சிறைபிடிக்கப்பட்டார். எனினும், ராணா சங்கா இராசபுத்திர இனத்தின் சிறப்பியல்புக் கேற்றவாறு அவரை மிகவும் பெருந்தன்மையுடன் நடத்தினர். தோற்கடிக்கப்பட்ட அந்த எதிரிக்கே, மீண்டும் இராச்சியத்தைக் கொடுத்து விட்டார். ஆனால், இதற்குள் மாளவ இராச்சியத்தின் அதிகாரப் பரப்பு மிகவும் குறைந்து விட்டது ; சுதந்தரமாயிருக்கக் கூடுமான நாட்களும் ஒரு சிலவாகவே இருந்தன. ராணா சங்காவுக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த ராணா ரதன்சிங்கின் இராச்சியப் பகுதிகள்மீது திடீர்த் தாக்குதல் செய்து அவருடைய பகைமைக்கு ஆளானர். ராணா பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்பதற்காக மாளவத்தின்மீது படை யெடுத்தார். குஜராத்தின் சுல்தான் பகதூர் ஷாவின் தம்பியும், குஜராத்தின் சிம்மாசனத்திற்குப் போட்டியிட்டுக் கொண்டிருந்த வருமான சாந்த் கானுக்குப் புகலிடம் கொடுத்து இரண்டாம் மஹ்மூது குஜராத் சுல்தானின் வெறுப்பைப் பெற்ருர். அதனுல் பகதூர் ஷா 1531 மார்ச்சு 17ஆம்தேதி மாண்டுவைக் கைப்பற்றினர். இவ்வாறு மாளவத்தின் சுதந்தரம் அடியோடு அழிந்தது. பிற்காலத்தில் சிறிதுகாலம் ஹுமாயூனின் வசத்திற்கு மாறும்வரை மாளவம் குஜராத்தின் பகதூர் ஷாவின் ஆட்சியின் கீழேயே இருந்துவந்தது. ஏறக்குறைய 1535-ல் மாளவத்தின் கில்ஜி சுல்தான்களின் முன்னள் அதிகாரியான மல்லூகான் காதிர்ஷா என்ற பட்டப் பெயருடன் மாளவத்தில் ஒரு சுதந்தர அரசை நிறுவினர். ஆனல் 1542-ல் அவர் ஆப்கானிய அரசரான ஷெர் ஷாவால் துரத்தப்பட்டார். ஆப்கானிய அரசாங்கத்து அரசப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்த பிறகு கி.பி. 1561-62-ல் மாளவம் பாஸ் பகதூரிடமிருந்து முகலாயத் தளபதிகளால் வெல்லப்பட்டது.

இ. குஜராத்து

வளமான துறைமுகங்களான காம்பே, சூரத், புரோச் ஆகியவற்றின் மூலம் நடந்த இடைவிடாத வாணிகத்தின் மூலம் சிறப்பாகப் பெருஞ் செல்வவளம் பெற்ற குஜராத்து மாகாணம் அடிக்கடி அயலாரின் படையெடுப்புகளைத் தானே வரவழைத்துக் கொண்டது. கி.பி. 1297-ல் அலாவுத்தீன் கில்ஜியால் தில்லிச் சுல்தானியத்துடன் இணைத்துக்கொள்ளப் பட்ட குஜராத்து தில்லி சுல்தான்களால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் கவர்னர்களால் நெடுங் காலமாக ஆளப்பட்டுவந்தது. ஆனல், 1391-ல் துக்ளக் குடும்பத்தைச் சேர்ந்த பிரூஸின் கடைசி மகனை முகம்மது ஷாவினுல் அம்மாகாணக் கவர்னராக நியமிக்கப்பட்ட ஸபர் கான் (இராஜபுத்திரராயிருந்து மதம் மாறிய ஒருவரின் மகன்) 1401-ல்

Koviloor Acadamy

முறையே சுதந்தர முடையவராகத் தம்மைச் செய்து கொண்டார். 1403-ல் ஸபர் கானின் மகனுன தாத்தார் கான், அதிருப்தியடைந்திருந்த சில பிரபுக்களுடன் சேர்ந்து சதி செய்து கொண்டு, தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். அசாவல் (Asawal) என்ற இடத்தில் அவர் தம் தந்தையைச் சிறைபடுத்தி நாஸிர் உத்தீன் முகம்மது ஷா என்ற பட்டப் பெயருடன் தம்மை அரசராக அறிவித்துக் கொண்டார். அவர் தம்முடைய அதிகாரத்தைப் பரப்பும் நோக்கத்துடன் தில்லிக்குப் படையுடன் சென்றுர். ஆனுல், அங்கே அவருடைய மாமனும் அரசப் பிரதிநிதியுமா யிருந்த ஷம்ஸ் கானுல் கொல்லப் பட்டார். இதனுல், ஸபர் கான் மீண்டும் தம்முடைய சிம்மாசனத்தைப் பெற்று சுல்தான் முஸப்பர் ஷா என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொள்ள முடிந்தது. முஸப்பர் ஷா ஹுஷங்கு ஷாவை எதிர்த்து வெற்றிகரமாகப் போரிட்டு, 'தார்' (Dhar) என்ற நகரைக் கைப்பற்றினர். 1411-ல் ஜூன் மாதத்தில் அவர் இறந்த பிறகு அவருடைய பேரனும் இளவரசுப் பட்டம் பெற்றிருந்தவருமான அஹ்மது ஷா சிம்மாசனம் ஏறினர். குஜராத் சுதந்தரத்தின் உண்மையான தந்தை என்று அவர் போற்றப்படுகிருர். பேரளவிற்குத் தீரமும், சக்தியும் பெற்றிருந்த அவர் தம்முடைய முப்பதாண்டு ஆட்சிக் காலம் முழுவதிலும் தம் இராச்சியத்தின் எல்லைகளை விரிவாக்குவதிலேயே ஈடுபட்டிருந்தார். அவருடைய முன்னேர் இருவரின் ஆட்சிக்காலங்களில் அந்த இராச்சியம் அசாவலுக்கு அருகில் ஒரு சிறிய பிரதேசமாயிருந்தது. மாளவத்தின் சுல்தான், அசீர்கார்த் தலைவர்கள், ராஜபுதனம் மற்றும் அருகிலுள்ள பிரதேசங்களின் தலைவர்கள் இவர்களுடன் அவர் செய்த போர்களில் வெற்றி எப்போதும் அவர் பக்கமாகவே இருந்தது. தம் இராச்சியத்தின் உள்நாட்டு ஆட்சி முறையில் முன்னேற்றங்காண்பதிலும் அவர் தம் கவனத்தைச் செலுத்தினர். ஒருதலைச்சார்பின்றி நீதி வழங்கினர். தம்முடைய ஆட்சியின் முதலாண்டில் அவர் பழைய அசாவல் நகரம் இருந்த இடத்தில் அழகான நகரமாகிய அகமதாபாத்தைக் கட்டித் தம் தலைநகரை அப்புதிய நகருக்கு மாற்றிக் கொண்டார். இன்னும் அந்நகரம் அவருடைய சுவையுணர்வுக்கும், கொடைவண்மைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. அவரிடமிருந்த ஒரே ஒரு குறை பிற மதங்களைப் பொறுத்துக் கொள்ளாமையாகும். 1442 ஆகஸ்டு 16 ஆம் நாள் அவர் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்துக்குவந்த அவருடைய மூத்த மகன் முகம்மது ஷா கி.பி. 1451 பிப்ரவரி 10ஆம் தேதியில் இறக்கும்வரை நாட்டை ஆண்டார். பின்பு இரண்டு பலவீனமான அரசர்கள், முகம்மது ஷாவின் மகனுன குத்ப்-உத்தீன் அஹ்மதும், முகம்மதுவின் சகோதரர் தாவூதும் பின்பு அரசாண்டனர். தாவூது தம்முடைய தீய பழக்க வழக்கங்களால், பட்டத்துக்கு வந்த சில நாட்களிலேயே பிரபுக்களின் ஆதரவை இழந்தார். அவர்கள் அவரை அகற்றிவிட்டு, அவருடைய மருமக

Koviloor Academy

னும், அஹ்மது ஷாவின் பேரனுமான அபுல் பத் கானை, பேகர்ஹா (Begarha) என்று பொதுவாக அறியப்பட்ட மஹ்மூது என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தனர்.

மஹ்மூது பேகர்ஹா இதுவரை அரசாண்ட அவரது மரபைச் சார்ந்த அரசர்களுள் மிகச் சிறந்த சுல்தானாக இருந்தார். அவருடைய நாட்டின் தலைசிறந்த வரலாற்றாசிரியர் ஒருவர் 'குஜராத்து இராச்சியத்திற்கு அவர் புகழும் ஒளியும் கொடுத்தார்; அவருக்கு முற்பட்ட குஜராத்து அரசர்களிலும், பிற்பட்ட அரசர்களிலும் கூடத் தலைசிறந்தவராயிருந்தார். நீதியிலும் தாராள குணத்திலும்,... இஸ்லாம் சட்டங்களையும், முஸ்லிம்களின் சட்டங்களையும் பரப்புவதிலும், இளமையிலும், நடுப்பருவத்திலும், முதுமையிலும் நீதி வழங்குவதில் ஒரே வகையான அறிவுடைமை படைத்த தீர்ப்பு முறையிலும், அதிகாரம், சக்தி, தீரம், வெற்றி இவற்றிலும் அவர் மிகச் சிறந்த ஒரு முன்மாதிரியாக விளங்கினார்' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது. இளமையிலேயே சிம்மாசனம் ஏறிய அவர், உடனே இராச்சியத்தின் விவகாரங்களைக் கவனிக்கும் பொறுப்பைத் தம் கையிலேயே எடுத்துக்கொண்டார். அவருடைய சகோதரரான ஹஸன்கானைச் சிம்மாசனத்தில் ஏற்றுவதற்காகச் சதி செய்திருந்த பகைமை கொண்டிருந்த அரசவையினரை அடக்கி வைத்தார். எந்த அமைச்சரின் செல்வாக்கினாலும், அந்தப்புரத்துச் செல்வாக்கினாலும் பாதிக்கப்படாமல் நாட்டை ஐம்பத்து மூன்று ஆண்டுகள் தீவிரத்துடன் ஆண்டார். வீரமிக்க போர் வீரராயிருந்த அவர் தம்முடைய எல்லாப் போர்களிலும் வெற்றியை அடைந்தார். மாளவத்தின் மகமூது கில்ஜியால் அடக்கு முறைக்குள்ளாகியிருந்த நிஸாம் ஷா பாமனியைக் காப்பாற்றினார்; கட்ச் பிரதேசத்தின் சூம்ரா, சோதாத் தலைவர்களைத் தோற்கடித்தார்; ஜகத் (துவாரகா) திலிருந்த கடற்கொள்ளைக் காரரை ஒடுக்கினார்; வலிமை மிக்க ஜூனாகர், சாம்பானீர்க் கோட்டை முகம்மதாபாத் என்று அவரால் பின்பு பெயரிடப்பட்டது. அவர் பெற்ற வெற்றிகளின் பயனாக, குஜராத்தின் இராச்சியம் அதன் உயர்ந்து பரந்த எல்லைகளை அடைந்துவிட்டது. 'மாண்டு எல்லைப் பகுதியிலிருந்து ஜூனாகர் வழியாக சிந்துவின் எல்லைப் பகுதி வரைக்கும், ஜாலோர், நாகௌர் வழியாக சிவாலிக் பர்பத் வரைக்கும், பக்லானா வழியாக நாசிக் திரிம்பக் வரைக்கும், புர்ஹான்பூரிலிருந்து தக்காணத்திலிருந்த பிரார், மல்காப்பூர் வரைக்கும், புர்ஹான்பூர்ப் பக்கத்தில் கர்க்கூன், நர்மதை நதி இவை வரைக்கும், கடலின் பக்கத்தில் சௌலின் எல்லைகள் வரைக்கும்' பரந்திருந்தது. தம்முடைய ஆட்சி முடிவின்போது எகிப்துச் சுல்தானான கன்சவுஹ்-அல்-கௌரி (Qansauh-al-Ghauri) யுடன் கூட்டுறவு கொண்டு இந்தியக் கடல்களில் போர்ச்சுக்கீசியரின் மிகுந்து வரும் அதிகா

Koviloor Academy

ரத்தை அடக்க முயன்ருர். 1498-ல் வாஸ்கோட காமாவினுல் நன்னம்பிக்கை முனைவழி கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து ஒரு பத்தாண்டுக்குள் போர்ச்சுகீசியர்கள் முஸ்லிம் வணிகர்களின் இலாபத்துக்கு எதிராகச் செங்கடல், எகிப்து இவற்றிலிருந்து செய்யும் மிகுந்த இலாபம் தரும் வாசனைப் பொருள் வாணிகத்தைத் தங்களுடைய தனி உரிமையாக ஆக்கிக்கொண்டிருந்தனர். காம்பே, சௌல் போன்ற மேற்கு இந்தியாவின் முக்கியமான கடல் துறைகளிலும் தனி உரிமை கொண்டாடினர். ஜெட்டாவின் கவர்னரான அமீர் ஹுஸேன் குர்த் என்பவரின் தலைமையில் வந்த எகிப்தியக் கப்பற்படையும், குஜராத் அரசவையில் பதவியினைப் பெற்ற துருக்கியரான மலிக் அயாஸ் என்பவரின் தலைமையில் திரண்டிருந்த இந்தியப் படையும் சேர்ந்து 1508-ல் பம்பாய்க்குத் தெற்கே சௌளுக்கு அருகில், போர்ச்சுக்கீசிய அரசப் பிரதிநிதியான பிரான்செஸ்கோடி அல்மெய்டாவின் மகனை டோம் லோரென்சோவின் தலைமையில் அணிவகுத்திருந்த போர்ச்சுக்கீசியப் படையைத் தோற்கடித்தன. ஆனுல் 1509-ல் டையூவுக்கருகில் போர்ச்சுக்கீசியர்கள் கூட்டாகச் சேர்ந்திருந்த முஸ்லிம் கடற்படையை நன்ருக முறியடித்துவிட்டனர். அதனுல் கடற்கரையில் அவர்கள் இழந்திருந்த கப்பல் போக்குவரத்து உரிமையையும் திரும்பப் பெற்றனர். அவர்களுக்கு டையூவில் ஒரு தொழிற்சாலைக்காக மஹ்மூது இடம் அளித்தார்.

1511 நவம்பர் 23ஆம் நாள் மஹ்மூத் பேகர்ஹா இறந்த பிறகு ஆட்சியுரிமை அவருடைய மகன் இரண்டாம் முஸப்பருக்குச் சென்றது. அவர் இராஜபுத்திரர்களுக்கு எதிராக வெற்றி மிக்க போர்களைச் செய்தார் ; மாளவத்தின் மஹ்மூத் கில்ஜியை மீண்டும் சிம்மாசனத்தில் ஏற்றினுர். 1526 ஏப்ரல் ஏழாம் நாள் முஸப்பர் இறந்த பிறகு அவருடைய புதல்வர்களான சிக்கந்தரும், இரண்டாம் நாஸிர்கான் மஹ்மூதும், அதே ஆண்டு ஜுலை மாதத்தில் அவருடைய துணிவு மிக்க மகனை பகதூர் சிம்மாசனத்தை உரிமையாகக் கைக்கொள்ளும் வரை, சிறப்பில்லாத குறுகிய காலம் ஆட்சிபுரிந்து வந்தனர்.

பாட்டனுரைப்போல தீரமும், போர் விருப்பும் உடையவராயிருந்த பகதூர் இடைக்கால இந்தியாவின் வரலாற்றில், புகழ்பெற்ற அரசராக விளங்கினுர். அவர் மாளவத்தின் இரண்டாம் மஹ்மூதைத் தோற்கடித்து, அவருடைய இராச்சியத்தை 1531-ல் இணைத்துக் கொண்டதுடன், தம் குடும்பத்தின் பழைய எதிரியான மேவார் ராணுவின் இராச்சியப் பகுதிகளையும் கைப்பற்றிக் கி.பி. 1534-ல் சித்தூர்க் கோட்டையைத் தகர்த்தெறிந்தார். எனினும் அவர் ஹுமாயூனுடன் செய்த போர்களில் ஊழ்வினை அவருக்கு எதிராக இருந்தது. அப் போர்களில் அவர் புதிதாக வெல்லப்பட்ட மாளவ மாகாணத்தை இழந்ததுடன், தம்முடைய இராச்சியத்தின் பெரும் பகுதியையும்

Koviloor Acadamy

இழக்க நேர்ந்தது. ஆனால், தில்லிப் படைகள் திரும்பிச் சென்ற வுடனே பகதூர் தம்முடைய இராச்சியத்தைத் திரும்பக் கைப்பற்றினர். பிறகு, முகலாயர்களுக்கு எதிராகத் தமக்கு உதவி செய்ய அழைத் தும் உதவிசெய்ய முன்வராத போர்ச்சுக்கீசியர்களைத் துரத்துவதில் தம் கவனத்தைச் செலுத்தினர். போர்ச்சுக்கீசியக் கவர்னரான நுன்ஹோட குன்ஹாவைத் தம்மிடம் வரும்படி வற்புறுத்தி அழைத்த தில் பயனில்லாமல் போகவே, பகதூர் தாமே அவரைப்போய்ப் பார்ப் பதற்காக 1537 பிப்ரவரியில் கப்பலுக்குச் சென்றார். ஆனால், அவர் போர்ச்சுக்கீசியர்களால் வஞ்சகமாகக் கடலில் மூழ்கடிக்கப்பட்டார். அவருடைய தோழர்களும் கொல்லப்பட்டனர். பகதூரின் இறப்பிற் குப் பின்பு அராஜகமும் குழப்பமும் குஜராத்தில் தலைவிரித்தாடின. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் பலவீனமானவர்களாயும் போட்டியாளரான பிரபுக்கள் கட்சிகளின் கைகளில் வெறும் பொம்மை களாயும் இருந்தனர். அதனால் குஜராத்து கி.பி. 1572-ல் அக்ப ரால் எளிதாக முகலாயப் பேரரசுடன் இணைத்துக்கொள்ளப்பட்டு விட்டது.

ஈ. காஷ்மீர்

கி.பி. 1315-ல், ஸுவாத் என்ற இடத்திலிருந்து வந்த முஸ்லிம் துணிகரச் செயல் வீரரான ஷா மீர்ஸா என்பவர் காஷ்மீரின் இந்து இளவரசரின் ஊழியத்தில் நுழைந்தார். அவ்வரசர் விரைவிலேயே இறந்துபோனர். ஷா மீர்ஸா கி.பி. 1339 அல்லது 1346-ல் ஷம்ஸ் உத்தீன் ஷா என்ற பட்டப்பெயருடன் காஷ்மீரச் சிம்மாசனத்தைக் கைப்பற்றினர். தம்முடைய பெயரில் நாணயங்கள் அச்சடிக்கச் செய் தார். குத்பா படிக்கச்செய்தார். புதிதாகப்பெற்ற அதிகாரத்தை அவர் அறிவுடைமையுடன் பயன்படுத்தினர். கி.பி. 1349-ல்[1] இறந்தார். அவருக்குப் பிறகு ஏறக்குறைய அறுபத்து நான்கு ஆண்டுகள் அவருடைய புதல்வர்களான ஜம்ஷித், அலாவுத்தீன், ஷிஹாப் உத்தீன், குத்ப்-உத்தீன் என்போர்கள் ஆண்டனர். கி.பி. 1394-ல் குத்ப்-உத்தீன் இறந்த பிறகு அவருடைய மகனான சிக்கந் தர் காஷ்மீரின் சிம்மாசனத்தில் ஏறினர்.

தைமூரின் இந்தியப் படையெடுப்பின்போது, ஆட்சியிலிருந்த சிக்கந்தர் தூதுவர்களை அவருடன் பரிவர்த்தனை செய்துகொண்டார். எனினும் அவர் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளவில்லை. அவர் தம்முடைய கொள்கையைக் கொண்டிருப்போரிடம் தாராள மனதுடையவராயிருந்தார். அதனால் பாரசிகம், அராபியா, மெச

[1]காஷ்மீரத்து முகம்மதிய சுல்தான்களின் வரலாற்றுவரிசை குழப்பமிக்கதா யுள்ளது. அதனால் அவர்களுடைய ஆட்சிக் காலங்கள் ஏறத்தாழச் சரியானவை யாகவே கொள்ளப்படவேண்டும்.

Koviloor Acadamy

படோமியா ஆகிய இடங்களிலிருந்து கற்றறிந்த பல முஸ்லீம் அறிஞர்கள் அவருடைய அரசவையை நோக்கி ஓடிவந்தனர். ஆனால், பொதுவாக அவர் பரந்தநோக்கும் அருட்பண்பும் படைத்தவரல்லர். இருபத்திரண்டு ஆண்டுகளுக்குமேல் ஒன்பது மாதங்கள் ஆட்சி செய்த பிறகு, அவர் கி.பி. 1416-ல் இறந்தார். பிறகு அவருடைய மூத்த மகனான ஆலிஷா சில ஆண்டுகள் ஆட்சி செய்தார். அதன் பின் அவர் தம்முடைய சகோதரரான ஷாஹிகானால் ஒடுக்கப்பட்டார். ஷாஹிகான் கி.பி. 1420 ஜூன் மாதத்தில், ஜெய்ன்-உல்-ஆபிதீன் (Zain-ul-Abidin) என்ற பட்டப்பெயருடன் சிம்மாசனம் ஏறினார்.

ஜெய்ன்-உல்-ஆபிதீன் இரக்க குணமுள்ளவராயும், தாராள மனமுடையவராயும், அறிவனுபவங்கள் உடைய ஆட்சியாளராயும் இருந்தார். உள்ளூரில் நிகழும் குற்றங்களுக்குக் கிராமத்தினரைப் பொறுப்புள்ளவராகச் செய்யும் கொள்கையை வலியுறுத்தியதன்மூலம் அவர் தம் இராச்சியத்தில் திருட்டு, வழிப்பறிக்கொள்ளை இவை குறையுமாறு செய்தார். அவர் பொருள்களின் விலைகளை ஒழுங்குபடுத்தினார். மக்களின்மேல் போடப்பட்டிருந்த வரிச்சுமையைக் குறைத்தார்; நாணயச் செலாவணியின் மதிப்பை முன்பிருந்ததுபோல் ஆக்கினார். நாணயச் செலாவணி அவருக்கு முற்பட்டவரின் ஆட்சிகளில் பெரிதும் மதிப்பிழந்திருந்தது. அவருடைய பொதுநலப் பணிகள் அவருடைய குடிமக்களுக்குப் பெரும் நன்மைகளைச் செய்தன. அவர் பரந்த மனப்பான்மையுடையவராயிருந்தார். மற்ற மதக்கொள்கைகளைப் பின்பற்றியோரிடம் போற்றத்தக்க பொறுமையைக் காட்டினார். அவருடைய தந்தையின் ஆட்சிக்காலத்தில் இராச்சியத்தை விட்டு வெளியேறிச் சென்ற பிராமணர்களை மீண்டும் அழைத்துக்கொண்டார். கற்றறிந்த இந்துக்களைத் தம்முடைய கூட்டுறவில் வைத்துக்கொண்டார். ஜெஸியா வரியை ஒழித்தார்; எல்லோர்க்கும் முழுமதச் சுதந்தரம் அளித்தார். அவர் தம்முடைய தாய்மொழியைத் தவிர பாரசீகமொழி, இந்திமொழி, திபேத்துமொழி முதலிய மொழிகளில் நல்ல அறிவு பெற்றிருந்தார். இலக்கியம், ஓவியம், இசை முதலியவற்றை அவர் ஆதரித்தார். அவருடைய தூண்டுதல் முயற்சியால் மகாபாரதமும் ராஜதரங்கினியும் வடமொழியிலிருந்து பாரசீகமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பல அராபிய, பாரசீக நூல்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த பண்புகள் அனைத்தும் அவரிடம் காணப்பட்டமையால், அவர் 'காஷ்மீரின் அக்பர்' என்று பொருத்தமுற அழைக்கப்படுகிறார். எனினும், அவர் அக்பரோடு தனிக் குண இயல்பின் சில கூறுகளில் வேறுபட்டிருந்தார். அவர் 1470 நவம்பர் அல்லது டிசம்பரில் இறந்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் ஹைதர் ஷா ஆட்சிக்கு வந்தார்.

Koviloor Academy

காஷ்மீரத்துப் பிற்காலச் சுல்தான்களின் வரலாறு சுவையில்லாததும், முக்கியம் இல்லாததுமாகும். ஜெய்ன்-உல்-ஆபீதீனின் இறப்பிற்குப் பிறகு அராஜகம் 'நாட்டில் தோன்றியது. அரசர்கள் பெயரளவிலேயே ஆட்சி செய்தனர். சுயநல முன்னேற்றத்திற்காகவும், கொள்ளையடிப்பதற்காகவும் மேன்மைச் சிறப்பைப் பெறவிழைந்த வெவ்வேறு கட்சிகளை இயக்கும் ஓர் அடையாளச் சின்னமாகவே அந்த அரசர்கள் இருந்தனர்.' கி.பி. 1540-ஆம் ஆண்டின் முடிவில் ஹுமாயூனின் உறவினரான மீர்ஜா ஹைதர் காஷ்மீரை வென்றார். அவர் கொள்கையளவில் ஹுமாயூனுக்காக அந்நாட்டை ஆண்டார். ஆனால் செயலளவில் 1551 வரை சுதந்தர ஆட்சியாளராகவே இருந்தார். 1551-ல் தங்கள் போர்களையும், சிக்கல்களையும் மீண்டும் மேற்கொண்ட காஷ்மீர்ப் பிரபுக்களால் அவர் கவிழ்க்கப்பட்டார். ஏறத்தாழக் கி.பி. 1555-ல் சக்குகள் (Chakks) காஷ்மீர்ச் சிம்மாசனத்தைக் கைப்பற்றினர். ஆனால், அவர்கள் தொல்லைக்குள்ளாகியிருந்த அந்த இராச்சியத்திற்கு நிவாரண மளிக்க முடியவில்லை. அது அக்பர் காலத்தில் முகலாயப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப் பட்டது.

4. தென்னிந்தியச் சுதந்தர சுல்தானியங்கள்

1. காந்தேஷ்

காந்தேஷ் தாப்தி நதிச் சமவெளியில் முகம்மது பின் துக்ளக்கின் பேரரசின் ஒரு மாகாணமாக இருந்தது. பீருஸ் ஷா அதன் அரசாங்கத்துப் பொறுப்பை அவருடைய சொந்த விஷயங்களைக் கவனிப்பவருள் ஒருவரான மலிக் ராஜா பாருக்கியிடம் ஒப்படைத்தார். ராஜா பாருக்கியின் முன்னோர்கள் அலாவுதீன் கில்ஜி, முகம்மது பின் துக்ளக்கின் ஆட்சிக்காலங்களில் தில்லி அரசவையின் மதிப்புமிக்க பிரபுக்களாயிருந்தனர். பீருஸ் ஷாவின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பக் காலத்தில் மலிக் ராஜா, அவருடைய அண்டை நாட்டினரான மாளவத்தின் திலாவர் கானின் உதாரணத்தைப் பின்பற்றி, தில்லி சுல்தானியத்திலிருந்து விடுதலை பெற்று விட்டதாக அறிவித்தார். பல போர்களில், அவர் குஜராத்தின் முதலாம் முஸப்பர் ஷாவினால் தோற்கடிக்கப்பட்டார். சாந்த மனவியல்பைப் பெற்றிருந்தவரான அவர், அவருடைய குடிமக்களை, முகம்மதியர்களையும் இந்துக்களையும், அன்புடனும், கண்ணோட்டத்துடனும் நடத்தினார். அவர் 1399 ஏப்ரல் 29ஆம் நாள் இறந்தார். உடனே அவருடைய மகன் மலிக் நஸிர் தம்முடைய சகோதரரான ஹஸனை அடக்கிவிட்டுக் காந்தேஷின் சர்வாதிகாரியாகத் தம்மை ஆக்கிக் கொண்டார். புதிய சுல்தான் இந்து தலைவரிடமிருந்து ஆசீர்கார்க் கோட்டையைப்

Koviloor Acadamy

பிடித்துக் கொண்டார். ஆனால், அவர் நந்துர்பாரைத் தாக்கியபோது குஜராத்தின் சுல்தானான அகமது ஷா அவரைத் தோற்கடித்து, தம்மிடம் பற்றுடையவராக இருப்பதாகச் சத்தியம் செய்யும்படி வற்புறுத்தினார். மலிக் நஸிர் பாமனி அரச மரபைச் சேர்ந்த அலாவுதீன் அஹ்மது என்ற பெயருடைய தம்முடைய மருமகனை எதிர்த்துச் செய்த போர் அவருக்கே பெருங்கேடாய் முடிந்தது. அவர் 1437-38-ல் இறந்தார். பிறகு அவருடைய மகன் முதலாம் ஆதில் கானும் (1438-41) பேரன் முதலாம் முபாரக் கானும் (1441-1457) குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் இல்லாத ஆட்சிகளைச் செய்த பிறகு, காந்தேஷின் சிம்மாசனம் முபாரக் கானின் மகனான இரண்டாம் ஆதில் கானுக்கு உரிமையாயிற்று. அவர் திறமையும் தீவிரமும் உடைய ஆட்சியாளராக இருந்தார்; தம்முடைய இராச்சியத்தில் ஆட்சிமுறை ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டத் தீவிரமாக முயன்றார். தம் இராச்சியத்தின் அதிகாரத்தைக் கொண்ட்வானா (Gondwana) வரை பரப்பினார். சந்தானமின்றி அவர் 1501-ல் இறந்த பிறகு, சிம்மாசனம் அவருடைய சகோதரர் தாவூதுக்கு உரியதாயிற்று. அவர் ஏழாண்டுகள் பெருமையில்லாத ஆட்சியை நடத்திய பிறகு, 1508-ல் இறந்தார். பின்பு அவருடைய மகன் கஜ்னீ கான் பட்டத்துக்கு வந்தார். பட்டத்துக்கு வந்த பத்து நாட்களுக்குள் கஜ்னீ கான் விஷமிடப்பட்டார். அதன் சிம்மாசனத்துக்குப் போட்டியிட்ட இரண்டு உரிமையாளர்களை ஆதரித்த இரண்டு கட்சியினருக்குமிடையே ஏற்பட்ட போர்களால் காந்தேஷ் ஒரே கலவரத்தில் ஆழ்ந்திருந்தது. ஒரு கட்சி அகமத் நகரின் அகமத் நிஸாம் ஷாவினால் ஆதரிக்கப்பட்டது; மற்றது குஜராத்தின் மகமூத் பேகர்ஹாவினால் ஆதரிக்கப்பட்டது. கடைசியில் இரண்டாவது கட்சி தம்முடைய ஆளை மூன்றாம் ஆதில்கான் என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தது. மூன்றாம் ஆதில் கானின் ஆட்சியிலும் முக்கியமான நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. அவர் 1520 ஆகஸ்டு 20ஆம் நாள் இறந்தார். அவருக்குப்பின் வந்த பலவீனமான ஆட்சியாளர்கள் அதன் வெளி எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து இராச்சியத்தைக் காப்பாற்றத் திறமையும், துணிவும் இல்லாதவர்களாயிருந்தனர். குஜராத்தைப் போலவே காந்தேஷும், 1601-ல் அக்பரால் அவருடைய இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டுவிட்டது.

ஆ. பாமனி அரசு

தில்லி சுல்தானியத்தின் அழிவில் எழுந்த எல்லாச் சுதந்தர முஸ்லிம் இராச்சியங்களுள் மிகவும் பலம் வாய்ந்தது தக்கணத்துப் பாமனி இராச்சியமேயாகும். அது முகமது பின் துக்ளக்கின் காலத்தில்; அவருடைய அதிகாரத்துக்குப் போட்டியாகத் தோன்றியது. தில்லி சுல்தானின் பைத்தியக்காரத்தனமான கொள்கையால் கலகம்

Koviloor Academy

செய்யத் தூண்டப்பட்ட தக்கணப் பிரபுக்கள், தௌலதாபாத் கோட்டையைக் கைப்பற்றித் தங்களுள் ஒருவரான இஸ்மாயில் முக் (Ismail Mukh) என்ற ஆப்கானியரை நாஸிர் உத்தீன் ஷா என்ற பட்டப் பெயருடன் தக்கண அரசராக்கினர். வயது முதிர்ந்தவராயும் வசதிகளை விரும்புபவராயுமிருந்த இஸ்மாயில் முக் அந்தப் பதவிக்குத் தகுதியில்லாதவரானார். விரைவில் அவர் தாமாகவே மிகவும் தகுதி வாய்ந்த ஹஸன் என்பவருக்கு இடம் தந்தார். ஸபர் கான் என்றழைக்கப்பட்ட ஹஸன் அபுல் முஸப்பர் அலாவுத்தீன் பகமன் ஷா என்ற பட்டப்பெயருடன் 1347 ஆகஸ்டு 3ஆம் தேதி பிரபுக்களால் அரசராக்கப்பட்டார். முகம்மது பின் துக்ளக்கின் ஆதரவைத் தில்லியில் அனுபவித்த கங்கா என்ற பிராமண சோதிடரின்கீழ் ஒரு கீழ்மையான வேலையை முதலில் செய்துவந்தவர் ஹஸன் என்றும், பின்பு அவருடைய இந்து தலைவரின் ஆதரவினால் மேன்மையை அடைந்தார் என்றும் பெரிஷ்டா கூறும் கதை பிற்கால முஸ்லிம் வரலாற்றுக் கோப்பாளர்களின் வரலாற்றுச் செய்திகளால் உறுதிப்படவில்லை. நாணயங்களிலும் கல்வெட்டுக்களிலும், அதற்கு ஆதரவான சான்றுகள் இல்லை. உண்மையில் ஹஸன், பாரசீகத்தில் இஸ்பந்தியார் என்பவரின் மகனும், புகழ் பெற்ற வீரருமாயிருந்த பகமன் என்பவரின் வழித்தோன்றலாகத் தம்மைக் கூறிக்கொண்டார். அதனால், அவரால் நிறுவப்பட்ட அரச மரபு பாமனி மரபு என்று அழைக்கப்படலாயிற்று.

பட்டத்துக்கு வந்தவுடனே அலாவுதீன் ஹஸன் குல்பர்காவைத் தம்முடைய தலைநகரமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, ஆசனாபாத் என்று அதற்குப் புதுப் பெயர் சூட்டினார். ஆனால், அலாவுத்தீன் ஹஸன் எழுச்சியுற்ற காலத்தில் தக்கணத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறாத தக்காண இந்து தலைவர்கள் அவருடைய அதிகாரத்துக்குத் தலைவணங்கத் தயாராய் இல்லை. அதனால், அவர் படையெடுத்து வெல்லும் வாழ்க்கை முறையில் இறங்கினார். அதில், வெற்றியும் பெற்றார். 1358 பிப்ரவரி பதினோராம் நாள் அவர் இறந்தபோது அவருடைய இராச்சியம் வடக்கே வயின் கங்கா நதியிலிருந்து தெற்கே கிருஷ்ணா நதி வரையிலும், மேற்கே தௌலாபாத்திலிருந்து கிழக்கே இப்போது நிஸாமின் இராச்சியத்திலுள்ள (ஆந்திராவிலுள்ள) போங்கிர் வரையிலும் பரவியிருந்தது. ஆட்சி முறைக்காக அவர் தம்முடைய இராச்சியத்தை நான்கு தரப்கள் அல்லது மாகாணங்களாகப் பிரித்தார். அவை குல்பர்கா, தௌலதாபாத், பிரார், பிடார் என்பவையாகும். ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு கவர்னரின் பொறுப்பில் இருந்தன. ஒவ்வொரு கவர்னரும் ஒவ்வொரு படையை வைத்திருந்தனர். தங்களுக்குக் கீழ் உள்ள உள்நாட்டு, படைத்துறைப் பதவிகளுக்கு ஆட்களை நியமித்தனர். மாகாணங்களின் ஆட்சிமுறையின் சிறப்புத் திறமை

Koviloor Acadamy

கிளர்ச்சிகள் ஏற்படுவதைத் தடுத்தது. புர்ஹானி மஆசிர் என்ற நூலின் ஆசிரியர் இந்தச் சுல்தானைப் 'சுல்தான் முதலாம் அலாவுத் தீன் ஹஸன் ஷா ஒரு நேர்மையான அரசராயும், தம் குடிமக்களை ஆதரிப்போராயும், பக்தியுள்ளவராயும் இருந்தார். அவரது ஆட்சியில் குடிமக்களும் படையினரும் தங்கள் காலத்தை இன்பமாகவும் திருப்தியுடனும் கழித்து வந்தனர். உண்மையான நம்பிக்கையைப் பரப்பும் வகையில் அவர் பெரிதும் உழைத்தார்' என்று புகழ்ந்துரைக்கிறார்.

அடுத்த சுல்தான் ஹஸனின் மூத்த மகனான முதலாம் முகம்மது ஷா ஆவார். அவரை ஹஸன் தம் சாவுப்படுக்கையில் தம்முடைய வாரிசாக நியமித்திருந்தார். பட்டத்துக்கு வந்தவுடனே முகம்மது ஷா அமைச்சவை, உள்நாட்டுத் துருப்புகள், மாகாண ஆட்சி போன்ற அரசாங்கத்தின் வெவ்வேறு துறைகளை ஒழுங்குபடுத்தினார். ஆனால், அவர் தம் ஆட்சிக்காலம் முழுவதிலும் வாரங்கல், விசயநகர் அரசர்களுக்கு எதிரான போர்களிலேயே முக்கியமாக ஈடுபட்டிருந்தார். அந்த அரசர்கள் விடாப் பிடியாக எதிர்த்துப் போரிட்டுக்கொண்டே இருந்தனர். ஆனால், அவர்கள் இருவரும் குல்பர்காத் துருப்புக்களால் அடக்கப்பட்டனர். மாபெரும் இழப்புக்களுக்குப் பின்பு அவர்கள் மானக்கேடு அளிக்கும் வகையில் சமாதானம் செய்துகொள்ள நேரிட்டது.

முகம்மது ஷாவின் வாழ்க்கைமுறை கண்டிக்கத்தக்கதாகவே இருந்தது. புர்ஹானி மஆசிர் என்ற நூலின் ஆசிரியர் 'சுல்தான் சமய நெறிக்குப் புறம்பான வாழ்க்கை முறையின் அறிகுறிகளைப் பெற்றிருந்தார். அது அவரை ஆதரவற்றவராக்கிவிட்டது' என்று தெளிவாகக் கூறுகிறார். கி.பி. 1377 இல் முதலாம் முகம்மது ஷா இறந்த பிறகு, அவருடைய மகன் முஜாஹித் ஷா சிம்மாசனம் ஏறினார். விசயநகருக்கு எதிராகத் தாமே படையுடன் சென்றார். ஆனால், அவர் அந்த நகரைக் கைப்பற்ற முடியவில்லை. அதன் ராயரிடம் சமாதானம் செய்து கொண்டு தம்முடைய தலைநகருக்கே அவர் திரும்பிவிட வேண்டியதாயிற்று. அவருடைய நெருங்கிய உறவினருள் ஒருவரான தாவூத்கான்[1] செய்த சதிக்குப் பலியானார். தாவூத் சிம்மாசனத்தைக் கைப்பற்றினார். ஆனால் முஜாஹித்தின் மாற்றாந்தாய் மகளான ரூஹ்பர்வர் ஆகா (Ruh Parwar Agha) என்பவளின் தூண்டுதலினால் அவர் ஒரு கொலையாளியால் 1378-ல் கொல்லப்பட்டுப் பழிக்குப் பழி வாங்கப் பட்டார். பிறகு பிரபுக்களும்

[1] பெரிஷ்டாவின் கருத்துப்படி தாவூத் முஜாஹித்தின் மாமன்; ஆனால் 'புர்ஹானி மஆசிர்' என்ற நூலின் ஆசிரியர் கருத்துப்படி அவர் முஜாஹித்தின் ஒன்றுவிட்ட சகோதரர்.

Koviloor Acadamy

படையதிகாரிகளும் அலாவுத்தீன் ஹஸன் பாமனியின் நான்காவது மகனான முகம்மது கான் என்பவரின் மகனான முகம்மது ஷாவைச் சிம்மாசனத்தில் ஏற்றினர்.

தமது முன்னோர்களைப் போன்றில்லாமல், இரண்டாம் முகம்மது ஷா அமைதியைக் காதலிப்பவராயும், கல்வியில் பெரும் ஈடுபாடு கொண்டவராயும் இருந்தார். அவருடைய ஆட்சியும் வெளியாரின் படையெடுப்புகளால் குழப்பமும் கொந்தளிப்பும் அடையவில்லை. அவர் மசூதிகளைக் கட்டினார்; அநாதைகளுக்காக இலவசப்பள்ளிகளை நிறுவினார்; கல்விவல்லோரை வருக வருக வென்று ஆசியாவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தம் அரசவைக்கு அழைத்தார். ஆனால் அவருடைய இறுதிக்காலம், சிம்மாசனத்தைப் பெறுவதற்காக ஆர்வத்துடனிருந்த அவருடையபுதல்வர்களிடையே ஏற்பட்ட சிக்கல் களினால் அவருக்குப் பெரும் துன்பத்தைத் தந்தது. கி.பி. 1397-ல், அவர் இறந்த பிறகு அவருடைய இருமக்களாகிய கியாஸ்உத்தீனும், ஷம்ஸ்உத்தீன் தாவூதும் பெருமையில்லாத, தொல்லைகள் நிறைந்த ஆட்சியைப் புரிந்தனர். 1397 நவம்பரில் அலாவுதீன் ஹஸன் பாமனியின் பேரனான பீரோஸ் குல்பர்காச் சிம்மாசனத்தைக் கைப்பற்றும்வரை அவர்களுடைய ஆட்சி ஒரு சில மாதங்கள்தான் நீடித்திருந்தது. பிரோஸ் தாஜ்-உத்தீன் பிரோஸ்ஷா என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டார்.

புர்ஹானி மஆசிரின் ஆசிரியர், 'பிரோஸ்ஷா தீவிரமுடைய வராயும், சக்திவாய்ந்த முடிமன்னராயுமிருந்தார். கொடுமையையும், பொய்மையையும் அழித்து ஒழிப்பதில் தம்முடைய எல்லாத் திறமை யையும் சக்தியையும் செலவிட்டார். ஷேக்குகள் (Shekhs), கல்வி வல்லோர், முனிவர்கள் இவர்களுடைய கூட்டுறவில் அவர் மிகுந்த இன்பம் அடைந்தார்.' ஆனால், சில ஆண்டு ஆட்சிக் குப் பிறகு அவரும் அவர் காலத்திலிருந்த பொதுவான தீச்செயல் களில் ஈடுபட்டுப் பழகிக் கொண்டார். இதை பெரிஷ்டாகூடக் கவனித்துள்ளார். அவர் பல்வேறு மொழிகளில் நல்ல அறிவுடைய வராய் இருந்தார். வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த தம் மனைவி மார்களுடன் அவர்களுடைய தாய்மொழியிலேயே தாராளமாகப் பேசும் திறமை பெற்றிருந்தார். விசயநகரத்து ராயர்களிடத்தும் வேறு பிற தக்கண அரசர்களிடத்தும் போரிடுவதில் அவர் தம்முடைய அரசமரபினரின் மரபுக்கொள்கையினையே பின்பற்றினார். 1398-லும், 1406-லும் அவர் விசயநகரத்தின்மீது படை யெடுத்துச் சென்ற ஒவ்வொரு முறையும் வெற்றி பெற்றார்; அதன் ராயரிடமிருந்து பெரும் நஷ்டஈட்டைப் பெற்றார். தம்முடைய அந்தப் புரத்துக்காக ஒரு விசயநகர இளவரசியைக் கொடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்திப் பெற்றார். ஆனால் 1420-ல் அவர் செய்த

Koviloor Acadamy

மூன்றாவது தாக்குதல் கிருஷ்ணாவின் வடக்கே இருந்த பாங்குல் என்ற இடத்தில், அவரைத் தோல்வியுறச் செய்தது. அவருடைய தலைமைத் தளபதியான மீர் பஜ்ல்-உல்லா இன்ஜு கொல்லப்பட்ட பிறகு, அவர் போர்க்களத்திலிருந்து பின்வாங்க நேரிட்டது. விஜயநகரப் படைகள் விரைவில் பாமனி இராச்சியதின் தெற்கு, கிழக்கு மாவட்டங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். இந்தத் தோல்வி சுல்தானின் மனத்திலும் உடலிலும் பெரும்புண்ணை ஏற்படுத்தி விட்டது. அதனால், அவர் ஆட்சியை அவருடைய அடிமைகளான ஹுஷியார் ஜன்உல் முல்க், நிஜாம் பீடார்-உல்-முல்க் என்ற இருவர் கையிலும் ஒப்படைத்தார். கடைசியில் அவர் அரசைத் துறந்து தம்முடைய சகோதரன் அகமது என்பவருக்குச் சிம்மாசனத்தை அளித்தார். புர்ஹானி மஆசிரின் ஆசிரியர் கருத்துப்படி அகமத், பிரோஸ் ஷாவை 1422 செப்டம்பரில் கொன்றுவிட்டார். ஆனால் சில ஆசிரியர்கள் பெரிஷ்டாவின் கூற்றுகளை ஆதாரமாகக் கொண்டு பிரோஸ்ஷா இயல்பாகவே இறந்தார் என்று நம்புகின்றனர்.

தம்முடைய சகோதரரின் ஆட்சியில் பாமனிப்படைகளால் அடைந்த பெருஞ்சேதத்திற்குப் பழிக்குப்பழிவாங்குவதற்காக அகமதுஷா விசயநகருக்கு எதிராக ஒரு கடும்போர் தொடுத்தார். பாமனி படைவீரர்கள் விஜயநகர் முற்றுகையால், விஜயநகரம் பெருந்துன்பத்துக்கு ஆளாகியது. அதனுடைய ராயர் பெரும் இழப்பீடு கொடுத்துச் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளும் நெருக்கடிக்காளானார். இச்செய்தி யானைகள்மீது ஏறிச்சென்ற ராயரின் மகனால் அகமதுஷாவின் பாசறையில் அறிவிக்கப்பட்டது. அங்கே ராயரின் மகன் மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். பிறகு படையெடுப்பாளர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்றனர். 1424 அல்லது 1425-ல் அகமதுஷாவின் தளபதி கானிஆஸம் இந்து இராச்சியமான வாரங்கல்லைத் தாக்கினார்; இராச்சியத்தின் அரசரைக் கொன்று பெருஞ்செல்வங்களுடன் அதன் கோட்டையைப் பிடிப்பதில் வெற்றியுற்றார். இவ்வாறு வாரங்கல்லின் சுதந்தரம் அடியோடு அழிக்கப்பட்டது. அகமதுஷா மாளவத்தின் மீதும் போர் தொடுத்தார். மாளவத்தின் சுல்தானான ஹுஷங்குஷா பெரும் பொருள், ஆள் சேதங்களுடன் தோற்கடிக்கப்பட்டார். அகமது குஜராத்து சுல்தானான முதலாம் அகமது ஷாவுடன் தொடுத்த போர் தோல்வியில் முடிந்தது. ஆனால் இருபக்கங்களிலுமிருந்த கற்றறிந்தோர், சமய நெறியாளர் இவர்களின் தலையீட்டின் மூலம் இருவரிடையேயும் சமாதான உடன்பாடு ஏற்பட்டது. அவருடைய ஆட்சிக்காலத்தில் கொங்கணத்து இந்து தலைவர்கள்கூட பாமனி படைகளின் பேராற்றலை உணர்ந்தனர். ஆனால், அகமது 1435 பிப்ரவரியில் நோய்வாய்ப்பட்டு இறந்த பிறகு, அந்தப்பெரும் சுமை நீங்கியது.

Koviloor Academy

அகமதுஷா தம்முடைய இராச்சியத்தின் தலைநகரைக் குல்பர்காவிலிருந்து பிடாருக்கு மாற்றினார். அழகாக அமைந்திருந்த பிடார் நலமிக்க தட்பவெப்ப நிலையைப் பெற்றிருந்தது. அதிகக் கல்வி கற்காதவராயிருப்பினும் சில முஸ்லிம் அறிஞர்களுக்கு அவர் மானியங்கள் அளித்தார். குரேசானிலிருந்த இஸ்பராயின் என்ற இடத்தைச் சேர்ந்த கவிஞரான ஷேய்க் ஆஜரி அவருடைய அரசவைக்கு வந்து, பிடாரிலுள்ள அவருடைய அரண்மனையைப் புகழ்ந்து இரண்டு செய்யுள்கள் இயற்றிப் பெரும்பொருளைப் பரிசாகப் பெற்றார். அந்த அரண்மனையின் கதவில் இரண்டு செய்யுள்களை அழகான கையெழுத்தில் வரைந்ததற்காக மௌலானா ஷர்ப்-உத்தீன் மிஜன்தரானி கூட 12,000 தங்காக்கள் பரிசு கொடுக்கப்பெற்றார்.

இதற்கிடையே பதவிக்காகவும், செல்வாக்குக்காகவும் ஆசைப்பட்டுப் பிரபுக்கள் எழுப்பிய சிக்கல்கள் அடிக்கடி கடுமையான போர்களாலும் பெரும் ஆட்கொலைகளாலும் முடிவுற்றது. அவை பாமனி இராச்சியத்தின் ஒழுங்கு அமைதியைப் பாதிக்கத்தொடங்கின. தக்கணப் பிரபுக்களுக்கும் அயல்நாட்டுப் பிரபுக்களுக்கும் நிரந்தரமான சச்சரவுகள் இருந்துவந்தன. தக்கணப் பிரபுக்களுடன் ஆப்பிரிக்கப் பிரபுக்களும், முவால்லாதுகளும் (ஆப்பிரிக்கத் தந்தையார்க்கும், இந்தியத் தாய்மார்கட்கும் பிறந்தவர்கள்) கூட்டாளிகளாய்ச் சேர்ந்திருந்தனர். அவர்களுக்கு எதிராக, துருக்கியர், அராபியர், பாரசிகர், முகலாயர் ஆகியோரடங்கிய அயல்நாட்டுப் பிரபுக்கள் இருந்தனர். இவர்களில் பலர் வலிமை மிக்கவராயும், சுறுசுறுப்பான பழக்கங்கள் உடையவராயும் இருந்தமையால், இந்திய நாட்டில் பிறந்தவரினும் அவர்களே பெரிதும் விரும்பப்பட்டு, அரசாங்கத்தின் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்தியப் பிரபுக்கள் அவர்கள்மேல் பொறாமை கொண்டிருந்தனர். இப்பொறாமை மதவேறுபாடுகளால் விரைந்து மிகுதியாகிக்கொண்டு வந்தது. ஏனெனில் தக்காணப் பிரபுக்களில் பெரும்பாலோர் ஸுன்னி மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய எதிர்க்கட்சியிலிருந்த பிரபுக்கள் ஷியா மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இவ்வாறு பிற்காலப் பாமனிய அரசர்களின் வரலாறு சதிகளும் சண்டைகளும் மலிந்த விறுவிறுப்பற்ற கதையாகவே உள்ளது, சதிகளும் சண்டைகளும் இராச்சியத்தின் வலிமைச்சக்தியை உறிஞ்சிக்குடித்துக் கடைசியில் அது சீர்குலையும்படி செய்துவிட்டன.

அகமதுவுக்குப் பிறகு அவருடைய மூத்த மகன் அமைதியுடன் இரண்டாம் அலாவுத்தீன் என்ற பட்டப்பெயருடன் சிம்மாசனமேறினார். பட்டத்திற்கு வந்தவுடனே அவர் அவருடைய சகோதரர் முஹம்மதுவின் தலைமையில் ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியை ஒடுக்கினார். எனினும் முகம்மது மன்னிக்கப்பட்டு ரெய்ச்சூர் தோஆப்பின் அரசாங்

Koviloor Acadamy

கம் கொடுக்கப்பட்டார். அங்கே அவர் தம் வாழ்நாளின் மீதிப் பாகத்தை பற்றுறுதியுடன் கழித்தார். அடுத்து கொங்கணத்திலிருந்த இந்து தலைவர்கள் அடிபணிய வைக்கப்பட்டனர். சங்கமேஷ்வரின் அரசர் தம்முடைய அழகான மகளைப் பாமனி சுல்தானுக்குத் திருமணம் செய்துகொடுத்தார். இது சுல்தானின் முஸ்லிம் மனைவியான மலிகா-கு-ஜாஹானுக்குப் பிடிக்கவில்லை. அவளுடைய வேண்டுகோளின்படி காந்தேஷை ஆண்டுவந்த அவளுடைய தந்தை நஸீர் கான் பீரார்மீது படையெடுத்தார். ஆனால் தௌலதாபாத்தின் கவர்னரும், அயல்நாட்டுப் பிரபுக்களின் தலைவருமான மலிக்-உல்-துஜ்ஜார் கலப் ஹஸன் என்பவர் அவரைத் தோற்கடித்தார். 1443-ல் அலாவுத்தீன் விசயநகரத்தின்மீது போர் தொடுத்தார். அதன் ராயர் எதிர்காலத்தில் ஒழுங்காகக் கப்பங் கட்டிவிடுவதாக வாக்களித்துச் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அந்தச் சமயத்தில் விசயநகர ராயர் தம்முடைய படையில் முஸ்லிம் படைவீரர்களைச் சேர்த்துக்கொண்டார் என்றும், தம்முடைய அரசாங்க ஊழியத்தில் சில முஸ்லிம்களைச் சேர்த்துக்கொண்டார் என்றும், அவர்களுடைய தொழுகைக்காகத் தலைநகரில் ஒரு மசூதியை எழுப்பினார் என்றும் பெரிஷ்டா எழுதுகிறார். அந்த மரபின் மற்ற சுல்தான்களைப்போலவே அலாவுத்தீன் இஸ்லாம்மீது அடங்காப் பேரார்வம் கொண்டிருந்தார். தம்முடைய கொள்கையைப் பின்பற்றுவோரிடம் மிகுந்த பரிவு காட்டினார். பெரிஷ்டா மூலமும் **புர்ஹானி மஆசிரின்** ஆசிரியர் மூலமும் நமக்குக் கீழ்க்கண்ட செய்திகள் தெரியவருகின்றன : ' அவர் மசூதிகளை நிறுவினார்; பொதுப் பள்ளிகளையும், அற நிலையங்களையும் நிறுவினார். அவற்றுள் தூய்மையும் முழு அமைப்புச் சிறப்பும் உடைய மருத்துவ சாலையும் ஒன்றாகும். அது அவருடைய தலைநகரான பீடாரில் அவரால் கட்டப்பட்டது. இரண்டு அழகான கிராமங்களை அறக் கட்டளையாகக் கொடுத்து அவற்றினின்று கிடைக்கும் வருமானம் மருந்துகள், பானங்கள் இவை வாங்குவதற்காகவே பயன்படுத்தப்படவேண்டும் என்று விதித்தார்....தெய்விகச் சட்டத்தின் கட்டளைகளையும், தடைகளையும் மிகவும் துல்லியமாகக் கடைப்பிடித்த அவர், தம்முடைய ஆட்சி எல்லையில் சாராயம் போன்ற எல்லா மயக்கந்தரும் மருந்துகளின் பெயர்கள்கூட இருக்கக் கூடாது என்று தடைவிதித்தார்.........''

அலாவுதீன் 1457 ஏப்ரலில் அமைதியாக உயிர் நீத்தார். அவருக்குப்பின் அவருடைய மூத்த மகன் ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தார். அவர் **'ஸாலிம்'** அல்லது 'கொடுங்கோலன்' என்ற அடை மொழியைப் பெறும் அளவு கொடுமை மிக்கவராய் இருந்தார். **புர்ஹானி ம ஆசிரின்** ஆசிரியரால் அவருடைய கொடுமைக்குப் பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் 1461 அக்டோபரில் இயற்கை மரணம் அடைந்தார் என்று சில ஆசிரியர்

Koviloor Acadamy

கள் கருதுகின்றனர். ஆனால், இன்னும் அதிகமாக நம்பத்தக்க வரலாற்றாசிரியர்கள் அவர் குடிபோதையில் இருக்கும்போது அவருடைய வேலைக்காரருள் ஒருவனால் கொல்லப்பட்டார் என்று எழுதுகின்றனர். அவருடைய இறப்பு 'சித்திரவதை செய்யும் நகங்களின் பிடியிலிருந்து' மக்களை விடுவித்தது. பொதுமக்களின் நிம்மதியுணர்ச்சி அக்காலக் கவிஞரான நஸிர் என்பவரால் இவ்வாறு தெரிக்கப்பட்டுள்ளது.

> 'ஹுமாயூன்ஷா இந்த உலகிலிருந்து மறைந்தார், கடவுளே! அவருடைய இறப்பு மக்களுக்கு எவ்வளவு பெருநன்மையாக உள்ளது! அவர் இறந்த இந்நாளில் உலகமே பெருமகிழ்ச்சி அடைந்தது. எனவே, 'உலகப்பெருமகிழ்ச்சியே' அவருடைய இறந்த நாளைக் கொடுத்தது.'

வரலாற்றுக் கோப்பாளர்களின் கருத்துப்படி, ஹுமாயூனின் இளமை மிக்க மகனான நிஜாம் ஷா அடுத்துச் சிம்மாசனம் ஏற்றப்பட்டார். அவருடைய அன்னை அரசியான மக்தூமா ஜஹான், காஜா ஜஹன், காஜா மகமூத் கவான் ஆகியோரின் உதவியுடன் நாட்டின் ஆட்சியைக் கவனித்துவர முற்பட்டாள். ஆனால் அந்தப் பையனுடைய ஆட்சிக்காலத்தில் அந்த 'இராச்சியத்தைத் தாக்குவதற்கான தைரியத்தை ஒரிஸ்ஸா, தெலிங்கானா, அரசர்கள் அடைந்தனர். அவர்கள் பெரும் இழப்புடன் துரத்தியடிக்கப்பட்டனர். ஆனால், விரைவில் இதைவிடப் பேரிடர்ப்பாடு மாளவத்தின் முதலாம் மகமூத் கில்ஜி பாமனியர்களுக்குரிய பகுதிகளின்மீது படையெடுத்து, பீடாரை முற்றுகையிட்டபோது ஏற்பட்டது. குஜராத்தின் சுல்தான் மகமூது பேகர்ஹா பாமனிய சுல்தான் உதவி கேட்டு விடுத்த வேண்டுகோளுக் கிணங்கியபோதுதான், பீடார் காப்பாற்றப்பட முடிந்தது. 1463 ஜுலை 30ஆம் நாள் நிஸாம் ஷா மிகவும் திடீரென்று இறந்தார். உடனே அவருடைய ஒன்பது வயதே நிரம்பிய தம்பி மூன்றும் முகம்மது என்ற பட்டப் பெயருடன் சிம்மாசனம் ஏறினார்.

முகம்மது பட்டத்துக்கு வந்த பிறகு இராச்சியத்தில் தனி அதிகாரத்தைக் குறிக்கொண்டிருந்த பழைய மந்திரியான காஜா ஜஹான், அன்னை-அரசியின் செல்வாக்கின் மூலம் கொல்லப்பட்டார். காலியான அந்தப் பதவிக்கு மகமூது கவான் நியமிக்கப்பட்டார். அவர் காஜா ஜஹான் என்ற பட்டத்தைப் பெற்றார். அனுபவத்தெளிவு மிக்க திறமையால் அவர் பாமனி அரசாங்கத்திற்கு இடைவிடாதப் பற்றுறுதியுடன் தொண்டு புரிந்தார். திறமை மிக்க யுத்த தந்திரம், வெற்றிகரமான படைத்துறைப் படையெடுப்புகள் இவற்றின் மூலம் அவர் 'முந்திய அரசர்கள் சாதிக்க முடியாத அளவுக்குப்' பாமனி இராச்சியங்களைச் சிறப்புறச் செய்தார்.

Koviloor Academy

1469-ல் மகமூத் கவான் கொங்கணத்து இந்து அரசரை அடக்குவதற்காகப் படையுடன் சென்றார். அவர் பல கோட்டைகளைப் பிடிப்பதில் வெற்றியுற்றதைக் கண்டு பயங்கொண்ட சங்கமேஸ்வரத்தின் அரசர் அவருடைய பிரதிநிதிகளிடம் கேல்னக் கோட்டையைச் ஒப்படைத்தார். புர்ஹானி-இ-ம ஆசிரின் ஆசிரியர் 'இந்த இணையில்லாத அமைச்சர் பல கோட்டைகளையும், நகரங்களையுங் கைப்பற்றினார்; கொள்ளையடித்த பொருள்களைப் பேரளவில் பெற்றார்; குதிரைகள், யானைகள், கன்னியர், பெண் அடிமைகள் போன்ற விலை மதிப்பு மிக்க பொருள்களும், விலையுயர்ந்த நகைகளும், முத்துக்களும் அந்த அமைச்சரின் கையில் வந்து விழுந்தன' என்று கூறுகிறார். விஜயநகரப் பேரரசின் மிக்க சிறந்த துறைமுகங்களுள் ஒன்றான கோவாவையும் அவர் பிடித்தார். இதற்கிடையே பாமனி இராச்சியத்தின் ஒரு தளபதியான நிஸாம்-உல்-முல்க் பர்ஹி ராஜமந்திரி கோட்டைகளைப் பிடித்துவிட்டார். இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து மழைபெய்யாமையால் 1474 ஆம் ஆண்டில் தக்கணத்தில் கடுமையான பயங்கரப் பஞ்சம் தலைவிரித்தாடி நாட்டைப் பாழாக்கியது. அதனுடைய கொடுமைகளுக்குப் பலர் பலியாயினர். கடைசியில் மூன்றாவது ஆண்டில் மழை பெய்யத் தொடங்கியபோது நிலத்தை உழுது பயிரிடும் உழவர் ஒருவரும் உயிரோடிருக்கவில்லை.

ஆனால், சுல்தானின் படைத்துறைப் புது முயற்சிகள் சிறிதும் தளராமல் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1478 பிப்ரவரியில் முகம்மது ஒரிஸ்ஸாவின்மீது படையெடுத்து அந்நாட்டைப் பாழ்படுத்தினார். அந்நாட்டின் அரசர் அவருக்குச் சில யானைகளையும் வேறு சில விலைமதிப்புள்ள பொருள்களையும் பரிசாகக் கொடுத்து அவரைத் திரும்பிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டார்.

அவருடைய ஆட்சியின் மிகுந்த வெற்றி மிக்க படையெடுப்பு காஞ்சீபுரப் படையெடுப்பாகும். அவர் விசய நகருடன் போரிட்டுக் கொண்டிருக்கும்போது (1481 மார்ச்சு 12 ஆம் நாள்) காஞ்சீபுரம் பக்கம் தம் கவனத்தைத் திருப்பினார். சில மிகப் பழைய கோயில்களைக் கொண்டிருந்தது காஞ்சி. அக் கோயில்கள் 'அக்காலத்தின் அதிசயமாக இருந்தன. எண்ணமுடியாத பொருள்களும் நகைகளும், விலைமதிப்புயர்ந்த முத்துக்களும், அவற்றுள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. மேலும் எண்ணிலாத அடிமைச் சிறுமிகளும் கோயிலுக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தனர்.' முற்றுகையிடப்பட்ட படை வீரர்கள் மிகுந்த தீரத்துடன் சமாளித்து நின்றனர். ஆனால் கடைசியில் பாமனியரசரின் படைகளால் தோற்கடிக்கப் பட்டனர். வெற்றியுற்ற படை வீரர் பெரும் பொருளைக் கொள்ளையடித்துத் தம்முடன் கொண்டு சென்றனர்.

Koviloor Acadamy

மூன்றும் முகம்மது ஷாவின் ஆட்சியின் படைப் பதிவேட்டில் உண்மையில் பெரு வெற்றியே காணப்படுகிறது. ஆனால், அவரிடம் காணப்பட்ட காமவெறியும், அவருடைய அரசவையிலிருந்த பிரபுக் களின் சுயநலச் சிக்கல்களும் மற்ற விதங்களில் அவர் முன்னேறு வதற்குத் தடையாயிருந்தன. அவை கடைசியில் அவருடைய அழிவுக்கே காரணமாயின. மிகுதியான குடிப்பழக்கமானவரான அவர் ஆண்டுகள் செல்லச் செல்ல மன ஒரு நிலைப்பாட்டை இழந்து வந்தார். அவருடைய எதிரிகளான தக்கணப் பிரபுக்களின் தூண்டு தலினால், அவர் 1481 ஏப்ரல் 5 ஆம் நாள் மகமுது கவானைத் தூக்கி லிடும்படி தற்கொலைக்குச் சமமான கட்டளையை விடுத்தார். தக்கணப் பிரபுக்கள் மகமுது கவானின் அதிகாரத்தையும் வெற்றியை யும் கண்டு பொறுமை கொண்டு அந்த அமைச்சர் விசய நகர ராய ருடன் வஞ்சகமான கடிதப்போக்கு வரத்தில் ஈடுபட்டிருந்தார் என்று சுல்தான் நம்பும்படி ஒரு பொய்க் கடிதத்தை அவரிடம் சேர்ப்பித் தனர். இவ்வாறு பாமனி இராச்சியத்தில் அமைச்சராக மூன்று அரசர்களின் ஆட்சிக்காலங்களில் தொடர்ந்து திறமையுடன் நேர்மை யுடன் பணிபுரிந்த மகமதுகவான் தம்முடைய தலைவரின் நன்றியைப் பெற உரிமையுடைய வராயிருந்தும், அரசாங்கத்தின் உண்மையான நலங்களில் சிறிதும் அக்கறையில்லாத போட்டிப் பிரபுக்களின் குழு வினர் செய்த சதிக்குப் பலியானார். இந்தப் பழைய அமைச்சர் அநியாயமாகத் தூக்கிலிடப்பட்ட பிறகு, 'பாமனி இராச்சியத்தின் எல்லாப் பிணைப்பும், சக்தியும் போய் விட்டன' என்று மெடோ டெய்லர் (Meadow Taylor) பொருத்தமுறக் கூறியுள்ளார். பல விதங்களில் மகமுது கவானின் குணவியல்பு அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களின் குணவியல்பைக் காட்டிலும் மிக மேப்பட்டதா யிருந்தது. எளிய தூய வாழ்க்கையை நடத்திவந்த அவர் கல்வி யிலும், கல்வியறிஞர்களின் கூட்டுறவிலும் விருப்பமுடையவராயிருந் தார். அவ்விருப்பம் அவரைப் பீடாரில் ஒரு மிகச்சிறந்த கல்லூரி யையும், ஒரு பெரிய நூலகத்தையும் வைத்து நடத்தச் செய்தது. ஒரு பொதுப்பணி அதிகாரியாக அவர் விருப்புவெறுப்பற்றுச் செய்த தொண்டுகள், நம்முடைய புகழுக்கு அவரை உரியவராகச் செய் கின்றன. மூன்றும் முகமது தம்முடைய முட்டாள்தனத்தைச் சிறிது காலத்துக்குப் பிறகே உணர்ந்தார். துன்பமும் கழிவிரக்கமும் கொண்ட அவர் ஓராண்டிற்குள் கி.பி. 1482 மார்ச்சு 22ஆம் நாள் உயிர் துறந்தார்.

அதன் பிறகு பாமனி இராச்சியம் ஆழ்ந்த குழப்பத்தில் மூழ்கியது. அக்குழப்பம் தவிர்க்கமுடியாத வகையில் அதனுடைய அழிவுக்குக் காரணமாகியது. மூன்றும் முகம்மதுவுக்குப் பின்வந்த அவருடைய இளைய மகனான முகமது ஷா அவருடைய இராச்சியத்தின் ஒழுங்கு நிலையைக் காப்பாற்றத் தன் தனித் திறமையின் ஆற்றலோ, திறமை

Koviloor Acadamy

மிக்க ஓர் அமைச்சரின் உதவியோ இன்றி தவித்தார். தக்கணத்தவர்க்கும் அயல் நாட்டவர்க்கு மிடையே சிறிதும் குறையாத பெருஞ் சினம், வஞ்சம் இவற்றுடன், சச்சரவு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வந்தது. நாட்டில் நிலவிக் கொண்டிருந்த குழப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு மாகாண கவர்னர்கள் தங்கள் விடுதலேயை அவ்வப்போது அறிவித்துக் கொண்டனர். மகமூதின் பெயரளவு அதிகாரம் தலேநகரைச் சுற்றியுள்ள ஒரு சிறு பகுதிவரையில் தான் பரவியிருந்தது. அவரும் அவருக்குப் பின் வந்த நான்கு அரசர்களும், துருக்கியைச் சேர்ந்த தந்திரமான பிரபுவான காசிம் பரீத்-உல்-மமாலிக் என்பவருடைய கையிலும், அவர் 1504-ல் இறந்த பிறகு அவருடைய மகனும், 'தக்கணத்துக் குள்ளநரி' என்றழைக்கப்பட்டவருமான அமீர் ஆலி பரீத் என்பவர் கையிலும் வெறும் பொம்மைகளாக இருந்தனர். கடைசி அரசரான கலிமுல்லா ஷா அவருடைய அரசமரபு இறந்த பொருள்களேயெல்லாம் மீட்பதற்காக மறைமுகமாகப் பாபரின் உதவியையும் பெற முயன்ருர். ஆனல், அவர் ஏமாற்றமே யடைந்தார். ஏறக்குறைய நூற்றெண்பதாண்டுகளின் ஆட்சிக்குப் பிறகு பாமனி அரசமரபு 1527-ல் அவருடைய இறப்புடன் முடிவுற்றது.

தக்கணத்தில் ஆண்ட பாமனி அரசமரபின் வரலாறு படிப்பதற்கு இன்பந்தரவில்லே. அதன் பெரும்பாலான சுல்தான்கள் முக்கியமாகக் கடும்போர்களிலேயே ஈடுபட்டிருந்தனர். அரசவையினரிடமிருந்த சிக்கல்களினுலும், உள்நாட்டுப் போர்களினுலும் அதனுடைய உள்நாட்டு அர்சியல் மிகவும் சிதைவுற்றிருந்தது. அந்த அரசமரபைச் சேர்ந்த பதினெட்டு அரசர்களில் ஐந்து பேர் கொலேசெய்யப்பட்டனர். இருவர் மட்டுமீறிய வழக்கங்களினுல் இறந்தனர். மூவர் சிம்மாசனத்திலிருந்து அகற்றப்பட்டனர். அம்மூவரில் இருவர் குருடராக்கப்பட்டனர். எனினும் பாமனி சுல்தான்கள் தங்கள் அறிவுக் கெட்டியவரை படிப்பையும் கல்வியையும் ஆதரித்து வந்ததும், கோட்டைகளேயும் கட்டிடங்களேயும் எழுப்பியதும் அரசாங்கத்துக்கு மிகுதியான வருவாய்களேத் தந்ததுடன் உழவர்களுக்கு நன்மையையும் செய்த கிழக்கு மாகாணங்களில் செய்யப்பட்ட நீர்ப்பாசன வேலேகளும் அவர்களுக்குப் பெருமைதரத் தக்கனவாயுள்ளன.

மூன்ரும் முகம்மதுஷாவின் ஆட்சியில் 1470 முதல் 1474 வரையுள்ள ஆண்டுகளில் இந்த இராச்சியத்தில் சுற்றுப்பயணம் செய்த ரஷ்யப் பயணியான அல்தானசியஸ் நகிதின் (Althanasius Nikitin) என்பவர் குறித்துவைத்துள்ள சில குறிப்புக்களினின்றும், பாமனி இராச்சியத்தில் வாழ்ந்த பொதுமக்களின் நிலேமை எவ்வாறிருந்தது என்பதைப்பற்றி நாம் ஓரளவு அறிகிருேம். அவர் எழுதுகிருர்: 'சுல்தான் ஒரு சிறிய ஆள்; இருபது வயதினர். பிரபுக்களின் அதி

Koviloor Academy

காரத்தில் இருப்பவர்.......சுல்தான் தம் படைவீரர்கள் 300,000 பேருடன் வெளியே செல்கிறார். நாட்டில் மக்கள் நெருக்கம் மிகுதியா யுள்ளது. பிரபுக்கள் மிகுந்த செல்வர்களாயும், ஆடம்பரத்தில் இன்பங் காண்பவராயுமிருக்க, நாட்டுமக்களின் நிலைமை மிகவும் வருந்தத் தக்கதாயுள்ளது. தங்கச் சேணங்களால் பூட்டப்பட்ட 20 சிறந்த அலங்காரக் குதிரைகள் முன்னே செல்ல, பின்னால் 300 ஆட்கள் குதிரைமேல் ஏறிக்கொண்டும், 500 பேர் நடந்தும், பத்துத் தீப்பந்தம் பிடிப்போரும், பத்து இசைவாணர்களும், கொம்பூதுவோரும் நடந்தும்வரப் பிரபுக்கள் வெள்ளி அமளிமீது அமர்ந்து சுமந்து செல்லப் படுகின்றனர்.

'சுல்தான் வேட்டையாடப் புறப்படும்போது, தம் அன்னை, மனைவி இவர்களுடனும், 10,000 குதிரை வீரர்கள், 50,000 காலாட்கள், முலாம் பூசிய கவசத்தால் அலங்கரிக்கப்பட்ட 200 யானைகள், முன்னே 100 குதிரைவீரர்கள், 100 கூத்தாடுவோர், தங்கச்சேணங்கள் பூட்டப்பட்ட 300 சாதாரணக் குதிரைகள், 100 குரங்குகள், எல்லாம் வெளிநாட்டைச் சேர்ந்த 100 வைப்பாட்டிமார்கள் இவர்களும் தொடர்ந்துவரச் செல்வார்.'

இவ்வாறு பிரபுக்களின் ஆடம்பரமிக்க வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடும்போது பொதுமக்களின் நிலை மிகவும் துன்பமிக்கதாயிருந்தது என்பதை அயல்நாட்டுப் பயணியின் சான்றுகொண்டு அறிகிறோம். ஆனால் பாமனி அரசர்களின் ஆட்சிக்காலம் முழுவதிலும் பொது மக்களின் நிலை எவ்வாறிருந்தது என்பதைப்பற்றிய தெளிவான கருத்தை உருவாக்கிக்கொள்ள வேறெந்த நல்ல சான்றும் கிடைக்க வில்லை. முஸ்லிம் வரலாற்றுக் கோப்பாளர்களின் குறிப்புகள் எல்லாம் படைத்துறைப் போர்கள், புறமதத்தினருக்கு எதிராகச் செய்த போர்கள் முதலியவைபற்றிய செய்திகளால் நிரம்பியுள்ளனவே தவிர பொதுமக்களின் வரலாறுபற்றிய எந்தக் குறிப்பும் அவற்றில் காணப் படவில்லை.

இ. தக்கணத்தின் ஐந்து சுல்தானியங்கள்

பாமனி அரசு சிதைவுற்ற பிறகு, தக்கணத்தில் ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து தனித்தனிச் சுல்தானியங்கள் தோன்றின. இவை யெல்லாம் அவற்றை நிறுவியோபாரின் பட்டப் பெயர்களால் அழைக் கப்பட்டன ; பிராரின் இமாத் ஷாஹி அரசமரபு, அகமத் நகரின் நிஸாம் ஷாஹி அரசமரபு, பீஜப்பூரின் ஆதில் ஷாஹி அரசமரபு, கோல் கொண்டாவின் குதுப் ஷாஹி அரசமரபு, பீடாரின் பரீத் ஷாஹி அரச மரபு என்று அவை அழைக்கப்பட்டன. முதலில் பிரிந்தது பிரார்தான். அங்கே கி.பி.1484-ல் இந்துவா யிருந்து மதமாறிய பதுல்லா இமாத்ஷா

Koviloor Acadamy

(Fathullah Imad Shah) என்பவர் தம்முடைய சுதந்தரத்தை அறிவித்து இமாத் ஷாஹி அரச மரபினை நிறுவினார். கி.பி. 1574-ல் பிரார் அகமத் நகருடன் ஒன்றாய் இணைக்கப் பட்டது.

கி.பி. 1489-90-ல் பீஜப்பூரின் கவர்னராயிருந்த யூசுப் ஆதில் கான் (Yusuf Adil Khan) தம்மை உரிமையுடைய ஆட்சியாளர் என்று அறிவித்தார். அவர் இளமைக் காலத்தில் மகமூத் கவானால் விலைக்கு வாங்கப்பட்ட ஜியாரஜியன் (Georgian) அடிமையாவார். பின்பு தம்முடைய தகுதியாலும் திறமையாலும் உயர் வடைந்தார். எனினும், சில தனிப்பட்ட செய்தியை நம்பிக்கொண்டு பெரிஷ்டா, அவர் கி.பி. 1451-ல் இறந்த துருக்கி அரசர் சுல்தான் இரண்டாம் முராதின் மகன் என்றும், தந்தைக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவருடைய மூத்த சகோதரர் இரண்டாம் முகம்மது தம்மைக் கொல்லக் கட்டளையிட்டதால் உயிருக்குப் பயந்து தமது பதினேழாம் வயதில் தம் நாட்டை விட்டு முதலில் பாரசீகத்துக்கும், பிறகு இந்தியாவுக்கும் ஓடி வந்தவர் என்றும், பிறகு பாமனிய சுல்தானின் அமைச்சரிடம் தம்மை அடிமையாக விற்றுக்கொண்டார் என்றும் எழுதுகிறார். யூசுப் ஆதில் ஷா ஒரு மத வெறியரல்லர். அவருடைய அரசாங்கத்தில் அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு மதம் தடையாக இருக்கவில்லை. பாரசீகத்தில் அவர் தங்கியிருந்தனாலோ, என்னவோ அவர் ஷியா மதக் கொள்கைகளையே பெரிதும் விரும்பினார். தம்முடைய வாழ்க்கையில் தீயபண்பற்ற வராக இருந்த அவர், தம்முடைய அரசாட்சிக் கடமைகளில் கவனமாயிருந்தார். பெரிஷ்டா கூறுகிறார்: 'யூசுப் ஆதில் ஷா இன்பத்தையும் கடமையையும் ஒன்றாய்க் கலந்திருக்கச் செய்தாராயினும், இன்பம் கடமையில் தலையிட என்றுமே அவர் அனுமதித்ததில்லை. எப்போதும், நாணயத்துடனும் நடக்க வேண்டு மென்று அவர் தம்முடைய அமைச்சர்களை எப்போதும் எச்சரித்துக் கொண்டிருந்தார். அந்த நற்குணங்களைத் தாமே பின்பற்றி அவர்களுக்கு ஒரு முன்மாதிரியா யிருந்தார். அவர் பாரசீகம், துருக்கிஸ்தான், ரூம் (Rum), முதலிய இடங்களிலிருந்து கல்வியில் வல்ல அறிஞர் பலரையும், வீரம் மிக்க அதிகாரிகளையும், மிகச் சிறந்த கலைஞர்களையும் வரவழைத்தார். அவர்கள் அவருடைய வள்ளன்மை நிழலின்கீழ் இன்பமாக வாழ்ந்தனர். அவருடைய ஆட்சியில் பீஜப்பூரின் கோட்டை கல்லால் கட்டப்பட்டது.' யூசுப்ஆதில் ஷாவுக்குப் பின்னர் பட்டத்துக்கு வந்த யூசுப்பின் மகனான இஸ்மாயில் ஆதில் ஷா (1510-1534), இஸ்மாயீலின் மகனான மல்லூ (1534), மல்லூவின் சகோதரரான முதலாம் இப்ராஹீம் ஆதில் ஷா (1534-1557), இப்ராஹீமின் மகனான ஆலி ஆதில் ஷா (1557-1579) இவர்களுடைய ஆட்சிக்காலங்கள் போரும் பூசலும் நிறைந்தனவாக இருந்தன. ஆனால், ஆலி ஆதில் ஷாவின் பின் வந்தவரும்

Koviloor Acadamy

அவருடைய மருகருமான இரண்டாம் இப்ராகிம் ஆதில் ஷா மூலம் அந்த அரச மரபும் மற்ருெரு போற்றத்தக்க ஆட்சியாளரைத் தந்தது. அவர் இராச்சியத்தை அறிவுடைமையுடனும், மதப் பொறுமையுடனும் அரசாண்டு கி.பி. 1626-ல் இறந்தார். பீஜப்பூரையும், அதனுடைய உள்நாட்டு மரபுகளையும் பற்றிய சில அனுபவங்களை எழுதிய மெடோஸ் டெய்லரின் கருத்துப்படி 'அவர் ஆதில் ஷாஹியின் அரசமரபில் மற்ற எல்லோரையும் விட மிகப் பெருமையுடைய அரசராவார்; அவ்வரச மரபை நிறுவியவரைத் தவிரப் பல விதங்களில் மிகச் சிறந்த திறமையுடையராயும், புகழ் உடையராயும் இவர் விளங்கினர்.'' அவுரங்கஸீப்பினல் கி.பி. 1686-ல் இணைத்துக் கொள்ளப்படும்வரை பிஜப்பூர் இராச்சியம் நிலைத்திருந்தது.

அகமத்நகர் இராச்சியத்தினை நிறுவியவர் நிஸாம்-உல்முக் பகரியின் மகனான மலிக் அகமத் ஆவர். நிஸாம் உல் முல்க் பகரி கோதாவரியின் வடக்கேயுள்ள பாத்ரி (Pathri) என்ற இடத்தில் பரம்பரையாக வரிவசூல் செய்யும் இந்து அதிகாரிகள் குடும்பத்தில் பிறந்தார். மகமூத் கவானின் கொலைக்குக் காரணமான சதியில் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார். அவருடைய கொலைக்குப் பின்னர் முதலமைச்சரானார். மலிக் அகமது ஜுன்னரின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தார். 1490-ல் அவர் தம்முடைய சுதந்தரத்தை அறிவித்தார். சிறிது காலத்துக்குப் பிறகு அவர் தம்முடைய தலைநகரை போரியல் சூழ்ச்சித் திறனில் சிறந்த ஓர் இடத்திற்கு மாற்றினர். இவ்வாறு அகமத்நகர் கட்டப்பட்டது.

பல ஆண்டுகள் முயற்சி செய்த பிறகு கி.பி. 1499-ல், அவர் தௌலதாபாத்தைக் கைப்பற்றினர். அது அவருடைய இராச்சியத்தை ஒரு நிலைப்படுத்த உதவியது. அவர் கி.பி. 1508-ல் இறந்தார். அவருக்குப்பின் அவர் மகன் புர்கான் நிஸாம் ஷா (Burhan Nizam Shah) பட்டத்துக்கு வந்தார். அவர் தம்முடைய நாற்பத்தைந்து ஆண்டு ஆட்சியில் அண்டைநாடுகளுடன் போர்கள் தொடுத்தார். ஏறத்தாழக் கி.பி. 1550-ல் பீஜப்பூருக்கு எதிராக விசயநகர ராயருடன் தொடர்புகொண்டார். அவருக்குப் பின் வந்த ஹுஸேன் நிஸாய் ஷா விசயநகருக்கு எதிராக 1565-ல் முஸ்லிம் கூட்டு நாட்டுடன் சேர்ந்தார். அந்த ஆண்டு அவர் இறந்த பிறகு அவருடைய மகன் முதலாம் முர்துஸா நிஸாம் ஷா (Murtaza Nizam Shah) பட்டத்துக்குவந்தார். அவர் சிற்றின்பத்தில் மூழ்கித் திளைக்கும் காளையாக இருந்தார். அவருடைய எதிரிகளுடன் வெற்றிகரமாகப் போட்டியிடத்தகுதியற்றவராக இருந்தார். அக்பரின் மகனை இளவரசன் முராதினை 1576-ல் சாந்த் பிபி வரலாற்றுச் சிறப்பு மிக்க வகையில் எதிர்த்துப் போரிட்டமையும், மலிக் அம்பரின் (Malik Ambar) படைத்துறை, ஆட்சித்துறைத் திறமையையும் தவிர

Koviloor Acadamy

அகமத்நகரின் பிற்கால வரலாற்றில் இதைப்போன்ற முக்கியமானதும், சுவைமிக்கதுமான வேறொரு நிகழ்ச்சி நிகழவே இல்லை. 1600-ல் அந்த இராச்சியம் முகலாயர்களால் தாக்கப்பட்டது. ஆனால், ஷாஜ ஹானின் ஆட்சியின் போது 1633ஆம் ஆண்டில்தான் அது பேரர சுடன் கடைசியில் இணைக்கப்பட்டது.

பழைய இந்து அரசான வாரங்கல்லின் வீழ்ச்சியின்மீது கோல் கொண்டாவின் முஸ்லிம் இராச்சியம் வளர்ந்துவந்தது. கி.பி. 1424-ல் பாமனிகளால் வாரங்கல் இராச்சியம் வெல்லப்பட்டது. முகமது ஷா பாமனியின் காலத்தில் பாமனி இராச்சியத்தில் துருக்கிய அதிகாரியாயிருந்த குலிஷாவினால் குதுப் ஷாஹி அரசமரபு நிறுவப் பட்டது. குலிஷா மஹ்மூத்கவானால் தெலிங்கானாவின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தார். கி.பி. 1512 அல்லது 1518 வரை தம் முடைய தலைவரிடத்துப் பற்றுறுதியுடையவராக இருந்தார். அந்த ஆண்டில் பரீத்துகளின் அதிகாரத்தையும், கொடுமையையும் எதிர்த் துத் தம்முடைய சுதந்தரத்தை நிலைநாட்டினார். அவர் 1543-ல் தமது தொண்ணூறாவது வயதில் தம்முடைய மகன் ஷம்ஷீத்தினால் கொல்லப்படும்வரை நீண்டகாலம் செங்கோலேச்சி வந்தார். அவருக் குப் பின் ஜம்ஷீத் ஏழாண்டுகள் ஆண்டார். ஜஷ்ஷீத்துக்குப் பின்பு பட்டத்துக்கு வந்த அவருடைய சகோதரர் இப்ராகீம், மற்ற முஸ்லிம் சுல்தானியங்களுடன் சேர்ந்துகொண்டு 1565-ல் விசயநகரை எதிர்த்துப் போரிட்டார். அவர் ஒரு நல்ல ஆட்சியாளர்; அரசாங் கத்தின் உயர்ந்த உத்தியோகங்களில் இந்துக்களைத் தாராளமாக அமர்த்திக்கொண்டார். 1611-ல் அவர் இறந்த பிறகு கோல் கொண்டாவின் வரலாறு பெரும்பாலும் முகலாயப் பேரரசின் வரலாற் றோடு இணைந்ததாகப் போயிற்று. இறுதியில் அது அவுரங்கஸிப் பினால் 1687-ல் அப்பேரரசுடன் இணைக்கப்பட்து.

பாமனி இராச்சியத்தின் தூரத்து மாகாணங்கள் எல்லாம் தங்கள் சுதந்தரத்தை அறிவித்து விட்ட பிறகு மீதியிருந்த பகுதிகள் பரீத்து களின் அரசேற்பு மூலம் பேருக்கு மட்டும் ஓர் இராச்சியமாக இருந்தது. 1526 அல்லது 1527-ல் அமீர் அலி பரீத் (Amir Ali Barid) முறையாகப் பொம்மைகளைப் போன்றிருந்த பாமனி சுல்தான்களின் ஆட்சியை ஒழித்துக் கட்டி விட்டுப், பீடாரின் பாரீத் ஷாகி அசர மரபை நிறுவினர். அது அந்தப்பகுதி கி.பி. 1618-19-ல் பீஜப்பூரில் இணைக்கப்படும் வரை நிலைபெற்றிருந்தது.

பாமனி இராச்சியத்தின் ஐந்து கிளைகள் சில நல்ல ஆட்சியாளரை, குறிப்பாக பீஜப்பூர், கோல்கொண்டா இவற்றில் பெற்றிருந்தது. இந்தச் சுல்தான்களின் வரலாறு பெரும்பாலும் தங்களுக்குள்ளும் விஜயநகருடனும் இடைவிடாது செய்துவந்த போர்களின் வரலாறு

Koviloor Acadamy

கவே இருந்தது. ஒவ்வொருவரும் தக்கணத்தில் தங்கள் மேலாண்மையைச் செலுத்தப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தனர். அதனால் முற்காலத்தில் சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்குமிடையேயும், பதினெட்டாம் நூற்றாண்டில் மைசூர், மராத்தியர்களுக்கும், நிஜாமுக்குமிடையேயும் நடந்த போர்களைப்போன்று உள்நாட்டுபோர்கள் நிறைந்த களமாகத் தக்கணம் காட்சியளித்தது. பாமனி இராச்சியத்தின் சிதைவும் அதன் பிறகு எழுச்சியுற்ற ஐந்து சுல்தானியங்களுக்குள் நடந்து வந்த போர்களும், அரசியல் அடிப்படையிலும், மதத்தின் அடிப்படையிலும் தென்னகத்தே இஸ்லாமின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதித்து விட்டன. தென்னாட்டில் துக்ளக்குகளின் காலத்திற்குப் பிறகு தோன்றிய இந்துமத மறுமலர்ச்சியின் உணர்ச்சி விஜய நகரப்பேரரசின் எழுச்சியிலும் வளர்ச்சியிலும் உச்சநிலையடைந்தது.

5. இந்து இராச்சியங்கள்—விசயநகரப் பேரரசு

அ. அரசியல் வரலாறு

விசயநகரின் தொடக்க வரலாறு இன்னும் இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இந்தப் பெரிய பேரரச நகரின் தொடக்கத்தைப்பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளைக் குறிப்பிட்டுவிட்டு சீவெல் (Sewell) என்பார். இந்து கதைகளின் பொதுப்பான்மையுடன் வரலாற்று உண்மைகளை இணைத்துப் பார்த்தால் ஒருவேளை மிகவும் நியாயமான ஒரு விளக்கம் கிடைக்கக்கூடும் என்று கூறுகிறார். அவர் பொதுவாகக் கூறப்படும் மரபுரையை ஒப்புக்கொள்கிறார். அதன்படி, துங்கபத்திராவின் வட கரையிலுள்ள ஆனெகுண்டி என்ற கோட்டைக்கு எதிர்ப்புறத்தில் அந் நதியின் தென்கரையில், சங்கமரின் ஐந்து புதல்வர்கள் விசயநகரையும், விசயநகரப் பேரரசையும் நிறுவினர். அந்த ஐந்து புதல்வர்களுள் ஹரிகரர் புக்கர் என்போர் மிகச் சிறந்தவர்களாவர். அந்தக் காலத்தில் சிறப்புற்றிருந்த பிராமண முனிவரும் அறிஞருமான மாதவ வித்யாரண்யரும், அவருடைய சகோதரரும், வேதத்திற்குப் புகழ்பெற்ற உரையெழுதியவருமான சாயனர் முதலியவர்களின் மூலம் ஊக்க வுணர்ச்சிபெற்று, அவர்கள் இந்தப் புதிய முயற்சியில் ஈடுபட்டனர். இந்த மரபுரை பிற்காலத்தில் கட்டிவிடப்பட்ட கதை என்றும், பதினாறும் நூற்றாண்டில்தான் அக்கதை வழக்கத்தில் வந்தது என்றும் சிலர் கருதுகின்றனர். திருத்தந்தை ஹீராஸ் பாதிரியாரின் (Rev. Father Heras) கருத்துப்படி, விசயநகரப் பேரரசினை வளர்த்த ஆனெகுண்டி நகரத்திற்குக் கால்கோள் செய்தவர்கள் ஹொய்சள அரசரான மூன்றும் வீர பல்லாளரும், ஹொய்சள ஆளும் குடும்பத்தின் நெருங்கின உறவினரும் அங்கே தம் இருப்பிடத்தைக் கொண்டிருந்த

Koviloor Acadamy

எல்லைப்புற அதிகாரியுமான ஹரிகரருமாவர். வேரேர் ஆசிரியரின் கருத்துப்படி, "பிற்காலத்தில் விசயநகரம் என்றழைக்கப்பட்ட நகரைக் கட்டிப் பலப்படுத்தியது மாபெரும் ஹொய்சள அரசரான மூன்றும் வீர பல்லாளரின் தீரச் செயலாகவே கருதப்படவேண்டும். முகம்மது துக்ளக்கின் படையால் கம்பிலி அழிக்கப்பட்ட பிறகும், ஹொய்சளத் தலைநகரான துவார சமுத்திரப் படையெடுப்பை அடுத்தும் அந்நகரம் நிறுவப்பட்டது. ஹொய்சள மூலத்தின் கொள்கை அண்மையில் ஓராசிரியரால் மறுத்துரைக்கப்படுகிறது. அவர் இந்தப் பிரச்சினையைப் பல வழியாகவும் ஆராய்ந்து ஹரிகரர், புக்கர் ஆகிய இருவரும் அந்நகரைக் கட்டினர் என்று வாதம் செய்கிருர். அவர்கள் இரண்டாம் ஹரிகரரின் கல்வெட்டில் 'பேரொளியின் அவதாரம்' என்று குறிக்கப்படுகிற மாதவ வித்யாரணியர் என்பவரின் அறிவுரையின்படி 'தங்கள் நடக்கை முறைகளை உருவாக்கிக் கொண்டனர்' என்றும் அந்த ஆசிரியர் கூறுகிருர். சில வரலாற்று நிபுணர்களின் கருத்துப்படி, 1424-ல் முகம்மதியர்களால் பிடிக்கப்பட்டதும் வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்டதும், காகதீய இராச்சியத்தை உள்ளடக்கியதுமான தெலுங்கு நாட்டிலிருந்து அவர்கள் வந்தனர். அந்த ஐந்து பேரும் நாடோடிகளாகத் திரிந்து வந்தனர். இந்த முரண்பாடான கருத்துக்களிடைய, ஒன்று மட்டும் உறுதியாகக் கூறமுடியும். அதாவது ஹரிகரரும், புக்கரும் அவர்களுடைய மூன்று சகோதரர்களும் வடக்கிலிருந்து வந்த படையெடுப்பாளர்களின் முன்னேற்றத்தைத் தடைசெய்ய வேண்டுமென்று எதிர்த்துப் போரிடப் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டனர் என்பது புலனுகின்றது. இந்திய வரலாற்றில் விசயநகரப் பேரரசு, மூன்று நூற்றுண்டுகளாக நாட்டின் பழைய மதத்தையும், பண்பாட்டையும் காப்பதற்காகவும், புதிய கருத்துக்களும் சக்திகளும் வேகமாக உட்புகுந்து இவற்றை விழுங்கிவிடாமல் பாதுகாப்பதற்காகவும் அதை அவர்கள் நிறுவினர் என்பது தெளிவாக விளங்குகின்றது. பாமனி இராச்சியமும், வடக்கிலுள்ள அதன் கிளைகளும் தங்கள் செல்வாக்கைப் பரப்புவதை அது மறைமுகமாகத் தடுத்து வந்தது. தில்லி சுல்தான்கள் அடிக்கடி தென்னகத்தில் போரிலீடுபட்டுக் கொண்டிருந்தமையால், வடக்கே பாமனி இராச்சியத்தின் கிளைகளில் தில்லி சுல்தானியத்தின் அதிகாரம் ஏற்கெனவே கணிசமான அளவு குறைந்து போயிருந்தது. சுருங்கக் கூறுமிடத்து துருக்கிய ஆப்கானியச் சுல்தானியத்தின் சீர்குலைவையும், முக்கியமான தனிச்சுதந்தர அரசுகளின் எழுச்சியையும் காட்டுகின்ற 'அந்தக் காலத்து அரசியல் நிலைமைக்குத் திறவுகோலைக் கொண்டிருந்தது விஜய நகரமே' எனலாம்.

விசயநகரின் முதல் அரச மரபு சங்கமரின் பெயரால் அழைக்கப்படுகிறது. முதலாம் ஹரிகரர், முதலாம் புக்கர் ஆகியோர் காலத்தில்

Koviloor Academy

விசய நகர இராச்சியம், பல இராச்சியப் பகுதிகளையும், பிரிவுகளையும், சிலருடைய கருத்தின்படி ஹொய்சள இராச்சியப் பரப்பின் பெரும் பகுதியையும் தன்னுடைய செல்வாக்கின்கீழ்க் கொண்டு வந்தது. ஆனால் முதலாம் ஹரிகரரும், முதலாம் புக்கரும் அரசருக்குரிய முழுப் பட்டப் பெயர்களைப் புனைந்து கொள்ளவில்லை என்பது சில ஆசிரியர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1374-ல் முதலாம் புக்கர் சீனுவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பினார். அவர் கி.பி. 1378-79-ல் இறந்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் இரண்டாம் ஹரிகரர் பட்டத்துக்கு வந்தார். அவர் ஐயத்திற்கிட மின்றி மகாராஜாதி ராஜா, ராஜபரமேஸ்வர் போன்ற பேரரசர்க்குரிய பட்டங்களைப் புனைந்து கொண்டார். சில முஹம்மதிய வரலாற்றாசிரியர்களின் சான்றுகளை ஒட்டி சிவெல் தம்முடைய முற்பட்ட நூலின்கண்[1] ஹரிகரரின் ஆட்சிக்காலம் 'அமைதி சிதையாத' காலமாயிருந்தது என்று கூறுகிறார். ஆனால் அவருடைய ஆட்சியில் விஜயநகரப் பேரரசுக்கும், முஸ்லிம்களுக்கும் சிக்கல்கள் இருந்தன என்பது சில கல்வெட்டுகளால் புலனாகின்றது. உண்மையில், விசயநகரப் பேரரசின் வரலாறும், பாமனி இராச்சியத்தின் வரலாற்றைப் போலவே வெவ்வேறு அரசுகளுடன் இடைவிடாது இரத்தஞ்சிந்தும் போர்களின் வரலாறாகவே காணப்படுகிறது. விசயநகரப் பேரரசுக்கும் பாமனி இராச்சியத்துக்கும் இடையே உரிமைச் சிக்கலாயிருந்த துங்கபத்திரை, கிருஷ்ணா என்ற இரு ஆறுகளுக்கு மிடையே, அமைந்திருந்த ராய்ச்சூர் ஆற்றிடை வெளியைக் கைப்பற்றுவதற்காக, இரண்டாம் ஹரிகரரின் மகனை இரண்டாம் புக்கர் தம்முடைய தந்தையின் அனுமதியுடன் 1398ஆம் ஆண்டு குளிர்காலத்தில் பாமனியப் பிரதேசத்தை நோக்கி வடக்கே படையெடுத்துச் சென்றார். அவர் பிரூஸ் ஷா பாமனியால் எதிர்க்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டார். 1399ஆம் ஆண்டின் மத்தியில் இருவரிடையேயும் அமைதி உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி பீரூஸுக்குப் பெரும் நஷ்டஈடு தரப்பட்டது. ஆனால், பல கல் வெட்டுகள் காட்டுவதுபோல இரண்டாம் ஹரிகரரின் ஆட்சியில் விஜயநகரின் அதிகாரம் மைசூர், கன்னடநாடு, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, காஞ்சீவரம் (காஞ்சி) அடங்கலாகத் தென்னிந்தியா முழுவதிலும் பரவியிருந்தது. இரண்டாம் ஹரிஹரர் சிவனை விருபாக்ஷர் உருவில் வணங்குபவராவர்; ஆனால், அவர் மற்ற மதக்கொள்கைகளையும் பொறுத்துக் கொள்ளும் சமயப் பொறையுடைமை யுடையவராக இருந்துவந்தார். அவர் 1406 ஆகஸ்டில் இறந்த பிறகு, சிறிது காலம் வரை சிம்மாசனத்துக்கு உரிமையுடையவர் யார் என்பது அவருடைய புதல்வர்களுக்குள்ளே ஒரு பெரும் பிரச்சினையாய் இருந்தது. எனினும், 1406 நவம்பர் ஐந்தாம் நாள் முதலாம் தேவராயர் சிம்மாசனத்தைப் பற்றிக்கொண்டார்.

[1] A Forgotten Empire, பக். 51.

Koviloor Acadamy

பாமனி சுல்தான்களுடன் செய்த போர்களில், அவர் சில முறை பின்வாங்க நேரிட்டது. அவர் கி.பி. 1422-ல் இறந்தார். அவருடைய மகன் விசய புக்கர் அல்லது வீர விசயர் ஒரு சில மாதங்களே அரசாண்டார். பிறகு விசயபுக்கரின் மகனான இரண்டாம் தேவராயர் அரசு கட்டில் ஏறினார். அவர் பாமனியருடன் செய்த போர்கள் தோல்வியிலும் பேரிழப்பிலும் முடிந்தாலும், அவருடைய ஆட்சியில் ஆட்சிமுறை ஒழுங்குபடுத்தப் பட்டது. பாமனியர்களுடன் போட்டி யிடுவதற்காகப் படையில் முகம்மதியர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். வாணிகத்தை ஒழுங்குபடுத்தவும் கட்டுப்படுத்தவும் அவர் தம்முடைய வலது கையான லக்கண்ணு எனப்பட்ட லட்சுமணனைத் 'தென்கடல் தலைவராக' அதாவது வெளிநாட்டு வாணிகத்தின் பொறுப்பாளராக நியமித்தார். இத்தாலியப் பயணியான நிக்கோலா காண்ட்டியும் (Nicolo Conti) பாரசிகத்திலிருந்து வந்த தூதரான அப்துர் ரஸ்ஸாக்கும் (Abdur Razzaq) முறையே 1420, 1443-ல் விசயநகரைப் பார்வையிட்டனர். அவர்கள் அந்நகரைப்பற்றியும், விசயநகரப் பேரரசைப்பற்றியும் வியக்கத்தக்க விளக்கங்களை எழுதிவைத்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். உண்மையில் அப்பேரரசு தென்னிந்தியா முழுவதும் பரந்து இலங்கைக் கடற்கரையைத் தொட்டுக்கொண்டிருந்தது. முதல் அரச மரபினரின் ஆட்சியில் அது சீரும் சிறப்பும் பெற்று செழிப்பு மிக்க நாடாகச் சிறப்புற்று விளங்கியது.

கி.பி. 1446-ல் இரண்டாம் தேவராயர் இறந்தார். அவருக்குப் பின் உயிரோடிருந்த அவருடைய மூத்தமகன் மல்லிகார்ஜுனர் பட்டத்துக்கு வந்தார். அவர் பாமனி சுல்தானும், ஒரிஸ்ஸாவின் இந்து அரசரும் சேர்ந்து கொண்டுவந்த கூட்டுப்படைகளை முறியடித்தார். தம்முடைய ஆட்சியில் இராச்சியத்தைச் சிறிதும் சிதருமல் காத்துக் கொண்டார். அவருடைய ஆட்சி கி.பி. 1465 வரை பரவியிருந்தது. இந்த ஆட்சிக்காலத்தில்தான் முன்பு விசயநகர இராச்சியத்துக்கு, அதன் சிற்றரசர்களைப்போல, உண்மையுடன் தொண்டு புரிந்தவர்களின் வழித்தோன்றலும் சாளுவத் தலைவருமான சந்திரகிரி நரசிம்மர் மேம்பாடு அடைந்து பாமனி இராச்சியம், ஒரிஸ்ஸா அரசு ஆகியவற்றின் முற்றுகைகளை எதிர்த்தார். ஆனால், மல்லிகார்ஜுனருக்குப் பின்வந்த இரண்டாம் விருபாக்ஷர் தகுதியற்ற ஆட்சியாளராய் இருந்தார். குழப்பமும் கலவரமும் நாட்டில் இயல்பாகத் தோன்றின. அவற்றைச் சாதகமாக்கிக்கொண்டு சில மாகாணங்கள் கிளர்ச்சி செய்தன. பாமனி சுல்தான் கிருஷ்ணு, துங்கபத்திராவுக்கிடையேயிருந்த தோஆப்புக்குள் நுழைந்தார். ஒரிஸ்ஸா நாட்டு அரசர் புருஷோத்தம கஜபதி திருவண்ணுமலைவரை தெற்கே படையெடுத்துச் சென்றார்.

Koviloor Acadamy

இவ் இடர்ப்பாடுகளிலிருந்து இராச்சியத்தைக் காப்பாற்றுவதற்காக நரசிம்ம சாளுவர் தம்முடைய தலைவரை அகற்றிவிட்டுக் கி.பி. 1486-ல் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இவ்வாறு ‘முதல் பலாத்காரப் பற்றுதலினால்’ சங்கம அரச மரபும் கவிழ்ந்தது. விசயநகர் சாளுவ அரச மரபின் ஆட்சியின்கீழ் வந்தது. நரசிம்ம சாளுவர் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். பேரரசின் நலங்களிலேயே கருத்துட்கொண்டவராய், அவர் தம்முடைய ஆறாண்டு ஆட்சிக்காலத்தில் கிளர்ச்சி செய்த மாகாணங்களில் பெரும்பாலானவற்றைத் திரும்பப்பெற்றார். எனினும், ராய்ச்சூர் தோஆப் பாமனியர்களின் அதிகாரத்தின் கீழும், உதயகிரி ஒரிஸ்ஸாவின் அரசரின் கீழும் இருந்துவந்தன.

நரசிம்ம சாளுவர் தமக்குப் பிறகு இராச்சியத்தின் ஆட்சிமுறைப் பொறுப்பைத் தம்முடைய நம்பிக்கைக்குரிய தளபதியான நரச நாயக்கரிடம் ஒப்படைத்தார். எனினும் அவர் தமக்குப் பின் தம்முடைய புதல்வர்களே பட்டத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினார். நரச நாயக்கர் முன்பு துளுவ நாட்டை ஆண்ட அரச மரபைச் சேர்ந்தவர் என்று தம்மைக் கூறிக்கொண்டார். நரச நாயக்கர் தம்முடைய தலைவரின் இரு புதல்வர்களையும் கொன்றுவிட்டுச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டார் என்று நூனிஸ் (Nuniz) என்பவரும், முகம்மதிய வரலாற்றாசிரியர்களும் கூறுவதைக் கல்வெட்டுச் சான்று மறுத்துக் கூறுகிறது. உண்மையில் அவர் தம்முடைய தலைவரின் அரச மரபிடத்து பற்றுறுதியும் ஈடுபாடும் உடையவராகவே இருந்தார். மூத்த மகன் போரில் புண்பட்டு இறந்துபோனமையால், தம் தலைவரின் இளைய மகனை இம்மடி நரசிம்மனைச் சிம்மாசனத்தில் வைத்தார். அரசாங்கத்தின் செயல்களை அதன் மறைமுக ஆட்சியாளராயிருந்து கவனித்துக்கொண்டு வந்தார். கி.பி. 1505-ல் அவர் தாமே இறந்துபோன பிறகுதான், அவருடைய மகன் வீர நரசிம்மன் கடைசி சாளுவ அரசரை அகற்றிவிட்டுச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டார். இந்த ‘இரண்டாவதாக வன்முறையில் கைப்பற்றுதல்’ விசயநகரப் பேரரசுமீது துளுவ அரசமரபின் ஆட்சி ஏற்படும்படி செய்தது. வீர நரசிம்மன் பக்தி மிக்க ஓர் அரசர் என்றும், புண்ணியத் தலங்களுக்குத் தானங்கள் வழங்கினார் என்றும் சில செப்புப் பட்டயங்களாலும் நூனிஸின் குறிப்புகளாலும் தெரியவருகின்றன.

வீர நரசிம்மனுக்குப் பிறகு அவருடைய தம்பி கிருஷ்ணதேவ ராயர் ஆட்சிக்கு வந்தார். அவர் இதுவரை விசயநகரை ஆண்ட அரசர்களுள் மிகப் பெரிய அரசராயும், இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த புகழ்பெற்ற அரசர்களுள் ஒருவராயும் இருந்தார். வீரஞ் செறிந்த, சுறுசுறுப்பு மிக்க படைவீரரான அவர், தம் ஆட்சிக்காலத்தின் முழுவதிலும் நடத்திய போர்களில் எப்பொழுதும் வெற்றியே

Koviloor Academy

கண்டுவந்தார். அவர் வடக்கே தம்முடைய பெரும் போட்டியாளர் களைச் சந்திக்க முயல்வதற்கு முன்பு, தம்முடைய பேரரசின் மத்தியப் பகுதியிலிருந்த ஜமீன்தார்களை ஒடுக்குவதில், முதலில் தம் கவனத்தைச் செலுத்தினர். 1510-ஆம் ஆண்டின் முடிவில் தம்முடைய இருப்பிடத்தை விட்டுத் தெற்கு மைசூரில் கட்டுக்கடங்காத உம்மாத்தூர்த்தலைவரை அடக்குவதற்காகப் படையுடன் சென்றார். அத்தலைவர் தோற்கடிக்கப்பட்டார் ; சிவசமுத்திரக் கோட்டையும் பிடிக்கப்பட்டது (1511-12). அருகிலிருந்த மற்றத் தலைவர்களும் அடிபணிய வைக்கப்பட்டனர். 1512-ல் கிருஷ்ணதேவராயர் பீஜப்பூர் எல்லையை நோக்கிச் சென்று ராய்ச்சூரை உரிமையாகப் பெற்ருர். அவர் திறமையும் அனுபவமும் உடைய தம்முடைய அமைச்சரும் தளபதியுமான சாளுவ திம்மாவின் அறிவுரையின்படி முகம்மதியர்க்குரிய பிரதேசங்களை இப்போது படையெடுக்காமல், முதல் அரச மரபின் கடைசி ஆட்சியாளர்களின் காலத்தில் ஒரிஸ்ஸாவின் கஜபதி பிரதாபருத்திரனின் (Prataparudra) முந்தையோர்கள் விசயநகரப் பேரரசிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை மீட்கும் நோக்கத்துடன் 1513-ல் பிரதாப ருத்திரனுக்கு எதிராகப் படையுடன் சென்ருர். 1514ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் உதயகிரிக் கோட்டையைப் பிடித்தார் ; ஒரிஸ்ஸா அரசரின் ஒரு மாமனையும், ஒரு அத்தையையும் சிறைபிடித்தார். எனினும், அவர்களை மரியாதையுடன் நடத்தினர். ஒரிஸ்ஸாவின் அரசர் கோல்கொண்டா, பீடார் இவற்றின் சுல்தான்களிடமிருந்து உதவியைப் பெற்று வந்தாராயினும், கிருஷ்ணதேவராயர் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் கொண்ட வீடு என்ற இடத்திலிருந்த வலிமைவாய்ந்த கோட்டையையும், அருகிலிருந்த குறைந்த முக்கியத்துவமுடைய கோட்டைகளையும் கைப்பற்றினர். அவர் குஜராத்தின் இளவரசரான வீரபத்திரனையும், சில ஒரிஸ்ஸாப் பிரபுக்களையும் சிறைபிடித்தும் சென்ருர். அந்தக் குஜராத் இளவரசர் அவரால் ஒரு மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். இது ‘கிருஷ்ணதேவராயருடைய உயர்ந்த அரசியல் திறமைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு’ என்று கிருஷ்ண சாஸ்திரி கூறுகிருர், ஒரிஸ்ஸா அரசரை எதிர்த்துச் செய்த மூன்ரும் போரின்போது அவர் பெஜவாடாவில் பாசறை அமைத்துக்கொண்டு, கொண்டபள்ளியை முற்றுகையிட்டு அதைப் பிடித்தார். இந்தச் சமயத்திலும் ஒரிஸ்ஸா அரசரின் மனைவியும் (வீரபத்திர இளவரசனல்லாத வேருெருவர்) மகனும், சில ஒரிஸ்ஸாப் பிரபுக்களும் தளபதிகளும் அவர் கையில் சிக்கினர். பிறகு அவர் வடகிழக்கே விசாகப்பட்டினத்திலுள்ள சிம்மாசலம் வரை முன்னேறிச்சென்று ஒரிஸ்ஸா அரசரை உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினர். இஸ்மாயீல் ஆதில் ஷா இழந்துவிட்ட ராய்ச்சூர் தோஆப்பைத் திரும்பப்பெற முயன்றபோது அவரைக் கிருஷ்ணதேவராயர் 1520 மார்ச்சு 19 ஆம்

Koviloor Acadamy

தேதி ராய்ச்சூருக்கருகில் தோற்கடித்தார். இதுவே அவருடைய கடைசி பெரிய படைத்துறைச் சாதனையாகும். அவர் பீஜப்பூர்ப் பிரதேசத்தின்மீது தாக்குதலைச் செய்து குல்பர்காக் கோட்டையைத் தரைமட்டமாக்கினார் என்று சொல்லப்படுகிறது. சுருங்கக் கூறுமிடத்து, கிருஷ்ணதேவராயரின் படைத்துறை வெற்றிகள் அவருடைய வடக்கத்திய எதிரிகளின் கொட்டத்தை அடக்கிப் பேரரசின் எல்லைகளை மேற்கே தென் கொங்கணம் வரையிலும், கிழக்கே விசாகப் பட்டினம் வரையிலும், தெற்கே தீபகற்பத்தின் கோடிவரையிலும் விரிவாக்கியதுடன் இந்தியக் கடலிலிருந்த சில தீவுகளையும், அக்கடலின் கடற்கரையையும் பேரரசின் செல்வாக்குக்கு உட்பட்டிருக்கும்படியும் செய்தன. அவர் தம்முடைய வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளைப் பேரரசினைப் பலவிதங்களிலும் ஒழுங்குபடுத்துவதிலும், அமைதியான ஆட்சி நடப்பதற்கேற்ற வேலைகளைச் செய்வதிலும் தம் கவனத்தைத் திருப்பினார்.

கிருஷ்ணதேவராயர் போர்ச்சுக்கீசியர்களுடன் நட்புறவு வைத்துக் கொண்டிருந்தார். அவர்களுக்குச் சில சலுகைகளை அளித்தார். ஏனெனில் 'குதிரைகள், போன்ற தேவைப் பொருள்களின் இறக்குமதியால் அவர் பெரிதும் நன்மையடைந்தார்' என்று சீவெல் எழுதுகிறார். 1510-ல் போர்ச்சுக்கீசியக் கவர்னரான ஆல்புகர்க் (Albuquerque) பட்கல் என்ற இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டிக் கொள்ள அவருடைய அனுமதியைக் கேட்டார். போர்ச்சுக்கீசியர்கள் கோவாவை முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றிய பிறகு அதற்கு அனுமதி தரப்பட்டது. போர்ச்சுக்கீசியப் பயணியான பயெஸ் (Paes) என்பவர் அவரை விழுமிய மொழிகளால் புகழ்கிறார். 'அவர் மிகவும் கற்றறிந்த அரசராகவும், ஓர் அரசர் எவ்வளவு முழுமைப் பண்புகளுடையவராயிருக்க முடியுமோ அவ்வளவு பண்புகள் நிரம்பியவராய் இருந்தார்; எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருக்கும் இயல்புடையவராயிருந்தார். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். அயல் நாட்டவர்க்கு மதிப்புக் கொடுத்து அவர்களை அன்புடன் வரவேற்கும் பண்புடையவராய் இருந்தார். அவர்களுடைய நிலைமை எப்படிப்பட்டதாயினும், அவர்களுடைய விவகாரங்களை யெல்லாம் விசாரிக்கும் இயல்பினராயிருந்தார். அவர் ஒரு பெரிய ஆட்சியாளர்; மிகுந்த நீதி மனப்பான்மை உடையவராயிருந்தார். ஆனால் சில சமயங்களில் விரைவில் பெருங் கோபங்கொண்டு விடுவார்...படைகளிலும், பிரதேசங்களிலும் அவர் பெற்றிருந்தவற்றைப் பார்க்கும்போது அவர் செல்வத்திலும் செல்வாக்கிலும் எல்லாப் பிரபுக்களுக்கும் மேலானவராய் இருந்தார். அவரைப் போன்று அவ்வளவு வீரஞ் செறிந்த, எல்லாவற்றிலும் முழு நிறைவு அடைந்தவருக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் அவரிடம் நிறைந்திருந்தன.'

Koviloor Academy

கிருஷ்ணதேவராயரின் ஆட்சியில் விசயநகரப் பேரரசு நாட்டுப் பரப்பில், உச்ச நிலை அடைந்தது மட்டு மன்றி, கலை, கல்வி முதலியவையும் போற்றிவளர்க்கப்பட்டுச் சிறப்புற்றமை குறிப்பிடத் தக்கதாகும். தாமே சிறந்த கல்விமானாக இருந்த ராயர் கல்வியைத் தாராளமாக ஆதரித்தார். அவரைப்பற்றிக் கிருஷ்ணசாஸ்திரி பின்வருமாறு எழுதுகிறார்: ' அவர் தம்முடைய மதப் பேரார்வத்திலும், பரந்த நோக்கத்திலும் குறைந்த புகழ் உடையவர் அல்லர். அவருடைய சொந்தப் பற்று வைஷ்ணவத்தின் பக்கம் சாய்ந்திருந்தாலும் அவர் இந்து மதத்தின் எல்லாப் பிரிவுகளையும் ஒரே மாதிரியாகவே மதித்தார்...... கிருஷ்ணதேவராயர் போர்க்களத்தில் வீழ்ந்த எதிரிக்குக் காட்டிய பரிவும், பிடிக்கப்பட்ட நகரங்களில் வாழ்ந்தோர்களுக்காக அவர் செய்த கருணை மிக்க அறச் செயல்களும், அவருடைய சிற்றரசர்களும், குடிகளும் ஒருங்கே அவரைப் புகழும்படியான அவருடைய பெரும் படைத்துறை வன்மையும், அயல் நாட்டுத் தூதுக் குழுக்களை எப்போதும் அன்புடன் அரசர்க்குரிய பெருஞ் சிறப்புகளுடன் வரவேற்றதும், அவருடைய கவர்ச்சி மிக்க உருவத் தோற்றமும், தூய்மையும் மதிப்பும் பொருந்திய வாழ்க்கை யினராகத் தெளிவு படுத்திக் காட்டும் அவருடைய கருணை நோக்கமும், மதிப்புமிக்க உரையாடலும், இலக்கியத்திலும் மதத்திலும் அவர் கொண்டிருந்த காதலும், மக்களின் நலனுக்காக உழைக்கும் ஆர்வமும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர் கோயில்களுக்கும் பிராமணர்களுக்கும் கற்பனைக்கு மெட்டாத அளவிலாப் பெருஞ் செல்வங்களை அறக் கட்டளைகளாக வாரிவழங்கியதும் போன்ற எல்லாம், வரலாற்றின் ஏடுகளில் ஒளி வீசுமாறுசெய்த தென்னிந்தியப் பேரரசர்களுள் உண்மையில் மிகப் பெரிய அரசராக அவரைச் செய்தன.' உண்மையில் அவர் ஆட்சியில் விசயநகரப் பேரரசு அதனுடைய புகழிலும் செழிப்பிலும் உச்சநிலையை அடைந்தது. அப்போது பழைய துருக்கிய ஆப்கானியச் சுல்தானியம் பெரிதும் சுருங்கி மெலிந்த ஒரு பிணமாக இருந்தது. விரைவில் புதிய துருக்கியப் படையெடுப்பினால் அடித்துக் கொள்ளப்பட்டுப்போக விருந்தது.

ஆனால் வடக்கே வலிமைவாய்ந்த அண்டைநாட்டரசர்களின் பேராசையிலும், விசயநகரப் பேரரசின் அரசப் பிரதிநிதிகளின் போக்கிலும் அப்பேரரசுக்கு பேரிடுக்கண் மறைந்து கொண்டிருந்தது. அரசப் பிரதிநிதிகளில் மதுரையின் அரசப் பிரதிநிதியும், இராச்சியத்தின் நடுப்பகுதியின் பொறுப்பை வகித்திருந்த அரசப் பிரதிநிதியும் கிருஷ்ணதேவராயரின் இறுதிக்காலத்தில் (1528 அல்லது 1529) கிளர்ச்சி செய்தனர். அவருடைய இறப்புக்கு முன்பே முன்னவர் அடக்கியொடுக்கப்பட்டார். ஆனால், மற்றவர் ' அடுத்துப் பட்டத்துக்கு வந்தவரின் ஆட்சித் தொடக்கத்தில்தான் கவனிக்கப்பட வேண்டியவராயிருந்தார்.'

Koviloor Acadamy

கிருஷ்ணதேவராயர் கி.பி. 1529 அல்லது 1530-ல் இறந்தார் அவருக்குப் பின் அவருடைய மாற்றாந்தாய் மகனுன அச்சுத ராயர் ஆட்சிக்கு வந்தார். கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் அவர் 'நூனிஸினுல் காட்டப்படுவதுபோல கோழையானவர் அல்லர்' என்பது தெரியவருகிறது. அவர் கலகக்கார அரசப் பிரதிநிதியான மதுரை அரசப் பிரதிநிதியை அடக்கினர். அவருக்குப் பாதுக்காப்பளித்த திருவாங்கூர் அரசரையும் தமக்குக் கீழ்ப்படியுமாறு செய்தார். ஆனுல் விரைவில் அவர் ஆட்சியின்மீது வைத்திருந்த நேரடிப் பிடிப்பைத் தளர்த்திய பெருந்தவற்றைச் செய்தார். ஆட்சியின் பிடிப்பு அவருடைய இரண்டு மைத்துனர்களிடம் விழுந்தது. அவர்களிருவரும் திருமலை என்ற பெயரையே பெற்றிருந்தனர். இதனுல் மற்ற அரசப் பிரதிகள் எரிச்சலை அடைந்தனர். அவர்கள் ராமா, திருமலை, வெங்கட்டா என்ற மூவரின் தலைமையிலும் கூடிப் போட்டிக்கட்சி ஒன்றை உருவாக்கினர். ஆரவிடு அரசமரபைச் சேர்ந்த வெங்கட்டா ஆட்சியிலிருந்த துளுவ வம்சத்துடன் திருமணத்தின் மூலம் தொடர்பு கொண்டிருந்தார். இதனுல் இராச்சியம் தொல்லைகளில் மூழ்கியது. அத் தொல்லைகள் அப்பேரரசின் வரலாறு முடியும்வரை தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே வந்தன. பேரரசு முழுவதும் மறையும் வரை, அவையும் மறையாமலிருந்தன. கி.பி. 1541 அல்லது 1542-ல் அச்சுத ராயர் இறந்த பிறகு அவருடைய மகன் வெங்கடாத்திரி அல்லது முதலாம் வெங்கட்டா சிம்மாசனம் ஏறினர். ஆகுல் அவருடைய ஆட்சி ஆறு மாதங்களுக்கு மேல் நீடிக்கவில்லை. பிறகு மணிமுடி அச்சுதரின் மருமகனுன சதாசிவராயரிடம் சென்றது. சதாசிவ ராயர் அரசாங்கத்தின் மறைமுக ஆட்சியாளரும், ஆரவீடு மரபைச் சேர்ந்தவருமான அவருடைய மந்திரி இராமராயரின் கையில் வெறும் ஒரு பொம்மையாகவே இருந்தார். இராமராயர் திறமை படைத்தவராயிருந்தார். கிருஷ்ணதேவராயரின் மறைவுக்குப் பிறகு தாழ்நிலையுற்ற விசயநகரப் பேரரசின் அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டத் தீர்மானித்தார். இராமராயருடைய கொள்கையின் ஒரு முக்கிய கூறு, அவர் தக்கணச் சுல்தான்களுக்கிடையே நடந்த போர்களில் தீவிரமாகத் தலையிட்டு முதலில் ஒருவர் பக்கமும், பின்பு மற்ருெருவர் பக்கமும் சார்ந்து கொண்டிருந்ததாகும். உண்மையில் அவருடைய புதிய முயற்சிகள் அந்தச் சமயத்திற்கு வெற்றிகரமாக இருந்தன. ஆனுல், அவை அவர் அளவுக்கு மிறித் தன்னம்பிக்கை கொள்ளும்படியும், செருக்குடைய வராயிருக்கும்படியும் செய்தன. அக்குணங்கள் கடைசியில் பேரரசின் அழிவுக்குக் காரணமாய் அமைந்தன. 1543-ல் இராமராயர் பிஜப்பூரைத் தாக்கும் நோக்குடன் அகமத்நகர் கோல் கொண்டாச் சுல்தான்களுடன் உறவுகொண்டார். ஆனுல் பிஜப்பூர் அமைச்சரான அஸத் கானின் தந்திரத்தால் அவருடைய நோக்கம் பழாக்கப்பட்டது. அஸத்கான் புர்ஹான் நிஸம் ஷாவுடனும்,

Koviloor Acadamy

இராம ராயருடனும் தனித் தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார். அதனால் அவர்களிடையே ஏற்பட்டிருந்த கூட்டுறவு முறிந்தது. 1558-ல் கூட்டுறவில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அப்போது கோல்கொண்டா, பிஜப்பூர், விசயநகர் மூன்றும் அகமத் நகருக்கு எதிராக ஒன்று சேர்ந்து அதன் மீது படையெடுத்தன. அந்தச் சமயத்தில் விசய நகரத்துப் படை அகமத்நகர் மக்களின் நம்பிக்கையை ஏமாற்றியது.

விசயநகரப் படையின் செருக்குமிக்க நடத்தையால் விசயநக ருக்கு எதிராகத் தக்கணச் சுல்தானியங்களின் நீண்டகாலமாகப் புகைந்து கொண்டிருந்த பகைமை கிளறிவிடப்பட்டது. பீராரைத் தவிர மற்ற சுல்தானியங்கள் விசயநகருக்கு எதிராகக் கூட்டு சேர்ந் தன. திருமண உறவுகளால் அக்கூட்டுறவு எளிதாக ஏற்பட்டது. தக்காணச் சுல்தானியங்களின் கூட்டுப்படை ராக்சாஸ், (Raksas) தக்டி (Tagdi) என்ற இரு கிராமங்கள் இப்போது இருக்கும் இடத்தில் 1565 ஜனவரி 23ஆம் தேதி விசயநகருக்கு எதிராகப் போரிட்டது. இந்தப்போர் மாபெரும் இழப்புக்களுடன் விசயநகரப் படையின்தோல் வியில் முடிந்தது. புர்ஹானி-மஆசிரின் ஆசிரியர் கூறுகிறார்: ‘படை முழுவதும் செல்வத்தைப்பெறுமாறு வெற்றியாளர்கள், நகை கள், ஆபரணங்கள், தட்டுமுட்டுகள், ஒட்டகங்கள், கூடாரங்கள், கூடாரப் பொருள்கள், பறைகள், கொடிகள், பெண் பணியாளர்கள், ஆண்பணியாளர்கள், படைக்கலங்கள், எல்லாவகையான கவசங்கள் முதலியவற்றைப் பெரும் அளவில் கைப்பற்றினர்.’ பெரிஷ்டா குறிப் பிடுகிறார். ‘வெற்றிப் படையிலிருந்த ஒவ்வொருவரும் தங்கம், நகைகள், கூடாரங்கள், படைக்கலங்கள், குதிரைகள், அடிமைகள் இவற்றைப் பெற்றுச் செல்வமிக்கவராகுமளவுக்குக் கொள்ளை பெருங் கொள்ளையாய் இருந்தது. யானைகளைமட்டும் தங்களுடைய உபயோகத் துக்குக் கொடுத்து விட வேண்டும் என்றும், மற்றக் கைப்பற்றிய பொருள் களை எல்லாம் அவரவரே வைத்துக் கொள்ளலாம் என்றும் அரசர்கள் அனுமதித்துவிட்டனர்.’ ஹுஸேன் நிஜாம் ஷா இராமராயரைத் தம் கையாலேயே கொன்றுவிட்டு, ‘இப்போது உன்னைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்! எனக்குக் கடவுள் எது வேண்டுமானாலும், செய்யட் டும்’ என்று கூறினார். பொலிவுமிக்க நகரமான விசயநகரம் தகர்க்கப் பட்டது. சீவெல் பின்வருமாறு கூறுவதுபோலப் படையெடுத்து வந்த படை அந்நகரின் பேரழகை அழித்தது: ‘மூன்றாவது நாள் அழிவின் தொடக்கம் ஏற்பட்டது. வெற்றியுற்ற முகம்மதியர்கள் போர்க்களத்தில் ஓய்வெடுத்துக்கொண்டு களைப்பாறினர். பின்பு தலைநகரை அடைந் தனர். அந்த நேரத்திலிருந்து ஐந்து மாதங்கள் விசயநகரம் அமைதி யை அடையவில்லை. பகைவர்கள் அழிப்பதற்காக வந்து விட்டனர்; அவர்கள் தங்களுடைய நோக்கத்தை இரக்கமின்றி நிறைவேற்றினர். அவர்களிடமிருந்து எதுவும் தப்பமுடியாதுபோல் காணப்பட்டது.

Koviloor Acadamy

அரசர்கள் விழாக்களை இருந்து பார்ப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த மேடைகளின் மேலிருந்த கூடாரத்தைக் குலைத்தனர்; எல்லாச் செதுக்கு வேலைப்பாடுகளையும் சிதைத்தனர். ஆற்றின் அருகே மிகப் பேரழகுடன் அலங்கரிக்கப்பட்டிருந்த விட்டலஸ்வாமி கோயிலைச் சேர்ந்த கட்டிடங்களுக்குத் தீ வைத்தனர். அக்கோயிலின் அதியற்புதமான கற்சிலைகளை உடைத்துத் தூள் தூளாக்கினர். தீ, வாள், கடப்பாரை, கோடரிகள் முதலியவற்றைக் கொண்டு ஒவ்வொரு நாளும் அவர்கள் அழிவு வேலையைச் செய்தனர். உலகத்தின் வரலாற்றிலேயே அப்படிப்பட்ட அழிவுவேலை செய்யப்பட்டதில்லை. அவ்வளவு திடீரென்றும் செய்யப்பட்டதில்லை. அவ்வளவு அழகு நிறைந்த ஒரு நகரத்தின்மீதும் செய்யப்பட்டதில்லை.

ஒருநாள் செல்வச் செழிப்பின் உச்சியிலிருந்த செல்வவளமிக்க, ஊக்கமிக்க மக்கள் தொகை நிரம்பிய நகரம், மறுநாளே கைப்பற்றப்பட்டு, கொள்ளையடிக்கப் பட்டுக் காட்டு மிராண்டித் தனமாக எல்லாரையுங் கொல்லும், விவரிக்க முடியாத கொடுமைக் காட்சிகளுடன் அழிக்கப்பட்டது.

தலைக்கோட்டைப் போர் என்று கூறப்படும் இப்போர் இந்திய வரலாற்றில் உண்மையில் இந்தியாவின் தலைவிதியைத் தீர்மானிக்கும் போர்களுள் ஒன்றுகவே இருந்தது. அது தெற்கே இந்து மேலாண்மை ஏற்படும் வாய்ப்பை அழித்தது. பதினேழாம் நூற்றுண்டில் மராத்திய அரசு ஏற்படும் வரை தென்னகம் புதிய துருக்கிய அரச மரபினரது ஆட்சியாளர்களின் படையெடுப்புகளுக்கு ஆளாகி வந்தது. ஐயத்திற்கிட மின்றி அப்போர் விசயநகரப் போரசுக்குப் பேரழிவைக் கொடுத்தது. ஆனல் போரின் விளைவாக அப்பேரரசு முழுதும் அழிந்து விட வில்லை என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் கூறுகின்றன. 'தலைக்கோட்டைப் போர் விசயநகரப் பேரரசுக்கு ஒரு சோதனைக்காலமாய் இருந்தது; ஆனல், மிகப் பெருஞ் சோதனைக் காலமாய் இருக்கவில்லை' என்று இக்கால ஆசிரியர் ஒருவர் பொருத்தமாகக் கூறியுள்ளார். உண்மையில் அப்பேரரசு 'ஆரவிடு மரபு வடக்கேயிருந்து அடிக்கடி வந்த படையெடுப்புகளினல் பலவீனப் பட்டும், நாட்டினுள்ளே அரசப் பிரதிநிதிகளின் அதிருப்தியாலும், கிளர்ச்சியாலும் சிதைவுற்றும் போகு முன்பு' அம்மரபைச் சேர்ந்த ஆட்சியாளர்களின்கீழ் அப்பேரரசு பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதி வரை தொடர்ந்து இருந்து வந்தது.

இந்தப் போரின் விளைவாக வெற்றி பெற்ற சுல்தானியங்கள் இறுதியில் பெரும் பயன் அடைய வில்லை. அவர்களுடைய கூட்டுறவு விரைவில் கலைந்தது. அவர்களுக்குள் மீண்டும் பொருமைத்தீ கொழுந்து விட்டெரிந்தது. இது விசயநகரப் பேரரசு இராமராயரின்

Koviloor Acadamy

சகோதரர் திருமலையின்கீழ் புத்துயிர் பெற வாய்ப்பளித்தது. முஸ்லிம்கள் விசயநகரை விட்டுச் சென்ற பிறகு, அவர் அந்நகருக்குச் சென்றார். ஆனால், சிறிது காலம் அங்கே தங்கிய பிறகு பெனுகொண்டாவிற்குச் சென்றார். அங்கே, முஸ்லிம் இராச்சியங்களின் விவகாரங்களில் தலையிடுமளவுக்குப் பேரரசின் மதிப்பையும் அதிகாரத்தையும் மீட்டார். தம்முடைய ஆட்சியின் முடிவில் ஏறக்குறைய கி.பி. 1570-ல் பெயரளவில் அரசராயிருந்த சதாசிவராயரை ஒழித்து விட்டு அவர் சார்ந்திருந்த ஆரவீடு அரச மரபினருக்காகச்சிம்மாசனத்தைக் கைப்பற்றினர். அவருக்குப் பின் அரசுக்கு வந்த அவருடைய மகனை இரண்டாம் ரங்கா பேரரசின் திறமையை விரிவாக்கும் அவருடையை கொள்கையையே தொடர்ந்து மேற்கொண்டார். ஏறக்குறைய கி.பி. 1586-ல் இரண்டாம் ரங்காவுக்குப் பின் அவருடைய சகோதரர் இரண்டாம் வெங்கட்டா பட்டத்துக்கு வந்தார். அவர் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு புகழுடன் ஆட்சி செய்து கி.பி. 1614-ல் இறந்தார். பேரரசைச் சிதற விடாமல் காப்பாற்றிய விசயநகரப் பேரரசர்களில் அவரே கடைசி எனலாம். எனினும் சீரங்கப்பட்டணத்து அரசப் பிரதிநிதித்துவம் இல்லாமற் போனதினல், அவருடைய அனுமதியின் பேரில் கி.பி. 1612-ல் அரசர் உடையார் மைசூர் இராச்சியத்தை நிறுவினர். அவருடைய இறப்பு பேரரசின் சிதைவுக்கு அடையாளமாயிருந்தது. அவருடைய இறப்பிற்குப் பின்னர், அரசுரிமைப் போரும் அதன் விளைவாகப் பிரிந்து போகும் சக்திகளும் எழுந்தன. கடைசி முக்கியமான விசயநகர அரசரான மூன்றும் ரங்காவினல் அவற்றைத் தடுக்க முடியவில்லை. கிளர்ச்சி செய்து வந்த பேரரசின் குறுநிலமன்னர்களின் தன்னல நோக்கத்தினலும், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய முஸ்லீம் நாடுகளின் பேராசையாலும், ரங்காவின் சிறந்த முயற்கள் பயனின்றிப் போயின. இவ்வாறு கடைசியில் விசயநகரப் பேரரசின் இந்துச் சிற்றரசர்களே அதன் அழிவுக்குக் காரணமான எதிரிகளாயிருந்தனர். அவர்களுடைய 'அறிவில்லா ஆணவமும், கண் மூடித்தனமான தன்னலமும், பற்றுறுதியில்லாப் பண்பும், அவர்களுக்கிடையே உண்டான போர்களும்' பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய முஸ்லீம் நாடுகள் இந்து தக்கணத்தை வெல்லுவதைப் பெரிதும் எளிதாகச் செய்து விட்டன. மேலும் சீரங்கப்பட்டணம், பெத்னூர் (கேலாடி, இக்கேரி) இவற்றின் தலைவர்கள், மதுரை, தஞ்சாவூர்களின் நாயக்கர்கள் போன்ற கீழதிகாரிகளான அரசப் பிரதிநிதிகள் தங்களுக்காகத் தனியுரிமை வாய்ந்த அரசுகளை நிறுவிக்கொண்டனர்.

மாண்பு மிக்க விசயநகரின் செல்வச் சிறப்பு

பதினைந்து பதினறும் நூற்றுண்டுகளில் இந்தியாவில் பயணஞ் செய்த அயல்நாட்டுப் பயணிகள் அனைவரும் விசயநகரப் பேரரசைப்

Koviloor Academy

பற்றிப் புகழ்மிக்க கருத்துக்களைக் கூறிச்சென்றிருக்கின்றனர். விசய நகரம் மாபெரும் கோட்டை கொத்தளங்களால் குழப்பட்டிருந்தது ; மிகப் பேரளவினதாயுமிருந்தது. கி.பி. 1420-ல் அதைப் பார்வை யிட்ட இத்தாலியப் பயணியான நிக்கோலா கோண்ட்டி 'நகரின் சுற்றளவு அறுபது மைல்கள். அதனுடைய சுவர்கள், மலைகள் வரை உயர்த்தப்பட்டுள்ளன; அச்சுவர்களின் கீழே சமவெளிகள் உள்ளன. அச்சமவெளிகள் மூலம் நகரின்பரப்பு விரிவுபடுத்த முடியும். இந்த நகரில் படைக்கலந்தாங்கக் கூடியவர்கள் தொண்ணூறாயிரம் பேர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது......அரசர் இந்தியாவின் மற்ற அரசர்களைக் காட்டிலும் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவராய் உள்ளார்' என்று எழுதியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. பாரசீகத்தி லிருந்து இந்தியாவுக்கு வந்த அப்துர்ரஸ்ஸாக் விசயநகருக்குக் கி.பி. 1442-43-ல் சென்றார். அவர் கூறுகிறார் : 'நாடு மிகவும் நன்றாக மக்கள்தொகை நிரம்பியிருக்கிறது. அதனால், ஒரு குறிப்பிட்ட அளவுள்ள இடத்தில் அந்நாட்டைப் பற்றிய கருத்தை விளக்கிவிட முடியாது. அரசரின் கருவூலத்தில் பல அறைகள் உள்ளன. அவை புதைக்கப்பட்டு உருக்கி வார்த்த தங்கத்தால் ஒன்றாய் மூடப்பட்டுள்ளன. நாட்டின் எல்லாரும், உயர்ந்தவர்களாயினும் தாழ்ந்தவர்களாயினும், வீதியிலிருக்கும் சாதாரண வேலைக்காரர் வரை, நகைகள் அணிந்திருக்கின்றனர் ; காதுகளிலும், கழுத்தைச் சுற்றிலும், கைகளிலும், மணிக்கட்டிலும், விரல்களிலும் ஆப ரணங்கள் அணிந்திருக்கின்றனர்.' விசயநகரைப் பற்றி விரிவான செய்திகளை வரைந்திருக்கும் போர்ச்சுக்கீசியரான பேயெஸ் எழுது கிறார் : 'அதன் அரசர் பெருஞ் செல்வமும் பல படைவீரர்களையும், பல யானைகளையும் வைத்திருக்கிறார்; இவை மிகுந்த எண்ணிக்கை யுடையவாய் இந்த நாட்டில் இருக்கின்றன......இந்த நகரத்தில் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்தவரும் இருக்கின்றனர். ஏனெனில் இந்நகரில் பெரிய வாணிகம் நடைபெறுகிறது; பல விலையுயர்ந்த மணிக் கற்கள், முக்கியமாக வைரங்கள் இருக்கின்றன......உலகத்திலேயே எல்லாப் பொருள்களும் நிரம்பிய சிறந்த நகரம் இதுவே. இங்கே அரிசி, கோதுமை, தானியங்கள், கம்பு, சோளம், ஓரளவு பார்லி, அவரை, பயறுகள், கொள்ளு முதலியவையும், இன்னும் இந்நாட்டில் வளரும் பயிர்களும், மக்களுக்கு உணவாயிருக்கும் இவை போன்றனவும் மிக அதிகமாகச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. அவை மிக மலிவாக விற்கப்படுகின்றன...... தெருக்களும் சந்தை களும் எண்ணிலாத சுமை நிறைந்த எருதுகளால் நிரம்பியிருக் கின்றன.......' கி.பி. 1516-ல் இந்தியாவில் இருந்த எடோர்டோ பர்போசா (Edoardo Barbosa) விசயநகரைப்பற்றி, 'பெரும் பரப்பை யுடையது; மிக நெருக்கமான மக்கள் தொகை உடையது; நாட்டி லேயே சுறுசுறுப்பான வாணிகக்களமாக உள்ளது. பெகுவிலிருந்து

Koviloor Academy

மாணிக்கங்களும், சீனுவிலும் அலெக்ஸாண்டிரியாவிலிருந்து பட்டும், மலபாரிலிருந்து இலவங்கம், கற்பூரம், கஸ்தூரி, மிளகு, சந்தனம் இவையும் வந்திருக்கின்றன' என்று வருணித்துள்ளமை, அந்நகரின் வாணிகவளத்தினைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

இ. விசயநகரப் பேரரசின் பொருளாதார நிலைமை

விசயநகரப் பேரரசில் எல்லையில்லாத செல்வம் கொழித்துக் கிடந்தது என்பது வெளிநாட்டாரின் குறிப்புகளிலிருந்தும், வேறுபல ஆதாரங்களினுலும் தெளிவாக அறியப்படுகிறது. இராச்சியத்தின் வெவ்வேறு பாகங்களிலும் உழவுத்தொழில் நடைபெற்று வந்தது. அரசாங்கமும் அறிவுடைமை மிக்க நீர்ப்பாசனக் கொள்கையை மேற்கொண்டிருந்தது. முதன்மையான தொழில்கள் நெசவு, சுரங்க வேலை, உலோகவேலை முதலியவையாகும். சிறுதொழில்களுள் மிக முக்கியமானது வாசனைப் பொருள் தயாரித்தலாகும். கைத்தொழில் வினைஞர்கள், வணிகர்கள் ஆகியவர்களுடைய சங்கங்கள் இராச்சியத்தின் பொருளாதார வாழ்க்கையில் முக்கியமான பாகத்தைப் பெற்றிருந்தன. அப்துர்ரஸ்ஸாக் எழுதுகிருர்: 'ஒவ்வொரு தனித்தனி சங்கம் அல்லது தொழிலின் வணிகர்கள் தங்கள் கடைகளை அடுத்தடுத்து வைத்துக்கொண்டிருந்தனர்.' பேயெஸ் கூட இவ்வாறு கூறுகிருர்: 'ஒவ்வொரு தெருவிலும் கோயில்கள் இருந்தன. எல்லா வணிகர்களுக்கும், தொழிலாளிகட்கும் இவை மேல் நாட்டில் உள்ள ''சகோதர நட்புக் கழகங்களுக்குச்'' சமமானவையாய் இருந்ததோடு பெரும் பயன் தந்துதவின.'

அந்த இராச்சியத்தின் பொருளாதார நிலையின் மிகவும் குறிப்பிடத்தக்க கூறு உள்நாட்டு வாணிகமும், கடல்கடந்த நாடுகளோடு செய்து வந்த வெளிநாட்டு வாணிகமுமாகும். மலபார்க் கடற்கரையில் மிகமுக்கியமான துறைமுகம் கள்ளிக்கோட்டையாகும். அப்துர்ரஸ்ஸாக்கின் கருத்துப்படி அப்பேரரசு '300 கடல்துறைமுகங்களைப் பெற்றிருந்தது.' அது இந்தியக் கடலில் இருந்த தீவுகள், மலாயாத் தீவுக்குழு, பர்மா, சீனு, அராபியா, பாரசிகம், தென் ஆப்பிரிக்கா, அபிசீனியா, போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது. முதன்மையான ஏற்றுமதிப் பொருள்கள், துணி, அரிசி, இரும்பு, வெடியுப்பு, சர்க்கரை, வாசனைத் திரவியங்கள் ஆகியவையாகும்; இறக்குமதிப் பொருள்கள் துணி, குதிரைகள், யானைகள், முத்துக்கள், செம்பு, பவழம், பாதரசம், சீனப்பட்டு, வெல்வெட்டு ஆகியவையாகும். உள்நாட்டு வாணிகத்துக்கு மலிவான போக்குவரத்துச் சாதனங்கள், காவடிகள், தலைச்சுமை, சுமைக்குதிரைகள், சுமை எருதுகள், கட்டைவண்டிகள், கழுதைகள் முதலியவையாகும். கடற்கரைப்பிரதேச வாணிகத்திற்கும், வெளிநாட்டு வாணிகத்திற்கும்

Koviloor Academy

கப்பல்கள் பயன்பட்டன. பர்போசா (Barbosa) வின் கருத்துப்படி, தென்னிந்தியாவுக்கு வேண்டிய கப்பல்கள் மால்தீவுகளில் கட்டப்பட்டு வந்தன. விசயநகர அரசர்கள் கடற்படையையும் வைத்திருந்தனர் என்பதையும், போர்ச்சுக்கீசியர்கள் வருவதற்கு முன்பே மக்கள் கப்பல் கட்டுங்கலையை அறிந்தவர்களாயிருந்தனர் என்பதையும் கல்வெட்டுச் சான்று நிரூபிக்கிறது. எனினும் விசயநகரப்பேரரசு எவ்வாறு 'கப்பல்போக்கு வரத்தை நடத்தியது என்ற முக்கியமான பிரச்சினையைப் பற்றி' நமக்குத் தெளிவான விளக்கம் கிடைக்க வில்லை.

விஜயநகரப் பேரரசின் நாணயங்கள் பல்வேறு வகையாக வழங்கப்பட்டு இருந்தன. அவை தங்கம், செம்பு ஆகிய உலோகங் களினால்செய்யப்பட்டிருந்தன. வெள்ளியால் செய்த நாணயம் ஒன்றின் மாதிரியும் கிடைத்திருக்கிறது. நாணங்கள் ஆட்சியாளர்களின் மத நம்பிக்கைக்கு ஏற்றவாறு வெவ்வேறு கடவுள்கள், விலங்குகள் ஆகிய வற்றின் அடையாளங்களைப் பெற்றிருந்தன. பொருள்களின் விலை கள் மிகக் குறைவாயிருந்தன. மக்களில் உயர்ந்த சாதியினர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றிருந்தனர் என்பதை வெளி நாட்டாரின் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், பொது மக்கள் பாரமான வரிச் சுமையைத் தாங்காது வருந்திக் கொண்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிகிறோம். உள்நாட் டுக் கவர்னர்களால் வரி மிகுந்த கொடுமையுடன் வசூலிக்கப்பட்டது. எனினும் சில சமயங்களில் அவர்கள் மேலதிகாரிகளால் அடக்கப் பட்டனர்.

ஈ. விசயநகரப் பேரரசில் சமுதாய வாழ்க்கை

வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள், கல் வெட்டுகள், இலக் கியம் முதலியவை விசயநகரப் பேரரசில் இருந்த மக்களின் சமு தாய வாழ்க்கையின் வெவ்வேறு கூறுகளின் குறிப்புகளை ஏராள மாகப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானவற்றை மட்டும் இங்கே பார்ப்போம். பெண்கள் பொதுவாகச் சமுதாயத்தில் ஓர் உயர்ந்த நிலையில் இருந்தனர். அவர்கள் நாட்டின் சமுதாய, அரசியல் இலக்கிய வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொண்டதைப் பற் றிய சான்றுகளும் உள்ளன. மற்போர், வாள், கேடயம் இவற்றைக் கையாளுதல், இசை, மற்ற நுண்கலைகள் முதலியவற்றில் பயிற்சி பெற்றிருந்ததுடன், அவர்களிற் சிலராவது ஓரளவு நல்ல இலக்கியக் கல்வியைப் பெற்றிருந்தனர். நூனிஸ் என்பவர் 'அவர் (விசயநகர அரசர்) மற்போர் செய்யக்கூடிய பெண்களையும் வைத்துள்ளார்: சில பெண்கள் சோதிடர்களாகவும், குறி சொல்லுவோராயும் உள்ளனர். வாயில்களுக்கு உள்ளாகச் செய்யப்படும் எல்லாச் செலவுகளைப்பற்றிய

Koviloor Academy

கணக்குகளையும் எழுதும் பெண்களும் அவரிடம் இருந்தனர். சில பெண்களுடைய கடமை இராச்சியத்தின் எல்லா விவகாரங்களையும் எழுதி அவற்றை இராச்சியத்துக்கு வெளியே இருப்பவர்கள் எழுதியவற்றுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதாக இருந்தது. அவரிடம் இசைக்காகச் சில பெண்கள் இருந்தனர். அவர்கள் இசைக் கருவிகளை மீட்டுபவர்களாயும், பாடுபவர்களாயும் இருந்தனர். அரசரின் மனைவியர்கள் கூட இசையில் தேர்ச்சிபெற்றவர்களாயிருந்தனர்....அவர் நீதிபதிகளையும், இரவில் அரண்மனையைக் காவல் செய்யும் காவலாளிகளையும் வைத்திருந்தார் என்றும், அவர்கள் பெண்களாயிருந்தனர் என்றும் சொல்லப்படுகின்றன' என்று குறிப்பிடுகிருர். பல பெண்களை மணந்து கொள்ளுவது, குறிப்பாகச் செல்வமிக்க வகுப்பினரிடையே, ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்கமாக இருந்தது. பால்ய விவாகம் வழக்கமான பழக்கமாயிருந்தது. மிக அரியாயமான வரதட்சணைகள் வாங்குவது வாழ்க்கையில் நல்ல இடத்தைப் பெற்றிருந்தவர்களிடையே மிகுதியாகக் காணப்பட்டது. அரசாங்கம் ஒரோவழி பல்வேறு சாதியினரிடையே எழும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்காக அவர்களுடைய சமுதாய விவகாரங்களில் தலையிட்டது. சதி சடங்கு அதாவது இறந்த கணவர்களுடன் பெண்கள் தாங்களாகவே தீப்புகுதல் விசயநகரத்தில் மிகச் சாதாரணமாகக் காணப்பட்டது. பிராமணர்கள் அவ்வழக்கத்தை மிகுதியாக அனுமதித்தனர். அரசர்களால் உயர்வாக மதிக்கப்பட்டிருந்தமையின் பிராமணர்கள் சமுதாய, சமய விஷயங்களில் மட்டுமன்றி அரசாங்கத்தின் அரசியல் விஷயங்களிலும் மிக அதிகமான செல்வாக்கைப் பயன்படுத்தினர். அவர்களைப்பற்றி நூனிஸ் 'வாணிகத்தில் நேர்மையானவர்களாயுள்ளனர்; அதிகத் திறமையுள்ளவர்கள்; கணக்கில் மிகவும் திறமையானவர்கள் ; ஒல்லியானவர்கள்; நல்ல தோற்றத்தினர். ஆனல் கடினவேலைக்குச் சிறிதும் தகுதியற்றவர்கள்' என்று வருணித்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

உணவு விஷயத்தில் கண்டிப்பான தடைகள் எவையுமில்லை. பழங்கள், காய்கறிகள், எண்ணெய்கள் இவற்றுடன் மக்கள் மிகுந்த மதிப்பு வைத்திருக்கும் பசுக்கள் எருதுகள் ஆகியவற்றின் இறைச்சி தவிர மற்ற எல்லாவகையான இறைச்சிகள் பொது மக்களால் உணவாக உண்ணப்பட்டன. ஆனல், பிராமணர்கள் ஒருபோதும் 'உயிருள்ள பொருளைக்' கொன்றதோ அவற்றைத் தின்றதோ இல்லை. விஜயநகர அரசர்களின் உணவுகளைப் பற்றி நூனிஸ் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தருகிருர் :

'இந்தப் பிஸ்நாக அரசர்கள் எல்லாவகையான பொருள்களையும் உண்கின்றனர் ; ஆனல் பசுக்கள், எருதுகள் ஆகியவற்றின் இறைச்சியைத் தின்பதில்லை. அவற்றை அவர்கள் வணங்குகிருர்கள். அவர்

Koviloor Academy

கள், இறைச்சி, பன்றிக்கறி, மீன்கறி, கோழிக்கறி, முயல்கள், புறுக்கள், குருவிகள் போன்ற எல்லாவகையான பறவைகளின் இறைச்சியைத் தின்கின்றனர். சிறு குருவிகள், எலிகள், பூனைகள், பல்லிகள் இவற்றின் இறைச்சிகள் பிஸ்நாக நகரின் சந்தையில் விற்கப்படுகின்றன.'

'ஒவ்வொன்றும் உயிருடன் விற்கப்பட வேண்டும். அப்போதுதான் வாங்குகிறவர்கள் என்ன வாங்குகிறோம் என்று அறிந்துகொள்ள முடியும். இது பெரு விலங்குகளைப் பற்றியவரைதான். ஆறுகளிலிருந்து பெரிய எண்ணிக்கைகளில் மீன்கள் கொண்டுவரப்படுகின்றன.'

பேயெஸ், நூனிஸ் முதலியவர்களுடைய கூற்றுகள் உண்மையாயின், 'இது அரசர்களுக்கும், மக்களுக்கும் ஒரு வியப்பான உணவு முறையே. ஏனெனில் கிருஷ்ண தேவராயர், அச்சுத ராயர் காலங்களில் அவர்கள் விஷ்ணுவின் சில உருவங்களில் தனிப்பக்தி கொண்டவராய் ஆர்வமிக்க இந்துக்களாயிருந்தனர்' என்று டாக்டர் ஸ்மித் குடுப்பிடுகிறார். பெரும்பாலும் எலிகள், பூனைகள், பல்லிகள் இவை மக்களில் தாழ்ந்த பிரிவினராலேயே உண்ணப்பட்டிருக்கும். விசயநகர ஜனத்தொகையில் அவர்கள் ஆரியரல்லாத இனத்தினராயிருந்தனர்.


இராச்சியத்தில் எண்ணிலாத உயிர்ப் பலிகள் கொடுக்கப்பட்டதை வெளிநாட்டுப் பயணிகள் குறிப்பிடுகின்றனர். பேயெஸின் கூற்றுப்படி, அரசர் 24 எருமைகள், 150 ஆடுகள் ஆகியவை பலியிடப்படுவதைப் பார்ப்பது வழக்கம்; பெரிய அரிவாளால் ஒரே வெட்டில் அவற்றின் தலைகள் வெட்டப்பட்டன. புகழ் பெற்ற (நவராத்திரி) 'ஒன்பது நாள் விழாவின்' கடைசி நாளில் 250 எருமைகளும், 4,500 ஆடுகளும் கொல்லப்பட்டன.

உ. கலையும் இலக்கியமும்

மிகச்சிறந்த பண்பாட்டு, கலைத்திறமைச் சாதனைகளைப் பெற்றிருந்த பெருமை விசயநகரப் பேரரசுக்கு உண்டு. பேரரசர்கள் வடமொழி, தெலுங்கு, தமிழ், கன்னடம் முதலிய மொழிகளை ஆதரித்தனர். அவர்களுடைய ஆதரவின் கீழ் சில மிகச் சிறந்த இலக்கியங்கள் இயற்றப்பட்டன. வேதங்களுக்குப் புகழ் பெற்ற உரை எழுதிய சாயனரும், அவருடைய சகோதரர் மாதவரும் விசயநகர ஆட்சியின் தொடக்க காலத்தில் வாழ்ந்தனர்; அவர்கள் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மற்ற எல்லாத் துறைகளிலும் போலவே இந்தத் துறையிலும் கிருஷ்ணதேவ ராயரின் ஆட்சி சிறப்பான முக்கியத்துவம் உடையதாய் உள்ளது. 'அவர் ஆட்சியில்

Koviloor Academy

தென் இந்தியாவின் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. தாமே ஒரு கற்றறிந்தவராயும், இசைவாணராயும், கவிஞராயுமிருந்த அவர், தம்மைச் சுற்றிக் கவிஞர்கள், தத்துவவாதிகள், சமய குருமார்கள் முதலியோர், இருப்பதை மிக விரும்பினர்; நிலமாகவும், பொருளாகவும் பெருங்கொடை கொடுத்து அவர்களைப் பெருமைப்படுத்தினர்.' அவர் தம்முடைய தலைசிறந்த பெருநூலான ஆமுக்தமால்யதாவைத் (Amukta malyada) தெலுங்கில் இயற்றினர். அதன் முன்னுரையில் அவர் தம்மால் வடமொழியில் எழுதப்பட்ட ஐந்து நாடகங்களைக் குறிப்பிடுகிருர். இந்நூல் சமய அறிவுக்கு மட்டும் முக்கியத்துவம் உடையதாக அன்றி கிருஷ்ணதேவராயரின் ஆட்சியின் வரலாற்றறிவுக்கும் மிகப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அவருடைய அரசவையில் "அஷ்டதிக்கஜங்கள்"



விட்டலஸ்வாமி கோயில், விஜயநகர்

(எட்டு யானைகள்) எனப் புகழ்பெற்ற கவிஞர்கள் (தெலுங்கு) இலக்கிய உலகத்தைத் தாங்குபவர்கள்—இருந்தனர்.' அவருடைய அரசவைக் கவிஞரான பெத்தண்ண பெரும் புகழை அடைந்திருந்தார்; தெலுங்கு ஆசிரியர்களில் உயர்ந்த நிலையை எய்தியிருந்தார். ஆரவீடு அரச மரபு ஆட்சியாளர்கள் கூடக் கவிஞர்களையும் சமய ஆசிரியர்களையும் ஆதரித்தனர், 'புதுப்பிக்கப்பட்ட பேராற்றலுடன்" தெலுங்கு இலக்கியம் அவர்களுடைய ஆதரவின்கீழ் பெருகியது. பேரரசர்களின் உறவினர்களிலும், சிறு சிற்றரசர்களிலும் நூலாசிரியர்கள் இருந்தனர். இசை, நடனம், நாடகம், இலக்கணம், தர்க்கம், தத்துவம்

Koviloor Acadamy

முதலியவற்றைப் பற்றிய நூல்கள் பேரரசர்களாலும், அவர்களுடைய மந்திரிகளாலும் வரவேற்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டன. சுருங்கக் கூறின், விசயநகரப் பேரரசு 'தென்னிந்தியப் பண்பாட்டின் தொகுப்பாய்' இருந்தது.

பண்பாட்டு வளர்ச்சியுடன், கலையும் கட்டிடக்கலையும் போற்றத் தக்க அளவுக்கு வளர்ந்தன. பேரரசின் பழைய தலைநகரின் பாழடைந்த பகுதிகள் அதன்புகழ் உச்சநிலையில் இருந்த காலத்தில், உள்நாட்டுக் கலைஞர்களால் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை இவற்றில் தனிப்பட்ட ஒரு பாணி உருவாகி யிருந்தது என்பதை உலகுக்குப் பறைசாற்றுகின்றன.

கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட புகழ் பெற்ற ஹயாராக் கோயில் 'இந்து கட்டிடக்கலையில் மிகப் பூரணத்துவம் வாய்ந்த ஒரு மாதிரியாகும்' என்று லாங்கர்ஸ்ட்டு (Longhurst) கூறுகிறார். விட்டலஸ்வாமி கோயிலும் விசயநகரப் பாணிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். பெர்கூசனின் (Ferguszn) கருத்துப் படி, அது 'கட்டிடக்கலைப்பாணி மிகப் பேரழகுடன் முன்னேறி யிருந்த தன் கடைசி எல்லையைக் காட்டுகிறது.' ஓவியக்கலையும் உயர்ந்த அளவு சிறப்பை எய்தியிருந்தது. இசைக்கலை மிக விரைவாக வளர்ந்தது. இசையைப் பற்றிச் சில புது நூல்கள் இயற்றப்பட்டன. கிருஷ்ணதேவராயரும் அவருடைய பிரதிநிதி இராமராயரும் இசை யில் வல்லவர்களாயிருந்தனர். இராச்சியத்தின் மக்களுக்கு இன்பப் பொழுது போக்குவதற்கு நாடகக் கொட்டகைகள் பயன்பட்டன.

ஊ. விசயநகரப் பேரரசின் ஆட்சிமுறை

விசய நகரப் பேரரசு படிப்படியாக ஒரு மத்திய ஆட்சியாக மலர்ந் தது. அதனுடைய எல்லாக் கிளைகளும் கவனமாக ஒழுங்கு படுத்தப் பட்டன. ஐயமின்றித் தாங்கள் எடுத்துக்கொண்ட குறிக்கோள் களுக்காக அரசர்கள் வலிமை வாய்ந்த படை ஒன்றை வைத்திருப் பதும், படையெடுப்புகளைச் செய்வதும் இன்றியமையாதவையாய் இருந்தன. ஆனால், அந்த அரசாங்கம் சிறப்பாகப் படையின் ஆட்சி யைப் பெற்றதென்றும், படை பலத்தின் அடிப்படையில் அமைந்தது என்றும் கூறுவதும், அந்த ஆட்சி யமைப்பு 'வளர்ச்சிக்கேற்ற கொள்கை எதுவுமே பெற்றிருக்கவில்லை......மனித முன்னேற்றக் குறிக்கோளைக் கொண்டிருக்கவில்லை; அதனால் நீண்டகாலம் நீடிக்க முடியாது' என்று தற்கால ஆசிரியர் ஒருவர் கூறியதைப் போலக் குறை கூறுவதும் சரியன்று. உண்மையில் பேரரசு விரிவடையும் போதெல்லாம் அதனுடைய அரசர்கள் ஆட்சி முறையை மிகத்திறம் படக் கவனித்துக்கொண்டனர். அதனால் போர்க்காலங்களில் நிலவிய

Koviloor Acadamy

அமைதிக்குலைவுகள் நீக்கப்பட்டன ; வெவ்வேறு துறைகளில் அமைதியான செயற்பாடுகளைச் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

இடைக் காலத்து விளங்கிய பிற அரசுகளைப்போல விசயநகர அரசிலும் அரசரே எல்லா அதிகாரத்திற்கும் தலையூற்றாக இருந்தார். அவரே உள்நாட்டு, படைத்துறை, நீதித்துறை விவகாரங்களில் தலைமையான அதிகாரியாவார். அவர் சமுதாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மக்கள் விவகாரங்களிலும் தலையிட்டார். ஆனால் அவர் இராச்சியத்தின் நலங்களைப் புறக்கணித்தும், மக்களின் உரிமைகளையும் விருப்பங்களையும் புறந்தள்ளியும் பொறுப்புணர்ச்சியின்றித் தம் விருப்பப்படி ஆட்சி செய்பவராயிருக்கவில்லை. விசய நகர அரசர்கள் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவது எப்படி என்று அறிந்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய அரசியல் கொள்கைமூலம் 'இராச்சியத்தில் அமைதியும் செழிப்பும் கொண்டுவர முயன்றனர்.' 'முடிதரித்த ஓர் அரசர் தர்மத்தின்மேல் ஒரு கண்வைத்துக் கொண்டே அரசாளவேண்டும்' என்று கிருஷ்ணதேவராயர் தமது ஆமுக்த மால்யதாவில் எழுதியுள்ளார். மேலும் அவர் 'அரசர் தம்மைச் சுற்றிலும் அரசியல் கலையில் திறமை பெற்றவர்கள் சூழ்ந்திருக்க ஆட்சி புரியவேண்டும்; இராச்சியத்தில் விலை மதிப்புயர்ந்த உலோகங்களைக் கொடுக்கும் சுரங்கங்களைத் தேடி வெட்டவேண்டும்; உலோகங்களை எடுக்க வேண்டும்; மக்களிடமிருந்து மிதமான வரியையே வசூலிக்க வேண்டும் ; படைபலத்துடன் எதிரிகளை முறியடித்துத் தாக்கவேண்டும்; நட்பு மனப்பான்மை யுடையவராயிருக்க வேண்டும்; குடி மக்களில் எல்லாரையும் பாதுகாக்க வேண்டும் ; அவர்களுக்குள் சாதிகள் கலப்பதைத் தடுக்க வேண்டும்; பிராமணர்களின் தகுதியை உயர்த்திக் கூற எப்போதும் முயல வேண்டும் : கோட்டையை வலிமைப் படுத்தி வேண்டாத பொருள்கள் அதிகமாகச் சேர்ந்துவிடாமல் அவற்றைக் குறைக்க முற்பட வேண்டும் ; நகரங்களின் தூய்மையைப் பற்றி எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும்....' என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசர் தம்மால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் அவை, ஆட்சிமுறை வேலையில் அவருக்கு உதவியாய் இருந்தது. பிராமணர்கள் ஆட்சியில் உயர்ந்த பதவிகளை வகித்துக்கொண்டு பேரளவிற்குச் செல்வாக்குடையவர்களாயிருந்த போதிலும், மந்திரிகள் அவர்களிடமிருந்தும் க்ஷத்திரிய வைசியர்களிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மந்திரியின் பதவி 'சிலசமயங்களில் பரம்பரையாய் வருவதாகவும், சில சமயங்களில் தேர்ந்தெடுக்கப் படுவதாயும் இருந்தது.' அப்துர் ரஸ்ஸாக்கும், நூனிஸும் ஒருவகையான அரசாங்கச் செயல் அலுவகம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றனர். அமைச்சர்களைத் தவிர அரசாங்கத்தின் மற்ற அதிகாரிகள், தலைமைக்

Koviloor Academy

கஜானாத் தலைவர் ; நகைகளின் பொறுப்பாளர் ; அரசாங்கத்தின் வாணிக நலன்களைக் கவனித்துக் கொள்பவர்; போலிசின் அதிகாரிகள் (அவர்கள் நகரில் குற்றத்தைத் தடுப்பதும், ஒழுங்கை நிலைநாட்டுவதும் கடமைகளாகக் கொண்டிருந்தனர்), குதிரையின் தலைமைத் தலைவர் என்பவராவர். அரசர்களின் புகழைப் பாடும் பாத்கள் (bhats), வெற்றிலை மடித்துக் கொடுப்போர், அல்லது அரசரின் சொந்த வேலைகளைக் கவனித்துக் கொள்பவர், 'நாட்குறிப்புத் தயாரிப்பவர், எழுத்துச் செதுக்குவோர், கல் வெட்டுக்களைப் பொறிப்பதற்குரிய பாடல்களை இயற்றுவோர் கீழதிகாரிகளாவர்.

தலைநகரில் மிகப் பெருஞ் செலவில் விசயநகர மன்னர்களால் ஒரு சிறப்புமிக்க அரசவை பேணப்பட்டு வந்தது. அந்த அவைக்குப் பிரபுக்கள், புரோகிதர்கள், இலக்கிய ஆசிரியர்கள், சோதிடர்கள், இசைவாணர்கள் முதலியோர் சென்றனர்; திருவிழாக்கள் பெரும் ஆடம்பரத்துடனும், பெருஞ்சிறப்புடனும் கொண்டாடப்பட்டன.

பேரரசு ஆட்சிமுறை வசதிக்காகப் பல மாகாணங்களாகவும் (ராஜ்யம், மண்டலம், சாவடி), அவை மேலும் கர்நாடகத்தில் வெண்டே,[1] நாடு[2], சீமா, கிராமம், ஸ்தல[3] என்றும், தமிழ்நாட்டுப் பகுதியில் கோட்டம்,[4] பற்று, நாடு, கிராமம் என்றும் பிரிக்கப்பட்டிருந்தன. பேரரசில் எத்தனை மாகாணங்கள் இருந்தன என்று தெளிவாய்ச் சொல்வது கடினம். சில ஆசிரியர்கள் பேயெஸ் கூறுவதை நம்பி, பேரரசு 200 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று கூறுகின்றனர். ஆனால் அந்த வெளிநாட்டுப் பயணி ' மாகாண அரசப் பிரதிநிதிகளுக்கும், கப்பங்கட்டும் சிற்றரசர்களுக்கும், வெறும் அரசாங்க அதிகாரிகளாயிருந்த சிறு பிரபுக்களுக்கும் வேறுபாடு தெரியாமலிருந்தார் ' என்பது தெளிவு. கிருஷ்ணசாஸ்திரி என்பவரின் கருத்துப்படி, பேரரசு ஆறு முக்கிய மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் அரசப் பிரதிநிதி, நாயகர் அல்லது நாயிக்[5] என்பவரின் கீழ் இருந்தன. அவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராகவோ, அரசாங்கத்தில் செல்வாக்குள்ள பிரபுவாகவோ அல்லது பழைய அரச குடும்பங்களின் வழித்தோன்ற

1. நாடு என்பதினும் பெரிய நாட்டுப் பிரிவு.

2. கிராமத்தினும் பெரிய நாட்டுப் பிரிவு.

3. பல வயல்களைக் கொண்ட நிலத்தில் ஒரு பகுதி.

4. பற்று என்பதைக் காட்டிலும் பெரிய நாட்டுப் பிரிவு. பற்று, நாடு என்பதினும் பெரியது.

5. நாயிக் என்ற சிறப்புப்பெயர் சுங்கம் வசூலிப்போர்க்கும், படைத்தளபதிகளுக்குங்கூடக் கொடுக்கப்பட்டது.

Koviloor Acadamy

லாகவோ இருப்பர். ஒவ்வொரு அரசப்பிரதிநிதியும் தம்முடைய ஆட்சி எல்லையில் உள்நாட்டு, படைத்துறை, நீதி அதிகாரங்களைச் செலுத்தினர். ஆனால், அவர்கள் தங்களுடைய பொறுப்பிலிருந்த மாகாணத்தின் வரவு, செலவுக் கணக்குகளை ஒழுங்காக மத்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கவும், தேவைப்பட்ட காலங்களில் படையுதவி செய்யவேண்டியவர்களாகவும் இருந்தனர். மேலும் அவர்கள் துரோகம் செய்பவர்களாகவோ, குடிமக்களைத் துன்புறுத்துபவர்களாகவோ மெய்ப்பிக்கப்பட்டால், அவர்கள் அரசரால் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். தங்கள் மாகாணத்தின் வருமானத்தில் மூன்றில் ஒருபங்கு அரசாங்கத்துக்கு அனுப்பத் தவறினால் அவர்களுடைய சொத்து பறிமுதல் செய்யப்பட்டு, அரசாங்கத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும். பொதுவாக நாயிக்குகள் பொது மக்களிடமிருந்து வரிவசூல் செய்வதில் கடுமை மிக்கவர்களாயிருந்தாலும், அவர்கள் உழவுத்தொழிலுக்கு ஊக்கம் கொடுத்தல், புதிய கிராமங்களைத் தோற்றுவித்தல், மதத்தைக் காப்பாற்றுதல், கோயில்களையும் மற்றக் கட்டிடங்களையுங் கட்டுதல் முதலிய பயனுள்ள வேலைகளில் கவனமில்லாதவர்களாய் இருக்கவில்லை. ஆனால், விசயநகர அதிகாரம் ஒரேயடியாக மறைந்தபோது, தென்னிந்தியாவில் பதினேழு பதினெட்டாம் நூற்றுண்டுகளில் நிலவிய குழப்பங்களுக்குப் பெரிதும் அவர்களே காரணமாயிருந்தனர்.

கிராமத்தை மிகச்சிறு பகுதியாகக் கொண்டு விசயநகர அரசர்கள் வளமான, தீவிரமான உள்நாட்டு ஆட்சிமுறையைப் பரம்பரையாகப் பெற்றுத் தொடர்ந்து மேற்கொண்டுவந்தனர். ஒவ்வொரு கிராமமும் தன் தேவையைப் நிறைவேற்றிக்கொள்ளும் பகுதியாக இருந்தது. வட இந்தியாவில் இருந்த பஞ்சாயத்தைப்போல, கிராமச் சபைகள் தலைமுறை தலைமுறையாக வந்த கிராம அதிகாரிகள் மூலம் நிர்வாகம், நீதி, காவல் முதலிய விஷயங்களில் தங்கள் பொறுப்பிலுள்ள பகுதியில் அதிகாரஞ் செலுத்திவந்தன. அக்கிராம அதிகாரிகளுள் சேனத்தேயோவா (Senateova) என்பவர் கிராமக் கணக்கர். தலாரா (Talara) என்பவர் கிராமக் காவலாளி அல்லது அதிகாரி. பேகாரா (Begara) என்பவர் கட்டாயப்படுத்தி வேலை வாங்கும் கண்காணியாவர். மேலும், சில அதிகாரிகளும் இருந்தனர். அவர்களுக்கு நிலக்கொடைகள் மூலம் அல்லது விளைச்சலின் ஒரு பகுதியைக் கொடுப்பதன் மூலம் ஊதியமளிக்கப்பட்டது. வாணிகக்குழுக்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்கள் ‘கிராமச் சபைகளின் உறுப்பினர்களாகவே இருந்தனர்’ என்று தெரிகிறது. கிராம ஆட்சியைப் பொதுவாகக் கண்காணித்துவந்த மகாநாயகாசாரிய என்ற தம்முடைய அதிகாரி மூலம், அரசர் கிராம ஆட்சியுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

Koviloor Acadamy

சிஸ்ட் (Sist) என்று அழைக்கபட்ட நிலவருமானம் விசயநகர அரசாங்கத்தின் முக்கியமான வருவாய் மூலமாகும். அடவானெ (Athavane) என்ற இலாக்காவின்கீழ் அவ்வரசாங்கம் மிகத் திறமை வாய்ந்த நிலவருமான முறையைப் பெற்றிருந்தது. நிலங்கள் வரி விதிப்பிற்காக நீர்ப்பாய்ச்சல் நிலம், புன்செய், காடுகள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன. குடிவாரத்தினர் கொடுக்கவேண்டிய வரி இவ்வளவு என்று தெளிவாகக் கூறப்பட்டது. அரசாங்கத்தின் பெரும் சுமைகளைப் போக்குவதற்காகவும், தம்முடைய எதிரிகளை எதிர்ப்பதற்காக வேண்டிய பணமும், ஆட்களும் பெறும் சிக்கலைத் தீர்ப்பதற்காகவும், விசயநகரப் பேரரசர்கள் பரம்பரையாக விளைச்சலில் ஆறிலொரு கடமை வாங்குவதை விட்டு வரியைச் சிறிதளவு உயர்த்தினர். 'உழவர்கள் தங்கள் விளைச்சலில் பத்திலொருபங்கைக் கொடுக்க நேர்ந்தது' என்று நூனிஸ் கூறும் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியதன்று. விசயநகர அரசர்கள் 'தரவேறுபாட்டுக் கொள்கையை' அதாவது நிலங்களின் வளத்துக்கேற்ப வரிவசூலிக்கும் கொள்கையை மேற்கொண்டிருந்தனர். நிலவரியைத் தவிர, ரயத்துக்கள் மேய்ச்சல் வரி, திருமண வரி முதலிய மற்ற வகையான வரிகளையும் செலுத்தவேண்டியிருந்தனர். சுங்க வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானமும், பாதைகளின்மேல் இடப்பட்ட வரியும், தோட்டங்கள் தோட்டக்கால்கள் இவற்றினின்று வரும் வருமானமும், பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்படுகிற பொருள்களை விற்போர், உற்பத்தி செய்வோர், தொழிலாளிகள், குயவர்கள், வண்ணார்கள், செருப்புச் செய்வோர்கள், நாவிதர்கள், சந்நியாசிகள், கோயில்கள், பொதுமகளிர் இவர்களிடமிருந்து வசூலிக்கும் வரிகள் முதலியனவும் அரசாங்கத்திற்குரிய வேறு வாய்களாக இருந்தன. சோழர்கள் காலத்தைப்போலவே வரிகள் பணமாகவும் தானியமாகவும் செலுத்தப்பட்டன.

விதிக்கப்பட்ட வரி சுமை மிக்கது என்பதிலும், மாகாணக் கவர்னர்களும், வருமான அதிகாரிகளும் அடிக்கடி மக்களை நசுக்கி வந்தனர் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், அதே சமயத்தில், அரசாங்கத்திற்குக் குறைகள் முறையிடப்பட்டபோது, அரசாங்கம் மக்களின் துன்பங்களைக் குறைத்தது. சில சமயம் வரிகள் குறைக்கப்பட்டன அல்லது வரிவிலக்குச் செய்யப்பட்டன என்பதற்கும், தேவையான போது பொது மக்கள் நேரடியாக அரசரிடஞ் சென்று முறையிட்டனர் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. வற்புறுத்தி வரிவசூலித்தல், அடக்குமுறை செய்தல் இவற்றை முறையாக மேற்கொண்டிருந்ததால் பேரரசு சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்குமேல் நிலைத்திருக்க முடியாது போயிற்று.

Koviloor Acadamy

அரசர்தான் எல்லாருக்கும் மேற்பட்ட நீதிபதி. எனினும் நீதி வழங்குவதற்காக ஒழுங்கான நீதிமன்றங்களும், சிறப்பான நீதித் துறை அதிகாரிகளும் இருந்தனர். சில சமயங்களில் நாட்டாண்மை நிலையங்களின் ஒத்துழைப்புடன் அரசாங்க அதிகாரிகள் வழக்குகளைத் தீர்த்தனர். நாட்டின் ஒரே சட்டம் 'பிராமணர்கள் அல்லது புரோகிதர்களின் சட்டமாயிருந்தது' என்று நூனிஸ் கூறுவதை நாம் நம்ப முடியாது. ஆனால், நாட்டின் சட்டம் பரம்பரை ஒழுங்கு முறைகள், வழக்கங்கள் ஆகிய இவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது; நாட்டின் நடைமுறைப் பழக்கத்தினால் வலிமையுற்றிருந்தது. அச் சட்டத்திற்குக் கட்டாயமாகக் கீழ்ப்படியும்படி அரசாங்கம் வற்புறுத்தியது. குற்றம் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. இத்தண்டனை முக்கியமாக நான்கு வகைப்படும். தண்டம் விதித்தல், சொத்துப் பறிமுதல் செய்தல், சித்திரவதை செய்தல், கொலைசெய்தல் என்பவையாகும். திருட்டு, சோரம், துரோகம் இக் குற்றங்களுக்குக் கொலை அல்லது உறுப்புக்குறை தண்டனை வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. சில சமயங்களில் குற்றவாளிகள் 'யானையின் கால்களின் முன்பு எறியப் படுவர். யானை அவர்களைத் தன் முழங்கால், தும்பிக்கை, கொம்புகள் இவற்றால் மிதித்தும், அடித்தும் கொன்று விடும்.' நீதித்துறையில் அதிகாரிகளின் அடக்குமுறை காணப்படாமல் இல்லை. ஆனால், அரசாங்கம் சில சமயங்களில் அவற்றிற்குப் பரிகாரம் அளித்தன. அந்த அடக்கு முறை 'சில சமயங்களில் நாட்டாண்மை நிலையங்களின் கூட்டு எதிர்ப்பால் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது.

ஹொய்சளர்களைப் போலவே விசயநகர அரசர்களும் நன்கு ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்ட படைத்துறையை அமைத்திருந்தனர். கண்டாசார (Kandachara) என்றழைக்கப்பட்ட அந்தத் துறை தண்டநாயகர் அல்லது தன்னயகர் (படைத் தளபதி) என்பவரின் கீழ் இருந்தது. சிறு அதிகாரிகளின் குழு அவருக்கு உதவியாக இருந்தது. அரசாங்கம் பெரிய, திறமைமிக்க ஒரு படை வைத்திருந்தது. எனினும் அப்படையின் எண்ணிக்கை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இல்லை. அரசரின் ஒழுங்கான படைவீரர்களுடன், நெருக்கடி காலத்தில், சிற்றரசர்கள், பிரபுக்கள் முதலியவர்களுடைய துணைப்படைகள் வந்து சேரும். காலாள், குதிரைப்படை, யானைகள், ஒட்டகங்கள் பீரங்கிப்படை என்பவை படையின் பல்வேறு பிரிவுகளாகும். காலாட் படைக்குப் பொது மக்களில் வெவ்வேறு வகுப்பு, கொள்கை உடையவர்களிலிருந்தும், சில சமயங்களில் முஸ்லிம்களிலிருந்துங்கூட ஆட்கள் பொறுக்கி எடுத்துக் கொள்ளப்பட்டனர். பேரரசில் குதிரைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருந்தமையின், ஆர்முஸிலிருந்து (Ormuz) நல்ல குதிரைகள் போர்ச்சுக்கீசியர்கள் மூலம் பொறுக்கியெடுக்கப்பட்டுப்

Koviloor Acadamy

படையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன. கி.பி. 1368-லேயே இந்துக்கள் பீரங்கியைப் பயன்படுத்தத் தொடங்கினர் என்பதற்குக் கல்வெட்டுகளும், வெளிநாட்டாரின் குறிப்புகளும் சான்றுகள் தரு கின்றன. விசயநகரப் படையின் போரிடும் வன்மையும், ஒழுங்கும் தக்கணத்து முஸ்லிம் இராச்சியங்களின் படைகளில் காணப்பட்ட வற்றைக் காட்டிலும் குறைவாகவே இருந்தன.


மேலே கூறப்பட்ட சிறப்புக்களைப் பெற்றிருந்தாலும், விசயநகரப் பேரரசு சில குறைபாடுகளை உடையதாகத் துன்புற்றது. முதலாவ தாக, மாகாணக் கவர்னர்களுக்கு நிறைய உரிமை இருந்தது. அத ஞல், மத்திய அதிகாரம் பலவீனமடைவதற்கும், கடைசியில் பேரரசு அழிவதற்கும் அது பெருங்காரணமாக முடிந்தது. இரண்டாவதாக, பல்வேறு வசதிகள் இருந்த போதிலும் பேரரசு தொடர்ந்து வாணிகச் செயலில் ஈடுபடத் தவறிவிட்டது. 'இந்தத் தவறுதல் விசயநகரின் பேரரசு வாழ்க்கையில் ஒரு பெரும் தவருயிற்று. இதனல் நிலையான இந்து பேரரசு நிலைபெற்று விளங்க முடியாது போயிற்று' என்று டாக்டர் ஐயங்கார் பொருத்தமுறக் கூறுகிருர். மூன்ருவதாக, தாற்காலிகமாகப் பெற்ற நன்மைகளைக் கருதிப் பேரரசர்கள் மேற்குக் கடற்கரையில் போர்ச்சுக்கீசியர்கள் குடியேற அனுமதித்துவிட்டனர். இவ்வாறு 'ஆதாயக் கொள்கை' தங்களுடைய 'பேரரசு நிலை பேறடைவது என்ற முக்கிய பிரச்சினையைத்' தாழ்த்தி விட்டது.

ஒரிஸ்ஸா இராச்சியம்


அனந்தவர்மன் சோட கங்கனல், அவருடைய நீண்ட எழுப தாண்டு ஆட்சிக்காலத்தில் (சுமார் 1076-1148) ஒரிஸ்ஸா ஓர் ஆற்றல் மிக்க அரசாக ஒருநிலைப் படுத்தப்பட்டது. அந்த இராச்சியம் கங்கை யின் வாயிலிருந்து தெற்கே கோதாவரியின் வாய்வரை பரந்திருந்தது என்பது பல கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. அமைதியை நிலை நாட்டுவதற்குச் சோடகங்கன் செய்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை யாகும். அவர் மதத்தையும், வட மொழி, தெலுங்கு இலக்கியங்களை யும் ஆதரித்தார். 'அவருடைய ஆட்சிக்காலத்திலிருந்த ஒரிஸ்ஸா வின் செழிப்புக்கும், கலைத்திறமைக்கும்' ஒரு பேரொளி மிக்க நினைவுச் சின்னமாக பூரியிலுள்ள ஜகந்நாதரின் பெருங்கோயில் விளங் குகிறது. சோட கங்கனுக்குப் பின்வந்தவர்கள் வெற்றிகரமாக முஸ் லிம் படையெடுப்புகளைத் தடுத்து நிறுத்தித் தங்கள் இராச்சியத்தில் செல்வச் செழிப்பு நிலவுமாறு செய்தனர். அவர்களுள் மிகச்சிறந்த வரும் புகழ் பெற்றவரும் முதலாம் நரசிம்மன் (1238-1264), வங்காள முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிட்டுப் போற்றத்தக்க வெற்றி அடைந் ததுடன், பூரியிலிருந்த ஜகந்நாதர் கோயிலைக் கட்டி முடித்தார் என்றும்

Koviloor Academy

சொல்லப்படுகிறது. பூரி மாவட்டத்தில் கோனாரக் என்ற இடத்தில் அவர் சூரிய கடவுளுக்குப் பெருங்கோயில் ஒன்றைக் கட்டினார். நர சிம்மனுக்குப் பிறகு அவருடைய மரபின் செல்வவளங்கள் சீர்குலையத்



கருங்கோயில், நிருத்த மண்டபம், கோனாரக்



தேர்ச்சக்கரம், கோனாரக்

Koviloor Acadamy

தொடங்கின. கி.பி. 1434-35-ல் அது சூரிய மரபு ஒன்றால் கவிழ்க்கப்பட்டது. அச்சூரிய மரபு ஒரு நூற்றாண்டுக்குமேல் ஒரிஸ்ஸாவை ஆண்டது.

புதிய அரசமரபினை நிறுவிய கபிலேந்திரன் போதுமான சக்தியும், ஊக்கமும், பெருந்திறனும் உடையவராயிருந்தார். பிற்காலக் கங்கர்களின் ஆட்சிக் காலத்தில் தாழ்வடைந்த ஒரிஸ்ஸாவின் மதிப்பை மீண்டும் நிலைநாட்டினார். அவர் தம் நாட்டில் எழுந்த வலிமை வாய்ந்த கிளர்ச்சிக்காரர்களை ஒடுக்கினார். பீடாரின் பாமனிசுல்தான்களுடனும், விசயநகர அரசர்களுடனும் வெற்றிகரமான போர்களைச் செய்தார்; கங்கையிலிருந்து காவேரி வரை தம் இராச்சியத்தை, விரிவாக்குவதில் வெற்றியடைந்தார்; பாமனி அரசின் இதயபாகத்தில், பீடாருக்கருகே வெற்றிப்படையுடன் நுழைந்தார். அவர் விசயநகர அரசப் பிரதிநிதியின் இருப்பிடமாயிருந்த உதயகிரியையும், காஞ்சிபுரத்தையும் உரிமையாகப் பெற்றார் என்று கோபிநாத்பூர்க் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. அடுத்த அரசரான புருஷோத்தமரின் (கி.பி. 1470-1497) ஆட்சிக்காலத் தொடக்கத்தில் சில குழப்பங்கள் எழுந்தன. அச்சமயத்தில் ஒரிஸ்ஸா இராச்சியம் கோதாவரியிலிருந்து தெற்கிலிருந்த பகுதிகளாகிய தன் ஒரு பாதியை இழந்தது. கிருஷ்ணுவுக்குத் தெற்கிலிருந்த நாட்டை சாளுவ நரசிம்மன் கைப்பற்றினார்; பாமனியர் கோதாவரி-கிருஷ்ணு தோஆப்பைக் கைப்பற்றினர். ஆனால் தம் ஆட்சியின் இறுதிப் பகுதியில், புருஷோத்தமர் தோஆப்பையும், இக்காலக் குண்டூர் மாவட்டம் வரையிலுள்ள ஆந்திர நாட்டின் ஒரு பகுதியையும் திரும்பப் பெற்றார். கபிலேந்திரரின் பேரரசிலிருந்த தமிழ் மாவட்டங்களில் எதையும் அவர் திரும்பப்பெற்றாரா என்பது உறுதியாகச் சொல்ல முடியாது.

புருஷோத்தமரின் மகனும், அவருக்குப் பின்பு பட்டத்துக்குவந்தவரும், சைதன்யரின் காலத்தில் வாழ்ந்தவரும், அவருடைய சீடருமான பிரதாபருத்திரன் (1497-1540), வங்காளத்தின் ஹுக்ளி, மிட்நாபூர் மாவட்டங்களிலிருந்து, தெலிங்கானு மேட்டுப் பிரதேசத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கிக் கொண்டு குண்டூர் மாவட்டம் வரையிலுள்ள இராச்சியத்தை உரிமையாகப் பெற்றிருந்தார். ஆனால் விசயநகத்துக் கிருஷ்ணதேவராயரின் ஆக்கிரமிப்புகளினாலும், கிழக்குக் கரையில் ,வளர்ந்துவந்த கோல்கொண்டா இராச்சியத்தின் குத்ப் ஷாகியின் ஆக்கிரமிப்புகளினாலும், அந்த அரசின் பரப்பு அப்படியே நீண்ட காலம் நீடிக்கவில்லை. மூன்று போர்களின் விளைவாகப் பிரதாபருத்திரன் தம் காலத்தில் வாழ்ந்த விசயநகர அரசருக்குத் தம் இராச்சியத்தின் கோதாவரிக்குத் தெற்கேயிருந்த பகுதியைக் கொடுத்துவிட நேரிட்டது. 1522-ல் 'கோல்கொண்டாவின் சுல்தான் குலி குதுப் ஷா ஒரிஸ்ஸா இராச்சியத்தின்மீது படையெடுத்தார்.

Koviloor Acadamy


சைதன்யர் உபதேசித்த வைணவசமயத்தின் விளைவாக மக்களும் ஒரிஸ்ஸாவின் அரசர்களும் போர் உணர்ச்சி இழக்கப் பெற்றதனுல் தான் ஒரிஸ்ஸா அரசியல் வீழ்ச்சியுறத் தொடங்கியது என்று சிலர் நம்புகின்றனர், அது எப்படியிருந்த போதிலும், பதினரும் நூற்ருண்டி லிருந்து ஒரிஸ்ஸா தன் பழைய அதிகாரத்தை இழந்துவிட்டது என்பது உண்மையே. ஏறத்தாழக் கி.பி. 1541-42-ல் கபிலேந்திர அரசமரபு போயி (Bhoi) அரசமரபினரால் கவிழ்க்கப்பட்டது. போயி மரபினை நிறுவியவர் முன்னுள் பிரதாபருத்திரனின் அமைச் சராயிருந்தார். அவர் போயி அல்லது கணக்கு எழுதுவோர் சாதி யைச் சார்ந்தவரானதால் அவ்வரசமரபிற்குப் போயி மரபு என்ற பெயர் ஏற்பட்டது. அவருடைய மகனை கோவிந்தனும், இரண்டு பேரர்களும் சுமார் பதினெட்டு ஆண்டுகள் ஆண்டனர். சுமார் கி.பி. 1559-ல் அந்த அரசமரபு முகுந்த ஹரிச்சந்தனனுல் அகற்றப் பட்டது. அவர் கி.பி. 1568-ல் இறக்கும்பொழுது, ஒரிஸ்ஸா இராச்சியத்தை முஸ்லிம் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றத் தம் மாலான எல்லா முயற்சிகளேயும் செய்தார். இரண்டு பக்கங்களி லிருந்தும் வங்காளத்து ஆப்கானியர்களைத் தாக்குவது என்ற கொள் கையைக் கொண்டிருந்த அக்பர் அவருடைய கூட்டுறவை நாடினர். வங்காளத்துக் கரரானி சுல்தான்கள் ஒரிஸ்ஸாவைக் கி.பி. 1568-ல் இணைத்துக்கொண்டனர். இந்து துரோகியான காலாபாஹார் சுலைமான் கரரானியின் மகனை பாயஸித்துடன் சேர்ந்துகொண்டு, ஒரிஸ்ஸாவுக்குச் சென்று ஜகந்நாதர் கோயிலைக் கேவலப்படுத்தினர் என்றும், மரத்தால் செய்யப்பட்ட சிலைகளை அழிக்கவும் முற்பட்டார் என்றும் கூறப்படுகின்றன. பிறகு ஒரிஸ்ஸாவைப் பெறுவதற்காக முகலாய ஆப்கானியப் போட்டி ஏற்பட்டது.

மேவார்

துருக்கிய-ஆப்கானியப் பேரரசு சிதைவுற்றபோது, சில இராச புத்திர நாடுகள் புத்துயிர்ப்புணர்ச்சியைப் பெற்றுக் கிளர்ந்தெழுந்தன. அவற்றுள் மிக முதன்மையானது மேவாரின் குகிலாப் பிரதேசமாகும். அங்கே இராசபுத்திர மேதைமை மிக்கபேரொளியுடன் வெளிப்பட்டது. அதனுல் பல தலைமுறைகளில் பல வீரமிக்க தளபதிகள், வீரத் தலைவர்கள், அறிவுமிக்க அரசர்கள், சில ஒளிபடைத்த கவிஞர்கள் தொடர்ந்து தோன்றிவந்தனர். கி.பி. ஏழாம் நூற்ருண்டிலேயே வீரமும் தீரமும் மிக்க குகிலா இனத்தைச் சேர்ந்த இராசபுத்திரர்கள் இந்தப் பிரதேசத்தில் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தியிருந்தனர். மேவாரின் தலைநகரான சித்தூரை அலாவுத்தீன் கில்ஜி எப்படி முற்று கையிட்டுக் கைப்பற்றினர் என்பதையும், ஹமீர் அல்லது அவருடைய மகன் எவ்வாறு முஸ்லிம்களிடமிருந்து அதைத் திரும்பப்பெற்றுத் தம் இனத்தின் மதிப்பை நிலைநாட்டினர் என்பதையும் நாம் ஏற்கெனவே

Koviloor Acadamy

விவரித்திருக்கிறோம். ஹமீர் 'மேவாரின் பேரறிவு வாய்ந்த, மிகுந்த வீரம்பொருந்திய இளவரசர்களில் ஒருவராக இன்றும் போற்றப் படுமளவுத் தம் புகழை நிலைநாட்டிவிட்டு, மிக நன்ருக நிறுவப்பட்ட பரந்த அதிகாரமுடைய இராச்சியத்தைத்' தம்முடைய மகன் க்ஷேத்திர சிம்மனுக்குக் கொடுத்துவிட்டு முதிர்ந்த வயதில் கி.பி. 1364-ல் இறந்தார். கி.பி. 1382-ல் க்ஷேத்திர சிம்மன் ஒரு குடும்பப் போரில் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் அவருடைய மகன் லாக்கா பட்டம் எய்தினர். கி.பி. 1418க்குப் பிறகு லாக்கா இறந்த பிறகு அவருடைய மகன் மொக்லா (Mokala)மேவாரின் சிம்மாசனம் ஏறினர்; ஆனல் அவடைய மாமன்களுள் இருவரால் கி.பி. 1431-ல் கொலைசெய்யப்பட்டார். அடுத்த மேவார் ராணுவான கும்பா இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த புகழ் பெற்றவர்களுள் ஒருவராவர். அவருடைய நாட்டின் வரலாற்று ஏடுகளில் அவருடைய ஆட்சிக் காலம் மிக முக்கியமான காலமாய் இருந்தது. டாட் (Tod) என்பார் அவருடைய சாதனைகளை, 'காக்கசஸிலும், ஆக்சஸ் கரைகளிலும் வந்துசேர்ந்து கொண்டு அவருடைய பேரனை சங்காவின் தலையில்



சித்தூர்கார்
(வலது மேல் மூலையில் கீர்த்தம்பத்தின் காட்சியைத் தருவது)

விடிவதற்கிருந்த புயல்களைச் சமாளிப்பதற்காக மேவாரின் வளங்களை உயர்த்தவேண்டி எல்லா முயற்சிகளையும் கும்பா செய்தார். அவர் ஹமீரிடமிருந்த சக்தியும், லாக்காவிட மிருந்த கலைச் சுவையும், அதிர்ஷ்டமளிக்கத்தக்க பரந்த மேதைமையும் ஒருங்கே உடையவராய், மேற்கொண்ட எல்லாச் செயல்களிலும்

Koviloor Acadamy

வெற்றியுற்ருர். மீண்டும் மேவாரின் 'சிவப்பு நிறக் கொடியை' சமர்சி தோல்வியுற்ற சக்கர் (Ghaggar) நதிக்கரையின்மீது உயர்த்திஞர். கும்பா, மாளவம் குஜராத் இவற்றின் முஸ்லிம் அரசர்களை எதிர்த்துப் போரிட்டார். அவருடைய எல்லாப் புது முயற்சிகளிலும் அவர் வெற்றி அடையாத போதிலும்,அவர் பேராசை பிடித்த அண்டை நாட்டினரிடமிருந்து தம் சொந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. அவர் மாபெரும் கட்டடங்கட்டுவதில் விருப்பினராயிருந்தார். மேவார் தன்னுடைய சில மிகச் சிறந்த நினைவுச் சின்னங்களுக்கு அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. மேவாரின் தற்பாதுகாப்புக்காகக் கட்டப்பட்ட எண்பத்து நான்கு கோட்டைகளில் முப்பத்திரண்டு கும்பாவிஞல் கட்டப்பட்டவை. அவருடைய படைத்துறை, புதிது ஆக்கும் மேதைமைக்குப் பேரொளி மிகுந்த நினைவுச் சின்னமாயிருப்பது கும்பல் கார்க் கோட்டையாகும், 'வரலாற்றுப் புகழ் அல்லது யுத்த தந்திர நெறிக்கு முக்கியத்துவம் இவற்றில் ஈடிணையில்லாததாய்' இருந்தது அது. கும்பாவின் ஜயஸ்தம்பம் அல்லது கீர்த்திஸ்தம்பம் (புகழ்க் கோபுரம்) அவருடைய மேதைமைக்கு மற்றொரு நினைவுச் சின்னமாகும். மேலும் ராணு ஒரு கவிஞராயும், இலக்கிய ஆசிரியராயும், தேர்ச்சி பெற்ற இசைவாணராயுமிருந்தார். என்று புகழ்ந்து போற்றியுள்ளார். அவர் பெரிதும் கி.பி. 1469-ல் அவருடைய மகன் உதயகரனுல் கொலை செய்யப்பட்டார். உதயகரனின் இக்கொடுமையால் பிரபுக்கள் பேரதிர்ச்சியும் அச்சமும் அடைந்தனர். அவர்கள் அவருடைய தம்பியான ராயமல்லனை ராணுவாக ஏற்றனர். ராயமல்லனின் புதல்வர்கள் சிம்மாசனத்திற்காகத் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டர். கடைசியில் சங்கா என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அவர்களுள் ஒருவரான சங்கராமா கி. பி. 1509-ல் மேவார்ச் சிம்மாசனம் ஏறிஞர். சங்கா போற்றத்தக்க படைத்துறை வன்மை பெற்றிருந்தார். நூறு போர்க்களங்களைக் கண்ட வீரரான அவர் தம் உடம்பில் எண்பது காயத் தழும்புகளைப் பெற்றிருந்தார்; மேலும் ஒரு கண்ணைக் குருடாக்கிக் கொண்டும், ஒரு காலை முடமாக்கிக்கொண்டும் இருந்தார். அவர் மாளவம், தில்லி, குஜராத் இவற்றை எதிர்த்து வெற்றிகரமாகப் போரிட்டார்; தில்லி சுல்தானியத்தின் முறிவின் போது மேவாரின் மேலாண்மையை நிலைநாட்டுவதற்காக அதன் பொருளாதார வளங்கள், போர்ப்படைகள் இவற்றை ஒழுங்குபடுத்திஞர். இதனல் அவருக்கும், வட இந்தியாவில் மேலாண்மையை நிலைநாட்ட முற்பட்ட எந்த வேறு அரசுக்குமிடையே போட்டி ஏற்படுவது தவிர்க்க முடியாததாய் இருந்தது. அடுத்துவரும் அதிகாரம் ஒன்றில் விளக்கிக் கூறப்படவிருக்கும் கானுவா போர் இவ்வுண்மையின் நேரடியான விளைவேயாகும்.

Koviloor Acadamy

காம ரூபமும் அஸ்ஸாமும்

பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் வங்காளத்தில் முஸ்லிம்கள் முன்னேறிக்கொண்டிருக்கும் போது, பிரம்ம புத்திராச் சமவெளி, ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொண்டிருக்கும் கணக்கற்ற பல சிறு சுதந்திரப் பகுதிகளாகப் பிரிந்திருந்தது. சுபன்சீரி, திசாங்கு இவற்றின் கிழக்குப் பகுதியை சூதியா மரபு அரசர்கள் (போடோ-ஷான் இனத்தைச் சார்ந்த மலைநாட்டு மக்கள்) ஆண்டனர். ஆனல் தெற்கிலும் தென் மேற்கிலும் இருந்த ஒரு சிறு பகுதி சில போடோ மலைநாட்டு இனத்தவரின் ஆட்சிக்கீழ் இருந்தது. இன்னும் மேற்கே ஒரு கச்சாரி இராச்சியம் இருந்தது. அது பிரம்மபுத்திராவுக்குத் தெற்கேயிருந்து நவ்காங்க் (Nowgong) மாவட்டத்தின் குறுக்கே அரைப்பகுதி வரை பரந்திருந்தது. சூதியாக்களுக்கு மேற்கே வட கரையிலும், கச்சாரிகளுக்கு மேற்கே தென்கரையிலும் பூயியாக்கள் (Bhuiyas) என்று அழைக்கப்பட்ட சில குறு நில மன்னர்களின் இராச்சியங்கள் இருந்தன. மேற்கின் கோடியில் காமரூப இராச்சியம் இருந்தது. அதன் மேற்கு எல்லையில் கரடோயா நதி இருந்தது. அதன் கிழக்கு எல்லை அதனிடம் பகைமைகொண்ட அண்டை நாட்டரசர்களைப் பொறுத்து இடம் மாறிக்கொண்டிருந்தது. அது காமடாவின் இராச்சியம் என்று அழைக்கப்பட்டது. பதின்மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், மாபெரும் ஷான் மலையினத்தின் ஒரு பிரிவினரான ஆஹோம்கள் பிரம்மபுத்திராவின் வரலாற்றில் ஒரு புதிய கூறுக முளைத்தனர். அவர்கள் காமடா இராச்சியத்தின் கிழக்குப் பக்க விரிவினைத் தடுத்தனர். அதன் மேற்கில் அண்டை நாட்டினராயிருந்த வங்காளத்து முஸ்லிம் சுல்தான்கள் அதன் இராச்சியப் பகுதிகளில் பல படையெடுப்புகளைச் செய்தனர்; அதனல் வெவ்வேறு விளைவுகள் ஏற்பட்டன.

பதினைந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் காமடாவில் ஒரு வலிமை வாய்ந்த பேரரசு கேன்களால் (Khens) நிறுவப்பட்டது. அவர்களுடைய தலைநகரம கூச் பீஹாருக்குச் சில மைல்கள் தெற்கேயிருந்த காமடாப்பூராகும். கேன்கள் காமடாவைச் சுமார் எழுபத்தைந்து ஆண்டுகள் ஆண்டனர். அவர்களுடைய கடைசி அரசர் நிலாம்பர் கி.பி. 1498-ல் அலாவுத்தீன் ஹுஸேன்ஷாவினல் கவிழ்க்கப்பட்டார். சிறிது காலக் குழப்பத்திற்குப் பிறகு மங்கோலிய மூலத்தையுடைய கொச்மலையினத்தைச் சேர்ந்த பீஸ்வா சிம்ஹா இக்காலத்துக் கூச் பீஹார் என்றழைக்கப்படும் கொச் பீஹாரைத் தலைநகராகக்கொண்டு, கி.பி. 1515-ல் ஒரு வலிமை வாய்ந்த இராச்சியத்தை நிறுவினர். இந்த அரசமரபின் மிகப்பெரிய அரசர் பிஸ்வாசிம்ஹாவின் மகனும், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த வருமான நர நாராயண் ஆவர். அவருடைய ஆட்சியில் காமடா

Koviloor Acadamy

இராச்சியம் செழிப்பில் பெருகி அதன் அதிகார உச்சியைஅடைந்தது. ஆனால் அவர் 1581-ல் சங்கோஷ் நதிக்குத் தெற்கிலுள்ள பகுதியைத் தம்முடைய மருமகனான ரகு தேவுக்குப் பிரித்துக்கொடுக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார். இவ்வாறு கொச்இராச்சியம் கொச் பீஹார் என்றும் முஸ்லிம்களால் கொச் ஹாஜோ என்றும் அழைக்கப் பட்ட இரண்டு போட்டிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. அவர்களுடைய போர்களில் ஆஹோம்களும், முஸ்லிம்களும் தலையிட்டனர். 1639-ல் மேற்கு, கிழக்கு நாடுகள் முறையே முஸ்லிம்கள், ஆஹோம்களின் மேலாண்மையின்கீழ் வந்து சேர்ந்தன.

சுமார் கி.பி. 1215-ல் அஸ்ஸாமலில் தோன்றிய ஷான் மலே யினத்தின் ஒரு பிரிவினரான ஆஹோம்கள் படிப்படியாகத் தங்கள் நிலையை ஒரு நிலைப்படுத்தினர் ; ஆறு நூற்றாண்டுகள் நிலைபெற்ற ஒரு வலிமையான 'முடியாட்சியை நிறுவினர்; இப்பொழுது நாம் பேசிவரும் காலத்தில் அவர்கள் காமரூபத்தில் அரசர்கள், வங்காளத் துச் சுல்தான்கள் இவர்களுடைய கிழக்குப்பக்க விரிவைத் தடுத்து நிறுத்தினர். முஸ்லிம்கள் காமரூபத்தை அடிப்படுத்தியபிறகே, அவர்களுடைய தாக்குதலே ஆஹோம்களின் இராச்சியம் எதிர்த்துச் சமாளிக்க முடியாததாயிற்று. இதனால் அஸ்ஸாமை சுஹன்பா (Suhenpha) ஆண்டுவந்தபோது அதன்மீது வங்காளத்து அலாவுத் தீன் ஹுஸேன் ஷா படையெடுத்துச் சென்றார். முஸ்லிம் படைகளை எதிர்த்து அவர் தொடக்கத்தில் சில வெற்றிகளை எய்தியபோதிலும், இந்தப் படையெடுப்பு அவருக்குப் பேராபத்தில் முடிந்தது. முப் பதாண்டுகளுக்கு மேலாக ஆஹோம்-முஸ்லிம் சிக்கல் ஒன்றும் ஏற்படவில்லை. அதன் இரண்டாவது கட்டம் வங்காளத்து முகம் மதியக் குறுநில மன்னர்கள் சிலர் அஸ்ஸாமின்மீது படையெடுத்துச் சென்றபோது தோன்றியது. ஆனால் அவர்களுடைய முயற்சிகள் எல்லாம் 1533 செப்டம்பருக்குள் தோல்வியுற்றன. இவ்வாறு பதினாறும் நூற்றாண்டின் மூன்றாவது பத்தாண்டுகளில் அஸ்ஸாமை வெல்லுவதற்காக வங்காளத்து முஸ்லிம்கள் செய்த முயற்சி தோல்வி யில் முடிந்தது. இதற்குப்பிறகு அஸ்ஸாமின் வரலாறு எப்படியிருந்தது என்பது தக்க இடத்தில் கூறப்படும்.

நேபாளம்

கி.பி. 879 ஆம் ஆண்டு வாக்கில் நேபாளம் திபேத்தியப் பிடியிலிருந்து விலகி தனக்கே உரிய சுதந்தர வரலாற்றைப் பெற்றது. இதற்குப்பிறகு இரண்டு நூற்றாண்டுகள்வரை நேபாளத்தை ஆண்டு வந்த அரசர்களைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் பதினோராம் நூற்றாண்டிலிருந்து நேபாளம் தாக்கூரிகளின் கீழ் சிறப்புற்றது. இரண்டு நூற்றாண்டுகள் (1097-1326) வரை

Koviloor Acadamy

மிதிலேயின் கருநாடக அரசரான நான்யதேவனும் அவருடைய சந்ததியினரும் தங்களுடைய தலைநகரான சிம்ராவோனிலிருந்து கொண்டே நேபாளத்து உள்நாட்டு இளவரசர்களின்மீது அவ்வளவு உறுதியில்லாத ஒரு மேலாண்மையைக் கொண்டிருக்கும் உரிமை தங்களுக்குண்டு என்று கூறிவந்தனர். கி.பி. 1324-ல் நான்ய தேவனின் வழித்தோன்றலான திர்ஹுத்தின் ஹரிசிம்ஹா நேபாளத்தின் மீது படையெடுத்தார். அப்போது நேபாளத்தை ஆண்டுவந்த ஜயருத்திரமல்லன் அவருக்கு அடிபணிந்தார். பட்காவோனில் தம் இருப்பிடத்தை வைத்துக் கொண்டு ஹரிசிம்ஹா படிப்படியாக அந்தச் சமவெளி முழுவதிலும் தம்முடைய அதிகாரத்தைப் பரப்பினார். அவருடைய இராச்சியம் பதினான்காம் நூற்றாண்டில் சீனாவுடன் அரசியல் உறவு கொண்டது. ஆனால், அதே சமயத்தில் ஹரிசிம் ஹாவும் அவருடைய வழித்தோன்றல்களும் 'தங்களுடைய அரசாண்மையை ஒப்புக்கொண்ட உள்நாட்டுக் குறுநில மன்னர்கள் இரண்டு மற்றத் தலைநகரங்களான படன், காத்மண்டு ஆகியவற்றை உரிமையாகப் பெற்றிருப்பதைப் பற்றிக் கவலைப்படாதிருந்தனர்.' 1376-ல் மல்ல அரசரான ஜயருத்திரனின் (1320-26) மருமகனின் மகனும், ஜயருத்திரனின் மகளான நாயக தேவியை மணம் புரிந்துகொண்ட ஹரிசிம்ஹா என்ற கருநாடக அரசரின் மரபைச் சேர்ந்த இளவரசரான ஜகத்சிம்ஹாவின் மருமகனுமான ஜயஸ்திதி மல்லன் (Jaya-Sthiti malla) மல்லர்களின் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டு செயல் முறையில் நேபாளம் முழுவதிலும் தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்டினார். அதன் பிறகு நேபாளம் அவருடைய சந்ததியினரால் 'ஒழுங்கான தொடர்ச்சியாக' ஆளப்பட்டு வந்தது. அவருக்குத் தர்ம மல்லன், ஜயோதிர் மல்லன், கீர்த்தி மல்லன் என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். கி.பி. 1418ஆம் ஆண்டளவில் ஹரிசிம்ஹாவின் வழித் தோன்றல்கள் நேபாளத்தின் மீதிருந்த தங்கள் அதிகாரத்தை இழந்தனர்; ஜயோதிர் மல்லன் பேரரச அதிகாரத்தைச் செய்ய முற்பட்டார். சுமார் கி.பி. 1426-ல் ஜயோதிர் மல்லனை அடுத்து அவருடைய மூத்த மகன் இயக்க மல்லன் பட்டத்துக்கு வந்து, ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் நாட்டை ஆண்டார். நேபாளத்து மல்லர் அரசர்களில் அவரே மிகப் பெரிய அரசர். ஆனால் கி. பி. 1474க்கும் 1476க்கும் இடையில் அவர் இறக்கு முன்பு தம்முடைய புதல்வர்களுக்கும் புதல்விகளுக்கும் நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்ட பெருந்தவற்றைச் செய்துவிட்டார். இதனால் போட்டிப் பிரதேசங்களான காத்மண்டுவும், பட்காவோனும் எழுச்சியுறத் தொடங்கின. அவர்களுக்கிடையே ஏற்பட்ட போர்களும் இறுதியில் கி.பி. 1768-ல் நேபாளத்தைக் கூர்க்காக்கள் கைப்பற்றியதில் போய் முடிந்தது.

Koviloor Acadamy

6. இந்தியாவில் துருக்கிய–ஆப்கானியரின் அரசு, அவர்கள் ஆட்சிக்காலத்தில் நாட்டில் நிலவிய ஒழுங்குக் கட்டுப்பாடு பொருளாதார நிலைமை.

1. துருக்கிய—ஆப்கானியரின் அரசாங்கம்

அ. மத்திய அரசாங்கம்

இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி கடவுள் சார்புடையதாய் இருந்தது. கொள்கையளவில் அப்படிப்பட்ட ஆட்சி நிலைபெற்றிருப்பதற்கு மதம் துணைபுரிந்தது. சீசரும் போப்பும் (Pope) ஒன்றாய் உருவெடுத்தவரைப் போலவே, சுல்தான் கருதி மதிக்கப்பட்டார். உண்மையில், கொள்கையளவில் மத சம்பந்தமான செய்திகளில் திருக்குரானின் தெய்வீகக் கட்டளைக்குட்பட்டே அவருடைய அதிகாரம் இருந்தது. அலாவுத்தீனைத் தவிர மற்ற எந்தச் சுல்தானும் மதத்தையும் அரசியலையும் தனித்தனியே பிரித்து வைத்திருக்க முடியவில்லை. ஆனால், செயல் முறையில் இந்தியாவின் முஸ்லிம் சுல்தான் ஒரு முழுச் சுயேச்சாதிகாரியாகவே இருந்தார், அவருடைய அதிகாரத்திற்கு எவ்விதமான தடையும்ஏற்படவில்லை. அவர் சொன்னதெல்லாம் சட்டமாகவே இருந்தது. இஸ்லாமியரின் அரசாட்சிக்கொள்கை குடியாட்சி முறையோடு ஒற்றுமையுடையதாயும் அரசியல் சட்ட சபைகளுடைய முடிவுகளுக்கு ஏற்ப நடைபெறுவதாயும் காணப்பட்டாலும், சுல்தான்கள் சில சமயங்களில் மட்டும் பாக்தாதிலும், எகிப்திலுமுள்ள காலிபாக்களுக்கு அடங்கியிருப்பதாகக் காட்டும் சடங்குகளைச் செய்தனர். ஆனால் தங்கள் ஆட்சி வன்மை காலிபாக்களினாலேயே நிலைபெற்றுள்ளது என்றோ, பொது மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்றோ அவர்கள் நினைக்கவில்லை. உண்மையில் எப்படிப் பார்த்தாலும் இந்தியாவில் சுல்தானின் ஆட்சி முழுச் சுதந்திரத்துடன் சுல்தானுடைய விருப்பப்படியே அமைந்திருந்தது. ஆட்சியின் எல்லாத் துறையிலும் சுல்தானே தலைவராக வீற்றிருந்தார். சுல்தானின் அதி

Koviloor Academy

காரத்துக்கு உண்மையான அடிப்படையாயிருந்தது படைபலமே. இதை மக்கள் புரிந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டனர். சிந்தனை வன்மை இல்லாத பொது மக்கள் மட்டுமன்றிப் போர்வீரர்களும் கவிஞர்களும் (உதாரணம் அமீர் குஸ்ராவ் - Amir Khusrav) அக்காலத்து உலேமாக்களுங் கூட அடங்கிப் பணிந்தனர். நிர்வாகத்தின் உயர்தலைவரான சுல்தான், நிர்வாகத்தைச் சரிவரக் கவனித்துக் கொள்ளும் அதிகாரிகளையும், அமைச்சர்களையும் தம் விருப்பப்படியே நியமித்து, தம் விருப்பப்படியே நிர்வாகம் செய்யும்படி ஏற்பாடுகளைச் செய்தார். நாட்டின் ஆட்சி முக்கியமாகப் படைபலத்தையே அடிப்படையாகக்கொண்டிருந்தமையின் படைகளின் உயர் தலைவராக சுல்தானே இருந்தார். சுல்தானே எல்லாச் சட்டங்களையும் இயற்றுபவராயும், எல்லா முறையிடுகளுக்கும் முடிவான தீர்ப்பு வழங்குபவராயும் இருந்தார்.

அக்காலச் சூழ் நிலைகளின் விளைவாக இந்தியாவில் முஸ்லிம் சுல்தான்களின் ஆட்சி தன்னுரிமை ஆட்சியாகவே இருக்கும் நிலைமை ஏற்பட்டது. அவர்கள் இந்து நாடுகளின் பகைமையிலிருந்தும் போர் தொடுத்துக்கொண்டிருக்கும் இந்து சாதியினரிடமிருந்தும் மங்கோலிய படையெடுப்பாளரிடமிருந்தும் வந்துகொண்டிருந்த எதிர்ப்புகளைச் சமாளித்துத் தங்களைக் காத்துக்கொள்வதற்கு எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டிய நிலைமை இருந்துவந்தது. இதற்குப் பலம் வாய்ந்த ஒரு மத்திய அரசு இன்றியமையாததாய் இருந்தது. நாளடைவில் அம்மத்திய அரசு முழுவல்லமை உடையதாய் மாறிவிட்டது. மேலும் முஸ்லிம்களில் ஆட்சிபுரியும் அரசருக்கு அறிவுரை வழங்குவோராக இருக்கும் பிரபுக்களின் பரம்பரை என்று ஒன்றும் இருக்கவில்லை. தங்களுக், கென தனி உரிமைகளும் செல்வாக்கும் படைத்திருப்பவராகவும் அரசனின் சர்வாதிகாரத்தால் அவை பறிபோகாமல் காத்துக்கொள்ளும் ஆர்வமுள்ளவராகவும் இருக்கவேண்டிய பரம்பரைப் பிரபுக்கள் அக்காலத்தில் இல்லை. சில சமயங்களில் மட்டும் சில பிரபுக்கள் அரசர்களிடம் செல்வாக் குடைவராயிருந்திருக்கின்றனர். அரசியலமைப்புச் சுதந்தரத்தைக் காப்பதில் ஆர்வம்படைத்த பொதுச் சட்டசபைகள் அக்காலத்தில் இல்லை. அரசனின் எதேச்சாதிகாரத்தை எதிர்க்கு மளவுக்கு வன்மை படைத்த மக்களின் அமைப்பு ஒன்றும் இல்லை. நாட்டில் பெரும் செல்வாக்கு படைத்திருந்த உலேமாக்கள் கூடச் சுல்தான்களை வெளிப்படையாக எதிர்க்கும் துணிவு பெற்றிருக்கவில்லை. நான்காம் ஹென்றியை (Henry IV) அரசாட்சியிலிருந்து ஓட்டிய ஹில்டி பிராண்டைப் (Hilde brand) போல விரும்பத்தகாத ஆட்சியாளரை அகற்றும் வல்லமையும் பெற்றிருக்கவில்லை. தில்லியில் சுல்தானாக அரசாட்சியை ஏற்கும் உரிமை பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தச் சட்டத்தினாலும் வரையறுக்கப்படவில்லை. அரசாட்சி உரிமையை நிர்ணயிக்க வேறு எந்த நிலைத்தகொள்கைப்பாடும் இல்லை.

Koviloor Acadamy

'பொதுவாக நோக்குமிடத்து, அடுத்த சுல்தானுக வரும் வாய்ப்பு இறந்துபோன சுல்தானின் குடும்பத்தில் இருப்பவர்களுக்கே ஏற்படுவது வழக்கமாக இருந்தது. பிறப்பினுல் கிடைக்கும் முதன்மை, நிர்வாகத்திறமை, இறந்த அரசனின் நியமனம் — இவையெல்லாம் அடுத்து வரும் சுல்தானுக்குரிய தகுதிகளாகச் சில சமயங்களில் கருதப்பட்டன. ஆனுல் முடிவாகத் தீர்மானம் செய்வது பிரபுக்களின் கையிலிருந்தது. அவர்கள் பொதுவாக நாட்டின் நன்மைகளைக்‧காட்டிலும் சொந்த நலன்களையே பெரிதும் கருதிச் சுல்தானைத் தேர்ந்தெடுப்பர்.'

முழுத் தன்னிச்சையாக ஆட்சி செய்யும் அதிகாரம் படைத்தவர் கூட அரசாட்சியின் எல்லாப் பொறுப்பையும் தனியொருவராகக் கவனித்துக் கொள்ள முடியாது. இதனுல் தில்லி சுல்தான்கள் தங்கள் ஆட்சி காலத்தின் தொடக்கத்திலிருந்தே தங்கள் அதிகாரங்களுக்குச் சிறிதும் எதிர்ப்புக் கூருதவராயும் அவரவர் கடமைகளைத் தங்கள் ஆணைப்படியே செய்து வருபவராயும் உள்ள கீழதிகாரிகளைப் படிப்படியே அதிகார முடையவர்களாக நியமித்து ஆட்சி இயந்திரம் ஒழுங்குற நடைபெறும்படி ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். சுல்தான், தங்கள் நண்பர்கள் அடங்கிய சபை ஒன்றையும், மஜ்லிஸ்-இ-கல்வாத் (Majlis-i-Khalwat) என்று அழைக்கப்பட்ட நம்பிக்கை வாய்ந்த அதிகாரிகளையும் கலந்து ஆலோசித்தனர். அவர்களுடைய அறிவுரைகளும் கருத்துக்களும், அரசாட்சியில் சில சமயம் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாயிருக்கும். ஆனுல், அவை சுல்தான்களை எவ்விதத்தும் கட்டுப்படுத்த முடியாது.

கான்கள், மாலிக்குகள், அமிர்கள் முதலிய எல்லாரையும் பாரிகாஸ் (Bar-i-Khas) என்ற நீதி மன்றத்திற்குச் சுல்தான் வரவழைத்தார். பாரிஆம் (Bar-i-Am) என்ற இடத்தில் தலைமை நீதி பதியாக அமர்ந்து கொண்டு, மக்களின் குறைகளையும் முறையீடுகளையும் கேட்டு விசாரணைகள் நடத்துவார். மத்திய அரசாங்கத்தில் மிக உயர்ந்த அதிகாரியாய் இருந்தவர் வஸிர் (Wazir) என்பவர். அவர் நாட்டின்பல துறைகளையுங் தம் அதிகாரத்திற்குட்படுத்தியிருந்தார். திவனிரிசாலத் (Diwan-i-Risalat) அல்லது மேல் முறை யீட்டுத் துறை, திவானி அர்ஸ் (Diwan-i-Arz) அல்லது படைத் துறை, திவானி-இன்ஷா (Diwan-i-Insha) அல்லது தபால் துறை, திவானி-பந்தகான் (Diwan-i-Banda-gan) அல்லது அடிமைத் துறை, திவானி கஸாயி மமாலிக் (Diwan-i-Quza-i-Mamalik) அல்லது நீதி, ஒற்று, தபால் துறை (Department of Justice intelligence & Post), திவானி அமீர் கோஹி (Diwan-i-Amir Kohi) அல்லது விவசாயத்துறை (முகம்மது பின் துக்ளக்கால் படைக்கப்பட்ட துறை), திவானி முஸ்தக்ராஜ் (Diwani-i-Mustakhraj) அல்லது கலக்டர்கள் (தண்டலாளர்) முகவர்கள் முதலியோரிடமிருந்து

Koviloor Acadamy

வந்து சேர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூலிக்கும் துறை (Department to look after and realise arrears from collectors or agents-அலாவுத்தீன் கில்ஜியால் படைக்கப்பட்ட துறை) திவானி கைராத் (Diwan-i-Khairat) அல்லது அறத்துறை (பிரோஸ் ஷாவின் ஆட்சியில்), திவானி இஸ்திகாக் (Diwan-i-Istihqaq) அல்லது ஓய்வூதியத்துறை, மேலும் நாணயத்துறை, அறநிலையப் பாதுகாப்பு நிறுவகங்கள், கார்கானுக்கள் (Karkhanas) முதலிய துறைகளை அவர் மேற்பார்வை செய்து கண்காணித்து வந்தார்.

வெவ்வேறு துறைகளின் பொறுப்பாளர்களாயிருந்த உயர் அதிகாரிகளேயன்றி, நாட்டின் செலவினங்களைக் கண்காணிக்கும் தணிக்கைத் துறைத் தலைவர் அல்லது முஸ்தாபி-இ-மமாலிக் (Mustaufi-i-Mamalik) என்பவர் போன்ற கிழதிகாரிகளும் இருந்தனர். முஷ்ரிப்-இ மமாலிக் (Mushrif-i-Mamalik) என்பவர் வரவினக் கணக்குகளுக்குப் பொறுப்பாளராயிருந்தனர். மஜூம்தார் (Majumdar) என்பவர் அரசாங்கம் கொடுத்த கடன்களைப்பற்றிய கணக்குகளை வைத்திருந்தார். அமீர்-கு-பெஹர் (Amir-i-Behr) படகுகளின் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும், காஸிம் (Kahzin) என்பவர் பொருளாளராகவும், பக்ஷி-இ-பௌஜ் (Bakhshi-i-Fauj) என்பவர் படைகளுக்கு ஊதியம் வழங்குபவராயும் இருந்தனர். இவர்களைப்போன்று வேறு பல கிழதிகாரிகளும் இருந்தனர். நாயப்-இ-வஸிரி மமாலிக் (Naib-i-Wazir-i Mamalik) அல்லது துணை வஸிர் என்பவருக்கு உயர்ந்த அந்தஸ்து கிடையாது. துக்ளக்கின் காலம்தான் முஸ்லிம் இந்தியாவில் வஸிர்களின் நற்காலமாகவிருந்தது. பிற்காலத் துக்ளக்குகளின் காலத்திலிருந்து வஸிர்களின் அதிகாரங்கள் மிகவும் பெரிதாயின. ஆனால், இவை சய்யித்துகளின் காலத்தில் தாழ்நிலையுற்றன. ஆப்கானியர்கள் காலத்தில், வஸிர் பதவி விளக்க மின்றி மறைந்திருந்தது.

பொதுவாக காஸி-உல்-கஸாத் (Quzi-ul-Qazat) அல்லது தலைமை நீதிபதி அவர்களால் நீதி வழங்கப்பட்டு வந்தது. அவருக்கு உதவியாகச் சட்டங்களுக்கு விளக்கம் தர முப்திகள் (Muftis) இருந்தன. சட்டங்கள்யாவும்குர்ரானின்கட்டளைகளின் சார்பாக அமைந்திருந்தன. ஆனால் அல்லாவுத்தீனும், முகம்மது பின் துக்ளக்கும் சட்டங்களைப். பற்றி அவ்வளவாகப் பொருட்படுத்தாது தம் அரசியல் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தனர். குற்றச்சட்டம் மிகக்கடுமையாக இருந்தது. குற்றவாளிகளுக்குச் சாதாரணமாக உறுப்புக்குறை அல்லது தூக்குத்தண்டனை கொடுக்கப்பட்டுவந்தது. குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதற்காகப் பலாத்காரமும் சித்ரவதையும் கையாளப்பட்டன. நீதி வழங்கும் முறை மிகவும் ஒழுங்காக இருந்தது என்று சொல்ல முடியாது. போதிய விசாரணைகள் இன்றியே வழக்குகள் தொடங்கப்பட்டன. பெரும்பாலான சமயங்களில் குறுகிய

Koviloor Acadamy

விசாரணையுடன் வழக்கு முடிவுற்றுவிடும். மார்க்கோ போலோ (Marko polo) எழுதிவைத்திருப்பதினின்று நாம் அறிந்து கொள்வது போல் அக்காலத்தின் கடன் சட்டம் மிகக் கடுமையாகவே இருந்தது. கடன் கொடுத்தவர்கள் தங்கள் கடன்காரர்களிடமிருந்து கடன் தொகையை வசூல் செய்வதற்கு அடிக்கடி அரசனின் உதவியை நாடவேண்டியிருந்தது. 'கொத்தவால்' (Kotwal) என்பவர் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுபவர். மற்றொரு முனிசிபல் காவலதிகாரி (போலிசு அதிகாரி) யாய் இருந்தவர் முஹ்தஸிப் (Muhtasib) என்பவர். பொது மக்களின் நடக்கைகளில் மிக்க கண்காணிப்புச் செய்வதுடன் சந்தைகளைக் கண்காணிப்பதும், எடைகளையும் அளவுகளையும் ஒழுங்குபடுத்துவதும் அவருடைய முக்கிய வேலைகளாக இருந்தன. மக்களின் நடக்கைகளைப்பற்றியறியச் சுல்தான் தாமே பல ஒற்றர்களை வைத்து உளவறியச் செய்து, அவ்வப்போது நாட்டுச் செய்திகளை அறிந்து வந்தார். பழைய கோட்டைகளும், அரண்மனைகளும், சிறைச்சாலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. 'சிறை விதிகள் கடுமையில்லாதனவாயிருந்தன; அதிகாரிகளிடம் கையூட்டு முதலிய ஊழல்கள் இருந்தன.'

இந்தியாவில் துருக்கிய சுல்தான்கள் அரசாங்கக் கருவூலத்தைப் பற்றி மேற்கொண்டிருந்த கொள்கையானது முஸ்லிம் ஜூரிகளில் 'ஹனபி' என்ற பிரிவினர் கொண்டிருந்த பொருளாதாரக் கொள்கையின் மாதிரியாக அமைந்திருந்தது. அவர்கள் அக்கொள்கை தங்களால் அடிப்படுத்து வெல்லப்பட்ட கஜ்ஜுவித்துக்களிடமிருந்து பெற்றனர். தில்லி சுல்தான்களுக்குப் பொருள் வருவாயின் முக்கிய மூலமாய் இருந்தவை இந்து குறுநில மன்னர்களிடமிருந்தும் ஜமீன்தார்களிடமிருந்தும் கிடைக்கும் காராஜ் (Kharaj) அல்லது நிலவரி, அரசர்க்கு உரிமையான நிலங்களிலிருந்து கிடைக்கும் கால்சா (Khalsa) அல்லது நில வருவாய், முக்தா (Muqta) எனப்படும் அதிகாரிகளுக்குப் (பெரும்பாலும் படைத்துறையினர்) சில ஆண்டுகளுக்கோ, ஆயுள் முழுவதிற்குமோ கொடுக்கப்படும் நிலங்களிலிருந்தும், பிறவகையான நிலங்களிலிருந்தும் கிடைக்கும் வருவாய், போரினால் கிடைக்கும் வருவாயில் ஐந்தில் ஒரு பங்காகிய கம்ஸ் (Khams), மதவரி முதலியனவாகும். மேலும் அப்வாப்ஸ் (Abwabs) எனப்படும் பிறவரிகள் அதாவது வீட்டுவரி, மேய்ச்சல்வரி, தண்ணீர் வரி முதலியன மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டன. வாணிகச் சுங்கத்திலிருந்து சிறிது வருமானம் கிடைத்தது. ஜெசியா (Jizya) எனப்படும் வரி முதலில் முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து 'அவர்களுடைய உயிரையும் பொருளையுங் காப்பாற்றுவதற்காகவும், படைத்துறைப் பணியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதற்காகவும் ஈடாகத் தரப்படவேண்டிய' வரியாக வசூலிக்கப்பட்டு வந்தது.

Koviloor Acadamy

ஆனால், நாளடைவில் அதற்கு மத சம்பந்தமான தொடர்பு கற்பிக்கப் பட்டு விட்டது. இந்தியாவில் இந்துக்கள் முஸ்லிம் அரசர்களுக்கு அதிகமாகத் தரவேண்டிய வரி அது ஒன்றே. பணமாகவும் தானியங் களாகவும் வரிகள் கொடுக்கப்பட்டன. கில்ஜிகளும், துக்ளக்குகளும் செய்த பொருள் வருவாய்ச் சீர்திருத்தங்களைப் பற்றிய முக்கியமான கருத்துக்களை முன்பே பார்த்திருக்கிறோம். ஆனால் பொருள் வருவாய்க் கொள்கையானது அரசாங்கக் கருவூலத்திற்குப் போதுமான வரு வாயைத் தருவதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆட்சி செய்வோ ரின் ஆண்மையைப் பொறுத்திருந்து மாறுபட்டுக் கொண்டிருந்தது. இல்டுட்மிஷ் (Iltutmish) என்பவர் பொருள் வருவாய்த் துறையாட்சி யில் எந்தவிதமான குறிப்பிடத் தக்க மாறுதல்களும் செய்யவில்லை. பால்பன் (Balban) என்பவர் அத்துறையில் ஒழுங்கு முறை நிலவுவதற்காகச் சில முயற்சிகள் செய்தார். ஆனால் அலாவுத்தீனின் பொருள்வருவாய்க் கொள்கையோ மிக விரிவானதாயும், எல்லாவகை யான நிலங்களையும் பாதிப்பதாகவும் இருந்தது. முகமது பின் துக்ளக் கின் கடுமையான பொருத்த மில்லாத வருவாய்க் கொள்கை நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் உயர்த்தியது. தீர்வையின் விகித மும் அரசர்க்கு அரசர் மாறுபட்டுக் கொண்டிருந்தது. அலாவுத்தீன் நிலத்தின் மொத்த விளைவின் சரிபாதியை வரியாகக் கொடுத்துவிட வேண்டு மென்று கட்டளை யிட்டார். அவர் காலத்தில் நிலவரி மிகவும் அதிகமாகவே இருந்து வந்தது. பொதுவாகக் கியாஸ்-உத்தீன் துக்ளக் தாராளமனப்பான்மை படைத்தவராயினும் அலாவுத்தீனால் நிர்ணயிக் கப்பட்ட வரிவிகிதத்தைக் குறைத்ததாகத் தெரியவில்லை. முகம்மது பின் துக்ளக்கின் காலத்தில் வரிவிகிதம் இன்னும் உயர்ந்திருந்ததாகத் தெரியா விட்டாலும், குறைந்திருந்ததாகச் சொல்ல முடியாது. பண்ணை முறை பரவியிருந்தது. பிரோஸ் ஷாவின் காலத்தில் அம்முறை மிகுதி யாக விரிவு படுத்தப்பட்டதால் நாட்டின் சிறப்புப் பெயர் குன்றுதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

சுல்தான்களின் நிலப்படையில் அரசரின் மெய்க்காவலர் படை யும் தலைநகர்ப் படைகளும் இருந்தன. மாகாணப் பிரதிநிதிகள் முக்தாக்கள், இந்துக்களின் நிலையில்லாப் படைகள் முதலியோரிட மிருந்து வரும் தீர்வைகளின் மூலம் தலைநகர்ப்படை மேலும் வலிவுள்ள தாக ஆக்கப்பட்டு வந்தது. துருக்கியர், காதையர்கள் (Khataians), பாரசிகர்கள், இந்தியர்கள் முதலிய பலவேறு நாட்டினரும் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். படைப் பிரிவுகளில் முக்கியமானது காலாட்படையே. அதில் எண்ணில்லாத விற்பயிற்சியுடையோர் இருந்தனர். குதிரைப்படையும், யானைகளும் கூட இருந்தன. படைக்கலப் பயிற்சிப் படை என்று ஒன்றும் முன்பு இருக்கவில்லை. பிற்காலத்தேதான் அப்படைப் பிரிவு சிறந்த இடத்தைப் பெற்றது. ஆனால் இல்டுட் மிஷின் ஆட்சிக் காலத்திலிருந்தே ராக்கெட்டுகள், நாப்தாக் குண்டுகள்,

Koviloor Acadamy

வெடி வைப்பதன் மூலம் குண்டுகளை வெளிப்படுத்தும் எந்திரம் முதலியவை மிகச் சிறப்பாகக் கையாளப்படாவிட்டாலும், உபயோகத்தில் இருந்து வந்தன. மேலும், தானே இயங்குவதும், பல வகையான மட்ட எந்திரங்களுடையதுமான ஒருவகைக் குண்டு எறி எந்திரங்கள் (பீரங்கிகள்) மத்தியகால இந்தியாவில் கோட்டைகளை முற்றுகையிடும்போது பயன்படுத்தப்பட்டன. மஞ்சனிக்குகள், மங்கோனல், மங்கோன் (Manjaniqs, mangonels, mangons,) போன்ற பெயர்களால் அவ் எந்திரங்கள் அழைக்கப்பட்டன. அவை தீக் குண்டுகள், தீயம்புகள், பெருங்கற்கள், பாறைத்துண்டுகள், மண் அல்லது இரும்பினலான குண்டுகள், இரசக் கற்பூரம் அடங்கிய புட்டிகள், தேள்கள், பாம்புகள் முதலியவற்றைப் பகைவர்மீது எறிவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

தில்லியில் துருக்கிய சுல்தான்கள் அரசவை ஒன்றை வைத்துக் கொண்டிருந்தனர். அது முகலாயப் பேரரசர்கள் காலத்திலிருந்தது போல் சிறப்பு மிக்கதாய் இருக்கவில்லை. எனினும் அதன் மூலம் சுல்தான்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். அரசர்க்குரிய அரண்மனையில் அந்தப்புரம் இருந்தது. அதில் சுல்தான்களின் மனைவிமார்களும், வைப்பாட்டிகளும், அரசிளங்குமரிகளும் நிறைந்திருந்தனர். இப்படிப்பட்ட அரசவைகளில் குறுகிய அளவில் கலைப் பண்பாடு போற்றப்பட்டு வந்தது. எனினும், அந்த சுவைகளை வைத்திருப்பதனல் நாட்டின் பொருளாதார நிலை மிகவும் வளங்குன்றும் நிலை ஏற்பட்டிருக்கவேண்டும்.

ஆ. மாகாண ஆட்சி முறை

சுல்தானின் நேரடியான அதிகாரம் அவருடைய கோட்டைகளையும் அவற்றைச் சுற்றியுள்ள சில ஊர்களையும் உள்ளடக்கிய எல்லை வரையிலுமே பரவியிருந்தது. தூரத்திலுள்ள மாகாணங்கள் நாயிப் சுல்தான்கள் என்றழைக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகளின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தன. அம்மாகாணங்களின் எண்ணிக்கை இருபதிலிருந்து இருபத்தைந்து வரை இருந்தது. மாகாணங்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றிற்கு முக்தாக்கள் (Muqtas) அல்லது ஆமில்கள் (Amils) என்போர் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர், அவை இன்னும் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஷிக்தார் Shiqdar) என்போரின் மேற்பார்வையில் இருந்தன. அச்சிறுபகுதிகள் ஒரு சில கல் எல்லைவரையிலுமே பரந்திருந்தன. ஒவ்வொரு மாகாணமும் 'பேரரசின் மாதிரி' யாகவே அமைந்திருந்தது. மத்திய அரசுக்கு மட்டும் கட்டுப்பட்டவராய் நாயிப் சுல்தான் தமது மாகாணத்தில் நிர்வாகம், நீதி, படைத்துறைச் செயல்களைத் தன்னிச்சைப் படியே செய்துவந்தார். அவர் மத்திய அரசுக்குக் கட்டுப்படுவது

Koviloor Academy

அவ்வப்போது சுல்தானுயிருப்பவரின் ஆற்றலேயோ, ஆற்றல் இன்மையையோ பொறுத்து மாறுபடும். முகம்மதுபின் துக்ளக் மாகாணங்களைக் கட்டுப்படுத்தத் தவறியதால்தான், அவருடைய அரசப் பிரதிநிதிகள் சுதந்தர ஆட்சியாளர்களாகத் தங்களை அறிவித்துக் கொள்ள நேர்ந்தது. மாகாணவருவாயிலிருந்து அரசப் பிரதிநிதிக்குப் பணம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆட்சிச் செலவுக்குச் செலவானது போக மீதியுள்ள பணமெல்லாம் மத்திய அரசுக் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டும். அரசப் பிரதிநிதி தமக்கென ஒரு தனிப் படையை வைத்துக் கொண்டிருந்தனர். வேண்டும்போது சுல்தானுக்குப் படையுதவி செய்யவும் கடமைப்பட்டிருந்தார். எனவே அவருடை நிலைமை மத்தியகால ஐரோப்பாவில் இருந்த சிற்றரசர்களின் நிலைமையை ஒத்திருந்தது எனலாம். பிரபுக்களின் எடுப்பு, சிக்கல்கள், அதிகாரிகளிடையே ஒற்றுமையின்மை முதலியன பொதுவாக மாகாண அரசாங்க ஆட்சி ஒழுங்காக நடைபெறுவதற்கு முட்டுக்கட்டைகளாக இருந்துவந்தன. அதன் விளைவாக மாகாணத்தில் அமைதியும் ஒழுங்கும் சிறப்பாக நிலவவில்லை. அரசப் பிரதிநிதிகளின் ஆட்சியிலுள்ள மாகாணங்களைத் தவிர, பெரு மாநிலங்கள் இந்துக்களின் ஆட்சிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவர்கள் தில்லிக்குக் கப்பமும் நன்கொடைகளும் அனுப்பி வந்து கொண்டிருந்தமையின் அவர்கள் ஆட்சியில் மற்றவர்கள் தலையிட முடியாது. நாட்டில் புதிய அரசு தோன்றினும் கிராமத்து மக்கள் அதனுல் பாதிக்கப்படவே இல்லை.

இ. முஸ்லீம் பிரபுக்கள்

பிரபுக்கள் நாட்டில் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாய் விளங்கினர். தளபதிகளாகவும், ஆட்சியாளர்களாகவும், உயர் பதவிகள் வகித்தனர். சில சமயங்களில் அரசனைத் தேர்ந்தெடுத்து ஆளவைக்கும் வாய்ப்பும் அவர்களுக்கு இருந்தது. ஆனுல், பிரான்ஸிலோ, இங்கிலாந்திலோ இருந்த பிரபுக்களைப் போல இப்பிரபுக்கள் பரம்பரையாக வந்தவர்களோ, ஓரினத்தைச் சேர்ந்தவர்களோ, ஒழுங்கான ஓர் அமைப்பைக் கொண்டிருந்தவர்களோ அல்லர். இப்பிரபுக்களில் துருக்கியரே பெரும்பான்மையினராக இருந்தபோதிலும், அராபியர்களும், ஆப்கானியர்களும், அபிசீனியர்களும், எகிப்தியர்களும், ஜாவாமக்களும், இந்தியர்களும்கூட பிரபுக்களாக இருந்தனர். இவ்வாறு பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்களாயிருந்த அப்பிரபுக்கள் ஒரு பொதுக்குறிக்கோளோ, கொள்கையோ பெற்றிருக்க முடியாது. ஆனுல் அரசனின் சர்வாதிகார்ரத்திற்குப் போதிய எதிர்ப்பும் எழுப்பியிருக்க முடியாது. இயல்பாகவே பிரபுக்கள் தங்களுக்குள் உயர் நிலைக்காகப் பூசலிடுவதிலும் நாட்டின் நலனில் அக்கறை கொள்

Koviloor Academy

ளாது தந்நலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதிலுமே ஈடு பட்டிருந்தனர். 'பிரிந்து செல்லும் அணுக்கள் ஒன்று கூடியிருப்ப தைப் போலவே அப்பிரபுக்கள் இருந்தனர்' என்று இக்கால எழுத் தாளர் ஒருவர் கூறுகிறார். பிரபுக்களினால் நாட்டுக்குச் சில நன்மை கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அப்பிரபுக்கள் மேற்கொண்ட ஜமீன் தாரி முறை நாட்டின் சிதைவுக்கே காரணமாய் இருந்தது.

மேலே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள துருக்கிய ஆப்கானிய அரசாட்சி முறையில் பரம்பரையாகவரும் வழக்கங்களின் வளமையோ, உறுதிப்பாடோ இருக்கவில்லை, ஓர் அரசாங்கத்தின் நீடித்த ஆட்சிக்கும், பாதுகாப்புக்கும் இவையிரண்டும் இன்றியமையா தவை. அவ்வாட்சியில் காணப்பட்ட படையமைப்பு முறையும் ஜமீன் தாரி முறையும் அக்காலச் சூழ்நிலைகளில் தவிர்க்க முடியாதவைகளாய் இருந்தபோதிலும், நாட்டின் பழைய ஆட்சி மரபுக்கு மாறானவையாய் இருந்தன. மத்திய கால இராசபுத்திர நாடுகளில்தான் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. அம்முறைகளின் வளர்ச்சி மக்களின் நல்லெண் ணத்தையோ ஒத்துழைப்பையோ பெறவில்லை. உண்மையில் ஆட்சி செய்வார்க்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்படவில்லை. நாடு படை பலத்தால் வளர்ந்தது. நாட்டையாண்டோரும் பெரும் பாலும் தங்கள் அதிகாரத்தைப் பலப்படுத்தும் முறைகளையே மேற் கொண்டுவந்தனர். பிரபுக்களும் தமக்குள் நிலையான எக்கொள்கையும் இன்றி சுயநலத்தேவைகளைப் பெறுவதில் ஈடுபட்டனர். எனவே சுல்தான்கள் போதிய பலத்துடன் அதிகாரம் செய்ய முடியாதபோது நாட்டில் பிளவுகள் ஏற்பட்டன. பிரபுக்களும் பேராசை மிக்கவர் களாய்க் கலகம் விளைவிக்கத் தொடங்கினர்.

2. பொருளாதாரச் சமுதாய நிலைகள்

அ. பொருளாதாரம்

துருக்கிய ஆப்கானிய ஆட்சியின் மூன்று நூற்றாண்டுக் காலத்தில் மிகுந்த எண்ணிக்கையுடைய மக்கள் வாழ்ந்த இந்தியாவின் பொருளா தார நிலையைத் தெளிவாக வரையறுத்துக் கூறுவது எளிதன்று. எனி னும் அண்மைக் காலத்திய வரலாற்று நிகழ்ச்சிகளின் ஏடுகளிலிருந் தும், அமீர் குஸ்ராவின் நூல்களிலிருந்தும் நாட்டு மக்களிடையே வழங்கும் கதைகளிலிருந்தும், கவிதை பாட்டுக்கள் முதலியவற்றி லிருந்தும், இந்து முஸ்லீம் மதங்களில் தெய்வ சக்தி படைத்தவர்கள் எழுதிய நூல்களிலிருந்தும், செயல் முறைக் கலைகள், சட்டம், நீதி முதலியவை பற்றி எழுதப்பட்ட நூல்களிலிருந்தும், வெளிநாட்டுப் பய ணிகள் விடுத்துச் சென்ற குறிப்புக்களிலிருந்தும், அதிகாரிகள் தனி மனிதர்கள் எழுதியுள்ள கடிதங்களிலிருந்தும், அக்காலப் பொருளா

Koviloor Academy

தார நிலையை விளக்கும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நாடு அக்காலத்தில் அளவிலா பொருட் செல்வ வளத்தால் புகழ் பெற்றிருந்தது. கஜனி முகம்மது எப்படிப் பெரும் பொருளைக் கொள்ளையடித்துச் சென்றான் என்பதை பெரிஷ்டா எழுதிவைத்துள்ளதிலிருந்து அறிந்துகொள்கிறோம். முகம்மது பின் துக்ளக்கு முன் யோசனையின்றிச் செய்த பயனில்லாச் செயல்களுக்குப் பிறகும் பிற்காலத்திலும் அடிக்கடி ஒழுங்குக் குலைவும் அமைதியின்மையும் ஏற்பட்டிருந்தும் தில்லியில் தைமூர் பெருங்கொள்ளையடித்தது நமக்கு வியப்பாகவேயிருக்கிறது. ஆனால், மக்களின் நிலையை உயர்த்துவதற்கென்று நாடு எவ்விதப் பொருளாதாரக் கொள்கையையும் பின்பற்றவில்லை. கில்ஜிகளும் துக்ளக்குகளும் செய்த சில முதல் முயற்சிகளும் நீடித்த பலன் விளைக்காமற்போய்விட்டன. 'மொத்தத்தில் விளைச்சல் முறையில் எந்தப் பெரிய முன்னேற்றமும் பொருளாதாரச் செல்வத்தைப் பொருந்திய முறையில் பகிர்வு செய்தலும், பல்வேறு வகையான சமுதாய வகுப்புகளின் பொருளாதார நிலையைச் சிறந்த முறையில் சரிப்படுத்துவதும் நாட்டின் ஆட்சிக் கொள்கையில் காணப்படவில்லை' என்று இக்காலத்து ஒரு முஸ்லிம் ஆசிரியர் கூறியிருக்கிறார்.

ஆட்சியின் ஆதரவும், வழிகாட்டலும் இல்லாதுபோயினும், நகரத்திலும் கிராமத்திலும் இருந்த மக்களின் தொழிற்சாலைகளும், தொழிற்களங்களும் தொழிற்சாலை அமைப்பினைத் தலைமுறை தலைமுறையாக நீடித்திருக்கும்படி செய்தன. உள்ளூர் வாணிகமும், வெளியூர் வாணிகமும் அரசியல் புரட்சிகளால் அழிந்துபோகாமல் தொழில் வளர்ச்சிக்குத் துணைபுரிந்துவந்தன. தில்லி சுல்தான்களும், பிற்காலத்தில் சிறிய மாகாண ஆட்சியாளர்களும் தங்கள் சொந்த அரசியல் அல்லது ஆட்சித் தேவைகளுக்கேற்றவாறே கைத்தொழில்களுக்கும், வாணிகத்துக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளித்துவந்தனர். சில சமயங்களில் அரசு தொழிற்சாலைகள் அல்லது தில்லியிலிருந்த உற்பத்தி சாலைகளில் நாலாயிரம் பட்டு நெசவாளர்களையும் வேறு பொருள்கள் உற்பத்தி செய்பவர்களையும் அரசுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமர்த்தியிருந்தனர். இக்காலத்தில் இருப்பதுபோல அக்காலத்தில் தொழிற்சாலைகளோ, பெரிய அளவில் அமைந்த தொழில் நிறுவனங்களோ இல்லை. பெரும்பாலும் உற்பத்தியாளர்கள் வாணிகர்களோடு நேரடித் தொடர்புகொண்டிருந்தனர். சில சமயங்களில் சந்தைகளில் தங்கள் பொருள்களை விற்றுவந்தனர். மற்றுஞ் சில சமயங்களில் அவ்வுற்பத்தியாளர்கள் பெருவணிகர்களின் மேற்பார்வையில் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்துதந்தனர். உழவே பெரும்பாலான மக்களின் தொழிலாக அமைந்திருந்த போதிலும், நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் சில முக்கியமான தொழிற்சாலைகள் இருந்தன. துணி உற்பத்தித் தொழிற்சாலை, பஞ்சி

Koviloor Academy

னுல் துணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, கம்பளித்துணி, பட்டுத் துணி முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, சாயத் தொழிற் சாலை, காலிகோ வர்ணத் தொழிற்சாலை, சர்க்கரைத் தொழிற்சாலை, உலோகம் கல், செங்கல், காகிதத் தொழிற்சாலை முதலியன அவற்றில் குறிப்பிடத்தக்கவை. கிண்ணம் செய்தல், செருப்புச் செய்தல், ஆயுதஞ் செய்தல், வில், அம்புகள் செய்தல், வாசனைப் பொருள்கள் தயாரித்தல், சாராயம் காய்ச்சுதல் முதலியன சிறு தொழில்களாக இருந்தன. வங்காளமும் குஜராத்தும் சிறப்பாகத் துணிகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் புகழ்பெற்றிருந்தன. அமீர் குஸ்ராவ் வங்காளப் பொருள்களை மிகவும் சிறப்பித்துக் கூறியிருக்கிருர். 1406ஆம் ஆண்டில் வங்காளத்தைச் சுற்றிப்பார்த்த மௌஹன் (Mauhan) போன்ற புறநாட்டுப் பயணிகள், 16ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் (1503-1508) இந்தியாவிற்கு வந்த பர்த்தேமா (Barthema), 1518-ல் வந்த பர்போசா (Barbosa) முதலியவர் களும் வங்கத்துப்பொருள்களைப் போற்றிப் புகழ்ந்துரைத்திருக் கின்றனர்.

'ஆட்சியின் தனிச்சிறப்பு உரிமையாலோ அல்லது கடுமையான ஆட்சிமுறைக் கட்டுப்பாட்டினுலோ, தடைகள் நேர்ந்தபொழுதன்றி மற்றக் காலங்களில்' இந்தியாவின் உள்நாட்டு வாணிகம் மிகப்பெரிய அளவில்தான் நடைபெற்றுவந்தது. வெளிநாடுகளில் இந்தியா கொண்டிருந்த வாணிகத் தொடர்புகளும் குறிப்பிடத்தக்கவை. இந் தியக்கடல் வழியாக ஐரோப்பாவின் தொலைவிலுள்ள நாடுகளுடனும், மலாய்த் தீவுகளுடனும், பசிபிக் கடலின் கரையிலுள்ள பிறநாடு களுடனும் வாணிகத் தொடர்புகொண்டிருந்தது. தரை வழியாக மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான், பாரசீகம், திபேத்து, பூடான், முதலிய நாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தது. 'மசாலிக்-உல்-அப்சார்' என்ற நூலின் ஆசிரியர் பின்வருமாறு எழுதியிருக்கிருர்: 'பிறநாட்டு வணிகர்கள் எல்லாம் இந்தியாவுக்குச் சுத்தத் தங்கம் கொண்டுவருவதை எப்போதும் நிறுத்தியதில்லை. தங்கத்திற்குப் பதி லாக அவர்கள் இந்தியாவிலிருந்து மூலிகைகளும் பிசின்களும் எடுத் துச் சென்றனர்.' செல்வத்திற் சிறந்த வகுப்பினருக்காக ஆடம் பரப் பொருள்களும், குதிரைகளும், கோவேறு கழுதைகளும் முக்கிய மான ஏற்றுமதிப் பொருள்களாக விருந்தன. பல வகையான விவ சாயப் பொருள்களும், பலவகைத் துணிகளும், ஏற்றுமதிப் பொருள் களில் முதன்மையாயிருந்தன. அவற்றிற்கு அடுத்தபடியாக துத்த நாகம், அபினி, அவுரிக் கேக்குகள் முதலியவும் ஏற்றுமதி செய்யப் பட்டன. பாரசீக வளைகுடாவைச் சுற்றியுள்ள சில நாடுகள் உணவுக் காக இந்தியாவையே முழுதும் நம்பியிருந்தன. இந்தியாவின் ஏற்று மதி வாணிகத்திற்கு வங்காளத்திலும், குஜராத்திலுமுள்ள துறை முகங்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டன. 'வங்காளம்தான்

Koviloor Academy

உலகத்திலேயே பருத்தி, இஞ்சி, சர்க்கரை, தானியம், எல்லாவகையான இறைச்சிகள் இவற்றின் வளம்மிகுந்த நாடு' என்று பர்த்தேமா என்ற ஆசிரியர் கருதினர்.

எல்லாக்காலத்திலும் பொருள்களின் விலை ஒரேமாதிரியாய் இருக்கவில்லை. பஞ்சக்காலத்திலும் பற்றுக்குறை ஏற்பட்ட காலத்திலும் பொருள்களின் விலை மிக உயர்வாயும், அதிக விளைவு ஏற்பட்ட காலத்தில் மிகக் குறைவாகவும் இருந்தது. முகம்மது-பின் துக்ளக்கின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தினல் ஒரு சேர் தானியம் விலை 16 அல்லது 17 ஜிடால்களா (Jidals) யிருந்தது. அதனல் பலர் பட்டினியால் மடிந்தனர். பிரோஸ் ஷா இரண்டாம் முறையாகச் சிந்துவின்மீது படையெடுத்த பிறகு அங்குப் பற்றுக்குறை ஏற்பட்டது. அப்போது உணவுத்தானியத்தின் விலை 5 சேர் 8 முதல் 10 ஜிடால்களாகவும், பயிறுகளின் விலை மணங்குக்கு 4 அல்லது 5 தங்கா (Tanka) அல்லது சேர் ஒன்றுக்கு 6·4-லிருந்து 8 ஜிடால்களாகவும் உயர்ந்தது. இப்ராஹிம் லோடியின் ஆட்சியில் பொருள்களின் விலை மிகக் குறைவாக இருந்தது. அக்காலத்தில் ஒருவர் ஒரு புஹ்லூலி (Buhluli) அதாவது 1·6 ஜிடாலுக்குப் 10 மணங்கு தானியம், 5 சேர் எண்ணெய், 10 கஜம் காடாத்துணி வாங்க முடிந்தது. அலாவுத்தீன் ஆட்சிக்காலத்தில் விலை சாதாரணமாகவே இருந்தது. அவர் காலத்தில் ஒரு மணங்கு கோதுமை 7½ ஜிடால்கள், பார்லி 4 ஜிடால்கள், நெல், அல்லது அரிசி 5 ஜிடால்கள், பயிறுகள் 5 ஜிடால்கள், மத்தியதரைக் கடல்பயறுகள் (lentils) 3 ஜிடால்கள், வெள்ளைச் சர்க்கரை 100 ஜிடால்கள், மெல்லிய சர்க்கரை 60 ஜிடால்கள், இறைச்சி 10 ஜிடால்கள், நெய் 16 ஜிடால்கள் விலைக்குக் கிடைத்தன. டில்லி மஸ்லின் துணி ஒன்று 17 தங்காவிற்கும்[1] அலிகார் (Aligarh) மஸ்லின் 6 தங்காவிற்கும் கிடைத்தன. முரட்டுக்கம்பளம் ஒன்று 6 ஜிடாலுக்கும் உயர்ந்த ரகக்கம்பளம் ஒன்று 36 ஜிடாலுக்கும்[2] கிடைத்தன.

[1] ஒரு தங்கா என்பது இக்காலத்தில் 12 ரூபாய்க்குச் சமமாகும்.

[2] அலாவுத்தீன், முகம்மது பின் துக்ளக், பிரோஸ் ஷா காலங்களில் பொருள்களின் விலை பற்றிய ஒப்புமைப் பட்டியல்.
(விலைகள் ஒரு மணங்குக்கு ஜிடால்கள் விதம்.)

பொருள்கள்	அலாவுத்தீன்	முகம்மது பின் துக்ளக்	பிரோஸ் ஷா
கோதுமை	7½	12	8
பார்லி	4	8	4
நெல்	5	14	X
பயறுகள்	5	X	—
மத்தியதரைக் கடல் பயறுகள்	3	4	4
சர்க்கரை (வெண்ணெய்)	100	80	X
,, (மெல்லிய)	60	64	120,140
இறைச்சி	10	64	X
நெய்	16	X	100

(J. A S. B, 1935, Vol. I, Letters No. 2, P. 235.)

Koviloor Acadamy

அலாவுத்தீன், முகம்மது பின் துக்ளக், பிரோஸ்ஷா இவர்களின் ஆட்சிக்காலத்தில் விற்கப்பட்ட பொருள்களின் விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொதுவாக அவை இரண்டாவது சுல்தான் காலத்தில் உயர்ந்தும், பிரோஸ் ஷாவின் ஆட்சிக்காலத்தில் அலாவுத்தீனின் காலத்திலிருந்த விலைகளுக்கே பழையபடி குறைந்தும் போயிருப்பதை அறிகிறோம். மொத்தத்தில் உணவுப்பொருள்களும் பிறபொருள்களும் தோஆப் (Doab) எல்லையிலும் மாகாணங்களிலும் குறைந்த விலைக்குக் கிடைத்தன. வங்காளத்தைத் தவிர 'வேறு எந்த நாட்டிலும் பொருள்கள் குறைவாக விற்பதாகத் தெரியவில்லை' என்று இபன்ட்படுடா (Ibn Batutha) குறிப்பிடுகிறார். மூன்று பேர்கள் அடங்கிய குடும்பத்திற்கு ஓர் ஆண்டிற்கு எட்டு திர்ஹாம் (Dirham) போதும் என்ற நிலை வங்காளத்தில் இருந்தது. ஆனால், அக்காலத்து இந்தியரின் சராசரி வருமானத்தையோ சராசரி வாழ்க்கைச் செலவையோ மதிப்பிடுவதற்கு இப்போது முடியவில்லை. எனினும் நாட்டில், குறிப்பாக வங்காளத்தில் பணப்பற்றுக்குறை மிகுதியாக இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே பொருள்களின் குறைந்த விலையால் பொதுமக்கள் எவ்வளவு தூரம் நன்மைகள் அடைந்தனர் என்பதைத் தீர்மானிப்பது கடினமாக இருக்கிறது.

சமுதாயத்தின் வெவ்வேறு மக்கள் வகுப்புக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரை, செல்வம் மிக்க வகுப்பினருக்கும், குடியானவர்கட்கும் உள்ள வேறுபாடு 'வடதுருவம் தென்துருவம் போலவே' இருந்தது. ஆட்சியில் இருந்தோரும் அதிகாரிகளாயிருந்தோரும் செல்வத்திலும் ஆடம்பரத்திலும் திளைத்துக்கொண்டிருக்கவும் உழவர்கள் எல்லாம் எளிய வாழ்க்கையையே வாழ வேண்டியிருந்தது. பஞ்சகாலத்தில் அவர்களுக்கு வேண்டிய நிவாரண உதவி போதிய அளவு கிடைக்க முடியாதிருந்ததால் அவர்கள் நிலை அப்போது இன்னும் பரிதாபத்துக்குரியதாய் இருந்தது. 'கண்ணீர் நிறைந்த ஏழை உழவர்களின் கண்களிலிருந்த இரத்தத் துளிகளே படிகங்களாகி அரசனின் மணிமகுடத்தில் முத்துக்களாய் இருந்தன' என்று அமீர் குஸ்ராவ் குறிப்பிடுவது அறியத்தக்கது. இந்தியக் கிராம மக்களின் நிறைவேற்றப்படாத தேவைகளைக் கண்ணுற்ற பாபர் (Babur) என்பவர், 'பல்லாண்டுகளாக நிலைத்து ஓரிடத்தில் வாழ்ந்த மக்கள் ஒன்றிரண்டு நாட்களில் திடீரென்று அவ்விடத்தை விட்டு மறைந்துவிடுகின்றனர்' என்று கூறியிருக்கிறார். இவ்வாறு மத்திய காலத்து இந்திய உழவர்கள் அவர்களுடைய பிற்காலச் சந்ததியினரைப் போலவே செல்வ நல் வாழ்க்கையைப் பெற்றிருக்கவில்லை என்பது நன்கு அறியப்படுகிறது. ஆனால், இக்கால வாழ்க்கைத் தரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அக்கால உழ

Koviloor Academy

வர்களுக்குத் தேவைகள் மிகக் குறைவாகவே இருந்தன. கிராமங்கள் பொருளாதாரத் துறையில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டன. கிராமங்களுக்குரிய எளிய தேவைகளும் அவ்வூரிலேயே அவர்கள் மன நிறைவு அடையும்படி பூர்த்தி செய்யப்பட்டன. மேலும் தலைநகரில் அரசியல் புரட்சிகளும் குழப்பங்களும் ஏற்பட்டுக் கொண்டுவந்தாலும், கிராம மக்கள் அவற்றைப் பற்றிய கவலை ஒன்றுமின்றித் தங்கள் சாதாரண வாழ்க்கைத் தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். அரண்மனையில் நிலவிய அரசியல் மாறுபாடுகள் கிராம வாழ்க்கையின் போக்கைச் சிறிதும் மாற்ற முடியவில்லை.

ஆ, சமுதாய வாழ்க்கை

சுல்தான்களும் பிரபுக்களும் ஆண், பெண் இருபாலரிலும் அடிமைகளை வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். அரசரின் அடிமைகளான பந்தகானி-காஸ் (Bandagana-i.khas) எண்ணிக்கையில் பொதுவாக மிகுதியாய் இருந்தனர். அலாவுத்தீன் ஐம்பதாயிரம் அடிமைகளை வைத்திருந்தார். பிரோஸ் ஷா காலத்தில் அடிமைகளின் எண்ணிக்கை 200,000 ஆக உயர்ந்தது. அவர்கள் பயன் மிக்க தொழில்களைச் செய்து வந்ததாலும் அவர்களால் சில சமயம் பொருள் வருவாயும் மிகுதிப்பட்டதாலும், அவர்களுடைய தலைவர்கள் அவர்களை நன்ருகக் கவனித்து வந்தனர். பொதுவாகச் சுல்தான் அடிமைகளைச் சில காலத்திற்குப் பிறகு விடுதலை செய்து விடுவார். அவர்களில் சிலர் தங்கள் திறமையாலும், சிறப்பியல்புகளாலும் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்துவதும் உண்டு. மிகுந்த எண்ணிக்கையுள்ள இந்திய அடிமைகளும் இருந்தனர். அவர்களுள் நல்ல உடற்கட்டுடையவர்களா யிருந்தமையின், அஸ்ஸாம் அடிமைகள் மிகவும் விரும்பப்பட்டனர். இவர்களேயன்றிச் சீன, துருக்கிஸ்தானம், பாரசிகம் முதலிய நாடுகளிலிருந்தும் அடிமைகள் ஆண்களும் பெண்களுமாக வரவழைக்கப்பட்டனர். போர் அல்லது பஞ்ச காலத்தின் நிலைமைக்கேற்ப அடிமைகளின் விலை மாறுபட்டுக் கொண்டிருந்தது. ஆட்சி செய்வோர்க்கும் பிரபுக்களுக்கும் அடிமைகளால் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனல் அதே சமயத்தில் அடிமைத்தனம் சமுதாயத்தில் ஒரு சாபக்கேடான தொழிலாகவே கருதப்பட்டது. ஆனல், சமூகத்தில் சில தீங்குகளும் விளையாமற் போகவில்லை. உண்மையில் அது 'முன்னேற்ற மின்மைக்கு முத்திரை' யாகவும் சமுதாய வாழ்க்கைக்குப் பழியுண்டாக்கும் செயலாகவும் இருந்தது.

இந்துக்களிலும் சரி, முஸ்லிம்களிலும் சரி பெண்கள் தங்கள் கணவர்களையோ, பிற ஆண் உறவினர்களையோ சார்ந்து வாழ வேண்டிய நிலை இருந்தது. அது சமுதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிடத் தக்க கூறுகும். ஆனல், அவர்கள் நன்கு மதிக்கப்படும் நல்ல நிலை

Koviloor Acadamy

யில் வைக்கப்பட்டிருந்தனர். இல்லற வாழ்க்கையில் அவர்கள் கற்பு நிலை வழாதிருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. அவர்கள் தங்கள் வீடுகளில் பொதுவாகத் தனித்தே வாழ்ந்து வந்தனர். பெண்கள் முகத்திரை (purdah) போட்டுக்கொள்ளும் வழக்கம் இந்துக்களிலும் முஸ்லிம்களிலும் பெருவாரியாக மேற்கொள்ளப்பட்டது. பிற நாட்டுப் படை யெடுப்பாளர், குறிப்பாக மங்கோலியரின் திடீர் நுழைவுகளால் ஏற்படக் கூடிய அபாயத்தைக் கருதிக் குஜராத்தின் கடற்கரைப் பகுதியிலுள்ள சில நகரங்களில் முகத்திரை போட்டுக்கொள்ளும் வழக்கம் குறைவாக இருந்தது. பெண்கள் மேற்கொண்ட பண்பாடுகள் அவர்கள் சேர்ந்த சாதியைப் பொறுத்து மாறுபட்டிருந்தன. சாதாரண கிராமத்துப் பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்வதிலேயே காலத்தைக் கழித்தனர். சில உயர்வகுப்புகளைச் சார்ந்த பெண்கள் கலைகளையும் அறிவியல் அறிவையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர். ரூபமதியும் (Rupamati) பத்மாவதியும் (padmavati) கற்றறிந்த பெண்களுக்கு எடுத்துக் காட்டுகளாவர். இளைஞர்களும் மங்கையர்களும் மிக இளவயதிலேயே திருமணம் செய்துவைக்கப்பட்டனர். சதி அல்லது உடன் கட்டையேறும் வழக்கம், அதவாது இறந்துபோன கணவனுடன் சேர்ந்து சிதையின் தீயில் விழுந்து மனைவியும் மடிந்து போகும் வழக்கம், சில சாதியினரிடை மிகுதியாகப் பரவியிருந்தது. இபன் பட்டுடாவின் கூற்றுப்படி விதவையை தீயிலிடுமுன்பு தில்லி சுல்தானிடமிருந்து அனுமதி பெறவேண்டும். தானமும் பிற அறச் செயல்களும் நிறைந்து சமுதாய வாழ்க்கையின் தரம் பொதுவாக உயர்ந்து காணப்பட்டாலும், மது, மங்கையர்மீது வெறிகொண்டு வாழ்ந்தவர்களும் அக்காலத்தில் இருந்தனர்.

3. இலக்கியம், கலை, கட்டிடக்கலை

அ. இந்திய இஸ்லாமிய நாகரிகங்களின் கூட்டுறவால் விளைந்த நன்மைகள்

பழைய இந்திய நாகரிகத்தில் வந்தவரை எல்லாம் ஏற்றுக் கொள்ளும் பண்பு மிகவும் பெரியதாயிருந்தது. முதன் முதலில் படையெடுத்த கிரேக்கர்கள், சாகர்கள் (Sakas) ஹூணர்கள் (Huns) முதலியோர் இந்திய மக்களிடையே வேறுபாடின்றிக் கலந்து தங்கள் தனியடையாளத்தை இழந்துவிட்டனர். ஆனால் இந்தியாவில் துருக்கிய-ஆப்கானியப் படையெடுப்பாளர்களைப் பொறுத்தவரை அப்படி நிகழ வில்லை. முஸ்லிம்களின் படையெடுப்பின்போது இந்துஸ்தானத்தின் சமுதாயக் கொள்கைகளோடு அடிப்படையிலேயே மாறுபட்ட தனிப்பட்ட கொள்கைகளையுடையவரான முஸ்லிம்கள் இந்தியாவில் நுழைந்தமையால் இந்துஸ்தான மக்களால் படையெடுப்பாளரைத்

Koviloor Acadamy

தங்கள் மயமாக்கிக் கொள்ள முடியவில்லை. இந்துஸ்தானத்திலேயே பிறந்து வாழ்ந்தவர்களுக்கும் புதியவர்களுக்கும் அடிக்கடி அரசியல் உறவுகளில் கடுமையான பிணக்குகள் ஏற்பட்டன. ஆனால் பல நூற்றாண்டுகளாக இருவகைப்பட்ட நாகரிகங்களும் ஒன்றாக இணைந்திருக்க நேர்ந்தபோது, இரண்டும் ஒன்றையொன்று தழுவிக்கொள்ள முற்பட்டன. இவ்வாறு நீண்டகாலத் தொடர்பினால் இந்து முஸ்லிம் மதம் மாறியவர்களின் தொகை வளர்ந்து வந்தது. இந்தியாவில் ஏற்பட்ட சில பொது இயக்கங்களாலும் இந்து-முஸ்லிம் இனத்தார் ஒருவர்க்கொருவர் மற்றவர்களுடைய பழக்கங்களையும் கொள்கைகளையும் பரிமாறிக்கொள்ள நேர்ந்தது. மேற்போக்கில் வேறுபாடும் வெறுப்பும் காணப்பட்டாலும் அவற்றுக்குள்ளே பொறுத்துக்கொள்ளும் பண்பும், இணங்கும் பண்பும் வெவ்வேறு வாழ்க்கை நிலைகளிலும் கலந்தே காணப்பட்டன. உண்மையில் இந்தியாவில் இஸ்லாம் புகத் தொடங்கிய காலத்திலிருந்தே இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவர்க்கொருவர் மற்றவருடைய பண்பாட்டை வியந்து போற்ற முற்பட்டனர். முஸ்லிம் தெய்வ நெறியின் மூலங்களுள் இந்தியாவும் ஒன்றாயிருந்தது. மத்திய காலத்தில் புகழ்பெற்ற முஸ்லிம் அறிஞர்களும் முனிவர்களும் இந்தியாவுக்கு வந்து இந்திய மக்களிடையே வாழ்ந்து வந்தனர். அவர்கள் இஸ்லாமிய தத்துவத்தையும், அநுபூதி நெறி (Mysticism) யையும் இந்தியாவில் பரப்பினர். இந்துக்கள் முஸ்லிம் முனிவர்களைக் குறிப்பாக அநுபூதி நெறியைச் சார்ந்தவர்களை மதித்து போற்றத் தொடங்கியதனால் இரு இனத்தார்க்கு மிடையே வேறுபாடுகளைப் பொறுத்துக்கொள்ளும் ப்ண்பு கனிந்து வந்தது. இந்து முனிவர்களை முஸ்லிம்களும் போற்றிவந்தனர். முடிவில் இரு இனத்தாரும் சேர்ந்து பொதுவில் சத்ய பீர் (Satyapir) அல்லது உண்மை முனிவரைத் தொழும் வழக்கம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட நட்புணர்ச்சி பெருகியிருந்தமையால்தான் முஸ்லிம்கள் இந்து மதத்தை தழுவுதலும், முஸ்லிம்களாக மாறிய இந்து மக்கள் மீண்டும் தங்கள் மதத்திற்கே செல்லுதலும் அந்தக் காலத்திலும், அதற்குப் பிறகும் நிகழ்ந்துவந்தன. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும் என்று ஏற்பட்ட அவாவினால்தான், இந்து (சமஸ்கிருத) சமய இலக்கியங்கள் முஸ்லிம் அரசவைகளில் பயிலப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டும் அல்லது சுருக்கிப் பெயர்க்கப்பட்டும் வந்தன. காஷ்மீரில் ஜெய்ன்-உல்-ஆப்தீன் (Zain-ul-Abidin), வங்காளத்தில் ஹுஸேன் ஷா போன்றோர் இவ் வகைப்பணிகளைச் செய்துவந்தனர். மேலும் முஸ்லிம் அரசவையினரும், முஸ்லிம் பிரசாரகர்களும், முனிவர்களும் இந்து தத்துவத்தில் உள்ள யோகம், வேதாந்தம் இவைகளையும், மருத்துவம், சோதிடம் என்ற அறிவியல்களையும் கற்பதில் பெருவிருப்புக் கொண்டனர். அதைப் போலவே வானியல் நூலாரும், முஸ்லிம் கலைச் சொற்களைக் ஏற்றுக் கொண்டனர். மேலும் அட்சரேகை, தீர்க்க ரேகைகளைப்பற்றி

Koviloor Academy

முஸ்லிம்கள் கொண்டிருந்த கணக்கு முறைகளையும், பஞ்சாங்க (zich) முறையில் சில கருத்துக்களையும் தாஜிக் (Tajik) என்றழைக்கப்பட்ட ஜாதகக்கலையும், மருத்துவ இயலில் உலோகக் காடிகளைப் பற்றியும் அயாட்ரோ-வேதியியலில் (Iatro-chemistry) சில முறைகளைப்பற்றியும் முஸ்லிம்களிடமிருந்தே கற்றுக்கொண்டனர். உருது என்னும் மொழி 'பாரசீக, அராபிய, துருக்கிய மொழிகளின் சொற்களும் கருத்துக்களும் சம்ஸ்கிருதமூலமுடைய மொழிகளோடும் அவற்றின் கருத்துக்களோடும் கலந்து, புது மொழியாக வளர்ந்தது. இந்துக்கள் முஸ்லிம்களின் மொழி ஒருமைப் பாட்டிற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது.' மாலிக் முகம்மது ஜயசி (Malik Muhammad Jayasi) என்போர் பத்மினியைப் பற்றி எழுதியது போலச் சில முஸ்லிம்கள் இந்து வாழ்க்கையையும், மரபுகளையும் பற்றிப் பிரதேச மொழிகளில் எழுதினர். ராய் பாண மல் (Rai Bhana Mal) தம் வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சி நூலில் செய்தது போலச் சில இந்து நூலாசிரியர்கள் பாரசிக மொழியில் முஸ்லிம் இலக்கிய மரபுகளைப் பற்றி எழுதிவந்தனர். எண்ணில்லாத முஸ்லிம் கவிஞர்கள் இந்தியிலும் இந்துக் கவிஞர்கள் உருதுவிலும் எழுதி வந்தனர். அமீர் குஸ்ராவும் சில நூல்களை இந்தியில் எழுதியிருக்கிறார். இவ்வாறு இரண்டு வகையான பண்பாடுகளும் ஒன்றுபட்டு இணைந்ததால் கலைகளிலும், கட்டிடக்கலையிலும், புதிய வளர்ச்சிகள் தோன்றலாயின. 'அவற்றில் அடிப்படைக்கூறு பழைய இந்து மரபாயிருந்தாலும் வெளித் தோற்றமும் புது மெருகிடும் பாரசீக மரபை ஒட்டியிருந்தன. முஸ்லிம் அரண்மனையின் தேவைகளுக்கு ஏற்ப அவை பயன்படுத்தப்பட்டன.' இந்து உயர்வகுப்பில் பிறந்து முஸ்லிமாக மாறியவர்களும், இந்துக்களின் சூழ்நிலையில் வாழ்ந்தவர்களும் சதி, ஜௌஹார் (Jauhar) போன்ற இந்து பழக்கங்களை மேற்கொண்டனர். ஆட்சியதிகாரத்திலிருந்த இந்துக்கள் முஸ்லிம்களுக்குமிடையே உறவு மிகுதிப்பட்டன. இனக்கலப்புறவின் மிகுதியினால் சில கலப்புத் திருமணங்கள் ஏற்பட்டன என்றும் கூறலாம். வெற்றிக்கு ஒரு நிபந்தனையாகக் கட்டாயத்தின்பேரில் இப்படிப்பட்ட இனக்கலப்புத் திருமணங்கள் சில சமயங்களில் நடைபெற்றாலும் அவை இவ்விரு இனத்தார்க்குமிடையே இருந்த 'வெறுப்பினால் விளைந்த வேறுபாடுகளைக் குறைக்க' உதவின. ஓர் இனத்தாரின் பழக்க வழக்கங்களை மற்ற இனத்தார் மேற்கொள்ளச் செய்யவும் துணைபுரிந்தன.

அரசியல் அரங்கில்கூட, இணக்கப்பாடும் கூட்டுறவும் இல்லாமல் போகவில்லை. சிற்றூர் ஆட்சிமுறையில் இந்து கிராமத்தலைவர்களையும், கணக்குப் பிள்ளைகளையும் வைத்துக்கொள்ளவேண்டிய தேவை இருந்தது. முஸ்லிம் அரசு மேலும் மிகுந்த எண்ணிக்கையுள்ள இந்துக்களை வேலையில் அமர்த்திக்கொண்டது. அவர்களின் ஆட்சியின்

Koviloor Acadamy

வெவ்வேறு துறைகளில் புகழத்தக்கவாறு பணியாற்றி வந்தார்கள். இவ்வாறு மாளவத்தில் சந்தேரியைச்சேர்ந்த மேதினிராய் (Medini Rai) என்பவரும் அவருடைய நண்பர்களும் உயர்ந்த பதவிகளை வகித்தனர். வங்காளத்தில் ஹுஸேன்ஷா என்பவர் பல இந்து அதிகாரிகளை நியமித்தார். அவர்களுள் புரந்தர்கான் (Purandar Khan), ரூப் (Rup), சனாதன் (Sanatan) முதலியோர் மிகவும் பிரசித்திப்பெற்றிருந்தனர். கோல்கொண்டாச் சுல்தான் சில இந்துக்களைத் தங்கள் அமைச்சர்களாக அமர்த்திக்கொண்டிருந்தார். பீஜப்பூர் ஆட்சியாளராயிருந்த யூசுப் ஆதில் ஷா (Yusuf Adil Shah) என்பவர் பொறுப்பு வாய்ந்த பல உத்தியோகங்களை இந்துக்களுக்குக் கொடுத்தார். அவருடைய மாநிலத்தின் கணக்குகளும் ஏடுகளும் சாதாரணமாக மராத்தியிலேயே எழுதிவைக்கப்பட்டுவந்தன. காஷ்மீரத்துச் சுல்தான் ஸெய்நுல்-ஆபிதீன் அக்பருக்கு முன்னோடியாக இந்து ஆதரவாளராய் இரு இனத்தார்க்கும் ஏற்ற கொள்கைகளை மேற்கொண்டார். இந்துக்களை தம் மாநிலத்தில் போற்றி ஆதரித்ததால் பீஜப்பூரை ஆண்ட இப்ராகிம் ஆதில் ஷாவை முஸ்லிம் குடிமக்கள் 'ஜகத்குரு' (Jagadguru) என்று அழைத்தனர். இராசபுத்திர வீரர்கள் முஸ்லிம் மக்களைக் காப்பதிலும் தங்கள் வீரத்தைப் பயன்படுத்தினர். ராணசங்கா (Rana saoga) என்ற இராசபுத்திர வீரர் தலைமறைவாய் விட்ட தம் பகைவரான மாள்வா அரசர் இரண்டாம் மகமூதை மதித்து அவருக்குச் சுதந்தரம் வழங்கும் அளவுக்கு ஆண்மையாளராய் விளங்கினார். சுல்தான் நாஸிருத்தீனுல் (Nasir-ud-din) தோற்கடிக்கப்பட்டபின் குத்லுக்கான் (Qutlugh Khan) சாந்தூர் அரசன் ராணு பன் பால் (Rana Ban Pal) என்பவரைப் புகலிடமாகக் கொண்டார். சுல்தான் அலாவுத்தீன் கில்ஜியின் கோபத்துக்கு ஆளாக நேரிடுவதைப்பற்றியும் கவலைப்படாது அவருக்கு அடங்காமல் கலகம் செய்து வந்த ஒரு கலகத் தலைவருக்கு ரான்தாம்போரை (Ranthambhor) ஆண்டுவந்த ஹமீர் தேவர் எவ்வாறு புகலிடம் அளித்தார் என்பது பலரும் அறிந்த செய்தியாகும். இரண்டாம் தேவராயருக்குப் பின் வந்த விசயநகர அரசர்கள்கூடத் தங்கள் படைத்துறையில் முஸ்லீம்களை அமர்த்திக்கொண்டனர். இவ்வாறு அவர்கள் 'தங்கள் பெரிய தலைநகருக்கு உள்ளேயும் வெளியேயும் இஸ்லாம் மதத்திற்குச் சிறப்பளித்து அதைப் போற்றினர். புகழ்பெற்ற முஸ்லிம் தளபதியான பீஜப்பூர் ஆசாத்கான் என்பவர் ஒருமுறை மகா நவமித் திருவிழாவைக் காண்பதற்காக விசயநகரத்திற்கு அழைக்கப்பட்டார். ராணசங்கா பாபருடன் செய்த போரின்போது தமக்குக்கீழ் ஒரு சிறு முஸ்லீம் படையையும் வைத்திருந்தார். ஓர் இந்து பெனியாவான ஹிமூ என்பவர் ஆதில் ஷா சுர் (Adil shah Sur) என்பவரின் பிரதம மந்திரியாகப் பணியாற்றும் உயர்நிலையை அடைந்தார். அவர் 1556-ல் ஆப்கானியர் முகலாயர்களுடன் நடத்திய கடைசி முக்கியமான

Koviloor Academy

போரில் ஆப்கானியரின் தளபதியாய் இருந்தார். இப்படிப்பட்ட அரசாங்க உத்தியோகங்கள் எல்லாம் நல்லெண்ணத்தின் பயனுலன்றி அரசியல் தேவையின் காரணமாகவே பெரும்பாலும் அளிக்கப்பட்டன. எனினும் அவை இந்துக்கள் முஸ்லிம்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பதற்குத் துணைபுரிந்தன என்பதில் ஐயமில்லை. உண்மையில் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் கலைகள், கைத்தொழில்கள், இசை, ஓவியம், கட்டிடங் கட்டும் முறைகள், ஆடையணியும் முறைகள், விளையாட்டுகள் முதலியவற்றில் இரு இனத்தினருக்குமிடையே ஒட்டுறவு மிகவும் பெரிதாய் வளர்ந்திருந்தது. இதனுல் பாபர் இந்தியாவுக்கு வந்தபோது அவர்களிடத்தே காணப்பட்ட ஒரு வகையான 'இந்துஸ்தானி முறை' யைக் கண்டு வியப்புற்ருர். இது குறித்து சர்ஜான் மார்ஷல் கூறியிருப்பவை மிகவும் பொருத்தமானவையாகும்: 'அடிப்படையிலேயே முற்றிலும் வேறுபட்டவையும், தனித்தனியே மிக விரிவாகவும் வன்மையாகவும் வளர்ச்சியுற்றனவுமாகிய இஸ்லாம், இந்து என்ற இரு நாகரிகங்கள் ஒன்ருய்க் கலந்து இணைந்து நிற்கும் இக்காட்சி மனித வரலாற்றிலேயே இதுவரை நாம் கண்டதில்லை. அவ்விரு பண்பாடுகளுக்கும் சமயங்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடுகளும் இருந்தன. அவற்றிற்கிடையே உண்டான தாக்குதல்களின் வரலாறு சிறப்பு மிக்க கருத்துக்களை அறிவுறுத்துகின்றது.

இந்துமதம் இஸ்லாம் மதத்தைத் தன்னேடு முழுமையாகக் கலக்கும்படி செய்துவிட முடியவில்லை. ஆனுல் இரண்டு வழிகளில் அதனிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டது. முதலாவதாக இஸ்லாமியரின் மதம் மாற்றும் பேரார்வத்தைக் கண்டு இந்துக்களில் வைதிகப்பற்றுக் கொண்டிருந்தோர் மேலும் தங்கள் மதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொள்ளத் தொடங்கினர். இஸ்லாமியக் கொள்கை பரவாதிருப்பதற்காகத் தங்கள் நிலைமைக்கு அரண் எழுப்புவோர் போன்று சாதிக் கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கினர். ஸ்மிருதிகளில் (Smriti) பல வகையான நீதிச் சட்டங்களை இயற்றினர். இப்படி இயற்றியவர்களுள் மிகவும் புகழ் பெற்றவர்கள் கி.பி. 1335-1360-ல் கால நிர்ணயம் என்ற பராசர ஸ்மிருதிக்கு (Parasara Smriti) விளக்கவுரை எழுதிய விசயநகரத்து மாத்வாக்கள் (Madhavas), மதனபாலன் (Madanapala) (கி பி. 1360-1370) என்ற அரசனுக்காக மதனபாரிஜாதம் (Madanaparijata) என்ற ஸ்மிருதி நூலை இயற்றிய விஸ்வேஸ்வரர் (Visvesvarar), மனுவின் நூலுக்குப் சிறப்பு மிக்க விளக்க உரைகள் எழுதிய குல்லுகா (Kulluka), ரகுநந்தனர் (Raghunandan) என்போர் ஆவர். குல்லுகா வங்காளமொழியாசிரியராயினும், வாரணசியில் வந்து குடியேறி வாழ்ந்தார். ரகுநந்தனரும் வங்காளத்தைச் சேர்ந்தவரே. சைதன்னியரின் (Chaitanya) சம

Koviloor Acadamy

காலத்தவர். மாறாக, இஸ்லாமின் ஜனநாயகக் கொள்கைகளுள் சில இந்துக்களின் சமுதாய, மத அமைப்புகளுள் புகுந்து விட்டன. முனிவர்களாயிருந்த சிலர் சமயப் பிரசாரகர்கள் மூலம் சில பொதுநல இயக்கங்கள் தோன்றுவதற்கும் இஸ்லாமே காரணமாய் இருந்தது. விளக்கிக் கூறுவதில் சில வேறுபாடுகள் காணப்பட்டனவே தவிர உண்மையில் அந்தச் சீர்திருத்தக்காரர்கள் எல்லாம் பக்திக்கொள்கையையே கல்வியறிவில்லாத மக்களிடம் எடுத்துச் சென்று விரித்துக் கூறுபவர்களாய் இருந்தனர். எல்லா மதங்களும் சமமான பெருமையுடயனவே என்றும், கடவுள் ஒன்றே என்றும் அவர்கள் போதித்தனர். மனிதனுக்குப் பெருமை பிறப்பினால் ஏற்படுவதன்று என்றும், செய்யும் சிறந்த செயல்களால் ஏற்படுவனவே என்றும் கூறினர். அளவுக்கு மீறிய சடங்குகளையும் சமயச் சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும் எதிர்த்தனர்; புரோகிதர்களின் அளவிலாச் செல்வாக்கைக் கண்டித்தனர் ; எல்லோர்க்கும் முத்தி தருவன எளிய பக்தியும் நம்பிக்கையுமே என்றும் வற்புறுத்தினர்.

அவர்களுள் காலத்தால் முந்தியவராகக் குறிப்பிடத் தக்கவர் இராமானந்தரே (Ramananda) ஆவர். எனினும் அவருடைய பிறப்பு, இறந்த காலம் இவற்றைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் இன்னும் இருக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அலகாபாத்தில் கான்யகுப்ஜ (Kanyakubja) பிராமண குடும்பத்தில் பிறந்த இராமானந்தர் வட இந்தியாவின் புனித ஸ்தலங்களுக்கெல்லாம் யாத்திரை செய்தார். அவர் இராமனைக் கடவுளாகத் தொழுதார். எல்லா வகுப்பினர்க்கும் ஆண் பெண் இருபாலர்க்கும் பக்திக் கொள்கையை இந்தி மொழியில் பரப்பினார். அவருடைய முக்கியமான பன்னிரு சீடர்களில்[1] ஒருவர் நாவிதர் ; இன்னொருவர் சக்கிலி. மற்றொரு புகழ் பெற்ற வைணவ முனிவர் வல்லபாச்சாரியர் என்பவர். அவர் கண்ணன் வழிபாட்டிற்கு விளக்க உரைகள் ஆற்றி வந்தார். அவர் கி.பி. 1479-ல் வாரணாசியில் ஒரு தெலுங்கு பிராமண குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய இளமைப் பருவத்திலேயே மேதையாக விளங்குவதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன. தம் கல்வி முடிந்ததும் அவர் விசயநகருக்குச் சென்று கிருஷ்ணதேவராயரின் அரசவையில் அமர்ந்தார். அங்கே அவர் பொது மேடையில் வாதஞ் செய்து சில சைவபண்டிதர்களைத் தோற்கடித்தார், அவர், உலகப்பற்றுகளைத் துறக்க வேண்டுமென்றும் ஆன்மாவும் உலகமும் எல்லாவற்றிற்கும் மேலான பேரான்மாவுடன் சிறிதும் வேறுபாடின்றிக் கருதப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினார். அவருடைய ஏக ஆன்மக் கொள்கை சுத்த-அத்வைதம் (Suddha Advaitam)

[1] அனந்தானந்தா, கபீர், பீபா, பவானந்தர், சுகர், சர்சுரா, பத்மாவதி, நரஹரி, ராயதாசர், தானு, செய்னு, சர்சுராவின் மனைவி.

Koviloor Academy

எனப்படும். அதாவது 'தூய இரண்டற்ற கொள்கை' என்று அழைக்கப்பட்டது. ஆனால், பிற்காலத்தில் வல்லபாச்சாரியரின் கொள்கையைப் பின்பற்றி வந்தவர்கள் பழித்துரைக்கப்பட்டனர். இது பற்றி மோனியர் வில்லியம்ஸ்(Monier - Williams), 'வல்லபாச்சாரியரின் கொள்கை தாழ்வுற்ற கீழ் நாட்டு எபிக்கூரியன் (Epicurean) கொள்கையாக ஆய்விட்டது' என்று கூறியிருக்கிறார்.

வைணவ முனிவர்களுள் மிகப் புகழ் பெற்றவரும் மிகப் பெருமை யுடையவருமாகக் கருதப்படுபவர் சைதன்யரே (1485–1533). அவர் வங்காளத்தில் நதியா (Nadia) என்ற ஊரில் கல்வியறிவு மிக்க ஒரு பிராமண குடும்பத்தில் 1485ஆம் ஆண்டில் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே இலக்கியத்தில் நுண்மாண் நுழைபுலம் உடையவராகக் காணப்பட்டார். விரைவிலேயே அவருடைய ஆன்மா இவ்வுலகப் பற்றுகளினின்று விடுபட்டு உயர்ந்து செல்ல அவாவியது. தம் இருபத்து நான்காம் வயதில் இவ்வுலகப் பற்றுகளைத் துறந்தார். மீதியிருந்த வாழ்க்கையை, அன்பையும் பக்தியையும் பரப்புவதிலேயே கழித்தார். ஒரிஸ்ஸாவில் பதினெட்டு ஆண்டுகளும், தக்காணம், பிருந்தாவனம் (Brindavan), கௌர் (Gaur) முதலிய பிற இடங்களில் ஆறு ஆண்டுகளையும் கழித்தார். அவரைப் பின்பற்றுவோர் அவரைத் திருமால் அவதாரமாகவே கருதுகின்றனர். சைதன்யசரிதாம்ருதம் (Chaitanyacharitamrita) என்ற புகழ் பெற்ற சைதன்யரின் வரலாற்றைக் கூறும் நூலில் கிருஷ்ணதாஸ் கவிராஜ் என்பவர் சைதன்யர் கோட்பாட்டின் சாரத்தைக் கீழ் வருமாறு சுருங்கச் சொல்லியிருக்கிறார்: 'ஒரு மனிதன் கண்ணனை வழிபட்டுக் கொண்டு, தன் குருவுக்குத் தொண்டு செய்துகொண்டிருந்தால், அவன் மாயை என்னும் வலையிலிருந்து விடுபட்டுக் கண்ணனின் பாதாரவிந்தங்களை அடைவான். உலக ஆசாபாசங்களையும் சாதியின் பேரில் அமைந்த மதப் பிரிவுகளையும் விட்டு விட்டு உண்மையான வைணவன் உலகில் வேறுதரவின்றிக் கண்ணனையே சரண் அடைகின்றான்.' புரோகிதர்களால் செய்யப்பட்டுவந்த சடங்கு முறைகளை எதிர்த்து விஷ்ணுவையே முழு நம்பிக்கையுடன் தொழ வேண்டும் என்று போதித்தார். அன்பு, பக்தி, இசை, நடனம் இவற்றின் மூலம் ஆனந்த பரவச நிலையை அடைய முடியும் என்றும் அந்நிலையில் கடவுளின் காட்சியைத் தானே உணர முடியும் என்றும் நம்பினார். அவருடைய உபதேசம், சாதி சமயம் கொள்கை வேறுபாடின்றி எல்லோருக்கும் உரியதா யிருந்தது. அவருடைய சீடர்களில் இந்து மதத்தில் கீழ்ப்பட்ட நிலையில் இருந்தவர்களும், முஸ்லீம்களும்கூட இருந்தனர். சைதன்யரின் உபதேசங்கள் மக்களிடையே மிகுதியாகப் பரவியதுடன் அவை மக்கள் மனத்திலே ஆழமாகவும் பதிந்தன.

Koviloor Academy

மகாராஷ்டிர நாட்டில் பக்தி சமயம் நாமதேவர் என்பவரால் பரப்பப்பட்டது. அவருடைய அடியார்களில் ஒரு சிலர் முஸ்லீம்களாயிருந்து இந்து மதம் மாறியவர்களாவர். தையற்கார அல்லது காலிக்கோ அச்சிடும் சாதியைச் சார்ந்த நாமதேவர் 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார்.[1] கடவுள் ஒன்று என்ற நம்பிக்கை உடையவராயிருந்த அவர் உருவ வழிபாட்டையும், மதத்தின் அடிப்படையில் செய்யும் வெளிச்சடங்குகளையும் அதிகமாகப் போற்றவில்லை. கடவுள்மேல் அன்பு கொள்வதன் மூலம்தான் முக்தியடைய முடியும் என்று நம்பினார். 'என் இதயத்தில் நிறைந்திருக்கும் அவன் மேல் உள்ள அன்பு என்றும் பிரிக்க முடியாது; நாமதேவன் அழிவில்லாத பெயருடையவனுக்குத் தன் இதயத்தை அளித்துள்ளான். குழந்தைக்கும் அதன் தாய்க்கும் உள்ள அன்பைப் போல் என் ஆன்மா கடவுளோடு இணைக்கப்பட்டுள்ளது' என்று அவர் கூறியுள்ளார்.

இந்து மதத்திற்கும் இஸ்லாமுக்குமிடையே இணக்க உணர்ச்சியை விளைவிப்பதற்காகக் கபீர் மிகச் சிறந்த முயற்சிகளைச் செய்தார். அவருடைய வாழ்க்கை வரலாறு முழுதும் இருளில் புதையுண்டிருக்கிறது. அவர் பிறந்த காலமும் இறந்த காலமும் கூட இன்னவெனத் தெரியவில்லை.[2] அவர் பதினான்காம் நூற்றாண்டின் முடிவில் அல்லது பதினைந்தாம் நூற்றாண்டின் முதல்கால் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று கொள்ளலாம். அவர் ஒரு பிராமண விதவைக்கு பிறந்தவர் என்றும், அவள் குழந்தையை வாரணாசில் ஒரு குளத்தருகே போட்டுவிட்டுச் சென்றாள் என்றும், அக்குழந்தையை ஒரு முகம்மதிய நெசவாளியும் அவர் மனைவியும் எடுத்து வளர்த்தனர் என்றும் கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது. அவர் இராமானந்தரின் மாணவர் என்று பரம்பரையாகச் சொல்லப்படுகிறது. 'கபீரின் எண்ணங்களின் அடிப்படை முழுதும் இந்து சமயச்சார்புடையனவே' என்று டாக்டர் கார்ப்பெண்டர் கூறினாலும், கபீர் சூபி(sufi)முனிவர்களிடமும் கவிஞர்களிடமும் தொடர்புகொண்டிருந்தார் என்பதும், அவர்களிடமிருந்து பல கருத்துக்களைப் பெற்றார் என்பதும், மறுக்கமுடியாத உண்மையாகும். அவர் எல்லாவகையான வகுப்பினரிடத்தும், கொள்கையினரிடத்தும்

[1] அவருடைய பிறப்பின் காலத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் உள்ளன. மகாலிப்பின் (Macauliffe) கருத்துப்படி (The Sikh Religion-Vol-VI. P. 18). அவர் பிறந்த ஆண்டு கி.பி. 1270. டாக்டர் பண்டர்க்காரும் (Vaishnavism and Saivaism P. 89), கார்ப்பெண்டரும் (Theism in Medieval India. P 452) அவர் பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கூறுவர். டாக்டர் பர்க்குஹர் (Farquhar) '1400-லிருந்து 1430 வரை வாழ்ந்தவர் என்று (J.R A.S. 1920, Page 186) குறிப்பிடுகிறார்.

[2] கருத்து வேறு பாடுகளை அறியவேண்டுமாயின் தாராசந்த் எழுதிய (Influence of Islam on Indian Civilisation P. 146-147) பார்க்க. மகாலிப்பும், பண்டர்க்காரும் அவர் கி.பி. 1398-ல் பிறந்தார் என்றும், வெஸ்ட்காட், பர்குஹர், பர்ன்ஸ் முதலியோர் கி.பி. 1440 என்றும் கூறுகின்றனர்.

Koviloor Academy

ஒற்றுமையை வளர்க்கக் கூடிய அன்பு மதத்தைப் போதித்தார். அவரைப் பொறுத்தவரை ‘இந்துவும், துருக்கியனும், ஒரே களிமண்ணால் செய்யப்பட்ட குடங்களே; அல்லாவும் இராமனும் ஒரே கடவுளின் வெவ்வேறு பெயர்களே.’ அவர் கூறுகிறார் :

> ‘ஒரு முனிவரைப் பார்த்து அவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்று கேட்பது தேவையற்றது.
>
> நாவிதனும் வண்ணானும், தச்சனும், கடவுளை நாடி யிருக்கின்றனர். இராமதாஸ் கூட கடவுளைத் தேடிக் கொண்டிருப்பவரே. ரிஷி ஸ்வர்பாச்சா (Rishi Swapacha) சாதியில் தோல் பதனிடுபவரே. வேறுபாடற்ற ஒரே பரம் பொருளை இந்துக்களும் முஸ்லிம்களும் அடைந்துள்ளனர்.’

கபீர் இந்து அல்லது முஸ்லிம் மதச் சடங்குகள் அல்லது வெளிச் சம்பிரதாயங்களின் சடங்குகள் வன்மையில் நம்பிக்கை கொண்டவர் அல்லர். அவர் கொள்கைப்படி முக்திக்கு உண்மையான வழி பஜனை அல்லது பக்திவழிபாடும், ஆன்மா சங்கோசம், வாய்மையின்மை, கபடம், இரக்கமின்மை முதலிய குணங்களிலிருந்து விடுபட்டிருத்தலுமேயாம்.

> ‘பட்டினி கிடப்பதாலோ, பிரார்த்தனைகளையும் சமயக் கொள்கைகளையும் திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பதாலோ ஒருவன் விண்ணுலகம் அடைவதில்லை. மெக்காக் கோயிலுக்கு உண்மையான அகத்திரை மனிதனின் இதயத்திலேயே இருக்கிறது. இவ்வுண்மை உணரப்படவேண்டும். உள்மனத்தைக் காபாவாகவும் உடலை அதைச்சுற்றியுள்ள கோயிலாகவும் ஆக்கிக் கொள். மனச்சாட்சியை உன்மனத்தின் முக்கிய ஆசிரியராக ஏற்றுக்கொள். கோபம், ஐயம், வெறுப்பு இவற்றை ஒழித்துவிடு. ஐந்து தடவை செய்யும் பிரார்த்தனைகளின் மந்திரமாகப் பொறுமை என்பதை உச்சரி. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரே கடவுள்தான்.’

என்று அவர் மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

அக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு பெரிய போதகர் நானக் என்பவர். அவர் சீக்கியர் மதத்தை உண்டாக்கினார். உபநிஷத்துகளின் கொள்கையாகிய ஒரு கடவுட்கொள்கையை உயிர்ப்பித்தார். லாகூரிலிருந்து தென்மேற்கே ஏறக்குறைய முப்பத்தைந்து மைல் தூரத்திலிருக்கும் தல்வாண்டி (Talwandi) (இக்காலத்தில் நங்கணம்) என்ற ஊரில், சத்திரி குடும்பத்தில், கி.பி. 1469-ல் அவர் பிறந்தார். வாழ்க்கை முழுதும் இந்து மதத்திலும், இஸ்லாமிலும் உள்ள சிறந்த

Koviloor Academy

வற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு அவற்றின் அடிப்படையில் சமயப்பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி போதித்துக் கொண்டிருந் தார். உண்மையில் மதங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்கு களுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைப்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். கபீரைப்போலவே கடவுள் ஒன்றே என்று போதித்தார். இந்து, இஸ்லாம் சமயங்களிலிருந்த சம்பிரதாயங்களை மிகவும் கண்டித்தார். அவர் கூறியதாவது:

'வெறும் வார்த்தைகளில் மதம் அடங்கிவிடவில்லை. எல்லா மனிதரையும் சமமாகக்காண்பவனே சமயப்பற்றுள்ளவனுவன். கல்லறைகளிருக்கு மிடத்திற்கும், சுடுகாட்டிற்கும், ஓடியலைந்து கொண்டிருப்பதோ மதம் அன்று. வெளிநாடுகளுக்குச் செல் வதோ, புண்ணியதலங்களில் தீர்த்த மாடுவதோ மதம் அன்று. உலக ஆபாசங்களுக்கிடையே தூய்மையாக வாழ். இதனுல் மதத்திற்கு வழிகாண்பாய்.'

கடுந்துறவுக்கும் இன்ப சுகங்களை நாடும் எளிய வாழ்வுக்கும் இடைப்பட்ட வழியை மேற்கொள்ளும்படி கூறிய நானக் தம் வழி யைப் பின்பற்றுவோரிடம் கபடம், வெளிவேஷம், தன்னலம், பொய்ம்மை இவற்றைக் களைய வேண்டும் என்று வற்புறுத்தினர்.

'தன்னடக்கத்தை உலைக்கூடமாகவும், துறவு மனப்பான்மையைப் பொன்செய் கொல்லனுகவும், அறிந்து கொள்ளுதலைப் பட்டறை யாகவும், தெய்விக அறிவைக் கருவிகளாகவும், தவத்தைத் தீயாகவும், தெய்வ அன்பைப் பூசையாகவும் வைத்துக்கொண்டு, அதில் கடவுளின் பெயரை உருக்கியூற்று. உண்மையான அந்த நாணயச்சாலையில் கடவுளின் சொல் நாணயங்களாக உருவாகும். கடவுளால் தயவுடன் நோக்கப்படுவோர். செய்யும் தொழில் இதுவே.'

என்பது அவருடைய உபதேசத்தின் சாரமாகும்.

நானக்கின் மதம் மதம்மாற்றும் மதமாக இருந்ததால் பல முஸ்லிம் கள் அம்மதத்திற்கு மாறினர். அவருக்குப்பின் வந்தவர்களின் காலத்தில் மதம் மாற்றும் பணி வேகமாக நடைபெற்றுவந்தது.

ஆ. தேசிய இலக்கிய வளர்ச்சி

சீர்திருத்த இயக்கங்கள் நிலைபெறுகின்ற சமுதாய சமயங்களுக்கு நன்மை விளைவித்ததோடு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலும் இந்திய இலக்கியம் வளர்வதற்குப் பெரிய தூண்டுகோலாகவும் இருந் தன. பழமைப் பற்றுக்கொண்டு வைதிக அறிஞர்கள் வடமொழி

Koviloor Academy

யிலேயே எழுதிக் கொண்டிருந்தனர். ஆனால், கல்வியறிவில்லாத மக்களிடமும் தங்கருத்துக்களைப் பரப்பவேண்டும் என்ற எண்ணங் கொண்டிருந்த சமயச் சீர்திருத்தக்காரர்கள் மக்களுக்கு எளிதில் புரியும் மொழியிலேயே பேசியும் எழுதியும் வந்தனர். இவ்வாறு இராமானந்தரும், கபீரும் இந்தியில் போதித்து அதன் கவிதை வளத்தைப் பெருக்கினர். பக்திச்சுவை கனிந்தொழுகும் கபீரின் தோகைகளும் சகீகளும் (Sakhis) இந்தி இலக்கியத்தின் சிறந்த பகுதிகளாக விளங்குகின்றன. மராத்திய இலக்கியம் வளர்வதற்கு நாமதேவர் மிகப்பெரிதும் உதவினர். மீராபாயும் (Mira Bai) மற்றும்சில கிருஷ்ணவழிபாட்டினரும் 'மக்கள் மொழியில்' (Brajabhasha) பாடினர். நானக்கும் அவருடைய சீடர்களும் பஞ்சாபியையும் குருமுகியையும் வளர்த்தனர். வங்காள இலக்கியம் தன் வளர்ச்சிக்கு வைணவ ஆசிரியர்களுக்குக் கடன்பட்டுள்ளது. வங்காளத்தில் பீர்பூம் (Birbhum) என்ற மாவட்டத்தில் நன்னூர் (Nannur) என்ற கிராமத்தில் 14ஆம் நூற்றுண்டின் கடைசில் பிறந்த புகழ்பெற்ற வைணவ கவிஞர் சந்திதாஸ் என்பவர் (Chandidas) இன்னும் சிறப்பித்து மதிக்கப்படுகிறர். அவருடைய பாடல்களை வங்காளத்தின் சாதாரண மக்களும் அறிந்திருக்கின்றனர். அவருடைய சமகாலத்தவரான வித்யாபதி தாக்குர் (Vidyapati Thakur) என்பவர் மிதிலையில் பிறந்திருந்தாலும் வங்காள மக்கள் இன்னும் பக்தியுடன் போற்றி வருகின்றனர். இளவரசர்களின் அவைகளும் இலக்கியத்தைப் போற்ற முற்பட்டதால் இலக்கியம் வளர்ந்தது. சிவ சிம்மன் (Siva Simha) என்ற இந்து ஆட்சித் தலைவரின் அரசவைப் புலவராக வித்யாபதி வீற்றிருந்தார். வங்காளத்து முஸ்லீம் ஆட்சியாளர்கள் இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் வட மொழியிலிருந்து தாங்கள் புரிந்து கொள்ளும் வங்காளத்தில் மொழிபெயர்க்கும் பணிக்காக அறிஞர்களை அமர்த்தினர். இவ்வாறு கௌர் சுல்தான் நுஸ்ரத்ஷா என்பவர் மகாபாரதத்தை வங்காளத்தில் மொழிபெயர்ப்பித்தார். வித்யாபதி இந்த சுல்தானையும் சுல்தான் கியாஸ் உத்தீனையும் புகழ்ந்து பேசியிருக்கிறர். வங்காளத்தின் பைபிளாகச் சிலரால் கொண்டாடப்பெறும் கிரித்திவாஸ் என்பவர் இயற்றிய இராமாயணம், கௌர்அரசர் ஒருவரின் ஆதரவுபெற்று எழுதப்பட்டது. சுல்தான் ஹுஸேன் ஷாவின் தளபதி பராகல் கான் (Paragal khan) என்பவர் கவீந்திரா (Kavindra) என்று அழைக்கப்பட்ட பரமேஸ்வரன் என்பவரைக்கொண்டு மகாபாரதத்தின் மற்றொரு மொழிபெர்ப்பைச் செய்வித்தார். சிட்டகாங்கின் கவர்னரும், பராகல் கானின் மகனுமான சூதிகான் (Chuti khan) மகாபாரதத்தின் அசுவமேதபர்வத்தை வங்காளத்தில் மொழி பெயர்க்கும்படி சிரிகரநந்தியை (Srikara Nandi) அமர்த்தினர். விசயநகர அரசர்களால் தெலுங்கு இலக்கியத்திற்கு எப்படிப்பட்ட பெரிய ஊக்கமும் ஆக்கமும் கிடைத்தன என்பதை ஏற்கெனவே நாம் பார்த்திருக்கிறேம்.

Koviloor Academy

இ. வடமொழியில் இலக்கியப்பணி

சமயச் சார்புடையவும் இல்லாதவுமான முக்கியமான செய்யுட் கோவைகள் வடமொழியிலும் இக்காலத்தில் எழுதப்படாமல் போக வில்லை. அதனால் கடந்த இரண்டு மூன்று நூற்றுண்டுகளுக்கு முன் பிருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இக்காலத்தில் வட மொழி இலக்கிய வளர்ச்சி குன்றிய தென்றே கூற வேண்டும். ஏறக் குறைய கி.பி. 1300-ல் பார்த்தசாரதி மிஸ்ரா (Parthasarathi Misra) என்பவர் கர்ம மீமாம்சையைப் (Karma Mimamsa)பற்றிப் பல நூல் கள் எழுதினர். அவற்றுள் சாஸ்திர தீபிகை (Sastra Dipika) மிகவும் அதிகமாகப் பயிலப்பட்டு வந்தது. தத்துவத்தில், யோகம், வைசேஷிகம் நியாயப் பிரிவுகளின் கொள்கைகளை விளக்கும் சில நூல்களும் இக்கா லத்தில் எழுதப்பட்டன. இக்காலத்தில் இயற்றப்பட்ட முக்கிய நாட கங்கள் : ஜயசிங்சூரி (Jay Singh Suri) (கி.பி. 1219-1229) இயற் றிய ஹம்மீர் மத மர்தனம், கேரள அரசன் ரவிவர்மன் எழுதிய பிரத் யும்னஅப்யுதயம் (Pradyumna abhyudaya),வித்தியநாத (Vidyanath) (கி.பி. 1300) எழுதிய பிரதாப் ருத்ரகல்யாண் (Pratap Rudra Kal-yan), வாமன பட்ட பாணர் (Vamana Bhatta Bana) (கி.பி. 1400) எழுதிய பார்வதி பரிணயம் (Parvati Parinayam), கங்காதர ரால் எழுதப் பெற்றதும் சாம்பானிர் அரசனுக்கும் குஜராத்தின் அரசன் இரண்டாம் முகம்மதுவுக்கும் நடந்த போரைச் சிறப்பித் துக் கூறுவதுமான கங்காதாச பிரதாப விலாசம், வங்காளத்து ஹுஸேன் ஷாவின் மந்திரியும் வடமொழியில் இருபத்தைந்துக்கு குறையாத நூல்கள் எழுதியவருமான ரூபகோஸ்வாமி என்பவரால் கி.பி. 1532-ல் எழுதப்பட்ட விதக்த மாதவம், லலிதா மாத வம் (Vidagdha Madhava, Lalita Madhava) என்பவையாகும். இந்தச் சமயத்தில் மிதிலையிலும் வங்காளத்திலும் ஸ்மிருதியும் இலக் கண நூல்களும் பெருகின. பத்மநாப தத்தா (Padmanabha Datta), வித்தியாபதி உபாத்தியாய (Vidyapati Upadhyaya), மிதிலையைச் சேர்ந்த வாசஸ்பதி (Vachaspati), வங்காளத்தைச் சேர்ந்த ரகுநந் தனர் முதலியோர் அவற்றை இயற்றியோரில் மிகப் புகழ் பெற்றவர் களாவர். சமயச்சார்புடையவும் இல்லாதவுமான சமண இலக்கியமும் மிகுதியாகப் பெருகியது. விசயநகர அரசர்கள் சாயனர், அவரு டைய சகோதரர், மாதவ வித்யாரண்யர் (Madhava Vidyaranya) போன்ற பல அறிஞர்களுக்கு ஆதரவளித்துப் போற்றி வந்தமையின் வட மொழிப் பண்பாடு வளர்ந்தோங்கி வந்தது. வடமொழியறிவு பெற்ற முஸ்லிம் அறிஞர்களும் வாழ்ந்திருந்தனர்.

Koviloor Academy

ஈ. பாரசீக இலக்கியமும் முஸ்லீம் கல்வியும்

தில்லி சுல்தான்களும் அமீர்களும் மாகாணங்களை ஆண்ட முஸ்லிம் ஆட்சியாளர்களும் பிரபுக்களும் தாங்கள் சுவைத்து உணரக் கூடிய பாரசீக மொழி இலக்கியங்கள் வளர ஆதரவுதந்தமை இயல்பாகும். மத்திய ஆசியாவில் புகழ் பெற்ற பல்கலைக்கழக நகரமான புக்காராவுடன் (Bukhara) அறிவுச் சூழலில் தில்லி போட்டியிடுமளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று பெருமையுடன் அமீர் குஸ்ராவ் கூறினார். மங்கோலியரின் இடையீடுகளினின்று விடுதலை பெற எண்ணிய ஆசியாவின் மற்றப் பகுதியிலுள்ள பாரசீக அறிஞர்கள் இந்திய அரசவைகளுக்கு வந்து சேர்ந்தனர். அவர்களை அக்கால முஸ்லிம் அரசர்கள் மிகவும் ஆதரித்துப் போற்றினர். தில்லி, ஜலந்தர், பிரோஸாபாத் போன்ற பல இடங்களில் முஸ்லீம்களின் கல்விக்காகக் கல்வி நிலையங்கள் நிறுவினர்; பல நூலகங்களையும் நிறுவினர். அவற்றுள் மிகவும் முக்கியமானது தில்லியில் நிறுவப்பட்ட இம்பீரியல் நூலகமாகும். ஜலால்-உத்தீன் கில்ஜி(Jalal-ud-din-Khalji) அந்நூலகத்தின் தலைவராக அமீர் குஸ்ராவை அமர்த்தினார். முஸ்லிம் அரசர்கள் முஸ்லீம் இலக்கியக் கழகங்கள் வளர்வதற்கும் உதவி புரிந்தனர். அந்தக் காலத்தில் பாரசீக மொழியில் எழுதிய இந்திய அறிஞர்களில் மிகவும் புகழ்பெற்றவர் அமீர் குஸ்ராவேயாவர். அவர் விரைவாக எழுதிக் குவிக்கும் வளமை பெற்றிருந்தார். கவிதை, உரை நடை, இசை முதலிய பல துறைகளிலும் அவருடைய மேதைமை பாய்ந்தோடியது. அவருக்கு நீண்ட ஆயுட் காலத்தையும் ஆண்டவன் அருளியிருந்தான். முதலில் அவர் பால்பனின் ஆட்சிக்காலத்தில் புகழேணியில் ஏறி வந்தார், சுல்தானின் மூத்த மகன் இளவரசன் முகம்மதுவுக்கு ஆசிரியராய் அமர்ந்தார். பிறகு அலாவுத்தீன் கில்ஜியின் அரசவைப் புலவரானார். கியாஸ் உத்தீன் துக்ளக்கின் ஆதரவையும் பெற்று இன்புற்றார். கி.பி. 1324-25-ல் இறந்தார். அந்தக் காலத்தில் ஹசன்-இ-திஹல்வி என்ற பெயரில் புகழ் பெற்றிருந்த ஷேக் நஜும்-உத்-தீன் ஹஸன்(Shaikh Najm-ud-din Hasan) என்ற மற்றொரு கவிஞரும் இருந்தார். அவருடைய புகழ் இந்தியாவிற்கு அப்பாலும் பரவியிருந்தது. முதல் கில்ஜி அரசர் கல்விக்கு ஆக்கம் கொடுக்க மறக்கவில்லை. அவருக்குப் பின் வந்த அல்லாவுத்தீனும் ஆர்வத்துடன் கல்விக்கு ஆக்கங் கொடுத்து வந்தார். பார்னி (Barni) என்பவர் 'அலாவுத்தீன் ஆட்சிக் காலத்தில் மிகவும் வியப்பான செய்தி எல்லா நாடுகளிலிருந்தும் பெரிய அறிஞர்களும்,எல்லாக்கலைகளிலும் விஞ்ஞானத்திலும் வல்லபேராசிரியர்களும் மிகுந்த எண்ணிக்கையாகக் குழுமியிருந்ததேயாகும். இணையில்லாப் பேராற்றல் வாய்ந்த இப்பேரறிஞர்களால் தலைநகரான தில்லி கெய்ரோவுடன் அறிவுத்துறையில் போட்டியிட்ட பாக்தாத்தின்பொறுமைக்காளாகிக் கான்ஸ்டான்டிநோபிலுக்கு (Constantinople) இணையான

Koviloor Acadamy

பெருமை பெற்றுத் திகழ்ந்தது' என்று கூறியுள்ளார். பக்தியும் கல்வியறிவும் மிக்க நிஸாம்-உத்தீன் ஔலியா (Nizam-ud-din-Auliya) போன்ற பல அறிஞர்கள் இந்த ஆட்சிக்காலத்தில் சிறந்து விளங்கினர். கியாஸ் உத்தீன் துக்ளக்கூட கற்றறிந்தோரை ஏத்தினுர்.கல்வித்தகுதிகள் மிகப் படைத்திருந்த முகம்மது பின் துக்ளக் வேடிக்கையான மனோபாவத்துடன் சில திட்டங்களைச் செய்திருப்பதுடன் கவிஞர்களையும் தருக்கம் வல்லாரையும், தத்துவ அறிஞர்களையும், மருத்துவர்களையும் ஆதரித்தார். அவர்களுடன் அரசவையில் பல பொருள்களைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தினுர். அவர் காலத்தில் விளங்கிய மிகவும் குறிப்பிடத் தக்க கல்வியறிஞர் மௌலானு மொய்நுத்தீன் உம்ரானி (Maulana Muaiyyan-ud-din-Umrani)என்பவராவர். அவர் ஹுசைனி, (Husaini), தல்கிஸ் (Talkhis), மிப்தா (Miftah) முதலியவற்றிற்கு விளக்கவுரைகள் எழுதினுர். பதுஹாத்-இ-பிரோஸ் ஷாஹி (Fat-uhat-i-Firuz-shahi) என்ற நூலின் ஆசிரியரான பிரோஸ் ஷா கல்வியின் வளர்ச்சியில் பெருத்த ஆர்வங்காட்டினுர். மசூதிகளுடன் இணைந்த பல கல்லூரிகளைத் தோற்றுவித்தார். அவர் காலத்துப் பல கல்வியறிவாளர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள் காஸி அப்துல் முக்ததிர் ஷானிஹி (Qazi Abdul Muqtadir Shanihi), மௌலானு காஜகி (Maulana Khwajagi), அகமத்து தானேஸ்வரி (Ahmad Thanesvari) என்போராவர். லோடி அரசர்களில் சுல்தான் சிகந்தர் ஒரு கவிஞராக விளங்கினுர். அவர் கல்வி வளர்ச்சிக்குப் போதிய ஊக்கத்தைக் கொடுத்தார். பாமினி இராச்சியத்தின் அரசர்களில் பெரும்பாலோரும் மற்ற சுதந்திர முஸ்லிம் அரச மரபினரும், பிஜப்பூர், அகமத்நகர், கோல்கொண்டா, மாளவம், ஜான்பூர், வங்காளம், மூல்தான் முதலிய நாடுகளின் ஆட்சியாளர்களும் இலக்கியத்தை வளர்த்தனர். இந்துக்களால் பெரும்பாலும் கவனிக்கப்படாதிருந்த கல்வித் துறையில் முஸ்லிம் நூலாசிரியர்கள் தங்கள் திறமையைக் காட்டினர். அவர்கள் குறிய உரைநடையில் முதல் தரமான வரலாற்று நூல்களை எழுதினர். இவ்வாறு இஸ்லாமிய உலகின் பொது வரலாற்றைக் கூறும் தபகாத்-இ-நாசிரி (Tabaqat-i-Nasiri) என்ற நூலை மின்ஹாஜ் உத்தீன் எழுதினுர். அந்நூல், ஆசிரியரை ஆதரித்த சுல்தான் நாசர் உத்தீன் மகம்மத்தின் பெயரில் வழங்கப்பட்டு வந்தது. அமீர் குஸ்ராவின் வரலாற்று மெஸ்னவிஸ் (Mesnevis) மிகச் சிறந்த வரலாற்றுச் செய்திகள் அடங்கியது. அவருடைய நூலான 'தாரிக்கி அலாயி' (Tarikh-i-Alai) என்பது சிறப்பாக 'அலாவுத்தீன்கில்ஜியின் முதல்சில ஆண்டுகளின் ஆட்சிக்காலத்தைச் சுவைபட விளக்கும் செய்திகளைக் கொண்டுள்ளது.' இக்காலத்து மிகப் புகழ் பெற்ற வரலாற்றறிஞர் முகம்மது பின் துக்ளக், பிரோஸ்ஷா இவர்களின் சமகாலத்தவரான ஸியாவுத்தீன் பார்னி (Zia-ud-din-Barni) என்பவர். பிரோஸ் ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஷம்ஸ்-இ-

Koviloor Acadamy


ஸிராஜ்-அபிப் (Shams-i-Siraj-Afif) என்பவர் எழுதிய தாரிக்-இ-பிரோஸ் ஷாஹியும் (Tarikh-i-Firuz Shahi), முஹம்மது பின் துக்ளக் இறந்து எண்பது ஆண்டுகளுக்குப்பின் யஹியா பின் அகமத் ஸர் ஹிந்தி (Yahiya bin Ahmad Sarhindi) என்பவரால் எழுதப்பட்டுப் பிற்கால எழுத்தாளர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்ட தாரீக்-இ-முபாரக் ஷாஹியும் (Tarikh-i-Mubarak Shahi) இக்காலத்து மிகப் புகழ் பெற்ற இரண்டு வரலாற்று நூல்களாகும்.

உ கலையும் கட்டிடக்கலையும்

பெர்கூசன் (Fergusson) போன்ற சில அறிஞர்கள் கருதுவது போல அந்தக்காலத்துக் கட்டிடக் கலையை 'இந்தோ-சாரசெனிக்' (Indo-Saracenic) அல்லது 'பதான்' (Pathan) கலை என்று கூறுவது பொருத்தமில்லாதது. அதன் 'உயிரும் உடம்பும்' முழுதும் இந்தியக் கலையே என்று ஹாவல் (Havell) என்பவர் நம்மை நம்பச்சொல்லுமாறு கூறுவதும் ஒப்புக்கொள்ளத்தக்கதன்று. உண்மையில் அக்காலத்துப் பண்பாட்டின் சில கூறுகள் காணப்பட்டது போலவே, கட்டிடக் கலையும் இந்திய பாணியும் இஸ்லாமியப் பாணியும் சேர்ந்த கலவையாகவே இருந்தது எனலாம். 'இந்திய இஸ்லாமியக் கலை என்பது இடத்திற்கேற்ற சில மாறுதல்களைக் கொண்ட இஸ்லாமியக் கலையே' என்றும், அது வெறும் 'இந்துக் கலையின் திருந்திய வடிவம்' அல்ல என்றும் சர் ஜான் மார்ஷல் (Sir Jhon Marshall) கூறியுள்ளார். 'பொதுவாக நோக்குமிடத்து இந்திய-இஸ்லாமியக் கட்டிடக் கலை இருவகையான மூலங்களையும் பெற்றிருக்கிறது. எனினும் இரண்டும் எப்போதும் சம அளவில் கலந்திருந்தன என்று கூறமுடியாது' என்றும் அவர் கூறியுள்ளார். கி.பி. ஏழாம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்நாட்டில் மெதுவாக இஸ்லாமியச் செல்வாக்கு ஏற்பட்டு வந்ததெனினும் அதற்கு முன்பு பிராமணிய, பௌத்த, சமணக் கலை முறைகள் இருந்தன என்பதில் ஐயமில்லை. அதே சமயத்தில் இஸ்லாமியர் கலை என்று பொதுவாக அழைக்கப்படுவது உண்மையில் ஒரு தனிப்பட்ட ஓரினக் கலை என்று கருதப்பட முடியாது என்பதை நாம் மறக்கக்கூடாது. இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்கள் அராபியர், பாரசீகர், துருக்கியரைப் போலவே தங்கள் சமயத்தில் மேற்கு மத்திய ஆசியாவின் வெவ்வேறு பகுதிகள், வட ஆப்பிரிக்கா, தென்மேற்கு ஐரோப்பா முதலிய இடங்களில் விளங்கிய கலைகளைக் கொண்டு வந்தனர். இந்தக் காலத்தில் இந்தக் கலைகளும் இந்தியர்க்கேயுரிய பழைய கலை முறைகளும் மதத்திற்கும் தனி நபர்களின் விருப்பத்திற்கும் ஏற்ப ஒன்றுய்க் கலந்தன. இதனுல் புதிய இந்தியக் கட்டிட முறைகள் வளர்ந்தன. அவை ஜான்பூர், வங்காளம், பீஜப்பூர், குஜராத் முதலிய வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேருய்க் காணப்பட்டன. தில்லியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை

Koviloor Acadamy

மிகுதியாயிருந்ததால் தில்லிக் கட்டிடக் கலையில் இஸ்லாமியச் செல்வாக்கு மிகுதியாயிருந்தது. 'மாருக ஜான்பூரிலும், தக்காணத்திலும் அந்நாட்டுக்குரிய முறைகள் பெரும்பான்மையாகக் கையாளப்பட்




குதுப்மினர், தில்லி

டன. வங்காளத்தில் வெற்றியுற்ற அரசர்கள் செங்கல்லினல் கட்டும் முறையை மேற்கொண்டதோடு இந்து முறைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு கட்டிட அமைப்புகளைச் செதுக்கியும், பல்வேறு வடிவில் அமைத்தும் அவற்றை அலங்கரித்தனர். அது போலவே

Koviloor Acadamy

மத்தியகால இந்தியாவில் மிக மிக அழகான கட்டிடங்களைத் தந்த அழகிய குஜராத்தி முறையை மேற்கு இந்தியாவில் அப்படியே பெரும்பாலும் ஏற்றுக்கொண்டு அமைத்தனர். இமாலயப் பகுதி




தில்லியில் குவ்வாதுல் இஸ்லாம் மசூதியின் மேல் குதுப்-உத்தீன் ஐபக்கின் வளைவுத்திரை

யைச் சேர்ந்த காஷ்மீரில் மிக நெடுங்காலமாகவே வழங்கி வந்திருக்கும் மனங்கவரத் தக்க மரத்தாலான கட்டிடக் கலையையும் அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டனர்.

ஒரு சில காரணங்களால் இவ்வாறு அன்னிய நாட்டுக் கட்டிடக் கலை முறைகளும், உள்நாட்டுக் கட்டிடக்கலை முறைகளும் ஒன்ருய்க் கலக்க முடிந்தன. முஸ்லிம்கள் கைவினைஞர்களையும் சிற்பிகளையுமே அமர்த்திக் கொள்ளவேண்டிய கட்டாயத் தேவை இருந்தது. அவ் விந்தியர்கள் தங்கள் நாட்டில் அக்காலத்தில் வழங்கி வந்த கலை மரபுகளை ஒட்டியே தங்கள் கலைப் பணியைச் செய்தனர். மேலும் முஸ்லிம் படையெடுப்புகளின் முதற்பகுதிக்காலத்தில் இந்து, சமணக் கோவில்களின் பொருள்களைக் கொண்டே மசூதிகள் கட்டப்பட்டு வந்தன. சில சமயங்களில் அக்கோயில்களே வெற்றி பெற்ருேரின் விருப்பத்திற்கேற்ப ஓரளவு மாற்றியமைக்கப்பட்டன. மேலும் இந்திய இஸ்லாமிய முறைகளில் மிகப் பெரிய வேறுபாடுகள் காணப்பட்டாலும் இரண்டு விஷயங்களில் அவற்றுக்கிடையே ஒற்றுமை காணப்பட்டதுடன், அவை ஒன்ருய் இணையும் வாய்ப்பும் காணப்பட்டது. பல இந்துக் கோயில்களுக்கும் முஸ்லிம் மசூதிகளுக்குமிடையேயுள்ள ஒரு பொதுப்பண்பு ' அவற்றிற்கு

Koviloor Academy

முன்பு மண்டபங்கள் அல்லது மண்டபத்தூண்கள் சூழ்ந்த திறந்த வெளி இருப்பதே. இந்த முறையில் கட்டப்பட்ட கோயில்கள் மசூதிகளாக மாற்றுவதற்கு எளிதாக இடந்தந்தன. வெற்றியாளர்கள்




குப்வதுல் இஸ்லாம் மசூதி, தில்லி (திரைப்பரப்பில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள்.)

மசூதிகளாக மாற்றுவதற்கு முதலில் இடங்கொடுத்தவை அவ்வகைக் கோயில்களேயாகும். அடுத்ததாக இஸ்லாமிய இந்துக்கலைகள் இரண்டும் இயல்பாகவே அலங்கரிப்பில் சிறந்திருப்பதும் அடிப்படைப் பண்பாகும். இரண்டுவகைக் கலைகளிலும் அலங்கரிப்பு மிக இன்றியமையாததாயிருந்தது. இரண்டு கலைகளின் சிறப்பும் அவ்வலங்கரிப்பைப் பொறுத்தே அமைந்திருந்தது.'

தில்லி பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாயிருப்பவை குதுப் மசூதிகளே. அவற்றுள் மிகப் புகழ் பெற்றது குதுப்மினார். அது தனிநிலைக் கோபுரங்களும், அழகிய கல்வெட்டு எழுத்துக்களும்

Koviloor Acadamy


தூபிகளைத் தாங்கும் தூண்களும் கொண்டு விளங்குகிறது. நிஸாம்-உத்தீன் ஒளலியாவின் தர்க்காவிடத்தில் இருக்கும் ஜமாத்கானு மசூதி (Jamaat Khana Masjid) குதுப்மினாரிடத்தில் இருக்கும் அலாய் தர்வாஜா (Alai Darwaza) என்ற இரு முக்கியமான கட்டிடங்களும்




நிஸாம் உத்தீன் ஒளலியாவின் தர்க்கா மசூதி

இக்காலத்து இரண்டு முக்கியமான கட்டிடங்கள். அவை இந்து கட்டிடக்கலையிலும் முஸ்லிம் கலைமுறைகள் ஆதிக்கம்பெற்றுவளர்ந்து வந்ததைக் காட்டுகின்றன. அடிமை அரசர், கில்ஜி ஆட்சிக் காலங்களின் சிறப்புக் கூறுகளாக விளங்கிய கலை மாண்பும், வளமும், வகைப்பாடும், துக்ளக்காலத்துக் கட்டிடக்கலையில் காணப்படவில்லை. துக்ளக் காலத்தில் கட்டிடங்கள் எளிமையாயும், கற்பனை வளமின்றியும், சாதாரணமாயும் இருந்தன. இதற்குக்காரணம் துக்ளக்குகளின் மதக்கொள்கைகளும், அவர்கள் காலத்தில் நாட்டில் பொருள்வளமின்மையுமேயாகும். சய்யித்துகள், லோடிகள் காலத்தில் கில்ஜிக் காலத்துக் கண்கவர் கட்டிடமுறையை மீண்டும் கொண்டுவர முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் இவை ஓரளவே வெற்றிபெற்றன. ‘துக்ளக்கு காலத்துச் சுவை இறந்த பான்மையை அக்காலக் கட்டிடக் கலை அறவே விட்டுவிட முடியவில்லை.’

Koviloor Academy




தில்லியிலுள்ள குதுப்மினரில் அலாயிதர்வாஜா



தில்லியில் ரஜாப்பின் மகன் பெரோஸ் ஷாவின் கல்லறை


Koviloor Academy

கி.பி. 1400-க்கும் 1478-க்கும் இடையில் இப்ராகிம் மகமுத், ஹுஸேன் ஷர்க்கி, இவர்களின் ஆட்சியில் ஜான்பூரில் கட்டிடக்கலையில் ஒரு புது முறை தோன்றிற்று. அது இந்துக் கலையின் செல்வாக்கையே



அடாலா தேவி மசூதி, ஜான்பூர்

ஐயத்திற் கிடமின்றிக் காட்டுகிறது. மாபெரும் சரிவான சுவர்கள், சதுரத் தூண்கள், சிறிய உயர்மாடங்கள், மாடத்தொகுதிகள் இவை



சோட்டா சோனமசூதி, கௌர்

Koviloor Acadamy

இந்துக் கலையின் சிறப்பு அம்சங்களாகும். இவை இந்து கொத்தர் களால் அமைக்கப் பட்டவை. ஜான்பூரிலுள்ள மசூதிகளில் வழக்க மான கோபுரமாடங்கள் காணப்படவில்லை. உண்மையில் ஜான்பூரி லுள்ள பல கட்டிடங்கள் பழய கட்டிடப் பொருள்களைக் கொண்டு புதிய ஒரு நோக்கத்தோடு கட்டப் பட்டவையேயாகும். கி.பி. 1377-ல் நிறுவப்பட்டுக் கி.பி. 1408-ல் முடிக்கப்பட்ட அடாலாதேவி மசூதி (Atala Devi Masjid) ஜான்பூர் பாணிக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.




பரா சோனு மசூதி, கௌர்

வங்காளத்திலும் கட்டிடக்கலையில் கலப்பு முறை வளரத்தொடங்கி யது. முக்கியமாகச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. 'கற்கள் குறைந்த அளவே பயன் படுத்தப்பட்டன. குறுகிய தூண்களின் மேல் கூரியவளைவுகள் அமைக்கப்பட்டன. மூங்கில் அமைப்புகளைப் பார்த்தும் இந்துக்கள் கட்டிடச் சுவர்களின் மீது வழக்கமாக எழுப்பி வந்த வளைவுப் பகுதிகளைத் தழுவியும் முஸ்லிம்கள் தங்கள் கட்டிடங் களில் அமைத்தனர். தாமரை போன்ற அழகாகச் செதுக்கி அலங் கரித்து அமைக்கப்பட்ட தத்துவ அடையாளப் பொருள்களும் அதில் காணப்பட்டன. கி.பி. 1368-ல் சிகந்தரால் கட்டப்பட்டதும் 400 தூபிகளையுங் கொண்டதுமான பாண்டுவாவிலுள்ள (Pandua) ஆதினு மசூதி (Adina Masjid) அதன் அழகுக்கும் கம்பீரத்துக்கும் பேர் போனதாய் விளங்குகிறது. இம்மாகாணத்தின் மற்றப் புகழ் பெற்ற மசூதி கள் கி.பி. 1493-1519-க்குள் ஹுஸேன் ஷாவின் ஆட்சிக் காலத்தில் வலி முகம்மதுவினால் கட்டப்பட்ட சோட்டா சோனு மசூதி (சிறிய தங்க

Koviloor Academy

மசூதி) (Chhota Sona Masjid), 1526-ல் கௌர் என்ற நகரில் நுஸ்ரத் ஷாவினால் கட்டிமுடிக்கப்பட்ட பரா சோனா மசூதி (Bara Sona Masjid) (பெரிய தங்க மசூதி), அதே சுல்தானால் கி.பி. 1530-ல் கட்டப்பட்ட கதம் ரசூல் (Qadam Rasul) என்பவையாகும்.

குஜராத் மாகாணத்திலும் அழகிய கட்டிடக்கலை முறை வளர்ந்து வந்தது. முஸ்லிம்கள் வருவதற்கு முன்பே ஏற்கெனவே அற்புத மான கலை முறை அந்நாட்டில் வளர்ந்திருந்தது. வெற்றியுற்றோர் கட்டிய கட்டிடங்கள் எல்லாம் அந்தக்கலை முறையின் செல்வாக்கை ஐயத்திற் கிடமின்றிக் காட்டுகின்றன. சில சமயங்களில் மட்டும் அவர்கள் தத்துவ அடையாளங்களைக் காட்டும் வளைவுகளை அமைத் தனர். இவ்வாறு கி.பி. 1411-1441-ல் அகமது ஷா என்பவரால் பழைய பாழடைந்த கட்டிடங்கள், கோயில்கள் முதலியவற்றின்




பாண்டுவாவில் உள்ள ஆதினா மசூதி

பொருள்களைக் கொண்டு கட்டப்பட்டது. புதிய தலை நகரமான அகமதா பாத்தின் கட்டிடங்களில் கவின் மிக்க மரத்தில் செதுக்கிய சிற்ப வேலைப்பாடுகளையும், நுண்ணிய கல்பின்னல் வேலைகளையும், அலங்கரிப் புக்களையும் நாம் காண்கிறோம். கி.பி. 1411-ல் தொடங்கப்பட்ட ஜாமி மசூதியில் 15 கல் தூபிகளும் அவற்றைத் தாங்கும் 260 தூண்

Koviloor Acadamy

களும் உள்ளன. அத்தூபிகள் இந்திய நாட்டுக்குரிய முறையில் கிடக்கையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. 'மேற்கு இந்தியாவின் தொல்பொருள் சர்வே' என்ற தலைப்பில் ஐந்து தொகுதிகளில் பண்டை இந்தியாவின் இடைக்காலக் கட்டிடக் கலையைப் பற்றி மிக மிக விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள டாக்டர் பர்ஜெஸ் (Dr. Burges) அவர்கள் 'இந்தக் கலை முறை உள்நாட்டுக் கலைக்குரிய எல்லா அழகும் கைவண்ணமும் நிறைந்திருப்பதுடன் உள்நாட்டினரிடம் காணப்படாத ஒருவகைக் கம்பீரமும் பொருந்தி உள்ளதாயிருக்கிறது' என்று பொருத்தமுறக் கூறியுள்ளார். அகமத் ஷா ஆட்சியாளர்கள் அரசாட்சிக்கு வந்ததிலிருந்து குஜராத்தில் கட்டப்பட்ட எண்ணில்லாத மசூதிகளும் கல்லறைகளும் பழைய இந்தியக் கலை மரபுப் பண்பு மிக்குடையதாகும். சில சமயங்களில் மட்டும் அப்பண்பு இஸ்லாமைப் பின்பற்றுவர்களின் விருப்பத்திற்கேற்பச் சில இடங்களில் திருத்தியமைக்கப்பட்டது.




ஹூஷாங் ஷாவின் கல்லறை

மாளவ இராச்சியத்தின் பழைய தலை நகரான தாரில் (Dhar) இரண்டு மசூதிகள் முழுதும் பழைய கட்டிடங்களின் பாழடைந்த பொருள்களைக் கொண்டே கட்டப்பட்டன. இந்த மசூதிகளின் தூபிகளும் தூண்களும் இந்து வடிவிலேயே அமைக்கப் பட்டன. ஆனல் விரைவில் மாற்றப்பட்ட தலை நகரமான மாண்டுவில் (Mandu) கட்டப்பட்ட கட்டிடங்களில் தில்லியில் காணப்பட்டதைப் போல

Koviloor Acadamy

முஸ்லிம் கலை மரபுகளின் செல்வாக்கே மிகுதியாய் இருந்தது. உள் நாட்டு வடிவங்களைக் 'கடன் வாங்குதல் அல்லது பார்த்து அமைத்தல்' அறவே நீக்கப்பட்டன. கட்டிடங்கள் கூரிய வளைவு முறையிலேயே விளக்கமாய் இருக்குமாறு கட்டப்பட்டன. நர்மதைக்கு எதிர்புறத்தில் உள்ள பரந்த மேட்டுப் பூமியில் அமைந்திருந்த மாண்டு என்ற கோட்டைகள் சூழ்ந்த நகரில் கட்டப்பட்ட பல அற்புதமான கட்டிடக்கலையின் அழகு வாய்ந்த கட்டிடங்களுள் கீழ்வருபவை குறிப்பிடத்தக்கவை: ஜாமி மசூதி, இது ஹுஷாங்கினால் திட்டம் தீட்டப் பட்டுத் தொடங்கப்பட்டது. மகமத் கல்ஜியால் கட்டி முடிக்கப் பட்டது. ஹிந்தோலா மஹால் (Hindola Mahal), ஜஹாஜ் மஹால் (Jahaj Mahal), ஹுஷாங்கின் கல்லறை, பஸ், பஹதூர், ருபாமதி இவர்களின் அரண்மனைகள் என்பனவாம். இவற்றிலுள்ள பல பெரிய கட்டிடங்களில் சலவைக் கல்லும் மணற்கல்லும் பயன் படுத்தப் பட்டன.


காஷ்மீரத்து முஸ்லிம் சுல்தான்கள் கல்லினாலும் மரத்தினாலும் அமைக்கும் கட்டிடக்கலையையே தொடர்ந்து மேற்கொண்டு வந்தனர். ஆனால், அவற்றுடன் 'படிமுறையான வடிவங்களையும், இஸ்லா முடன் தனிச் சிறப்பியல்புகள் கலந்துள்ள அலங்கார முறைகளையும் இணைத்தனர். இப்படியாக இங்கேயும் இந்து முஸ்லிம் கலைக்கருத்துக் கள் கலப்பதை நாம் காண்கிறோம்.



பெரோஸ் ஷா பாவனியின் கல்லறை, குல்பர்கா

Koviloor Academy

தென்னிந்தியாவில் பாமனிகள் (Bahmanids) கலை, இலக்கியம் அறிவியல் இவற்றின் ஆதரவாளர்களாக இருந்தனர். அவர்களுடைய கட்டிடக்கலை இந்திய, துருக்கிய, எகிப்திய, பாரசிகக் கூறுகள் முதலியவை கலந்த கலவைக்கலையாக விளங்கியது. பாரசீகக் கலைக் கூறு குல்பர்காவில் உள்ள ஜாமி மசூதி, தௌலதாபாத்தில் (Daulatabad) உள்ள சாந்த் மினர் (Chand Minar) (1435) பிடாரில் (Bidar) உள்ள மஹமத் கவானின் கல்லூரி (1472) முதலிய சில கட்டிடங்கள் பழைய கோயில்கள் இருந்த இடங்களில் கோயில்களின் பொருள்களைக் கொண்டே கட்டப்பட்டன. அதனால் இந்துக் கலை முறையைத் தவிர்க்க முடியவில்லை. பாமனி இராச்சியத்தில் உத்



முகம்மது ஆதில் ஷாவின் கல்லறை, பீஜப்பூர்

தியோகங்களைப் பெற்ற மேற்கு ஆசிய ஆப்பிரிக்க வீரர்களின் மூலமாக துருக்கிய எகிப்திய கூறுகள் நுழைந்தன. பதினைந்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பாரசீகத்திலிருந்து திரள் திரளாகக் குடி புகுந்த பாரசீகர்கள் மூலம் பாரசீகக் கூறும் வந்து சேர்ந்தது. எனினும் பதினைந்தாம் நூற்றுண்டின் முடிவிலிருந்து தக்கணத்தின் சொந்தக்கலை மீண்டும் தலைதூக்கத் தலைப்பட்டது. அடுத்த நூற்றுண்டில் பீஜப்பூரில் ஆதில் ஷாஹிகளால் கட்டப்பட்ட கட்டிடங்களை இந்தியக் கலைஞர்களும் கைவினைஞர்களும் கட்டினர். அதனுல் 'வெளிநாட்டுச் செல்வாக்கிலும் இந்தியக் கலைப்பண்புச் சிறப்பே மேலோங்கி, இக்கலைப் படைப்புகளில் மேலும் மேலும் ஆழமாக முத்திரையிட்டு விளங்கியது இயல்பே' என்று சர் ஜான் மார்ஷல்

Koviloor Academy

கூறுகிறார். விசயநகர இராச்சியத்தில் பேரொளியுடன் விளங்கிய கலை, கட்டிடக் கலையைப்பற்றி நாம் ஏற்கெனவே விளக்கமாகப் பார்த்திருக்கிறோம்.

இவ்வாறு அரசியல் உறவுகளில் சிறிது கசப்பு இருந்தாலும் துருக்கிய-ஆப்கானியர் காலத்தில் சமுதாயம், பண்பாடு, கலை ஆகிய துறைகளில் இந்து, இஸ்லாமிய நாகரிகங்கள் ஒன்றுபட்டு இசைவுப்பாடும் (harmony) ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளும் பான்மையும் ஏற்படுமாறு செய்தன என்பதைக் காண்கிறோம். இந்த இசைவுப்பாடு முகல் அரசர்களில் மிகப் பெரிய அரசரான அக்பர் காலத்தில் முன்பு என்றுமில்லாத அளவுக்கு மிகுதியாக வளர்ந்தது. அது அக்பருக்குப் பின் வந்தோர் காலத்திலும், பிற்கால முகல் அரசர்கள் காலத்திலும் கூட முற்றிலும் மறையவில்லை.

இடைக்காலத்து சுல்தான்கள் பிரிந்து வாழும் மனப்பான்மையில் தீவிரமாக இருந்தாலும் பிற்காலத்திய இருவகை நாகரிகங்களும் இணைந்து தற்கால நிலைக்கு முன்னோடியாகும் அறிகுறிகளைக் காட்டின. மக்களை முன்னேற்று விக்கவேண்டும் என்னும் உயர் குறிக்கோள் கொண்டு இந்திய ஆசாரியர்கள் தன்னலமின்றிப் போதித்து வந்ததாலும், சூபி முனிவர்களும் அறிஞர்களும் பொறுத்துக்கொள்ளும் மனப்பான்மையை வற்புறுத்தி வந்ததாலும், இருவகை நாகரிகப் பிணைப்பு எளிதில் ஏற்பட்டது எனலாம். இந்திய வரலாற்றில் பாபரின் படையெடுப்புக்குச் சிறிதுமுன்பு காணப்பட்ட ஒரு சிறப்பு என்னவெனில் வெளிநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து விசயநகரம், ஒரிஸ்ஸா, மேவார் முதலிய புதிய இந்திய அரசுகள் தோன்றியமையேயாகும். இடைக்கால முஸ்லிம் அரசு வீழ்ச்சியுற்ற பிறகு தோன்றிய சுதந்திர முஸ்லிம் இராச்சியங்களை ஆண்டவர்கள் எல்லாம் வெளிநாட்டினர் என்று கூறிவிட முடியாது. அகமத்நகர், பீரார்நாட்டு ஆட்சியாளர்கள் எல்லாம் இந்நாட்டினரேயாவர். இந்தச் சமயதில் தோன்றிய இந்து அல்லது முஸ்லிம் அரசுகள் எல்லாம் 'தற் சிறப்பை' (Self-determination) நிலைநாட்டுதற்குத் தோன்றிய உள்நாட்டு இயக்கங்களையே காட்டுகின்றன. ஆனால் அவர்களுடைய வாய்ப்புகள் எல்லாம் பாபரைத் தலைவராகக்கொண்ட மற்றொரு துருக்கிய இடையீட்டால் தவிடுபொடியாயின. பாபரின் படையெடுப்பு இந்திய வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது எனலாம்.

Koviloor Acadamy

Koviloor Acadamy

இரண்டாம் பகுதி

மடல் 2

முகலாயப் பேரரசு
THE MUGHUL EMPIRE

Koviloor Acadamy

Koviloor Acadamy

1. இந்தியாவில் மேலாண்மை செலுத்த முகலாயருக்கும் ஆப்கானியருக்கும் இடையே நிகழ்ந்த போட்டி கி.பி. 1526–1556

1. பாபர் (Babur)

கி.பி. 1526 முதல் 1556 வரை இந்நாட்டில் மேலாண்மை செலுத்துவதற்காக முகலாயருக்கும் ஆப்கானியருக்கும் இடையே நடைபெற்ற போட்டியை இந்திய வரலாறு சிறப்பாக எடுத்துரைக்கிறது. முந்திய முகல் (மங்கோலிய) இடையீடுகளினால், இந்தியாவில் துருக்கிய-ஆப்கானிய சுல்தான்களுக்குச் சில சமயங்களில் தொல்லை கொடுத்துவந்த இந்திய மக்கள் தொகையில் புதிய கூறுகிய 'புதிய முசல்மான்கள் வந்து குடியேறியதைத்தவிர வேறு எந்த உருப்படியான பயனும் உண்டாகவில்லை. ஆனால், அச்சுல்தான்களின் இராச்சியத்தின் ஒரு மாகாணமான பஞ்சாப்பைக் கைப்பற்றிக் கொண்ட தைமூரின் படையெடுப்பால் சுல்தானியர்களின் பலவீன ஆட்சி ஆட்டங் கொடுக்கத்தொடங்கியது. அவருடைய வழித் தோன்றலான பாபர் முறையாக வட இந்தியாவை வென்று, புதிய துருக்கியின் ஆட்சியை[1] நிலைநாட்டுவதற்கு முயன்றார். ஆனால், அவருடைய முயற்சிகள் அவருக்குப் பின் வந்த அவருடைய மகன் ஹுமாயூன் காலத்தில் தோன்றிய ஆப்கானிய மறுமலர்ச்சியால் தோல்வியுற்றன. எனினும் 1556-ஆம் ஆண்டில் துருக்கிய ஆட்சி மீண்டும் நிலைபெறத் தொடங்

[1]முகலாயர் எனப்படுபவர் உண்மையில் 'சகாதையின்' பேரால் அழைக்கப்பட்ட துருக்கியப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். துருக்கியரின் நாடான துருக்கிஸ்தானத்தையும், மத்திய ஆசியாவையும் கைப்பற்றுவதற்காக வந்த மங்கோலியத் தலைவரான புகழ் பெற்ற செங்கிஸ் கானின் இரண்டாவது மகன்தான் சகாதை. இந்தியாவில் 'முகலாய ஆட்சி நிறுவப்பட்டமை இஸ்லாமிய வரலாற்றிலும், உலக வரலாற்றிலும் முக்கிய நிகழ்ச்சி' என்று கூறத்தகும். ஏனெனில் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியோர் உலகின் பிறபாகங்களில் வெற்றியுற்று வந்த அச்சமயத்தில் இந்தியாவில் அது பெற்ற முதல் வெற்றி சிறப்புடையதாகும். கி.பி. 1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டி நோபிலைக் கைப்பற்றினர். மாபெரும் சுலைமான் (1520-1566) தென்கிழக்கு ஐரோப்பா வரை துருக்கிய இராச்சியத்தின் அதிகாரத்தைப் பரப்பினார். பாரசீகத்தில் இஸ்மாயில் சபவி (1500-1526) புகழ்பெற்ற சபவி ராச்சியத்தை நிலை நாட்டுவதற்குக் கால்கோள் விழா நடத்தினார்.

Koviloor Acadamy

யெது. அது அக்பர் காலத்தில் படிப்படியாக வளர்ச்சியுற்று விரிந்தது. முகலாயர்கள் இந்தியரைக் கைப்பற்றியதில் உண்மையிலேயே சில நிலைகள் உள்ளன. முதல் நிலை (1526-1530) அவர்கள் ஆப்கானியரை அடக்கி ஒடுக்குவதில் ஈடுபட்ட முயற்சியாகும். இரண்டாம் நிலை (1530-1540) ஹுமாயூன் ஆட்சியில் தொடங்கியது. அவர் மாளவம், குஜராத், வங்காள நாடுகளைக் கைப்பற்றச் செய்த முயற்சிகள் பயனற்றுப்போயின. மேலும் ஷெர்ஷா (Sher Shah) அவரை இந்தியாவிலிருந்தே விரட்டியடித்தார். இதனால் ஆப்கானியரின் வலிமை புத்துயிர் பெற்றது. மூன்றும் நிலை (1545-1556) ஹுமாயூனால் மீண்டும் முகலாய ஆட்சி நிறுவப்பட்டதும் அக்பரால் ஒரு நிலைப் படுத்தப்பட்டது.

சகாதைத் துருக்கியரான (Chaghatai Turk) பாபர் தந்தை வழியில் தைமூரின் வழிவந்தவர்; தாய் வழியில் செங்கிஸ் கானுடன் (Chingiz Khan) தொடர்புடையவர். 1494-ல் அவர் தம் பதினொன்றும் வயதில் தந்தையிட மிருந்து, இப்போது சீனத் துருக்கிஸ்தானத்தின் ஒரு மாகாணமான பர்கானு (Farghana) என்ற சிறு பிரதேசத்தை மரபுரிமையாகப் பெற்றிருந்தார். ஆனால் அவருடைய இளமை வாழ்க்கையில் பலவித இடையூறுகள் நேர்ந்தன. உண்மையில் அது அவருக்கு மறைமுகமான நன்மையாகவே அமைந்தன. விதியின் மாறுதல்களை எதிர்த்துப் போரிடுவதற்குப் போதிய பயிற்சி அளித்தது. தைமூரின் சிங்காதனத்தை மீண்டும் பெறவேண்டும் என்ற ஆசை அவரிடம் இருந்துவந்தது. ஆனால், அவருடைய உறவினர்களும், உற்றார்களும் அவ்வாசை நிறைவேற வொட்டாமல் இடையூறுகளை உண்டாக்கி வந்தனர். உஸ்பெக் (Uzbeg) தலைவர் ஷெய்பானி கானும் (Shaibani Khan) அந்தச் சிங்காதனத்துக்குப் போட்டியிட்டு வந்தார். தம் உள்ளத்தில் போற்றி வந்த சாமர்க் கண்டு (Samarqand) என்ற நகரைப் பிடிப்பதற்காகப் பாபர் 1497-லும் 1503-லும் செய்த முயற்சிகள் இரண்டு தடவையிலும் தோல்வியில் முடிந்தன. அவருடைய துரதிர்ஷ்டவசத்தால் அவருக்குரிமையான தந்தை வழிச் சொத்தான பர்கானுவும் பறிபோயிற்று. அதனால் அவர் ஓராண்டு வீடில்லாத நாடோடியாகக் காலத்தைக் கழித்தார். ஆனால், இப்பெருந்துன்பக் காலத்திலும் தம் பெருமையுடைய முந்தையரான தைமூரைப் போலவே ஹிந்துஸ்தானத்தை வெல்ல வேண்டுமென்ற தீரமான திட்டத்தைத் தீட்டிவைத்துக்கொண்டிருந்தார். தைமூரின் இந்தியப் படையெடுப்புகளின் வரலாறுகளையெல்லாம் அவர் தாம் சிலகாலம் புகலிடமாகத் தங்கியிருந்த ஒரு கிராமத் தலைவரின் அன்னையான நூற்றுப்பதினொரு வயதுடைய கிழவியிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டார். தைமூர் வழியினர் தங்களுக்குரிய பகுதிகளை ஆளமுடியாமல் செய்து வந்த உஸ்பெக்கினரின் இராச்சியத்தின்

Koviloor Acadamy

மற்ருெரு பகுதியில் கலகம் விளைந்தபோது, அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்ட பாபர், கி.பி. 1504-ல் காபூலைக் கைப்பற்றிக் கொண்டார். உஸ்பெக் தலைவர் ஷெய்பானிகானுக்கு எதிராக, பாரசிகத்தின் ஷா இஸ்மாயில் சாபவியின் உதவியை உறுதி செய்ய முயன்று வந்த பாபர் மீண்டும் அக்டோபர் 1511-ல் சாமர்க்கண்டைக் கைப்பற்ற முயன்ருர். ஆனுல் ஷெய்பானிக்குப் பின் வந்த அரசரின் தலைமையில் உஸ்பெக்கினர் கடைசியில் 1512-ல் பாபரைத் தோற்கடித்துவிட்டனர். வட மேற்கில் நாடுகளைக் கைப்பற்ற எண்ணிய ஆசைகள் எல்லாம் நிராசையாகப் போகவே பாபர் தென்கிழக்கே திரும்பித் தம் அதிர்ஷ்டத்தின் பலத்தைப் பார்க்கத்தொடங்கினுர். அத்திசையில் பல முறை படையெடுத்துச் சென்ருர். பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இந்துஸ்தானத்தின் உள்ளே ஊடுருவிச் செல்லுதற்கு வாய்ப்பு ஏற்படும் வரை படையெடுக்கும் பயிற்சியில் வல்லவராகும் முறையில் அவர் தென்கிழக்குத் திசையில் படையெடுத்துக் கொண்டிருந்தார்.

தம்முள் பிணக்குக்கொண்ட ஒரு கூட்டத்தினர் இந்தியாவுக்கு வரும்படி பாபரை அழைத்தபோது, அது அவருக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. பிரபுக்களிடையே ஏற்பட்ட போட்டிகளாலும், அவர்களுடைய பேராசைகளாலும், அவர்களுக்கிடையே ஏற்பட்ட மனவேறுபாடுகள் முதலியவற்ருலும் இந்தியா எவ்வாறு சிதறுண்டு கிடந்தது என்பதை ஏற்கெனவே கண்டிக்கிருேம். தில்லியில் சுல்தான்கள் பெயரளவிற்கு மட்டிலுமே இருந்தனர். தில்லியிலுள்ள சில பிரபுக்கள் தங்கள் பேராசையாலும், பழிவாங்கும் உணர்ச்சியாலும் சுல்தானியத்திற்கு சமாதி வைக்கத் துணிந்துவிட்டனர். அவர்களுள் இருவர் பாபரை இந்தியாவின் மேல் படையெடுத்து வரும்படி அழைக்குமளவிற்குப் போய்விட்டனர். அவ்விருவருள் ஒருவர் பஞ்சாப்பின் பலம்வாய்ந்த பிரபுவான தௌலத்கான் (Daulat khan) என்பவர் ஆவர். அவர் தம்முடைய மகனை திலாவர்கானுக்கு (Dilawar khan) கொடுமைகள் பல செய்த இப்ராஹீம் லோடியின்மீது சீற்றமுற்றிருந்தார். மற்றவர் இப்ராஹீம் லோடியின் மாமனுரான ஆலம்கான் (Alam khan) என்பவர். இவர் தில்லிச் சிம்மாசனம் தமக்கு உரியது என்று உரிமை கொண்டாடினுர்.

அதற்குமுன் சிறிது காலமாகப் பாபர் இந்துஸ்தானத்தின் மீது படையெடுக்கவேண்டுமென்ற அடங்காப் பேராசைகொண்டிருந்தார். இளமைப்பருவத்திலேயே துன்பங்களைச் சமாளிக்கும் பயிற்சி அவருக்குக்கிடைத்திருந்தமையால் வீரத் துணிகரச் செயலில் தம்மை உடனே ஈடுபடுத்திக்கொள்ள அவர் துணிந்தார். உடனே அவர் அழைப்புக்கு இணங்கினுர். பஞ்சாப்பில் நுழைந்தார். 1524-ல் லாகூரை வசப்படுத்தினுர். ஆனுல் இந்தியக் கூட்டாளிகளான தௌலத்கானும் ஆலம்கானும் விரைவில் தங்கள் தவற்றை உணர்ந்தனர். இந்தியா

Koviloor Acadamy

வில் வெற்றிபெற்ற இடங்களைத் திருப்பிக்கொடுப்பதற்குப் பாபர் சிறிதும் விருப்பமில்லாதிருப்பதைக் கண்டதும், அவர்கள் பாபருக்கு எதிராக மாறி விட்டனர். இதனால் அவர் காபூலுக்கு நிர்ப்பந்தமாகத் திரும்பிச்செல்ல நேரிட்டது. மீண்டும் வந்து தாக்குவதற்காக அங்கே படைகளைத் திரட்டிக்கொண்டிருந்தார்.

தாக்குதல் விரைவிலேயே ஏற்பட்டது. நவம்பர் 1525-ல் அவர் காபூலிலிருந்து புறப்பட்டு வந்து பஞ்சாபை வசப்படுத்திக்கொண்டு, தௌலத்கான் லோடியைப் பணியும்படி செய்தார். தில்லியை வெல்லும் வேலை இன்னும் மிகக் கடினமானதுதான். எனினும் அப்பேராசையைப் பாபர் வளர்த்துக்கொண்டே வந்தார் ; எப்படியும் கைப்பற்றி விடுவதென்றே முடிவு செய்தார். அதனால் சிதைந்த ஆப்கானிய இராச்சியத்தின் பெயரளவு ஆட்சியாளராயிருந்த இப்ராஹிம் லோடியை 1526 ஏப்ரல் 21 ஆம் தேதியில், பானிப்பட்டு என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க போர்க்களத்தில், எதிர்த்துக் கடும்போர் புரிந்தார். பாபரிடம் மிகப் பெரிய பீரங்கிப் படையும் 12,000 பேரடங்கிய காலாட்படையும் இருந்தன. ஆனால் பாபரின் மதிப்பீட்டின்படி இப்ராஹிம் லோடியிடம் எண்ணிக்கையில் மிகப்பெரிய, 100,000 படை வீரர்கள் இருந்தனர். ஆனால் பாபருக்கு உள்ளத்து உரனும், ஊக்கமும், சிறந்த தளபதியாகச் செயலாற்றிய அனுபவமும் பேருதவியாக இருந்தன. அவருடைய பகைவரான இப்ராஹிம் லோடியோ, பாபர் சொல்லியதுபோல ‘ அனுபவமில்லாத மனிதராயும், படை இயக்கங்களில் போதிய கவனம் இல்லாதவராயும் இருந்தார். ஒழுங்கின்றிப் படைகளை நடத்திச்சென்று, முறையின்றி இடையில் நின்று அல்லது பின்சென்று, முன்யோசனை யின்றிப் போரிடுவதில் ஈடுபட்டார்.’ இவ்வாறு பாபர், மேலான யுத்த தந்திரங்களைக் கையாண்டும் திறமையான தளபதியாயிருந்தும், பீரங்கிப் படையைப் பயன்படுத்தியும் [1] லோடி சுல்தானை வென்று அடிப்படுத்தினார். சுல்தானும் பாபரை எதிர்க்கப் பெருமுயற்சி செய்து கடைசியில் போர்க்களத்தில் தம் படையுடன் விழ்ச்சியுற்றார். இதைப்பற்றி பாபர் ‘ எல்லாம் வல்ல கடவுளின் கருணையாலும் அருளாலும் இந்தக் கடுமையான செயல் எனக்கு எளிதாகப்போயிற்று. அந்த மாபெரும் படை அரைநாளில் மண்ணைக் கவ்விற்று ’ என்று எழுதியிருக்கிறார். பாபர் விரைவில் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினார்.

ஆனால் இப்ராஹிமின்மேல் பாபர் வெற்றி கொண்டதனாலேயே இந்துஸ்தானத்தில் முகலாயரின் வெற்றி நிலைநாட்டப்பட்டது என்று சொல்வதற்கில்லை. அவ்வெற்றியால் இந்திய நாட்டின்மீது அதிகார பூர்வமான ஆட்சியுரிமை அவருக்கு ஏற்பட்டு விடவில்லை. ஏனெ

[1] இந்தியாவில் பீரங்கி பயன்படுத்தப்பட்டது இதுதான் முதல் தடவை யன்று என்பது முன்பே குறிப்பிடப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

Koviloor Academy

வில் ஆப்கானிய படைத்தலைவர்களைப் போன்ற வேறு பெருஞ் சக்திகள் பாபருக்கு எதிராக இருந்தன. ராணாசங்காவின் தலைமையில் கூடியிருந்த ராஜபுத்திரர்கள் அரசியல் மேலதிகாரத்திற்காக ஆசைப் பட்டுக்கொண்டிருந்தனர். அவர்களும் திண்ணமாகப் பாபரை எதிர்க் கத்தான் துணிந்திருந்தார்கள். 'பாபரின் வேலை உண்மையில் பானிப்பட்டிலிருந்து தொடங்கிற்று என்பதைச் சரியாக உணர்ந்து கொள்வோருக்குப் பாபர் செய்யவேண்டியிருந்த வேலை எவ்வளவு பெரியது என்பது தெரியவரும். பேராசை நிலவும் பாதையில் பாபரை அடியெடுத்துவைக்கச் செய்தது பானிப்பட்டுப் போர். ஆனால் அந்தப் பாதையில் முதல் பெரிய முட்டுக்கட்டையாய் ஆப்கானியப் படை யினரின் எதிர்ப்பு இருந்தது' என்று தற்கால ஆசிரியர் ஒருவர் எழுதியிருக்கிறார். ஆப்கானியரில் பல படைத்தலைவர்கள் இருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் தத்தம் ஜாகீர்களில் அல்லது பிரதேசங் களில் முழுவலிமை வாய்ந்தவர்களாக விளங்கினர். எனினும் இந் தியாவில் முகலாய இராச்சியத்துக்கு அடிகோலிய பெருமை பானிப் பட்டுப் போருக்குரிய சிறப்புரிமையாகும்.

தோஆப்பைக் (Doab) கைப்பற்றிய உடனே பாபர் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலுமிருந்த ஆப்கானியப் பிரபுக்களை அடக்கினார். நாட்டில் இன்னும் வெல்லப்படாத பகுதிகளுக்குத் தம்முடைய பிரபுக்களை அனுப்பி, அங்கிருந்து ஆப்கானியத் தலைவர்களைத் துரத் தும்படி பாபர் ஆணையிட்டார். அவரே தீரமிக்க ராஜபுத்திரத் தலைவர் ராணாசங்காவை எப்படியும் எதிர்க்கவே நேரும் என்று எண்ணிக் கொண்டு, அந்த எதிர்ப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் ஆக் ராவில் இருந்துகொண்டே செய்துகொண்டிருந்தார். உண்மையில் ஆப்கானிய பிரபுக்களை அடக்கும் வேலை முடியுமுன்பே ராஜபுத்திர ரைப் பாபர் எதிர்க்க நேர்ந்தது. அஞ்சாமையும் மிக்க அநுபவமும் கொண்ட வீரர் ராணாசங்கா பயானா (Bayana) என்ற இடத்திற்குத் தம் படைகளை நடத்திச் சென்றார். அவ்விடத்தில் ஹஸன்கான் மேவாட்டியும் (Hasan khan Mewati), இன்னும் சில லோடி வம் சத்தை ஆதரிக்கும் முஸ்லிம்களும் ராணா சங்காவுடன் சேர்ந்து கொண்டனர். இவ்வாறு ராஜபுத்திரர்களும் வேறு சில இந்திய முஸ்லிம்களும் மற்றொரு வெளிநாட்டு ஆட்சி தங்கள்மேல் திணிக்கப் படுவதை எதிர்ப்பதற்காக ஒன்றுதிரண்டு, துணிந்து வரிந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இந்தச் சிக்கலான சமயத்தில் எல்லா ஆப்கானியத் தலைவர்களும் ஒன்றாக ராஜபுத்திரர்களுடன் சேர முடியவில்லை. இந்தியாவிலிருந்த இந்துக்களும் எல்லா முஸ்லிம் களும் ஒன்றுதிரண்டு பாபரை எதிர்த்திருந்தால் இந்திய வரலாற்றின் போக்கே வேறு திசையில் மாறிச் சென்றிருக்கும்.

ராஜ புத்திரர்கள் தேசிய மறுமலர்ச்சியின் தலைவரான ராணா சங்கா திண்ணமாய்ப் பாபருக்கு இப்ராஹிமை விட வலிமை வாய்ந்த

Koviloor Acadamy

எதிரியாவர். அவர் 120 படைத் தலைவர்களுடனும், 80,000 குதிரை, 500 யுத்த யானைகள் இவற்றுடனும், மார்வார் (Marwar), ஆம்பெர் (Amber), குவாலியர் (Gwalior), அஜ்மீர் (Ajmer), சந்தேரி (Chanderi) முதலிய பிரதேசங்களின் ஆட்சித் தலைவர்களுடனும் சேர்ந்து பெரும் படைகளை நடத்திச் சென்றார். ராணா சங்காவினால் தில்லியின் ஆட்சித் தலைவர் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட சுல்தான் மஹ்முத் லோடியும் (சுல்தான் சிகந்தர் லோடியின் இன்னொருமகன்) ராணா சங்காவுடன் சேர்ந்து கொண்டார். மேலும் ராஜபுத்திரர்கள் 'வலிமையும் வீரர்களும் செறிந்தவர்களாய் பகைப்படையின் மிகத் தீரம் வாய்ந்த தலைவர்களை நேருக்கு நேர் எதிர்ப்பதற்குத் தயாராய்த் தங்களுடைய பெருமையைக் காப்பாற்றி உயிரையுங் கொடுக்க எல்லாச் சமயத்திலும் சித்தமாய் இருந்தார்கள்.' பாபரின் சிறிய படை அச்சமும் கிலியுங் கொண்டு அஞ்சியது. பாபரே தாம் ஈடுபட்டிருக்கும் வேலையின் கடினத்தை உணர்ந்திருந்தார். ஆனால், அவர் அசைவிலா ஊக்கம் உடையவராய் இருந்தார். சிறிதும் தளராமல் பயங்கொண்டிருந்த தம் போர்வீரர்களுடைய நெஞ்சங்களில் ஆர்வமும் ஊக்கமும் மூண்டெழுமாறு செய்தார். அவர் தாம் மதுக் குடிக்கும் கிண்ணத்திலிருந்த சாராயத்தைக் கீழே ஊற்றிவிட்டு, 'இனிமேல் போதையூட்டும் மதுவை அருந்துவதில்லை' என்று சபதம் செய்து மதுக்கிண்ணத்தையும் தரையில் போட்டு, உடைத்தார். தம் போர் வீரர்களிடையே கிளர்ச்சிச் சொற்பொழிவு செய்து அவர்களுடைய வீர உணர்ச்சியைத் தூண்டினார்.

இதனால் கருதிய பலன் விளைந்தது. அவருடைய எல்லா வீரர்களும் அவருக்காகப் போரிடுவதாகக் குர்ரான் மீது சபதம் செய்தனர். முகலாயர்களும் இந்தியர்களும் 1527ஆம் ஆண்டு மார்ச்சு 16ஆம் தேதி ஆக்ராவின் நேர் மேற்கேயிருந்த கான்வா அல்லது கானுவா (Khanua or Kanwa) என்ற கிராமத்தில் போர் உடற்றினர். ராஜபுத்திரர்கள் வலிய வீரத்துடன் போரிட்டனர். ஆனால் பானிப்பட்டில் செய்தது போலவே பல யுத்த தந்திரங்களைக் கையாண்டு பாபர் அங்கும் அவர்களை வெற்றிகொண்டார். ராஜபுத்திரர்கள் முழுத் தோல்வியடைந்தனர். தம்முடைய சில வீரர்களின் உதவியினால் ராணா தப்பினார். ஆனால் மனமுடைந்து இரண்டாண்டுகளுக்குள் உயிர் துறந்தார். பாபர் கானுவாவில் பெற்ற வெற்றிக்குப் பின் ஜமுனை வைக் கடந்து, ராஜபுத்திரர்களின் வீர மிக்க கடும் எதிர்ப்பையும் வென்று சந்தேரிக் கோட்டையைத் தகர்த்தெறிந்தார்.

இந்திய வரலாற்றின் போக்கினைத் திருப்பிய போர்களுள் கானுவாப் போரும் ஒன்றெனில் தவறாகாது. ஒருவிதத்தில் பானிப்பட்டுப் போரைக் காட்டிலும் மிக முக்கியமான விளைவுகளை உண்டாக்கியது கானுவாப் போர் எனலாம். பானிப்பட்டுப் போர் முழு

Koviloor Academy

ஆட்சியதிகாரத்தை உண்மையில் செலுத்த முடியாமல் பேருக்கு மட்டும் சுல்தானாக இருந்த தில்லி சுல்தான்களின் தோல்வியைக் காட்டுகிறது. ஆனால் கானுவாப் போர் மிக்க வல்லமை வாய்ந்த ராஜபுத்திரர்களின் கூட்டுப்படையே தோல்வியுற்றதைக் காட்டுகிறது. இவ்வாறு துருக்கிய-ஆப்கானிய சுல்தானியத்தின் சீர்குலைவுக் காலத்தில் தங்களுடைய அரசியல் புதுமலர்ச்சியை ஏற்படுத்தி விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்து, அதற்கு முயற்சி செய்த ராஜபுத்திரர்களின் வாய்ப்பு இதனால் அழிந்துவிட்டது. ஆனால் அவர்கள் 'அதிலிருந்து இந்துஸ்தானத்தின் அரசியல் அரங்கில் ஆதிக்கம் செய்வதிலிருந்து அடங்கி விட்டார்கள்' என்று சொல்லுவது உண்மையாகாது. உண்மையில் அரசியலரங்கிலிருந்து அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது சிறிது காலத்திற்குத்தான். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அவர்கள் புத்துயிர் பெற்றெழுந்தனர்; முகல் ஆட்சியின் வரலாற்றில் பெரிய ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தனர். ஷெர்ஷா கூட ராஜபுத்திரரின் பகைமையைக் கருத்தில் வைத்துக்கொண்டிருக்க நேர்ந்தது. ஆனால் கானுவாப் போருக்குப் பின்பு சிறிது காலம் ராஜபுத்திரர்கள் தலைகாட்டாமல் மறைந்திருந்தது பாபருக்கு வசதியாகப் போயிற்று; அது புதிய அயலாரின் ஆட்சியை இந்தியாவில் நிலை நாட்டப் பாபருக்குத் துணைபுரிந்தது. ரஷ்புருக்-வில்லியம்ஸ் (Rushbrook-Williams) கீழ் வருமாறு கூறியிருப்பது பொருத்தமானதாகும்: 'கானுவாப் போருக்கு முன்பு பாபரின் துணிகரச் செயல் மிக்க வீர வாழ்க்கையில் இந்துஸ்தானத்தைக் கைப்பற்றுவது என்பது ஒரு வெறும் கதை நிகழ்ச்சியாகவே கருதப்பட்டிருந்திருக்கும். ஆனால் அதற்குப் பிறகு அவருடைய வாழ்க்கையின் மீதிப் பாகம் முழுவதும் இந்துஸ்தானம் முழுவதையும் ஆட்சிக்குள் அடக்குவதே செய்யவேண்டிய முக்கிய வேலையாக மாறிவிட்டது. அவர் செல்வத்தைத் தேடிக்கொண்டு அலைந்த காலம் எல்லாம் மலையேறி விட்டது. பெருஞ்செல்வம் எல்லாம் அவருக்கே உரியதாக இருந்தது. அதற்குத் தகுதியுடையவராக அவர் தம்மை ஆக்கிக்கொள்ள வேண்டிய தொன்றுதான் அவர் செய்ய வேண்டியிருந்தது. இந்தப் போர் அவருடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிலையைக் காட்டுகிறது. அதற்குப் பிறகு அவர் சிம்மாசனத்துக்குத்தீங்கு ஏற்படும்என்றோ அப்படி ஏற்பட்டால், உயிரைப் பணயமாக வைத்து அதை மீட்க வேண்டுமென்றோ அஞ்சவேண்டிய தேவை இல்லாமற்போயிற்று. அதற்குப் பிறகு போர்கள் இருந்தன; பற்பல போர்களை அவர் புரியவேண்டியிருந்தது. ஆனால் அவையெல்லாம் அவருடைய அதிகாரத்தை விரிவு படுத்தவும், கலகக்காரர்களைக் குறைக்கவும் இராச்சியத்தை ஓர் ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்காகவும் நடைபெற்ற போர்களாகும். சிம்மாசனத்துக்காகப் போரிடவேண்டிய நெருக்கடியுண்டாகவில்லை. காபூலிலிருந்து இந்துஸ்தானத்துக்கு அவருடைய அதிகார வன்மை மாறியதிலிருந்து பாபர் வலிமை வாய்ந்த சிக்கல்களை முன்

Koviloor Academy

கூட்டியே எவ்வாறு அறிந்திருந்தார் என்பதும், அதற்கேற்ப நடக்கும் திறன் எவ்வாறு படைத்திருந்தார் என்பதும் நன்றாகப் புலனாகின்றன.'

ஆப்கானியத் தலைவர்களை அடியோடு அடக்குவதை விட்டு விட்டு, எப்படிப் பாபர் ரஜபுந்திரர்களை எதிர்ப்பதற்கு விரைந்தார் என்பதை நாம் மேலே பார்த்தோம். ஆனால் இப்பொழுது அவர் ஆப்கானியத் தலைவர்களின் பக்கம் தம் முழுக் கவனத்தையுஞ் செலுத்த முடிந்தது. பாட்னாவுக்குப் பிறகு கங்கை நதி கோக்ரா (Gogra) நதியுடன் கூடுமிடத்திற்கருகே, கோக்ரா நதி தீரத்தில், பாபர் பீஹார், வங்காள மாநிலங்களின் ஆப்கானியத் தலைவர்களை எதிர்த்தார். 1529 மே மாதம் 6ஆம் தேதி அவர்கள் பெருந்தோல்விஎய்துமாறு செய்தார். இவ்வாறு மூன்று போர்களைச் செய்து வட இந்தியாவின் கணிசமான பகுதியைத் தம் அடிக்கீழ்படுத்தினார் பாபர். இப்போது அவர் ஆக்சஸிலிருந்து (Oxus) கோக்ரா வரையிலும், இமாலயத்திலிருந்து குவாலியர் வரையிலுமுள்ள நிலப்பகுதிக்குத் தலைவரானார். எனினும் இந் நிலப் பரப்புக்கு இடையே அங்கு மிங்கும் சில சுதேச இராச்சியங்கள் இருந்தன.

ஆனால் அரும்பாடுபட்டுப் பெற்ற வெற்றிகளின் இன்ப விளைவுகளை அநுபவிக்கப் பாபருக்குக் கொடுத்துவைக்கவில்லை. அவர் 1530 டிசம்பர் மாதம் 26ஆம் தேதி ஆக்ராவில் தம் நாற்பத்தேழு அல்லது நாற்பத்தெட்டாம் வயதில் இறந்தார். முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அவருடைய சாவைப் பற்றி ஒரு சுவையான செய்தியைப் பிணைத்துச் சொல்கின்றனர். அவருடைய மகன் ஹுமாயூன் நோயால் படுத்த படுக்கையாகக் கிடக்கும்போது பாபர் தம் மகனுக்கு வந்த நோய் தம் உடம்பில் புகுமாறும் மகன் குணமடையுமாறும் கடவுளை மிகவும் இரங்கி வேண்டிக்கொள்ள, அவ்வாறே அவருடைய உடல் நலம் வர வரக் குறைந்துகொண்டே வந்து, கடைசியில் உயிர்க்கு இறுதி நேர்ந்தது என்று கூறுகின்றனர். தற்கால ஆசிரியர் ஒருவர், 'பாபர் நோய் வாய்ப்பட்டு இறந்தார்' என்றும், 'தம் மகனுக்காகத் தியாகம் செய்து உயிர் துறந்தார் என்று அபுல் பாஸல் (Abul Fazl) கட்டிவிட்ட கதையை நம்புவதற்குப் போதிய சான்று எதுவும் இல்லை'[1] என்றும் கூறுகிறார். முதலில் பாபரின் உடல் ஆக்ராவில் ஆராம்பாக்கில் (Arambagh) வைக்கப்பட்டிருந்தது. பின்பு காபூலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அவருக்கு மிக விருப்பமாயிருந்த தோட்டம்[2] ஒன்றில் புதைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

[1]Sri Ram Sharma "Story of Babur's death, Calcutta Review, September 1936.

[2]காபூல் நகர்மீது தமக்குத் தனி விருப்பம் உண்டு என்று பாபரே கூறியிருக்கிறார். 'தட்ப வெப்ப நிலை மிகவும் இன்பமாயிருக்கிறது. இதைப் போல உலகில் வேறு எந்த இடமும் இல்லை' என்று அவரே எழுதியிருக்கிறார்.

Koviloor Acadamy

இந்துஸ்தானத்தில் பாபர் கழித்த நாலாண்டுக் காலத்தில் பஞ்சாப், இக்காலத்து மத்திய பிரதேசம், வட பீஹார்ப் பகுதிகளடங்கிய பிரதேசம் ஆகியவை அவரால் வெல்லப்பட்டன. ராஜபுத்திர மாநிலங்களுள் முதன்மையாக இருந்த மேவார்ப் பிரதேசமும் அவருக்கு அடிபணிந்தது. ஆனால் வெற்றி பெற்றதற்கு மேல் அவர் வேறு ஒன்றும் செய்ய முடியாது போயிற்று. ஒரு பேரரசை நிலைநிறுத்துவதற்கு நாடுகளை வெற்றி பெறுவது மட்டும் போதாது. உடனுக்குடனே அல்லது வெற்றி பெற்ற சிறிது காலத்திற்குள்ளே ஆட்சி முறையில் ஒரு நிலைப்பாடு உண்டாகும் வேலையைச் செய்வது முக்கியம். பாபர் செய்துவிட்டுப் போனதை விடச் 'செய்யாது விட்டுவிட்டுப் போனவை இன்னும் முக்கியத்துவம் வாய்ந்தவை' என்று தற்கால நூலாசிரியர் ஒருவர் கூறுகிறார். அவருடைய படைகள் பெற்றுத்தந்த வெற்றிகளால் இராச்சியப் பரப்பு விரிவடைந்திருந்தாலும், 'அரசியல் சூழ்நிலையைப் பொறுத்த வரை அப்பரந்த பேரரசின் வெவ்வேறு பகுதிகளிலும் ஒரேவித ஆட்சி ஏற்படவில்லை' என்று எர்ஸ்கின் (Erskine) எழுதுகிறார். மேலும் அவர் கூறுவதாவது. 'அரசனின் தடையில்லா அதிகாரத்திற்கு மேலாக எல்லா மாநிலங்களுக்கும் பொதுவான சட்டம் என்று ஒன்றும் இருக்க முடியாதுதான். ஒவ்வொரு பிரதேசமும், ஒவ்வொரு மாகாணமும், ஒவ்வொரு மாவட்டமும், ஒவ்வொரு கிராமமும்கூட சாதாரண விஷயங்களில் அவ்வவற்றிற்கே யுரிய தனிப்பட்ட பழக்கவழக்கங்களுக்கேற்ப ஆளப்பட்டுவந்தன......நீதி வழங்குவதற்காகப் பிரதேசம் முழுவதும் ஒழுங்கான நீதி மன்றங்கள் இருக்கவில்லை...நிலத்தைப் பற்றிய தகராறுகள் எல்லாம் கிராம அதிகாரிகளாலோ, கலக்டர்களாலோ, ஜமீன்தார் அல்லது ஜாகீர்தார்களாலோ தீர்க்கப்பட்டுவந்தன. அரசாங்க உயர் அதிகாரிகள் மிகப் பெரிய வழக்குகளாயிருப்பினும், சிவில் வழக்குகளையும், குற்றவழக்குகளையும் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுவதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை. 'உண்மையில் வெற்றிகள் பெற்ற பிறகு புதிய சட்டங்களைக் கொண்டுவருவதற்கோ, ஆட்சியமைப்பை மாற்றியமைப்பதற்கோ பாபருக்குச் சிறிது நேரம் கூட இல்லை. ஆனால் ஆட்சிமுறை பழைய மத்தியகால சிற்றரசராட்சி முறைப்படி அதன் பலவகைக் குறைபாடுகளுடன் நடந்து வந்தது. அவரால் ஒரு வலிமை வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தை உண்டாக்க முடியவில்லை. அவர் தமக்கு அடங்கித் தம்மைப் பின்பற்றி வாழ்ந்தோர்க்கு நிறையக் கொடைகள் வழங்குவதில் பெருஞ் செல்வத்தைச் செலவிட்டார். முஸ்லிம்களுக்குச் சில வரிச்சலுகைகளை அளித்தார். மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கேற்ற வகையில் அவர் தமக்குப்பின் நின்று நிலவும் 'குறிப்பிடத்தக்க பொது நிலையம் அல்லது அறநிலையங்களை' ஏற்படுத்தி வைக்கவில்லை. பாபர் செய்தவற்றிலுள்ள இக்குறைகளை எல்லாம் நோக்கும்போது அவர் தம் மகனுக்குப் போர்க்கால நிலையில் மட்டும் ஒன்றாய் நிற்கக் கூடியதும்

Koviloor Acadamy

அமைதிக் காலத்தில் வலிவில்லாத, ஒழுங்கமைப்பில்லாத, முதுகெலும்பில்லாத ஒரு பேரரசை உரிமையாக்கி விட்டுப் போனர்' என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. எனினும் இந்திய வரலாற்றில் அவர் ஒரு முக்கியமான இடைத்தைப் பெற்றுள்ளார். ஏனெனில், அவருடைய புகழ் பெற்ற பேரரான அக்பரால் மிக விரிவாகக் கட்டப்பட்ட முகலாயப் பேரரசு என்னும் கட்டடத்தை இந்தியாவில் எழுப்புவதற்குக் கால்கோள் செய்த முதல் கட்டிடக் கலைஞர் அவரேயாவர்.

ஆசியாவின் வரலாற்றில் விரமும் கேட்டார்க்குச் சுவைபயக்கும் குணங்களும் பொருந்திய ஆண்மை படைத்தோருள் பாபரும் ஒருவர். அவர் எதற்கும் கலங்காத உள்ள உரமும், மிகச் சிறந்த படை இயக்கும் வன்மையும் உடையவராயினும் தேவையில்லாமல் கொன்று குவித்துக் களிக்கு மியல்பு கொண்டவரோ, வேண்டுமென்றே அழிவுகளைச் செய்பவரோ அல்லர் ; அன்பு மிக்க ஒரு தந்தையாகவும், அன்புள்ள ஒரு தலைவராயும், தாராளமாயுதவும் நண்பராயும், கடவுளிடத்து ஆழ்ந்த நம்பிக்கை யுள்ளவராயும், உண்மை, இயற்கை இவற்றின் பெருங்காதலராயும் இருந்தார். அவர் 'இசை முதலிய பலகலைகளிலும் வல்லவராயும்' இருந்தார். அவர் தம் தந்தையிட மிருந்து இடையருது துணிகரச் செயல் புரிவதில் ஊக்கமும், நல்லமன இயல்பும் பெற்றிருக்கலாம். அவற்றை அவர் தம் வாழ்க்கையின் மிகப் பெருந்துன்பக் காலத்திலும் இழக்கவில்லை. அவர் தம் தாய்வழிப் பாட்டனரிட மிருந்து இலக்கியச் சுவையுணர்வுகளைப் பெற்றிருக்கலாம். அவரைப் பற்றி லேன்பூல் (Lane Poole), 'அவர் மத்திய ஆசியாவையும் இந்தியாவையும் பிணைக்கும் பாலமாகவும், முற்கால நாடோடிகளுக்கும் பேரரசுக்கும் இடைப்பட்ட பாலமாகவும், தைமூருக்கும் அக்பருக்கும் இடைப்பட்ட குணமுடையவராகவும் காணப்படுகிருர். ஆசியாவின் இரு பெருங்கேடு விளைவித்தோராகிய செங்கிஷ்கான், தைமூர் இவர்களின் ரத்தத்தில் நாடோடிகளான தார்த்தார் (Tartar) களின் அஞ்சாமையும் இடைநில்லாமையுமான குணங்கள் பொருந்திய அவர் பாரசிக நாகரிகப் பண்பாட்டைத் தழுவியிருந்தார். சோம்பேறியான இந்துக்களை அடக்குவதற்காக மங்கோலியரின் வலிமையையும் துருக்கியரின் துணிவையும், சக்தியையும் கொண்டுவந்தார். செல்வத்தைத் தேடும் போர் வீரரான அவர் பேரரசை நிர்மாணிக்கும் கலைஞராயில்லாது போயினும் அழகான பேரரசாகிய கட்டிடத்திற்குரிய அடித்தளக் கல்லை முதலில் நாட்டினர். அக்கட்டிடத்தை அவருடைய பேரர் அக்பர் கட்டி முடித்தார்......பேரரசை நிறுவுவதற்கு வழி வகுத்த அவருடைய இந்திய வெற்றிகளிலே அவருடைய பெயர் வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்று விட்டது. ஆனல் அவரைப் பற்றிய வரலாற்றிலும், இக்காலத்திலும் அவருக்குள்ள இடம் அவர் தம் இளமைக் காலத்தில் செய்த துணிகரச் செயல்கள், எண்ணியதைச் சாதிக்கும் இடைவிடா முயற்சிகள் இவற்ருலும், அவற்றைச் சுவை

Koviloor Academy

யின்ப மூட்டும்படி எழுதிவைத்த குறிப்புக்களாலும் நிலையானதாயிருக்கும். பொருட் செல்வந் தேடிய போர் வீரராயினும் இலக்கியச் செல்வம் சுவைக்கும் சுவை குறைந்தவராக அவர் இருக்கவில்லை. சுவைத்திறம் பொருந்திய சிறந்த திறனாய்வு மனப்பான்மையும் பெற்றிருந்தார். பண்பாட்டின் மொழியும் இந்தியாவுக்குப் போல மத்திய ஆசியாவுக்கும் இலத்தீனாக விளங்குவதுமான பாரசீக மொழியில் அவர் ஒரு சிறந்த கவிஞர். சொந்த மொழியான துருக்கியில் உரை நடையிலும் கவிதையிலும் தூய, இனிய நடையில் எழுதும் வல்லமையும் கைவரப்பெற்றிருந்தார்' என்று கூறுகிறார். மனித இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெறத் தகுதியான அவர் எழுதி வைத்துச் சென்ற வாழ்க்கைக் குறிப்புகள் (Memoirs) 1590-ல்அக்பர் காலத்தில் அப்துல் ரஹீம் கானிகானன் (Abdur Rahim Khan-i-Khanan) என்பவரால் பாரசீக மொழியிலும், 1826-ல் லெய்டன், எர்ஸ்கின் (Leyden, Erskine) என்பவர்களால் ஆங்கிலத்திலும், 1871-ல் பிரெஞ்சி மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. அன்னெட் சுசன்னா பெவரிட்ஜ் (Annette Susannaah Beveridge) என்பவர் இவற்றின் திருந்திய பதிப்பை வெளியிட்டிருக்கிறார். அவருடைய அழகிய துருக்கிப் பாடல்களின் சிறு தொகுப்பும் நமக்குக் கிடைத்திருக்கின்றது.

2. ஹுமாயூனும் அவருடைய ஆட்சியின் தொடக்க காலத்தில் நிகழ்ந்த போர்களும்

பாபர் இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு ஹுமாயூன் தம் இருபத்து மூன்றும் வயதில் இந்துஸ்தானத்தின் சிம்மாசனத்தில் ஏறினார். அவர் அரசாட்சியை ஏற்றபோது நிலைமை எளிதாக இருக்கவில்லை. எல்லாப் பக்கங்களிலிருந்தும் வந்த பலவகைப் பகைமைச் சக்திகளை அவர் எதிர்க்க வேண்டியிருந்தது. அச்சக்திகள் மறை முகமாய் இருந்தமையின் மிகவும் ஆபத்தானவையாய் இருந்தன. அரச குடும்பத்திலும் எவ்வித ஒற்றுமையும் நிலவவில்லை. அவருடைய ஒன்று விட்ட சகோதரர்களான முகம்மது ஸமானும் (Muhammad Zaman) முகம்மது சுல்தானும் பட்டத்துக்குவரத் தாங்களே தகுதியுடையவர்கள் என்று கூறினர். மேலும் மூத்த மகனே பட்டத்துக்குரியவன் என்ற நியதி முஸ்லிம்களுக்குள் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டியதில்லையாதலின், ஹுமாயூனின் சகோதரர்களான கம்ரன் (Kamran), ஹிந்தால் (Hindal), அஸ்காரி (Askari) ஆகிய மூவரும் சிம்மாதனம் ஏறப் பேராசைப்பட்டனர். 'எது சரி என்பதைத் தீர்மானிக்கும் பெரிய நடுநிலையாளர் வாளே. ஒவ்வொரு சகோதரனும் மற்றச் சகோதரர்களுக்கு எதிராக வாளெடுத்துத் தம் நற்பேற்றைக் காண விழைந்தனர்' என்று எர்ஸ்கின்குறிப்பிடுவது உண்மை. அரசவை

Koviloor Academy

யில் பிரபுக்கள் நிறைந்திருந்தனர். அவர்களும் சிம்மாசனத்தைக் கைப்பற்றத் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தனர். மேலும் ஹுமாயூ விடமிருந்த துணிகரச்செயல் விரும்பிய படைவீரர்கள் பல நாடுகளி லிருந்து வந்தவர்கள் ; பல திறத்தினர். அவர்களுள் ஒருவருக்கொரு வர் முரண்பாடான விருப்பங்களை உடையவர்களாக இருந்தனர். இதனுல் அவர் தம் உறவினர்களையோ, அரசவையையோ, அல்லது படையையோ, உதவிக்காகப் பெரிதும் நம்பியிருக்க முடியவில்லை. மேலும் ஹுமாயூனுக்குப் பாபர் விட்டுச்சென்ற உரிமைகளும் தெளி வற்றவையாயும், நிலையற்றவையாயும் இருந்தன. மேலே நாம் பார்த்தபடி பாபர் ஒரு நிலைப்படுத்தப்பட்ட, நன்கு ஒழுங்குபடுத்தப் பட்ட பேரரசை விட்டுச் செல்லவில்லை. உண்மையில் ‘அவர் நாட்டை ஆண்டுவந்த அரச வம்சத்தின் சக்தியை முறியடித்துப் படைகளைத் தோற்கடித்திருந்தார். ஆனுல், அவரோ அவரது சந்ததி யினரோ மக்களின் மீது வைத்திருந்த ஒரே பிடிப்பு படைபலமே.’ ராஜபுத்திரர்கள் தாற்காலிகமாகவே அடக்கி வைக்கப்பட்டிருந்தனர். ஆப்கானியர்கள் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் நிலையாக அடக்கியொடுக்கப்படவில்லை. சிதறுண்டிருந்த எண்ணற்ற ஆப்கானி யத் தலைவர்களும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய எப்போதும் தயாராய் இருந்தார்கள். அவர்கள் வேண்டியதெல்லாம் தங்களை எல்லாம் ஒரு முகப்படுத்தி உயிருட்டவேண்டிய பலமும் திறமையும் வாய்ந்த ஒரு தலைவரே. அப்படிப்பட்ட தலைவராக ஷெர்ஷாவை அவர்கள் கண்ட னர். பகதூர் ஷா (Bahadur Shah) வின் கீழ் வளர்ந்துவந்த குஜராத் தின் சக்தியும் ஹுமாயூனுக்கு ஒரு பெரிய பேரிடியாக இருந்தது.

படைத்துறையில் பேரறிவும் அரசியல் சூழ்ச்சித் திறமும், அர சியல் ஞானமும் உடைய ஒரு ஆட்சியாளரே அச்சமயத்திற்குத் தேவைப்பட்டார். ஆனுல் ஹுமாயூனுக்கு இவற்றில் ஒன்றும் இல்லை. உண்மையில் அவர் தமக்குத் தாமே ஒரு பெரிய விரோதியாகக் காணப்பட்டார். அறிவுத்துறையில் சுவைத்திறன்களும், பண்பாட் டின்மேற் காதலும் உடையவராயினும் தம் தந்தையிடம் காணப்பட்ட ஞானமும், ஆயுந்திறனும், வலிய மன உறுதிப்பாடும், இடைவிடா ஊக்கமும் அவரிடம் காணப்படவில்லை. லேன்பூல் கூறுவதுபோல, ‘அவர் மேன்மேலும் ஊக்கமுற்றுச் செயலில் ஈடுபடும் சக்தி இல்லாதவ ராய் இருந்தார். வெற்றி கிடைத்த கணநேரத்தில் அந்தப்புரத்தில் அடைந்துகொண்டு அபினி யுண்போர் காணும் தேவ உலகத்தில் தாமும் கனவுகள் கண்டுகொண்டு, தம் அரிய காலத்தைக் கழிப்பார். அப்போது வெளியே பகைவர்கள் வாயிலைத் தகர்த்துக்கொண்டிருப் பினும் வாளா இருப்பர். இயல்பாகவே இரக்க குணம் படைத்த அவர் தண்டிக்கவேண்டியவர்களையும் மன்னித்து விடுவார். எளிதில் மன மகிழ்ச்சியை எய்திவிடுபவரும் மக்களோடு கலந்து பழகுபவரு மான அவர் குதிரையின்மீது இருக்கவேண்டிய காலத்தில் விருந்தில்

Koviloor Acadamy

அமர்ந்து களிப்புற்றிருப்பார். அவருடைய குண இயல்புகள் கவர்ச்சியானவை ; ஆனால் ஆதிக்கம் செலுத்துபவை அல்ல. தனிப்பட்ட வாழ்க்கையில் இன்புறுத்தும் நண்பராகவும், உயர்நண்பராகவும் அவர் விளங்கி யிருக்கக்கூடும். ஆனால் அரசராக இருப்பதில் அவர் தோல்வியுற்றார். "அதிர்ஷ்டமுள்ளவன்" என்பது அவருடைய பெயரின் பொருள். ஆனால் இவரைத் தவிரத் துரதிர்ஷ்டம் பிடித்த ஓர் அரசர் இப்படித் தவறான பெயரில் என்றும் அழைக்கப்பட்டதில்லை.'

ஹுமாயூன் செய்த முதல் தவறு தம் சகோதரர்களுக்குத் தகுதியில்லாத இரக்கம் காட்டியதேயாகும். இறந்துகொண்டிருந்த தந்தை ஏதாவது அறிவுரை கூறியிருந்து அவர் அப்படிச் செய்திருக்கலாம். பொறுமையுள்ள போட்டியாளர்களான அவர்களை அவர் வன்மையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவேண்டும். ஆனால் அஸ்காரி ஸாம்பாலின் (Sambhal) சிற்றரசனாக்கப்பட்டார். ஹிந்தால் ஆள்வர் (Alwar) நாட்டின் சிற்றரசனாக்கப்பட்டார். மூன்று சகோதரர்களிலும் மூத்தவரான கம்ரனுக்குக் காபூல், கந்தஹார் (Qundahar) இவற்றின் உரிமை உறுதியாக்கப்பட்டது. மேலும் கம்ரன் லாகூரில் (Lahore) ஹுமாயூனின் தளபதியாயிருந்த மீர் யூனுஸ் அலியை (Mir Yunus Ali) எதிர்த்துப் படையை நடத்திச் சென்று பஞ்சாபையும் அதன் கிழக்கேயிருந்த ஹிஸ்ஸார் பிரோஸா (Hissar Firuza) என்ற மாவட்டத்தையும் கைப்பற்றிக்கொண்டார். இவ்வாறு பாபரின் பேரரசின் ஒருமைப்பாட்டிற்கு ஹுமாயூன் உலைவைத்து விட்டார். மேலும் இண்டஸ் பகுதியையும் அதற்கப்பாலிருந்த பகுதியையும் கம்ரனுக்குக் கொடுத்துவிட்டமையால் தம் படைக்குச் சிறந்த ஆட்களைத் தரும் பிரதேசத்தை இழந்தார். ஹுமாயூன் இந்தியாவில் குழந்தைப் பருவத்திலிருந்த முதல் ராஜ்யத்தின் பாதுகாப்புக்குப் படைபலம் மிக இன்றியமையாததாயிருந்தது. ஹிஸ்ஸார் பிரோஸாவை உரிமையாகக் கொண்டதால் பஞ்சாபிற்கும் தில்லிக்கும் இடையேயுள்ள பெருஞ்சாலையின்மேல் கம்ரனுக்கு அதிகாரம் ஏற்பட்டது.

பகைமைச் சக்திகள் அடக்கமுடியாமல் வளருமுன்பு அதிர்ஷ்டம் ஹுமாயூனுக்கு முதலில் செய்த போர்களில் உதவி செய்தது. பட்டத்திற்கு வந்து ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குப் பிறகு பந்தல்கண்டின் (Bundelkhand) ராஜா ஆப்கானியர்களுடன் அனுதாபமுடையவராய் இருக்கிறார் என்று ஐயுற்றுப் பந்தல்கண்டிலுள்ள கலிஞ்சார்க் (Kalinjar) கோட்டையை முற்றுகையிடுவதற்குப் படையை நடத்திச் சென்றார். ஆனால் அந்த ராஜாவிடமிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு பணம் பெற்றுக்கொண்டு கிழக்கே தொல்லைகள் கொடுத்துக்கொண்டிருந்த ஆப்கானியர்களை அடக்குவதற்காக அங்கிருந்து அவர் திரும்பவேண்டியதாயிற்று. தௌராவில் (Dourah) (தௌருவா

Koviloor Acadamy

Dauhrua) ஆப்கானியர்களை முறியடித்துச் சிறந்த வெற்றி பெற்றார். ஜான்பூரிலிருந்து சுல்தான் மகமூத் லோடியைத் துரத்தினார். ஆப்கானியத் தலைவர் ஷெர்கான் உரிமையாகக்கொண்டிருந்த சுனாரை (Chunar) முற்றுகையிட்டார். ஆனால் குஜராத்தின் ஆட்சித் தலைவர் பகதூர் ஷாவின் வளரும் அதிகாரங்களை அடக்கி ஒடுக்குவதற்காக மேற்கே படையுடன் செல்லவேண்டியிருந்தமையால் ஷெர்கான் 'கீழ்ப்படிவதாகச் சொல்லிய வெறும் வார்த்தையை' ஏற்றுக் கொண்டு எழுச்சியுற்றுவந்த அந்த ஆப்கானியத் தலைவரை முழுமையாக அடக்கிவிடாமல் முற்றுகையைக் கைவிட்டுச் சென்றுவிட்டார். இதனால் ஆப்கானியத் தலைவர் தம் படை பலத்தையும் சக்தியையும் பெருக்கிக்கொள்ளச் சுதந்தரமான நல்வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

பகதூர்ஷா ஹுமாயூனின் கோபத்தை நன்கு கிளறி விட்டிருந்தார். வெளிப்படையாகவே அவர் பல ஆப்கானிய அதிகாரிகளுக்கு ஆதரவும் உதவியும் கொடுத்தார். ஹுமாயூனின் பகைவர்களுக்கும் ஆதரவும் உதவியும் அளித்தார். மேவாரின் வீழ்ச்சி அவருக்குத் தம் ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்தும் வாய்ப்பை நல்கியது. மாளவத்தைத் தம் இராச்சியத்துடன் இணைத்துக்கொண்ட பிறகு பிரசித்தி பெற்ற ராஜபுத்திரக் கோட்டையான சித்தூர்க் கோட்டையை முற்றுகை யிட்டார். அப்போது, 1534ஆம் ஆண்டின் இறுதியில், ஆப்கானியர்களின்மேல் கொண்ட வெற்றியின் முழுப் பலனையும் அனுபவிக்குமுன்பே ஹுமாயூன் மாளவத்தை அடைந்தார். குஜராத்தியர்களால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்ட மேவார் ராணி கர்ணவதி (Karnavati) பகதூர்ஷாவுக்கு எதிராக ஹுமாயூனின் உதவியை வேண்டினாள். ஆனால் அம் முகல் அரசர் அவ் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை. தமக்காகவேனும் அவர் பகதூர்ஷாவை உடனே தாக்கமுடியவில்லை. ஆனால் பொறுமையுடன் காத்திருந்தார். அப்போது பகதூர்ஷா கான்ஸ்டான்டிநோபிலைச் சார்ந்த துருக்கியப் பொறிவல்லாரான ரூமிகான் (Rumi Khan), போர்ச்சுகீசிய ஐரோப்பியப் பிரங்கி வீரர்கள் இவர்களுடைய உதவியுடன் சித்தூர்க் கோட்டையைத் தகர்த்து ராஜபுத்திரர்களைத் தோற்கடித்துக்கொண்டிருந்தார். ராஜபுத்திரர்களின் வேண்டுகோளைப் புறக்கணித்ததன் மூலம் ஹுமாயூன் ஒரு மாபெருந் தவற்றைச் செய்துவிட்டார்.

உண்மையில் தம்முடைய நன்மைக்காக ராஜபுத்திரர்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்குரிய பொன்னான ஒரு நல்ல வாய்ப்பை இழந்து விட்டார். விலை மதிக்க முடியாத அவற்றின் பெருமையை அவருடைய மகன் அக்பர் பின்னர் உணர்ந்தார். அந்தச் சமயத்தில் ஹுமாயூன் மண்டசார்க்கு (Mandasor) அருகிலுள்ள ஒரு செயற்கை ஏரியின் கரைகளில் பகதூர்ஷாவின் படைகளை எதிர்த்து அவைகளைத் தோற்கடித்தார். பகதூர்ஷாவைத் துரத்திக்

Koviloor Acadamy

கொண்டு சென்றார். பகதூர்ஷா மாண்டுவிலிருந்து சம்பானீர்க்கும் (Champaner), அகமதாபாத்திற்கும், பிறகு காம்பேயுக்கும் (Cambay) ஓடினார். கடைசியில் டையூத் (Diu) தீவில் அடைக்கலம் புக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் குஜராத் ஆட்சியாளர் மேல் ஹுமாயூன் பெற்ற இவ்வெற்றி சிறிது காலத்திற்குமேல் நீடிக்க வில்லை. அவருடைய வாழ்வுக் காலத்தில் மற்றச் சமயங்களில் நிகழ்ந்தது போலவே இந்தச் சமயத்திலும் விரைவில் அவருடைய குண இயல்பின் பலவீனம் வெளிப்படத் தொடங்கிவிட்டது. வெற்றிக் களிப்பினால் அவரும் அவருடைய சகோதரர் அஸ்கரியும், அவருடைய பெரும்பாலான படை வீரர்களும் விருந்திலும் களியாட்டத்திலும் மூழ்கி விட்டனர். இதன் உடன் விளைவாக 'அவருடைய காரியங்களெல்லாம் குழப்பமாயின. அவருடைய சொந்தப் பாசறையே கலகமும் வீரர்கள் கீழ்ப்படியாது செய்யும் கிளர்ச்சியும் நிகழும் களமாயிற்று.' குஜராத்தின் சுல்தான் இந்நிலைமையைத் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு முகலாயர்களிடம் தாம் இழந்த பகுதிகளை யெல்லாம் மீண்டும் பெற்றார். ஆப்கானியத் தலைவர்கள் கிழக்கே மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக வளர்ந்திருந்தமையின் ஹுமாயூனின் கவனம் அங்கே திரும்பியது. அதனால் குஜராத் சுல்தானை மீண்டும் அடக்குவதைப்பற்றி அவரால் எண்ண முடியவில்லை. அவர் திரும்பிச் செல்லத் தொடங்கிய உடனே மாளவத்தின் உரிமையையும் அவர் இழக்க நேரிட்டது. இவ்வாறு 'ஒரு வருடத்தில் விரைவில் இரு பெரிய மாகாணங்களை வெல்லும் வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அடுத்த வருடம் அவற்றை விரைவில் இழக்கவும் நேரிட்டது.' ஹுமாயூனின் வாழ்க்கையில் அடுத்த கட்டம் ஆப்கானியரின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தலைவரான ஷெர்ஷாவுடன் துரதிர்ஷ்டவசமாகப் போர்கள் செய்ய வேண்டிய நேர்ந்தமையாகும்.

ஷெர்ஷாவும் சூரர்களும்: ஆப்கானிய மறுமலர்ச்சியும் வீழ்ச்சியும்

பானிப்பட்டிலும் கோக்ராவிலும் பாபர் பெற்ற வெற்றிகள் ஆப்கானியத் தலைவர்களை அடியோடு அழித்துவிடவில்லை. புதிதாக ஏற்பட்ட அன்னிய ஆட்சியைக் கண்டு அவர்கள் மனக் கொதிப்பு அடைந்திருந்தனர். அதைத் தேசிய மனப்பான்மையுடன் எதிர்ப்பதற்குச் சிதறுண்டிருந்த முயற்சிகளை எல்லாம் ஒன்று சேர்த்து ஒழுங்குமுறைக்கு உட்படுத்தும் ஒரு வலிமை வாய்ந்த தலைவரே அவர்களுக்கு வேண்டியிருந்தது, அப்படிப்பட்ட தலைவராக ஷெர்கான்சூர் அவர்களுக்குக் கிடைத்தார். அவர் ஆப்கானிய அதிகாரத்தின் மறுமலர்ச்சி ஏற்படும்படி செய்தார். புதிதாக நிறுவப்பட்ட முகலாய அதிகாரத்தைக் கவிழ்த்து இந்தியாவில் ஒரு சிறந்த ஆட்சியை நிறுவினார்.

Koviloor Academy

ஆனால், அவ்வாட்சி மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே முடிவடைந்தது.

இந்திய முஸ்லிம் மறுமலர்ச்சியின் தந்தையான ஷேர்கான் சூரின் வாழ்க்கை வரலாறு பாபரின் வாழ்க்கை வரலாற்றைப் போன்ற சுவை மிக்கதாய் இருக்கிறது. மாபெரும் முகல் அரசரான அக்பரின் வாழ்க்கை வரலாற்றைப் போல அறிவுரைகளைப் பயப்பதாயும் உள்ளது. ஆரம்பத்தில் பரீத் (Farid) என்ற பெயருடையவராக இருந்த அவர், தம் வாழ்க்கையை எளிய முறையில் தொடங்கினார். வரலாற்றில் வரும் பல பெரிய மனிதர்களைப் போலவே, அவரும் தம் தனிப்பட்ட திறமையால் முன்னுக்கும் மேன்மைக்கும் வருமுன்பு, பல வகைச் சோதனைகளுக்கு ஆளாகியும், விதியின் விளையாட்டுகளுக்கு இலக்காகியும் வாழ நேர்ந்தது. சூர் குலத்தைச் சேர்ந்த ஆப்கானியரான இப்ராஹிம் என்ற பெயருடைய அவருடைய பாட்டனார் பெஷாவருக்குக் கருகில் வாழ்ந்தார். அவருடைய தந்தையின் பெயர் ஹஸன் என்பது. பஹ்லூல் லோடியின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் படைத் தொழிலைத் தேடிக்கொண்டு இப்ராஹிமும் அவருடைய மகனும் கிழக்குப் பகுதியில் குடியேறினர். பஞ்சாப்பில் ஹரியனா (Hariana), பக்கலா (Bakhala) இவர்களுடைய பர்கானாக்களின் (Paraganas) ஜாகீர்தார்களாயிருந்த மகபத்கான் சூர், தாவுத் கான் சாஹு (Mahabat Khan Sur and Daud Khan Sahu) இவர்களுடைய படையில் முதலில் அவர்கள் சேர்ந்தனர். பாஜ்வாரா (Bajwara) அல்லது பெஜௌரா (Bejoura) என்று அழைக்கப்பட்ட பர்கானாவில் குடியேறினர். அங்கேதான் கி.பி. 1472-ல் பரீத் பிறந்திருக்கவேண்டும்.[1] சிறிது காலத்துக்குப் பிறகு தில்லி மாவட்டத்தில் ஹிஸ்ஸார் பிரோஸாவில் ஜமால்கான் சராங் கானி (Jamal Khan Sarang Khani) என்பவரிடம் இப்ராஹிம் வேலை கிடைக்கப்பெற்றார். பரீத்தை அவருடைய தந்தையான ஹஸன் சசாரம் (Sasaram) என்ற இடத்திற்கு எடுத்துச் சென்றார். அங்கே ஹஸனின் தலைவரான கானி ஆஸம் என்ற பட்டப் பெயர் கொண்ட உமர்கான் சர்வானி (Umar Khan Sarwani) என்பவர் ஜான்பூரின் கவர்னராக அப்போது ஹஸனுக்கு ஒரு ஜாகிரை அளித்தார். அந்தக் காலத்து மற்றப் பிரபுக்களைப் போலவே ஹஸனும் பல மனைவியரை மணந்திருந்தார். பரீத்தின் மாற்றாந் தாய் ஹஸன்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தாள். இதனால் ஹஸன் பரீத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை. அதனால் பரீத் தம் இருபத்திரண்டாம் வயதில் வீட்டைவிட்டு வெளியேறி ஜான்பூருக்குச்

[1] கி.பி. 1486-ல் ஹிஸ்ஸார் பிரோஸாவில் பரீத் பிறந்தார் என்று டாக்டர் காநுங்கோ கொண்டிருந்த பழைய கொள்கை இப்போது பேராசிரியர் பரமாத்ம சரண் அவர்களால் 'J.B.O.R.S.-ல் (1934 பக்கம் 108-122) வெளியிடப்பட்ட 'ஷேர் ஷாவின் பிறந்த நாளும் இடமும்' என்ற கட்டுரையில் தவறு என்று காட்டப்பட்டிருக்கிறது.

Koviloor Acadamy

சென்றூர். இவ்வாறு அந்த ஆப்கானிய இளைஞர் துணிகரச் செயல் செய்யவும் வாழ்க்கையில் போராடவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவற்றால் அவர் மனமும் குண இயல்பும் வீரஞ் செறிந்தனவாக மாறின. சிறிது காலம் அவர் படிப்பில் ஈடுபட்டிருந்தார். தம்முடைய இடைவிடாது முயன்று உழைக்கும் உழைப்பாலும் இடையறாத செயற்பாட்டாலும் பரீத் முதலில் ஜான்பூரிலுள்ள தம் ஆசிரியர்களின் கவனத்தை ஈர்த்தார். விரைவில் பாரசிக மொழியிலும் இலக்கியத்திலும் மிகச் சிறந்த பயிற்சி பெற்றூர். குலிஸ்தான் (Gulistan), புஸ்தான் (Bustan), சிகந்தர் நாமா (Sikandar - namah) முதலியவற்றை அவர் மனப்பாடமாக ஒப்புவிக்கும் திறமையைப் பெற்றிருந்தார். முன்னேறக் கூடிய இந்த இளைஞரைக்கொண்டு மகிழ்ச்சியும் மன நிறைவுமுற்ற இவருடைய தந்தையின் புரவலரான ஜமால்கான் இவருக்கும் தந்தைக்கு மிடையேயிருந்த பிணக்கத்தைத் தீர்த்து இருவரையும் ஒன்றுபடுத்திஞர். தந்தையும் இளவரசைச் சசாரமுக்குத் திரும்பிவர அனுமதித்தார். சசாரமிலும் காச்சிபூரிலும் (Khawaspur) இருந்த பர்காஞக்களை ஆட்சி செய்து வரவும் அனுமதி தந்தார். அப்பர்காஞக்கள் பீஹாரிலிருந்த ரோஹிதாக்களுக்குரியவை (Rohtas). அந்த இரு இடங்களையும் பரீத் வெற்றியோடு ஆட்சி செய்ததைக் கண்டு மாற்றாந்தாயின் பொறாமை அதிகரித்தது. அதனால் மீண்டும் சசாரமை நீங்கி ஆக்ராவை அடைந்தார்.

தந்தை இறந்த பிறகு ஓர் அரச ஆணையை (firman)க் காட்டி அதன் மூலம் தம் தந்தையின் ஜாகீரை உரிமையாகப் பெற்றூர். அந்த அரச ஆணையை அவர் ஆக்ராவில் பெற முடிந்தது. 1522-ல் பீஹாரின் சுயேச்சை ஆட்சியாளரான பஹார்கான் லோஹானியிடம் (Bahar Khan Lohani) அவர் வேலைக்கு அமர்ந்தார். தம் கடமைகளை நேர்மையாகவும் இடையறு ஆர்வத்துடனும் செய்து வந்ததால், அவருடைய தயவை விரைவில் பெற்றூர். ஒரு புலியைத் தனியாளாக நின்று கொன்ற வீரத்தைப் பாராட்டி அவருடைய தலைவர், அவருக்கு ஷெர்கான் என்ற பட்டத்தை அளித்தார். மேலும் அவரைத் தமக்குத் துணைவராக (வக்கீலாக) அமர்த்திக்கொண்டும் தம் இளம் மகனை ஜாலால்கானுக்கு (Jalal Khan) ஆசிரியராய் (அதாலிக் Ataliq) இருக்கும்படி அமர்த்தியும் அவருடைய திறமையையும் பற்றுறுதியையும் போற்றிப் பாராட்டினர்.

ஆனால், தொடர்ந்து தீமை செய்யும் விதி மீண்டும் ஷேருக்கு எதிராகவே இருந்தது. அவருடைய பகைவர்கள் அவருக்கு எதிராக அவருடைய தலைவரின் மனத்தை மாற்றிவிட்டார்கள். அதனால் அவர் மீண்டும் தம் தந்தையின் ஜாகீரை இழக்க வேண்டி ஏற்பட்டது. 'முகலாயப் படைகளின் முழு வெற்றியைக் கண்டு சிறப்பெண்ணங் கொண்ட' அவர் எதிர்காலத்தில் கிடைக்கும் பயன்மிக்க வாய்ப்பை

Koviloor Acadamy

யுங் கருதி, பாபரின் பாசறையில் சேர்ந்து 1527 ஏப்ரல் முதல் 1528 ஜூன் வரை அங்கே தங்கியிருந்தார். தம்முடைய கிழக்கத்திய படையெடுப்புகளில் மிகச் சிறந்த தொண்டுகள் செய்ததற்குப் பதிலாகப் பாபர் அவருக்கு மீண்டும் சசாரம் கிடைக்கும்படி செய்தார்.

விரைவில் ஷெர்ஷா முகலாயர்க்குச் செய்த ஊழியத்தை விட்டு விட்டுத் தம் பழைய மாணவனை ஜலால் கானுடைய பாதுகாவலராயும் பீஹாரின் துணை ஆளுநராகவும் ஆவதற்காகப் பீஹாருக்குத் திரும்பி வந்தார். பட்டத்துக்குரிய வயதை அடையாத இளவரசன் பெயருக்கு மாத்திரம் பீஹாரின் அரசனாக இருந்தான். ஷெர்ஷாவே பீஹார் அரசாங்கத்தின் உண்மையான தலைவராயிருந்தார். நான்கு ஆண்டுக்காலத்திற்குள் படையின் பெரும் பான்மையான பாகத்தைத் தம் பக்கம் வசப்படுத்திக்கொண்டு 'முழுச் சுதந்திர நிலையை எய்துமளவுக்குத் தம்மை உயர்த்திக் கொண்டார்.' 'அதிர்ஷ்ட வசமாக இதற்கிடையில் சுனார்க் கோட்டையும் அவருக்கு உரிமையாகி விட்டது. சுனாரின் தலைவரான தாஜ் கான் (Taj Khan) லாட் மாலிகா (Lad Malika) என்ற ஓர் இளம் மனைவியுடன் வெறித்தனமாக நடந்து கொண்டிருந்ததால், அவருடைய மூத்த மகன் அவருக்கு எதிராக எழுந்து அவரைக் கொலை செய்து விட்டான். அந்த விதவை ஷெர்கானை மணந்து கொண்டு சுனார்க் கோட்டையை அவரிடம் கொடுத்து விட்டாள். 1531-ல் ஹுமாயூன் சுனாரை முற்றுகையிட்டார். ஆனால் ஷெர்கான் அந்த வருடம் ஆப்கானிய எழுச்சியில் பங்கெடுத்துக் கொள்ளாமல், தந்திரமாக முகலாயப் படையெடுப்பாளருக்குப் பணிந்து போவதாகத் தக்க சமயத்தில் கூறித் தம் நிலையைப் பாதுகாத்துக் கொண்டார்.

லோஹானி ஆப்கானியர்களைப் பயன்படுத்திக்கொண்டே, வேகமாகவும் எதிர்பாராத வகையிலும் வளர்ச்சியுற்று உயர்ந்து வந்த ஷெர்ஷாவைக் கண்டு லோஹானி ஆப்கானியர்கள் பொறுமை இழந்தனர். ஜலால் கான் கூடத் தம் பொறுமை அடக்கத்தைக் கைவிட்டார். இந்தக் கொடுங்கோலனை ஒழிக்கவேண்டும் என்று அவர்கள் முயன்றனர். ஷெர்ஷா 'மிகச் சிறந்த வகையில் எச்சரிக்கையாக இருந்தமையின்' அவர்களுடைய முயற்சி தோற்றது. பிறகு அவர்கள் (1533 செப்டம்பரில்) வங்காள அரசராயிருந்த மஹ்மூத் கானுடன் கூட்டுறவாயிருப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டனர். ஷெர்ஷாவின் உயர்ச்சி தம் சொந்த மதிப்பையும் அதிகாரத்தையும் பாதிப்பதாகக் கருதிய அவர் ஷெர்ஷாவை முன்னேறவொட்டாமல் அடக்கி யொடுக்கவேண்டும் என்னும் ஆர்வத்தை இயல்பாகவே பெற்றிருந்தார். ஆனால் ஆப்கானியாரின் துணை ஆளுநராயிருந்த ஷெர் ஷா பீஹார் நகரின் கிழக்கிலுள்ள கியூல் (Kiul) நதியின் கரைகளில் சுராஜ்கார் (Surajgarh) என்ற இடத்தில் வங்காளச் சுல்தானும்,

Koviloor Acadamy

லோஹானிகளும் கொண்டு வந்திருந்த கூட்டுப் படைகளை முறியடித்தார். உண்மையில் சுராஜ்காரில் பெற்ற வெற்றி ஷெர்ஷாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி விட்டது. 'படை பலத்தால் பெற்ற ஒரு பெரிய சாதனையாயிருந்த அவ்வெற்றி, நீடித்த அரசியல் விளைவுகளைக் கொடுத்தது......சுராஜ்காரில் வெற்றிபெற்றிராவிடில் சசாரமின் சாதாரண ஜாகீர்தாராயிருந்த அவர், தாழ்ந்த சூழ்நிலையிலிருந்து அரசியல் அரங்கிற்கு வரும் பெருநிலையை எய்திப் பரம்பரையாக மணிமுடி தாங்கும் உரிமை பெற்ற பஹாதூர் ஷா, ஹுமாயூன் பாதுஷாபோன்ற ஆட்சித் தலைவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு எளிய வராயிருந்தும் ஒரு பேரரசை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருக்க முடியாது.' அவ்வெற்றி, பீஹாரின் உண்மையான ஆட்சியாளராக இருப்பதுடன் ஆட்சித் தலைவர், என்ற பெயரையும் அவருக்குத் தந்துதவியது.

ஹுமாயூன் பகதூர்ஷாவுக்கு எதிராகக் குஜராத்துக்குப் படையை நடத்திச் சென்றபோது ஷெர்ஷா தம் சக்தியை அதிகரித்துக் கொள்ள ஒரு வாய்ப்பைப் பெற்றூர். திடீரென்று அவர் வங்காளத்தின் மீது படையெடுத்து அதன் தலைநகரான கௌர் முன்பு தோன்றினர். அங்கே வழக்கமான பாதையான தெலியாகர்ஹிக் (Teliagarhi) கணவாய்கள் (கிழக்கிந்திய இரயில்வே லூப்லைனில் இப்போதுள்ள சாஹெப்கெஞ்ச் (Sahebganj) அருகில்) வழியாகச் செல்லாமல் பழக்க மில்லாத சிறிது குறுக்கு வழியான வேறொரு பாதை வழியாகச் சென்றூர். வங்காளத்தின் பல மில்லாத அரசராயிருந்த மஹ்மூத் ஷா ஆப்கானியப் படையெடுப்பாளரை எதிர்க்க எவ்வகையான கடு முயற்சியும் மேற்கொள்ளாது, முப்பது லட்சம் பொன் நாணயங்களுக்குச் சமமான பெருந்தொகை ஒன்றை அவருக்கு அளித்ததுடன், 90 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்ட கீயூலிலிருந்து சக்ரிகாலி (Sakrigali) வரையிலுமுள்ள நிலப்பரப்பை அவருக்குப் பிரித்துக் கொடுத்தும் சமாதானமாகப் போய்விட்டார். இந்தப் புதிய பேறுகள் ஷெர்ஷாவின் பலத்தையும் பதவியையும் கணிசமான அளவுக்கு உயர்த்தின. குஜராத்தின் தலைவர் பகதூர் ஷா டையுவுக்கு ஓட்டப் பட்ட பிறகு பல சிறந்த ஆப்கானிய பிரபுக்கள் கிழக்கே உயர்ச்சி பெற்றுவரும் தங்கள் தலைவரிடம் வந்து சேர்ந்தனர்: இவ்வாறு பலங்கொண்ட ஷெர் ஷா வங்காளத்தை நிரந்தரமாக வென்று விட வேண்டுமென்று கருதி 1537 அக்டோபரின் நடுப்பகுதியில் வங்காளத்தின்மீது படையெடுத்துச் சென்று கௌர் நகரத்தைப் பலமாக முற்றுகை யிட்டார். குஜராத்திலிருந்தும் மாளவத்திலிருந்தும் திரும்பி வந்த ஹுமாயூன் வழக்கம்போல ஆக்ராவில் காலத்தை வீணுக்கிக் கொண்டிருந்ததால் மிகத் தாமதமாகவே கிழக்கே தோன்றிய ஆப்கானியத் தீங்கினை உணர்ந்தார். பிறகு 1537 டிசம்பரில், இரண்டாவது வாரத்தில் ஷெர்கானை எதிர்க்கப் படையுடன் சென்றூர். அவர்

Koviloor Academy

நேரடியாகக் கௌருக்குச் சென்றிருந்தால் ஷேர்கானின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கி யிருக்கலாம். ஆனால், அவர் வங்காளச் சுல்தானுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு சூனாரை முற்றுகையிட்டார். சூனாரிலிருந்த ஷேர்கானின் தீர மிக்க படை வீரர்களால் ஆறு மாதங்கள் முற்றுகையிட்டோரின் முயற்சிகள் எல்லாம் வீணாயின. அதுவரை கௌர் நகரை அடிப்படுத்துதற்கு வேண்டிய காலமும் வாய்ப்பும் ஷேர்கானுக்குக் கிடைத்தன. 1538 ஏப்ரலில் கௌரைத் தன்வசமாக்கிக் கொண்டார். எப்படியோ ரோஹ்தாக்களின் கோட்டையையும் அவர் கைப்பற்றினார். அங்கே தம் குடும்பத்தையும் செல்வத்தையும் அனுப்பிவைத்தார். பிஹாரில் ஏமாற்ற முற்ற ஹுமாயூன் வங்காளத்தை நோக்கித் திரும்பி வந்து 1538 ஜுலையில் கௌரை அடைந்தார். ஆனால் ஷேர்கான் தந்திரமாக அவருடன் வங்காளத்தில் நேரிடையாகப் போர் தொடுப்பதை விட்டு விட்டு பிஹாரிலும் ஜான்பூரிலும் இருந்த முகலாயப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கும் மேற்கே கானோஜ் (Kanauj) வரையிலுள்ள பாதையில் கொள்ளையடிக்கவும் சென்றார்.

அப்போது கௌர் நகரில் களியாட்டங்களிலும் விழாக்களிலும் காலத்தை வீணாகக் கழித்துக் கொண்டிருந்த ஹுமாயூன் மேற்கே ஷேர்ஷா செய்துவந்த செயல்களைப் பற்றிக் கேள்வியுற்று மனங் கலங்கினார். அவர் தாம் திரும்பி வருவது தடைப்படுவதற்கு முன் வங்காளத்தை விட்டு ஆக்ராவிற்கு புறப்பட்டார். ஆனால் வழியில் பக்ஸார் (Buxar) என்ற இடத்திற்கு அருகிலுள்ள சௌன்ஸாவில் (Chaunsa) ஷேர்கானும் அவருடைய ஆப்கானிய வீரர்களும் ஹுமாயூனை எதிர்த்துத் தாக்கி 1539 ஜுன் மாதத்தில் அவர் பெருந் தோல்வியடையும்படி செய்தனர். முகலாயப் படை வீரர்களில் பெரும்பாலோர் சிறைபிடிக்கப் பட்டனர். அல்லது மூழ்கடிக்கப் பட்டனர். அவர்களுடைய துரதிர்ஷ்டம் பிடித்த தலைவரான ஹுமாயூன் கதிகலங்கிக் கங்கையாற்றில் விழுந்து விட அவரைத் தண்ணீர் சுமப்போன் ஒருவன் தோலால் செய்த தன் தண்ணீர் பையில் வைத்துத் தூக்கிச் சென்று காப்பாற்றினான்.

தில்லிப் பேரரசை வெற்றிகொண்டதால் ஷேர்கானின் பேராசையின் அளவு விரிவடைந்தது. மேலும் அவரை மேற்கே கானோஜிலிருந்து அஸ்ஸாம் குன்றுகள் வரையிலும் கிழக்கே சிட்டகாங்கு வரையிலும், வடக்கே ஹிமயமலையிலிருந்து ஜார்க்கண்டு (Jharkhand) மலைகள் வரையிலும் (ரோஹ்தாவிலிருந்து பீர்பம்வரை) தெற்கே வங்காள விரிகுடா வரையிலுமுள்ள நிலப்பகுதிகளின் உண்மையான ஆட்சியாளராக ஆக்கியது. படைகளின் வன்மையினாலும், யுத்ததந்திரத்தினாலும் தாம் பெற்றவற்றைச் சட்டப்படி தமக்கே உரியவை என்பதைக் காட்டுவதற்காக அப்போது அவர் ஷேர் ஷா என்ற அரசப்பட்டத்தை புனைந்து கொண்டார். குத்பா (Khutba) படிக்கும்படி கட்டளையிட்டார்.

Koviloor Acadamy

தம்முடைய பெயரில் நாணயங்கள் அடித்து வெளியிடுமாறு ஆணையிட்டார். அடுத்த வருடம் ஹுமாயூன் இழந்த தமது செல்வத்தை மீண்டும் பெறுவதற்காக மற்றொரு முயற்சி செய்தார். ஆனால் மிகச் சிறந்த முற்சிகள் செய்தும் அவர் தம்முடைய சகோதரர்களின் ஒத்துழைப்பைப் பெற முடியவில்லை. 1540 ஆம் ஆண்டு மே 17ஆம் தேதியில் முகலாயர்களும், ஆப்கானியர்களும் மீண்டும் காஞேஜுக்கு எதிரில் எதிர்ந்தனர். ஹுமாயூனின்படை மிகவும் மனமுடைந்து போய் அரைகுறை விருப்பத்துடன் போரிட்டது. படையதிகாரிகளும் சரிவரத் தங்கள் கடைமைகளைச் செய்யவில்லை. அதனால் அது பொதுவாக காஞேஜ் போர்த்தளம் என்றழைக்கப்பட்ட கங்கை அல்லது பில்கிராம் (Bilgram) போர்க்களத்தில். ஆப்கானியர்களால் மிகக்கடுமையாக முறியடிக்கப்பட்டுவிட்டது. ஹுமாயூன் எப்படியோ தப்பித்துக்கொண்டு விட்டார். இவ்வாறு பலரின் முயற்சிகள் சீர் குலைக்கப்பட்டுவிட்டன. அந்தச் சமயத்திலிருந்து சுமார் பதினைந்து ஆண்டுகள் ஹுமாயூன் நாடோடியாகத் திரிந்து தம் வாழ்க்கையைக் கழிக்க வேண்டியிருந்தது.

ஹுமாயூன் லாகூருக்குச் சென்று தம் சகோதரர்களையும் வசமாக்கப் பெருமுயற்சிகள் செய்தபோதிலும் மிக ஆபத்தான அந்தச் சமயத்தில் பாபரின் புதல்வர்கள் ஒன்றுய்ச் சேரத் தவறிவிட்டனர். அவர்களுடைய சுயநலம் பொதுநலங்களைத் தாழ்த்தி வெற்றி கொண்டு விட்டது. அதனல் ஷெர்ஷா அதிகாரத்தைப் பஞ்சாப் வரையிலுங் கூடப் பரப்பமுடிந்தது. இண்டஸ், ஜீலம், நதிகளின் மேல் பகுதிகளில் அமைந்திருந்த கக்கார் (Gakkar) நாட்டின் போர் வீரமிக்க பல ஜாதியினரை அடக்குவதற்காக அந்த ஆப்கானியத் தலைவர் வழக்கம்போலத் தக்க சமயமறிந்து பெரிய உற்சாகத்துடனும் மன உறுதியுடனும் படையை நடத்திச் சென்றுர். அந்தப் பகுதியை அவர் படுநாசத்திற்குள்ளாக்கிய போதும் கக்கார்களை முழுவதாக அடிப்படுத்த முடியவில்லை. ஏனெனில் அதற்குள் அவர் தம் அதிகாரத்துக்கு எதிராக அறிவின்மையால் கிளர்ச்சிசெய்த தம் துணையாட்சியாளரை அடக்குவதற்காக 1541ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் வங்காளத்தை நோக்கி அவசரமாகச் செல்ல வேண்டியிருந்தது. அவர் கிளர்ச்சி செய்தவரை வேலையிலிருந்து நீக்கி விட்டு 'மாகாண ஆட்சிமுறையிலிருந்த படைத்துறைப் பண்பை மாற்றினுர். முழுவதும் புதிய ஓர் ஆட்சிப் பாங்கைப் புகுத்தினுர். செயல்முறையில் அம்முறை சிறப்புடையதாகவும், கொள்கையில் அது தனிப்பட்ட பண்புடையதாயும் காணப்பட்டது.' மாகாணம் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஷெர்ஷாவினல் நேரடியாகப் நியமிக்கப்பட்ட அதிகாரிகளே ஆட்சியாளர்களாக அமர்த்தப்பட்டனர். அவ்வதிகாகாரிகள் ஷெர்ஷா ஒருவருக்கே பொறுப்புள்ளவர்களாயிருந்தனர்.

Koviloor Academy

அடுத்ததாக ஷேர்ஷா மேற்கிலிருந்த ராஜபுத்திரர்களின் பக்கம் தம் கவனத்தைத் திருப்பினர். கானுவாக்களிடமிருந்து பெற்ற அடியிலிருந்து அவர்கள் இன்னும் முழுமையும் மீளவில்லை. கி. பி. 1542-ல் மாளவத்தை அடிப்படுத்திய பிறகு ஷேர்ஷா மத்திய இந்தியாவில் உள்ள ரெய்சினைச் (Raisin) சேர்ந்த பூரன் மால் என்பவனை எதிர்த்துப் படையை நடத்திச் சென்றார். சிறிது காலம் எதிர்த்துச் சமாளித்த பிறகு ரெய்சின் கோட்டையைக் காத்துவந்த படையினர் சில சலுகைகளுக்குட்பட்டுச் சரணடைந்தனர். மாளவ எல்லைக்கு அப்பால் 'எவ்விதத் தொல்லைக்கும் ஆட்படுத்தாமல்' செல்லுவதற்கு அனுமதியளித்தால் அக்கோட்டையைக் காலிசெய்து விடுவதாக ராஜபுத்திரர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால் அவர்கள் கோட்டைச் சுவர்களைத் தாண்டி வெளியே வந்ததும் ஆப்கானியர்கள் அவர்கள் மீது கோபாவேசத்துடன் பாய்ந்தனர். தங்களுடைய மனைவிமக்கள் குழந்தைகளை அவமதிப்புக்கு ஆளாகாமல் காப்பாற்றுவதற்காக தங்கள் உயிரையும் இழக்க முன்வந்தனர். 1543-ல் எவராலும் வெல்ல முடியாத எதிரியாகிய ஷேர்ஷாவை எதிர்த்து வீரத்துடன் சண்டையிட்டு ஒருவர் பாக்கியில்லாமல் போரில் இறந்தனர். ரெய்சின் நிகழ்ச்சிஷேர்ஷாவின் சிறப்புமிக்கபண்புகளுக்குப் பெரியகளங்கத்தை உண்டாக்கியது என்று பல சரித்திர ஆசிரியர்கள் இகழ்ச்சியாகக் கூறியிருக்கின்றனர். பஞ்சாப்பின் கவர்னரால் சிந்துவும் மூல்தானும் ஆப்கானியப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. இன்னும் ஒரே ஒரு வலிமை வாய்ந்த எதிரிதான் ஷேர்ஷாவால் அடக்கப்படுவதற்கு இருந்தார். அவர்தான் மார்வார் நாட்டின் ராஜபுத்திர அரசரான மால்தேவ் (Maldav) என்பவர். அவர் ஒரு திறமை மிக்க தளபதியாகவும், சக்திவாய்ந்த ஆட்சியாளராவும் இருந்தார். அவருடைய இராச்சியப்பரப்பு பத்தாயிரம் சதுர மைல்கள் வரை பரந்திருந்தது. தங்களுடைய இராச்சியப் பகுதிகளை வென்று தம் இராச்சித்துடன் மால்தேவ் சேர்த்துக்கொண்டதால் அதிருப்தியுற்றிருந்த சில ராஜ புத்திரத் தலைவர்களால் தூண்டப்பட்டு, ஷேர்கான் கி.பி. 1544-ல் ராத்தோர்த் தலைவருக்கு எதிராகப் படையெடுத்துச் சென்றார். ராத்தோர்களுடன் அவர்களுடைய சொந்த நாட்டிலேயே நேரடிப் போரில் ஈடுபடுவது உகந்தது என்று கருதியதால் ஷேர்ஷா ஒரு யுத்த தந்திரத்தை மேற்கொள்ள முற்பட்டார். ராஜபுத்திரத் தளபதிகளால் எழுதப்பட்டவை போன்றும் மால்தேவுக்கு உதவி செய்வதாக வாக்களிப்பது போன்றும் சில பொய்க்கடிதங்களை எழுதி மால்தேவுக்கு அனுப்பினர். இவ்வாறு ராத்தோரின் ஆட்சியாளரைப் பயப்படுத்துவதில் வெற்றியடைந்தார். ராத்தோரின் ஆட்சியாளர் களத்திலிருந்து பின்வாங்கி சிவன்கோட்டையில் புகலடைந்தார். எனினும் ஜேடன் (Jeta), காமன் (Kama) போன்ற ராஜபுத்திரத் தளபதிகளும் அவர்களுடைய வீரர்களும் ஷேர்ஷாவின் படையை எதிர்த்தனர். மிகச்

Koviloor Acadamy

சிறந்த வீரத்துடன் போரிட்டாலும் வெற்றியடையாது வீரர்களுக்குரிய வீரமரணத்தையே அவர்கள் அடைந்தனர். மிகுந்த செலவில்தான் ஷெர்ஷா வெற்றிபெற முடிந்தது. போர்க்களத்தில் பல்லாயிரம் ஆப்கானியர்கள் உயிரிழந்தனர். ஷெர்ஷாவும் தம் பேரரசை இழக்கும் தறுவாயில் இருக்க நேர்ந்தது. ஆனல் ஷெர்ஷாவின் வெற்றிக்குப் பிறகு ராஜபுத்திரர்கள் மீண்டும் தலைதூக்கும் வாய்ப்பை இழந்தனர். வட இந்தியா முழுவதும் ஆப்கானியரின் எதிரில்லாத மேலாண்மைக்கு வழிகோலப்பட்டு விட்டது. இந்த வெற்றிக்குப் பிறகு அஜ்மீலிருந்து ஆபூ (Abu) வரையிலுமுள்ள எல்லாப் பகுதிகளையும் தம் அடிக்கீழ்ப் படுத்தினர். பிறகு கலிஞர்சார்க் (Kalinjar) கோட்டையை முற்றுகை யிடுவதற்கும் படையுடன் சென்ருர். கோட்டையைப் பிடிப்பதில் வெற்றியுற்ருர்; ஆனல் 1515ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி வெடிமருந்தின் திடீர் வெடிப்பால் நிகழ்ந்த விபத்தில் அவர் உயிர் இழந்தார்.

ஒரு சிறந்த போர் வீரராகவும் வெற்றி மிக்க நாடு பிடிப்பாளராக வும் திகழ்ந்த ஷெர்ஷா ஒரு சிறந்த ஆட்சி யமைப்பு முறையைக்கண்டு பிடித்தவராயும் விளங்கினர். அவருடைய ஆட்சி முறை அவருடைய எதிரிகளான முகலாயர்களைப் புகழ்ந்தவர்களாலும் வியந்து பாராட் டப்பட்டது. உண்மையில் போர்க்களத்தில் அவர் பெற்ற வெற்றி களைக் காட்டிலும், அவர் ஆட்சியாளராகப் பெற்றிருந்த பண்புகளே மிகவும் போற்றத்தக்கவையாயிருந்தன. அவருடைய குறுகிய ஆட் சிக்காலமான ஐந்தாண்டுகளும் ஒவ்வொரு முக்கிய ஆட்சித் துறை யிலும் அவர் புதிதாகத் தோற்றுவித்த, அறிவு மிக்க, போற்றத்தக்க மாறுதல்களால் பொலிவுற்றன. அவற்றுள் சில இந்தியாவின் பழைய இந்துக்கள் முஸ்லிம்களின் ஆட்சி முறைகளின் பரம்பரைப் பண்பு களைச் சீர்திருத்தியவையாயும், உயிர்ப்பித்தவையாயும் அமைந்தன. மற்றவை தோற்றத்திலும் பண்பிலும் முற்றிலும் புதியனவாயிருந்தன. உண்மையில் அவை பழைய இந்தியாவுக்கும் புதிய இந்தியாவுக்கும் பாலமாயிருந்தன. ‘இந்தப் பட்டாணியரின் ஆட்சியைப்போல எந்த அரசாங்கமும்-பிரிட்டிஷ் அரசாங்கம்கூட அவ்வளவு அறிவுடைமை யைக் காட்டவில்லை’ என்று திரு கீன் (Mr. Keene) வலியுறுத்திக் கூறுகிருர். ஷெர்ஷாவின் அரசாங்கம் அரசனின் கையில் உண்மை யான எல்லா அதிகாரமும் செறிந்திருப்பதாயும், மத்திய அரசுக்கே முழு அதிகாரமும் இருப்பதாயும் காணப்பட்ட முழு மத்திய ஆட்சி யரசாங்கமாய் இருப்பினும், அவர் கடிவாளமிடப்படாத ஒரு தன் முனைப்புடைய சர்வாதிகாரியாக, பொது மக்களின் விருப்பங்களையும் உரிமைகளையும் மதிக்காதவராக இருக்கவில்லை. அறிவுடைமை மிக்க சுயேச்சை அதிகாரியாக இருந்துகொண்டே அவர் மக்களின் விருப் பத்தைப் பெரும்பாலும் தழுவிய ஒரு பேரரசை நிறுவ முயன்ருர்.

நாட்டு ஆட்சி எளிமையாகவும் வசதியாகவும் நடைபெறவேண் டும் என்னும் கருத்துடன், தன் பேரரசு முழுவதையும் நாற்பத்தேழு

Koviloor Academy

பகுதிகளாகப் (சர்க்கார்களாக) (Sarkars) பிரித்தார். ஒவ்வொரு சர்க்காரும் மேலும் பல பர்கானுக்களாகப் (Paraganas) பிரிக்கப் பட்டன. ஒவ்வொரு பர்கானுவிலும் கணக்குகளை வைத்துக்கொள் வதற்காக ஒரு (Amin) அமீன், ஒரு ஷிக்தார் (Shiqdar), ஒரு பொருளாளர் (Treasure), ஓர் இந்து எழுத்தர், ஒரு பாரசிக எழுத்தர் (Persianwriter) ஆகியோர் இருந்தனர். பர்கானு அதிகாரிகளின் வேலையைக் கண்காணிப்பதற்காக அதற்கு அடுத்து உயர்ந்த ஆட்சிப் பகுதியான சர்க்காரில் ஷிக்தார்-இ-ஷிக்தர்ரான் (Shiqdar-i-Shiqdaran) முன்சிப்-இ-முன்சிபான் (Munsif-i-Munsifan) என்போர் அமர்த்தப்பட்டனர். தங்களுடைய ஆட்சி எல்லையில் அளவுக்கு மிகுதியான செல்வாக்கு அடைவதைத் தடுப்பதற்காக அரசர் இரண்டு அல்லது மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை அதிகாரிகளை இடம் மாற்றும் திட்டத்தைக் கடைப்பிடித்தனர். ஆனால் அவருடைய ஆட்சிக் காலம் மிகக் குறுகியதாய் இருந்தமையின் இத்திட்டம் நீண்ட காலத்துக்கு நிலைக்க வில்லை. ஆட்சித் துறையின் ஒவ்வொரு பகுதியும் ஷெர்ஷாவின் நேரடிக் கண்காணிப்புக்கு உட்பட்டு வந்தது. ‘ பெருஞ் செயல்புரிவோர் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருப்பார்கள் ’ என்ற முதுமொழிக் கிணங்க ஷெர்ஷாவும் அசோகரையும் ஹர்ஷரையும் போல எப்போதும் ஊக்கம் உடையவராகவே இருந்தார்.

அறிவுடைமையும் மனிதத்தன்மையும் வாய்ந்த கொள்கைகளின் அடிப்படையில் ஷெர்ஷா செய்த நிலவருவாய்ச் சீர்திருத்தங்கள் இந்தியாவின் ஆட்சி முறை வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. பிற்கால உழவு முறைகளுக்கு அது ஒரு முன் மாதிரியாயிருந்தது. நிலங்களை மிகக் கவனமாகவும், சரியாகவும் அளந்து உழுவோரைக் கலந்து நிலத் தீர்வையைத் தீர்மானித்தார். அரசுக்குக் கொடுக்க வேண்டிய நிலவரி மொத்த விளைச்சலில் நாலில் அல்லது மூன்றில் ஒரு பங்காக நிலையாக்கப்பட்டது. அவ்வரியைத் தானியமாகவும், பணமாகவும் செலுத்தலாம். பணமாகச் செலுத்துவதே முதன்மையாக விரும்பப்பட்டது. வரி வசூலுக்காக அரசாங்கம் அமீன்கள், மகதம்கள் (Maqadam), ஷிக்தார்கள், கானுங்கோக்கள் (Qanungos), பட்வாரிகள் முதலிய அதிகாரிகளின் பணியைப் பயன்படுத்திக்கொண்டது. குறித்த காலத்தில் விதிக்கப்பட்ட வரித்தொகை முழுவதையும் கொடுத்துவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டும் வற்புறுத்தப்பட்டும் வந்தன. சில சமயங்களில் அவசியமானுல் ஷெர்ஷாவிடமிருந்தே வற்புறுத்தல் வரும். தீர்வையின் போது கொஞ்சம் தாராளமாயிருக்கும்படியும் வரி வசூலின் போது கண்டிப்பாயிருக்கும்படியும் ஷெர்ஷா தம் அதிகாரிகளுக்கு அறுவுறுத்தியிருந்தார். உழுவோரின் உரிமைகள் ஒன்ருக ஏற்றுக்கொள்ளப்பட்டன, ஒவ்வோர் உழவரும் கொடுக்க வேண்டிய கடன்கள் கபூலியத் (Kabu-

Koviloor Acadamy

liyat) என்ற ஒப்பந்தப் பத்திரத்தில் தெளிவாக வரையறுக்கப்படும். அப்பத்திரத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டு அதற்குப்பதிலாக உழவருக்குப் பட்டாவை (உரிமைப்பத்திரத்தை) அளிக்கும். வரி விலக்குகள் அல்லது வரிக் குறைப்புக்களும் சில சமயம் செய்யப் பட்டன. படை வீரர்கள் கூடாரமடித்துத் தங்கியதாலோ, போதிய மழை பெய்யாமையாலோ பயிர் விளைச்சலுக்குச் சேதம் ஏற்பட் டால் உழவர்களுக்குக் கடன்களும் கொடுக்கப்பட்டன. இந்த நிலச் சீர்திருத்தங்கள் நாட்டின் வருவாய்ப் பெருக்கியதுடன் நாட்டு மக்களின் ஆர்வத்தையும் அதிகப்படுத்தின.

ஷெர்ஷாவின் நாணய, சுங்கவரிச் சீர்த்திருத்தங்களும் அவரு டைய பேரரசின் பொதுப் பொருளாதார நிலைமை உயர்வதற்கு வழி கோரியன. அவர் நாணய சாலையில் சில குறிப்பட்ட மாறுதல்களைப் புகுத்தியதுடன் 'முந்திய அரசர்களின் காலங்களிலிருந்து படிப்படி யாகக் குறைந்து வந்த நிலையையும்' சரிப்படுத்தினர். தொல்லை மிகுந்த சுங்கங்களுக்கு வரி விதித்திருந்ததைத் தவிர்த்தார். நாட்டின் எல்லைப் பகுதிகளிலும், வாணிகப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்ட இடங்களிலும் மட்டும் சுங்கங்கள் வற்புறுத்தப்படுமாறு அனுமதித் தார். அதனல் எளிதாகவும் சிக்கனமாகவும் வாணிகப் பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குக் கொண்டு போகப்பட்டன. அதனல் வாணிகம் வளர்ந்தோங்க வழி உண்டாயிற்று.

இந்த வியாபாரம் செய்தியறிவிப்புக்களில் ஏற்பட்ட முன்னேற்றத் தால் மேலும் விருத்தியடைந்தது. தம் பேரரசின் பாதுகாப்புக்காகவும் பொதுமக்களின் சௌகரியத்திற்காகவும் ஷெர்ஷா தம் ராச்சியத்தின் முக்கியமான இடங்களைச் சிறந்த பல பாதைகளின் மூலம் இணைத்தார். அவற்றுள் மிகவும் நீளமான கிராண்ட் டிரங்குப் பாதை கிழக்கு வங்கா ளத்திலிருக்கும்சோனர்கானிலிருந்து (Sonargaon) இண்டஸ் வரை 1,500 கோஸ் நீளம் நீண்டுள்ளதாய் இன்றும் இருந்து வருகிறது. ஒரு பாதை ஆக்ராவிலிருந்து புர்ஹான்பூருக்கும், மற்ருெரு பாதை ஆக்ரா விலிருந்து ஜோத்பூருக்கும், சித்தூர்க் கோட்டைக்கும், நான்காவது பாதை லாகூரிலிருந்து மூல்தானுக்கும் சென்றன. பழங்காலத்துச் சில ஆட்சியாளர்களைப் பின்பற்றி ஷெர்ஷாவும் பெரிய சாலைகளின் இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை நட்டு வைத்தார். வழியில் பாதையின் பல விடங்களிலும் சராய்கள் (Sarais) அல்லது தங்கும் விடுதிகளை அமைத்து அவற்றில் முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் தனித்தனி அறைகள் இருக்குமாறு ஏற்பாடு செய்தார். இந்தச் சராய் கள் தபால் நிலையங்களாகவும் பணி செய்தன. பேரரசின் பல பாகங் களிலிருந்தும் வரும் செய்திகளை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தி அவற்றுக்குரிய அரசாங்கத்தின் பதில்களையும் உரிய இடங்களுக்கு அனுப்பி வந்தன. மிகச் சிறந்த ஒற்றர்களை வைத்திருந்தமையால்

Koviloor Acadamy

தம் ராச்சியத்தில் என்னென்ன நிகழ்கின்றன என்பதை உடனுக்கு உடனே அரசர் அறிந்துவர முடிந்தது.

அமைதியும் ஒழுங்கும் நிலை நாட்டுவதற்காகப் போலீஸ் முறை திருத்தியமைக்கப்பட்டது. உள்ளூர்க் குற்றவாளிகளின் குற்றங் களுக்கு உள்ளூரைப் பொறுப்பாக்கும் கொள்கை வற்புறுத்தப்பட்டது. இதனால் நாட்டுப்புறங்களில் கிராமத் தலைவர்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கும் அமைதி நிலவுவதற்குமான பொறுப்பாளராய் இருந்தனர். இந்த முறையின் சிறப்பை எல்லா முஸ்லிம் நூலாசிரியர் களும் எடுத்துக் கூறிப் பாராட்டியிருக்கின்றனர். ஷெர்ஷாவின் பக் கம் சார்ந்து பேசவேண்டிய காரணம் எதுவும் பெற்றிராத நிஸாம்-உத்-தீன், 'தங்க நாணயங்கள் நிறைந்த ஒரு பையை ஒருவன் எடுத்துச் சென்று வழியில் இரவுக் காலங்களில் ஆள் நடமாட்ட மில்லாத இடங்களில் தூங்கினாலும் பொருளைக் காப்பதற்காக விழிப் பாக இருக்கவேண்டிய தேவை இல்லை; பெருஞ்சாலைகளின் பாது காப்பு அப்படிப்பட்டதாயிருந்தது' என்று கூறியிருக்கிறார்.

ஷெர்ஷா நீதியுணர்ச்சி நிரம்பியவர். அவருடைய ஆட்சியில் நீதி விருப்பு வெறுப்பின்றி வழங்கப்பட்டது. நீதி வழங்குவதில் உயர்ந்தவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் வேறுபாடு பாராட்டப் படவில்லை. அரசரின் நெருங்கிய உறவினர்கள் கூட நீதியின் ஆணைகளிலிருந்து தப்புவிக்கப்படவில்லை. பர்கானுக்களில் சிவில் வழக்குகள் அமீன்களாலும், மற்ற வழக்குகள், பெரும்பாலும் குற்ற வழக்குகள், காஸியாலும் மீர்-இ-அதாலாலும் விசாரித்துத் தீர்க்கப்பட்டன. பல பர்கானுக்களில் சிவில் வழக்குகளை விசா ரிக்க முன்சிப்-இ-முன்சிபான் என்ற ஒரு மேலதிகாரியும் இருந்தார். தலைநகரில் தலைமைக் காசியும், அரசாங்க சதரும் (Sadr) இருந் தனர். எல்லாருக்கும் மேலாகச் சக்கரவர்த்தி மற்றச் செய்திகளில் போல நீதித் துறையிலும் தலைமை வாய்ந்த அதிகாரியாகத் திகழ்ந்தார்.

ஷெர்ஷா பக்தியுள்ள முஸ்லிமாக இருந்தாலும் ஒரு முரட்டுச் சமய வெறியராக[1] இருக்கவில்லை. இந்துக்களை அவர் நடத்திய முறை பொதுவாகவே நியாயமானதும், பொறுக்கும் மனப்பான்மை பொருந்தியதாகவுமே இருந்தது. அரசாங்கத்தின் முக்கியமான உத் தியோகங்களில் இந்துக்களை அவர் அமர்த்தினார். அவருடைய மிகச் சிறந்த தளபதிகளில் ஒருவரான பிரமஜித் கௌர் (Brahma-jit Gaur) என்பவர் ஒரு இந்துவே. டாக்டர் கானுங்கோ

[1] தற்கால ஆசிரியர் ஒருவர் கூறியிருப்பது போல ஷெர்ஷாவின் சமயக் கொள்கை 'குறுகியது' என்று கூறுவது பொருத்தமற்றது. பார்க்க: I. H. Q டிசம்பர், 1936, பக். 600.

Koviloor Academy

(Dr. Qanungo) என்பவர் 'அவர் இந்து மதத்தின்மேல் கொண்டிருந்த கொள்கை அதை வேண்டா வெறுப்பாகப் பொறுத்துக் கொண்டதன்று. ஆனால் மதிப்புடன் மரியாதை செய்ததேயாகும். நாட்டில் அக்கொள்கை தக்கவாறு அறிந்து போற்றப்பட்டது' என்று கூறியுள்ளார்.

வலிமையும் திறமையும் மிகப்படைத்த ஒரு படையை வைத்துக் கொள்ளவேண்டியதன் இன்றியமையாமையை ஷெர்ஷா உணர்ந்திருந்தார். அதனால் பெரும்பாலும் அலாவுத்தீன் கல்ஜியின் படை முறைக் கொள்கைகளைப் பின்பற்றித் தம் படையைச் சீரமைப்புச் செய்து ஒழுங்கு முறைக்குள்ளாக்கினார். நிலைப் படையினரின் பணிகளோ, அல்லது சிற்றரசர்களிடமிருந்து பெற்ற படையின் பணிகளோ அவருடைய தேவைகளுக்குப் போதுமானவையாகக் கருதப்படவில்லை. அதனால் அவர் ஒரு ஒழுங்கான படையை வைத்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார். அப்படை வீரர்கள் எல்லாரும், தங்களுக்கு அடுத்தபடி உயர்ந்த ஆணையிடும் அதிகாரிகளின்மூலம், அவருடன் பக்தி சிரத்தையோடு அல்லது கட்டுப்பாடு மிக்க ஈடுபாட்டுணர்வுடன் நேரடியாக மிகச் சிறந்த தொடர்புகொண்டிருந்தனர். அவர் தம்முடைய நேரான ஆணையின் கீழ் 150,000 குதிரைப்படைகள், 25,000 காலாட் படைகள், 300 யானைப்படைகள், பீரங்கிகள் அடங்கிய ஒரு பெரிய படையை வைத்திருந்தார். கோட்டைகளைப் பாதுகாக்கும் படைகள் இராச்சியத்தின் வெவ்வேறு யுத்த தந்திரத்தில் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. ஃபௌஜ் (Fauj) என்று அழைக்கப்பட்ட அவ்வகைப் படை ஒவ்வொன்றும் தனித்தனியே ஃபௌஜ்தார் என்பவரின் ஆணையின் கீழ் இருந்தன. ஷெர்ஷா படையில் கண்டிப்பான ஒழுக்கக்கட்டுப்பாட்டை வலியுறுத்தினார். படை வீரர்களுக்குள் ஊழல் எதுவும் ஏற்படாதவாறு எச்சரிக்கையுடன் போதிய முன்னேற்பாடுகளைச்செய்தார். படை வீரர்களைப் புதிதாகப் படையில் சேர்த்துக்கொள்வதை ஒழுங்காகக் கண்காணித்து வந்த அவர் தாமே அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயித்தார். வீரர்களைப்பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல்களைத் தம்மிடமே வைத்திருந்தார் ; குதிரைகளுக்கு அடையாளமிடும் பழக்கத்தையும் மீண்டும் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார்.

மத்திய இந்திய வரலாற்றில் ஷெர்ஷா உண்மையில் ஒரு கவர்ச்சி மிக்க ஆளுமையுடையவராகவே காணப்படுகிறார். தம் தகுதிச் சிறப்பு, திறமை இவற்றைமட்டும் கொண்டே மிகத் தாழ்மையான ஒரு நிலையிலிருந்து ஆப்கானிய மறுமலர்ச்சித் தலைவராகவும், இந்தியா உண்டாக்கிய மிகப்பெரிய அரசர்களுள் ஒருவராகவும் ஆனார். அவருடைய 'படைத்துறைப் பண்பு' 'எச்சரிக்கையும் முன்னேற்ற

Koviloor Academy

ஆர்வமும் அரிதாய் இணைந்த ஓர் அருமைப் பாட்டினுலே' சிறப்புற்றிருந்தது. மொத்தத்தில் அவருடைய அரசியல் நடத்தை நேர்மையாகவும், இரக்க குணம் பொருந்தியதாகவுமே இருந்தது. அவருடைய மதக்கொள்கை மத்திய காலத்தில் பரவியிருந்த மதவெறி பற்றப்படாமல் இருந்தது. கட்டிடங் கட்டுவதில் அவருக்கு இருந்த சிறந்த சுவைத்திறம் அவர் சசாரமில் கட்டிய அருமையான மசூதியின் மூலம் நன்ருக அறியப்படுகிறது. அவர் தம் இடைவிடா முயற்சியையும், உழைப்பையும் நாட்டுப் பணியில் செலவிட்டார். அவருடைய சீர்திருத்தங்கள் எல்லாம் மக்களின் நலன்களைக் காப்பதற்காகவே மிகவும் சிந்தித்துக் கொண்டுவரப்பட்டன. 'அக்பருக்கு முன்பு எந்த அரசரிடத்திலுங் காணப்படாத சட்டமன்றத்தினர்க்குரிய உணர்வும் தம் மக்களைக் காப்பாற்றும் பொறுப்புணர்ச்சியும்' அவரிடம் இருந்தன' என்று எர்ஸ்கின் கூறுகிருர். உண்மையில் இந்தியாவில் ஒரு தேசிய அரசாங்கத்தை நிர்மாணிப்பதற்கு வேண்டிய எல்லாப் பண்புகளும் அவரிடம் பொருந்தியிருந்தன. அவர் பல வழிகளிலும் பிற்காலத்தில் மிகச் சிறந்த அக்பர் ஆட்சி தோன்றுவதற்கு வழி வகைகள் வகுத்திருந்தார். ஐந்து ஆண்டுகள் மட்டும் ஆட்சி செய்த பிறகு அவர் தற்செயலாக இறந்துபோகாதிருந்தால், அவ்வளவு விரைவில் முகலாயர்கள் தலை தூக்கிப் பழைய நிலையை எய்தியிருக்க முடியாது. ஸ்மித் (Smith) கூறுவதுபோல் ஷெர்ஷா உயிரோடு பிழைத்திருந்தால், 'மாபெரும் முகலாய அரசர்கள்' வரலாற்றின் மேடையில் தோன்றி யிருக்கவேமாட்டார்கள். ஹுமாயூனைக் காட்டிலும் இந்திய சிம்மாசனத்தைப் பெறும் உரிமைத்தகுதிகள் அவருக்கே மிகுதியாக இருந்தன. மத்திய ஆசியாவிலிருந்து வந்த துணிகரச் செயல்வீரர் ஒருவரின் வெற்றிகளை வாரிசாகப் பெற்றிருந்த ஹுமாயூன் இந்தியாவில் தமது மரபினர் அரசாண்டு வருவதற்குப் படைப்பலத்தைத் தவிர வேறு எந்த நியாயமான வலிய காரணத்தையும் கண்டுபிடித்தாகக் கூறமுடியாது. ஆனல் இந்தியாவின் எல்லைப் புறத்திலிருந்து வந்த ஷெர்ஷாவின் குடும்பம் மூன்று தலைமுறைகளாக இந்தியாவிலேயே வாழ்ந்துவந்தது. மேலும் அரசருக்கு வேண்டிய உயர்ந்த தகுதிகள் ஷெர்ஷாவிடமே மிகச் சிறந்த முறையில் காணப்பட்டன. பிரதேசங்களை வென்று பெற்ற வெறும் வெற்றிகளைக்காட்டிலும் பல அரிய சாதனைகளை அவர் செய்திருக்கிருர்.

4. ஷெர்ஷாவின் வழித்தோன்றல்கள்

ஷெர்ஷாவினல் நிர்மாணிக்கப்பட்ட ஆப்கானியப் பேரரசு அவருடைய இறப்புக்குப் பின்பு நீடித்து நிலைக்கவில்லை. அவருடைய வலிமையான ஆளுமையின் மறைவும், அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தோரின் பலவீனமும், ஆப்கானிய பிரபுக்களிடையே மீண்டும் மனக்கலக்கத்தையும் மனக்கோட்டத்தையும் ஏற்படுத்தின. அவர்

Koviloor Acadamy

கள் நாடு முழுவதிலும் அராஜகம் தலைவிரித்தாடும்படி செய்தனர். இவ்வாறு முகலாய ஆட்சி மீண்டும் தழைக்குமாறு வழி செய்தனர். ஷெர்ஷா இறந்தவுடன் அப்போது ரேவாவிலிருந்த (Rewah) அவருடைய இரண்டாவது மகனான ஜலால்கான் பொதுவாக ஸலீம் ஷா (Salim Shah) என்று அழைக்கப்பட்ட சுல்தான் இஸ்லாம் ஷா என்ற பட்டப் பெயருடன் அரசராக்கப்பட்டார். ஸலீம் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு தம் சகோதரருக்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் தமக்குமுள்ள சிக்கல்களைச் சமாளித்துத் தம் நிலையைப் பலப்படுத்திக்கொண்டார். படையின் திறமையை அவர் பாதுகாத்துவந்தார். தம் தந்தையின் அறிவு மிக்க சீர்திருத்தங்களில் பெரும்பாலானவற்றை அப்படியே அவர் கடைப்பிடித்தார். 'அவருடைய உள்நாட்டு ஆட்சிமுறை மிகச் சிறந்ததாய் இருந்தது.' ஆனால், அவர் இளமையிலேயே 1554 நவம்பரில் இறந்துவிட்டார். அவர் இறந்ததும் விரைவில் குழப்பங்கள் நாட்டில் எழுந்தன. அவருடைய இளம் புதல்வரான ஃபிரோஸ் கான் (Firuz Khan) அவனுடைய அத்தை கணவனான முபாரிஜ்கானால் (Mubariz Khan) கொலை செய்யப்பட்டான். (முபாரிஜ்கான் ஷெர்ஷாவின் சகோதரன் நிஸாம் கான் சூரின் மகனும், ஃபிரோஸ்கானின் அம்மாவான பீபி பாயின் (Bibi Bai) சகோதரனும் ஆவான். அவன் சிம்மாசனத்தைப் பறித்துக்கொண்டு முகம்மது ஆதில் ஷா என்று பெயர் சூட்டிக் கொண்டான். ஆதில் ஷா சோம்பேறியாயும், தகுதியில்லாத அரசனாயும் இருந்ததால், மேவாட் நாட்டைச்சேர்ந்த ரேவாரி என்ற நகரின் சாதாரண பேனியா (Benia) வாக இருந்து சொந்த முயற்சியால் முன்னேறி, சூர்ப் பேரரசின் தலைமை அமைச்சர் பதவி வரை உயர்ந்த ஹிமு (Himu) என்பவர் தந்திரமாகவும், திறமையுடனும் நாட்டின் காரியங்களை நிர்வகிக்க முயன்றார். ஆனால் அவருடைய தலைவரான ஆதில் ஷாவின் சந்தேகப் பண்பினாலும், அவர் செய்த பெரும் தவறுகளாலும் அவருடைய முயற்சிகள் எல்லாம் தோல்வியுற்றன. அதன் விளைவாக, சீர்குலைந்து கொண்டுவந்த ஆப்கானியப் பேரரசின் நலன்களும் பெரிதும்பாதிக்கப்பட்டன. ஆதில் ஷா அதற்குப் பின் விரைவிலேயே வங்காளத்தையும் மாளவத்தையும் இழந்தான். அவனுடைய சொந்தக்காரர்களே அவனுக்கு எதிராகக் கலகமும் கிளர்ச்சியும் விளைவித்தனர். சிம்மாசனத்துக்கு உரிமை கொண்டாடிய ஷெர்ஷாவின் இரு மருமக்களும் ஆதில் ஷாவிற்கு நாட்டை ஆளுவதற்குரிய அதிகாரமும் உரிமையும் கிடையாது என்று எதிர்த்துப் போரிட்டனர்.

5. முகலாயர்கள் மீண்டும் தழைத்தல்

இந்தக் குழப்ப நிலை, சற்றேறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஹுமாயூன் தாம் இழந்துவிட்ட இராச்சியத்தை

Koviloor Academy

மீண்டும் பெறுவதற்கு முயற்சி செய்யத் தூண்டியது. அதுவரை அவர் பாதுகாப்பும், உதவியும் தேடித் தேடிப் பல இடங்களுக்கும் அலைந்து கொண்டிருந்தார். இந்தத் துன்பக் காலத்திலும் கூட மிக வும் அன்பில்லாதவர்களாய் நடந்துகொள்ளுமளவுக்கு, ஹுமாயூ வின் சகோதரர்கள் ஆப்கானியர்களுக்கு எதிராகத் தங்கள் பலத்தை ஒன்று திரட்டிக் கொண்டிருப்பதைப் பற்றியோ ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. சிந்துவில் தமக்காக ஒரு தலைமை இடத்தைப் பெறுவதற்காக அவர் செய்த முயற்சிகளும் வீணாயின. ஏனெனில் சிந்துவின் கவர்னர் ஷா ஹுசேன் (Shah Husain) அவரிடம் பகைமை பாராட்டினார். மேலும் அவரைத் தொடர்ந்து வந்த வீரர்களுடன் நிலையாகத் தங்க விரும்பாத பல வீரர்கள் மிகுதியாகச் சேர்ந்தி ருந்தனர்; அதனால் வீரர்களுக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களுக்குப் பஞ்சமேற்பட்டது. சிந்து பாலைவனங்களில் அலைந்துகொண்டிருந்த சமயத்தில்தான் 1542ஆம் ஆண்டின் ஆரம் பத்தில் அவர் ஹமீதா பானு பேகம் (Hamida Banu Begam) என்ப வளைத் திருமணம் செய்துகொண்டார். அவள் அவருடைய தம்பி ஹிந்தாலுக்கு ஆசிரியராயிருந்த ஷேய்க் அலி அம்பர் ஜெயினி (Shaikh Ali Ambar Jaini) என்பவரின் மகளாவாள். ராஜபுத்திர அரசர்கள் அவருக்குப் பாதுகாப்பு அளிக்க முன் வரவில்லை. பின்பு அவர் அமர்கோட்டுக்குச் (Amarkot) சென்றார். அதன் இந்துத் தலைவரான ராணா பிரசாத் (Rana Prasad) என்ற பெயருடையவர் தட்டா (Thatta) பக்கார் (Bhakkar) என்ற இடங்களை வெல்வ தற்கு அவருக்கு உதவுவதாக வாக்களித்துப் பின் கடைசியில் ஏமாற்றிவிட்டார். இங்கேதான் அவருடைய மகன் அக்பர் 1542ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் தேதியில் பிறந்தார். ஹுமாயூனால் பக்காரை யும் வெல்ல முடியவில்லை; தம் சகோதரரான கம்ரனிடம் புகலடைய வும் முடியவில்லை. இவ்வாறு தூணிலிருந்து கம்பத்திற்குத் துரத்தப் பட்டவரைப் போல ஹுமாயூன் இந்தியாவை விட்டுப் போய் ஷா தஹ்மாஸ்ப் (Shah Tahmasp) என்பவரின் உதார குணத்துக்குச் சரணடைந்தார். பாரசீகத்தின் இளைய அரசரான அவர் 14,000 படை வீரர்களை அவருக்குக் கொடுத்துதவினார். ஹுமாயூன் ஷியா மதக்கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்றும், வெற்றி பெற்றால் காந்தகார்ப் பகுதியைத் தமக்குத் தந்துவிடவேண்டும் என்றும் அவர் ஹுமாயூனிடம் வாக்குறுதிகள் வாங்கிக்கொண்டார். இவ் வாறு முன்பு பாபரின் கிழக்கத்தியப் படையெடுப்பின் வெற்றிக்கு வழிகோலிய பாரசீகரின் உதவி, இப்போது அவருடைய வழித் தோன்றலுக்குத் தமது இழந்த இராச்சியத்தை மீட்பதற்கும் கிடைத் தது. அப்படையுடன் ஹுமாயூன் காந்தகாரையும் காபூலையும் 1545-ல் கைப்பற்றினார். ஆனால், பாரசீகர்களுக்குக் காந்தகார் கொடுக்கப்படவில்லை. அதிலிருந்து அப்பிரதேசம் பாரசீகர்களுக்

Koviloor Acadamy

கும் முகலாயர்களுக்கும் அடிக்கடி சண்டை மூட்டும் வித்தாக இருந்துவரலாயிற்று. கம்ரன் கைதியாக்கப்பட்டுக் கண் பிடுங்கப்பட்டு மெக்காவுக்கு அனுப்பப்பட்டார். அவற்றிற்கெல்லாம் ஹுமாயூன் மிகவும் தயங்கிய பிறகே ஒப்புக்கொண்டார். கம்ரனின் பழைய நடத்தையைப் பார்க்கும் போது ஹுமாயூனிடமிருந்து அவர் எவ்விதச் சலுகையும் பெறுவதற்குச் சிறிதும் அருகதை உள்ளவர் அல்லர். அஸ்காரியும் மெக்காவுக்குப் பயணமானுர். ஆனுல் ஹிந்தால் ஓர் இரவில் நடந்த தாக்குதலில் உயிர் இழந்தார்.

வடமேற்கே அன்பில்லாத தம் சகோதரர்களின் பகையை வென்ற பிறகு 1554 நவம்பரில் ஹுமாயூன் இந்துஸ்தானத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காகப் படையுடன் சென்றுர். சூர்களிடம் உள்நாட்டுச் சண்டைகள் ஏற்பட்டிருந்ததனுல், ஹுமாயூன் எண்ணிய காரியம் வெற்றிபெறச் சிறந்த வாய்ப்பு கிடைத்தது. 1555 பிப்ரவரியில் அவர் லாகூரைக் கைப்பற்றினுர், ஆப்கானியர்களால் சக்ரவர்த்தியாக அறிவிக்கப்பட்டவரும், பஞ்சாப்பின் கலகக் கவர்னருமான சிகந்தர் சூரை சிர்ஹிண்ட் என்ற இடத்திற்கு அருகில் நடந்த போரில் தோற்கடித்தார். பிறகு, 1555ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஹுமாயூன் தில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினுர். சிகந்தர் சிவாலிக் (Siwalik Hills) மலைகளுக்கு ஓடிவிட்டார். இவ்வாறு தம் சொந்த பலவீனத்தாலும், எதையும் சரியாகத் தீர்மானஞ்செய்ய முடியாத பண்பினுலும் இழந்துவிட்ட இராச்சியத்தின் ஒரு பகுதியை, நன்மை தரும் ஊழின் ஆற்றலால, ஹுமாயூன் மீட்டுக் கொள்வதில் வெற்றிகாண முடிந்தது. ஆனுல் நல்லூழ் கொடுத்த பெருந்துன்பங்களால் அவருடைய இயல்புப் பண்பில் பயன் மிக்க மாற்றம் ஏற்பட்டதா என்பதைக் காட்டுவதற்கு அவர் நீண்டநாள் உயிரோடியிருக்கவில்லை. 1556 ஜனவரி 24-ல் தில்லியில் உள்ள ஒரு நூலகத்தின் மாடிப்படியிலிருந்து தற்செயலாகக் கால் இடறி விழுந்ததன் விளைவாக உயிர் துறந்தார்.

அப்போது ஹுமாயூனின் பழைய தோழரான பைராம் (Bairam) என்பவரின் பாதுகாப்பில் பஞ்சாப்பில் வளர்ந்துவந்த இளவயதினரான அக்பர் 1556 பிப்ரவரி 14ஆம் தேதி அவருடைய பதின்மூன்றுவது வயதில் ஹுமாயூனுக்கு அடுத்த அரசராகப் பட்டஞ் சூட்டப் பெற்றுர். ஆனுல், இன்னும் இந்துஸ்தானத்தின்மீது முகலாயரின் மேலாண்மை சிறிதும் உறுதியாக நிறுவப்படவில்லை. ஸ்மித் (Smith) சொல்லுவது போல 'அக்பர், தான் உண்மையாகப் பாதுஷாவாக ஆவதற்கு முன்பு, சிம்மாசனத்தின் உரிமைக்காகப் போட்டியிடுபவர்களில் தாமே மிகச் சிறந்த உரிமையுடையவர் என்று நிரூபிக்க வேண்டியவராயும், குறைந்த பட்சம் தம் தந்தையின் இழந்த இராச்சியத்தை மீண்டும் வெற்றி கொள்ள வேண்டியவராயும் இருந்

Koviloor Academy

தார்.' உண்மையில் இந்தியா 1556-ல் 'ஷெர்ஷாவின் பின் வழியினரின் முட்டாள் தனமான செயல்களாலும், போர்களாலும் நாடு ஷெர்ஷா செய்த சீர்திருத்தங்களின் நன்மைகளை அனுபவிக்க முடியாது போனதுடன், அதே சமயத்தில் மிகப் பயங்கரமான பஞ்சத்தின் கொடுமைகளுக்கும் ஆளாக நேர்ந்தது. மேலும் இந்தியாவின் வெவ்வேறு பாகங்களிலிருந்த சுதந்திர இராச்சியங்கள் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டன. வடமேற்கே அக்பரின் மாற்றுந்தாயின் புதல்வரான மிர்ஸா முகம்மது ஹகிம் (Mirza Muhammad Hakim) காபூலைப் பெரும்பாலும் சுதந்திரமாகவே ஆண்டுவந்தார். வடக்கே காஷ்மீர் ஒரு உள்நாட்டு முகம்மதிய அரச வம்சத்தின் ஆளுகைக் கீழ் இருந்தது. ஹிமாலய நாடுகள் கூட எல்லாம் சுதந்திரமாக இருந்தன. ஷெர்ஷாவிற்குப் பிறகு சிந்துவும் மூல்தானும் அரசரின் ஆணைக்கு அடங்காதவையாகிவிட்டன. ஒரிஸ்ஸா, மாளவம், குஜராத்து முதலியவையும் (தற்காலத்து மத்தியப் பிரதேசத்திலுள்ள) கோண்ட்வானுவின் (Gondwana) உள்நாட்டுத் தலைவர்களும் மேலதிகாரி எவருடைய கட்டுப்பாட்டுக்கும் அடங்காத தனியுரிமையுடைய நாடுகளாயும் அரசர்களாயும் ஆயினர். விந்திய மலைகளுக்குத் தெற்கே பரந்த விஜயநகரப் பேரரசு இருந்தது. காந்தேஷ், பிரார், பிடார், அகமத் நகர், கோல்கொண்டாக்களின் முஸ்லிம் சுல்தானியங்கள் வடக்கத்திய அரசியலில் சிறிதும் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. மேற்குக் கடற்கரையில் போர்ச்சுக்கீசியர்கள் கோவா (Goa) டையூப் பகுதிகளை உரிமையாகப் பெற்றுத் தம்முடைய செல்வாக்கை நிலை நாட்டினர். ஹுமாயூன் இறப்பதற்கு முன்பு இந்துஸ்தானத்தில் ஒரு மிகச் சிறிய பகுதியைத் தான் மீட்க முடிந்தது. ஷெர்ஷாவின் இராச்சியத்தின் பெரும்பகுதி இன்னும் சூர்கள் வசமாகவே இருந்தது. அஹ்மத் யாத்கர் (Ahmad Yadgar) சொல்வது போல, 'ஆக்ராவிலிருந்து மாளவம் வரை பரவியிருந்த நாடும் ஜான்பூரைச் சார்ந்த பகுதிகளும் ஆதில் ஷாவின் அரச அதிகாரத்தைப் பெற்றிருந்தன. தில்லியிலிருந்து காபூலுக்குச் செல்லும் பாதையிலுள்ள சிறிய ரோஹ்தாஸ் வரையிலுள்ள பகுதிகள் சிகந்தரின் கையில் இருந்தன; மலைகளின் எல்லைப்பகுதிகளிலிருந்து குஜராத்தின் எல்லைப் பகுதிகள் வரை இப்ராஹிம்கானுக்குச் சொந்தமாயிருந்தன.' இந்துஸ்தானத்தின் தலைமையின் உரிமைகளைப் பொறுத்த வரை அவற்றிற்கு, அக்பர், ஷெர்ஷாவின் பிரதிநிதிகள் இவர்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது முடிவு செய்ய முடியாததாகவே இருந்தது. ஸ்மித் கூறுவதைப் போல, 'அவ்வுரிமைகள் வாள் பலத்தினால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டியவையாயிருந்தன.' இவ்வாறு அக்பரின் பரம்பரை உரிமை ஆபத்தான இயல்பினதாக இருந்தது. ஒரு பேரரசை நிர்மாணிக்கும் அவருடைய வேலை உண்மையில் மிகப் பெரியதொன்றாகவே இருந்தது.

Koviloor Acadamy

அக்பர் பட்டத்திற்கு வந்த உடனே ஆதில்ஷா சூரின் திறமை வாய்ந்த தளபதியும் அமைச்சருமான ஹிமூ முகலாயர்களை எதிர்க்க முன்வந்தார். அவர் முதலில் தில்லியின் முகலாயக் கவர்னரான தார்திபேக் (Tardi Beg) என்பவரைத் தோற்கடித்து ஆக்ராவையும் தில்லியையும் கைப்பற்றினார். தில்லியைக் காப்பாற்றத் தவறியதற்காகத் தார்திபேக் பைராமின் ஆணைப்படி கொல்லப்பட்டார். ராஜா விக்ரமஜித் (Raja Vikramjit) அல்லது விக்கிரமாதித்தியன் (Vikramaditya) என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டு ஹிமூ 1,500 போர் யானைகளு மடங்கிய ஒரு பெரிய படையுடன் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பானிப்பட்டுப் போர்க்களத்தில் அக்பரையும் பைராமையும் எதிர்ந்தார். முகலாயப்படையின் இருதரப்புக்களையும் எதிர்த்து முதலில் சிறு வெற்றிகளை அடைந்து வந்தார். ஆனால், தற்செயலாக அவர் கண்ணில் பாய்ந்த ஓர் அம்பினால் விதியின் போக்கு வேறுவிதமாகக் காணப்பட்டது. அவர் தன்னுணர்வு இழந்தார். அவருடைய படைவீரர்கள் தங்கள் தலைவரை இழந்ததால் குழப்பத்துடன் கலைந்து ஓடினர். ஆதரவற்ற இந்த நிலையில் அக்பர் தம் கையாலேயே அவரைக் கொல்ல மறுத்ததால், பைராம் கொன்றார் என்று சிலரும் அக்பர் தம்முடைய பாதுகாப்பாளரின் உத்தரவின்பேரில் அவரைக் கொன்றார் என்று சிலரும் கூறுகின்றனர்.

இரண்டாவது பானிப்பட்டுப் போரின் விளைவு திசை திருப்புவதாயிருந்தது. இந்தியாவில் மேலாண்மைக்காக ஆப்கானியர்களும் முகலாயர்களும் போட்ட போட்டிக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்து, முகலாயர்களுக்கு ஆதரவாகப் பானிப்பட்டுப்போர் தீர்ப்புக் கூறிவிட்டது. வெற்றியாளர்கள் விரைவில் தில்லியையும் ஆக்ராவையும் தம் வசப்படுத்திக்கொண்டனர். கி.பி. 1557ஆம் ஆண்டு மேமாதத்தில் சிகந்தர் சூர் அவர்களிடம் சரணடைந்தார். அவருக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஒரு சிறு பகுதி அளிக்கப்பட்டது. ஆனால் விரைவிலேயே அக்பரால் அவர் அங்கிருந்து துரத்தப்பட்டார். அதன் பிறகு வங்காளத்தில் நாடோடியாக (கி.பி. 1558-1559-ல்) இருந்தார். வங்காளக் கவர்னரை மோங்கிர் (Monghyr) என்ற இடத்தில் எதிர்த்துச் சண்டையிட்டு (1556ல்) முகம்மது ஆதில் இறந்தார். இப்ராஹிம் சூர் நாடோடியாகப் பல விடங்களிலும் அலைந்து திரிந்து ஒரிஸ்ஸாவில் புகலிடம் பெற்றார். அங்கே பத்தாண்டுகளுக்குப் பிறகு (கி.பி.1567-1568) கொல்லப்பட்டார். இவ்வாறு இந்துஸ்தானத்தின் மேலாண்மைக்காக அக்பரின் உரிமைகளை எதிர்த்துப் போட்டியிடுவார் சூர் அரசமரபில் ஒருவரும் இலராயினர். பிற்காலத்தில் பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில் முகலாய-ஆப்கானியர்களுக்கு எதிராக எழுந்த கிளர்ச்சிகள் எல்லாம் ஆங்காங்கே சிற்சில இடங்களில் சிறு சிறு கிளர்ச்சிகளாய் இருந்தமையின், முகலாயப் பேரரசதிகாரத்திற்கு அவை ஒன்றும் பெரிய இடர்ப்பாடாய் இருக்கவில்லை.

Koviloor Acadamy

2. மாண்பு மிக்க அக்பர்

1. பிரதிநிதி ஆட்சியின் முடிவு

இரண்டாவது பானிப்பட்டு போர்தான் முகலாயப் பேரரசு இந்தியாவில் உண்மையாகத் தொடங்கப்பட்டதைக் குறிக்கிறது. அப்பேரரசு விரிந்து பரவுமாறு ஊக்கியதும் அப்போரேயாகும். 1558-லிருந்து 1560-க்குள் குவாலியர், ஆஜ்மீர், ஜான்பூர் ஆகியவை அப்பேரரசுடன் இணைக்கப்பட்டன. ஆனால் அக்பர் தம் பாதுகாவலரும் காப்பாளருமான பைராம் கானின் கண்காணிப்பு வலையிலிருந்து வந்ததால் இன்னும் உரிமையுடன் ஒன்றும் செய்ய முடியவில்லை. அக் காப்பாளர் முகலாயர்களுக்கு அரிய சேவைகளைச் செய்தார். எனினும் அவர் தம் அதிகாரத்தை வரன்முறையின்றித் தம் விருப்பம் போல் பயன்படுத்தி வந்தார். அதனால் இக்காலத்திற் குள்ளாகவே தமக்குப் பல எதிரிகளையும் தேடிக்கொண்டார். 'கடைசியில் பைராமின் நடவடிக்கைகள் எல்லாம் சிறிதும் பொறுத்துக் கொள்ள முடியாத அளவுக்குச் சென்று விட்டன' என்று அபுல் பாஸல் எழுதுகிறார். அக்பருக்கும் தாம் பெயரளவில் மட்டும் அல்லாமல் உண்மையான அரசராயிருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றலாயிற்று. அக்பருடைய அன்னை ஹமீதா பானு பேகமும், மாற்றாந்தாய் மாஹம் அனகாவும் (Maham Anaga) அவளுடைய மகன் ஆதம் கானும் (Adam Khan) அப்பிரதிநிதியை ஒழித்துவிட வேண்டும் என்று வற்புறுத்தினர். 1560-ல் அக்பர் சக்ரவர்த்தி இராச்சிய பாரத்தை இனி தம் தோளிலேயே தாங்கிக்கொள்ள விரும்புவதாகத் தமது முடிவைப் பைராம்கானுக்கு முன்பு தெரிவித்தார்; அவரை வேலையினின்று நீக்கப் போவதையும் தெரிவித்தார். காப்பாளர் இப்போது பற்றுவிட்டவரைப் போல தம் தலைவருடைய தீர்மானத்திற்குப் பணிந்தார். மெக்கா (Mecca) வுக்குப் போய்விடுவதாகவும் ஒப்புக் கொண்டார். ஆனால் அக்பர் பைராமின் சொந்த எதிரியும் முன்னாள் கீழதிகாரியுமாயிருந்த பீர் முகம்மதை (Pir Muhammad) உடன் அனுப்பித் தம் பாதுகாவலாய்ப் பேரரசின் எல்லையை விட்டு அப்பால் செல்லு

Koviloor Academy

மாறு பார்த்துக் கொள்வதாக ஏற்பாடு செய்த போது அல்லது பதாவூனி (Badauni) சொல்வது போல, 'அவரை எவ்வளவு விரைவில் மெக்காவுக்கு மூட்டை முடிச்சுடன் அனுப்பமுடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்பிவிட' ஏற்பாடு செய்த போது, காவலர் அதை இழிவாகக் கருதிக் கலகம் செய்தார். ஜலந்தருக்கு அருகில் அவர் தோற்கடிக்கப்பட்டார். ஆனால், அவருடைய பழங்காலச் சேவைகளைக் கருத்தில் வைத்து அக்பர் அவரைத் தாராள மனப்பான்மையுடன் நடத்துமளவிற்கு அறிவு வாய்ந்தவராய் இருந்தார். 1561 ஜனவரியில், பைராம் மெக்காவுக்கும் போகும் வழியில் லோஹானி ஆப்கானியன் ஒருவனால் குத்திக் கொல்லப்பட்டார். முன்பு ஒரு சமயம் பைராமின் ஆணையின் கீழ் முகலாயப் படைகள் அந்த ஆப்கானியனின் தந்தையைக் கொன்றுவிட்டன. பைராம் தம்முடன் கொண்டுபோயிருந்த பொருள்களை எல்லாம் ஆப்கானியர்கள் கொள்ளையடித்துக் கொண்டாலும், அவருடைய குடும்பம் அவமதிப்புக்கு ஆளாகாது தப்பியது. அவருடைய மகன் அப்துர்ரஹீம் (Abdur Rahim) என்பவர் அக்பரின் பாதுகாப்பைப் பெற்றார். பிற்காலத்தில் அவர் பேரரசின் முக்கியமான பிரபுக்களில் ஒருவராகச் சிறப்புற்றார்.

பைராம் வீழ்ச்சியுற்றும், அக்பர் உடனே இராச்சிய பாரம் முழுவதையும் தம் தோள்களில், ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில், அதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் (கி.பி. 1560-1562) அவருடைய மாற்றாந்தாயான மாஹம் அனகாவும் அவளுடைய மகன் ஆதம் கானும், அவர்களுடைய உறவினர்களும் இராச்சியத்தில் தங்கள் செல்வாக்கை அளவுக்கு மீறிப் பயன்படுத்தி வந்தனர். (1561-ல்) ஆதம்கானும் பீர்முகம்மதுவும், பதாவூனியால் நிரல்பட விளக்கப்பட்ட முறைகளில், மாளவத்தை வென்றனர். அவர்கள் செய்த கொடுமைகளையெல்லாம் பதாவூனி நேரில் கண்டறிந்தவர். ஆனால், அவர்கள் தண்டிக்கப்படாமலேயே இருந்தனர். கடைசியில் அவர்களுடைய அதிகாரச் செல்வாக்கைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாமல் அக்பர் ஆதம்கான் சாகும்படி செய்தார். ஆதம்கானின் அன்னை துயரம் தாங்காது நாற்பது நாள் கழித்து இறந்தாள். இவ்வாறு 1562 மே மாத அளவில் அக்பர் அந்தப்புர அதிகாரத்தினின்று விடுதலை பெற்றார்.

2. வெற்றிகளும் புதிய சேர்க்கைகளும்

இயல்பிலேயே ஒரு வலிமை வாய்ந்த பேரரசரான அக்பர் 1601 ஜனவரியில் அசீர்கா (Asirgarh) ரைப் பிடிக்கும் வரை நாட்டை விரிவுபடுத்துவதற்குப் படையெடுத்துச் செல்லும் கொள்கையை மேற்கொண்டிருந்தார். ஆனால் அதைத் தொடர்ந்து செயலாற்றுதவாறு எதிர்பாராத, அவர் சக்திக்கு அப்பாற்பட்ட, சூழ்நிலைகள் தடுத்தன.

Koviloor Academy

'ஒரு பேரரசர் எப்போதும் வெற்றி பெறுவதிலேயே கண்ணுயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பக்கத்து நாட்டரசர்கள் தமக்கு எதிராகப் படையுடன் எழுவர்' என்று அவர் கருதிக்கொண்டிருந்தார். உண்மையில் அக்பர் நாற்பதாண்டுகளாக அடிக்கடி புதிய இராச்சியங்களைத் தம் பேரரசுடன் சேர்த்துக் கொண்டுவந்து, பெரும்பாலும் வட, மத்திய இந்தியா முழுவதிலும் அரசியல் ஒருமைப்பாடு ஏற்படுமாறு செய்துவிட்டார். 1561-ல் ஆதம்கானுலும், பீர்முகம்மதாலும் மாளவ மாளவம் எப்படி வெல்லப்பட்டது என்பதை ஏற்கெனவே நாம் கண்டோம். ஆனுல் அரசர் பாஸ் பஹாதூர் விரைவிலேயே அதை மீண்டும் பெற்ருர். சில ஆண்டுகள் வரை முகலாயர்களுக்கு அடிபணியாமல் இருந்தார். 1564-ல் அக்பர் இப்போதுள்ள மத்திய பிரதேசத்தின் வடக்கு மாவட்டங்களை ஏறக்குறைய உள்ளடக்கிய (கோண்ட்வானுவில் உள்ள) கரஹ் கடங்கா (Garah Katanga) இராச்சியத்தை வென்று வருமாறு, காரா (Kara) கிழக்கு மாகாணங்கள் இவற்றின் கவர்னரான ஆசப்கானை அனுப்பினுர். அப்பகுதியை ஆண்டு வந்த அரசர் பீர் நாராயண் (Bir Narayan) என்பவர் மிகவும் இளவயதினர். ஆனுல் அவருடைய அன்னை துர்க்காவதியால் அது மிகச் சிறப்புடன் ஆளப்பட்டு வந்தது. துர்க்காவதி பேரழகுடையளாயிருந்ததுடன் வீரம் மிக்க ஆரணங்காகவும் விளங்கினுள். அவள் பேரரசாட்சியாளர்களை மிக்க வீரத்துடன் எதிர்த்தாள். ஆனுல் (இப்போது ஜப்பல்பூர் (Jubbulpore) மாவட்டத்தில் உள்ள, கரஹ்வுக்கும் மண்டலாவுக்கும் இடையே உள்ள ஓரிடத்தில் அவர்களுடன் செய்த போரில் தோல்வியுற்ருள். உண்மையான ராஜபுத்திரர்களுக்குரிய உணர்ச்சிப்படியே அவமானம் அடைவதிலும் சாவே விரும்பத்தக்கது என்று எண்ணினுள்; தற்கொலை செய்து கொண்டாள். இவ்வாறு 'அவளுடைய வாழ்க்கை எவ்வளவு பயனுடைதாக இருந்ததோ அவ்வளவு சீர்மையுற்றதாகவும், தியாக முடைய தாகவும் அவளுடைய முடிவு இருந்தது. இளம் ஆட்சியளரான பீர் நாராயண் தம் எதிரிகளை எதிர்த்துத் தீரத்துடன் போர்புரிந்தார். படையெடுப்பாளர்கள் பெருங்கொள்ளைப் பொருள் பெற்றனர். சிறிது காலம் அந்த இராச்சியத்தை ஆஸப்கான் ஆண்டார். பிறகு பழைய ஆட்சி வம்சக்குடும்பத்தின் பிரதிநிதி ஒருவருக்கு அது கொடுக்கப்பட்டது. ஆனுல் முகலாயர்களால் அவருடைய இராச்சியத்தின் அந்தப் பகுதியை அவர் இழந்து விடும்படி நேர்ந்தது. அப்பகுதி இப்போது போபால் (Bhopal) ராச்சியத்தின் பகுதியாக இருக்கிறது.'

நாம் ஏற்கெனவே கண்டதைப்போல், கானுவா போர் (1527) வடக்கில் ராஜபுத்திரர்கள் அடியோடு மறைந்துவிடும்படி செய்துவிடவில்லை. இந்திய வரலாற்றில் ராஜபுதனம் அச்சமயத்திலும் வலிமை வாய்ந்த ஒரு சக்தியாகவே இருந்தது. 'இந்திய மண்ணின் மக்களான' ஆப்கானியர்களிடமிருந்து பறித்துக்கொண்ட அன்னிய வம்

Koviloor Academy

சத்தவரான அக்பர், தம் பேரரசை இந்தியாவில் நிறுவுவதற்கேற்ற பண்புகளான நாட்டு நலங் கருதும் அரசியல்வாதியின் உண்மையான உள்ளார்ந்த உணர்வும், தெளிந்த அறிவும், தாராள நோக்கமும் உடையவராக இருந்தார். அவர் ராஜபுத்திரர்களுடைய கூட்டுறவின் மதிப்பை உணர்ந்தார். இவ்வாறு அவர் தம்மால் முடிந்தவரை ராஜ புத்திரர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். பெரும்பாலும் தம் முடைய எல்லா நடவடிக்கைகளிலும் அவர்களுடைய கூட்டுறவைப் பெறவும் அதை நிலைநிற்கச் செய்யவும் முயன்றார். அவருடைய அறிவு மிக்க, தாராள மனப்பான்மை கொண்ட கொள்கையால் ராஜ புத்திரர்களில் பெரும்பான்மையோரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டார். அவர்கள் அவருடைய பேரரசுக்கு மிகச் சிறந்த பணிகளைச் செய்ததுடன் அதற்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்து மளவுக்கு அக்பரிடம் ஈடுபாடு கொண்டு அன்பு காட்டினர். உண்மை யில் அக்பரின் பேரரசு முகலாயரின் வீரம், போரியல் சூழ்ச்சிகளுடன் ராஜபுத்திரர்களின் வீரமும் கொண்டு இணைந்த கூட்டுறவின் விளை வாகவே திகழ்ந்தது. 1562-ல் ஆம்பெர் (ஜெய்ப்பூர்) நாட்டை யாண்ட ராஜ பிஹாரிமால் அக்பரைச் சரணடைந்ததுடன், திருமணத் தொடர்பு மூலம் அவருடைய நட்பை உறுதியாக்கிக்கொண்டார். பிஹாரிமால் தம்முடைய மகன் பகவான் தாசுடனும் (Bhagwan Dos), பேரன் மான்சிங்குடனும் ஆக்ராவுக்குச் சென்றார். அவர் 5,000 படை வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருடைய மக னும் பேரனும்கூடப் படையில் உயர்ந்த நிலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இவ்வாறு முகலாயப் பேரரசர்கள் நான்கு நூற்றாண்டுகள் மத்திய இந்தியா பெற்றெடுத்த மிகப்பெரிய தளபதிகள், அரசியல் நுணுக்கம் வல்லார்களில் சிலரின் பணிகளைப் பெறுவதற்கு வழி திறக் கப்பட்டது.'

ஆனால் ராஜபுத்திர உணர்ச்சி மிகச்சிறந்து விளங்கியதும், செங் குத்தான மலைகளும், பலம் வாய்ந்த கோட்டைகளும் கொண்டு மிகச் சிறந்த தற்காப்பு வசதிகளைப் பெற்றிருந்ததும், வட இந்தியாவில் மேலாண்மை அதிகாரத்திற்காகப் பாபருடன் சண்டை யிட்டதுமான மேவார்மட்டும் முகலாயப் பேரரசுக்கு அடிபணிந்து தலைவணங்க வில்லை. மாளவத்தின் நாடோடி ஆட்சியாளரான பாஸ் பஹதூருக் குப் பாதுகாப்பளித்ததன் மூலம் பேரரசரின் கோபத்துக்கும் ஆளாகி யது. இந்தியா முழுவதையும் ஒரே பேரரசாகக் காணவேண்டும் என்ற குறிக்கோளை மனத்துள் போற்றிவந்த அக்பருக்கு மேவார்கள் சுதந்திரம் எரிச்சலையே மூட்டியது. மேவாரின் வழியே கங்கை- யமுனை தோவாப்புக்கும் மேற்குக் கரைக்கும் இடையே வாணிகப் பெருஞ்சாலைகள் அமைந்து கிடந்தமையின் பொருளாதார நலன்களுக் காகவும் மேவாரை அவர் தம் ஆளுகையின்கீழ் அடக்கி வைக்க வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. ராணா சங்காவின் மரணத்திற்குப்

Koviloor Acadamy

பிறகு, அந்தச் சிறந்த பெரு மகனாரின் தகுதியற்ற மகனான உதய சிங்கின் (Udai Singh) பலவீனத்தால் மேவாரில் ஏற்பட்டிருந்த உள்நாட்டுப் பகைமை அக்பரின் பேராசைத்திட்டம் எளிதில் நிறைவேறத் துணைசெய்தது. 'மேவாரின் சரித்திர ஏடுகளில் அதன் அரசர்களின் பட்டியலில் உதய சிங்கின் பெயர் என்றும் குறிப்பிடாமல் இருந்திருந்தால் மேவாருக்கு நல்லதாயிருந்திருக்கும்' என்று டாட் (Tod) கூறுகிறார். 1567 அக்டோபரில் சித்தூர்க் கோட்டையை அக்பர் முற்றுகையிட்டபோது உதயசிங்கு அக்கோட்டையை அதன் தலைவிதிக்கே விட்டுவிட்டு மலைகளின் பக்கம் ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால் ராணாவின் அடியொற்றி வாழ்ந்தோரில் சில வீரர்கள் இருந்தனர். குறிப்பாக ஜெய்மால் (Jaimall), பட்டா (Patta) என்போர் பேரரசினரை எதிர்த்து நான்கு மாதங்கள் (1567 அக்டோபர் 20ஆம் தேதி முதல் 1568 பிப்ரவரி 23ஆம் தேதி வரை) விடாப்பிடியாகவும் வன்மையாகவும் எதிர்த்துவந்தனர். கடைசியில் ஜெய்மால் அக்பராலேயே சுடப்பட்ட கைத்துப்பாக்கிக்குண்டு ஒன்றினால் அடிபட்டு உயிர் துறந்தார். பின்பு பட்டாவும் (Patta) போரில் இறந்து வீழ்ந்தார். தங்கள் தலைவர்களின் சாவைக் கண்டு மனம் மருகிய கோட்டையைக் காத்துக்கொண்டிருந்த வீரர்கள் கைகளில் வாள்தாங்கி எதிரிகளின்மேல் பாய்ந்தனர். ஒரு வீரர்கூட இல்லாமல் இறக்கும்வரை வீரத்துடன் போரிட்டனர். ராஜபுத்திரப் பெண்மணிகள் ஜௌஹர் (Jauhar) என்ற சடங்கினைச் செய்தனர். பிறகு அக்பர் சித்தூர்க் கோட்டையைத் தகர்த்தெறிந்தார். அபுல் பாஸல் கருத்துப்படி 30,000 ஆட்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இந்த எண்ணிக்கை மிகவும் மிகைப்பட்டதுபோலவே தோன்றுகிறது, அக்பரின் கோபம் டாட் 'அரசச் சின்னங்கள்' என்று அழைப்பவற்றின் மீதும் பாய்ந்தது. அதனால் அவர் மாபெரும் அளவினதாகிய வீர முரசத்தை அகற்றினார். (அவ்வீரமுரசம் எட்டு அல்லது பத்து அடி விட்டமுடையது. சித்தூர்க் கோட்டையில் அரசர்கள் நுழையும் போதும், கோட்டையிலிருந்து வெளிவரும்போதும் அடிக்கப்பட்ட அம்முரசத்தின் ஒலி பல மைல் சுற்றளவுக்குங் கேட்டது). மேலும் அவர் சித்தூர்ப் பெரும் மாதாவின் கோயிலிலிருந்து மிகப் பெரிய தொங்கும் விளக்கை ஆக்ராவுக்கு எடுத்துச் சென்றுவிட்டார்.

சித்தூரின் வீழ்ச்சியைக் கண்டு பேரதிர்ச்சியுற்ற, நீண்டகாலமாக அக்பரை எதிர்த்துவந்த மற்ற ராஜபுத்திரத் தலைவர்கள் அவருக்கு அடிபணிந்தனர். 1569 பிப்ரவரியில் ராந்தம்போரின் தலைவர் ராய் சுர்ஜன ஹரன் (Rai Surjana Hara) என்பவர் தம் கோட்டையின் சாவிகளை அக்பரிடம் சமர்ப்பித்துப் பின் பேரரசின் ஊழியருள் ஒருவரானார். பந்தல்கண்டில் இருந்த காலிஞ்ஜாரின் தலைவர் ராஜா ராம்சந்த் (Raja Ramchand) அதே ஆண்டில் தம் கோட்டையை அக்பரிடம் விட்டுவிட்டார். காலிஞ்ஜார்க் கோட்டையை வசமாக்கியது அக்பரின்

Koviloor Academy

படைவன்மையைப் பெருக்கியது. முகலாயப் பேரரசின் வளர்ச்சியில் அந்நிகழ்ச்சி ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. 1570-ல் பிக்கானெர் (Bikaner), ஜெய்சால்மெர் ஆட்சியாளர்கள் முகலாயப் பேரரசருக்கு அடிபணிந்ததுமன்றி, அவருக்குத் தம் மகள்களையும் திருமணஞ் செய்துகொடுத்தனர்.

இவ்வாறு ஒருவர் பின் ஒருவராக ராஜபுத்திரத் தலைவர்கள் முகலாய ஆட்சியை ஒப்புக்கொண்டனர். ஆனால் மேவார்மட்டும் இன்னும் ஏற்றுக்கொள்ள மறுத்தது. உதயசிங்கு தம் மூதாதையரின் தலைநகரை இழந்துவிட்டபோதிலும் சுதந்தரமாகவே இருந்தார். உதயப்பூரின் வடமேற்கே பத்தொன்பது மைல் அளவில் அமைந்திருந்த கோகுண்டா (Gogunda) என்ற இடத்தில் 1572-ஆம் ஆண்டு மார்ச்சு 3ஆம் தேதி இறந்த பிறகு அவருடைய மகனை பிரதாப்பை மேவார் உண்மையான ஒரு தேச பக்தராகவும் தலைவராகவும் பெற்றது. எல்லா வகையிலும் தம் நாட்டின் மரபுகளை விசுவாசத்துடன் கடைப்பிடிப்பவராயிருந்த பிரதாப் படையெடுப்பாளர்களுக்கு ஈடுகாட்ட முடியாத எதிர்ப்புகளை அளித்தார். ஒரு தலைநகர் இல்லாமலும், சிறு பொருள் வளங்கள்மட்டும் உடையவராய், அப்போது 'உலகத்திலேயே அளவிடமுடியாத பெருஞ் செல்வமுடைய சக்கரவர்த்தி'யான முகலாயப் பேரரசரின் ஒழுங்குமுறைக்குட்பட்ட படைபலத்தைப் பிரதாப் எதிர்க்கவேண்டியிருந்தது என்றால், அவருடைய வேலையின் பெருமை எளிதில் உணரப்படும். மேலும் அவருடைய தோழர்களான பிற தலைவர்களும், அண்டை நாடுகளில் இருந்தோரும், அவருடைய உடன்பிறந்த சகோதரர்கூட ராஜபுத்திரர்களுக்குரிய உயர்குறிக்கோள்களான வீரமும் சுதந்தரமும் இல்லாமல் முகலாயர்களுடன் சேர்ந்துகொண்டிருந்தனர். ஆனால் ராஜபுதனத்தின் தேசிய வீரரான இவருக்கு எந்தத் தடையும் அச்சத்தை விளைப்பதாக இருக்கவில்லை. அவருடைய சொந்தக்காரர்களைக் காட்டிலும் அவர் மிகத் தூய்மையான குணங்களுடன் படைக்கப்பட்டிருந்தார். 'வரப்போகும் துன்பத்தின் அளவு மிகுதி' பிரதாப்பின் வீரத்துணிவை வன்மையாக்கியது கவிஞரின் சொற்களில் கூறவேண்டுமானால் அவர் 'என்னுடைய அன்னை அளித்த பாலின் பெருமையைப் பிரகாசிக்கச் செய்வேன்' என்று சபதம் செய்தார். அவ் வஞ்சினத்தை அவர் மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றினார். 'அவருடைய எல்லையில் நிச்சயமாக வரவிருந்த பேரரசின் படையெடுப்பு 1576 ஏப்ரலில் ஆம்பெர் நாட்டின் மான்சிங்கு, ஆஸப்கான் ஆகிய இருவரின் தலைமையில் திரண்டுவந்த ஒரு பெரும் படையுடன் மேற்கொள்ளப்பட்டது. கோகுண்டாவுக்கு அருகிலுள்ள ஹல்திகாட் (Haldighat) கணவாயில் ஒரு கொடிய போர் நடைபெற்றது. பிரதாப் தோற்கடிக்கப்பட்டார். ஜாலா (Jhala) நாட்டுத் தலைவரின் சுயநலமற்ற தொண்டினால் அவர் தம் உயிருடன் தப்பினார். அத் தலைவர் தாமே ராணு

Koviloor Academy

என்று விளம்பரப்படுத்திக்கொண்டு பேரரசின் வீரர்களைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டார். தமக்கு மிகவும் பிரியமான செய்தக் (Chaitak) என்ற குதிரையின்மீது ஏறிக்கொண்டு ராஜு மலைகளுக்குச் சென்றார். அவருடைய கோட்டைகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்று கப் பகைவர்களால் பிடிக்கப்பட்டன. ஆனால் நேரடியாகப் பெருந் துன்பம் வந்து தாக்கியபோதிலும் பிரதாப் தாம் அடிபணியவேண்டும் என்று மனத்தாலும் நினைக்கவில்லை. இணக்கத்திற்கு வராத எதிரி யால் குன்றுக்குக் குன்று வேட்டையாடப்பட்டபோதிலும், 'தம் முடைய குடும்பத்தை மலைகளில் கிடைக்கும் கனி வகைகளைக் கொண்டே உண்பித்துவந்தபோதிலும்' அசைக்க முடியாத ஊக்க உணர்ச்சியுடனும், சக்தியுடனும் அவர் போரைத் தொடர்ந்து நடத்தி னார். '1597 ஜனவரி 19ஆம் தேதி தம் ஐம்பத்தேழாம் வயதில் அவர் இறப்பதற்கு முன்பு இழந்துவிட்டிருந்த பல பகுதிகளை மீட்ட திருப் தியை அடைந்திருந்தார். கடைசி நிமிடத்தில் கூட அந்த ராஜ புத்திர தேசபக்தர் தம் தாய்நாட்டைப் பற்றிய கவலையாகவே இருந் தார். ஏனெனில் அவருக்குத் தன் மகன்மீது நம்பிக்கை யில்லை. கடைசி மூச்சு விடுமுன்பு அவர் தமக்குக்கீழிருந்த தலைவர்களிடமிருந்து 'நாட்டைத் துருக்கியர்களுக்கு விட்டுவிடக் கூடாது' என்ற வாக் குறுதியை வற்புறுத்தி வாங்கிக்கொண்டார். 'இவ்வாறு இன்றுகூட ஒவ்வொரு சிசோதியா (Sisodia) வாலும் தெய்வமாக வணங்கப்படும் ஒரு ராஜபுத்திர வீரரின் வாழ்க்கை முடிவடைந்தது' என்று டாட் எழுதுகிறார். மேலும் அவர் எழுதுகிறார்: 'மேவார் தன்னுடைய தூசிடைடிஸ்ஸையோ (Thucydides) அல்லது செனபன்னையோ (Xenophon) பெற்றிருந்தால், மேவாரில் பல மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், மிகச் சிறந்த ஆட்சி நடந்துவந்தது என்பதைக் காட்டிலும், வரலாற்றுக் கவிஞருக்கு பெலோபோன்னிசஸ்ஸின் (Peloponnesus) போரையோ, "பத்தாயிரத்தின்" பின்வாங்கலோ மிகுதியான வெவ்வேறான நிகழ்ச்சிகளை விளைவித்திருக்கா. அசைக்க முடியாத வீரத்திறம், தடுமாற்றம் அடையாத தைரியம், "மானத்தை மங்காமல் காக்கவேண்டும்" என்பதில் கொண்டிருந்த உண்மை யான ஆர்வம், எந்த நாடும் இப்படித் தற்பெருமை கொள்ளமுடியாத அளவுக்கு நம்பிக்கையுடன் கொண்டிருந்த விடாமுயற்சி இவையே உயர்ந்தேறி வரும் பேராசை, ஆணையிட்டு அடக்கும் சக்தி, அள வில்லாத ஆற்றல், மத உணர்ச்சியில் தீவிர ஆர்வம், இவற்றுக்கு எதிர்க்கப்படும் பொருள்களாக இருந்தன. ஆனால் இவற்றால் வெல் லப்பட முடியாத ஓர் உள்ளத்துடன் போட்டி போட முடியவில்லை.' உண்மையில் இந்திய வரலாற்றில் பிரதாப் கிளர்ச்சி யூட்டும் ஆளுமை யாளராவர். ராஜபுத்திரர்கள் பிரதாப்பைக் காட்டிலும் திறமை மிக்க தளபதிகளையும் தந்திரமிக்க அரசியல்வாதிகளையும் பெற்றிருக்கின்ற னர். ஆனால், அவரைக் காட்டிலும் வீரம் மிக்க சிறந்த தேசபக்தி கொண்ட தலைவர்களைப் பெறவில்லை. பிரதாப்பின் மகன் அமர்சிங்கு

Koviloor Acadamy

தம் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற முயன்றார். ஆனால் 1599-ல் மான்சிங்கின்கீழ் வந்த முகலாயப் படையினால் தாக்கப்பட்டார்; மிகுந்த வீரத்துடன் எதிர்த்தும் தோற்கடிக்கப்பட்டார். உடல் நலமின்மையால் அக்பர் அதற்குப் பிறகு வேறு எந்தப் படையெடுப்பையும் மேற்கொள்ள முடியவில்லை.

கி. பி. 1569-ல் ராந்தாம்போரையும் காலிஞ்ஜாரையும் சேர்த்துக் கொண்ட பிறகு, முகலாயர்கள் குஜராத்தை அடிப்படுத்தினர். தன் கடற்கரைகளில் வளமிக்க, மேலோங்கிவரும் துறைமுகங்களைப் பெற்றிருந்த குஜராத்து வாணிக வளத்தில் கவர்ச்சி மிக்கதாய் இருந்தது. அதனால் தில்லியின் முந்திய அரசர்களும் அதைப் பற்றுவதற்குப் பெருவிருப்புக் கொண்டிருந்தனர். ஹுமாயூன் கூட அதைக் கைப்பற்றினார். ஆனால் சிறிதுகாலமே அது அவர் வசத்திலிருந்தது. ஆனால் அக்பரும் தம் பேரரசின் நலன்களுக்காக அம் மாகாணத்தைத் தம் வசமாக்குவதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கவேண்டும். அதன் பெயரளவில் அரசராயிருந்த மூன்றாவது முஸப்பர் ஷா (Muzaffar Shah III) காலத்தில் குழப்பமான நிலை நிலவியிருந்ததால், அது அக்பருக்குத் தம் ஆவலை நிறைவேற்றிக் கொள்ள ஒரு சிறந்த வாய்ப்பை அளித்தது. உண்மையில் உள்நாட்டுக் கலவரம் ஒன்றின் தலைவரான இதிமத்கான் (Itimad Khan) என்பவரால் அக்பருடைய இடையீடு வரவேற்கப்பட்டதால் அக்பரின் படையெடுப்புக்குச் சிறிது சமாதானமுங் கூறலாம். 1572-ல் அக்பர் தாமே குஜராத்துக்கு எதிராகப் படையை நடத்திச் சென்றார்; எல்லா எதிர்ப்புகளையும் முறியடித்தார். பொம்மை ராஜாவுக்கு ஓய்வூதியம் கொடுத்தார். ஒன்றரை மாதம் முற்றுகையிட்ட பிறகு 1573ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ல் சூரத்தை அவர் கைப்பற்றினார். அந்தச் சமயத்தில் அவரோடு தொடர்பு கொள்ள நேர்ந்த போர்ச்சுக்கீசியர்கள் அவருடைய நட்பை நாடினர். ஆனால் அவர் பாத்பூர் சிக்ரீ (Fathpur Sikri) யிலிருந்த தம் இருப்பிடத்தை அடைந்தாரோ இல்லையோ, அதற்குள் புதிதாக வெல்லப்பட்ட அம் மாகாணத்தில் கிளர்ச்சிகள் தோன்றின. அவற்றுள் சிலவற்றில் அக்பரின் சொந்த ஒன்றுவிட்ட சகோதரர்களே பங்கெடுத்துக்கொண்டனர். இதனால் பெருஞ்சினம் கொண்ட அக்பர், பதினொரு நாளில் அறுநூறு மைல் கடந்து அவசரமாக அகமதாபாத்துக்குப் படையை நடத்திச்சென்றார். 1573 செப்டம்பர் 2-ஆம் தேதி அகமதாபாத்துக்கு அருகில் நடந்த போரில் கிளர்ச்சியாளர்கள் அனைவரையும் முற்றிலும் ஒடுக்கிவிட்டார். இவ்வாறு குஜராத் அக்பரின் அதிகாரத்தின்கீழ் வந்தது. அதிலிருந்து குஜராத்து பேரரசரோடு இணைந்த ஒரு பகுதியாகவே ஆயிற்று. அது ஆதாயம் மிக்க வருவாய் மிகுத்துத் தரும் பகுதியாய் விளங்கியது. முக்கியமாக அதன் பொருள்வளங்களையும், வருமானங்களையும் தோடர்மால் சீர்திருத்தியமைத்ததின் மூலம் வளமார்ந்த

Koviloor Acadamy

பகுதியாய்த் திகழ்ந்தது. அம்மாகாணத்தில் தோடர்மால் தொடங்கி வைத்த பணி 1577 முதல் 1583 அல்லது 1584 வரை ஷிஹாப்-உத்-தீன் அஹ்மது (Shihab-ud-din Ahmad) என்பவரால் திறமையாக நிறைவேற்றப்பட்டது. 'குஜராத்தின் வெற்றி அக்பரின் வரலாற்றில் ஒரு முக்கியமான சகாப்தத்தைத் தோற்றுவித்தது' என்று டாக்டர் ஸ்மித் கூறுகிறார். குஜராத் தன் பொருள் வருவாய்களைப் பேரரசுக்கு உரிமையாக்கியதுடன், கடல் வழியில் செல்ல முழு உரிமையும் தந்தது. அவர்களால் இந்தியாவின் வரலாறு சில வழிகளில் மாறுதல் அடைந்தது. ஆனால் முகலாயர்கள் கடல் சக்தியை வளர்ப்பதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இத்துறையில் அவர்களுக்கு எதிர்கால நிலையைக் கூர்ந்து நோக்கி உணரும் ஆற்றலின்மையால் ஐரோப்பிய வணிகர்கள் உள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டது.

இதைவிட முக்கியமான மாகாணமான வங்காளம் அடுத்து முகலாயர்களால் வெல்லப்பட்டது. முகம்மது ஆதில் ஷா குறைந்த காலத்திய, புயல் நிறைந்த ஆட்சிக் காலத்தில் சூர் அரசர்கள் வங்காளத்தில் தங்களைச் சுதந்தர அரசர்களாகச் செய்து கொண்டு வங்காளத்தை 1564 வரை ஆண்டு வந்தனர். பின்பு ஆண்ட இளவரசர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தென் பீகாரின் கவர்னர் சுலைமான் கரராணி (Sulaiman Kararani) என்பவர் தம் அதிகாரத்தை வங்காளம் வரை பரப்பினர். கி.பி. 1572-ல் சுலைமான் சாகும்வரை, அவர் அக்பரின் மேலாட்சி அதிகாரத்தை முறையாக ஒப்புக்கொண்டு அவருடன் நட்புத்தொடர்புகளை மேற்கொண்டிருந்தார். சுலைமான் தம்முடைய தலைநகரைக் கௌரிலிருந்து தாண்டாவுக்கு (Tanda) மாற்றிக்கொண்டு, இந்து இராச்சியமான ஒரிஸ்ஸாவையும் தம் இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டார். ஆனால் அவருடைய மகனாகிய தாவூத் (Daud) தபாகத் (Tabaqat) என்ற நூலின் ஆசிரியர் கூறுவதுபோல, 'அரசாங்கக் கலை ஒன்றும் அறியாதவராயிருந்தார்'. விரைவில் 'அவருடைய தந்தையின் அறிவு மிக்க நடவடிக்கைகளைக் கைவிட்டார்'. தம்மைச் சுதந்தர அரசராக அறிவித்துக் கொண்டதுடன் (உத்தர பிரதேசத்தில் காஜிப்பூரில் (Ghazipur) அமைந்துள்ளதுமான ஸமானியா (Zamania) என்ற காவல் ஊரைத்தாக்கியதன் மூலமும் பேரரசின் பெருங் கோபத்துக்கு ஆளானார். 1574-ல் அக்பர் செருக்கு மிக்க வங்காள கவர்னருக்கு எதிராகத் தாமே படையெடுத்துச் சென்று அவரைப் பாட்னாவிலிருந்தும், மழைக்காலத்தில் காஜிப்பூரிலிருந்தும் விரட்டியடித்தார். வங்காளப்போருக்கு முனிம்கான் (Munim Khan) என்பவரைப் பொறுப்பாக வைத்துவிட்டு பாத்பூர் சிக்ரிக்குத் திரும்பினார். தாவூத் ஒரிஸ்ஸாப் பக்கம் ஓடினார். ஆனால், 1575-ஆம் ஆண்டு மார்ச்சு 3ஆம்தேதி சுவர்னரேக்கா (Suvarnarekha) என்ற

Koviloor Acadamy

நதியின் கிழக்குக் கரைக்கருகிலுள்ள துகாராய் (Tukaroi) என்ற இடத்தில் முகலாயப் படைகளால் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் சிறந்த அறிவு படைத்திராத முனீம்கான் ஓடி ஒளிந்த எதிரியின்மீது காட்டிய தாராள மனப்பான்மையால் அந்தப் போரினால் நிலைத்த பயன் ஏற்படவில்லை. அதன் விளைவாக 1575 அக்டோபரில் தாவூத் மீண்டும் தாக்குதல் செய்து வங்காளத்தைத் திருப்பிப்பெற முடிந்தது. இதனால் தாவூத்துக்கு எதிராக இன்னொரு படையெடுப்பு எடுக்கவேண்டிய தேவை உண்டாயிற்று. கடைசியில் அவர் தோற்கடிக்கப்பட்டார். 1576 ஜூலையில் ராஜ்மஹாலுக்கு (Rajmahal) அருகில் நடந்த போரில் அவர் கொல்லப்பட்டார். அதிலிருந்து வங்காளம் முகலாயப் பேரரசோடு இணைந்த ஒரு பகுதியாக ஆகிவிட்டது. ஆனால் பேரரசின் கவர்னர் முஸப்பர்கான் துர்பாதி (Muzaffar Khan Turbati) 'கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்பவராயும், கேட்போர் மனங்கசக்கும்படி பேசுபவராயும்' இருந்தமையாலும், அவருடைய பல வீனமான அரசியல் கொள்கையாலும், அம்மாகாணத்தில் புதிய தொல்லைகள் எழுந்தன. மேலும் சக்திவாய்ந்த வங்காளத்தலைவர்கள் சிலர் முகலாயப் பேரரசின் அதிகாரத்தை நீண்டகாலம் எதிர்த்துக் கொண்டே வந்தனர். அவர்களுள் மிக மிக முக்கியமானவர்கள் கிழக்கு மத்திய டாக்காவின் தலைவர் ஈஸாகான் (Isa Khan), மைமென் சிங்கு (Mymensingh), விக்கிரம்பூர்த் (Vikrampur) தலைவர் கேதார் ராய் (Kedar Rai), சந்திரதுவைபா (Chandradvipa) பகர்கன்சின் (Bakarganj) தலைவர் கந்தர்ப்ப நாராயண் (Kandarpa narayan), ஜெஸ்ஸூர்த் (Jessore) தலைவர் பிரதாபாதித்யா (Pratapaditya) என்போராவர். கடைசியில் 1592-ல் ஒரிஸ்ஸா பேரரசுடன் இணைக்கப்பட்டது.

இதற்கிடையில் எல்லாவகையாலும் சுதந்தரமாகக் காபூலை ஆண்டு வந்த அக்பரின் மாற்றாந்தாய் மகன் மீர்ஸா முகம்மது ஹக்கீம் (Mirza Muhammad Hakim) என்பவரின் தீய எண்ணங்களால் நேர்ந்த ஒரு நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. கிழக்கு மாகாணங்களின் சில பிரபுக்களுடனும் அரசவையில் இருந்த பேரரசின் திவானான காஜா மன்சூர் (Khwaja Mansur) போன்ற அதிருப்தியடைந்த அதிகாரிகளுடனும் மற்றவர்களுடனும் சேர்ந்து சதியாலோசனைகள் செய்து இந்துஸ்தானத்தின் சிம்மாசனத்தைத் தாமே கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற பேராசையை வளர்த்துக் கொண்டு வந்தார். இன்னும் அவருடைய இயக்கங்களையும் தொல்லைகளையும் புறக்கணித்துக் கொண்டிருப்பது நல்லதன்று என்று கருதி, அக்பர் 1581 பிப்ரவரி 8ஆம் தேதி தம் தலைநகரிலிருந்து சுமார் 50,000 குதிரைகள், 500 யானைகள், மிகப்பெரிய காலாட் படை இவற்றுடன் புறப்பட்டு, ஆப்கானிஸ்தானத்தை நோக்கி வந்தார். பேரரசர் முன்னேறி வருவதையறிந்த மீர்ஸா முகம்மது ஹக்கீம் தம்

Koviloor Academy

சகோதரர்க்கு எவ்வித எதிர்ப்பும் கொடுக்காமல் பஞ்சாப்பிலிருந்து காபூலுக்கு ஒட்டம் பிடித்தார். அதனல் 1581 ஆகஸ்டு 9ஆம் தேதி பேரரசர் காபூலுக்குள் நுழைந்தார். மீர்ஸா முகம்மது ஹக்கீம் தோற்கடிக்கப்பட்டார். ஆனல் பேரரசர்க்கு என்றும் உண்மையுள்ளவனுக இருப்பேன் என்று அவர் வர்க்குறுதி தந்தமையால் அவருடைய மாகாணம் அவருக்கே திரும்பியளிக்கப்பட்டது. பேரரசர் 1581 ஆம் ஆண்டு டிசம்பரின் தொடக்கத்தில் தில்லி திரும்பினர். காபூலில் பெற்ற வெற்றி அக்பருக்கு அளவில்லாத நிம்மதியைத் தந்தது. ஸ்மித் எழுதுவது போல அது அவருடைய வாழ்க்கையின் உச்சக் கட்டமாகக் கருதப்படத்தக்க 'அவருடைய பிற்கால வாழ்க்கையின் மீதிப் பாகத்தில் முழுச்சுதந்தரமும் உடையவராக வாழ்வதற்கு' வாய்ப்பளித்தது. 1585 ஜூலையில் மீர்ஸா முகம்மது ஹக்கீம் இறந்தபிறகு காபூல் முறைப்படி தில்லிப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

3. வட மேற்கு எல்லைப் பகுதி

இந்தியாவின் ஒவ்வொரு அரசாங்கமும் குழப்பம் மிகுந்த வட மேற்கு எல்லைச் சிக்கலில் ஈடுபடவேண்டியிருந்தது. இந்தப்பகுதி போரியல் சூழ்ச்சிக்கும், பொருளாதாரத்திற்கும் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்த இடமாயிருந்தது. அதனல் இந்தியாவின் ஆட்சியாளர்கள் அதை வன்மையாகத் தங்கள் அடக்கு முறையின்கீழ் வைத்திருக்க வேண்டிய இன்றியமையாமை மிகுதியாயிருந்தது. மத்திய ஆசியாவையும், தெற்கு ஆப்கானிஸ்தானம், பலூச்சிஸ்தானம், இந்தியா இவற்றையும் பிரிக்கும் இந்துகுஷ் மலைத்தொடர் ஹிராட் (Herat) டின் மேற்கே 'மிகக்குறைவாக விரும்பத்தக்க' பகுதியாகவே இருந்தது. இடையூறுமிக்க இந்தப்பகுதியின் வழியாகப் பாரசீகத்திலிருந்தோ மத்திய ஆசியாவிலிருந்தோ படையெடுத்துவரும் வெளி நாட்டினர், எளிதாகக் காபூல் சமவெளிக்குள்ளும் இந்தியா விற்குள்ளும் புகுந்து விட முடியும். காபூலின் தலைவரான முகலாயப் பேரரசர் 'காந்தகாரையும் தம் வசத்தில் வைத்திருகக வேண்டும். இல்லாவிடில் அவர் எதிர்பாராத இடர்களிலிருந்து முழுவதும் விடுபட்டிருப்பதாகக்கொள்ள முடியாது. தில்லியின் பேரரசின் பகுதியாக காபூல் இருந்த காலத்தில் முகலாயர்களின் முதல் பாதுகாப்பு காந்தகாரைப் பற்றியதே'. காந்தகார் ஒரு முக்கியமான வாணிகக்களமாக இருந்தது. அங்கே ஆசியாவின் வெவ்வேறு பாகங்களிலிருந்தும் வந்த வணிகர்கள் ஒன்று கூடித் தங்கள் பொருள்களைப் பண்ட மாற்றிக்கொண்டனர். கருங் கடலின்மீது போர்ச்சுக்கீசியர் ஆதிக்கஞ் செலுத்தி வந்ததாலும், அவர்கள் பாரசீகத்தோடு பகைமை பாராட்டி வந்ததாலும் முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்போது மிகவும் அடிக்கடி ஆசிய நாடுகளுக்குக் காந்தகார் வழியாகவே சரக்குகள் அனுப்பப்பட்டு வந்தன. மேலும் எல்லையிலிருந்த உஸ்பெக்குகள், யூஸுஃப் ஸாயிகள் (Yusufzais)

Koviloor Academy

போன்ற குழப்பம் விளைவிக்கும் ஆப்கானிய மலைநாட்டு மக்கள் 'அவர்களுக்குரிய மலைகளில் மிகவும் ஆபத்தானவர்களாய் இருந்தனர். ஓரளவு குடியரசு மனப்பான்மை வாய்ந்தவர்களாயும், தங்கள் சுதந்திரத்தின் மீது பெரும் மோகம் கொண்டவர்களாயும் இருந்தனர். மிகச்சிறந்த இயற்கைப் பாதுகாப்புகளையுடைய அரண்களைப் பெற்றிருந்த அவர்கள், தங்கள் நாட்டில் போர்புரிவதில் வல்லவராயிருந்தனர். அவர்கள் தங்களை அடிப்படுத்த எண்ணும் அருகிலுள்ள எந்தப் பேரரசின் எவ்வகை முயற்சிகளையும் எப்போதும் எதிர்த்து வந்தனர். முகலாயப் பேரரசு பற்றி அவர்கள் கொண்டிருந்த கொள்கை நட்புச் சார்பானதாயில்லை. ஆனால் இந்த எல்லையைத் திறமையுடன் அடக்கிக் காப்பதன் முக்கியத்தை அக்பர் போன்ற பேரரசர் ஒருவர் உணரத் தவறியிருக்க முடியாது. அவரால் உஸ்பெக்குகளின் கலவரங்களை அடக்க முடிந்தது. உஸ்பெக்குகளின் தலைவர் அப்துல்லாகான் (Abdullah Khan) முகலாயப் பேரரசரிடம் நட்புறவாயிருந்தார். அக்பர் ரோஷ்னியாக்களையும்[1] (Roshniyas) தோற்கடித்தார். ராஜா தோடர் மால், இளவரசன் முராத் (Murad) இவர்கள் தலைமையின்கீழ்ப் போரிட்ட முகலாயப் பெரும்படையால் யூசுப்ஸாயிகளும் முழுதும் முறியடிக்கப்பட்டுவிட்டனர். அபுல்பாஸல் எழுதுவதாவது: 'அவர்களில் மிகப் பெரும்பாலோர் கொல்லப்பட்டனர். பலர் துரானிலும் பாரசீகத்திலும் விற்கப்பட்டனர். சவத் (Swat), பாஜோர் (Bajaur), பூனெர் (Buner) முதலிய பழங்களுக்கும் விலைமலிவான உணவுக்கும் பெயர் பெற்றவையும், இணையில்லாத இனிய தட்பவெப்ப நிலையை உடையவையுமான நாடுகளிலிருந்து தீங்கு இழைப்போர்கள் எல்லாரும் அகற்றப் பட்டுவிட்டனர். 5000 ஆட்களுக்குத் தலைமை தாங்கிக் காஷ்மீரை வெல்லுவதற்காக அனுப்பப்பட்ட பகவான்தாஸ், காசிம்கான் ஆகியோர் 1586-ல் காஷ்மீரின் சுல்தானுகிய யூஸுப் ஷாவையும் அவருடைய மகன் யாக்கூப்பையும் தோற்கடித்தனர். அப்பொழுது காஷ்மீர் பேரரசுடன் இணைக்கப்பட்டது. சிந்துவும் பலுச்சிஸ்தானும் முறையே 1590-91-லும், 1595-லும் வெல்லப்பட்டன. காந்தகார் அமைதியாகவே அக்பருக்கு உரிமையாயிற்று. காந்தகாரின் பாரசீக கவர்னரான முசப்பர் ஹுஸேன் மீர்ஸா (Muzaffar Husain Mirza) தம்முடைய சொந்தக்காரர்களாலும், உஸ்பெக்கினராலும் தொல்லைப் படுத்தப் பட்டுவந்தமையால் கி.பி. 1595-ல் காந்தகாரை அக்பரின் பிரதிநிதியாக ஷாபேக்கிடம் (Shah Beg) அடைக்கலமாக்கினுர். இவ்வாறு வடமேற்கு எல்லையைப்பற்றி அக்பர் கொண்டிருந்த

[1]ரோஷ்னியாக்கள் என்போர் பாயஸித்(Bayazid)என்பவரின் வழியைப் பின்பற்றுபவர்கள். 'அவர் ஒரு தனிப்பட்ட முகம்மதிய மதப்பிரிவு பற்றி உபதேசித்து வந்தார். ஒரு பக்கம் பொதுஉடைமையும், மறுபக்கம் இஸ்லாமின் எதிரிகளை அழிப்பதும் அதன் முக்கியமான சிறப்பியல்புகளாகும். இதற்கு மேலும், இனிவரப் போகும் கடவுள் தூதராகிய மெஹ்தி (Mehdi, Messiah) தாமே என்றும் கூறினுர். அதனல் மதக்குமுறலின் பல வகைக் கூறுகளும் கிளர்ந்தெழுந்தன.' கென்னடி 'பெரும் முகலாய அரசர்களின் வரலாறு' பக்கம் 27.

Koviloor Acadamy

அரசியற் கொள்கையின் விளைவாக முக்கியமான பிரதேசங்கள் எல்லாம் அவருடைய பேரரசுடன் சேர்க்கப்பட்டன. அந்த எல்லையில் பேரரசுக்கும் பாதுகாப்பு ஏற்பட்டது. பேரரசின் மதிப்பும் அளவில்லாமல் சிறப்புற்றது. 1555ஆம் ஆண்டளவில் அக்பர் இந்துகுஷிலிருந்து பிரம்மபுத்திரா வரையிலும் உள்ள பெரும் பரப்பின் எவரும் மறுக்கமுடியாத ஏகச் சக்ரவர்த்தியாக ஆனார். மேற்கூறிய பரப் பெல்லையில் இண்டஸுக்கு அப்பால் இருந்த மலைநாட்டுச் சிறு பகுதியும் வேறு சில பகுதிகளுமே அடங்காதவை.

4. அக்பரும் தக்கணமும்

இவ்வாறு வட இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் தம் அதிகாரத்தை ஒருநிலைப்படுத்திய பிறகு அக்பர் தம் அரசைத் தக்கணத்திலும் பரப்ப முடிவு செய்தார். இதில் அவர் முற்கால வடக்குப் பேரரசு அரசாங்கங்களாகிய மௌரியர்கள், குப்தர்கள் பரம்பரையாகப் பின்பற்றி வந்த கொள்கையையே பின்பற்றத் தொடங்கினார். முதலாவதாக, ‘ஒன்றுபட்ட இந்தியப் பேரரசுக்’ குறிக்கோளைக் கொண்டிருந்த அவர் இயல்பாகவே தக்கணத்துச் சல்தானியங்களான அகமத் நகர், பீஜப்பூர், கோல்கொண்டா, காந்தேஷ் ஆகியவற்றைத் தம் ஆளுகைக்கீழ் கொண்டுவர முயன்றார். இரண்டாவதாக நாட்டு நலனில் அக்கறை கொண்ட கூரிய அறிவுடையவராயிருந்த அவர், போர்ச்சுக்கீசியர்களைக் கடலுக்கு அப்பாலேயே தள்ளிவிடுவதற்காகத் தக்கணத்தைத் தம் ஆணைக்கீழ் அகப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று விரும்பினார். போர்ச்சுக்கீசியரிடம் அவர் கொண்டிருந்த தொடர்புகள் மேற்போக்கில் நட்புமுறையிலிருந்தனவேனும், நாட்டின் பொருளாதார வளங்களின் ஒருபகுதியை அவர்கள் தங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டு அனுபவிப்பதையும், நாட்டின் அரசியலில் அவர்கள் இடையீடு செய்வதையும் அனுமதிப்பது உகந்ததன்று என்று கருதினார். இவ்வாறு அக்பரின் தக்கணக் கொள்கை மூலத்திலும் தோற்றத்திலும், முழுதும் பேரரசுச் சார்பையுடையதாகவே இருந்தது. ஓரளவுக்குச் சமயச்சார்பான ஷாஜஹான் அல்லது அவுரங்கசீப் (Aurangzeb) பின் கொள்கையைப் போல இல்லாமல், முழுதும் சமயச்சார்பற்ற கொள்கையாகவே இது இருந்தது.

தக்கணத்து சுல்தானியர்கள் மேன்மேல் உயர்ந்து வரும் முகலாயப் பேரரசினுக்கு எதிராகத் தங்களைக் காத்துக்கொள்ளும் நிலைமையில் இருக்கவில்லை. ஏனெனில் கி.பி. 1564-1565-ல் சிறிது காலம் தாற்காலிகமாக விஜயநகருடன் கூட்டாயிருந்த பிறகு, தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டேயிருந்தமையால், பெரும்பாலும் தங்கள் பலம் எல்லாம் இழந்தவையாயும் திறமையற்றவையாயும் இருந்தன.

Koviloor Acadamy

அக்பர் 1591-ல் அரசியல் தூதர்களை அச்சுல்தானியங்களுக்கு அனுப்பித் தக்கணத்தின்மீது தம்முடைய அரச அதிகாரம் இருப்பதை முறையாக ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்த முயன்றார். ஆனால் காந்தேஷைத் தவிர மற்ற எல்லாச் சுல்தானியங்களும் அவருடைய கருத்துக்களுக்கு உறுதியான பதில்களைத் தரவில்லை. தம் அரசியல் தூதுக் குழுக்களால் பயன் ஏற்படாததால் படைக்கலங்களின் உதவியை மேற்கொள்ளத் துணிந்தார். உள் நாட்டுப் போர்களால் வலிமை குன்றியிருந்த அகமத் நகரின்மீது செல்லும்படி பைராம் கானின் மகனை அப்துல் ரகீம், பேரரசரின் இரண்டாவது மகன் இளவரசன் முராத் ஆகியோரின் தலைமையின்கீழ் ஒரு பெரும்படை அனுப்பப்பட்டது. முகலாயப் படையின் முயற்சிகள் மிகவும் சிதறுண்டு போயினும், படைத் தளபதிகள் இருவருக்குள்ளும் சுமுகமான உடன்பாடுகள் இல்லாது போயினும், அகமத்நகர் 1595-ல் அப்படையால் முற்றுகையிடப்பட்டது. அந்நகரம் பீஜப்பூரின் விதவை அரசியும், ஹுஸேன் நிஸாம் ஷாவின் மகளுமான சாந்த் பீபி (Chand Bibi) யால் அற்புதமான துணிவுடனும், வியக்கத்தக்க தீர்மானத்துடனும் பாதுகாக்கப்பட்டது. 1596-ல் முற்றுகையாளர்கள் சாந்த் பீபியுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதன்படி பீரார் முகலாயர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அகமத்நகரின் அரசச் சிறுவன் அக்பரின் மேலதிகாரத்தை ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதியளித்தார். ஆனால், முகலாயர்கள் சென்ற பிறகு 'சாந்த் பீபி தன்னுடைய அதிகாரத்தைக் கைவிட்டாள்.' ஒப்பந்தத்திற்கு எதிராகவும், அவளுடைய விருப்பத்திற்கும், அறிவுரைக்கும் மாறாகவும் அகமத் நகரில் ஒரு கலகம் எழுந்தது. அதனால் பீராரிலிருந்து முகலாயரைத் துரத்திவிடும் நோக்கத்துடன் அடுத்த ஆண்டில் முகலாயர்களுடன் போர் மீண்டும் தொடங்கப்பட்டது. முகலாயர்கள் 1597 பிப்ரவரியில் கோதாவரியில் அஷ்டிக்கருகிலுள்ள சூபா (Supa) என்ற இடத்தில் தக்கணத்தினரை எதிர்த்துப் போரிட்டு, வெற்றியும் பெற்றனர். அகமத் நகரில் உள்நாட்டுப் பிளவுகள் நிறைந்திருந்தன. சாந்த் பீபி 'கொல்லப்பட்டிருக்கவேண்டும் அல்லது விஷம் உண்ணும்படி வற்புறுத்தப் பட்டிருக்க வேண்டும்.' இக்காரணங்களால் பேரரசினர் 1600 ஆகஸ்டில் எளிதாக அந்நகரத்தைத் தாக்கினர். ஆனால் அந்த இராச்சியம் ஷா ஜஹானின் ஆட்சிக் காலம் வரை பேரரசுடன் இணைக்கப்படாமலேயே இருந்தது.

காந்தேஷை ஆண்டு வந்த மியான் பஹாதூர் ஷா பேரரசின் அதிகாரத்துக்கு அடிபணிய மறுத்துவிட்டார். 1598-ல் அப்துல்லா கான் இறந்த பிறகு உஸ்பெக் படையெடுப்பின் நெருக்கடியிலிருந்து விடுபட்ட அக்பர் 1599 ஜூலையில் தெற்கே படையுடன் திரும்பினார். விரைவில் அவர் காந்தேஷின் தலைநகரான புர்ஹான்பூரைப் (Burhanpur) பிடித்தார். வலிமை மிக்க அசிர்கார் கோட்டையை

Koviloor Acadamy

எளிதாக முற்றுகையிட்டார். 'அக்கோட்டையைக் காட்டிலும் வலிமை மிக்க கோட்டை ஒன்றையோ, பீரங்கிகள், போருக்குரிய தளவாடங்கள், பண்டங்கள், மிகவும் அதிகமாக நிறைந்திருந்த கோட்டை ஒன்றையோ காண்பது அரிது.' முற்றுகையிடப்பட்ட படையிலிருந்தவர்களில் பலர், கொடிய கொள்ளை நோய் ஒன்றினால் மாய்ந்துபோயினும், அப்படையினர் ஆறுமாதங்களாகக் கோட்டையைக் காத்து நின்றனர். அதன் பிறகு அக்பர் வேறு மதி நுட்ப மிக்க சூழ்ச்சிகளின் மூலம் தம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள விரைந்தார். தம்முடைய மகன் சலிம் தமக்கு எதிராகக் கிளர்ச்சிகள் செய்து கொண்டிருந்தமையின் கோட்டையின் முற்றுகையை நீடிக்க விரும்பாது, தம் பாசறையில் மியான் பஹதூர் ஷாவின் உயிருக்குப் பாதுகாப்புத் தருவதாகக் கூறி, அவரை ஒப்பந்தத்திற்கு இணங்கும்படி செய்தார். ஆனால் அங்கேயே அவரை நிறுத்தி வைத்து, கோட்டையைக் கைவிட்டுச் சரணடையுமாறு அறிவுரைகள் எழுதச் செய்து அவருடைய படையினருக்கு அனுப்புமாறு வற்புறுத்தினர். எனினும் படையினர் அப்போதும் கோட்டையை விடவில்லை. அடுத்து அக்பர் காந்தேஷ் அதிகாரிகளுக்கு அளவில்லாத பணம் வழங்கி அவர்களை இணக்குவித்தார். இவ்வாறு அசீர்காரின் கோட்டைக் கதவுகள் பொன் சாவிகளால் திறக்கப்பட்டன.' அக்பரின் கடைசி வெற்றி இதுவேயாகும்.

புதிதாக வெற்றிபெற்ற பகுதிகளை அகமத் நகர், பிரார், காந்தேஷ் என்ற மூன்று சுபாக்களாக ஒழுங்காகத் திருத்தியமைத்து விட்டும், தெற்கு மேற்கு இந்தியா அதாவது மூன்று தக்கண சுபாக்கள், மாளவம், குஜராத் இவற்றிற்கு எல்லாம் ராஜப் பிரதிநிதியாக இளவரசன் தானியாலை (Daniyal) நியமித்து விட்டும், அக்பர் 1601 மே மாதத்தில் கிளர்ச்சி செய்து வந்த சலிமைக் கவனிப்பதற்காக ஆக்ராவுக்குத் திரும்பினர். அக்பரின் தக்கணப் போர்களின் விளைவால் முகலாயப் பேரரசின் எல்லை நர்மதையிலிருந்து (பீமா (Bhima) என்று இந்நாட்டவரால் அழைக்கப்பெறும்) கிருஷ்ணா நதியின் மேலைத் தீரங்கள் வரை நீண்டு சென்றது. ஆனால் 'இந்த இணைப்பு வெறும் உருவில் மட்டும் இருந்தது. திறமையுடன் ஆளுவதற்கோ, முழுதும் வெல்லப்படுவதற்கோ முடியாத அளவு மிகப் பெரியதாயிருந்தது. அப்புதிய பகுதி எங்கும், குறிப்பாகத் தெற்கிலும் மேற்கிலும், பழைய அரச மரபைச் சேர்ந்த உள்நாட்டு அதிகாரிகள் வெற்றியாளருக்குக் கீழ்ப்படிய மறுத்தனர்; அல்லது தங்கள் கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பொம்மை ராஜாக்களைத் திரையாக வைத்துக் கொள்ளத் தலைப்பட்டனர். பீஜப்பூர், கோல்கொண்டாச் சுல்தான்கள் வீழ்ச்சியுற்ற தங்கள் அண்டை நாட்டினருக்குரிய பக்கத்திலுள்ள மாவட்டங்களைக் கைப்பற்றினர்.

Koviloor Academy

5. அக்பரின் இறுதிக்காலம்

அக்பரின் இறுதிக்காலம் கவலையும் துன்பமும் நிறைந்து மகிழ்ச்சியற்றதாக இருந்தது. அவருடைய அன்பிற் சிறந்த நண்பரும், கவிஞருமான ஃபெய்ஸி (Faizi) 1595-ல் மறைந்தார். சிம்மாசனத்தைக் கைப்பற்றவேண்டும் என்ற ஆர்வத்துடன் சலீம் அலகாபாத்தில் தம்மை ஒரு சுதந்திர அரசராக ஆக்கிக்கொண்டார். தம்முடைய குறிக்கோளை அடைவதற்காகப் போர்ச்சுக்கீசியர்களுடன் மறைமுகமான உடன்படிக்கை செய்துகொண்டார். தக்கணத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த பேரரசின் நெருங்கிய நண்பரான அபுல் பாஸலை 1602-ல் கொல்லுமாறு செய்து மேலும் சலீம் தந்தையின் மனத்தைப் புண்படுத்தினர். 1603-ல் சுல்தானு சலீமா பேகமின் மத்தியஸ்தத்தால் தந்தைக்கும் மகனுக்குமிடையே ஒரு தாற்காலிக இணக்க உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் சலீம் மீண்டும் அலகாபாத்திற்குச் சென்று மிகவும் வெறுக்கத் தக்க முறையில் செயலாற்றத் தொடங்கிவிட்டார். இதற்கிடையில் கானி ஆஸம், ராஜா மான்சிங்கு, இன்னும் அரசவையின் மற்றப் பிரபுக்களும் சேர்ந்து சலீமின் மகன் குஸ்ராவ் சிம்மாதனம் ஏறச் சூழ்ச்சிகள் செய்தனர். ஆனால் மற்றப் பிரபுக்கள் எல்லாம் அதை எதிர்த்தமையால் அவர்களுடைய திட்டம் தோற்றது. அக்பரின் மற்ற ஆண் மக்கள் ஏற்கெனவே இறந்துவிட்டனர். உரிமைக்குப் போட்டியிட்ட மற்றவர்கள் எல்லாம் அகற்றப்பட்ட பிறகு உயிரோடிருக்கும் அக்பரின் ஒரே மகனை சலீம் தந்தையுடன் இணங்கிப் போனர். அக்பர் அவரைக் குறும்புத்தனம் நிறைந்த குழந்தையாகக் கருதி, கடுமையாக இகழ்ந்துரைத்து சிறிதுகாலம் சிறையில் வைத்துப் பின்பு 1604 நவம்பரில் அவரை மன்னித்து, விடுதலை செய்தார். ஆனால் அக்பரின் அந்திய காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. 1605 இலையுதிர்காலத்தில் கடுமையான வயிற்றுப்போக்கு அல்லது சீதபேதியால் தாக்கப்பட்டு, அவ்வருடம் அக்டோபர் பதினேழாம் நாள் அக்பர் உயிர்நீத்தார்.

6. அக்பரின் சமயம்

அக்பருடைய கருத்துக்களின் மேன்மையும், அவருடைய மன இயல்பு, குறிக்கோள்கள் இவற்றில் காணப்பட்ட பரந்த மனப்பான்மையும் பலவேறு வகையான செல்வாக்குகளால் உருவாக்கப்பட்டன. முதலாவதாக அவருடைய பரம்பரைப் பண்பு 'சூழ்நிலைகளின் நிலையை மனத்தில் பதித்துக்கொள்ளவும், அதை மிகச்சிறந்த முறையில் சிந்தித்துப் பார்க்கவும் வேண்டிய மன, மூளைக் குணங்களை அவருக்கு அளித்தது.' வெற்றிப்படையெடுப்பாளராய் இருப்பினும் தைமூரும் அவருடைய சந்ததியினரும் கலை, இலக்கியம் இவற்றின் காதலர்களாய் இருந்தனர். சூபி (Sufi) மதத்தினிடம் கொண்ட

Koviloor Acadamy

பெருந்தொடர்பினுல் அவர்கள் சமய வைதீகத்திற்கும் அப்பாற்பட்ட வர்களாய் உயர்ந்தனர். பாரசீக அறிஞரின் மகளான அக்பரின் அன்னையார் அவருடைய உள்ளத்தில் 'பொறுமை' எனும் விதைகளைத் தூவியிருந்தார். இரண்டாவதாக, சபவீக்களின் கொடுமைக்கு ஆற்ருது பாரசீகத்திலிருந்து ஓடிவிட்ட பல சூபி முனிவர்கள் வாழ்ந்த காபூல் அரசவையில் தங்கியிருந்த போதே, அக்பர் சூபி சமயத் துடன் முதலில் கொண்டிருந்த தொடர்பும், பிறகு அவருடைய ஆசிரி யரான அப்துல் லதீப்பின் போதனைகளும், பொது நோக்கமும் உயர்ந்த எண்ணங்களும் கொண்டிருப்பதன் சிறப்பை அவர் மனத்தில் பதி வித்து, 'தெய்விக உண்மைப் பொருளுடன் நேரடித்தொடர்பு கொள் வதால் கிடைக்கும், விளக்கிக் கூற முடியாத பேரின்பத்தை அடைய' ஆர்வம் கொள்ளும்படி அவரைத் தூண்டின. கடைசியாக ராஜ புத்திர மனைவிகளும், இந்து மதத்துடன் அவர் கொண்ட தொடர்பும், அவர்காலத்தில் ஏற்பட்டிருந்த சீர்திருத்த இயக்கங்களும் அவருடைய கற்பனை மிக்க உள்ளத்தில் சிறந்த குணங்களைப் பதிவித்தன. இவ் வாறு சிறப்புமிக்க அறிவுக்கூர்மையும், எப்போதும் விழிப்புள்ள மன மும், ஆராய்ந்தறியும் உள்ளமும், பிறப்பினுலும், வளர்ப்பினுலும், கொண்ட தொடர்பினுலும் அவருக்கு நன்கு அமைந்திருந்தன. அவர் தம் காலத்தில் காணப்பட்ட ஆன்மிக ஆர்வ நிறைவின்மையையும், உயர் லட்சியங்களுக்காக வாழும் ஆசையையும் தம் மனத்திலும் பதியுமாறு செய்து கொண்டார். அவர் தாம் வாழ்ந்த நூற்ருண்டின் குழந்தையாக மட்டுமின்றி அந்நூற்ருண்டின் பிரதிபலிப்பாகவும் திகழ்ந்தார்.' அவர் காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த எலிஸபெத் (Elizabeth) அரசியின் ஆட்சியில், அரசியல் காரணங்கள் மத அமைப்பைப் பெரிதும் மாற்றும் வகையில் அமைந்திருந்தது போன்றே, ஒரே இந்திய முகலாயப் பேரரசை நிறுவும் அக்பரின் அரசியல் குறிக் கோள் அவருடைய சமயக் கொள்கையிலும் மாற்றம் ஏற்படும்படி செய்திருக்கலாம். எனினும், உண்மையைக் காண்பதில் அக்பர் தீரா விருப்பம் உடையவராய் இருந்தார் என்பதில் ஐயமில்லை. அடிக்கடி 'உணர்ச்சிப் புயல்கள் அக்பரின் ஆன்மாவை நசுக்கியிருக்கின்றன.' அவரிடம் பகைமை கொண்டிருந்த திறனுய்வாளர் பதௌனி 'பாத்பூர் அரண்மனைக்கிருகில் ஒரு தனியிடத்தில் ஒரு பழைய கட்டிடத்தின் பெரிய தட்டையான கல்லின்மீது தனியாகப் பிரார்த் தனை மனத்துடனும், துன்பம் நிறைந்த முகத்துடனும் பல காலை நேரங் களில் உட்கார்ந்திருப்பார் என்றும், காலை நேரத்தின் இனிமையை நுகர்ந்துகொண்டு சில சமயங்களில் நெஞ்சின்மீது முகம் படிந்திருக்கு மாறும் அமர்ந்திருப்பார்' என்றும் கூறியிருக்கிருர். வெவ்வேறு மதப்பிரிவுகளிடையே காணப்பட்ட சிக்கல்கள் அவருடைய ஆன் மாவை அதிர்ச்சிக்குள்ளாக்கின. அவரும் ஒரு புதிய சமயத்தை உருவாக்குவதில் ஈடுபட்டார். தமக்குள் பூசலிட்டுக் கொண்டிருக்கும் சமயக்கொள்கைகளின் ஓர் இணைப்பாகவும், தமது பரந்த பேரரசில்

Koviloor Academy

காணப்பட்ட முரண்பட்ட கூறுகளை ஒன்றுபடுத்துவதன் மூலம், இசைவுமிக்க முழுமைத் தன்மை வாய்ந்ததாக அச்சமயம் விளங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.'

1575-வரை அக்பர் (இஸ்லாமின்) ஸுன்னி (Sunni) மதப் பிரிவின் வெளிச் சடங்குகளையும் கொள்கைகளையுங் கடைப்பிடித்தார். அந்த ஆண்டில் ஷேக் முபாரக்குடனும் அவருடைய இருமக்களான பைஸி (Faizi), அபுல் பாஸல் இவர்களுடனும் அவர்கொண்ட தொடர்பினால் அவருடைய கருத்துக்களில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பிறகு அவர் தத்துவ, தெய்வ நெறிக் கொள்கைகளை விவாதிப்பதற்காக பாத்பூர் சிக்ரியில் ஒரு மாளிகை கட்டுவித்து அதை இபாதத் கானா அல்லது 'வழிபாட்டு இல்லம்' என்று அழைத்தார். முதலில் அவர் அங்கே இஸ்லாமின் தெய்வக் கொள்கையில் வல்லவரை அழைத்தார். ஆனால் அவர்களுடைய விவாதங்கள் விரைவில் 'கீழ்த்தரமான பெரு வெறுப்பு, இழிந்த வைதீக விடாப்பிடி, ஆட்களைத் திட்டுதல்' போன்ற வடிவங்களை எடுத்தன. அக்பர் கேட்ட சில கேள்விகளுக்கு அவர்களால் தக்க பதில் அளிக்க முடியவில்லை. உண்மையில், படௌனியால் விளக்கமாக வரையப்பட்டுள்ளபடி அவர்களுடைய சிறுமைச் சண்டைகள் அக்பரின் ஆராய்ச்சி மிக்க ஆன்மாவைத் திருப்தி செய்யத் தவறிவிட்டன. அதனால் அவர் உண்மை அறிவதற்கு வேறிடம் பார்க்குமாறு செய்து விட்டன. எனவே அவர் தம்முடைய இபாதத் கானாவுக்கு வெவ்வேறு சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் சேர்ந்த அறிவு மிக்கோரை அழைத்தார். குறிப்பாக புருஷோத்தமர் போன்ற இந்து தத்துவ அறிஞர்கள், தேவீ, (Devi) இன்னும் சில மற்றவர்களையும், சில சமண ஆசிரியர்களையும் அழைத்தார். சமணர்களில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஹரி விஜய சூரி (Hari Vijaya Suri), விஜய சென் சூரி (Vijaya Sen Suri), பானு சந்திர உபாத்தியாயர் (Bhanuchandra Upadhayya) ஆகியோராவர். மேலும் பார்சி புரோகிதர்களையும், கோவாவிலிருந்து கிறித்துவப்பாதிரியார்களையும் அழைத்தார். ஒவ்வொரு மதத்தையும் விளக்குவோர் கூறிய வாதங்களை எல்லாம் அவர் பொறுமையுடன் கவனித்துக் கேட்டார். 'வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களும் அவரை ஒரு ஸொராஸ்டிரியர், (Zoroastrian), ஓர் இந்து, ஒரு சமணர் அல்லது ஒரு கிறித்துவர் என்று போதிய காரணங்களுடன் நம்பும் அளவுக்கு ஒவ்வொரு மதத்திலும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.' ஆனால் அவர் இந்த மதக் கொள்கைளில் எதற்கும் அவர் மாறிவிடவில்லை. மற்ற எந்த மதத்தைக் காட்டிலும் அதிகமாக கிறித்துவ மதத்தின் செல்வாக்கு அவரிடமிருந்தது என்று மிகைப்படுத்திக் கூறப்படுவதற்கு எத்தகைய சான்றும் இல்லை, முஸ்லீம் சமய நெறியாளர்களிடையே தோன்றிய கடுமையான விவாதங்களைக் கண்டு அதிருப்தியுற்றதனால்தான், அவர் 'விவாதங்கள், சொற்பொழிவுகள்

Koviloor Academy

மூலம் மற்ற மதங்களைப் பற்றி அறிய வேண்டிய நிலை ஏற்பட்டது. கடைசியில் அவற்றால் அவர் எல்லா மதங்களிலிருந்தும் நல்லன வற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியவரானார்; தீன்-இ-லாஹியைத் (Din-i-Ilahi) தோற்றுவிக்கவும் வேண்டியவரானார். பார்ட்டோலி (Bartoli) என்ற இயேசு சங்கத்தைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர் எழுதுவதுபோல அது ஒரு புதிய மதம். அது 'பலவகையான கூறுகளைக் கொண்டு கலப்பாக்கப்பட்டது; முகம்மதுவின் குர்ரானி லிருந்து ஒரு பகுதியும், பிராமணர்களின் தெய்வ நூல்களிலிருந்து ஒரு பகுதியும், தமக்கு விருப்பமானபடி ஓரளவு கிறித்துவின் வேத நூலிலிருந்து ஒரு பகுதியும் எடுத்து அமைக்கப்பட்டது.' சமய வேறு பாடுகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையில் உறுதியான நம்பிக்கை உடையவராயிருந்த அக்பர் மத மாற்றப் பற்றுள்ளவர் அல்லது மத வெறி பிடித்தவர் ஒருவரைப்போல மற்ற வர்களிடம் தம்முடைய மதத்தைத் திணிக்க எம் முயற்சியும் செய்ய வில்லை. ஆனால் மக்கள் தங்கள் அக உணர்ச்சிகளை மதிக்கவேண்டும் என்று அவர் வேண்டினார்.

பிற மதங்களின் கொள்கைகளைத் தூற்றாது பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று அக்பர் கொண்டிருந்த கருத்து உண்மையில் மிகச் சிறந்த ஒன்றே. அது அவருடைய தேசியக்குறிக்கோளுக்கு ஒரு ஒளி மிக்க சான்றாகத் திகழ்கிறது. திருப்திப்படுத்தப்பட முடியாத அக்பரின் திறனாய் வாளரான பதௌனியின் சான்றுகளை நம்பியும், தங்களுடைய கொள்கைக்கு அக்பரை மாற்ற முடிய வில்லையே என்று வருந்தியிருக்கும் இயேசு சங்கத்தினர் எழுதியிருப்பனவற்றைக் கொண்டும் தவறாகப் புரிந்துகொண்டு ஸ்மித் பின்வருமாறு கூறி யிருக்கிறார். 'தெய்வ நம்பிக்கை' யானது அக்பரின் முட்டாள் தனத்துக்கு—அவருடைய அறிவுடைமைக்கு அல்ல—ஒரு மிகச் சிறந்த நினைவுச் சின்னமாகும். முழுத்திட்டமும் இகழத்தக்க செருக்கு, அடக்க முடியாமல் இராட்சத உருவில் வளர்ந்த எதேச்சாதிகாரம் இவற்றின் விளைவால் எழுந்ததே.' அக்பரின் வரலாற்றை எழுதிய ஜெர்மன் வரலாற்றாசிரியரான வான் நோயர் (Von Noer) என்பவர் அக்பரின் தெய்வக்கொள்கையைச் சரியாக மதிப்பிட்டுப் பின் வருமாறு உரைத்திருக்கிறார். 'பெரும் சக்ரவர்த்தியான அக்பரின் மேல் மீண்டும் மீண்டும் தாக்குதல் செய்வதற்காகவே பதௌனி அவருடைய மதக்கொள்கையில் குற்றம் கண்டு பிடிப்பதில் நிச்சயமாய் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டார். எனினும் அவர் தீன்-இ-இலாஹியைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வில்லை. பொதுமக்களிடையே அக்காலத்தில் நிலவியிருந்த தவறான கருத்துக்களையே அவர் திருப்பிக் கூறுகிறார். அக்பரைப்பற்றிய கருத்துக்கள் பொதுமக்களினால் வழக்கம் போலச் சிதைக்கப்பட்டும், கலவையாக்கப்பட்டும் நிலவின. அக்பர் தம் ஆட்சியின் நடவடிக்கை

Koviloor Academy

களைக் குறித்து உண்மையில் நியாயமான பெருமை அடைந்திருக்கலாம். ஆனால் அவருடைய வாழ்க்கையில் நேர்ந்த பல நிகழ்ச்சிகள் அவர் மனிதர்களுள் மிகவும் அடக்கம் வாய்ந்தவர் என்பதை நிரூபிக்கின்றன. அரசியல், தத்துவ மத அமைப்பாக ஒருங்கே விளங்கிய ஓர் அமைப்பைத் தோற்றுவித்த ஒரு மனிதரைக் கடவுளாக்கியவர்கள் பொது மக்களே. மத விஷயங்களில் பொறுமையைக் கடைபிடிக்கவேண்டும் என்றும் கருதி அவர் தோற்றுவித்த புதிய மதம் மனித இனத்திற்கு நன்மை புரிந்த பெரியோர்களின் வரிசையில் அவரை வைத்து, அவர் எக்காலத்தும் எண்ணப்படும் வாய்ப்பை அளித்துள்ளது.'

அக்பர் தமது பிற்காலத்தில் இஸ்லாமைத் துறந்து விட்டதாகப் பதௌனியும் இயேசுசங்கத்து ஆசிரியர்களும் குற்றம் சாட்டியுள்ளனர். 'தம் குடிமக்களின் பிளவுபடாத கீழ்ப்படிதலைப்' பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், மத்தியகால ஐரோப்பாவில் போப்புகள் செய்ததைப்போல 'மக்கள் அரசனுக்குக் கீழ்ப்படிவதுபோலத் தமக்கும் கீழ்ப்படியவேண்டுமென்று உரிமை பேசிய' உலேமாக்கள் அளவுக்கு மீறிய ஆதிக்கஞ் செலுத்துவதைத் தடுக்க முற்பட்டார் என்பது உண்மையே. மேலும் படிப்படியாகக் கோவிலின் உயர் நிலைத் தலைவராயிருக்கும் நிலையில் (இமாமெ ஆதில் Imam-i-Adil) தம்மை நிலை நிறுத்திக் கொண்டார். இவ்வாறு 1579 ஜூன் மாதத்தில் பாத்பூர் சிக்ரியில் இருந்த தலைமைப் புரோகிதரை நீக்கிவிட்டுத் தம்முடைய பெயரிலேயே குத்பாவைப் படித்தார். சமயத் தொடர்பான செயல்களில் தம்மை மிக உயர்ந்த நடுவராக்கும் 'தவறு படாக் கொள்கையின் ஆணை' (Infallibility Decree) என்ற ஒன்றை 1579 செப்டம்பரில் வெளியிட்டார். இது உலேமாக்களுக்கும், அவர்களைப் பின்பற்றுவோர்க்கும் அளவில்லாத எரிச்சலை மூட்டியிருக்கும். ஆனால் அக்பர் அஞ்சாதவராய் இருந்தார்.' ஆன்மீக சாதனைகளைப் பெறுமல் நாட்டின் ஆன்மீகத் தலைவராய் விற்றிருப்பதை அவர் விரும்ப வில்லை. ......தொடக்கம் முதல் இறுதிவரை பாத்பூர் சிக்ரியில் சொற்பொழிவு மேடையில் ஏறுவது முதல் தீன்-இ-இலாஹியைப் பரப்புவதுவரை அவர் மிகுந்த உண்மையுடன் இருந்தார்.' அவ்வளவு பகுத்தறிவும், தாராள மனப்பான்மைகளும் கொண்டிருந்த அவர், மற்ற மதங்களைத் தாழ்வாக மதித்தார் என்றோ, மற்ற மதங்களின் பகைவராக இருந்தார் என்றோ இழித்துரைப்பது நன்றன்று. அவர் எப்பொழுதும் குர்ரானின் அதிகாரத்தை மறுக்கவில்லை. தம்முடைய 'தவறு படாக்கொள்கை ஆணை'யில் கூட அதை மறுத்துப் பேசவில்லை. வெவ்வேறு மதங்களில் உள்ள சிறந்தவற்றை யெல்லாம் எடுத்துச் சிறந்த வகையில் இணைப்பதே அவருடைய குறிக்கோளாயிருந்தது. அது சிறப்பான தேசியக் குறிக்கோளாகவும் இருந்தது. அதற்காக அவர் பிற்காலத்தினரின் நன்றியறிதலுக்குப் பாத்திரமானது பொருத்தமானதேயாகும்.

Koviloor Academy

7. அக்பரின் ஆளுமை

அஞ்சாத போர்வீரராயும், இரக்கமும் அறிவுடைமையும் பொருந்திய ஆட்சியாளராயும், ஒளிமிக்க கருத்துக்கள் பெற்ற மனிதராயும், குணவியல்பை மதிப்பிடுவதில் ஒரு சிறந்த நீதிபதியாகவும் விளங்கிய அக்பர் இந்திய வரலாற்றில் ஒரு தனிப்பட்ட சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ளார். அபுல்பாஸலிடமிருந்தும் பகைமை பாராட்டிய திறனுய்வாளரான பதௌனியிடமிருந்துங்கூட அக்பர் அதிகாரஞ் செலுத்தும் ஆளுமை பெற்றிருந்தார் என்றும், ஒவ்வோர் அங்குலமும் அரசராகக் காணப்பட்டார் என்றும் அறிகிறோம். ஜஹாங்கிர் தம்முடைய குறிப்பேடுகளில் தம் தந்தை 'அவருடைய செயல்களிலும் இயக்கங்களிலும் இவ் உலகத்து மனிதர்களைப் போலக் காணப்படவில்லை. கடவுளின் கீர்த்தி அவரிடம் வெளிப்பட்டுக் காணப்பட்டது' என்று எழுதியிருக்கிறார். தைமூர்க் குடும்பத்திலிருந்து வந்த மற்ற அரசர்களைப் போலவே அக்பரும் போற்றத்தக்க தைரியமும், இயற்கைக்கு மாறுன உடல் வன்மையும் பெற்றிருந்தார். பகைவர்களைத் துரத்தி ஓட்டுவதிலும் போர்க்களங்களிலும் அவர் சிறிதும் அச்சமில்லாதவராய் இருந்தார். 'மாஸிடோனைச் சேர்ந்த அலெக்ஸான்டரைப் போல அரசியல் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் கவனியாது தம்முடைய உயிரையும் ஆபத்துக்குள்ளாக்குவதில் எப்போதும் தயாராய் இருந்தார்.' மழைக்காலத்தில் அவர் அடிக்கடி வெள்ளம் நிறைந்தோடும் ஆறுகளைக் குதிரை மீது ஏறிக் கடந்து அக்கரைக்குப் பாதுகாப்பாகச் சென்றுர். ஒரு மாபெரும் படையெடுப்பாளராயிருந்தாலும் பொதுவாக' அவர், 'வதைக்காகவே வதை செய்வதில்' ஈடுபடவில்லை. உறவினர்களிடம் மிகவும் அன்புடையவராய் இருந்தார். காரணமின்றிப் பழிவாங்க அவர் முற்படுவதில்லை. அவருடைய உடன் பிறந்தவரான ஹக்கிமிடம் அவர் நடந்துகொண்ட விதத்திலிருந்து அவர் செய்ததற்கெரங்கும் ஒரு கிளர்ச்சிக்காரனை மன்னிக்கும் இயல்பும் பெற்றிருந்தார் என்பதை அறிகிறோம். அரிதாகச் சில சமயங்களில் அவருக்குச் சினம் மிகுதியாகிவிடும். அப்போது குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்து விடுவார். இதை அவர் தம்முடைய அம்மான் முவஸ்ஸமிடமும் (Muazzam) மாற்றுந்தாய் மகன் ஆதம் கானிடமும் நடந்து கொண்ட விதத்திலிருந்து அறியலாம். ஆனல் பொதுவாக அவர் தம்மை முழுதும் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய பழக்கங்கள் எல்லாம் மிகவும் இன்புறுத்துபவையாக இருந்தன. அவர் பிறரை அழைக்கும் விதமும் இனிமை தருவதாயிருந்தது. இதனுல் அவரிடம் தொடர்புகொண்ட அனைவரும் அவரை வானளாவப் புகழ்ந்துள்ளனர். அவர் தம் குடிமக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். குடிமக்கள் தில்லி அரசரை உலகத்தலைவராகிய கடவுளாகவே கருதினர். அவர் உணவில் மிகவும் அளவாகவே இருந்தார். பழங்களை உண்பதில் பெருவிருப்பங்

Koviloor Acadamy

கொண்டிருந்தார். இறைச்சியில் அவருக்குச் சிறிதும் விருப்பமில்லை. பிற்காலத்தில் இறைச்சியுண்பதை அடியோடு நிறுத்திவிட்டார்.

அக்பர் எழுதப்படிக்கத் தெரியாதவராய் இருந்தாலும்[1] அவர் பண்பாடில்லாதவராய் இருக்கவில்லை. சிறந்த இலக்கிய ஆர்வமும் ஆழ்ந்த அறிவு ஆர்வமும், வியக்கத்தக்க நினைவாற்றலும் பெற்றிருந்த அவர், தத்துவம், இறையியல் (theology) வரலாறு, அரசியல் போன்ற பல அறிவுத்துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். வெவ்வேறு பொருள்களைப் பற்றிய நூல்கள் நிறைந்த ஒரு நூலகத்தை வைத்திருந்தார். அறிஞர்கள், கவிஞர்கள், தத்துவ வாதிகள் இவர்களின் கூட்டத்தை மிக விரும்பினர். அவர்கள் புத்தகங்களை அவருக்கு உரக்கப்படித்துக் கூறிவந்தமையால் அவர் சூபி, கிறிஸ்துவ, ஸொராஸ்டிரிய, இந்து, சமண இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடையவரானர். 'விவாதப் பொருள் ஒன்றைப் பற்றி அவர் கூறிய அறிவுடனும், தெளிவுடனும் விவாதிப்பதைக் கேட்க நேர்ந்த எவரும் அவருக்குப் பரந்த இலக்கிய அறிவு இருப்பதாகவும், ஆழ்ந்த கல்வியறிவு இருப்பதாகவும் கூறுவர். அவர் எழுதப் படிக்க அறியாதவர் என்று என்றும் ஐயுறவே மாட்டார்கள்' என்று ஸ்மித் மொழிந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். கலை, கட்டிடக்கலை, இயந்திரவேலைகள் இவற்றிலும் அவருக்கு ஓரளவுக்குச் சுவையார்வம் இருந்தது. பொருத்தும் பூட்டுகள் உற்பத்தி செய்வதில் சீர்திருத்தங்களும், வேறு பல கண்டு பிடிப்புகளும் செய்த பெருமையைப் பெற்றிருக்கிருர். அளவிடமுடியாத சக்தியும், சிறிதும் தளர்ச்சியடையாத முயற்சியும் கடவுட் கொடையாகப் பெற்றிருந்த அவர், அடுத்த அதிகாரத்தில் விளக்கப்போகும் பரந்த ஆட்சி முறை இயந்திரத்தை மிக விரிவான திட்டத்தின்படி நிலைநிறுத்தினர். 'அய்னி அக்பரி' யிலிருந்து நாம் அறிவது போல அவர் 'மிகச் சிறிய செய்திகளும் மிகப் பெரிய விளக்கத்தைப் பிரதிபலிக்கும் சக்தியுடையன' என்று கருதினர்.

வெற்றிகளின் மூலம் நாட்டின் பரப்பை விரிவுபடுத்தும் பேராசை யுடையவராயிருப்பினும், அவ்வெற்றிகளால் முகலாயப் பேரரசு பெரிதும் வட இந்தியாவின் கடைசி எல்லைவரை பரந்திருந்தாலும், அக்பர் தன்னலம் வாய்ந்தவரோ, கட்டுக்கடங்காத தன்னுரிமை நாடும் வெறியாளரோ அல்லர். தோல்வியுற்ற மக்களின் உணர்ச்சிகளை அவர் புறக்கணிக்கவில்லை. சுயநலம் ஒன்றையே கருதி அவர்களுடைய உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் நசுக்கவில்லை. அவருடைய கருத்துப்படி அரசின் குறிக்கோள் மிக உயர்ந்தது. 'அரசனின் நடத்தையைப் பொறுத்தே எந்தச்

1 இப்போது சில ஆசிரியர்கள் அவருக்குக் கல்வியறிவுண்டு என்பதை நிருபிக்க முயல்கின்றனர். பார்க்க-1931 டிசம்பர் 30ஆம்தேதியில் வெளிவந்தLiberty; இந்திய வரலாற்று முத்திங்கள் (Indian Historical Quarterly, டிசம்பர் 1940).

Koviloor Acadamy

செயற்பாட்டின் திறமையும் இருக்கும். அதனால் நேர்மையாக ஆட்சி செய்வதன் மூலமும், பிறருடைய தகுதிகளை யறிந்து போற்றுவதன் மூலமுந்தான், அரசன் கடவுளுக்குத் தன் நன்றியைச் செலுத்த முடியும். குடி மக்களின் நன்றியறிவு அரசனுக்குக் கீழ்ப்படிதலிலும் அரசனைப் புகழ்ந்துரைப்பதிலும் காணப்படும்' என்று அவர் கூறி யுள்ளார். மேதைக்குரிய தொலைவில் உணரும் ஆற்றலையும் பெற் றிருந்த அவர் தம்முடைய எல்லாக் குடிமக்களின் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் கொண்டே முகலாயப் பேரரசின் அரசியல் அமைப்பையும், ஆட்சி முறையையும் நிறுவினர். மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையானவர்களாக இருந்த இந்துக்களை இழிவாக நடத்துவதன் பொருத்தமின்மையையும், அல்லது அவர்களை எப் பொழுதும் சமத்துவமின்றியும் தாழ்மைப்படுத்தப்பட்டும் வைத்திருக் கும் நிலையிலேயே நீடித்து வைத்திருப்பதன் தகுதியின்மையையும் அவர் உண்மையாக உணர்ந்திருந்தார். இதிலிருந்து நாட்டு நலன் கருதும் அரசியல்வாதியாக அவர் மிக மேலான சக்தி பெற்றிருந்ததை அறிகிறோம். ஷெர்ஷாவும் அவருடைய சந்ததியினரும் செய்ததைப் போலவே அக்பரும் இந்துக்களை நல்ல முறையில் நடத்தி அவர்களை உயர்ந்த உத்தியோகங்களில் அமர்த்தியதுடன், முஸ்லீம்களுக்கும் முஸ்லீம் அல்லாதவர்களுக்கும் இடையேயுள்ள வெறுப்பைத் தோற்று விக்கும் வேறுபாடுகளை எல்லாம் களைய முயன்றார். இவ்வாறு தம்ஆட்சி யில் எட்டாம் ஆண்டில் பிரயாண வரியையும், ஒன்பதாம் ஆண்டில் ஜிஸியா (jizya) வரியையும் நீக்கினர். எல்லா மதங்களையும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்ற கொள்கையைத் தொடங்கி வைத்தார். உண்மையில் இந்தியாவின் தேசிய ஆட்சியினராயிருக்கும் நிலையை அவாவும் ஒருவர் எந்த வழியில் ஒழுகவேண்டும் என்பதற்கான நெறியை இதன்மூலம் வகுத்திருக்கிறார்.

அக்பர் மனிதத்தன்மையை மதித்துப்போற்றும் சமுதாயச் சீர் திருத்தங்களைக் கொண்டுவர முயற்சி செய்தார். கலை இயக்கங்களின் புரவலராக இருந்தார். அடுத்துவரும் அதிகாரங்களில் இவையெல் லாம் விளக்கிக் கூறப்படும். எல்லா வகையிலும் அவருடைய ஆட்சிக் காலம் இந்திய வரலாற்றில் ஒளி மிக்க காலங்களுள் ஒன்றாகத் திகழ் கிறது. 'வரலாற்றில் பேராற்றல் வாய்ந்த அரசர்களுள் ஒருவராகத் திகழும் நேர்மையான உரிமையுடன், பிறக்கும்பொழுதே அவர் மக்களின் அரசராகப் பிறந்தார். அவ்வுரிமை அவருடைய சிறப்பு மிக்க இயற்கைப் பண்புகளாலும், அவருக்கே யுரிய கொள்கைகளா லும், மாண்புமிக்க செயற் கருஞ் செயல்களாலும் உறுதியுடன் நிலைத்து நிற்கிறது' என்று ஸ்மித் கூறுவது முற்றிலும் உண்மை யாகும்.

Koviloor Acadamy

3. ஜஹாங்கீரும் ஷாஜஹானும்

1. ஜஹாங்கீர்

அக்பர் இறந்த ஒரு வாரத்திற்குப் பின் சலீம் தம் முப்பத்தாரும் வயதில் நூர் உத்தீன் முகம்மது ஜஹாங்கீர் பாதுஷா காஸி (Nur-ud-din Muhammad Jahangir Padshah Ghazi) என்ற பட்டப்பெயரைப் புனைந்துகொண்டு, ஆக்ராவில் அரசுகட்டில் ஏறினர். இன்பங் காண்பதில் பெரு விருப்பினராயிருந்தாலும், அவர் படைபல வெற்றியில் முழுதும் பேராசை யில்லாதவராய் இருக்கவில்லை. முற்காலத் தைமூர்த்துக்ளின் அரசு இருப்பிடமான டிரான்சோக்ஸியானவை (Transoxiana) வெற்றி கொள்வதைப்பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்தார். பட்டத்திற்கு வந்தவுடனே ஆஸாதின் (Asad) சொற்களில் கூறினல்-எல்லா மக்களுடைய உள்ளங்களையும் வெற்றி கொள்ளப் பல வகையான முறைகளில் அவர் முயன்ருர். அவரை எதிர்த்தவர்களுக்குப் பொது மன்னிப்புக் கொடுத்தார். சிறைக்கைதிகளை விடுதலை செய்தார். ஆக்ராக் கோட்டையிலுள்ள ஷாபுர்ஜி (Shah-burji)க்கும், ஜமுனவின் கரைகளில் நிறுவப்பட்டிருந்த ஒரு கற்றூணுக்கும் இடையே புகழ்பெற்ற நீதிச் சங்கிலியை (Chain of Justice) நிறுவினர். அதில் கீழ்வரும் பன்னிரண்டு கட்டளைகளைப் பொறித்து வைத்துத் தம் இராச்சியத்தில் கவனிக்கப்படவேண்டிய ஆணை அவை என்று ஆணையிட்டார் :—

1. வரி (Zakat) களுக்குத் தடை.
2. வழிப்பறிகொள்ளை, திருட்டு ஆகியவைபற்றிய ஒழுங்கு முறை விதிகள்.
3. இறந்து போனவர்களின் சொத்தைக் கட்டுப்பாடின்றி உரிமையாகப் பெறுதல்.
4. வைன் (Wine) விற்பனைக்கும் போதை யூட்டும் எல்லா வகையான மதுக்களுக்கும் தடை.

Koviloor Academy

5. வீடுகளைக் கைப்பற்றுவதற்கும், குற்றவாளிகளின் மூக்குகளையும் காதுகளையும் வெட்டி விடுவதற்கும் தடை.

6. சொத்தினை வலிந்து (Ghasbi) கைப்பற்றுவதற்குத் தடை.

7. மருத்துவ விடுதிகளைக் கட்டுதலும் நோயாளிகளைக் கவனிப்பதற்காக மருத்துவர்களை நியமித்தலும்.

8. சில குறிப்பிட்ட நாள்களில் விலங்குகளைக் கொல்வதற்குத் தடை.

9. ஞாயிற்றுக் கிழமைக்கு உரிய மதிப்பளித்தல்.

10. மான் சப்தார்கள் (Mansabs), ஜாகிர்கள் இவற்றைப் பொதுவாக நிர்ணயிர்த்தல்.

11. ஜமா (aima)[1] நிலங்களை நிர்ணயித்தல்.

12. கோட்டைகளிலும், எல்லாவகையான சிறைகளிலும் இருக்கும் எல்லாக் கைதிகளுக்கும் மன்னிப்பு.

ஜஹாங்கீர் அரசாங்க அலுவல்களில் அப்போது செய்த சில மாறுதல்களும் தமக்காக ஆதரவாளர்களின் குழு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளச் செய்யப்பட்டவையேயாகும். அபுல் பாஸலைக் கொலை செய்த பிர் சிங்கு பந்தேளாவுக்கு 3000 குதிரைகள் அடங்கிய படையின் தளபதி என்ற பதவியை அளித்துச் சிறப்புச் செய்தார் ஜஹாங்கீர். ஆனால், அபுல் பாஸலின் மகனான அப்துல் ரஹ்மான், மான்சிங்கின் மகனான மஹாசிங்கு (Maha Singh) இவர்கள் 2000 குதிரைகளடங்கிய படைக்கே தளபதிகளாக உயர்த்தப்பட்டனர். பாரசீகத் துணிகரச் செயல்வீரரும் நூர்ஜஹானின் தந்தையும், இத்திமித்-உத்தௌலா (Itimad-ud-daulah) என்ற சிறப்புப் பெயருடன் புகழ் பெற இருந்தவருமான மிர்ஸா கியாஸ் பெக் என்பவர் 1,500 குதிரைகளடங்கிய படைக்குத் தளபதியாக உயர்த்தப்பட்டார்.

ஜஹாங்கீரின் 'முதல் இனிய கனவுகள்' எல்லாம் அவருடைய மூத்த மகனான குஸ்ராவின் கலகத்தினால் விரைவில் சிதைந்து நிலைகுலைந்தன. அக்பரின் ஆட்சிக்கால இறுதியிலிருந்தே குஸ்ராவுக்கும் அவருடைய தந்தைக்குமிடையே நிலவிய உறவு நட்புறவுக்கு அப்பாற்பட்டவையாய் இருந்தன. பாட்டனாரின் அன்பையும் ஆதரவையும்

[1] வழிபாட்டிற்காகவும் பசமுக்காகவும் விடப்பட்ட நிலங்களை 'ஜமா' என்று வாகியாத்-இ-ஜஹாங்கீரி (Waqiat-i-Jahangiri) யில் விளக்கப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

Koviloor Acadamy

பெற்று அனுபவித்துக் கொண்டிருந்த குஸ்ராவ் பேரரசிலேயே மிகவும் புகழ் பெற்ற இளவரசராய் விளங்கினர். அவருடைய தாய் மாமன் மான்சிங்கு, மாமனரும் அக்பரின் மாற்ருந்தாயின் புதல்வருமான கானி ஆஸம் அஸிஸ் கோக்கா (Khan-i-A'zam Aziz Koka) போன்ற பல செல்வாக்கு மிக்க ஆதரவாளர்கள் அவர் சார்பில் இருந்தனர். ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்த ஐந்து மாதங்களுக்குப் பிறகு அவர் ஆக்ராவை விட்டுப் பஞ்சாப்பிற்கு ஓடிப்போய் அங்கே கலகத்தை உண்டாக்கினர். ஜஹாங்கீர் தாமதமின்றி ஒரு பெரும் படையுடன் தம் மகனை அடக்கப் புறப்பட்டார். வழக்கமாகக் காலையில் அருந்தும் அபினியைக் கூடப் படையுடன் புறப்படும் அன்று காலையில் அருந்த மறந்துவிடுமளவுக்கு அவர் மனம் மிகப் பெரிதும் கலங்கியிருந்தது. ஜலந்தருக்கு அருகில் இளவரசரின் படைகள் பேரரசின் படைகளால் எளிதாகத் தோற்கடிக்கப்பட்டன. காபூலுக்குப் போவதற்காக சீனுப் நதியைக் கடக்க முயற்சி செய்யும் போது இளவரசரும் அவருடைய முக்கியமான பின்பற்றுவோரும் ஹுஸேன் பேக், அப்துல் அஸிஸ் இவர்களும் சிறைபிடிக்கப்பட்டனர். 'காலில் ஒரு விலங்கு பூட்டப் பட்டுக் கைகளும் கட்டப்பட்டு இளவரசர் தம் தந்தையின் முன்பு தர்பார் கூடியிருக்கும் போது கொண்டு வரப்பட்டார். கடுமையாக இகழ்ந்துரைக்கப்பட்ட பிறகு சிறையில் அடைக்கப்படுமாறு கட்டளை பிறந்தது. அவருடைய ஆதரவாளர்களுக்கு இரக்கமற்ற கொடிய தண்டனைகள்[1] தரப்பட்டன. சிறைப்பட்ட இளவரசர் 1622-ல் தாம் சாவை அடையும் வரை இன்னும் பல துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார். குஸ்ராவும் அவருடைய மருமகன் தாராஷுக்கோவும் முகலாய வரலாற்றில் இரக்கம் காட்டத்தக்க இருவராவர்.

ஐந்தாவது சீக்கிய குரு அர்ஜுன் (Arjan)[2] தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டார். அவருடைய சொத்து முழுவதும் பேரரசரால் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்மேல் சாட்டப்பட்ட குற்றம் அவர் கலகம் செய்த இளவரசருக்குப் பண உதவி செய்தார் என்பதுதான். சில வரலாற்ருசிரியர்கள் அவர் 'பெரும் அரசத் துரோகத்திற்கும் அரசருக்கு எதிரான செயலில் ஈடுபட்டதற்கும் ஏற்ற தண்டனை' அடைந்தார் என்று நம்புகின்றனர். ஆனல் ஜஹாங்கீரின் சொந்தக் குறிப்புக்கள் அப்பேரரசர் வெறும் அரசியல் காரணங்களைக் கொண்டு மட்டும் அம்முடிவுக்கு வரவில்லை என்பதைத் தெளிவாக்குகின்றன. டெர்ரியின் (Terry) வார்த்தைகளில் குருவினல் உதவி செய்யப்பட்ட

[1] ஜஹாங்கீரே எழுதுவதாவது 'நான் குஸ்ராவுக்குச் சிறையைக் கொடுத்தேன். இந்த இரண்டு போக்கிரிகளையும் (ஹுஸேன் பேக், அப்துல் அஸிஸ்) பசுமாடு, கழுதை இவற்றின் தோல்களால் சுற்றப்பட்டுக் கழுதைகளின் மீது வால் பக்கம் முகம் இருக்குமாறு உட்காரவைத்து நகர் முழுவதும் ஊர்வலமாக இழுத்துச் செல்லும்படி கட்டளையிட்டேன். (Elliot Vol. VI, P. 300.)

[2] அவருடைய கல்லறை லாகூர்க் கோட்டைக்குச் சிறிது வெளியேதான் அமைந்துள்ளது.

Koviloor Acadamy

இளவரசர் 'சிறந்த நடத்தையும், கண்டார் விரும்பும் தோற்றமும் கொண்டவரும் பொது மக்களால் அளவிலாத அன்பு காட்டப்படுபவரு மான ஒரு பெரு மகனுயிருந்தார்.'[1]

'பொது மக்கள் எல்லாருடைய அன்பிற்கும், ஆசைக்கும் நிலைக் களனாக அவர் விளங்கினர்.'[1] குருவின் நடத்தைக்கு அவருடைய இரக்க உள்ளமும் இயல்பான சமயப் பண்புமே காரணமாய் இருந் திருக்கலாம். பேரரசரிடம் சொந்த முறையில் எந்தப் பகைமையும் அவர் பெற்றிருந்தார் என்பதை அது காட்டுவதாகக் கொள்ளவேண்டி யதில்லை. குருவே தம்முடைய தருமத்தின்படி தாம் செய்த செயல் நியாயமானதே என்றும், அக்பரால் காட்டப்பட்ட பழைய சலுகை களுக்கு நன்றி செலுத்தும் வழியாக அது இருந்தது என்றும் கூறி ஞர். பேரரசர் ஜஹாங்கிருக்கு 'எதிராக இருந்ததனுல் அல்ல' என்றும் கூறினர். சிக்கியரின் மத குருவைத் தூக்கிலிட்ட ஜஹாங்கிரின் செயல் அரசியல் விவேகமற்ற செயலாகும். ஏனெனில் அச்செயல் அதுவரை அமைதியை விரும்பும் சமுகமாயிருந்த சிக்கியர்களின் எரிச் சலைக் கிளப்பிவிட்டு அவர்களைப் பேரரசின் எதிரிகளாக மாற்றி விட்டது.

1611 மே மாதத்தில் ஜஹாங்கிர் முன்பு மிஹிருன்னிஸா (Mihr-un-nisa) என்று அழைக்கப்பட்ட நூர்ஜஹானை மணந்தார். அவருடைய வாழ்க்கையிலும் ஆட்சியிலும் அவள் பேரளவிற்குத் தன் செல்வாக்கைச் செலுத்தினுள். மிஹிருன்னிஸாவின் பிறப் பைப் பற்றியும் இளமை வாழ்க்கையைப் பற்றியும் கூறப்பட்ட பல கற்பனைக் கதைகளைத் தற்கால ஆராய்ச்சிகள் உண்மையல்ல வென ஒதுக்கிவிட்டன. இக்பால் நாமா-இ-ஜஹாங்கிர் (Iqbal-Nama-i-Jahangiri) என்ற நூலின் ஆசிரியரான முதாமீத்கான் (Mutamid Khan) நம்பத்தகுந்த ஒரு சுருக்கமான வரலாற்றைக் கூறியிருக்கி ருர். அதன்படி மிஹிருன்னிஸா அக்பரின் ஆட்சிக் காலத்தில் தம் மனைவியுடனும் குழந்தைகளுடனும் பாரசிகத்திலிருந்து வந்து இந்தி யாவில் குடியேறிய மிர்ஸா கியாஸ் பெக் (Mirza Ghiyas Beg) என் பவரின் மகளாவாள். அவள் இந்தியாவுக்கு வரும் வழியில் காந்த காரில் பிறந்தாள். அக்பருடைய ஆட்சிக் காலத்திலும் அவருடைய மகனுடைய ஆட்சியிலும் அவளுடைய தந்தை உயர்ந்த பதவிகளை அடைந்தார். அவள் பதினேழாம் வயதில் மற்றொரு பாரசிகத் துணிவு மிக்க வீரரான ஆலி கூலி பெக் இஸ்தாஜ்ஹி (Ali Quli Beg Istajhi)

[1]டெர்ரி, கிழக்கிந்தியப் பிரயாணம் (Voyage to East India) பக்கம் .411. சர்தாமஸ்ரோ (Sir Thomas Roe) வின் குருவான டெர்ரி, குஸ்ராவைப் பல முறை சந்தித்தார்.

Koviloor Acadamy

என்பவருக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டாள். அவர் ஜஹாங்கீரின் ஆட்சித் தொடக்கத்தில் வங்காளத்தில் பர்த்வான் ஜாகீரையும், ஷெர் ஆப்கன் (Sher Afghan) என்ற பட்டத்தையும் பெற்ருர். ஷெர் ஆப்கன் கீழ்ப்படியாமல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிருர் என்று கேள்வியுற்றதும் கி.பி. 1607-ல் தம் மாற்ருன் தாயின் புதல்வரும் வங்காளத்தின் புதிய கவர்னருமான குதுப்-உத்தீனை ஷெர் ஆப்கனை அகிக்கியொடுக்குமாறு ஜஹாங்கீர் அனுப்பினுர். குதுப்-உத்தீன் பேரரசருக்கு 'ஒரு அன்பு மகனைப் போலவும் அன்புச் சகோதரனைப்போலவும் இனிய நண்பனைப் போலவும்' இருந்தார். ஷெர் ஆப்கனுக்கும் குதுப்-உத்தீனுக்கும் பர்த்வானில் போர் நடந்தது. அதில் குதுப்-உத்தீன் கொல்லப்பட்டார். குதுப்-உத்தீன் வழியாளர்கள் ஷெர் ஆப்கனைப் பிடித்துத் துண்டாக வெட்டினுர்கள். மிஹிருன்னிஸாவையும் அவனுடைய இளம் மகளையும் அரசவைக்கு இழுத்துச் சென்றனர். நான்கு ஆண்டுகள் கழித்து மிஹிருன்னிஸாவின் கவர்ச்சி மிக்க 'தோற்றப் பொலிவு அரசரின் துரதிர்ஷ்டக் கண்களைக் கொள்ளை கொண்டது.' அதனுல் அவர் அவளை மணந்து கொண்டதோடு, அவளைத் தம்முடைய பட்டத்து அரசியாக்கிக் கொண்டார். நூர்-உத்தீன் என்று தன்னை அழைத்துக்கொண்ட பேரரசர் புதிய மனைவிக்கு நூர் மஹால் (அரண்மனை ஒளி) என்ற சிறப்புப் பெயரை அளித்தார். விரைவில் அப்பெயர் நூர்ஜஹான் (உலகின் ஒளி) என்று மாறிவிட்டது. மிஹிருன்னிஸா 'கன்னியாயிருக்கும்போதே அக்பர் உயிரோடிருந்த காலத்தில்' அவளை ஜஹாங்கீர் காதலித்து வந்தார் என்றும், அவருடைய காம வெறி ஷெர் ஆப்கனின் உயிரைக்குடித்தது என்றும் சில சமயங்களில் கூறப்படுகின்றன. ஆனுல் அக்காலத்து இந்திய வரலாற்ருசிரியர்களும், சில ஐரோப்பியப் பிரயாணிகளும் அதைப் பற்றி ஒன்றும் பேசாதிருப்பதனுல் பிற்கால ஆசிரியர்களால் புனைந்துரைக்கப்பட்டது என்றும், இக்கருத்தின் உண்மை அண்மைக் காலத்தில் ஐயத்திற்கிடமாக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் மிஹிருன்னிஸாவைப் பேரரசில் ஒரு முக்கியமான பதவி வகித்த அவள் தந்தையிடம் கொண்டு போகாமல் அரசவைக்குக் கொண்டு போனதற்கான காரணம் என்ன என்று விளக்கப்படவில்லை. ஜஹாங்கீர் அரசவை மகளிருடன் மறைவாகக் காதல் உறவு கொண்டிருந்தார் என்பது அவர் 1615-ல் லாகூரில் அனுர்கலிக்காக ஓர் அழகிய பளிங்குக் கல்லறையை[1] எழுப்பி, அதில் கீழ்வரும் உணர்ச்சி மிக்க வாக்கியத்தைப் பொறித்ததிலிருந்து தெரிகிறது: 'ஆ! என்னுடை ஆசைக் காதலியின் முகத்தை இன்னெரு முறை பார்க்க முடியுமாயின் மீட்பு நாள் வரை நான் கடவுளுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருப்பேன்.'

1 1857 முதல் அது செயின்ட் ஜேம்ஸ் மாதாகோவிலாய் இருந்தது. இப்போது பஞ்சாப் அரசாங்கத்தின் ஆவணப்பதிவு அலுவலகமாக இருக்கிறது.

Koviloor Academy

உண்மையில் நூர்ஜஹான் அழகின் கொழுந்தாக இருந்தாள். பாரசீக இலக்கியம், கவிதை, கலைகளில் அழகிய சுவையுணர்வும் 'ஊடுருவிநோக்கும் அறிவும், பலவற்றில் ஆர்வங்கொள்ளும் மன இயல்பும், சிறந்த பகுத்தறிவும்' வாய்ந்தவளாய் விளங்கினாள். ஆனால் அவளுடைய குண இயல்பில் மிகவும் ஆதிக்கம் வாய்ந்த பண்பாக இருந்தது அவளுடைய அளவுக்கு மிறிய பேராசையாகும். அப்பண்பு தான் தன் கணவருக்கு மேல் அளவில்லாமல் உயர்ந்து நிற்கும்படி அவளைச் செய்தது. அவளுடைய தந்தையான இதிமாத்-உத்-தௌலாவும் அவளுடைய சகோதரன் ஆஸப்கானும் அரசவையின் முதன்மைவாய்ந்த பிரபுக்களாயினர். மேலும் அவள் தன் முதல் கணவனுக்குப் பிறந்த மகளை ஜஹாங்கிரின் கடைசி மகனான இளவரசன் ஷஹ்ரியாருக்கு (Shahryar) மணமுடித்து வைத்துத் தன் நிலையை மேலும் பலப்படுத்திக் கொண்டாள்.

ஜாஹாங்கிர் ஆட்சியின் முற்பகுதி சில முக்கியமான படைத்துறை வெற்றிகளைக் கண்டது. அவருடைய கவனம் முதலில் வங்காளத்தின் பக்கம் திரும்பியது. வங்காளம் பேரரசுடன் இணைந்து விட்ட போதிலும் அங்கே ஆப்கானிய எதிர்ப்புக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. வங்காளக் கவர்னர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு வந்தமையின் அந்நாட்டு ஆப்கானியர்கள் கிளர்ச்சி செய்வதற்கு ஊக்கங்கொண்டனர். இஸ்லாம் கான் கவர்னராயிருக்கும்போது, ஆப்கானியர்கள் உஸ்மான் கான் என்பவரின் தலைமையில் கிளர்ச்சி செய்தனர். திறமை மிக்கவரான இஸ்லாம் கான் கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு உடனே சீரிய முறைகளை மேற்கொண்டார். 1612 மார்ச்சு 12ஆம் தேதி பேரரசினர் ஆப்கானியர்களைத் தோற்கடித்தனர். அவர்களுடைய தலைவரான உஸ்மான் கான் தலையில் பலத்த காயம் பட்டதனால் அவர் இறந்தார். அது முகலாயர்களை எதிர்த்து வந்த ஆப்கானியர்களின் அரசியல் அதிகாரத்தை அன்றோடு முடிவடையுமாறு செய்தது. அதன் பின் ஜஹாங்கிரின் இணக்கக் கொள்கை, அவர்களைப் பேரரசுடன் நட்புடன் இருக்கச் செய்தது.

ஜஹாங்கீர் ஆட்சியில் முகலாயப் பேரரசின் மிகச் சிறந்த வெற்றியாகக் கருதப்படுவது மேவார் ராஜபுத்திரர்களின் மேல் பெற்ற வெற்றியே யாகும். அந்த ராஜ புத்திரர்கள் நீண்ட காலமாகப் பேரரசின் அமர்சிங்கிடம் பிரதாப்பின் அசைக்க முடியாத உறுதி காணப்படவில்லை. ஜஹாங்கிரின் மூன்றும் மகனான இளவரசன் குர்ரம் (Khurram) கொண்ட கொள்கை சமாதானத்திற்காக இணங்கும் படி அவரை வற்புறுத்தியது. ராணாவும் அவருடைய மகன் கரனும் (Karan) முகலாயர்களுக்கு அடி பணிந்து பேரரசின் மேலாண்மையதிகாரத்தை ஒப்புக் கொண்டனர். ராணா மட்டும் பேரரசின் அரசவைக்கு நேரில் செல்லவேண்டு என்ற நியதியிலிருந்து விலக்கு அளிக்

Koviloor Academy

கப்பட்டார். அவருடைய குடும்பத்தைச் சார்ந்த எந்த இளவரசியும் அரசாங்க அந்தப்புரத்திற்கு எடுத்துச் செல்லப் படவில்லை. ஜஹாங்கீரே இதைப்பற்றி எழுதும் போது, 'அமர்சிங்கும் அவருடைய முன்னோர்களும் தங்கள் மலைநாட்டுப் பலத்தினாலும், தங்கள் இருப்பிடங்களின் பலத்தினாலும் செருக்குக்கொண்டு இந்துஸ்தானத்தின் அரசர் எவரையும் (அரசவையில்) பார்க்கவுமில்லை ; எவருக்கும் அடிபணியவுமில்லை. இது என்னுடைய ஆட்சிக்காலத்திலும் நிகழப்பெறவேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதன் பின் ஜஹாங்கீர் தம்முடைய ஆக்ரா அரண்மனைத் தோட்டத்தில் ராணா, அவருடைய மகன் இருவருடைய ஆள் அளவு பளிங்குச் சிலைகளையும் வைத்தார். அவுரங்க சீப்பின் கொள்கை ராணா ராஜ் சிங்கைப் பிரித்துவிடும்வரை ஜஹாங்கீர் மேவாருக்குத் தாராளமான சலுகைகள் அளித்தும், மேவாரைப் பொறுத்தவரை இணக்கமான ஒரு கொள்கையினை மேற்கொண்டும் மேவார் முகலாயப் பேரரசுக்கு அடங்கியிருக்கும்படி செய்தார்.

தக்காணத்தைப் பொறுத்தவரை ஜஹாங்கீர் தம் தந்தையின் முன்னேற்றக் கொள்கையினையே கடைப்பிடித்தார். அவருடைய ஆட்சிக்காலம் முழுவதும் அகமத்நகருக்கு எதிராக இடைவிட்டு விட்டுப் போர் நடந்துகொண்டேயிருந்தது. தக்காண இராச்சியத்தின் பலத்தினாலும், பேரரசின் படைகள் போரில் ஊக்கம் காட்டாததாலும், முகலாயப்படைகள் அகமத் நகர்ப் படைகளைத் தோற்கடித்து முழு வெற்றியடைய முடியவில்லை. அகமத்நகர் இராச்சியம் அப்போது மக்களின் பிறவித்தலைவரும், மத்திய கால இந்தியாபெற்றெடுத்த மிகப் பெரிய நாட்டு நலன் கருதும் அரசியல் வாதிகளில் ஒருவருமான மாலிக் ஆம்பர் (Malik Ambar) என்னும் அபிசீனிய மந்திரியால் திறமையாக ஆளப்பட்டுவந்தது. அவர் சிறந்த முறையில் இராச்சியத்தின் பொருள் வருவாய் முறையைச் சீர்திருத்தி அமைத்தார். அதனால் இராச்சியத்தில் பொருளாதார நிலையுறுதி ஏற்பட்டது. பெரும்பாலும் மராத்தியர்கள் அடங்கிய தம் படை வீரர்களுக்குக் கொரில்லா (Guerrilla) போர் முறைப்படி பயிற்சி கொடுத்திருந்தமையால் அவர்கள் பேரரசப் படையினரை வெற்றியுற எதிர்த்து நிற்க முடிந்தது. மாலிக் ஆம்பரின்மேல் எவ்வித விருப்புவெறுப்பும் கொண்டிருக்க இயலாத முதமித்கான் (Mutamid Khan) என்னும் முகலாய அரசவையைச் சேர்ந்த வரலாற்று நிகழ்ச்சிக்கோப்பாளர் அவரைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார் : 'இந்த ஆம்பர் ஓர் அடிமையாய் இருந்தார். ஆனால் திறமை மிக்க மனிதர். போர் முறை, படைகளுக்கு, ஆணையிடுதல், சிறந்த மதிப்பீடு, ஆட்சிமுறை இவற்றில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் இருந்தார். தாகின் (Dakhin) மொழியில் பர்கீ-கிரி (Bargi-giri) என்றழைக்கப்பட்ட எதிர்காலத்தில் வரப்போகும் போர் முறையைப்பற்றி நன்கு உணர்ந்திருந்தார். அந்நாட்டின் குழப்பம்

Koviloor Academy

விளைவிக்கும் உணர்ச்சிகளை யெல்லாம் நசுக்கிவைத்துத் தம் வாழ் நாள் முடிவு வரையிலும் தம் உயர்ந்த நிலையைக் காப்பாற்றி வந்தார். அதே உயர்ந்த மதிப்பு நிலையில் தம் வாழ்க்கைப் பணியை முடித்துக்கொண்டார். அபிசீனிய அடிமை ஒருவர் அவ்வளவு உயர்ந்த நிலைமையை எய்தியதற்கு வேறொரு சான்றினை வரலாறு காட்டவில்லை.' தளபதிகளுக்குள் இடைவிடாது நிகழ்ந்த பிணக்குகளால் பேரரசின் படைகளுடைய செயல்முறைகள் எல் லாம் பெரிதும் தடைப்படுத்தப்பட்டன. போரை நடத்துவதற்குப் பெயரளவில் ஆணை முதலில் இளவரசர் பார்வேஸுக்குக் (Parwez) கொடுக்கப்பட்டது; பின்பு இளவரசர் குர்ரமுக்குக் கொடுக்கப் பட்டது. ஆனால் அப்துர் ரஹிம் கானி-கானன் ('Abdur Rahim Khan-i-Khanan) போன்ற இன்னும் சில முக்கிய தலைவர்களே உண் மையில் போர்ச் செயல்களைக் கண்காணித்துவந்தனர். அவர்கள் தக்கண வீரர்களுடன் போரிடுவதைக் காட்டிலும் பெரும்பாலான நேரம் தங்களுக்குள் போரிட்டுக்கொள்வதில் கழித்தனர். கி.பி. 1616-ல் முகலாயர்களுக்கு ஒரு சிறு வெற்றியே கிடைத்தது. இளவர சர் குர்ரம் அகமத் நகரையும், வேறு சில கோட்டைகளையும் கைப் பற்றினர். குர்ரம் பெற்ற இவ்வெற்றியால் அவருடைய தகப்பனர் இவருக்கு ஷாஜஹான் (உலகத்தின் அரசர்) என்ற பட்டப் பெயரைக் கொடுத்துச் சிறப்பித்தார். மேலும் பல வகையான பரிசுகளையும் அவருக்கு அளித்தார். 30,000 ஸாத்துகள் (zat), 20,000 ஸவார்கள் (Sawar) இவர்களுக்குத் தலைவராக குர்ரத்தின் பதவியை ஜஹாங்கீர் உயர்த்தினர். ஆனால், முகலாயர்களின் அகமத்நகர் வெற்றி வெளித் தோற்றத்திற்கு வெற்றியாகக் காணப்பட்டதே யன்றி, உண்மையான வெற்றியன்று. தக்காணம் அவர்களால் முழுதும் வெற்றி கொள்ளப் படுவதற்கு மிகவும் எட்டாததாயிருந்தது. அகமத்நகர் 'இலட்சக்கணக் கான ரூபாய்களும், ஆயிரக்கணக்கான உயிர்களும் செலவிட்டும் முகலாய எல்லை 1605-ல் இருந்ததைக் காட்டிலும் ஒரு கோடுகூட அப்பால் விரிவுபடுத்தப்படவில்லை என்ற ஆற்றல் மிக்க உண்மையை யாரும் மறைக்கமுடியாது' என்று ஓர் ஆசிரியர் உரைத்துள்ளமை உண்மையேயாகும்.

ஜஹாங்கீர் ஆட்சியில் குறிப்பிடத்தக்க படைத்துறை வெற்றி வடகிழக்குப் பஞ்சாபின் மலைகளில் இருந்த வன்மை மிக்க காங்க்ராக் (Kangra) கோட்டையைப் 1620 நவம்பர் 16ஆம் தேதி கைப்பற் றியதேயாகும். ஆனால் ஜஹாங்கீருக்கு மிக்க மகிழ்ச்சி யளித்த இந்த நிகழ்ச்சியைப் பின்தொடர்ந்து கொடிய துன்பங்களும் கிளர்ச்சி களும் ஏற்பட்டன. இத்துன்பங்களும் கிளர்ச்சிகளும் ஜஹாங்கீர் கடைசியாகக் கண்மூடும் வரையில் முடிவடையவில்லை.

Koviloor Academy

காந்தகாரை இழந்தமை பேரரசுக்கு முதல் பெரும் இடர்ப்பாட்டை உண்டாக்கியது. காந்தகார் நீண்ட காலமாக முகலாயர்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையே மனக்கசப்பை உண்டாக்கும் மூலக் கருவியாகவே இருந்துவந்தது. ஆசியாவில் அக்காலத்தில் மிகப் பெரிய ஆட்சியாளர்களுள் ஒருவரான ஷா அப்பாஸ் (Shah Abbas) (1587-1629) முகலாய அதிகாரிகளுக்கு நிறையப் பரிசுகளைக் கொடுத்தும், நட்பு முறையில் பல வாக்குறுதிகளை யளித்தும், அவர்களை ஏமாற்றியும், பேரரசில் நிலவியிருந்த உள்நாட்டுக் குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டும் 1621-ல் காந்தகாரின் மேல் படையெடுத்துக் கடைசியில் 1622 ஜூன் மாதத்தில் அதைப் பிடித்துக்கொண்டார். காந்தகாரை மீட்பதற்காக ஜஹாங்கீர் செய்த மிகப் பெரிய ஏற்பாடுகள் எல்லாம் வீணாயின. ஏனெனில் ஜஹாங்கிரால் படையெடுப்புக்குத் தலைமைதாங்கி நடத்திச் செல்லுமாறு ஏவப்பட்ட அவருடைய மகன் ஷா ஜஹான் தாம் தலைநகரை விட்டுப் போய்விட்டால் சிம்மாசனத்துக்குரிய தம்முடைய உரிமைகளை எல்லாம் நூர்ஜஹான் மாற்றிவிடக்கூடும் என்றும் அவள் தன்னுடைய மருமகனை ஷஹ்ரியாரின் உரிமைகளைப் பலப்படுத்திக்கொள்வாள் என்றும் பயந்துகொண்டு நகராமல் இருந்தார். நூர்ஜஹானின் சூழ்ச்சிகளால் உரிமைகளை யிழந்த ஷாஜஹான் விரைவில் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். பேரரசரும் பேரரசியை அடக்கிவைக்கும் துணிவோ, ஆற்றலோ இல்லாமல் இருந்தார். இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போல — வடமேற்கே பாரசீகர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கவேண்டியவராயும், அதே சமயத்தில் பேரரசின் இதயம் போன்ற பகுதியில் ஷாஜஹானின் கிளர்ச்சியை அடக்கவேண்டியவராயும்—பெருந் தொல்லைகளால் துன்புற்றார். அவருடைய கவனமும் முயற்சிகளும் விரைவில் உள்நாட்டில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சியை அடக்குவதற்காகத் திரும்பலாயின.

ஷாஜஹான் அப்துர் ரஹிம் கானிகானன் என்ற வயது முதிர்ந்த அதிகாரியைச் சேர்த்துக்கொண்டு முதலில் ஆக்ராவுக்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்தார். ஆனால் இளவரசர் பார்வேஸின் பெயரளவு ஆணையைக்கொண்டும் மஹபத்கானை (Mahabat Khan) உண்மையான தலைவராகவும் கொண்டுவந்த பேரரசின் ஒரு படை அவரைத் தில்லிக்குத் தெற்கிலுள்ள பலோச்பூர் (Balochpur) என்ற இடத்தில் 1623-ல் முழுமையாகத் தோற்கடித்துவிட்டது. மாகாணத்துக்கு மாகாணம் அவர் துரத்தப்பட்டார். அவர் மீண்டும் மீண்டும் பின்வாங்கவே நேரிட்டது. முதலில் அவர் தக்கணத்துக்குச் சென்றார். பின்பு அங்கிருந்து வங்காளத்துக்குத் துரத்தப்பட்டார். ஆனால் அங்கே நிலையாய்த் தங்கியிருக்க முடியாமல் மீண்டும் தக்கணத்துக்குத் திரும்பிவந்தார். சில ஆண்டுகள் மாலிக் ஆம்பர் போன்ற மற்றுஞ் சிலருடைய கூட்டுறவை நாடி அலைந்து திரிந்தார். கடைசியில்

Koviloor Academy

1625-ல் அவர் தம் தந்தையுடன் இணக்குவிக்கப்பட்டார். அவர்களுடைய புதல்வர்களான தாரா ஷுக்கோவும், அவுரங்க சீப்பும் அரசவைக்கு அனுப்பப்பட்டனர். ஒரு வேளை அவர்கள் ஷாஜஹானின் நன்னடத்தைக்கு ஜாமீனாக இருக்கும்படி அனுப்பப்பட்டிருக்கலாம். பிறகு அவர் தம் மனைவி மும்தாஜ் மஹாலுடனும், நூர்ஜஹானின் ஒரு மருமகனுடனும், கடைசி மகனை முராதுடனும் நாசிக் சென்று ஓய்வெடுத்துக்கொண்டார். இவ்வாறு அவருக்காக எவ்விதப் பயனுமின்றி, ஆனால் பேரரசுக்குப் பெரிய நஷ்டத்துடன் ஷாஜஹானின் வீணான கிளர்ச்சி முடிவுற்றதாகத் தெரிகிறது.

ஜஹாங்கீரின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் பிறப்பில் ஆப்கானியரான மஹபத்கான் 500 பேர்கள் அடங்கிய மன்சாப் ஒன்றை மட்டும் வைத்திருந்தார். விரைவாக உயர்ந்த நிலைகளுக்கு உயர்த்தப்பட்டதால் அவர் பேரரசருக்கு மிகச் சிறந்த தொண்டுகள் செய்தார். சிறப்பாக ஷாஜஹானின் கிளர்ச்சியை ஒடுக்கத் துணை செய்தார். ஆனால் அவருடைய வெற்றி நூர்ஜஹான், அவளுடைய சகோதரன் ஆஸப்கான் ஆகிய இருவரின் பொறாமைத் தீயையும் கிளப்பிவிட்டது. அரசியின் வெறுப்பு அவரையும் கிளர்ச்சி செய்யத் தூண்டியது. பேரரசர் காபூலிலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கும்போது வழியில் துணிவான ஒரு திடீர்த் தாக்குதல் மூலம் ஜிலம் நதிக்கரையில் அவர் ஜஹாங்கீரைச் சிறைபிடித்துவிட்டார். நூர்ஜஹான் எப்படியோ தப்பிவிட்டாள். ஆனால் படை பலத்தின் மூலம் தன் கணவரைக் காப்பாற்றச் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. அவளும் கணவருடன் சிறைக்குச் சென்றாள். கடைசியில் அவளும் அவளுடைய கணவரும் மஹபத்கானை ஏமாற்றிவிட்டு தங்களுடைய வீரர்கள் ஒரு பெரிய படையைத் திரட்டிவைத்திருந்த ரோஹ்தாஸுக்கு தப்பிச் செல்வதில் வெற்றியுற்றனர். ஆனால் நூர்ஜஹானின் வெற்றி குறுகிய காலமே இருந்தது. ஏனெனில் 1627 அக்டோபர் 28ஆம் தேதி பேரரசர் இறந்துபோனார். அவருடைய உடலம் ராவி நதிக்கரையில் உள்ள ஷாதாராவில் (Shahdara) ஓர் அழகிய கல்லறையில் புதைக்கப்பட்டது.

இந்திய வரலாற்றில் ஜஹாங்கீர் ஒரு சிக்கல் நிறைந்த ஆளுமையாளராகத் தோன்றுகிறார். டெர்ரி அவரைப்பற்றிக் கூறுவதாவது: ‘அந்த அரசரின் மன இயல்பு முரண்பட்ட இரு கோடிகளுக்கும் அடிக்கடி இடம் மாறிச் செல்வதாயிருந்தது என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் சில சமயம் அவர் கொடுமையாளராய் இருப்பார். மற்றச் சமயங்களில் மிகவும் தாராளமுடையவராயும், இளகிய மனமுடையவராயும் காணப்படுவார். பெவரிட்ஜ் (Beveridge) கூறுகிறார்: ‘ஜஹாங்கீர் உண்மையில் வியப்பு மிக்க பண்புகளின் ஒரு கலவையாக இருந்தார். அவர் மனிதர்கள் உயிரோடு

Koviloor Academy

தோல் உரிக்கப்படுவதை அருகில் நின்று கவனிப்பார்...எனினும் நீதியின் காதலராயும், வியாழக்கிழமை மாலை நேரங்களைப் பிறரிடம் உயர்ந்த தத்துவம் பேசுவதில் கழிப்பவராயும் காணப்படுவார்...அபுல் பாஸலை இரக்கமின்றிக் கொலைசெய்யச் செய்துவிட்டு அதை ஒப்புக் கொண்டும் விடுவார். குளிர்காலத்தில் அரசாங்க யானைகள் தங்கள் மேல் குளிர்ந்த நீரை ஊற்றிக்கொண்டு குளிரில் நடுங்கும்போது அவற்றைப் பார்த்து இரக்கப்படவும் செய்வார் .....ஜஹாங்கீரிடம் இருந்த ஒரு நல்ல பண்பு அவர் இயற்கையை நன்கு அனுபவித்ததும் பூக்களைக் காதலித்ததுமாகும்.' பேரரசரின் கடைசி வரலாற்றாசிரியர் ஒருவரின் கருத்துப்படி, 'அவர் அறிவுணர்ச்சியும் இரக்க உள்ளமும் படைத்தவராய் இருந்தார். குடும்பத்தில் மிகுந்த பாசமுடையவராயும், எல்லாரிடத்திலும் தாராளமான உதாரகுணம் காட்டுபவராகவும், பிறரை நசுக்குவதில் மிக்க வெறுப்பு உடையவராயும், நீதியிடத்துப் பேரார்வம் உடையவராயும் இருந்தார். இளவரசராகவும், பேரரசராகவும் அவர் வாழ்ந்த காலத்தில் ஒரு சில சமயங்களில் தனிப்பட்ட முறையில் கொடுஞ் செயல்கள் புரியுமாறு சினமுற்றதும் உண்டு. அச் சீற்றத்திற்குப் போதிய தூண்டுதலும் இருந்திருக்கும். ஆனால் பொதுவாக அவர் மனத்திண்மை, அன்புடைமை, திறந்த உள்ளம் படைத்தவராகச் சிறந்து விளங்கினார்.' ஃபிரான்சிஸ் கிலாட்வின் (Francis Gladwin) கூட 'ஜஹாங்கீரின் ஆட்சியின் தொடக்கம் முதல் இறுதிவரை, குடிமக்களிடம் அவர் கொண்டிருந்த மன இயல்பு எப்போதும் மனிதத் தன்மையுள்ளதாகவும், கண்ணோட்டமுள்ளதாகவுமே இருந்தது' என்று கூறியிருக்கிறார். பொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான தொல்லை மிக்க சில சுங்கங்களையும், வரிகளையும் நீக்கினார். அலி (eunuchs) களைச் சேரும் புணர்ச்சிக்குத் தடைவிதிக்க முயற்சி செய்தார். நீதியுணர்ச்சி மிக்கு விளங்கினார். 'நான் கொடுத்த முதல் உத்தரவு நீதிச் சங்கிலியை இறுகக் கட்டுவதற்கேயாகும்' என்று அவரே எழுதியிருக்கிறார். அறுபது ஆராய்ச்சி மணிகளைக் கொண்டிருந்த அந்த நீதிச் சங்கிலியை எந்த மிகத் தாழ்மையான குடிமக்களும் தங்களுடைய கஷ்டங்களை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர அஞ்சாது அடிக்கலாம். குற்றவாளியின் உயர் பதவியைப்பற்றி எந்தவிதமான சலுகையுங் காட்டாது அவர் தண்டனைகள் வழங்கினார். இவ்வாறு ஒரு சமயம் செல்வாக்கு மிக்க ஒரு கொலையாளிக்குத் தூக்குத்தண்டனை யளித்துவிட்டு அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்: 'இப்படிப்பட்ட விஷயங்களில் இளவரசர்களுக்குச் சலுகைகள் அளிப்பதையோ அமீர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதையோ கடவுள் தடுக்கட்டும்.' அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் தொடர்பு ஏற்படத் தொடங்கியது.

Koviloor Acadamy

சிறந்த கலைச் சுவை யுணர்வு கொண்டிருந்த அவர், தாம் ஒரு ஓவியராயும், கலை, இலக்கியங்களின் புரவலராயும், இயற்கையின் காதலராயும் இருந்தார். அவருடைய தூஸிக் (Tuzuk-வாழ்க்கைக் குறிப்புகள்) அவருடைய இலக்கியப் பயிற்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. ஆனால் அவர் கட்டுப்பாட்டையிழந்து அளவுக்குமிறிச் சென்றுவிடும் பழக்கமுடையவராய் இருந்தமையின் அது படிப்படியே அவருடைய சிறந்த பண்புகளையெல்லாம் கெடுத்து விட்டது. மேலும் அவருடைய மன இயல்பு அடிக்கடி முரண்பாடாக மாறுபடுவதற்கும் காரணமாய் இருந்தது. ஜஹாங்கிரின் சமயக் கொள்கை தந்தையினுடையதைப் போன்று பகுத்தறிவு வாய்ந்ததாய் இருக்கவில்லை. ஆனால் பிற மதங்களிலுள்ள நல்லவற்றையெல்லாம் தேர்ந்தெடுத்துக் கொள்பவராகவோ, இதயத்தில் ஒரு கிறித்துவராகவோ இருக்கவில்லை. கடவுளிடத்தில் உண்மையான நம்பிக்கை கொண்டிருந்தவராய் அவர் எந்த ஒரு குறிப்பிட்ட மதப் பிரிவையோ மதக் கொள்கைகளையோ வெறுமனே பின்பற்றுவதில் திருப்தி அடையவில்லை. ஆனால் ஒருவகை தெய்வக் கொள்கையினராவர். இந்து, முஸ்லிம் முனிவர்களுடனும், கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களுடனும் உரையாடல் செய்வதில் அவர் பெரு விருப்பங்கொண்டிருந்தார். ஆனால் மதங்களுக்குரிய படங்களை முக்கியமாக கிறிஸ்துவ படங்களை, மதித்துப் போற்றினார். ஆனால் இந்துக்கள், பாரசீகர்கள் (ஸெராஸ்டிரியர்கள்), கிறிஸ்துவர்கள் இவர்களுடைய சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

2. ஷாஜஹான்

அ. சிம்மாசனத்திற்குப் போராட்டம்

ஜஹாங்கிரின் மரணத்திற்குப் பிறகு சிறிது காலம் சிம்மாசன உரிமைக்காகப் போராட்டம் நடந்தது. அவர் 1627 அக்டோபரில் இறந்த போது அவருடைய மகன் ஷாஜஹான் இன்னும் தக்காணத்திலேயே இருந்தார். அவருடைய இரண்டு சகோதரர்கள் குஸ்ராவ், பார்வேஸ் இருவரும் ஏற்கெனவே இறந்துபோய் விட்டபோதிலும் இன்னொருவர் இளவரசர் ஷஹ்ரியார் இருந்தார். தம்முடைய மாமியாரான நூர்ஜஹானின் தூண்டுதலின் பேரில் அவர் லாகூரில் தம்மைச் சக்ரவர்த்தி என்று அறிவித்துக் கொள்வதில் சிறிதும் காலந்தாழ்க்கவில்லை. ஆனால் மும்தாஸ்மஹாலின் தந்தையான ஆஸப்கான் ஷா ஜஹானுக்காகக் திறமையாகப் பாடுபட்டார். மிகவும் விழிப்பாயிருந்த அவர் வடக்கே புறப்பட்டு வரும்படி ஷாஜஹானுக்குச் செய்தியனுப்பினார். அதே சமயத்தில் ஷாஜஹான் வரும்வரை, தலைநகரத்து மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகக் காலஞ்சென்ற இளவரசர் குஸ்ராவின் மகனான இளவரசன் தாவர் பக்ஷைப் (Dawar Bakhbs)

Koviloor Acadamy

பேரரசரின் இடம் நிரப்பும் அரசராகச் சிம்மாசனத்தில் ஏற்றிவைத்தார். மீர்பக்ஷியான (Mir Bakshi) இராதத்கானைத் (Iradat Khan) தம் வசமாக்கிக் கொண்டு ஆஸப்கான் படையுடன் லாகூருக்குச் சென்றார். ஷஹ்ரியாரின் படைகளைத் தோற்கடித்து அவரைக் கைதியாக்கிக் கண்களைக் குருடாக்கினர். ஷாஜஹான் தக்கணத்திலிருந்து ஆக்ராவுக்கு விரைந்து வந்தார். 1628 பிப்ரவரியில் தலைநகரில் அவர் சக்ரவர்த்தியாக அறிவிக்கப்பட்டார். 'அபுல் முஸப்பர் ஷிஹாப்-உத்-தீன் முகம்மது ஸாஹிப்-இ-கிரான் II ஷாஜஹான் பாதுஷா காஸி (Abul Muzaffar Shihab-ud-din Muhammad Sahib-i-qiran II Shah Jahan Padshah Ghazi) என்ற பெரும் பட்டப் பெயரையும் அவர் தரித்துக்கொண்டார். அக்காலத்து வரலாற்றுக் கோப்பாளரால் பொருத்தமுற 'பலி ஆடு' என்று வருணிக்கப்பட்ட இளவரசர் தாவர் பக்ஷ் விரைவில் சிம்மாசனத்திலிருந்து அகற்றப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆனால் பிறகு விடுதலையளிக்கப் பெற்றார். அதன்பின் அவர் பாரசீகத்திற்குச் சென்று அதனுடைய ஷாவின்கீழ் ஊதியம் பெற்று வாழ்ந்து வந்தார். ஷாஜஹான் தமக்கு எதிராக இருக்கும் எல்லாப் போட்டியாளர்களையும் 'உலகத்திலிருந்தே' நீக்கிவிடுவதில் வெற்றி பெற்றார். தம்முடைய புதல்வர்கள் இருவர் தூக்கிலிடப்படுவதையும், மூன்றாமவர் நாட்டை விட்டுத் துரத்தப்படுவதையும் அவர் தம் கண்ணாலேயே பிற்காலத்தில் பார்க்க நேர்ந்தது. அவரே தம் கடைசிக் காலத்தைச் சிறைக் கைதியாகவே கழிக்கவும் நேர்ந்தது.

ஆ. கிளர்ச்சிகள்

அந்தச் சமயத்தில் எல்லாம் பேரரசருக்குச் சாதகமாகவே நடந்தன. அவர் ஆழ்ந்த நன்னம்பிக்கையுடனும் வெற்றியுடனும் தம் ஆட்சியைத் தொடங்கினர். ஆஸப்கானும் மஹாபத்கானும் அவர்கள் செய்த தொண்டுகளுக்காக உயர்ந்த பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர். முதலாமவர் பேரரசின் வஸீர் (Wazir) ஆகவும், பின்னவர் அஜ்மீர்க் கவர்னராகவும் ஆக்கப்பட்டனர்; தம் ஆட்சியின் முதலாவது ஆண்டிலும் இரண்டாவது ஆண்டிலும் முறையே தோன்றிய இரு கிளர்ச்சிகளைப் பேரரசர் எளிதில் அடக்கிவிட்டார். முதலாவது பீர் சிங்கு பந்தேலாவின் (Bir Singh Bundela) மகனும் பந்தேலாவின் தலைவருமான ஜுஜ்ஹார் சிங்கு (Jujhar Singh) என்பவராலும், மற்றது தக்கணத்து முன்னாள்-ராஜப் பிரதிநிதியான பலம் பொருந்திய ஆப்கானியப் பிரபு கான் ஜஹான் லோடி என்பவராலும் செய்யப்பட்டன. பந்தேலாத் தலைவர் விரைவில் தோற்கடிக்கப்பட்டு மலைகளுக்கு ஓடுமாறு விரட்டப்பட்டனர். ஆனால் அவர் அங்கிருந்து கொண்டே 1634 வரை பேரரசுக்குத் தொல்லைகள் விளைவித்துக் கொண்டே இருந்தார். கடைசியில் அவர் பேரரசுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டு அவருடைய நாட்டிலிருந்து போய்விடும்படி கட்

Koviloor Academy

டாயப்படுத்தப்பட்டார். பந்தேலா எழுச்சியைக் காட்டிலும் மிக வலிமை வாய்ந்ததாயிருந்தது கான் ஜஹான் லோடியின் கிளர்ச்சியாகும். அவர் அகமத்நகரின் கடைசி நிலாம் ஷாஹி ஆட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டும், மராத்தியர், ராஜபுத்திரர்களை ஆதரவாளர்களாகக் கொண்டும் கிளர்ச்சி செய்தார். 'முகலாய அரச வம்சத்தின்மீது ஆப்கானியத் தலைவர்கள் கொண்டிருந்த பரம்பரைப் பகைமையைக் கொண்டு செலுத்துவதாய்' இருந்த அவருடைய முயற்சிகள் வெற்றி பெற்றபின் பேரரசுக்குரியவராய் இருந்த தெற்கு மாகாணங்கள் பேரரசுக்கு உரியனவல்லாமற் போயிருக்கும். ஆனால் அந்த இக்கட்டான நிலைமை முற்றிலும் அறிந்து கொண்டிருந்த ஷாஜஹான் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகச் சிறந்த வீரர்கள் அடங்கிய படையை அனுப்பினார். இடத்துக்கு இடம் துரத்தப்பட்டும், கூட்டாளிகளால் கைவிடப்பட்டும், நண்பர்களையும், உறவினர்களையும் போரில் இழந்தும், அந்த ஆப்கானியத் தலைவர் மூன்றாண்டுகளாகப் பேரரசினரை எதிர்த்துக் கடும்போர் புரிந்தார். ஆனால் கடைசியில் காலிஞ்ஜாரின் வடக்கிலிருந்த டால் ஸெஹோண்டாவில் (Tal Sehonda) தோற்கடிக்கப்பட்டு, நான்காம் ஆண்டில் அவருடைய புதல்வர்களான அஸிஸ், (Aziz), ஐமால் (Aimal) ஆகிய இருவருடன் அவரும் துண்டு துண்டாக வெட்டப்பட்டார்.

இ. போர்ச்சுக்கீசியர்களை நடத்திய முறையும், ஹுக்ளியைக் கைப்பற்றுதலும்

அரச ஆணை ஒன்றைக் கொண்டு போர்ச்சுக்கீசியர்கள் வங்காளத்திலுள்ள சத்காஒனில் (Satgaon) கி.பி. 1579ஆம் ஆண்டளவில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். ஹுக்ளியைச் சுற்றிலும் பல பெரிய கட்டிடங்களை எழுப்பிக் கொண்டு படிப்படியாகத் தங்கள் நிலையை வலிமைப் படுத்திக் கொண்டனர். அதன் விளைவாக ஹுக்ளி வாணிகத் துறைக் கண்ணோட்டத்தில் சத்காஒனைவிட மிக முக்கியமான நகரமாகிவிட்டது. ஆனால் அமைதியான வாணிக வேலைகளைக் கவனிப்பதுடன் நின்றுவிடாமல், போர்ச்சுக்கீசியர் சில விரும்பத்தகாத செயல்களையும் மேற்கொண்டு ஷாஜஹானுக்குச் சீற்றம் உண்டாகுமாறு செய்தனர். அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய பொருள் வருவாய்க்கு ஊறு உண்டாகுமாறு இந்திய வாணிகர்களிடமிருந்து, சிறப்பாக அந்தக் காலத்தில் ஒரு முக்கியமான வாணிகப் பொருளாகச் சிறப்படைந்திருந்த புகையிலைமீது, மிக அதிகமான சுங்கம் வசூலித்ததுடன், அவர்கள் வெறுக்கத் தக்க கொடிய பழக்கமான அடிமை வாணிகத்தைத் தொடங்குமளவுக்குக் கொடுமை வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். அடிமை வாணிகத்திற்காகப் பல இந்து அல்லது முஸ்லிம் அநாதைக் குழந்தைகளைத் திருடிக்கொண்டு

Koviloor Academady

சென்று, அவர்களைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றிவிட்டனர். அவர்களுடைய அடாச் செயல் மும்தாஸ்மஹாலின் இரண்டு அடிமைச் சிறுமிகளை அவர்கள் பிடித்துக் கொள்ளுமளவுக்கு முற்றிப் போய்விட்டது. இது ஒன்றே முகலாயப் பேரரசரின் கடுஞ்சினத்தை மூட்டுவதற்குப் போதுமானதாய் இருந்திருக்கவேண்டும். இயேசு சங்கத்தைச் சேர்ந்த சில பாதிரிமார்கள் இந்தியர்களைக் கிறிஸ்துவர்களாக மாற்றிவந்தமையும் போர்ச்சுக்கீசியருக்கு எதிராக அவருக்குப் பெரு வெறுப்பு ஏற்படும்படி செய்தது. பட்டத்திற்கு வந்ததும் ஷாஜஹான், காஸிம் அலிகானை (Kasim Ali Khan) வங்காளக் கவர்னராக நியமித்துப் போர்ச்சுக்கீசியர்களுக்குத் தண்டனை கொடுக்கும் கடைமையையும் பொறுப்பையும் அவருக்கு அளித்தார். அதனால் காஸிம் அலிகானின் மகனுடைய தலைமையின்கீழ் ஒரு பெரும் படை 1632 ஜூன் 24ஆம் தேதி ஹூக்ளியை முற்றுகையிட்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு அதைக் கைப்பற்றியது. அரசவை வரலாற்று நிகழ்ச்சிக் கோப்பாளரான அப்துல் ஹமீத் லாஹூரி மூலம் நாம் அறிந்துகொள்வது போலப் போர்ச்சுக்கீசியர்களில் பலர் கொல்லப்பட்டனர். மிகுந்த எண்ணிக்கையுடைய போர்ச்சுக்கீசியர்கள் சிறைபிடிக்கப்பட்டு ஆக்ராவுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கே அவர்கள் மிகப் பெருந்துன்பங்களை அடைந்தனர்.

ஈ. தக்கணத்திலும் குஜராத்திலும் பஞ்சம் 1630-1632

ஷாஜஹான் ஆட்சியின் நான்காம், ஐந்தாம் ஆண்டுகளில் அஞ்சத்தக்க மிகக் கொடிய ஒரு பெரும் பஞ்சம் தக்கணத்தையும், குஜராத்தையும் பாலைவனமாக்கியது. அஞ்சத்தக்க அழிவை உண்டாக்கிய அப்பஞ்சத்தின் கொடுமைகளைப்பற்றி அப்துல் ஹமீத் லாஹூரி இவ்வாறு வருணித்துக் கூறியுள்ளார். ‘இந்த இரு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் இல்லாமை என்னும் உச்சிக்கே சென்று விட்டனர். ஒரு ரொட்டித் துண்டுக்காகத் தம்மையே விற்க முன் வந்தனர். ஆனால் வாங்குவார் ஒருவரும் இல்லை. ஒரு கேக்குக்காக உயர் பதவி விற்கப்பட்டது. ஆனால் ஒருவரும் அதைப்பற்றி அக்கறைப்படவில்லை. வரையாது வழங்கி வந்த கைகள் உணவுக்காகப் பிச்சையெடுக்க நீட்டின. எப்போதும் மன நிறைவு என்னும் பாதையில் நடந்து வந்த பாதங்கள் உயிரோடிருந்தால் போதும் என்ற நிலையில் உணவைத் தேடி அலைந்தன. நீண்ட காலமாக ஆட்டிறைச்சிக்குப் பதிலாக நாயின் இறைச்சி விற்கப்பட்டு வந்தது. இறந்தவர்களின் எலும்புகள் அரைக்கப்பட்டுத் தூளாக்கி மாவுடன் கலந்து விற்கப்பட்டன. இது கண்டு பிடிக்கப்பட்டபோது அப்படி விற்றவர்கள் நீதியின் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். மனிதர்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்கும் அளவுக்கு, இல்லாமையாகிய பஞ்சம் உச்சநிலையை அடைந்திருந்தது. மகனுடைய அன்பைக் காட்டிலும் அவ

Koviloor Academy

றுடைய உடலிறைச்சியையே தந்தை விரும்பினுர். பாதைகளில் பிணமாக விழ்ந்து கிடந்தோர்களால் போக்குவரத்துக்குத் தடை ஏற் பட்டது. அளவிலாக் கொடுந்துன்பங்கள் உற்றும் உயிர் போகப் பெருமல் இருந்த ஒவ்வொருவரும் பிற நாடுகளின் சிற்றூர்களுக்கும் நகரங்களுக்கும் நாடோடிகளாகச் சென்றனர்.' பஞ்சம் தலைவிரித் தாடும் போது பிட்டர் மண்டி (Peter Mundy) என்ற ஓர் ஆங்கிலவணி கர் வியாபாரத்திற்காகச் சூரத்திலிருந்து ஆக்ராவுக்கும், பாட்னுவுக் கும் போய் வந்தவர் கூடப் பஞ்சத்தின் கொடுமைகளைப் பற்றி விரி வான செய்திகளை எழுதிவைத்துச் சென்றிருக்கிருர்.

உ. வடமேற்கு எல்லைக் கொள்கை

முக்கிய மாகாணமான காந்தகாரை மீட்டுவிடவேண்டும் என்று ஷாஜஹான் தீர்மானித்தார். அம்மாகாண மில்லாமல் வடமேற்கு எல்லையில் முகலாயரின் நிலை சிறிது பலவீனமாகவே இருந்தது. தந்திர மான பேச்சு வார்த்தைகள் மூலம் அவர் காந்தகாரின் பாரசிகக் கவர்னரான ஆலிமர்தான் கானை (Ali Mardan Khan) ஷாவுக்கு விசு வாசமாயிருப்பதினின்று திரும்பித் தம் பக்கம் சேர்த்துக்கொண்டு கோட்டையை முகலாயர்களுக்கு ஒப்படைத்துவிடுமாறு அவரைத் தூண்டினுர். ஆலி மர்தான் முகலாயப் பேரரசு ஊழியத்தில் புகுந்தார். பணமும் மதிப்பும் அளித்துச் சிறப்பிக்கப் பெற்றுர். ஆலிமர்தான் கானின் செயலால் காந்தகாரைப் பாரசிகம் இழந்தது. ஆனுல் முகலா யர்கள் அதை நீண்ட காலம் வைத்திருக்க முடியவில்லை. பாரசீகர்கள் தங்கள் சக்தி வாய்ந்த அரசர் இரண்டாம் ஷா அப்பாஸ் தலைமையில் 1648 ஆகஸ்டு மாதத்தின் குளிர் காலத்தில் காந்தகாரைத் தாக்கு வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். குளிர் காலத்தில் முகலாயர்கள் இந்தியாவிலிருந்து மேன் மேலும் படைகளைக் கொண்டு வர முடியாத படி பனி விழ்ச்சி தடுத்துவிடும் என்று கருதினர். ஷாஜஹானின் அமைச்சர்கள் குளிர்காலம் போகும் வரை பாரசிகர்களை எதிர்ப்பதை ஒத்திப் போடும்படி ஆய்ந்து பாராது அறிவுரை கூறினர். 'பகைவ ளைப் புறக்கணிப்பதனுல் நேரக் கூடிய இயல்பான விளைவு நேர்ந்தது. ஷாஜஹானின் அமைச்சர்கள் நம்பிக்கையை வளர்த்து வைத்திருந்த எல்லா இடர்ப்பாடுகளையும், குளிர்காலத்தின் கொடுமையையும், தம் படைக்கு வேண்டிய பொருள்களின் குறைவையும் சமாளித்துப் பாரசிக அரசர் வெற்றிபெற்று ஓங்கினுர்.' 1648 டிசம்பர் 16ஆம் தேதி காந்தகாரை முற்றுகையிட்டார். முக்கியமாகக் காந்தகாரின் முகலா யக் கவர்னரான தௌலத்கானின் பல வீனத்தால் கி. பி. 1649 ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி முகலாயக் கோட்டைப்படை கடைசி யில் சரணடைய நேர்ந்தது. மே மாதம் தொடக்கத்தில் காந்தகாரை மீட்பதற்காக முயற்சி செய்யும்படி இளவரசர் அவுரங்கசிப் தலைமை யமைச்சர் சாதுல்லா கானுடன் (Sadullah Khan) அனுப்பப்பட்டார்.

Koviloor Acadamy

அம்மாதம் 16 ஆம் தேதி அவுரங்கசீப் காந்தகாரைத் தாக்கினர். ஆனல் பாரசீகர்களின் திறமையினுலும், மேலான படைத்துறை ஏற்பாடுகளாலும் அந்த முயற்சி தோல்வியுற்றது. எனினும் ஷாஜஹான் காந்தகாரை மீட்டும் வெல்வதற்கான தம் திட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. அவர் மூன்று ஆண்டுகள் ஏற்பாடுகளைச் செய்த பிறகு கோட்டையைப் பிடிக்கும் முறையில் பயிற்சி பெற்ற பலம் வாய்ந்த படையெடுப்பிற்குரிய படையை மீண்டும் அவுரங்கசீப் சாதுல்லாகான் தலைமையில் காந்தகாருக்கு அனுப்பிவிட்டுத் தாமும் போர்த்தளவாடங்களையும், வீரர்களுக்கு வேண்டிய பொருள்களையும் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் காபூலில் தங்கியிருந்தார். 1652 மே 2ஆம் தேதி பேரரசுத் தளபதிகள் காந்தகாரைத் தாக்க முற்பட்டனர். கோட்டையில் விரிசல் ஏற்படுத்தாமல் கோட்டையின் மேல் தாக்குதலைச் செய்யக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவுகளை அவர்கள் தங்கள் தலைவரிடமிருந்து பெற்றிருந்தனர். ஆனல் பாரசீகர்களின் தரம் மிக்க பீரங்கிப் படைக்கு முன்பு வலிமை குறைந்த தங்கள் பீரங்கிகளின் மூலம் கோட்டையில் விரிசல் ஏற்படுத்த அவர்களால் முடியவில்லை. இவ்வாறு இந்தத் தடவையும் முகலாயத் துருப்புகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அதனுல் ஷாஜஹான் முற்றுகையைக் கைவிட்டுவிடுமாறு கட்டளையிட நேர்ந்தது. பேரரசரின் மூத்த புதல்வரும், செல்லப்பிள்ளையுமான தாராஷுக்கோவினல் (Dara Shukoh) (இப்போது ஷா புலந்து இக்பால் (Shah Buland Iqbal) அல்லது ' அதிர்ஷ்டம் மிக்க அரசர் என்ற பட்டப் பெயரால் உயர்த்துக் கூறப்படுபவர்) அடுத்த ஆண்டு செய்யப்பட்ட மூன்ருவது முயற்சியும் அவருடைய சகோதரரின் முயற்சியைப் போலவே துரதிர்ஷ்டத்தில் முடிந்தது. நன்மை பயப்பதற்காகவே காந்தகார் முகலாயர்களின் கையிலிருந்து போய்விட்டது. எனினும் ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில் அதை மீட்பதற்காகச் செய்த படையெடுப்புகளுக்குப் பன்னிரண்டு கோடி ரூபாய்க்குக் குறையாமல் செலவாயிற்று. அதாவது அரசாங்கத்தின் ஆண்டுவருமானத்தில் பாதிக்குமேல் செலவாயிற்று. மேலும் விலையுயர்ந்த உயிர்களும் இழக்கப்பட்டன. மேலும் காந்தகாருக்கு முன்பு திரும்பத் திரும்ப முகலாயப் படைகள் தோல்வியுற்றதால் பேரரசின் மதிப்பும் பெருமையும் பேரளவிற்குப் பாதிக்கப்பட்டன.

ஊ. மத்திய ஆசியக் கொள்கை

முகலாயர்களின் மத்திய ஆசியப் படையெடுப்புகளும் பேரிழப்பிலேயே முடிந்தன. ஷாஜஹானும், தம் தந்தையையும் பாட்டனரையும் போலவே மத்திய ஆசியாவில் இருந்த தம் மூதாதையரின் பழைய பகுதிகளை மீண்டும் வெல்லலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார். தம்முடை ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்தே தம் குடும்பத்

Koviloor Academy

தின் பரம்பரை உரிமைப் பகுதிகளாகிய பால்க் (Balkh), படக்ஷான் (Badakhshan) ஆகிய பகுதிகளை வெல்வது எப்படி என்பதிலேயே பேரரசரின் உள்ளம் ஈடுபட்டிருந்தது. 'அப்பகுதிகள் அவருடைய பெரிய முதாதையார் தைமுரின் சொந்த ஊரும், தலைநகருமான சாமர்க் கண்டைப் பெறுவதற்குச் சாவிகளாகவும் இருந்தன' என்று அப்துல் ஹமித் லாஹுரி எழுதுகிறுர். ஆனுல் மாபெரும் இந்துகுஷ் மலைத் தொடர்களைத் தாண்டிப் பெரும் படையை நடத்திச் செல்வதில் பெருந் துன்பங்கள் ஏற்படும். மேலும் அவ்வெற்றியால் இந்தியாவிலுள்ள முகலாயப் பேரரசுக்குப் பயன் ஏதேனும் ஏற்படுமா என்பதும் ஐயத்திற்கிடமாய் இருந்தது. எனினும் ஷாஜஹான் இதைப்பற்றி எல்லாம் ஆராயவில்லை. 'அவருடைய ஆட்சியின் செல்வச் செழிப்பும் அவருடைய அமைச்சர்களின் புகழ்ச்சி யுரைகளும் அவருடைய தலையைக் கனக்க வைத்தன. அதனுல் அவர் மிக மிக வினுேத கனவுகளைக் கண்டு கொண்டிருந்தார்.' 1646-ல் ஆக்ஸஸ் (Oxus) பகுதியிலுள்ள ஆளும் குடும்பத்தில் உள்நாட்டுச் சண்டை எழுந்தது. அதனுல் சாதகமான சூழ்நிலைகள் முகலாயருக்கு ஏற்பட்டது. எனவே, இந்துகுஷுக்கும் ஆக்ஸஸுக்கும் இடையே எல்லை யோரத்தில் இருந்த பால்க், படக்ஷான் என்ற இடங்களை இளவரசர் முராதும், அலிமர்தானும் கைப்பற்றிக் கொண்டனர். ஆனுல் இந்த வெற்றிகளை ஒருநிலைப்படுத்தல் என்பது முடியாததாய் இருந்தது. பால்க்கின் வசதியற்ற தட்பவெப்ப நிலையாலும், வேறு துன்பங்களாலும், தந்தையின் விருப்பத்துக்கு மாருக இளவரசர் முராது அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பி விட்டார். அதற்காகத் தந்தையாரால் இழிவு படுத்தப்பட்டார். வஸுரான சாதுல்லாகான் நிலைமையைச் சரிபடுத்துவதற்காகப் பால்க்குக்கு அனுப்பப்பட்டார். அடுத்த ஆண்டு தம் வெற்றிகளைக்கைவிட்டு விடக்கூடாதென்று தீர்மானித்து ஒரு பெரும் படையுடன் பால்க்குக்கு அவுரங்கசிப்பை அனுப்பி வைத்தார். ஆனுல், அப்போது உஸ்பெக்குகள் ஒன்று திரண்டு தேசிய அடிப்படையில் முகலாயர்களை எதிர்த்தனர். அவுரங்கசிப் மிகவும் உண்மையாகவும் ஊக்கமாகவும் முயற்சிகள் செய்தும், அந்த எதிர்ப்புக்கு முன்னுல் எதுவும் செய்து முடிக்க முடியாதவராகிப் பலவிதமான கடுந்தொல்லைகளுக்கு உள்ளாகிப் பின் இந்தியாவுக்குத் திரும்பிவர நேரிட்டது. மத்திய ஆசிய படையெடுப்பு முகலாய பேரரசுக்கு அளவிட முடியாத ஆட்சேதத்தையும் பொருட் சேதத்தையும் விளைவித்தது. சர். ஜே. என் சர்க்கார் (Sir J. N. Sarkar) 'இவ்வாறு ஷாஜஹானின் முட்டாள் தனமான பால்க் போர் முடிவுற்றது. இப்போரில் இந்தியக் கருவூலம் இரண்டாண்டுகளில் நாலு கோடி ரூபாய்களைச் செலவிட்டது. ஆனுல் வெற்றி பெற்ற நாட்டிலிருந்து 22½ லட்சம் பொருள் வருவாயே கிடைத்தது. பால்க்கின் ஓர் அங்குலம் கூட பிற இராச்சியத்துடன் இணைக்கப்படவில்லை. அரச மரபும் மாறவில்லை; பால்க்கின் சிம்மாசனத்தில் வேறு எந்த எதிரியும் வந்து அமரவில்லை. பால்க் கோட்டையில் சேமித்து வைக்கப்

Koviloor Acadamy

பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபாய் பெறுமான தானியங்களும், மற்றக் கோட்டைகளில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பல பொருள்களும் எல்லாம் புகாரியர்களுக்கே கொடுத்து விடப்பட்டன. மேலும் மொத்தத் தொகையாக 50,000 நாஸர் முஹம்மதுவின் (Nazar' Muhammad) பேரர்களுக்கும், ரூ. 22,500 தூதர்களுக்கும் கொடுக்கப்பட்டன. ஐந்நூறு வீரர்கள் போரில் உயிர் துறந்தனர். அதை விடப் பத்துமடங்கு வீரர்கள் (பாசறை வீரர்கள் உள்பட) மலைகளில் மிகுந்திருந்த பனியாலும், குளிராலும் கொல்லப்பட்டனர். வடமேற்கு எல்லையைத் தாண்டி ஆக்கிரமிப்பு மிக்க பேரரசு செய்த போர்களுக்காக இந்தியா இவ்வளவு பயங்கரமான விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது' என்று கூறுகிறார்.

எ. ஷாஜஹானும் தக்கண நாடுகளும்

தக்கண நாடுகள் முழுவதும் அக்பரால் அடிப்படுத்தப்படவில்லை என்று நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஷாஜஹானும் தெற்கே தம் இராச்சியத்தை விரிவுபடுத்தும் மரபுக் கொள்கையை மேற்கொண்டார். அக்பர் காந்தேஷை மட்டும் வென்றார். பேரரசின் ஒரு பகுதியைத் தம் இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டார். அகமத் நகரை வெல்லுவதற்கு ஜஹாங்கீர் செய்த முயற்சி அந்நகரின் திறமை வாய்ந்த அமைச்சர் மாலிக் ஆம்பரால் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டு விட்டது. பீஜப்பூரும் கோல்கொண்டாவும் சுதந்திரமாகவே இருந்தன. தீபகற்பம் முழுவதையும் முகலாயப் பேரரசு வெல்ல வேண்டுமாயின் இன்னும் சாதிக்க வேண்டியிருந்தவை எவ்வளவோ இருந்தன.

தெற்கே அகமத்நகரின் நிஸாம் ஷாஹி இராச்சியம் முகலாய எல்லைக்கு அருகிலேயே இருந்ததால் அதுவே முகலாயப் படைகளின் கவனத்தை முதலில் உணர்ந்தது. 1626-ல் ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் முகலாயப் படையின் தாக்குதலிலிருந்து அகமத் நகரை காத்த ரட்சகரான மாலிக் ஆம்பர் இறந்தபிறகு அந்த இராச்சியம் பலவீன நிலையை அடைந்தது. சுல்தானுக்கும் அவருடைய அமைச்சரும், பெருந்தன்மை மிக்க அபீசீனியரான மாலிக் ஆம்பரின் தகுதியற்ற புதல்வருமான பதேகானுக்கும் (Fateh Khan) மன வேறுபாடுகள் இருந்து வந்தமையின், சில ஆண்டுகளுக்குள் அந்த இராச்சியம் முகலாயரின் பிடிக்குள் அகப்பட்டுவிட்டது. 1630-ல் அகமத் நகருக்குச் சேர்ந்த வலிமை வாய்ந்த கோட்டையான பரேந்தாவைக் கைப்பற்ற முயன்று தோற்றனர். ஆனால் சுல்தான் நிஸாம்-உல்-முல்க்குடன் மனவேறுபாடுற்ற பதேகான் முகலாயப் பேரரசருடன் ஒப்பந்தப் பேச்சு நடத்தத் தொடங்கினார். பேரரசரின் யோசனையின் பேரில், அவர் தம்முடைய தலைவரை மறைவாகத் தொலைத்து விட்டார். தம்முடைய சொந்தச் செல்வாக்கை நிலையாக்குவதற்காகப் பத்தே

Koviloor Acadamy

வயதான நிஸாம்-உல்-முல்க்கின் மகன் ஹுஸேன் ஷாவைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். முகலாயர்களுடன் கொண்ட நட்புறவில் அவர் உண்மையாகவே இருக்கவில்லை. 1631-ல் முகலாயர்கள் தௌலதாபாத்துக் கோட்டையைக் முற்றுகை யிட்ட போது முதலில் அவர் அவர்களுக்கு எதிராகச் சென்ருர். ஆனுல் அவர்கள் அவருக்குப் பத்தரை லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுத்துத் தங்கள் பக்கத்திற்கு அவரை இழுத்துக் கொண்டனர். அவர் கோட்டையை அவர்களுக்கு விட்டுவிட்டார். இவ்வாறு அசீர்கார் தங்களுக்குக் கொடுக்கப்படுவதற்கு மேற்கொண்ட அதே தகாத வழிகளைப் பயன்படுத்தி முகலாயர்கள் தௌலதாபாத்தையும் அடைந்தனர். கி.பி. 1633-ல் அகமத்நகர் முகலாயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. பெயரளவில் அரசனுயிருந்த ஹுஸேன் ஷா ஆயுள்தண்டனை கொடுக்கப்பட்டு குவாலியர்க் கோட்டையிலே சிறைவைக்கப்பட்டார். இவ்வாறு நிஸாம் ஷாஹிகளின் அரசவம்சம் அழிவுற்றது. எனினும் புகழ்பெற்ற சிவாஜியின் தந்தையான ஷாஜி 1635-ல் அந்த அரச மரபிற்குப் புத்துயிர் கொடுக்க முயன்ருர். ஆனுல் முடிய வில்லை. முகலாயர்களுக்குச் செய்த உதவிக்குப் பரிசாக பதேகான் பேரரசின் ஊழியத்தில் உயர்ந்த சம்பளத்தில் அமர்த்தப்பட்டார்.

ஷியாமதப் பிரிவைச்சேர்ந்த கோல்கொண்டா, பீஜப்பூர் நாடுகள் சுதந்தரமாய் இருந்தமை ஷா ஜஹானின் பேரரசாண்மைக்கும் மதப்பற்றுக்கும் மானக்கேடாக இருந்தது. பேரரசின் படைகள் 1629-லும் 1631-லும் முறையே அப்பகுதிகளுக்குள் புகத்தலைப்பட்டு விட்டனர். நிஸாம் ஷாஹியின் பையனை அப்போது மறைந்து விட்ட அகமத்நகர் இராச்சியத்துக்கு பேரளவில் அரசனுய் வைத்திருக்க வேண்டும் என்று முயற்சி செய்த ஷாஜிக்கு 1635 ஆம் ஆண்டில் அந்த இருநாடுகளின் அரசர்களும் மறைமுகமாக உதவிய பொழுது, முகலாயப் பேரரசர் அவர்களிடம் தம்முடைய மேலாண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், கப்பத்தை ஒழுங்காக அனுப்பிவிட வேண்டும் மென்றும், ஷாஜிக்கு உதவி செய்வதிலிருந்து நீங்க வேண்டுமென்றும் கூறினர். தம்முடைய வேண்டுதல்களை வற்புறுத்துவதற்காக அவரே தக்கணத்துக்கு வந்தார். 1636 பிப்ரவரி 21ஆம் நாள் தௌலதாபாத்தை அடைந்ததும் தக்கண நாடுகளைத் தாக்குவதற்காகத் தீவிர ஏற்பாடுகளைச் செய்தார். அவற்றைக் கண்டு கிலியுற்ற கோல்கொண்டாச் சுல்தான் அப்துல்லாஷா, ஷாஜஹாவின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார். பேரரசருக்கு ஆண்டுதோறும் கப்பங்கட்டுதல், நாணயங்கள் அடித்தல், அவருடைய பெயரில் குத்பா படித்தல் முதலிய விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க இசைந்தார்.

ஆனுல் பிஜப்பூர் சுல்தான் ஆதில் ஷா பேரரசுக் கட்டளைக்கு அடிபணிய மறுத்துத் தம்முடைய உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்

Koviloor Acadamy

வதற்காகத் துணிந்து நின்றார். மூன்று முகலாயப் படைகள் மூன்று பக்கங்களிலிருந்து அவருடைய இராச்சியத்தைத் தாக்கின. ஒரு படை கானி தௌரானின் (Khan-i-Dauran) தலைமையில் வட கிழக்கில் பீடாரிலிருந்தும், வேறொரு படை கானிஜஹான் தலைமையில் மேற்கில் ஷோலாப்பூர் (Sholapur) வழியாகவும், மூன்றாம்படை கானிஸ்மான் தலைமையில் வட மேற்கில் உள்ள இந்துப்பூர் வழியாகவும் தாக்கின. பகைவர்கள், பொருள்கள் எவையும் வராதபடி தடுத்தல், கிணறுகளை இடித்தழித்தல், கிணற்றுநீரில் நஞ்சுகலந்துவிடல் போன்ற பழங்கால மரபுவழிகளை மேற்கொண்டும் பீஜப்பூர் வீரர்கள் வீரத்துடன் தங்கள் தலைநகரைக் காத்து நின்றனர். அவர்களுடைய இராச்சியத்தின் எஞ்சிய பகுதி எல்லாம் முகலாயர்களால் சூறையாடப்பட்டு அழிக்கப் பட்டன. இவற்றால் சுல்தான் சமாதானத்திற்கே வரவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். 1636 மே மாதத்தில் அமைதிகாண் உடன்படிக்கை செய்துகொண்டனர். முகலாயப் பேரரசரின் மேலாண் மையை அவர் ஒப்புக்கொண்டார்; பேரரசருக்குக் கப்பங் கொடுக் கவும் ஒப்புக்கொண்டார். அப்போது பேரரசரின் கீழிருந்த கோல் கொண்டாவைத் தாக்கக் கூடாது என்றும் அவர் கட்டளையிடப் பட்டார். மூதாதையரின் இராச்சியத்தை வைத்துக்கொள்ள அனு மதிக்கப்பட்டதுடன் அகமத்நகர் இராச்சியப் பகுதிகளில் சிலவற்றை யும் பெற்றார். தத்தம் அதிகாரிகளை லஞ்சம் முதலியன கொடுத்து வசப்படுத்தக் கூடாது என்று இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர். சுல்தான் ஷாஜிக்கு உதவுவதோ, பாதுகாப்புக்கொடுப்பதோ கூடாது என்றும் வற்புறுத்தப்பட்டது. சர். ஜே. என். சர்க்கார் எழுதுகிறார்: 'இவ்வாறு நாற்பது ஆண்டுப் பேராட்டத்துக்குப் பிறகு (1595-1636) தக்கணத்துச் சிக்கல் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தன. எதிர்த்துக் கூறமுடியாதபடி பேரரசரின் நிலை உறுதியாக்கப்பட்டது; அவரு டைய ஆட்சிக்குட்பட்ட நாட்டின் எல்லை தெளிவாக வரையறுக்கப் பட்டது. தெற்கு இராச்சியங்களின்மேல் அவருடைய மேலாண்மை முறைப்படி நிலை நிறுத்தப்பட்டது. 1636 ஜூலை 11ஆம் நாள் பேரரசர் தக்கணத்தை விட்டுச் சென்று, அப்போது பதினெட்டு வயதுக் காளையாயிருந்த தம்முடைய மூன்றாவது மகனான அவுரங்க ஸிபை முகலாய தக்கணத்துக்கு இராசப் பிரதிநிதியாக அனுப்பி வைத்தார். அப்போது முகலாயத் தக்கணம் காந்தேஷ், பீரார், தெலிங்கானா, தௌலதாபாத் என்ற நான்கு மாகாணங்கள் அடங்கிய ஓரளவு பரந்த எல்லைப் பரப்புடையதாய் இருந்தது. ஓர் ஆண்டுக்கு ஐந்து கோடி வருமானம் தருவதாக மதிப்பிடப்பட்டது. அது அறுபத்து நான்கு மலைக்கோட்டைகளைப் பெற்றிருந்தது. அவற்றுள் சில இன்னும் ஷாஜி போன்ற வேறு சில பகைவர்களான தலைவர்களி டம் இருந்தன.

Koviloor Acadamy

இளம் இராசப் பிரதிநிதி எதிரிகளை அடக்குவதிலேயே தீவிரமாக ஈடுபட்டார். காந்தேஷுக்கும் சூரத் கடற்கரைக்கும் இடையே இருந்த பாக்லானு மாவட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டார். ஷாஜியைத் தமக்கு அடிபணியுமாறும், சில கோட்டைகளை விட்டுவிடுமாறும் வற்புறுத்தினர். அக்காலத்தில் ஒரு முகலாய அதிகாரியாக வேலையில் அமர்ந்திருந்தவரும், பாரசீக அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான ஷா நவாஸ்கான் (Shah Nawaz Khan) என்பவரின் மகளான தில்ராஸ் பானு பேகம் (Dilras Banu Begam) என்பவளை மணந்து கொள்வதற்காக 1637-ல் அவுரங்கசீப் ஆக்ராவுக்குச் சென்றார். ஆனால் போதிய பொருள்வசதி இல்லாமையால் தக்கண ஆட்சி முறையில் பெருந் தொல்லைகளுற்றார். மேலும் அவருடைய சகோதரரான தாரா ஷுக்கோவின் தலைமையில் ஒரு பகைமைக்கட்சியும் அவருக்குத் தொல்லை கொடுத்து வந்தது. 1644ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மிகக் கடுமையாகத் தீப்புண்பட்டிருந்த தம்முடைய அன்புக்குப் பாத்திரமாயிருந்த ஜஹானாராவைப் பார்ப்பதற்காக ஆக்ராவுக்குச் சென்றார். ஆரிப்[1] என்ற பெயருடைய அடிமை ஒருவரால் தயாரிக்கப்பட்ட களிம்பு ஒன்றின் மூலம் அந்த ஆண்டு நவம்பர் மாதம் அவருடைய சகோதரி முழுக்குணம் அடைந்தாள். ஆனால் ஆக்ராவுக்கு வந்த மூன்று வாரங்களுக்குள் சில சூழ்நிலைகளால் அவுரங்கசீப் தம் பதவியை விட்டு விலக நேர்ந்தது. 'அவருடைய முட்டாள் தோழர்களின் தீய அறிவுரைகளால் தூண்டப்பட்டு அவர் ஒரு துறவியின் துறவு வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினர்; பேரரசர் விரும்பாத செயல்களையும் செய்தார்' என்று அப்துல் ஹமீத் லாஹுரி எழுதியுள்ளார். காபிகானின் (Khafi Khan) கருத்துப்படி 'அவுரங்க சீப் தம்முடைய தீய செயல்களுக்காகத் தந்தையின் தண்டனையை எதிர்பார்த்துத் தாமே வாளை உதறி எறிந்து விட்டுச் சில நாட்கள் ஒரு துறவியைப் போல வாழ்ந்தார்.' அதுதான் தக்கண இராசப் பிரதிநிதிப் பதவியிலிருந்து அவர் ஓய்வெடுத்துக் கொண்டதற்குக் காரணமாகும். ஆனால் அவுரங்கசீப்பின் கடிதங்களிலிருந்து உண்மையான காரணம் அறியப்படுகிறது. தமக்கு எதிராகத் தாரா ஷுக்கோ நிரந்தரமாகப் பகைமை பாராட்டி வந்ததாலும், பேரரசர் அவருக்குச் செல்வம் கொடுத்துத் தனிப்பட்டவகைகள் உரிமைகள் வழங்கியதாலும், அவுரங்கசீப் தக்கணத்தில் ஆட்சியைச் செலுத்துவது கடினமானதென உணர்ந்தார். தம்முடைய தன்மானத்திற்கு இழுக்குவராமல் காப்பதற்காவே வெறுப்புடன் அவர் வேலையை விட்டு விலகினர்.

[1]கேப்ரியல் போடன் (Gabriel Boughton) என்ற ஓர் ஆங்கில மருத்துவர் ஜஹானாராவைக் குணப்படுத்தினர் என்ற கதை உண்மையன்று என்பது சர் வில்லியம் பாஸ்டராலும் (Sir William Foster). இந்தியன் ஆண்டிக்வரி 1911 (Indian Antiquary, 1911) டாக்டர் ஸ்மித்தினலும் (ஆக்ஸ் போர்டு ஹிஸ்டரி, பக் 401) (Simth Oxford History) காட்டப்பட்டுள்ளன.

Koviloor Acadamy

தக்கண அரசப் பிரதிநிதி பதவியை வேண்டாமென்று உதறி விட்ட பிறகு, அவுரங்கசீப் 1645 பிப்ரவரியில் குஜராத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். பிறகு நாம் பார்த்தபடி தோல்வியில் முடிந்திருந்த பால்க், படக்ஷான், காந்தகார்ப் படையெடுப்பை மீண்டும் மேற்கொள்ளுமாறு செய்யப்பட்டார். காந்தகாலிரிருந்து திரும்பிவந்த பிறகு, தாரா ஷுக்கோவின் பகைமைச் சூழ்நிலையால் அவுரங்கசீப் அரசவையில் பாதுகாப்பாகவோ, மதிப்பாகவோ தங்கியிருக்க முடியவில்லை. அதனால் அவர் கி.பி. 1653ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இரண்டாம் முறையாகத் தக்கண இராசப் பிரதிநிதியாகப் அனுப்பப்பட்டார். 1653 நவம்பரிலிருந்து தௌலதாபாத் அல்லது அவுரங்காபாத்து அவருடைய அரசாங்கத்தின் தலை நகரமாயிருந்துவரலாயிற்று.

அவுரங்க சிப்பினால் செய்யப்படவேண்டிய வேலை மிக மிகக் கடினமாயிருந்தது. அவருடைய ராஜிநாமாவுக்குப் பிறகு 'குறுகிய காலங்களுக்குத் தகுதியில்லாத பல இராசப் பிரதிநிதிகள் ஆட்சிக்கு வந்தமை' யால், தக்கண ஆட்சி மிகவும் குழப்பமாகப் போயிருந்தது. அதனுடைய பொருளாதார நிலையும் மிகவும் சீர்குலைந் திருந்தது. நிலையான பொருளாதாரப் பற்றுக்குறையுடன் ஆட்சி நடைபெற்று வந்தது. பற்றுக்குறையைச் சரிப்படுத்தப் பேரரசின் கருவூலத்திலிருந்து பணம் எடுக்கவேண்டியிருந்தது. ஆனால் இப்படிச் செய்வது உண்மையில் ஒரு தொலைநோக்கில்லாக் கொள்கையாகும். அதனால் தக்கணத்தின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்தி உயர்த்துவதே அவுரங்கசீப்பின் முதல் வேலையாய் இருந்தது. குடியானவர் களின் நலன்களைக் கருதி உழவுத் தொழில் செழிப்படைவதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டார்; சில பொருள் வருவாய்க் குரிய முறைகளையும் மேற்கொண்டார். பொருள் வருவாய்க்காக அவர் மேற்கொண்ட முறைகள் அவருடைய ஆட்சி எல்லையில் பொருளாதாரத்தை வளர்ந்தோங்கச் செய்ததுடன் தக்கணத்தில் நில அமைப்புகளின் வரலாற்றில் அவர் இராசப்பிரதிநிதியாக இருந்து ஆற்றிய தொண்டு அவருக்குப் புகழைத் தேடித்தந்தன. நல்ல வேளையாக அவருக்கு முர்ஷித் குலிகான் (Murshid Quli Khan) என்ற பாரசிகப் பொருள் வருவாய்த் துறையின் அதிகாரியின் விலை மதிக்க இயலா உதவியும், அறிவுரையும் கிடைத்தன. ஆலி மர்தான் கானின் கூட்டத்தில் முதலில் சேர்ந்திருந்த முர்ஷித் குலி அவுரங்கசீப்புடன் தௌலதாபாத், தெலிங்கானா ஆகியவற்றின் திவானாக வந்தார். பிறகு பீரார், காந்தேஷ் முதலியவற்றின் திவானாகவும் பதவிவுயர்வு பெற்றார் நில வருமானத்தை வசூல் செய்வதற்காகத் தக்கணம் பைங்காட். (Painghat) அல்லது கீழ்ப்பிரதேசம் என்றும், பலாகாட் (Balaghat) அல்லது மேல் பிரதேசம் என்றும் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் வகைப் பிரதேசம் காந்தேஷ் முழுவதையும், பீராரின் ஒரு

Koviloor Academy

பகுதியையும் உள்ளடக்கி யிருந்தது. அடுத்தது இராசப் பிரதிநிதி யின் கண்காணிப்பில் மற்றப் பகுதிகளைக் கொண்டிருந்தது. தக்காணப் பொருளாதார நிலைகளைச் சீரமைத்ததுடன், முர்ஷித் குலி அங்கே தோடர்மாலின் நில அளவு, வரிவிதிப்பீட்டு முறைகளையும் மேற் கொண்டார். இடங்களின் நிலைமைகளுக் கேற்ப அம்முறைகளில் சிற்சில மாறுதல்களையே செய்து வந்தார். இவ்வாறு மக்கள் நெருக்கம் குறைந்த பகுதிகளிலும், உழவுத்தொழில் ஓரளவு பிற்பட்ட நிலையில் இருந்த பகுதிகளிலும் அவர் ஒரு விளைச்சலுக்கு ஒரு குறிப்பிட்ட நிலையான தொகை ஒன்றை மொத்தமாகக் கொடுக்கும் பழைய மரபு முறையையே பின்பற்றினர். ஆனால், மற்ற இடங்களில் பாதாய் (batai) முறையைப் (அதாவது உழவர்கள் பணமாக வரி கொடாமல் தானியங்களாகக் கொடுக்கும் முறையைப்) புகுத்தினர். இதனால் விளைச்சலில் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் பங்கின்தன்மையையும், நீர் வரும் வழியையும் பொறுத்ததாய் வரிவிதிப்பு அமைந்தது. சில இடங்களில் ஜரீப் (jarib) என்ற மற்றொரு வரி விதிப்பு முறையைப் புகுத்தினர். அதன்படி தானியமாகக் கொடுக்கப்படும் அரசாங்க நிலவரி ஒரு பிகாவுக்கு (bigha) இவ்வளவு என்று வரையறுக்கப் பட்டு விளைச்சலில் நாலில் ஒரு பங்காக வசூலிக்கப்பட்டது. நிலங்கள் மிகக் கவனமாக அளக்கப்பட்டடு விளைச்சலின் அளவையும், தன் மையையும், கவனத்தில் வைத்துக்கொண்டு அந்நிலவரி விதிக்கப் பட்டது. சீரழிந்த கிராமங்களின் நிலையைச் சீர்திருத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முன் பணங்கொடுத்து உழவர்களுக்கு உதவி செய்யப்பட்டது. மொத்தத்தில் முர்ஷித் குலியின் அறிவுமிக்க முறைகள் தக்கணத்தில் செல்வச் செழிப்பு மீண்டும் ஏற்படும்படி செய்தன. எனினும் பல ஆண்டுகளாக நடந்து வந்த ஒழுங்கில்லாத ஆட்சியின் விளைவாகக் குவிந்திருந்த தீமைகள் குறுகிய காலத்திற்குள் முழுவதும் அகற்றப்பட முடியாதவையாய் இருந்தன. நுஸ்கா-இ-தில்குஷா (Nuskha-i-Dilkhusha) என்ற நூலின் ஆசிரியரான பீம் சேன் புர்ஹான்பூரி (Bhimsen Burhanpuri) என்பவரின் சான்றினைத் துணையாகக் கொண்டு சர். ஜே. என். சர்க்கார் கூறுவதாவது: ‘1658-ல் அவுரங்காபாத்தின் அருகில் ஒரு சிறிய பாழ் நிலங் கூடக் காணப்பட வில்லை; கோதுமையும் பயறுகளும் ஒரு ருபாய்க்கு $2\frac{1}{2}$ மணங்குகளாக விற்கப்பட்டன. ஜவாரும் (சோளம்) (Jawar) பாஜ்ராவும் (தினை) (Bajra) ருபாய்க்கு $3\frac{1}{2}$ மணங்கு விதமும், வெல்லம் $\frac{1}{2}$ மணங்கு விதமும், மஞ்சள் எண்ணெய் (நெய்) 4 சேர் விதமும் விற்கப்பட்டன.’[1]

இவ்வாறு உள்நாட்டு ஆட்சியைச் சீர்திருத்தி அமைத்த பிறகு அவுரங்கசிப் செல்வ மிக்க ஷியா நாடுகளான கோல்

[1] சர்க்கார் எழுதிய அவுரங்கசீப், தொகுதி I, பக்கம் 173 (Sarkar, Aurangzeb Vol. I. Page 173.)

Koviloor Acadamy

கொண்டா, பீஜப்பூர் ஆகியவற்றின் சுதந்தரத்தை அழிக்கத் தம் கவனத்தைத் திருப்பினர் உடனடியாகத் தாக்குதல் செய்வதற்குப் போதிய சாக்குப் போக்குகளும் கிடைக்காமல் போகவில்லை. 1636-லிருந்து முகலாயப் பேரரசிற்கு உட்பட்ட பகுதியான கோல்கொண்டாநாட்டைப் பொறுத்தவரை அது முன்பு கப்பமாகக் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை முழுவதும் கொடுக்காமல் அடிக்கடி பாக்கிவைத்திருந்தது. மேலும் சுல்தான் தம்முடைய பலம் வாய்ந்த மந்திரியாகிய மீர் ஜும்லாவைச் (Mir Jumla) சரியாக நடத்தாமையால் அவர் முகலாயர்களின் பாதுகாப்பைப் பெற்றிருந்தார். முற்கூறப்பட்ட காரணத்தைக் காட்டிலும் இக்காரணம் படையெடுப்பதற்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

மீர் ஜும்லா என்று புகழ் பெற்றிருந்த முகம்மது சையீத் ஒரு பாரசீக வாணிகத் துணிகரச் செயலாளராயிருந்தார். 'மற்றத் துணிகரச் செயலாளர்களைப் போலவே, வைரம் போன்ற விலையுயர்ந்த மணிக் கற்களில் வியாபாரஞ் செய்து பெருஞ் செல்வம் திரட்டினர். விரைவில் கோல்கொண்டா சுல்தானை அப்துல்லா குதுப் ஷாவினிடத்து (Abdullah Qutb Shah) வேலையில் அமர்ந்தார். அவர் படைத்துறையில் பேரறிவும், பேராற்றலும் வாய்ந்தவராக இருந்ததோடு சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினர். இப்பண்புகள் அவருடைய தலைவரால் போற்றப்பட்டன. அதனுல் அவருடைய தலைவர் அவரைத் தம் அரசாங்கத்தின் முதலமைச்சராக ஆக்கிக்கொண்டார். மீர் ஜும்லா தம்முடைய பதவியை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கத்தின் உண்மைச் சர்வாதிகாரியாகத் தம்மை ஆக்கிக் கொண்டார். அவர் மேலும் ஒருபடி சென்று கர்நாடகத்தில் புதிதாக வெற்றி பெற்ற பகுதிகளைக் கொண்டு தமக்காக ஓர் இராச்சியத்தை அமைத்துக் கொண்டார். முந்நூறு மைல் நீளமும், ஐம்பது மைல் அகலமும் கொண்ட அந்த இராச்சியம் அவருக்கு ஆண்டுதோறும் ஐம்பது லட்சம் வருமானத்தைக் கொடுத்தது. அதை வைத்துக்கொண்டு அவர் சிறப்பாகப் பீரங்கிப் பயிற்சி பெற்ற ஒரு வலிமை வாய்ந்த படையை வைத்துக்கொள்ள முடிந்தது. இவ்வாறு 'ஒரு பிரபுவின் நிலையிலிருந்த அவர், ஓர் ஆளும் இளவரசர்க்குரிய அதிகாரம், செல்வம், பெருமை ஆகியவற்றைப் பெற்றிருந்தார்.' இயல்பாகவே தம் அமைச்சரின் வளரும் சக்தியையும், செல்வத்தையுங் கண்டு அச்ச முற்ற சுல்தான், அவரைத் தமக்குக் கீழ்ப்படியுமாறு வற்புறுத்தினர். தம்மிடம் அவமதிப்பாக நடந்து கொண்டதற்காக அமைச்சரின் மகனை முகம்மது அமீன் கானை (Muhammad Amin Khan) அவருடைய குடும்பத்துடன் சிறையில் வைத்தார். பிறகு மீர் ஜும்லா முகலாயப் பேரரசருடனும் அவுரங்கசிப்புடனும் சூழ்ச்சித் திட்டங்களில் இறங்கினர். கோல்கொண்டாவைத் தாக்க எண்ணியிருந்த அவுரங்கசிப் சுல்தானிடம் மாறுகொண்டவரும், அரைச் சுதந்தர அதிகாரியுமான இவருடைய நட்புறவின் நன்மையை உணர்ந்தார்.

Koviloor Acadamy

இவ்வாறு கோல்கொண்டா சுல்தான் மீர் ஜும்லாவினல் காட்டிக் கொடுக்கப்பட்டார். மீர் ஜும்லாவின் குடும்பத்தினரை விடுதலை செய்து விடுமாறு கோல்கொண்டா சுல்தானுக்கு ஆணை தருமாறு ஷாஜஹானிடமிருந்து வேண்டிய ஓர் ஆணையை அவுரங்கசீப் பெற்ருர். ஆனல், பேரரசரின் கடிதத்திற்கு விடை கொடுப்பதற்குச் சுல்தானுக்குப் போதிய நேரம் கொடுக்காமல், சுல்தான்மேல் போரிடப் போவதாக அறிவித்தார். அவுரங்கசீப்பின் அறிவுரைகளின்படி நடந்த அவருடைய மகன் இளவரசர் முகம்மது சுல்தான் 1656 ஜனவரியில் ஹைதராபாத்தைத் தாக்கினர். முகலாயப்படை அந்நாட்டைக் கொள்ளையடித்தது. அவுரங்கசீப்பும் தாமே பிப்ரவரி ஆரும் நாள் அங்கே சென்று, அடுத்த நாள் கோல்கொண்டாவை முற்றுகையிட்டார். அந்த இராச்சியம் முழுவதையும் தம் இராச்சியத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய பேராசையாயிருந்தது. ஆனல் தாரா ஷுக்கோவ், ஜஹானுரா ஆகியோர்களின் செல்வாக்கு மூலம் ஷாஜஹான் அதற்கு இடையீடு செய்ததால் அப்பேராசை நிறைவேறுவதற்குத் தடை ஏற்பட்டது. தந்தையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்த அவுரங்கசீப் 1656ஆம் ஆண்டு மார்ச்சு 30 ஆம் நாள் கோல்கொண்டா இராச்சியத்தைக் கைவிட்டார். இவ்வாறு கோல்கொண்டா இராச்சியம் முகலாயப் பேரரசருக்குப் பத்து லட்சம் ருபாய்க்கு உறுதியீடு கொடுத்தும் (இக்காலத்தில் மானிக்துர்க் (Manikdrug) என்றும் சினூர் (Chinoor) என்றும் வழங்கப்படும்) ரங்கிர் (Rangir) மாவட்டத்தைப் பிரித்துக் கொடுத்தும் மீண்டும் தம் உயிரைக் காப்பாற்றிக் கொண்டது. அவுரங்கசீப்பின் மகன் இளவரசர் முகம்மது சுல்தான் ஆள்மாருட்டஞ் செய்து சுல்தானின் மகளை மணந்து கொள்ளப்பெற்ருர். ரகசிய ஒப்பந்தம் மூலம் அவுரங்கசீப் சுல்தானிடம் அவருடைய புதிய மருமகனை அவருக்குப் பின் அரசுரிமை பெறுதற்குரியவராக்க வேண்டும் என்று வலிந்து வாக்குறுதி கேட்டு வாங்கிக்கொண்டார். அதன்பின் உடனேயே மீர் ஜும்லா பேரரசின் தலைமை யமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அடுத்தது பீஜப்பூர் ராச்சியத்தின் முறை. அதன் தகுதி மிக்க ஆட்சியாளர் முகம்மது ஆதில் ஷா 1656 ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி இறந்துவிட்ட பிறகு அந்த இராச்சியம் சீர்கேடுற்றது. இது அவுரங்கசீப்புக்குத் தம் திட்டத்தை நிறை வேற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பை அளித்தது. அப்போது பீஜப்பூரின் புதிய அரசராயிருந்த பதினெட்டு வயது இளைஞர் இறந்து போன சுல்தானின் மகன் அல்லர் என்றும், அவருடைய பிறப்பைப்பற்றி ஐயப்பாடுகள் இருந்தன என்றும் கூறி, அக்காரணத்தைக் கொண்டு அந்த இராச்சியத்தின்மேல் படையெடுக்க ஷாஜஹானின் அனுமதியைப் பெற்றுக்கொண்டார். அக்காரணம் ஒரு நொண்டிச் சாக்கைத் தவிர வேறன்று. பீஜப்பூருக்கு எதிராக அவர் படை யெடுத்தது, 'நேர்மைக்கு முற்றிலும்

Koviloor Academy

முரணானது. பீஜப்பூர் ஒரு குறு நில இராச்சியமன்று. ஆனால், அது முகலாயப் பேரரசருடன் கூட்டாயிருந்த ஒரு சுதந்தர நாடு. சட்டப் படி முகலாயப் பேரரசர் பீஜப்பூரின் அரசுரிமைக்கு உரியவரைப் பற்றிக் கேள்வி எழுப்புவதற்கோ, அதற்குரியவரைத் தேர்ந்தெடுப் பதற்கோ உரிமை பெற்றவர் அல்லர். முகலாய இடையீட்டுக்கு முக்கிய காரணம் இளைஞராயிருந்த அரசனின் ஆதரவில்லா நிலையும் அவருடைய அதிகாரிகளுக்குள் இருந்த பிணக்குமேயாகும். அது, அவுரங்கசிப்பு கூறியது போல, 'அருமையான இராச்சியத்துடன் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தது.' மீர் ஜும்லாவின் உதவியுடன் அவுரங்கசீப் 1657ஆம் ஆண்டு ஜனவரித் தொடக்கத் தில் அந்த இராச்சியத்தின்மீது படையெடுத்தார். நீண்டதோர் முற்றுகைக்குப் பின்பு மார்ச்சின் இறுதியில் பீடார்க் கோட்டையைத் தகர்த்தார். ஆகஸ்டு முதல் தேதியன்று கல்யாணிக் கோட்டையைத் தகர்த்தார். மேலும் தக்காணத்தை வெல்லுவது, தாராஷுக்கோ போன்ற மற்ற அவுரங்கசிப்பின் எதிர்ப்பாளர்களின் செல்வாக்கின் பேரில் ஷாஜஹான் திடீரென்று செய்த இடையீட்டினால், தடைப்பட் டது. பேரரசர் பீஜப்பூர் சுல்தானுக்கு (1657-ல்) அமைதியை அளித்தார். ஆனால், கோல்கொண்டா சுல்தானைப் போலவே அவ ரும் மிகப் பெரிய ஈட்டுறுதி கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டு விதி வற்புறுத்தப்பட்டது. மேலும் பீடார், கல்யாணி, பரேந்தா (Parenda) இவற்றையும் அவர் விட்டுவிட நேர்ந்தது. ஷாஜஹான் நோயுற்றதனாலும், அதன் விளைவாக அவருடைய புதல்வர்களுக்குள் சிம்மாசனத்திற்காக எழுந்த கடும் போட்டியாலும், தக்கணத்தில் அவுரங்கசிப்பின் திட்டங்கள் முழுவதும் நிறை வேற்றப்படுவது தள் ளிப் போடப்பட்டது. இவ்வாறு முப்பது வருடங்கள் தக்காணம் சிறிது ஓய்வைப் பெற்றது.

ஏ. ஆட்சியுரிமைக்காகப் போர்

அடுத்துப் பட்டத்துக்குரியவர் யார் என்பதைப்பற்றி ஷாஜஹா னின் புதல்வர்களுக்குள் எழுந்த பயங்கரப் போரினால், அவருடைய கடைசிக்காலம் மிக மிக வருந்தத் தக்கதாய் இருந்தது. 1657 செப்டம்பரில் அவர் நோய்வாய்ப்பட்ட 'போது அப்போர் தொடங்கி யது. அது வயது முதிர்ந்த அப்பேரரசர் இந்த உலகத்தை விட்டுப் போகும் வரை அவருக்கு மிகப் பெரிய மானக்கேட்டையும், கடுந் துன்பத்தையும் அளித்தது. ஷாஜஹானுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் அந்தச் சமயத்தில் வயதில் மிக்க வராய் இருந்தனர். தாரா ஷுக்கோவுக்கு வயது 43; ஷுஜாவுக்கு வயது 41; அவுரங்கசீப்புக்கு வயது 39; முராதுக்கு வயது 33 இரண்டு மகளிர் இருந்தனர். ஒருத்தி ஜஹானரா (Jahanara) தாரா ஷுக்கோவின் பக்கம் இருந்தாள். மற்றவள் ரோஷனரா (Raushnara)

Koviloor Academy

அவுரங்கசீப்பின் கட்சியைச் சேர்ந்தாள். அவர்கள் எல்லோரும் மாகாணங்களின் கவர்னர்களாகவும், படைகளின் தளபதிகளாகவும் இருந்து அந்தச் சமயத்திற்குள் உள்நாட்டு, படைத்துறைச் செய்திகளில் பேரளவிற்கு அனுபவம் பெற்றிருந்தனர். ஆனால் தனிப்பட்டவர்களின் இயல்புகளையும், திறமைகளையும் பொறுத்தவரை அவர்களுக்குள் பல வேறுபாடுகள் இருந்தன. எல்லாரிலும் மூத்த தாரா ஷுக்கோ தம் தந்தையின் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். அவரே தமக்குப்பின் அரசாள வேண்டும் என்று தந்தை விரும்பினர். பிறவற்றிலிருந்து நல்லன வெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொண்ட கருத்துகளையும், தாராள மனப்பான்மையையும், கல்வி வல்ல அறிஞர்க்குரிய உணர்வுகளையும் பெற்றிருந்த ஷுக்கோ, பிற மதக் கொள்கைகளைப் பின்பற்றியோரிடமும் தாராளமாகக் கலந்து பழகினர். வேதாந்தக் கொள்கைகளையும் தால்மத் (Taimud), புதிய ஏற்பாடு (New Testament), சூபி ஆசிரியர்களின் நூல்கள் இவற்றையும் கற்ருர். அதர்வ வேதத்தையும் (Atharva Veda), உபநிஷத்துகளையும் (Upanishads) சில பிராமண அறிஞர்களின்[1] உதவியைக் கொண்டு பாரசிக மொழியில் பெயர்க்கச் செய்தார். மேற் போக்கில் பகைமையுடையனவாய்த் தோன்றும் கொள்கையில் வேற்றுமைக்கிடையே ஒற்றுமைகாண விழைந்தார். இதனுல் அவர் இயல்பாகவே தம் மதத்தைச் சார்ந்தவர்களில் பழமைப்பற்று மிக்கவர்களின் வெறுப்பைச் சம்பாதிக்க நேர்ந்தது. அவர்கள் அவருக்கு எதிராக இருந்தனர். ஆனுல், அவர் தம் மதத்தைப் புறக்கணித்தவர் அல்லர். அவர் ஒரு போதும் இஸ்லாமின் முக்கியமான கொள்கைகளை ஒதுக்கி வைத்ததில்லை. இஸ்லாமியக் கொள்கையினரில் ஒரு சிறப்பு வாய்ந்த சூபிகளின் நல்லனவற்றைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளும் கொள்கையைத்தான் தாமும் பின்பற்றினர். மதத்தின் வெளிச் சடங்குகளை அவர் வெறுத்துவந்தார். அது அவர் ஜான் மில்டனைப் (John Milton) போல மாதாகோவில்பற்றிச் சீர்திருத்த எண்ணங்கள் கொண்டிருந்தவர்களின் நிலைமையிலேயே அவரும் இருந்தார் என்பதைக் காட்டும். ' அவருடைய வரலாற்றை எழுதிய கடைசி ஆசிரியர் கீழ்வரும்படி எழுதியது மிகவும் பொருத்தமே. ' இந்தியாவில் மத அமைதிச் சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்று முயற்சிசெய்ய விழைபவர்கள் தாரா விட்ட இடத்திலிருந்து தொடங்கி, அந்த இளவரசரால் காட்டப்பட்ட வழியில் மேற்செல்வதே செய்யத்தக்கது என்று கூறுவது சிறிதும் மிகையன்று. ' ஆனுல் அவர்மேல் அவர் தந்தை அளவுக்கு மிறிக் காட்டிய அன்பும், அரசவையில் அவர் அடிக்கடி இருந்தமையும், தந்திரமிக்க அரசியல் வாதியின் குணங்களோ,

[1]தாரா ஷுக்கோவின் நூல்பட்டியல் [1]வேண்டுமாயின் கீழ்வருவன வற்றைப் பார்க்க. J. P. H. S. தொகுதி II, பக்கம் 21-38. J. A S. B. பகுதி I, 1870, பக்கம் 273-279. சர்க்கார் எழுதிய அவுரங்கசீப் தொகுதி I, பக்கம் 271 அடிக்குறிப்பு; காநுன்கோ எழுதிய தாரா ஷுக்கோ தொகுதி I, அத்தியாயம் VI.

Koviloor Academy

தீரம் மிக்க தளபதியின் திறமைகளோ அவரிடம் வளர்வதைத் தடுத்த துடன், பிறர் எவருடைய ஆலோசனையையும் உதறித் தள்ளும் ஆணவ மனநிலையை வளர்த்துவிட்டன. எனினும், அவருடைய கோபம் எல்லாம் 'ஒரு கணத்திற்குமேல் நில்லாது.' அப்போது வங் காள கவர்னராயிருந்த இரண்டாவது மகனான ஷுஜா கூரிய அறிவு வாய்ந்தவராயும் தீரமிக்க போர் வீரராயும் விளங்கினார். ஆனால் சோம்பலிலும், இன்பத்திலும் அவர் கொண்டிருந்த பெரு விருப்பம் அவரைப் பலவீனமுள்ளவராயும், சோம்பேறியாயும், கவனக்குறை வானவராயும், இடைவிடா முயற்சி, விழிப்பான எச்சரிக்கை, ஆழ்ந்த இணக்கம் இவற்றைப்பெறத் தகுதியில்லாதவராயும் ஆக்கிவிட்டது. அப்போது குஜராத்தின் கவர்னராயிருந்த இளையவரான முராத் நேர்மையுடையவராயும், தாராள மனப்பான்மையுடையவராயும், வீர ராயும்தான் இருந்தார். ஆனால் மிகுதியாகக் குடித்துவிடும் வழக்கத் தில் பழகிவிட்டார். அதனால் தலைவருக்குரிய தகுதிகளை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. மூன்றாவது மகனான அவுரங்கசிப்தான் மற்ற மூவரைக் காட்டிலும் மிகத் திறமை வாய்ந்தவராய் இருந்தார். அவர் உழைப்புத்திறனும், ஆழ்ந்த அரசியல் சூழ்ச்சியும், படைத்துறைச் சூழ்ச்சித் திறனும், எவரும் மறுத்துக் கூறமுடியாத ஆட்சித்திறமையும் ஆகிய பண்புகளைப் பெற்றிருந்தார். மேலும் பற்றுமிக்க ஸுன்னி முஸ்லிமா யிருந்ததால் பழமைப்பற்று மிக்க ஸுன்னிகளின் ஆதரவை இயல்பாகவே பெற்றார். சிம்மாசனத்திற்குப் போட்டியிடும் இளவரசர் களின் பண்புகளில் காணப்பட்ட வேறுபாடுகள் போராட்டத்தின் போக்கைப் பாதித்தன என்பதைப் பார்க்கப் போகிறோம். தாராள மனப்பான்மை கொண்டிருந்த தாரா ஷுக்கோ தகுதியில்லாத தளபதி யாயும் தகுதியில்லாத நாட்டு நலன் கருதும் அரசியலாளராயும் இருந் தமையின் புத்தி சாதுரியமும் கூரிய அறிவும் படைத்த அவுரங்கசீப் தனக்கு ஒப்பாருமிக்காருமின்றித் தன்னிகரற்று விளங்கினார். மிக மேலான தளபதித்திறனும், சுதந்திரமும் மிக்க அவுரங்கசீபின் முன்பு ஷுஜா, முராத் இவர்களும் திறமைக் குறைவால் திண்டாடவேண்டி யிருந்தது.

1657-ல் ஷாஜஹான் நோய்வாய்ப் பட்டபோது நான்கு சகோதரர் களுள் தராஷுக்கோ ஒருவர் மட்டும் ஆக்ராவில் இருந்தார். நோய் உண்மையில் மிக்க கடுமையாகவே இருந்தது. ஆக்ராவில் இல்லாத மூன்று சகோதரர்களும் தந்தை உண்மையில் இறந்துவிட்டதாகவும் அச்செய்தி தாராஷுக்கோவினால் மறைத்து வைக்கப்பட்டதாகவும் ஐயுற்றனர். பேரரசர் நோய்வாய்ப்பட்டதும் உடனே இராச்சியத்தில் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்படும் நெருக்கடியான நிலைதான் சுயேச்சை யாட்சியின் நிலை. சகோதரர்களுக்குள் போட்டி தொடங்கிய உடனே அந்த நெருக்கடி நிலை இன்னும் மிகச் சீர்கேடடைந்தது. ஷுஜா அப்போது வங்காளத்தின் தலைநகராயிருந்த ராஜ்மஹாலில்

Koviloor Acadamy

தம்மைச் சக்ரவர்த்தியாக அறிவித்துக்கொண்டு பேரரசின் தலைநகரை நோக்கிச் சென்றார். ஆனால் அவர் வாரணாசிக்கருகில் வந்ததும் தாரா ஷுக்கோவின் மகன் சுலைமான் ஷுக்கோவின் தலைமையில் வந்த படையால் தோற்கடிக்கப்பட்டு வங்காளத்திற்கே திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

முராதும் 1657 டிசம்பர் 5ஆம் தேதியில் ஆமதாபாத்தில் தாமே முடிசூட்டிக்கொண்டார். மாளவத்தில் அவுரங்கசிப்பைச் சந்தித்து அவரைத் தம் கூட்டாளியாக ஆக்கிக்கொண்டார். கடவுளின் பெயராலும் நபிநாயகத்தின் பெயராலும் ஆணையிட்டுப் பேரரசைப் பிரித்துக்கொள்வதென இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர். அவ்வுடன்படிக்கையில் கண்ட விதிகளாவன: 1. கொள்ளைப் பொருளின் மூன்றில் ஒருபாகம் முராத் பக்ஷுக்கும் மூன்றில் இருபங்குகள் அவுரங்கசிப்புக்கும் சேரவேண்டும். 2. பேரரசை வென்ற பிறகு பஞ்சாப், ஆப்கானிஸ்தானம், காஷ்மீர், சிந்து இவை முராத்துக்கு உரியவையாகும். அவர் அங்கே தம் அரசாட்சி முறைமை ஏற்படுத்திக்கொள்ளலாம்; நாணயங்களை அடித்து வழங்கலாம்; தாமே அரசராகப் பிரகடனஞ் செய்துகொள்ளலாம் என்பவையாகும். அவுரங்கசிப், முராத் இருவரின் கூட்டுப்படைகள் வடக்கு நோக்கிச் சென்று தர்மாட் (Dharmat) என்ற இடத்தை அடைந்தன. அவ்விடம் உஜ்ஜயினியின் (Ujjain) தென்மேற்காகப் பதினன்கு மைல் தூரத்தில் இருந்தது. அப்படைகளின் முன்னேறு தலைத் தடுக்கப் பேரரசர் ஜோத்பூரின் (Jodhpur) ராஜா ஜஸ்வந்த் சிங்கையும் (Jaswant Singh) காஸிம்கானையும் அனுப்பினர். எதிர்ப் படைகள் 1658 ஏப்ரல் 15ஆம் தேதி தர்மாட்டில் சந்தித்தன. அங்கே பேரரசப்படைகள் நன்றாகத் தோற்கடிக்கப்பட்டன. அதற்குக் காரணங்கள் இந்து முஸ்லிம் வீரர்களுக்கிடையே இருந்த பொருமையும், அவர்கள் மேற்கொண்ட 'வெவ்வேறு அறிவுரைகளின் தீமைகளும், ஓரளவு 'போரில் வயது மிக்க' அவுரங்க சிப்போடு ஒப்பிடும்போது தாழ்மையுறும் ஜஸ்வந்த் சிங்கின் படைத்துறைத் தந்திரங்களும் ஆகும். ராத்தோர்கள் மிகத் தீரம் பொருந்திய வீரத்துடன் போரிட்டனர்; மிகப் பெரிய இழப்பினை அடைந்தனர். ஆனால் காஸிம்கான் தம் தலைவருக்காகப் பெரிதும் ஒன்றும் செய்யவில்லை. ஜஸ்வந்த் சிங்கு ஓடிவிட்ட பிறகு அவருடைய செருக்கு மிக்க மனைவி போர்க்களத்தி லிருந்து பின்வாங்கி ஓடியதற்காகச் சினமுற்று அரண்மனைக் கதவுகளைச் சாத்திவிட்டாள். தர்மாட்டில் நடந்த போர் அவுரங்கசிப்பின் பொருள்வளத்தையும், மதிப்பையும் மிகுதிப்படுத்தியது. சர் ஜே. என். சர்க்கார் குறிப்பிடுவதுபோல 'தக்கணப் போர்களின் தலைமை வீரரும், தர்மாட்டின் வெற்றியாளருமான அவுரங்கசிப் தம் புகழில் இழப்பு எதுவும் இல்லாமலும், ஆனால் இந்தியாவிலேயே ஈடும் இணையுமற்ற பெரும் புகழ் வாய்ந்தவராயும் விளங்கினர்.

Koviloor Academy

வெற்றிபெற்ற இளவரசர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்த ஒரு துறையின் வழியாகச் சாம்பால் (Chambal) என்ற இடத்தைக் கடந்து ஆக்ராக்கோட்டையிலிருந்து எட்டு மைல் கிழக்கிலிருந்த சமூகார் (Samugah) என்ற சமவெளியைஅடைந்தனர். தாரா ஷுக்கோவும் அங்கே மேமாதக் கடைசியில் அவருடைய எதிரிகளை எதிர்க்க 50,000 படை வீரர்களுடன் சென்றார். அவ்வீரர்கள் 'தோற்றத்தில் மட்டுந்தான் வீரம் செறிந்தவர்களாகக்' காணப்பட்டனர். ஆனால் 'அவர்கள் பல இடங்களிலிருந்தும், பல வேறுபட்ட வகுப்பினரிடையே இருந்தும் அவசரமாகச் சேர்க்கப்பட்ட கலவையாக இருந்ததுடன், ஒழுங்காக வகைப்படுத்தப்படாதவர்களாகவும், ஒன்றாய்ச்சேர்ந்து போர் செய்யக் கற்பிக்கப்படாதவர்களாகவும் இருந்தனர்.'மே 29ஆம் நாள் போர் தொடங்கியது. அப்போர் மிகக் கடுமையாக நடந்தது. இரு தரப்பினரும் மிகுந்த வீரத்துடன் போரிட்டனர். முராத் முகத்தில் மூன்று காயங்களை அடைந்தார். தங்கள் இனத்தின் மரபுக்கு ஏற்ப ராஜபுத்திர வீரர்கள் தாரா ஷுக்கோவின் தலைமையிலும் தங்கள் புதிய தலைவர் ராம்சிங்கின் தலைமையிலும் பெரு வீரத்துடன் போர் செய்தனர். இளவரசர் முராத்தின் படைப்பிரிவைக் கடுமையாகத் தாக்கி ஒருவர் பாக்கி யில்லாமல் உயிர் துறந்தனர். துரதிர்ஷ்டவசமாக தாரா ஷுக்கோவின் யானை ஓர் அம்பினால் பலத்த காயத்துக் குள்ளாகியதால், அவர் அதிலிருந்து இறங்கி ஒரு குதிரையின்மீது ஏறினார். 'அச்செயல் சண்டையின் விதியை நிர்ணயித்துவிட்டது' என்று ஸ்மித் கூறுகிறார். தங்களுடைய தலைவரின் யானைமீதிருந்த அம்பாரி காலியாக இருந்ததைக் கண்டு மீதியிருந்த படைவீரர்கள் எல்லாம் அவர் இறந்துவிட்டாரென்றே கருதிப் பெருங் குழப்பத்துடன், களத்திலிருந்து கலைந்து சென்றனர். தம்முடைய பாசறையினையும், துப்பாக்கிகளையும், பகைவர்கள் கைப்பற்ற விட்டுவிட்டு ஆழ்ந்த கவலை கொண்டவராய்த் தாரா ஷுக்கோ ஆக்ராவை நோக்கி ஓடிச் 'சொல்லமுடியாத அவல நிலையில்' அவ்விடத்தை அடைந்தார். உண்மையில் தாரா ஷுக்கோவின் தோல்வி அவருடைய தளபதிகளின் தந்திரங்களில் ஏற்பட்ட தவறுகளாலும், அவருடைய துப்பாக்கிப் படையின் பலவீனத்தாலும் ஏற்பட்டதே ஒழியச் சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவதுபோல, அவருடைய படையின் வலதுசாரியின் பொறுப்பேற்றிருந்த கலிலுல்லா (Khalilullah) வின் சூழ்ச்சி மிக்க அறிவுரைகளினால் முழுவதும் ஏற்பட்டதெனக் கொள்ளக்கூடாது.

ஷா ஜஹானின் புதல்வர்களுக்குள் ஏற்பட்டிருந்த சிம்மாசன உரிமைப் போருக்கு சமூகார்ப் போர் செயல் முறையில் தீர்ப்புக் கூறி விட்டது. தம்முடைய பல வீரர்களையும் இழந்து தாரா தோற்றோடிப் போனமை அவுரங்கசீப் தம் பேராசை எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதை எளிமையாக்கிவிட்டது. அவுரங்கசீப் இந்துஸ்தானத்தின் சிம்மாசனத்தைக் கைப்பற்றியது பெரிதும் சமுகார்ச் சண்டையின்

Koviloor Acadamy

நேரடி விளைவே என்று கூடக் கூறிவிடலாம். இந்த வெற்றிக்குப் பிறகு உடனேயே அவர் ஆக்ராவுக்குச் சென்று அந்த வருடம் ஜூன் மாதம் 8ஆம் நாள் கோட்டையைக் கைப்பற்றினார். இணக்கமான ஏற்பாடு செய்வதற்கு முயன்ற ஷாஜஹானின் எல்லா முயற்சிகளையும் தோற்கடித்தும், கோட்டையைக் காத்துவந்த பேரரசுப் படைகள் கோட்டை கைப்பற்றுவதைத் தடுக்கச் செய்த முயற்சிகளைப் பயனற்ற தாகச் செய்தும் கோட்டையைப் பிடித்து விட்டார்.

சிம்மாசனத்தை இழக்க நேர்ந்த ஷாஜஹான் மிகக்கொடுமையாய் நடத்தப்பட்டுத் துன்புற நேர்ந்தது. ஆக்ராக் கோட்டையைக் காத்து நின்றவர்களின் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கும் முறையில் அவுரங்கசீப் ஜமுனாநதியின் நீரை, அவர்களுக்குச் சொல்லாமல் தடுத்து நிறுத்தியபோது பாவம் துயரார்ந்த பேரரசர் ஜூன் மாதத்துக் கடுங் கோடையில் கோட்டைக்குள்ளேயிருந்த கிணறுகளின் உப்புத் தண்ணீரையே குடித்துத் தம் தாகத்தைத் தணித்துக் கொள்ள நேர்ந்தது. மிகவும் பரிதாபமான முறையில் அவர் அவுரங்கசீப்புக்கு இவ்வாறு எழுதினார்:—

> 'எப்பொழுதும் இந்துக்கள் புகழ்ச்சிக் குரியவர்களாகட்டும். அவர்கள் இறந்தவர்களுக்குத் தவறாமல் நீரைக்கொடுக்கின்றனர். என் மகனை நீயோ ஒரு விந்தையான முஸ்லிமாய் இருக்கிறாய். ஏனெனில் தண்ணீரின்றித் தவிக்கும்படி என்னை விட்டிருக்கிறாய்.'

சாதாரணக் கைதியைப் போலக் கடுஞ்சிறைக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த ஷாஜஹானுக்கு எளிமையான சிறுவசதிகள் கூட மறுக்கப்பட்டன. பேரரசரின் எல்லா வேண்டுகோளுக்கும் அவுரங்கசீப் செவி சாய்க்க மறுத்துவிட்டார். ஜஹானாரா இணக்கம் செய்விக்கப்பல முறை முயன்றபோதும் அவளுடைய பேச்சுக்களை அவர் கேட்க மறுத்துவிட்டார். துன்புற்ற பேரரசர் 'கடைசியில் விதிக்குத் தலைவணங்கவே நேரிட்டது. அழுதுகொண்டே தூங்கிவிடும் குழந்தையைப் போலத் தம் குறைகளைத் தெரிவிப்பதை அவர் பின்னர் நிறுத்திவிட்டார்.' அவர் மத உண்மைகளை எண்ணி ஆறுதல் அடைந்தார். கடைசிவரை பக்தி மிக்க மகளான ஜஹானாராவுடன் சேர்ந்து தியானிப்பதிலும், வழிபாடு செய்வதிலும் தம் கடைசிக் காலத்தைக் கழித்தார். முடிவில் 1666ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் நாள் அவருடைய எழுபத்து நான்காவது வயதில் மரணம் அவருடைய துன்பங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளிவைத்தது.

ஆக்ராவிலிருந்து அவுரங்கசீப் 1658 ஜனவரி பதின்மூன்றும் நாள் தில்லியை நோக்கிச் சென்றார். வழியில் மதுராவுக்கருகில் இருந்த

Koviloor Acadamy

ரூப்நகரில் (Rupnagar) அவருடைய சகோதரர் முராத்தின் எதிர்ப்பை நசுக்குவதற்காக நின்றார். அச்சமயத்திற்குள் முராத் தம் சகோதரரின் சூழ்ச்சித்திட்டத்தை நன்குபுரிந்து கொண்டு அவர்மேல் பொருமையை வளர்த்துக்கொண்டிருந்தார். முராத்தை நேரடியாகப் போர்க்களத்தில் சந்திக்காமல் அவுரங்கசீப் அவரைச் சூழ்ச்சி வலையில் சிக்கவைத்துப் பிடித்துவிட்டார். துரதிர்ஷ்டம் பிடித்த அந்த இளவரசன் முதலில் சலிம்கர்க் கோட்டையில் (Salimgarh) சிறைவைக்கப்பட்டிருந்து பின்பு அங்கிருந்து 1659 ஜனவரியில் குவாலியர்க் கோட்டைக்குக் கொண்டு போகப்பட்டார். திவான் ஆலி நாகி (Ali Naqi) யைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 1661 டிசம்பர் 4ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார். முராத் சிறை செய்யப்பட்டவுடனே அவுரங்கசீப் தில்லிக்குப்போய் விட்டார். அங்கே 1658ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் நாள் பேரரசராக முடி சூட்டிக் கொண்டார்.

அவுரங்கசீப் பிறகு மற்ற எதிரிகளை அடக்குவதற்காகச் சென்றார். தர்மாட்டிலும், சமூகாரிலும் தாரா ஷுக்கோ அடைந்த தோல்வி அதிகாரத்தை அடக்குவதற்காகப் புதிதாக ஒரு முயற்சி செய்வதற்கு ஷுஜாவுக்குத் தைரியத்தை அளித்தது. ஆனால் 1659 ஜனவரி 5ஆம் தேதியில் அலகாபாத்துக்கு அருகிலிருந்த காஜா (Khajwah) என்ற இடத்தில் அவுரங்கசீப் அவரைப் படுதோல்வி அடையுமாறு செய்த போது அவருடைய நம்பிக்கைகள் எல்லாம் தூள்தூளாயின. மீர் ஜும்லாவினால் அவர் மேற்கு வங்காளம் வழியாக டாக்காவுக்கும், அங்கிருந்து 1660 மே மாதத்தில் அராக்கானு (Arakan) க்கும் துரத்தப்பட்டார். அதன் பிறகு ஷுஜாவைப்பற்றி ஒன்றும் அறியப்படவில்லை. அராக்கானியர்களால் அவர் குடும்பத்துடன் கொல்லப்பட்டிருக்கலாம். அவுரங்கசீப்பின் மூத்த மகன் இளவரசன் முகம்மது மீர் ஜும்லாவுடன் சண்டை போட்டுக்கொண்டு சிறிது காலம் ஷுஜாவுடன் சேர்ந்திருந்தார். ஆனால் இதற்காக அவர் ஆயுட்காலச் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டார். ஏறக்குறைய 1676-ல் அவர் இறந்தார்.

நல்வினை தாரா ஷுக்கோவுக்கு எதிராகச் சென்ற போது அவருடைய மகன் சுலைமான் ஷுக்கோவும் தம்முடைய தளபதிகளாலும் வீரர்களாலும் கைவிடப்பட்டார். 'தோற்கும்பக்கத்திலேயே இன்னும் சார்ந்து இருப்பதால்' லாபமில்லை என்று கருதி அவர்கள் அவரைக் கை விட்டு விட்டனர். சுலைமான் ஷுக்கோ தம்முடைய மாற்றாந்தாய் மகனை முஹம்மதுஷா, இன்னும் பதினேழே வழியாளர்கள் இவர்களுடன் இடத்துக்கு இடம் ஓடிப்போய்க் கடைசியில் கர்வால் மலைகளின் (Garhwal Hills) இந்து அரசர் ஒருவரிடம் அடைக்கலம் அடைந்தார். 'அவலமுற்ற அரசவிருந்தாளியிடம் பேரன்பும், பெருங் கவனிப்பும்' உடைய வராயிருந்தார் அந்த இந்து அரசர். ஆனால்

Koviloor Acadamy

அவுரங்கசீப்பினுல் வற்புறுத்தப்பட்டபோது விருந்துபசரித்தவரின் மகன் 1660 டிசம்பர் 27ஆம் தேதி ஷுக்கோவைக் காட்டிக் கொடுத்து, அவருடைய பகைவர்களின் கையில் ஒப்படைத்துவிட்டார். அப்போது இளமைச் செழிப்பும், மிகச்சிறந்த பேரழகும் கொண்டிருந்த சிறைபிடிக்கப்பட்ட இளவரசர் அவுரங்கசீப்பின் முன்பு விலங்கு மாட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்டார். அவர் அவுரங்கசீப்பிடம் பௌஸ்தா (Pousta) பானம் கொடுத்தோ, அல்லது 'அபினி கசகசாச் சத்தை உட்புகுத்தியோ' கொல்வதைக் காட்டிலும் உடனடியாகக் கொல்லப்படுவதையே விரும்புவதாகக் கூறினுர். 'இந்தப் பானம் கொடுக்கப்பட மாட்டாது என்றும், அவருடைய மனம் சிறிதும் சஞ்சலமின்றியே இருக்கும்' என்றும் அவுரங்கசீப் வாக்குறுதி தந்தார். ஆனுல் அந்த வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை. பயங்கரமான அந்தப்பானம் ஒவ்வொரு காலையிலும் கொடுக்கப்பட்டு வந்தது. கடைசியில் 1662 மே மாதத்தில் 'அவருடைய காப்பாளர்களின் முயற்சிகள் மூலம் அவர் அடுத்த உலகத்துக்கு அனுப்பப்பட்டார். தாரா ஷுக்கோவின் இளைய மகனை சிபிர் ஷுக்கோவும் (Sipihr shukoh) முராதின் மகன் இஸித் பக்ஷும் கொடுமையான எதிரிகளாகக் கருதப்படவில்லை யாதலின், உயிரோடு வாழ அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் அவுரங்கசீப்பின் மூன்ருவது, ஐந்தாவது பெண்களுக்கு முறையே மணஞ்செய்து வைக்கப்பட்டனர்.

தாரா ஷுக்கோவின் முடிவின் கதை அவருடைய சகோதரர் முராத் அல்லது அவருடைய மகன் சுலைமான் ஷுக்கோவின் முடிவைக் காட்டிலும் இரக்கமும் வருத்தமும் மிகுதியாகத் தரத்தக்கதன்று. அவுங்கசீப்பினுல் ஆக்ரா பிடிக்கப்பட்ட பிறகும், ஷாஜஹான் சிறைப் படுத்தப்பட்ட பிறகும், தாராஷுக்கோ தில்லியிலிருந்து லாகூருக்கு ஓட்டம் பிடித்தார் அங்கே துரத்திக்கொண்டு வரும் அவுரங்கசீப்பின் படைகளை எதிர்ப்பதற்காக ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்திருந்தார். சட்லெஜ் நதியின் மீதுள்ள சில துறைகளைக் காப்பதற்குச் சில முறைகளை மேற்கொண்டார். மழைபெய்யத் தொடங்கியதும் அவுரங்கசீப் லாகூரை அடைவதற்குச் சிறிது காலம் பிடிக்கும் என்று நம்பினுர். 'ஆனுல் இவ்வாறு நம்பும்போது, அவர் அவுரங்கசீப்பின் சக்தியையும் எண்ணத்தின் திண்மையையும் விட்டுவிட்டே கணக்கிட்டுவிட்டார். அவற்றின் முன்புஒவ்வொரு தடையும்- மனிதத்தடையாயிருப்பினும், பொருள்களினுல் வருந்தடையாயிருப்பினும்-நீங்கிப்போய் வழிவிட்டு விடும்' என்று சர் ஜே. என். சர்க்கார் எழுதுகிருர். லாகூருக்குத் தாரா வந்த ஒரு மாதத்துக்கும் பிறகு, அவருடைய 'அஞ்சத்தக்க எதிரி' தம் படையுடன் சட்லெஜ் நதியைத் தாண்டிவந்து தாராவை அவருடைய குடும்பத்துடன் மூல்தானுக்குத் துரத்தினுர். நடோடியாகி விட்ட அந்த இளவரசர் இன்னும் அவுரங்கசீப்பின் முக்கியமான அதிகாரிகளால் இடத்துக்கு இடம் துரத்தப்பட்டார். அவரே ஷுஜாவினுலும்

Koviloor Acadamy

சுலைமான் ஷுக்கோவினலும் உண்டாக்கப்பட்ட இடர்ப்பாடுகளி லிருந்து நீக்குவதற்காக 1657 செப்டம்பரில் கிழக்கே திரும்பி வந்து, கடைசியில் குஜராத்தை அடைவதில் வெற்றியுற்றார். அங்கே எதிர்பாராத விதமாகக் குஜராத்தின் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த கவர்னரான ஷா நவாஸ்கான் (Shah Nawaz Khan) என்பவரால் வரவேற்றுப் (1659 ஜனவரி) படை உதவி செய் யும் பேற்றைப் பெற்ருர். இவ்வாறு ஓரளவு தமது பலத்தைப் புதுப் பித்துக்கொண்ட பிறகு, தாரா தக்கணத்துக்குத் திரும்பிச்செல்லலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார். அங்கே பீஜப்பூர் கோல் கொண்டா நாடுகளை யாண்ட ஷியா அரசர்களின் ஆதரவைப் பெற லாம் என்று எதிர்பார்த்தார். இது அவருக்கு ஏற்ற ஒரு கொள்கை யாகவே இருந்திருக்கும். ஆனல், அவுரங்கசீப்பினுல் ஏற்கெனவே வசமாக்கப்பட்டிருந்த ஜஸ்வந்த் சிங்கு அஜ்மீரை நோக்கிச் சென்ருல் உதவி செய்வதாக வாக்குறுதிகள் அளித்து அவரைத் தூண்டினர். அந்த ராஜபுத்திரத் தலைவர் இந்தச் சிம்மாசனத்திற்கான போரில் நடந்துகொண்ட விதம் ஐயுறத்தக்கதாகவே இருக்கிறது. தம்முடைய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார். தாராவும் மிகவும் நம்பி எதிர்பார்த்திருந்த ராஜபுத்திர உதவியைப் பெற முடியவில்லை. அவர் அஜ்மீருக்கு அருகில் வந்துவிட்ட அவுரங்கசீப்புடன் போரிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. தேவைக்கு மிகக் குறைவாக இருந்த தம்முடைய வசதிகளைக்கொண்டு திறந்த வெளியான போர்க் களத்தில், எதிரியின் மிகப்பெரிய வன்மை படைத்த படையை எதிர்த்துப் போரிட முற்படுவது விரும்பத்தக்கதன்று என்று கருதிய தாரா அஜ்மீருக்கு நான்கு மைல் தெற்கே தியோரைக் (Deorai) கண வாயில் வலிமைவாய்ந்த வியக்கத்தக்க சிறந்த ஓரிடத்தைத் தேர்ந்து கொண்டு, அங்கே ஓர் அகழிக்குள் இருந்துகொண்டு, 1659 ஏப்ரலில் 12 முதல் 14 வரையுள்ள மூன்று நாட்கள் போரிட்டார். ஆனல், கடைசியில் அவர் தோற்கடிக்கப்பட்டார். உயிர் தப்புவதற்காக விரைவில் ஓட்டம் பிடித்தார். ஜெய்சிங்கு, பஹாதூர்கான் இவர்கள் தலைமையில் அவுரங்கசீப்பின் படை வீரர்களால் இடத்துக்கு இடம் (ராஜபுதனம், கட்ச், சிந்து) துரத்தப்பட்ட தாரா, இந்தியாவில் எங் கும் புகலடைய முடியவில்லை. 1659 ஜூனில் வடமேற்கு எல்லையை நோக்கி விரைந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஷாஜஹானல் தூக் குத்தண்டனை கொடுக்கப்பட்டபோது தம்மால் காப்பாற்றப்பட்டவரும் (போலன் கணவாய்க்கு ஒன்பது மைல் கிழக்கே யிருந்த) தாதர் (Dadar) என்ற இடத்திலிருந்த ஆப்கானியத் தலைவருமான ஜிவான் கானிடம் (Jiwan Kahn) அடைக்கலம் தேடச்சென்ருர். ஆனல் தாத ருக்குச் செல்லும் வழியில் 'எல்லாத் துரதிர்ஷ்டங்களிலும் மிகப்பெரிய துரதிர்ஷ்டம்' நேர்ந்தது. அலைந்து திரிந்த காலங்களில் எல்லாம் அன்பாதரவுடன் கூட இருந்து உதவி செய்தவரும் சிலகாலமாக வயிற் றுப்போக்கினல் துன்புற்றுக்கொண்டிருந்தவருமான அவருடைய

Koviloor Acadamy

மனைவியார் நாதிரா பேகம் (Nadira Begam) நீடித்து வந்த துன்பங்களாலும் போதிய மருந்தும் ஓய்வும் இன்மையாலும் அப்போது உயிர் துறந்தார். இதனால் தாரா ஒரே அதிர்ச்சியிலும், ஆழ்ந்த துக்கத்திலும் ஆழ்ந்துவிட்டார்.[1] 'இவ்வாறு அடுக்கி வந்த மலை போன்ற துன்பங்களும், துக்கத்திற்கு மேல் துக்கமும், துயரத்திற்குமேல் துயரமும் தாராவின் நெஞ்சை நெருக்கி அதன் சமநிலையை இனிமேல் நீடித்து வைத்திருக்க முடியாத நிலையை எய்தச் செய்து விட்டன. அவருடைய துரதிர்ஷ்டத்து மேல், நன்றியறிதல் இல்லாத அந்த ஆப்கானியத் தலைவர் அவரைக் காட்டிக்கொடுத்து, அவரையும், அவருடைய இரு புதல்விகளையும், அவருடைய இரண்டாவது மகனை சிபீர் ஷுக்கோவையும் பஹாதூர் கானிடம் ஒப்படைத்தார். அவர் 1659 ஆகஸ்டு 23ஆம் நாள் தில்லிக்குச் சிறைபிடிக்கப்பட்ட அவர்களைக் கொண்டு சென்றார். அதேமாதம் 29ஆம் நாள் அவர்கள் நகர் முழுவதும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர். சர் ஜே. என். சர்க்கார் எழுதுகிறார் : 'மண்பூசப்பட்ட ஒரு சிறிய பெண்யானையின் முதுகின் மீது திறந்த அம்பாரி ஒன்றில் தாரா உட்கார வைக்கப்பட்டார். ஆகஸ்டு மாதத்தின் கடும் வெயிலுக்கு ஆளாக்கப்பட்டு, அவர் தம்முடைய பழைய புகழும், பெருமையும் விளங்கிய இடங்கள் மூலம் இட்டுச் செல்லப்பட்டார். தாங்க முடியாத மானக்கேட்டில் அவர் தலையைக்கூட நிமிர்த்தவில்லை. எந்தப் பக்கமும் கண் ஓட்டத்தைச் செலுத்த வில்லை. ஆனால் நசுக்கப்பட்ட சிறு மரக் கொம்பினைப்போல உட்கார்ந்திருந்தார்.' அவருடைய அவல நிலை குடிமக்களின் உள்ளத்தில் இரக்கத்தை தோற்றுவித்தது. அக்காட்சியை நேரில் கண்ட பெர்னியர் என்பவர் எழுதுகிறார் : 'கூடியிருந்த கூட்டம் மிகப் பெரியதாயிருந்தது. எங்குப் பார்த்தாலும் மக்கள் அழுவதையும், இரக்கம் தூண்டும் மொழியில் தாராவின் விதியை எண்ணி வருந்துவதையுங் கண்டேன்......ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மனத்தை அறுக்கத்தக்க, அவலம் அழுகை யொலிகளைக் கேட்டேன். ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் தங்களுக்கே ஒரு பெரிய கேடு நேர்ந்துவிட்டது போல அழுதுகொண்டிருந்தனர்.' ஆனால் அந்த துரதிர்ஷ்டம் கொண்ட இளவரசர் குதிரைப்படையாலும், விற்படையினராலும், சூழப்பட்டிருந்ததால், அவரைக் காப்பாற்ற ஒருவரும் முன்வர முடியவில்லை. அப்போது ஆகஸ்டு 30ஆம் நாள்

[1] முகலாயப் பேரரசர்கள் பல தார மணப் பழக்கம் உடைய வராயினும் காதல் திருமணத்தில் பற்றுக் கொண்டிருந்தனர். டாக்டர் ஸ்மித் குறிப்பிடுவது போல, 'இந்தியா ஆபீஸ் நூலகத்தில் தாரா ஷுக்கோவின் காதலுக்கு இரங்கத் தக்க ஓர் அடையாளமாக ஓர் அழகிய படத்தொகுப்பு (album) இருக்கிறது. அதில் அவருடைய சொந்தக்கையெழுத்திலேயே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. 'இப்படத்தொகுப்பு 1051 ஆம் ஆண்டில் (கி.பி. 1641-1642) பேரரசர் ஷா ஜஹானின் மகனான இளவரசர் முஹம்மது தாரா ஷுக்கோவினால் தம்மிடம் மிக நெருங்கிய மிக இனிய நட்புக் கொண்ட நாதிர் பேகம் அம்மையாருக்கு வழங்கப்பட்டது.'

Koviloor Acadamy

துரோகி மாலிக் ஜிவான்கான் என்பவனுக்கு எதிராக ஒரு பெரும் மக்கள் கலகம் ஏற்பட்டது. அவுரங்கசீப்பினுல் அதற்குமேல் தாரா வின் உயிரை வைத்திருக்க முடியவில்லை. எனவே அந்தக் கலகம் தாராவின் முடிவை விரைவு படுத்திவிட்டது. முஸ்லிம் சட்ட அறிஞர் களின் முன்பு தாராவின் வழக்கு வைக்கப்பட்டது. இஸ்லாமியக் கொள்கைக்கு மாருக நடந்ததாக அவர்கள் இகழந்துரைத்தனர். ஆகஸ்டு 30 ஆம் நாள் இரவு கொலையாளிகள் தந்தையை அணைத்துக் கொண்டிருந்த சிபீரைப் புறந்தள்ளிவிட்டுத் தாராவைப் பிடித்துத் தலையை வெட்டி எறிந்தனர். அவுரங்க சிப்பின் கட்டளையினுல், மக்கள் தங்களுடைய அபிமானத்துக்குரியவர் உயிரோடு இல்லை என்பதைப் புரிந்து கொள்வதற்காகத் தாராவின் சவமடங்கிய பெட்டி நகர் முழுவதும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. பிறகு ஹுமாயூனின் கல்லறைக்கு அருகிலிருந்த தூபியின் கீழ் இருந்த ஒரு சிறு அறையில் புதைக்கப்பட்டது. இவ்வாறு மிக உயர்ந்த சிறப்பு வாய்ப்புகளுடன் தொடங்கிய ஷாஜஹானின் ஆட்சி பல அடுக்கான துன்பம் நிறைந்த அவலக் காட்சிகளுடன் முடிவுற்றது.

ஐ. ஷாஜஹானின் குணவியல்பும் ஆட்சியும் பற்றிய திறனுய்வு மதிப்பீடு

ரோ (Roe), டெர்ரி, பெர்னியர், டிலேயெட் (De Laet) போன்ற ஐரோப்பிய ஆசிரியர்களும் டாக்டர் ஸ்மித் என்ற தற்கால ஆசிரிய ரும் கருதுவது போலவே ஷாஜஹான் முக்கியமாக இரங்காத உள்ளம் படைத்தவராகவோ, அளவுக்கு மீறி இன்பந் தேரும் அரசராகவோ இருக்கவில்லை. எனினும் அவருடைய கடுமையைக் காட்டும் சில நிகழ்ச்சிகள் இல்லாமல் போக வில்லை. வெற்றிப் படையாளராகத் திண்மை வாய்ந்த அவர், தம்முடைய அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டி உண்மையில் மகிழ்ச்சியில்லாத நினைவுகளைக் கொடுக்கும் முறைகளில் சிம்மாசனத்தைப் பெற்ருர். ஆனுல் நூர்ஜஹானின் இடைவிடாத தொல்லைகளுக்கு அவர் ஆளாகிவர நேர்ந்ததைக் கவனிக்கும் போது, டௌ (Dow) என்பவர் எழுதுவது போல, ‘அந்தப் பேய்ச் செயல் செய்யும்படி தூண்டிய சூழ்நிலைகளின் வன்மைப் போக்கைக் கண்டு நம்முடைய பாதிக் காலம் மறந்து போய் விடுகிறது.’ மேலும் ‘முதலில் செய்த இந்த குற்றங்களுக்காகப் பின்னுல் அவர் கண்டிப்பான நீதியும் கண்ணோட்டமுடைய அரசாட்சி யின் மூலமும், தம்முடைய குடிமக்களின் நலத்திற்காகப் பாடுபடும் உள்ளத்தாலும் போதுமான அளவு கழுவாய் தேடிக்கொண்டார்.’ இவ்வாறு 1631-1632 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொடிய பஞ்சத் தின் போது குடிமக்கள் பட்ட துன்பங்களை யெல்லாம் குறைப்பதற்காக மிகவும் உழைத்தார். ஆட்சி முறையில் போதிய அளவு உழைப்பும் உற்சாகமும் காட்டினுர். அவருடைய மூதாதைகளைப்போல, அவர்


Koviloor Academy

அவ்வளவு பெரிய போர் வீரராய் இல்லாமற் போயினும், அவரிடம் படைத் துறைப் பண்புகள் இல்லாமற்போய் விடவில்லை. அவருடைய மதக் கொள்கையில் தீவிரமான பற்றுக் கொண்டிருந்தவராய் அக் கொள்கைக்காகப் பாடுபட்டார். பிரயாண வரி (Pilgrimage Tax)யை மீண்டும் கொண்டு வந்தார். முஸ்லிம்கள் மற்ற மதங்களுக்கு மாறுவதைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதுடன் முஸ்லிம்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும் பாடுபட்டார். ருகைய்யா பேகமால் (Ruqayya Begam) வளர்க்கப்பட்ட அவர் துருக்கியில் எழுதப்படிக்வும் அறிந்திருந்தார். இளமை வாழ்க்கையில் முல்லா காஸிம் பேக் தப்ரெஸி (Mulla Qasim Beg Tabrezi), ஹக்கீம் தவாயி (Hakim Dawai), ஷேக் அப்துல் கைர் (Shaikh Abdul Khair), ஷேக் சூபி (Shaikh sufi) போன்ற தலை சிறந்த ஆசிரியர்களிடம் பயிற்சி பெற்ற அவர் பாரசீகமொழி, இந்தி இரண்டும் பேசுவதற்கு நன்கு கற்றிருந்தார். இயல்பிலேயே இரக்க மனம் படைத்தவரான ஷாஜஹான், அன்பு மிக்க தந்தையாகவும், ஆசை மிக்க கணவராயும் இருந்தார். 1612-ல் திருமணம் செய்து கொண்ட மும்தாஸ் மஹாலிடம் ஆழ்ந்த காதல் கொண்டிருந்தார். அத்தம்பதிகள் ஏறக்குறைய பத்தொன்பது ஆண்டுகள் இன்பவாழ்க்கையில் திளைத்திருந்தனர். மும்தாஸ் தம் கணவரின் தவறுபடாத நண்பராயும், அவருடைய துன்பக்காலத்தில் அறிவு மிக்க ஆலோசனைகள் அளிப்பவராயும் இருந்தார். 1631-ல் குழந்தைப்பேற்றின் போது அவர் இறந்துவிட்டார். அவருடைய பெயரை அழியாமல் செய்வதற்காக, அவருடைய கல்லறையின் மீது ஷாஜஹான் புகழ்பெற்ற தாஜ் மஹாலைக் கட்டினார். அது காதல் தொடர்புக்கு இணையில்லாத ஒரு நினைவுச் சின்னமாய் விளங்குகிறது.

ஷாஜஹானின் ஆட்சிக்காலம் இந்தியாவில் முகலாய ஆட்சியின் பொற்காலமாகப் பொதுவாகக் கருதப்படுகிறது அக்காலத்தில் முகலாய ஆட்சி உச்ச நிலையில் இருந்தது. அடுத்த அரசுரிமைப் போர் தொடங்குவதற்கு முன்பு பேரரசரின் அதிகாரத்தை நன்ருகக் கட்டிக் காப்போர் எவருமில்லை. அக்காலத்தில் தான் இந்தியாவுக்கும் மேற்கு ஆசியாவுக்கும் இடையே ஏற்றுமதி வாணிகம் வளர்ச்சியுற்றது. ஐரோப்பாவுடன் ஏற்றுமதி வாணிகம் தொடங்கியது. அரசாங்கத்தில் பொருள் வருவாய் மிகுதிப்பட்டுக் கொண்டு வந்தது. ஆடம்பரமும் அலங்காரச் சிறப்பும் அக்காலத்தில் மிக்கிருந்தன. அவை கம்பீரம் மிக்க தாஜ், ஆக்ராவின் முத்து மசூதி (Pearl Mosque), திவானி ஆம் (Diwan-i-Am), திவானி காஸ் (Diwan-i-Khas), ஜாமி மசூதி (Jami Masjid) 'புகழ் பெற்ற மயில் சிம்மாசனம்' (Celebrated .Peacock Throne) போன்ற கலைக்கவின் மிக்க அற்புதமானகட்டிடங்கள் யாவும் அதற்கு அழியாத பெரும் சான்றுகளாகும். இவையாவும் அமைதியும் செழிப்பும் அக்காலத்தில் இராச்சியம் முழுவதும் நிலவியிருந்தன என்பதை நாம் நம்பும்படி செய்கின்றன.

Koviloor Academy

ஆனால் அக்காலத்து ஐரோப்பிய வணிகர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புக்களையும், இந்தியாவில் இருந்த ஆங்கிலத் தொழிற் சாலைகளின் ஏடுகளையும் கவனித்துப் படித்துப் பார்க்கும் போது 'ஆட்சியை



முகலாய இந்தியா

விளக்கி வரைந்த படத்தில் சில கறுப்புப் புள்ளிகளும் இருந்தன; அவை அரசவை வரலாற்றுக் கோப்பாளர்களால் புறக்கணிக்கப் பட்டுவிட்டன.' என்று அறிகிறோம். வெளித்தோற்றத்தில் ஒளிச்

Koviloor Academy

சிறப்பும், செல்வ வளமும் பொருந்தியதாகத் காணப்பட்ட மேற்பரப்பின் கீழே, நாட்டின் பொருளாதார முறையில் சில வருந்தத்தக்க சீர் கேடுகளும் இருந்தன. மாகாண கவர்னர்களின் முறை கேடான ஆட்சி 'உழவர்களும், நுண் தொழில் செய்வார்களும் அடிக்கடி வாழ்க்கைத் தேவைகளைக்கூடப் பெறுமல் செய்து வந்தது' என்று பெர்னியர் என்பார் கூறிய கூற்று அந்தக் காலத்துத் தொழிற் சாலை ஏடுகளில் காணப்படுகிறது. மேலும் விரிவான படி முறை அதிகாரிகளின் ஆட்சி மேற்கொள்ளப்பட்டதாலும், பெரியதொரு படை வைக்கப்பட்டிருந்த தாலும், அற்புதமான அமைப்புக் கலைக் கவின் மிக்க கட்டிடங்கள் எழுப்புவதற்கு மிகுதியான செலவுகள் ஏற்பட்டதாலும், உழவர்கள் மேலும், உற்பத்தியாளர்கள் மீதும் பெரிய வரிச்சுமை விழுந்தது. பேரரசின் உயிர் நிலையே உழவர்கள், உற்பத்தியாளர்கள் இவர்களிடமே இருந்தது. இவ்வாறு தேசியப் பொருளாதாரச் சீர் குலைவு ஏற்பட்டது. அடுத்த ஆட்சியில் அச்சீர்குலைவு மிகுதியாகத் தொடங்கியது. இந்தியாவில் அக்பரின் அறிவுத்திறனாலும், அவருடைய துணையாளர்களின் சிறப்பறிவினாலும் வளர்ந்து விரிவாக்கப்பட்ட மாபெரும் தைமூரித்தின் அரசு, பிறகு சீர்குலைந்து போகத் தொடங்கியதற்குச் சிறந்த காரணங்களுள் அப்பொருளாதாரச் சீர்குலைவு முக்கியமான ஒன்றாகும். சுருக்கமாகக் கூறுமிடத்து, ஷாஜஹானின் கீழ் இருந்த இந்தியா பல விதங்களில் பதினான்காம் லூயியின் (Louis XIV) கீழிருந்த பிரான்சினை ஒத்திருக்கிறது. அரசாங்கத்தின் படைத் துறைமுறையும் பலவீனப்பட்டுக்கொண்டே வந்தது. பொருளாதார ஆட்சி முறையும் தளர்ச்சியுற்றுக் கொண்டே வந்தது.

Koviloor Acadamy

4. அவுரங்கசீப் ஆலம்கீர் (1658-1707)

1. ஆட்சியின் இரண்டு பகுதிகள்

அவுரங்கசீப்பின் குறிப்பிடத்தக்க ஐம்பது ஆண்டு ஆட்சியை 'இயல்பாகவே இரண்டு சம பாதிகளாகப் பிரிக்கலாம்.' ஒவ்வொரு பாதியும் தனக்கென நன்குவரையறுக்கப்பட்ட சிறப்பியல்புகளையும், மற்றப் பாதியிலிருந்து வேறுபடுத்தி யறியக்கூடிய சிறப்பியல்புகளையும் பெற்றிருப்பதைக்காணலாம். முதல் பாதியில் அதாவது 1658-லிருந்து 1681 வரை வடக்குப்பாகம் கவனத்தை ஈர்க்கத்தக்க பகுதியாகவும், சிவில், படைத்துறை போன்ற எல்லா முக்கியமான வளர்ச்சிகளும் ஏற்படுவதற்கான இடமாயும் இருந்துவந்தது. அப்போது தெற்குப் பாகம் 'நெடுந்தூரத்தில் இருந்த பகுதியாயும் புறக்கணிக்கத்தக்க பகுதியாயும் காணப்பட்டது.' ஆனால் ஆட்சியின் இரண்டாம் பாதியில் அரசியல் ஈர்ப்புத்தானம் வட இந்தியாவிலிருந்து தக்கணத்துக்கு மாறியது. 1681-ல் பேரரசர் தம் குடும்பத்துடன் தக்கணத்துக்குச் சென்றார். அதன் விளைவாக அவருடைய அரசவையும் பெரிய படையும் வடக்கின் ஆட்சியும் புறக்கணிக்கப்பட்டன. வடநாடு முழுவதிலும் குழப்பமும் அராஜகமும் மலியத் தொடங்கிவிட்டன. பேரரசர் பிஜப்பூர், கோல்கொண்டாக்களின் முஸ்லிம் சுல்தானியங்களை அடக்கியொடுக்க முடிந்தது. ஆனால் புதிதாக முளைத்துவந்த மராத்தியத் தேசிய எழுச்சியுடன் செய்துவந்த அவருடைய போராட்டம் முடிவு பெறாமலேயே இருந்துவந்தது. தக்கணப் புறப்பாடு பேரரசுக்குப் பெருங் கேடுகளை விளைவித்தது. வியப்பு மிக்க இடைவிடா உழைப்பும், கடமையில் அற்புதமான ஈடுபாடுங் கொண்டிருந்தவராயினும் அவுரங்கசீப்பின் நீண்ட ஆட்சி அவல நிலையினை அடைந்துமுடிந்தது.

2. அரசுரிமை பெறுதலும் இருமுறை முடிசூட்டப்பெறுதலும்

அவுரங்கசீப் அரசு கட்டிலேறிய வரலாற்றை முன்னரே விளக்கியிருக்கின்றோம். அவர் இரு முறை முடிசூட்டப்பட்டார். முதலில் ஆக்ராவைக் கைப்பற்றிய உடனே 1658 ஜூலை 21ஆம் நாளிலும்

Koviloor Academy

மீண்டும் காஜா, தியேராய், இவற்றின் பெரிய வெற்றிகளுக்குப் பிறகு 1659 ஜூன் மாதத்தில் பெரிய ஆடம்பரத்துடனும் முடிசூட்டப்பட்டார். அவருடைய பெயரில் குத்பா படிக்கப்பட்டது. பாதுஷா (பேரரசர்) காஸி (புண்ணிய வீரர்) என்ற பட்டங்களுடன் ஆலம் கீர் (உலகத்தை வென்றவர்) என்ற பட்டத்தையும் புனைந்துகொண்டார். அரசுரிமைப்போர் நடந்த காலத்தில் பொது ஆட்சி முறையில் ஏற்பட்டிருந்த சீர்கேடுகளாலும், பொருள்களுக்குப் பஞ்சகாலத்தில் உயர்ந்திருந்த விலைகளாலும் குடிமக்களுக்கு ஏற்பட்டிருந்த துன்பங் களைக் குறைப்பதற்கான முயற்சிகளை மற்ற முஸ்லிம் அரசர்களைப் போலவே, அவுரங்கசீப்பும் மேற்கொண்டு தம் ஆட்சியைத் தொடங் கினார். தொல்லை மிக்க பல தீர்வைகளையும் வரிகளையும் குறைத்தார். ஆனால், அவருக்கு முற்பட்ட அரசர்கள் காலத்தில் ஏற்பட்டது போலவே அவருடைய தடை ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளில் தவிர ‘ ஒன்றும் பயனளிக்கவில்லை.’

3. ஆட்சிப்பரப்பின் விரிவு : வட கிழக்கில் ஆதிக்கம்

இரண்டு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த முகலாயப் பேரரசின் ஆட்சி எல்லையை விரிவுபடுத்தல், அவுரங்கசீப் பின் ஆட்சியிலும் முன்னேற்றத்தைக் கண்டது சிறப்பு மிக்க செய்தி யாகும். முந்திய ஆட்சியில் இழக்கப்பட்ட காந்தகாரையும் மத்திய ஆசியாவையும் நீக்கிவிட்டால், பேரரசர்களின் மற்ற வெற்றிகள் அப் படியே இருந்தன. தெற்கே மராத்திய இராச்சியம் எழுவதற்குமுன் ‘புதியன செய்வதில் ஆர்வம் கொண்டிருந்த அதிகாரிகள்’ ‘வெற்றி கரமாகத் தங்கள் தலைவரின் இராச்சியத்தை விரிவுபடுத்தினார்கள். பீஹாரின் கவர்னரான தாவூத்கானால் 1661-ல் பலாமவு (Palamau) வெல்லப்பட்டது. பேரரசின் கிழக்கு எல்லைப்பகுதியில் அவுரங்க சீப்பின் அதிகாரிகள் தங்கள் சக்திகளுக்குச் சிறந்த வாய்ப்பு களைப் பெற்றிருந்தனர். 1661-ல் வங்காளக் கவர்னராயிருந்த மீர் ஜும்லா நன்கு தளவாடங்கள் நிறையப்பெற்ற ஒரு படை யுடன் ஆஹோம்களின் (Ahoms) ஆக்கிரமிப்பை அடக்குவதற்கு அந்த எல்லையை நோக்கிப் புறப்பட்டார். பிறப்பில் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்களான ஆஹோம்கள் மேற்கு பர்மாவி லிருந்த சொந்த நாட்டை விட்டுக் குடியேறிக் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டிலேயே பிரம்மபுத்திரச் சமவெளியின் ஒரு பகுதியைக் கைப்பற்றி யிருந்தனர். பதினைந்து பதினாறும் நூற்றாண்டுகளில் படிப்படியாகத் தங்கள் எல்லையை மேற்கே விரிவுபடுத்திக்கொண்டே அவர்கள் ஒரு ராச்சியத்தை நிறுவினர். அந்த ராச்சியம் வடமேற்கே பார் (Bar) நதிவரையிலும் தென்மேற்கே கலாங் (Kalang) நதிவரை யிலும் பரவியிருந்தது. அங்கே அவர்கள் படிப்படியாக இந்துக் களாக மாறிவந்தனர். இந்து மதத்தையும், பழக்க வழக்கங்களையும்

Koviloor Acadamy

மேற்கொண்டனர். அதே சமயத்தில் முகலாயப் பேரரசின் கிழக்கு எல்லை இப்போதுள்ள மாவட்டங்களான காமரூபா (Kamarupa) கோவால் பாரா (Goalpara) என்பவற்றைச் சேர்த்துக்கொண்டிருந்த கோச் ஹாஜோ (Koch Hajo) என்ற பிரதேசத்தை வென்றிருந்த தால், பார்நதிவரை பரந்திருந்தது. இது முகலாயர்களுக்கும் ஆஹோம்களுக்கும் இடையே மோதுதல் உண்டாவதைத் தவிர்க்க முடியாததாகச் செய்தது. உண்மையில் ஏற்கெனவே ஷாஜஹான் ஆட்சிக்காலத்தில் ஆஹோம்கள் அவருடைய பேரரசின் கிழக்கு எல்லைப்பகுதியில் படையெடுத்தபோது முகலாயர்கள் அவர்களுடன் கடுமையாகப் போரிட நேர்ந்தது. 1639-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருவருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டதும் போர் நின்றது. ஆனால் அரசு உரிமைப் போரைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆஹோம்கள் 1658-ல் கல்ஹத்தியைக் கைப்பற்றிக் கொண்டனர். 140 குதிரைகள், 40 துப்பாக்கிகள், 200 பொருத்துப் பூட்டுகள், நிறையப் பொருள் இவற்றையுங் கைப்பற்றினர். இந்த ஆக்கிரமிப்பாளர்களைத் தண்டிப்பதற்காக மீர் ஜும்லா, அந்தப் பகுதிகளில் போர் நடத்துவதற்கு மிகவும் இன்றியமையாது தேவைப் பட்ட மிகப் பல படைக்கலன்கள் நிறைந்த படகுகள், முற்றுகையிடுதற்கு வேண்டிய பொருள்கள், பீரங்கிகள் இவற்றுடன் 12,000 குதிரை வீரர்கள், 30,000 காலாட்கள் கொண்ட வலிமை வாய்ந்த ஒரு பெரும் படையுடன் 1661 நவம்பரின் தொடக்கத்தில் டாக்காவிலிருந்து புறப்பட்டார். அவருடைய முதல் முற்றுகைகள் வெற்றிகரமாய் முடிந்தன. கூச் பீஹார், அஸ்ஸாம் இரண்டையும் வென்றார். தம்முடைய வெற்றிப்படை நடப்பின்போது 'இயற்கையும் மனிதனும் தந்த எதிர்ப்புக்கள்' அளித்த துன்பங்களையெல்லாம் சாதாரண வீரர்களுடன் பகிர்ந்துகொண்டு, அவர் 1662 மார்ச்சு 17ஆம் நாள் ஆஹோம் இராச்சியத்தின் தலை நகரான கார்காவோனை அடைந்தார். அப்போது ஆஹோம்கள் எதிர்ப்புச் செய்யாமல் தங்கள் தலைநகரையும் சொத்துக்களையும் பேரரசினரின் கருணைக்கே விட்டு விட்டு ஓடி விட்டனர். பேரரசினர் ஏராளமான கொள்ளைப் பொருள்களைப் பெற்றனர்.

ஆனால், விரைவில் இயற்கை ஆஹோம்களுக்காகப் போராடியது. மழைக்காலம் தொடங்கியவுடன் மீர்ஜும்லாவின் படை ஆரோக்கிய மில்லாத தட்பவெப்ப நிலையினாலும் போதுமான உணவுப் பொருள்கள், மருந்து முதலியன இல்லாததாலும் மிகக் கடுமையாகத் துன்புற்றது. இது கண்டு 'நசுக்கப்படாமல் பயப்படுத்தப் பட்டிருந்த' ஆஹோம்கள் தைரியங் கொண்டு விரைவில் தாக்குதலைச் செய்ய முற்பட்டு முகலாயர்களுக்குத் தொந்தரவு கொடுக்கத் தொடங்கினர். முகலாயர்களின் பாசறையில் கொள்ளை நோயும் பஞ்சமும் ஏற்பட்டதால் அவர்களுடைய துன்பங்கள் மிகுதிப்பட்டன. ஆனால்,

Koviloor Academy

தொந்தரவுகளால் மனந்தளராது, முகலாயக் கவர்னர் மழைக்காலம் முடிந்தவுடன் மீண்டும் தாக்குதலைத் தொடங்கிப் போரைத் தொடர்ந்து நடத்தினர். மேலும் எதிர்த்துப் போரிடுவதால் பயனில்லை என்று எண்ணி ஆஹோம்கள் பேரரசினருடன் சமாதான உடன் படிக்கை செய்து கொண்டனர். இவ்வாறு 'ஒரு படைத்துறைக் கொள்ளைப் படை யெடுப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் மீர் ஜும்லாவின் அஸ்ஸாம் படை யெடுப்பு ஒரு வெற்றியே' என்று சர். ஜே. என். சர்க்கார் கூறுகிறர். ஆஹோம் அரசரான ஜயத்வஜ் (Jayadhvaj) ஆண்டுதோறும் கப்பம் கட்டுவதாக வாக்குறுதி யளித்த துடன் போரினல் நேர்ந்த இழப்புக்குப் பெருந்தொகையை இழப்பீடா கக் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார். இழப்பீட்டின் ஒரு பகுதியை உடனே கொடுத்துவிடுமாறும் மீதியை அடுத்த பன்னிரண்டு மாதங்களில் மூன்று தவணைகளில் கொடுத்து விடுமாறும் உடன் படிக்கை செய்யப்பட்டது. முகலாயர்கள் யானைகள் நிறைந்த தர்ராங் (Darrang) மாகாணத்தின் பாதிக்கு மேற்பட்ட பாகத்தையும் உரிமை யாகப் பெற்றனர். ஆனல் அந்த வெற்றி மிகப் பெருஞ் செலவு செய்தே பெறப்பட்டது. அது முகலாயர்களுக்கு அளவிலாப் பெருந்துன்பங் களை யளித்தது. அவுரங்கசீப்பின் மிகச் சிறந்த தளபதிகளில் ஒருவரான மீர்ஜும்லா உட்படப் பல்லோர் உயிரைக் குடித்தது. டாக்காவுக்குத் திரும்பிவரும்போது 1663 மார்ச்சு 30ஆம் நாள் மீர் ஜும்லா இறந் தார். அந்த வெற்றியும் நீண்ட காலம் நீடிக்க வில்லை. சில ஆண்டு கள் கழிந்ததும் ஆஹோம்கள் மீண்டும் காமரூபாவைக் கைப்பற்றி னர். முகலாய அரசு நீண்ட ஆனல் இடையிடுபட்ட போரை நடத்தி வந்தது. ஆனல் நிலையான நன்மை எதுவும் ஏற்படவில்லை.

ஆஸப்கானின் மகனும் அவுரங்கசீப்பின் தாய் மாமனுமான ஷெயிஸ்டகான் (Shaista Khan) மீர் ஜும்லாவின் மரணத்திற்குப்பின் தொடர்ந்த தாற்காலிக வைஸ்ராயின் குறுகியதும் வெற்றியற்றதுமான நிர்வாகத்திற்குப் பிறகு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியை மூன்று ஆண்டுகளுக்குக் குறைவான இடையிட்டுடன் சுமார் முப்பது ஆண்டு காலத்திற்குப் பொறுப் பேற்றிருந்தார். 1694-ல் தொண்ணூறுக்கு மேல் வயதடைந்த பிறகு ஆக்ராவில் இறந்தார். அவர் போர்ச்சுக்கீசியக் கப்பல் கொள்ளைக்காரரைத் தண்டித்து, வங்காள விரிகுடாவில் கப்பல் கொள்ளைக்காரர்களுக்கு அரண் போல இருந்த சோந்திப் (Sondip) தீவினைச் சேர்த்துக் கொண்டார். அவர்களின் கூட்டாளியாக இருந்த அராகானின் அரசனிடமிருந்து (1666-ல்) சிட்டகாங்கை வென்றர். கொள்ளைக்காரர்களின் தீங்கு முழுவதையும் ஒழிக்க முடியவில்லை. அதிலிருந்து பதினெட்டாம் நூற்றண்டின் கடைசிவரை கிழக்கு வங்காளத்தின் மக்களைத் துன்புறுத்திக் கொண்டே இருந்தது.

Koviloor Acadamy

4. வடமேற்கு எல்லைக் கொள்கை

முகலாயப் பேரரசுக்குப் பெருந்தொல்லைகளைத் தொடர்ந்து நெடுங்காலமாகக் கொடுத்துக் கொண்டு வந்த கலகக்கார முஸ்லிம் மலை ஜாதிமக்கள் நிறைந்த வட மேற்குப் பகுதியில் அவுரங்கசீப் அரசியல், பொருளாதார முறைகளுள் ஒரு முன்னேற்றக் கொள்கையைத் தேர்ந்தெடுத்துக் கடைப்பிடிக்க வேண்டியவரானார். அங்கே வாழ்ந்து வந்த பலம் வாய்ந்த, எண்ணிக்கையில் பெருகிவந்த ஆப்கானிய இனப்பிரிவினர் அந்தப்பகுதியில் விளைச்சல் மிகக் குறைவாயிருந்தமையின் வழிப்பறிக் கொள்ளையடித்தல், வடமேற்குப் பஞ்சாப்பின் வளம் நிறைந்த நகரங்களை இருட்டடிப்புச் செய்தல் ஆகியவற்றில் ஈடுபட நேர்ந்தது. வடமேற்குக் கணவாய்களைத் திறந்து வைத்திருக்கவும், அவற்றின் அடிவாரத்திலிருந்த சம வெளிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் வேண்டி அவுரங்சிப்பின் அரசாங்கம் முதலில் அந்த மலை ஜாதியினருக்குப் பணம் கொடுத்துத் தங்கள் பக்கம் அவர்களை வசமாக்கிக் கொள்ள முயன்றனர். ஆனால் 'அரசியல் ஊதியத் தொகைகள் கூட மக்களின் கீழ்ப்படிதலைப் பெறுவதில் எப்போதும் வெற்றிகரமாக இருக்கவில்லை.' யூசுப்ஸாயிக்கள் தங்கள் தலைவர்களில் ஒருவரான பாகூ (Bhagu) என்பவரின் தலைமையில் கி.பி. 1667ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் படைக்கருவிகளுடன் திரண்டபோது, தொல்லைகள் தோன்றத் தொடங்கின. அவர்களில் பெரும்பாலோர் அட்டாக்குக்கு (Attock) அப்பால் இருந்த சிந்து நதியைத் தாண்டி ஹஸார (Hazara) மாவட்டத்தைப் படையெடுத்தனர். மீதியிருந்த கூட்டத்தினர் மேற்கு பெஷாவரையும் அட்டாக் மாவட்டங்களையும் சூறையாடத் தொடங்கினர். எனினும் ஒரு சில மாதங்களில் யூசுப்ஸாயிக்களின் எழுச்சி ஒடுக்கப்பட்டது.

ஆனால் 1672-ல் அப்ரிடிஸ் (Afridis) தங்கள் தலைவர் அக்மல் கான் (Akmal Khan) என்பவரின் தலைமையில் முகலாயர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். அக்மல்கான் தாமே அரசராக முடி சூட்டிக்கொண்டு ஒரு வகைத் தேசியப் போருக்காக ஒழுங்கு முறைப்படி அணியாகத் திரண்டிருக்கும்படி பட்டாணியர்களை அழைத்தார். மே மாதத்தில் அப்ரீத்துப் படைகள் 'ஆலி மசூதி' (Ali Masjid) என்ற இடத்தில் முஹம்மது ஆமின்கானை (Muhammad Amin Khan) நன்றாகத் தோற்கடித்தனர். முஹம்மது ஆமினும் அவருடைய உயர் அதிகாரிகள் சிலரும் உயிர் தப்பினர். ஆனால் முகலாயர்கள் மற்ற எல்லாவற்றையும் இழந்தனர். இந்த வெற்றி அக்மல்கானின் மதிப்பையும் பொருள்வருவாய் வழிகளையும் மிகுதிப் படுத்தியது. மேலும் பல வீரர்கள் அவருடைய படையில் சேரும்படி கவர்ச்சி தந்தது. அதனால் 'அட்டாக்கிலிருந்து காந்தகார் வரையிலிருந்த பட்டாணியர் நிலம்முழுதும்' படைக்கலந் தாங்கி எழுந்தது.

Koviloor Acadamy

பட்டாணியர்களின் கட்டாக் இனப்பிரிவினரும் அப்ரீத்துக்களுடன் சேர்ந்தனர். அப்பிரிவினரைச் சேர்ந்த கவிஞரும் தலை வீரருமான கூஷ்-ஹால்-கான் (Khush-hal-Khan) 'தேசிய எழுச்சியின் வழி காட்டும் தலைவரானார்; தம் பேனா மூலமும், வாள்மூலமும் ஒரே மாதிரி மலைச் சாதியினரின் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்தார். 1674 பிப்ரவரியில் ஷுஜாத்கான் (Shujaat Khan) கீழ் வந்த பேரரசப் படையை, ஆப்கானியர்கள் தாக்கினர். ஷுஜாத்கான் கொல்லப்பட்டார். ஆனால், அவருடைய படையின் மீதிப்பகுதி முகலாயர்களுக்கு ஆதரவாக ஜஸ்வந்த்சிங்கு அனுப்பிய ஒரு ராத்தோர்ப் படையால் காப்பாற்றப்பட்டது.

வட மேற்கில் பேரரசின் மதிப்பை மீண்டும் நிலைநாட்ட இன்னும் மிகத் தீவிரமான நடவடிக்கைகள் தேவைப்படுகிறது என்பதை இப் பேராபத்தின் மூலம் அவுரங்கசீப் உறுதியாக அறிந்து கொண்டார். அவர் 1674 ஜூலை மாதத் தொடக்கத்தில் பெஷாவருக்கு அருகிலிருந்த ஹஸன் அப்தால் (Kasan Abdal) என்ற இடத்துக்கு நேரில் சென்று போரியல் சூழ்ச்சியும் படைக்கலங்கள் இவற்றின் சாதுரியமான இணைப்பால் பெரும் பெற்றி அடைந்தார். கொடைப் பொருள்கள், ஊதியங்கள், ஜாகீர்கள், உத்தியோகங்கள் இவற்றின் மூலம் பல ஆப்கானிய இனப்பிரிவினர் அவர் பக்கம் சேர்க்கப்பட்டனர். இவற்றிற்கு இணங்காதவர்கள் ஆயுதங்கள் மூலம் அடக்கப்பட்டனர். நிலைமை ஓரளவு நன்றாகச் சீராக்கப்பட்டவுடன் 1675 டிசம்பர் மாத அளவில் பேரரசர் பஞ்சாப்பை விட்டுத் தில்லிக்குச் சென்றார். 1677 முதல் 1698 வரை ஆப்கானிஸ்தானத்தின் திறமை மிக்க கவர்னராயிருந்த ஆமீன்கானின் அறிவு மிக்க அரசியல் கொள்கையால் அவுரங்கசீப்பின் வெற்றி உறுதியாக்கப்பட்டது. ஆலிமர்தான் கானின் மகளும் தம்முடைய மனைவியுமான ஷாஹிப்ஜி (Sahibji) என்பவளின் அறிவு மிக்க அறிவுரையின்படி ஆமீன்கான் தந்திரமிக்க இணக்கக் கொள்கையைக் கடைப்பிடித்தார். இவ்வாறு பொருட்காட்சியளிக்கும் கொள்கையைக் கைப்பிடித்தல் அல்லது ஓர் இனப்பிரிவுக்கு எதிராக மற்றோர் இனப்பிரிவைத் தூண்டி விட்டு மோதச் செய்தல்- அல்லது அவருடைய சொந்த உருவத்தில் கூறினால், இரண்டு எலும்புகளை ஒன்றோடொன்று மோதி நொறுக்குதல் இவற்றின் மூலம் வடமேற்கே பேரரசின் மதிப்பை மீண்டும் நிலைநிறுத்தி, முகலாயப் பேரரசர் ஆப்கானிய எழுச்சிகளை ஒடுக்க முடிந்தது. கட்டாக்கின் (Khattak) தலைமை வீரரான கூஷ்ஹால், கடைசியில் அவர் மகனே பெரும் எதிரியாகி அவரை முகலாயர்களுக்குக் காட்டிக் கொடுக்கும் வரை, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார்.

முகலாயர்களின் எல்லைப்புறப் போர்கள் வெற்றிகரமான ஒரு முடிவில் முடிந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால்

Koviloor Academy

அவற்றின் மறை முக விளைவுகள் பேரரசின் நலங்களுக்குக் குந்தகமானவையாகவே இருந்தன. சர் ஜே. என். சர்க்கார் கூறுகிறார் : 'ஆப்கானியப் போர் பேரரசின் பெரும் பொருளை அழித்து விட்டது ; அதன் அரசியல் விளைவு இன்னும் தீங்கு மிக்கதாயிருந்தது. அடுத்து நேர்ந்த ராஜபுத்திரப் போரில் ஆப்கானியர்களைப் படை விரர்களாக அமர்த்திக்கொள்ள முடியாது போயிற்று. ஆப்கானியப் படையினரே அந்தக் கரம்பான பாழ்நிலத்தில் போரிட்டு வெற்றி பெறக்கூடிய சக்திவாய்ந்த படை வீரர்களாவர். மேலும் வடமேற்கு எல்லைப் பகுதியில் பணி செய்வதற்காகத் தக்கணத்திலிருந்து மிகச்சிறந்த முகலாயப் படைகள் கொண்டு போகப் பட்டமையின், சிவாஜியின்மேல் ஆக்கிரமிப்புச் செய்வதற்கான பிடிப்பு தளர்ந்தது. தம்முடைய பகைவரின் இப்படைபலப் பிரிவைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, 1675 டிசம்பருக்குப் பிறகு பதினைந்து மாதங்களில் மராட்டியத் தலைவரான சிவாஜி கோல் கொண்டாவிலிருந்து கர்நாடகத்துக்கும், பின்பு மீண்டும் மைசூர், பீஜப்பூரிலிருந்து ராய்காருக்கும் (Raigarh) சென்று, மேலும் மேலும் பல வெற்றிகளை அடைந்தார். அவருடைய வாழ்க்கையில் அது உச்சகட்டமாயிருந்தது. ஆனால் அப்ரீத்துகளும் கட்டாக்குகளும் தான் (Khattaks) அவருக்கு இடைவிடாது வெற்றியைத் தேடித்தந்தனர்.

5. இந்தியாவுக்கு வெளியே முஸ்லீம் உலகத்துடன் தொடர்புகள்

1661-க்கும் 1667-க்கும் இடைப்பட்ட காலத்தில் அவுரங்கசிப் மெக்காவின் ஷரீப், பாரசீகம், பால்க், புக்காரா (Bukhara), காஷ்கர் (Kashghar), உர்கன்ஞ் (Urganj) (கிவா-Khiva) ஷஹ்ரி நௌ (Shahr-i-nau) ஆகிய நாடுகளின் அரசர்கள், பஸ்ரா (Basra), ஹத்ரமௌத் (Hadramaut), யமன் (Yaman), மோச்சா (Mocha) இவற்றின் கவர்னர்கள், பார்பரி நாட்டின் (Barbary) ஆட்சியாளர், அபிசீனியாவின் (Abyssinia) அரசர் போன்ற அயல் நாட்டு முஸ்லிம் நாடுகளிடமிருந்து 'நல்வாழ்த்துத் தூதுக்குழுக்கள்' தம்மிடம் வரப்பெற்றார். அவருடைய ஆட்சிக்காலத்தில் ஒரே ஒரு முறைதான் 1590 ஜூன் மாதத்தில் கான்ஸ்டான்டிநோபிலிலிருந்து ஒரு தூதுக் குழு வந்தது. சர் ஜே. என். சர்க்கார் கூறுகிறார் : 'தொடக்கத்தில் அவருடைய கொள்கை ஏராளமான பொருட்கொடைகள் மூலம் அயல் நாட்டு இளவரசர்கள் அவர்களுடைய தூதுவர்கள் ஆகியோரை வியப்புக்கு ஆளாக்கினர். அதன் மூலம் தம் தந்தை, சகோதரர்கள் ஆகியோரைத் தாம் கொடுமையாக நடத்திய முறையை வெளி முஸ்லிம் உலகம் மறக்கும்படி செய்தார். மேலும் குறைந்தது செயலில் வெற்றி வீரராகவும், பணத்தை விருப்பப்படி செலவு செய்

Koviloor Acadamy

வதற்கு வாய்ப்புப் பெற்றிருந்தபோது, இந்தியாவின் அளவிட்டுச் சொல்லமுடியாத பெருஞ்செல்வத்துக்கு உரியவராகவும் இருந்தவருக்கு மரியாதை காட்டுவதாகவும் தோன்றியது.'

6. அவுரங்கசிப்பின் சமய நோக்கும், சமயக் கொள்கையும்

அவுரங்கசிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் ஆர்வமிக்க ஸுன்னி முஸ்லிமாக இருந்தார். உலகப் பொருள் ஆதாயத்தைக் கருதி அவருடைய சமயக் கொள்கை அமையவில்லை. தாராள மனப்பான்மை கொண்டிருந்த தாராவுக்கு மாறாக ஸுன்னி வைதிகத்தின் காப்பு வீரராகச் சிம்மாதனத்தைப் பெற்றிருந்த அவர், குர்ராவின் சட்டப்படி ஒவ்வொரு பக்தியுள்ள முஸ்லிமும் 'கடவுள் வழியில் தம்மை முயற்சியுடன் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்' அல்லது வேறு வகையில் கூறினால், முஸ்லிம் அல்லாத நாடுகள் (தார்-உல்-ஹர்ப் (Dar-ul-Harb) இஸ்லாமிய நெறியில் (தார்-உல்-இஸ்லாம்) (Dar-ul-Islam) மத மாற்றப்படும் வரை புண்ணியப் போரைத் தொடர்ந்து நடத்தி வரவேண்டும். இது அவரை மன இயல்பில் மிகவும் தூய்மைக் கொள்கை உடையவராகச் செய்தது. அதனால் அவர் 'வாழ்க்கையில் கடுமை மனப்பான்மையும், நெறிதவறாத பழைமை வழியில் பற்றும் உடைய தம்முடைய சொந்தக் கருத்துக்களை, மக்களிடையே வற்புறுத்தப் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டார். அவருடைய பிறந்த நாள் விழாவிலும் முடி சூட்டுவிழா நாளிலும் வழக்கமாகக் கொண்டாடப்படும் கொண்டாட்டங்களைக் குறைக்கச் செய்தார். தம் ஆட்சியின் பதினொன்றாம் ஆண்டிலிருந்து ஜரோக்கா தரிசனப் (Jharoka-darsan) பழக்கத்தை நிறுத்தி விட்டார். ஜரோக்கா தரிசனம் என்பது அவருக்கு முந்திய அரசர்கள் நாள்தோறும் காலையில் அரண்மனையின் ஒரு புறத்தில் ஒரு மேன் மாடத்தில் தோன்றி எதிரில் நிலத்தில் நின்றுகொண்டு மக்கள் செய்யும் வணக்கத்தை ஏற்றுக் கொள்வதாகும். அதே ஆண்டில் அவர் இசையையும் அரண்மனையிலிருந்து நீக்கினார். பழைய இசைவாணர்களையும் பாடகர்களையும் வேலையிலிருந்து நீக்கினார். ஆனால் அரசவையிலிருந்து இசை நீக்கப்பட்டுவிட்டாலும் அதை மனிதரின் ஆன்மாவிலிருந்து நீக்கிவிட முடியவில்லை.' மறைமுகமாகப் பல பிரபுக்களால் இசை தொடர்ந்து பயிலும்படி செய்யப்பட்டது. பேரரசரின் தடை முக்கியமான சில நகரங்களில் மட்டும் சிறிது வரியுள்ளதாய் இருந்தது. ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டில், இரண்டு பிறந்த நாட்களின் தங்கம், வெள்ளி முதலிய பொருள்களைப் பேரரசரின் எடைக்குச் சரியாக நிறுக்கும் வழக்கச் சடங்கும் கைவிடப்பட்டது. அரசாங்க வானியல் ஆராய்ச்சியாளரும், சோதிடர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். ஆனால் பேரரசின் கட்டளையால்

Koviloor Acadamy

நீக்கிவிட முடியாத அளவுக்கு முஸ்லீம்களுடைய உள்ளத்தில் சோதிடத்தில் நம்பிக்கை ஆழ்ந்து வேரூன்றியிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை அந்நம்பிக்கை உறுதியாகவே இருந்து வந்தது. மற்ற சமயக் கொள்கையினர் நாணயங்கள் மூலம் முஸ்லீம்கள் நம்பிக்கைப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் கலிமாவை (Kalima) தூய்மை கெடச் செய்தமையின் அதைத் தடுப்பதற்காக அவர் அம்முறையைப் பயன்படுத்தக் கூடாதென்று தடை விதித்தார். இந்தியாவின் முகலாயப் பேரரசர்கள் பாரசீகத்திலிருந்து கடன் வாங்கியிருந்த நௌரோஸையும் (Nauroz) கைவிட்டார். 'புண்ணியச் சட்டத்தின்படி கண்டிப்பான முறையில் மக்களின் வாழ்க்கையை ஒழுங்கு படுத்தப்' பொது ஒழுக்கக் கண்காணிப்பாளர்களை (Censors of Public Morals, Muhtasibs) நியமித்தார்.

பிறரைச் செய்யும்படி வற்புறுத்தினவற்றை அவுரங்கசீப் தாமும் கடைப்பிடித்து வந்தார். அவருடைய சொந்த வாழ்க்கை உயர்ந்த ஒழுக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கியது. அவருடைய காலத்தில் காணப்பட்ட பொதுவான தீங்குகளை எல்லாம் அவர் அறவே களைந்தார். அக்காலத்தவரால் அவர் 'கருஞ் சிவப்பில் பிறந்த தர்விஷ் (சந்நியாசி Darvish) என்று மதிக்கப்பட்டார். முஸ்லீம்கள் அவரை 'ஜிந்தாபீர்' அல்லது வாழும் முனிவர் என்று போற்றினர். பொது ஒழுக்கத்தின் வளர்ச்சிக்காகப் பல சட்டங்களை ஏற்படுத்தினர். சாராயமும் கஞ்சாவும் உற்பத்தி செய்வதோ, விற்பதோ, பொது மக்களால் பயன் படுத்தப்படுவதோ கூடாது என்று ஒரு தடைச் சட்டத்தை இயற்றினர். நடனமாடும் பெண்களும், பொதுமகளிரும் திருமணஞ் செய்து கொண்டு வாழ வேண்டும் அல்லது இராச்சியத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்று கட்டளை யிடப்பட்டனர் என்று மனுச்சி (Manucci) கூறுகிறர். கீழ்த்தரமான பாட்டுகளைப் பாடுவதை எதிர்த்துக் கண்டிப்பான கட்டளைகளைப் பேரரசர் விதித்தார். சில மத சம்பந்தமான விழாக்களில் ஊர்வலங்கள் வருவதையும், குச்சிகள் எரிப்பதையும் தடை செய்தார். அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்து அதிகார பூர்வமான 'வழிகாட்டி நூல்களில்' (1663 டிசம்பர்) அவர் சதி அல்லது உடன்கட்டை ஏறுவதைத் தடை செய்தார் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனல் 'இந்தியாவில் அக்காலத்தில் பிரயாணஞ் செய்த ஐரோப்பியர்களின் சான்றுகள் அரசரின் தடை சிறிதும் பொருட்படுத்தப்படவில்லை' என்பதைக் காட்டுகின்றன.

எனினும் இந்த ஒழுங்கு முறைகளினல் மட்டும் பேரரசர் திருப்தியடைந்து நின்றுவிடவில்லை. மற்ற அரச துணைகளையும் கட்டளைகளையும் பிறப்பித்தார். அவை பொது மக்களில் முக்கியமான பிரிவினரைப் பொறுத்தவரை ஒரு புதிய கொள்கையைத் தோற்றுவிப்பதாயிருந்தது.

Koviloor Acadamy

1679-ல் 'நம்பிக்கை கொள்ளாதவர்கள்' மீது ஜிஸியா வரி மீண்டும் போடப்பட்டது.

இப்புதிய விதிகளாலும் சட்டங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களிடத்து, அவை ஆழ்ந்த மனப்புண்ணை ஏற்படுத்தி யிருக்க வேண்டும். அதனால் அவை பேரரசரின் அரசாங்கம் கவனிக்க வேண்டிய துன்பங்களுக்கு மேல் பல துன்பங்களைச் சேர்த்தன. பேரரசர் அவுரங்கசீப் தம்மிடம் இருந்த கொள்கையை உண்மையாகவும் மனச்சான்றுக்கு விரோதமின்றியும் பரப்பினர் என்ற பெருமை அவருக்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவருடைய பேரார்வத்தாலும், ஊக்கத்தாலும் அவரை ஆளும்படி செய்த இந்நாட்டில் ஒரே இன மக்கள் தொகை மட்டும் வாழவில்லை என்றும், மத மரபுகளும், லட்சியங்களும் நிறைந்த பல வேறு கூறுகள் நாட்டில் இருந்தன என்றும், அவை அனுதாப அறிவுணர்ச்சியுடனும், தந்திரமாகவும் அணுகப்படவேண்டும் என்றும் அவர் உணர்ந்து கொள்ள மறந்து விட்டார். தம்முடைய கொள்கையைப் பின் பற்றியோரின் நலங்களே நாட்டின் நலங்கள் என்று கருதிக் கொண்டதன் மூலமும், அக் கொள்கையில் மாறுபாடு கொண்டவர்களைப் புண்படுத்தியதன் மூலமும் அவுரங்கசிப் உண்மையிலேயே ஒரு மாபெரும் தவற்றைச் செய்தார். இக்கொள்கை மக்களின் ஒரு சில பிரிவினரிடையே அதிருப்தியுணர்ச்சிகளை விளைவித்தது. அவை அவருடைய ஆட்சியின் மிதிப்பாகத்தில் அவருடைய சக்திகளை வீணாக்கியதோடு, முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் மிகச் சிறந்த காரணங்களுள் ஒன்ருகவும் அமைந்தன.

7. புதிய கொள்கைக்கு எதிர்ப்பு

அ. ஜாத்துகள் (Jats), பந்தேலாக்கள் (Bundelas), சத்நாமிகள் (Satnamis)

பேரரசுக்கு எதிரான முதல் முக்கிய எதிர்ப்பு முத்ரா (மதுரா) மாவட்டத்திலிருந்த ஜாத்துகளிடையே ஏற்பட்டது. அங்கே அரசாங்க பௌஜ்தாரான அப்துன்-நபி (Abdun-Nabi) அவர்களை மிகவும் கொடுமையாக அடக்குமுறைக்கு ஆளாக்கி யிருந்தார். 1679-ல் கட்டுடலைப் பெற்றிருந்த ஜாத் குடியானவர்கள் தில்பத் (Tilpat) தின் ஜமீன்தாரான கோக்லா (Gokla) என்பவரின் தலைமையின்கீழ் கிளர்ந்தெழுந்து பௌஜ்தாரைக் கொன்று, அம்மாவட்டம் முழுவதும் ஓராண்டு குழப்பம் மலிந்திருக்கும்படி செய்தனர். பின்பு முத்ராவின் புதிய பௌஜ்தாராய் வந்த ஹஸன் ஆலிகான் என்பவரின் தலைமையில் வந்த வலிமை வாய்ந்த பேரரசரின் படை அவர்களை அடக்கியது. கோக்லா கொல்லப்பட்டார். அவருடைய குடும்பத்தினர் இஸ்லாமுக்கு

Koviloor Academy

மாற்றப்பட்டனர். ஆனால் இது ஜாத்துகளை நிரந்தரமாக ஒடுக்கி அழித்துவிடவில்லை. மீண்டும் அவர்கள் 1685-ல் ராஜாராம் என்பவரின் தலைமையில் கிளர்ந்தெழுந்து 1688-ல் சிகந்தராவிலிருந்த அக்பரின் கல்லறையைச் சூறையாடினர். 1691-ல் ராஜாராம் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். ஜாத்துகளின் முதன்மையான கோட்டை தரைமட்டமாக்கப்பட்டது. ஆனால் விரைவில் அவர்கள் சூராமன் (Churaman) என்ற வலிமை மிகுந்த ஒரு தலைவரைப் பெற்றனர். அவர் சிதறுண்டிருந்த ஜாத்துகளை ஒன்றுதிரட்டி வலிமை வாய்ந்த படைத்துறைப் பயிற்சி பெற்றவர்களாக ஆக்கினர். அவர்கள் அவுரங்கசீப்பின் இறப்புக்குப் பின்பு முகலாயர்களுக்கு எதிராகப் படைக் கலந்தாங்கி ஒழுங்காக எதிர்த்துக் கலகம் செய்துவந்தனர்.

இரண்டாவது முறையாக அவுரங்கசீப்பின் கொள்கைக்கு எதிராகப் படைக்கலந்தாங்கிய எதிர்ப்பு சத்ரசால் (Chhatrasal) என்ற பந்தேலா இளவரசால் நடத்தப்பட்டது. பந்தேலாக்களுடன் முகலாயர்கள் முன்பு கொண்டிருந்த தொடர்புகளைப்பற்றி நாம் முன்னரே கண்டோம். அவுரங்கசீப்பின் ஆட்சியின் முற்பகுதியில் சத்ரசாலின் தந்தை சம்பத்ராய் (Champat Rai) அவுரங்கசீப்புக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார். ஆனால் பேரரசரால் நன்ருக அடக்கப்பட்டு, சிறைக்குப் பயந்து தற்கொலை செய்துகொண்டார். தக்காணத்தில் சத்ரசால் பேரரசருக்குப் பணிசெய்துகொண்டிருந்தார். அங்கே சிவாஜியின் எழுச்சியால் ஊக்க உணர்ச்சி பெற்றுத் 'துணிகரச் செயலில், சுதந்தரம் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபடலாம் என்று கனவு கண்டார்.' பந்தேல்கண்டு, மாளவம் இவற்றில் வாழ்ந்த இந்து மக்களின் திருப்தியின்மை அவர் தம்முடைய கொள்கையின் 'வீரராகத்' திகழும்படியும் 1671ஆம் ஆண்டளவில் பந்தேலாச் சுதந்தரத்திற்காகப் பாடுபடும்படியும் ஒரு வாய்ப்பை அளித்தது. முகலாயர்களின்மேல் பல வெற்றிகளை அவர் அடைந்தார். 1731-ல் இறந்துபோவதற்கு முன்பு பண்ணவைத் தலைநகராகக்கொண்ட கிழக்கு மாளவப் பிரதேசத்தைத் தமக்காக உருவாக்கிக்கொள்வதில் வெற்றி பெற்றிருந்தார்.

1672 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சத்நாமிகளால் மற்ருெரு கலகம் ஏற்பட்டது. சத்நாமிகள் முதலில் இந்து பக்தியாளர்களில் குற்றம் ஏதும் எண்ணுதவர்களாகவும், பாட்டியாலா இராச்சியத்தில் நார்னேல் என்ற இடத்தையும் ஆள்வார் என்ற பகுதியில் மேவாட் என்ற இடத்தையும் தங்களுக்குரிய முக்கிய இடங்களாகக் கொண்டிருந்தனர். அவர்களைப் பற்றிக் காபிகான் (Khafi Khan) எழுதுவதாவது: 'இந்த மக்கள் பக்திமான்களைப் போல ஆடை உடுத்திக் கொள்கின்றனர். ஆனால் உழவும் வாணிகமும் செய்து வருகின்றனர். எனினும், அவர்களுடைய வாணிகம் சிறு அளவினதாகவே உள்ளது.

Koviloor Acadamy

தங்களுடைய மத நெறியில், சத்நாம் என்ற வார்த்தையின் பொருளான ‘ நல்ல பெயர் ’ என்ற சிறப்புப் பெயருடன் தங்களின் மதிப்பை உயர்த்திக் கொண்டிருந்தனர். சட்டத்திற்குட்பட்ட முறையில் அன்றி, வேறு எவ்விதத்திலும் பொருள் சேகரிக்க அவர்கள் அனுமதிக்கப் பட வில்லை. பலத்தால் எவரேனும் ஒருவர் அவர்களுக்குத் தீங்கு சூழவோ, அவர்களை அடக்கி விடவோ முயற்சி செய்தால், அதை அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆயுதங்கள் அல்லது படைக்கருவிகளை வைத்துக் கொண்டிருக்கின்றனர்.’ சத்நாமிகளின் எழுச்சிக்கு முதற் காரணம், அவர்களில் ஒருவரை முகலாயக் காலாட்படை வீரருள் ஒருவர் கொன்று விட்டதேயாகும். அவர்கள் நார்னோலைக் கைப்பற்றிக் கொண்டனர். நிலைமை மிகவும் நெருக்கடி யுடையதாக மாறுவது தெரிந்தபோது, முகலாயப் பேரரசர் ‘அவருடைய கூடாரங்களை வெளியே கொண்டுவரும்படி கட்டளை யிட்டார்.’ படைப் பயிற்சி பெருத சத்நாமிகள் ஒரு பெரிய பேரரசுப் படையால் விரைவில் அடக்கி ஒடுக்கப்பட்டனர். ‘அவர்களில் மிகச் சிலரே தப்பினர். அந்நாட்டின் வழி திறந்து விடப்பட்டு விட்டது.’

ஆ. சீக்கியர்கள்

புதிய பேரரசுக் கொள்கை *சீக்கியர்*களிடையேயும் அதிருப்தியைத் தோற்றுவித்தது. *சீக்கியர்*களுக்கும் அவுரங்கசீப்புக்கும் இடையே யிருந்த தொடர்புகளைப் பற்றிப் பார்க்குமுன்பு, இங்கே அவருக்கு முற்பட்ட அரசர்களின் காலத்திய *சீக்கியர்*களின் சுருக்கமான வரலாற்றை அறிவது நலம். தற்கால இந்தியாவில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கும் பெருமை பெற்ற *சீக்கிய* இனம் ‘ பதினைந்து பதினும் நூற்ருண்டுகளில் இந்திய வரலாற்றில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட போது தோன்றியது. முனிவரைப் போன்ற குணவியல்புகள் பெற்றிருந்த சமயப் பிரசாரகரான குரு நானக்கால் ஒரு மதப்பிரிவாக அந்த இனம் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. அவர் எல்லா மதங்களுக்கும் அடிப்படையாயுள்ள உண்மையை வற்புறுத்தினர். ‘ மதம் சாரா இயல்பும் ’ மதப்பற்றற்ற வாழ்க்கையில் அது கொண்டிருந்த இணக்கமும் அவர் ஏற்படுத்திய மதப் பிரிவு முறையின் முக்கியமான சிறப்பியல்புகளாகும். தம் இரண்டு புதல்வர்களையும் ஒதுக்கி விட்டுத் தமக்கு அடுத்த குருவாகத் தம் சீடர்களுள் ஒருவரான அங்காட் (Angad) (1538-1552) என்பவரை நியமித்து விட்டு 1538-ல் இறந்தார். அங்காடும் அவருக்கு அடுத்த குருவான அமர்தாஸும் (1552-1574) உயர்ந்த ஒழுக்க முடையவர்களாய்த் திகழ்ந்தனர். அமர்தாஸுக்கு அடுத்ததாகக் குரு ஸ்தானத்தில் அவருடைய மருமகன் ராம்தாஸ் (1574-1581) வந்தமர்ந்தார். இந்தக் குருவினிடம் பெரு மதிப்புக் கொண்டிருந்த அக்பர், அமிருதசரஸில் (Amritsar)

Koviloor Acadamy

ஒரு குளம் அடங்கிய நிலப்பகுதி ஒன்றைத் தானமாக அளித்தார். அந்நிலப்பகுதி பின் விரிவாக்கப்பட்டும், செப்பஞ் செய்யப் பட்டும் அதன் ஒரு பகுதியில் ஒரு புகழ் பெற்ற சீக்கியக் கோயில் கட்டப்பட்டது. ராம்தாஸின் குரு ஆட்சிக் காலத்தில் சீக்கியர்களின் ஆன்மிக குருஸ்தானத்திற்கு வருவோர் பரம்பரை யினராயிருக்க வேண்டும் என்ற நியதி ஏற்பட்டது. ஐந்தாவது குருவான அர்ஜுன் மால் (Arjan Mal) (1581-1606) நிர்வாக ஆற்றல் மிக்கவராகக் காணப்பட்டார். அவருடைய தலைமையின் கீழ் சீக்கிய இனத்தார் எண்ணிக்கையில் மிகுந்து வரலாயினர். பஞ்சாப்பின் எல்லா இடங் களிலும் பரவினர். அவர் சிக்கியர்களின் வேத நூலாகக் கூறப்படும் 'ஆதிகிரந்தம் (Adi Granth) அல்லது முதல் தெய்வீக நூல்' என்ற நூலைத் தொகுத்தார். அவருக்கு முன்பிருந்த நான்கு குருமார்களின் நூல்களிலிருந்த முக்கியமான செய்யுள்களையும், ஜெயதேவர் காலத்தி லிருந்து தோன்றி வந்த இந்து முகம்மதிய முனிவர்களின் நூல்களி லிருந்து முக்கியமான பதிகுகளையும் தேர்ந்தெடுத்து அந்நூலைத் தொகுத்தார். குருவினுடைய மதிப்பும், செல்வமும் கணிசமான அளவு வளர்ந்து வந்ததால், அவர் தம் சமயத்தை ஒரு நிலைப்படுத் தித் தம்மால் இயன்றவரை பெரிதும் உழைத்தார். அவர் காலத்தில் வாழ்ந்த ஒருவர், 'பேரரசரும் (அக்பர்), அரசர்களும் அவர் முன்பு தலை குனிந்து வணங்குகின்றனர். செல்வம் அவரைத் தேடி வந்து குவிகிறது' என்று கூறியுள்ளார். தங்கள் சீடர்களால் 'தொகை யளவு வேறுபடுகின்ற, தாமாகக் கொடுக்கப்படும் கொடைகளை' ஏற்றுக் கொண்டதோடு அவருக்கு முன்பிருந்த குருமார்கள் திருப்தி அடைந்தனர். ஆனால் குரு அர்ஜுன் மசாண்ட்கள் (Masands) என்று அழைக்கப்படும் தம்முடைய முகவர்களின் குழு (band of agen-ts) வினல் பெரிதும் கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய 'ஆன்மீக இறை'யை வசூலிக்கும் முறையைத் தொடங்கி வைத்துத் தம் கோயி லின் பொருள் வருவாய்களை ஒழுங்குபடுத்த முயன்றார். முந்திய குரு மார்கள் சமயப் பிரசாரகர்களாக மட்டும் இருந்தனர். அரசியலில் தலையிடவில்லை. ஆனால், குரு அர்ஜுன் கலகம் செய்ய விழைந்த இளவரசர் குஸ்ராவுக்குத் தம் வாழ்த்துக்களை வழங்கினர். ஜஹாங்கீர் இக் குருவின் பெருஞ் செல்வத்தையுஞ் செல்வாக்கையுங் கண்டு ஐயுற்றவர் போல, இராசத் துரோகக் குற்றஞ் சாட்டி அவரை 1606-ல் கொலை செய்வித்தார். இது சீக்கியர்களின் மனத்தைப் புண்படுத்தி யிருக்கவேண்டும். எனினும், அந்தச் சமயத்தில் முகலாயப் பேரரசுக்கு எதிராகத் தங்களுடைய பகைமையை அவர்கள் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. அடுத்துக் குருவாக வந்த அர்ஜுனின் மகன் ஹரகோவிந்தர் (1606-1645) போர் விருப்புடையவராயும் துணிகரச் செயல் செய்யும் உணர்ச்சி உடையவராயும் இருந்தார். தம் கீழ் ஒரு சிறிய படையைச் சேர்த்து வைத்துக் கொண்டார். ஜஹாங்கீரின் கீழ்

Koviloor Academy

வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தாலும், அவருடைய தந்தையின் மேல் சுமத்தப்பட்ட அபராதத் தொகையின் பாக்கியைக் கட்ட மறுத்ததால் அவர் குவாலியரில் பன்னிரண்டு ஆண்டுச் சிறை வாசம் அனுபவிக்க நேர்ந்தது. அவர் ஷாஜஹானுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து 1628-ல் அமிருதசரஸுக் கருகில் சங்கிராமா என்ற இடத்தில் பேரரசுப் படை ஒன்றைத் தோற்கடித்தார். ஆனால் கடைசியில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதனால் காஷ்மீர் மலைகளில் உள்ள கிராத்பூரில் (Kiratpur) அடைக்கலம் புக வேண்டிய நெருக்கடிக்குள்ளானர். தம்முடைய இளைய பேரரான ஹரராய் (Har Rai) (1645-1661) என்பவரைத் தமக்குப்பின் குருவாக நியமித்து விட்டு 1645-ல் அங்கேயே இறந்தார். 1661-ல் ஹர ராய் இறந்த பிறகு அவருடைய இரண்டாவது மகன் ஹர கிஷன் (Har Kishan) (1661-1664) குரு பதவிக்கு வந்தார். இந்த இரண்டு குருமார்களின் காலத்தில் முக்கிய நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை. ஆனால் 'அர்ஜுனின் பொருள் வருவாய்க் கொள்கையும், அவருடைய புதல்வர் தோற்றுவித்த படை முறையும், பேரரசுக்குள் ஏற்கெனவே சிக்கியர்களுக்கு ஒரு தனி நாட்டை உருவாக்கி வைத்தது.'

1664-ல் ஹர கிஷன் இறந்தார். குருஸ்தானத்திற்காகச் சில சிறு போர்கள் ஏற்பட்ட பிறகு ஆறும் குருவான ஹர கோவிந்தரின் இரண்டாவது மகனான தேஜ் பஹாதுர் (Teg Bahadur) பெரும்பாலான சீக்கியர்களால் தங்கள் இனத்து ஆன்மிகத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அவர் கிராத்பூரிலிருந்து (Kiratpur) ஆறுமைல் தூரத்திலிருந்த ஆனந்தப்பூரில் தங்கினார். பீஹாரில் உள்ள பாட்னாவில் சில மாதங்கள் வாழ்ந்தார். அப்போது அவருக்குக் குரு கோவிந்த் என்ற மகன் பிறந்தார் (கி.பி. 1666). அவர் அஸ்ஸாம் போரில் (கி.பி. 1668) மீர்ஸா ராஜா ஜெய்சிங்கு என்பவரின் மகனான ராஜ ராம் சிங்கு என்பவருடன் சேர்ந்தார். ஆனால் விரைவில் பழைய இருப்பிடமான ஆனந்தபூருக்குத் திரும்பினார்; பேரரசின் அரசாங்கத்துக்கு எதிராகப் பகைமைச் செயல்களில் ஈடுபட்டார். பேரரசரின் சில முறைகளுக்கு எதிர்ப்புகளைச் செய்தார். காஷ்மீரப் பிராமணர்களையும் பேரரசரின் ஆட்சியை எதிர்க்கத்தூண்டினார். இது அவுரங்கசிப்பினால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாத தாயிற்று. அவர் சிக்கியக் குருவைச் சிறைபிடிக்குமாறு செய்து தில்லிக்குக் கொண்டுவருமாறும் செய்தார் அங்கே சாவு அல்லது மத மாற்றம் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு சிக்கியக் குருவைக் கேட்டார். தேஜ் பஹாதுர் தம் உயிரினும் கொள்கையே சிறந்தது என்று கூறினர். அதனால் ஐந்து நாட்களுக்குப் பிறகு (கி.பி. 1675-ல்) தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு அவர் தம் தலையைக் கொடுத்தார். ஆனால் அவர் தம் கொள்கையை விட்டுவிடவில்லை (ஸர் தியா ஸார் நதியா). குருவின் தியாக மரணம் முகலாயப்பேரரசை எதிர்த்துப்

Koviloor Acadamy

பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்ற உணர்ச்சியைச் சீக்கியர்களி டையே கொதித்தெழச் செய்தது. தேஜ் பஹாதூருக்குப் பின் வந்த அவருடைய புதல்வர் குரு கோவிந்த் இந்திய வரலாற்றிலேயே மிகச் சிறந்த ஆளுமையாளர்களில் ஒருவர். 'ஒரு கிரேக்கச் சட்டம் இயற்றி நிறை வேற்றுபவரைப்' போல அவர் தம்மைப் பின்பற்று வோர்களை மிகச் சிறந்த வகையில் ஒழுங்குற ஒன்று கூட்டும் வேலை யில் ஈடுபட்டார். ஓர் உடைவாளினால் தண்ணீரைக்கலக்கிப் பெயர் வைக்கும் சடங்கு (பஹுல்-Pahul) ஒன்றைத் தோற்றுவித்தார். இந்தப் புதிய பெயர்வைக்கும் முறையை ஏற்றுக் கொண்டவர்கள் தூய்மையுடையவராகக் (கல்சாவாக-Khalsa) கருதப்பட்டனர். சிங்கு (சிங்கம்) என்ன பட்டமும் கொடுக்கப்பட்டனர். அவர்கள், கேசம் (**Kes**-நீண்ட மயிர்), கங்கம் (**Kangha**-சீப்பு), கிரிபியன் (**Kripan**-வாள்), கச்சா (**Kachcha**-குறுகிய காலுடைகள்),கரம் (**Kara**-எஃகு வளையம்) என்ற ஐந்து பொருள்களைப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் போர்க்களத்தில் பகைவனுக்குப் புறமுதுகு காட்டக்கூடாது. அவர்கள் எப்பொழுதும் ஏழைகளுக்கும் வறுமையில் வாடி நலிவோருக் கும் உதவவேண்டும் என்று அறிவுறுத்தினர். குரு கோவிந்த் தஸ்வேன் பாதுஷா கா கிரந்த் ('பத்தாவது பேரரசரின் புத்தகம்') என்ற இரண்டாவது கிரந்தம் ஒன்றைத் தொகுத்தார். அவர் போற்றத்தக்க துணிவுடனும் தீரத்துடனும் சில பக்கத்து மலைநாட்டு இளவரசர்களுடனும், முகலாய அதிகாரிகளுடனும் போரிட்டார். அவர் பஹாதுருக்குச் சிம்மாசனப் போரில் உதவி செய்தார் என்றும், அதன் பின் அவருடன் தக்கணத்துக்குச் சென்றார் என்றும் கூறப்படு கின்றன. கோதாவரி நதியின் தீரத்தில் நந்தூர் என்ற இடத்தில் 1708 ஆம் ஆண்டின் இறுதியில் ஆப்கானிய மத வெறியன் அவரைக் குத்திக் கொன்று விட்டான்.

இ. ராஜபுத்திரருடன் போர்

பேரரசுக்கு எதிராக எழுந்த மிகச் சிறிய கிளர்ச்சிகளாகக் காணப்பட்ட எழுச்சிகளை அவுரங்கசீப் ஒடுக்கி விட்டார். ஆனால் பேரரசரின் கொள்கைக்கு எதிர்ப்பாகத் தோன்றி வந்த சில பலம் மிக்க எதிர்ப்புகள் அவருடைய பேரரசுக்குப் பேராபத்தான விளைவுகளை உண்டாக்கி விட்டன. பேரரசின் வளர்ச்சிக்கு முன்பு மிகவும் உதவிய ராஜ புத்திரர்களின் கூட்டுறவின் மதிப்பை உணர்ந்து கொள்ளத் தவறிய அவுரங்கசீப் அவர்களைக் குறித்து அரசாங்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தார். தம்முடைய கொள்கைக்கு எதிராக முளைத்த ராஜபுத்திர எதிர்ப்புக்குப் பலம் வாய்ந்த ஒரு தலைவராக அவரால் கருதப்பட்ட ஆம்பர் நாட்டு ராஜா ஜெயசிங்கு 1667-ல் தக்கணத்தில் தம்முடைய உயிரை இழந்தார்.

Koviloor Academy

பல காரணங்களால் மார்வாரின் வெற்றி, அடுத்து அவர் கருத்தைக் கவர்ந்தது. முகலாயத் தலைநகரிலிருந்து மேற்கு இந்தியாவின் செல்வ வள மிக்க நகரங்கள், துறை முகங்கள் இவற்றிற்குச் செல்லும் சில வாணிக வழிகள், பட்டாளம் செல்லும் வழிகள் முதலியவற்றைத் தம்மிடத்தே கொண்டிருப்பதான ஒரு போரியல் சூழ்ச்சித்திறம் வாய்ந்த இடமாக மார்வார் இருந்தது. மேலும் அந்தச் சமயத்தில் வட இந்தியாவில் வலிமை மிக்க படை பலங்கொண்ட நாடாக அது இருந்த நிலைமை, அவுரங்கசிப்புக்கு எப்போதும் தொல்லையாக இருந்துவந்தது. முன்பு தாராஷுக்கோவின் துணையாளராக இருந்தவரும், அப்போது மார்வாரின் தலைவராய் இருந்தவருமான ஜஸ்வந்த் சிங்கு (Jaswant Singh) தம்முடைய கொள்கையின் எதிர்ப்புத் தலைவராக ஆகிவிடுவாரோ என்று அவுரங்கசிப்பு ஐயமுற்றுக் கொண்டிருந்தார்.

மார்வாருக்கு எதிராகப் பேரரசர் போட்டிருந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுவதற்கேற்ற ஒரு நல்ல வாய்ப்பு விரைவில் ஏற்பட்டது. கைபர் கணவாயிலும், பெஷாவர் (Peshawar) மாவட்டத்திலும் முகலாய எல்லைத் தளங்களை அடக்கி வைத்துக் கொண்டிருந்த ராஜா ஜஸ்வந்த் சிங்கு 1678 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ந்தேதி ஜம்ருத் (Jamrud) என்ற இடத்தில் இயற்கையெய்தினார். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனே அவுரங்கசிப் மார்வாரைத் தம் இராச்சியத்துடன் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை உடனே மேற்கொண்டார். அங்கே தம்முடைய அதிகாரிகளாக பௌஜ்தார், கில்லாதார், கொத்தவால், அமீன் ஆகியோரை நியமித்து அந்தப் பிரதேசத்தை முகலாயரின் நேரடி ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார். தங்களுடைய தலைவர் இறந்து போனதால் குழப்பமுங் கலவரமும் அடைந்திருந்த ராத்தோர்கள் எவ்விதமான ஒன்றுபட்ட தேசிய எதிர்ப்பையும் செய்யத் தவறிவிட்டனர். மே மாதத்தில் 'சிம்மாசனக்கூலி' யாக முப்பத்தாறு லட்சம் ரூபாய் கொடுத்து நாகோரின் தலைவரும் ஜஸ்வந்தின் மருமகனின் புதல்வருமான இந்திர சிங்கு ராத்தோர் ஜோத்பூரின் ராணாவாக ஆனார். ஆனால் அவர் முகலாய அதிகாரிகளால் சூழப்பட்டுப் பெயரளவில் மட்டும் ஆட்சியாளராயிருந்தார்.

இவ்வாறு பேரரசரின் கொள்கை வெற்றியில் முடிந்ததாகக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆனால், உண்மையில் மார்வார் அடிபணியும்படி செய்யப்படவில்லை. அந்த இராச்சியத்தின் ஒவ்வொரு ராஜபுத்திர வீடும் பேரசரின் திடீர்த்தாக்குதலை எதிர்த்தடிப்பதெனத் தீர்மானித்தது. இவ்வாறு 'ஒரு புதிய எதிர்ப்புக் கூறு தோன்றியது. அது முடிவில் பேரரசுக் கொள்கையைத் தோற்கடித்துவிட்டது.' ஏற்கெனவே 1679 பிப்ரவரியில், ஜஸ்வந்த் சிங்கு இறந்த பின், லாகூரில் அவருக்கு இரு குழந்தைகள் பிறந்தன.

Koviloor Academy

அவற்றுள் ஒரு குழந்தை பிறந்தவுடனே இறந்தது. ஆனல் மற்றது அஜீத் சிங்கு என்ற பெயருடன் உயிர் பிழைத்தது. அக்குழந்தை யினது தந்தையின் முக்கிய வழியாளர்கள் அதைத் தில்லிக்கு எடுத்துச் சென்று, இறந்துபோன அரசருக்கு 'வாரிசாக' அதை ஒப்புக் கொள்ளும்படி வேண்டிக்கொண்டனர். ஆனல், பேரரசர் அந்தக் குழந்தையைத் தம் அந்தப் புரத்திலேயே வளர்த்து வருவதாக ஏற்றுக் கொண்டார். அல்லது அக்காலத்தில் வழங்கிய மற்ருெரு வரலாற்றுப்படி 'அஜீத் ஒரு முஸ்லிமாக மாறிவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஜோத்பூர்ச் சிம்மாசனம் அஜீத்துக்கு அளிக்கப்பட்டது' என்றும் கொள்ளலாம். பேரரசரின் மிகவும் மோசமான இந்த ஏற்பாடு ராத்தோர்களின் உணர்ச்சிகளைக் கடுமையாகப் புண்படுத்தியது. பேரரசரின் ஏற்பாட்டுக்கு இணங்குவதைக் காட்டிலும் உயிரைத் தியாகம் செய்வதாக அவர்கள் சபதம் செய்தனர். ஆனல் பக்தியும், முரட்டுத் தைரியமும் மட்டும் பேரரசரின் ஒழுங்குற அமைந்த பலத்திற்குமுன் பயனளிக்கவில்லை. நல்ல வேளையாக அந்த நெருக்கடியான சமயத்தில் ராத்தோர்கள் துர்காதாஸ் (Durgadas) என்ற தகுதி மிக்க தலைவரைப் பெற்றனர். ஜஸ்வந்தின் அமைச்சரான அஸ்கரனின் மகன அவர் 'ராத்தோர் வீரத்தின் மலராக' விளங்கினர்.

ராஜபுதன வரலாற்றில் பேராபத்துகளை எதிர்த்துத் தம் நாட்டிற்காகச் சுயநலமின்றிப் பக்தியுடன் உழைத்த அமரர்களுள் ஒருவராகத் துர்காதாஸ் கருதப்படுவது பொருத்தமானதே. 'அந்த உறுதி உரங்கொண்டிருந்த நெஞ்சத்தை முகலாயரின் தங்கம் தளர்த்திவிட முடியவில்லை; முகலாயப்படைக் கலன்கள் தகர்த்துவிட முடியவில்லை. பெரும்பாலும் ராத்தோர்களில் தனியொருவராக அவர் ராஜபுத்திர வீரரின் தீரமும், முரட்டு வீரமும் முகலாய அரசாங்க அமைச்சர் ஒருவனின் போரியல் சூழ்ச்சித்திறமும், திறமை, ஒழுங்குபடுத்தும் சக்தி இவையும் அரிதின் கலந்திருந்த குணவியல்பைக் கொண்டிருந்தார்.' அரசிகளையும் அஜீத் சிங்கையும் பிடிப்பதற்காக அனுப்பப்பட்ட பேரரசுப் படைகளின் மீது 'சாவை விரும்பும் ராஜபுத்திர வீரர்களின் அணி ஒன்று பாய்ந்தபோது அந்தக் குழப்பத்தைத் தமக்குச் சாதகமாகக் கொண்டு துர்காதாஸ் ஆணுடை உடுத்துத் தாம் விரும்பிய பேர்களைத் தயாராக்கிக் கொண்டு குதிரைமீது ஏறிச்சென்ருர். பேரரசினர் அவரை வந்து பிடிப்பதற்குள் ஒன்பது மைல்களை அவர் கடந்துவிட்டார். ஆனல் அங்கே ரஞ்சோர்தாஸ் ஜோதா (Ranchordas Jodha) என்பவரின் கீழ் ராஜபுத்திரர்களின் ஒரு சிறிய குழு துரத்திக்கொண்டு வந்தவர்களை எவ்வளவு தூரத்தில் நிறுத்தி வைக்க முடியுமோ, அவ்வளவு தொலைவில் நிறுத்தி வைக்க முயன்றது. அதனல் துர்காதாஸ் அரசிகளுடனும், அஜீத்துடனும் 1679 ஜூலை 23ஆம் நாள் ஜோத்பூரை அடைந்துவிட முடிந்தது. அப்

Koviloor Academy

போது அவுரங்கசீப் வெவ்வேறு மாகாணங்களிலிருந்தும் மிகுந்த படைகளை வரவழைத்து, படையின் தனித்தனி அணிகளுக்கு மு' அஸ்ஸம் (Mu'azzam), ஆஸம் (Azam), அக்பர் என்ற மூன்று இளவரசர்களைத் தளபதிகளாக நியமித்தார். படைத் துறைச் செயல்களை முன்னின்று நடத்துவதற்காக 1679 ஆகஸ்டில் அவுரங்கசீப் தாமே ஆஜ்மீருக்குப் படையுடன் வந்தார். ஜோத்பூர் பிடிக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டது.

ஆனால் முகலாயப் பேரரசரின் இந்த ஆக்கிரமிப்புக் கொள்கையை, மேவாரின் விரமிக்க சிசோதியாக்கள் முரட்டுத் தனங் கொண்ட மார்வார் ராத்தோர்களுடன் சேரும்படி செய்தது. மேவார் அரசர் ராணா ராஜ்சிங்கு, அஜித் சிங்கின் உறவினராவர். அஜித் சிங்கின் தாய் ஒரு சிசோதிய இளவரசியாவாள். ராணா ராஜ்சிங்கு மார்வாரின் இணைப்பு மேவாரை முகலாய வெற்றியின் ஆபத்துக்கு உள்ளாக்கிவிடும் என்றும் கருதினர். மேலும் பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டுங் கொண்டுவரப்பட்ட ஜிஸ்ஸியா வரி அவரை மிக்வும் சிற்றமுறச் செய்தது. ராத்தோர் சிசோதியாக் கூட்டுறவின் மூலம் ராஜபுத்திரரின் போர் சுதந்தரத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யும் தேசிய எழுச்சியாகத் தோற்றமளித்தது.

அவுரங்கசீப்பு உடனே மேவாரின்மீது படையெடுத்தார். ஆனால் ராணா மிகவும் அதிகமான பலம் வாய்ந்த முகலாயர்களை நேருக்கு நேர் எதிர்ப்பது அறிவுடைமையாகாது என்று கருதி மேவாரின் நகரங்களையும் கிராமங்களையும் காலி செய்துவிட்டுக் கிழேயுள்ள சமவெளிப் பகுதிகளைப் பாழாக்கி விட்டுத் தம் எல்லாக் குடி மக்களுடனும் மலைக் கோட்டைகளுக்குக் குடியேறிச் சென்றார். முகலாயர்கள் எளிதில் சித்தூரைக் கைப்பற்றினர். வெற்றியில் மிகுந்த நம்பிக்கை கொண்டு பேரரசர் சித்தூரில் இளவரசர் அக்பரின்கீழ் ஒரு வலிமை மிக்க படையை வைத்துவிட்டு அஜ்மீரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். ஆனால், விரைவில் ஏமாற்றமுற நேர்ந்தது. ராஜபுத்திரர்கள் கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு, முகலாயக் காவல் தளங்களின்மீது மிகத் தீரத்துடன் பாய்ந்தனர். அதனால் 'முகலாயக் காவல் தளங்கள் கெஞ்சியிரக்கும் நிலைக்குத் தாழ்ந்தன; சாக்குப் போக்குகளைச் சொல்லிவிட்டு ஒவ்வொரு தளபதியாக ஆபத்து நிறைந்த மதிப்பைப்பெற விரும்பாது வெளியேறினர்.' தங்கள் வெற்றிகளால் ஊக்கம் கொண்டவர்களாகிய ராஜபுத்திரர்கள், 1680 மே மாதத்தில் இளவரசர் அக்பரின்கீழ் இருந்த முகலாயப் படையை வியப்புக்குள்ளாக்கினர். இளவரசர் அக்பர் குறை தெரிவித்தது போல, பேரரசுப்படை பட்டினிக்காளாகி 'அச்சத்தால் அசையாமல்' நின்றிருந்தது. இந்த அவல நிலைக்கு இளவரசர் அக்பரே காரணமாகும் என்று கருதிப் பேரரசர் சித்தூரிலிருந்த படையின் தலைமையதிகாரப் பதவியை இளவரசர் ஆஸமுக்குக் கொடுத்துவிட்டு அக்பரை மார்வாருக்கு அனுப்பினர்.

Koviloor Acadamy

பதவியிலிருந்து அகற்றப்பட்ட மானக்கேட்டால் மனப்புண் பட்டிருந்த இளவரசர் அக்பர் ராஜபுத்திரர்களின் கூட்டுறவுடன் தில்லிச் சிம்மாதனத்தைத் தந்தையிடமிருந்து பறித்துக்கொள்ளலாம் என்று கனவு கண்டார். ராஜபுத்திரர்களுடன் செய்த யுத்தத்திலிருந்து அவர்களுடைய உதவியின் பெருமையை அவர் நன்ருக உணர்ந்திருக்க வேண்டும். அவருடைய தந்தையின் கொள்கை எவ்வாறு முகலாயப் பேரரசின் நிலைபேற்றைத் தகர்க்கக் கூடியதாயுள்ளது என்பதை அக்பருக்கு ராஜபுத்திர வீரர்கள் எடுத்துக் கூறினர். இவ்வாறு 'தில்லிச் சிம்மாசனத்தில் உண்மையான ஒரு தேசிய அரசரை வைப்பதாக நம்பிக்கொண்டு அவர்கள் சிசோதயாக்கள், ராத்தோர்கள் என்ற ராஜபுத்திரகளின் இருபெரு இனங்களின் படை பலத்தை ஆதரவாகத் தந்து உதவுவதாக வாக்களித்தனர்.' தம்முடைய படையைச் சேர்ந்த 70,000 ஆட்களுடனும், 'ராஜபுதனத்தின் மிகச்சிறந்த ரத்தம் பாயும் வீரர்களுடனும்' இளவரசர் அக்பர் 1681 ஜனவரி 15ஆம் தேதி அஜ்மீருக்கு அருகே வந்து சேர்ந்தார். அவுரங்கசீப்பின் நிலை அப்போது மிகவும் இடர்ப்பாடுடையதாக இருந்தது. ஏனெனில் அவருடைய படையின் முக்கியமான இரண்டு அணிகள் சித்தூருக்கு அருகிலும், ராஜ்-சமுத்திர ஏரியிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த அருமையான வாய்ப்பை இளவரசர் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டிருந்தால் பேரரசர் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருப்பார். ஆனுல், இளவரசர் சோம்பேறித்தன மாகவும், இன்பப் பொழுது போக்கிலும் காலத்தை வீணுகக் கழித்தார். இவ்வாறு அவர் சமயோசித அறிவு மிக்க அவருடைய தந்தைக்குத் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இடங்கொடுத்துவிட்டார். கலகம் விளைவிக்கும் தம் புதல்வருக்கு எழுதுவதுபோலக் கடிதம் எழுதி அது அவருக்குச் சேராமல் ராஜபுத்திரர்களுக்குக் கிடைக்குமாறு செய்து, அதன் மூலம் அக்பரின் கூட்டுப்படைகள் முகலாய இளவரசர்களை ஏமாற்ற முற்படுகின்றன என்று நம்புமாறு சூழ்ச்சி செய்தார். பேரரசரின் போரியல் சூழ்ச்சி வெற்றிகரமாக முடிந்தது. ஏனெனில், இளவரசர் அக்பரின் ராஜபுத்திரக் கூட்டுப்படைகள் கடைசியில் அக்பர் துரோகம் செய்து விடுவார் என்று ஐயுற்று, அவரைக் கைவிட்டுவிட்டு 'ராஜபுத்திரர்களின் வழியில் இனிய வாழ்க்கைக்காக அவசரமாக ஓடத்தொடங்கி விட்டனர்.' எனினும், ராஜபுத்திரர்கள் விரைவில் தங்கள் மேல் ஏவிவிடப்பட்ட சூழ்ச்சியைக் கண்டுபிடித்தனர். தீரமிக்க ராத்தோர்த் தலைவரான துர்காதாஸ் இளவரசரின் கபடமின்மையை நன்கு அறிந்து கொண்டு வீரத்துடன் அவருடைய தந்தையின் வஞ்சகத்திலிருந்து அவரைக் காப்பாற்றினுர். காந்தேஷ்பக்லானு வழியாக மராட்டிய அரசரான ஷாம்பூஜியின் அரண்மனைக்கு வழித்துணையாக இருந்து அவரை அழைத்துச் சென்ருர். ஆனுல், தன் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதில்

Koviloor Academy

ஆர்வங்கொண்ட அடுத்த மராட்டிய அரசர் சிவாஜி முகலாய நாடோடி இளவரசருக்கு எவ்விதச் சிறந்த உதவியையும் அளிக்க வில்லை. அதனுல் 'இந்து முஸ்லிம் இணக்கம், நட்புறவு இவற்றின் அடிப்படையில்' இந்தியப் பேரரசை நிறுவவேண்டும் என்று கனவு கொண்டிருந்த இளவரசரின் கனவு வீண் கனவாயிற்று.' ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏமாற்ற முற்ற முகலாய இளவரசர் பாரசீகத்திற்குப் புறப்பட்டுச் சென்ருர். அங்கே அவர் கி.பி. 1704-ல் உயிர் நீத்தார்.

இளவரசர் அக்பரின் கிளர்ச்சி தில்லி ஆட்சியாளரை மாற்றி விட முடியாது போயினும், அது மேவார் ராணுவுக்குப் பெரிய நிம்மதியைத் தந்தது. ஆனுல், ராணு முகலாயர்களை எதிர்த்துப் பெற்ற தாற்காலிக வெற்றி அவருடைய குடிமக்களுக்குப் பெருந்துயரங் கொடுத்தது. முகலாயர்களின் துன்பங்களும் கணிசமான அளவில் இருந்தன. அவர்கள் ராஜபுத்திரர்களை எதிர்த்து முடிவான வெற்றியை அடைய முடியவில்லை. இக்காரணங்களால் பேரரசரும் ராஜ்சிங்கின் மகனும், அவருக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவருமான ஜயசிங்கும் 1681-ல் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவ ரானுர்கள். ஜிஸ்ஸியாவுக்குப் பதிலாகச் சில மாவட்டங்களை ராணு பிரித்துக் கொடுத்தார். முகலாயர்களும் மேவாரிலிருந்து பின் வாங்கித் திரும்பிச் சென்று விட்டனர். எனினும் மதிப்புமிக்க அமைதி உடன்பாடு ஏற் படும் வரை மார்வார் 'முப்பது ஆண்டு போரைத்' தொடர்ந்து நடத்தி வந்தது. துர்காதாஸின் திறமை மிக்க தலைமையின்கீழ் ராத்தோர்கள் இடைவிடாது கொரில்லாப் போர் முறையைக் கையாண்டு முகலாயக் காவல் தளங்களுக்குப் பெருந்தொல்லைகள் கொடுத்தனர். அதனுல் முகலாய அதிகாரிகள் இரக்க மில்லாத எதிரிகளின் தாக்குதலி லிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சௌத் (Chauth) கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அவுரங்கசீப்பின் இறப்புக் குப் பின் அவருடைய மகனும், அடுத்துப் பட்டத்துக்கு வந்த வருமான முதலாம் பகதூர்ஷா அஜித்சிங்கை கி.பி. 1709-ல் மார் வாரின் ராணு என்று ஒப்புக் கொள்ளும்வரை போர் தொடர்ந்து நடை பெற்றது.

அவுரங்கசீப் ராஜபுத்திரர்களிடம் செய்த போர்கள் அவருடைய இராச்சியத்தில் மிகப் பெருங்கேடான விளைவுகளை உண்டாக்கிவிட்டன. ஆயிரக்கணக்கான உயிர்கள் தியாகம் செய்யப்பட்டன. பேரரசர்க்கு எந்தவிதமான நிலையான வெற்றியும் இல்லாமல் அந்தப் பாலை நிலத் தில் மிகப்பெருந் தொகை வீணுக்கப்பட்டது. 'இப் போரின் விளைவு பேரரசின் பெருமைக்குப் பேரிடியாக இருந்தது. பொருளாதாரம் முதலியவற்றின் விளைவுகளும் இன்னும் இழிவாக இருந்தன.' அவுரங்க சீப் அதுவரை பேரரசுக்கு நண்பர்களாயிருந்த ராஜபுத்திரர்களின்

Koviloor Academy

பகைமையைத் தேடிக்கொண்டார். அதனால், வீரமிக்க தலைவர்கள், வீரர்கள், ஆகியோரின் பக்தி மிக்க பணியை இழந்ததும் தக்கணத்தில் வீண் போர்களைச் செய்து வந்ததும், இன்னும் அமைதிப் படுத்த முடியாதவர்களாய் ஓயாது போரிட்டுவந்த ஆப்கானிய மலைஜாதி மக்களை வட மேற்கு எல்லையில் அடக்கிவைத்திருக்க வேண்டும் என்ற முக்கியமான வேலையில் வீண் போர்களைச் செய்து வந்ததும் அவருடைய அரசியல் அறிவின்மையால் செய்யப்பட்ட செயல்களாகும்.

8. அவுரங்கசீப்பும் தக்காணமும்

அவுரங்சீப்பின் ஆட்சிக் காலத்து முதல் பாதியில் அவருடைய கவனம் எல்லாம் வடக்கேயுள்ள நாடுகளின் விவகாரங்களில் முழுவதும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. தக்கணம் அரசப் பிரதிநிதிகளிடம் விடப்பட்டிருந்தது. சீர்குலைவுன்றித் தென்னகச் சுல்தானியங்கள் அவற்றின்மேல் முகலாயர்கள் செய்த தாக்குதல்களின்றும் முழுவதும் மீளமுடியாதவைகளாயிருந்தன. அவற்றின் சார்பில் மராத்தியர்கள் விழிப்புற்றெழுந்தனர். முகலாயப் பேரரசினை அறை கூவி அழைப்பதைப்போல எழுந்த மராத்தியர்களின் எழுச்சி தக்கணத்து அரசியல் விவகாரங்களைக் குழப்பத்துள்ளாக்கியது. அந்த எழுச்சியின் முழுச்சிறப்பையும் முதலில் பேரரசர் உணர்ந்து கொள்ளவில்லை. அவருடைய ஆட்சியின் முதல் இருபத்து நான்கு ஆண்டுகள் வரை அவருடைய தக்கணத்து அரசப்பிரதிநிதிகள் சுல்தானியங்களை எதிர்த்தாவது, மராத்தியர்களை எதிர்த்தாவது எவ்வித முடிவான வெற்றியையும் அடைய முடியவில்லை.

தம்முடைய மேலாண்மை அதிகாரத்தை ஒரு நிலைப் படுத்த வேண்டுமென்று அவுரங்கசீப் தீர்மானம் செய்திருந்த போதிலும், 1680-ல் சிவாஜியின் மறைவும் தக்கணத்தில் பேரரசின் நிலைமையில் எவ்வித முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை. மராத்திய அரசரான ஷாம்பூஜியிடம் கிளர்ச்சிக்கார இளவரசர் அக்பர் ஓடி அடைக்கலம் புகுந்ததும், 'இந்தியாவின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்' என்றும், 'பேய்த் தந்தைக்குப் பிறந்த பேய்மகன்' என்றும் அவுரங்கசீப்பினால் கூறப்பட்ட அந்த இருவர்களிடையேயும் ஏற்பட்ட கூட்டுறவும் அவருடைய தக்கண கொள்கையில் ஒரு முழுமாற்றத்தை ஏற்படுத்தியது. பேரரசின் நலங்களுக்குப் பெருங் கேடாக இருந்த அந்நிலையைத் தடுப்பதற்காக, அங்கே தாமே நேரில் செல்லவேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்திருந்த பேரரசர் 1681 ஜூன் மாதத்தில் மேவாருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். 1681 செப்டம்பர் 8ஆம் நாள் அஜ்மீரை விட்டுத் தக்காணத்துக்குப் புறப்பட்ட அவர் 1681 நவம்பர் 23ஆம்

நாள் புர்ஹான்பூரை அடைந்தார். அவருடைய மனம் உயர்ந்த நம்பிக்கைகளால் நிறைந்திருக்கவேண்டும். விதி அவரைத் தெற்கே இழுத்துச்சென்று, அவருக்கும் அவருடைய இராச்சியத்துக்கும் குழி தோண்டப்போவதாக அவர் முன்னறிந்துகொள்ள முடியவில்லை. முதல் நான்காண்டுகள் இளவரசர் அக்பரைப் பிடிக்கும் வீண்முயற்சிகளில் கழிந்தன ; மராத்தியர்களுக்கு எதிராகச் செய்த போர்களில் பேராபத்துகள் ஏற்பட்டன. மராத்தியர்களின் சில கோட்டைகள் பேரரசினரால் வெல்லப்பட்டன. எனினும் சிவாஜியால் புதிதாகக் கிளர்ச்சி யூட்டப்பெற்ற பலம் வாய்ந்த மராத்தியர்களை முழுதும் அடக்கி ஒடுக்கிவிட முடியவில்லை.

சீர்குலைந்த சுல்தானியங்களை வெற்றிகொள்வது அடுத்துப் பேரரசின் கவனத்தை ஈடுபடுத்தியது. ஷாஜஹானுடைய கருத்தைப் போலவே, தக்காணத்து ஷியா சுல்தானியங்களைப்பற்றிய அவுரங்கசீப்பின் கொள்கை ஒருபுறம் பேரரசின் நலங்களாலும், ஒருபக்கம் மதச்சார்புபற்றிய சிந்தனைகளாலும் உருவாகி யிருந்தது. மராத்தியர்களின் எழுச்சியினாலும், கட்சிச் சண்டைகளாலும் பலவீனமுற்றிருந்த பீஜப்பூர்ப் படையெடுப்பாளர்களுக்கு அடிபணிந்தது. அந்நகரின் கடைசி முகலாய முற்றுகை 1685 ஏப்ரல் 11ஆம் நாள் தொடங்கியது. பேரரசர் தாமே அங்கே 1686 ஜூலையில் சென்றார். முற்றுகையிடப்பட்ட கோட்டைப்படை, வீரத்துடன்தான் கோட்டையைக் காத்து நின்றது. ஆனால், உணவுப்பொருள்கள் முதலியன இல்லாமற்போனதாலும், பஞ்சம் ஏற்பட்டதனால் எண்ணிலாத ஆட்களும் குதிரைகளும் மடிந்துபோனதாலும் சோர்வுற்று அவர்கள் 1686 செப்டம்பரில் சரணடைந்தனர். ஆதில் ஷாக்களில் கடைசியான சிக்கந்தர் பேரரசனிடம் சரணடைந்தார். யூசுப் ஆதில் ஷாவினால் நிறுவப்பட்ட அரசமரபு இவ்வாறு அழிவுற்றது. பீஜப்பூருக்குள் நுழைந்ததும் பேரரசர் சிக்கந்தரின் அரண்மனைக்குள்ளிருந்த எல்லா அழகிய ஓவியங்களையும், வண்ணச்சுவர்ச் சித்திரங்களையும் அழித்தார். பீஜப்பூர் அதனுடைய சுதந்தரத்தை இழந்தவுடன் ஒரு பாழ்பட்ட நகரமாகவும் மாறியது. சர் ஜே என்-சர்க்கார் ' சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நகரமும் அதைப்போலவே பெரிதாயிருந்த நவ்ரஸ்பூரும் (Nauraspur) எவ்வாறு பாழடைந்து அழிபாடுற்றுக் காணப்பட்டன என்பதைப் பீம்சேன் பார்த்தார். மக்கள் சிதறுண்டு ஆங்காங்கு வாழ்ந்தனர். நகரில் மிகுதியாக நீரை வழங்கிவந்த கிணறுகள்கூடத் திடீரென்று வற்றிவிட்டன' என்று குறிப்பிடுகிறார்.

அடுத்து கோல்கொண்டா இராச்சியத்தின் குதுப்ஷாஹியின் முறை வந்தது. 1687 ஆண்டு பிப்ரவரியின் தொடக்கத்தில் அவுரங்கசீப் தாமே கோல்கொண்டாவின் முன்பு தோன்றினர். ஒரு சில நாட்களில் முகலாயப் படைகள் உள்நாட்டுக் கோட்டையை முற்றுகை

Koviloor Acadamy

யிட்டன. ஆனால், அந்தக் கோட்டை உணவுப்பொருளும் படைக் கலப் பொருள்களும் நிறைந்து இருந்தமையின் முற்றுகையிடப்பட்டவர் கள் ஏறக்குறைய எட்டுமாதம் வரை தீரத்துடன் சமாளித்தனர். சுரங் கப்பாதைகள், துப்பாக்கி வேட்டுகள், சுவர் ஏணிகள் முதலிய ஒவ் வோர் உபாயத்தையும் பயன்படுத்தினாலும், முற்றுகை யிட்டவர்கள் எவ்வித நேரான வெற்றியையும் அடைய முடியவில்லை. ஆனால் பஞ் சத்தாலும் கொள்ளை நோயாலும் பெரும் அவதிக்குள்ளாயினர். அவர் களுடைய பகைவர்கள் வன்முறையில் பொருள்களைக் கைப்பற்றிய தால் பெரும் இழப்பையும் அடைந்தனர். எனினும் அவுரங்கசீப் தீரம் மிக்க துணிவுடன் முற்றுகையை நீடித்தார். புதிய படைகளைத் திரட்டினார். வீரமும் படைக்கலங்களும் வெற்றியைத் தராதொழியவே அவுரங்கசீப் ஆசிர்கார்க் கோட்டைக்காக அக்பர் பயன்படுத்திய முறையின் வழியே கோல்கொண்டாவைப்பிடிக்கப் 'பொன்சாவியைப்' பயன்படுத்தினார். கோல்கொண்டா சுல்தானான அபுல் ஹஸனின் ஊழியத்தில் அமர்ந்திருந்த, செல்வமிக்க படைவீரர் அப்துல்லா பானி (Abdullah Pani) பேரரசரால் வசமாக்கப்பட்டுவிட்டார். கோட்டை யின் முக்கிய வாயிலைத் திறந்துவிட்டு முகலாயப் படைகள் உள்ளே சென்று குவிய அனுமதித்தார். ஆனால் அப்துர் ரஸ்ஸாக் லாரி (Abdur Razzaq Lari) என்ற பற்றுறுதி மிக்க கோல்கொண்டாப் பிரபு பேரரசரின் பேராசையைத் தூண்டும் பொருட் கொடைகளைப் புறக் கணித்துவிட்டு, எழுபது காயங்களால் தன் உடல் முழுதும் துளைக்கப் பட்டுவிடும் வரை, தனியாளாக நின்று போரிட்டார். முகலாயர்கள் அவரை மீண்டும் குணப்படுத்தினர்: கடைசியில் அவர் பேரரசரின் கீழ் ஓர் உயர்ந்த பதவியை ஒப்புக்கொண்டார். அப்துல் ஹஸன் அவருடைய கடைசிக்காலத்தில் ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய் ஊதியம் பெற்றுக்கொண்டு தௌலதாபாத் கோட்டையில் வாழுமாறு அனுப்பப்பட்டார். (1687 செப்டம்பரில்) கோல்கொண்டா முகலா யப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

எல்பின்ஸ்டன் (Elphinstone), ஸ்மித் போன்ற ஆசிரியர்களின் கருத்துப்படி தென்னகத்துச் சுல்தானியங்களை அழித்தது அவுரங்க சீப்பின் அரசியல் விவேகமற்ற செயலாகும். 'அது எந்த உள்நாட்டு எதிரிக்கும் பயப்படாதவாறு மராத்தியத் தலைவர்களுக்கு சுதந்தரம் கொடுத்துவிட்டது' என்றும், முகலாயப் பேரரசர் மராத்தியர்களுக்கு எதிராகவும், தமக்கு நன்மையாகவும் அந்த எதிரிகளைப் பயன்படுத் திக்கொண்டிருக்கலாம் என்றும் கருதுகின்றனர். ஆனால் சுல்தானி யங்களுக்கும், அவர்களை ஆக்கிரமித்த முகலாயப் பேரரசர்க்கும் உண்மையான கூட்டுறவு ஏற்பட்டிருக்க முடியுமா என்பதும், அவர் கள் மராத்திய எழுச்சியைத் தடுத்திருக்க முடியுமா என்பதும் ஐயப் பாடிற்குரியதாகும். சர் ஜே. என். சர்க்கார் கூறுவதுபோல, 'அக்பர் விந்தியத்தைக் கடந்துவந்த பிறகு தக்கணச் சுல்தானியங்கள் முக

Koviloor Acadamy

லாயப் பேரரசரின் உறக்கமில்லாக் குறிக்கோள் தங்கள் எல்லாப் பகுதிகளையும் அழித்து அவருடைய இராச்சியத்துடன் சேர்த்துக் கொள்வதேயாம் என்பதை ஒருபோதும் மறவாதவர்களாயிருந்தனர்.' மராத்தியர்கள் ஏற்கெனவே முன்னேற்றமுள்ள ஒரு தேசிய நாடாகத் தங்களை ஒழுங்குற அமைத்துக்கொண்டமையால் அவர்களைச் சீர் குலைந்த சுல்தானியங்கள் சரிவரத் தடுத்து நிறுத்தியிருக்கமுடியாது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

தமது தக்கணக் கொள்கையின் இரண்டு குறிக்கோள்களுள் ஒன்றில் அதாவது, தக்காணத்துச் சீர்குலைந்த சுல்தானியங்களை இணைத்துக்கொள்வதில், வெற்றியுற்ற அவுரங்கசீப் மற்றக் குறிக்கோளையும் அதாவது புதிதாக முளைத்துவந்த மராத்தியரின் ஆற்றலை அடக்குவதற்காக முனைந்தார். முதலில் அவருடைய முயற்சிகள் வெற்றி பெற்றன. கி.பி. 1689 மார்ச்சு 11-ஆம் நாள் ஷாம்பூஜி கொல்லப்பட்டார்; அவருடைய தலைநகரான ராய்கர் கைப்பற்றப்பட்டது. அவருடைய சகோதரரான ராஜராம் தப்பிவிட்டாலும்கூட, அவருடைய இளைய மகனான ஷாஹு உள்பட அவருடைய குடும்பம் முழுவதும் சிறைபிடிக்கப்பட்டது. பேரரசர் இன்னும் தெற்கே தம்முடைய அதிகாரத்தைப் பரப்பினார். தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஆகிய இந்து நாடுகளிலிருந்து கப்பம் வசூலித்தார்.

இவ்வாறு 1690ஆம் ஆண்டளவில் அவுரங்கசீப் தம்முடைய அதிகாரத்தின் உச்ச எல்லையை அடைந்தார். காபூலிலிருந்து சிட்டகாங்வரை, காஷ்மீரிலிருந்து காவேரி வரை, பெரும்பாலும் இந்தியா முழுவதற்கும் ஒப்பற்ற பேரரசராக விளங்கினார். 'இப்போது எல்லாம் அவுரங்கசீப்பினால் வெல்லப்பட்டவைபோல் தோன்றுகின்றன. ஆனால், உண்மையில் எல்லாம் இழக்கப்பட்டன. அவருடைய முடிவின் தொடக்கம்தான் அது. அவருடைய வாழ்க்கையின் மிகவும் வருந்தத்தக்க, மிகவும் சீர்கேடான அதிகாரம் இப்போது தொடங்கிவிட்டது. ஒரு மனிதரால் அல்லது ஒரு தலைநகரிலிருந்து ஆளமுடியாத அளவிற்கு முகலாயப் பேரரசு விரிந்துவிட்டது......அவருடைய எதிரிகள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து எழுந்தனர். அவர் அவர்களைத் தோற்கடிக்க முடியும். ஆனால் பூண்டோடு அழித்துவிட முடியாது. வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் அராஜகம் தலைவிரித்தாடியது. நெடுந் தொலைவிலுள்ள தக்காணத்திலிருந்த வயது முதிர்ந்த பேரரசர் இந்துஸ்தானத்திலிருந்த தம்முடைய 'அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் வன்மையை இழந்தார். ஆட்சிமுறை மந்தமாகவும், ஊழல் மலிந்ததாகவும் ஆயிற்று. ஊர்த் தலைவர்களும் ஜமீன்தார்களும், தல அதிகாரிகளைப் புறக்கணித்துத் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினர். நாடு முழுவதும் குழப்பம் மலிந்திருந்தது. குறிப்பாக ஆக்ரா மாகாணத்தில் இடைவிடாத ஒழுங்கீனம் இருந்து

Koviloor Acadamy

வந்தது. பேரரசின் ஆதரவு மறுக்கப்பட்டதால் கலையும் கல்வியும் கடைநிலை உற்றன. எந்த ஒரு நினைவுச் சின்னமும், அழகாக எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியும் அல்லது அழகுமிக்க படமும் அவுரங்கசீப்பின் ஆட்சியை நினைவூட்டுபவையாக இல்லை. தக்கணத்தில் முடிவில்லாமல் நடைபெற்றுவந்த போர்களால் அவருடைய கஜானு காலியாயிற்று. அரசாங்கம் கடன் வாங்கவேண்டிய நிலைக்கு உள்ளாகியது. சம்பளப் பாக்கி வராததால் பட்டினி கிடந்த படை வீரர்கள் கலகம் செய்யத்தொடங்கினர். அவருடைய ஆட்சியின் கடைசியில் சில ஆண்டுகளில், அதுவரை திறமையான வங்காளத் திவானுன முர்ஷக்குலிகானுல் ஒழுங்காக அனுப்பப்பட்டுவந்த பணம் தான் பேரரசரின் வீட்டுச் செலவுக்கும், அவருடைய படைக்கும் ஒரே ஆதரவான வருவாயாக இருந்தது. அதனுல் அது ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்டு வந்தது. ‘ஸ்பானியப் புற்று நோய்தான் என்னை அழித்துவிட்டது’ என்று முதலாம் நெப்போலியன் (Nepoleon I) சொல்வது வழக்கம். அதுபோலவே அவுரங்கசீப்பை அழித்தது தக்கணப் புற்றுநோய் எனலாம். பேரரசர் மராத்தியர்களை அடிப்படுத்தவோ, அவர்களுடைய நாட்டை வெல்லவோ தவறிவிட்டார். 1691–ஆம் ஆண்டளவில் எதிராகத் தேசிய எதிர்ப்புப் போரைத் தொடர்ந்து நடத்திவந்தனர். முதலில் ராஜாராம் என்பவரின் வேறு சில திறமை வாய்ந்த மராத்தியத் தலைவர்களின் தலைமையிலும், பின்பு 1700-ல் ராஜராம் மறைந்த பின் வீரமிக்க விதவையான தாரா பாயின் தலைமையிலும், மராத்தியர்கள் போரை நடத்திவந்தனர்.

9. அவுரங்கசீப்பின் இறுதிக் காலம்

இவ்வாறு வருடங்கள் உருண்டோடிக் கொண்டிருக்க, அவுரங்கசீப் தம் கண்முன்பேயே தோல்விமேல் தோல்வி குவிந்து வருவதையும் தம் பேரரசு முற்றிலும் வலுவிழந்து வருவதையும் கண்டார். பேரரசினைப்பற்றிய எதிர்காலத்தை எண்ணி அவர் மனம் பெருங் கவலை அடைந்தது. அவர் மிகப் பெருந் துன்பம் உடையவரானுர், கிளர்ச்சி செய்து கொண்டிருந்த புதல்வர்களுக்கு, பேரரசைத் துண்டு போட்டு அதைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறிய அவருடைய அறிவுரையை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. தம்முடைய தோல்வியை நன்கு உணர்ந்து கொண்டும், வரப்போகும் தடுக்க முடியாத பேராபத்தைப்பற்றிப் பெருங் கவலை கொண்டவராயும் அவர் தம்முடைய மகன் ஆஸமுக்கு இவ்வாறு கடிதம் எழுதினுர். ‘நான் தனியாக வந்தேன்; தனியாகவே போகிறேன். நாட்டுக்கும் மக்களுக்கும் நான் நல்லது செய்யவில்லை. எதிர்காலத்தைப் பற்றி எனக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை.’ காம்பக்ஷுக்கு (Kam Bakhsh) அவர், ‘என்னுடைய குறைபாடுகளாகிய சுமையை நான் சுமந்து செல்கிறேன்...வருவது வரட்டும். நான் என் போக்கிலேயே போகிறேன்’

Koviloor Academy

என்று எழுதினர். இக்கடிதங்கள் காட்டும் ஆழ்ந்த பரிதாபம் ஒவ்வொரு மனித உள்ளத்தையும் கட்டாயம் நெகிழச் செய்வதாய் இருக்கின்றன. 'தன்னந்தனியாக மரணப் படுக்கையில்' கிடந்த வயது முதிர்ந்த பேரரசர் மேல் இரக்கம் காட்டச் செய்கிறது. பெருங்கவலைகளாலும், கடின உழைப்பாலும் அழிந்து சிதைந்த மனத்தையும் உடலையும் அடைந்த பேரரசர் அகமத் நகரில் 1707 மார்ச்சு 3ஆம் தேதி காலையில் 'உதட்டில் முஸ்லிம் பச்சாத்தாபத்துடன் (செய்த குற்றங்களை ஒப்புக் கொள்ளும் சொற்களுடன்) உயிர் நீத்தார். அவருடைய சவம் தௌலதாபாத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் புகழ் பெற்ற முஸ்லீம் முனிவர் புர்ஹானுத்தினின் கல்லறை இருந்த நிலப் பகுதியில் புதைக்கப்பட்டது.

10. அவுரங்கசீப்—மனிதரும் ஆட்சியாளரும்

அவுரங்கசீப்பைப் போன்ற ஆளுமையுடையாரின் பண்பு நலனையும், கொள்கையையும் மதிப்பிடுவது உண்மையிலேயே ஒரு சிக்கலான செயலாகும். சிலர் அவருடைய தவறுகளை மட்டும் முக்கியமாக எடுத்துக் கொண்டு, அவருடைய நல்ல இயல்புகளைப் பெரிதும் புறக்கணித்து விடுகின்றனர். அவர் சிம்மாசனத்தை அடைந்த விதத்தைப்பற்றிக் கடுமையாகக் கண்டித்துக் கூறுவதற்குத் தனியாக அவரை மட்டும் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தெரியவில்லை. இதில் அவர் இந்தியாவில் தைமூரித்துகள் பரம்பரையாகப் பின்பிற்றி வந்த பழைய மரபையே பின்பற்றினர் என்று கொள்ள வேண்டும். சிம்மாசனப் போருக்காக எல்லாப் பழியையும் அவர் மேல் சுமத்துவது நியாயமற்றதாகும். அவருடைய சகோதரர்களில் எவரும் எவ்வித ஏற்பாட்டுக்கும் இணங்காமல் இருந்தமையால், எப்படியும் அவருக்கே சிம்மாசனம் கிடைக்கும் நிலையே பின்னரும் ஏற்பட்டிருக்கும். ஷாஜஹான் தமக்கு எதிரிகளாக வரக்கூடிய எல்லாரையும் அழித்து விட்டிருக்க, அவுரங்கசீப் தம்முடைய எல்லா மருமக்களையும் கொன்று விடாதிருந்ததை நாம் மறந்து விடக் கூடாது. உண்மையில் அவுரங்கசீப் வயது முதிர்ந்த தம் தந்தையைக் 'கடுமையாக நடத்தியதற்குச் சமாதானம் கூற முடியாது. ஆனல், இந்திய வரலாற்றிலும், பிற நாடுகளின் வரலாற்றிலும் பல எடுத்துக்காட்டுக் காணப்படுவதைப் போல, அவுரங்கசீப் தம் தந்தையைக் கொல்லாமல் விட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவுரங்கசீப்பின் சொந்த வாழ்க்கை எளிமையாகவும், பக்தி நிறைந்ததாயும், புலனடக்கம் உள்ளதாயும் இருந்தது. அவர் தம் உணர்ச்சிகளுக்கு அடிமையாக இருக்கவில்லை. தடை செய்யப்பட்ட உணவு, குடி அல்லது உடைகளைக் கட்டாயமாக நீக்கி வைத்திருந்தார். அவருடைய மனைவிகளின் எண்ணிக்கை 'குர்ரான்

Koviloor Acadamy

அனுமதித்த நான்கு என்ற எண்ணிக்கைக்கும் குறைவாகவே இருந்தது.' அந்தக்காலத்தில் ஒரு பேரரசரின் புலனடக்கத்திற்கு அது ஒரு போற்றத் தக்க எடுத்துக்காட்டாகவே இருந்தது. எனினும், அது தாராஷுக்கோ, குஸ்ராவ்இவர்களின் தரத்திற்குக் குறைவாகவே இருந்தது. அவர் முஸ்லீம் இறையியலின் ஆர்வமிக்க மாணவராயிருந்தார். அழகிய கையெழுத்தில் எழுதும் கலையில் (Calligraphy) வல்லவராயிருந்தார். 'புண்ணிய கடவுள் நெறியில தம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க முயன்றார். ஆனால், அவர் கலையையும் இலக்கியத்தையும் சிறிதும் ஆதரிக்காமற்போனது வருந்தத்தக்கது. அவருடைய ஆதரவைப் பெற்ற ஒரே இலக்கிய நூல் பதாவா-இ-ஆலம்கீரி (Fatawa-i-Alamgiri) என்பதுதான். அது 'இந்தியாவில் இயற்றப்பட்ட முஸ்லீம் சட்டத்தின் மிகப்பெரிய தொகுப்புக் களஞ்சியம்' என்று கருதப்பட்டுவருகிறது. அவுரங்கசீப் பக்தி மிக்க ஒரு முஸ்லிம். சமயத் தூய்மையாளரின் பேரார்வத்துடன் தூய குர்ரானில் விதிக்கப்பட்ட கட்டளைகளின்படியே மாறாது நடந்து வந்தார். ஒரு முறை பால்க் போரில் அவரைச் சுற்றிலும் போர் நடந்து கொண்டிருந்தாலும் தொழுகை நேரத்தில் மண்டியிட்டுத் தம் வழிபாட்டை முடித்துக் கொண்டார். அவருடைய சமயக் கொள்கைகளில் அவர் மிகவும் உண்மையாக இருந்தார் என்ற அவரது பெருமையை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அளவுக்கு மீறிய இந்த மதத் தூய்மைப் பற்று, அவரைக் கடுமையும் விடாப்பிடியும் உள்ளவராக ஆக்கி விட்டது. இதயத்தின் மென் குணங்களாகிய ஊற்றை வற்றச் செய்து விட்டது. இவ்வாறு 'அவர் மண்டைக் கனத்தால் செய்யப்படும் ஒரு நூறு குற்றங்களை ஈடு செய்துவிடக் கூடிய குணங்களான அனுதாபம், கற்பனை, விரிந்த மனப்பான்மை, செயல்பாட்டு முறைகளைத் தேர்ந்தெடுப்பதில் இளக்கம் ஆகியவை இல்லாதவராய் இருந்தார்.'

எதற்கும் அஞ்சாத தறுகண்மை மிக்க வீரம், நோக்கம் ஈடேறுவதில் விடாப்பிடியுடன் இருக்கும் உறுதி மனப்பான்மை, இடைவிடா உழைப்பு இவை அவருடைய முக்கியமான குணங்களில் சிலவாகும். அவருடைய படையெடுப்புப் போர்கள் அவருடைய சிறப்பு மிக்க தைரியத்திற்குப் போதிய சான்று அளிக்கின்றன. அவர் தம் பகைவர்களைச் சிக்கலுக்குள்ளாக்கித் திகைக்க வைத்த முறைகளைப் பார்க்கும்போது போரியல் சூழ்ச்சித் திறனிலும், ஆட்சிக் கலையிலும் மிகச் சிறந்த வல்லுநராகக் காணப்படுகிறார். அவருடைய ஓயாச் சக்தி அசாதாரணமாயிருந்தது; அவருடைய உழைப்பு சலியாத உழைப்பாயிருந்தது. அவர் தாமே எல்லா விண்ணப்பங்களையும், முறையீடுகளையும் படித்தார். தம்முடைய கையாலேயே அவற்றிற்கு விடை அல்லது தீர்ப்புகளை எழுதியனுப்பினார். அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் ஓர் இத்தாலிய மருத்துவரான ஜெமல்லிகரேரி (Gemelli-Careri) என்பவர் அவரை 1695-ல் பார்த்தார். அப்

Koviloor Acadamy

போது அவுரங்கசீப்பிற்கு வயது எழுபத்தேழு. 'மூக்குக் கண்ணுடியில்லாமல் அவர் தம் சொந்தக் கையாலேயே விண்ணப்பங்களுக்கு மேலொப்பமிடுதலைக் கண்டு வியந்தேன். மகிழ்ச்சி நிறைந்த புன்முறுவல் தவழும் முகத்தைப் பார்க்கும் போது தம் பணியில் அவர் மிகப் பெரிதும் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டிருந்தது போலக் காணப்பட்டார்' என்று அந்த இத்தாலிய மருத்துவர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

உள்ள வலிமையும் குணவியல்பு வன்மையும் பெற்றிருந்த போதிலும், அவர் இந்தியாவின் அரசாட்சியாளராக இருந்ததில் தோல்வியுற்றுர் என்றே சொல்ல வேண்டும். ஒரு பேரரசரின் பெருமையும் புகழும் மக்கள் எல்லாருடைய ஒருமுகமான முன்னேற்றத்தையும் பொறுத்தனவே என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தம்முடைய மதத்தில் ஆழ்ந்த பெரும் பற்றுகொண்டிருந்த அவர் குடிமக்களின் முக்கியமான பிரிவினரின் உணர்ச்சிகளைப் புறக்கணித்தார். அதனுல் தம்முடைய பேரரசுக்குப் பகைமைச் சக்திகள் ஏற்படுமாறு செய்துவிட்டார். உண்மையில் மௌரியர்களின் காலத்திலிருந்து இந்திய வரலாற்றைப்பார்க்கும் போது, பல்வேறு முரண்பாடுகள் மலிந்த மக்களிடையே, ஓர் இன்ப இணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சமயத்துறை பற்றிய பரந்த மனப்பான்மை கடைப்பிடிக்கப்படுவதைப் பொறுத்தே நாட்டில் அரசியல் முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது என்பது புலனுகும். மதவேறுபாடுகளை வலியுறுத்திக் கொண்டே ஒன்றுபட்ட ஒரே இந்தியாவை உருவாக்குவது ஒன்றும் பயனளிக்காத வீண் கனவாகவே முடியும். மேலும் அவுரங்கசீப்பின் தளரா உழைப்பும் கடின உழைப்புச் செய்யுந்திறனும் ஒரு விதத்தில் அவருக்கு எதிராகவே இருந்து அவர் மனத்தில் அளவுக்கு மீறிய அவநம்பிக்கையும் அவருடைய அதிகாரிகளின் மீது அளவுக்கு மீறிய அவநம்பிக்கையும் கொள்ளச் செய்தன. இதனுல் அவர் அரசாங்கத்தின் மிக்க சிறு செயல்களிலும் அடிக்கடி தலையிட நேர்ந்தது. இதனுல் தல அதிகாரிகள் எல்லாரும் எப்போதும் அவருடைய ஆணையையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களாயும் தன் ஊக்க உணர்ச்சியற்றவராயும், பொறுப்புணர்ச்சி, வேலைத்திறமையில்லாதவராயும் மாறிவிட்டனர். 'மிகப் பரந்த முரண்பாட்டுக் கூறுகள் நிறைந்த இந்தியா போன்ற பேரரசில் இப்படிப்பட்ட நிலைமை ஆட்சித்துறை அழிவு கேட்டை' அல்லது வேறு எதனையும் விளைவிக்காது. பழமைப்பற்று மிக்க ஒரு ஸுன்னி முஸ்லிமின் கண்ணுேட்டத்தில் காபிகான் கீழ்வரும் மதிப்பீட்டைத் தருகிறுர்: 'தைமூர்க்குடும்பத்தின் எல்லாப் பேரரசர்களிலும், இல்லை, தில்லிப் பேரரசர்கள் எல்லாரிலும் சிக்கந்தர் லோடி காலத்திலிருந்து அவுரங்கசீப்பைத் தவிர வேறு எவரும் பக்தி, கண்டிப்பு, நீதி இவற்றுக்காக அவ்வளவு புகழ் வாய்ந்தவர் இல்லை. தைரியம், துன்

Koviloor Academy

பத்தை நீண்ட காலம் பொறுத்துக்கொள்ளல், சிறந்த தீர்ப்பு இவற்றில் அவர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவராய் இருந்தார். ஆனால் அவர் சட்டத்தின் ஆணைக்குக் கொடுத்த மதிப்பைத் தண்டனையின் தரத்தை உயர்த்துவதற்கோ தாழ்த்துவதற்கோ பயன்படுத்த வில்லை. தண்டனை இல்லாமல் ஒரு நாட்டின் ஆட்சி முறை சரிவர நடைபெறாது. அதிகாரத் திற்கான போட்டியினால் அவருடைய பிரபுக்களிடையே வேறு பாடுகள் தோன்றின. அதனால் அவர் போட்ட ஒவ்வொரு திட்டமும் சிறிதும் பயனளிக்காமல் போயின. எடுத்துக்கொண்ட ஒவ்வொரு புது முயற்சியும் நிறைவுறுவதற்கு நீண்ட காலம் எடுத்துக்கொண்டன ; அவற்றின் நோக்கங்களும் நிறைவேறாமல் போயின.' அவுரங்கசீப் பல தங்கமான குணங்களைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் ஒரு வெற்றி மிக்க அரசராக இருக்கவில்லை. அவர் ஒரு பெரிய போர் வீரராக இருந்தார்; ஆனால், முன்னறியுந் திறனுடைய மக்கள் தலைவராக அவர் இருக்க வில்லை. கூர்த்தமதியுடைய ராஜ தந்திரியாகவே இருந்தார் அவர். ஆனால், அறிவு மிக்க நாட்டு நலன் விரும்பும் ஒருவராக அவர் இருக்கவில்லை. சுருங்கக்கூறின், தம் காலத்தவர்கள் அல்லது எதிர் காலத்துச் சந்ததியினரின் எண்ணங்களையும் வாழ்க்கையையும் உரு வாக்கும் சட்டங்களை இயற்றியும் கொள்கைகளைப் புகுத்தியும் வாழ்ந்த முகலாயப் பேரரசர்களுள் ஒரே ஒருவரான அக்பரைப் போன்ற அரசியல் மேதையாக அவர் விளங்கவில்லை. பெரும்பாலும் பேரரசரின் அரசியல் முன்னறிவின்மையால்தான் அவர் இவ்வுலகத்தை விட்டு நீங்குவதற்குமுன்பே முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான அறிகுறி கள் தோன்றின. அவருக்குப் பின்வந்த பலவீனமிக்க அரசர்கள் சீர்குலைவை விரைவுபடுத்தத்தான் செய்தார்கள். மதத் தூய்மை கொண்டிருந்த பேரரசரின் ஆட்சி ஒரு பெரிய அவலத்திலேயே முடிந்தது.

11. பதினேழாம் நூற்றாண்டில் மராட்டியர்களும் முகலாயர்களும்

அ. மராட்டியர்களின் எழுச்சி

முன்பு விசயநகர ஆட்சி செய்ததுபோலவே, பதினேழாம் நூற் றாண்டின் இரண்டாம் பகுதிக் காலத்தில் மராட்டிய ஆட்சியின் எழுச்சியானது இந்திய அரசியலில் ஒரு முக்கியமான திருப்பத்தை உண்டாக்கியது. இந்திய வரலாற்றில் மத்தியகாலங்களின் தொடக் கத்தில் மராட்டியர்கள் அரசியல், பண்பாட்டுச் செயல்களில் மிகச் சிறந்த மரபுகளைப் பெற்றிருந்தனர். அப்போது அவர்கள் தேவகிரி யாதவர்களின்கீழ் தேசியத்தின் பொருட்டுப் போராடினர். அலாவுத் தீன் காலத்தில் இராமச்சந்திர தேவன் என்ற யாதவர் வீழ்ச்சியுற்றதும்

Koviloor Acadamy

மராட்டியர்களும் தங்கள் சுதந்தரத்தை இழந்தனர். ஆனல் நாற்பதாண்டுகளுக்குள் அவர்கள் பாமனி இராச்சியத்திலும், பின்பு அடுத்துவந்த சுல்தானியங்களிலும் மீண்டும் பங்கெடுத்துக்கொள்ளத் தொடங்கினர். பதினேழாம் நூற்ருண்டில் அவர்கள் ஒரு தேசிய நாடாக ஒழுங்குபட்டு அமைந்தனர். இந்த மராட்டிய தேசிய ஒற்றுமைக்குத் தலைவர் சிவாஜி என்பதில் சிறிது ஐயமும் இல்லை. ஆனல் அவருடைய புகழ்பெற்ற சாதனைகள் நிறைவேறுவதற்குப் பலவகையான காரணங்கள் இருந்தன என்பது கவனிக்கத்தக்கது.

முதலாவதாக, மராட்டியர்களின் நிலவியல் அமைப்பு அவர்களுடைய குணச் சிறப்பையும் வரலாற்றையும் உருவாக்குவதில் பேராதிக்கம் உடையதாய் இருந்தது. அது வடக்கிலிருந்து தெற்காக சயாத்திரி (Sahyadri) மலைத்தொடராலும், கிழக்கிலிருந்து மேற்காக விந்திய சாத்புரா மலைத்தொடரினாலும் சூழப்பட்டிருந்தது. இவ்வாறு இரு பக்கங்களிலும் மலைத்தொடர்களால் சூழப்பட்டிருந்தது. மேலும் அது நர்மதை, தபதிநதிகளால் காப்பாற்றப்பட்டு வந்தது. எண்ணில்லாத, எளிதில் தற்காத்துக்கொள்ளக்கூடிய மலைக்கோட்டைகளும் இருந்தன. மத்திய நாடு 'ஒரு குதிரைப் படையின் படையெடுப்பாலோ அல்லது ஓர் ஆண்டு தொடர்ந்து போரிட்டு வந்ததாலோ, வெல்லப்பட முடியாததாயும் இருந்தது.' கரடு முரடான, விளைச்சல் கொடுக்காத அந்நாட்டு நிலமும் பருவகாலத்தில் பெய்யாத அல்லது சிறிதே பெய்கிற மழையும் அந்நாட்டின் மிகச் சிறு உழவுப் பொருள் வளங்களும் மராட்டியர்களை ஆடம்பரம், சோம்பல் போன்ற தீய குணங்கள் பற்ருதவாறு செய்ததுடன், 'தன்னம்பிக்கை, உள்ள உரம், விடாமுயற்சி, உறுதியான எளிமை, முரட்டுத்தனமான நேர்மை சமுதாய சமத்துவ உணர்ச்சி, இவற்றின் விளைவாக மனிதனை மனிதனுக மதிக்கும் மாண்பு' போன்ற குணங்களை வளர்த்துக்கொள்ளவும் உதவின. இரண்டாவது, மராட்டிய மதச் சீர்திருத்த வாதிகளான ஏகநாத், துக்காராம், ராம்தாஸ், வாமன பண்டிதர் ஆகியோர் அடுத்தடுத்துப் பல நூற்ருண்டுகளாகக் கடவுள் பக்திக் கொள்கையையும் சாதி, மதிப்பு, செய்யுந்தொழிலின் சிறப்பு இவற்ருல் வேறுபாடின்றிக் கடவுள் முன்னிலையில் எல்லா மனிதரும் சமம் என்ற கொள்கையைப் போதித்து, அவர்கள் நாட்டில் மறுமலர்ச்சி அல்லது தன் விழிப்பு விதைகளை விதைத்து வந்தனர். பொதுவாக ஒரு நாட்டில் தன் விழிப்புணர்ச்சி ஏற்படுவது அரசியல் புரட்சிக்கு முன்னேடியாகும். சிவாஜியின் குருவான சமர்த்த ராம்தாஸ் அவருடைய நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரும் விழிப்புணர்ச்சி எற்படும்படி செய்தார். சமுதாயச் சீர்திருத்தம், தேசிய மறுமலர்ச்சி முதலிய குறிக்கோள்கள் மடங்களில் இருந்த அவருடைய சீடர்கள் மூலமும் புகழ்பெற்ற அவருடைய நூலான தசபோதம் (**Dasabodha**) மூலமும் அவர்கள் உள்ளத்தில்

Koviloor Acadamy

நன்கு பதியுமாறு செய்தார். மூன்ருவதாக, இலக்கியம், மொழி இவை மராட்டிய மக்களிடையே மற்ருெரு பிணைப்பை ஏற்படுத்தியது. சமயச் சீர்திருத்தக்காரர்களால் பக்திப் பாடல்கள் மராத்திய மொழியில் இயற்றப்பட்டன. அதன் விளைவாகப் பதினைந்து பதினாறும் நூற்ருண்டுகளில் அந்நாட்டு மக்களின் உள்ளத்தில் சீரிய பேரார்வ உணர்ச்சிகளை எழுப்பக்கூடிய வலிமை மிக்க இலக்கியம் வளர்ந்தது. சர் ஜே. என்.சர்க்கார் கூறுகிருர். 'இவ்வாறு சிவாஜியினுல் அரசியல் ஒற்றுமை ஏற்படும் முன்பே மகாராட்டிரத்தில பதினேழாம் நூற்ருண்டில் மொழி, கொள்கை, வாழ்க்கை இவற்றின் குறிப்பிடத்தக்க கூட்டுறவு ஏற்பட்டுவிட்டது. அவரால் ஒரு தேசிய மராட்டிய நாடு தோன்றினமை, அவர்களுடைய புதல்வர்களின் தலைமையில் தில்லியிலிருந்து வந்த படையெடுப்பாளர்களிடம் நீண்ட போராட்டம், பேஷ்வாக்களின் கீழ் மராட்டியப் பேரரசு விரிவடைந்தமை முதலியவை மக்களின் ஒற்றுமைக்கு வேண்டிய மீதியை நிறைவு செய்துவிட்டன'.

தக்கணச் சுல்தானியங்களில் பல பதவிகளில் இருந்தமையால் மராட்டியர்கள் அரசியல் படைத்துறை இவற்றின் ஆட்சிமுறைபற்றி முன்னரே சிறிது அனுபவம் பெற்றிருந்தனர். சிவாஜியின் புகழ்பெற்ற தந்தை ஷாஜி அகமத்நகர் சுல்தானின் படையில் ஒரு போர் வீரராகச் சேர்ந்து தம் வாழ்க்கையைத் தொடங்கினுர். படிப்படியாக அவர் உயர்நிலை யடைந்தார். அந்நாட்டில் பரந்த நிலப்பரப்புகளை வென்ருர். நிஸாம் ஷாஹியின் ஆட்சியின் கடைசிக்காலத்தில் அரசனை ஆக்குபவராகவும் திகழ்ந்தார். ஆனுல், அவருடைய வெற்றி மற்றவர்களின் பொருமையைக் கிளப்பிவிட்டது. ஷாஜஹானுல் அகமத்நகர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிறகு, 1636-ல் பீஜப்பூர் அரசாங்க ஊழியத்தில் அவர் நுழைந்தார். இங்கும் அவர் ஓரளவு புகழை அவர் பெற்ருர். கர்நாடகத்தில் பரந்த ஒரு ஜமீனைப் பெற்ருர். மேலும் அகமத்நகர் அரசாங்கத்தின் ஊழியர் என்ற முறையில் பூனுவில் அவருக்கு ஒரு ஜாகீர் முன்பிருந்தே இருந்துவந்தது.

ஆ. சிவாஜியின் வாழ்க்கை

சிவாஜி ஜுன்னுருக்கு அருகில் உள்ள ஷிவ்னர் (Shivner) மலைக்கோட்டையில் 1630-ல் பிறந்தார் என்று சில ஆசிரியர் கருதுகின்றனர். தற்காலத்துச் சில வரலாற்ருசிரியர்கள் அவர் 1627-ல் பிறந்ததாகச் சொல்லுகின்றனர்.[1] சிவாஜியை

[1] சர்க்கார் எழுதிய சிவாஜி (Sarkar's Shivaji) J. I. H. 1927 பக்கம் 177-197. தசரத சர்மா அவர்கள் சிவாஜியின் பிறப்பைப்பற்றி அக்காலத்தில் எழுதிவைக்கப்பட்ட ஒரு பதிவேட்டை (record) (அதாவது பிக்கானீர்க்கோட்டை நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சிவாஜியின் ஜாதகத்தை வெளிக்கொணர்ந்துள்ளார் (J. B. O. R. S. 1934 ஜுன்). அதன்படி சிவாஜி பிறந்தது சாம்வத் 1686-ம் ஆண்டாகும்.

Koviloor Academy

யும், அவருடைய தாயான ஜிஜாபாய் என்பவரையும் தாதாஜி காண்டேவ் (Dadaji Khonddev) என்ற திறமைமிக்க பிராமணர் ஒருவரின் கண்காணிப்பில் விட்டுவிட்டு ஷாஜி தம் இரண்டாவது மனைவியுடன் தம்முடைய புதிய ஜாகீருக்கு இடம் மாறினர். கணவரால் புறக்கணிக்கப்பட்டவளும், சிறப்பு மிக்க அறிவும், பண்பும், நல்லொழுக்க உள்ளமுங் கொண்ட ஜிஜாபாய் தம்முடைய குழந்தையின் மனத்தில் உயர்ந்த, எழுச்சி யூட்டக்கூடிய கருத்துக்களைப் பழங்காலத்திய வீரம், ஆன்மீகம் தீரம் இவை பற்றிய கதைகள் கூறுவதன் மூலம் புகுத்தியதுடன், மதத்தைக் காப்பாற்றும் ஆர்வத்தையும் அவருள்ளத்தில் தூண்டிவிட்டார். 'உலகில் அருஞ் செயல் புரிந்த பெரியோர்கள் தங்கள் அன்னைமார்களினுல் உயர்ச்சியடையக் கூடுமாயின், அதற்குச் சிறந்த உதாரணமாகச் சிவாஜியின் வாழ்க்கையை உருவாக்குவதில் முதன்மையான முக்கியத்துவம் பெற்ற ஜிஜாபாயின் செல்வாக்கை எடுத்துக் காட்டலாம்' என்று ரானடே (Ranadey) கூறியிருக்கிறுர். இதனேடு தாதாஜி காண்டேவின் செல்வாக்கும் கலந்து சிவாஜியைத் தைரியசாலியாகவும், துணிச்சலாளியாகவும் செய்தது. சிவாஜி முறையாக இலக்கியக் கல்வி பெற்றுரா என்பது நமக்குத் தெரியாது. ஆனுல் 'துணிவு நிரம்பிய, துணிகரச் செயல் விரும்பும் வீரராக வளர்ந்தார்.' கொள்ளையடிக்கும் வெறும் விருப்பத்தினுலன்றி, அயல் நாட்டுக் கொடுங்கோன்மை என்று தாம் கருதியதை ஒழித்துக்கட்டித் தம் நாட்டின் விடுதலைக்காக உழைக்க வேண்டும் என்ற உண்மை ஆர்வம் கொண்டவராய் அவர் வாழ்ந்தார். மேற்குக் கரையில் தொண்ணூறு மைல் நீளமும், பன்னிரண்டு முதல் பதினுன்கு மைல் அகலமும் உடைய் மாவல்(Maval) நாட்டு மலைமக்களுடன் இளமையிலேயே நெருக்கமான உறவு கொண்டிருந்தமை பிற்காலத்தில் அவருக்கு அளவிறந்த உதவியாய் இருந்தது. ஏனெனில் மாவல் நாட்டு மக்கள் 'அவருடைய மிகச் சிறந்த போர்வீரர்களாயும், முதன்மையான தோழர்களாயும், அவருடைய பற்றுறுதிமிக்க தளபதிகளாகவும்' மாறினர். தாயின் வழியைப் பார்க்கும்போது அவர் தேவகிரியை ஆண்ட யாதவர்களின் சந்ததியினர் ஆவர். தந்தையின் வழியைப் பார்க்கும்போது அவர் மேவார் நாட்டு வீரம்மிக்க சிசோதியர்களின் பரம்பரையைச் சேர்ந்ததாகக் கூறிக்கொண்டார். இவ்வாறு புகழ்மிக்க பரம்பரையைச் சேர்ந்தவர் என்ற உணர்ச்சியும், இளமைக் காலப் பயிற்சியும், சூழ்நிலையும் இணைந்து இளமை பொருந்திய மராட்டிய வீரரான அவரிடத்தில், ஒரு சுதந்தர இராச்சியத்தை நிறுவும் பேரார்வ உணர்ச்சிகள் தோன்றின. தமக்காக அவர் ஒரு 'சுதந்தர வாழ்க்கையை' மேற்கொண்டார். அது இன்னல்களும் இடர்ப்பாடுகளும் நிறைந்ததாயிருந்தாலும், 'அவர் வெற்றியடைய முடியுமானுல் கனவிலும் கருதாத நன்மைகளைத் தருவதாயும் துன்பப்பட்ட அவவிற்குப் பயன் தரத் தக்கதாயும் இருந்தது.'

Koviloor Acadamy

தக்கணச் சுல்தானியங்களின் பலவீனப்பட்டுக் கொண்டே போகும் நிலையும், வடக்கே பேரரசினர் தொடர்ச்சியாக நீண்டகாலம் செய்து வந்த போர்களும் மராட்டிய அரசர் தோன்றுவதற்கு மிகவும் சாதகமாயிருந்தன. 1646-ல் சிவாஜி தோர்ணுக் (Torna) கோட்டையைக் கைப்பற்றினர். அதன் கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் விரைவிலேயே ராஜ்கர் (Rajgarh) கோட்டையைக் கட்டினர். இது போன்ற இடர்ப்பாடான செயற்பாடுகளை விரும்பாதவராய்க் காணப்பட்ட தாதாஜிகாண்டேவ் (1647-ல்) இறந்த பிறகு சிவாஜி பரம்பரையாகக் கோட்டைகளைப் பெற்றிருந்தவர்களிடமிருந்தும் பீஜப்பூர் அதிகாரிகளிடமிருந்தும் வன்முறை, கையூட்டு அல்லது தந்திரம் மூலம் பல கோட்டைகளை வாங்கினர் ; பல புதிய கோட்டைகளையும் கட்டினர். இவ்வாறு அவர் சங்கிலித் தொடர் போன்று பல மலைக்கோட்டைகளால் பாதுகாக்கப்பட்ட ஒரு நிலப் பகுதியை உரிமையாக அடைந்தார். அவருடைய தந்தை பீஜப்பூர் அரசாங்கத்தால் சிறையிலிடப்பட்டுப் பின் மகனின் நல்ல நடத்தைக்கு உறுதி கூறிய பின் விடுதலை செய்யப்பட்டதால் அவர் சில ஆண்டுகள் (1649-1655) பீஜப்பூருக்கு எதிராகச் செய்து வந்த முயற்சிகளை நிறுத்தி வைக்க நேர்ந்தது. ஆனால், இந்தச் சமயத்தில் அவர் தம்முடைய வெற்றிகளை ஒரு நிலைப்படுத்திக் கொண்டார். சிறிய மராத்தியத் தாலுக்காவான ஜாவ்லீ (Javli) என்ற பகுதியின் அரைச் சுதந்தர இளவரசராயிருந்த சந்திர ராவ் மூர் (Chandra Rao More) என்பவரை அவருடைய முகவருள் (agents) ஒருவரைக்கொண்டே கொல்வித்து அப்பகுதியை 1656 ஜனவரியில் சேர்த்துக் கொண்டார். இந்தச் சமயத்திற்குள் சிவாஜியின் பரம்பரைச்சொத்தின் பரப்பும் வருவாயும் இரண்டு மடங்குக்கும் மேலாயின. அவுரங்கசிப்பும் அவருடைய படைகளும் பீஜப்பூர்ப் படையெடுப்பில் ஈடுபட்டிருந்த வாய்ப்பை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு அவர் முதன் முதலாக 1657-ல் முகலாயரைப் பகைத்துக் கொண்டார். முகலாய மாவட்டங்களான அகமத்நகர், ஜுன்னர் இவற்றைத் தாக்கினர். ஜுன்னர் நகரைக் கொள்ளையிட்டார். உடனடியாக அவுரங்கசிப் அந்தப் பகுதிகளில் இருந்த தம்முடைய அதிகாரிகளைப் புதுவலிமையுடையவராக்கினர். அதனல் சிவாஜி தோற்கடிக்கப்பட்டார். ஆதில் ஷா அவுரங்கசிப்புடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டபோது சிவாஜியும் அவுரங்கசிப்பூக்கு அடிபணிந்தார். அவுரங்கசிப் சிவாஜியை ஒரு போதும் நம்பவில்லை. ஆனல் அவருடைய தந்தையின் நோய்காரணமாக அவர் வடக்கே செல்வது இன்றியமையாததாய் இருந்தமையின் ஒருவாறு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். பிறகு சிவாஜி வட கொங்கணத்தின் பக்கம் தம் பார்வையைத் திருப்பினர். கல்யாண், பிஹ்வாண்டி (Bhiwandi), மாஹுலி (Mahuli) இவற்றைப் பிடித்தார். மாஹத் (Mahad) வரை தெற்கே சென்றூர்.

Koviloor Academy

உள்நாட்டுக் கலகத்திலிருந்தும், முகலாயப் படையெடுப்பின் அண்மைத்தாக்குதலிலிருந்தும் தாற்காலிகமாக விடுதலை பெற்றிருந்த பீஜப்பூர் சுல்தான் ஒரேயடியாகச் சிவாஜியின் வலிமையை ஒழிக்க முடிவு செய்து 'தம் இராச்சியத்தின் முன்னணியான பிரபுக்கள் சிலருள் ஒருவரான' அப்ஸல்கான் (Afzal Khan) என்பவரின் தலைமையில் கி.பி. 1659-ன் தொடக்கத்தில் 'கலகக்காரனை (சிவாஜியை) உயிருடனே, உயிரைப் போக்கியோ கொண்டு வருக' என்று ஒரு பெரும்படையை அனுப்பினார். அப்ஸல்கான் சதாராவின் (Satara) வடக்கே இருபது மைல் தூரத்திலிருந்த வைய் (Wai) என்ற இடத்தைப் பதினைந்து நாட்களுக்குள் அடைந்தார். சிவாஜியை அவருடைய பிரதாப்கர்க் கோட்டையிலிருந்து வெளிக் கொணர முடியாமல் பீஜபூர்த்தளபதி கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற ஒரு மராட்டிய பிராமணன் மூலம் உடன்படிக்கைகள் செய்து கொள்ளத் தொடங்கினார். ஒரு கூட்டத்திற்கு வரும்படி அவரை அழைத்தார். சிவாஜி தூதரை மரியாதையுடன் வரவேற்று, மதத்தின் பெயரால் அப்ஸல்கானின் உண்மையான நோக்கத்தை வெளிப்படுத்துக என்று அப்பிராமணனை வேண்டினார். அவ்வேண்டுகோளால் மனமிரங்கிய கிருஷ்ணாஜி பாஸ்கர் பிஜப்பூர்த் தளபதி தம் மனத்துள் தீங்கெண்ணம் கொண்டிருப்பதாகக் குறிப்பாகக் கூறினார். அது அப்ஸலிடம் அனுப்பிய சிவாஜியின் சொந்தத் தூதுவரான கோபிநாத் மூலம் அறிந்த வற்றால் உறுதி செய்யப்பட்டது. இதனால் சிவாஜி விழித்துக்கொண்டார். எதிரியைச் சந்திப்பதற்காகப் புறப்பட்டார். மேல் நோக்காக ஆயுதந்தரிக்காத வராகக் காணப்பட்ட அவர், நெருக்கடி நேர்ந்தால் சூழ்ச்சியைச் சூழ்ச்சியின் மூலம் எதிர்க்கலாம் என்று கருதிக் கவசந்தாங்கியவராகப் புறப்பட்டார். வலிமையும் உரமும்வாய்ந்த முஸ்லீம் தளபதி, ஒல்லியாயும் குள்ளமாயுமிருந்த மராட்டியத் தலைவரைத் தழுவும் போது அவருடைய தழுத்தைத் தம் இடதுகையால் 'இரும்புப் பிடியாகப்' பிடித்து வலதுகையால் சிவாஜியின் உடலில் ஒரு குறுவாளைப் பாய்ச்சத் தொடங்கினார் என்றும், எனினும் சிவாஜியின் மறைக்கப்பட்டிருந்த கவசம் அவருக்கு நேரவிருந்த ஆபத்திலிருந்து அவரைக் காப்பாற்றியதென்றும் மராட்டியர்கள் ஒருமுகமாக் கூறுகின்றனர். உடனே சிவாஜி பாக்நகம் (Baghnakh—புலிநகம்) அல்லது எஃகு அலகுகளையுடைய கையுறைகளால் அப்ஸலின் உடலைக் குத்திக் கிழித்து அவரைக் கொன்றார். மறைந்து பதுங்கியிருந்த தம்முடைய துருப்புக்களின் உதவியால் தலைவரில்லாத பிஜப்பூர்த் துருப்புகளைத் தோற்கடித்து, அவர்களுடைய பாசறையைச் சிவாஜி சூறையாடினார். காபிகான், டவ் (Duff) என்ற இருவரும் அப்ஸல்கான் சிவாஜியை முதலில் தாக்க முயலவில்லை என்றும் சிவாஜிதான் அவரை வஞ்சகமாகக் கொலை செய்தார் என்றும் குற்றஞ் சாட்டுகின்றனர். ஆனால், பிஜப்பூர்த் தளபதியின் தாக்குதலிருந்து தற்காத்துக் கொள்ளும் முயற்சியாக

Koviloor Academy

சிவாஜி செய்தது சரியே என்று மராட்டிய வரலாற்ரு சிரியர்கள் வாதம் செய்தனர். அவர்காலத்துத் தொழிற்சாலேப் பதிவேடுகளும் மராட்டிய வரலாற்றுக் கோப்பாளரின் கூற்றையே ஆதரிக்கின்றன.

அடுத்து சிவாஜி தென் கொங்கணத்திற்கும், கோல்ஹாபூர் மாவட்டத்திற்கும் சென்ருர். ஆனுல் 1660 ஜூலேயில் சிதி ஜௌஹார் (Sidi Jauhar) என்பவரின் தலேமையின் கீழ்வந்த ஒரு பீஜப்பூர்ப் படை அவரை 1660 ஜூலேயில் பண்ஹாலாக் கோட்டையில் சூழ்ந்து கொண்டது. சிவாஜி அக்கோட்டையைக் காலி செய்யும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். விரைவில் அவருக்குப் புதியதோர் இன்னலும் உண்டாயிற்று. தக்காணத்தின் புதிய முகலாயக் கவர்னரான ஷயிஸ்தாகான் மராட்டியத் தலேவரான சிவாஜியின் செயல்களே ஒடுக்குமாறு அவுரங்கசீப்பினுல் ஆணேயிடப்பட்டார். அவர் பூனுவிற்குள் நுழைந்து சாகன் (Chakan) கோட்டையைக் கைப்பற்றிக் கல்யாண் மாவட்டத்திலிருந்து மராட்டியர்களே விரட்டியடித்தார். ஆனுல் பீஜப்பூர் அரசாங்கத்தில் இன்னும் முக்கியமான பதவியை வகித்து வந்த சிவாஜியின் தந்தை குறுக்கீடு செய்ததால் சிவாஜி பீஜப்பூர் அரசுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள முடிந்தது. இவ்வாறு அவர் தம் முழுக்கவனத்தையும் முகலாயர்களின் பக்கம் திருப்புமாறு விடுதலேயுற்ருர். சுமார் இரண்டாண்டுகள் இடையீட்டுடன் கூடிய போருக்குப் பிறகு அவர் பூனுவிலிருந்த ஷயிஸ்தா கானின் அறைக்குள் மறைவாகச் சில பணியாளர்களுடன் 1663 ஏப்ரல் 15ஆம் தேதி நுழைந்தார். ‘ தக்கணத்து முகலாய இராசப்பிரதிநிதியை அவருடைய சொந்தப் பாசறையின் நடுவிலேயே, அவருடைய மெய்க்காவலர்கள், பெண் அடிமைகள் முதலியோர்கள் சூழ்ந்திருக்கும் போதே நுழைந்து, ஷயிஸ்தா கானே வியப்புக்குள்ளாக்கி, அவரைக் காயப்படுத்தினுர்.’ அபுல் பத் (Abul Fath) என்ற பெயருடைய அவருடைய மகனேக் கொன்ருர். ஒரு தளபதி, நாற்பது பணியாட்கள், அவருடைய அந்தப்புரத்திலிருந்த ஆறு பெண்கள் ஆகியோரைக் கொன்று விட்டுப் பிறகு, அருகிலிருந்த சிங்காகர்க் (Singhagarh) கோட்டைக்குப் பத்திரமாகச் சென்ருர். முகலாய இராச்சியப் பிரதிநிதி தம்முடைய கட்டைவிரலே இழந்து எப்படியோ உயிர் பிழைத்துச் சென்ருர். சிவாஜியின் இத்துணிகரச் செயல் அவருடைய மதிப்பை மிகவும் உயர்த்தியது. அவர் விரைவில் மேற்கூறிய செயலேப் போலவே துணிகரமிக்க வேருெரு செயலேயும் செய்தார். அவர் 1664 ஜனவரி 16-20 தேதிகளில் மேற்குக்கரையின் வளம்மிக்க துறைமுகமான சூரத்தை எவ்விதமான தடையுமின்றித் தாக்கித் தகர்த்தார். அந்த இடத்தின் கவர்னர் அவரை எதிர்த்துப் போரிடாமல் ஓட்டம் பிடித்துவிட்டமையால் சிவாஜி எளிதில் வெற்றி பெற்ருர். மராட்டியத் தலேவரான சிவாஜி ஒரு கோடி ரூபாய் பெறுமான கொள்ளேயுடன் திரும்பிச் சென்ருர். அங்கிருந்த ஆங்கில,

Koviloor Acadamy

டச்சத் தொழிற் சாலைகள் தாம் வெற்றிகரமாக அவரை எதிர்த்துக் கொள்ளையடிக்கப்படாமல் தங்களைக் காத்துக் கொண்டன.

முகலாயரின் மதிப்பையும், தக்கணத்தில் முகலாயருக்கு இருந்த செல்வாக்கையும் மிகவும் பெரிதாகப்பாதிக்கக்கூடிய இச்செயல்களைச் சிவாஜி மீண்டும் மீண்டும்செய்து வந்ததால் எரிச்சல் கொண்ட அவுரங் கசீப் 1665 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஆம்பர் ராஜாவான ஜெய சிங்கு, திலீர்கான் ஆகியோரை ஒரு படை யெடுப்புச் செய்யும் படை யுடன் சிவாஜியைத் தண்டிப்பதற்காகத் தக்கணத்திற்கு அனுப்பினர். தந்திரமும் தீரமும் மிக்க தளபதியான ஜெயசிங்கு பேரரசின் பல பாகங்களிலும் நடத்திய போர்களால் பெற்ற பலவகைப்பட்ட படைத் துறை அனுபவங்களுடனும் அரசியல் திறனுடனும், முன்னறிவுடனும் அறிவுமிக்க மராட்டியத் தலைவருக்கு எதிராக மிகக் கவனத்துடன் சென்ருர். சிவாஜியைச் சுற்றிப் பல எதிரிகளை எழுப்பிவைத்துக் கொண்டு புரந்தர்க்கோட்டையை முற்றுகையிட்டார். முற்றுகை யிடப்பட்ட படையினர் கோட்டையைச் சிறிது காலம் மிகுந்த வீரத் துடன் காத்து நின்றனர். அச்சமயத்தில் மாஹத் நகரைச் சேர்ந்த முனர் பாஜி தேஷ்பாண்டே (Munar Baji Deshpande) என்ற கோட் டைப்படையின் பிரபு' என்ற தளபதியும் முந்நூறு மாங்லிகளும் உயிர் துறந்தனர். சிவாஜியின் அரசாங்கத்துத் தலைமையிடமான ராய்கர்க் கோட்டையையும் முகலாயர்கள் முற்றுகையிட்டனர். மேலும் எதிர்ப்புச் செய்து நிற்பதால் ஏற்படும் செலவைக் கருத்தில் கொண்டு சிவாஜி 1665 ஜூன் 22 ஆம் தேதி ஜெயசிங்குடன் புரந்தர் உடன் படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி தமக்காகப் பன்னி ரண்டு கோட்டைகளை மட்டும் வைத்துக்கொண்டு முகலாயர்களுக்கு இருபத்து மூன்று கோட்டைகளை விட்டுவிட்டார். தக்காணத்தில் முகலாயப் படையுடன் போரிடுவதற்காக ஐயாயிரம் குதிரைகள் அடங்கிய படையைக் கொடுப்பதாக வாக்குறுதி யளித்தார். இழந்த பகுதிகளுக்கு ஈடு செய்யும் பொருட்டு பீஜப்பீர் இராச்சித்தின் சில மாவட்டங்களில் சௌத், சர் தேஸ் முகி இவற்றை வசூல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டார். விரைவில் அவர் பீஜப்பூருக்கு எதிராகச் செய்த போரில் பேரரசினருடன் சேர்ந்து கொண்டார். ஆனல், ஜெயசிங்கின் பீஜப்பூர்ப் போர் தோல்வியில் முடிந்தது. எனினும் அவர் 'மிக உயர்ந்த நம்பிக்கைகளுடன்' சிவாஜியைப் பயன்படுத்திக்கொண்டார். 'ஓராயிரம் முறைகளைப்' பயன்படுத்தி ஆக்ராவிலிருந்த பேரரச அவைக்குச் செல்லுமாறு சிவாஜியைத் தூண்டினர்.

சிவாஜியைப் பேரரசரது அவைக்கு அனுப்பவேண்டும் என்று ஜெயசிங்கு எண்ணியதன் கருத்து என்னவெனில் அவரைத் தொல்லை கள் மிக்க தக்கணப் பகுதியிலிருந்து ஒழித்துவிட வேண்டும் என்பதே


Koviloor Academy

யாகும். ஆனல், அந்த ஏற்பாட்டுக்குச் சிவாஜியை ஒப்புக்கொள்ளச் செய்தது எது என்பதைப் புரிந்துகொள்ளுவது மிகவும் கடினமாயுள்ளது. திரு. சர் தேசாய் என்பவர் சிவாஜி அரசவைக்குச் செல்ல 'விரும்பியதன் நோக்கம் தம்முடைய கண்களாலேயே பேரரசரை' யும் அவருடைய அரசவையையும் காணவேண்டும் என்ற விருப்ப பமும், அவருக்கு எதிராக எதிர்காலத்தில் ஒழுங்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காகப் பேரரசரின் வன்மைக்கு மூலங்கள் எவை யெனக் கண்டுபிடிப்பதாகும் என்று எழுதுகிறார். மேலும் அப்படிப் பட்ட இடர்ப்பாடான செயலை மேற்கொண்டால் சிறப்பும் பரிசும் கிடைக்கும் என்று வாக்குறுதிகளும், ஆக்ராவில் அவருடைய பாதுகாப்புக்குத் தாம் பொறுப்பாவதாகப் பல ஆணைகளிட்டும் ஜெய சிங்கு அவரைத் தூண்ட வேண்டியிருந்தது என்பதை நாம் அறிகி ரோம். பேரரசரின் ஊழியரான சித்தீ (Siddi) என்பவரிடம் அப் போது இருந்த ஜன்ஜிராத்தீவை வசப்படுத்திக் கொள்வதற்குப் பேரரசரின் அனுமதியைப் பெறுவதும் சிவாஜியின் நோக்கமாக இருந் திருக்கலாம். சோதிடர்களின் உறுதியுரையாலும், தம்முடைய அதி காரிகளில் பெரும்பாலோர் சம்மதம் தெரிவித்ததாலும் அவர் தம் மகன் ஷாம்பூஜியுடன் ஆக்ராவிற்குப் புறப்பட்டு 1666 மே மாதம் 9ஆம் நாள் அதை அடைந்தார்.

ஆனல், அவுரங்கசீப் சிவாஜியைச் சரியாக வரவேற்கவில்லை. ஐயாயிரம் ஆட்களுக்குத் தளபதியாயிருக்கும் ஒரு பிரபுவைப் போலவே அவரை மதித்தார். அது சிவாஜியின் தன்மான உணர்ச் சியைப் புண்படுத்தியது. விரைவில் அவர் மயக்கமுற்றது அரசவை யில் பரபரப்பை ஏற்படுத்தியது. தன்னுணர்வைத் திரும்ப அடைந் ததும், அவர் நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டதாகப் பேரரசரை இகழ்ந்துரைத்தார். அதனல், அவர் காவலில் வைக்கப்பட்டார். இவ்வாறு அவருடைய 'உயர்ந்த நம்பிக்கைகள் உடைந்து தூளா யின. நம்பிக்கைகள் நிறைவேறுவதற்குப் பதிலாகச் சிறைக் கைதி யானர்.', அந்தச் சிக்கலான சூழ்நிலையில் சாதாரண மனிதரா னல் அவல நிலையை எய்தியிருக்கக் கூடும். ஆனல் சாதாரண அறிவு வளம் பெற்றிருந்த சிவாஜி தம்மைத் தப்புவித்துக் கொள்ள ஒரு யுக்தியைக் கையாண்டார். தம்முடைய கற்பனை நோயிலிருந்து குணப்பட்டுக்கொண்டு வருவதாக நடித்து நோயைக் குணப்படுத்தி யதற்கு நன்றிக் கொடையாக அவர் தம் வீட்டிலிருந்து ஒவ்வொரு மாலையிலும் பிராமணர்களுக்கும், பிச்சைக்காரர்களுக்கும், பிரபுக் களுக்கும் பழங்கள், இனிப்புகள் ஆகியவற்றைக் கூடைகளில் வைத்து அனுப்பிவந்தார். சில நாட்களுக்குப் பிறகு காவலாளிகள் கவனக் குறைவாக இருந்து கூடைகளைக் கவனிக்காமல் அனுப்பி வந்த தால் சிவாஜியும் அவருடைய மகனும் இரண்டு காலிக் கூடைகளில் மறைந்துகொண்டு முகலாயப் பேரரசரின் எல்லா ஒற்றர்களையும்

Koviloor Academy

ஏமாற்றி விட்டு ஆக்ராவை விட்டு நழுவிச் சென்றனர். சிவாஜி ஷாம் பூஜியுடன் முத்ராவுக்கு விரைந்தார். அங்கே சோர்வுற்றிருந்த மகனை ஒரு மராத்திய பிராமணரின் பொறுப்பில் விட்டுவிட்டு ஒரு சந்நியாசி



ராய்கர்க் கோடடை

யின் வேடத்தில், அலகாபாத், வாரணசி, கயா, தெலிங்கானு வழியாகச் சுற்று வழியில் சென்று, 1666 நவம்பர் 30ஆம் நாள் தம் இருப்பிடத்தை அடைந்தார்.

இதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் சிவாஜி முகலாயர்களிடம் அமைதியாக இருந்தார். அந்தக் காலத்தை உள் நாட்டு ஆட்சி முறையை ஒழுங்கு படுத்துவதில் செலவழித்தார். அவுரங்கசிப் அவருக்கு ராஜா என்ற பட்டத்தையும், பீராரில் ஒரு ஜாகீரையுங் கொடுத்தார். அவருடைய மகன் ஷாம்பூஜியை 5,000 ஆட்களுக்குத் தலைவராய் இருக்கும் பிரபுவின் நிலைக்கு உயர்த்தினர். ஆனல் 1670-ல் மீண்டும் போர் தொடங்கிற்று. இராசப் பிரதிநிதி ஷா ஆலமுக்கும், அவருடைய தளபதி திலிர்கானுக்கும் இடையே மிகக் கடுமையான போர் ஏற்பட்டிருந்ததால் பேரரசினரின் நிலைமை, முன்பிருந்ததைவிட பலவீனப்பட்டு இருந்தது. அதனல் சிவாஜி 1665-ல் பெரிதும் முன்பு விடப்பட்ட எல்லாக் கோட்டைகளையும் திரும்பப் பெற்ருர். 1670 அக்டோபர் மாதத்தில் அவர் இரண்டாம் முறையாக சூரத்தைத் தாக்கித் தகர்த்தார்; பணமாகவும் தானியமாகவும்

Koviloor Acadamy

பெருங்கொள்ளைப் பொருளைப் பெற்ருர். பிறகு அவர் முகலாய மாகாணங்களில் படையெடுப்புச் செய்தார். பல முறை நேரடிப் போரில் முகலாயத் தளபதிகளைத் தோற்கடித்தார். 1672-ல் அவர் சூரத்திலிருந்து சௌத் வேண்டிப் பெற்ருர்.

அப்போது வடமேற்கே மற்ற எதைக் காட்டிலும் மலைநாட்டு மக்களின் எழுச்சி அவுரங்கசீப்பின் கவனத்தை முழுதும் ஈடுபடுத்தியிருந்தது. தக்கணத்திலிருந்து அந்தப் பகுதிக்கும் முகலாயப் படையின் ஒரு பகுதி மாற்றப்பட்டது. 1672 முதல் 1678 வரை இடைவிட்டு இடைவிட்டு முகலாயத் தளபதிகள் சிவாஜிக்கு எதிராகச் செய்த போர்களில் வெற்றி ஒன்றும் ஏற்படவில்லை. அப்போது அந்த மராட்டியப் பெருவீரர் அதிகாரம், ஆற்றல் ஆகியவற்றின் உச்ச நிலையில் இருந்தார். 1674 ஜூன் 16ஆம் நாள் அவர் பெரும் ஆடம்பரத்துடனும் ஒளியுடனும் முறையாக அரசராக ராய்கரில் முடி சூட்டிக்கொண்டு சத்ரபதி (குடையின் தலைவர் அல்லது மன்னர் மன்னன்) என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டார்.

மேலும் முகலாயர்கள் வட மேற்கே தம் முழுக் கவனத்தையும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தமையால், அவர்களிடமிருந்து எதிர்ப்பு ஒன்றும் இல்லாதவராய் சிவாஜி கோல்கொண்டா சுல்தானின் நட்புறவைப் பெற்ருர். ஒருவருடத்தில் (1677) அவர் செஞ்சி (Jinji), வேலூர், அவற்றின் அருகாமையிலிருந்த மாவட்டங்கள் இவற்றை வென்ருர். இவை அவருடைய மதிப்பை மிகப் பெரிதாக்கியதுடன் சென்னைக் கர்நாடகத்திலும், மைசூர்ப் பீட பூமியிலும் அவருக்கு உரிமையாகப் பரந்த ஒரு நிலப் பரப்பை அளித்தன. அது அறுபது லீக்குகள் நீளமும் நாற்பது லீக்குகள் அகலமும் உடையதாய் ஆண்டுதோறும் 20 லட்சம் ஹூன்கள் (Huns) வருமானம் அளிப்பதாய் நூறு கோட்டைகள் அடங்கியதாய் இருந்தது. அவருடைய வெற்றிகரமான வாழ்க்கை 1680 ஏப்ரல் 14ஆம்தேதி அவருடைய ஐம்பத்து மூன்ரும் வயதிலேயே (சிலர் கருத்துப்படி ஐம்பதாம் வயதிலேயே) முடிவடைந்துவிட்டது. அவருடைய இராச்சியப் பரப்பு போர்ச்சுக்கீசிய, ஆப்பிரிக்க, ஆங்கிலேயக் குடியேற்றங்களான டாமன், சால்செட்டு (Salsette), பஸ்ஸெயின் (Bassein), சௌல், கோவா, ஜஞ்ஜிரா, பம்பாய் ஆகியவை நீங்கலாகப் பெரிதும் வடக்கே (இக்காலத்துச் சூரத் பகுதியில் உள்ள தாராம்பூர் (Dharampur) எனப்படும்) ராம் நகரிலிருந்து தெற்கே கார்வார் (Karwar) வரையிலுள்ள முழுக் கடற்கரைப் பகுதி வரை பரவியிருந்தது. கிழக்கே அதனுடைய எல்லை ஒழுங்கற்ற முறையில் வடக்கே பக்லாணுவிலிருந்து (Baglana) நாசிக், பூனு மாவட்டங்கள் வழியாக, சதாரா முழுவதையும் சுற்றிக்கொண்டு தெற்கே கோல்ஹாபூர் வரை பரவியிருந்தது. அவருடைய கடைசி வெற்றிகளினல் பெல்ஹாமிலிருந்து (Belgaum) சென்னை மாகாணத்

Koviloor Academy

தின் ஒரு மாவட்டமாயிருந்த பெல்லாரி (Bellary) ஜில்லாவிற்கு எதிரே துங்கபத்திரா நதிக்கரை வரையிலும் பரவியிருந்தது. மேற்கு கர்நாடகப் பகுதிகளும், மைசூர் ராச்சியத்தின் பெரும்பகுதியும் அவருடைய இராச்சியப் பகுதிக்குள் அடங்கின.

இ. சிவாஜியின் அரசாங்கம்

சிவாஜி வீரமிக்க படை வீரராகவும் வெற்றிகரமான படையெடுப்பாளராகவும் இருந்தார். திரு ராவின்சன் கூறுவது போல அவர் 'பெரிதும் உலகில் தோன்றிய மாபெரும் வீரர்களைப் போலவே—நெப்போலியன் ஒரு மிகச் சிறந்த உதாரணம்—சிவாஜியும் ஒரு பெரிய ஆட்சி வல்லுநராகவும் இருந்தார். வெற்றியுடன் ஒழுங்கு முறையை நிலை நாட்டுபவருக்கும், அரசியலறிவோருக்கும் வேண்டிய குணங்களே திறமை மிக்க தளபதி ஒருவரை உருவாக்குவதற்கு வேண்டிய குணங்களாகும்.' அவருடைய ஆட்சிமுறை இந்தியாவின் முஸ்லிம் ஆட்சியாளர்களைப் போலவே, முடியாட்சியாக இருந்தது. அதன் முதல் பெருந்தலைவர் அவரே. ஆனால் உண்மையில் நாட்டின் செயல் முறைகளைக் கவனிக்க அவருக்கு உதவியாக எட்டு அமைச்சர்கள் அடங்கிய அஷ்ட பிரதான் (Ashtapradhan) சபை இருந்தது. அதனுடைய செயல்கள் பெரும்பாலும் அறிவுரை கூறுவதாகவே இருந்தது. அந்த எட்டு மந்திரிகள் ஆவார்: (1) பேஷ்வா அல்லது முதல் அமைச்சர். இவர் நாட்டின் பொது நலன்களையும், முன்னேற்றத்திற்குரிய வழி வகைகளையும் கவனித்துக் கொள்ளவேண்டும். (2) அமாத்தியர் (Amatya) அல்லது நிதியமைச்சர். இவருடைய வேலை எல்லாப் பொதுக் கணக்குகளையும் சரிபார்த்துக் கையெழுத்திட வேண்டும். (3) மந்திரி: இவர் வேலை அரசரின் செயல்களை எல்லாம் நாடோறும் பதிவு செய்துகொண்டு அவற்றைப் பாதுகாத்து வைப்பதும், அரசவையின் நிகழ்ச்சிகளைக் குறித்துவைத்துக் கொண்டு அவற்றைப் பாதுகாத்து வைப்பது மாகும். (4) சச்சீவா (Sachiva) அல்லது கண்காணிப்பாளர். இவர் அரசரின் தபால் போக்கு வரத்துக்குப் பொறுப்பாளராயிருந்தார்; மஹால்கள், பர்கானுக்கள் இவற்றின் கணக்குகளைச் சரிபார்த்து வந்தார். (5) சுமந்த (Sumant) அல்லது அயல் நாட்டுச் செயலாளர். (6) சேனுபதி அல்லது தலைமைத் தளபதி. (7) பண்டிட்ராவும் தானுதியக்ஷாவும் (Pandit Rao and Danadhyaksha) அதாவது அரசங்கப் பூசாரியும் சோதிடரும். (8) நியாயா தீசர் (Nyayadhisa) அல்லது தலைமை நீதிபதி. நியாயாதீசரையும், பண்டிட் ராவையுந் தவிர மற்ற எல்லா அமைச்சர்களும் தங்கள் உள்நாட்டு கடமைகளுடன் படைத்துறை அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். அவர்களுள் குறைந்தது மூவர் மாகாண ஆட்சி முறையிலும் பொறுப்புள்ளவர்களாக்கப் பட்டனர்.

Koviloor Acadamy

அமைச்சர்கள் அரசாங்கத்தின் முப்பதுக்குங் குறையாத பல வேறு பட்ட துறைகளுக்கும் பொறுப்புள்ளவர்களாய் இருந்தனர். சிவாஜி தம் இராச்சியத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றிற் கும் ஒவ்வொரு இராசப் பிரதிநிதியைத் தலைவராக அமர்த்தினர். ஒவ்வொரு இராசப் பிரதிநிதியும் அரசர் விரும்பும் வரை பதவி யிலிருந்தனர்; அவருக்கு எட்டுத் தலைமை அதிகாரிகளைக் காட்டி லும் சிறிது வேருன நிலையைப் பெற்றிருந்தார். மிக அதிகமான அதிகாரமும், தன் விருப்பப்படி செயலாற்றுவதற்குரிய உரிமையும் பெற்றிருந்தார்.

வரி வசூலுக்காகவும், ஆட்சி முறைக்காகவும் சிவாஜியின் இராச்சியம் பல பிராந்தியங்கள் அல்லது மாநிலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பிராந்தியமும் பர்கானுக்களாகவும், டார்ப்புகளாகவும் (tarfs) பிரிக்கப்பட்டிருந்தன. கிராமம்தான் ஆட்சிப் பகுதியின் கடைசிப் பிரிவு ஆகும். வரி வசூல் பண்ணை யாட்கள் மூலம் செய்யும் அக்கால முறையைக் கைவிட்டுவிட்டு, ரயத்துக்களிடமிருந்து அரசாங்க அதிகாரிகள் நேரடியாக வரி வசூல் செய்யும் முறையைப் புகுத்தினர். அந்த அரசாங்க அதிகாரிகள் 'அரசியல் மேலாளரைப் போன்று அதிகாரஞ் செலுத்தவோ, ரயத்துக் களைத் தொந்தரவு படுத்தவோ கூடாது.' நிலங்களைக் கவனமாக அளந்து பார்த்த பிறகே நிலம் மதிப்பிடப்பட்டது. நிலத்தை அளப் பதற்காக ஒரே அளவுமுறை புகுத்தப்பட்டது. எதிர்பார்க்கும் விளைச் சலில் 30 சதவீதம் அரசாங்க வரியாகக் கொடுக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டது. பின்பு சிவாஜி மற்றவரிகளையும், தீர்வைகளை யும் ஒழித்த பிறகு, அவ்வரி வீதத்தை 40 சதவீதமாக உயர்த்தினர். உழவர்கள் தாங்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகையைச் செலுத்தி வந்தனர். வரியைப் பணமாகவோ, தானிய மாகவோ கொடுக்கலாம் என்ற ஏற்பாடும் ஏற்பட்டிருந்தது. ரயத்து களுக்குக் கால் நடைகள், விதைகள் வாங்குவதற்காக அரசாங்கக் கருவூலத்திலிருந்து முன் பணம் எடுத்துக்கொடுத்து, அரசாங்கம் விவ சாயத்திற்கு ஊக்கம் அளித்தது. அப்பணத்தை ஆண்டு தோறும் சிறு சிறு தவணைகளில் ரயத்துக்கள் திருப்பிக்கொடுத்து விடலாம். சிவாஜி தம் இராச்சியத்தின் நிதி நிலைமை மிகச் சிறந்த நிலைமையில் இருக்கவேண்டுமென்று கருதி வரிவசூல் விஷயத்தில் மிகக் கண்டிப் பாக இருந்திருக்கலாம் என்ருலும், ஃபிரையர் (Fryer) சொல்வது போல அரசாங்க அதிகாரிகள் உழவர்களை வற்புறுத்திக் கொடுமைப் படுத்தி வரி வசூல் செய்தனர் என்று கூறுவது தவருகும். பல ஆண்டு களுக்கு முன்பே கிரான்ட்டப் (Grant Duff) ஒப்புக்கொண்டது போலவே, இக்கால ஆராய்ச்சிகளும், சிவாஜியின் வரி வசூல் முறை மனிதத்தன்மை மிக்கதாயும், மிகச் சிறந்ததாயும் அவருடைய குடி

Koviloor Acadamy

மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டதாயும் இருந்தது என்று நன்கு நிருபித்திருக்கின்றன.

மகாராட்டிரத்தின் மலைப் பகுதிகள் நில வருவாயை மிகுத்துத் தாராமையினுல், சிவாஜி தமக்கு முழுதும் அடங்கியிருந்த அருகிலுள்ள பகுதிகளில் அடிக்கடி சௌத், சர் தேஸ் முகி என்ற வரிகளை வசூலித்துவந்தார். பிஜப்பூர் அரசாங்கத்தின் 'முகலாயருக்குரிய சில மாவட்டங்களிலும், அவ்வரிகளை வசூலித்து வந்தார். சௌத் வரியை வசூலிக்கும் வழக்கம் ஏற்கெனவே மேற்கு இந்தியாவில் இருந்தது என்பது ராம் நகர் ராஜா அவ்வரியை டாமானிலிருந்த போர்ச்சுகீயக் குடிமக்களிடமிருந்து வசூலித்து வந்ததிலிருந்து அறிகிறோம். சௌத் வரியின் இயல்பு இப்படிப்பட்டதென்று கூறுவதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு உடையவர்களாய் உள்ளனர். அம்முறையை வெல்லெஸ்லியின் துணைமுறை (Wellesley's Subsidiary System) யுடன் ஒப்பிட்டு ரானடே அது 'நீதி அல்லது சட்டப்படியான கடன்பாடாக இல்லாத ஒரு வெறும் படைத்துறைக் கொடை அன்று; ஆனால் மற்றொரு ஆட்சியாளரின் படையெடுப்பிலிருந்து காத்துக் வருவதற்குப் பதிலாகக் கொடுக்கப்படும் வரியாகும் 'என்று கூறுகிறார். சர் ஜே. என். சர்க்கார் வேறொரு மாறுபட்ட கருத்தைக் கூறுகிறார். அவர் கூறுகிறார்: 'சௌத் வரி கொடுப்பதால் வெறுமனே வர வேற்கப்படாத மராட்டியப்படைவிரர்கள், சிவில் அடியார்கள் இவர்கள் புகாமல் தடுக்கத்தான் முடிந்தது. ஆனால் அது அயல் நாட்டுப் படையெடுப்பு அல்லது உள் நாட்டுக் குழப்பம் இவை நேராமல் மாவட்டத்தைக் காக்கும் பொறுப்பைச் சிவாஜியின் மேல் சுமத்திவிட வில்லை. மராட்டியர்கள் தங்கள் சொந்த இலாபத்தையே கருதினர். தாங்கள் சென்ற பிறகு எதிரிகளின் தலைவிதியைப் பற்றிக் கவலைப்படவில்லை. சௌத் வரி ஒரு திருடனை விலைகொடுத்து வாங்கிவிடுவதற்கு ஒப்பான ஒருமுறையாகும்; எல்லா எதிரிகளுக்கும் எதிராக அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தும் துணை முறையாக அது கருதப்பட முடியாது. அதனுல் சௌத் வரிக்கு உட்பட்ட நிலங்கள் செல்வாக்கு மிக்க பகுதிகள் என்று கூறுவது சரியாகாது.' திரு. சர் தேசாயின் கருத்துப்படி, அது எதிரியிடமிருந்து அல்லது வெல்லப்பட்ட பகுதிகளிலிருந்து வசூலிக்கப்படும்கப்பமாகும். டாக்டர் ஸென் அவர்கள் அவசர கால நெருக்கடியில் தவிர்க்கமுடியாதபடி ஒரு படைத்துறைத் தலைவரால் வசூலிக்கப்படுவதே சௌத் வரியாகும் என்று கூறுகிறார். இந்தச் சுமையான வரியின் கொள்கை எதுவாயிருப்பினும், அது அரசாங்க வருவாயில் நாலில் ஒரு பாகமாக இருந்தது. செயல் முறையில் அது ஒரு படைத்துறையைச் சார்ந்த வரியேயன்றி வேறன்று. பரம்பரையாக வந்த மகாராட்டிரத்தின் சர்தேஸ்முக் (Sardeshmukh-முக்கிய தலைவர்) என்ற முறையில் உரிமை கொண்டாடி மேலும் 10 சதவிதம் சிவாஜி வரி வசூல் செய்ய

Koviloor Acadamy

முற்படச் செய்தது சர்தேஸ்முகி என்ற வரியாகும். ஆனால் அது சட்டமுறைக்குட்பட்ட கற்பனையாகும். சௌத், சர்தேஸ்முகி என்ற வரிகளை வசூல் செய்யும் உரிமையால் மராட்டியர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட எல்லைகளுக்கும் அப்பாலுள்ள மாவட்டங்களிலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்திவந்து, நாளடைவில் எளிதாக அவற்றைத் தங்கள் இராச்சியத்துடன் இணைத்துக்கொள்ள முடிந்தது.

ஒரு புதிய முறையில் மராட்டியப் படையை சிவாஜி அமைத்தது அவருடைய படைத்துறை மேதைமைக்கு ஒரு மிகச் சிறந்த சான்றாகும். அதற்கு முன்பு மராட்டியப் போரிடும் படைகள் பெரும்பாலும் குதிரைப் படையாக இருந்தன. அவைகள் ஆண்டின் பாதிக்காலம் போர்க்களங்களிலும், வறட்சிக்காலத்தில் சுறுசுறுப்பான வேலைகளிலும், ஈடுபட்டுக்கொண்டிருந்தன. எனினும், சிவாஜி ஒரு ஒழுங்கான நிலைப்படையை வைத்துக்கொண்டார். அவருடைய படைவீரர்கள் எப்பொழுதும் வேலைக்குத் தயாராய் இருக்கவேண்டும் பழையகாலத்தில் அவர்களுக்குச் சம்பளமும் இருப்பிடங்களும் கொடுக்கப்பட்டன. இந்தப் படையின் எண்ணிக்கை முப்பதாயிரம் குதிரையிலிருந்து நாற்பதாயிரம் வரையிலும், பத்தாயிரம் காலாட்கள் வரையிலும் உயர்ந்திருந்தது. சிவாஜி கடற்படை ஒன்றையுங் கட்டினார். அதற்கு வேண்டிய ஆட்களைப் பம்பாய்க் கடற்கரையிலிருந்த கீழ்ச்சாதி இந்துக்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அவர்களுக்குப் பயிற்சியளித்தார். சிவாஜியின்கீழ் இருந்த கடற்படையின் சாதனைகள் குறிப்பிடத்தக்கனவாக இல்லாமற்போயினும், பிற்காலத்தில் ஆங்கிரியாக்களின் (Angrias) கீழ் மராட்டிய கடற்படை ஆங்கிலேயருக்கும், போர்ச்சுக்கீசியருக்கும், டச்சுக்காரருக்கும் போதிய தொந்தரவைக் கொடுத்தது. சபாஸத் பகர் (Sabhasad Bakhar) என்ற நூலின்படி சிவாஜி சுமார் 1,260 யானைகள் கொண்ட படை ஒன்றையும், 3,000 அல்லது 1,500 ஒட்டகங்கள் கொண்ட படை ஒன்றையும் வைத்திருந்தார். அவருடைய பீரங்கிப் படையின் வலிமை எப்படிப்பட்டது என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் ஓர்ம் (Orme) என்பவர் 'அவர் முன்பு எண்பது பீரங்கிகளையும், அவருடைய பொருத்துப் பூட்டுகளுக்கு வேண்டிய காரீயத்தையும் சூரத்திலிருந்து பிரெஞ்சு டைரக்டரிடமிருந்து வாங்கியிருந்தார்' என்று கூறுகிறார்.

குதிரைப் படையிலும் காலாட் படையிலும் ஒழுங்கான அதிகாரிகளின் தரவேறுபாடு இருந்தது. குதிரைப் படையில் இரண்டு பிரிவுகள் இருந்தன—ஒன்று பார்கீகள் (Bargis) அல்லது அரசாங்கத்தினரால் சம்பளமும் தளவாடங்களும் தரப்படும் படைவீரர்கள் கொண்ட பிரிவு; மற்றது சிலாகத்தார்கள் (Silahdars) கொண்ட பிரிவு. இவர்கள் தளவாடங்களைத் தங்கள் சொந்தச் செலவிலேயே சேகரித்து

Koviloor Academy

வைத்துக்கொண்டு, அரசாங்கத்தின் வேலைக்காகக் கொண்டுவந்த படைவீரர்களுக்குச் சம்பளமும் தளவாடங்களும் கொடுப்பர். ஆனால் போர்க்களத்தில் அவர்கள் செய்யும் பணிக்காக ஏற்படும் செலவுக்காக அரசாங்கம் ஒப்பந்தம் பேசிப் பணத்தைக் கொடுத்துவிடும். குதிரைப் படையில் 25 துருப்புகள் ஓர் அளவாகும். இருபத்தைந்து குதிரை வீரர்களுக்குத் தலைவராக ஒரு ஹவல்தாரும், ஐந்து ஹவல்தாருக்கு ஒரு ஜும்லாதாரும், பத்து ஜும்லாதாருக்கு ஒரு ஹஸாரியும் இருந்தனர். ஹஸாரி ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹுன்களைப் பெற்றார். ஹஸாரிக்கும் மேற்பட்ட அதிகாரிகள் பான்ச்ஹஸாரிகள் என்போரும், குதிரைப் படையில் தலைமைத் தலைவரான சர்னோபாத் (Sarnobat) என்பவரும் ஆவர். காலாட் படையில் ஒன்பது ஆட்கள் (பாயிக்குகள்) கொண்ட பிரிவுதான் மிகச் சிறிய ஒரு பிரிவாகும். அதற்குத் தலைவர் நாயக் (Naik) எனப்படுவார். ஐந்து நாயக்குகளுக்கு மேல் ஒரு ஹவல்தாரும் இரண்டு அல்லது மூன்று ஹவல்தாருக்கு மேல் ஒரு ஜும்லாதாரும், பத்து ஜும்லாதாருக்கு மேல் ஒரு ஹஸாரியும் இருந்தனர். குதிரைப் படையில் சர்னோபாத்தின் கீழ் ஐந்து ஹஸாரிகள் இருக்க, காலாட்படையில் ஏழு ஹஸாரிகள் இருந்தனர். பெரும்பாலும் எல்லாச் சமயங்களிலும் சிவாஜியே நேராகப் படைகளை நடத்திச் சென்றாலும், படைக்கு முறையாக ஒரு சேனாபதி அல்லது தலைமைத் தளபதி இருந்தார். அவர் அமைச்சர் அவையில் ஓர் உறுப்பினராக இருந்தார். மராத்தியர்களின் வரலாற்றில் கோட்டைகள் முக்கிய இடம் வகித்தமையின், மிகச் சிறந்த முறையில் கோட்டைப் படையை வைத்திருக்க ஏராளமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு கோட்டையும் ஹவல்தார், சப்னி, சர்னோபாத் என்ற சம மதிப்பு வாய்ந்த மூன்று அதிகாரிகளின் கண்காணிப்பில் இருந்தது. அம் மூன்று பேரும் ஒன்றாயிருந்து வேலை செய்வதுடன் ஒருவர்க்கொருவரைக் கண்காணித்துக் கொள்ளவும் வேண்டும்; மேலும் கோட்டை அதிகாரிகளிடம் துரோக எண்ணம் தோன்றாதிருக்குமாறு ‘ஒவ்வொரு கோட்டைப் படையிலும் பல சாதிக் கலப்பும்’ இருக்க வேண்டும் என்று சிவாஜி ஏற்பாடு செய்தார்.

சம்பளம் கொடுப்பதிலும் படைவீரர்களுக்குப் பரிசுகள் கொடுப்பதிலும் ஒழுங்காகவும் தாராளமாகவும் இருந்த போதிலும் சிவாஜி படைவீரர்கள்மேல் கண்டிப்பான கட்டுப்பாட்டை வற்புறுத்த மறக்கவில்லை. அவர்களுடைய நடைத்தைக்காகக் கட்டுப்பாட்டு விதிகளை வகுத்தளித்தார். மேலும் அவர் அவர்களுடைய ஒழுக்க நிலை தாழாமல் கவனித்துக் கொண்டார். அந்த விதிகளில் மிகவும் முக்கியமானவை : ‘எந்தப் பெண்ணும், அடிமைப் பெண்ணும் அல்லது கூத்

Koviloor Acadamy

தாடும் மகளும், படையுடன் சேர்ந்து செல்லக் கூடாது.[1] இவர்களுள் யாரையாவது வைத்திருக்கும் படைவீரன் தலை வெட்டப்படும். பசுக் களைக் கவரக்கூடாது. ஆனல் எருதுகளைப் போக்குவரத்துக்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம். பிராமணர்களைத் துன்புறுத்தக் கூடாது. அவர்களைப் பகைவர்களின் ஈட்டுப் பிணையாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. (போர்ச் சமயத்தில்) எந்தப் படை வீரனும் ஒழுங்கு தவறி நடந்து கொள்ளக் கூடாது.' போரில் கொள்ளையிடப் பட்ட பொருள்களைப்பற்றிச் சிவாஜி கட்டளை யிட்டதாவது : 'எந்த ஓர் இடமும் சூறையாடப்பட்டபோது ஏழை மக்களின் பொருள்கள், புல்சியா (செப்புப் பணம்), பித்தளையினலும், செம்பினலும் ஆகிய பாத்திரங்கள் இவை இவற்றைக் கண்டவர்க்கே உரியனவாகும். ஆனல் மற்றப் பொருள்களும், நாணயமாக அச்சடிக்கப்பட்டவையும், படாதவையுமான தங்கங்களும், வெள்ளிகளும், இரத்தினங்களும், விலையுயர்ந்த பொருள்கள் அல்லது நகைகளும் அவற்றைக் கண்ட வருக்கே உரியன ஆகமாட்டா. அவர்கள் அவற்றில் சிறிதும் எடுத் துக் கொள்ளாது அதிகாரிகளிடம் கொடுத்து விடவேண்டும். அதிகாரி கள் அவற்றை சிவாஜியின் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட வேண்டும்.'

ஈ. சிவாஜியைப்பற்றிய மதிப்பீடு

சிவாஜி ஓர் ஆட்சியாளராகவும் சிறந்த மனிதராகவும் இந்திய வர லாற்றில் தமக்கென்று சிறந்ததொரு இடத்தைப் பெற்றுள்ளார். மக்க ளின் தலைவராகவே பிறந்த அவர் தம்முடன் தொடர்பு கொள்வோர் எல்லோரையும் கவரத்தக்க ஆற்றல் படைத்திருந்தார். இயல்பான தீரத்தினலும், போரியல் சூழ்ச்சித் திறனலும், ஒரு ஜாகீர்தாரின் நிலையிலிருந்து ஒரு சத்ரபதியின் நிலைக்கு அவர் உயர்ந்தார். அப் போது உச்ச அதிகார நிலையிலிருந்த முகலாயப் பேரரசுக்கு அடங் காத ஓர் எதிரியாக ஆனர். 'பல தக்கண இராச்சியங்களில் அணுக்களைப் போல சிதறிக் கிடந்த' மராட்டியர்களை ஒன்று திரட்டி, 'முகலாயப் பேரரசு, பீஜப்பூர், இந்தியப் போர்ச்சுக்கீசியர்கள், ஜாஞ்ஜி ராவின் அபிசீனியர்கள் ஆகிய நான்கு பெருஞ் சக்திகளின் எதிப்பு களுக்கிடையே' ஒரு பெரிய இராச்சியத்தை ஏற்படுத்தி விட்டார். இறக்கும் போது பரந்த ஒரு இராச்சியத்தை விட்டு விட்டுச் சென்ருர். கிராண்ட்டப்பு என்பவர் எழுதுகிருர் : 'சிவாஜி புதிதாகச் சேர்த்த இராச்சியப் பகுதிகளும் செல்வங்களும் முகலாயர்களுக்கு அவ்வளவு பெரியதாகத் தோன்றவில்லை. ஆனல் அவர் நடந்து காட்டிய முன் மாதிரி நிலையும், அவர் புகுத்திய பழக்கங்களும், முறைகளும், மராட்

[1] முகலாயப் படையுடன் சென்ற அந்தப்புர மகளிரின் செல்வாக்கோடு இதை வேறுபடுத்தி யுணரலாம்.

Koviloor Acadamy

டிய மக்களில் பெரும்பாலோரின் உள்ளத்தில் அவர் புகுத்திய உணர்ச்சியும் தான் முகலாயர்களுக்குப் பேரிடியாகத் தோன்றின.' அவர் நிர்மாணித்த மராட்டிய நாடு அவுரங்கசீப்பின் காலத்திலும், அவருக்குப் பிறகும் முகலாயப் பேரரசை ஆட்டங்காணும்படி செய்தது. பதினெட்டாம் நூற்றுண்டில் இந்தியாவிலேயே அவருடைய நாடு ஒரு சக்தி வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது. ஆனல் அவுரங்கசீப்பின் சந்ததியினருள் ஒருவர் மகதாஜி சிந்திய (Mahadaji Sindhia) என்ற மராட்டியத் தலைவருக்கு அடங்கிய பொம்மை அரசராக ஆனர். மராட்டிய அரசு இந்தியாவில் மேலாண்மைக்காக ஆங்கிலேயர்களுடன் போட்டியும் இட்டு வந்தது. ஆனல், கடைசியில் ஹேஸ்டிங்க்ஸ் பிரபு காலத்தில் நசுக்கப்பட்டு விட்டது.

காபிகானும் மற்ற சில தற்கால ஆசிரியர்களும் கூறியது போல, சிவாஜியைக் கொள்ளையடிப்பதில் வல்லவர் என்றோ இந்துக்களில் ஒரு அல்லாவுத்தின் அல்லது தாமர்லின் என்றோ கூறுவது நேர்மையற்றதாகும். ஒரு பெரும் ஆக்க வேலைத் திறன் படைத்த அவர் ஒரு நாட்டின் தேசியப் புத்தமைப்பிற்கு வேண்டிய எல்லா முக்கிய இயல்புகளையும் பெற்றிருந்தார். 'அவருடைய முறை முழுதும் அவருடைய சொந்தப் படைப்பேயாகும். ரஞ்சித சிங்கைப் போலன்றி அவர்தம் ஆட்சி முறையில் எந்த அயல் நாட்டு உதவியையும் ஏற்றுக்கொள்ள வில்லை. அவருடைய படை அவருடைய நாட்டு மக்களாலேயே பயிற்சியளிக்கப்பட்டுப் போரில் ஈடுபடுத்தப்பட்டது; அன்றி பிரெஞ்சுக்காரர்களால் அல்ல. அவர் நிர்மாணித்தவையெல்லாம் நீண்டகாலம் வரை நிலை பெற்றன. அவருடைய நிறுவனங்கள் எல்லாம் வியப்பார்வத்துடன் நோக்கப்பட்டன. ஒரு நூற்றுண்டுக்குப் பின் வெற்றிமிக்க பேஷ்வாக்களின் காலத்திலும் அவற்றை பின்பற்றியமைக்கும் நோக்கத்துடனும் அவை கவனிக்கப்பட்டன.' தேவையற்ற கொடியவகையில் ஈடுபடும் இரக்கமற்ற படையெடுப்பாளர் அல்லர் அவர்; கொள்ளைக்காகவே கொள்ளையடிக்க வேண்டும் என்ற கொள்கையுடையவரும் அல்லர். போர்க்காலங்களில் அவர் முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லாப் பெண்கள் குழந்தைகளிடமும் காட்டிய வீரஞ்செறிந்த பரிவு ஒழுக்கம் எதிர்த்திறனுய்வாளரான காபிகானலும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. 'சிவாஜி எப்பொழுதும் தம்முடைய இராச்சியப் பகுதிகளில் இருந்த மக்களின் மதிப்பைக் காப்பாற்றுவதில் முயற்சியுள்ளவராய் இருந்தார். அவருடைய கையில் வீழ்ந்த முகமதியப் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் மானத்தையும் மதிப்பையும் காப்பாற்றுவதிலும் மிகக் கவனத்துடன் இருந்தார். இதைப் பொறுத்தவரை அவர் இட்ட கட்டளைகள் மிகவும் கண்டிப்பாகவே இருந்தன. அவற்றை எவர் பின்பற்றாது போயினும், அவர் கடுந்தண்டனைக்கு உள்ளாகிவிடுவார்.' ராலின்ஸன் கீழ்வருமாறு உரைப்பதும் பொருத்த

Koviloor Acadamy

மானதேயாகும். 'அவர் வேண்டுமென்றே தேவையற்றவகை யிலோ கொடுமையாகக் காணப்படவில்லை. போரில் ஈடுபடாதோரை யும், மசூதிகளையும், பெண்களையும், அதிகாரிகளையும் விடுதலை செய்து மரியாதைக் காட்டுவது-முதலியவையெல்லாம் உண்மையில் சாதாரண நற்செயல்கள் அல்ல.' சிவாஜி தம் நாட்டில் ஓர் உள்நாட்டுப் பேரரசை நிலைநிறுத்தவேண்டும் என்ற குறிக்கோளைப் பெற்றிருந் தார். அந்த ஒரே நோக்கத்தைக் குறிக்கொண்டு இடைவிடாது உழைத்தார். ஆனால் அதை முழுதும் செயல்படுத்துவதற்கேற்ற காலம் அவருக்குக் கிடைக்கவில்லை.

சிவாஜி தம்முடைய சொந்த வாழ்க்கையில் அக்காலத்துப் பர வியிருந்த தீக்குணங்கள் எவையும் பற்றாதவராக வாழ்ந்தார். அவ ருடைய ஒழுக்க நற்குணங்கள் மிக உயர்ந்தவையாகவே இருந்தன. இளமையிலிருந்தே மதத்தில் உண்மைப் பற்றுக் கொண்டிருந்த அவர், தம்முடைய அன்னையாலும் தம்முடைய குருவாலும் உபதே திக்கப்பட்ட உயர்ந்த குறிக்கோள்களை அரசியல் அல்லது படை யெடுப்புக் கடமைகளின் மத்தியிலும் மறந்து விடாமல் கடைப்பிடித் தொழுகினார். மராத்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு வலிமை வாய்ந்த ஒரு சக்தியாக மதத்தை ஆக்கவேண்டும் என்று அவர் முயன்றார். அதனால் இந்துமதத்தையும், கல்வியையும் எப்போதும் ஆதரித்து வந் தார். 'மதம் அவருக்குச் சரியான நடத்தையையும்; தாராள மனப் பான்மையையும் வளர்க்கும் புத்தூற்றாகவே எப்போதும் இருந்து வந் தது. அது அவருடைய மனத்தை ஆக்கிரமித்து அல்லது அவரை ஒரு மத வெறியராக்கிவிட வில்லை.' என்று தற்கால மராட்டிய நூலா சிரியர் ஒருவர் கூறுகிறார். மற்ற மதக் கொள்கைகளையும் மதித்து வந்தார். முஸ்லிம் முனிவர்களிடம் ஆழ்ந்த மதிப்பு வைத்திருந்தார். முஸ்லிம் கோயில்களிலும் மசூதிகளிலும் ஒளி விளக்குகள் ஏற்றிவைப் பதற்காக வரியில்லாத நிலங்களைத் தானமாகக் கொடுத்தார். சூரத்தை முதலில் அவர் தாக்குதல் செய்தபோது அவர் மிகவும் மரியாதையுடன் காபுச்சின் கிறிஸ்துவ சாமியார்களிடம் (Capuchin fathers) நடந்து கொண்டார். அவரைக் கடுமையாகத் தாக்கி எழுதும் திறனுள்ள ரான காபீகான் கூட இவ்வாறு எழுதுகிறார்: 'ஆனால் அவர் (சிவாஜி) கொள்ளையடிக்கச் சென்ற தம் ஆட்களையெல்லாம் மசூதிகளுக்கோ, கடவுளின் நூலுக்கோ (குர்ரானுக்கோ), எந்தப் பெண்ணுக்கோ, எவ் வித ஊறும் செய்யக்கூடாது என்று விதித்தார். தூய குர்ரான் பிரதி அவர் கைக்குக் கிடைத்த போதெல்லாம் அதை அவர் மிகுந்த மதிப் புடன் போற்றி வைத்து, அதைத் தம்முடைய முஸ்லீம் படை வீரர்கள் யாருக்காவது கொடுத்து விடுவார். அவருடைய ஆட்களினால் இந்து அல்லது முஸ்லிம் பெண்கள் சிறைபிடிக்கப்பட்டால், அவர்களுடைய உறவினர்கள் வந்து போதுமான ஈடுகட்டி அவர்களை விடுவித்துக் கொள்ளும் வரை அவர்களைக் கண்காணித்து வந்தார்.'

Koviloor Academy

உ. ஷாம்பூஜியும் அவருக்குப் பின்வந்தோரும்

சிவாஜிக்குப் பிறகு அவருடைய மூத்தமகன் ஷாம்பூஜி பட்டத்துக்கு வந்தார். அவர் இன்பவிருப்பினராயிருந்த போதிலும் நீரமுடைய வராயுமிருந்தார். அவருடைய முக்கிய அறிவுரையாளர் வட இந்தியாவிலிருந்து வந்த கவிகுலஷ் (Kavi-Kulash) என்ற பிராமணராவர். அவருடைய ஒழுக்க நீதிகள் எல்லாம் ஓரளவு இகழத்தக்கவையாகவே இருந்தன. புதிய அரசரின் தலைமையில் மராத்திய அரசு பலவீனப்பட்டது; ஆனால் முழுதும் செயலற்றுப் போய்விடவில்லை. ஷாம்பூஜி தாமே முகலாயத் தொந்தரவின் இயல்பை உணர்ந்திருந்தார். அவுரங்கசீப் தக்கணத்துக்குக் கொண்டு வந்திருந்த பெரும் படையைத் தீரத்துடனும், துணிவுடனும் எதிர்த்தும் போரிட்டார். கடைசியில் (1689 பிப்ரவரி 11ஆம் தேதியில்) சக்தி வாய்ந்த முகலாய அதிகாரியான முகர்ரப்கான் (Muqarrab Khan) என்பவரால் ரத்னகிரியிலிருந்து இருபத்திரண்டுமைல் தூரத்திலிருந்த சங்கமேஷ்வரத்தில் (Sangameshwar) திடிரென்று கைது செய்யப்பட்டார். அவருடன் அவருடைய மந்திரி கவிகுலஷும், அவருடைய முக்கிய வழியாளர்களில் இருபத்தைந்து பேரும் சிறைபிடிக்கப்பட்டனர். இரண்டு முக்கிய சிறையாளிகளும் பகதூர்கரிலிருந்த பேரரசுப்பாசறைக்குக் கொண்டு வரப்பட்டுப் பொது மக்கள் முன்பு ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டனர். மூன்று வாரங்களுக்கு மேல் சிறைபிடிக்கப்பட்டவர்கள் பல வகையிலும் சித்திரவதை செய்யப்பட்டு, கடைசியில் 1689 ஆம் ஆண்டு மார்ச்சு 11ஆம் தேதி கொல்லப்பட்டனர். பேரரசினர் விரைவில் பல மராட்டியக் கோட்டைகளைப் பிடித்தனர். ராய்கரிலிருந்த மராட்டியத் தலைநகரையும் முற்றுகையிட்டனர். ஆனால் ஷாம்பூஜியின் தம்பியான ராஜாராம் நகரிலிருந்து சந்நியாசி வேடத்தில் நழுவிச்சென்று பல விதமான துணிகரச் செயல்களுக்குப் பின்பு கர்நாடகத்திலிருந்த செஞ்சியை அடைந்தார். அதற்குள் தலைநகரம் கைப்பற்றப்பட்டுவிட்டது. முகலாயர்கள் ஷாம்பூஜியின் குழந்தை ஷாஹு உள்பட அவருடைய குடும்பம் முழுவதையும் சிறைபிடித்தனர். இவ்வாறு மராத்திய அரசு முற்றிலும் கவிழ்ந்துவிட்டது போலத்தோன்றியது.

ஆனால் சிவாஜியால் ஊட்டப்பட்ட உணர்ச்சி மக்களிடத்திலிருந்து அவ்வளவு எளிதாக மறைந்துவிடவில்லை விரைவில் மராட்டியர்கள் புத்துயிர் பெற்று எழுந்து மீண்டும் முகலாயர்களுக்கு எதிராகத் தேசிய எதிர்ப்புப் போரைச் செய்தனர். அப்போர் கடைசியில் முகலாயர்களின் வளங்களை யெல்லாம் வற்றச் செய்துவிட்டது. மகாராட்டிரத்தில் மராட்டிய எழுச்சியை இராமச்சந்திர பந்த (Ramachandra Pant), சங்கராஜி மால்ஹர் (Shankaraji Malhar), பரசுராம் திரிம்பக் (Parashuram Trimbak) போன்ற தலைவர்கள்

Koviloor Acadamy

தோற்றுவித்தனர். 1701-ல் பரசுராம் பிரதிநிதி ஆனுர். கிழக்குக் கர்நாடகத்தில் அரசியல் காரியங்கள் எல்லாம் முதல் பிரதிநிதியான பிரல்ஹாத் நிராஜியால் (Pralhad Niraji) திறமையுடன் நிர்வகிக்கப் பட்டன. அப்போது மராட்டியத் தலைவர்கள் போரிட்டனர். தாங்களாகவே பல இடங்களையும் படையெடுத்தனர். உண்மையில் அவுரங்கசீப் 'மக்களின் போரை' எதிர்க்கவேண்டியிருந்தது. 'மராட்டிய அரசாங்கம் என்றோ, தாக்கி அழிப்பதற்கு அரசாங்கப்படை என்றோ ஒன்றும் இல்லாமையால் அவர் அப்போருக்கு முடிவுகட்ட முடியவில்லை'. இரண்டு திறமை வாய்ந்த சுறுசுறுப்புமிக்க மராட்டியத் தளபதிகளான சாந்தாஜி கோர்பாடே (Santaji Ghorpade), தானுஜி ஜாதவா (Dhanaji Jadava) ஒவ்வொரு பகுதிக்கும் சென்று கொள்ளையடித்து நாட்டைப் பாழ்படுத்தினர். முகலாயர்களுக்குப் பெரும் நஷ்டமும் குழப்பமும் ஏற்படும்படிசெய்தார். மராத்திய வரலாற்றுக் கோப்பாளர்களின் கருத்துப்படி அவர்கள் பல படையெடுப்புகளைச் செய்ததுடன், பேரரசரின் பாசறைக்கேகூடப் படையெடுத்துச் சென்றனர். முகலாயத் தக்கணத்தின் பல அதிகாரிகள் மராட்டியர்களுக்குச் சௌத் வரி கொடுத்துத், தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டனர். அவர்களில் சிலர் பேரரசரின் குடிமக்களைக் கொள்ளையடிப்பதில் மராட்டியர்களுடன் சேர்ந்து கொண்டனர். சர் ஜே. என். சர்கார் கூறுவதுபோல முகலாய ஆட்சி முறை உண்மையில் கரைந்து விட்டிருந்தது. நாட்டிலுள்ள தம் எல்லாப்படைகளுடனும் பேரரசர் வீற்றிருந்தமையால்தான் ஆட்சிமுறை சிறிது பிணைப்பாக இருந்தது. ஆனுல் அது ஒரு மாயத்தோற்றமாகவே காணப்பட்டது. அந்தக் காலத்தின் வீரர்களாக சாந்தாவும் தானுவும் இருந்தனர். புத்தூக்க முயற்சி அவர்கள் கையிலேயே இருந்தது. பேரரசினரின் கணக்குகளையும் திட்டங்களையும் அவர்கள் தலைகீழாகக் கவிழ்த்து விட்டனர்.'

எட்டாண்டுகள் முற்றுகையைத் தாக்குப் பிடித்த செஞ்சி, 1698 ஜனவரியில் சுல்பிகர்கானுல் பிடிக்கப்பட்டது. ஆனுல் ராஜாராம் சதாராவுக்குத் தப்பி ஓடிவிட்டார். அவுரங்கசீப் தம் படைகளைச் சேர்த்து வைத்திருந்த வடக்குத் தக்கணத்தில் மீண்டும் போராட்டத்தைத் தொடங்கினுர். 1699 டிசம்பரில் பேரரசினர் சதாராக்கோட்டையை முற்றுகையிட்டனர். ஆனுல் கோட்டைப்படை தீரத்துடன் கோட்டையைக் காத்து வந்தது. கடைசியில் 1700 மார்ச்சு 12ஆம் தேதி ராஜாராம் இறந்த பிறகு அவருடைய மந்திரி பரசுராம் சில நிபந்தனைகளுடன் கோட்டையை முகலாயர்களிடம் ஒப்புவித்தார். பின்பு பேரரசர் நேரில் வந்து மராட்டியரின் கோட்டையை ஒவ்வொன்ருகப் பிடித்தார். ஆனுல், ஒரு நாள் இழந்த கோட்டையை மறு நாளே மராட்டியர்கள் மீண்டும் பெற்ருர்கள். இவ்வாறு முடிவில்லாமல் போர் நீண்டு கொண்டே சென்றது.

Koviloor Academy


ராஜாராமின் மரணத்திற்குப் பின் அவருடைய விதவை மனைவியான தாராபாய் என்னும் மிகச் சிறந்த உள்ளுணர்ச்சி மிக்க மடந்தை அந்தச் சமயத்தில் தன்னுடைய இளம் மகனை மூன்றும் சிவாஜியின் பிரதிநிதியாக இருந்து மராட்டிய நாட்டின் ஆட்சியை நடத்தி வந்தாள். பகைமைத் திறனுய்வாளரான காபிகான் கூட ஒப்புப் கொண்டபடி அவள் 'சாதுரியமும், அறிவுக் கூர்மையுமுடைய ஒரு பெண்மணியாக இருந்தாள். கணவர் உயிரோடிருக்குங் காலத்திலேயே உள்நாட்டுப் படைத்துறை விஷயங்களில் புகழத்தக்க நல்லறிவு படைத்திருந்தாள். நாட்டின் ஆட்சி முறையை ஒழுங்கு படுத்திச் சிம்மாசனத்துக்காக எழுந்த போட்டிக் கட்சிகளுக்குள்[1] ஏற்பட்ட போர்களை ஒடுக்கி, காபிகான் சொல்வது போல, அவள் 'பேரரசின் எல்லைப் பகுதியைப் பாழ்படுத்துவதற்கான தீவிர முறைகளை மேற்கொண்டாள். தக்காணத்தில் சிரோஞ், மண்டேசர் (Mandasor), மாளவச்சுபா வரையிலிருந்த ஆறு சுபாக்களைக் கொள்ளையடித்து வரும்படி படைகளை அனுப்பினுள்.' மராட்டியர்கள் ஏற்கெனவே 1699-ல் மாளவத்தின் மேல் படை பெடுத்திருந்தனர்.

1703-ல் மராட்டியர்களின் ஒரு படையினர் ஒரு நூற்றுண்டாக முகலாய மாகாணமாக இருந்த பிராருக்குள் நுழைந்தனர். 1706-ல் அவர்கள் குஜராத்தின்மீது படையெடுத்தனர்; பரோடாவைச் சிதைத்தனர். 1706 ஏப்ரல் அல்லது மே மாதத்தில் மராட்டியப் பெரும்படை ஒன்று அகமத்நகரிலிருந்த பேரரசரின் பாசறையை அச்சுறுத்தியது. நீண்ட கடுமையான போராட்டத்துக்குப் பிறகே அப்படையினர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு கொள்ளைப் படை யெடுப்புகள் மூலம் தங்கள் வருவாய் வளங்களை மிகுதியான அளவில் மிகுத்துக் கொண்ட மராட்டியர்கள் அந்தச் சமயத்தில் செயல் முறையில் தக்காணத்திலும், மத்திய இந்தியாவின் மத்தியப் பகுதிகளிலும் இருந்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் தலைவர்களாக ஆய்விட்டனர். நேரில் பார்த்தவரான பீம்சேன் கூறுகிருர்: 'இராச்சியம் முழுவதிலும் மராட்டியர்கள் ஆதிக்கம் மிகுந்தவர்களாக ஆய்விட்டனர். பாதைகளை எல்லாம் அடைத்து விட்டனர். கொள்ளையடித்துத் திருடுவதன் மூலம் வறுமைக்குத் தப்பித்து வளமார்ந்த செல்வத்தைப் பெற்றனர்.' அவர்களுடைய படைத்துறைத் தந்திரங்களும் ஒரு மாறுதலுக்கு உள்ளாயின. அம்மாறுதலின் உடனடியான விளைவு அவர்களுக்கு நன்மையாகவே இருந்தது. 1704-ல் மனுச்சி குறிப்பிட்டுள்ளார் 'இந்த (மராட்டியத்) தலைவர்களும் அவர்களுடைய துருப்புகளும் இந்தக் காலத்தில் மிகுந்த நம்பிக்கையுடன் செல்

[1] தாராபாயும் அவளுடைய மகனும் சேர்ந்தகட்சி; இரண்டாம் ஷாம்பூஜியின் தாயும், ராஜாராமின் மற்ெரு மனைவியுமான ராஜஸ் பாயின் கட்சி; முதலாம் ஷாம்பூஜியின் மகனை ஷாஹூவை ஆதரித்த கட்சி.

Koviloor Academy

கின்றன. ஏனெனில் அவர்கள் முகலாயத் தளபதிகளுக்கு அச்ச மூட்டி அவர்களை அடக்கிவைத்திருக்கின்றனர். தற்போது அவர்



முகலாயப் பேரரசின் வீழ்ச்சி

களிடம் பீரங்கிகள், சிறு துப்பாக்கிகள், விற்கள், அம்புகள், அவர்களுடைய மூட்டை முடிச்சுகளையும் கூடாரப் பொருள்களையும் தூக்கிச் செல்லும் யானைகள், ஒட்டகங்கள் முதலியவை உள்ளன...சுருங்கக் கூறின், அவர்கள் முகலாயப் படைகளைப் போலவே எல்லாத் தளவாடங்களையும் பெற்றவராய்] இடத்துக்கு இடம் செல்கின்றனர்...சில

Koviloor Academy

ஆண்டுகளுக்கு முன்பு இது போல அவர்கள் படையாகச் செல்ல முடியவில்லை. அக்காலத்தில் அவர்களுடைய படைக்கலங்களாகஇருந் தவை ஈட்டிகளும் இரண்டங்குல அகலமான நீண்ட வாள்களுமே யாகும். இவ்வாருன படைக்கலங்களுடன் அவர்கள் எல்லைப் பகுதி களில் கொள்ளையடிக்க முற்பட்டுவந்தனர். இங்கு மங்கும் கிடைத்த வற்றை எடுத்துக் கொண்டனர். பிறகு தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினர். ஆனல், இப்போது அவர்கள் வெற்றிப் படையாளர் களைப் போலச் செல்கின்றனர். முகலாயப் படைகளைப்பற்றி எவ்வித அச்சமும் இல்லாதவர்களாய்க் அவர்கள் காணப்படுகின்றனர்.' இவ்வாறு மராத்தியர்களை நசுக்குவதற்காக அவுரங்கசிப் செய்த அனைத்து முயற்சிகள் எல்லாம் வீணுயின. அவருக்குப்பின் பட்டத் துக்கு வந்த பல வீனமான அரசர்களால் எதிர்க்க முடியாதபடி வெற்றியுடன் கூடிய ஆற்றலுடன் மராட்டிய தேசியம் உயிர் பெற்றது.

Koviloor Acadamy

5. முகலாயப் பேரரசின் சீர்குலைவு

1. பிற்கால முகாலாயப் பேரரசர்கள்

1707 மார்ச்சு மூன்றும் நாள் நேர்ந்த அவுரங்கசீபின் மரணம் மாபெரும் முகலாயப் பேரரசின் சீர்குலைவுக்கு ஓர் அடையாளமாக இருந்தது. தமக்குப் பிறகு தம் மக்களிடையே உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்படும் என்று அவுரங்கசீப் பயந்தார். அதனுல் அதைத் தடுப்பதற்காக உயிரோடு வாழ்ந்த தம் மூன்று புதல்வர்களான மு'ஆஸ்ஸம், முஹம்மது ஆஸம், முஹம்மது காம்பக்ஷ் இவர்களை அமைதியாகப் பேரரசைப் 'பங்கிட்டுக்கொள்ளுமாறு ஒரு விருப்பா வணம் (Will) எழுதி வைத்தார் என்று சொல்லப்படுகிறது. தந்தை உயிர் துறந்தாரோ இல்லையோ, புதல்வர்கள் மூவரும் தில்லிச் சிம்மா சன உரிமைக்காகக் கடுமையான சகோதரச் சண்டைகளில் இறங்க லாயினர். மூன்று சகோதரர்களில் மு'ஆஸ்ஸம் அப்போது காபூலின் கவர்னராகவும், ஆஸம் குஜராத்தின் கவர்னராகவும், கடைசித் தம்பியான முஹம்மது காம்பக்ஷ் பீஜப்பூரின் கவர்னராகவும் இருந்த னர். காம்பக்ஷ் 'பேரரசின் எல்லாப் பண்புகளையும்' புனைந்து கொண்டாலும் தக்கணத்தைவிட்டுச் செல்ல முடியவில்லை. ஆனுல் மூவரில் மூத்தவரான மு'ஆஸ்ஸம் காபூலிலிருந்து ஆக்ராவுக்கு விரைந்து சென்ருர். ஆஸம் அதே நகரை நோக்கியே சென்ருர். இறந்த தந்தையின் விருப்பத்தின்படி பேரரசைப் பங்கிட்டுக்கொள்ள லாம் என்று மு'ஆஸ்ஸம் ஆஸமிடம் கூறினுர். ஆனுல் பின்னவர் அந்தக் கருத்துரைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. சிம்மாசனத்துக்குத் தமக்குள்ள உரிமைக்காகப் போரிடுவதென்று முடிவு செய்தார். வாளைத் தவிர வேறென்றும் சிக்கலைத் தீர்க்கமுடியாத நிலை ஏற் பட்டது. இரண்டு சகோதரர்களும் உடனே வாளைக் கையிலேந்தினர். அவர்கள் 1707 ஜூன் மாதத்தில் ஆக்ராவிலிருந்து சில மைல் தூரத் தில் இருந்த ஜாஜௌ என்ற இடத்தில் சந்தித்தனர். அச் சந்திப்பில் ஆஸம் தோல்வியுற்றதுடன் தம் உயிரையும் இழந்தார். ராஜபுதனத் துக்குக் குறுகியகாலப் படையெடுப்பு ஒன்றைச் செய்தபின் மு'ஆஸ் ஸம் தக்கணத்துக்குச் சென்ருர். ஹைதராபாத்துக்குக் கருகில் காம்

Koviloor Acadamy

பக்ஷ் தோற்கடிக்கப்பட்டு 1708ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் காயங்களால் உயிர் துறந்தார்.

மு'ஆஸ்ஸம் பஹதூர் ஷா (அல்லது முதலாம் ஷா ஆலம்) என்ற பட்டத்துடன் சிம்மாசனம் ஏறினர். 'மென்மையான, சமத்துவமான மன இயல்பை உடையவராயும், கற்றவராயும், பெருந்தன்மை மிக்கவராயும், தாராள குணமுடையவராயும்' இருந்தபோதிலும், அவர் பேரரசின் சீர்குலைவைத் தடுப்பதற்கு முடியாதபடி வயது முதிர்ந்தவராயிருந்தார். 1712 பிப்ரவரி 27-ல் அவர் மரணமடைந்த பிறகு அவருடைய புதல்வர்களான ஜகாந்தார் ஷா (Jahandar Shah), அஸீமுஸ் ஷான் (Azim-us-Shan), ஜஹான் ஷா (Jahan Shaḥ), ரபிவுஸ் ஷான் (Rafi-us-Shan) என்ற நால்வருக்குமிடையே மீண்டும் ஆட்சியுரிமைப் போர் தொடங்கியது. கடைசி மூவரும் போரில் கொல்லப்பட்டனர். ஜகாந்தார் ஷா சுல்பிகர் கானின் (Zulfiqar Khan) உதவியுடன் சிம்மாசனம் ஏறினர். சுல்பிகர்கான் அரசாங்கத்தின் முதன் மந்திரியானர். ஜகாந்தர் லால் குமாரி (Lal Kumari) என்ற பெயருடைய தமக்கு விருப்பமான ஓர் ஆரணங்கின் செல்வாக்குக்கு முழுதும் ஆட்பட்டிருந்தார். 'ஜகாந்தாரின் குறுகிய ஆட்சிக்காலத்தில் பலாத்காரம் பெரும் ஆட்சி பெற்றிருந்தது. அக்காலம் பாடகர்கள், நாடோடிப் பாணர்கள், எல்லா மலைநாட்டுக் கூத்தர், நடிகர்கள் முதலிய எல்லோருக்கும் ஒரு சிறந்த காலமாக இருந்தது. எனினும் நீண்டகாலம் அவர் ஆண்டு அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. அஸீமுஸ் ஷானின் மகனை பாருக்ஷியாரின் (Farrukhsiyar) ஆணையின் கீழ், அவர் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டு தில்லிக் கோட்டையில் கழுத்தை நெரித்துக் கொல்லப்பட்டார். பாருக்ஷியார் தாமே பேரரசர் என்று கி.பி. 1713-ல் அறிவித்தார். பழைய அரசரைச் சிம்மாசனத்தில் வைத்த சுல்பிகர்கானும் அவரால் தூக்கிலிடப்பட்டார்.

பாருக்ஷியார் சிம்மாசனத்துக்கு வருவதற்கு இரண்டு சய்யித்து சகோதரர்கள் உதவி புரிந்தவர்கள். அவர்களுள் ஒருவர் பாட்னுவின் துணைக் கவர்னரான ஹுஸேன் ஆலி ஆவர். மற்றவர் அலஹாபாத்தின் கவர்னர் அப்துல்லா ஆவர். அவர்கள் இருவரும் அதற்குப்பின் நாட்டில் உண்மையான அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினர். அவர்கள் சிம்மாசனத்தில் ஓர் இளவரசனுக்குப் பிறகு ஓர் இளவரசனுகப் பலரை அமர்த்தினர். அப்துல்லா வஸீரானுர்; ஹுஸேன் ஆலி படையின் தலைமைத் தளபதியானுர். முன்னவர் ஒரு படை வீரராயிருந்தமையாலும், உள்நாட்டு ஆட்சிமுறையில் முன் அனுபவம் இல்லாதவராய் இருந்தமையாலும், ஆட்சியின் முழுச்சுமையும் பின்னவர் மேல் விழுந்தது. பாருக்ஷியார் 'பலவீன மானவராயும் கோழையாயும், வெறுக்கத்தக்கவராவும்' இருந்தார். 'நல்லது, அல்லது கெட்டது எதிலும் உறுதிப்பாடு இல்லாதவராய்' இருந்தார்.

Koviloor Academy

அவர் தம்முடைய அதிகாரத்தை நிலை நாட்ட முயன்ற முயற்சி, அவர் ஆட்சிக் காலத்தில் 'எங்கும் குழப்பமும் கலவரமும் நிறைந்ததாயும், மற்றொரு பேராசையான அவநிலை ஏற்படவும்' செய்தது. சய்யித்துக்கு எதிரான தம்முடைய நண்பர்களின், குறிப்பாக மீர்ஜும்லாவின் செல்வாக்குக்கு உட்பட்டு, அவர் ஆட்சியின் முதலிலிருந்தே சய்யிது மந்திரிகளிடம் நன்றியில்லாதவராய் நடந்துவர்தார். அதனால் பேரர சரைச் சிம்மாசனத்திலிருந்து நீக்கி அவரைக் குருடாக்கிக் கேவ்வல மான முறையில் அவரைத் தூக்கிலிடும் அளவுக்கு அவர்களுடைய வெறுப்பு மிகுந்திருந்தது. அவர் தம்முடைய எதிரிகளாய் இருக்கக் கூடியவர்களை நடத்திய முறையைக் காட்டிலும் மிகக் கொடுமையாக சய்யிதுகள் அவரை நடத்தினர்கள் என்று கூறமுடியாது. அவரு டைய தகுதியின்மை, சிக்கல்கள், நன்றியறிவின்மை முதலியவற்றுக் காக அவருடைய மந்திரிகள் அவரை நீக்குவது இன்றியமையாததாய் விட்டது. ஆனால், உயர்ந்த பதவியிலிருந்த அவர்களைப்போன்ற வர்கள். 'கட்டாயம் செய்ய வேண்டிய செயல் ஒன்றை, அவர்கள் செய்தவிதம் அளவுக்கு மீறிய கடுமையான தாகவும், வீழ்ச்சியுற்ற பேரரசின் தன்மானத்தைச் சிறிதும் மதிக்காததாகவும் இருந்தது. சிம்மாசனத்திலிருந்து நீக்கிய அரசரைக் கண்ணைக் குருடாக்குவது வழக்கமான செயல்தான். அதற்காகச் சய்யிதுகளை நாம் குறிப்பாகக் குற்றங் கூற முடியாது. ஆனால், அதன்பின் சிறையிட்டுக் கடுமை யாக வருத்தியது அளவுக்கு மீறிய கொடுமையாகும். சிறைப்பட்ட வரின் உயிரை வாங்கிவிடுதல் சிறிதும் விரும்பத்தகாத அடாச் செயலாகும்.'

அரசரை ஆக்குவோரான அப்துல்லாவும் ஹுஸேன் ஆலியும் அப்போது ராபி-உஸ்-ஷானின் புதல்வர்களான ராபி-உத்-தரஜாத், ராபி-உத்-தௌலா என்ற இருவரையும் பொம்மை அரசர்களாக்கிச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்தனர். ஆனால் சில மாதங்களுக்குள் 'பொம்மைப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியையே முழுதும் செலுத்தத் தீர்மானித்திருந்த' சய்யிதுகள், பஹாதுர்ஷாவின் நான்காவது மகனை ஜஹான்ஷாவின் மகனைவரும், பதினெட்டு வயது நிரம் பியவரும், முஹம்மது ஷா என்ற பட்டப் பெருடன் சிம்மாசனம் ஏறிய வருமான ரோஷன் அக்தர் என்ற இளைஞரே பொம்மை ராஜாவாக இருக்க மிகுந்த தகுதியானவர் என்று கண்டுபிடித்தனர். ஆனால் சய்யிதுகள் எதிர்பார்த்தபடி அப்புதிய பேரரசர் அவர்கள் சொற்படி இணங்கி நடப்பவராய்க் காணப்படவில்லை. மந்திரிகள் ஏழாண்டு ஆட்சிக்காலத்தில் அவர்களுக்குப் பகைவர்களாகி விட்ட பலர் அப்புதிய பேரரசரை ஆதரித்தனர். பேரரசரின் புதிய கூட்டாளி களில் மிகச் சிறந்த திறமை வாய்ந்தவர் தக்கணத்துப் புகழ்பெற்ற நிஸாம்-உல்-முல்க் ஆவர். நிஸாமைச் சீர்திருத்துவதற்காக மாள வத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஹுஸேன்-

Koviloor Academy

அலி குத்திக் கொல்லப்பட்டார். ராபி-உஸ்-ஷானின் மற்ருெரு மகனை முஹம்மது இப்ராஹிம் என்ற மற்ருெரு நல்ல பொம்மை அரசரைச் சிம்மாசனத்தில் வைத்துத் தம்முடைய அதிகாரத்தை நீடித்துவைக்க அப்துல்லா முயன்ருர். ஆனுல் அவர் தோற்கடிக்கப்பட்டு 1720-ல் சிறைக்குள் வைக்கப்பட்டார் ; 1722-ல் விஷம் மூலம் கொல்லப்பட்டார். புதிய வஸிரான முஹம்மது அமின்கான் 1721-ல் இறந்தார் ; அப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு கி.பி. 1722 பிப்ரவரியில் நிஸாம்-உல்-முல்க் அழைக்கப்பட்டார். அவர் சிறப்பான ஒரு செயல்விரரானமையால், பேரரச அவையில் நிலவியிருந்த சூழ்நிலை அவருடைய மனப் பாங்குக்கு ஏற்றதாய் இருக்கவில்லை. விரைவில் அவர் தக்கணத்துக்குச் சென்று, அங்கே உண்மையில் ஒரு சுதந்தர இராச்சியத்தை நிறுவினுர். எனினும் பேரரச மேலாண்மையாகிய கற்பனை கடைசிவரை நீடித்திருந்தது. சய்யிதுகள் விழ்ச்சியும், நிஸாம்-உல்-முல்க் தக்கணத்துக்குப் புறப்பட்டுச் சென்றதும் கூட முஹம்மது ஷாவின் அதிகாரத்தையும் கௌரவத்தையும் அதிகரித்துவிட வில்லை. சியார் என்ற நூலின் ஆசிரியரான குலாம் ஹுஸேன் எழுதுவது போல, ‘ இளமையும் அழகும் கெழுமியிருந்த அவர் எல்லாவகையான இன்பங்களும் விரும்பினராய் இருந்தார். அதனுல் சோம்பல் வாழ்க்கையில் பழக்கப்பட்டுப் போனுர். அது அப்பேரரசின் சக்தியைப் எல்லாம் விணுக்கிவிட்டது.’ விதி அவருக்கு நிண்ட ஆட்சிக்காலத்தை நல்கிய போதிலும் ‘ அவர் சிறிதும் கவனிப்பின்றிக் காரியங்கள் எல்லாம் அவற்றின் போக்கிலேயே நடக்கும்படி விட்டு விட்டார். அதனுல் அதன் விளைவுகள் பெருங்கேடாய் முடிந்தன.’ தக்கணம் அவுத்து, வங்காளம் முதலிய மாகாணங்கள் ஒவ்வொன்ருகப் பேரரசின் பிடியிலிருந்து நழுவின ; மராட்டியர்கள் நீண்டதோர் எல்லைப் பரப்பில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர் ; ஆக்ராவுக்கு அருகில் ஜாத்துகள் சுதந்தரம் அடைந்தனர் ; வடக்கு கங்கைச் சமவெளியில் ரோஹில்கண்ட் (ருஹெல்கண்ட்) என்ற ராச்சியத்தை ருஹேலா ஆப்கானியர்கள் நிறுவினர் ; பஞ்சாப்பில் சிக்கியர்கள் சுறுசுறுப்பாயினர் ; நாதிர்ஷாவின் படையெடுப்பும் தில்லிப் பேரரசுக்கு ஒரு பேரிடியாய் இருந்தது. இவ்வாறு அவுரங்கசீப் இறந்த முப்பதாண்டுகளுக்குள் பரந்த முகலாயப் பேரரசு அகில இந்திய அரசியல் அளவாயிருப்பதினின்று சீர்குலைந்து, பல சுதந்தர அல்லது அரைச் சுதந்தர நாடுகளாகப் பிரிந்து விட்டது.

முகம்மது ஷாவின் மகனும் அடுத்த பேரரசருமான அகமது ஷா எல்லாப் பக்கங்களிலும் அஞ்சத்தக்கவாறு பெருகியிருந்த சீர்குலைவுச் சக்திகளை வெற்றியுறச் சமாளிக்க முடியாதவராயிருந்தார். பேரரசு மிக விரைவில் எல்லையில் மிகச் சுருங்கியது. தில்லியைச் சுற்றி ஒரு சிறு மாவட்டமாகச் சுருங்கியது. அப்போது அரசரை ஆக்கும் செய

Koviloor Acadamy

லில் சய்யிது சகோதரர்களைப் பின்பற்றியவரும், தக்காணத்தின் காலஞ் சென்ற நிஸாம்-உல்-முல்க்கின் பேரருமான வஸீர் காஜி-உத்தீன் இமாத்-உல்-முல்க் (Ghazi-ud-din Imad-ul-mulk) என்பவரால் பேரரசர் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டு 1754-ல் குருடாக்கப்பட்டார். காஸி உத்தீன் இமால்-உல்-முல்க் சிம்மாசனத்தில் ஜகந்தார் ஷாவின் மகனுன அஸிஸ்-உத்தீனை வைத்தார். அஸிஸ்-உத்தீன் அதுவரை நீண்ட காலமாகச் சிறையில் இருந்தவர். அப்போது மாபெரும் அவுரங்கசீப்பைப் போலவே பட்டப் பெயர் புனைந்துகொண்டு தம்மை இரண்டாம் ஆலம்கீர் என்று அழைத்துக்கொண்டார். ஆனுல் புதிய அரசர் ' முன்பு சிறையிலிருந்தது போலவே இப்போது சிம்மாசனச் சிறையில் இருப்பதை உணர்ந்தார். பேராற்றல் வாய்ந்த வஸீரின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள அவர் செய்த முயற்சி அவருடைய அழிவிலேயே சென்று முடிந்தது. ஏனெனில் வஸீரின் ஆணைகளால் அவர் கொல்லப்பட்டார். பேராசையும் கண்மூடித்தனமும் மிக்க இந்த வஸீரின் கொடுமை மிக்க பகைமையுணர்ச்சியைக் கண்டு இரண்டாம் ஆலம்கீரின் மகனும் அவருக்கு அடுத்துப் பட்டத்துக்கு வந்தவருமான இரண்டாம் ஷா ஆலம் இடத்துக்கு இடம் நாடோடியாகத் திரியும் நெருக்கடிக்கு ஆளாகி அல்லற்பட்டார். துரதிர்ஷ்டம் பிடித்த இந்தப் பேரரசர் பல முறை விதியின் விளையாட்டுகளுக்கு ஆட்பட்டுக் கடைசியில் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் சரணடைந்து, கி.பி. 1806-ல் அவர் இறக்கும் வரை அவர்களிடமிருந்து ஓய்வூதியம் பெறுபவராகவே வாழ நேர்ந்தது. இரண்டாம் ஷா ஆலமின் மகன் இரண்டாம் அக்பர் பேரரசர் என்ற பட்டத்துடன் 1837 வரை தில்லியில் வாழ்ந்தார். பேரரசரின் மரபும் இரண்டாம் பஹாதுர்ஷாவுடன் அழிந்தது. அவர் சிப்பாய்க் கலகத்தினருக்கு உதவி செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டு ஆங்கிலேயர்களால் ரங்கூனுக்கு நாடுகடத்தப்பட்டார். அங்கே கி.பி. 1862-ல் அவர் இறந்தார்.

2. பிற்கால முகலாயப் பிரபுக்களின் மாறுதலுற்ற குணவியல்பும், கட்சிப் பிரிவுகளும்

பதினெட்டாம் நூற்ருண்டில் பிரபுக்களிடத்தில் ஏற்பட்ட சீர்குலைவு முகலாயப் பேரரசின் வீழ்ச்சியை விரைவு படுத்துவதில் பெரும் பங்கு பெற்றதெனலாம். பதினுறு பதினேழாம் நூற்ருண்டுகளில் சில பிரபுக்கள் செய்துவந்த பயன் மிக்க செயல்களை, இப்பிரபுக்கள் செய்வதை நிறுத்திவிட்டனர். நாட்டின் பெரும் துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் தன் முன்னேற்றத்திலும் தனிப்பட்ட தங்களுடைய உயர்விலும் அதிக நாட்டம் உடையவர்களாய் மாறிவிட்டனர். அவற்றை எய்துவதற்காக அவர்கள் நாட்டில் உள்நாட்டுப் போர்களும் பேராபத்துள்ள சதிகளும், மீட்கமுடியாத குழப்பமும் அராஜகமும் தலை விரித்தாடும்படி செய்துவிட்டனர். சர் ஜாதுநாத் சர்க்கார் கூறுகிருர்: ' முகலாய

வரலாற்றை ஆராய்ச்சி மனப்பான்மையுடன் படிக்கும் மாணவருக்குப் பிரபுக்களின் சீர்குலைவைத் தவிர வேறென்றும் அவ்வளவு பெரிதாகத் தோன்ருது. தலைமைச் சிறப்புடையோர் ஒரு தலை முறை வரைக்குந்தான் சிறப்புற வாழ்கின்றனர். பின்னர்த் தமக்குப் பின்பு தகுதி மிக்க சந்ததியினரை உண்டாக்கி வைக்காது சென்று விடுகின்றனர். பதினேழாம் நூற்ருண்டில் இந்தியாவின் வரலாற்றை உண்டாக்கிய பெருமை பெற்ற அப்துர் ரஹீமும், மஹாபத்தும், சாதுல்லலாவும், மீர் ஜும்லாவும், இப்ராஹீமும், இஸ்லாம் கான் ரூமியும் தங்களுக்குள்ள திறமையில் பாதியளவு பெற்றிருக்கும் புதல்வர்களையோ அல்லது பேரர்களையோ கூட விட்டுச் செல்லவில்லை.' இது நாட்டின் பிற்கால அரசர்களிடம் திறமையும், துணிந்து செயலாற்றும் திறனும் இல்லாமையின் விளைவாகும். ஆட்சிக்கு வேண்டிய தகுதியான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் அவர்களிடம் காணப்படவில்லை. ஆனால் கீழ்மையான முகப்புகழ்ச்சியாளர்களின் சுயநலம் மிகுந்த அறிவுரையின் வழியே நடந்து வந்தனர். இவ்வாறு பேரரசர் 'ஒரு சோம்பேறியாயும், முட்டாளாயும் இருக்கும் போது பிரபுக்களுக்குத் தலைவராயும், அவர்களுக்கு வழிகாட்டுபவராயும் இருக்க முடியவில்லை. அதனல் இயல்பாகவே பிரபுக்கள் அரசவையிலும், மாகாணங்களிலும், கட்டுப்படுத்தும் அதிகாரம் மிக்கவர்களின் தயவைப் பெற அவர்கள் பக்கம் சார்ந்திருந்தனர்.'

வெளிப்படையாகக் கூறுமிடத்து, பிரபுக்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்திருந்தனர். இந்நாட்டிற்கே உரியவர்களும் இந்த நாட்டில் நீண்ட காலமாகக் குடியேறி வாழ்ந்து வந்தவர்களும் இந்துஸ்தானி அல்லது இந்திய-முஸ்லிம் கட்சியை உருவாக்கிக் கொண்டனர். இந்தப் பிரிவில் ஆப்கானியப் பிரபுக்களும், பார்ஹாப் (Barha) பிரதேசத்து சய்யிதுகளும், படக்ஷான் நாட்டிலிருந்து வந்தவர்களின் சந்ததியினராகிய கானிதௌரான் (Khan-i-Dauran) பிரபுக்களும் சேர்ந்திருந்தனர். இந்த இந்திய முஸ்லிம்கள் தங்கள் இந்துத் தோழர்கள் உதவியையே பெரிதும் நம்பியிருந்தனர். இந்துஸ்தானிக் கட்சிக்கு எதிராக ஒரு கட்சியைத் தோற்றுவித்துக் கொண்ட வேறு வேறு இனத்தைச் சேர்ந்த அயல் நாட்டுப் பிரபுக்கள் எல்லாம் முகலாயர்கள் என்ற பொதுப் பெயரில் அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்களுடைய பிறந்த நாட்டின்படி இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். டிரான்சோக்சியானுவிலிருந்தும் மற்ற மத்திய ஆசியப் பகுதிகளிலிருந்தும் வந்தவர்களும், பெரும்பாலும் ஸுன்னி மதப்பிரிவைச் சார்ந்தவர்களும் துரானியக்கட்சியை அமைத்துக்கொண்டனர். இப்பிரிவின் முதன்மையான அங்கத்தினர்கள் முகம்மது அமீன்கானும் அவருடைய ஒன்று விட்ட சகோதரனும் நிஸாம்-உல்-முல்க் என்று பேரும் புகழும் பெற்ற சீன்கிலிச்கானு மாவர் (Chin Qilich Khan). பாரசிகப் பிரதேசங்களிலிருந்து வந்தவரும், ஷியாமதப்பிரிவைச்

Koviloor Acadamy

சேர்ந்தவரும் இரானிக்கட்சியை அமைத்துக் கொண்டனர். இக் கட்சியின் முக்கியமான அங்கத்தினர்கள் ஆஸாத்கானும், அரசரை ஆக்குவோரான சுல்பிகர்கானும் ஆவர். இவையெல்லாம் சிறு கட்சிப் பிரிவுகளேயல்லாமல் தற்காலத்து அரசியல் கட்சிகளைப் போன்றவை அல்ல. தன்னலத்தைத் தவிர அவற்றின் அங்கத்தினர் களிடையே செயற்பாட்டின் ஒரு பொதுக்கொள்கையோ கட்சிக்கு உறுதியாகக் கட்டுப்பட்டிருப்பதோ காணப்படவில்லை. பஹாதுர்ஷா, ஜகாந்தார்ஷா இவர்களின் ஆட்சிகளில் இரானிக்கட்சி அதன் தலைவரான சுல்பிகர்கானின் தலைமையில் சிறப்புற்றிருந்தது என்பதை அறியும்போது அந்தக்காலத்தின் அரசியல் போராட்டங்களின் இயல்பை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம். ஆனால், பரூக்ஷியாரின் ஆட்சித் தொடக்கத்திலிருந்தே இந்துஸ்தானிக் கட்சி துரானியக் கட்சியுடன் தொடர்பு கொண்டு தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டிக் கொண்டுவந்தது. பிறகு துரானியர்களும் இரானியர்களும் சேர்ந்து இந்துஸ்தானிகளை அதிகாரத்திலிருந்து அகற்ற முயன்றனர்.

3. அயல் நாட்டுப் படையெடுப்புகள்

அ. நாதிர் ஷாவின் படையெடுப்பு

பாபர், அக்பர், அவுரங்கசீப் ஆகியோரின் தகுதியற்ற வழித் தோன்றல்களின் புகழ்பெற்ற ஆற்றல் இன்மையின் இயல்பான விளைவாக, முகலாய அரசு ஊழல் மலிந்த தாகவும், நிர்வாகத்திறன் குறைந்ததாகவும் ஆயிற்று. இந்தியாவின் உள்ளே மட்டுமின்றி, இந்தியாவின் வெளியிலும் அது தன் மதிப்பினை இழந்தது. துருக்கிய ஆப்கானிய சுல்தானியத்தின் சீரழிவுக்காலத்தில் ஏற்பட்டது போன்றே மிகப்பழங்காலத்திலிருந்தே வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களின் ஆசையைத் தூண்டி வந்த புகழார்ந்த வளம்நிரம்பிய இந்நாடு மீண்டும் அயல்நாட்டுப் படையெடுப்புக்கு இலக்காகியது. இந்தத் தடவை படையெடுப்பாளர் மத்திய ஆசியாவிலிருந்து வரவில்லை. ஆனால் பாரசிகத்திலிருந்தே வந்தனர். பாரசீகம் ஏற்கெனவே முகலாயர் களிடமிருந்து காந்தகாரை கைப்பற்றிக்கொண்டிருந்தது. பேரரசின் சிறந்த உயிர் நிலைப்பகுதியான வடமேற்கு எல்லைப்பகுதியை அவுரங்க சீப்பின் காலத்திலிருந்து முகலாயர்களால் காக்க முடியாமல் போனமை பாரசிகர்களுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை அளித்தது. 1736-ஆம் ஆண்டளவில் அவர்கள் உள்நாட்டுத் தொல்லைகளிலிருந்து விடுபட்டனர். அதன் பிறகு அவர்கள் தைரியம் மிக்க துணிகரச் செயல் வீரரான நாதிர்ஷாவின் தலைமையில் இந்துஸ்தானத்தின் இதயத்திற்குள் துணிந்து ஊடுருவிச்செல்ல முற்பட்டனர். காபூல், பஞ்சாப் ஆகியவற்றின் கவர்னர்களாக முறையே இருந்த நாஸிர்கான்; சகரியாகான் என்ற இருவரும் தங்கள் மாகாணங்களைக் காத்துக்

Koviloor Academy

கொள்ளச் செய்த எளிய முயற்சிகள் எல்லாம் வீணாயின. ஏனெனில் அரசவையில் தங்கள் அதிகாரத்திற்காகச் சண்டை யிட்டுக்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் தோற்றுவித்த சூழ்ச்சிகளால் காபூல், பஞ்சாப் கவர்னர்கள் தில்லி அரசவைக்கு உதவி செய்யும்படி, விண்ணப்பித்த முறையீடுகளைக் கேட்டு ஆவன செய்ய முடியாமல் போயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் இந்திய வரலாற்றாசிரியர்களின் மிக முக்கியமானவர்களுள் ஒருவரான குலாம் ஹுஸேன், அவர்களுடைய ஆதரவற்ற தற்காப்பு நிலைமையைப் பின்வருமாறு விவரிக்கிறார்: 'பாதைகளும் கணவாய்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவரும் கவனிப்பாரற்றுப் போக்கு வரவு புரிந்துகொண்டிருந்தனர். என்ன நடக்கிறது என்று அரசவைக்குச் செய்தி யனுப்புவார் யாருமில்லை. பேரரசரோ, அமைச்சரோ ஏன் எவ்வகையான செய்தியும் தங்கள் காதுகளுக்கு எட்டவில்லை என்று எப்போதும் கேட்டதில்லை.

ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவரும், ஒரு திருடர் தலைவராய் முன்பு இருந்தவருமான நாதிர்ஷா, துன்பங்களும் துயரங்களும் மலிந்த வாழ்க்கையில் அடிப்பட்டவராய் இருந்தமையால் அவருக்குப்போதிய துணிவு ஆற்றல், ஓய்வுகொள்ள வேண்டாத சக்தி முதலியவை ஏற்பட்டிருந்தன. கி.பி. 1722-ல் ஷா ஹுஸேன் சபவியிலிருந்து பல ஆப்கானியர்கள் பாரசீகத்தைக் கொடுமைப்படுத்தி வந்தபோது நாதிர்ஷா பாரசீகத்தை ஆப்கானியர்களின் கையிலிருந்து மீட்க உதவினார். சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்ட அரசனை ஷா ஹுஸேனின் மகனும், பாரசீகத்தின் பட்டத்துக்குத் திருப்பிக்கொண்டுவரப்பட்ட அரசருமான ஷா தஹ்மாஸ்பின் (Shah Tahmasp) ஊழியத்தில் கி.பி. 1727-ல் நாதிர்ஷா நுழைந்தார். தம் தலைவரின் திறமைக் குறைவைக் கண்டு நாதிர்ஷா அரசாங்கத்தின் மறைமுக ஆட்சியாளரானார். கடைசியில் 1732-ல் அவரைச் சிம்மாசனத்திலிருந்து அகற்றினார். ஷா தஹ்மாஸ்பிற்குப் பின் பட்டத்திற்குரிய அவருடைய ஆண் குழந்தை இறந்ததனால் நாதிர்ஷா பெயரிலும் உண்மையாகவும் பாரசீகத்தின் அரசர் ஆனார்.

கி.பி. 1738-ல் நாதிர் இந்தியாவை நோக்கிப் புறப்படத் தொடங்கினார். முஹம்மது ஷா வாக்குறுதிகளை மீறியதாகக் கூறப்பட்டதும், தில்லி அரசவை அவருடைய தூதர்களை இழிவாக நடத்தியமையும் அவருடைய படையெடுப்புக்குப் போதிய காரணங்கள் ஆயின. முகலாயர்கள் வருந்தத்தக்க வகையில் வடமேற்கு எல்லைப் பகுதியைக் காக்காமல் புறக்கணித்திருந்தமையால், நாதிர் எளிதாகக் கி.பி. 1739-ல் கஜனி, காபூல், லாகூர் இவற்றைக் கைப்பற்றினார். பஞ்சாப் மாகாணம் முழுவதும் பெருங் குழப்பத்திலும், ஒழுங்கின்மையிலும், ஆழ்ந்திருக்கும்போது, இன்ப விருப்பினரான பேரரசரும்,

Koviloor Academy

அரசவையின் கம்பள-வீரர்களும் (Carpet-Knights) அவரை எதிர்ப்பதற்காக ஒரு முயற்சியும் செய்யவில்லை. நாதிரின் படையெடுப்பின் போது, அவர்களுடைய நடத்தை, 'ஆற்றலின்மையை வெளிப்படுத்தும் வெட்கப்படத்தக்க திறமைக் குறைவின் கதையைக் கூறுவதாக' இருந்தது. பாரசீகப்படை தில்லிக்குச் சில மைல் தூரத்திற்குள் வரும் வரைக்கும் தங்கள் சோம்பேறித்தனத்தை விட்டுவிட அவர்கள் தயாராயில்லை. பிறகு பேரரசப் படைகள் பாரசீகர்களின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காகப் புறப்பட்டுச் சென்று பானிப்பட்டுக்கு அருகே இருபது மைல் தூரத்திலிருந்த கர்னல் என்ற இடத்தில் பாசறையை அமைத்துக்கொண்டனர். தோல்வியுற்று நாதிர்ஷாவின் கைதியான தில்லிப் பேரரசர் நாதிரின் இரக்கத்தினல் விடுதலையுற்று சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளத் துடித்தார்.

வெற்றிபெற்ற நாதிரும், தாழ்மையுற்ற தில்லிப் பேரரசரும் தில்லியில் நுழைந்தனர். அங்கே திவானிகான் மூலம் நாதிர், ஷாஜஹானின் அரண்மனை அறைகளை அடைந்தார். முதலில் பேரரசின் நகரில் எவ்வித அமைதிக்குலைவும் ஏற்படவில்லை. ஆனல் சில குறும்புக்காரர்கள் நாதிர் ஷா இறந்துவிட்டார் என்று பொய்வதந்தியைப் பரப்பி விட்டதால் ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதில் சில பாரசீக வீரர்கள் கொல்லப்பட்டனர். முதலில் நாதிர் வெறுமனே குழப்பத்தை ஒடுக்கவே முயற்சிகள் எடுத்துக்கொண்டார். ஆனல் தம்முடைய வீரர்கள் கொலையுண்ட காட்சியைக் கண்டதும் கொதித்தெழுந்தார். பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சி அவருள்ளத்தில் உணர்ச்சிகளைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. விதிவசப்பட்ட தில்லி நகரின் குடிமக்களை எல்லாம் கொலை செய்யும்படி பொதுவான ஆணை ஒன்றைப் பிறப்பித்தார். அந்தக் காலத்தில் எழுதப்பட்ட ஒரு வரலாற்றுக் குறிப்பின் படி ஆட்கொலை காலையில் எட்டு மணியிலிருந்து மாலை மூன்றுமணி வரை நிகழ்ந்தது. 'விதிவசப்பட்ட எல்லைப் பகுதிகளில் வீடுகள் கொள்ளையிடப்பட்டன. எல்லா ஆண்களும் வயது வேறுபாட்டைக் கவனியாது கொல்லப்பட்டனர். எல்லாப் பெண்களும் அடிமைப்படுத்தப்பட்டு அரண்மனைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். அழிவு வேலையில் ஈடுபட்டோர் பல வீடுகளைத் தீக்கிரையாக்கினர். அவர்களுடைய கொடுமைக்குப் பலியான பல இந்துக்களும் முஸ்லீம்களும், இறந்தவர்களும் புண்பட்டவர்களும், வேறுபாடின்றி ஒன்ருக வைத்து எரிக்கப்பட்டனர். 'உயிர் தப்பியவர்கள் நகர எல்லைக்குள்ளேயே சூழப்பட்டனர். ஏனெனில் சந்தை யிடங்களைக் கொள்ளை யடித்ததுடன் நாதிர் தானியக் களஞ்சியங்களையும் பூட்டி முத்திரை யிடும்படி செய்தார். அங்கே காவலாளர்களை நியமித்தார். கிராமப்புறங்களைக் கொள்ளை யிடும்படி சிறு சிறு படைகளை அனுப்பினர். பணத்திற்காக நகரின் முக்கியமான குடிமக்களைப் பாரசிகப் படைவீரர்கள் சித்திர வதை செய்தனர். அந்த இரங்கத்தக்க நகரின் ஆதரவற்ற பட்டினி

Koviloor Acadamy

கிடக்கும் மக்களிடமிருந்து பலாத்காரத்தினுல் மூன்று கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டன. எட்டு வாரங்கள் அந்நகரம் கொடுமையும் கொலையும் மலிந்த பயங்கரக் காட்சியை அளித்தது. முகம்மது ஷாவின் பணிவு மிக்க வேண்டுகோளுக்கிரங்கி நாதிர்ஷா கடைசியில் தம் படை வீரர்களைத் திரும்ப அழைத்துக்கொண்டார். ஆனால் அப் படை யெடுப்பாளர் தம் நாட்டிற்குத் திரும்பிச் செல்லும்வரை அந் நகரில் அமைதி கூடவில்லை. முகம்மது ஷா சிம்மாசனத்தை வைத்துக் கொண்டிருந்தார் ; ஆனல் அவர் மீட்க முடியாத பல நஷ்டங்களுக்கு உள்ளானர். கொடுமை மிக்க அந்த வெற்றியாளர் புகழ்பெற்ற கோகி னூர் வைரம் உள்பட எல்லா மணிமுடியின் நகைகளையும், விலை மதிப்பு மிக்க ஷாஜஹானின் மயில் சிம்மாசனத்தையும், பேரரசர் முகம்மது ஷாவின் ஆணையின்படி எழுதப்பட்ட இந்து இசைபற்றிய புகழ்பெற்ற விளக்கங்கள் மிகுந்த பாரசீகக் கையெழுத்துப்படியையும் கவர்ந்துசென்ருர். நாதிரின் சொந்தச் செயலரின் மதிப்பீட்டின்படி நாதிர்ஷா தில்லியில் பதினைந்துகோடி ரூபாய் நாணயத்தையும் பேரள வினதான நகைகள், ஆடைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், இன்னும் இவைபோன்ற விலையுயர்ந்த பொருள்கள் முதலியவற்றையும் பேரரசர் கிடங்கிலிருந்து வலிந்து பற்றிக்கொண்டார். மேலும் அவர் தம்முடன் 300 யானைகள், 10,000 குதிரைகள், 10,000 ஒட்டகங்கள் இவற்றை எடுத்துச்சென்ருர். இவ்வாறு பாரசீகப் படையெடுப்பு, சீர் குலைந்துகொண்டிருந்த தில்லிப் பேரரசின் வளங்களின் பொருளாதார நிலைமையில் மாபெரும் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டது. சிந்து, காபூல், பஞ்சாப்பின் மேற்பகுதிகள் ஆகிய சிந்துவின் குறுக்கேயுள்ள மாகா ணங்கள் எல்லாம் பாரசீகர்களுக்குக் கொடுக்க நேர்ந்தது. மேலும் முகலாயப் பேரரசு இதுவரை பெற்றிருந்த சிறிது கௌரவத்தையும் இழந்தது. அதனுடைய சீர்குலைவு இப்போது உலகம் எங்கணும் அறியத்தக்க ஒரு செய்தியாயிற்று. சுருங்கக் கூறுமிடத்து நாதிரின் படையெடுப்பு அப்பேரரசைத் 'தலைதூக்க முடியாதவாறு தாழ்வுறும் படி' செய்துவிட்டது. உள்நாட்டு வளங்களை யெல்லாம் இழந்த அப் பேரரசு மீண்டும் குறைகளை நிறைவுசெய்து புத்துயிர் பெறுவதற்குக் காலம் கிடைக்கவில்லை. ஏனெனில் 1739ஆம் ஆண்டுப் படை யெடுப்பு பிறவெளிநாட்டுப் படையெடுப்புகளுக்கு முன்னேடியாக அமைந்துவிட்டது. நாதிர்ஷாவின் பேரரசுக்கு உரியவராக அடுத் துப் பட்டத்துக்கு வந்த அகமதுஷா அப்தாலி (Ahmad Shah Abdali) இந்தியாவின்மீது படையெடுத்தார்.

ஆ. அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகள்

1747-ல் நாதிர் ஷாவைக் கொலைசெய்த பிறகு அப்தாலி கோத் திரத்தைச் சேர்ந்த ஆப்கானியத் தலைவரும், நாதிரின் அதிகாரிகளுள் ஒருவருமான அகமத்ஷா என்பவர் அதிகாரத்துக்கு வந்தார். ஆப்

Koviloor Acadamy

கானிஸ்தானத்தின் சுதந்தர அரசர் என்று தம்மை நிலைநிறுத்துக்கொள்வதில் வெற்றியுற்றார். 'காலத்தின் முத்து' என்று பொருள்படும் துர்ரீ துர்ரான் (Durr-i-Durran) என்று தம்மை அழைத்துக் கொண்டார். அவருடைய குடும்பம் அதற்குப் பிறகு துர்ரானி என்று அழைக்கப் பட்டது, நாதிர்ஷாவுடன் இந்தியாவுக்குச் சென்றிருந்த அகமது ஷா அப்தாலி தம் கண்களாலேயே 'பேரரசின் பல வீனத்தையும், பேரரசரின் ஆற்றல் இன்மையையும் பிரபுக்களின் சுதந்தர உணர்ச்சியையும் கண்டிருந்தார்.' அதனால் தம்முடைய அதிகாரத்தைத் தம் நாட்டில் நிலை நாட்டிய பிறகு இந்தியாவின் மீது கி. பி. 1748 முதல் கி.பி. 1767 வரை பல படையெடுத்துவந்தார்.[1] இவை இதற்கு முற்பட்ட படையெடுப்புகளிலும் சிறிது முக்கியத்துவம் உடையவை. அவை இந்தியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆப்கானிய மறுமலர்ச்சியைக் குறித்துள்ள முகலாயப் பேரரசின் சீர் குலைவின் போது மேலாண்மைக்காகப் புது முயற்சிசெய்தன. உண்மையில் பதினெட்டாம் நூற்றாண்டின் ஒரு கருதத்தக்க பகுதியில் இந்திய வரலாற்றில் ஆப்கானிய மேலாண்மை முயற்சி ஒரு முக்கியமான கட்டமாகும். குறைந்தது இந்தியாவின் ஒரு பகுதியிலாவது அகமதுஷா அப்தாலி அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டும் விருப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும். எல்பின்ஸ்டோன் குறிப்பிடுவது போல அவர் இந்தப் படையெடுப்புகளை மேற்கொள்ள வேறு பிற நோக்கங்களும் இருந்தன. வெற்றிகரமான அயல்நாட்டுப் படையெடுப்புகளின் மூலம் பெறும் புகழினால் தம்முடைய சொந்த நாட்டில், தம்முடைய அதிகாரத்தை ஒரு நிலைப்படுத்த முயன்றார். மேலும் அவர் இந்தியப் போர்களின் மூலம் கிடைக்கும் கொள்ளைப்பொருள்களைக் கொண்டு தம்முடைய படைக்குச் செலவுகள் செய்வதற்கும் ஆப்கானியப் பிரபுக்களுக்கு வெகுமதிகளும், மரியாதைகளும் செய்வதற்கும் முடியும் என்று நம்பினார்.

காந்தகார், காபூல், பெஷாவர் ஆகியவற்றை வென்ற பிறகு அகமதுஷா அப்தாலி முதன் முதலாக 1748 ஜனவரியில் 12,000 சிறந்த பயிற்சி பெற்ற துருப்புகளுடன் இந்தியாவின் மீது படையெடுத்தார். ஆனால் மான்பூர்ச் சண்டையில் முகலாய இளவரசரான அகமது ஷாவினாலும், காலஞ் சென்ற வஸீர் கமார்-உத்தீனின் (Qamar-ud-din) மகனை மீர் மன்னுவினாலும் (Mir Mannu) தோற்கடிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தார். மீர் மன்னு பஞ்சாப்பின் கவர்னராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் பதவியேற்று அமையுமுன்னரே அகமதுஷா அப்தாலி பஞ்சாப்பின் மீது, இரண்டாம் முறை யாகக் கி.பி. 1750-ல் படையெடுத்து, அவரைத் தோற்கடித்து அந்நாட்டை

[1] கி.பி. 1769-ல் அகமதுஷா அப்தாலி பஞ்சாப்பின் மீது படையெடுத்ததாகச் சில ஆங்கிலப் பதிவேடுகள் குறிப்பிடுகின்றன. பார்க்க : (Indian Historical Quarterly) December 1934.

Koviloor Academy

வென்றார். தில்லி அரசவையிடம் உதவிபெருத பஞ்சாப் கவர்னர் தம் முடைய எல்லா எதிர்ப்பும் வீணானதைக் கண்டு படையெடுப்பாளரிடம் சரணடைந்தார்,

1751 டிசம்பரில் அப்தாலி மூன்றும் முறையாக இந்தியாவின் மீது படையெடுத்தார். மீண்டும் அவர் மீர் மன்னுவைத் தோற்கடித்து காஷ்மீரை வென்றார்; முகலாயப் பேரரசரான அகமதுஷாவை சிர் ஹிண்ட் வரையுள்ள கிழக்குப்பகுதிகளைத் தமக்கு பிரித்துக் கொடுக் கும்படி வற்புறுத்தினார். இவ்வாறு முகலாயப் பேரரசு இன்னும் எல்லைப் பரப்பில் சுருங்கியது. இப்போது மீர் மன்னு லாகூரில் அப் தாலியின் கவர்னராக விடப்பட்டார். பஞ்சாப்பின் மீதியான வரு வாயை வெற்றியாளருக்கு அனுப்பிவிடுவதாகவும், அவரிடமிருந்து முடிவான கட்டளைகள் பெறுமல் முக்கியமான விவகாரங்களைச் செய் வதில்லை என்றும் உறுதி கூறினார். ஆனால் அப்தாலி இரண்டாம் ஆலம்கீர் காலத்தில் (1754-1759) மற்றொரு படையெடுப்புச் செய் தார். 1753 நவம்பரில் மீர் மன்னு இறந்த பிறகும், அவருக்குப் பின் பட்டத்துக்குரிய அவருடைய ஆண்குழந்தை 1754 மே மாதத்தில் இறந்த பிறகும் பஞ்சாப் மாகாணம் முக்கியமாகப் பிரதிநிதி அன்னை யாகிய முக்லானி பேகமின் (Mughlani Begam) தன் சுதந்தரம், தன் விருப்பம் !இவற்றினால் அமைதி குலைந்து அராஜகம் தலைவிரித்தாடு வதற்கு இடமாயிற்று. அவளிடமிருந்து உதவிக்கு வரும்படி வந்த வேண்டுகோளுக் கிணங்க சர்வவல்லமையுள்ள தில்லி வஸீர் இமாத்-உல்-முல்க் பஞ்சாப்புக்குப் படையுடன் சென்றார். அவர் தாமே பஞ்சாப்பின் மேல் பெருவிருப்பங் கொண்டிருந்தார். 1756-ல் அவர் பஞ்சாப்பைத் தம் ஆணைக் கீழ்க்கொண்டுவந்து 'லாகூரின் தலைமையான பிரபு' வான மீர் முனிமை (Mir Munim) மாகாண கவர்னராக நியமித்தார். இதனால் கோபங் கொண்ட அகமதுஷா அப்தாலி 1756 நவம்பரில் நான்காம் முறையாக மிகுந்த உறுதியான தீர்மானத்துடன் இந்தியாவின் மீது படையெடுத்தார். 1757 ஜனவரி 23ஆம் தேதி தில்லியை அடைந்தார். பேரரச நகரமானதில்லி 'மீண்டும் கொள்ளையிடப்பட்டது. துரதிர்ஷ்டம் பிடித்த அதன் மக்கள் மீண்டும் சூறையாட்டுக்கு உள்ளாயினர். இமாத்-உல்-முல்க் சரணடைந்தார். படையெடுப்பாளர் அவரை, மன்னித்தார். பின்பு, முகலாயப் பேரர சரிட மிருந்து பஞ்சாப், காஷ்மீர், சிந்து, சிர்ஹிண்ட் மாவட்டம் இவற்றை முறையாகப் பிரித்துக் கொடுக்குமாறு செய்தார். தில்லி யின் தெற்கேயுள்ள ஜாத் நாட்டைக் கொள்ளையிட்ட பிறகு அப்தாலி 1757 ஏப்ரலில் இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்றார். போகும் போது மிகுந்த கொள்ளைப் பொருளுடனும் பல சிறைப்பட்ட வீரர் களுடனும் சென்றார். தம்முடைய மகனை தைமூர்ஷாவை லாகூரின் அரசப்பிரதி நிதியாகவும், திறமை மிக்க ஆப்கானியத் தளபதியான ஜஹான்கானை அவருடைய வஸீராகவும் நியமித்து விட்டுச் சென்றார்.

Koviloor Academy

1757 மே மாதம் முதல் 1758 ஏப்ரல் வரையுள்ள தைமூர்ஷாவின் ஆட்சியின் ஓராண்டுக் காலம் சட்டம் நிலவாத, குழப்பம் மலிந்த காலமாக இருந்தது. சீக்கிய இனத்தவர் தங்களின் தலைவர்களில் ஒருவர் இழிவாக நடத்தப்பட்டதால் சீற்றமடைந்து எல்லாப் பக்கங்களிலும் பொங்கியெழுந்து கிளர்ச்சி செய்தனர். ஜுல்லந்தர் தோஆப்பின் கவர்னரான ஆதினபேக்கான் ஆப்கானியர்களுக்கு எதிராகக்கிளர்ச்சி செய்து, மராத்தியர்களைத் தமக்கு உதவும்படி அழைத்தார். ரகுநாத ராவின் தலைமையின் கீழ் வந்த ஒரு பெரிய மராட்டியப் படை 1758 ஏப்ரலில் பஞ்சாப்பின் மீது படையெடுத்தது. லாகூரைக்கைப்பற்றி, ஆப்கானியர்களை வெளியேற்றியது. ஆனால் மாட்டியர்களின் லாகூர் ஆக்கிரமிப்பு ஆறுமாத காலத்திற்கு மேல் நீடிக்கவில்லை. தைமூர் ஷாவை அவர்கள் அகற்றியதற்காகப் பழிக்குப் பழிவாங்குவதற்காக அகமதுஷா அப்தாலி 1759 அக்டோபரில் ஐந்தாம் முறையாக இந்தியாவின் மீது படையெடுத்து வந்து கடைசியில் பஞ்சாப்பை வென்றார். மராத்தியர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் இன்னும் பலமான மோதல் ஏற்படுவது இன்றியமையாததாய் இருந்தது. ஏனெனில் பெரும்பாலும் அவர்கள் இருவருந்தாம் இந்துஸ்தானத்தில் அரசியல் மேலாண்மைக்காகப் போட்டியிட்டு வந்தனர். இம் மோதல் கி.பி. 1761 ஜனவரி 14ஆம் தேதி பானிப்பட்டுக்களத்தில் நிகழ்ந்தது அகமதுஷா அப்தாலி கி.பி. 1762 ஆம் ஆண்டின் முடிவில் இந்தியாவிலிருந்து வெளியே புறப்பட்டார். இரண்டாம் ஷா ஆலமைப் பேரரசராக மதித்து நடந்து கொள்ளவேண்டும் என்று இந்தியத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டார். நாஜிப்-உத்தௌலாவும், முனீர்-உத்-தௌலாவும் இந்திய அரசாங்கத்தின் சார்பில் அப்தாலிக்கு ஆண்டுதோறும் நாற்பது லட்சம் ரூபாய் கப்பம் செலுத்துவதாக ஒப்புக்கொண்டனர்.

இதற்குள் புத்துயிர் பெற்ற சீக்கியர்கள் காஜா ஆபித் (Khwaja Abid) என்ற லாகூரின் துர்ரானிக் கவர்னரைக் கொன்று நகரைப் பிடித்தனர். இதனால் 1764 மார்ச்சு மாதத்தில் அப்தாலி மீண்டும் லாகூருக்கு வந்தார். எனினும் அவருடைய நாட்டில் உள்நாட்டுக் கலகமும் அவருடைய வீரர்களிடையே கலகமும் ஏற்பட்டமையால் லாகூரில் இரண்டு வாரங்கள் தங்கியபின், அவருடைய நாட்டுக்கே திரும்பிச் செல்ல நேரிட்டது. அகமது ஷா அப்தாலி மீண்டும் 1767-ல் இந்தியாவின்மீது படையெடுத்தார். சீக்கியர்களை நன்கு முறியடித்து வெற்றிபெற முடியவில்லை. உள்நாட்டுத் தொந்தரவுகளால் முக்கியமாக அவருடைய படைகளுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கப் பெறுமல் இருந்தமையால் ஆர்ப்பாட்டஞ் செய்ததால், ‘கடைசியாகத் தோல்வியை உணர்ந்துகொண்டு’ அவர் திரும்பிச் செல்ல நேரிட்டது. அவர் திரும்பிச் சென்றுரோ இல்லையோ அதற்குள் சீக்கியர்கள் மீண்டும் லாகூரையும் மற்ற நாட்

Koviloor Acadamy

டின் திறந்த பகுதிகளையுங் கைப்பற்றினர். அகமது ஷா அப்தாலி 'பெஷாவர், அட்டாக்கின் மேற்குப் பிரதேசம் ஆகியவற்றின்மீது அதிகாரம் வைத்துக்கொண்டு மஞ்சா (Manjha) மாவட்டங்களையும், லாகூர் உள்பட மத்திய பஞ்சாப்பையும் சிக்கியர்களுக்கு விட்டு விட்டார். ஆனால், சிந்து சாகரும், மேற்குப் பஞ்சாப்பில் இருந்த ஜெக்தோஆப்பும் சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்தன. கடைசி யில் அவை அப்தாலியின் தகுதியற்ற சந்ததியினரின் காலத்தில் சிக்கியர்களின் உரிமையாகவே ஆகிவிட்டன.

அகமதுஷா அப்தாலி அவசரமாக இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்ற போதிலும் அவருடைய படையெடுப்பு இந்நாட்டின் வரலாற்றைப் பல விதங்களிலும் பாதித்தது. முதலாவதாக அது சிரழிந்து கொண்டிருந்த முகலாயப் பேரரசின் சீர்குலைவை விரைவு படுத்தியது. இரண்டாவதாக அது மிக விரைவாகப் பரந்துகொண்டிருந்த மராட்டிய பேரரசுக்குப் பெரிய தடையை ஏற்படுத்தியது. மூன்றுவதாக, அது சிக்கிய சக்தியின் எழுச்சிக்கு மறைமுகமாக உதவியது. இந்தியாவில் அவருடைய வாழ்க்கை முடிவில் சிக்கியர்களின் சுதந்தரப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. கடைசியாக அகமதுஷா அப்தாலி காலத்திலும், அவருடைய மரணத்திற்குப் பின் சிறிது காலம் வரையிலும் ஆப்கானியப் படையெடுப்பின் தொந்தரவு ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கப்பெனியைப் பெருங்கவலைக்குள்ளாக்கியது.

4. புதிய முஸ்லீம் நாடுகளின் தோற்றம்

தில்லியின் மத்திய ஆட்சியதிகாரம் சீர்குலைந்ததும் தவிர்க்க முடியாத விளைவாகிய பிரிந்து செல்லும் மனப்பான்மை பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் காணப்பட்டது. பெயர் அளவிற்கு மட்டும் தில்லியில் பேரரசராயிருந்தவருக்கு அடங்காமல் செயல் முறையில் மாகாண அரசப் பிரதிநிதிகள் தங்களைச் சுதந்தர ஆட்சியாளர்களாக ஆக்கிக்கொண்டனர். பெயரளவில் அதிகாரம்படைத்த பேரரசருக்குக் கொள்கையளவில் கீழ்ப்படிவதாக நடித்தனர். அவர்களுள் மிகவும் முக்கியமானவர்கள் தக்கணம், ஔத், வங்காளம் ஆகியவற்றின் சுபேதார்கள் ஆவர்.

அ. தக்கணம்

நிஸாம்-உல்-முல்க் என்ற பெயரால் நன்கு அறியப்பட்ட மீர் கமார்-உத்தீன் சின் கிலிக் கானின் கீழ்த் தக்கண சுபா சுதந்தரமடைந்தது. அவருடைய பாட்டனுர் புக்காராவைச் சேர்ந்த காஜா ஆபித் ஷேய்க்-உல்-இஸ்லாம் என்பவர் பதினேழாம் நூற்றுண்டின்

Koviloor Academy

மத்தியில் இந்தியாவில் குடியேறி அவுரங்கசீப்பின் ஊழியத்தில் புகுந்தார். நிஸாமின் தந்தையான காஸி-உத்தீன் பெரோஸ் ஜங்க் கூட அவுரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார். முகலாயப் பேரரசின் ஊழியத்தில் பல பதவிகளைப் பெற்றுப் புகமேணியில் ஏறினார். மீர் கமார் உத்தீனே அவருடைய பதின்மூன்றும் ஊழிய ஆண்டில் ஒரு சிறு படைத்தலைவரானார்; விரைவில் பதவி உயர்வு கிடைக்கப் பெற்றார். சீன் கிலீச்கான் என்ற பட்டப் பெயரும் அவருக்குக் கிடைத்தது. அவுரங்கசீப் மரணம் அடைந்தபோது சீன் கிலிக்கான் பீஜப்பூரில் இருந்தார்; பேரரசரின் புதல்வர்களிடையே அரசுரிமைப் போர் நடந்துபோது அவர் எவர் பக்கமும் சேராமல் பொது நிலையை அனுசரித்தார். பஹாதுர் ஷா அவரைத் தக்கணத்திலிருந்து அகற்றி ஔத்தின் கவர்னராக ஆக்கினார். அவர் சில காலம் பொது ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். ஆனால் பஹாதுர் ஷாவின் ஆட்சிக்கால முடிவில் காஸி உத்தீன் பெரோஸ் ஜங் என்ற பட்டப் பெயருடன் மீண்டும் பொது ஊழியத்தில் புகுந்தார். பாரூக்ஷியார் அவரைத் தக்கணத்துக் கவர்னராக்கி (1713-ல்) அவர் தமக்காக உழைத்தமைக்காக கான் கானன், நிஸாம்-உல்-முல்க் பஹாதுர் பத்ஜங் என்ற பட்டப் பெயர்களை அளித்தார். நிஸாம்-உல்-முல்கின் அரசப் பிரதிநிதி ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அவர் தக்கணத்தில் மராட்டியர்களின் வளர்ந்து வரும் சக்தியை மேலோங்க வொட்டாமல் தடுத்து வந்தார். ஆனால் தில்லி அரசவையில் நேர்ந்த கட்சிப் பூசல்களினால் அவர் தக்கணத்து அரசப் பிரதிநிதிப் பதவியை இழக்க நேர்ந்தது. அது பிறகு சய்யிது ஹுஸேன் ஆலியிடம் அளிக்கப்பட்டது. நிஸாம்-உல்-முல்க் முராதாபாத்துக்கு மாற்றப்பட்டார். அதன் பின் அவரைப் பீஹாருக்கு மாற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் புதிய மாகாணத்தில் அவர் பதவி ஏற்றுக் கொள்ளுமுன்பு பாருக்ஷியாரின் ஆட்சி முடிவுற்றது; அதனால் அவர் மாளவ அரசாங்கத்துக்கு மாற்றப்பட்டார். மாளவத்தில்தான் நிஸாம்-உல்-முல்க் தம் எதிர்காலப் பெருமைக்கு அடிக்கல் நாட்ட முடிந்தது. அவருடைய நடவடிக்கைகள் சய்யித்துக்களின் சந்தேகத்தைக் கிளப்பியது. அதனால் அவர்கள் முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியை மீறி மீண்டும் அவருடைய மாற்றுதலுக்கு ஆணை அனுப்பினர். ஆனால் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாகப் படைக்கலந்தாங்குவதன் மூலம் தம் நிலையைக் காத்துக் கொள்ள அவர் தயாராய் இருந்தார். அவர் தில்வார் ஆலிகானையும், அலீம் ஆலிகானையும் தோற்கடித்துக் கொன்றார்; ஹுஸேன் ஆலி அவருக்கு எதிராகப் படையெடுத்து வரத் தயாராய் இருந்தபோது குத்திக் கொல்லப்பட்டார். சய்யிதுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர் மீண்டும் 1720ஆம் ஆண்டின் முடிவில் தக்கணத்தின் தலைவரானார். அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரான வஸீர் அமீர்கான் 1721-ல்

Koviloor Academy

இறந்தபோது, நிஸாம்-உல்முல்க் தில்லிக்கு அழைக்கப்பட்டு 1722 பிப்ரவரியில் வஸிர்ப் பதவியில் அமர்த்தப்பட்டார். ஆனால் தில்லி அரசவையின் மோசமான சூழ்நிலையில் அவர் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. அங்கே முகம்மது ஷாவின் அற்பபுத்தியுள்ள அரசவையினர் அவருடைய ஆலோசனையை ஏற்கமறுத்து அவருக்கு எதிராகப் பேரரசரின் மனம் மாறும்படி நயவஞ்சகமாகக் கூறினர். அதனால் அவர் கி.பி. 1723 டிசம்பரின் மூன்றும் வாரத்தில் பேரரசரின் அனுமதியில்லாமல் தக்கணத்திற்குச் சென்றார். அவருடைய பகைவர்கள் எதையும் எளிதில் நம்பக்கூடிய பேரரசரிடம் அவர் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார் என்று நம்பும்படி செய்து, ஹைதராபாத்தின் கவர்னரான முபாரிஸ் கானுக்கு அவரை எதிர்த்துச் சண்டை செய்யும் படியும், போரில் வெற்றி பெற்றால் தக்கணத்து அரசப் பிரதி நிதியாக ஆக்குவதாக உறுதிகூறியும், மறைவாக அறிக்கை அனுப்பும்படி தூண்டினர். ஆனால் நிஸாம்-உல்-முல்க் 1724 அக்டோபர் பதினோராம் நாள் பிராரில் சக்கர் கேதா (Sakhar Kheda) என்ற இடத்தில் முபாரிஸ்கானைத் தோற்கடித்துக் கொன்றதுடன், தக்கணத்தின் அரசப் பிரதிநிதியாக அறிவிக்கும்படியும், ஆஸப்-ஜா என்ற பட்டத்தைத் தமக்குக் கொடுக்கும்படியும் அப்பாவியான தில்லிப் பேரரசரை மறைமுகமாக வற்புறுத்தினார். ஆஸப்-ஜா என்ற அவருடைய சந்ததியினர் இன்னும் அப்பட்டத்தை வைத்துக் கொண்டுள்ளனர். ‘இந்தச் சமயத்திலிருந்து நிஸாம்-உல்-முல்க்கின் உண்மையான சுதந்தர ஆட்சியும், இக்கால ஹைதராபாத் மாநிலத்தின் கால்கோளும் தொடங்குகின்றன என்று கொள்ளலாம்.’ நிஸாம்-உல்-முல்க்கின் மிகச் சிறந்த தக்கண ஆட்சி முறை காபி கானால் சிறப்பாகப் புகழ்ந்து பேசப்படுகிறது. குலாம் ஹுஸேன் கூட, ‘அந்தப் பரந்த நிலப்பரப்பை (தக்கண சுபாவை) அவர் தனி அதிகாரத்துடன் முப்பத்தேழு ஆண்டுகளாக ஆட்சி செய்தார்’ என்று கூறுகிறார். அவர் 1748 மே 21-ல் தம் முது பெரும் வயதில்–தம் தொண்ணூற்றோராவது ஆண்டில்—உயிர் துறந்தார். அப்போது தக்காண அரசாங்கத்துச் சிம்மாசனச் சண்டைகள் சுபாவின் அரசியலில் ஐரோப்பிய வாணிகக் கம்பெனிகள் தீவிரமாக ஈடுபட வாய்ப்புகள் அளித்தன.

ஆ. அவுத்து (Oudh)

அவுத்து சுபா அப்போது தற்கால அவுத்தும் அதன் கிழக்கே வாரணாசியும், அதன் மேற்கே வாரணாசியின் ஒரு பகுதி நிலப்பரப்பும், அலகாபாத்து, கான்பூர் இவற்றிற்கு அருகிலிருந்த சில மாவட்டங்களும் உடையதாயிருந்தது. அவுத்து இராச்சியத்தினை நிறுவியவர் குரேசானிலிருந்து வந்து குடியேறிய சாதத் கானவார் (Saadat Khan). 1724-ல் அவுத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த

Koviloor Academy

அவர் விரைவில் அதிகாரத்திலும் புகழிலும் உயர்ந்தார்; நாதிர் ஷா வின் படையெடுப்பின்போது தில்லிக்கு அழைக்கப்பட்டார்; ஆனால் அதே ஆண்டில் அவர் தற்கொலை செய்து கொண்டார். அவுத்தின் அடுத்த கவர்னரான சப்தர் ஜங், சாதத் கானின் மருமகன் ஆவார். 1748-ல் தில்லிப் பேரரசின் வஸீராக நியமிக்கப்பட்ட சப்தர் ஜங், ஆஸப் ஜா நிஜாம்-உல்-முல்க்கின் மகனும் பேரனும் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டே வந்திருப்பினும், 1754-ல் மரணம் அடையும் காலத்துக்குச் சிறிது முன்புவரை அக்கால இந்திய வரலாற்றில் முக்கிய பங்கினை ஏற்றிருந்தார்; அவருக்குப் பிறகு அவருடைய மகன் ஷுஜா-உத்-தௌலா அவுத் அரசாங்கத்தின் தலைவரானார். அவரும் பேரரசின் வஸீரானார்; கி.பி. 1775-ல் இறக்கும்வரை வட இந்திய வரலாற்றின் முக்கியமான ஆட்களில் ஒருவராய் இருந்தார்.

இ. வங்காள சுபா

அவுரங்க சீப்பினால் 1705-ல் வங்காள கவர்னராக நியமிக்கப் பட்ட முர்ஷித் குலி ஜாபர் கான் சில சமயம் உள்நாட்டு ஜமீன்தார் களிடமிருந்து வரி வசூல் செய்யக் கடுமையான முறைகளை மேற் கொண்டபோதும், வலிமையும் ஆற்றலும் வாய்ந்த ஓர் ஆட்சியாள ராகவே விளங்கினார். அவர் வங்காளத் தலை நகரை டாக்காவி லிருந்து முர்ஷிதாபாத்துக்கு மாற்றினார். தம் மாகாணத்தின் பொரு ளாதார நலங்களை நன்கு உணர்ந்திருந்த அவர் ஆங்கிலேயக் கிழக் கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள் தஸ்தக்கைப் புறக்கணிப்பதைத் தடுப்பதற்காக முயற்சிகளைச் செய்தார்; இந்திய வாணிகர்கள் எவ் வளவு சுங்கம் கொடுத்தார்களோ, அதே அளவு அவர்களிடமிருந்தும் வசூல் செய்ய விரும்பினார். கி.பி. 1727-ல் அவர் இறந்த பிறகு, அவருடைய மருமகன் ஷுஜாவுத்தீன் கான் அவருக்குப் பிறகு வங்காள அரசாங்கத்தின் தலைவர் ஆனார். ஷுஜாவுத்தீனின் ஆட்சிக் காலத்தில்தான் தெலியாகர்ஹி (Teliagarhi) (கிழக்கிந்திய ரயில்வே லூப்லைனில் இருந்த ஸாஹேப்கஞ்சுக்கருகில்) வரை கிழக்கு எல்லை பரந்திருந்த பீஹார் சுபா கி.பி. 1733-ல் வங்காளத்துடன் இணைக்கப் பட்டது; ஆலிவர்டி அதனுடைய நாயிப் நாஸிமாக அனுப்பப் பட்டார். ஷுஜாவுத்தீன் 1739-ல் இறந்தார். அதன் பின் அவரு டைய மகன் சர்பராஸ் கான் வங்காள நவாப் ஆனார். ஆனால் புதிய நவாப்பின் ஆட்சி நீண்டகாலம் நடக்கும் விதி இல்லை. ஆலிவர்டி, அவருடைய சகோதரர் ஹாஜி அஹ்மது, ராய் ராயன் ஆலம் சந்த், ஜகத் சேத் பதே சந்த் ஆகியோர் அவருக்கு எதிராகச் சதி செய்தனர். ஆலிவர்டி பீஹாரிலிருந்து படையுடன் சென்று கி.பி. 1740 ஏப்ரல் 10ஆம் தேதி ராஜ்மஹாலுக்கு அருகிலுள்ள கிரியா என்ற இடத் தில் சர்பராஸைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு வங்காளத்தின் மஸ்னதைக் (Masnad) கைப்பற்றினார். விரும்பத்தகாத முறைகள்

மூலம் அவர் தம் புதிய அதிகாரத்துக்குப் பேரரசின் உறுதிப் பாட்டைப் பெற்ருர். பின்பு மாகாணத்தைச் சுதந்தரமான முறையில் ஆட்சி செய்யத் தொடங்கினுர். துன்பச் சூழ்நிலையில் வளர்ந்து பயிற்சி பெற்ற ஆலிவர்டி சில நல்ல குணங்களையும் வளர்த்துக் கொண்டிருந்தார். அவை அவரை ஒரு திறமையான ஆட்சியாளராக ஆவதற்கு உதவின. குலாம் ஹுஸேன், 'அறிவுமிக்கவராயும், கவனமிக்கவராயும், வீரமிக்க போர் வீரராயும் இருந்த அவரிடம் காணப்படாத தகுதிகள் இல்லை' என்று கூறுகிருர். ஐரோப்பியர்கள் பற்றிய அவருடைய கொள்கை கண்டிப்பானதாக, ஆனுல் ஒரு தலைச் சார்பற்றதாக இருந்தது. தவிர்க்க முடியாத சில சூழ்நிலைகளில் மட்டுந்தான், அவர்களிடமிருந்து நன்கொடைகளைப் பெற்ருர். ஆனுல் பலாத்காரத்தினுல் கைப்பற்றிய மஸ்னதை அமைதியாக அனுபவிப்பதற்கு விதி அவருக்கு ஒய்வைக் கொடுக்கவில்லை. அவருடைய ஆட்சியின் பெரும்பாலான காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் வங்காளத்தின் மீது மராட்டியர்கள் படையெடுத்து வந்தது அவருக்குப் பெருங் கவலைதரத்தக்கதாயிருந்தது. அவருடைய ஆப்கானியத் தளபதிகள் பீஹாரிலுள்ள தார்பங்காத் தோழர்களுடன் உறவுகொண்டு செய்த கிளர்ச்சிகள் அவருடைய அதிகாரத்திற்குப் பெரும் பங்கம் விளைவிப்பனவாயிருந்தன. காஸிம் பஜாருக்கு அருகிலுள்ள மங்காராவில் மராத்தியர்களின் தளபதிகளுள் ஒருவரான பாங்கர் பண்டிட்டைக் கொலை செய்வித்தும் அவர்களை எதிர்த்துப் போரிட முடியாத வராகி, ஆலிவர்டி கி.பி. 1751 மே மாதம் அல்லது ஜூன் மாதத்தில் அவர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி சௌத் வரியாக அவர்களுக்கு ஆண்டு தோறும் பன்னிரண்டு லட்சம் ரூபாய் கப்பமாகக் கட்டி விடுவதாகவும், ஒரிஸ்ஸாவின் ஒரு பகுதியிலிருந்து கிடைக்கும் வருவாயினைப் பிரித்துக் கொடுத்து விடுவதாகவும் ஒப்புக்கொண்டார். இது கடைசியில் மராத்தியர்கள் ஒரிஸ்ஸாவின் மீது மேலாண்மை செலுத்துவதற்கு வழி வகுத்து விட்டது. சுமார் கி. பி. 1803 வரை ஆங்கிலேயர்கள் அவர்களுடைய அந்த மேலாண்மையை ஒழித்துக் கட்ட முடியாமல் இருந்தனர். ஆலிவர்டி கி.பி. 1756-ல் உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவரால் பட்டத்துக்குரியவராக நியமிக்கப்பட்ட அவருடைய செல்லப் பேரரான நவாப் சிராஜ்-உத்-தௌலா என்று நாடு முழுவதும் அறியப்பட்ட மிர்ஸா முகமதுவுக்கு வங்காளத்தின் மஸ்னத் உரித்தாயிற்று. சிராஜ்-உத்-தௌலாவின ஓர் ஆண்டு இரண்டு மாத கால ஆட்சி வங்காளவரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் ஒரு திருப்பு மையத்தை ஏற்படுத்திவிட்டது.

Koviloor Acadamy

5. இந்துக்களின் அரசியல் புத்துயிர்ப்பு

பதினெட்டாம் நூற்றாண்டில் இந்திய வரலாற்றின் ஒரு சிறப்பான கூறு இந்துக்களின் புத்துயிர்ப்பாகும். எனினும், அப்புத்துயிர்ப்பு அகில இந்திய அடிப்படையில் தேசிய, மத அல்லது பண்பாட்டு மறு மலர்ச்சியின் உணர்ச்சியால் விளையவில்லை. ஆனால் ராஜபுத்திரர்கள், சீக்கியர்கள், ஜாத்துகள், மராட்டியர்கள் போன்ற பல் வேறு இந்து, அரை-இந்து அரசுகள் முகலாயப் பேரரசு வீழ்ச்சியின்மீது தங்கள் அரசியல் மேலாண்மையை முறையே நிறுவும் தனித்தனி முயற்சி களினால் விளைந்த ஒன்றாகும்.

அ. ராஜபுத்திரர்கள்

ராஜபுத்திரர்களின் முதன்மையான ராச்சியங்களான மேவார் (உதெய்பூர்), மார்வார் (ஜோத்பூர்), ஆம்பர் (ஜெய்ப்பூர்), போன்றவை பேரரசிடம் கொண்டிருந்த அனுதாபம் அவுரங்கசீப்பினால் மாற்றப் பட்டுவிட்டமையின், அப்பேரரசர் இறந்த பிறகு பேரரசுக்கு உட்பட் டிருப்பதினின்றும் விடுதலை பெற அவை முயன்றன. முதலில் அவை பகதூர் ஷாவினால் அடிபணியும்படி செய்யப்பட்டன. ஆனால் மிக விரைவில் ஜோத்பூரைச் சார்ந்த அஜித்சிங்கும், ஆம்பர் நாட்டு இரண் டாம் ஜெயசிங்கும், துர்காதாஸ் ராத்தோரும் 1708 ஏப்ரல் 30ஆம் தேதி பேரரசரின் பாசறையினின்றும் புறப்பட்டுச் சென்று அவருக் கெதிராக ஒரு கூட்டுறவுக் கழகத்தை உருவாக்கினர். சிர்ஹிண்டின் வடக்கே சீக்கியர்கள் எழுச்சி பெற்று வந்தமையால் பகதூர் ஷா இணக்க முறைகளால் ராஜபுத்திரர்களைச் சமாதானப் படுத்த முயன்றார். ஆனால் அவருடைய இறப்புக்குப்பின் ஏற்பட்ட குழப்பக் காலத்தில் அஜித்சிங்கு பேரரசுக்கு உட்பட்ட பகுதிகளின் மீது படை யெடுத்தார். மார்வார்த்தலைவரை அடக்குவதற்காக சய்யிது ஹுஸேன் ஆலி அனுப்பப்பட்டார். ஆனால் அக்காலத்து அரசவை அரசியல் நிலை பேரரசரும், சய்யிதுக்கு எதிரான குழுவும் 'எவ்விதத்திலாவது ஹுஸேன் ஆலியைக் கொன்று விடுமாறு' ராஜபுத்திர ஆட்சியாளரை ரகசியமாகத் தூண்டுமளவுக்கு மோசமாக இருந்தது. 'ஹுஸேன் ஆலியைக் கொன்றால் பக்ஷியின் முழுச் சொத்தும் செல்வமும் ராஜ புத்திர ஆட்சியாளர்க்கே உரிமையாகும் என்றும் மேலும் மற்றப் பரிசு களும் கிடைக்கும்' என்றும் அவர்கள் கூறினர். எனினும் அஜித் சிங்கு இந்த அறிவுரைகளின்படி நடக்கவில்லை. ஒரு சண்டை கூட இல்லாமல் ஹுஸேன் ஆலியிடம் நட்புக்கொண்டார்; பேரரசருக்குத் தம்முடைய மகளிருள் ஒருத்தியை மணஞ்செய்து கொடுப்பதாகக் கூறி அவரிடம் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். திரு மணம் அடுத்த ஆண்டு நடந்தேறியது.

Koviloor Academy

அதிலிருந்து ஜோத்பூர், ஜெயப்பூர்த் தலைவர்கள் தில்லி அரசியலில் முக்கியமான அங்கம் வகித்தனர்; 'தக்க சமயத்தில் தனித்திருந்தும் அல்லது சேர்ந்திருக்கும் பேரரசின் ஒரு பெரும்பகுதியைத் தங்களுக்கு உரிமையாகச் சேர்த்துக் கொண்டனர்.' சய்யிதுகள் அவர்களைத் தங்களுடைய கட்சியில் சேர்த்துக் கொள்ள முயன்றனர். அவர்கள் தங்கள் சொந்த இராச்சியப் பகுதிகளை முழு அதிகாரத்துடன் ஆண்டு கொண்டே வேறு சில உத்தியோகங்கள் வகிக்குமாறு செய்யப்பட்டனர். அஜித்சிங்கு 1721 வரை ஆஜ்மீர், குஜராத் இவற்றின் கவர்னராயிருந்தார். முகம்மது ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஜெயப்பூரைச் சேர்ந்த இரண்டாம் ஜெயசிங்கு சூரத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். சய்யிதுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆக்ரா அரசாங்கத்தையும் அவர் பெற்றார். 'இவ்வாறு இந்தத் திறந்த எல்லைப் பகுதியில் முகலாயர்களின் மிகவும் நம்பிக்கைக்குரியரல்லாத எல்லைக் காப்பாளர்களான இந்த இரு அரசர்கள் கையிலும் டில்லியின் தெற்கே அறுபது மைல் தூரத்திலிருந்து சூரத்தின் கடற்கரை வரையிலுமுள்ள பகுதி இருந்தது.' அஜித் சிங்கு மேற்கு இந்தியாவில் இருந்த மராட்டியர்களின் நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக உதவி செய்தார்; அதனால் குஜராத் அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட்டார். அவர் தம்முடைய மகனை பக்தி சிங்கின் கையினாலேயே அவலமும் மறைபொருளும் நிறைந்த முறையில் கொலை செய்யப்பட்டார். ராஜபுத்திரர்களின் புத்துயிர்ப்புத் தாற்காலிகமானதாகவே இருந்தது. உள்நாட்டுக் குழப்பத்தின் வருந்தத்தக்க நிலையும், அயல் நாட்டுச் சூரண்டலும், அவர்கள் நாட்டுக்கு விரைவில் வர விருந்தன.

ஆ. சீக்கியர்கள்

1708-ல் குரு கோவிந்த் ஒரு ஆப்கானியனால் கொல்லப்பட்டார். அக் கொலைக்குப் பின்பு *சீக்கியர்கள்* பாந்தா என்பவரைத் தங்கள் தலைவராக்கினர். அவர் வடக்கு நோக்கிச் சென்று *சீக்கியர்களில்* பெரும் எண்ணிக்கையுடையோரை ஒன்று கூட்டிக்கொண்டு, குரு கோவிந்தின் குழந்தையைக் கொன்றவனும், சிர்ஹிண்டின் பௌஜ்தாருமான வஸிர்கானைக் கொன்று சிர்ஹிண்டைக் கைப்பற்றினார். அடுத்து சட்லஜ், ஜமுனா நதிகளுக்கிடையேயுள்ள நிலப் பகுதி அவருடைய அதிகாரத்தின் கீழ் வந்தது. அவர் நாஹன், சதௌரா என்ற இடங்களுக்கு மத்தியிலிருந்த முகலிஸ்பூரில் (Mukhlispur) லோஹார்க் கோட்டை (குருதியும் இரும்பும் கலந்த கோட்டை) ஒன்றை நிறுவினார். அங்கே அவர் 'அரசாட்சி செய்யும் ஆட்சியாளரைப் போல் நினைத்துக் கொண்டு' தம் சொந்தப் பெயரில் நாணயங்களை அச்சிட்டார். பேரரசர் அவருக்கு எதிராகப் படை யெடுத்துச் சென்று லோஹார்க் கோட்டையை முற்றுகை யிட்டார். அதனால், அவர்

Koviloor Acadamy

தம்முடைய ஆதரவாளர்கள் பலருடன் லாகூரின் வடக்கே இருந்த மலைகளுக்கு ஓடிச் சென்றார். எனினும் பகதூர் ஷா இறந்த பிறகு பாந்தா, வெளிப்பட்டு, சதௌரா நகரைக் கைப்பற்றி, லோஹார்க் கோட்டையைத் திரும்பப் பெற்றார். மீண்டும் சிர்ஹிண்ட் மாகாணத்தைக் கொள்ளையிட்டார். ஆனால் 1715-ல் அவர் குர்தாஸ்பூர்க் கோட்டையில் முற்றுகையிடப்பட்டார். சீக்கியர்கள் ' தங்களுக்குள் தியாகஞ் செய்து உயிர் விடுவதற்காக, போட்டி போட்டுக் கொண்டு ' தீரத்துடன் போர் செய்தனர். ' அவர்களுள் பலர் நீண்ட கடுமையான எதிர்ப்புக்குப் பின் சிறைபிடிக்கப்பட்டனர்.' பாந்தாவும் அவருடைய ஆதரவாளர்களும் தில்லிக்கு அனுப்பப்பட்டனர். அங்கே அவர்கள் இரக்கமின்றி நடத்தப்பட்டனர். ' ஒவ்வொரு சீக்கியத் தலைவருக்கும் ஒவ்வொரு பரிசு கொடுக்கப்பட்டது.' ஒரு பிரபு இகழ்ந்துரைக்கும் போது பாந்தா கூறினார். ' தீயோருக்குத் தண்டனை கொடுப்பதற்காகக் கடவுளின் கையில் ஒரு சவுக்காக இருந்தேன். இப்போது சர்வ வல்லமையுள்ள இறைவனுக்கு எதிராகச் செய்த குற்றங்களின் பலனை அனுபவிக்கிறேன்.' அவருடைய கண்களுக்கு முன்னரே அவருடைய சொந்த மகன் கொல்லப்பட்டார். அவரும் 'யானைகளின் பாதங்களில் மிதியுண்ணச் செய்து சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இவ்வாறு 1716-ல் சீக்கிய நாட்டின் வளமான பேறுகள் எல்லாம் மிக விரைவில் நலிந்துபோயின''

ஆனால் சீக்கியர்களின் படைத்துறை வலிமை முற்றிலும் அழிக்கப் பட முடியாததாகவே இருந்தது. நானக், கோவிந்த் இவர்களின் கொள்கைகள் ' மக்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. உழவரும் இயந்திரத் தொழிலாளிகளும் மறைமுகமாகத் தங்கள் நம்பிக்கைகளை வளர்த்தனர். மிகவும் அதிகமான ஆர்வம் படைத்தவர்கள் மிகுதியாகப் பழிக்குப் பழி வாங்கி விரைவில் வெற்றியடைய வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.' சீக்கியர்கள் படிப்படியாகத் தங்களுக்குள் ஒழுங்கு முறைகளை ஏற்படுத்திக்கொண்டனர். பைஸுல்லாப்பூர் (Fyzullapur) வாசியான காபூர் சிங்கு ஒரு அமைப்பைத் தொடங்கினார். அது பிற்காலத்தில் புகழ்பெற்ற தால் கால்சா (Dal Khalsa) அல்லது சீக்கியர்களின் மதவழிபாட்டு முறையாக மாறியது. நாதிர் ஷாவின் படையெடுப்பை அடுத்து ஏற்பட்ட குழப்பங்களும் அமைதிக் குலைவுகளும் சீக்கியர்களால் தங்கள் பொருளாதார வளத்தையும், படைபலத்தையும் பெருக்கிக்கொள்ளப் பயன்படுத்தப்பட்டன. ' எந்தச் சூழ்நிலையிலும் அடிப்படுத்த முடியாத சீக்கியர்கள் இப்போது இன்னும் அரிதானவர்களாயினர்.' அவர்கள் ராவி நதிக்கரையில் தலேவால் என்ற இடத்தில் ஒரு கோட்டையைக் கட்டினர். சுற்றிலுமுள்ள பகுதிகளைக் கொள்ளை யடித்துக்கொண்டே லாகூரின் எல்லையருகே சென்றுவிட்டனர். அஹ்மது ஷா அப்தாலி

Koviloor Academy

யின் படையெடுப்பும் சிக்கியர்களின் வலிமை ஓங்குவதற்குப் பெருமளவு உதவின. 1752-க்குப் பிறகு அவர்கள் சில தோல்விகளைக் கண்டாலும் கடைசியில் முழு வெற்றியே அடைந்தனர். குறிப்பாக மூன்றும் பானிப்பட்டு யுத்தத்திற்கும் பிறகு நாட்டின் குழப்பமான அரசியல் நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தங்களை ஒழுங்குற அமைத்துக்கொண்டு போதுமான அளவு பலப்படுத்திக் கொண்டனர். அப்தாலி திரும்பி வருபோது அவருக்குப் பெருந் தொல்லைகளைக் கொடுத்தனர். அடுத்த படையெடுப்புகளின் போதும் அப்தாலியை எதிர்த்தனர். 1767-ல் அவருடைய படையெடுப்புக்குப் பின்பு திறந்த நாட்டை முழுவதையும் மீண்டும் வசப்படுத்திக் கொண்டனர்.

இ. ஜாத்துகள்

அவுரங்கசீப்பின் ஆட்சிகால முடிவில், ஜாத்துகளின் முதல் கொள்ளைக் கூட்டத்தினர் ராஜாராம், பஜ்ஜா (Bhajja), சூராமன் (Churaman) போன்ற தனித்தனிக் கிராமத்தலைவர்களின்கீழ் தில்லி, ஆக்ரா இவற்றைச் சுற்றிக்கொள்ளை யடித்துவந்து தங்கள் சக்தியைப் பெருக்கிக்கொண்டனர். ஆனால் அவர்களால் அடையக்கூடிய சாதனைகள் யாவும் 1721-ல் இரண்டாம் சவாய் ஜெயசிங்கு, தூன் (Thun) என்ற இடத்திலிருந்து சூராமனின் கோட்டையைப் பிடித்துக்கொண்டதாலும், சூராமன் தற்கொலை செய்துகொண்டதாலும் நிறைவேறுமல் போயின. சர் ஜே. என். சர்க்கார் எழுதுகிறார்: ‘ பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் ஜாத் அரசு என்று ஒன்றும் ஏற்படவில்லை. அரசியலால் ஒன்றுபட்ட ஜாத் நாடு ஏற்படவில்லை; மற்றக் கிராமத் தலைவர்களுக்கு மேலான ஜாத் அரசன் என்று தெளிவாக அறியப்படுபவன் அல்லது சமமான அந்தஸ்துடையோரில் முதலானவன் என்ற நிலையை எய்தியவன் யாரும் இல்லை. ஆனால் கொள்ளைத் தலைவன்தான் இருந்தான். சமுதாயத்தில் அவனைப் போன்ற மதிப்புள்ளவர்கள் அவனுடைய துணிகரச் செயலிலும் கொள்ளையிலும் பங்கு கொள்வதற்காக அவனுடைய கொடியின் கீழ் ஒன்று கூடினர். ஆனால் ஜாத்துகளின் சிதறியிருந்த கூறுகள் எல்லாம் சூராமனின் சகோதரரான பாவோ சிங்கின் (Bhao Singh) மகனை பதன்சிங்கின் மேலான அடக்கும் சக்தியின் பிடியில் ஒன்றுக்கப்பட்டன. பெரும் இடர்ப்பாடுகளுக்கு இடையிலும் பதன்சிங்கு சில சக்திவாய்ந்த ஜாத் குடும்பங்களில் திருமண உறவு கொண்டதன் மூலம் இணையற்ற தந்திரம், சலியாத பொறுமை, வழி துறைகளைத் தேர்ந்து பயன்படுத்துவதில் அறிவு மிக்க திறமை இவற்றின் மூலமும், பெரிதும் ஆக்ரா, முத்ரா மாவட்டங்கள் இவை முழுவதிலும் உள்ள தம் நாட்டுப் பகுதியில் அதிகாரத்தை நிலைநாட்டினர். 1756 ஜூன் மாதம் 7ஆம் தேதி பதன்சிங்கு இறந்தார். அவருக்குப் பின் வந்த அவருடைய தத்துப்

Koviloor Academy

பிள்ளையான சூராஜ்மால் அவருடைய அரசியல் அறிவு, ஒருபடித்தான புத்தி, தெளிவான காட்சி இவற்ருல், 'ஜாத் இனத்தின் பிளேட்டோ' (Plato) என்று அக்கால வரலாற்ருசிரியர்களாலும் ஜாத் மக்களில் யுலிஸ்ஸஸ் (Ulysses) என்று இக்கால ஆசிரியர் ஒருவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளார். அவர் ஆக்ரா, தோல்பூர் (Dholpur), மெய்ன் புரி, ஹாத்ராஸ், ஆலிகார், எடாவா, மீரட், ரோதக், பாருக்நகர், மேவாத், ரீவாரி, ரூர்காவோன், முத்ரா, ஆகிய மாவட்டங்களின் மீது பாரத்பூர் இராச்சியத்தின் அதிகாரத்தைப் பரப்பினர். ஜாத்துகள் பெற்றெடுத்த மிகப்பெரும் போர்வீரரும், மிகச் சிறந்த அரசியல் வாதியுமான சூராஜ்மால் 1763 டிசம்பர் 25ஆம்தேதி இறந்தார். அவர் காலத்தில் ஜாத் இனத்தின் புகழ் உச்சநிலையை அடைந்திருந்தது. அவருக்குப்பிறகு அது தாழ்வுறுவது உறுதியாயிற்று.

ஈ. மராட்டியர்கள்

மராட்டியர்கள் இந்து அரசுகளில் மிகவும் வன்மையுடையவர்களாவர். முகலாயப் பேரரசு சிதறுண்டபோது மேலாண்மைக்காக இவர்கள் முயன்றனர். உண்மையில் அவுரங்கசீப் இறந்தவுடனே ஒரு பேரரசை நிறுவுவதில் எந்தவிதமான உறுதியான தீர்மானமும் மேற்கொள்ள முடியாதவர்களாய் இவர்கள் இருந்தனர். ஆனல், உள்நாட்டுப் போர்களில் தங்களைச் சில ஆண்டுகளாக முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டிருந்தனர். ஆஸம் ஷா, ஜுல்பிகார்கானின் ஆலோசனையின் பேரில், 1707-ல் ஸாஹு என்று நன்கு அறியப்பட்ட இரண்டாம் சிவாஜியை விடுதலை செய்தார். ஸாஹு அவருடைய இராச்சியத்துக்குத் திரும்பிச்சென்றதும் மராட்டியர்களுக்குள் கட்டாயம் பிரிவு ஏற்படும் என்றும் அதனல் தக்கணத்தில் தலைமைப் படை இல்லாத போது பேரரசுக்குரிய பகுதிகளை அவர்கள் கொள்ளையடிக்க முடியாமல் போகும் என்றும் ஜுல்பிகார்கான் குறிப்பிட்டார். அவர் எதிர்பார்த்த படியே நடந்தது. ஸாஹுவின் உரிமைகள் தாராபாயினல் வன்மையாக எதிர்க்கப்பட்டன; அதனல் நீண்டதொரு உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. ஸாஹு கடைசியில் சிறப்பாக கொங்கணத்துச் சித்பாவன பிராம்மணரான பாலாஜி விஸ்வநாத் என்பவரின் ஆலோசனை, உதவி இவற்றைப் பெற்று வெற்றியடைந்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்த பாலாஜி விஸ்வநாத் ஸாஹுவின் சேனதிபதி அல்லது தலைமைத் தளபதியான தனஜிஜாதவால் (Dhanaji Jadav) 1708-ல் ஒரு கர்க்கூன் அல்லது பொருள் வருவாய் எழுத்தராக நியமிக்கப்பட்டார். தனஜியின் மரணத்துக்குப் பின்பு அவருடைய மகனன சந்திரசேன ஜாதவுடன் தொடர்பு கொண்டு 1712-ல் சேனகர்த்தே அல்லது 'படைக்குப் பொறுப்பான

Koviloor Acadamy

முகவர்' அல்லது படை அமைப்பாளர் என்ற பட்டத்தைப் பெற்ருர். இவ்வாறு அவர் ஸாஹூவுக்கு முன்பு உள்நாட்டு ஆட்சியாளராயும், படைத்துறை அமைப்பாளராயும் தம்முடைய ஆற்றல்களை வெளிப் படுத்தும் வாய்ப்புகளைப் பெற்ருர். ஸாஹூவும் அவருடைய மதிப்பு மிக்க பணிகளுக்குக் கைம்மாருக 1713 நவம்பர் 16ஆம் தேதி அவ ரைப் பேஷ்வா (Peshwa) அல்லது முதல் மந்திரியாக நியமித்தார். கொள்கையளவில் பிரதிநிதியின் பதவி பேஷ்வாவின் பதவியினும் உயர்ந்ததுதான். ஆனுல், மேலான தம் திறமைகள் ஆற்றல்கள் இவற் ருல் பாலாஜி விஸ்வநாத்தும், அவருக்குப் பின் வந்த புகழ் மிக்க அவருடைய மகனுன முதலாம் பாஜிராவும் (Baji Rao I) பேஷ்வாவை மராட்டியப் பேரரசின் உண்மைத் தலைவராக ஆக்கிக் கொண்டு சத்ர பதி அல்லது அரசரைச் சில ஆண்டுகளுக்குள் பின்னணியில் இருக்கு மாறு செய்தனர்.

சீர்குலைந்து வந்து கொண்டிருந்த பேரரசின் சீர் கேடுகளைத் தமக் குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள மராட்டியர்கள் தவறவில்லை. ஹுஸேன் ஆலி தக்கணத்துக்கு வந்தபோது, உண்மையில் முக்கிய மான சலுகைகளை அவரிடமிருந்து பாலாஜி விஸ்வநாத் பெற்ருர்; தில்லியிலிருந்த பொம்மை அரசரிடமிருந்து வெறும் தோற்றத்தில் மட்டும் சலுகைகள் பெறுவதாகக் காட்டிக் கொண்டார். மராட்டியர் களைத் தம் பக்கம் வசமாக்கிக் கொள்வதற்காகக் கீழ்க் கண்ட முறை யில் அவர்களுடன் ஹுஸேன் ஆலி உடன்படிக்கை செய்து கொண் டார். (i) முகலாயர்களால் வெல்லப்பட்ட பகுதிகளைத் தவிர, சிவாஜிக்கு முன்பு உரியனவாயிருந்த எல்லாப் பகுதிகளும் ஸாஹூ திரும்பிப் பெற வேண்டும். அவற்றுடன் மராட்டியர்களால் வெல்லப் பட்ட காந்தேஷ், கோண்ட்வானு, பீரார் மாகாணங்களும், ஹைதரா பாத்திலும், கர்நாடகத்திலுமுள்ள மாவட்டங்களும் சேர்க்கப்பட வேண்டும். (ii) தக்காணத்தில் ஆறு சுபாக்களில், சௌத் சர் தேஷ்முகி இவற்றை வசூலிக்கும் உரிமை ஸாஹூவுக்குக் கொடுக்கப்படும். இதற்குப் பதிலாக ஸாஹூ பேரரசின் பணிக் காக 15,000 குதிரைகளடங்கிய படையை வைத்திருக்க வேண்டும்; தக்கணத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண் டும். தில்லிப் பேரரசரை மேலாண்மையுடயவராக ஸாஹூ ஒப்புக்கொண்டது சிவாஜியால் போற்றப்பட்ட முழு உரிமை லட்சியத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டதாயிருந்தது. மராட்டியர் கள் பெற்ற சலுகைகளும் தில்லி அரச அதிகாரத்தை எவ்விதத்திலும் பாதிப்பதாக இருக்கவில்லை. ஆனுல் இவை செயல் முறையில் சிறந்த பயன்களைத் தந்தன என்பதை அறிய வேண்டும். 1714ஆம் ஆண்டு ஒப்பந்தம் 'மராட்டிய வரலாற்றில் ஒரு சிறப்புக் கூருகக்' கருதப்படுவது நியாயமானதே. அதன்மூலம் மராட்டியர்கள் பேரர

Koviloor Academady

சுக்குரிய மாகாணங்களின் பொருள் வருவாயில் பங்கு கொள்பவரா யும் அதன் விளைவாக அங்கே அரசியல் அதிகாரத்திலும் பங்கு கொள்பவராயும் ஆயினர்.'

தில்லி அரசவையில் சய்யிதுக்கு எதிரான கட்சி ஏற்றம் பெறு வதைத் தடுப்பதற்காக சய்யிது ஹுஸேன் ஆலி தம்முடைய புதிய கூட்டாளிகளுடன் தில்லிக்குப் படையுடன் சென்றார். பாருக்ஷி யாரைச் சிம்மாசனத்திலிருந்து அகற்றிவிட்டு மற்றொரு பொம்மை அர சரைச் சிம்மாசனத்தில் வைத்தார். அவரும் ஏற்கெனவே ஹுஸேன் ஆலிக்கும், மராட்டியர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தும் கட்டாயத்துக்குள்ளானார். மராட்டியர்கள் 1719-ல் தில்லியை நோக்கிச் சென்றது அவர்களுடைய வரலாற் றில் ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியாகும். 'பேரரசின் தலைநக ரில் அவர்கள் செல்வமிக்கவர்களாயில்லாமல் அரசரை ஆக்குவோ ரின் ஆதரவாளர்களாயும், கூட்டாளிகளாயும் இருந்ததன் சிறப்பு அவர்களும் ஒரு நாள் பேரரசை ஆக்குவதற்கும் நீக்குவதற்கும் வல்லமை பெற முடியும் என்ற உறுதியை அவர்களுக்குத் தந்தது. உண்மையில் பாலாஜி விஸ்வநாத் நம்பிக்கையுடன் ஒரு மராட்டிய பேரரசை நிறுவுவதற்கான கொள்கைக்கு உறுதியான நிலைக்கள மாய் இருந்ததும் அதுவே.' மராட்டியர்கள் சக்தி மற்ற வழிகளிலும் பெருகியது. ராஜாராம் ஆட்சியின் தொல்லை நிறைந்த காலத்தில் புத்துயிர் ஜாகீர் முறை மூலம் மராட்டியர்களில் துணிகரச் செயல் வீரர்கள் தங்களுக்காகச் சிறந்த வாய்ப்புகளைப் பெற்றனர். இதற்கு மேலும் மராட்டியர்கள் சௌத், சர்தேஷ்முகி இவற்றை வசூல் செய்யும் உரிமைப் பெற்றிருந்தனர். அதற்காக முக்கிய மராட்டிய அதிகாரிகளைத் தெளிவான பல எல்லைப் பரப்பு களுக்கு பாலாஜி விஸ்வநாத் நியமித்தார். அந்த அதிகாரிகளும் கூலிபெற்ற பங்காளிகளாக முஸ்லிம் பிரபுக்களிடையே நேர்ந்த சண்டைகளில் பங்கெடுத்துக்கொண்டனர்.

1720-ல் பாலாஜி விஸ்வநாத் இறந்த பிறகு எதிர்காலத்தில் சிறந்து விளங்கும் குணங்கள் பெற்றிருந்த இளைஞராகிய அவருடைய மகனை முதலாம் பாஜிராவ் பேஷ்வாப் பதவியைப் பெற்றார். பாலாஜி விஸ்வநாத்தின் குடும்பத்தில் பேஷ்வாப் பதவி பரம்பரையாக எய்தப் படுவதாக மாறியது.

முதலாம் பாஜிராவ் திறமை வாய்ந்த ஒரு போர்வீரர் மட்டுமின்றி, அறிவு மிக்க ஓர் அரசியல் வாதியுமாவார். உடனே அவர் முகலா யப்பேரரசு தன் முடிவு காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்றும், இந்து தலைவர்களின் அனுதாபத்தைப் பெற்று மராட்டியர் களின் சக்தியை அதிகப்படுத்திக்கொள்ள அந்த நிலையைச் சாதக

Koviloor Acadamy

மாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் உணர்ந்தார். துணிவும் கற்பனையும் உள்ளவராய் அவர் முதல் பேஷ்வா தொடங்கிவைத்த மராட்டியப் பேரரசுக் கொள்கையைத் தெளிவாய் உருவாக்கினர். பேரரசுச் சக்தியின் நடுமத்தியைத் தாக்குவதற்காக நர்மதைக்கு அப்பால் ராச்சியத்தை விரிவாக்கும் கொள்கையை மேற்கொண்டார். அதனல் அவர் தம்முடைய தலைவரான ஸாஹுவிடம் இவ்வாறு கூறினர். 'உலர்ந்துபோய்க்கொண்டிருக்கும் மரத்தின் அடிப்பாகத்தை வெட்டுவோம். கிளைகள் எல்லாம் தாமாகவே விழுந்துவிடும். இவ்வாறு மராட்டியக்கொடி கிருஷ்ணுவிலிருந்து சிந்து வரையிலும் பறக்க வேண்டும்.' பாஜிராவின் இக்கொள்கை அவருடைய தோழர்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் வடநாட்டு வெற்றிகளுக்காக முயற்சிகளை மேற்கொள்ளு முன்பு தெற்கே மராட்டிய சக்தியை ஒன்று திரட்டி ஒரு நிலைப்படுத்தவேண்டு என்று அவரை வற்புறுத்தினர். ஆனல் சொல்லாற்றலாலும், ஆர்வத்தாலும், அவருடைய வடநாட்டு இராச்சிய விரிவுத் திட்டத்தை அவருடைய தலைவர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார்.

இந்து தலைவர்களின் ஆதரவைப் பெற்று அவர்களின் அனுதாபத்தைப் பெருக்குவதற்காக முதலாம் பாஜிராவ் இந்து பாத்-பாதுஷாஹி (Hindu-pad-Padushahi) அல்லது ஒரு இந்து பேரரசு என்ற லட்சியத்தைப் பிரசாரம் செய்தார். 1723 டிசம்பரில் அவர் மாளவத்தின்மீது படை யெடுத்தபோது, அந்நாட்டு இந்து ஜமீன்தார்கள் அவருக்குப் பெரிதும் உதவிசெய்து அதனல் ஏராளமான பொருள், உயிர்த் தியாகங்களைச் செய்தனர். குஜராத்தில் ஏற்பட்ட ஓர் உள்நாட்டுக் கலகத்தைச் சாதகமாக்கிக்கொண்டு மராட்டியர்கள் அந்த வளமிக்க மாகாணத்தில் தங்கள் அதிகாரத்தை நிறுவினர். ஆனல் அதன் விவகாரங்களில் முதலாம் பாஜிராவ் தலையிடுவதைப் போட்டியாக முளைத்த ஒரு மராட்டியக் கட்சியின் தலைவரும் பரம்பரைச் சேனதிபதி அல்லது தலைமைத் தளபதியுமான திரிம்பக் ராவ் தாபாடே (Trimbak Rao Dhabade) வன்மையாக எதிர்த்தார். சிவாஜி குடும்பத்தின் கோல்ஹாப்பூர்க் கிளையைச் சேர்ந்த இரண்டாம் ராஜா ஷாம்பூஜியும் முதலாம் பாஜிராவின் வெற்றியைக் கண்டு பொருமை கொண்ட நிஸாம்-உல்-முல்க்கும் திரிம்பக் ராவ் தாபாடேயுடன் சேர்ந்துகொண்டனர். ஆனல் முதலாம் பாஜிராவ் தம்முடைய மேலான மேதையின் வன்மையால் எதிரிகளின் திட்டங்களைத் தவிடுபொடியாக்கினர். பரோடாவுக்கும் தாபோயிக்கும் (Dhaboi) இடையிலுள்ளதும் தாபோயிக்கு அருகிலுள்ளதுமான பில்ஹாப்பூரின் சமவெளிகளில் நடந்த போரில் 1731 ஏப்ரல் 1ஆம் தேதி திரிம்பக் ராவ் தாபாடே தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். முதலாம் பாஜிராவின் இவ்வெற்றி 'பேஷ்வாக்களின் வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.' அது உள்நாட்டில் அவருக்கு எவ்விதப் போட்டியாளரும் இல்லாமல்

Koviloor Acadamy

செய்ததுடன், 'பெயரளவில் மராட்டியப் பேரரசின் அதிகாரமும்' அவரிடம் இருக்கச் செய்தது. 1731 ஆகஸ்டில் அவர் நிஸாம்-உல்-முல்க்குடன் கூட ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி நிஸாம்-உல்-முல்க்குக்குத் தெற்கே தம்முடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ளச் சுதந்தரம் உண்டு; பேஷ்வாவுக்கு வடக்கே தம்முடைய ஆசைகளைச் சுதந்தரமாகப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.'

அதிர்ஷ்டவசமாக முதலாம் பாஜிராவ், ஆம்பர் நாட்டு இரண்டாம் ஜெயசிங்கு சவாய், சத்ரசால் பந்தேலா (Chhatrasal Bundela) ஆகியோரின் நட்பைப் பெற முடிந்தது. 1737-ல் அவர் தில்லிக்கு அருகில் வரை படையுடன் சென்ருர். ஆனல் பேரரசின் உணர்ச்சிகளைப் புண்படுத்தக் கூடாதென்று தில்லியின் உள்ளே நுழையவில்லை. இந்த மராட்டியத் தொந்தரவை ஒழிப்பதற்காகப் பேரரசர் முதலாம் பாஜிராவின் ஜன்ம விரோதியான நிஸாம்-உல்-முல்க்கைத் தில்லிக்கு உதவி செய்ய வரும்படி அழைத்தார். நிஸாம்-உல்-முல்க் 1731-ல் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையையும் புறக்கணிப்பதில் எவ்விதத் தயக்கமுங் கொள்ளாமல், உடனே பேரரசரின் அழைப்புக்கிணங்கினுர். முதலாம் பாஜிராவின் வளர்ந்துவரும் சக்தியைத் தடுத்து நிறுத்துவதற்கு அது ஒரு சாதகமான வாய்ப்பு என்று அவர் கருதினுர். இரண்டு போட்டியாளர்களும் போபால் அருகே எதிர்த்துப் போரிட்டனர். நிஸாம்-உல்-முல்க் தோற்கடிக்கப்பட்டு உடன்படிக்கை செய்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டார். அதன்படி அவர் 'மாளவம் முழுவதையும் நர்மதைக்கும் சம்பாலுக்கும் இடையிலுள்ள நிலப் பரப்பின் முழு அதிகாரத்தையும் முதலாம் பாஜிராவுக்கு அளித்து விடவேண்டும் என்பதற்கும், இந்த ஏற்பாடு பேரரசரால் உறுதி செய்யப்படவேண்டும் என்பதற்கும், பேஷ்வாவின் செலவுகளுக்காக ஐம்பது லட்சம் ரூபாய் கொடுத்துவிட எல்லா முயற்சிகளும் செய்யப்படவேண்டும் என்பதற்கும்' வாக்குறுதி யளித்தார். இந்த ஏற்பாடுகளுக்குப் பேரரசர் அனுமதியளித்ததால், இந்துஸ்தானத்தில் ஒரு பகுதியில் ஏற்கெனவே நிறுவப்பட்ட மராட்டிய மேலாண்மை மேலும் நன்கு விரிவடைந்தது. மேற்குக் கரையில் மராட்டியர்கள் சால்செட்டையும், பஸ்ஸினையும் போர்ச்சுக்கீசியரிடமிருந்து 1739-ல் பறித்துக்கொண்டனர். ஆனல் விரைவில் முதலாம் பாஜிராவ் நாதிர்ஷாவின் படையெடுப்பைக் கேட்டுச் சிறிது கலவரமடைந்தார். அதனுல் அண்டை நாட்டு முஸ்லிம் அரசர்களுடன் கொண்டிருந்த எல்லா வேற்றுமைகளையும் மறந்துவிட்டுப் பாரசீகப் படையெடுப்பாளரைக் கூட்டாக எதிர்க்கவேண்டும் என்று முயன்ருர். ஆனல் அதைச் செயல்படுத்துவதற்கு முன்பு அவர் 1740 ஏப்ரல் மாதத்தில் தமது நாற்பத்திரண்டாவது வயதில் காலமானுர். இவ்வாறு மராட்டிய அரசியலறிஞர்களுள் மிகச் சிறந்த ஒருவர் மறைந்

Koviloor Academy

தார். அவருடைய சொந்தக் குணவியல்பில் சில குறைகள் காணப்பட்டாலும் அவர் மராட்டிய அரசு உருவாவதற்காகத் தம்மாலான வற்றை யெல்லாம் செய்ய முயன்ருர். மராட்டியப் பேரரசின் இரண்டாவது தந்தை என்று அவரைக் கூறிவிடலாம்.

முதலாம் பாஜிராவ் கணிசமான அளவுக்கு மராட்டியர்களின் அதிகாரத்தையும் மதிப்பையும் உயர்த்தியபோதிலும், அவர் தம் தலைவரின் பெயரால் ஆண்ட நாடு ஒற்றுமை இல்லாதிருந்தது. ராஜாராம் காலத்தில் ஜாகிர் முறை புத்துயிர் பெற்றதன் மூலம் சில அரைச் சுதந்தர மராட்டியப் பகுதிகள் அந்நாட்டினுள் வளர்ந்தன. இதன் நேரடி விளைவு மராட்டி மத்திய அரசாங்கம் பலவீனப்பட்டு அது கடைசியில் அழிவுற்றதேயாகும். அப்பகுதிகளுள் மிக முதலில் தோன்றியவைகளிலும் மிக முக்கியமானவைகளிலும் ஒன்ருயிருந்தது பீரார் என்பது. அப்போது அது திருமணத்தால் ஸாஹூவுக்கு உறவாயிருந்த ரகுஜி பான்ஸ்லேயின் கிழ் இருந்தது. இவருடைய குடும்பம் பேஷ்வாவின் குடும்பத்தை விடப் பழமை மிக்கது. ராஜாராம் ஆட்சிக்காலத்தில் அது முதன்மை பெற்றது. தாபாடேக்கள் முதலில் குஜராத்தைப் பெற்றிருந்தனர். ஆனல் பரம்பரைச் சேனபதி வீழ்ச்சியுற்ற பிறகு அவருடைய முந்தைய கிழதிகாரிகளான கெயிக்வார்கள் தங்கள் அதிகாரத்தைப் பரோடாவில் நிலைநாட்டினர். குவாலியரில் சிந்தியா குடும்பத்தை நிறுவிய ராஞேஜி சிந்தியா முதலாம் பாஜிராவின் கீழ்ச் சிறப்புறப் பணியாற்றினுர். மராட்டிய அரசுடன் மாளவத்தை இணைத்த பிறகு மாகாணத்தின் ஒரு பகுதி அவருடைய பங்குக்குக் கிடைத்தது. இந்தூர்க் குடும்பத்தைச் சேர்ந்த மல்ஹார் ராவ் ஹோல்கரும் முதலாம் பாஜிராவின் கீழ்ச் சிறப்புப் பணியாற்றினுர். மாளவத்தின் ஒரு பகுதியைப் பெற்ருர். ஒரு சிறு தாலுகா பாவார்களுக்குக் (Pawars) கொடையாக அளிக்கப்பட்டது. அவர்கள் ‘தார்’ என்ற இடத்தைத் தங்கள் தலைமை நிலையமாக ஆக்கிக்கொண்டார்.

சில மராட்டியத் தலைவர்களின் எதிர்ப்பு இருந்தபோதிலும் முதலாம் பாஜிராவுக்குப் பிறகு அவருடைய மூத்த மகனை இரண்டாம் பாலாஜி பேஷ்வாவாக ஆனர். இரண்டாம் பாலாஜியைப் பொதுவாக நானா சாஹெப் என்றும், பாலாஜி பாஜிராவ் என்றும் அழைப்பர். பாலாஜி அப்போது பதினெட்டு வயதுக் காளையாய், சௌகரியம் இன்பம் இவற்றை விரும்புவராய் இருந்தார். தந்தையின் மேலான சிறப்புச் சக்திகள் அவரிடம் காணப்படவில்லை. ஆனல் அவரிடம் திறமை இல்லாமற்போகவில்லை. தந்தையின் முறையை ஒட்டியே அவரும் பகைமை பாராட்டியோர்க்குத் தண்டனை கொடுத்தல், ஒரு பெரும் படையை ஒழுங்குற அமைத்துத் தளவாடங்களை அளித்தல், போருக்கு வேண்டிய பொருள்களைத் தயார்செய்து வைத்தல்போன்ற செயல்களில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் தம் தந்தையின் திறமையும்

Koviloor Academy

அனுபவமும் மிக்க அதிகாரிகள் இவரின் பணியைப்பெற்ருர். 1749-ல் ஸாஹு இறப்பதற்கு முதல் நாள் பேஷ்வாவுக்குச் சில கட்டுப்பாடு களைத் தெரிவித்ததோடு, நாட்டின் உயர்ந்த அதிகாரம் அளிக்கும் பட்டயத்தை எழுதிவைத்துச் சென்ருர். பேஷ்வா ராஜாவின் பெயரை நிலேயாகச் செய்யவேண்டும்; தாராபாயின் பேரர் அவருடைய சந்ததியினர் ஆகியோர் மூலம் சிவாஜியின் குடும்பத்தின் பெருமையைப் பாதுகாக்கவேண்டும். அவர் கோல்ஹாபூர் ராச்சியத்தைச் சுதந்தர ராச்சியமாக மதிக்கவேண்டும்; அக்காலத் தில் நிலவியிருந்த ஜாகீர்தாரின் உரிமைகளை மறுக்கக் கூடாது. 'இந்துக்களின் அதிகாரத்தைப் பரப்புவதற்கும், கடவுளின் கோயில் களைக் காப்பதற்கும், உழவுத் தொழில் செய்வோரையும் புண்ணிய மான அல்லது பயனுள்ளவற்றை யெல்லாம் காப்பதற்கும்' ஜாகீர்தார் களுடன் அவர் பயனுள்ள வகையில் ஏற்பாடுகள் செய்து கொண்டார். இந்த ஏற்பாட்டைத் தாராபாய் எதிர்த்தார். தாமாஜி கெயிக்வாருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு பேஷ்வாவுக்கு எதிராகப் படைக்கலந் தாங்கினர்; இளம் ராஜாவைச் சிறையிலிட்டார். எனினும் பேஷ்வா தம் எதிரிகளைத் தோற்கடித்தார். 'ராஜாவின் அரண்மனை மேயரின்' கையில் ராஜா உண்மையில் ஒரு சிறைக் கைதியாகவே இருந்தார். அப்போதிருந்து பேஷ்வாதான் மராட்டிய இணைப்பு நாடுகளின் உண்மையான தலைவர் ஆனர்.

பாலாஜி பாஜிராவ் மராட்டியப் பேரரசை மேலும் பலப்படுத்துவ தென முடிவு செய்தார்; ஆனல் அவர் நல்லறிவின்றித் தந்தையின் கொள்கையிலிருந்து இரண்டு விதங்களில் மாறிச் சென்ருர். முதலாவ தாக, அவருடைய காலத்தில் படை புரட்சிகரமான மாறுதலை அடைந்தது. சிவாஜியின் காலத்தில் காலாட்படைதான் படையின் தலை ஊற்ருக இருந்தது. முதலாம் பாஜிராவ் பெரும் எண்ணிக்கை கொண்ட குதிரைகளைப் போரில் ஈடுபடுத்தினலும், பழைய போரியல் சூழ்ச்சித் திறன்களைக் கைவிட்டு விடவில்லே. ஆனல் பாலாஜி மேலே நாட்டு யுத்த முறைகளைப் புகுத்தும் நோக்கத்துடன் எல்லா வகையான மராட்டியரல்லாத ஆட்களையும் படையில் சேர்த்துக் கொண்டார். இவ் வாறு படை தன் தேசியப் பண்பை இழந்தது. சரியான ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றின் கீழ்ப் பலவகையான அயல் கூறுகளைக் கண் காணிப்பது எளிதாக இருக்க வில்லே. பழைய போர் முறையும் ஒரு சிறிது கைவிடப்பட்டது. இரண்டாவதாகப் பாலாஜி வேண்டுமென்றே தம் தந்தையின் இலட்சியமான, எல்லா இந்துத் தலைவர்களையும் ஒரு கொடியின் கீழ் இணைக்கும் இந்து-பாத்-பாத் ஷாஹி என்ற குறிக் கோளைக் கைவிட்டார். அவருடைய வழியாளர்கள் முற்காலப் போர் முறையின் பழைய திட்டத்தை மேற் கொண்டனர். அவர்கள் இந்துக் கள் முஸ்லிம்கள் என்ற வேறு பாடின்றி எல்லாரையும் கொள்ளை யிட்டு

Koviloor Academy

வந்தமையால் ராஜபுத்திரர்களும் மற்ற ஹிந்துத் தலைவர்களும் மராட்டியர்களை வெறுக்கத் தொடங்கினர். இவ்வாறு மராட்டியப் பேரரசு அகில இந்தியத் தேசியத்தைப் போற்றுவதைக் கைவிட்டது ; உள்நாட்டு வெளிநாட்டு முஸ்லிம் சக்திகளுக்கு எதிராக ஒரு கொடியின் கீழ் அதனால் இந்துக்களின் சக்தியைத் திரட்டி ஒழுங்குற அமைக்க பிறகு முடியாது போயிற்று.

எனினும் பாலாஜியின் கொள்கையில் காணப்பட்ட இக்குறைகள் மராட்டிய சக்தி தெற்கிலும் வடக்கிலும் விரிவடைவதை உடனடியாகத் தடுக்கவில்லை. 1757 மார்ச்சில் மிகுந்த எண்ணிக்கையுடைய மராட்டியர்கள் சிரங்கப்பட்டணம் சென்று கிருஷ்ணாவின் தெற்கேயிருந்த பெரும்பாலான பகுதிகளில் கட்டாயப் படுத்திக் கப்பம் வசூலித்தனர். ஆர்காட்டு நவாப் சௌத்வரிப் பாக்கிக்காக 'உடனே இரண்டு லட்ச ரூபாய் கொடுப்பதாகவும் இரண்டரை லட்சம் ரூபாயைத் தவணைகளில் கொடுப்பதாகவும் வாக்குறுதி அளித்தார். மராத்தியர்கள் பெட்நூரையும் (Bednore) இந்து இராச்சியமான மைசூரையும் படையெடுத்தனர். கப்பல் தலைவனான ஆங்கிரியாவை அடக்குவதில் கிளைவ், வாட்சன் ஆகியோரின் தலைமையின் கீழ் இருந்த ஆங்கிலேயர்களுக்கு உதவினர். அவர்களுடைய முன்னேற்றம் மைசூரின் எழுச்சியுற்றுவந்த தளபதியான ஹைதராலும், தந்திர அறிவு மிக்க பிரெஞ்சுக்காரரான புஸ்ஸியாலும் (Bussy), ஹைதராபாத்தின் நிஸாம் ஆலியாலும் ஓரளவு தடை செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால் பேஷ்வாவின் ஒன்று விட்ட சகோதரரான சதாசிவராவ் 1760-ல் உத்கீரில் நிஸாம் ஆலியைத் தோற்கடித்தார். நிஸாம் படையில் புஸ்ஸியின் கீழ் மேனாட்டு யுத்த முறைகளில் பயிற்சி பெற்ற தைரியமிக்க முஸ்லிம் பீரங்கிப் படை வீரரான இப்ராஹிம் கான் கார்டி மராட்டியர்களுடன் சேர்ந்தார். மராட்டியர்கள் நிஸாம் ஆலியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி அவர்கள் முழு பீஜப்பூர் மாகாணத்தையும் பெற்றனர் ; அநேகமாக அவுரங்காபாத் முழுவதையும், பீடாரின் ஒரு பகுதியையும், புகழ் பெற்ற தௌலதாபாத் கோட்டை உள்படச் சில கோட்டைகளையும் பெற்றனர். தக்கணத்தில் முகலாயர்களின் உரிமைகளிலிருந்து மராட்டியர்கள் இந்த மதிப்பு மிக்க சில பெறுதிகளை அடைந்தனர். இவ்வாறு முகலாயர்களின் உரிமைப் பகுதிகள் 'குறுகிய இடமாகச் சுருங்கி விட்டன.'

மராட்டியர்கள் வடக்கே தங்கள் அதிகாரத்தை விரிவு படுத்தியதுதான் இன்னும் சிறப்பானதும் வியப்பானதுமாகும். 1756ஆம் ஆண்டின் முடிவில் மால்ஹர்ராவ் ஹோல்கரும், சில வாரங்கள் கழித்து ரகுநாதராவும் வடக்கே ராஜபுனதத்தில் சுமார் நான்கு மாதங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட போதிலும், சகாராம் பாபு என்பவரின் கீழ் 20,000 ஆட்களுடன் அவரால் அனுப்பப்பட்ட படை ஜாத்து

Koviloor Acadamy

களின் நட்பைத் தந்திரமாகப் பெற்று, மீண்டும் ஒரு முறை தோஆப்பில் மராட்டிய மேலாண்மையை நிறுவியது. அப்போது மராட்டியர்கள் நாஜிப்-உத்-தௌலாவு (Najib-ud Daulah) க்கு எதிராகத் தில்லி அரசவையுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டனர். நாஜிப்-உத்-தௌலா அப்தாலியால் தில்லியில் தம்முடைய 'மேலான முகவராகவும்' பேரரசர் மேல் சர்வாதிகாரம் செலுத்துபவராகவும் விடப்பட்டவராவர். அவர்கள் கி.பி. 1757 ஆகஸ்டில் தில்லியைத் தாக்கி, நாஜிப்-உத்-தௌலாவைச் சரணடையும்படி செய்து, செப்டம்பரில் தாங்கள் கூறிய விதிகளின் படியே சமாதானஞ் செய்து கொள்ளும் படி செய்தனர். நட்புறவு கொண்ட வஸீரான இமாத்தின் கையில் தில்லியைக் கொடுத்து விட்டு ரகுநாதராவும், மல்ஹார்ராவும் பஞ்சாப்பை அப்தாலியின் புதல்வரான தைமூர் ஷாவிடமிருந்து வெல்வதற்காகத் தங்கள் முயற்சிகளைச் செலுத்தினர். அவர்கள் 1758 மார்ச்சு மாதத்தில் சிர்ஹிண்டையும், ஏப்ரலில் லாஹூரையும் கைப்பற்றினர்; தங்களுக்கு ஆண்டு தோறும் எழுபத்தைந்து லட்சம் ரூபாய் கப்பங் கட்டுவதாக வாக்குறுதி யளித்த அப்பிர தேசத்தைச் சேர்ந்த அனுபவமிக்க ஆதீனுபேக் கான் என்பவரை அங்கே தங்கள் அரசப் பிரதிநிதியாக வைத்து விட்டு பஞ்சாப்புக்குச் சென்றனர். எனினும் அவர்கள் புதிதாக வென்ற மாகாணத்தைக் காப்பதற்குப் போதுமான படையை விட்டுவிட்டுச் செல்லவில்லை. இவ்வாறு ரகுநாதராவின் அரசியல் கொள்கை 'அட்டாக் வரை இந்து பேராண்மை செல்லும்படி' இருந்தது போலக் காணப்பட்டது. ஆனால் 'அமைதியாக ஆராய்ந்து நோக்குமிடத்து ரகுநாதரின் படாடோபமான சாதனை அரசியல் அடிப்படையில் பார்க்குமிடத்து வெறும் வெற்று ஆடம்பரமாகவும் பொருளாதாரத்தை வற்றச் செய்ததாகவும் காணப்படுகிறது' என்று சர். ஜே. என் சர்க்கார் கூறுகிறார். அது பூனாக் கஜானாவுக்கு ஒரு பைசாக்கூட கொடுக்கவில்லை. ஆனால் 'துருப்புகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியின் மேலும் எட்டு லட்சம் ரூபாய் பாங்கியாளர்க்குக் கடன் கொடுக்க வேண்டிய நிலையை எய்தச் செய்தது.' அரசியல் காரணமாக அது அப்தாலியுடன் மற்றொரு போர் செய்வதை இன்றியமையாத தாக்கியது.

பஞ்சாப்பின் மீது மராட்டியர்கள் அதிகாரஞ் செலுத்தியது அம்மாகாணத்திற்கு அமைதியை அளிக்கவில்லை. ஆதீனு பேக் 1758 அக்டோபர் 13-ல் இறந்தார். அதனால் பஞ்சாப் முழுவதும் அராஜகம், குழப்பம் இவற்றில் ஆழ்ந்து மராட்டியர்களின் நலன்களைப் பாதித்தது. இவற்றை நீக்குவதற்காக 1759-ல் பேஷ்வா தத்தாஜி சிந்தியாவின் தலைமையில் வலிமை வாய்ந்த ஒரு படையை அந்த மாகாணத்துக்கு அனுப்பினர். தத்தாஜி சிந்தியா அங்கே சாபாஜி சிந்தியா (Sabaji Sindhia) வைக் கவனர்னராக வைத்தார். ஆனால்

Koviloor Academy

1759 நவம்பர் மாத இறுதியில் அம்மாகாணம் வலிமை வாய்ந்த துர்ரானியப் படையால் படையெடுக்கப்பட்டது; பஞ்சாப் தில்லிப் பேரரசால் கடைசியில் இழக்கப்பட்டது. பிறகு அகமது ஷா அப்தாலி தில்லியை நோக்கிச் சென்றார். அவர் இதற்குள் அவுத்தின் நவாப்பு, ரூஹெலாக்கள் இவர்களின் கூட்டுறவைச் சம்பாதித்துக் கொள்ளும் நன்மை அடைந்தார். ரூஹெலாக்கள் மராட்டியர்களால் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அவுத்தின் நவாப் மராட்டியர்கள்தாம் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு மிகப் பெரும் எதிரிகள் என்று நம்பிக்கொண்டிருந்தார். மாறாக, பாஜிராவின் அனுதாபமில்லாத அரசியல் கொள்கையால் மன வேறுபாடு கொண்ட ராஜபுத்திரர்கள் நடு நிலைமை வகிக்கவே விரும்பியதால் மராட்டியர்கள், அவர்களுடன் சேர்ந்து செயல்பட முடியவில்லை. பஞ்சாப்பில் எழுச்சியுற்று வந்த சிக்கியர்களின் கூட்டுறவையும் அவர்கள் பெறமுடிய வில்லை. உண்மையில் தூர நோக்கில்லாத பாலாஜியின் அரசியல் கொள்கையால் மராட்டியர்கள் வலிமை மிக்க துர்ரானியர்கள், அவர்களுடைய இந்தியக் கூட்டாளிகள் இவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய மிகவும் இக்கட்டான நிலையில் முதன்மையான தனிச் சுதந்தர அரசுகளின் ஆதரவைப் பெற முடியாது போயிற்று.


1759 டிசம்பரின் முடிவில் அப்தாலி தத்தாஜி சிந்தியாவைத் தானேஸ்வர் (Thaneswar) என்ற இடத்தில் தோற்கடித்துத் தில்லியை நோக்கி ஓடும்படி வற்புறுத்தப்பட்டார். 1760 ஜனவரி 9ஆம் தேதி தில்லிக்குப் பத்து மைல் வடக்கே இருந்த பராரிகாட் (Barari Ghat) என்ற இடத்தில் மராட்டியத் தளபதி ஆப்கானியர்களால் கொல்லப்பட்டார். 'பராரிகாட்டின் பேராபத்து மிக்க களத்திலிருந்து மராட்டியப் படை புதிய துர்ரானி குதிரை வீரர்கள் அவர்களைப் பின்பற்றி ஓடிவரத் தென்மேற்காகத் தலை தெறிக்க ஓடினர்.' ஜான்கோஜி சிந்தியாவும் மல்ஹார் ராவ் ஹோல்கரும் அப்தாலியின் முன்னேற்றத்தை எதிர்க்கச் செய்த முயற்சிகளும் வீணாயின. அண்மைக் காலத்தில் உத்கிரில் (Udgir) நிஸாமின் மீது வெற்றி பெற்றுப் பெரும்புகழ் கொண்ட சதாசிவ ராவ் பாவோ (Sadashiv Rao Bhao) வடக்கே மராட்டியரின் அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்காக ஒரு பெரும் படையுடன் பேஷ்வாவினால் அனுப்பப்பட்டார். அவருக்குச் சிறிது ஓய்வு கொடுப்பது போல அந்தப் படையின் பெயரளவுத் தளபதியாக பேஷ்வாவின் மகனும் பதினேழு வயது வாலிபருமான விஸ்வாஸ் அனுப்பப்பட்டார். முதலில் பாவோவின் தலை 'பெருமிதத்தாலும் கர்வத்தாலும் கனத்துவிட வில்லை;' உண்மையில் அவர் படைகளையும், போர்த் தளவாடங்களையும் பெருக்குவதன் மூலமும், சில வட இந்தியக் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவதன் மூலமும் தம்முடைய பொருள் வளங்களையும் சக்தியையும் மிகுதிப் படுத்திக்

Koviloor Acadamy

கொள்ளவே விரும்பினர். 1760 ஆகஸ்டு மூன்றும் நாள் அவர் தில்லியைக் கைப்பற்றினர். மராட்டியர்களின் துரதிர்ஷ்டவசமாக 'அப்போது வாழ்ந்தவர்களில் மிகவும் புத்திக் கூர்மையுள்ள இந்து அரசரான' சூராஜ்மால், பாவோவுடன் கருத்து வேறுபாடு கொண்டவராய், அவர்களை விட்டு நீங்கினர். பாவோ மல்ஹார் ராவ் ஹோல்கரையும் பகைவராக்கிக் கொண்டார். மேலும் 'எல்லாராலும் பேராசையுடன் விரும்பப்படும் இந்தியத் தலைநகர் புளிக்கும் திராட்சைப் பழமாகப்' பாவோவுக்கு ஆய்விட்டது. அதிலிருந்து அவர் போதுமான வருவாய் வளங்களைப் பெறமுடியவில்லை; ஆனால் அதை வைத்திருப்பதனுல் துன்பங்களே மிகுதிப்பட்டுக்கொண்டு வந்தன. ஆகஸ்டு மாதத்தின் இடைப் பகுதியில் அவர் தில்லியிலிருந்து வடக்கே சென்று 1760 அக்டோபர் 29ஆம் தேதி பானிப்பட்டை அடைந்தார்.

இதற்கிடையில் அப்தாலி ஆலிகாரைக் கைப்பற்றி ஜாத் ராஜாவிடம் கப்பம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுக்கும்படி வற்புறுத்தியிருந்தார். அவருடைய மிகவும் உதவியையும், நிலையான இந்தியக் கூட்டாளியான நாஜிப்-உத்-தௌலாவின் ஆதரவு மூலம் வடக்கேயும் வடகிழக்கிலும், மராட்டியர்கள் பேராசையுடன் படையெடுத்து வந்ததால் சில நலன்களை இழந்திருந்த ஷுஜா-உத்-தௌலாவின் கூட்டுறவையும் அடைந்தார். தோஆப்பில் சில தொல்லைகளையும், நஷ்டங்களையும் அனுபவித்த பிறகு அப்தாலி 1760 நவம்பர் 1ஆம் தேதி பானிப்பட்டுக்கு அருகே வந்து சேர்ந்தார். இவ்வாறு முற்காலங்களில் விதியை நிர்ணயிக்கும் சண்டைகள் நடந்த வரலாற்றுச் சிறப்புடைய பானிப்பட்டில் ஆப்கானியர்களும் மராட்டியர்களும் சந்தித்தனர். ஆப்கானியப் படையின் பலம் 60,000. அவற்றில் பாதி அப்தாலியின் சொந்தக் குடிமக்களாவர் (23,000 குதிரைகள், 7,000 காலாள்). மற்ற பாதி இந்தியக் கூட்டாளிகளின் படையாகும் (7,000 குதிரை, 23,000 காலாள்). மராட்டியப் படையில் குதிரை காலாட் படைகளில் 45,000 போர் வீரர்கள் இருந்தனர். சிறந்த குதிரைகளைப் பெற்றிருந்ததுடன், அப்தாலி மராட்டியர்களைக் காட்டிலும் திறன்மிக்க, இயங்கும் பீரங்கிப் படையை வைத்திருந்தார். அவருடைய அதிகாரிகளோ கவசமணிந்திருந்தனர். ஆனுல் மராட்டியர்கள் கவசமணியவில்லை. போரிடும் முறை, படை இயக்கம், ஒழுங்கு இவற்றில் ஆப்கானியப் படை மராட்டியரின் விருந்தினர் படையிலும் மிகச் சிறந்ததாய் இருந்தது. 'பாசறையிலும், போர்க்களத்திலும் கட்டளைகளைக் கண்டிப்பாக வற்புறுத்தல், கீழிருப்போர் சிறிது கீழ்ப்படியாதிருப்பினும் கடுமையாகத் தண்டிக்கப்படல், மேலதிகாரித் தலைவரின் திட்டப்படி ஒவ்வொரு அதிகாரியின் இயக்கங்களும் கட்டுப்படுத்திவைக்கப்படல், சாதாரண படை வீரர் முதல் தளபதி வரை படிப்படியே சங்கிலித் தொடர்போன்று இடைவிடாத உயர்வுப்படிகள், தளபதியின் கட்டளைகளை ஒழுங்காகப் படையினருக்கு அறி

Koviloor Acadamy



மூன்றும் பானிப்பட்டுப் போரின் திட்டம்

(வி. ஏ. ஸ்மித்தின் ஆக்ஸ்போர்ட் ஹிஸ்டரி ஆப் இந்தியாவிலிருந்து எடுக்கப்பட்டது.)

A. பானிப்பட்டு நகரும், மராட்டியப் பாசறையும்.

B. துர்ரானிப் பாசறை.

C. அகமத் ஷாவின் முன்னேறிய கூடாரம். எண்கள் படைகளின் பல்வேறு பிரிவுகளைக் காட்டும்.

Koviloor Academy

விக்கும் மிகச் சிறந்த பணியாளர்களின் அமைப்பு, எல்லாவற்றிற்கும் மேலாகத் துருப்புகளை நன்ருகக் கட்டுப்படுத்தல்—இவை அகமது ஷாவின் படைக்குள்ள தனிச் சிறப்பு. இவை எல்லாம் அக்காலத்தில் ஆசியாவிலேயே வேறு எந்தப் படையிலும் காணப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகப் போரியல் சூழ்ச்சித் திறன் முதலியவற்றில் பரிபூரண மேதைமையும், வல்லாண்மையும் உடைய தலைவர் ஒருவர் இருந்தார். அவர் நாதிர் ஷாவைப் போல ஒன்றுமில்லாத நிலையிலிருந்து உயர்ந்து, அவரைப் போலவே செல்வச் சிறப்பும், போரில் தகர்க்க முடியாத தறுகண்மையும் எய்தியிருந்தார்.

ஒழுங்கில்லாத சில தோழர்களுக்குப் பின்பு பானிப்பட்டருகே இரண்டரை மாதங்களாக நடந்த போர்களினுல் மராட்டியப் படை சில நஷ்டங்களை எய்தியது; போதிய உணவுப்பொருள்கள் இன்றி அப்படை பெரும்பாலும் பட்டினி கிடக்கும் நிலை எய்தியது; 1761 ஜனவரி பதினுன்காம் நாள் காலை அது போரைத் தொடங்கியது. அப்தாலி தம்முடைய வஸீரான ஷா வலிகானின் (Shah Wali Khan) பொறுப்பில் போர்க்களத்தின் நடுவில் 18,000 தம்முடைய தேசியப் படைகளை வைத்திருந்தார்; சுமார் 5,000 கொண்ட பெரும்பாலும் குதிரைகள் அடங்கிய மற்ற இரு படைப் பிரிவுகள் வலது இடது கோடிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. நாஜிப்பும் ஷுஜாவும் படையின் இடது பக்கத்தில் கண்காணித்துக் கொண்டிருந்தனர். ரூஹெலாக்கள் அவருடைய நடுபகுதியின் வலது பக்கத்திலிருந்தனர். பாவோ மராட்டியர்களை மூன்று பிரிவுகளாய்ப் பிரித்துவைத்திருந்தார். நடுப்பிரிவு அவருடைய சொந்த ஆணைக்குக் கீழ் இருந்தது. இடது பக்கம் இப்ராகிம்கான் கார்தியின் ஒழுங்கான பயிற்சி பெற்ற சிப்பாய்களாலும், வலது பக்கம் மல்ஹார் ராவ்ஹோல்கர், ஜான்கோஜி சிந்தியா ஆகியோரின் படைகளாலும் நிரம்பியிருந்தன. மராத்தியர்கள் பீரங்கிமாரி பொழிந்து தாக்குதலை ஆரம்பித்துத் தீரத்துடன் போரிட்டுத் தொடக்கத்தில் சில வெற்றிகளைப் பெற்றனர். இப்ராஹிம் கான் கார்தி துர்ரானிப்படையின் வலது பிரிவை உணர்ச்சி யூட்டிப்போர் செய்ய உக்கிரமாகத் தூண்டினுர். அதனுல் ஏறக்குறைய எட்டு அல்லது ஒன்பதாயிரம் ரூஹெலாக்கள் காயமடைந்தோ அல்லது கொல்லப்பட்டோ இருப்பர். ஷா வலி கானின்கீழ் வந்த துர்ரானிப் படையை சதாசிவராவ் பாவோ கடுமையாகத் தாக்கினுர்; அத்தாக்குதலால் எல்லா வெற்றியும் அவருக்கே கிடைக்கும் போல் இருந்தது. ஆனுல் மராட்டியர்கள் களைத்திருந்த சமயம் பார்த்து அப்தாலி தம் படையின் நடுவிலும் வலப் பக்கத்திலுமிருந்த படைகளுக்குப் புதுப் படைகளைக் கொடுத்து எதிரி சோர்ந்திருக்கும் நல்ல தருணத்தில் 13,000 புதுப்படைகளுடன் தாக்கினுர். அது போர் நிலையைத் தலைகீழாக மாற்றிவிட்டது. எனினும் வெறித்தனமான வீரத்துடன் பெரும் இழப்புக்களையும் பொருட்படுத்தாமல் பாவோ தீரத்துடன் போரிட்டார்; ஆனுல் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. மாலையில் 2-15 மணிக்கு விஸ்-

Koviloor Academy

வாஸ் ராவ் சுட்டுக் கொல்லப்பட்டார். இதனால் பாவோ நம்பிக்கை தளர்ந்தார். எனினும் தம் படை வீரர்களின் பழைய வெற்றி நிலையை அடையச் செய்ய மற்றொரு முயற்சி செய்தார். ஆனால் இதுவும் சுமார் 2-45 மணிக்குத் தோல்வியுற்றது. 'கண்மூடித் திறப்பதற்குள் மராட்டியப் படை கற்பூரம் போலப் போர்க்களத்திலிருந்து மறைந்து விட்டது.' பாவோவின் விலையுயர்ந்த ஆடைகளின் மீது பேராசை கொண்டிருந்த ஐந்து துர்ரானி படைவீரர்கள் அவருடைய தலையை வெட்டி வீழ்த்தினர். இவ்வாறு சதாசிவராவ் தம் நாட்டின் மதிப்பைக் காப்பாற்றுவதற்காகத் தம் உயிரைக் கொடுத்து விழ்ந்தார். எனினும் பானிப்பட்டுப் போர்க்களத்தில் மராட்டியர்கள் தோல்வியுற்றதற்குக் காரணம் சதாசிவராவ் மற்றவர்களின் கருத்துக்களைப் புறக்கணித்து விட்டுத் தப்புக் கணக்குப் போட்டிருந்ததுதான் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்; தோல்வியுற்ற மராட்டியப்படையின் உயர்ந்த தலைவர்கள் எல்லாம் களத்தில் வீழ்ந்தனர்; ஆயிரக்கணக் கான படைவீரர்களும் மற்ற எல்லாவகையான மக்களும், ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் கொலைசெய்யப்பட்டனர். சர் ஜே. என். சர்க்கார் கூறுகிறார்: 'சுருங்கக் கூறுமிடத்து பிளாடன் பீல்டு (Flodden Field) சமயத்தில் அது நாடு முழுவதிலும் ஏற்பட்ட பெருங் கேடாயிருந்தது. மகாராஷ்டிரத்தில் குறைந்தது ஒருவரையாவது இழந்து வருந்தாத குடும்பமேயில்லை; பல வீடுகள் தங்கள் தலைவர்களை இழந்தன. ஒரேயடியில் ஒரு தலைமுறையின் எல்லாத் தலைவர்களும் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.' வெற்றியாளர்கள் அளவிலாக் கொள்ளைப் பொருளைக் கைப்பற்றினர். மராட்டியர்கள் 50,000 குதிரைகள் 200,000 கால்நடைகள், சில ஆயிரம் ஒட்டகங்கள், 500 யானைகள், மேலும் பொருள்கள், நகைகள் இவற்றை இழந்தனர். இந்தப் பயங்கர மான பெருங் கேட்டின் செய்தி ஒருவாணிகர் மூலம் பேஷ்வாவுக்குத் தெரிவிக்கப்பட்டது: 'இரண்டு முத்துக்கள், கரைக்கப்பட்டுவிட்டன; இருபத்திரண்டு தங்க மொகராக்கள் இழக்கப்பட்டுவிட்டன; வெள்ளி செம்பு இவற்றின் இழப்பை மதிப்பிட்டுச் சொல்ல முடியாது.' உடலை உருக்கும் நோயால் ஏற்கெனவே நைந்துகொண்டிருந்த பேஷ்வா இந் தத் தேசியப் பெருங்கேட்டினைக் கேட்டபின் உயிர் பிழைக்க முடிய வில்லை. மனம் உடைந்து பூனாவில் 1761 ஜூன் இருபத்து மூன்றும் நாள் அவர் இறந்தார்.

மூன்றும் பானிப்பட்டுப்போர் மராட்டியர்களுக்குப் பேராபத்தான விளைவுகளை உண்டாக்கிவிட்டது; மராட்டியப் பேரரசின் போக்கையும் திசைதிருப்பிவிட்டது. அளவிலா ஆட்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டதுடன் பானிப்பட்டுத் தோல்வியின் அவமதிப்பு இன்னும் மிகப் பெரியதாயிருந்தது. 'மராட்டிய நட்பை ஆபத்துக் காலத்தில் நம்பி யிருப்பது நாணலின் மீது சாய்ந்து நிற்பது போலாகும் என்று இந்திய அரசுகளுக்கு அது உணர்த்திவிட்டது, பலம் வாய்ந்த மராட்டியக்

Koviloor Acadamy

கூட்டு இராச்சியம் அதிலிருந்து அதன் பிணைப்பை இழந்தது. பேஷ்வாவின் அதிகாரமும் மிகக் கேவலமாகச் சிதைந்தது விட்டது. 1761-க்கு முன்பு நிலைநிறுத்தியிருந்த நிலையை மராட்டியர்கள் பின்பு திரும்பப் பெறவேமுடியவில்லை. ஆனால் பானிப்பட்டுத் தோல்வியினால் மராட்டியர்களின் சக்தி மீளமுடியாத அளவு சிதறிவிட்டதென்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் விரைவில் தங்கள் இழப்புக்களில் சிலவற்றைத் திரும்பப் பெற்றனர்; இந்துஸ்தானத்தில் தங்கள் அதிகாரத்தை மீண்டும் நிறுவுவதற்காகப் புதுமுயற்சிகள் செய்தனர். அவர்களுடைய புத்துயிர்ப்பை எப்போதும் தடுத்து நிறுத்த அப்தாலி இந்தியாவிலேயே தங்கி இருக்க முடியவில்லை. சீக்கியர்கள் மேன்மேலும் வளர்ந்து தொல்லை கொடுப்பவர்களாய் விட்ட பஞ்சாப்பையும், அவர் நீடித்துவைத்திருக்க முடியவில்லை. மராட்டியநாட்டு வரலாற்றில் மாவீரராகக் காணப்படும் அடுத்த பேஷ்வாவான முதலாம் மாதவ ராவ் (Madhava Rao) கி.பி. 1772-ல் தாம் இறக்கும் வரை, ' முதல் பேஷ்வாவினால் தொடங்கப்பட்ட மராட்டிய அரசியல் கொள்கையின் இலட்சியங்களையும் நோக்கங்களையும் செயல் படுத்தினார்.' முதலாம் மாதவராவின் அரசியல் வாழ்க்கையின் முக்கியத்துவத்தைக் கருத்துட் கொண்ட கிராண்ட் டப் ' இந்த மிகச் சிறந்த இளவரசரின் இளமைக்கால முடிவைக் காட்டிலும் பானிப்பட்டுப் போர் மராட்டியப் பேரரசுக்கு அவ்வளவு பெரிய அழிவுக்குக் காரணமாய் இருக்க வில்லை' என்று கூறுகிறார். மராட்டியர்கள் நாடுகடத்தப்பட்டிருந்த முகலாயப் பேரரசரான இரண்டாம் ஷாஆலமை 1772-ல் அவருடைய முந்தையோரின் தலைநகருக்கே கொண்டு வந்தனர். 1789-ல் மாகாதாஜி சிந்தியா தில்லியில் ஒரு சர்வாதிகாரியாகத் தம்மை ஆக்கிக் கொண்டார். மராட்டியர்கள் கடைசியாக முழுதும் அழிவுறுமுன்பு மூன்று முறை பிரிட்டிஷார் இந்தியாவில் ராச்சியம் நிறுவுவதை எதிர்த்திருக்கின்றனர்.

இருந்த போதிலும் மூன்றும் பானிப்பட்டுப்போர் ' இந்தியாவின் தலைவிதியை நிர்ணயித்து விட்டது.' ' இந்திய மேலாண்மைக்காக முயன்ற பிரிட்டிஷார் எளிமையாகத் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுமளவுக்கு மராட்டியர்களும், முகம்மதியர்களும் ஒருவருக்கொருவர் பல வீனப்படுத்திக் கொண்டனர்.' வளர்ந்து வந்த பிரிட்டிஷ் சக்தி, அதன் மூலம் தன் அதிகாரத்தை இந்தியாவில் ஒரு நிலைப்படுத்தவும், பலப்படுத்தவும் தேவையான வாய்ப்பைப் பெற்றது. ' இந்தியாவில் பிரிட்டிஷ் மோலாண்மைக்குப் பிளாஸி (Plassey) போர் விதை விதைத்தது என்றால், பானிப்பட்டுப்போர் அது வளர்ந்து வேர் வீழ்க்கும் படி செய்தது' எனலாம். இந்தியாவில் ஆங்கிலேயரின் மேலாண்மையை மீண்டும் மராட்டியர்கள் தடைசெய்ய முற்படும் போது, அதற்குள் ஆங்கிலேயர்கள் தங்கள் நிலையில் பெரும் வளர்ச்சியை அடைந்துவிட்டனர்.

Koviloor Academy

6. முகலாய ஆட்சி முறை

1. முகலாய அரசாங்கத்தின் தன்மை

தில்லிச் சுல்தான்களின் கருத்துக்களுக்கும், கொள்கைகளுக்கும் மாருன கருத்துக்களுடனும், கொள்கைகளுடனும் முகலாய ஆட்சியை நிறுவியது அக்பரின் செயல்களுள் மிக முக்கியமானதாகும். அவருக்கு முந்திய இருவரில் பாபருக்கு உள் நாட்டு அரசாங்கமுறையை விரிவு படுத்தப் போதிய நேரமோ, வாய்ப்போ இல்லை; ஹுமாயூனுக்கு, அதைச்செய்வதற்கு விருப்பமோ, திறமையோ இல்லை. மிக உயர்ந்த அரசியல் மேதைமை வாய்ந்த அக்பர் ஆட்சி முறை ஒழுங்கமைப்பின் சில கூறுகளில் சூர்களின் எடுத்துக்காட்டுக்குக் கடமைப் பட்டிருக் கிருர். முகலாய அரசாங்கம் 'இந்தியக் கூறுகள், இந்தியக் கூறல் லாதப் பிற கூறுகள் இவற்றின் இணைப்பே' எனலாம். இன்னும் சரியாகக் கூறப்போனல் அது 'இந்தியப் பின்னணியில் அமைந்த பாரசீக அராபிய முறையாகும்.' படைத்துறைச் சார்புடையதாக இருந்தமை அதனுடைய தலையாய பண்பாகும். முகலாய அரசாங்கத் தின் ஒவ்வொரு அதிகாரியும் படை வீரர் பட்டியலில் தம் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அது மத்திய அரசிடத்து எல்லா அதிகாரங்களும் குவிக்கப்பட்ட முடியாட்சியாக இருந்தது. அரசரின் அதிகாரம் அளவில்லாதது. அவருடைய வாய்ச் சொல்லே சட்டம்; அவருடைய விருப்பத்தை எவரும் மறுத்துக் கூற முடியாது. அரசாங் கத்தில் அவரே மிகத் தலைமையான அதிகாரம் உடையவராயும், அரசாங்கத்தின் தலைவராயும், அரசப்படைகளின் தளபதியாயும், நீதியின் ஊற்ருகவும், தலைமைச் சட்டமியற்றுவோராகவும் விளங்கினர். அவர் கடவுளின் காலிபா (Khalifah) ஆவர்; இஸ்லாமிய மரபுகளையும் இஸ்லாமிய வேத நூல்களையும் அனுசரித்து, அவற்றின் விதிகளுக்கு அவர் உட்பட்டு நடக்க வேண்டியவராவர். ஆனல், செயல் முறையில் ஒரு வலிமைவாய்ந்த அரசர், மதச் சட்டத்தையும் வேண்டுமானல் மீறி நடக்க முடியும். இக்காலத்தில் உள்ளது போல அமைச்சர்களின் குழு என்னும் ஒன்று அரசாங்கத்தில் அப்போது இல்லை. அமைச்சர்கள் தங்கள் அரசர் கலந்தாலோசிக்க வேண்டும் என்று உரிமையுடன் என்றும் கூறமுடியாது; அவர்களுடைய ஆலோசனையை ஏற்பதோ,

Koviloor Acadamy

தள்ளுவதோ எல்லாம் பேரரசரின் விருப்பத்தைப் பொறுத்தே அமைந்திருந்தன. உண்மையில் எல்லாம் பேரரசரின் ஆளுமையையும், அவருடைய மந்திரிகளின் ஆளுமையையும் பொறுத்திருந்தன. ஷா ஜஹானைப் போன்ற அறிவு வாய்ந்த ஓர் அரசர் ஒரு சாதுல்லா கானைத் தவருமல் கலந்தாலோசிக்க விரும்பினர். ஆனல், ஹுஸேன் ஆலி கான் போன்ற அமைச்சர் தங்களால் முடி சூடப்பட்ட பொம்மை அரசர்களுக்கு எவ்வித மதிப்பும் தராமல், சில சமயங்களில் வெளிப்படையாக மானக்கேடு உண்டாகுமாறு நடந்துகொண்டனர். எனினும், இந்தியாவின் முதல் ஆறு முகலாய அரசர்கள் நல்ல பொது அறிவு வாய்ந்தவர்களாயிருந்தனர்; அதனல், அவர்களுடைய, முடியாட்சி பொறுக்க முடியாத கொடுமையுடன், மக்களின் உரிமைகளையும் வழக்கங்களையும் மிதித்து நாசமாக்கு மளவுக்குச் சீர்கேடு அடையவில்லை. 'நாட்டுக்கு நன்மை கருதும் சர்வாதிகாரிகளின்' உணர்ச்சியைப் பெற்றிருந்த அந்த அரசர்கள் தங்கள் குடிமக்களின் நலத்துக்காகப் பல விதங்களிலும் கடினமாய் உழைத்தனர். சிறப்பாக மத்திய ஆட்சித் தலைநகரைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும், மாகாணங்களின் அரசப் பிரதி அரசாங்கங்கள் இருக்குமிடங்களிலும் மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வந்தனர். ஆனல் அந்தக்காலத்தில் அரசாங்கம் 'எவ்வித சமுதாய வேலையையும் மேற்கொள்ளவில்லை; கிராமப் புறங்களில் கடுமையான குற்றம் அல்லது அரச ஆணைக்கு எதிர்ப்புச் செய்யப்படும்வரை அரசாங்கம் கிராம மக்களின் வாழ்க்கையில் தலையிடவில்லை. 'ஒரு கண்ணேட்டத்தில் முகலாயப் பேரரசர்களின் மாபெரும் சக்தி அளவிடப் பட்டதாகவே இருந்தது. அவர்களுடைய கட்டளைகள் பேரரசுக்கு நெடுந் தொலைவிலுள்ள இடங்களில் எளிதாக வற்புறுத்தப்பட முடியாமல் இருந்தன; சோட்டா நாக்பூர் (Chota Nagpur), சந்தால் பர்கானுக்கள் போன்ற சில மலைப்பிரதேசங்களைப் பற்றிச் சொல்லவேவேண்டியதில்லை. அப்பிரதேசங்களில் பேரரசரின் ஆணை பெரும்பாலும்செல்லத் தக்கதாக இல்லை. ஒவ்வொரு பேரரசரும் தங்கள் ஆட்சியின் முதல் வருடத்திலேயே, ஒரே வகையான வரிகளையும் தீர்வைகளையும் ஒழிப்பதற்காக ஆணைகள் பிறப்பிப்பதைக்காணும்போது, அவற்றை ஒழிக்க முன்பு செய்த முயற்சிகள் பயனில்லாதனவாய், அல்லது செயல்பாட்டிற்கு ஏலாதனவாய் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்குவர வேண்டியிருக்கிறது. ஷா ஜஹான் காலத்திலும், அவுரங்கசீப் காலத்திலும் சுபாதார்களும், மாகாணத் திவான்களும், சுங்க அதிகாரிகளும் முக்கியமாகத் தங்கள் தந்நல நோக்கங்களால் அடிக்கடி மத்திய அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு நேர்மாருக நடந்துவந்தனர் என்பதற்கு இந்தியாவிலிருந்த ஆங்கிலேயத் தொழிற்சாலைகளில் உள்ள பல பதிவேடுகளில் ஏராளமான குறிப்புக்கள் காணப்படுகின்றன. அதனல் ஷா ஜஹான், அவுரங்கசீப் இவர்களைக்

Koviloor Acadamy

காட்டிலும் பலங்குறைந்த பிற்பட்ட ஆட்சியாளர்கள் காலத்தைப் பற்றிக் கூறவேண்டியதில்லை.

2. பிரபுக்கள்

பல காரணங்களால் முகலாயப் பிரபுக்கள் சபை துருக்கிய, தார்த்தாரிய (Tartar) பாரசிக, இந்திய முஸ்லிம், இந்துக் கூறுகள் போன்ற பல வகையான இனக்கூறுகள் நிரம்பியதாய் இருந்தது. சில ஐரோப்பியர்கள் கூடப் பிரபுக்களுக்குரிய பட்டங்களைப் பெற்றனர். கொள்கையளவில் பிரபுத்துவம் பரம்பரையாக வருவதன்று; ஆனால் பண்பில் முழுதும் அதிகாரத் தொடர்புடையதாகவே இருந்தது. ஒரு பிரபுவின் வாழ்க்கை அக்கறை முழுதும் அவருடைய ஜாகீரின் நலத்தைப் பற்றியதாகவே இருந்தது. அவர் இறந்த பிறகு அரசர் அந்த ஜாகீரைப் பறித்துக் கொண்டுவிடுவார்; பட்டங்களும், சம்பளமும் பொதுவாகத் தந்தை யிடமிருந்து மகனுக்கு மாற்றப்பட முடியாது. சர் ஜே. என். சர்க்கார் குறிப்பிடுவது போல அந்தப் பறிமுதல் செய்யும் முறையின் விளைவு ‘மிகத் தீங்கு பயப்பதாய் இருந்தது.’ பிரபுக்கள் மிக ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தனர்; பயனில்லாத படாடோபத்தில் தங்கள் வாழ்க்கை முழுதும் எல்லாப் பணத்தையும் செலவழித்து வந்தனர். பிரபுக்கள் குழு ‘பொது மக்களின் சுதந்தரத்தை மிக வலிமையுடன் காப்பாற்ற முடியாததாயும், அரசரின் முடியாட்சிக்கு எவ்விதத் தடையும் விதிக்க இயலாததாயும் இருந்தது. அது பரம்பரையாக வந்த சுதந்தர முடைய பிரபுக்களின் குழுவாக இல்லை; அவர்களுடைய மதிப்பும், செல்வமும் ஒவ்வொரு தலை முறையிலும் அரசரின் தயவையே நம்பி யிருக்கவேண்டியதாய் இருந்தன. அதனால், அவர்கள் அரசரின் தந்நல விருப்பத்திற்கு எதிராகத் துணிந்து ஒன்றும் சொல்ல முடியாதவர்களாயும், அரசரின் கொடுங்கோன்மைக்கு எதிர்ப்பு ஒன்றும் தெரிவிக்க முடியாதவர்களாயும் இருந்தனர்.

3. பொது ஊழியமும் மத்திய அரசும்

பேரரசின் படைத்துறைப் பலத்தைப் போற்றிவைத்துக் கொள்வதற்காக முகலாயர்கள் மிகுந்த எண்ணிக்கையுள்ள அயல் நாட்டுத் துணிகரச் செயல் வீரர்களை அமர்த்திக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாய் இருந்தது. அக்பர் ‘இந்தியா இந்தியர்களுக்கே’ என்ற கொள்கையைத் தொடங்கிவைத்து இந்துக்களுக்கும் அதிகாரங்களைக் கொடுத்து வந்தாலும், முகலாயப் பொது ஊழியத்தில் அயல் நாட்டுக் கூறுகளே அதிகமாக இருந்தன. ஜஹாங்கீர், ஷாஜஹான் காலங்களில் பொதுப் பணிகளின் பொதுப் பண்பு மாருமல் அப்படியே இருந்தது. ஆனல் அத்துறையின் திறமைக் குறைவு ஜஹாங்கீர் காலத்திலேயே ஆரம்பித்து அவருடைய மகன் காலத்தில்

Koviloor Acadamy

மிகவும் தெளிவாய் அறியக் கூடியதாய் இருந்தது ; அவுரங்கசீப் காலத்தில் நிலைமை இன்னும் மோசமடைந்தது. 1681-ல் இளவரசர் அக்பர் அவுரங்கசீப்புக்கு இவ்வாறு எழுதினர் : 'நாட்டின் அதிகாரிகளும் எழுத்தர்களும் வியாபாரிகளின் வழக்கத்தை மேற்கொண்டு வாணிகர்களாகி விட்டனர். பொன் கொடுத்துப் பதவிகளை வாங்கியும், வெட்கப்படத் தக்க காரணங்களுக்காக அவற்றை விற்றும் வருகின்றனர். உப்பைத் தின்னும் ஒவ்வொருவரும் உப்புக்களஞ்சியத்தை உடைத்தெறிகின்றனர்.'

அரசாங்கத்தின் ஒவ்வொரு அதிகாரியும் மன்சாப் (Mansab) அல்லது மதிப்புமிக்க பதவியும், ஊதியமும் உள்ள அரசாங்கப் பணியில் அமர்த்தப்பட்டனர். அதனால் அவர்கள் கொள்கை யளவில் அரசாங்கத்தின் படைத்துறை ஊழியத்திற்குப் பல படைகளை வழங்கும் கட்டுப்பாட்டுடையவராய் இருந்தனர். இவ்வாறு மன்சாப்தார்கள் நாட்டின் அதிகாரப் பிரபுக்களாக உருவாயினர். 'படை, பிரபுத்துவம், நாட்டு ஆட்சி இவையெல்லாம் ஒன்ருய்க் கலந்த' முறையாகவே பிரபுக்களின் முறை இருந்தது. 'பத்துப் பேருக்குத் தளபதி' முதல் '10,000 பேருக்குத் தளபதி' வரை முப்பத்து மூன்று அதிகாரப் பதவிப் பிரிவுடைய அதிகாரிகளை அக்பர் நியமித்திருந்தார். அக்பர் ஆட்சியின் நடுப்பகுதிவரை ஒரு சாதாரண அதிகாரியின் உயர்ந்த அந்தஸ்து 5,000 ஆட்களுக்குத் தளபதியாயிருப்பது தான். 7,000 முதல் 10,000 வரையுள்ள ஆட்களுக்குத் தளபதியாயிருப்பதற்கு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனல், அவருடைய ஆட்சி முடிவில் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. அவருக்குப் பின்வந்தவர்களின் காலத்தில் அதிகாரிகள் இன்னும் உயர்ந்த பதவிகளுக்கு உயர்த்தப்பட்டனர். மன்சாப்தார்கள் பேரரசர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ; பதவி உயர்வு அளிக்கப்பட்டனர் ; வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். ஒவ்வொரு அதிகாரப் பிரிவினருக்கும் குறிப்பிட்ட சம்பள விகிதம் இருந்தது. அதிலிருந்து அவர்கள் குதிரைகள், யானைகள், கழுதைகள், வண்டிகள், இவற்றை வைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், மன்சாப்தார்கள் இந்த விதியை அரிதாகவே நிறைவேற்றினர். இர்வின் எழுதுகிருர் : 'பரிசோதனையும் குறியிடுகளும் இருந்த போதிலும், ஒரு சில மன்சாப்தார்களே தாங்கள் பெறும் சம்பளத்துக் கேற்றவாறு முழு எண்ணிக்கையுள்ள குதிரை விரர்களை வைத்துக்கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்று நாம் உறுதியாக நம்பலாம்.' மன்சாப்தாரியின் மதிப்பு பரம்பரையாக வருவதன்று. அரச ஊழியப் பணியாளர்களுக்கு நிறைந்த பயிற்சி தரப்படவில்லை. ஓர் அதிகாரி எந்த நேரத்திலும் முற்றிலும் புதிய பணியை ஏற்றுக்கொள்ளும்படி கூறப்படலாம். 'சரியான வேலைக்குச் சரியான ஆளைத் தேர்ந்தெடுக்

Koviloor Academy

கும் அக்பரின் வியக்கத்தக்க திறமையால் இந்த முறையின் தீங்குகள் தவிர்க்கப்பட்டன. ஆனால் அரசர்களின் ஆளுமை மாறும் போது, பிற்காலத்தில் இம்முறையில் சீர் கேடுகள் தோன்றிவரலாயின.'

முகலாய அரசாங்கத்தின் அதிகாரிகள் இரண்டு விதங்களில் தங்கள் சம்பளங்களைப் பெற்றுவந்தனர். அரசாங்கத்திலிருந்து பண மாக அவர்களுக்குச் சம்பளம் வருவதும் உண்டு. அல்லது சில சமயங்களில் தாற்காலிகக் காலத்துக்கு அவர்களுக்கு ஜாகீர்கள் கொடுக்கப்பட்டு வந்தன. எனினும் அவர்கள் தங்களுடைய ஜாகீர் களின் நிலங்களில் உரிமை கொண்டாட முடியாது. ஆனால், அவர் களுடைய சம்பளத்திற்குச் சமமான நில வருவாயைக் குறிப்பிட்ட நிலங்களிலிருந்து வசூலித்து அதை அனுபவிக்கும் அளவுக்கே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். 'அதிகமாக வசூலிப்பது நிலத்தை உழுவோர்களுக்கு அநீதி இழைப்பதாகவும், அரசாங்கத்துக்குத் துரோகம் செய்வதாகவும் ஆகிவிடும். ஜாகீர்கள் அடிக்கடி ஒரு மன்சாப்தாரிடமிருந்து இன்னொரு மன்சாப்தாருக்கு மாறிவந்தன. எனினும் ஜாகிர் முறை ஜாகீரைப் பெற்றவர்களுக்கு 'அளவுக்கு மீறிய சக்தி, சுதந்தரம் இவற்றைக் கொடுத்தது. ஷெர்ஷாவைப் போலவே அக்பரும் தம்முடைய அதிகாரிகளுக்குப் பணமாகச் சம்பளம் கொடுக்க முயன்றதும் முடிந்தவரை ஜாகீர்களைக் கல்சா நிலங்களாக மாற்ற முற்பட்டதும் போற்றத்தக்கனவே. அய்னி அக்பரி (Ain-i-Akbari) யிலிருந்து நாம் அறிவதுபோல, பணமாகவோ ஜாகீர்களா கவோ சம்பளம் கொடுக்கப்பட்டாலும், முகலாயப் பொதுப் பணி ஊழியர்கள் மிக அதிகமான சம்பளங்களைப்[1] பெற்று வந்தனர். அதனால் மிகவும் புதிய துணிகரச் செயல் செய்யும் மேலை நாட்டினரும் மத்திய ஆசியாவினரும் அப் பொதுப்பணிக்கு ஈர்க்கப்பட்டனர். அவுரங்கசீப்பின் காலத்துக்கு முன் இல்லாவிடிலும், அவர்காலத்திற் குப் பின்பு பலவித ஊழல்களும் தீங்குகளும் முகலாயப் பொதுப்பணி ஊழியத்தில் மலிந்தன.

4. அரசாங்கத் துறைகளும் தலைமை அதிகாரிகளும்

முகலாயப் பேரரசர்கள் தனி முழு அதிகாரங்கள் பெற்றவராய் இருந்தாலும், அவர்கள் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும், அதன் எண்ணிலாத விஷயங்களைக் கவனிப்பதற்காகப் பல அதிகாரி களை நியமித்தனர். அரசாங்கத்தின் முக்கியமான துறைகள் : (அ)

[1] படைகளை வைத்திருப்பதற்கு வேண்டிய செலவுகளையும் மற்றச் சில்லறைச் செலவுகளையும் கழித்து மூர்லண்ட் (Moreland) கணக்கிடுகிறார்: 5,000 பேருக்குத் தலைவரான மன்சப்தார் மாதம் குறைந்தது ரூ 18,000 நில வருமானம் பெறுவார். 1,000 பேருக்குத் தலைவர் குறைந்தது ரூ 5,000 பெறுவார். 500 பேருக்குத் தலைவர் குறைந்தது மாதம் ரூ 1,000 பெறுவார்.—மூர்லண்ட், அக்பரின் மரணத்தின் போது இந்தியா, பக். 66 முதல்.

Koviloor Academy

கானி-சாமானின் (Khan-i-Saman) கீழ் பேரரச அரண்மனைத் துறை (ஆ) திவானின் கீழ்க் கஜானு (இ) மீர் பக்ஷியின் (Mir Bakshi) கீழ்ப் படைத்துறைச் சம்பளம் வழங்கும் கணக்கு அலுவலகம். (ஈ) தலைமைக் காஸியின் கீழ் நீதித்துறை. (உ) தலைமைச் சத்ர் (Chief Sadr) அல்லது சத்ர்-உஸ்-சுதூரின் (Sadr-us-Sudur) கீழ் மத அறக் கட்டளைகளும் கொடைகளும் (ஊ) முஹ்தசிப் (Muhtasib) பின் கீழ்ப் பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டுத்துறை என்பன. வருமானம், நீதி இவற்றின் முழுப் பொறுப்பை ஏற்றிக்கொண்டிருந்த திவான் அல்லது வஸீர்தான் பொதுவாக அரசாங்கத்தின் மிக உயர்ந்த அதிகாரியாக இருந்தார். பக்ஷி பல்வேறு தொழில்களைக் கவனித்து வந்தார். அவர் அரசாங்கத்தின் எல்லா அதிகாரிகளுக்கும் சம்பளம் வழங்கும் தலைமைச் சம்பளத் தளபதியாய் இருந்தார். 'கொள்கையில் படைத்துறையைச் சேர்ந்த வராயினும்' அவர் படைக்கு ஆள் திரட்டல், மன்சாப்தார்கள் போன்ற உயர்ந்த அதிகாரிகளின் பெயர்ப் பட்டியல்களைத் தயாரிப்பது போன்ற பணிகளும் அவருக்கு இருந்தன. போருக்கு ஆயத்தமாகும் போது, அவர் பேரரசரின் முன்பு படைவீரர்களின் முழுப் பெயர்ப் பட்டியலையும் சமர்ப்பிக்க வேண்டும். கானி சாமான் என்னும் உயர் அதிகாரி அரசாங்க அரண்மனை வேலைகளை, அவை "சிறியவையாயினும், பெரியவையாயினும்" எல்லா விஷயங்களையும் கவனித்துக் கொள்ளவேண்டும். முஹ்தசிப்கள் அல்லது பொது ஒழுக்கக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் முகம்மது நபியின் உத்தரவுகளையும், ஒழுக்க விதிகளையும் நாட்டுமக்கள் கைக்கொள்ளுமாறு கவனித்துக்கொண்டனர். மேற்குறிப்பிட்ட அதிகாரிகளினும் சிறிது தாழ்ந்த மற்ற அதிகாரிகள் மீர் ஆதிஷ் (Mir Atish) அல்லது தாரோகா-இ-தோப் கானு (Daroga-i-Topkhana) (பீரங்கிப் படைத் தலைவர்), தாக் சௌகியின் தாரோக (Daroga of Dak Chowki) (தபால் போக்குவரத்துத் துறையின் தலைவர்), நாணயச் சாலையின் தாரோக, மீர்மால் (Mir Mal) அல்லது லார்ட் பிரிவி சில் (அரசரின் தனி முத்திரையின் தலைவர்), முஸ்தௌபி (Mustaufi) அல்லது தணிக்கைத் துறை அதிகாரி, நாஸிர் இ-புயுதாத் (Nazir–i-Buyutat) அல்லது அரசாங்கத் தொழிற்சாலையின் கண்காணிப்பாளர், முஷ்ரீப் (Mushriff) அல்லது நில வருவாய்த்துறைச் செயலாளர், மீர் பஹ்ரீ (கப்பற் துறையின் தலைவர்), மீர் பார் (Mir Barr) அல்லது காட்டிலாகாக் கண்காணிப்பாளர், வாகா-இ-நாவிஸ் (Waqa-i-navis) அல்லது செய்திகொணர்ந்தளிப்போர், மீர் அரஸ் (Mir Arz) அல்லது பேரரசருக்கு அளிக்கப்பட்ட மனுக்களின் பொறுப்பாளர், மீர் மன்ஸில் (Mir Manzil) அல்லது குவார்டர்-மாஸ்டர் ஜெனரல், மீர் டோஸ்க் (Mir Tozak) அல்லது சடங்குகளின் தலைவர் என்போராவர்.

Koviloor Academy

5. காவல் துறை

நாட்டுப் புறங்களைப் பொறுத்தவரை முகலாயர்கள் குற்றங்களைத் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் எந்தப் புதிய ஏற்பாடுகளையும் செய்யவில்லை. இவை பண்டைக் காலந் தொட்டே கிராமத்தலைவரிடமும், அவருடைய ஆட்களான காவலாளிகளிடமும் இருந்தன. அமைதிக்குலைவுக் காலத்தில் மட்டும் சில சமயங்களில் குழப்பங்கள் ஏற்படும் நாட்டுப்புறங்களில் இந்த முறை ஒரு நல்ல அளவுக்குப் பாதுகாப்பு அளிப்பதாய் இருந்தது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை நீடித்திருந்தது. நகரங்களிலும் பட்டணங்களிலும் பொது மக்களின் ஒழுங்கையும், கட்டுக்கோப்பையும் நிலைநிறுத்துவது உள்பட எல்லாப் போலிசின் கடமைகளும் கொத்தவால்களுக்கு இருந்தன. அய்னி-அக்பரியில் அவர்களுடைய கடமைகள் மிகப் பலவாகக் கூறப்படுகின்றன: (1) திருடர்களைக் கண்டு பிடிப்பது. (2) விலைகளை ஒழுங்கு படுத்துவது; எடைகளையும் அளவுகளையும் சரிபார்ப்பது. (3) இரவில் காவல்செய்து நகரை ரோந்து செய்வது. (4) குடிமக்கள், பாதைகள் இவற்றைப்பற்றிய பதிவேடுகளை வைத்திருப்பது; அயலாரின் இயக்கங்களைக் கண்காணிப்பது. (5) நாடோடிகளிலிருந்து ஒற்றர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்துவது; அருகிலுள்ள கிராமங்களில் நடக்கும் செய்திகளைச் சேகரிப்பது; பல்வேறு வகைப்பட்ட மக்களின் வருவாயினையும் செலவையும் பற்றிய விவரங்களைத் தொகுப்பது. (6) சந்ததியில்லாது இறந்து விட்ட அல்லது காணாமற் போன ஆட்களின் சொத்துக்களைக் கண்டு பிடித்து அவற்றைக் கண்காணிப்பது. (7) எருதுகள், எருமைக்கடாக்கள், குதிரைகள், ஒட்டகங்கள் இவற்றைக் கொல்வதைத் தடை செய்வது. (8) விதவைகளின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை (இறந்த கணவனுடன்) எரிப்பதைத் தடுப்பது; பன்னிரண்டு வயதுக்கு முன்பு சுன்னத்துச் செய்வதைத் தடுப்பது முதலியனவாகும். அய்னி அக்பரியில் கொத்தவால்களுக்குரிய கடமைகளாகக் கூறப்படும் இந்த நீண்ட பட்டியல் 'கொத்தவால்களின் இலட்சியக் கடைமைகளைக்' குறிப்பதல்லாமல் 'உண்மையான செயற் பாட்டு நிலையைக்' குறிக்கவில்லை என்று சர். ஜே. என். சர்க்கார் நம்புகிறார். ஆனால், மனுச்சி கூட கொத்தவால்களின் கடமைகளை நேரில் பார்த்ததாக நீண்டதொரு பட்டியல் தருகிறார். எப்படியிருந்தபோதிலும் நகரப் புறங்களில் அமைதியையும் பொது மக்களின் பாதுகாப்பையும் காப்பதே, கொத்தவாலின் முக்கியமான வேலை என்பது உறுதியாய்த் தெரிகிறது. சர்க்கார்கள் அல்லது மாவட்டங்களில் பொதுவாக பௌஜ்தார்கள் போன்ற அதிகாரிகளால் சட்டமும் ஒழுங்கும் காக்கப்பட்டன. 'பௌஜ்தார்', அவருடைய பெயர் குறிப்பிடுவது போல, நாட்டில் நிலையாக வைக்கப்பட்ட படைகளின் தளபதியாகவே இருந்தார். அவர் சிறு கிளர்ச்சிகளை ஒடுக்குவது, கொள்ளைக் கூட்டங்களைக் கலைப்பது அல்லது கைது

Koviloor Acadamy

செய்வது, எல்லாக் கடுங் குற்றங்களையும் கண்டுபிடிப்பது, நிலவரி வசூலிக்கும் 'அதிகாரிகள், குற்ற நடுவர், ஒழுங்குக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோருக்கு எதிர்ப்புத் தெரிவிப்போரைத் பலாத்காரத்தின் மூலம் பயங்காட்டுதல் முதலியவற்றைச் செய்யுங் கடமை உடையவராயிருந்தார்.' போலிஸ் ஏற்பாடுகள் எல்லாம் சில விஷயங்களில் மிகச் சிறந்தவையாகவே இருந்தன. எனினும் 'பொது மக்களின் பாதுகாப்பு இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் வேறு பட்டுக் கொண்டே இருந்தது.'

6. சட்டமும் நீதியும்

இக்காலத்திலிருப்பது போலச் சட்ட மன்றமோ, எழுதிவைக்கப் பட்ட சட்ட முறைகளோ முகலாயர் காலத்தில் இல்லை. இதற்குக் குறிப்பிடத்தக்க விதி விலக்காக இருந்தவை ஜஹாங்கீரின் பன்னிரண்டு கட்டளைகளும், அவுரங்கசீப்பின் கண்காணிப்பில் தயார் செய்யப்பட்ட முஸ்லீம் சட்டத்தின் சாரமான பதவா-இ-ஆலம்கீரியும் (Fatawa-i-Alamgiri) ஆகும். நீதிபதிகள் முக்கியமாகக் குர்ரானின் கட்டளைகள் அல்லது விதிகள், பதவாக்கள், அல்லது மிகச் சிறந்த ஜூரிகளினால் மதச் சட்டத்திற்கு முன்பு கொடுக்கப்பட்ட விளக்கங்கள், கானுன்கள் (Qanuns) அல்லது பேரரசர்களின் கட்டளைகள் முதலியவற்றையே பெரிதும் பின்பற்றினர். பொதுவாக அவர்கள் வழக்கத்திலிருந்த் சட்டங்களைப் புறக்கணிப்பதில்லை. சில சமயங்களில் மனச்சாட்சிக்குப் பொருந்திய கொள்கைகளை மேற்கொண்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, தெய்வீகக் கட்டளைகளுக்கு மாறுபடாத போது பேரரசரின் சட்ட விளக்கங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன.

முகலாயப் பேரரசர்கள் விரைவாக நீதி வழங்குவதைத் தங்களுடைய முக்கியமான கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். இதில் ஆட்சி முறைச் சட்டம் போன்ற எவ்வகைப் பாதுகாப்புச் சட்டத்தினாலும் அவர்களுடைய அதிகாரிகள் எவ்விதச் சிறப்பான பாதுகாப்பையும் பெறவில்லை. 'நான் அநியாயச் செயல் செய்வேனானால் எனக்கு எதிராக நானே தீர்ப்பு வழங்கிக் கொள்வேன்' என்று அக்பர் கூறினார். மான்சர்ரேட் (Monserrate) என்பவரின் நூலை ஆதாரமாகக் கொண்டு பெருஷி (Peruschi), 'அவர் நீதி வழங்குவதில் மிகப் பெரிதும் ஆர்வமுடையவராகவும் கவனமுடையவராகவும் இருந்தார்' என்று கூறுகிறார். ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் போன்ற மற்றப் பேரரசர்கள் நீதியின்மேற் கொண்டிருந்த காதலைப்பற்றி அக் காலத்து ஐரோப்பியப் பயணிகள் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருக்கின்றனர். பல அதிகாரிகள் மூலம் எல்லாவகையான தடைகளையும் தாண்டிப் பேரரசரை அணுகுவது என்பது மிக எளிதாத இல்லாது

Koviloor Academy

போயினும், முகலாயப் பேரரசர்களுள் குறைந்தது அக்பர், ஜஹாங்கீர் என்ற இருவரும் நேரடியாகக் குடிமக்கள் வந்து விண்ணப்பிக்கும் உரிமையை அளித்திருந்தனர் (இங்கிலாந்தில் இவ்வுரிமை நீண்ட காலக் கடும் போரரட்டத்துக்குப் பின்னரே கிடைத்தது.) ஜஹாங்கீர் தம் அரண்மனைக்கு வெளியே சங்கிலியால் சேர்க்கப்பட்டிருந்த பல ஆராய்ச்சி மணிகளைத் தொங்க விடும்படி செய்து, பேரரசரின் கவனத்திற்கு விண்ணப்பஞ் செய்வோரின் குறைகள் அதன் மூலம் எட்டும்படி செய்தார்.

முகலாய ஆட்சியில் காஜி-உல்-காஸாத் அல்லது தலைமைக் காஸிதான் முதன்மை நீதித்துறை அதிகாரியாய் இருந்தார். அவர் மாகாணத் தலைநகர்களில் காஸிகளை நியமித்தார். ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவரையும் பற்றிய சிவில், குற்ற வழக்குகளைக் காஸிகள் விசாரணை செய்து வந்தனர், முப்திகள் (Muftis) முஸ்லிம் சட்டத்தை விளக்கிக் கூறிவந்தனர். மீர் அதில்கள் (Mir Adls) தீர்ப்புக்களை ஆராய்ந்து வழங்கி வந்தனர். 'காஸிகள் நீதியாகவும், நேர்மையாகவும், ஒரு தலைச் சார்பின்றியும் இருக்க வேண்டும் என்றும், நீதிமன்றத்திலும், அரசாங்க மனைகளிலும் வாதி பிரதிவாதிகளின் முன்னிலையில விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும், கட்சிக்காரர்களிடமிருந்து பணம் வாங்கக் கூடாது என்றும், பொதுமக்களில் எவரேனும் கொடுக்கும் விருந்துபசாரம் முதலிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்றும் எதிர்பார்க்கப்பட்டனர். வறுமையே அவர்களுடைய பெருமையாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது.' ஆனால் செயல் முறையில் அவர்கள் தங்கள் அதிகாரத்தைத் தவறான வழிகளிலேயே பயன்படுத்தி வந்தனர். சர். ஜே. என். சர்க்கார் கூறுவதுபோல 'முகலாயர் காலத்தில் காஸிகளின் இலாக்கா எல்லாராலும் இகழ்ந்து கூறத் தக்கதாயிருந்தது.' காஸிகளின் நீதிமன்றங்களைத் தவிர அவற்றின் கீழ்த் தொடக்க நீதிமன்றங்கள் இல்லையாதலின் கிராமத்தினரும், சிறு நகரங்களில் வாழ்ந்தோரும், தங்கள் ஊர்களில் காஸிகள் இல்லாததால் 'சாதி நீதிமன்றம் அல்லது பஞ்சாயத்துகளிடமோ அல்லது நடு நிலைமை தவறாத நடுவர் (Salis) ஒருவரிடம் முறையிட்டும், அல்லது பலாத்காரத்தைப் பயன்படுத்தியும் தங்கள் வழக்குகளைத் தீர்த்துக் கொண்டனர். அடியார்கள், அறிஞர்கள், துறவிகள் முதலியோருக்குப் பேரரசர் அல்லது இளவரசர்கள் நன்கொடையாக அளித்த நிலங்களை சத்ர்-உஸ்-சுதூர் (Sadr-us-Sudur) அல்லது தலைமை சத்ர் கண்காணித்து வந்தார். அவருக்குக் கீழ் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்நாட்டு சத்ர் ஒருவர் இருந்தார்.

நகர, மாகாண நீதிமன்றங்களுக்கும் மேலாகப் பேரரசரே தலைவராய் இருந்தார். 'காலத்தின் காலிப்'பாகக் கருதப்பட்ட பேரரசரே நீதியின் ஊற்றாகவும், கடைசி முறையீட்டு மன்றமாகவும் விளங்கினார்.

Koviloor Acadamy

சில சமயங்களில் சில்லறை வழக்குகளைத் தீர்க்கும் நீதிமன்றமாகவும் அவர் இருந்தார். பேரரசரைக் கேட்காமல் தண்டனை விதிக்கப்படலாம் உறுப்புக்குக் குறைத்தல், உறுப்புச் சிதைத்தல், கசையாலடித்தல் முதலிய கடுந்தண்டனைகளும் நீதி மன்றங்களால் தரப்படலாம். ஆனால் தூக்கிலிடுவதற்கு அவருடைய இசைவு தேவையாக இருந்தது. சிறை அமைப்பு முறை அக்காலத்தில் இல்லை; ஆனால், கைதிகள் கோட்டைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

7. வருவாய்த்துறை அமைப்பு

முகலாயப் பேரரசின் வருவாயை, மத்திய அல்லது பேரரசுக்குரிய வருவாய் என்றும், உள்நாட்டு அல்லது மாகாண வருவாய் என்றும் இரு தலைப்புக்களில் பிரிக்கலாம். மத்திய அரசாங்கத்து நிதி அதிகாரிகளைக் கேளாமல் வசூலித்துச் செலவு செய்யப்பட்ட உள்நாட்டு வருவாய், பல்வேறு சிறு சுங்கங்கள், 'உற்பத்தி, அனுபோகம், வாணிகம், தொழில்கள், சமுதாய வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகள், எல்லாவற்றுக்கும் மேலாகப் போக்குவரத்து இவற்றின் மீது' விதிக்கப்பட்ட வரிகள் ஆகியவற்றின்மூலம் கிடைத்துவந்தது. மத்திய வருமானத்தின் முக்கிய மூலங்கள் நிலவருமானம், சுங்கங்கள், நாணயசாலை, பரம்பரைச் சொத்துரிமை, கொள்ளை, இழப்பீடுகள், நன்கொடைகள், தனியுரிமைகள், தலைவரி (Poll tax) இவையேயாகும். இவற்றில் பழங்காலத்தில் போலவே நிலவருமானமே அரசாங்க வருவாயின் மிக முக்கியமான நிதி மூலமாக இருந்தது.

ஷெர்ஷா, இஸ்லாம் ஷா ஆகியோரின் ஆட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பம், அமைதிக்குலைவுகளின் காலத்தில் சூர்களின் முக்கியமான வருவாய்ப் பரிசோதனைகள் எல்லாம் கைவிடப்பட்டன. ஆனால், பண்டைக்காலத்து அரசாங்க அமைப்பு முறையும், தொல் பழங்காலத்து வழக்கங்களும், நடைமுறைகளும் அக்பரால் மரபுரிமையைப்போலக் கைக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். அவர் பட்டத்துக்கு வந்தபோது, மூன்று வகையான நிலங்கள் இருப்பதைக் கண்டார் அவை கல்சா (Khalsa) அல்லது முடிமன்னர்க்குரிய நிலங்கள்; சில பிரபுக்களால் அனுபவிக்கப்பட்ட ஜாகீர் நிலங்கள் - இவற்றினின்று பிரபுக்கள் வரிவசூலித்து ஒரு பகுதியை மத்திய அரசாங்கக் கஜானாவுக்கு அனுப்பிவிட்டு மீதியைத் தங்களுக்காக வைத்துக்கொள்வர்; இலவசமாக உழுதுகொள்வதற்கு விடப்பட்டவை சயூர்கால் (Sayurghal) நிலங்கள் பைராமினுடைய அதிகாரத்திலிருந்தும், அந்தப்புர மகளிரின் அதிகாரத்திலிருந்தும் விடுதலை பெற்ற பிறகுதான் அக்பர் தம்முடைய வளர்ந்துவரும் பேரரசின் பொருள் வளங்களைச் சீர்திருத்தியமைக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்தார். அப்போது பேரரசின் நிதிநிலைமை மிகவும் மோசமாக இருந்தது.

Koviloor Academy

இவ்வாறு 1570-71-ல் ராஜா தோடர் மாலினால் உதவப்பட்டு முஜாபர்கான் நில வருமானத்தின் புதிய மதிப்பீட்டு முறையைத் தயார்செய்தார். அது 'உள்நாட்டுக் கானுங்கோக்களால் உருவாக்கப்பட்டுத் தலைமையகத்தில் பத்து உயர்ந்த கானுங்கோக்களால் சரிபார்க்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்தது.' குஜராத் வெல்லப்பட்ட பிறகு தோடர்மால் அங்கே ஒழுங்கான நில அளவை செய்து 'நிலத்தின் பரப்புக்கும் தன்மைக்கும் ஏற்றவாறு' வரி மதிப்புச் செய்தார். 1575-76-ல் அக்பர் பழைய நிலவருவாய்ப் பரப்புக்களை எல்லாம் ஒழித்துவிட்டு, குஜராத், வங்காளம், பீஹார் ஆகிய மாகாணங்களைத் தவிரப் பேரரசு முழுவதையும் ஆண்டுதோறும் கோடி வருமானம் தரக்கூடிய பெரிய பகுதிகளாகப் பிரிக்கும் புதிய, பேராபத்தான பரிசோதனையைப் புகுத்தினார். அப்பெரிய பகுதிகளுக்குத் தலைவராகக் கிரோரி என்ற அதிகாரிகளை நியமித்தார். அவர்களுடைய கடமைகள் வரி வசூலிப்பதும், உழவுக்கு ஊக்கமளிப்பதுமாகும். ஆனால் கிரோரிகள் விரைவில் ஊழல்கள் செய்யத் தலைப்பட்டனர். அவர்களுடைய கொடுமை உழவர்களுக்குப் பெருந் துன்பம் அளித்தது. அதனால் அவர்களுடைய பதவிகள் ஒழிக்கப்பட்டன; பழைய நிலவருவாய்ப் பகுப்புக்கள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கிரோரி என்ற பட்டம் குறைந்தது ஷாஜஹான் ஆட்சிக்காலம் வரை நிலைத்திருந்தது.

1582-ல் தோடர்மால் திவானி ஆஷ்ராப் (Diwan-i-Ashraf) பாக நியமிக்கப்பட்டபோது முக்கியமான நிலவருவாய்ச் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இதுவரை வரி மதிப்பீடுகள் ஆண்டுதோறும் விளைச்சல், நிலவர விலைகளின் புள்ளிவிவரக் கணக்கு, இவற்றின் அடிப்படையில் அறுதி செய்யப்பட்டுவந்தன; அதனால் அரசாங்கத்தின் தேவைகள் வருடத்துக்கு வருடம் மாறிக்கொண்டிருந்தன. தோடர்மால் நிலவரி வசூல் முறையில் 'ஒழுங்குமுறை' அல்லது நிலையளவினை நிலை நிறுத்தினார். அதன் முக்கிய சிறப்பியல்புகள் :-(1) நிலத்தை அளத்தல், (2) நிலப்பகுப்பீடு, (3) வரி வீதத்தை வரையறுத்தல் என்பவையாம். நிலங்கள் மிகக் கவனமாக அளக்கப்பட்டன. நிலத்தை யளப்பதற்கான பழைய அலகுகளின் நீளம் பருவத்துக்குப் பருவம் மாறுபட்டு வந்தன. அதனால் அவற்றை மாற்றிச் சுமார் முப்பத்து மூன்று அங்குல நீளத்திற்குச் சமமான இலாஹி கஜ் அல்லது கஜம், தனப் (Tanab) அல்லது கூடாரக் கச்சை, இரும்பு வளையங்களால் சேர்க்கப்பட்ட மூங்கில் ஜரிப்பு (Jarib) புகுத்தப்பட்டன. இவை நிலையான அளவையை எப்போதும் அளித்தன. நிலங்கள் 'விளைச்சலின் தொடர்ச்சி அல்லது தொடர்ச்சியின்மைக்கு' ஏற்றவாறு நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன. (1) போலஜ் (Polaj) அல்லது ஆண்டுதோறும் பயிரிடக்கூடிய நிலம், (2) பிரௌத்தி (Parauti) அல்லது விளைச்சல் சக்தியை மீண்டும் பெறுவதற்காக

Koviloor Academy

உழுது விதைக்காமல் சிறிதுகாலம் விடப்படும் நிலம் (3) சச்சர் (Chachar) அல்லது மூன்று அல்லது நான்கு ஆண்டுகள்வரை உழுது விதைக்காமல் விடப்படும் நிலம் (4) பஞ்ஜர் (Banjar) அல்லது ஐந் தாண்டுகள் அல்லது அவற்றிற்கு மேலும் பயிரிடப்படாத நிலம் என் பவையே அவை. உண்மையாகப் பயிரிடப்பட்ட பரப்பே வரி விதிப் புக்கு மதிப்பிடப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய நிலத்தின் சராசரி விளைச்சலை உறுதியாக அறிவதற்காக மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்ட அந்நிலங்களின் விளைச்சல் சராசரி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அரசாங்கத்துக்கு விளைச்சலில் மூன்றில் ஒரு பங் கினைச் செலுத்தவேண்டும் என்று அறுதி செய்யப்பட்டது. அப் பங் கினை ரயத்துக்கள் பணமாகவோ, தானியமாகவோ செலுத்தலாம். பயிர்களுக்குத் தகுந்த மாதிரி பண விகிதங்கள் வேறுபட்டன. வட இந்தியா, குஜராத், சில மாறுதல்களுடன் தக்கணம் இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிலவருமான முறை ரயத்துவாரி எனப்படும். அதாவது, 'நிலத்தை உண்மையாகப் பயிரிடுவோர்களே ஆண்டு தோறும் நிலைத்த வரியைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாவர்.' பேரரசின் வெளிப்புறப் பகுதிகளில் இந்த முறை அமுல் செய்யப்பட வில்லை. ஆனால் உள்நாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப இவற்றில் ஒவ் வொன்றும் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்சிமுறைக்காகவும், நிலவருவாய் வசூலுக்காகவும் பேரரசு சுபாக்களாகவும், அவை சர்க்கார்களாகவும் பிரிக்கப்பட்டன. சர்க்கார்களில் பல பரகானுக்கள் (Paragana) இருந்தன. பல கிராமங் கள் சேர்ந்து ஒரு பரகானுவாகும். அமல் குஜார் (Amalguzar) அல்லது மாவட்ட நிலவசூல் அதிகாரிக்கும் துணை யதிகாரிகளின் பெரிய குழு உதவியாக இருந்தது. அரசாங்கத்தின் ஊழியர்களாயன்றிக் கிராமத்தின் ஊழியர்களாயிருந்த கிராம முகத்தம் (Muqaddam) (கிரா மத் தலைவர்), கிராமப் பட்வாரி (Patwari) இவர்களைத் தவிர அளப் போர்களும், பருவகாலப் பயிர் விளைச்சலைப்பற்றிப் புள்ளிவிவரம் தயாரிக்கும் கார்க்குன்களும் (Karkuns) இருந்தனர். மேலும் கானுங்கோ என்பவர் கிராமங்கள் கொடுக்க வேண்டிய நிலவருவாய் பற்றிய பதிவேடுகளை வைத்திருந்தார்; பிடிக்சி (Bitikchi) என்பவர் கணக்கர்; போத்தார் (Potdar) என்பவர் மாவட்டக் கஜானுப் பொறுப் பாளர். போதுமான கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வரிவசூல் செய்யவேண்டு மென்றும், 'பருவமல்லாக் காலத்தில் அதட்டிக் கேட்கக் கூடாதென்றும்' அவர்கள் அரசரால் அறிவுறுத்தப் பட்டி ருந்தனர். 'வரிவசூல் செய்யும்போது பயிரிடுவோரிடம் கொஞ்சம் தாராள மனப்பான்மையும், கண்ணோட்டமும் காட்டவேண்டும் என்றும், எல்லா அப்வாப்களை (abwabs)யும் கைவிட்டு விட்டு உழவர்களின் துன்பத்தை ஒழிக்கவேண்டும் என்றும் எப்போதும் பேரரசர்கள் தங்கள் அதிகாரிகளுக்கு உத்தரவுகள் அனுப்

Koviloor Acadamy

பிக் கொண்டிருந்தனர்.' ஷாஜஹான், அவுரங்கசீப் ஆட்சிக்காலங்களில் வலியுறுத்தி வசூல் செய்த அதிகாரிகள் இருந்தமைக்கும், குடிமக்களிடமிருந்து மாகாணக்கவர்னர்கள் மீது வந்த குறை கூறுதலினால் கவர்னர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டமைக்கும் சான்றுகள் இருக்கின்றன. குறிப்பாகப் பேரரசின் வெளிப்புற மாகாணங்களிலும் மாவட்டங்களிலுமிருந்த வருமான வசூல் கீழ் அதிகாரிகள் ஊழல், கையாடல் இவற்றிற்கு அப்பாற்பட்டவராய் இல்லாமல் இருந்தபோதிலும், 'மொத்தத்தில், உயர்ந்த அதிகாரிகள் நேர்மையாளராயும். நாட்டு நலனின் ஆர்வங் கொண்ட அரசியல் வாதிகளாயும் இருந்தனர். இவ்வாறு வருமான முறையின் தோல்வி அல்லது வெற்றி இராச்சியத்தின் மையத்தில் இருந்த ஆட்சிமுறையின் இயல்பையும் தன்மையையும் பொறுத்திருந்தது. அவுரங்கசீப்பின்காலத்தில் ஆட்சி முறை இயந்திரம் முறைதவறி நடக்காமலும், தீங்குகள் தோன்றாமலும் இருக்க முடியவில்லை. ஆனால் மொத்தத்தில் அதன் கொள்கைகள் சிறந்தவையாயிருந்ததுடன், 'விரும்பத் தக்க செயல் முறை அறிவுரைகளே அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டும்' வந்தன. ரயத்துக்கள் ஓரளவு பாதுகாப்புப் பெற்றனர். அரசாங்கத்தின் பொருளாதாரம் அடிக்கடி ஏற்றத்தாழ்வு உறாதபடி தடுக்கப்பட்டன; அல்லது முடிந்த அளவு அவை குறைக்கப்பட்டன. மேலும் ரயத்துக்கள் வரி கொடுக்காதபோது அவர்களுடைய உடைமைகள் பறிக்கப்படவில்லை. ஓராண்டின் உண்மையான விளைச்சலின் அடிப்படையில் 'பயிரின் தரத்துக் கேற்ற வரி கொடுக்கும் வழக்கம்' இக்காலத்தில் ஆண்டின் அறுவடையைப்பற்றிக் கவனியாது நிலைத்த ஒரு தொகையைக் கொடுப்பதைவிடச் சிறந்தது. இந்து சட்டமும், வழக்கமும் ஆறில் ஒரு கடமை வசூலிக்கச் சொன்னதை அல்லது இக்காலத்து நில உடைமையாளர் பெறுவதை ஒப்பிடும் போது மூன்றில் ஒரு கடமை வற்புறுத்தியது சிறிது உயர்வாகத் தோன்றினாலும், அரசாங்கம் பல வகையான வரிகள், தீர்வைகள் இவற்றைத் தள்ளுபடி அல்லது குறைபடி செய்தமையால் அது அவர்களுக்கு ஒரு பாரமான பளுவாகக் காணப்படவில்லை.

8. மாகாண அரசாங்கம்

1579-1580-ல் அக்பர் தம் பேரரசைப் பன்னிரண்டு மாகாணங்களாகப் பிரித்தார். அவருடைய ஆட்சி முடிவில் அந்த எண்ணிக்கை பதினைந்தாக[1] உயர்ந்தது. அது ஜஹாங்கீர் காலத்தில் பதினேழாகவும், அவுரங்கசீப் காலத்தில் இருபத்தொன்றாகவும் இருந்தது. 'முகலாயப்பேரரசின் மாகாணங்களின் ஆட்சியமைப்பு முறை மத்திய அரசாங்கத்தின் சரியான மாதிரியாகவே இருந்தது.'

[1]ஆக்ரா, அலகாபாத், அவுத்து, தில்லி, லாகூர், முல்தான், காபூல், அஜ்மீர், வங்காளம், பீஹார், அகமதாபாத், மாளவம், பீரார், காந்தேஷ், அகமத்நகர்.

Koviloor Academy

சிபா சாலார் (Sipah Salar) என்றும், தலைமைத் தளபதி அல்லது சாஹிப் சுபா, மாகாணப்பிரபு அல்லது வெறுமனே சுபாதார்; என்றும் அதிகார முறையில் நாஸிம் என்றும் அழைக்கப்பட்ட கவர்னர் ஒவ்வொரு சுபாவின் உள்நாட்டு, படைத்துறை ஆட்சியின் தலைவராக இருந்தார். திவான், பக்ஷி, பௌஜ்தார், கொத்தவால், காஸி, சத்ர், ஆமில், பிடிக்சி, போத்தார், வாகா-இ-நவிஸ் போன்ற கீழதிகாரிகளும் அவர்கீழ் இருந்தனர். திவான் அல்லது மாகாணத்தின் தலைமை வருமான அதிகாரி அடிக்கடி சுபாதாருக்குப் போட்டியாளராக இருந்தார். அவ்விருவருள் ஒருவரும் அளவுக்கு அதிகமான அதிகாரம் பெற்றுவிடக் கூடாதென்று 'ஒருவரை ஒருவர் கண்காணித்துக் கொள்ளவேண்டும்' என்று இருவரும் கட்டளையிடப் பட்டிருந்தனர்.

9. படை

அரசாங்கம் பெரிய நிலைப்படை ஒன்றையும் வைத்திருக்கவில்லை. ஆனால் கொள்கையளவில் 'பேரரசின் எல்லாப் பலம் வாய்ந்த குடிமக்களும் பேரரசப் படையின் சக்திவாய்ந்த போர்வீரர்களேயாவர்.' முகலாயப் படையின் வரலாறு பெரும்பாலும் மன்சாப்தாரி முறையின் வரலாறேயாகும். அதன் சிறப்பியல்புகளை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். மேலும் மன்சாப்தார்களைத் தவிர மன்சாப்தார்களின் ஆணையின் கீழ் வைக்கப்பட்டு, அரசாங்கத்தினரால் சம்பளம் கொடுக்கப்பட்ட துணைத்துருப்புக்கள் அல்லது தாக்கிலீக்களும் (Dakhilis), 'ஒரு தனிப்பட்ட உயர்ந்த மதிப்புள்ள குதிரைவீரர்களான அஹாதீக்களும்' இருந்தனர். 'அஹாதீக்கள் பொதுவாகப் பேரரசரைச் சுற்றி இருந்தனர்; மற்ற எவருக்கும் கீழ்ப்படிய வேண்டுதல் இல்லாதவராய் இருந்தனர்.' மன்சாப்தாரி முறையில் ஊழல்கள் இல்லாமல் இல்லை. இர்வின் 'முகலாயப் படையில் பொய்ப் படை வீரர்கள் இருந்தனர். அத்தீங்கினால் அப்படை செழிப்புக்காலத்தில் துன்பமுற நேர்ந்தது. பிரபுக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட அளவு ஆட்களை அனுப்பவேண்டும் என்பதற்காக ஒருவர்க்கொருவர் ஆட்களைக் கடன் கொடுத்து வந்தனர். அல்லது தெருவில் சுற்றும் சோம்பேறிகளைப் பிடித்துப் பொதி சுமக்கும் மட்டக் குதிரைகளின் மேல் ஏற்றிக் கொண்டுவந்து படையில் சேர்த்தி அவர்களையும் மற்றத் திறமை வாய்ந்த வீரர்களோடு வைத்து எண்ணப்படுவர்' என்று குறிப்பிடுகிறார். இத்தீங்கான பழக்கங்களை அகற்றுவதற்காக, அக்பரின் அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டது. குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை போர்வீரர்களை அழைப்பதற்கான ஒழுங்கு விதிகள் புகுத்தப்பட்டன. சிஹ்ரா (Chihrah) அல்லது மன்சாப்தாரின் படைவீரர் பெயர் விளக்கப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதில் 'படைவீரரின் பெயர், தந்தையின் பெயர், இனம் அல்லது ஜாதி,

Koviloor Academy

பிறப்பிடம், ஆள் தோற்றம் பற்றிய விளக்கங்கள் குறிக்கப்பட்டன. தாகோமஹல்லி (Dagh-o-mahalli) அல்லது வெறுமனே தாக் என்று அழைக்கப்படும் குதிரைகளுக்குக் குறியிடும் வழக்கம் மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்நடவடிக்கைகளும் தீங்குகளைத் திறமையாகக் களையவில்லை.

இக்கால மொழியில் கூறவேண்டுமானால் முகலாயப்படைகள் 1. குதிரைப்படை 2. காலாட்படை 3. பீரங்கிப் படை 4. கடற்படை ஆகியவற்றைப் பெற்றிருந்தன. இவற்றில் குதிரைப் படைதான் மிக முக்கியமானது. காலாட்படை பெரும்பாலும் சாதாரண நகரமக்கள், உழவர்கள் இவர்களைக் கொண்டு அமைக்கப் பட்டது; 'படையின் போரிடும் பலத்தின் பகுதியாக அது சிறப்பிடம் வகிக்கவில்லை' உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளும், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துப்பாக்கிகளும் பாபர், ஹுமாயூன், அக்பர் ஆகியோரால் போர்க்காலங்களில் பயன் படுத்தப்பட்டன. ஆனால் முன்னைவிட 'ஆலம்கிரின் ஆட்சியில் பீரங்கிப்படை மிகவும் நிறைவுற்ற தாகவும், எண்ணிக்கையில் மிகுதி யானதாகவும் இருந்தது.' பீரங்கிப்படைச் செலவு முழுதும் அர சாங்கமே ஏற்றுக் கொண்டது. இக்காலத்தில் கருதப்படுவதுபோல வலிமையான ஒரு கடற்படை அக்காலத்தில் இருக்கவில்லை. அக் காலத்தில் 'கடற்படைத் துறை' இருந்ததாக அபுல் பஸல் எழுது கிறார். அந்தத் துறையின் பணிகள் பின் வருமாறு : 1. ஆற்றில் போக்குவரத்துக்காக எல்லாவகையான படகுகளையுங் கட்டுவது. 2. போர் யானைகளை ஏற்றிச் செல்வதற்காக வலிமை வாய்ந்த படகுகளை இணைத்துக் கட்டுவது. 3. திறமை மிக்க கடலோடி களைத் தேர்ந்தெடுப்பது. (4) ஆறுகளைக் கண்காணிப்பது. (5) ஆற்றுச் சுங்கங்களையும் வரிகளையும் விதிப்பதும் அவற்றை வசூ லிப்பதும் என்பவை. மக்குகள் (Mugs), அராக்கானிய கடற்கொள் ளைக்காரர்கள் இவர்களிடமிருந்து வங்காளக் கடற் கரையைக் காப்ப தற்காகப் படைக்கலன் தாங்கிய 768 கப்பல்களும் படகுகளும் அடங் கிய படையொன்று, டாக்காவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால் முகலாயர்களின் கடற்படை நிறுவனம் மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகக் காணப்படவில்லை.

சில ஆசிரியர்கள் நம்மை நம்பும்படி சொல்வது போல, முகலாயப் படை அவ்வளவு திறமைக்குறை வானதாய் இல்லாமல் இருந்தாலும், சில குறைபாடுகளும் அதில் இல்லாமற் போகவில்லை. முதலாவதாக அது ஒரு தேசியப் படையாக இல்லை. ஆனால் பலவகைக் கூறுகளின் கலவையாக இருந்தது. அக்கூறுகள் ஒவ்வொன்றும் தங்களுக்கே யுரிய தனிப்பட்ட முறைகளையும், யுத்த தந்திரங்களையும் பின்பற்ற முயன்றன. இவ்வாறு ஆண்டுகள் செல்லச் செல்லப் படை எண்ணிக்

Koviloor Academy

கையும் உயர்ந்து வந்தது ; படையும் நிர்வகிப்பதற்கும், கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் முடியாததாய், சிக்கல் மிகுந்ததாயும் ஆய்விட்டது. இரண்டாவதாக, படைவீரர்கள் நேரடியாகப் பேரரசுக்குக் கடமைப்பட்டவர்களாய் இல்லாமல் தங்களுக்கு மேலிருந்த அடுத்த அதிகாரிகளுடனும், வேலைக்குத் தேர்ந்தெடுப்போருடனுமே அதிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களுக்குள் அடிக்கடி மிகுந்த பொருமையும் கடும் போட்டியும் ஏற்பட்டு வந்தமையின், அவை போர்களில் வெற்றி வாய்ப்பை அழித்துவந்தன. கடைசியாக, பாசறையிலும், போருக்கு அணிவகுத்துச் செல்லும் போதும் முகலாயப்படை ஆடம்பரமும் படாடோபமும் மிகுந்ததாய்க்காணப்பட்டதால் அது தன் திறமையை அழித்துக்கொள்ள நேரிட்டது. சில சமயங்களில் அக்பர் இந்த வழக்கத்திலிருந்து மாறுபட்டுச் சென்ருர். ஆனல் பொதுவாக, பேரரசப் படை ‘கட்டுக்குள் அடக்கமுடியாத நகரும் நகரமாகவே’ தோன்றியது. மேலும் ‘பேரரச அவையின் பகட்டான ஆடை அணி அலங்காரத்துடனும் வந்ததும், அந்தப்புரத்தின் ஒரு பகுதியினர் அவர்களுடைய பணியாட்களுடன் யானைகள் மேலும், ஒட்டகங்கள் மீதும் ஏறிவந்ததும், நடமாடும் நாடகக் கொட்டகை இசைவாணர்களின் கூடாரம், அலுவலகங்கள், தொழிற்சாலைகள், கடை வீதிகள் இவையும் கூடச் சென்றதும் படையின் விரைவு இயக்கத்துத் தடைகளாயிருந்தன. யானைகளும் ஒட்டகங்களும் பொருளைச் சுமந்து சென்றன. நூற்றுக்கணக்கான கட்டை வண்டிகள் படைக்கு வேண்டிய பொருள்களைச் சுமந்தன; கோவேறு கழுதைகளின் ஒரு படை பேரரசினர்க்கு வேண்டிய ஆடை முதலிய பொருள்களையும், தட்டு முட்டுச் சாமான்களையும் சுமந்து சென்றது.’ அகமத் நகரில் கூடாரமடித்த அவுரங்கசீப்பின் பெரும் பாசறையைப் பற்றிக் குறிப்பிடும் போது கிராண்ட் டப் பின்வருமாறு தம் கருத்தைத் தெரிவிக்கிருர் : ‘அது அவருடைய படையின் இயக்கங்களுக்கு ஒரு பெருந்தடையாய் இருந்தது. அந்த நிறுவனங்கள் விழுங்கிய செலவு அவருடைய பொருளாதார நிலையைப் பாதித்தது. அது விரைவில் மிக இன்றியமையாததான படைத்துறை, அரசியல் ஏற்பாடுகளையும் முடமாக்கி விட்டது.’ இவ்வகையான பாசறை வாழ்க்கை இயல்பாகவே படையில் பெருஞ் செலவையும், ஒழுங்கின்மையினையும் விளைவித்தன. ஜஹாங்கீர், ஷா ஜாஹான் கீழ் தவிர்க்க முடியாத சீர்குலைவு ஏற்படத் தொடங்கியது. அது அவுரங்கசிப் காலத்தில் மிகத் தெளிவாக விளங்கியது. படையும் ‘விரைந்து செயலாற்றவோ அற்புதமான சாதனை செய்யவோ’ முடியாததாக இருந்தது. இந்த வகையில் குறைந்த எண்ணிக்கையுடைய சிவாஜியின் குதிரைப்படை, அவரால் சிறந்த, கண்டிப்பான ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டின்கீழும் வைக்கப்பட்டிருந்ததால் முகலாயப் படையைவிட மிகச் சிறந்ததாய் விளங்கலாயிற்று.

Koviloor Acadamy

7. சமுதாய, பொருளாதார வாழ்க்கை

முகலாய இந்தியாவின் உண்மையான மக்கள் வரலாறு, அதாவது அவர்களுடைய சமுதாய வாழ்க்கையும், பொருளாதார நிலையும் இக்காலத்திலும் நமக்கு முக்கியம் வாய்ந்ததாகவும், ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் உள்ளன. அக்காலத்திய அரசியல் நிகழ்ச்சிகள் அல்லது படைப்போர்கள் முதலியவற்றின் வெறும் பட்டியலைக் காட்டிலும் இவை நமக்குச் சிறப்புமிக்க செய்திகள் பலவற்றையும், அன்றைய மக்களின் உண்மையான நிலையையும் தெரிவிக்கின்றன. உண்மையில் இதைப்பற்றி ஆராயக் கிடைக்கும் சான்றுகளும் மூலப் பொருள்களும் மிகக் குறைவாகவே உள்ளன. ஆனால் அக்காலத்திய ஐரோப்பியப் பயணிகள் எழுதி வைத்துச் சென்ற குறிப்புக்களிலிருந்தும், ஐரோப்பியத் தொழிற்சாலைகளின் பதிவேடுகளிலிருந்தும் அரிய பல செய்திகள் அறியப்படுகின்றன. அக்காலத்துப் பாரசிக மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களிலும், நாட்டு மொழிகளில் தோன்றிய இலக்கியங்களிலும் ஆங்காங்கே பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

1. சமுதாய நிலைகள்

அ. சமுகத்தின் அமைப்பு

சமூகம் அரசரைத் தலைமையாகக் கொண்ட ஒரு ஜமீன் அமைப்புப் போலக் காணப்பட்டது. அரசருக்கு அடுத்தபடியாக அதிகாரிகளாயிருந்த பிரபுக்கள் சிறப்புப் பதவிகளும், சிறப்புரிமைகளும் பெற்றிருந்தனர். அவை ஒரு போதும் பொதுமக்களுக்குக் கிடைக்காத சிறப்புக்களாகும். இது இயல்பாகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் ஒரு வேறுபாட்டை தோற்றுவித்தது. பிரபுக்கள் செல்வத்திலும், சுகபோகங்களிலும் மூழ்கித் திளைத்தனர். பொதுமக்களோ அவர்களுடன் ஒப்பிடும்போது இரங்கத்தக்க நிலைமையில் இருந்தனர். வளமான செல்வ வருவாய்களைப் பெற்றிருந்த செல்வர்கள் இயல்பாகவே ஆடம்பரத்திலும், குடித்துக் கும்மாளமிடுவதிலும் ஈடுபட்டிருந்தனர். இறந்த பிறகு தங்கள் செல்வமும் சொத்தும் பறிமுதல்

Koviloor Academy

செய்யப்படும் என்று பயந்து பிரபுக்கள் எல்லாம் சிக்கனமாய்ச் சேமித்து வைக்கும் ஆர்வம் இல்லாதவர்களாய் இருந்தனர். மது, மாது இவற்றில் அளவுக்கு மீறிய ஈடுபாடு பிரபுக்களிடம் பொதுவாகக் காணப்பட்டமை ஒரு தீச்செயலாகும். பேரரசர் 5,000 பெண்களை அந்தப்புரத்தில் வைத்துப் பெண் அதிகாரிகளால் தனியாகக் கண் காணித்து வரும்படி செய்தார் என்று அபுல் பாஸல் கூறுகிறார். ஜஹாங்கீர் காலத்தில் ஆக்ராவிலிருந்த டச்சுத் தொழிற்சாலை ஒன்றின் தலைவராயிருந்த பிரான்சிஸ்கோ பெல்சாயெர்ட், 'செல்வர்களின் மாளிகைகள் உள்ளே காமவெறி மிக்க உடலின்பம், காமக் கூத்தாட்டும் வெறிமிக்க களியாட்டும், அளவுக்கு மீறிய ஆடம்பரம் பெருகிய செருக்கு, அணி அலங்கார மிக்க இன்ப விருப்பம் இவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன' என்று கூறியிருக்கிறார். மேலும் அவர்களுடைய வேசித்தனத்தை வலிமையான சொற்களில் இகழ்ந்துரைத்திருக்கிறார். செல்வமிக்கோரின் உணவும் ஆடையும் வளமிக்கதாயும், விலையுயர்ந்ததாயும் இருந்தன. அவர்கள் மிக உயர்வாக அலங்கரிக்கப்பட்ட மாளிகைக் கட்டிடங்களில் வாழ்ந்தனர். வீட்டிற்குள் ஆடும் விளையாட்டுக்களிலும், வெளியில் ஆடும் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுக் களிப்புக் கொண்டிருந்தனர்.

நாட்டின் செல்வத்தை வெளிநாட்டினர் எவரும் தங்கள் நாட்டுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை யாதலால், அயல் நாட்டுப் பிரபுக்களின் குழு நாட்டின் செல்வத்தை இறைத்துவிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கம் தன் சக்தியைத் தீவிரப்படுத்தி வைத்திருக்கும் வரை பிரபுக்கள் முதலில் நாட்டிற்குச் சிறந்த வகையில் பயன்படும் தொண்டர்களாயிருந்தனர். ஆனால் ஷாஜஹான் ஆட்சி முடிவுக் காலத்தில் அவர்கள் தங்கள் பழைய பயன்பாட்டு நிலையை இழந்து மிகவும் ஒழுக்கந் தவறியவர்களாயினர். அவுரங்கசீப்பின் ஆட்சியிலும், பதினெட்டாம் நூற்றாண்டிலும் மேலும் சீர்குலைவு ஏற்பட்டது. பிற்காலத்துத் தந்நலமிக்க, ஒழுங்கு கெட்ட பிரபுக்களின் போட்டிகளும், சதிகளும் சமுதாய வாழ்க்கையில் தீங்குகளை விளைவித்ததுடன், அக்காலத்து அரசியல் குழப்பங்களுக்கும் பெருங் காரணமாக இருந்தன.

பிரபுக்களின் கீழே 'சிறிய சிக்கனமான' நடுத்தர வகுப்பு இருந்தது. அவ்வகுப்பைச் சார்ந்தவர் 'படாடோபமான செலவுகளைச்' செய்யாமல் தங்கள் பதவிகளுக்கும், தொழில்களுக்கும் பொருந்தியவாறு வாழ்க்கைத்தரத்தை அமைத்துக் கொண்டனர். பொதுவாக வணிகர்கள் எளிய, மட்டுமீறாத வாழ்க்கையை நடத்தினர். சில ஐரோப்பிய ஆசிரியர்களின் கருத்துப்படி, தங்கள் பரந்த வாணிகத்தால் பெரும் பொருள் ஈட்டியிருந்த மேற்குக் கடற்கரை வணிகர்கள் ஆடம்பரங்களில் மூழ்கியவர்களாய்ச் செல்வ வாழ்வு வாழ்ந்தனர். சமுதாயத்தின்

Koviloor Acadamy

கீழ்ப்படியைச் சார்ந்தவர்களின் நிலைமை மற்ற இரு உயர்ந்த வகுப்புக்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கடினம் நிறைந்ததாகவே இருந்தது. அவர்களுக்கு உடுக்கப் போதுமான உடை இல்லை. கம்பளி உடைகளும் காலணிகளும் அவர்களுடைய செலவினத்திற்கு எட்டாதவையாய் இருந்தன. அவர்களுடைய மற்றத் தேவைகள் எல்லாம் மிகக் குறைவாய் இருந்தமையின், அவர்கள் சாதாரண நிலைமையில் சாதாரண உணவுக்காகக் கஷ்டப்படவில்லை. ஆனால், பஞ்ச காலத்திலும், பொருள் பற்றுக்குறை ஏற்பட்ட காலத்திலும் அவர்களுடைய துன்பங்கள் மிகப் பெரிதாய் இருந்திருக்க வேண்டும். தம்முடைய ஏழாண்டு அனுபவத்தில் பிரான்சிஸ்கோ பெல்சாயெர்ட் எழுதும்போது தம் காலத்தில் 'பெயரளவில் சுதந்தரமுடையவர்களாய், ஆனால் தாமாகவே அடிமைத்தனத்தில் ஈடுபடுத்திக்கொள்ளும் நிலைமையினின்று சிறிதும் வேறுபடாதவர்களாய்க் கூலியாட்கள், பியூன்கள் அல்லது வேலையாட்கள், கடைக்காரர்கள் என்ற மூன்று மக்கட் பிரிவினர் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். அவர்களுடைய வேலை சுதந்தரமுடையதன்று ; அவர்களுக்குக் கிடைக்கும் கூலி மிகக் குறைவாயிருந்தது ; உணவும் உறையுளும் மோசமாயிருந்தன ; மேலும் அவர்கள் பேரரசின் அதிகாரிகளின் கொடுமைக்கு ஆளாயினர். கடைக்காரர்கள் சில சமயங்களில் செல்வம் மிக்கவர்களாயும், மதிக்கப்பட்டவர்களாயும் இருந்தபோதிலும், பொதுவாக அவர்கள் தங்கள் செல்வத்தை மறைத்து வைத்திருந்தனர். பெல்சாயெர்ட் எழுதுவதுபோல 'அவர்கள் பதுக்கிவைக்கும் குற்றத்திற்கு ஆளாகிவிடுவர்; அப்போது அவர்களிடம் இருப்பவை யெல்லாம் சட்டமுறைப்படி பறிமுதல் செய்யப்பட்டுவிடும். ஏனெனில் செய்தி அளிப்போர் கவர்னர்களை ஈக்கள்போல் மொய்த்துக்கொண்டு அவர்களுடைய தயவைப் பெறுவதற்காகத் தேவையானல் பொய்ச் சத்தியங்கள் செய்து நண்பர்களாயினும், எதிரிகளாயினும் வேறுபாடின்றிக் காட்டிக் கொடுத்துவிடுவர்.' ஷாஜஹானின் ஆட்சி முடிவின்போது குடியானவர்கள் மாகாணக் கவர்னர்களால் மிகுதியாகத் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் நிலை மிகவும் மோசமாகிக்கொண்டுவந்தது. வறுமையின் தீங்குகளும் நாட்டில் அதிகரித்து வரலாயின,

ஆ. சமுதாயப் பழக்கங்களும் நடைமுறைகளும்

மட்டுமீறி ஈடுபடும் தீக்குணம் செல்வமிக்கோரிடம் காணப்பட்டது போலச் சாதாரண மக்களிடம் அவ்வளவு சாதாரணமாகக் காணப்படவில்லை. டெர்ரி குறிப்பிடுகிறார் : ' அங்கேயுள்ள மக்கள் (குடிப்பதற்குப் போதுமான மதுவகைகளைப் பெற முடிந்தாலும்), செல்வர்களால் உண்டு குடித்து மீதமாக்கப்பட்ட இறைச்சி, மது இவற்றைச் சில சமயங்களில் குடிப்பதைத் தவிர, வேறு எச்சமயத்திலும் குடியில் மூழ்கியவர்களாய்க் காணப்படவில்லை.' தங்கள் உணவில் அவர்கள்

Koviloor Acadamy

மிதமானவர்களாயும், அயலார்களிடம் மரியாதை உள்ளவர்களாயும் இருந்தனர்.

இந்துக்களும் முஸ்லிம்களும் சோதிட நூலின் குறிகளிலும், கொள்கைகளிலும் நம்பிக்கை உள்ளவராய் இருந்தனர். அந்தக் காலத்து முதன்மையான சமுதாய நடைமுறைகள் சதி, பாலிய விவாகம், குலினிஸம், வரதட்சணை முறை இவையாகும். இச்சமுதாய வழக்கங்களை ஒழுங்குபடுத்த மணமகன், மணமகள் ஆகியவர்களுடைய சம்மதமும், திருமண ஒப்பந்தங்களுக்கு வேண்டிய பெற்றோர்களின் அனுமதியும் பெறவேண்டுமென்று அக்பர் விதிக்க முயன்றார். பூப்படைவதற்கு முன்பு திருமணம் செய்துகொள்வதையும், நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் செய்விப்பதையும், உயர்ந்த வரதட்சணைகள் வாங்குவதையும், பலதார மணத்தையும் தடுக்க அவர் முயன்றார். ஆனால் அவருடைய முயற்சிகள் செயல் முறையில் சிறந்த பயனுள்ளவையாய்த் தோன்றவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் குறிப்பாக வங்காளத்தில் சமுதாயத் தீங்குகள் அதிகரித்துவந்தன. அவற்றைப்பற்றி, போல்ட், கிரௌபர்ட், ஸ்காப்டன் போன்ற அக்காலத்திய ஐரோப்பிய ஆசிரியர்களும், அக்காலத்து இலக்கியமும் அடிக்கடி குறிப்பிடுகின்றனர். எனினும், அக்காலத்து மராட்டியச் சமுதாயம் வரதட்சணைகள் ஏற்றுக்கொள்வதற்கு ஊக்கங் கொடுக்கவில்லை. பேஷ்வாக்கள் மகாராஷ்டிர சமுதாய மத விஷயங்களில் சிறந்த கட்டுப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். டாக்டர் சென் குறிப்பிடுவதுபோல, அவர்களுடைய திருமண ஒழுங்கு முறைகள் 'இக்காலத்தவராலும் பயன்படும் வகையில் பின்பற்றுதற்கேற்ற முறையில் தாராள மனப்பான்மை மிக்கதாய் இருந்தது.' கட்டாயப்படுத்தித் திருமணம் செய்வதை அவர்கள் எதிர்த்தனர். உடன்படிக்கை செய்து கொள்ளுவோரின் நோக்கம் சரியானதாயின் ஒழுங்கல்லாத முறையில் செய்து கொண்ட திருமணங்களும் ஒரோவழி அனுமதிக்கப்பட்டன. பஞ்சாப், ஜமுனச் சமவெளியிலிருந்த ஜாத்துகளில் காணப்பட்டது போலவே, விதவைத்திருமணம் மகாராஷ்டிரத்துப் பிராமணரல்லாதவரிடங் காணப்பட்டது. ஒருத்தி பல கணவர்களுக்கு மனைவியாயிருக்கும் வழக்கம் ஜாத்துக்களிடம் காணப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் டாக்காவின் ராஜா ராஜ்பல்லப் விதவைத் திருமணத்தைப் புகுத்த வீணான முயற்சியைச் செய்தார். பொதுவாக 'பெண்கள் தங்களுடைய தலைவர்கள் விருப்பத்திற்கிணங்குபவ ரர்யினும்' அவர்கள் அரசியல் விவகாரங்களில் பெரும்பங்கு எடுத்துக் கொண்டதற்குப் பல சான்றுகள் உள்ளன.

Koviloor Academy

இ. பதினெட்டாம் நூற்றூண்டில் சீர்குலேவு

இந்திய வரலாற்றில் பல காரணங்களுக்காக மிக இருண்ட ஒரு காலம் என்று கருதப்படுதற்குரிய பதினெட்டாம் நூற்றூண்டில் சமுதாய வாழ்க்கை வருந்தத்தக்க முறையில் சீர்கேடுற்றுற்றிருந்தது. தற்கால ஆசிரியர் ஒருவர் அந்த நூற்றூண்டின் முடிவிலும், அடுத்த நூற்றூண்டின் தொடக்கத்திலும் சமுதாயப் பழக்கத்திலும், அரசியலிலும், மதம், கலை இவற்றிலும், நாம் புதுமையில்லாத பழக்கம், சீர்குலேந்த மரபு இவற்றின் பாதையில் புகுந்திருந்தோம்; நம்முடைய மனிதத் தன்மையின்படி நடக்கும் வழக்கத்தை நிறுத்திவிட்டோம்' என்று கூறியிருப்பது சரியென்றே தோன்றுகிறது.

எல்லா வகையிலும் சீர்குலேவு ஏற்பட்டுக்கொண்டிருந்த இந்தக் காலத்தின் மறுமலர்ச்சி இயல்பாகக் காணப்பட்டது இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் முறை தொடர்ந்து வந்தமையாகும். பல நூற்றூண்டுகளாகக் கசப்பான அந்த இரு இனங்களுக்கிடையே நட்புறவு தொடர்ந்து இருந்துவந்தது. இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் இணக்க வாழ்விற்கு முக்கியமான, அறிவுரை புகட்டத்தக்க எடுத்துக்காட்டாயிருந்தது அக்பர் ஆட்சி. அவுரங்கசீப்பின் ஆட்சிக்காலத்தில்கூட இவ்வொற்றுமைக்கு எடுத்துக்காட்டுக்கள் காணப்படாமல் இல்லே. பதினேழாம் நூற்றூண்டில் இந்திக் கவிதை நூலான பத்மாவதி என்ற நூலே வங்காளத்தில் மொழிபெயர்த்த முகம்மதியக் கவிஞரான அலாவல் (Alawal) வைணவ சமயக் கருத்துக்களேப்பற்றிப் பல கவிதைகள் இயற்றினர். சய்யிது சகோதரர்களில் ஒருவரான அப்துல்லா கான் வசந்த உற்சவம், ஹோலி பண்டிகை இவற்றைக் கொண்டாடினர். சிராஜ்-உத்-தௌலாவும், மீர் ஜாபரும் தங்கள் நண்பர்களுடனும், உறவினர்களுடனும் ஹோலி பண்டிகைகளில் கலந்துகொண்டு மகிழ்ந்தனர். முர்ஷிதாபாத்துக்கு அருகிலுள்ள கிரீத்தேஸ்வரி சிலேக்கு அபிஷேகம் செய்த நீரின் சில துளிகளேச் சாவுப்படுக்கையில் மீர்ஜாபர் குடித்தார் என்று சொல்லப்படுகிறது. தௌலத்ராவ் சிந்தியாவும், அவருடைய அதிகாரிகளும் முகம்மதியர்களேப் போலவே பச்சை ஆடைகள் உடுத்திக்கொண்டு முஹரம் ஊர்வலங்களில் கலந்துகொண்டனர். பதினெட்டாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் வெளிவந்த பாரசீக வார ஏடான ஜாமி-ஜஹான் நுமா என்ற பத்திரிகையின் துணைகொண்டு கி.பி. 1825-ல் தில்லி அரசவையில் துர்க்கை பூசை எப்படிக் கொண்டாடப்பட்டது என்பதைத் தற்கால ஆசிரியர் ஒருவர் விளக்கியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

Koviloor Academy

2. பொருளாதார நிலைகள்

அ. அக்பருக்கு முற்பட்ட காலத்திய பொருளாதார நிலை

முதல் இரண்டு தைமூரித்துகளின் ஆட்சிக்காலத்தில் இந்தியா வின் பொருளாதார நிலை எப்படியிருந்தது என்பதைப்பற்றி யறிய நமக்கு மிகச் சிறிதாகவே செய்திகள் கிடைக்கின்றன. பாபர் தம் முடைய குறிப்பேடுகளில் இந்துஸ்தானத்தைப்பற்றிக் கொடுத்துள்ள விளக்கங்கள் சரியானவையா என்பதுபற்றிப் பெரும்பாலான வரலாற் ருசிரியர்கள் ஐயங்களைத் தெரிவித்துள்ளனர். குல்பதன் பேகமின் ஹுமாயூன் நாமா தற்செயலாக இந்துஸ்தானத்தில் நிலவியிருந்த பொருள்களின் விலைக்குறைவைப்பற்றிப் பேசுகிறது. உதாரணமாக அக்பரின் பிறந்த இடமான அமர்க்கோட்டில் நான்கு வெள்ளாடு களின் விலை ஒரு ரூபாயாக இருந்தது. ஷெர்ஷாவின் விரிந்த பொரு ளாதாரச் சீர்திருத்தங்கள் அவருடைய இராச்சியத்து மக்களின் பொருளாதார நிலையை வளர்ச்சி யடையச் செய்திருக்கவேண்டும். அந்நிலை குறைந்தது சூர் ஆட்சி தன் சக்தியைப் பெற்றிருக்கும் வரை மிகக் குலையாமல் இருந்துவந்தது.

ஆ. அக்பர்காலத்துக்குப் பின் பொருளாதார நிலை

மாபெரும் முகல் அரசர்களின் ஆட்சிக்காலங்களிலும், பிற்கால முகல் அரசர்களின் ஆட்சிக்காலங்களிலும் நிலவிய பொருளாதார நிலையைப் பொறுத்தவரை அய்னி அக்பரியிலிருந்தும், பாரசீக மொழி யில் எழுதப்பட்ட வேறு சில நூல்களில் தற்செயலாகக் காணப்படும் குறிப்புக்களிலிருந்தும் நமக்கு ஏராளமான செய்திகள் கிடைக்கின்றன. அக்காலத்து ஐரோப்பிய வணிகர்கள், பயணிகள், ஆசிரியர்கள் இவர்களுடைய எழுத்துக்களிலிருந்தும், இந்தியாவிலிருந்த ஐரோப்பி யத் தொழிற்சாலைப் பதிவேடுகளிலிருந்தும், அக்காலத்து இந்திய இலக்கியங்களிலிருந்தும் கூட நமக்குப் பல செய்திகள் கிடைக்கின்றன. முகலாய ஆட்சி நடந்த நூற்றுண்டுகளில் நிலவிய இந்தியாவின் பொரு ளாதார நிலையின் முக்கியமான கூறுகளைப்பற்றிச் சுருக்கமாக அறி யவே நாம் இங்கு முயல்வோம்.

இ. வளமார்ந்த நகரங்கள்

மாபெரும் முகலாய அரசர்களின் காலத்தில் இந்தியாவின் முக் கிய நகரங்களில் செல்வமும் செழிப்பும் கொழித்திருந்தன. கி.பி. 1585-ல் பிட்ச் (Fitch) என்பவர் குறிப்பிட்டதாவது : 'ஆக்ராவும், பதேபூரும் இரண்டு மிகப் பெரிய நகரங்களாகும். இரண்டும் இலண் டனை விடப் பெரியதாயும், ஜனநெருக்கம் மிகுந்ததாயும் உள்ளன.

Koviloor Academy

ஆக்ராவுக்கும் பதேபூருக்கும் இடையே பன்னிரண்டு மைல்கள். எனினும் வழி நெடுகிலும் உணவுப் பொருள்கள் முதலிய பல பொருள்கள் நிறைந்த கடைத்தெருவாக இருந்தது. அவ்வழியில் செல்வோர் கடைகள் மலிந்திருப்பதால் ஒரு நகரத்திற்குள் இருப்பதுபோலவும், மக்கள் நெருங்கி யிருப்பதால் ஒரு கடைத்தெரு அல்லது சந்தைக்குள் இருப்பதுபோலவும் உணர்ந்தனர்.' டெர்ரி பஞ்சாப்பைப்பற்றிக் கூறும்போது, 'அது ஒரு பரந்த மாகாணம்; மிகச் சிறந்த பயன் விளைக்கும் நகரம். அதனுடைய தலைமை நகரம் லாகூர். அது மிகப் பெரிதாகக் கட்டப்பட்டது. பொருள் வளத்திலும், மக்கள் தொகையிலும் மிக்கது; இந்தியாவிலேயே வாணிகத்தின் முதன்மையான நகரங்களில் ஒன்ருக இருந்தது'—என்று கூறுகிருர். 1581-ல் மான் செர்ரேட் என்பவர் லாகூர் 'ஐரோப்பா அல்லது ஆசியாவில் எந்த நகரத்திற்கும் இரண்டாவது நகரமல்ல என்று கூறியுள்ளார். காந்தேஷிலிருந்த புர்ஹான்பூர் 'மிகப்பெரு நகரமாயும், வளமார்ந்த நகரமாயும், மக்கள் தொகை மிக்கதாயும்' இருந்தது. அபுல் பாஸல் குஜராத்திலிருந்த அகமதாபாத்தைப்பற்றிக் கூறும்போது, அது 'செல்வச் செழிப்பு மிக்க சிறந்த ஒரு நகரம்' என்றும், 'தட்பவெப்ப நிலையின் இனிமையிலும், அகில உலகத்தின் சிறந்த பொருள்கள் எல்லாம் கிடைக்கப்பெறுவதிலும் பெரும்பாலும் ஈடு இணை இல்லாததாய் இருந்தது' என்றும் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு இந்தியாவில் வாரணசி, பாட்னு, ராஜ்மஹல், பர்த்வான், ஹுக்ளி, டாக்கா, சிட்டகாங் போன்ற நகரங்களில் செல்வச்செழிப்பு மிகுந்திருந்தது.

ஈ. செய்திப் போக்குவரத்து

பரந்த வாணிகப் போக்குவரத்துக்காகப் பாதைகள் வழியாகவும் ஆறுகள் வழியாகவும் செய்திப் போக்குவரத்துக்கள் நடக்காமல் இல்லை. எனினும் விஞ்ஞான சாதனங்களால் இக்காலத்தில் பெருகியிருக்கும் போக்குவரத்தைப்போல அவை இல்லை. சில பெருஞ்சாலைகளைத் தவிர மற்றப் பாதைகள் எல்லாம் பொதுவாகக் கப்பியிடப்படாதவையாயிருந்தன. ஆனல் 'உள்நாட்டுப் பயணத்தின் முக்கிய வழிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன. சில சமயங்களில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த மரங்களாலும், இன்னும் பொதுவாக சராய்கள் (Sarais) எனப்படும் நெடுஞ் சுவர்களாலும் பாதைகள் சூழப்பட்டிருந்தன. அவற்றுள் பயணிகளும், வணிகர்களும் இரவில் ஓரளவு பாதுகாப்புடன் செல்லமுடியும்.' சில ஆறுகளில் ஆண்டு முழுவதும் படகுகள் முதலியவற்றை ஓட்டிச் செல்லமுடியும். வேறு சிலவற்றில் ஆண்டின் ஒரு பகுதிக்காலத்தில்தான் முடியும். அந்த ஆறுகள் பாரமான பொருள்களை எளிதில் ஏற்றிச்செல்லச் சிறந்த சாதனங்களாய் இருந்தன. உண்மையில் செய்திப் போக்குவரத்துக்களின் பாதுகாப்பு, நாட்டின் ஆட்சிமுறையின் திறமையைப் பெரிதும் பொறுத்தே இருந்

Koviloor Acadamy

தது. ஆனுல் பதினெட்டாம் நூற்ருண்டில்கூட டவ் (Dow), ரென்னல், ஸ்டாவொரினஸ், போன்றவர்களால் ஆற்றின்மூலம், செய்திப் போக்கு வரத்து செய்வதின் வசதிகள் பேசப்பட்டிருக்கிறது. அந்த ஆசிரியர் கள் மாகாணத்தைப்பற்றிய அறிவை நன்குபெற்றிருந்தனர். இந்திய வரலாற்றின் முற்பகுதியிலிருந்தே அரசாங்கம் பாதைபோடும் செயலே மேற்கொண்டுவந்த மரபு இருந்துவந்தது. மாபெரும் சூர் அரசர்கள் அம்மரபைப் பின்பற்றினுர்கள். அவர்கள் வழியில் முகலாயர்களும் பின்சென்றனர். அக்பர் ஆட்சியின் தொடக்கத்தில் முனின்கான் என்பவர் ஜான்பூரில் ஒரு பாலத்தைக் கட்டினுர். ஷாஜஹான் புர்ஹான்பூரில் நீர்த்தொழில் சம்மந்தமான ஒரு சாலேயைக் கட்டினுர். ஷாஜஹான் கீழ் இருந்த ஆலி மர்தான்கான் 1639-ல் ராவிக் கால்வா யைக் கட்டினுர் அல்லது சீர்திருத்தஞ் செய்தார். அதனுல் மக்கள் பெருமளவு நன்மையை அடைந்தனர்.

உ. உழவு

அந்தக்காலத்து உழவுப் பயிர்கள் இக்காலத்துப் பயிர்கள் போன்றவையே. இக்காலத்தில் போல அப்போது குறிப்பிட்ட நிலங் களில் குறிப்பிட்ட பயிர்களே விளேக்கும் முறை இல்லே என்று கூறுவது தவறு. ஏனெனில் சர்க்கரை (Sugar) வங்காளத்திலும் பீஹாரிலும் பல இடங்களில் பயிரிடப்பட்டுப் பின்பு இந்தியாவின் மற்றப் பாகங்களுக் கும் கொண்டு செல்லப்பட்டது. அவுரி வட இந்தியாவின் சில பகுதி களில் பயிரிடப் பட்டது. ஜமுனுச் சமவெளியிலும், மத்திய இந்தியா விலும் அவுரி பெரும் அளவில் விளேவிக்கப்பட்டும் உற்பத்தி செய்யப் பட்டும் வந்தது என்று பெல்சாயெர்ட் தெளிவாகக் கூறுகிருர். பருத்தி, பட்டு முதலியவற்றிலிருந்து நாடெங்கிலும் பல விடங்களில் துணி நெய்யப்பட்டு வந்தமையின், அதன் தேவைகளுக்காக இந்தி யாவின் சில பாகங்களில் பருத்தியும் பட்டும் பரந்த அளவில் விளேவிக் கப்பட்டன. 1604-லிலோ அல்லது 1605ஆம் ஆண்டின் தொடக் கத்திலோ புகுத்தப்பட்ட புகையிலே அதற்குப் பின் மக்களால் பயி ரிடப்பட்டுவரத் தொடங்கியது. இக்காலத்தில் இருப்பதுபோலவே அக்காலத்திலும் உழவுக்கருவிகள் இருந்தன. ஆனுல் அக்காலத்தில் செயற்கை நீர்ப்பாய்ச்சும் முறை இல்லே. உழவு செய்வோர் உள்நாட்டு அதிகாரிகளால் அடிக்கடி நசுக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் வந்தனர்.

ஊ. பஞ்சங்கள்

பருவமழை பொய்த்து விடுவதால் அடிக்கடி ஏற்படும் பஞ்சங் களால் குடியானவர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்ச மல்ல. முக்கியமாக முகலாய அரசாங்கம் பஞ்ச நிவாரணத்திற்காக எவ்வித

Koviloor Acadamy

மான ஒழுங்கான, நீண்டகால முயற்சிகள் ஒன்றும் செய்யாமல் இருந்தமையின் அவர்கள் துன்பங்கள் அளவிடப் படாதனவாய் இருந்தன. முகலாய அரசர்கள் அவர்கள் செலுத்தும் வரியிலும் போதிய குறைப்புச் செய்யாமல் இருந்தனர். அவர்கள் செய்த சிறு நிவாரண உதவி எண்ணிலாத மக்களின் கொடுந் துன்பங்களைக் குறைக்க முடியாதனவாய் இருந்தன. அதனால் அவர்கள் பட்டினியால் உயிர் துறந்தனர். பஞ்சத்தை ஒட்டி ஏற்பட்ட கொள்ளை நோயாலும் உயிர் நீத்தனர். 1556-1557-ல் ஆக்ராவுக்கும், பியானுவுக்கும் அருகே ஒரு பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டது. பதௌனி 'தம் கண்களாலேயே ஜனங்கள் மற்ற மக்களையே தின்னத் தொடங்கியதைக் கண்டார்.' 'எலும்புந் தோலுமாய் நைந்திருந்த பட்டினியால் வாடியவர்களைக் காணச் சகிக்க முடியாததாய் இருந்தது......நாடு முழுவதும் பாலைவனமாகக் காட்சியளித்தது. நிலத்தை உழுவதற்கு எந்த உழவரும் இல்லை' என்றும் கூறியுள்ளார். இந்தியாவிலேயே செல்வச் செழிப்பு மிக்க மாகாணங்களுள் ஒன்றான குஜராத்தும் 1573-1574-ல் பஞ்சத்துக்கும் கொள்ளை நோய்க்கும் ஆட்பட்டது. அதனால் 'செல்வர்களாயினும், வறியவர்களாயினும் அங்கு வாழ்ந்தோர் எல்லோரும் அந்நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளுக்குச் சிதறிச் சென்றனர்.' அந்நாடு 1594 முதல் 1598 வரை மீண்டும் பஞ்சத்தின் கொடுமைகளுக்கு மிகப் பெரிதும் ஆளாகியது. அப்போது 'மனிதர்கள் மனிதர்களையே தின்றனர். வீதிகளிலும், பாதைகளிலும் பிணங்கள் கிடந்து வழியை மறித்தன. அவைகளை நீக்குவதற்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை.' இயல்பாகவே இரக்க உள்ளம் படைத்த புகாரா நாட்டு ஷேய்க் பரீத்தை நிவாரண வேலைகளின் பொறுப்பாளராக நியமித்து அக்பர் மக்களின் துன்பங்களை நீக்க முயற்சிகள் செய்தார். ஆனால் பேராபத்துக்கள் மலிந்திருந்தமையின் அம் முயற்சிகளால் மக்களின் பெருந்துயரங்களும், கொடுமைத் துன்பங்களும் நீக்க முடியாதவையாய் விட்டன. 1630-1632-ல் அதே போன்ற மிகப் பயங்கரமான பஞ்சம் தக்கணத்திலும் குஜராத்திலும் தோன்றியது. அந்தப் பெருங் கேட்டின் பயங்கரங்கள் மிகப் பெரிதாயிருந்தன. ஷாஜஹான் ஆட்சியில் அரசாங்க வரலாற்று ஆசிரியராயிருந்த அப்துல் ஹமீது லாஹுரி, 'மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொன்று விழுங்கத் தொடங்கினர். மகனுடைய அன்பைக் காட்டிலும் அவனுடைய உடலிறைச்சியே பெரிதும் விரும்பப்பட்டது,' என்று கூறுகிறார். அப் பேராபத்தைக் கண்ணால் கண்ட ஒரு டச்சு வணிகர், 'இன்னும் இறந்துபோகாமல் வீதியில் கிடந்தவர்களை மற்றவர்கள் துண்டு துண்டாக வெட்டினார்கள். மனிதர்கள் உயிரோடிருக்கும் மற்ற மனிதர்களைக் கொன்று தின்றார்கள். அதனால் வீதிகளில் செல்வதும் அதனினும் மிகுதியாகப் பாதைகளில் பிரயாணம் செய்வதும் உயிருக்கு ஆபத்தாய் இருந்தன. எந்த நேரத்திலும் பிறரால் கொன்று தின்னப்படும் அபாயம் இருந்தது'

Koviloor Acadamy

என்று கூறுகிறுர். ஷாஜஹான் 'சில சூப்புச் சமையலறைகளைத்' திறந்தார்; $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் தானமாக அளித்தார். நில வருவாய் மதிப்பீட்டில் பதினொன்றில் ஒரு பாகத்தை நிவாரணத்திற்காக அளித்தார். ஆனுல் இவை பட்டினிகிடந்து சாகும் மக்களின் துன்பத்தைக் குறைக்கப் போதியளவாயில்லை. அதற்குப் பின் அவுரங்கசீப்பின் ஆட்சி முடியும் வரை அடுத்தடுத்துப் பல ஆண்டுகளில் பஞ்சங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. ஆனுல் 1630-1632 ஆம் ஆண்டுப் பஞ்சத்தைப் போன்ற மிகக் கொடிய பஞ்சம் என்றும் உண்டாகியதில்லை.

எ. பெருந்தொழிலும் கைத்தொழிலும்

அக்காலத்து இந்தியப் பொருளாதார வரலாற்றின் மிக முக்கியமான கூறுகளில் ஒன்று மக்களின் பல்திறப்பட்ட பரந்த தொழில் முயற்சியே ஆகும். அது உள்நாட்டுப் பிரபுக்கள், வணிகர்கள் இவர்களின் தேவைகளுக்கு ஏற்றவற்றை வழங்கியதுடன் ஐரோப்பாவிலிருந்தும், ஆசியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும் வந்த வணிகர்களின் தேவைகளையும் பூர்த்தி, செய்தது. அதுவரை அந்தக்காலத்தில் இந்தியாவிலேயே மிக முக்கியமான தொழிலாக இருந்தது பருத்தித் துணி உற்பத்தியேயாகும்.முதன்மையான பருத்தி உற்பத்தியிடங்கள் நாடெங்கிலும் பரவலாக இருந்தன. எடுத்துக்காட்டாக பாட்னு, குஜராத், காந்தேஷிலிருந்த புர்ஹான்பூர், ஜான்பூர், வாரணுசி, (ஐக்கிய மாகாணங்களில்) உத்தரப் பிரதேசத்திலும், பீஹாரிலும் பாட்னுவைப்போன்ற வேறு சில இடங்கள், ஒரிஸ்ஸாவிலும்,வங்காளத்திலும் பலநகரங்களும் கிராமங்களும் பருத்தி உற்பத்தியிடங்களாக விளங்கின. ஒரிஸ்ஸாவிலிருந்து கிழக்கு வங்காளம் வரையிலுமுள்ள பகுதி முழுதும் ஒரு பெரிய பருத்தித் தொழிற்சாலையாகக் காட்சியளித்தது. சிறப்பாக டாக்கா மாவட்டம் அதனுடைய நுண்மையான மஸ்லின் துணிகளுக்குப் பெயர் பெற்றது. இந்தியாவிலேயே டாக்காவில்தான் 'பருத்தியிலிருந்து மிகச் சிறந்த, மிக நுண்மையான துணி' நெய்யப்பட்டது. கிழக்கு வங்காளத்திலிருந்த சாபார்ஸ்பூர், சோனுர்காவோன் என்ற இடங்களில் 'எல்லோரும் நெய்தல் தொழிற்சாலையால் வாழ்ந்து வந்தனர். அந்த உற்பத்தி மிகச் சிறந்த தன்மையையும் மிக உயர்ந்த புகழையும் பெற்றுவிட்டது' என்று பெல்சாயெர்ட் குறிப்பிடுகிருர். பெர்னியர் கூறுகிருர்: 'இந்துஸ்தானம் அல்லது மாபெரும் முகலாயப் பேரரசுக்கு மட்டுமின்றி எல்லா அண்டை நாடுகளுக்கும், ஐரோப்பாவுக்குங்கூடப் பொதுவான பருத்தி, பட்டு இவற்றின் அரசாங்கக் கிடங்காகக் கருது மளவுக்கு மிகுந்த அளவான பருத்தியும் பட்டும் வங்காளத்தில் இருந்தன.' சாயத் தொழிலும் வளர்ந்தோங்கிவரும் நிலையில் இருந்தது. காடாப் பருத்தித் துணிகள் சாய முட்டப்பட்டன. அல்லது 'பல்வேறு வகையான அழகான வண்ணமும், உருவமும்

Koviloor Acadamy

அமைந்த பூக்கள் அல்லது வடிவங்கள் துணியில் அச்சடிக்கப்பட்டன. அவை எந்த நீராலும் அழிக்கப்பட முடியாதவையாய் இருந்தன' என்று டெர்ரி கூறுகிறுர். பருத்தி உற்பத்தியோடு வைத்து ஒப்பிடும் போது குறைந்த அளவான பட்டு நெசவும் மக்களின் ஒரு பகுதியின ரின் முக்கியமான தொழிலாக இருந்தது. அக்பரின் ஆட்சியில் பேரர சின் ஆதரவைப் பெற்றதால் பட்டு நெசவு கணிசமான அளவு ஊக்கம் பெற்றது என்று அபுல்பாஸல் கூறுகிறுர். பட்டு நெசவு லாகூர், ஆக்ரா, பத்பூர் சிக்ரி, குஜராத் ஆகிய இடங்களில் நடைபெற்று வந் தாலும் வங்காளம்தான் பட்டு உற்பத்தி, விளைச்சல் இவற்றிலும், இந்திய வணிகர்கள், இந்தியாவின் மற்ற பாகங்களிலிருந்துவந்த ஐரோப்பிய வணிகர்கள் இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய் வதிலும் முன்னிடமாக இருந்தது. டாவெர்னியரின் சான்று கொண்டு மூர்லாண்டு பின்வருமாறு எழுதுகிறுர்: ஏறத்தாழப் பதினேழாம் நூற் ருண்டின் இடைப்பகுதியில் வங்காளத்தில் பட்டின் மொத்த உற்பத்தி 'சுமார் 2½ மில்லியன் பவுண்டுகளாக இருந்தது. அவற்றில் ஒரு மில்லி யல் பவுண்டுகள் அப்பிரதேசத்திற்காக வைத்துக் கொள்ளப்பட்டன. ¾ மில்லியன் பவுண்டுகள் கச்சாவாக டச்சுக்காரரால் ஏற்றுமதி செய் யப்பட்டன. ¾ மில்லியன் பவுண்டுகள் இந்தியாவில் வழங்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலான பகுதி குஜராத்துக்குச்சென்றது. கொஞ்சம் பகுதி மத்திய ஆசியாவிலிருந்து வந்த வணிகர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.' சால்வை, கம்பளம் இதை நெய்யுந் தொழில்கள் அக்பரின் ஆதரவினுல் செழிப்புற்றேங்கின. சால்வை பெரும்பாலும் மயிரினுல் நெய்யப்பட்டது. அத்தொழில் முதலில் காஷ்மீரில் தோன்றி யது. லாகூரிலும் சால்வை உற்பத்தி செய்யப்பட்டது. கம்பளம் லாகூரிலும் ஆக்ராவிலும் நெய்யப்பட்டது. கம்பளச் சரக்குகள், முக்கியமாக முரட்டுச் சமுக்காளங்களும் நெய்யப்பட்டன. இந்தியா தன்னுடைய பழைய முயற்சி மிக்க கடலோடும் தொழிலைக் கைவிட் டிருந்தாலும், கப்பல் கட்டும் தொழில் அந்தச் சமயத்தில் அடியோடு அழிந்து விடவில்லை. இதற்கு அக்கால இலக்கியங்களிலிருந்து பல குறிப்புக்கள் நமக்குச் சான்ருகக் கிடைக்கின்றன. இந்தியாவில் முக்கியமாக வெடிமருந்துக்காகப் பயன்படுத்தப்படுவதும், டச்சு ஆங்கிலேய வணிகர்களால் வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டதுமான வெடியுப்பு பதினேழாம் நூற்ருண்டில் இந்தியாவின் பல பரவலான பாகங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டது. குறிப்பாக இந்தியத் தீப கற்பத்திலும், இந்திய கங்கைப்பகுதியில் பீஹார்ப் பிரிவிலும் உற்பத்தி செய்யப்பட்டது. அதிலிருந்து பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற் பகுதி வரை பீஹார் அந்தப் பொருளின் உற்பத்திக்குச் சிறப்பான பெயர் பெற்றிருந்தது. ஐரோப்பியர்கள் தங்கள் நாடுகளில் நடக்கும் போர்களில் பயன்படுத்துவதற்காக அதை மிகுதியாக வாங்கி வந்தனர்.

Koviloor Acadamy

இப்பெருந் தொழில்களைத் தவிர முகலாயர் காலத்தில் பல்வேறு கைத்தொழில்களும் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. 'பல வியப்பான பெட்டிகள், இரும்புப் பெட்டிகள், பேறு உறைகள் கம்பளங்கள், மற்றச் சிறந்த உற்பத்திப் பொருள்கள் எல்லாம் இந்தியா வில் கிடைக்கும்' என்று எட்வர்ட் டெர்ரி குறிப்பிட்டிருந்தார். பெல்சாயெர்ட் கூட சிந்துவில் 'அலங்கார மிக்க தட்டங்கள், பலகை கள், எழுதும் பொருள்கள், இன்னும் இவை போன்றவை உள்நாட்டில் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. அவை அழகாயும், தந்தம் கருங்காலி இவற்றை வைத்துப் பதிக்கப்பட்டனவாயும், கோவா முதலிய கடற்கரை நகரங்களிலிருந்து பேரளவில் ஏற்றுமதி செய்யப்படுவனவாயும் இருந்தன' என்று கூறியுள்ளார். உற்பத்தி களுக்கு அரசாங்கம் ஊக்கம் கொடுத்தாலும், உற்பத்திப் பொருள் களை மிகுதியாகப் பயன்படுத்தும் நடுத்தர வகுப்பினரால் நெசவாளி கள் நேரடியாகப் பொருள்வருவாய் பெற்றனர். மேலும் பெர்னியரும், பெல்சாயெர்ட்டும் கூறுவதுபோல, பிரபுக்களும் அதிகாரிகளும் அவர் களைக் கடுமையாக நடத்தித் துன்புறுத்தியதுடன், பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்கும்படி வற்புறுத்தினர், அவர்களிடமிருந்து தடை செய்யப்பட்ட அப் பொருள்களை வலிந்து வாங்கிக் கொண்டனர். இதனால் தங்கள் தொழில்களிலிருந்து கிடைக்கும் பொருளாதார நன்மையும் இலாபமும் நெசவாளர்களுக்கும், கைத்தொழிலாளர் களுக் கும் கிட்டாமற் போயின. எனினும் பிரபுக்கள் மிக உயர்ந்த உற்பத்திப் பொருகளின் மீது சுவையார்வம் கொண்டிருந்தமையின் அவற்றின் தரம் குறையாத மரபு காக்கப்பட்டு வந்திருப்பதைக் காணு கின்றோம்.

ஏ. விலைகள்

பொருள்களின் விலைகள், சிறப்பாக எல்லாராலும் பயன் படுத்தப் படும் பொதுப்பொருள்களான அரிசி, காய்கறிகள், வாசனைப் பொருள் கள், இறைச்சி, கால்நடை, பால் இவற்றின் விலைகள் மிகக் குறைவாய் இருந்தன என்று அபுல்பாஸலிடமிருந்தும், இன்னும் சில ஆசிரியர் களிடமிருந்தும் அறிகிறோம். 'நாடுமுழுவதிலும் பொருள்கள் பெரும் அளவில் குவிந்திருந்தன...ஒவ்வொருவரும் பற்றுக்குறை இன்றி உண வுண்ணலாம்' என்று எட்வர்ட் டெர்ரி கூறியுள்ளார். 'அக்பர், ஜஹாங்கிர் காலத்தில் கூலிக்கு அமர்த்தப்பட்ட நிலமில்லாத வேலை யாள் ஒருவன் இப்போதைக் காட்டிலும் அப்போது நிறையச் சாப்பிடு வதற்கேற்ற வசதி இருந்தது' என்று ஸ்மித் எழுதுகிறார். 'பொது வாகக் கூறுமிடத்து மக்கள் இப்போது போலவே அப்போதும் பொரு ளாதார நிலையில் ஒரே நிலையில் இருந்தனர்' என்று மூர்லாண்ட் கருது கிறார். முகலாயர் காலத்துப் பொதுமக்களுக்குச் செல்வ வளமிக்க பொற்காலம் என்ற ஒன்று என்றும் ஏற்படவில்லை. ஏனெனில் பொருள்

Koviloor Academy

இந்தியச் சரக்குகளை விலைக்கு வாங்கத் தங்கள் நாட்டிலிருந்து தங்கத் தகடுகளை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. இங்கிலாந்தில் இந்த வழக்கத்திற்குக் கடும் எதிர்ப்பு இருந்த போதிலும் அவ்வணிகர்கள் இதைக் கைவிட முடியவில்லை. முகலாயர்காலத்து இந்தியாவில் ஐரோப்பிய வணிகர்கள் 'தங்கள் விருப்பப்படி நடக்க முடியவில்லை' என்ற மூர்லாண்டின் கருத்து அக்காலத்துத் தொழிற்சாலைப் பதிவேடுகளின் எண்ணிலாத குறிப்புக்களினுல் ஆதரிக்கப் படுகிறது. 'பொதுவாகத் தந்திரமும் நுண்ணறிவும்' மிக்க இந்திய வணிகர்கள், தரகர்கள் இவர்களோடும், வாணிகப் பொருள்களின் ஏக போக உரிமை பெற்றவர்களோடும், சிறிது தொல்லை அனுபவிக்க நேரிட்ட ஐரோப்பிய வணிகர்களுக்கு முக்கிய தடையாயிருந்தது உள்நாட்டுக் கவர்னர்கள், மற்ற உயர்ந்த அதிகாரிகள் இவர்களின் இடையிடே யாகும். எடுத்துக் காட்டாக, மீர்ஜும்லா காசீம்பஜாரிலிருந்த ஆங்கிலத் தொழிற்சாலையின் கதவுகளை மூடச் செய்துவிட்டு, ஆங்கிலேயர்கள்தம்மை வந்து முறையே பார்க்கும் வரை யாரும் அவர்களுடன் வியாபாரத் தொடர்பு கொள்ளக் கூடாது என்று விதித்து விட்டதாக 1659-ல் எழுதப்பட்ட ஆங்கிலக் கடிதத்தின் சான்றினை நாம் எடுத்துக் கொள்ளலாம். ஐரோப்பிய வணிகர்கள் பல வகையிலும் இந்த அதிகாரிகளை மகிழ்வித்துத் திருப்திப்படுத்த முயற்சிகள் எடுத்துக் கொண்டனர்; சிலசமயங்களில் அவர்கள் தங்கள் நோக்கங்கள் நிறைவேறப் பெற்றனர்; வேறு சில சமயங்களில் ஏமாற்றமுற்றனர்.

ஒ. அவுரங்க சீப்பின் ஆட்சிக்குப் பிறகு பொருளாதாரச் சீர்குலைவு

அவுரங்க சீப்பின் ஆட்சியிறுதிக் காலத்தில், அமைதியும் அரசியல் ஒழுங்கும் மறைந்ததன் இயல்பான விளைவாக இந்தியாவின் பொருளாதார வளம் சீர்குலையத் தொடங்கியது. ஆட்சியின் இடைவிடாத போர்களும், ஆட்சியின் திவாலா நிலையும், கஜானு காலியான நிலையும் அமைதியும் ஒழுங்கும் நிலைநிறுத்துவதை முடியாத ஒன்ருகச் செய்துவிட்டன. இதன் விளைவாக உழவு, தொழில்கள், வாணிகம் முதலியவை பெரிதும் பாதிக்கப்பட்டன. சிறிது காலம் வியாபாரம் அப்படியே தடைப்பட்டு நின்றதைக் காணுகின்ருேம். 1690-1698ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் கப்பலில் அனுப்புவதற்குப் போதுமான துணிகளைப் பெறமுடியவில்லை. அவுரங்கசீப்பின் வரலாற்ருசிரியர் கூறுகிருர்: 'இவ்வாறு இந்தியாவில் ஒரு பெரிய பொருளாதார வறுமை நிலை ஏற்பட்டது. 'தேசிய இருப்புக் குறைந்ததுடன், இயந்திரம் இயக்கும் திறமையும், நாகரிகத் தரமும் விரைவாகக் குறைந்து வந்தன. நாட்டின் பரந்த நிலப் பகுதிகளில் எல்லாம் கலையும் பண்பாடும் மறைந்து வந்தன.' மற்ற மாகாணங்களைக் காட்டிலும் போரில் ஈடுபடாத சுபாவா

Koviloor Acadamy

கிய வங்காளம் தன் பொருள் வருவாய்களை எல்லாம் அவுரங்கசீப்பின் தக்கணப் போர்களுக்கு அனுப்பி வந்ததால், பெரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியது. விரைவாகச் சீர்குலைந்து வந்த முகலாயப் பேரரசினுல் மிக நன்ருகச் சுரண்டப் பட்டு விட்டது.

1757ஆம் ஆண்டுக்கு நெடுங்காலத்திற்கு முன்பே நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு தொடங்கி விட்டது. ஆனல் பல காரணங்கள் அச்சீர்குலைவை விரைவுபடுத்தின. இந்தியப் பொருளாதார வரலாற்றின் 'மிக இருண்ட காலம் என்று உண்மையில் கூறுவதற்குரிய பதினெட்டாம் நூற்ருண்டில், குறிப்பாக வங்காளத்தில் சீர்குலைவுக்குப் பல காரணங்கள் இருந்தன. மத்திய அரசாங்கத்தின் பலவீனமும், அரசவையில் தோன்றிய கிளர்ச்சிகளும் சதிகளுமாகும். 1738-1739-ல் உண்டான பயங்கரமான பாரசீக இடையீடும், மராட்டியர்களும் இமயமலை மலைமக்களும், மக்குகளும், போர்ச்சுக்கீசியக் கடற் கொள்ளையர்களும் செய்த சீரழிவுகளும் தஸ்தக்கைத் தவருகப் பயன்படுத்தலும் ஊழியர்களால் மற்ற வாணிக உரிமைகள் தவருகப் பயன் படுத்தப் பட்டமையும், ஆங்கிலக் கம்பெனியின் குமாஸ்தாக்களும், முகவர்களும் அவர்களுடைய தனிப்பட்ட வாணிகத்தில் வாணிகச் சிறப்புரிமைகளைத் தவருகப் பயன் படுத்தியும், உப்பு, வெற்றிலை, புகையிலை போன்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையான சில பொருள்களை ஆங்கிலக் கம்பெனி தனி உரிமையாகப் பெற்றிருந்தமையும், கம்பெனியின் முதலீட்டிற்காகப் பெருந்தொகை இலவசமாகக் கிடைக்க வேண்டுமென்று வணிகர்களும், நெசவாளர்களும் செய்த ஒடுக்கமும், 1757 லிருந்து நாட்டின் பெருஞ் செல்வம் நாட்டை விட்டு இறைத்துச் செல்லப்பட்டமையுமாகிய இவை யெல்லாஞ் சேர்ந்து நாட்டின் பொருளாதார அழிவை ஏற்படுத்தி விட்டன. இவற்றுடன், கிழக்கிந்தியக் கம்பெனி நவாப்பின் அரசாங்கத்தைப் படிப்படியாக அமுக்கியும் வந்தது. அதன் விளைவாகப் படைகளைக் கலைக்கவும், அரசவைகளையும், உள்ளூர் அரசாங்கச் செயலகங்களையும் கலைக்கவும் நேர்ந்தது. அதனுல் பலர் வேலையிழந்து கொள்ளையடித்தலையே தொழிலாகக் கொண்டவர்கள், குற்றம் செய்யும் மலைநாட்டு மக்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டு பிளாசி காலத்துக்குப் பின்பு நாட்டில் பொதுவான சட்டமின்மையையும், பாதுகாப்பின்மையையும் விளைவித்தனர்.

1765 மே மாதத்தில் பொறுக்குக் குழு (Select Committee) வங்காளத்தை இவ்வாறு குறை கூறியது. 'பிளவுபட்ட மாகாணம், தலைக்கனம் ஏறி மட்டு மீறி நடந்துகொள்ளும் மாகாணம், நாடி நரம்புகள் இல்லாத ஓர் அரசாங்கம், பணம் இல்லாத கஜானு, கீழ்ப்படிதல், கட்டுப்பாடு, பொது நல உணர்ச்சி ஆகியவை யில்லாத ஊழியம்...பயன் மிக்க பெருந் தொழில், உரிமை கொடுக்கப்பட்ட

Koviloor Acadamy

வாணிகம் இவற்றின் பொதுவான தேக்கநிலை, அவமானப்படுத்தப்பட்ட இளவரசர், ஆதரவற்ற மக்கள், இவர்களிடமிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிக்கொண்டு தனிப்பட்ட ஆட்கள் பெருஞ் செல்வங்களைத் திரட்டிக் கொண்டிருந்தமையால் உண்டான அதிருப்தி, வறுமை, ஒடுக்கம், முதலியவற்றால் வாடி வருந்திக்கொண்டிருந்தனர்.'[1] கிளைவும் அவருக்குப் பின் வந்த திறமையற்ற வெரெல்ஸ்ட் (Verelst), கார்ட்டியர் என்ற இருவரும் நடத்திய இரட்டையாட்சி முன்பிருந்த குழப்பத்தை இன்னும் அதிகக் குழப்பமுள்ளதாக்கியது. 1770-ல் தோன்றிய பஞ்சம் மக்களின் துன்பங்களாகிய எண்ணம் பொங்கி வழியும்படி செய்துவிட்டது. 1772-க்குப் பிறகு கம்பெனியின் அரசாங்கம் 'திவானாக நிற்பதாகத்' தீர்மானித்துவிட்ட பின், இத்தீங்குகளில் சிலவற்றை நீக்க வாரன்ஹேஸ்டிங்ஸூம், கார்ன்வாலிசும் முயன்றனர். ஆனால் புதிய ஒழுங்கமைப்பு ஏற்படுவதற்கு மேலும் பல ஆண்டுகள் ஆயின.

[1]வங்காளத்திலிருந்த பொறுக்குக் குழு கோர்ட் ஆப் டைரக்டர்களுக்கு அனுப்பிய கடிதம் 1767 பிப்ரவரி 19ஆம் தேதி யிடப்பட்டது. பார்க்க: வெரெல்ஸ்ட், வியூ ஆப் பெங்கால் (View of Bengal) பிற்சேர்க்கை, பக்கம் 471.

Koviloor Academy

8. கல்வியும் இலக்கியமும் கலையும்

1. கல்வியும் இலக்கியமும்

முகலாய இந்தியாவில் தற்காலக் கல்வி முறையைப்போல அரசாங்கத்தால் நிறுவப்பட்டு கண்காணிக்கப்பட்ட கல்வி நிலையம் ஒன்றும் இல்லை. ஆனால் தொடக்க நிலைப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி போன்ற பள்ளிகள் சில அக்காலத்தில் இருந்தன. அரசர்களும், அவர்களால் கொடை அளிக்கப்பட்டோரும் மசூதிகள், மடங்கள், தனிப்பட்ட முனிவர்கள், அறிஞர்கள் இவர்களுக்கு நிலக் கொடைகள் அல்லது பணம் கொடுப்பதன் மூலம் அவ்வகைக் கல்விக்கு ஊக்கமளித்தனர். இவ்வாறு பெரிதும் ஒவ்வொரு மசூதியும் ஒரு மக்தாப்பை (Maktab) ப் பெற்றிருந்தது. அங்கே அருகிலுள்ள வட்டாரத்துச் சிறுவர்களும் சிறுமிகளும் தொடக்கக் கல்வியைப் பெற்றனர். நகரங்களிலும், கிராமப் புறங்களிலும் இருக்கும் மாணவர்களின் நன்மைக்காக இந்து சமஸ்கிருத, இந்திய மொழிப் பள்ளிகள் தோன்றிச் செயல்படத் தொடங்கின.

இந்தியாவின் முகலாய அரசர்கள் கல்வியை ஆதரித்தனர். பாபர்காலத்தில் பொதுப் பணித்துறை (Shuhrat-i-Am) யின் கடமைகளுள் ஒன்று பள்ளிகளையும் கல்லூரிகளையும் கட்டுவதாகும் என்று பாபரின் மந்திரியான சய்யிது மக்பார் ஆலியால் எழுதப்பட்ட தவாரீக் என்ற நூலின் துணைகொண்டு சொல்லப்படுகிறது. ஹுமாயூன் சோம்பல் மிக்க வராயும், அபினிப் பிரியராயும் இருந்தாலும் படிப்பில் பெருவிருப்பம் உடையவராய் இருந்தார். நில வியலும், வான இயலும் அவருடைய விருப்பப் பாடங்களாய் இருந்தன. அவர் புத்தகங்கள் மீது கொண்டிருந்த பற்று மிகப் பெரிது ; அவர் எப்போதும் 'தம்முடன் தேர்ந்தெடுத்த நூல் களடங்கிய ஒரு நூலகத்தை எடுத்துச் செல்வார்.' அவர் தில்லியில் ஒரு மத்ராசா(Madrasa) நிறுவப்படுமாறு செய்தார்; புராண கிலாவில் ஷெர் ஷாவினால் கட்டப்பட்ட இன்ப மாளிகையை ஒரு நூலகமாக மாற்றினார். 'பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கல்வி கற்பிப்பதற்காகப் புகுத்தப் பட்ட முறையில் அக்பரின் ஆட்சி ஒரு [புதிய சகாப்தத்தைத்

Koviloor Acadamy

தொடங்குகிறது.' அவர் பதேபூர் சிக்ரி, ஆக்ரா இவற்றிலும், வேறு சில இடங்களிலும் கல்லூரிகள் கட்டினார். முஸ்லிம் கல்வியின் நிலையை உயர்த்துவதற்காக அவர் கல்வித்திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்தார். அது எப்பயனும் விளைவிக்கவில்லை என்று கூறுவது பொருந்தாத கூற்றாகும். உண்மையில் அபுல் பஸல் அதன் நல்ல பலன்களைப் பற்றிக் குறிப்பிடும்போது; 'இளைஞர்களின் கல்விக்காக எல்லா நாடுகளும் பள்ளிகள் வைத்திருக்கின்றன. ஆனால் இந்துஸ்தானம் அதனுடைய உயர்தரக் கல்வி முறைக்குப் புகழ் பெற்றது' என்று எழுதுகிறார். பிறமதங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்ற தம் கொள்கையினால் உந்தப்பட்டு அக்பர் பிற்காலத்தில் மத்ராசாக்களில் இந்துக்கள் கல்வி பெறுவதற்கும் வழி வகைகள் ஏற்படுத்தினார். இலக்கியச் சுவை சிறிது உடையவராயும், பாரசிக துருக்கி மொழிகளை நன்கு கற்றறிந்தவராயுமிருந்த ஜஹாங்கீர், வாரிசு இல்லாமல் பணக்காரனோ, பயணியோ இறந்துவிட்டால் அவனுடைய சொத்து பறிமுதல் செய்யப்பட்டு, அரசாங்கப் பணத்துடன் சேர்க்கப்படும் என்றும், அப்பணம் மத்ராசாக்கள், மடங்கள் முதலியவற்றைப் பழுது பார்ப்பதற்காகச் செலவிடப்படும் என்றும் ஒரு விதியைப் பிறப்பித்தார். அவர் பட்டத்துக்கு வந்தவுடனே, 'முப்பதாண்டுகளாகப் பறவைகள், விலங்குகள் இவற்றின் குடிவாழ்க்கைக்கு இருப்பிடமாயிருந்த பல மத்ராசாக்களைப் பழுதுபார்த்து அவற்றை மாணவர்களையும் பேராசியர்களையும் கொண்டு நிறைத்தார்' என்று தரிக்கி ஜான் ஜஹன் என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளது. ஷாஜஹான் மற்ற எவற்றைக் காட்டிலும், மாபெரும் கட்டிடங்களைக் கட்டுவதில் அதிக அக்கறை உள்ளவராய் இருந்திருப்பினும், அவருடைய இளமையில் துருக்கியில் கல்வி கற்பிக்கப்பட்டார். இரவுகளின் ஒரு பகுதியைச் சொந்தமாகப் படிப்பதற்குச் செலவிட்டார். அவர் மாணவர்களுக்கு உதவிச் சம்பளமும், பரிசுகளும் கொடுத்துக் கல்விக்கு ஊக்கமளித்தார். அவர் தில்லியில் ஒரு கல்லூரியை நிறுவினார்; பாழடைந்து கிடந்த தார்-உல்-பகா (கரைகாணாக் காலத்தின் இல்லம்) என்றழைக்கப்பட்ட கல்லூரியைப் பழுதுபார்த்தார்.

தாராஷுக்கோ முகலாயப்பேரரசக் குடும்பத்தில் இந்தியா இதுவரை பெற்றெடுத்த மிகப்பெரிய அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அராபிய மொழி, பாரசிகம், சமஸ்கிருதம் இவற்றில் சிறந்த புலமை பெற்றிருந்த அவர், உபநிஷதங்கள், பகவத்கீதை, யோக வாசிஷ்ட ராமாயணம் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புக்களையும், முஸ்லிம் முனிவர்களின் கால அட்டவணைகளையும், சூபி தத்துவம் பற்றிய பல நூல்களையும், இன்னும் பல புகழ்பெற்ற நூல்களையும் இயற்றினார். இந்தத் துரதிஷ்டம் மிக்கவரின் கல்லறையைப் பார்த்து சர் வில்லியம் ஸ்லீமன், 'அவர் சிம்மாசனத்தைப் பெற்று வாழ்ந்திருந்தால் கல்வியின்

Koviloor Acadamy

நிலையும், அத்துடன் இந்தியாவின் தலைவிதியும் முற்றிலும் வேறுபட்டனவாய்ப் போயிருக்கும்' என்று எண்ணியது பொருத்தமே. அவுரங்கசிப் உயர்ந்த கல்வியைப் பெற்றவராயிருந்தும், பொதுவாகக் கல்வியின் வளர்ச்சிக்குச் சிறப்பாக எதுவும் செய்யவில்லை. எனினும் அவர் முஸ்லிம் கல்விக்காக எல்லா வகை ஊக்கங்களையும் அளித்தார். கீனே (Keene) யின் கருத்துப்படி அவர் 'மிகப் பல கல்லூரிகளையும், பள்ளிகளையும்' நிறுவினர்.

முகலாயர் காலத்தில் ஒரு வகையான பெண்கல்வி நிலவியது. பேரரச அரண்மனையைச் சேர்ந்தோரின் புதல்விகளும், செல்வமிக்க பிரபுக்களின் புதல்விகளும் அவர்கள் வீடுகளிலேயே கல்வி கற்பிக்கப்பட்டனர். இந்துக்களில் மத்தியதரக் குடும்பத்தினரின் பெண்கள் பள்ளிகளில் பையன்களுடன் சேர்ந்து தொடக்கக் கல்வி பெற்றனர் ; அவர்களுள் சிலர் மத இலக்கியத்தில் வல்லவர் களாயும் பிற்காலத்தில் விளங்கினர். இந்தியன் ஸ்டாகுடரிக் கமிஷனின் துணைக்குழு 1929 செப்டம்பரில் பின்வருமாறு உரைத்தது மிகவும் பொருத்த முடையதாகும் : 'பெண்கள் கல்வியை எதிர்க்கக் கூடியவாறு இந்து மதத்திலும் இஸ்லாம் மதத்திலும் எதுவும் இல்லை. உண்மையில் இந்தியாவில் மிகப் பழங்காலத்திலேயே பரந்த அறிவுபடைத்த பெண்களும், குறிப்பாகத் தெய்விக, புராண இலக்கியங்களைக் கற்றறிந்தோரும் பலராக இருந்தனர்.' அக்பர் காலத்தில் 'அரசபரம்பரையைச் சார்ந்த பெண்களுக்கு ஒழுங்கான கல்விப் பயிற்சி கொடுக்கப்பட்டது.' அவ்வாறு கல்வி பெற்ற சில மகளிர்கள் பிற்காலத்தில் இலக்கியத்துறையில் புகழ்பெற்று விளங்கினர். இவ்வாறு பாபரின் மகளான குல்பதன் பேகம் ஹுமாயூன் நாமாவின் ஆசிரியை ஆவாள். ஹுமாயூனின் மருமகள் சலீமா சுல்தானு பல பாரசீகக் கவிதைகளை இயற்றினாள். நூர்ஜஹான், மும்தாஸ் மஹால், ஜஹானரா பேகம், ஜெப்-உன்-நிசா ஆகியோர் உயர்ந்த கல்வி பெற்ற மகளிராவர். அவர்கள் பாரசீக, அராபிய இலக்கியத்தில் வல்லவராயும் விளங்கினர். நுண்மையான அரேபிய, பாரசீக அறிஞராயிருந்த ஜெப்-உன்-நிசா கையெழுத்துக் கலையிலும் வல்லவளாயிருந்தாள்; வளமான ஒரு நூலகத்தையும் வைத்திருந்தாள்.

நாம் ஏற்கெனவே பார்த்தபடி இந்தியாவின் தைமூரித்து ஆட்சியாளர்கள் இலக்கியத்தின் புரவலர்களாயிருந்தனர். பல துறைகளிலும் அது வளர்ந்தோங்குவதற்குப் பேரளவிற்கு ஆதரவு அளித்தனர். பல அறிஞர்கள் தோன்றி அக்பரின் ஆதரவைப் பெற்றுச் சுவை மிக்க முக்கியமான பல நூல்களை எழுதினர். திரிவேணியைச் சேர்ந்த வங்காளக் கவிஞரும், சந்தீ—மங்கல் என்ற நூலின் ஆசிரியரும், அக்பர் காலத்தில் வாழ்ந்தவருமான மாதவாச்சாரியர் கல்வியின் புரவலர் என்று பேரரசரை வானளாவப் புகழ்ந்துள்ளார்.

Koviloor Acadamy

அக்பர் ஆட்சிக் காலத்துப் பாரசிக இலக்கியத்தை மூன்று தலைப்புக்களின் கீழ்ப் பிரிக்கலாம். அவை (1) வரலாற்று நூல்கள் (2) மொழி பெயர்ப்புக்கள்(3) கவிதையும் செய்யுளும் என்பவையாகும். அவ்வாட்சிக் காலத்தில் எழுதப்பட்ட புகழ்பெற்ற வரலாற்று நூல் கள் பின்வருமாறு: முல்லா தாவூத் எழுதிய தாரீக்கி அல்பி, அபுல் பாஸல் எழுதிய அய்னி அக்பரீயும் அக்பர்நாமாவும், நிஸாம்-உத் தீன் அஹ்மது எழுதிய தபகாத்-இ-அக்பரீ, பெய்ஸி சர்ஹிண்ட் எழுதியஅக்பர் நாமா, அப்துல் பாகி எழுதிய மா ஆசிர்-இ-ரஹீமி என்பவை அவை. இவற்றுள் கடைசியாகக் கூறப்பட்டது அப்துர் ரஹீம் கானி கானுனின் ஆதரவு பெற்று எழுதப்பட்டது. அக்பர் ஆட்சியில் பாரசிக மொழியில் மிகச் சிறந்த நூலாசிரியராயிருந்தவர் அபுல் பாஸலே. அவர் இலக்கிய ஆசிரியராயும், கவிஞராயும், கட்டுரையாளராயும், திறனாய்வாளராயும், வரலாற்ருசிரியராயும் இருந் தார். பேரரசரின் கட்டளைப்படி வடமொழியிலும் பிற மொழிகளிலு மிருந்த நூல்கள் பாரசிகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. மஹாபார தத்தின் வெவ்வேறு பகுதிகள் பல முஸ்லிம் அறிஞர்களால் பாரசிகத் தில் மொழிபெயர்க்கப்பட்டு ரஜ்ம்-நாமா என்ற பெயரில் ஒன்ருய்த் தொகுக்கப்பட்டது. நான்காண்டுகள் உழைத்த பிறகு பதௌனி கி.பி. 1589-ல் இராமாயண மொழி பெயர்ப்பை முற்றுப் பெறச் செய்தார். ஹாஜி இம்ராஹிம் சர்ஹிந்தி அதர்வ வேதத்தைப் பார சிகத்தில் மொழி பெயர்த்தார். கணக்கு நூலான லீலாவதியை பைஸி (Faizi) மொழி பெயர்த்தார். வான இயல் நூலான தஜக் என்பதை முகம்மல் கான் குஜராத்தியில் மொழி பெயர்த்தார். அப்துல் ரஹீம் கானி கானுன் வாகியாத்-இ-பாபரீ என்ற நூலை மொழி பெயர்த்தார். மௌலானு ஷா முஹம்மது ஷாஹாபாதி காஷ்மீர் வரலாற்றை மொழி பெயர்த்தார். சில கிரேக்க, அராபிய நூல்களும் பாரசிகத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. அக்பரின் ஆதரவினுல் புகழ் பெற்ற சில கவிஞர் களும் செய்யுள் செய்வோரும் தகுதிமிக்க பல நூல்களை இயற்றினர். செய்யுள் செய்வோருள் மிகச் சிறந்த புகழ் பெற்றவர் கிஸலி (Ghizali) ஆவர். அவருக்கு அடுத்து முக்கியமானவர் அபுல் பாஸலின் சகோ தரரான பைஸி யாவர். மிகவும் மதிப்பு மிக்க கஸல்களை (Ghazals) இயற்றிய நிஷாப்பூரைச் சேர்ந்த முஹம்மது ஹுஸேன் நாஸிரியும் அக் காலத்தில் கசிதாக்களை (Qasidas) எழுதுவதில் மிகச் சிறந்த புகழ் பெற்ற ஆசிரியராகிய ஷிராஸ் நகரைச் சேர்ந்த சய்யிது ஜமாலுத்தீன் உர்பியும் மற்ற முதன்மையான கவிஞர்களாவர்.

மிகச் சிறந்த இலக்கியச் சுவையார்வம் பெற்றிருந்த ஜஹாங்கீரும் கல்வியறிஞர்களை ஆதரித்தார். பொருளிலும் நடையிலும் அவருடைய சுயசரிதை பாபரின் சுயசரிதைக்கு அடுத்தபடியான புகழ் வாய்ந் தது. அவருடைய அரசவையை அலங்கரித்த அறிஞர்களின் விளக்க மான பெயர்ப் பட்டியலை இக்பால் நாமா-இ-ஜஹாங்கிரீ என்ற நூல்

Koviloor Acadamy

தருகிறது. அவர்களுள் கியாஸ்பேக், நகிப் கான், முதமித்கான், நியாமதுல்லா, அப்துல் ஹக் திஹ்லவி என்போரை இங்கு நாம் குறிப்பிடலாம். சில வரலாற்று நூல்கள் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டன .அவற்றுள் மஆசிரி ஜஹாங்கீரீ, இக்பால் நாமா-இ-ஜஹாங்கிரீ, ஜுப்த்-உத்-தவாரீக் என்பவை மிக முக்கியமானவையாகும். கல்வியறிஞர்களைப் புரப்பதில் ஷா ஜஹான் தம் முன்னோர்களைப் பின்பற்றினர். பல கவிஞர்கள், சமய நெறி வல்லார்கள் (theologians) இவர்களுடன் அவருடைய அரசவையில் சில புகழ் பெற்ற வரலாற்றாசிரியர்களும் இருந்தனர். பாதுஷா நாமா வின் ஆசிரியரான அப்துல் ஹமீது லாஹுரி, மற்றொரு பாதுஷா நாமாவின் ஆசிரியரான அமீனுயி கஜ்வினி, ஷாஜஹான்நாமாவின் ஆசிரியரான இனயத் கான், அமலிசாலி யின் ஆசிரியரான முஹம்மது சாலி இவர்கள் எல்லாம் ஷாஜஹான் ஆட்சியில் வரலாற்றாசிரியர்களின் முக்கியமான நிபுணர்களாவர். நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட இளவரசர் தாரா ஷுக்கோவின் அறிவாராய்ச்சி மிக்க நூல்கள் பாரசீக இலக்கியத்திலேயே தலை சிறந்த நூல்களாக விளங்குகின்றன. ஆர்வ மிக்க ஸுன்னி மதப்பிரிவினரான அவுரங்கசீப் முஸ்லிம் சமய நெறி, சட்டவியல் இவற்றில் ஒரு திறனாய்வு மிக்க அறிஞராய்த் திகழ்ந்தார். கவிதையில் அவருக்குச் சுவை இல்லை. தம்முடைய ஆட்சியின் வரலாறுகளை எழுதுவதை அவர் எதிர்த்தார். காபிகானுடைய முன் தக்கப்-உல்-லுபாப் (Muntakhab-ul-Lubab) ரகசியமாகவே எழுதப்பட்டது. அது போலவே மீர்ஸா முஹம்மது காஸிம் ஆலம் கீரீ நாமா என்ற நூலையும், முஹம்மது சாகீ மா ஆசிர்-இ-ஆலம்கிரீ என்ற நூலையும் சுஜன் ரா கத்ரி குலாசத்-உத்-தவாரீக் என்ற நூலையும், பீம்சேன் நுஷ்கா-இ-தில்குஷா என்ற நூலையும், ஈஷ்வர் தாஸ் பதூஹாத்-இ-ஆலம் கிரி என்ற நூலையும் மறைவாக எழுதினர்.

அக்பரால் உண்டாக்கப்பட்ட அமைதியும் ஒழுங்கும், 'மக்கள் புரிந்து கொள்ளும்' மொழியில் பல முனிவர்களால் பிரசாரம் செய்யப்பட்ட அந்தக் காலத்து மத இயக்கங்களைப் பற்றிய பொதுமைக் கருத்துக்கள் பிற்காலத்தறிஞர்களின் மேதைமையைத் தூண்டி விட்டன. அது பல விதங்களில் வெளிப்பட்டது. அதனால் பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகள் 'இந்துஸ்தானி இலக்கியத்தின் சிறந்த காலமாகக்' கருதப்படலாயின. 1526-க்குப் பிறகு முதல் சிறந்த ஆசிரியர் மாலிக் முஹம்மது ஜயசீ என்பவராவர். அவர் 1540-ல் 'பத்மாவதி என்ற பெயர் பெற்ற அழகான தத்துவக் காப்பியத்தை இயற்றினர். அது உட்பொருள் ஒன்று பொதிந்ததாய் மீவார் ராணி பத்மினியின் வரலாற்றைக் கூறுவதாகும்.' இந்திக் கவிதையின் மீது அக்பருக்கு ஆர்வம் இருந்தாலும், அதற்கு அவர் ஆதரவு தந்ததாலும் இந்தி இலக்கியம் வளர்ச்சி அடையப் பெரும் வாய்ப்பு ஏற்பட்டது

Koviloor Academy

பேரரசரின் அரசவைப் புலவர்களுள், அவரால் 'கவிப்பிரியர்' என்ற பட்டம் கொடுக்கப் பெற்ற பீர்பல் ஒரு புகழ் பெற்ற கவிஞராயிருந்தார். ராஜா மான்சிங்கும் இந்தியில் செய்யுள்கள் இயற்றினர்; கல்வியை ஆதரித்தார். அக்பரின் மந்திரிகளுள் மிகச் சிறந்த நூலாசிரியர் அப்துல் ரஹிம் கானிகானுன் என்பவராவர். அவருடைய தோகைகள் இப்பொழுதும் வட இந்தியா முழுவதும் ஆர்வத்துடனும் வியப்புடனும் படிக்கப்படுகின்றன. பேரரசரால் மஹாபாத்திரன் என்ற பட்டப் பெயர் கொடுக்கப் பெற்ற நரஹரி, ஹரிநாத், கன்ஞ் ஆகியோரும் அவருடைய அரசவையின் சிறப்புப் பெற்ற நூலாசிரியர்களாவர்.

அந்தக் காலத்துக் கவிதை இலக்கியத்தின் பெரும் பகுதி மதத் தொடர்புடையதாய் இருந்தது; கிருஷ்ண வழிபாடு அல்லது இராம வழிபாட்டை விளக்கும் கருத்துக்கள் நிரம்பியதாய் இருந்தது. கிருஷ்ண வழிபாடு ஜமுனுச்சமவெளியை ஏறக்குறைய ஒத்த பிரஜ பூமியில் பெருகியிருந்தது; அங்கே சிறப்புற வளர்ந்துவந்தது. வல்லபாச்சாரியர், அவருடைய மகன் பித்தல் நாத் இவர்களுடைய, 'அஷ்டசாப்' என்ற பெயரில் குழுவாகச் சேர்க்கப்பட்ட, எட்டு மாணவர்களுள், சூர்தாஸ் என்பவர் மிகப் புகழ் பெற்றவர். ஆக்ராவின் குருட்டுக் கவிஞரான அவர் மக்கள் மொழியில் எழுதிய சூர்சாகர் என்ற நூலில் கிருஷ்ணனின் இளமை வாழ்க்கையின் லீலைகளை விளக்கிக் கூறியுள்ளார். கிருஷ்ணனின் அழகைப் பற்றியும் அவனுடைய அன்புக்குரிய இராதாவின் எழிலைப் பற்றியும் பல செய்யுள்களை இயற்றினர். அந்த வழிபாட்டினைச் சார்ந்த மற்ற முக்கியமான கவிஞர்கள், ராஸ்–பஞ்சாத்யாயி என்ற நூலை இயற்றிய நந்த தாஸ், சௌராஸீ வைஷ்ணவ கீவார்த்தா என்ற நூலை உரைநடையில் எழுதியவரான விட்டல் நாத், பரமானந்த தாஸ், கும்பன்தாஸ், 'விட்டல் நாத்தின் முஸ்லிம் சீடரான வரும், பிரேமவார்த்திகா என்ற நூலை இயற்றியவருமான ராஸ் கான் என்பவரும் ஆவர். ராம வழிபாட்டைப் பற்றிய ஆசிரியர்களுள் மிகச் சிறந்தவர் துளசி தாஸ் (கி.பி. 1532-1623) ஆவர். அவர் வாரணசியில் 'புகழ் என்ற கோயிலில் தமக்குரிய இடத்தில் எவராலும் அணுகமுடியாது தனியாக' வாழ்ந்தார். அவர் மிக உயர்ந்த ஒரு கவிஞர் மட்டுமல்லாது இந்துஸ்தானத்து மக்களுக்கு ஆன்மிக குருவாகவும் இருந்தார். இந்துஸ்தானத்தில் அவருடைய பெயர் ஒவ்வொரு வீட்டிலும் வழங்குவதற்குரியதாயிற்று; அவருடைய நினைவு இலட்சக்கணக்கானவர்களால் போற்றி வணங்கத் தக்கதாயிருந்தது. அவருடைய நூல்களில் மிகப் புகழ் பெற்றதான 'இராமசரிதமானஸ' அல்லது 'இராமருடைய வாழ்க்கைத் தடாகம்' சர் ஜ்யார்ஜ் கிரியர்சனல் 'இந்துஸ்தானத்தின் பத்துக் கோடி மக்களுக்கு ஒரு பைபிள்' என்று பொருத்தமுறப் போற்றப்பட்டமை இங்குக் கருதத்தக்கதாகும். இராமாயணத்தை மொழிபெயர்த்த கிரௌஸ் (Growse) கூடத் தம் மொழிபெயர்ப்பில்

Koviloor Acadamy

'அவருடைய நூல் அரசவை முதல் குடிசை வரை உள்ள எல்லாருடைய கையிலும் இருக்கிறது. இந்து இனத்தின் எல்லாச் சாதியினரும், உயர்ந்தோராயினும் தாழ்ந்தோராயினும், செல்வராயினும் வறியவராயினும், இளைஞராயினும் முதியவராயினும் அதைப் படிக்கின்றனர்; படிக்கக் கேட்கின்றனர்; கேட்டு அனுபவிக்கின்றனர்' என்று கூறியுள்ளார். அந்தக் காலத்தில் தான் கவிதைக் கலையினை ஒழுங்குபடுத்த முதல் முயற்சி செய்யப்பட்டது.' ஆர்ச்சாவின் சாந்தியா பிராமணரான கேசவ தாஸ் (கி.பி. 1580), சுந்தர் சேனுதிபதி, திரிபாதி சகோதரர்கள் இவர்களால் அம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்கள் ஷாஜஹான் ஆட்சிக் காலத்தில் புகழ் பெற்று விளங்கியவராவர்.

வங்காளத்தில் இந்தக் காலத்தில் குறிப்பிடத் தக்க அற்புதமான வைணவ இலக்கியங்கள் தோன்றின. கர்ச்சாக்கள் அல்லது வர்ணங்கள், பதங்கள், பாட்டுக்கள் போன்ற அதன் வெவ்வேறு துறைகளும், சைதன்னிய தேவரின் வரலாறுகளும், வங்காள மக்களின் உள்ளங்களில் பக்தி, பரந்த மனப்பான்மை ஆகிய உணர்ச்சிகளை ஊட்டியதுடன், அவை அந்தக் காலத்தில் அந்த மாகாணத்துச் சமுதாய வாழ்க்கையின் கண்ணுடியாகவும் விளங்கின. வைணவ நூலாசிரியர்களுள் மிகவும் முதன்மை வாய்ந்தவர்கள் பின்வருமாறு:-(பர்த்வான் பிரதேசத்தில் ஜாமால்பூரில் கி.பி. 1517-ல் வைத்திய குடும்பமொன்றில் பிறந்தவரும்) சைதன்னிய சரிதாம்ருத என்ற பெயரைத் தாங்கிய மிக முக்கியமான சைதன்னிய வரலாற்றை எழுதியவருமான கிருஷ்ணதாஸ் கவிராஜ்; கி. பி. 1507-ல் பிறந்தவரும், சைதன்னிய தேவரின் வரலாற்றை விளக்கும் தரமான நூலாயும், அவருடைய காலத்து வங்காள சமுதாயத்தைப் பற்றிய செய்திகளின் கிடங்காகவும் கருதப்படும் சைதன்னிய பாகவத என்ற நூலின் ஆசிரியருமான பிருந்தாவன் தாஸ்; கி.பி. 1513-ல் பிறந்தவரும், சைதன்னிய தேவரின் வாழ்க்கையைப் பற்றிய சில புதிய செய்திகளைக் கொடுக்கும் வரலாற்று நூலான சைதன்னிய மங்கள் என்ற நூலின் ஆசிரியருமான ஜயானந்தா; பர்த்வானின் வடக்கே முப்பது மைல் தூரத்தில் இருந்த கிராமமான கௌரா கிராமத்தில் கி.பி. 1523-ல் பிறந்தவரும், சைதன்னிய மங்கள் என்ற பெயரையே உடைய சைதன்ய தேவரின் மிகப் புகழ் பெற்ற வரலாற்றின் ஆசிரியருமான திரிலோசன் தாஸ்; பக்திரத்னுகர் என்ற நூலின் ஆசிரியரான நரஹரி சக்ரவர்த்தி, முதலியோர் குறிப்பிடத் தக்கவராவர். பதினைந்து அதிகாரங்களில் சைதன்னிய தேவரின் வரலாற்றை மிக விரிவாகக் கூறும் வரலாற்று நூலான பக்திரத்னுகர் கிருஷ்ணதாஸ் கவிராஜின் நூலுக்கு அடுத்தபடி முக்கியமான நூலாகும். அந்தக் காலத்தில் பெருங்காப்பியங்கள், பாகவதம் முதலியவற்றின் எண்ணிலாத மொழிபெயர்ப்புக்களும், சந்தீதேவி, மனசா தேவி இவர்களைப்

Koviloor Academy

புகழ்ந்து எழுதப்பட்ட நூல்களும் மிகுதியாக இயற்றப்பட்டன. இவற்றுள் மிக முக்கியமானவை காசிராம் தாஸ் இயற்றிய மஹாபாரதமும் முகுந்த ராம் சக்கரவர்த்தி இயற்றிய கவிகங்கன் சந்தியும் ஆகும். மேல் இந்தியாவில் துளசிதாஸின் புகழ் பெற்ற நூல் இன்றும் போற்றப்படுவது போலவே வங்காளத்தில் கவிகங்கன் சந்தீ இன்றும் மக்கள் எல்லாராலும் போற்றிப் படிக்கப்பட்டு வருகிறது. முகுந்தராமின் நூல் அவர் காலத்து வங்காள மக்களின் சமுதாய பொருளாதார நிலைகளின் விரிவான வரலாற்றைச் சித்திரிக்கிறது. அதனால் அவரைப் பேராசிரியர் கோவெல் 'வங்காளத்தின் நண்டு (The Crabbe of Bengal) என்று வருணித்துள்ளார். டாக்டர் கிரியர்சன் அவருடைய கவிதை 'இதயத்திலிருந்து பொங்கி வழிந்த கவிதை; பள்ளியில் படித்து எழுதப்பட்டதன்று' என்றும், 'உண்மையான கவிதைச் சிறப்பும், தெளிவாக விளக்கும் ஆற்றலும் மலிந்த பகுதிகள் நிறைந்தது' என்றும் கூறியுள்ளார்.

பேரரசரின் புத்தக ஆர்வம் நூலகங்களைத் தோற்றுவிக்கச் செய்தது. அங்கே விலை மதிப்பு மிக்க கையெழுத்து நூல்கள் சேர்த்து வைக்கப்பட்டன. அக்பரின் நூலகத்தில் எண்ணிலாத நூல்கள் இருந்தன. அவை முறையாக வெவ்வேறு பிரிவுகளில் பகுக்கப்பட்டிருந்தன. அக்பரின் அரசவையில் புகழ் பெற்றிருந்த எழுத்தாளர்களின் பட்டியல் ஒன்றை அய்னி அக்பரி தருகிறது. அவர்களுள் மிகச் சிறப்புற்று விளங்கியவரான காஷ்மீரைச் சேர்ந்த முஹம்மது ஹுஸேன் ஜர்ரிங்கலம் (தங்கப் பேனா) என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார்.

அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் அரசவையின் ஆதரவு நின்று போனமையின், இந்தி இலக்கிய வளர்ச்சி தடைபட்டுப் போயிற்று. அந்தக் காலத்தில் வட இந்தியாவில் அதிகமான உருதுக் கவிதைகூட எழுதப்படவில்லை. ஆனால், தக்கணத்தில் உருதுச் செய்யுள் இயற்றிய புகழ் பெற்ற சில எழுத்தாளர்கள் வாழ்ந்துவந்தனர்.

பிற்கால முகலாயர் ஆட்சியின் தொல்லை நிறைந்த காலத்தில் கூட இலக்கியப் பணி முற்றிலும் நின்றுவிடவில்லை. பஹாதுர் ஷா, முஹம்மது ஷா போன்ற பேரரசர்களாலும், முர்ஷித் குலி ஜாபர் கான், ஆலிவர்தி கான் போன்ற சுபாதார்களாலும், நாதியாப் பிரதேசத்து ராஜா கிருஷ்ணசந்திரா, பீர்பூம் பகுதியின் அசதுல்லா போன்ற ஜமீன்தார்களாலும் கல்வியறிஞர்கள் புரக்கப்பட்டனர். ராமப் பிரஸாத்தின் தெய்வப் பாடல்களைத் தவிர அந்தக்காலத்தில் எழுந்த மற்ற இலக்கியங்கள் எல்லாம் தரக் குறைவுடையவையாயும் பிறழ்ச்சிச் சுவை பெற்றவையாயும் இருந்தன. இந்துக்களிலும் முஸ்லீம்களிலும் அக்காலத்தில் பெண் கல்வி இருந்துவந்தது. புகழ் பெற்ற கோகி

Koviloor Academy

ஜியுவின் தந்தையும் இந்துவாக இருந்து மதம் மாறியவருமான ஜான் முகம்மதுவின் இரு புதல்விகள் 'பள்ளிக்கு அனுப்பப் பட்டனர். அவர்கள் எழுதிப்படிப்பதில் சிறிது நல்ல பயிற்சி பெற்றனர்.' கோகீ ஜியு கையெழுத்திலும், கட்டுரை எழுதுவதிலும் தன்னுடைய சகோதரர்களை மிஞ்சினள்.' வங்காளத்தில் கல்வி கற்ற பல மகளிரை நாம் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, கல்கத்தாவில் சோபாஜார் என்ற இடத்தில் வாழ்ந்த ராஜா நவ கிருஷ்ணுவின் மனைவியர் படிக்கும் திறமையில் புகழ் பெற்றிருந்தனர். கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த பெண்கவிஞரான ஆனந்தமயி ஓர் உயர்ந்த கவிஞராவர்.

2. கலையும் கட்டிடக்கலையும்

அ. கட்டிடக்கலை

இலக்கியத் துறையிலும், மதத்துறையிலும் காணப்படுவதைப் போன்றே கலையிலும் கட்டிடக்கலையிலும் முகலாயர்காலம் முழுவதும் புதுமையும், மறுமலர்ச்சியும் உண்டான ஒரு காலமாக இராமல் துருக்கிய ஆப்கானியர் ஆட்சியின் பிற்காலத்தில் தொடங்கப்பட்ட முறைகளைத் தொடர்ந்து முடித்த காலமாகவே இருந்தது. உண்மையில் 1526க்குப் பிறகு கலை, கட்டிடக் கலை முலியவை அதற்கு முன்பு இருந்தது போலவே இந்து, முஸ்லிம் கலைக் கூறுகளும், மரபுகளும் இன்பமுற இணைந்த நிலையையே எடுத்துக்காட்டுகின்றன.


அவுரங்கசீப்பின் மதத் தூய்மை கலைகளை ஆதரிக்க இடங்கொடுக்காமையால், அவரைத்தவிர இந்தியாவின் மற்ற எல்லா முற்பட்ட முகலாய அரசர்களும் பெருகட்டிடங் கட்டுவோராகத் திகழ்ந்தனர். பாபரின் இந்திய ஆட்சி மிகக் குறுகிய காலம்வரைதான் இருந்தது எனினும், அவர் தம்முடைய குறிப்பேடுகளில் இந்துஸ்தானத்துக் கட்டிடக் கலைபற்றித் திறனாய்வு செய்து கூறவும், சிறந்த கட்டிடங்களை எழுப்ப எண்ணுவதற்கும் நேரம் பெற்றிருந்தார். இந்தியாவில் மசூதிகள், பிற கட்டிடங்கள் இவற்றில் வேலை செய்வதற்காகப் புகழ் பெற்ற சினன் (Sinan) என்ற பெயருடைய அல்பானியக் கட்டிடக் கலைஞரின் மாணவர்களைக் கான்ஸ்டாண்டி நோபிலிலிருந்து வரவழைத்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனல் திரு. பெர்சி பிரௌன். 'எனினும் அது நடந்திருக்க முடியாது. அந்த ஏற்பாடு நடைபெற்றிருந்திருக்காது. ஏனெனில் அந்தப் புகழ்பெற்ற கட்டிடக்கலைப் பள்ளியைச் சார்ந்த ஒருவராவது முகலாயர்களின் கீழ் பணி செய்திருப்பின் பைஸாண்டின் நடையின் செல்வாக்குக் காணப்படாமல் போயிருக்க முடியாது. ஆனல் எவரும் வரவில்லை...' என்று கூறுகிருர். பாபர் தம்முடைய கட்டிடங்களைக் கட்டுவதற்காக இந்தியக் கல்-தச்சர்களையே அமர்த்தினர். அவரே தம்முடைய குறிப்பேடுகளில்

Koviloor Academy

இவ்வாறு கூறியுள்ளார்: ‘ஆக்ராவிலுள்ள கட்டிடங்களில் நாள்தோறும் 680 ஆட்கள் வேலை செய்தனர். சிக்ரீ, பியானா, தோல்பூர், குவாலியர், கியுல் ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்காகச் சுமார் 1,500 பேர் அமர்த்தப்பட்டிருந்தனர்.’ பாபர் கட்டிய பெருங் கட்டிடங்கள் எல்லாம் முழுதும் மறைந்து விட்டன. மூன்று சிறு கட்டிடங்கள் தாம் இன்று காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று பானிப்பட்டில் காபூலி பாக்கிலுள்ள நினைவு மசூதி (1526) யாகும்; மற்றது ரோஹில்கண்டில் சம்பால் என்ற இடத்திலுள்ள ஜாமி மசூதி (1526) யாகும். மூன்றாவது ஆக்ராவில் பழைய லோடிக் கோட்டையில் கட்டப்பட்டிருந்த மசூதியாகும். துரதிர்ஷ்டம் மிக்க அரசரான ஹுமாயூனின் ஆட்சியில் கட்டப்பட்ட இரண்டு கட்டிட அமைப்புக்கள் தாம் பாதியளவிற்குப் பாழடைந்த நிலையில் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆக்ராவிலுள்ள மசூதி, மற்றது பஞ்சாப்பில் ஹிஸ்ஸார் மாவட்டத்திலுள்ள பத்பாட் என்ற இடத்தில் மிகப்பெரிதாகவும், ஒழுங்கு முறையிலும் கட்டப்பட்ட மசூதியாகும். சுமார் கி.பி. 1540-ல் கட்டப்பட்ட அது பாரசீக முறையில் எனாமலினால் செய்யப்பட்ட ஓட்டின் அலங்காரம் உடையதாயிருந்தது. ‘பெர்சியன்’ அல்லது ‘மங்கோலிய’ முறை முதல்முதலாக ஹுமாயூனால் தான் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது என்ற கருத்து தவறாகும். பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாமினி ராச்சியத்திலேயே அம்முறை இருந்தது என்பதை இங்கு நாம் கருத்திலிருத்த வேண்டும். இந்திய ஆப்கானிய மறுமலர்ச்சியின் தந்தையான ஷெர் ஷாவின் குறுகிய கால' ஆட்சி இந்தியக் கட்டிடக் கலை வரலாற்றில் ஒரு திருப்புமையத்தை உண்டாக்கிய காலமாகும். அவருடைய அகால மரணத்தால் பூர்த்தி செய்யப்பட முடியாதுபோன அவருடைய சுவர் சூழப்பட்ட தில்லித் தலை நகரின் இப்போதுள்ள இரண்டு வாயில்களும், புராண கிலா எனப்பட்ட நகரக் கோட்டையும் ‘சில காலமாக நிலவியிருந்த கட்டிட அமைப்பு முறையைக் காட்டிலும் அதிகச் சீர்திருத்தமும் கலைத்திறமையும் அலங்காரமும் நிறைந்த கட்டிடப் பாணிக்கு’ எடுத்துக் காட்டாக இலங்குகின்றன. சுவர்களுக்குள்ளேயே 1545-ல் கட்டப்பட்ட கிலா-இ-குஹ்னா மஸ்ஜித் என்று அழைக்கப்பட்ட மசூதி, அதன் அதியற்புதமான கட்டிக்கலைப் பண்புகளுக்காக, வட இந்தியக் கட்டிடங்களில் ஒரு சிறந்த இடத்தைப் பெறத் தக்கதாயுள்ளது. பீஹாரில் ஷாஹாபாத் மாவட்டத்திலுள்ள சசாரம் என்ற இடத்தில் ஓர் ஏரியின் நடுவே யுள்ள உயர்ந்த ஒரு சதுரப் பீடத்தின் மீது கட்டப்பட்ட ஷெர்ஷாவின் கல்லறை, அதன் அமைப்பு, கம்பீரம் ஆகிய இரண்டு கண்ணோட்டங்களிலும், இந்து-முஸ்லிம் கட்டிடக்கலையின் ஒரு அற்புதமாய் விளங்குவதுடன், இந்து-முஸ்லிம் கட்டிடக்கலைக் கருத்துக்களின் இன்ப இணைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாயும் விளங்குகிறது. இவ்வாறு அரசாங்க முறையில்

Koviloor Academady

மட்டுமன்றி, பண்பாடு, கலை இவற்றிலும் மாபெரும் ஆப்கானிய




சசாராமிலுள்ள ஷேர் ஷாவின் கல்லறை

அரசரான ஷெர்ஷா, மாபெரும் முகல் அரசரான அக்பருக்கு வழி காட்டியாய் அமைந்தார்.

அக்பரின் ஆட்சில் குறிப்பிடத் தக்கவாறு கட்டிக்கலை வளர்ந் தோங்கியிருந்தது. தமக்கேயுரிய வழக்கமான முழுமையுணர்ச்சி யுடன், அப்பேரரசர் அக்கலையின் ஒவ்வொரு பகுதியையும் நன்கு அறிந்து கொண்டார். தாராளமனப்பான்மையும், இணைப்பு மனமும் பொருந்திய அவர் வெவ்வேறு மூலங்களிலிருந்து பெற்ற கலைத்திறக் கருத்துக்களைத் தாமே வழங்க, அவரைச் சூழ்ந்திருந்து அவற்றைப் பெற்ற திறமைவாய்ந்த தொழில்வினைஞர்கள் அக்கருத்துக்களுக்குச் செயல்முறையில் ஒரு வடிவங் கொடுத்தனர். அவருடைய ஆட்சி 'ஒளிமிக்க கட்டிடங்களைக் கட்டத் திட்டமிட்டது ; அவருடைய மனத்திலும் இதயத்திலும் உறைந்து கிடந்த கலைத்திற வேலையைக் கல், களிமண் இவற்றின் வடிவில் வெளிப்படுத்திக் காட்டியது' என்று அபுல் பாஸல் பொருத்த முறக் கூறுகிருர். பெர்கூஸனும் பதேபூர் சிக்ரி 'ஒரு மாபெரும் மனி தரின் மனத்தைப் பிரதிபலிக்கிறது' என்று பொருத்தமாகக் கூறியுள் ளார். அக்பருடைய செயல்வினைகள் மாபெரும் கட்டிடக் கலைத்திற மிக்க கட்டிடங்களைக் கட்டுவதோடு மட்டும் நின்று விட வில்லை. அவர் பல கோட்டைகளையும், கிராமப்புற மனைகளையும், கோபுரங்களையும்

Koviloor Academy


சராயிகளேயும், பள்ளிகளேயும், குளங்களேயும், கிணறுகளேயும் கட்டினர். ஜாம் என்ற இடத்தில் ஒரு பாரசீக ஷேய்க் குடும்பத்தில் பிறந்த அவருடைய அன்னேயிடமிருந்து அவர் மரபுரிமையாகப் பெற்ற பாரசீகக் கருத்துக்களே இன்னும் கொண்டிருந்த அவருடைய இந்துக்களிடத்துக் காட்டிய பொறுமைப் பண்பும், அவர்களுடைய பண்பாட்




பதேபூர் சிக்ரியில் உள்ள சல்தான் இல்லத்துச் செதுக்கப்பட்ட தூண்கள்

டில் கொண்டிருந்த அனுதாபமும், தம் பக்கத்தில் அவர்களே இழுத்துக் கொள்ள எண்ணியகொள்கையும் அவரைத் தம்முடைய பல கட்டிடங்களில் இந்துக்கட்டிடக்கலே முறைகளேயும் பயன்படுத்தச் செய்தன. அக்கட்டிடங்களின் அலங்காரச் சிறப்புக்கூறுகள் எல்லாம் இந்துசமணக்கோயில்களில் காணப்பட்டவற்றின் மாதிரிகளாக இருந்தன. அக்பர் கையாண்ட இந்துபாணி ஆக்ராக் கோட்டையில் உள்ள ஜஹாங்கீரி மஹாலில் மிகத் தெளிவாக விளங்குகிறது. அம்மஹாலில் சதுரமான தூண்களும் பிறைவடிவான தலேப்பகுதிகளும், இந்து பாணியில் ஆப்புவடிவான கல் இல்லாமல் கட்டப்பட்ட சிறு வளேவு வரிசைகளும் உள்ளன. 1569முதல் 1584வரை பேரரசின் தலே நகராயிருந்த பதேபூர் சிக்ரியிலுள்ள பல கட்டிடங்களிலும், லாகூர்க்

Koviloor Academy




லாகூர்க் கோட்டை



ஆக்ராக் கோட்டையிலுள்ள தில்லி வாயில்

Koviloor Acadamy

கோட்டையிலும் கூட இந்துபாணி காணப்படுகிறது. கி.பி. 1569-ல் கட்டிமுடிக்கப்பட்டதும், பாரசீகக் கலையின் செல்வாக்கை மிகுதியாகப் பெற்றதெனப் பொதுவாகக் கருதப்படுவதுமான பழைய தில்லி




ஆக்ராக் கோட்டையில் உள்ள ஜஹாங்கீரி மஹல்

யிலுள்ள புகழ்பெற்ற ஹுமாயூன் கல்லறையின் அடிப்பகுதியின் திட்டம் இந்திய முறையை அடியொட்டியதேயாகும். அக்கட்டிடத்தின் வெளித் தோற்றத்தில் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்ட வெள்ளைச் சலவைக் கற்கள் இந்திய முறையிலேயே அடுக்கப்பட்டிருந்தன. பெர்சியக் கட்டிடங் கட்டுவோரால் அவ்வளவு மிகுதியாகப் பயன் படுத்தப் பட்ட வண்ண ஓட்டு அலங்காரம் அதில் காணப்படவில்லை. பதேபூர் சிக்ரியிலுள்ள பேரரசரின் கட்டிடங்களுள் மிகக் கம்பீர மானவை ஜோத் பாயின் மாளிகையும், அவருடைய ராணிகளுக்காகக் கட்டப்பட்டதாகச் சொல்லப்படும் மற்ற இரு வாழ்வதற்குரிய கட்டிடங்களுமாகும். மேலும் இந்து பாணியைக் காட்டும் கட்டிடங்கள்: திவானி-ஆம் அல்லது பேரரசரின் அலுவலகம்; இதில் தூண்வரிசைக்கு மேலே உள்ள கூரை இந்து முறைப்படி அமைக்கப் பட்டுள்ளது. அற்புதமான திவானி காஸ் அல்லது தனிப்பட்டோர் வந்து காண்பதற்குரிய அரசிருக்கை; இது திட்டத்திலும், அமைப்பிலும், அலங்காரபாணியிலும் தெளிவாக இந்தியப் பண்பைப் பெற்றுள்ளது; 'கதை கூறும் கல்' என்று பெர்சஸனால் வருணிக்கப்பட்ட

Koviloor Acadamy


சலவைக்கல் மசூதியான ஜாமி மசூதி; அக்பரின் குஜராத் வெற்றியின் நினைவுச் சின்னமாகச் சலவைக் கல்லாலும், மணற்கல்லாலும் மசூதியின் தென்புற வாயிலில் கட்டப்பட்ட பிரமாண்டமான புலந்த் தர்வாஜா அல்லது வெற்றிவளைவு; இந்தியாவில் இன்னும் சில பாகங்களில் காணப்படும் இந்திய புத்த விஹாரங்களின் திட்டத் தொடர்ச்சியைக் காட்டுவதான பஞ்ச் மஹல் என்று அழைக்கப்பட்ட ஐந்து மாடிகள் உள்ள பிரமிடு அமைப்பு இவையாகும். அக்காலத்துக் குறிப்பிடத்தக்க மற்ற இரு கட்டிடங்கள் அலகாபாத்திலுள்ள நாற்பது தூண்கள் உள்ள அரண்மனையும், சிகந்தராவில் உள்ள அக்பரின் கல்லறையுமாகும். வில்லியம் பின்சின் கருத்துப்படி அலகாபாத்திலுள்ள அரண்மனையைக் கட்டுவதற்கு நாற்பது ஆண்டுகள் பிடித்தன!




தில்லியிலுல் உள்ள ஹுமாயூனின் கல்லறை

வெவ்வேறு தரமான 5,000 முதல் 20,000 வரை வேலையாட்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அந்த அரண்மனை ‘இந்து தூண்களின் வரிசைகளால் தாங்கப்பட்ட’ இடமகன்ற கூரையுடன் இந்திய முறைக்குத் தெளிவான ஓர் எடுத்துக்காட்டாய் உள்ளது. பேரரசரின் காலத்திலேயே திட்டமிடப்பட்டு ஆனால் கி. பி. 1605 முதல் 1613 வரையிலுள்ள காலத்தில் கட்டப்பட்ட சிகந்தராவிலுள்ள அக்பர் கல்லறையின் மாபெரும் அமைப்பு ஐந்து மொட்டைமாடிகளை உடையது. அவை இறங்குவரிசையில் அளவு குறைந்துகொண்டு வந்துள்ளன. வெள்ளைச் சலவைக்கல்லால் கட்டப்பட்ட மேல் மாடியில் வளைவு உடைய கூரை உள்ளது. சவப்பெட்டி புதைக்கப்பட்ட இடத்தின் மீது மத்தியில் ஒரு தூபி கட்ட வேண்டுமென்று முதலில் கருதப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கட்டிட அமைப்பில் உள்ள

Koviloor Acadamy



பதேபூர் சிக்ரியில் ஜோத்பாயின் மாளிகை




சிகந்தராவில்அக்பரின் கல்லறை

இந்திய அமைப்புமுறை இந்தியாவின் புத்த விஹாரங்களாலும், கொச்சின் சீனுவில் காணப்படும் கெமர் (Khmer) கட்டிக்கலையினுலும் தூண்டப்பட்டதுஎனலாம்.

Koviloor Academy

ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் எழுப்பப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை, அவருடைய தந்தையின் கட்டிடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைவாகவே உள்ளது. ஆனல் அவர் காலத்து இரண்டு கட்டிட அமைப்புக்கள் மிகச் சிறந்த ஆர்வம் எழுப்புவதாயும், தகுதி பெற்றதாயும் உள்ளன. அவற்றுள் ஒன்று அக்பரின் கல்லறை. இதன் சிறந்த சிறப்பியல்புகளைப் பற்றி நாம் ஏற்கெனவே விவரித்துள்ளோம். மற்றது அக்பரின் மகளும், ஜஹாங்கீரின் காதலியுமான நூர்ஜஹானல் ஆக்ராவில் கட்டப்பட்ட இதிமாத் உத்தௌலாவின் கல்லறையாகும். இது முழுதும் வெள்ளேச் சலவைக் கல்லால் கட்டப்பட்டு, அரை-விலேயுயர்ந்த கற்களால் இழைக்கப் பட்ட அலங்கார வேலேப்பாட்டை உடையது. இவ்வகையான கட்டிடத்திற்கு எடுத்துக் காட்டாக உதயப்பூரில் முன்பே கட்டப்பட்ட கோல் மண்டல்கோயிலேக் காட்டலாம் (கி·பி. 1600-லிருந்து). அதனல் அது ஒரு ராஜபுத்திர பாணியாகும் அல்லது பழைய இந்திய பாணியாகும்.




உதயப்பூரில் உள்ள ஜக்மந்திர், கோல் மண்டல் அல்லது மஹால்


ஷாஜஹான் எண்ணிலாத கட்டிடங்களேக் கட்டினர். அவரால் கட்டப்பட்ட பல கட்டிடங்கள், அரண்மனைகள், கோட்டைகள், தோட்டங்கள், மசூதிகள் முதலியவை ஆக்ரா, தில்லி, லாஹூர், காபூல், காஷ்மீர், காந்தஹார், ஆஜ்மீர், அஹ்மதாபாத், முக்லிஸ்பூர் போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன. இந்தக் கட்டிடங்களேக் கட்டுவதற்கான செலவைப் பற்றிச் சரியான மதிப்பீடு ஒன்றைச் செய்

Koviloor Acadamy

வது முடியாது போயினும், பல நூறு கோடிரூபாய்கள் செல வாயிருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அக்பரின் கட்டிட



திவானி காஸ், தில்லி




திவானி-ஆம், தில்லி

அமைப்புக்களுடன் ஷாஜஹானின் கட்டிட அமைப்புக்களை ஒப்பிடும் போது பின்னவை கம்பீரத்திலும், தனிச்சிறப்பிலும் தாழ்ந்தவையாக,

Koviloor Acadamy

ஆனால், ஆடம்பரவண்ணப் பகட்டிலும், வளமான திறமையான அலங்கரிப்பிலும் மிக உயர்ந்தவையாய் உள்ளன. அதனால் ஷாஜஹானின் கட்டிடக்கலை 'பெரிய அளவில் அமைந்த அலங்கார ஆபரணமாக' ஆகிவிட்டது. இது குறிப்பாக திவானி-ஆம், திவானி காஸ் போன்ற தில்லிக் கட்டிடங்களில் விளக்கமாகத் தெரிகிறது. பின்னது விலைமிக்க வெள்ளிக்கூரையும், சலவைக்கல், தங்கம், விலையுயர்ந்த மணிக் கற்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்ட கலவை அலங்காரமும், அதன்மேல் எழுதப்பட்ட கல்வெட்டின் பொருளுக்கு ஏற்றவாறு உள்ளன :


> '' மண்ணுலகில் சுவர்க்கத்தைக் காண முடியுமானால்
> அது இதுதான், அது இதுதான், அது இதுதான்.''



ஆக்ராவிலுள்ள முத்து மசூதி

தூய்மையும், செயல் நுண்மையும் உடைய உண்மைக் கலைக் கண்ணோட்டத்தில் பார்த்தால், ஆக்ராவிலுள்ள அழகு மிக்க மோதி மஸ்ஜித் அல்லது முத்து மசூதி ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. அவருடைய ஆட்சியின் மற்றொரு குறிப்பிடத்தக்க கட்டிடம் ஆக்ராவிலுள்ள ஜாமி மஸ்ஜித் ஆகும். அதற்கு மஸ்ஜித்-இ-ஜஹான் நாமா என்ற வேறொரு பெயருமுண்டு. ஐம்பது லட்ச ரூபாய் செலவில் தம்முடைய காதல் மனைவியான மும்தாஜ் மஹாலின் கல்லறைமீது ஷாஜஹானால் கட்டப்பட்ட அற்புதமான கல்லறைத் தூபி அதன்

Koviloor Acadamy



ஜாமி மசூதி, ஆக்ரா.


Koviloor Academy

அழகுக்காகவும், கம்பீரத்துக்காகவும் உலகத்தின் அற்புதங்களுள் ஒன்ருகக் கருதப்படுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

தாஜ்மஹாலைத் திட்டமிட்டுக் கட்டிய கட்டிடக் கலைஞர்கள் எவர் என்று கூறும்போது ஸ்மித் என்பவர் 'அது ஐரோப்பிய, ஆசிய மேதைமைகளின் இணைப்பிஞல் விளைந்த விளைவு' என்று கூறுவதை மொய்ன்-உத்தீன்-அஹ்மது மறுத்துக் கூறி, சிறந்த இக் காதல் நினைவுச் சின்னத்தைக் கட்டுவதிலும், திட்டமிட்டுத் தருவதிலும் இத்தாலிய அல்லது பிரெஞ்சுக் கட்டிடக் கலைஞர்கள் பங்கெடுத்துக் கொண்டனர் என்று பலரும் கருதிவந்த கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நேர்மையான பல காரணங்களைச் சொல்லுகிருர்; அதன் அமைப்புத்திட்டத்தை உருவாக்கிய பெருமை உஸ்தாத் ஈசா என்பவருக்குரியது என்று கூறுகிருர். தாஜ்மஹாலைப்பற்றிப் படிக்கும் இந்தியக் கலை மாணவர்கள் சில கருத்துக்களைக் குறித்துக்கொள்ள மறந்துவிடக்கூடாது. முதலாவதாக, அதன் திட்டமும் முக்கிய சிறப்பியல்புகளும் முழுதும் புதுமையானவை யல்ல; ஏனெனில், 'ஷெர்ஷாவின் கல்லறை, ஹுமாயூனின் கல்லறை, பீஜப்பூர் நினைவுச் சின்னங்கள் இவற்றிலிருந்து அதன் பாணி வெளிப்படுவதை நன்கு அறியலாம்.' 'சலவைக் கல்லிலும், மற்றக் கற்களிலும் இழைக்கப்பட்ட சரிகை வேலையும், சலவைக் கல்லின்மீது விலையுயர்ந்த மணிக் கற்கள் பதிக்கும் வேலையும் வட இந்தியாவிலும், ராஜபுத்திரக் கலையிலும் ஏற்கெனவே இருந்துவந்தன. இரண்டாவதாக, வெள்ளைச் சலவைக் கல்லையும், இந்தியப் பண்புமிக்க சில அலங்காரங்களையும் அளவுக்கு மீறிப் பயன்படுத்துவதனுல்' ஷாஜஹானின் கட்டிடங்களில் பாரசிகச் செல்வாக்கு ஆதிக்கம் பெற்றிருந்தது என்று வழக்கமாகக் கூறுவதை வலிந்து வற்புறுத்திக் கூறுவதற்கு எவ்விதமான காரணமும் இல்லை-என்று நினைக்கத் தோன்றுகிறது. மூன்ருவதாக முகலாயர் காலத்தில் இந்தியா மேற்கு உலகத்துடன், குறிப்பாக மத்திய தரைப் பிரதேசத்துடன் உறவுகொண்டிருந்ததைக் கவனிக்கும்போது, பதினுறு, பதினேழாம் நூற்ருண்டுகளில், மேற்கு உலகத்துக் கலையின் சில கூறுகள் இந்தியக் கலையின்மீது செல்வாக்கைச் செலுத்தின என்று கருதுவதும், அக்கால இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் சில ஐரோப்பியக் கட்டிடக் கலைஞர்கள் இருந்தனர் என்று கருதுவதும் வரலாற்று முறைக்கு முரணுகாது.

தாஜ்மஹாலைப் போல அவ்வளவு புகழ்பெற்றதா யில்லாவிட்டாலும், லாகூரிலுள்ள ஷாதராவில் முன்பு ஷாஜஹானுல் கட்டப்பட்ட ஜஹாங்கீர்க்கல்லறையும் அழகான கலைக்கு ஒரு மாதிரியாக இருந்தது. அவருடைய ஆட்சிக்காலத்தில் மற்ருெரு புகழ்பெற்ற கலைப்பொருள் மயில் சிம்மாசனமாகும். 'அச்சிம்மாசனம் தங்கக் கால்களையுடைய ஒரு கட்டிலின் வடிவைப் பெற்றிருந்தது. எனுமலால் செய்யப்பட்ட

விரிப்பு பன்னிரண்டு மரகதத் தூண்களால் தாங்கப்பட்டிருந்தது. அத் தூண்கள் ஒவ்வொன்றையும் மணிக் கற்கள் பதிக்கப்பட்ட இரு மயில்



தாஜ்மஹால், ஆக்ரா.

Koviloor Academy

Koviloor Academy

கள் தாங்கிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு ஜதை மயிலின் நடுவிலும் வைரம், மரகதம், நீலம், முத்து இவற்றால் முழுதும் நிரம்பிய ஒவ்வொரு மரம் இருந்தது.' 1739-ல் நாதிர்ஷா அச்சிம்மாசனத்தைப் பாரசீகத்திற்கு எடுத்துச் சென்றார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது உலகின் எப்பாகத்திலும் காணமுடியாததாகிவிட்டது.

அவுரங்கசீப்பின் ஆட்சியில் கட்டிடக்கலையின் பாணி சீர்குலையத் தொடங்கியது. கட்டிடக் கலைக்கு வெளிப்படையான எதிரியாகக் காட்டிக்கொள்ளாவிட்டாலும், மதத் தூய்மைப்பற்றுக்கொண்டிருந்த அப்பேரரசர் அக்கலைக்கு ஊக்கம் கொடுக்கவோ, அவருடைய முன்னோர்களைப்போலக் கட்டிடங்கள் எழுப்பவோ இல்லை. அவருடைய ஆட்சியில் எழுந்த சில கட்டிட அமைப்புக்களும் பழைய பாணிகளின் பலவீனமான பிரதியாகவே இருந்தன. அவற்றுள் மிக முக்கியமான லாகூர் மசூதி கி.பி. 1674-ல் கட்டி முடிக்கப்பட்டது. விரைவில் இந்தியக் கலைஞர்களின் படைக்கும் கலைத்திறன் பெரும்பாலும் மறையலாயிற்று. பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அவுத்திலும், ஹைதராபாத்திலும் அம்மேதைமையின் சிறு பகுதியே உயிர்பெற்றிருந்தது.

ஆ. ஓவியம்

கட்டிடக் கலையைப்போலவே, முகலாயர் காலத்தில் ஓவியக் கலையும் இந்தியக் கூறுகளும் அயற் கூறுகளும் இன்பமாகக் கலந்து விளங்கிய கலையாகக் காட்சி யளித்தது. இந்தியப் பௌத்த, ஈரானிய பாக்டிரியா, மங்கோலியச் செல்வாக்குகளின் கலவையாயிருந்த சீனக் கலையின் இடத்துக்கேற்பத் திருத்தப்பட்ட வடிவம் மங்கோலிய வெற்றியாளர்களால் பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாரசீகத்தில் புகுத்தப்பட்டது. அவர்களுக்குப் பின்வந்த தைமூரித்துகள் காலத்திலும் அக்கலை அங்கே தொடர்ந்திருந்தது. தைமூரித்துகள் மீண்டும் அதை இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர். இந்த இந்திய-சீன-பாரசீகக் கலையின் சிறப்பியல்புகள் அக்கால இந்திய ஓவியக்கலைப் பள்ளிகளின் பொருள்களுடன் அக்பர்காலத்தில் இணைக்கப்பட்டு, ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டுக் கிரகிக்கப்பட்டன. அந்த இந்திய ஓவியக்கலை குஜராத், ராஜபுதனம், விஜயநகர், பீஜப்பூர், அகமத்நகர் இன்னும் வேறு சில இடங்களில் நாட்டின் பல பாகங்களிலும் முற்கால இந்து, பௌத்த, சமண பாணிகளில் சிறப்புற்று வளர்ந்துகொண்டிருந்தது. இந்த இணைப்புக்குப் பின்பு மங்கோலியக் கூறுகள் படிப்படியாகக் குறைந்துவந்தன. இந்தியக் கூறுகள் மேலோங்கின. இந்தப் புதிய அமைப்பு காந்தான்-இ-தைமூரியா, பாதுஷாநாமா ஆகிய நூல்களின் பிரதிகளில் உள்ள ஓவியங்களில் தெளிவாகக் காணப்படும். இந்நூல்களிரண்டும் பாட்னாவில் உள்ள குதாபக்ஷ் நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

Koviloor Acadamy

'இயற்கையின் அழகுகளை எப்போதும் கூர்மையாகக் கவனித்து வந்த' பாபர் தம்முடைய தைமூரிய முன்னோர்களைப்போலத் தம்



லாகூரில் ஷாதராவிலுள்ள ஜஹாங்கீரின் கல்லறை

Koviloor Academy

முடைய குறைந்த வருவாய் வளத்துக்கு ஏற்றவாறு ஓவியக் கலையை ஆதரித்தார். அவருடைய குறிப்பேடுகளின் பாரசீக மொழி பெயர்ப்பைக்கொண்ட ஆள்வார் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படும் சித்திரங்கள் அவர் காலத்தில் வளர்ந்திருந்த பாணியைக் காட்டுகின்றன. ஹுமாயூன் மற்ற தைமூரித்துகளைப்போலக் கலையில் சுவை யார்வமுடையவராய் இருந்தார். நாடு துறந்து பாரசீகத்தில் வாழும்போது சீனப்-பாரசீக இசை, கவிதை, ஓவியம் முதலியவற்றைப் படிப்பதில் தம் நேரத்தைக் கழித்தார். ஷா தஹ்மாஸ்ப்பின் தாராளமான ஆதரவின் கீழ்ச் சிறப்புற்று விளங்கிய பாரசீகத்தின் தலைசிறந்த கலைஞர்களோடு தொடர்பு கொண்டார். அவர்களுள் இருவர் - 'கீழைநாட்டு ராபேயல்' என்று அழைக்கப்படும் புகழ்பெற்றவராவர். ஹிராத் நாட்டைச்சேர்ந்த பிஹ்ஜாத்தின் (Bihzad) மாணவரான மீர்சய்யிது ஆலி, காஜா அப்துஸ் சமத் என்ற இருவரையும் கி.பி. 1550-ல் காபூலில் தம்முடைய அரசவைக்கு வருமாறு அவர் அழைத்தார். ஹுமாயூனும் அவருடைய புதல்வர் அக்பரும் அவர்களிடமிருந்து ஓவியக் கலை பற்றிய பாடங்களைக் கற்றுக்கொண்டனர்; தாஸ்தானி-அமீர் ஹம்ஸாவுக்கு வேண்டிய விளக்கப்படங்களைத் தயார் செய்யும் வேலையில் அவர்களை ஈடுபடுத்தினர். இந்த இரண்டு அயல் நாட்டுக் கலைஞர்கள், அவர்களுடைய இந்தியத் துணைவர்களுடன் சேர்ந்து 'முகலாய ஓவியப் பள்ளியின் கருநிலையாக ஆயினர்.' அப்பள்ளி அக்பர் காலத்தில் மிகச் சிறப்படைந்ததாகக் ,காணுகிறோம். ஹுமாயூனின் அரசியல் மரபுக் கொடை ஆபத்தானதாயிருந்த போதிலும், இந்த ஓவியக் கொடை அக்பருக்கு மதிப்புயர்ந்த ஒரு கொடையாக இருந்தது.

கி.பி. 1550-க்கும், கி.பி. 1560-க்கும் மிடையே உள்ள ஆண்டுகளில் சய்யிது ஆலியும், அப்துல் சமதும் அமீர் ஹம்ஸாவுக்காகத் தயாரித்த விளக்கப்படங்களில் இன்னும் பாரசீகச் செல்வாக்கே மிகுதியாய் இருந்தது. ஆனால் 1562-ல் முகலாய அரசவைக்கு வைணவ இசையறிஞரான தான்சேன் வருவதை ஓவியமாக்கும் வேலை முற்றுப் பெற்ற பின், அந்தப் புகழ்பெற்ற ஓவியத்தில் இந்தியப் பாணியும், சீனப் பாரசீக பாணிகளும் கலந்து விளங்குவதைக் காணலாம். கி.பி. 1569 லிருந்து 1585 வரை அக்பரின் புதிய தலைநகரான பதேபூர் சீக்ரியைச் சுற்றியிருந்த சுவர்கள், இந்து பாரசீகப் பள்ளிகளைச் சேர்ந்த கலைஞர்களின் கூட்டு முயற்சியால் ஓவியக் கலையின் தலைசிறந்த கைவண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுவந்தன. அந்த இருவகைப் பள்ளிகளும் புதிய கருத்துக்களைக் கிரகித்துப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராயிருந்தன. இவ்வாறு புதிய கலைப் பள்ளி தோன்றி வளர வாய்ப்பு ஏற்பட்டது. அக்பரின் அரசவையில் பாரசீக அல்லது மற்ற அயல் நாட்டுக் கலைஞர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாய் இருந்தனர். அவர்களுள் மிகப் புகழ் பெற்றவர்கள்

Koviloor Academy

அப்துஸ் சமத், கால்முக் இனத்தைச் சேர்ந்த பர்ருக் பேக், குர்சாவ் குலி, ஜாம்ஷெட் என்போராவர். இந்துக் கலைஞர்கள் எண்ணிக்கை யில் மிகுதியாயிருந்தனர். அக்பர் ஆட்சிக்காலத்துப் பதினேழு தலை சிறந்த கலைஞர்களில் பதின்மூவர் இந்துக்களாயிருந்தனர். அபுல் 'பாஸல் அவர்களுடைய கலைத் தரத்தைப்பற்றி' ஒரு நூறுக்கு மேற் பட்ட ஓவியர்கள் அக்கலையில் வல்லுநர்களாய்விட்டனர். அக்கலை யில் பூரணத்துவம் அடைந்து கொண்டிருப்பவர் அல்லது அமையும் வழியில் இருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் பெரிதாயிருந்தது. சிறப்பாக இது இந்துக்களைப் பொறுத்தவரை உண்மையாகும். பொருள்களைப்பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்துக்களைக் காட்டி லும் அவர்களுடைய படங்கள் சிறந்தவையாகக் காணப்படுகின்றன. உலகிலேயே அவர்களுக்கு இணையானவர்கள் இருக்க முடியாது' என்று கூறுகிறார். அவர்கள் கூட்டாகச் சேர்ந்து உழைத்தனர்; உரு வப் படம் வரைதல், புத்தகத்திற்கு விளக்கப்படம் வரைதல், ஒளி தரும் விளக்கங்கள் வரைதல், விலங்குகளை வரைதல் இவற்றில் சிறந்தவர்களாய் விளங்கினர். அவர்களுள் தலைமையானவர்கள் பச வான், லால், கேசு, முகுந்த், ஹரிபான்ஸ், தஸ்வந்த் என்போராவர். கடைசியில் குறிப்பிடப்பட்டவர் காஹார் அல்லது பல்லக்குத் தூக்கு வோரின் சாதியைச் சேர்ந்தவர்; மற்றவர்கள் காயஸ்தா, சிதேரா, சிலாவத், கத்ரி முதலிய சாதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல் லோரும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து சேர்ந்தவர்களாவர்.

அக்பர் தம் இனத்தைச் சேர்ந்த மற்றவர்களுடன் 'உலகின் அதிசயம், பெருமை இவற்றின் ஆழ்ந்த சுவையுணர்வைப்' பகிர்ந்து கொண்டவராய் எல்லாவகையிலும் முடிந்த அளவு படம் வரையும் கலைக்கு ஊக்கம் கொடுத்தார். வாழும் உருவங்களை வரைந்து காட்டுவதைப் பற்றிய இஸ்லாமிய விதிகள் மாறுபட்டிருந்த போதி லும் அதற்கு அவர் மதப் பூச்சுக் கொடுத்தார். 'ஒரு ஓவியர் கட வுளை அறியத் தனிப்பட்ட வழிகளைப் பெற்றிருக்கிறார் என்றே எனக் குத் தோன்றுகிறது. ஏனெனில் உயிருள்ள ஒரு பொருளை வரைந்து காட்ட முற்படும் ஒரு ஓவியர், அதன் உறுப்புக்களை ஒவ்வொன்றாகச் சித்திரித்து விட்டுத் தம்முடைய வேலைக்குத் தனித்துவம் கொடுக்க முடியாதபோது, அவருக்கு எல்லார்க்கும் உயிர் கொடுக்கும் கடவுளை நினைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இவ்வாறு அவர் தம்முடைய கடவுளைப் பற்றிய அறிவை மிகுதிப்படுத்திக் கொள்வார்' என்று அக்பர் கூறியுள்ளார். இந்த வழியில் அவர் ஓவியக் கலையை எதிர்த்த வைதிக முஸ்லீம்களின் அதிருப்தியைப் போக்க முயன்றார்.' சட்டத்தின் ஒவ்வொரு எழுத்தின் படியும் நடக்கவேண்டும் என்ற வெறி பிடித்தவர்கள் ஓவியக் கலைக்கு எதிர்ப்பாயிருந்தனர்; ஆனால், அவருடைய கண்கள் இப்போது உண்மையைக் காணுகின்றன.

Koviloor Acadamy

அக்பர் காலத்தில் வளர்ந்த கலைப்பள்ளி ஜஹாங்கீரின் காலத்தில், அவருடைய ஆர்வம் மிக்க ஆதரவு மூலம் செழித்தோங்கி வளரலாயிற்று. ஜஹாங்கீர் ஒரு சிறந்த கலாரசிகர். அவருடைய கலையுணர்வுச் சுவையைத் திருப்திப்படுத்தும் எந்தப் படங்களுக்கும் உயர்ந்த விலைகளைக் கொடுத்தார். கூட்டாக வரைந்த ஓர் ஓவியத்தில் இன்ன இன்ன ஓவியர்கள் இவ்விப் பகுதிகளை வரைந்துள்ளனர் என்பதைக் கண்டுபிடிக்கும் கலைத்திறனுய்வாளராயும் அவர் இருந்தார். அவருடைய அரசவையின் புகழ் பெற்ற முஸ்லிம் கலைஞர்கள் : ஆகா ரேஜா, ஹிராத்தைச்சேர்ந்த அவருடைய மகன் அபுல் ஹஸன், சாமர்க்கண்டிலிருந்து வந்த முகம்மது நாதிர், முகம்மது முராத் (இவர்கள் தாம் இந்தியாவுக்கு வந்த கடைசி அயல்நாட்டுக் கலைஞர்களாவர்), உஸ்தாத் மன்சூர் என்போராவர். அவர் காலத்து இந்து ஓவியர்களில் பிஷன் தாஸ், மனோஹர், கோவர்தன் என்போர் மிக முதன்மை வாய்ந்தவர்கள். சிறு ஓவியங்களின் உயர்ந்த கலைக் கூறுகளைப் பற்றிய அறிவினை ஓரளவு பெற்றிருந்த பேரரசர் அடிக்கடி இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் மிகச் சிறந்த ஓவியப்பள்ளிகளின் மாதிரிகளை விலைக்கு வாங்கினர். அவருடைய பேரார்வமும் அவருடைய கலைஞர்களின் திறமையும் ஒன்ருய்ச் சேர்ந்து முகலாயச் சித்திரக்கலை பாரசிக ஆதிக்கத்தின் பாதுகாப்பிலிருந்து விடுதலை பெற்று, சிறப்பாக இந்தியப்பாணியில் வளரும் ஒரு கலையாக மலர வாய்ப்பு ஏற்பட்டது.

பெர்சி பிரௌணின் கருத்துப்படி, ஜஹாங்கீருடன் உண்மையான முகலாயச்சித்திரக்கலையுணர்ச்சி சீர்குலைந்தது. ஷாஜஹான் ஓவியத்தில் அவருடைய தந்தையைப் போன்ற அதே பேரார்வம் கொண்டிருக்கவில்லை. அவருடைய சுவையார்வங்கள் கட்டிடக்கலை நகையலங்காரம் இவற்றின் பக்கமே இருந்தன. அவர் ஆட்சிக் காலத்தில் அரசவையிலிருந்த உருவப் படங்களும், தர்பார் படங்களும் செறிவான வண்ணங்களாலும், ஜஹாங்கிர் காலத்துக் கலையில் இருந்தது போன்று வண்ணங்களின் இணக்கமான சேர்க்கையிருந்ததைக் காட்டிலும், மிகுதியான அளவு பயன்படுத்தப்பட்ட தங்கத்தாலும் தனிச்சிறப்புடையவாய் இருந்தன. அவர் அரசவை ஓவியர்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்; விரைவில் ஓவியக் கலையும் பேரரசின் ஆதரவை இழந்தது. பேரரசக் குடும்பத்தில் தாராஷுக்கோவ் மட்டும் கலையின் புரவலராய் இருந்தார். இவ்வுண்மையை இப்போது இந்தியா ஆபீசிலுள்ள அவருடைய படக்கோப்புப் புத்தகம் காட்டுகிறது. அவருடைய அகால மரணம் கலைக்கும், பேரரசுக்கும் ஒரு பெரும் பேரிடியாகப் போயிற்று. கலைஞர்கள் ராஜபுதனம், இமயமலை இராச்சியங்களில் போலப் பிரபுக்களிடம் வேலைதேடும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாயினர்; கடைத்தெருக்களில் கலைக்கூடங்களை நிறுவித் தங்கள் வாழ்க்கைப்

Koviloor Acadamy

பிழைப்புக்காகப் பொதுமக்களுக்குத் தங்கள் படங்களை விற்க முற்பட்டனர்; அவற்றை வாங்குவோர் மிகக் குறைந்த எண்ணிக் கையினராகவே இருந்தனர். கலைஞர்கள் சிறப்படையும் வாய்ப்பு எதுவும் இல்லை என்றும், அவர்கள் துன்பச் சூழ்நிலைகளில் குறைந்த வருவாய்க்கு வேலை செய்ய நேரிட்டது என்றும் பெர்னியர் குறிப் பிட்டுள்ளார்.

அவுரங்கசீப்பின் ஆட்சி ஓவியக்கலையின் தெளிவான வீழ்ச்சி யைக் கண்ணுற்றது. ஏனெனில் அப்பேரரசர் ஓவியக் கலையைப் போற்றுவது தெய்விகச் சட்ட நெறிகளுக்கு முரணானது என்று கருதினார். அவருடைய சம்மதம் பெற்றும் பெறாமலும் அவருடைய உருவப் படங்கள் பல வெவ்வேறு சூழ்நிலைகளில் வரையப்பட்டன. அவருடைய கிளர்ச்சிப் புதல்வரான முகம்மது சுல்தான் சிறையிலிருக் கும் போது அவருடைய நிலையை அறிந்து கொள்வதற்காகத் தம் ஆணையின்படி வரையப்பட்ட உருவப்படங்களை அடிக்கடி பார்த்து வந்தார் என்று சொல்லப் படுகிறது. அவர் பீஜபூரிலிருந்த அசார் மஹாலின் ஓவியங்களை அழித்தார் என்றும் கூறப்படுகிறது. அவரு டைய ஆணைகளின் படி சிகந்தராவிலிருந்த அக்பரின் கல்லறை யிலிருந்த சித்திரங்கள் வெள்ளையடிக்கப்பட்டு விட்டதாக மனுச்சி எழுதியுள்ளார். அவுரங்சீப்பின் மரணத்துக்குப் பிறகு முகலாயப் பேரரசு சீர்குலையத் தொடங்கியதும், உயிர் வாழ்ந்த சில ஓவியர்கள் தலை நகரிலிருந்து அவுத்து, ஹைதராபாத், மைசூர், வங்காளம் முதலிய இராச்சியங்களுக்குச் சென்று குடியேறினர். சிலர் லக்னோ வுக்கும் பாட்னாவுக்கும் சென்றனர். இதனால் அவர்கள் செயல் முறை யில் சுதந்தரமுடையவர்களாயினர். ஆனால் அதற்குப் பின் அவர்கள் பெற்ற ஆதரவும், செய்த வேலையும் மாபெரும் முகலாய அரசர்கள் காலத்திலிருந்தவற்றைக் காட்டிலும் மிகத் தாழ்வாக இருந்தன.

பதினெட்டாம் நூற்றாண்டில் பேரொளிக்கும் அலங்காரச் சிறப்புக் கும் பெயர்பெற்ற ஒரு ஓவிய முறை ராஜபுதனத்தில், குறிப்பாக ஜெயப்பூரில் வளர்ந்தோங்கியது. அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் மிக உயர்ந்த அழகும், செப்பமும் வாய்ந்த படங்கள் காங்கிரா ஓவியப் பள்ளியினரால் வரையப்பட்டன; அப்பள்ளியிலிருந்து தேஹ்ரீ-கர்வால் பள்ளி முளைத்தது; பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இது சீக்கிய உருவப்பட ஓவியக்கலைப் பள்ளியாக வளர்ந்தது. அண்மைக் காலத்தில் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள கலைஞர்கள் முகலாய, ராஜபுதன ஓவியங்களைக் கண்டின்புறத் தொடங்கியுள்ளனர்; அந்த ஓவிய முறைக்குப் புத்துயிர் கொடுக்கவும் முயன்று வருகின்றனர்.

Koviloor Acadamy

இ. இசை

பீஜப்பூரின் ஆதில் ஷாஹி சுல்தான்கள், அக்பர் காலத்தில் வாழ்ந்த மாளவத்தின் பாஸ் பஹாதூர் போன்ற இந்திய ஆட்சியாளர்களும், அவுரங்கசீப்பைத் தவிர மற்ற எல்லா முகலாயப் பேரரசர்களும் இசைக் கலேயை அனுபவித்தின்புற்றனர். அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் முதலியோர் பேரளவிற்கு அக்கலேக்கு ஆதரவு தந்தனர். அதனுல் இசையின் தரத்தில் வளர்ச்சி ஏற்பட்டது. இசையும் நாடெங்கிலும் பயிலப்பட்டது. அபுல் பாஸலின் கூற்றுப்படி முப்பத்தாறு பாடகர்கள் அக்பரின் அரசவையின் ஆதரவைப் பெற்றிருந்தனர். அவர்களுள் மிகப் புகழ்பெற்றவர் தான்சேன். அவரைப்பற்றி அபுல் பாஸல், 'அவரைப் போன்ற பாடகர் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக யாருமே இந்தியாவில் தோன்றவில்லே' என்று கூறுகிருர். அக்பரின் ஊழியத்தில் அமர்த்தப்பட்டிருந்த மாளவத்தின் பாஸ்பஹாதூர் 'இசை இந்திப்பாட்டு இவற்றின் விஞ்ஞானத்தில் அக்காலத்தில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர்' என்று வருணிக்கப்பட்டிருக்கிருர். அவுரங்கசீப் இசையை எதிர்த்ததிலும், அதற்குத் தடை விதித்ததிலும் வியப்பொன்றும் இல்லே.

Koviloor Acadamy

அரச மரபு முறை விளக்கம்

அடிமைகள் எனப்படுவோரின் மரபு, 1206–1290

I. குத்புதீன் ஏய்பெக், இறப்பு 1210
(முயிஸுத்தீன் முஹம்மது கோரியின் அடிமை).

II. ஆராம் (சுவீகார மெடுக்கப்பட்டவரா ?) இறப்பு 1211.

மகள் = III. இல்பாரி துர்க் ஷம்ஸுத்தின் இல்துத்மிஷ் (அடிமை) இறப்பு மே 1, 1236.

நாஸிருத்தின் மஹ்மூத் (வங்காளம்)

IV. ருக்நுத்தீன் ∴ பெரோஸ்ஷா அரியணையிலிருந்து விலக்கப்பட்டுக் கொல்லப்பட்டார், நவம்பர், 1236.

VII. அலாவுத்தீன் மாசூத் அரியணையிலிருந்து விலக்கப்பட்டார் ஜூன் 1246.

V. (மகள்) ரஸியா அரியணையிலிருந்து விலக்கப்பட்டாள் மே, 1240, இறப்பு : அக்டோபர் 1240.

VI. முயிஸுத்தீ பஹ்ராம் இறப்பு, மே, 15, 1242.

VIII. நாஸிருத்தீன் மஹ்மூத் இறப்பு, பிப்ரவரி, 1266.

? மகள் = (அடிமை) IX. கியஸுத்தீன் பால்பன் இறப்பு 1287.

இளவரசர் முஹம்மது

மகள் = நாஸிருத்தீன் மஹ்மூத் புக்ராகான் (வங்காளம்)

X. முயிஸுத்தீன் கெய்கோபாத் கொல்லப்பட்டார், 1290.

XI. கயூமர்ஸ்

Koviloor Acadamy

தில்லியின் கில்ஜி சுல்தானியர்கள், 1290–1320

குவைம்கான் (குன்துஸின் தூலக்கான்)

- மாளவத்தின் கில்ஜுகள்
- I. ஜலாலுத்தீன், ஃபெரோஸ்ஷா, இறப்பு ஜூலை 21, 1296.
  - II. ருக்நுத்தின், இப்ராஹீம் அரியணையிலிருந்து விலக்கப்பட்டார் நவம்பர் 1296
- மசூத் (ஷிஹாபுத்தீன்)
  - III. அலாவுத்தீன் சிகந்தர் சானி, முஹம்மது ஷா இறப்பு ஜனவரி, 1316
    - இளவரசர் கிஸர்கான்
    - IV. ஷிஹாபுத்தீன் உமர் இறப்பு ஏப்ரல் 1316
    - V. குத்புத்தீன் முபாரக் இறப்பு ஏறக்குறைய ஏப்ரல் 1320.
      VI. நாஸிருத்தீன் குஸ்ராவ் (உரிமையின்றி அரியணையைக் கைப்பற்றியவன்) இறப்பு ஏ.கு. செப்டம்பர் 1320

Koviloor Acadamy

துக்ளக்கு மரபு, 1320–1413

I பால்பனின் துருக்கிய அடிமை
கியாஸித்தீன் (காஸிமாலிக்)
துக்ளக்கு ஷா I இறப்பு
பிப்ரவரி 1325

ரஜப் = பட்டி இளவரசி
சிபாஹ் சாலார்

II. முஹம்மது, ஜானு
இறப்பு மார்ச்சு 20, 1351

III. பெரோஸ்ஷா மரணம்
செப்டம்பர், 20 1388

பாத்கான்

ஸபர்கான்

V. அபூபகர் அரியணையிலிருந்து
விலக்கப்பட்டார் டிசம்பர் 1390

VI. நாஸிருத்தீன், முஹம்மது ஷா
இறப்பு ஜனவரி 20, 1394

IV. கியாஸுத்தீன்
துக்ளக் (II) அரியணையி
விருந்து விலக்கப்பட்டு
கொல்லப்பட்டார் 1389

VIII. நுஸ்ரத்ஷா எதிர்க்கப்பட்ட
மரபுத் தொடர்பு அரியணையில்
அமர்த்தப்பட்டது ஜனவரி 1395
இறப்பு 1398 அல்லது 1399

VII. அலாவுத்தீன்
சிகந்தர்
(ஹுமாயூன்கான்)
மார்ச்சு 8, 1394

IX. மஹமூத் ஷா
ஃ பிப்ரவரி
1413

Koviloor Acadamy

தில்லியின் சையது அரசர்கள் 1414–1451

I. கிஸர் கான்
மே 28, 1414 ; இறப்பு மே 20, 1421

- II. மொய்ஸுத்தின்,
  முபாரக்-கொல்லப் பட்டார், 1434
- ஃபரித்கான்
  - III. முஹம்மது ஷா
    இறப்பு 1445
    - IV. அலாவுத்தீன், ஆலம் ஷா
      இறப்பு 1453
      (பதவினுக்கு அகற்றப்பட்டார் 1451)

தில்லியின் லோடி அரசமரபு 1451–1526

I. புஹ்லூல் லோடி இறப்பு ஜூலை, 1489

- பார்பக் ஷா
  (ஜான்பூர்)
- II. நிஸாம் கான், ஸிகந்தர் லோடி
  இறப்பு, நவம்பர் 21, 1517
  - III. இப்ராஹிம் லோடி
    இறப்பு, ஏப்ரல் 21, 1526
- ஆலம்

Koviloor Acadamy

வங்காளத்தின் அரசர்கள்

(1) கிழக்கு வங்காளம்


ஃபக்ருத்தின் முபாரக் ஷா	1336 அல்லது 1338
இக்தியாருத்தின் காஸி ஷா	1346-1352

(2) மேற்கு வங்காளமும் வங்காளம் முழுமையும்

அலாவுத்தீன் ஆலி ஷா	1339
ஹாஜி ஷம்ஸித்தின் இலியாஸ் ஷா, பங்காரா	1345
ஸிகந்தர் ஷா	1357
கியாஸித்தின் ஆஸம் ஷா	1393
சைபுத்தின் ஹம்ஸா ஷா	1410
ஷிகாப் உத்தீன் பாயஸித்	1412
பதூரியாவின் கணேஷ் (கான்ஸ் நாராயண்)	1414
ஜாது, வழங்கப்படும் பெயர் ஜலாலுத்தின் முஹம்மது ஷா	1414
தானுஜா-மர்தனு	1417
மஹேந்திரா	1418
ஷம்ஸுத்தின் அஹ்மத் ஷா	1431
நாஸிருத்தின் முஹம்மது ஷா	1442
ருக்நுத்தின் பார்பக் ஷா	1460
ஷம்ஸுத்தின் யூசுப் ஷா	1474
ஸிகந்தர் ஷா II	1481
ஜலாலுத்தின் ஃபத்ஷா	1481
அலியான பார்பக், சுல்தான் ஷஹ்ஸாதா	1486
மாலிக் இந்தீல், ஃபெரோஸ்ஷா	1486
நாஸிருத்தின் மஹ்முத்ஷா II	1489
சீதீ பத்ர், ஷம்ஷுத்தின் முஸப்பர்ஷா	1490
சைய்யித் அலாவுத்தீன் ஹுஸேன் ஷா	1493
நஸிருத்தீன் நுஸரத் ஷா	1518
அலாவுத்தீன் ஃபெரோஸ் ஷா	1533
கியாஸுத்தீன் மஹ்முத் ஷா	1533
ஹுமாயூன், தில்லி பேரரசர்	1538
ஷேர்ஷா சூர்	1539
கிஸர்கான்	1540
முஹம்மது கான்சூர்	1545
கிஸர்கான், பஹாதூர் ஷா	1555
கியாஸுத்தீன் ஜலால் ஷா	1561
முந்தினவரின் புதல்வர்	1564
தாஜ்கான் கரரானி	1564
சுலைமான் கரரானி	1572
பாயஸித் கான் கரரானி	1572
தாவுத்கான் கரரானி	1572-1576

Koviloor Acadamy

இலியாஸின் மரபு



Koviloor Academy

வங்காளத்தின் சைய்யித் அரசர்கள்

- அஸ்ரப்
  - அலாவுத்தீன் ஹுஸேன்
    - நுஸ்ரத் ஷா
      - அலாவுத்தீன் பெரோஸ்
    - மஹ்மூத் ஷா
      - மகள் = கிஸர்கான்

கரரானி மரபு

- ஜமால்
  - தாஜ்கான்
  - சுலைமான்
    - பாயஸீத்
    - தாவூத்கான்
  - இமாத்
  - இலியாஸ்

Koviloor Acadamy

தக்காணத்தின் பாமினி அரசர்கள்

- (1) அலாவுத்தீன் பாமின்ஷா
  - (2) முஹம்மது I
    - (3) முஜாஹித்
    - ஃபத்கான்
  - (4) தாவூத்
    - முஹம்மது சன்ஜார்
  - அஹமத்கான்
    - (8) ஃபெரோஸ்
      - ஹஸன்
      - முபாரக்
    - (9) அஹமது
      - (10) அலாவுத்தீன் அகமது
        - மகள் = (II)ஹுமாயூன், ஸாலிம்
          - (12) நிஸாம்
          - (13) முகம்மது III
            - (14) மஹ்முது
              - (15) அகமது
              - (16) அலாவுத்தீன்
              - (17) வலிவுல்லா
              - (18) கலிமுல்லா
          - ஜம்ஷித் (அல்லது அகமது)
        - ஹஸன்கான்
        - யஹ்யாகான்
      - தாவுத்
      - மஹ்மூத்
      - முகம்மது
  - மஹமுத்கான்
    - (5) மஹமுது II
      - மகள் திருமணம் பெரோஸ்
      - மகள் திருமணம் அஹமது
      - (6) கியாஸுத்தின்
      - ஷம்ஸுத்தீன்.

Koviloor Acadamy

மேவார் ராணுக்கள் (அரி சிம்ஹாவிலிருந்து)

அரி சிம்ஹா

ஹமீர் அல்லது ஹம்மீரா I

க்ஷேத்ரா (கேடா) சிம்ஹா

லக்ஷா (லக்கா)

சூந்தா — மேகலா

ராணு ஸ்ரீ கும்பகர்ண சர்வ பௌமா 1430-1469

உதயகரன் 1469-1474 — ராஜமல்லா (ராயமல்லா) 1474-1508

பிரிதிவிராஜ் — சங்கிராமா (சங்கா) I. 1509-1527

பன்பிர் 1534-1537

ரத்ன சிம்ஹா 1527-1532 — பிக்ரமஜிட் 1532-1536 — உதய சிம்ஹா (உதயபூர்) 1537-1572

பிரதாப் சிம்ஹா I 1572-1597

அமர சிம்ஹா I 1597-1620

கரண் 1620-1628

ஜகத் சிம்ஹா I 1628-1652

ராஜ சிம்ஹா I 1652-1680

பீம் சிம்ஹா — ஜெயசிம்ஹா 1680-1698

அமர் சிம்ஹா II 1699-1711

சங்கிராம சிம்ஹா II 1711-1734

Koviloor Acadamy

மேவார் ராணுக்கள் (தொடர்ச்சி)

(அரிசிம்ஹாவிலிருந்து)

- ஜகத்சிம்ஹா II 1734-1751.
  - பிரதாப சிம்ஹா 1752-1754.
    - ராஜ சிம்ஹா II 1754-1761
  - அரிசிம்ஹா II 1761-1773.
    - ஹமீர் II 1773-1778
    - பீம் சிம்ஹா 1778-1828
      - ஜவான் சிம்ஹா 1828-1838.
      - இளவரசி கிருஷ்ணு
- நான்காம் மகன்
  - ∴ பதே சிம்ஹா (1884-1930).
    - போபால் சிம்ஹா

சர்தார் சிம்ஹா
(சுவீகார மெடுத்துக் கொள்ளப்பட்டவன்)
1838-1842.


சரூப் சிம்ஹா
(சகோதரன், சுவீகார
மெடுத்துக்கொள்ளப்பட்டவன்)
1842-1861.

சாம்பூ (மருமகன், சுவீகாரமெடுக்தப்பட்டவன்)
1861-1874.

சஜ்ஜன சிம்ஹா (நெருங்கிய ஒன்றுவிட்ட
சகோதரன்) 1874-1884.


Koviloor Academy

விசயநகர யாதவர்கள்



Koviloor Academy

விஜயநகர துளுவ அரவீடு அரசர்கள் முதலியன



Koviloor Academy

சூர் அரசர்கள், 1540-1555

இப்ராஹிம் கான்

- ஹஸன்கான்
  - I. ஃபரித்கான் அப்போது ஷேர் கான் (ஷேர்ஷா) கொலையுண்டான் மே, 22, 1545
    - I. இஸ்லாம் (சலிம்)ஷா = மகள் நவம்பர், 1554-ல் இறந்தார்.
      - ஃபெரோஸ் ஷா நவம்பர், 1554-ல் கொலையுண்டார்.
  - நிஸாம்கான்
    - I. இஸ்லாம் (சலிம்)ஷா = மகள்
    - III. முபாரிஸ்கான் முஹம்மது ஆதில்ஷா (ஆதிலி அல்லது அவுதி) மாங்கீரில் 1556-ல் கொல்லப்பட்டார்.
    - மகள் நான்காம் இப்ராஹிமுடன் திருமணம் செய்து கொடுக்கப்பட்டவள்.
    - மகள் ஐந்தாம் சிகந்தருடன் திருமணம் செய்து கொடுக்கப்பட்டவள்.
  - சுலைமான் அகமத் இன்னும் பலர்
- காஸிகான் (Ghazi Khan)
  - IV. இப்ராஹிம்கான், இப்ராஹிம் ஷா, ஆதிலியின் சகோதரியை மணம் செய்து கொண்டார்; மேல் இந்தியாவிலிருந்து ஓட்டம் பிடித்தார்; ஒரிஸ்ஸாவில் ஜூலை 1567ஆம் ஆண்டுக்கும் ஜூலை 1568ஆம் ஆண்டுக்கும் இடையில் கொலையுண்டார்.
- (பெயர் தெரியவில்லை)
  - V. அகமத்கான் சிகந்தர் ஷா ஆதிலியின் சகோதரியை மணம் செய்து கொண்டார்; மலைகளில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்; 1557-ல் அக்பரால் விரட்டியடிக்கப்பட்டார்; வங்காளத்துக்கு ஓடி 1558-1559ஆம் ஆண்டில் இறந்தார்.

Koviloor Academy

தைமூரித் மரபு — முதல் ஆறு அரசர்கள்

பர்லாஸ் துருக்கியர் எனப்படுவோர் 'சகாதைகுர்கானி' அல்லது முகலாய பேரரசர்கள்

- I. ஹிருத்தீன் பாபர் இறப்பு—1530
  - II. முகம்மது ஹுமாயூன் இறப்பு-1556
    - III. ஜலாலுத்தீன் அக்பர் இறப்பு-1605
      - IV. நூருத்தின் முகம்மது, ஜஹாங்கீர் (சலீம்) இறப்பு-1627
        - குஸ்ரவ்
        - பார்வேஸ்
        - V. குர்ரம் ஷிஹாபுத்தீன் முகம்மது, ஷாஜஹான், 1658-ல் அரியணையிலிருந்து அகற்றப்பட்டார் 1666-ல் இறந்தார்
          - தாரா ஷுக்கோ
          - ஷுஜா
          - VI. முஹியுத்தீன் முஹம்மது அவுரங்கசீப் ஆலம்கீர், இறப்பு-1707
          - முராத்
        - ஷஹ்ரியார்
      - முராத்
      - டானியால்
    - மீர்ஸா ஹகீம்
  - காம்ரான்
  - ஹிந்தால்
  - அஸ்கரி

Koviloor Academy

பின்வந்த தைமுரியத்துகள்

VI. முஹியுத்தீன் முகம்மது அவுரங்கசிப் : ஆலம் கீர் I, இறப்பு 1707

- முஹம்மது சுல்தான் இறப்பு 1676.
- VII. மு'ஆஸ்ஸம் ஷா ஆலம் I பகதூர் ஷா I (அரியணை யேறியது 1707 இறப்பு 1712)
  - VIII. முய்ஸுத்தீன் ஜஹந் தர்ஷா 1713-ல் கொல்லப் பட்டார்.
    - XIV (அ) அஸிஸுத்தீன் ஆலம் கீர் II (அரியணை ஏறியது 1754. 1759-ல் கொல்லப்பட்டார்.)
      - XV (அ) மீர்ஸா அப்துல் அலி கோஹர், ஷாஆலம் II (அரியணையேறியது-1759. குருடாக்கப்பட்டது-1788. இறப்பு -1806.)
  - அஸிமுஸ் ஷான்
    - IX. முஹம்மது ∴பர்ருக்ஷியார் (1713-ல் அரியணை யேறினார். 1719-ல் கொல்லப் பட்டார்.)
  - ராபியுல் கதர், ரவியுஸ் ஷான்
  - குஜிஸ்டா அக்தர், ஜஹான் ஷா (போரில் கொல்லப்பட்டார்.)
    - XII (அ) முகம்மது ஷா (1719-ல் அரியணை யேறினார். (1748-ல் இறந்தார்.)
      - XIII. அஹ்மத் ஷா (1748-ல் அரியணை யேறினார். (1754-ல் அரியணையிலிருந்து நீக்கப் பட்டார்.)
        - XV (ஆ) பீதார் பக்த் (1788)
- முஹம்மது ஆஸம் (ஜாஜெள என்ற இடத்தில் கொல்லப்பட்டார் 1707.)
  - பீதார் பக்த் (ஜாஜெள என்ற இடத்தில் கொலையுண்டார்)
- அக்பர் (பாரசீகத்தில் 1704 அல்லது 1706-ல் இறந்தார்.)
  - X (ஆ) நெபுக்ஸியார் 1719
- காம்பக்ஷ் (1708-ல் ஹைதராபாத்துக்கு அருகில் கொலையுண் டார்.
  - முஹிஸ் ஸுன்னத்
    - XIV (ஆ) ஷாஜஹான் III

Koviloor Acadamy

XVI. அக்பர் ஷா II
அரியணை யேறியது 1806.
இறப்பு 1837.)

XVII. பஹதூர் ஷா I
(அரியணை யேறியது 1837.
சிப்பாய் கலகத்தின்போது
1858-ல் அரியணையிலிருந்து
அகற்றப்பட்டார்.
இறப்பு 1862.)

XII (ஆ) முஹம்மது
இப்ராஹிம் (1720)

XI. ரவியுத் தௌலா
(ஷா ஜஹான் II
அரியணை யேறியதும்
இறப்பு 1719).

X (அ) ரபியுத்தரஜாத்
(அரியணை யேறியதும்
இறந்ததும் 1719.)

Koviloor Academy

பான்ஸ்லேக்கள் (சத்ரபதி)

மலோஜி (மேவார் அரச குலத்திலிருந்து வந்ததாக உரிமை கொள்கிருர்.)

தேவகிரி யாதவாக்கள்
- லுக்ஜி ஜாதவ்
  - ஜிஜா பாய் = ஷாஜி = துகா பாய்

ஷாஜி = துகா பாய்
- ஏகோஜி (வியாங்கோஜி) (தஞ்சாவூர்)

ஜிஜா பாய் = ஷாஜி
- ஷாம்பூஜி (கனககிரியில் இறந்தார்)
- சிவாஜி I (மனைவியர்: ஸாய் பாய், சொய்ரா பாய்)

ஸாய் பாய் = சிவாஜி I
- ஷாம்பூஜி I (மனைவியர்: ஏசு பாய், தாரா பாய்)

ஏசு பாய் = ஷாம்பூஜி I
- ஸாஹூ I (சிவாஜி II)
  - ராம் ராஜா
    - ஸாஹூ II (சுவீகார மெடுக்கப்பட்டவர்)

தாரா பாய் = ஷாம்பூஜி I
- சிவாஜி III
  - ராம் ராஜா ஸாஹூவால் சுவீகார மெடுக்கப்பட்டவர்

சிவாஜி I = சொய்ரா பாய்
- ராஜாராம் = ராஜஸ் பாய்
  - ஷாம்பூஜி II (கோல்ஹாபூர்)
    - சிவாஜி IV

Koviloor Academy

பிரதாப சிங்கு   ஷாஜி ராஜா

ஷாம்பூ   ஷாஜி

சிவாஜி V

ராஜு ராம் II

சிவாஜி VI

ஸாஹூ சத்ரபதி

Koviloor Acadamy

பேஷ்வாக்கள்

- விஸ்வநாத்
  - I. பாலாஜி விஸ்வநாத் (1713).
    - II. பாஜி ராவ் I (1720)
      - III. பாலாஜி பாஜி ராவ் (1740)
        - விஷ்வாஸ் ராவ்
        - IV. மாதவ ராவ் பள்ளாள் (1761)
        - V. நாராயண ராவ் (1772)
          - VII. மாதவராவ் நாராயண் (1774)
      - VI. ரகுநாத ராவ் (ரகோபா) (1773)
        - அம்ரித் ராவ் (சுவிகார மெடுக்கப் பட்டவர்)
          - விநாயக ராவ்
        - IX. பாஜி ராவ் II (1796-1818)
          - நானா சாகிபு (சுவிகார மெடுக் கப்பட்டவர்)
        - VIII. சிம்னாஜி ஆப்பா (1796)
    - சிம்னாஜி ஆப்பா

Koviloor Acadamy

கலைச்சொல் அகராதி

Abwabs : வரிகள்
Accession : அரியணை ஏறுதல்
Accounts : குறிப்புகள்
Adminstration : நிருவாகம்
Alliance : நேச உடன்படிக்கை
Archaeology: தொல் பொருளியல்
Architecture : கட்டடக்கலை
Ashtapradhan : எட்டு அமைச்சர்கள் கொண்ட மந்திரிசபை

Bara Sona Masjid: பெரிய பொன் மசூதி
Baron : பெருமான்
Bureaucracy : பணித்துறை ஆட்சி

Calligraphy : அழகிய கையெழுத்து
Camel Corpse : ஒட்டகப் படை
Causes belli : காரணம்
Chota Sona Masjid : சிறிய பொன் மசூதி
Chronicler : கால வரிசை வரலாறு எழுதுபவன்
Confederacy : நாடுகள் கூட்டு இணைப்பு
Contemporary : சமகாலத்தவர்
Coup de main : திடீர்த் தாக்குதல்

Descendant : பின் மரபினன்
Dictatorship : வல்லாட்சி
Din-i-Ilahi : தெய்விக மார்க்கம்
Dominion : ஆட்சி; ஆட்சிப் பகுதி
Dynasty : வமிசம்

Ecclectic : பிறர் நற்பண்பு தொகுத்து மேற்கொள்பவர்
Epic : காப்பியம்
Epoch : திரும்பு கட்டம்
Exchequer : கருவூலம்

Fatwa: இஸ்லாமிய மதப் பிரச்சினைகளில் அளிக்கப்படும் தீர்ப்பு
Feudalism : பண்ணை முறை
Firman : அரசக் கட்டளை

Generalissimo : படை முதல் தலைவர்
Geography : தட்ப வெப்பநிலை
Guerilla Warfare : குரங்கு போர் வகை (மறைந்து மறைந்து போரிடு முறை)

Hazar Sutun : ஆயிரம் தூண்களைக் கொண்ட அரண்மனை
Heir-apparent : ஆட்சி புரியும் அரசனுக்குப் பின் அரியணையேற வேண்டிய இளவரசன்
Hereditary : மரபுரிமையான்

Ibadat Khana : தொழும் அறை
Id : திருநாள்
Inam : பரிசு
Inscriptions : கல் வெட்டுகள்

Jagir : ஊழிய மானியம்
Jihad : புனிதப்போர்
Jiziya : முஸ்லீம் அல்லாதார் மேல் விதிக்கப்பட்ட தலை வரி

Koviloor Acadamy

Karkhanas : தொழிற்சாலைகள்
Khalifa : உலக விஷயங்களில் நபி நாயகத்தின் பிரதிநிதியாய் இருப்பவர்
Khams : கொள்ளையிடப்பட்ட பொருள்களிலிருந்தும் சுரங்கப் பொருள்களிலிருந்தும் ஐந்தில் ஒரு பங்காக அளிக்க வேண்டிய தீர்வை
Kharaj : சாகுபடி நிலவருமானத்தில் பத்தில் ஒரு பங்கு
Khutba : வெள்ளிக்கிழமை, முதலிய புனித நாள்களில் நடக்கும் கூட்டுத் தொழுகையில் நடைபெறும் சொற்பொழிவு

Liberal: தாராள எண்ணமுடைய

Madarasas : பள்ளிகள்
Manuscript : கையெழுத்துப்படி
Marble : சலவைக்கல்
Martyrdom : தியாகம்
Mausoleum : சமாதி
Medieval இடைக்கால
Memoirs : வாழ்க்கைக் குறிப்புகள்
Minar : கோபுரம்
Minister : அமைச்சர்
Mint : நாணயம் அச்சிடும் சாலை
Monasteries : மடங்கள்
Monuments : அடையாளச் சின்னங்கள்
Mosque : மசூதி

Narrative : நிகழ்ச்சியுரை
National War : தேசியப்போர்
Negotiations : உடன்படிக்கைப் பேச்சு வார்த்தைகள்
Neutrality : நடுவு நிலைமை
Nobles : பிரபுகள்

Officers : அலுவலாளர்கள்
Ordinance : அவசரச்சட்டம்

Principality : சிற்றரசன் நாடு
Prohibition : தடை உத்தரவு
Public Service : பொதுப் பணித்துறை

Qadam Rasool : நபி நாயகத்தின் பாதம்
Qanuns : ஆணைகள்
Qazi : நீதிபதி
Qila : கோட்டை
Quran : முஸ்லீம்களின் புனித நூல்

Rai faineant : அரசன்
Ransom : விடுதலைப் பணம்
Rebellion : கிளர்ச்சி
Regime : ஆட்சிக் காலம்

Satis : மத்தியஸ்தர்
Salais : பிரயாணிகள் தங்குமிடங்கள்
Satyapir : உண்மை ஞானி
Shahid : மதத் தியாகி
Sharb : விவசாய வரி
Shariat : இஸ்லாமிய சமயச் சட்டம்
Sist : நிலவரி
Sufis : முஸ்லீம் துறவிகள்
Suzerain : மேலரசன்

Tanka : ஒரு ரூபாய்க்குச் சிறிதளவு அதிகம் மதிப்புப் பெற்ற ஒரு நாணயம்
Treasury : கஜானா
Treaty : உடன்படிக்கை
Theology : இறையியல்
Toleration : சமய சமரசம்
Tyranny : கொடுங்கோலாட்சி

Ulema : இஸ்லாமிய அறிஞர்

Waqf : அறக்கொடை
War of Succession : வாரிசு உரிமைப் போர்
Wazir : மந்திரி

Zackat : ஒருவரிடம் ஓர் ஆண்டு வரை பணம் சேமிக்கப்பட்டிருந்தால் அதில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ சதவிகிதம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய தானம்

Koviloor Academy

பெயர் அகராதி

Koviloor Acadamy

Koviloor Academy

Koviloor Acadamy

Koviloor Acadamy

Koviloor Academy

Koviloor Acadamy

Koviloor Academy

Koviloor Academy

தீ

து

தூ

தெ

தே

தை

தொ

தோ

தௌ

ந

நா

நி

Koviloor Acadamy

Koviloor Acadamy

பா

பி

Koviloor Academy

Koviloor Academy

Koviloor Academy

Koviloor Academy

Koviloor Acadamy

Koviloor Acadamy

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்

. பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்-II	சி. வேலாயுதம்	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	டாக்டர் (திருமதி) ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம்-ஓர் அறிமுகம் I	தி. சி. மோகன்	12—00
4.	பொருளாதாரம்-ஓர் அறிமுகம்-II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11—50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7·50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. சீனிவாசன்	5—50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4—75
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன்	10—00
11.	இந்தியப் பொருளியல்-II	எம். லூர்துநாதன்	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I	சி சுந்தரராஜன்	10—75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை-II	எஸ். குழந்தைநாதன்	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	கி. சீ. இராமசாமி	6—00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-II	கி. சீ. இராமசாமி	6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5—00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I	மு. க. சுப்பிரமணியம்	11—00
18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	மா. குமாரசாமி	10—00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	தே. வேலப்பன்	10—00
20.	பணம்-சிறு விளக்கம்	கோ. இராதாகிருட்டினன்	10—00

*மூல நூல் (Original Works)

Koviloor Acadamy

இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்—(தொடர்ச்சி)

பொருளாதாரம்—(தொடர்ச்சி)

*21.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடைய பிள்ளை	9—50
22.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	சு. ர. கருப்பண்ணன்	11—00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு I	கி. ர. அனுமந்தன்	10—00
*24.	பிரிட்டன் வரலாறு-II	கி. ர. அனுமந்தன்	9—75
*25.	ஐரோப்பிய வரலாறு-I	டி. வி. சொக்கப்பா	4—50
26.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15—00
27.	இங்கிலாந்து வரலாறு-I	இரா. அண்ணாமலை	13—00
28.	இங்கிலாந்து வரலாறு-II	பா. மாணிக்கவேலு	13—00
29.	இங்கிலாந்தின் வரலாறு-I	க. த. திருநாவுக்கரசு	15—00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு I	தி. வெ. குப்புசாமி	7—50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4—75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி செல்லப்பா	8—50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8—50
34.	பன்னாட்டு அரசியல்-I	திருமதி நூர்ஜஹான் பாவா	16—00
35.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	வீ. கண்ணையா	9—00
36.	பொதுத்துறை ஆட்சி இயல்-II	அ. ஜெகதீசன்	7—25

உளவியல்

37.	குழந்தை உளவியல்-I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8—00
38.	குழந்தை உளவியல்-II	கி. ர. அப்புள்ளாச்சாரி	7—00
39.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
40.	இளையோர் உளவியல்-I	தி. இரா. அரங்கராசன்	12—00

*மூல நூல் (Original Works).

Koviloor Acadamy

41.	இளையோர் உளவியல்-II	தி. இரா. அரங்கராசன்	9—00
42.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9—25
43.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரிப்பர் ராஜ்	11—00
44.	பித்தரின் உள்ளம்	அ. பெசன்ட் கிரிப்பர் ராஜ்	3—00
தத்துவம்			
45.	இந்து சமயத் தத்துவம்	ஞா ராஜாபகதூர்	5—50
அறவியல்			
46.	அறவியல்-ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8—50
அளவையியல்			
47.	அளவை இயல் தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2—50
மானிடவியல்			
*48.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4—75
49.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5—50
சமூகவியல்			
50.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10—00
புவியியல்			
*51.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9—50
*52.	ஆசியா-II	கொ. சேஷ நரசிம்மன்	8—75
*53.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8—50
*54.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8—20
*55.	தென் கண்டங்கள்-ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4—00

Koviloor Acadamy

இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்—(தொடர்ச்சி)

புவியியல்—(தொடர்ச்சி)

*56. புவிப்புறவியல்-II	நா. அனந்தபத்மநாபன்	6—00
*57. செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9—00
*58. மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6—25
*59. சமுத்திரவியல்	கோ. இராமசுவாமி	6—50
60. காலநிலை இயல்-I	கொ. சேஷ. நரசிம்மன்	10—00
61. வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11—00
*62. புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4—75

புள்ளியியல்

*63. புள்ளியியல்-அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10—00
64. புள்ளியியல் முறைகள்-I	கோ. சண்முகசுந்தரம்	10—00
65. நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6 - 50

விலங்கியல்

*66. விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12—00

பௌதிகவியல்

67. ஒளி நூல்	ச. சம்பத்து	10—00

பொது நூல்கள்

68. மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3 25
69. இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3—50
70. விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8—00
71. சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியன்	2—50
*72. நீரிழிவு- க்ஷயரோகம்	ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன்	2 -50

*மூல நூல் (Original Works)